ஸ்ரீ லலிதா மஹாத்ரிபுரஸுந்தரி ப்ரஸன்னா

ஸ்ரீ லலிதா ஸஹஸ்ர நாமம்

(மூலம் ஸாகரத்திலும், தமிழிலும்.)

“ லௌகர்ய லஹரி ”

திரு

G. V. கோபால அய்யர், B. A., B. L.,

அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டு

1953

தபால் செலவு வேறு.] [விலை ரூ 10—0—0.

2nd Edition, January 1953.

All Rights Reserved.

Published by
S. KALYANASUNDARAM,
The Sri Jamardana Printing Works, Ltd.
Town High School Road,
KUMBAKONAM.



श्रीः

SEAL.

श्रीमत्परमहंस परिव्राजकाचार्यवर्य
श्रीमच्छङ्करभगवत्पादप्रतिष्ठित
श्रीकाञ्चीकामकोटिपीठाधीश्वर जगद्गुरु
श्रीमच्चन्द्रशेखरेन्द्रसरस्वतीश्रीपादैः
नियतं नारायणस्मृतिः ॥

"स तस्मिन्नाकाशे स्त्रियमाजगाम बहु शोभमानामुमां हैमवतीं तां होवाच किमेतद्यक्षमिति" "सा ब्रह्मेति होवाच" इत्यादि केनोपनिषन्प्रसिद्धां परविद्यास्वरूपिणीमुमां श्रीललिताम्बिकां वाग्देवताद्यग्निस्यादिनाऽभिन्नेन श्रीललिताकृपाहेतुभूतेन श्रीवैकुण्ठावतारश्रीहयग्रीवागस्त्यमहाहस्तेन श्रीललिता सहस्रनामस्तोत्रेणाराध्यात्मानं कृतार्थयितुकामानां देवतापरिचर्यारतियेन प्रकृतस्तोत्रभास्कररायप्रणीतनक्षत्र्याख्यव्याख्यामाणां भक्तानामुपकाराय श्रीभास्कररायमखिमाख्यानुसारि श्रीललितासहस्रनामस्तोत्र व्याख्यानं पदवाक्यार्थविवरणपूर्वकं देशभाषामयम् आवश्यकलक्षणार्थं निर्णायकश्रुतिस्मृति पुराणाद्युदाहरणसनाथं कुम्भघोणपत्तनाभिजन श्री गणेशाय विरचितं श्री कल्याणसुन्दरार्य प्रकाशितञ्च साक्षात्कृत्य गन्तुद्यामः ॥ तदनेनैव व्याख्यानेनावगतैतत्स्तोत्रतद्व्याख्यार्थाः भक्तजनाः श्रीललिताम्बिकां भक्तानीष्ट प्रदायिनीं श्रीशारदाराज्यां श्रीललितासहस्रनामस्तोत्रेणाराधयन्तः परदेवताकृपापात्रभूताः श्वःश्रेयसमन्तर्तीरिगच्छन्त्विति शंसामहे ॥

विजयवाटास्थानं कोनेरिराजपुरामहारः
नन्दननामसं. माघशुद्ध पञ्चमी.

नारायणस्मृतिः

பாஷ்யத்தில் சொல்லப்ட அநேக அபூர்வ விவரணங் களை வெளியிட்டிருப்பது தவிர, தாமாகவே தமது ஆராச்சி மூல மாகப் பற்பல கிரந்தங்களிலிருந்தும் அநேக விஷயங்களை எடுத் தெழுதி பாஸ்கர பாஷ்யத்திற்கே புதிய சோபையைக் கொடுத் திருக்கிறரென்பது மிகையாகாது. ஆர்யதர்மத்தில் இவைகளை படித்த அநேக பிரபல பண்டிதர்கள் இந்த மொழி பெயர்ப்பு சாதுர்யத்தை மிகவும் வியந்துகொண்டாடியதை நாம் அறி வோம். இது ஆர்யதர்மத்தில் பிரசுரமாகிய காரணத்தால் அப் பத்திரிகைக்கும் அபிமானிகள் அதிகரித்தார்கள்.

இதுவரையில் இந்த பாஷ்யத்திற்கு இவ்வளவு தெளிவான நடையில் தமிழ் மொழிபெயர்ப்பு ஏற்படவில்லை. ஸம்ஸ்கிருத பாஷா பரிசயம் இல்லாத தேவீ பக்த சிகாமணிகள் பலரும் ஸ்ரீ அம்பாளின் மஹிமையையும், ஸ்ரீ பாஸ்கரராயருடைய அபூர்வ வ்யாக்யானத்தின் சுவையையும் யதார்த்தமாக அறிய ஸ்ரீமான் கணேசய்யர் செய்துள்ள உபகாரம் ஸாமான்யமான தல்ல.

ஆர்யதர்மத்தில் இதைப் படிப்பதில் அம்பிகா பக்தர்கள் அளவுகடந்த உத்ஸாஹம் காட்டியதிலிருந்து, இந்த மொழி பெயர்ப்பைத் தனிப்புஸ்தகமாக வெளியிடலாமாவென்ற யோஜ னை உதித்தது. இதை பத்திரிகை மூலம் தெரிவித்ததும், அநேக அபிமானிகள் இதைப் பூர்ணமாக ஆதரித்து முன் பணம் அனுப் பியும், வேறு வழியிலும் நமக்கு உத்ஸாஹமும் தைர்யமும் ஊட்டினர்கள். இதைக்கொண்டு அச்சிடும் வேலை சிறிது ஆரம்பித்ததும், நமது தெளர்பாக்யவசத்தால் ஸ்ரீமான் கணேச அய்யரின் பௌதிக உடலானது திடீரென மறைய நேரிட்டது. இதனல் பலர் மனமொடிந்துவருந்தியது அளவில்லை. ஆயினும் ஸ்ரீமான் அய்யர் தாம் மறையும் முன்னரே தமது மனதிற்கு மிக உகந்ததான இந்த மொழிபெயர்ப்புக் கைங்கர்யத்தைப் பூர்த்திசெய்து வைத்திருந்தார். அதன் பிரதிகள் யாவும் பூர்ணமாக நம்மிடம் அவரால் கொடுக்கப்பட்டிருந்தபடியால், ஸ்ரீமான் அய்யருடையவும், ஸ்ரீ அம்பிகா பக்தர்களுடையவும் மநோரதத்தைத் தலைக்கட்டிவைக்கும் பாக்யம் நமக்குக் கிடைத்தது.

இதில் ஸஹஸ்ரநாமாவளீ, அகராதி வரிசையில் நாமங்கள் பாஸ்கரராய சரித்திரம், ஸ்ரீ நிருஸிம்ஹானந்தருடைய பரி பாஷா ஸ்லோகங்கள், முகவுரை, முதலிய அனுபந்தங்களும் அச்சிடப்பட்டிருக்கின்றன.

கூடியவரையில் அச்சுப்பிழை முதலியவைகளைத் தவிர்க்க விசேஷ பரிச்ரமம் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. ஆயினும் பெரிய புஸ்தகத்தில் தவறுதலால் சில பிழைகள் நேருவது சாதாரணமே. அவைகளைக் கூடியவரையில் திருத்தியிருக்கிறோம். மேலும், மூலத்திலும், வியாக்யானத்திலும், சிற்சில பிரசுரங்களில் அணுஸரித்துச் சில பாடபேதங்களாலும் சிறிது விரமம் நேர்ந்தது. அவைகளைக் கூடியவரையில் பாஷ்யத்தின் போக்கை அநுஸரித்து அச்சிட்டிருக்கிறோம். ஆயினும் இவ் விஷயமான குணதோஷங்களையும், வேறு ஆலோசனைகளையும் அபிமானர்கள் நமக்கு எழுதினால் அவைகளை மறு பதிப்பில் கவனிக்க தயாராயிருக்கிறோம்.

புஸ்தகத்தின் விலை விஷயமாக நாம் எவ்வளவு ஜாக்ரதை பண்ணியிருந்தாலும் அதைச் செய்திருப்பதாக நினைக்கிறோம். புஸ்தகத்தின் பக்கங்களையும் அச்சியற்றுவதில் நேர்ந்த செலவு விரமங்கள் இவைகளையும், கடுதாசு விலையேற்றம் முதலியவை களையும் கவனிப்பவர்களுக்கு நாம் குறிப்பிட்ட விலை மிகவும் நியாயமானதென விளங்கும். எல்லாவித அதிகாரிகளும் இப் புஸ்தகத்தை பாராயணம் செய்து ஸ்ரீ அம்பாளின் அநுக்ரஹத் தைப் பெறவேண்டுமென்ற ஏக்க நோக்கத்துடனேயே விலையை நிர்ணயித்துள்ளோம்.

இந்த காரியத்தில் நமக்குப் பல விதங்களிலும் உதவி யிருந்த நண்பர்களுக்கு நாம் நன்றி உரித்தாகிறது.

இப்படிக்கு ஸ்ரீமான்களாகிய,
1-1-1938.

Publishers.

ஸ்ரீ :

ஸ்ரீ லலிதா மஹாத்ரிபுர ஸுந்தர்யை நம:

விக்ஞாபனம்.

(இரண்டாம் பதிப்பு.)

ஸ்ரீ தேவியின் திவ்ய அருளால் ஸ்ரீ லலிதா ஸஹஸ்ர நாம கிரந்தத்தின் இரண்டாவது பதிப்பு பூர்த்தியாகி தேவீ பக்தர் களின் முன்னிலையில் மகிழ்ச்சியுடன் ஸமர்ப்பித்துக்கொள்ளு கிறோம். பதினன்கு வருஷங்களுக்கு முன், இக்கிரந்தத்தின் முதல் பதிப்பு வெளியிட்ட விவரங்களையும் வேறு அம்சங்களை யும் முதல் பதிப்பு முன்னுரையில் கூறியுள்ளோம். அப்போது இதன் முதல் பதிப்பு வெளியானதும் பல பக்தர்கள் மிகுந்த உத்ஸாஹம் காட்டி ஆதரித்ததின் காரணமாக எதிர்பார்த்த காலத்திற்கு முன்பே காப்பிகள் செலவாகிவிட்டன. அதனால் பல நண்பர்கள் நேரிலும், கடித மூலமாயும் புஸ்தகத்தை அவ சரமித்தும், கைவசமில்லாத காரணத்தால் அவர்களை திருப்தி செய்துவைக்க முடியவில்லை. இதனால் பலர் ஏமாற்றமடைந் ததை நாம் அறிய நேர்ந்தது. இதை சீக்கிரத்திலேயே மறு பதிப்புச் செய்துதரும்படி கோரிய அநேக தேவீபக்தர்களுடைய மநோரதத்தையும் நாம் நிறைவேற்றத் தயங்க வேண்டிவந்தது. இவ்வளவு பெரிய புஸ்தகத்தை அச்சிடுவதில் உள்ள சிரமங் களையும் காகித விலை, அச்சுக்கூலி அதிகரிப்பு முதலியவைகளை யும் கவனித்து சில வர்ஷங்களாக நாம்தாமஸிக்கவே, நாளுக்கு நாள் அபேக்ஷை அதிகரித்து நிர்பந்தமும் ஏற்படவே ஒருவாறு துணிந்து இறங்கி கார்ய பூர்த்தியைக்கண்டோம்.

இப்பதிப்பிலும், முதல் பதிப்பில் போல் ஸகல அம்சங் களும் குறைவின்றி சேர்க்கப்பட்டிருக்கின்றன. ஸஹஸ்ர நாம ஸ்தோத்ரம், நாமாவளி, அகராதி வரிசை, ஸஹஸ்ர நாம பலன், ஸ்ரீ பாஸ்கரராய சரித்திரம் ஸ்ரீ வித்யை போன்ற பற்பல விஷயங் களும் இதில் அடங்கியுள்ளன.

இப்பதிப்பின் விலை முன்னைவிட அதிகமாயிருப்பது தவிர்க்க முடியாத ஓர் நிர்பந்தமாகும். கால தேச நிலைமைகளை நன்கு அறிந்த நமது நண்பர்கள் தயக்கமின்றி இதன் நியாயத்தை அங்கீகரிப்பார்களென்று நம்புகிறோம். மஹாயுத்தத்திற்கு பிறகு

காகித விலை பன்மடங்கு அதிகரித்தும், லைக்கார் சட்ட திட்டங் களால் அச்சகக்கூடங்களின் நிலைமை அவலமாகி அச்சுக் கூலிகள் அதிகரித்ததும் யாவரும் அறிந்த பிரத்யகமான முஜுக்கள். சுமார் 1000 பக்கங்கள் கொண்டதும் வேறு பல விஷயங்கள் சேர்க்கப்பட்டதாயுமுள்ள இவ்வளவு பெரிய கிரந்தத்தை அச்சிட இக்காலத்தில் எவ்வளவு செலவாகுமென் பதை நாம் விவரித்துக் கூறவேண்டியதில்லை. ஸ்ரீ தேவியின் அநுக்ரஹமும், தேவி பக்தர்களின் திருப்தியையுமே நோக்கமாகக் கொண்டே இக்கைங்கரியத்தில் நாம் பிரவிர்த்தித்தோம். ஆகை யால் யாவரும் முன்போல் ஆதரித்து தேவியின் திவ்ய அநுக்ரஹத்தைப்பெற வேண்டுகிறோம்.

இப்புஸ்தகம் அச்சிட நமக்கு உதவியவர்களுக்கும், முக்ய மாக விசேஷ உதவிபுரிந்த வித்வான், சி. ர. ஸ்ரீநிவாஸபாட்டர சாரிய ஸ்வாமிகளுக்கும் மனப்பூர்வமான நன்றியைத் தெரிவித் துக்கொள்கிறோம்.

கும்பகோணம்,
18-1-1953.

S. கல்யாணஸுந்தரம்.

குறிப்பு:—

இப்புஸ்தகத்தில் நாகரத்தில் ஸ்ரீலலிதா அஷ்டோத்திர நாமாவளியும், ஸ்ரீலலிதா த்ரிசதி ஸ்தோத்ர நாமாவளியும் சேர்க்கப்பட்டுள்ளன.

பஞ்சப்ரேதாஸநாஸீநா என்ற நாமத்துக்குத் தக்கபடி செய்யப்பட்ட பிளாக் தயாரிப்பதற்கு, போட்டோ ஸ்ரீ யோக நாதய்யர் அவர்களால் கொடுக்கப்பட்டது.

ஸ்ரீ லலிதா மஹாத்ரிபுரஸுந்தர்யை நம:

விஷயஸூசிகம்

	ஸ்ரீ ஆசார்யாளின் முகம்	பக்கம்
1.	முகவுரை	
2.	முன்னுரை	1
3.	ஸ்ரீ வித்யை	13
4.	ஸ்ரீ பாஸ்கரராயரும், அவருடைய மஹிமையும்	38
5.	ந்ருஸிம்ஹாநந்தநாதர் பரிபாஷா ச்லோகங்கள்	47
6.	பெயர் குறிக்கப்பட்ட க்ரந்தங்கள்	119
7.	ஸஹஸ்ரநாம பாஷ்யம் (பூர்வ பாகம்)	115
8.	ஸஹஸ்ரநாம ஸ்தோத்ரம்	171
9.	ஸஹஸ்ரநாமம் உத்தரபாகம் (பலச்ருதி)	709
10.	அகராதி வரிசை	i-xxxiv
11.	பிழை திருத்தம்	
12.	ஸஹஸ்ரநாமம்-(நாகரத்தில் மூலமும், நாமாவளியும்)	
13.	ஸ்ரீ லலிதா அஷ்டோத்ர சத நாமாவளி (நாகரத்தில்)	
14.	ஸ்ரீ லலிதா த்ரிசதி (நாகர மூலமும், நாமாவளியும்)	

படங்கள்.

1. ஸ்ரீ அம்பாள்.
2. G. V. கணேசய்யா.
3. ஸ்ரீசக்ரம்.
4. அம்பாள் (பஞ்சப்ரேதாஸனஸ்தாயினீ)

ஸ்ரீலலிதா மஹாத்ரிபுர ஸுந்தர்யை நம:

முன்னுரை.

—:○:—

1. நூல் வரலாறு.

ஸ்ரீலலிதா ஸஹஸ்ரநாம மென்னும் சிறந்த ஸ்தோத்ரமானது ஸ்ரீமத் பிரஹ்மாண்டபுராணத்தின் உத்தரகாண்டத்தில், ஸ்ரீ ஹயக்ரீவருக்கும் அகஸ்தியருக்கும் நடந்த ஸம்வாதரூபமான லலிதோபாக்யானத்தில் உள்ளதாகும்.

ஸ்ரீ லலிதோபாக்யானமானது, மந்த்ர கண்டம், ஸ்யாமா கண்டம், பூஜாகண்டம், புரச்சரணகண்டம், ஹோமகண்டம், ரஹஸ்யகண்டம், ஸ்தோத்ரகண்டம் என்னும் பல பிரிவுகளை யுடையதாகும். இவற்றுள் ஸ்தோத்ர கண்டத்தில் ஸ்யாமளை, வாராஹி இவர்களின் ஸஹஸ்ர நாமங்களும், பஞ்சதசீ ஸ்தவராஜம் முதலிய பல ஸ்தோத்ரங்களும் இந்த லலிதா ஸஹஸ்ர நாம ஸ்தோத்ரமும் கூறப்பட்டுள்ளன.

இந்த வசிநீ, காமேச்வரி முதலிய வாக்தேவதைகளால் பர தேவதையின் ஆக்ஞையின்பேரில், பக்தர்களின் ஹிதத்திற்காகச் செய்யப்பட்டதாகும். இந்த ஸ்தோத்ரத்தைப் பக்தர்கள் அர்த்தாநுஸந்தானத்தோடு பாராயணஞ்செய்து அம்பாளைத் துதித்து த்யானித்தால், அம்பாள் வெகு ஸீக்ரமத்தில் பரம ப்ரீதியை யடைகின்றனள் என்பது சாஸ்த்ர ஸித்தாந்தமாம்.

பிரஹ்மாண்ட புராணமானது பதினெட்டு மஹா புராணங் களில் கடைசியதாகும். புராண கர்த்தாவான ஸ்ரீ வேதவ்யா ஸர் இந்த பிரஹ்மாண்ட புராணத்தில், ஸகல மந்த்ர சாஸ்த்ர விஷயங்களையும், பிரஹ்மவித்யா ஸ்வரூபத்தையும் கன்று பிரதி பாதனஞ் செய்திருக்கின்றனர்.

2. புராணங்களின் தாத்பர்யம்:—

வேதத்தில் அதிகாரமில்லாதவர்களுக்கு வேதார்த்தத்தை தெரிவிப்பதற்கும், வேதத்திலுள்ள தாத்பர்யமான சில விஷயங் களைச் சில ஆக்யாயிகைகளின் மூலமாய் விளக்குவதற்கும் தான்

புராணங்கள் ஏற்பட்டன. ஆகலின், புராணங்கள் உபப்ரஹ்மணமாம். வேதம் கர்மகாண்டம், உபாஸநா காண்டம், ஞானகாண்டமென மூன்று பெரும் பிரிவுகளையுடையது; கர்ம காண்டத்தின் உபப்ரஹ்மணங்கள் தர்ம சாஸ்திரங்களும், ஸ்மிருதிகளுமாம்; உபாஸநா—ஞானகாண்டங்களின் உப ப்ரஹ்மணம் புராணுதிகளாகும். ஆகவே புராணுதிகளுக்குப் பிரஹ்ம ஸ்வரூபத்தில் தாத்பர்யமே தனி, மற்றதிலன்று.

இந்த லலிதா ஸஹஸ்ரநாமமும், புராணுந்தர்க்கதமாயிருத்தலின், இதற்கும் பிரஹ்மத்தில்தான் தாத்பர்யமிருத்தல் வேண்டும். பிரஹ்மத்தை, ஸாதகன் தனக்கபேதமாய் அறிதற்கு நேர் ஸாதனமானது பிரஹ்மவித்யை அல்லது ஸ்ரீவித்யையாகும். ஸ்ரீவித்யா ஸ்வரூபிணியே லலிதாம்பாள், லலிதை, த்ரிபுரஸுந்தரி, பரை, பராபட்டாரிகை, பராஹந்தா, சித்சக்தி, ஸம்வித் முதலிய பெயர்கள் ஒரே அர்த்ததோடு கூடியனவாகும். ஸ்ரீவித்யையைப்பற்றி ஒரு விரிவான விமர்சனம் இந்நூலில் செய்யப்பட்டுள்ளது. அதைச் ஸாவதானத்தோடு வாசித்தறிதலவசியம்.

3. லலிதா ஸஹஸ்ரநாமம் வேத துல்யமே:—

இந்த லலிதா ஸஹஸ்ரநாமம் வசினீ முதலிய வாக்தேவதைகளாலியற்றப்பட்டதாகுமென முன்னர் கூறப்பட்டது. இந்த வாக்தேவதைகள் அம்பாளின் வாக்விபூதிகளேயாவர். பராஸ்வரூபிணியான பராதேவதையின் வாக்விபூதிகள் பஸ்யந்தி, மத்திமை, வைகரிகள். यस्य निश्वसितं वेदाः என்னும் பிரமாணப்படி வேதங்கள் பராபேக்ஷ்வாஸுடைய மூச்சுக்களாகும். உச்ச்வாஸ நிச்வாஸ ரூப மூச்சுக்கள், பிராணவாயுவின் சலனத்தால் ஏற்படு

வைகரீ, மத்திமை, பஸ்யந்தீ வாக்குகளுக்கும் பிராணஸ்பந்தமே காரணம். ஆகலின் உச்ச்வாஸ நிச்வாஸங்களும் வாக்குகளும் ஒரே காரணத்தினின்றும் ஏற்படுவனவாயிருத்தலின் அவற்றிற்குப் பரஸ்பரம் அபேதமுண்டு; எனவே பராதேவதையின் வாக்விபூதிகளாகும் வசின்யாதிகளாலியற்றப்பட்ட இந்த ஸஹஸ்ரநாம ஸ்தோத்ரமும் பராபேக்ஷ்வாஸுடைய உச்ச்வாஸ நிச்வாஸ ரூபமாகும் வேதமும் ஸமானமே; ஒன்றுக்கொன்று

வேறுபட்ட கண்ணோட்டத்தில், வேதம், எங்களுடைய பாரம்பரியத்தை அடையாளப்படுத்தி கூடி விளங்குகின்றதே, இதுவும், அங்ஙனமே பிரதிக்ஞை ஸ்தோத்திர ரூப பாடல்களோடும், எங்களுடைய ஸ்தோத்திர ரூப அடையாளத்தோடும் விளங்குகின்றது.

வேதத்தின் ருக்குக்களுக்கும் வாக்கியக்களுக்கும் எங்களுடைய ஸர்வாநுக்ரமணிகை எற்பட்டுள்ளதே. அங்ஙனமே, இதற்கும் சலாகஷுரஸுரித்திர மென்னும் ஒரு அநுக்ரமணிகை பிராசீனமாய் எற்பட்டுள்ளது. இந்த ஸ்தோத்ரங்களை இயற்றிய பெரியார் இன்னார் என்று தெரியவில்லை. இது வசிஷ்டரோ விச்வாமித்ரரோ இயற்றியிருக்கலாமென வொப்புகிறவர்களும் ஆதேகூடமிதமென்று நிஜனக்கிறோம்.

4. ஸ்தோத்ரத்தில் அமைப்பு:—

இந்த சலாகஷுர ஸ்தோத்ரங்கள் இருபத்தினாலு. இவற்றுள் சில பாடுகுவனைகளின் ஆயிரம் காமாக்களுடன் இந்தவை இந்தவை காமாக்கள் இன்ன இன்ன அக்ஷரத்தோடு தொடங்கப்பட்டுள்ளதென்று நிர்மாணிக்கின்றன. இந்த ஸ்தோத்ரத்திலுள்ள காமாக்களெல்லாம் முப்பத்தினாலு அக்ஷரங்களால் ஆரம்பிக்கப்படுகின்றன. இவ்விதமாய் இந்நூலின் இயற்கையிலுள்ள "காமாக்களின் அகாராதி வரிசை" யில் காண்க.

द्वात्रिंशद्वेदसिद्धा च यं तां वंदे वरप्रदां ।
अकारादिक्षकारांतं वर्णैरत्यंत निर्मलैः ।
अशेषशब्दैर्या भाति तामामोदप्रदां नुमः ॥

என்னும் ஸ்தோத்ரரத்னத்தால் பிரமாணத்தின்படி, முப்பத்தினாலு அக்ஷரங்களால் தொடங்கப்பட்டிருப்பதை அறியத்தக்கது. ஆரம்பிக்கப்படும் ஒவ்வோரெழுத்திற்கும் இந்தவை காமாக்களென்னும் ஸ்தோத்ரம் அளவிடுகின்றது.

அநாதியாயுள்ள சலாகஷுர ஸ்தோத்ரங்களின் விவரணை நூறாயுள்ள பரிபாஷக ஸ்தோத்ரங்கள் 40. இவை ஸ்ரீ ரங்நாதனிடத்தில் ஞானத்தையும் பக்தியையும் பெற்றிருக்கின்றனை. இவர்கள் இந்த பாஷ்யகர்த்தாவாகிய ஸ்ரீ பாஷ்யகாரரென்னும் நாதமுனியின் சிஷ்யர்களாம். ஸ்தோத்ரங்களுக்கும் தற்காலம் அச்சிட்

ள்ள பாஷ்யத்திற்கும் சில நாமாக்களில் மாறுபாடுகள் காணப் படுகின்றன. அ காரத்தில் ஆரம்பமாகும் நாமாக்கள் (ஈட) 10 என்றும், இ காரத்தில் ஆரம்பிக்கப்படும் நாமாக்கள் (யூ) 19 என் றும், உகாரத்தில் துவக்கப்படும் நாமங்கள் (ஏங்) 59 என்றும், ஊ காரத்தில் ஆரம்பமாவன (ஸஷோடஶ) 122 என்றும், ஸுத்ரம் நிர்த்தாரண'ம் செய்கின்றது. ஆனல் இப்பொழுது இருக்கும் பாஷ்யத்தின்படி சில சில வேறுபாடுகள் காணப்படுகின்றன. ரு என்னும் அக்ஷரத்தில் துவக்கப்படும் நாமாக்கள் 11 இருக்கின் றன. இதில் ஒரு நாமம் அதிகம். ரூ காரத்தில் ஆரம்பமாகும் பெயர்கள் 18 தான் இருக்கின்றன. இதில் ஒன்று குறைவு. ஆதலின் ஸுத்திரத்தின்படி ரு காரத்திலுள்ள ஒரு நாமா காரு நாமாவாய் மாறியிருத்தல் வேண்டுமென ஊகிக்கத்தக்கதா யிருக்கின்றது. "சிஞ்ஜாணமணி மஞ்ஜீரமண்டித ஸ்ரீபதாம்புஜா" என்னும் நாமமானது ஸுத்திரப்படி "ஸிஞ்ஜாண" என்று ஸி காரநாமாக்களில் சேர்க்கப்பட்டுள்ளது; "சிஞ்ஜான" வென்று ஸி காவரிசையில் சேர்ப்பதுதான் ஸரியாகத்தோன்றுகின்றது.

அன்றியும் முதலாவது பரிபாஷா ஸுத்திரத்தில் த்ரிகுணா: என்று குணசப்தத்தோடு ஆரம்பிக்கப்படுவன மூன்று நாமாக்கள்; அவை குணநிதி:, குணதீதா, குணப்ரியா என்று குறிக்கப்பட்டிருக்கின் றன; ஆனல் குணப்ரியா என்றும் நாமம் இல்லை: இதற்குப் பதில் குருப்ரியா என்று இருக்கின்றது. இது ஒரு மாறுபாடு. இத் தனைய வகு சொற்பமான வேறுபாடுகளால் ஒரு தோஷமும் இல்லை என்று ஸ்ரீபாஸ்கரராயரே தமது பாஷ்யத்தின் இடையில் கூறியுள்ளார்.

இந்த ஆயிரம் நாமாக்களுமே மந்த்ராத்மகமானவை. ஆகையின் ஒவ்வொரு மந்த்ரமும் இத்தனை இத்தனை எழுத்துக்களோடு கூடியவையென்றும் ஸுத்திரங்கள் நிச்சயிக்கின்றன. இங்ஙனம் நிச்சயிப்பதோடு அவற்றின் வரிசைக்கிரமமும் குறிப்பிடப்படுகின் றது. ஆதலின் நாமாக்களின் வரிசைக்கிரமத்தை மாற்றவோ, அல்லது புது நாமாக்களை நுழைக்கவோ அல்லது உள்ள நாமாக் களை வேறுவிதமாய் மாற்றவோ சற்றும் முடியாது.

மந்த்ர ஸ்வரூபமாயுள்ள ஒவ்வொரு நாமாவும், பக்தியோடு ஜபம் செய்பவர்க்குப் பயனை பளிக்கின்றது. இவ்விஷயம் உத் தர பாகத்தில் நன்கு கூறப்பட்டுள்ளது.

இந்த ஆயிரம் காமாக்கள் அடங்கிய முழு ஸ்தோத்திரமும் ஒரு பெரிய மாலா மந்த்ர ஸ்வரூபமானது. இந்த மந்த்ரத்திற்கு நான்கு வர்ணத்காரும் அதிகாரிகளே.

இந்த ஆயிரம் காமாக்களின் வினைசெய் நியமத்தில் பிரஜாபதி பின்னை கூடஸ்து ஸ்வரூப ஜித்சக்தியின் கடஸ்து ஸ்வரூப லக்ஷ்மி னாங்களின் ஆத்மப் ஒரு விகாடார்ச்சியாய் அமைந்துள்ளதின் பது நூட்டமாய் ஆராய்ந்தறிபவர்க்குப் புலப்படாமற்போகாது.

சாரீரக மீட்டாங்ஸை என்றார் பிரஜாபதி ஸொரித்திரத்தில், பிரஜாபதியை யறியுட மீளட்ணையுள்ள உத்தமாதிகாரிக்கு ஜ்ஞாநஸ்ய ஏக: என்றும், உபநிஷத்துக்களின் ஸஜ்ஞாநிநிஜ்ஞாந ப்ரஸீத என் றும், பிரஜாபதியின் கடஸ்து கல்பகதையை மேல் கூறப்பட்டிருக்கின்றது. பிரஜாபதி காண்டமாகிய உபநிஷத்துக்களின் அந்தப் பிரகரணத்தில் பிரகாணத்தில் ஜீவர்களுக்குப் பந்தமும் மோக்ஷமும் முறையே திரோபாவ . அநுக்ரஹங்களால் ஏற்படுகின்றனவாகளின், பந்த நிவர்த்தியின் மொருட்டும் ஆநந்த ப்ராப்தியின் பொருட்டுமான ஸாதனங்களின் விஸ்தாரமாய் இந்நூலில் கூறப்பட்டுள்ளன. மைடாயுணன "லலிதாம்பிகா" என்றார் காமமான அபீஷ்ட ஸித்யர்த்தம் ஸாதிக்கும அதிகாரிக்குக் கூறுகின்றார். இவ்விஷயம் முன்பாகவும், கோடகநிஷ்டாரூ ஸாதக ஸ்வரூபங்களால் இயற்றப்பட்ட ஸ்லோகத் திலாயனத்தில் முன் பலிதாநுஷ்டா பிரகாணத்தில் வர்ணிக்கிறது, "நிகமணி தண்டலஷ்டகா" வென்றும் காமம் முதல் வேஷ்டிதாபிஷ்ட பாதிணி" என்றார் 111-வது காமவரையிலுள்ள அவாந்தர காமாக்களில் சிலவற்றில் பாம்பேரமாயின் தீர்க்கதரிசித விஷயங்கள் வெளிப்படுகின்றனை:-

நாமாக்களின் சங்கியை	கூறப்படும் விஷயம்
4, 5.	பிரகாச ஸ்வரூபம்.
6.	விமர்ச ஸ்வரூபம்.
7—51.	ஸ்தூல ஸ்வரூப வர்ணனை.
52, 53, 54.	பரதேவதை விளங்கும் ஸ்தானம்.
55—63.	ஸ்ரீபுரம், அம்பாள் விளங்கும் ஸ்தானம் முதலியன.
64—84.	அம்பாள் சிதக்னி குண்டத்தில் அவதரித்துச் செய்த கார்யங்கள். இவற்றில் பரதேவதையின் பரம ரஹஸ்யார்த்தரூப வாஸனை கூறப்பட்டுள்ளது.
85, 86, 87.	மந்த்ரரூப ஸூக்ஷ்ம ஸ்வரூபம்.
88, 89.	ஸூக்ஷ்மதரமாகும் காமகலா ஸ்வரூபம்.
90—112.	ஸூக்ஷ்மதமமாகும் குண்டலினீ ஸ்வரூபம்.
113—131.	ஸ்தூலம், பரம், ஸூக்ஷ்மம், ஸூக்ஷ்மதரம் ஸூக்ஷ்ம தமம் என்னும் ஐந்துவகையான ரூபங்களோடுள்ள பரதேவதையை அடையும் உபாயங்கள்.
132, 133, 134.	பசுதத்வண்டைக்கு அத்தமானவமளனல்.
135.	கூடஸ்தனிகவிக்ரஹவாதியின் மத கண்டனம்.
136.	ஆகாரத்தோடு கூடியதென்று கூறும் வாதியின் கண்டனம்.
137.	சூன்யவாதி கண்டனம்.
138.	தார்க்கிக மத கண்டனம்.
139.	"அவயவத்தோடுகூடியது பிரஹ்மமென்னும்" வாதிகண்டனம்.
141.	"ஸத்யகாமம் முதலிய குணங்களோடு கூடியதென்னும்" வாதி கண்டனம்.
147.	சார்வாக மத கண்டனம்.
151.	தூஷக மத கண்டனம்.
153—256.	பரதேவதையின் விதிமுக நிஷேத முக லக்ஷணங்கள்.

257—274. பஞ்சாவஸ்தைகளிலுள்ள ஜீவர்களது அதிஷ்டானமாயும், பஞ்சப்பிரஹ்மங்களுக்கு அதிஷ்டானமாயுமுள்ள அம்பாளது ஸ்வரூபம்.

275—999. மந்த்ர சாஸ்திரம், யோகசாஸ்திரம், அத்வைத சாஸ்திரம், பக்தி சாஸ்திரம் முதலிய சாஸ்திரங்களின் பரமரஹஸ்ய தாத்பர்யங்கள், பரமநிதிக்ஷியான விஷயங்கள் முதலியவைகளை கூறப்பட்டிருக்கின்றன.

இந்த ஸஹஸ்ரநாமாக்களின் ஆதிமுதல் அந்தம் வரையிலுள்ள தொடர்பைக் கூர்ந்து நோக்குவோமாயின், ஸாதனம், அவிரோதம், ஸாதனம், பலன் என நான்காக வகுக்கப்பட்டுள்ள ப்ரஹ்ம ஸித்தாந்தத்தின் அமைப்பு இதற்குப் பற்றுகோலாகும்.

1, 2, 3. தடங்கல்கள் விலகுவன.

4—131. ஸமன்வயம் - எல்லாம் சிக்ஷக்ஷி ஸ்வரூபமே யெனல்.

132—256. அவிரோதம் - பிறமத கண்டனம், ஸ்ரீமத் ஸாதீத ஸ்வரூபம் முதலியன.

257—274. த்வம்பத சுத்தம் விசாரமூலம் லபிக்கும்.

275—999. பலஸித்த சாஸ்திர ஸித்தாந்தங்களின் ஸ்ரீ சக்ரம் முதலியவைகளைச் செய்தல்.

1000. அபசோதஸ்தி ஸாதஸ்தாந்த வரை முடிவு.

(I) அத்வைத சாஸ்திர ஸம்பந்தமான பதங்கள்:— ஆமேயா, அஜா, ஆத்மவித்யா, ஏகாதினீ, அக்ஷர பரமாத்மா. கேவலா, கூடஸ்தா, குணத்ரயா, சின்மயீ, தத்:, தத்வமஸி, தத்வம்பதார்த்தா, சித்சக்தி:, சேதனரூபா, க்ஞானவிக்ரஹா, தத்பதார்த்த சுத்தா, தத், தத்வம், அயீ, த்ரிவர்க்க பாஜனீ, தேஜோவாரிமிருத்ஸமா, நிராதாரா முதலிய பல நாமங்கள், ஸாக்ஷாத்பரா, பரா, பரமரூபா, பிரஹ்மாத்மைக்ய ஸ்வரூபிணீ, பரமாத்மா, பரமாத்மிகா, பித்யாஜகததிஷ்டானா, முக்திதா, முக்தி ஸேவ்யா, பவபந்த விமோசனீ, வ்யாபினீ, சிவா, ஸ்ருதி ஸீமந்த ஸிந்தூரீக்ருத பாதாப்ஜ தூளிகா, சிவங்கரீ, சாம்பவீ, ஸச்சிதானந்த ஸ்வரூபிணீ, அத்வைத பாவனா ரூபிணீ, ஸர்வோபாதி விநிர்முக்தா முதலியனவாகும்.

(2) மந்த்ர சாஸ்திரத்திற்கும் ஸ்ரீவித்யைக்கும் ஸம்பந்தப்பட்ட நாமாக்களாவன:— அகுலா, ஆதிசக்தி, இச்சாசக்தி, க்ஞானசக்திக் கிரியாசக்திஸ்வரூபிணீ, ஈ, உமா, ஓட்யாணபீட நிலயா, கதம்பவனவாஸிநீ, காமாக்ஷீ கிரிசக்ர மதாரூட தண்டநாத புரஸ்க்ருதா, காமேஸ்வர முகாலோக கல்பித ஸ்ரீ கணேஸ்வரா, கராங்குளி நகோத்பன்ன நாராயண தசாக்ருதி:, காமேஸ்வராக்னி நிர்த்தக்த ஸபண்டாஸுர நிஷூன்யகா, முதலிய லலிதாபாக்யானம், தேவீபாகவதம் முதலியவற்றிற்குச் சம்பந்தப்பட்ட நாமாக்கள், குருமண்டல ரூபிணீ, குருப்ரியா, மநுவித்யா, சந்த்ரவித்யா, சித்கலா, க்ஞானமுத்ரா, ஞானதேவ்ய ஸ்வரூபிணீ, கத்வாஸனா, த்ரிகோணாந்தர தீபிகா, த்ரிகண்டேசி, த்ர்கோணகா, பஞ்சப்ரேதாஸநாஸீநா, பஞ்சக்ருத்ய பராயண, ப்ரதிபன் முக்ய ராகாந்த திதிமண்டல பூஜிதா, பாசஹஸ்தா, பஞ்சஸங்க்யோபசாரிணீ, பிஸிதந்துதநீயஸீ, பிந்துமண்டல வாஸினீ, பலிப்ரியா, பிந்துதர்ப்பண ஸந்துஷ்டா, பகமாலினீ, மஹாகந்த்ரா, மஹாமந்த்ரா, மஹாயந்த்ரா, மஹாயாக க்ரம ராத்யா, மேரு நிலயா, மந்த்ரஸாரா, ரஹஸ்தர்ப்பண தர்ப்பிதா, பீமர்சரூபிணீ, வீரமாதா, ஸ்ரீவித்யா, ஸ்ரீஷோடசாக்ஷரீ வித்யா, ஸ்ரீசக்ரராஜநிலயா ஸர்வமந்த்ரஸ்வரூபிணீ, ஸாமரஸ்ய பராயண, என்பனவாதிகளாம்.

இந்த ஸஹஸ்ரநாமமானது, ஸமயம், கௌலம், மிச்ரம் முதலிய எல்லா அவாந்தர மதங்களுக்கும் இடம் தந்து அவற்றைப் போஷிக்கின்றது.

(a) ஸமய மதத்தைக்கூறும் ஸமயாந்தஸ்தா, ஸமயாசாரதத்பரா முதலிய நாமாக்களும்(b)கௌலமதத்தைக்கூறும் கௌலமார்க்க தத்பர ஸேவிதா, குலேஸ்வரீ, குலஸங்கேத பாலினீ, குலாம்ருதைக ரஸிகா முதலியனவும் இதில்அடங்கியிருக்கின்றன.

(3) யோக ஸம்பந்தமாய்ச் சில நாமாக்கள் இதில் கூறப்பட்டுள்ளன; அவையாவன:— மூலாதாரைக நிலயா, ப்ரஹ்மக்ரந்தி விபேதினீ, 101 முதல் 110 வரையிலுள்ள நாமாக்கள். விசுத்தி சக்ரநிலயா முதல் 62 நாமாக்கள்; யோகினீ ந்யாஸக்ரம மாயுள்ளனவும், யோகினீ, யோகதா, யோக்யா, யோகாநந்தா முதலியனவுமாம். மேலே 101 வதான மணிபூராந்கருதிதா என்னும் நாமமானது சமய மதரீதியான பாவுனையோகப் ப்ரதிபாத்யமானது.

ச்ல் குண்டலினீ சக்தியின் பிரபோதமும், கிரந்தி த்ரயங்களின் சேதனமும், மற்றும் கூறப்பட்டுள்ளன. யோக பாவனை லமய மத ரீதியாயும் கௌலமத ரீதியாயும் கூறப்பட்டிருக்கின்றன.

(4) பக்தி கம்யா, பக்தி வச்யா, பக்த ஸௌபாக்ய தாயினீ, பக்தி ப்ரியா, கூலிப்ரபாஸாதினீ, பக்த சித்த கேகீ கநா கநா, நாட பாராயண ப்ரீதா, லோபா முத்ராார்ச்சிதா, த்யான கம்யா, புலோம ஜார்ச்சிதா, வரதா, காமதூஜிதா முதலிய நாமாக்கள் உபாஸனா காண்டமாகும் பக்தி சாஸ்த்ர சம்பந்தமானவையாகும்.

(5) கர்மகாண்ட ஸம்பந்தமாயும் சில நாமாக்கள் இருக்கின்றன. அவை, க்ருதக்ஞா, சிஷ்டேஷ்டா, சிஷ்டபூஜிதா, ஸ்வாஹா, ஸ்வதா, சுபகரீ, ஸாம்ராஜ்ய தாயினீ, தீக்ஷிதா, யக்ஞரூபா, யக்ஞப்ரியா, யக்ஞகர்த்ரீ, யஜமானஸ்வரூபிணீ, கர்மாதாரா, வர்ணாச்ரம விதாயினீ, முதலியனவாம்.

இங்ஙனம் பூர்வபாகமாய் விசாரிக்கின், இந்த ஸஹஸ்ர நாமத்தில் இல்லாத விஷயமே கிடையாதென்று நன்கு புலப்படும்.

(6) அன்றியும் ஸகல சாஸ்த்ராார்த்த ஸாரமாய்ச் சில நாமாக்கள் உள்ளன. அவை, விச்வரூபா, பசுபாசவிமோசினீ, பரா, மூலப்ரக்ருதி, பராகாசா, பராபரா, ஸர்வ்யாபஸர்வ்யமார்க்கஸ்தா, பிஸ்தந்து தரீயஸீ முதலியனவாம். இவற்றின் மஹிமை பாஷ்யத்திலல் நன்கு விளங்குவதாகும்.

இதில் பிரஹ்மத்தைச் சக்தியாய்க் கூறப்பட்டுள்ளது. இதுதான் பிரஹ்மசக்தி, ஆத்மசக்தி, சித்சக்தி, என்பனவாதி பல பெயர்களால் வழங்கப்படுகின்றது. ஆயினும் இது அநாமாக்யை, டையாற்றது; ஆகலின் ரூபமற்றது. சித்சக்தியைப்பற்றி அதிகமாய் அறியவிரும்புபவர், இந்தாவிலேயே கனியாச் சேர்க்கப்பட்டுள்ள "ஸ்ரீவித்யை" என்னும் பிரகரணத்தில் கண்டறியவும்.

இந்த ஸஹஸ்ரநாமப் பிரதிபாத்யமாகும் சித்சக்திக்கு எந்த லிங்கமும் கிடையாதாதலின் நிஷ்களம். லிங்க வ்யவஸ்தையற்ற சித்சக்தியை வாக்கிலல் கூறுதல் முடியாத காரியம்; ஆகலின்

பும், ஸ்த்ரீ, நபும்ஸகம் ஆகும் மூன்று ம் பரதேவ
தை கூறப்பட்டுள்ளது அறியத்தக்கது.

எல்லா ஸஹஸ்ரநாமங்களிலும் முக்ய ஸஹஸ்ர நாமங்களை
சிரேஷ்டமானவை. அவற்றிலும் கங்கை, காயத்ரீ, சியாமளா,
லக்ஷ்மீ, காளீ, பாலா, லலிதா, ராஜராஜேச்வரீ, ஸரஸ்வதீ, பவானீ
என்னும் பத்து ஸஹஸ்ர நாமங்கள் மிகவும் சிறந்தவை. இவற்
றுள்ளும் ஸ்ரீலலிதா ஸஹஸ்ரநாமம் பரம உத்க்ருஷ்டமானதாம்.

இந்த விஷயங்களெல்லாம் முதல் அத்தியாயத்தில் விஸ்தார
மாய்க் கூறப்பட்டுள்ளது. அங்கே அறியவும்.

லலிதா ஸஹஸ்ர நாமத்தின் பாஷ்யங்கள்:—

1. விமர்சானந்தீயம். இது ஸ்ரீமத் நிமலானந்தநாதரின் சிஷ்ய
ராகும் விமர்சானந்த நாதரால் இயற்றப்பட்டதாகும். இது வரையி
லிது அச்சிடப்படவில்லை. கையெழுத்துப் பிரதி காஞ்சீபுரத்தில்
கிடைத்தது. அடையார் புத்தகசாலையில் வைக்கப்பட்டிருக்
கின்றது.

2. ஸ்ரீ வித்யாரண்ய ஸ்வாமிகளது பாஷ்யம் காச்மீர தேசத்
தில் ஜம்மு என்னும் நகரத்துப் புத்தகசாலையில் இருக்கின்றது.

3. ஸ்ரீமத் பட்டநாராயணரால் இயற்றப்பட்டது ஒன்று.

4. ஸ்ரீ சங்கர பரம்பரையில் வந்த ஒரு சங்கராசார்யாள்
இயற்றியது மற்றொன்று.

5. ஸ்ரீ பாஸ்கரானந்த நாதரால் இயற்றப்பட்டது ஒன்று;
இந்த பாஷ்யம்தான் தற்காலம் சிறந்து விளங்குவது. இதற்கு
இணையான பாஷ்யம் மற்றொன்றில்லையென்பது பல வித்வான்கள்
ஒப்பமுடிந்த விஷயமாகும்.

ஸ்ரீபாஸ்கராசார்யரது சரித்திரம், ஜீவியகாலம், அவரது மத
கொள்கை, அவராலியற்றப்பட்ட இதர க்ரந்தங்கள், அவரால்
பிரதிஷ்டை செய்யப்பட்ட ஆலயங்கள் முதலிய விஷயங்கள், இந்
நூலில் சேர்க்கப்பட்டுள்ள "பாஸ்கரரும் அவருடைய மஹிமை
யும்" என்னும் அநுபந்தத்தில் விஸ்தாரமாய்க் கூறப்பட்டுள்ளது;
அங்கறியவும்.

ஸஹஸ்ரநாம பாஷ்யத்தின் தமிழுரை ஆசிரியர்:—

ஸ்ரீமத் பாஸ்கரராயரால் இயற்றப்பட்ட வெகு கம்பீரமாகிய வடமொழி பாஷ்யத்தைத் தமிழில் மொழிபெயர்த்து இத்தமிழுலகத்திற்கு உதவியவர் ஸ்ரீமான் G. V. கணேசய்யர் அவர்கள் B.A., B.L., ஆவர். இவரது மொழிபெயர்ப்பு பாஷ்ய மூலத்திற்குச் சற்றும் முரண்படாமலும், வேதாந்தம், தர்க்கம், ஆகமங்கள், புராணங்கள், ஸ்மிருதிகள் முதலிய பல சாஸ்திரங்களின் மேற்கோள்களுடன் கூடியும்

இவருக்கு அத்வைத வேதாந்த சாஸ்திரத்திலும், ஸ்ரீ வித்யா சாஸ்திரத்திலும் கல்ல பிரக்ஞை இருப்பதாக ஏற்படுகின்றது. இவரது மொழிபெயர்ப்பின் தமிழ் நடை மிகத் தெளிவாயும் யாவருக்கும் விளங்கக்கூடியதாயும் இருக்கின்றது.

இவர் ஆங்கில பாஷையிலும் வல்லவராதலின் Sir John Woodroffe என்றும் Arthur Avalon இயற்றிய பல ஆங்கில நூல்களையும் கற்றுத் தெளிந்தவர். இவர் திருவையாற்று ஸ்ரீ வித்யா பரம்பரையைச் சார்ந்தவரெனத் தெரிகின்றது.

இவர், ஜகத்குரு ஸ்ரீ சங்கர பகவத்பாதாளாலியற்றப்பட்ட ஸௌந்தர்ய லஹரியின் லக்ஷ்மீதரர் வியாக்கியானத்திற்கும் ஒரு சிறந்த தமிழ் உரையியற்றி வெளியிட்டுள்ளார்.

அன்றியும், ப்ரசீன மஹா கவியாகும் மூக கவியாலியற்றப்பட்ட "மூகபஞ்சசதி"யில் ஆர்யா சதகம், கடாக்ஷ சதகம் என்னும் இரண்டு சதகங்களுக்கும் தமிழில் விருத்தியுரை இயற்றியுள்ளார். இவராலியற்றப்பட்ட நூல்கள் யாவும் கும்பகோணம், ஸ்ரீ ஜனார்த்தன பிரிண்டிங் ஒர்க்ஸ், லிமிடெட் (கம்பெனி)யாரால் வெளியிடப்பட்டுள்ளன. இவர்கள் இந்த ஸஹஸ்ரநாம பாஷ்யத்திற்கு அடியேனை முன்னுரை யெழுதுமாறு செய்ததற்கு யான் அவர்பால் மிக்க நன்றிபாராட்டக் கடமைப்பட்டுள்ளேன்.

சிறந்த வித்வானும், அத்யாத்ம சாஸ்திரப் பயிற்சியும் அநுபவமும் பெற்றவருமான ஸ்ரீமான் அய்யர் அவர்கள் எழுதிய பேருரை நூலுக்கு, யான் முன்னுரை யெழுதுவதற்குச் சற்றும் அருகனல்லேனெனினும், இக்கையை சிறந்த நூலுக்கு முன்னுரை

யெழுதும் பாக்கியம் பெற்றேனெயென்னும் பெருமகிழ்ச்சியால் எழுதத் தொடங்கினேன்.

முன்னுரையில் இன்னும் பல விஷயங்களைப்பற்றி விமர்சித்தல் அவச்யமாயினும் அவை விரிவஞ்சி விடுக்கப்பட்டன.

ஸ்ரீமான் கணேசய்யர் அவர்கள், காமியற்றிய இந்த ஸஹஸ்ர நாம பாஷ்யம் அச்சிடப்பட்டு வெளிவரும் வைபவத்தைக் கண்டு களிப்பதற்கு இல்லாமற் போய்விட்டதே யென்றும் எண்ணம் என் மனத்தைப் புண்படுத்துகின்றது.

இவர்க்குத் தமது பூதவுடம்பழிந்ததாயினும், புகழுடம்பு ஒருகாலும் அழியாது.

இவைகளைக் கண்டு பேசவேண்டுமென்ற அடியேனுக்கிருந்த ஆவலையும், அடியேனைக் காணவேண்டுமென்னும் ஸ்ரீமான் அய்ய ருடைய பேராவலையும் அவலமாக்கியது எதுவோ? அறிகிலேன்.

ஸ்ரீ வித்யா ஸம்பந்தமாய் உள்ள, ஸௌந்தர்யலஹரி, ஆர்யா சதகம், கடாக்ஷ சதகம், லலிதா ஸஹஸ்ரநாமம் முதலிய நூல் களின் தமிழ் உரையானது தமிழுலகத்திற்கு மிக்க பயன் தருப வையாயிருந்தனின், இந்நூல்களை நன்கு ஆராய்தல் நமது கடனாகும்.

சிவம்.

ஸ்ரீ பிரஹ்ம வித்யா
விமர்சினீ ஸபா,
சென்னை.
14—11—1938.

திங்களன்,
ஸஜ்ஜன விதேயன்,
ப. சுப்பிரமண்ய ஐயர்,
சென்னை.

உ

ஸ்ரீமத் பரந்தாம ஸ்ரீபுருஷோத்தம பரப்ரஹ்மணே நம:

விக்ஞாபனை.

புருஷோத்தமர்களே!

லோகத்தில் ஸமஸ்தமான ஜனங்களாலும் விரும்பப்படுவது ஸுகம் என்பது ஒன்றே. இதையேதான் புருஷோத்தமென்றும் சொல்லப்படும். இவ்விதமான ஸுகமானது க்ருத்ரிமம், அக்ருத்ரிமம் என்ற இருவகைப்படும். இவை முறையே காம, மோக்ஷமென்ற பெயர்களால் கூறப்படும். இவையிரண்டும் தர்மத்தின் மூலமாக அடையப்படுவதாலும், தர்மமானது அர்த்தத்தின் மூலமாய்க் கிடைக்கப்பெறுவதாலும் இவை நான்கும் புருஷோத்தமனை ஸாதாரணமாகக் கூறப்படும்.

இவ்விதமான ஸுகபேதங்களில், காமமென்பது க்ருத்ரிம ஸுகம்-நாமாகக் கற்பித்துக்கொள்வது, ஆதலின் அழியக்கூடியது; உண்மையானதல்ல. அக்ருத்ரிம ஸுகமான மோக்ஷமென்பதுதான் சாச்வதமானது; அழிவில்லாதது. இதை அடைவதற்காகப் பரம கருணைமூர்த்தியான பரமசிவனால் அவரவர்களுடைய சித்த பரிபாகத்திற்குத் தக்கபடி பலவிதமான வித்யைகள்-வேத, சாஸ்த்ர, ஸ்ம்ருதி, புராண இதிஹாஸங்கள் முதலியன-ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன.

'ஓமித்யேகாக்ஷரம் ப்ரஹ்ம வ்யாஹரன்மாமனுஸ்மரன்
யஃ ப்ரயாதி த்யஜன்தேஹம் ஸயாதி பரமாம் கதிம்'

'ஸர்வே வேதா யத்பதமாமனந்தி தபாம்ஸி ஸர்வாணி ச யத்வதந்தி
யதிச்சந்தோ ப்ரஹ்மசர்யம் சரன்தி தத்தே பதம் ஸங்க்ரஹேண ப்ரவக்ஷ்யே
ஓமித்யேதத்'

'தஸ்மை ஸ ஹோவாச ஏதத்வை ஸத்யகாம பரஞ்சாபரஞ்ச ப்ரஹ்ம யதோங்கார:
தஸ்மாத்விதாந்நேகமன்வேதி தேன ஸாம்யமேதி ஸ ஏதம் ப்ரஹ்மலோகம்
ந விந்ததி ஜ்ஞானஸம்பன்னோ வை ப்ரஹ்மலோகஸ்தமேவாபிஸம்பத்யதே'

'அதோ யதா ஸோம்யமதுகரா: ஸர்வாணி ரூபாண்யவாஹரந்தி
ஸ்ருணோத்யேவமேவ ஸர்வாணி பூதான்யோமித்யேவ விஜானாதி'

இவ்விதம் வெவ்வேறான சாஸ்த்ரங்கள் மனுஷ்யர்களுடைய சித்த சுத்தியையும், அதிகாரி பேதத்தையும் அனுஸரித்து ஆதி கவியான பரமசிவனால் ஏற்படுத்தப்பட்டிருப்பதால் அவையெல்லாம் ப்ரமாணம்தான். ஒன்று உயர்வு, மற்றொன்று தாழ்வு என்பது கிடையாது. ஆகவே ஒரு சாஸ்த்ரத்தை அனுஸரிப்பவர் இதர சாஸ்த்ரங்களை நிந்திக்கக்கூடாதென்பது முக்யமான விஷயம். ஆதி காரணத்தால் எந்த சாஸ்திரத்திலாயது அதை உயர்வா

சவும் இதர சாஸ்த்ரங்களை இகழ்ச்சியாகவும் சொல்லப்பட்டிருந்தால், அது அந்தந்த அதிகாரி பேதத்தை அனுஸரித்துச் சொல்லப்பட்டிருப்பதாக நாம் அர்த்தம் செய்துகொள்ளவேண்டும். இதைதான் கௌலோபநிஷத்தில் 'லோகான் நிந்த்யாத்' என்றும் 'ஸர்வ தர்சனநிந்தா' என்று பாசுராமகல்ப ஸூத்ரத்திலும்,

'ந புத்திபேதம் ஜனயேத் அக்ஞானாம் கர்மஸங்கிநாம்'

என்று பகவத் கீதையிலும் சொல்லப்பட்டிருக்கிறது.

இந்த பஞ்ச பூதங்களாலான சரீரமும் ஜகத்தும் அழிவுள்ளவை யென்றும், அவற்றினின்று வேறுபட்டதான ஆத்மா, தான் என்று நினைக்கப்படுவதுமான ஜீவனானது, அழிவில்லாத பரப்ரம்மத்தினுடைய ஸ்வரூபமேயென்ற த்ருடமான முடிவுடன் அப்யாஸாதி சயத்தினால் ஸதா அவ்விதமான நினைவுடன் பரப்ரம்மத்தோடு இரண்டறக் கலந்திருப்பதையே மோக்ஷம் என்று சொல்லப்படும்.

'சரீரகஞ்சேதி: சிவோ ஜீவோ, நிஷ்கஞ்சக பரசிவ: |'
(கல்பஸூத்ரம்)

'நாஹம் தேஹோ ந சான்யோஸ்மி ப்ரம்மைவாஹம் ந
சோகபாக்
ஸச்சிதானந்த ரூபோஹம் நித்யமுக்தஸ்வபாவவான் ||'

இப்படித் தன்னுடைய ஜீவனானது பரப்ரம்மமே என்ற ஐக்யபாவத்தை அறிவதினால்தான் அக்ருத்ரிம புருஷார்த்தமான மோக்ஷத்தையடையலாம்.

'ஸ்வ விமர்ச: புருஷார்த்த:' (கல்பஸூத்ரம்)

தன்னுடைய உண்மையான இந்த ஸ்வரூபத்தை அவித்யா (மாயா) வசத்தினால் மறந்திருக்கும் மனுஷ்யனானவன் அப்படி மறந்து போன ஸ்வரூபத்தைத் திரும்பவும் அறியப்பெறுவது அப்போர்ப் பட்ட பரப்ரம்மமாகிய பரமசிவனால் வெளியிடப்பட்ட வேதங்கள் முதலியனவைகளால்தான்.

பரப்ரம்மத்தின் ஸ்வரூபம்.

இம்மாதிரி பரப்ரம்மத்தின் ஸ்வரூபத்தை அறிவதுதான் ஞானத்தின் முடிவு. இதைப்பற்றி ச்ருதியில் சொல்லுகையில், அது இப்படித்தான் இருக்கும் என்று சொல்லாமல் 'நேதி நேதி' (இதுவல்ல, இதுவல்ல) என்று இதர வஸ்துக்களுக்கு விலக்காகத்தான் வர்ணிக்கப்பட்டிருக்கிறது. இப்படி

'யதோ வாசோ நிவர்த்தந்தே அப்ராப்ய மனஸா ஸஹ |

என்றபடி மனதுக்கும், வாக்குக்கும் எட்டாத ப்ரஹ்ம ஸ்வரூபத்தை நாம் மனதில் அனுஸந்தானம் பண்ணுவதாக முயலும்போது நமக்குப் பழக்கமாக இருக்கும் மனுஷ்ய ரூபம் போன்ற ஒரு ரூபத்தைத்தான் அதற்கு ஆரோபணம் செய்து தியானிக்கிறோம். அப்போது அந்த ரூபத்திற்கு கர, சரணத்வயங்களையும், குணங்களையும் கல்பித்துத்தான் உபாஸனை செய்கிறோம். இதைதான் ஸகுணோபாஸனையென்று சொல்லப்படும். வாஸ்தவத்தில் நிர்க்குணமாகவும், நிஷ்களமாகவும், ரூபரஹிதமாகவும் இருக்கும் ப்ரம்ஹத்தை, அனேகமாக எல்லோராலும், ஸகுணமாகவும், ஸகளமாகவும், ரூபத்தோடுந்தான் த்யானம் செய்யமுடியும். அதற்கு மேற்பட்டதான நிஷ்கள ரூபத்தைத் த்யானம்செய்ய சிற்சில மஹான்களால்தான் முடியும்.

ப்ரம்ஹமானது ஆணுமல்ல, பெண்ணுமல்ல. நாம் பிறரை ஆணாகவாவது, பெண்ணாகவாவது நினைப்பது ஸஹஜமாக இருப்பதால் அதேமாதிரி ப்ரம்ஹத்தைப்பற்றியும் நினைக்கிறோமே தவிர அதற்கு லிங்கமென்பது கிடையாது.

'ந ஸ்த்ரீ ந ஷண்டோ ந புமான் அதேஷ: |' (ச்வேதாச்வதரம்)
'ந தஸ்யமம்ப புருஷோ ந சாங்கஸ்ய'
'சித் ஸ்வரூபிணி ந ஷண்டாநாபி தே'
"நாபி பர்த்துரபி தே ஸ்ரிலிங்கதா"
'த்வாம் விநா ந நுதபி ஸ்புரேதயம்'

ஆகவே, நாம் ப்ரம்ஹத்திற்கு ஆரோபணம் பண்ணும் ரூபமானது நம்முடைய ஜன்மாந்தர வாஸனையையும், சித்த பரிபாகத்தையும் அனுஸரித்து நம்முடைய இச்சையின்படி ஏற்படுத்துகிறதே தவிர வேறல்ல.

"பும்ரூபம் வா ஸ்மரேத் தேவீம் ஸ்த்ரீரூபம் வா விசிந்தயேத்
அதவா நிஷ்களம் த்யாயேத் ஸச்சிதானந்த லக்ஷணம் ||"

நிஷ்களமும், நிர்க்குணமுமான ப்ரம்ஹமானது ஸத்தும், சித்தும், ஆனந்தமாகவும், ஸ்வயம்ப்ரகாசியாகவும் இருப்பதால் அதற்கு தான் என்ற நினைவானது ஏற்படுவதில்லை. ஆனாலும் தான் ஒன்றிலும் ஸம்பந்தப்படாமலும் ஸர்வஸாக்ஷியாக இருக்கின்றது. அதற்கு அஹம் என்ற பாவமான து (உணர்ச்சியானது) சக்தியினால்தான் ஏற்படுகின்றது. அப்போதும் அது ஸகுணமாகவும் ஸகளமாகவும் ஆகிறது. நிருபாதிகளான நிர்குணமான பரமசிவனை அவர் விமர்சமாகிற கண்ணாடியில் தன்னைப் பார்த்துக்

ீபாது ப்ரதிபலனம் ஏற்பட்டு அதனால் அவருக்கு அஹம் என்ற பாவமானது ஏற்படுவதாகச் சொல்லப்பட்டிருக்

'ப்ரதிபலதி விமர்சதர்ப்பணே வீசதே' (காமகலா விலாஸம்)

இந்த நிருபாதிகஸம்வித்ரூபமான பரமசிவனே காமேச்வர் என்றும், அவருக்கு அஹம்பாவத்தைக் கொடுக்கும் விமர்சரூப மான சக்தியைக் காமேச்வரியென்றும், லலிதையென்றும் சொல்லி ரங்கள் கூறும். இதனாலேயே அம்பாளைப் பரமசிவனுடைய அஹங்கார ரூபிணீ என்பதாக 'புரமதித: அஹமாபுரஸ்கிகா' என்று 'ஸௌந்தர்ய லஹரி'யின் 7-வது ச்லோகத்தில் சொல்லப் பட்டிருக்கிறது. ஜீவ ஸமஷ்டி ரூபமான பரமேச்வரனுடைய அஹம்தா ரூபமாக இருப்பதால் அதற்கு பராஹம்தா என்ற பெயர். இவ்விதமான பராஹம்தாவிலுல்லான் பரமசிவனுக்கு ஸ்ருஷ்டியுன்முகமான (ஸ்ருஷ்டிக்க வேண்டுமென்கிற) ப்ரவ்

'ஸ ஐக்ஷத பஹுஸ்யாம் ப்ரஜாயேய!' (ச்ருதி)

ஆகவே ஜகத்ஸ்ருஷ்டிக்கு அம்பாள்தான் காரணபூதையாக இருக்கிறாள். இப்படி கர்த்ருத்வம் முதலான கர்மபாவமானது பரமசிவனுக்கு ஏற்படுவதால் அவளை கர்மீ என்றும், அவ்விதக் கர்மத்தை த்ரிபுரஸுந்தரீ, சக்தி, அம்பாளென்றும் சொல்லப் படும். இவ்விதம் கர்ம கர்மிகளுக்கு வெவ்வேறு பெயர்கள் இருந்தபோதிலும் இருவரும் ஒன்றே. இருவருடைய ஸாமரஸ்ய ரூபம்தான் பரப்ரம்மம். ஆகவே தேவியானவள் பரப்ரம்ம ரூபமாகச் சொல்லப்படும்போது ப்ரகாச, விமர்ச, ஸாமரஸ்ய ரூபிணீ என்று சொல்லப்படுகிறாள்.

பராசக்தியும் குண்டலினீ சக்தியும்.

பரப்ரம்மத்தின் அபேத ரூபங்களான சிவ, சக்திகளிரு வரும் நம்முடைய சரீரத்திற்குள்ளும் இருக்கிறார்கள்.

மனுஷ்ய சரீரத்தைப் பிண்டாண்டமென்றும், அவருக்கு வெளியிலிருக்கும் ப்ரபஞ்சத்தை ப்ரம்மாண்டமென்றும் சாஸ் திரம் கூறும். இப்படி வெவ்வேறுகச் சொன்னபோதிலும், ப்ரம்மாண்டத்திலிருப்பதெல்லாம் பிண்டாண்டத்திலும், பிண் டாண்டத்திலிருப்பதெல்லாம் ப்ரம்மாண்டத்திலும் இருக்கிற படியால் அவையிரண்டும் ஒன்றே.

'யத் இஹாஸ்தி தத் அன்யத்ர, யன்னே ஹாஸ்தி ந தத் க்வசித்'

இதுபற்றியே மனுஷ்ய சரீரத்தை கூட ப்ரம்ஹாண்ட மென்று சொல்லப்படும். இரண்டின் அம்சங்களும் ப்ரம்ஹாண்டத்தில் ஸமஷ்டிரூபமாகவும், பிண்டாண்டத்தில் வ்யஷ்டிரூபமாகவும் இருப்பதான ஒரு பேதத்தைத் தவிர வேறு பேதங்கள் கிடையா. எப்படி ஜீவாத்மாவானது பரமாத்மாவின் அம்சமோ அப்படியே பராசக்தியின் அம்சமாக நமது சரீரத்தில் குண்டலினீ சக்தி இருக்கிறாள். ப்ரம்ஹாண்டத்தில் நடக்கும் ஸகல கார்யங்களுக்கும் சக்தியின் ஸமஷ்டிரூபிணியான த்ரிபுரஸுந்தரியானவள் எப்படி காரணபூதையாக இருக்கிறாளோ, அப்படியே குண்டலினீசக்தியானவள் நம்முடைய சரீரஸம்பந்தமான ஸகல கார்யங்களுக்கும் காரணமாக இருக்கிறாள். இந்தக் காரணம் பற்றியே அம்பாள் மஹாகுண்டலி என்று கூறப்படுவது. சக்தியின் ஒத்தாசையில்லாவிட்டால் சிவன் ஒன்றும் செய்யமுடியாது. இவ்வளவே குண்டலினீ சக்தியில்லாவிட்டால் நம்மால் ஒன்றும் செய்ய முடியாது. இவ்விதம் பராசக்தியின் அம்சமான குண்டலினீ சக்தியை எழுப்பி ஷட்சக்ரோபதனம் செய்து ஸஹஸ்ரதள கமலத்திற்கு அழைத்துவந்து அங்கிருக்கும் பரமசிவாம்சமான அகுலகுண்டலினீயோடு சேர்த்து ஸாமரஸ்யம் உண்டுபண்ணுவதுதான் ஸமயமதஸித்தாந்தமாகும். இவ்விஷயம் ஸமயாசாரத்பரா வென்றும் ஸஹஸ்ர காமத்திலுள்ள பதத்திலும் அறியத்தக்கதாகும். அப்படி ஸாமரஸ்யம் ஏற்படுத்தியபோதிலும் குண்டலினீ சக்தியானவள் திரும்பவும் மூலாதாரத்தை வந்தடையும் ஸ்வபாவமுடையவளாகையால் நம்முடைய அப்யாஸாதிசயத்திலும் அந்த சக்தியை ஸஹஸ்ராரத்திலேயே நீடித்து நிலைத்திருக்கும்படி செய்யவேண்டும். இது பாவனாதார்ட்யத்திலும் ஸித்திப்பதாகும். இந்த நிலைமை ஏற்பட்டவுடன் ஜீவன் முக்தி ஏற்பட்டுவிடுமென்பது இந்த உபாஸனையின் ஸித்தாந்தமாம். இத்தகைய நிலைமைக்கு வந்துவிட்ட ஸாதகனானவன் அம்பாளுடைய ஸ்வரூபத்தை காப்போதும் அநுஸந்தானம் செய்துகொண்டு, அதனால் ஏற்படும் ப்ரம்ஹானந்த ரஸானுபவத்தில் ஈடுபட்டு, இந்தப் பிரபஞ்சத்தின் கார்யங்களில் கொஞ்சம் கூட ஸம்பந்தமில்லாதவனாய், ஜீவன் முக்தனாய், தன் காலத்தைக்

கூடாதது வருவான். அவன் இந்த ஸம்ஸார யாத்ரையில் கலந்து கொண்டாலும் அவன் செய்யும் ஸகல கார்யங்களும் அம்பாளுடைய ஸபர்யா பர்யாயமாகவே இருக்குமே தவிர வேறல்ல.

தத்வங்களும் வாதாக்ய தத்வமும்.

ப்ரபஞ்சத்திலிருக்கும் வஸ்துக்களெல்லாவற்றிற்குள்ளும் ப்ரளயகாலம் வரையிலிருந்துகொண்டு ஸகல ஸ்ருஷ்டிக்கும் போகத்தைக் கொடுப்பதுமான வஸ்துக்களுக்கு தத்வங்களென்ற பெயர்.

'ஆப்ரளயம் யத்திஷ்டதி ஸர்வேஷாம் போகதாயி பூதாநாம் |
தத் தத்வமிதி ப்ரோக்தம் ந சரீர கடாதி தத்வமத: 11'

(ஸுதஸம்ஹிதை)

இவைகளை ஸ்தூலமாகக் கணக்கிடுவதில்,

'பஞ்சபூதாத்மகம் ஸர்வம் சராசரமிதம் ஜகத் |'

என்றபடி தத்வங்களை ஐந்தாகச் சொன்னபோதிலும் கொஞ்சம் பரிசீலனை செய்துபார்த்தால் தத்வங்களை உண்மையாக இருபத்தைந்து என்றே கணக்கிடவேண்டும். வேறு சிலர்கள் தத்வங்களை 36, 51 அல்லது 94 என்று கணக்கிட்டபோதிலும் அவையெல்லாம் இந்த இருபத்தைந்து என்ற கணக்கில் அடங்கிவிடும். அவை ஸம்ஹாரக்ரமத்தில் சொல்லுகையில் பஞ்சதந்மாத்ரைகள், பஞ்ச தன்மாத்ரைகள், பஞ்ச ஞானேந்த்ரியங்கள், பஞ்ச கர்மேந்த்ரியங்கள், மனஸ், மாயா, சுத்தவித்யா, மஹேச்வரர், ஸதாசிவர். பரப்ரம்ஹஸ்வரூபிணீயான அம்பாளானவள் இவற்றையெல்லாம் கடந்து சிவனுடன் ஸாமரஸ்யபாவமடைந்து இருபத்தாறுவது தத்வமான ஸாதாக்ய தத்வமாக இருக்கிறாளென்பது சாக்தர்களுடைய ஸித்தாந்தம். இந்த தத்வத்திற்கு ஸதா(सदा) என்ற பெயர். (सत् आख्या यत: என்று பிரித்து அர்த்தம்செய்து இந்த தத்வத்திற்கு ஸாதாக்யமென்கிற பெயர் ஏற்பட்டதாகவும் சிலர் சொல்வார்கள்.) இந்த தத்வத்தில் சிவன், சக்தி இருவரும் இணைந்து ஸதாசிவ பாவமின்றி இருக்கிறார்கள்.

இப்படி இருவரும் பிரிவுபடாமல் ஏகீபாவமடைந்திருக்கும் விஷயம் பலஸ்ருதமாக வர்ணிக்கப்பட்டிருக்கிறது.

'த்வம் சந்த்ரிகா சசிநி திக்மருசைவ ருச்ஸ்த்வம்
த்வம் சேதனாஸி புருஷஸ்ய பவேவ டாம் த்வம் |

த்வம் ஸ்வாதுதாZஸி ஸவிதே சிகினி த்வமூர்ஜ்மா
நிஸ்ஸாரமேவ நிகிலம் த்வத்ருதே யதி ஸ்யாத் ॥'
'பாவகஸ்யோஷ்ணதேவேயம் பாஸ்கரஸ்யேவ தீதிதி: ।
சந்த்ரஸ்ய சந்த்ரிகேவேயம் சிவஸ்ய ஸஹஜா சிவா ॥'
'ந சிவேன விநு தேவி தேவ்யா ச ந விநு சிவ: ।
நானயோரந்தரம் கிஞ்சித் சந்த்ர சந்த்ரிகயோரிவ ॥'
'வாகர்த்தாவிவ ஸம்ப்ருக்தௌள வாகர்த்தப்ரதிபத்தயே ।
ஜகத: பிதரௌள வந்தே பார்வதிபரமேச்வரௌள ॥'

பராசக்தியின் ப்ராதான்யம்.

இப்படி சிவனும் சக்தியும் இரண்டறக்கலந்து ஸமப்ரதானமாகவும் ஸமஸத்வமாகவும் இருந்தபோதிலும் ஜகத்கர்த்ருத்வ அம்சமானது சக்தியைப் பொருத்திருக்கிறது. இங்ஙனமே கர்மோபாஸனைகளுக்குப் பயனளித்தரும் ஸாமர்த்தியமும் சக்திக்கேயுண்டு.

ஆகவே சீக்ரமாகவும், ஸுலபமாகவும் ஸித்தியை விரும்புகிறவர்கள் பரப்ரம்ஹத்தின் சக்த்யம்சத்தை-அதாவது, ஸ்த்ரீரூபத்தை-உபாஸிப்பது யுக்தமல்லவா.

'பக: சக்திர் பகவான் நாம ஈச
உபா தாதாராவிஹ ஸௌபகானும் !
ஸமப்ரதானௌள ஸமஸத்வௌள ஸமோதயோ:
ஸமசக்திர ஜரா விச்வயோனி: ॥' [த்ரிபுராமஹோபநிஷத்]

இவ்விதம் ப்ரம்ஹத்தைச் சக்திரூபமாக உபாஸிப்பது நமக்குள் அநுதினாலமாக ஏற்பட்டிருக்கின்றது. ஸகல த்விஜர்களாலும் உபாஸிக்கப்படும் காயத்ரீ தேவியானவள் பரப்ரம்ஹ ஸ்வரூபிணீயென்பதும், காயத்ரீ தேவியை உபாஸிப்பதினால் நாம் ப்ரம்ஹோபாஸனையையே செய்கிறோமென்பதும் சாஸ்த்ரங்களின் முடிவு. ஆகவே இவ்வித உபாஸனையானது மேலே சொல்லியபடி ப்ரம்ஹத்தின் சக்த்யம்சத்தை நாம் உபாஸிப்பதைப் பொருத்தமானதாகச் செய்வதுடன், நாமெல்லோரும் உண்மையாகவே சாக்தர்களென்பதையும் காட்டுகிறது.

பராசக்தியின் மாத்ருபாவம்.

இப்படி பரப்ரம்ஹமானது நிர்லிங்கமாக இருந்தபோதிலும், அதினுடைய சக்த்யம்சத்தை நாம் உபாஸிப்பது யுக்தமாக இருப்ப

தால், அந்த சக்த்யம்சத்தைத் தாயாராகத் தியானிப்பதே நமது மனத்திற்கு ஸமாதானத்தைக் கொடுக்கிறது என்பதில் கொஞ்சமும் ஆக்ஷேபம் இருக்காது.

'குபுத்ரோ ஜாயேத க்வசிதபி குமாதா ந பவதி |'

என்று சொல்வதுபோல், நாம் எவ்வளவு பாபமும், தப்பிதமும் செய்தபோதிலும் தாயாரிடம் சென்று மன்னிப்புப் பெறுவதுதான் சுலபமான கார்யம். இது லோகத்தில் அநுதினமாக நடைபெற்றுவருகிற வழக்கம். குற்றம் செய்த குழந்தையைத் தகப்பனார் அடிக்கவருவதையும், அதற்காகத் தாயார் பரிந்து காப்பாற்றுவதையும் தினந்தோறும் நாம் பார்க்கிறோம் அல்லவா?

'பித்ரா நிர்பர்த்ஸிதோ பாலோ மாத்ரைவாச்வாஸ்யதே சிரம் |'

மனுஷ்யர்களாகிய நாமெல்லோரும் ஒவ்வொரு க்ஷணமும் எதாவது தவறுதல் செய்வதானது இயற்கையாகவே இருக்கிறது. நாமிருக்கும் கலியுகமோ—

'கலௌ பாபைக பூயிஷ்டே தர்மாபாவே ஜனார்தன |'

என்றபடி பாபமே மேலிட்டிருக்கும்படியானதென்றும், ஸம்ஸாரமோ எல்லாவற்றிற்கும் மேலான பயத்தை விளைவிப்பதென்றும், அதினின்று தப்புவதற்கே நாம் ஸதா காலமும் முயலவேண்டுமென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இவ்விதம் கலியுகத்துடைய பாபம் சேராதிருப்பதற்கும், அகாதமான ஸம்ஸாரஸாகரத்தைக் கடப்பதற்கும் ஈச்வரனுடைய அநுக்ரஹமிருந்தால் தான் முடியுமே தவிர கேவலம் மனுஷ்ய யத்னத்தினால் முடியாது. இந்த அநுக்ரஹத்தைச் செய்வதற்கும் நம்முடைய தாபத்ரயங்களையும், பாபங்களையும் போக்குவதற்கும் ஸாமான்யமான தாயாரால் முடியாது. அவர்களுக்கு ஸாதாரண குழந்தைகளை நிவர்த்திக்க ஒருக்கால் முடிந்தாலும் முடியும். நம்முடைய தாபத்ரயங்களை ஒருங்கே தீர்ப்பதற்கும், ஸம்ஸாரபந்தத்திலிருந்து நம்மை விடுவித்து பரம புருஷார்த்தமாகிய மோக்ஷத்தைத் கொடுப்பதற்கும் ஸமஸ்த ஜீவராசிகளையும் படைத்தவளும் ப்ரபஞ்சமுற்வளருகிணியுமான ஜகன்மாதாவுக்குத் தான் முடியும். ஆகலால் தான் நாம் பாலை 'ஸ்ரீமாதா' என்ற விசேஷமான பெயருடன் இந்த ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாம ஸ்தோத்ரமானது ஆரம்பிக்கப்பட்டிருக்

'நாராயணாய வித்மஹே வாசுதேவாய தீமஹி
தன்னோ ஜனார்தன: ப்ரசோதயாத்
ப்ரக்யாதாய ஜனகாய: தியம்ப திநிமே
ஸ்யாத்ஸ்யந்தி சாக்ரே கதி |
ஏகோஹ்யாம் தணைவாய நாஸ்தி மஹாய:
லம்பொர ஸிந்தோர்வி தத:
பீதம் மாம் நிதராம் அனன்ய சரணம்
ரக்ஷாரூகம்பாரதி: !!'

இதனால்தான் பரப்ரம்மத்தை தாயாகவும் பாவித்து அம்பிகை, அம்பா, ஜகஜ்ஜனனி, ஜகன்மாதா என்பனவாகி பெயர்களால் சொல்லுகிறோம்.

சிவ. சக்தி, வித்தை ஆகியவை அறிவதற்கரியன.

எப்படி சிவனும் சக்தியும் அரிதாகின்றனவோ அப்படியே விஷ்ணுவும் அரிதாகின்றன. இந்த கணக்கின்படியான பரப்ரம்மத்தை தாயாகவும் தந்தையாகவும், கர்ப மென்றும் கர்பீ (கர்பத்தையுடையவன்) என்றும் இவ்வாறு விதமாய் எற்பட்டதென்றும், கர்பமென்பது ஸ்திரியிடம் புருஷ ரூபமாகவும், ஸ்த்ரீரூபமாகவும் பிரிந்திருக்கின்றன் புருஷரூப கர்பமானது விஷ்ணுரூபத்துடன் லக்ஷ்மியாக இருக்கின்றதென்றும், இம்மூன்று ரூபமும் சேர்ந்து அகண்டமான ப்ரம்மரூபமாக இருக்கின்றதென்றும் வைஷ்ணவர்கள் கூறுகின்றது. இதைப் பற்றி அப்பய்ய தீக்ஷிதரவர்கள் தமது ரத்னத்ரய பரீக்ஷையில் விஸ்தாரமாகச் சொல்லியிருக்கிறார்கள்.

[illegible]

இப்படியிருக்கும் அபேதத்தை மற்றொரு விதமாகவும் நிர்த்தே சிக்கலாம். பரமசிவனுக்குக் கோரம் அகோரமென்ற இரண்டு முகங்களுண்டென்றும், அதில் அகோரமான தக்ஷிணமுகமே அம்பாளுடையதென்றும், அதுவே விஷ்ணுவென்றும் சொல்லப் பட்டிருக்கிறது.

'யா தே ருத்ர சிவா தனூ; சிவா விச்வா ஹ பேஷஜீ
சிவா ருத்ரஸ்ய பேஷஜீ தயா நோ ம்ருட ஜீவஸே |' (ச்ருதி)

'ருத்ர யத் தே தக்ஷிணம் முகம் தேன மாம் பாஹி நித்யம் ||'
(ச்ருதி)

'விஷ்ணு ரூபம் முகம் ரம்யம் அகோரம் தக்ஷிணம் மம |'
(சந்த்ரிகா)

'சிவ கோரா சேதி ச்ருதிஷு விதிதே யே மய தனூ
நயோராத்யா மூர்த்தி: பரமரணீயா த்வமஸி மே |
த்வமஸ்யர்தம் தேஹே த்வமஸி வதனம் தக்ஷிணமிதி
த்வயி ப்ரீயே யாவத் தவ பவதி தாவத் ச விதிதம் ||
யதேதத் வாமாங்கம் கனஜகனபீனஸ்தனபரம்
கதாசித் தச்சம்போர் பவதி கமலாகௌலஸ்துபதனம் |
ஜகன்மாதர்யேவம் யதபசரிதம் தன் மகவதா
ஜகன்மாதா தேவ: ப்ரபவதி ஸ ஏவ க்ஷபயிதும் ||'
(நீலகண்ட விஜயம்)

'யோ(அ)யம் சகாஸ்தி ககனோர்ணவரத்ன காந்தி:
யோ(அ)யம் ஸுராஸுரகுரு: புருஷ: புராண: |
யத்வா மமார்தமிதம் அந்தகஸூதனஸ்ய
தேவி த்வமேவ ஸ இதி ப்ரதிபாதயந்தி ||'

இதைப் பின்பற்றியே ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாமத்தில் அம்பாளுக்கு நாராயணீ, கோவிந்தரூபினீ, விஷ்ணுரூபிணீ, வைஷ்ணவீ, முகுந்தா முதலான பெயர்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. மேலும் இருவருக்கும் மூலகாரணம் பராம்பாவானதால் உடன் பிறந்தவர்களாகப் பாவித்து அம்பாளைப் 'பத்மஜப ஸஹோதரீ' என்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

இங்ஙனம் சிவன், சக்தி, விஷ்ணுவென்றும் இம்மூவர்களுடைய அபேதமானது நிர்ணயிக்கப்பட்டிருப்பது அறியத்தக்கதாகும்.

அம்பிகையின் உபாஸனை பேதங்கள்.

அம்பாளுடைய உபாஸனையானது பலவகைப்பட்டது. அவைகளில் முக்கியமானவை இரண்டு--தக்ஷிணமார்கம் வாம

மார்க்கம். அவையிரண்டும் முறையே ஸமயமார்கமென்றும் கௌலமார்கமென்றும் சொல்லப்படும். அம்பாளுடைய பூஜை யானது அந்தர்முகமாகவே செய்யப்படவேண்டுமென்றும், அதிலும் அம்பாளை ஸ்ரீசக்ரமத்திற்கு அழைத்து வந்து அவ்விடத்தில் பூஜிக்கவேண்டுமென்றும், ஸமயமதத்தின் லிக்தாந்தம். இதற்கு வேண்டிய மனோதிடமற்றவர்கள் பஹிர்முக மாகப் பூஜை செய்தல்வேண்டும். இவர்களிற் சிலர் தந்த்ரம் முதலியவைகளான தந்த்ரங்களில் ஸ்ரீ சக்ரத்தை எழுதி அதோடு அபின்னமாக அம்பாளைப் பாவனைசெய்து பூஜிப்பார்கள். இவர்கள் மதம் மிச்ரம் என்று கூறப்படும்.

'யாவத் ஆந்தரபூஜாயாம் அதிகாரம் பவேன்னரி |
தாவத் பாஹ்யாதிபாயம் பூஜாம் ச்ரேயஸ் ஜாதேந துஷ்டாம்
பாதேஜ் II'

கேவலம் பாஹ்ய பூஜைஜையைச் செய்பவர்கள் கௌளர்கள் என்று கூறப்படுபவர்களாவர். பாஹ்ய பூஜைஜையைச் செய்யும் போது அந்தரபாவத்தோடுள்ளவர்கள் பராபர வித்ய மதத்தை யநுஸரிக்கவர்களாவர்.

1. ஆசார்யர்களாகிய 'ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாமம் முதலியவைகளில் கௌலமார்கமும் ஒப்புக்கொள்ளப்பட்டிருக் கிறது.

'கௌலமார்க தத்பர லேவிதா' 'ஸவ்யாபஸவ்யமார்க்கஸ்த்தா' 'சைதன்யார்க்ய ஸமாராத்யா,' 'ரஹோயாகக்ரமாராத்யா,' 'ரஹஸ்தர்பணதர்பிதா' 'பிந்துதர்பண ஸந்துஷ்டா' 'வீரகோஷ்டி ப்ரியா' (ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாமம்)

தவிர 'கௌலோபநிஷத்,' 'த்ரிபுரா மஹோபநிஷத்' முதலான உபநிஷத்துகளிலும் கௌலமார்கத்தைப்பற்றி விசேஷ மாகச் சொல்லப்பட்டிருக்கிறது. (இவையிரண்டுக்கும் பாஸ்கர ராயர் பாஷ்யம் எழுதியிருக்கிறார்).

கௌலாசாரத்தை அவலம்பிப்பவர்களுக்கு விசேஷமான குணங்களிருக்கவேண்டும். அவையில்லாது ஸாதாரணமான மநுஷ்யர்களால் அதை அநுஷ்டிக்கமுடியாது. அநுஷ்டித்தால் அனர்த்தமாகமுடியும். அம்பாளுடைய உபாஸனையே 'தக்ஷ யாக

ணுமும் அஸுலபா' என்றபடி சபல சித்தத்தையுடையவர் கலைக்கு ஸாத்யமல்ல.

'அயம் து பரம: கௌலமார்க: ஸம்யங் மதோதீரித: |
அஸிதாராவ்ரதஸமோ மதேந நிக்ரஹ ஏஷதுக :!!
ஸ்த்திரசித்தஸ்ய ஸுலப: ஸபலஸ்தூர்ண ஸித்தித: |
அன்யஸ்ய விபலோ து:க ஏஷதுஸ்யாத் பரமேச்வரி !!"

(பரமாலைந்த தந்த்ரம்)

'அயம் ஸர்வோத்தமோ தர்ம: சிவோக்த: ஸுகஸித்தித:
ஜிதேந்த்ரியஸ்ய ஸுலபோ நான்யஸ்யாளந்த ஜன்மபி :!!
யத் ஊர்த்வரேதஸாம் ஸர்வத்யாகிநம் அளிகேதிநம் |
கூணைன ஸ்ம்ருதமாத்ரேண மோஹமுத்பாதயந்யலம் !!
'இதோ மத்யமிதோ மாம்ஸம் பக்ஷ்யமுச்சாவசம் ததா |
தருண்யச்சாருவேஷாட்யா மதாருணவிலோசநா: |
தத்ர ஸம்யதசித்தத்வம் ஸர்வதாஹ்யதிதுஷ்கரம் |
பக்தி ச்ரத்தாவிஹீனஸ்ய கதம் ஸ்யாதேதிச்வரி !!'

(த்ரிபுரார்ணவம்)

'தந்த்ராணும் அதி கூடாத்வாத் ஸத் பாவோZப்யதி கோபித:!
ப்ராம்ஹணே வேதசாஸ்த்ரார்த்த தத்வக்ஞோ புத்திமான்வரி : |
கூடதந்த்ரார்த்த பாவஸ்ய நிர்மந்த்யோத்தரண க்ஷம: |
கௌலமார்கேZதிகாரீ ஸ்யாத் இதரோ து:கபாக் பவேத் !!'

(பாவகூடாமணி)

அப்படி ஜிதேந்த்ரியத்வம் முதலான குணங்களில்லாதவர்கள் கௌலமார்கத்தில் ப்ரவேசிக்கவேண்டுமென்றால் முன்னதாக இதர தேவதைகளை இதர மார்க்கங்களால் உபாஸித்துவிட்டு அதனால் பரிபக்வமான அந்த:கரணத்தோடு கௌலமார்கத்தை ஆச்ரயிக்கவேண்டும்.

'அன்யாஸாம் தேவதானும் து பூயோபூயோ நிஷேவணாத் |
பரிபக்வமதி; கௌலே லப்தப்ராமான்ய ஏதர நர; |
பாஹ்யேந்த்ரியாணி ஸம்யம்ய ப்ரவிசேதந்த்ர நேதர; !!

(குலார்ணவம்)

கௌலதர்மத்தை அனுஷ்டிப்பது கத்திமுனையில் நடப்பது போலும், புலியின் கழுத்தைக் கட்டிக்கொள்வது போலும், ஸர்ப்பத்தை அணிவதுபோலும் பயங்கரமானதென்று சொல்லப் பட்டிருக்கிறது.

'க்ருபாண தாராகமனத் வ்யாக்ரகண்டாவலம்பனாத் |
புஜங்கதாராணன்னானம் அசக்யம் குலவர்த்தனம் !!'

ஸ்ரீ வித்யையின் பிரபேதங்கள்.

அம்பாளை ப்ரதிபாதிக்கும் சாஸ்த்ரத்திற்கு ஸ்ரீவித்யை யென்று சொல்லப்படுவதுடன், அம்பாளுடைய மந்த்ரத்திற்கும் ஸ்ரீவித்யை யென்று பெயர் சொல்லப்படும். உத்க்ருஷ்டமான வஸ்துக்களின் பெயர்களுக்கு முன்பாக ஸ்ரீ என்ற பதம் சேர்க்கப்படுமே. (ஸ்ரீராஜா, ஸ்ரீசக்ரம், ஸ்ரீகணபதி முதலியன.) பரமேச்வரனை தேவனைக்கையுடையதற்கு மந்த்ரமென்றும், ஸ்த்ரீரூபமான தேவனைக்கையுடையதற்கு வித்யை யென்றும் பெயர். அப்படியிருந்தாலும் சிவ சக்தி ஸாமரஸ்யரூபமான பரப்ரம்மஸ்வரூபமான அத்விதீய ரூபிணியாக இந்த வித்யையின் ரஹஸ்யமாக உபாஸிக்கப்படுவதால், ஸ்ரீ வித்யையை மந்த்ரமென்றும் ஸ்ரீவித்யை ஸகலவித்யமான மந்த்ரங்களுக்குள் மிகவும் உயர்ந்த தென்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

'ஸ்ரீ வித்யைவ து மந்த்ர ரூபா' (ஸ்ரீ ஸௌந்தர்ய லஹரீ வ்யாக்யானம்)

இப்படியாயிட்ட மந்த்ரத்தை யாராவது வித்யையான ரூபம் பண்ணி வைத்துக் கொள்ளலாம். ஒவ்வொரு தேவதையையும் ஒவ்வொரு வகையால் (தேவதத்வத்தினாலே) கண்டுபிடிக்கப்பட்டதால், அவ்வித்யைகளான தேவதைகள் ஏற்பட்டன. இப்படி மந்த்ரங்களைக் கண்டுபிடித்து அதன் மூலமாக ஸித்தியடைந்தவர்களுக்கு (மந்த்ர த்ரஷ்டாக்களுக்கு) ரிஷிகள் என்ற பெயர். ஸ்ரீ வித்யையின் தேவதைகளுடைய ரிஷிகளின் பெயர்—

'அஸ்ய ஸ்ரீ சக்ர ஸ்ரீபுரஸ்ய லோபாமுத்ரா ஸமேத அகஸ்த்ய ரிஷி:
அநுஷ்டுப் சந்த: ஸ்ரீமஹாத்ரிபுரஸுந்தரீ தேவதா ஸகல ஸித்தி ப்ரதாயை ஸர்வாநந்தமய சக்ரஸ்ய ஸதாசிவ ருத்ரயாமள ப்ரஜாபதய ருஷய:'

இவர்களில் அகஸ்தி: என்பவர் அகஸ்த்யர். க்ரோதபட்டாரகர் என்பவர் துர்வாஸர். லோபாமுத்ரை யென்பவள் அகஸ்த்ய ருடைய பத்னீ. லோபாமுத்ரையின் ரிஷ்யை ஹேது வித்யை யென்று சொல்லப்படும்.

ஸ்ரீ வித்யை என்பதை ஸௌபாக்யவித்யா என்றும், பஞ்சதசீ என்றும், ஷோடசீ என்றும் சொல்லப்படும். இவைகளிற்றில் பஞ்சதசீயானது இரண்டுவகையில் ஒன்பது ரீதியாகவும் மந்த்ரவைபவத்தால் ஒன்பதுவிதமாகவும் பிரியுமாம். இவ்விதமாக பஞ்சதசீயின் பேதங்களில் காதி, ஹாதி

என்பவைதான் முக்யமான பேதங்கள். காதி வித்யைக்கு காம ராஜர் ரிஷியாதலால் அதை காமராஜ வித்யையென்றும் சொல்லப் படும். ஹாதி என்பதற்கு லோபாமுத்ரா வித்யை என்ற பெயர் என்பதாக ஏற்கனவேயே சொல்லப்பட்டது.

'தேஷு த்வௌ மனுராஜௌ து வாக்ஷுடௌ வித்யமர்த்தனௌ |
லோபாமுத்ரா காமராஜாவிதி க்யாதிமுபாகதௌ |
ஹாதிஸ்து லோபாமுத்ரா ஸ்யாத் காமராஜஸ்து காதிக: |'

அவைகளில் எது உயர்ந்தது என்பதைப் பற்றியும் அபிப் ராய பேதமிருந்தபோதிலும் காதி என்பதுதான் உயர்ந்தது என் பது ஸ்ரீ லலிதா ஸஹஸ்ர நாமத்தில்

'ஸ்ரீவித்யைவ து மந்த்ராணம் தத்ர காதிர் யதா பரா |'

என்று சொல்லப்பட்டிருப்பதுடன், ஸ்ரீலலிதா த்ரிசதியும் அதை யனுஸரித்தே அமைக்கப்பட்டிருப்பதிலுல் ஏற்படுகிறது.

இப்படி ப்ராதான்யமானது காதி வித்யைக்குச் சொன்ன போதிலும், வாஸ்தவத்தில் ஸகல வித்யைகளும் அபேதமானை யால் அவைகளுக்குள் தாரதம்யம் சொல்வதானது ப்ரசம்ஸாமா த்ரமென்று பாஸ்கராராயர் சொல்லியிருக்கிறார். இவருடைய அபிப்ராயத்தில் இந்த ஸ்தோத்ரத்தின் 'சிவ சக்தி: காம:' என்ற 32-வது ச்லோகத்தில் ஹாதி வித்யையானது சொல்லப்பட்டிருக் கிறதென்றும், அதனடுத்த ச்லோகத்தில் காதிவித்யை சொல்லப் பட்டதென்றும், மேலே சொல்லியபடி ஸகல வித்யைகளுடைய அபேதத்தைக் காட்டுவதற்காகவே ஆசார்யாள் இம்மாதிரி வரிசை மாற்றிச் சொன்னதென்றும் அவரால் காட்டப்பட்டிருக்கிறது.

ஸ்ரீ வித்யையைப் பற்றிய நூல்கள்.

தேவியின் உபாஸனாமார்க்கமான ஸ்ரீவித்யையானது வேத சிரோபாகமான உபநிஷத்துக்களிலும் அவ்வித உபநிஷத் காண்டத்தின் சேஷமாக பரசுராம கல்பஸூத்ரம் முதலான கல்பஸூத்ரங்களிலும், யாமளாதி தந்த்ரங்களிலும், புராணங் களிலும் ப்ரதிபாதிக்கப்பட்டிருக்கிறது. தேவீ ஸம்பந்தமான உபநிஷத்துக்கள் ஸௌந்தரீ தாபினீ பஞ்சகம், பாவநோபநிஷத், கௌலோபநிஷத், குஹ்யோபநிஷத், மஹாபநிஷத், த்ரிபுரா மஹோபநிஷத், அருணோபநிஷத், பஹ்வ்ருசோபநிஷத், காயத்ரி கோபநிஷத், தாரோபநிஷத் முதலியவை. இவைகள் நான்கு வேதங்களிலும் கிடைக்கப் பெறுகின்றன.

புராணங்களில் தேவீபாகவதம், தேவீபுராணம், மார்க்கண்டேய புராணம், காளிகாபுராணம், த்ரிபுராரஹஸ்யம் முதலியவை. [பாகவதம் என்ற பெயரே தேவீபாகவதத்திற்குத்தான் உரித்தென்று தேவீ உபாஸகர்கள் சொல்வார்கள்]. இவை கவிக, ப்ரம்மாண்ட புராணத்தின் உத்தரபாகத்திலடங்கியதாக ஸ்ரீலலிதா ஸஹஸ்ரநாமம், ஸ்ரீலலிதாத்ரிசதி, லலிதோபாக்யானம் முதலியனவும் பாதேவனைப்பற்றிக் கூறும் நூல்களாகும்.

யாமளாதி தந்த்ரங்கள் கணக்கற்றவை.

இவைகளைத் தவிர ஸ்தோத்ரங்கள் 'ஸௌந்தர்யலஹரி,' 'ஸுபகோதயம்,' 'லலிதாஸ்தவரத்னம்,' 'மஹிம்நஸ்தோத்ரம்,' 'லகுஸ்துதி,' 'மூகபஞ்சசதி,' முதலியவை ஏராளமாயிருக்கின்றன.

இப்படிதமான மூலக்ரந்தங்கள் தவிர நிபந்த க்ரந்தங்கள் அநேகம் எழுதப்பட்டிருக்கின்றன. அவைகளில் சில: ப்ராணதோஷிணீ, சாக்தப்ரமோதம், சாக்தானந்ததரங்கிணீ, ப்ரஹந்நித்யோதிஷோர்ணவம், சிவரஹஸ்யம்.

தனியாகவே எழுதப்பட்ட க்ரந்தங்கள்: ப்ரபஞ்சஸாரம், சாரதாதிலகம், †வரிவஸ்யா ரஹஸ்யம், காமகலாவிலாஸம், மூகபஞ்சசதி முதலியவை. இவைகளைத் தவிர பூர்வீக க்ரந்தங்களுக்கு பாஷ்யங்கள் எழுதுவதின் மூலமாக அரிய பெரிய விஷயங்களை சில மஹான்கள் சொல்லியிருக்கிறார்கள். இவைகளில் முதன்மையானவை பாஸ்கரராயர் எழுதியவை—ஸ்ரீ லலிதாஸஹஸ்ரநாம பாஷ்யம் (ஸௌபாக்ய பாஸ்கரம்), வாமகேச்வர தந்த்ரத்திலடங்கிய நித்யாஷோடசிகார்ணவத்தின் பாஷ்யம் (ஸேதுபந்தம்), வரிவஸ்யாரஹஸ்யத்தின் பாஷ்யம் (வரிவஸ்யாபாஸ்கரம்).

ஸ்ரீ லக்ஷ்மீதராவினால் எழுதப்பட்ட ஸௌந்தர்யலஹரி பாஷ்ய முடன், ஸுபகோதய பாஷ்யமும், சாரதாதிலகத்திற்கு ராகவபட்டரால் எழுதப்பட்ட பாஷ்யமும் மிகவும் விசேஷமானது.

† வரிவஸ்யாரஹஸ்யத்தை தமிழில் தமிழ் அர்த்தத்தோடு ப்ரகாசிக்கப்படுகின்றது. இலவசமாகத் தரப்படும்.

† ஸ்ரீ வரிவஸ்யா ரஹஸ்யம் விபரீதமாக அச்சிடப்பட்டு தாரிணி பெயர்க்கப்பட்டு சென்னை ஸ்ரீவித்யா விலாஸினி ஸபையில் ப்ரகாசிக்கப்பட்டுள்ளது: 178, லாயிட்ஸ் ரோட், ராயப்பேட்டை, சென்னை.

ஸ்ரீலலிதா த்ரிசதிக்கு சங்கரபகவத் பாதாளால் இயற்றப்பட்ட தாகச் சொல்லப்படும் பாஷ்யம் ஒன்று உண்டு.†

புர:சரண விஷயமாகவும், ஸபர்யா விஷயமாகவும் பரசுராம கல்பஸூத்ரத்தை அனுஸரித்த நித்யோத்ஸவம், பாவநோப நிஷத்தை அனுஸரித்த பாவநோபநிஷத் ப்ரயோகம் முதலியவை அனேகமிருக்கின்றன.

அம்பிகையின் உபாஸனையைப்பற்றிய க்ரந்தங்கள் இப்படி நூற்றுக்கணக்காக இருந்தபோதிலும், அந்த உபாஸனையின் தத்வங்களையும், ரஹஸ்யங்களையும் தெளிவாக எடுத்துக்காட்டி அவ்வித உபாஸனையைத் தர்க்க, ந்யாய, மீமாம்ஸாதி சாஸ்த்ரங்களை யொட்டி ஸ்தாபித்தது பாஸ்கராசார்யரும், லக்ஷ்மீதரரும் தான். ஸமீப காலத்தில் இவ்விதமான பேருபகாரம் செய்தவர் ஆர்தர் ஏவலன் என்ற மாறுபெயருடைய Sir John Woodroffe என்பவர். இவரது பிறப்பு வேறு தேசத்தில் ஏற்பட்டபோதிலும், இவர் பூர்வ ஜன்மத்தில் செய்த தவத்தின் பயனாக இந்த தேசத்திற்கு வேலையாக வந்து நமது சாஸ்த்ரங்களிலும், விசேஷமாக தேவீபாமான க்ரந்தங்களிலும் அன்யாதிக்ருதமாயிருந்த ரஹஸ்யத்தை ஸம்பாதித்துக்கொண்டு அதை நமக்கெல்லாம் போதிப்பதற்காக அனேக க்ரந்தங்களை வெளியிட்டிருக்கிறாரென்பது எல்லாருக்கும் தெரிந்த விஷயம். இவர்கள் எல்லாரும் இம்மாதிரி ஜகன்மாதாவின் உபாஸனா தத்வங்களை நமக்குப் புகட்டி நாம் கடைத்தேறுவதற்காகச் செய்திருக்கும் அனுக்ரஹத்தை நாம் எந்நாளும் மறக்கமுடியாது.

பாஸ்கராசார்யரியற்றிய மேலே சொல்லிய மூன்று பாஷ்யங்களை ஸ்ரீ வித்யையின் ப்ரஸ்தான த்ரயமென்று சொல்லலாம். அம்பாளுடைய அந்தர்முகமான உபாஸனையைப்பற்றியும், பொதுவாக ஸ்ரீ வித்யையைப்பற்றியும் இம்மூன்று பாஷ்யங்களில் சொல்லப்படாத விஷயம் யாதொன்றுமில்லையென்று நிச்சயமாய்ச் சொல்லலாம்.

† த்ரிசதீ பாஷ்யம் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. மேல்கூறிய விலாஸத்தில் கிடைக்கும்.

ஸ்ரீ வித்யையின் அதிரஹஸ்யத்வம்.

மிகவும் மஹிமை பொருந்தியதாகையாலும், பரம புருஷார்த்த மான மோக்ஷத்தைக் கொடுப்பதாலும் ஸ்ரீ வித்யையை மிகவும் ரஹஸ்யமாய் வைத்துக்கொண்டு உபாஸனை செய்யவேண்டு மென்று சொல்லப்பட்டிருக்கிறது. இந்த வித்யைகள் வேதங்களைப் போலுள்ளனவென்றும் இந்த ஸ்ரீ வித்யையானது குலஸ்திரீ யென்றும் சொல்லப்பட்டது.

'வேத்யா இவ ப்ரகடா: வேதாதி வித்யா:,
ஸர்வேஷாம் தர்சனேஷு குப்தேயம் வித்யா |'
(பரசுராம கல்பஸூத்ரம்)

'அன்யாஸ்து ஸகலா வித்யா: ப்ரகடா கணிகா இவ |
இயம் து சாம்பவீ வித்யா குப்தா குலவதூரிவ ||'
(குலார்ணவம்)

ஆகவே இந்த வித்யையை 'ஸ்வமாத்ரு ஜாரவத்' அதி ரஹஸ்யமாகக் காப்பாற்றவேண்டுமென்றும், 'ப்ராகட்யாத் க்ஷய:' என்ற கல்பஸூத்ர வசனப்படி அதை வெளியிட்டால் நாசமேற் படும் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. அதாவது, இதை அறியும்படியான யோக்யதையில்லாத சிஷ்யர்களுக்கு இதை சொல்லக்கூடாதென்று தாத்பர்யம்.

'ப்ரூயாத் சிஷ்யாய பக்தாய ரஹஸ்யமபி தத்வத: |
பவதாம் ப்ரதேயம் ஸ்யாத் அபக்தாய கதாசன |
ந சடாய ந துஷ்டாய நாவிச்வாஸாய கர்ஹிதே'
(ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாமம்)

இந்தக் காரணத்திலேயேதான் ஸ்ரீவித்யோபாஸகனை இருப்பவன் பிறருக்குத் தெரியாதபடி நடந்துகொள்ளவேண்டு மென்று சொல்லப்பட்டிருக்கிறது.

'அந்த: சாக்த: | பஹி: சைவ: | லோகே வைஷ்ணவ: |'
(கௌலோபநிஷத்)

'அந்த: சாக்தா: பஹி: சைவா: ஸபாயாம் வைஷ்ணவா மதா:|
நானாரூபத்ரிதரா: கௌலா: விசரந்தி மஹீதலே'
(காலிகாவிலாஸ தந்த்ரம்)

அதாவது, சக்தியின் உபாஸனையானது அந்த:கரணத் திற்குமட்டும்தான் தெரியும்படியாக இருக்கவேண்டியது என்பது தாத்பர்யம். உதாரணமாக:- ஸ்ரீ வித்யோபாஸகர்கள் தெற்றியில் புருவங்களுக்கு நடுவில் ஸ்ரீ பாதுகையின் அர்ச்சனையின் ப்ரயோக

மான ஸிந்தூரத்தை (குங்குமத்தை) எப்போதும் தரித்துக் கொள்ள வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது.

தேவீ பாகவதம்
தேவீ புராணம்
நவரத்னமாலா
நித்யாதந்த்ரம்
நித்யாஷோடசிகார்ணவம்
நித்யாஹ்ருதயம்
நரஸிம்ஹ உத்தரபுராணம்
நரஸிம்ஹ பூர்வதாபநீயம்
நரஸிம்ஹ புராணம்
பஞ்சராத்ராகமம்
பிருஹத்கந்த ஸம்ஹிதை
மேதினீ கோசம்

பரமானந்த தந்த்ரம்
பராசரஉபபுராணம்
பராசரஸ்ம்ருதி
பராபஞ்சாசிகா
பாஞ்சராத்ர லக்ஷ்மீதந்த்ரம்
பரஹாரண்யகம்
ப்ரஹந்நாரதீயம்
போதஸாரம்
போதாயனர்
ப்ரம்ஹ வைவர்த்தம்
ப்ரம்ஹகீதை
ப்ரம்ஹஸூத்ரம்
பரமஹாணடபுராணம்
பகவதி புராணம்
பகவத்கீதை
பவிஷ்யோத்தர புராணம்
பாகவதம்
பாரத்வாஜஸ்ம்ருதி
பைரவயாமளம்
போட்காரிணீ தந்த்ரம்
மத்ஸ்யபுராணம்
மனுஸ்ம்ருதி
மல்லாரி மஹாத்ம்யம்
மஹார்க்க மஞ்சரி
மஹாபாரதம்
மஹாவாஸிஷ்டம்
மஹாவாஸிஷ்ட ராமாயணம்
மாத்ருகாவிவேகம்
மாகம்
மார்க்கண்டேய புராணம்
மாலினீவிஜயதந்த்ரம்
முண்டகம்
ருத்ரபாசுபஞ்சாசிகா
ரிஷ்ஹஸ்ருங்கீமாத்ரகாம்

மைலாரதந்த்ரம்
யக்ஞவைபவகண்டம்
யாக்ஞவல்க்யஸ்ம்ருதி
யாதவகோசம்
யாஸ்கர்
யோகவாஸிஷ்டம்
யோகசாஸ்திரம்
யோகஸூத்ரம்
யோகினீதந்த்ரம்
யோகினீஹ்ருதயம்
ரத்னத்ரய பரிஷை
ரஹஸ்யசனம்
ரஹஸ்யோபநிஷத்
ராமாயணம்
ருத்ரயாமளம்
லகுஸ்தவம்
லலிதாஸஹஸ்ரநாம
லலிதோபாக்யானம்
லிங்கபுராணம்
லோகம்
வராஹபுராணம்
வாஸிஷ்டயோகம்
வஸிஷ்டஸ்மிருதி
வாஜஸநேயஸம்ஹிதை
வாதூலசுத்தாக்ஹ்யம்
வாமகேஸ்வர தந்த்ரம்
வாமன புராணம்
வாயவீயஸம்ஹிதை
வாயுபுராணம்
விஷ்ணு
விஷ்ணுதர்மோத்தரம்
விஷ்ணுரஹஸ்யம்
விஷ்ணுஸூத்ரம்
வைஜயந்தீகோசம்
வைஷ்ணவதந்த்ரம்
வைஹாயஸஸ்ம்ருதி
வ்யாஸஸ்மிருதி
வ்யாஸோபநிஷத்
ஸாரஸ்வதம்
ஸாவித்ரீகல்பம்
ஸிவரஹஸ்யம்
ஸிவாகமம்
ஸுபாலோபநிஷத்
ஸுமந்துஸ்மிருதி
ஸுஸ்ருதம்
ஸ்கந்தபுராணம்
ஸ்ரீவித்யார்ணவதந்த்ரம்
ஸ்ரீவித்யாரத்னஸூத்ரம்
ஸ்ரீவித்யாவிலாஸதந்த்ரம்
ஸ்ரீவித்யாஸேதுதந்த்ரம்

விஷ்ணுபாகவதம்
விஷ்ணுபுராணம்
விஷ்ணுரஹஸ்யம்
விஷ்ணுஸ்மிருதி
வ்யாஸர்
வ்ரதகண்டம்
பக்தி ரஹஸ்யம்
பக்தி ஸூத்ரம்
பாண்டில்யபக்திஸூத்ரம்
பாரத்வாஜ திலகம்
சிவபுராணம்
சிவமஹிம்நஸ்தோத்ரம்
சிவஸூத்ரம்
சிவஸ்துதி
சிவஸூத்ரவார்த்திகம்
சிவானந்தலஹரி
சைவாகமம்
ச்யாமளாதண்டகம்
ச்யாமளாரஹஸ்யம்
ச்ருதி
ஸகல ஜனனீஸ்தவம்

ஸப்தசதி
ஸமயசார ஸ்மிருதி
ஸம்வர்த்த ஸ்மிருதி
ஸாம்ஸ்க்யபர்வசன ஸூத்ரம்
ஸாம்க்ய ஸப்ததி
ஸாம்க்யஸமாஸ ஸூத்ரம்
ஸ்காந்தம்
ஸ்பந்தசாஸ்த்ரம்
ஸ்வச்சந்த ஸங்க்ரஹம்
ஸ்மிருதி
ஸ்வதந்த்ர தந்த்ரம்
ஸௌந்தர்யலஹரி
ஸௌபாக்யஸூதோதயம்
ஸௌபாக்யஸ்மிருதி
ஸௌபாக்யரத்னாகரம்
ஹரிவம்சம்
ஹரிஸ்ஸர்வோத்தமஸூத்ரம்
ஹேமாத்ரி:

ஓ

ஸ்ரீ லலிதா மஹா த்ரிபுரஸுந்தர்யை நமः

ஸ்ரீ லலிதா ஸஹஸ்ர நாமம்.

பூர்வ பாகம்.

अगस्त्य उवाच ।

अश्वानन महाबुद्धे सर्वशास्त्रविशारद ।
कथितं ललितादेव्याश्चरि तंपरमाद्भुतम् ॥

அகஸ்த்ய உவாச—

அச்வாநந மஹாபுத்தே ஸர்வ சாஸ்த்ர விசாரத |
கதிதம் லலிதா தேவ்யா: சரிதம் பரமாத்புதம் ॥

அகஸ்த்யர் தன்னுடைய குருவாகிய ஹயக்ரீவரைப் பார்த்துச் சொல்லுகிறார்:—

ஹே! அச்வாநந! மஹா புத்தியுள்ளவரே! ஸர்வ சாஸ்த்ரங்களையும் நன்றாய்த் தெரிந்தவரே! ஸ்ரீ லலிதாம்பாளுடைய பரம அத்புதமான சரித்ரமானது (தங்களால் எனக்கு)ச் சொல்லப்பட்டது.

1. அகஸ்த்யர் என்ற பெயரையுடைய [illegible] மிகவும் மதிக்கப்பட்டவர் என்பது [illegible]. [illegible] ப்ரபாவத்தைப்பற்றி நமது புராணங்களில் [illegible] கதைகள் உண்டு. ஒரு ஸமயம் [illegible] பார்த்தபோது அவருடைய [illegible] கருணையுடன் [illegible] கடகத்தில் விழுந்ததாகவும் அதினின்றும் [illegible] என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. அதனால் [illegible] பவர், கும்பஜன்மா, கும்பமுனி, குட்டபயோனி முதலிய [illegible] ஏற்பட்டன. தக்ஷஸ்ஸின் நூறாவது [illegible] விழுவதும்

நந்து வஸிஷ்டர் உண்டானார் என்றும் சொல்லப்படும். அக: என்றால் பர்வதம். அதை (வளராமல்) நிறுத்தியதால் அகஸ்த்யர், அகஸ்தி: என்று இவருக்குப் பெயர் ஏற்பட்டது. இவரால் அப்படி நிறுத்தப்பட்டது விந்த்யபர்வதம். அகஸ்தியில் கட்டைவிரல் பிரமாணமுள்ளவராக இருந்தாலும் தபோபலத்திலும் ஞானத்திலும் அவருக்கு ஸமானம் யாருமில்லை. பரம சிவனுக்கும் பார்வதிக்கும் கல்யாணம் நடந்த ஸமயத்தில் ஸமஸ்த தேவர்களும் மற்றும் எல்லாரும் கைலாஸத்திற்கு வந்தபோது, அந்த இடமானது இவர்களுடைய பாரத்தினால் தாழ்ந்து போகவே, பகவான் அகஸ்த்யரைப் பார்த்து பூமி ஸமமாவதற்காக தெற்கே போகும்படி சொன்னதாகவும், அப்படிப்போகும் வழியில் விந்திய பர்வதமானது கர்வத்துடன் வளர்ந்துக்கொண்டு வழியை மறைக்கும்போது அதனுடைய கர்வத்தை அடக்கி வளராமல் செய்துவிட்டுத் தெற்கே பொதியமலைக்குவந்து அங்கே இருந்ததாகவும், கைலாஸத்தில் நடந்த கல்யாணக்காட்சியை அவர் பார்க்க முடியாமலிருந்ததற்காக பகவான் அவருக்குத் திரும்பவும் தன்னுடைய கல்யாணக்காட்சியை அகஸ்தியரிடம் கொடுத்ததாகவும் சொல்லப்பட்டிருக்கிறது. அவர் ஒரு ஸமயம் ஸப்த ஸமுத்ரங்களையும் பானம் பண்ணினதாகவும் சொல்லப்பட்டிருக்கிறது. ராமாயணத்தில் வாதாபி, இல்வலன் இவர்களை ஸம்ஹாரம் பண்ணினதாகவும், ஸ்ரீராமர் இவருடைய ஆச்ரமத்துக்கு வந்து இவரை தரிசித்து இவரிடம் விஷ்ணுதனுஸ் பெற்றுரென்றும், யுத்தக்களத்தில் இவர் ஸ்ரீராமருக்கு ஆதித்ய ஹ்ருதயம் உபதேசம் பண்ணினதாகவும் சொல்லப்பட்டிருக்கிறது. தேவேந்த்ரனை நவராத்ரியுடைய கர்மத்தைச் செய்யச் சொன்னவரே இவரே. ஸப்த ரிஷிகளில் இவர் ஒருவர். பராசக்தியுடைய ஆக்ஞையினால் இவர் தமிழை உலகத்திற்குக் கொடுத்தார் என்றும் இவரால் தமிழின் ஆதி க்ரந்தங்கள் இயற்றப்பட்டதாகவும் சொல்லப்படும். ஒரு ஸமயம் கைலாஸத்திலிருந்து ஸ்ரீ விஷ்ணுவை தரிசனம் செய்ய விரும்பிப் போனபோது அங்கிருந்த அர்ச்சகர்கள் ஆக்ஷேபிக்கவே, அவர் சிவன், விஷ்ணு இவர்களுடைய ஐக்யத்தைக் காட்டுவதற்காக ஒரு தங்கியத்தினால் உள்ளே போய் அங்கிருந்த விஷ்ணுமூர்த்தியைத் தரிசனம் செய்தார் என்றும் ஒரு கதையுண்டு. அவர் இப்போதும் உயிருடன்

பொதியமலையில் இருப்பதாகவும், பரிபக்குவமுடையவர்களுக்கு தர்சனம் கொடுப்பதாகவும் சொல்லுகிறார்கள். இவருடைய கமண்டலு கவிழ்ந்ததினால் அதின் ஜலத்திலிருந்து காவேரி நதி ஏற்பட்டதாகவும் சொல்லப்பட்டிருக்கிறது.

2. ஹயக்ரீவர் விஷ்ணுவினுடைய அவதார புருஷர். முன் ஒரு காலத்தில் விஷ்ணுவானவர் யக்ஞஸம்ரக்ஷணம் முதலான வெகு கடினமான கார்யங்கள் செய்ததில் கண்விழித்து வெகு ச்ரமம் அடைந்திருந்தபோது கௌப்பினால் நித்ரை வரவே தன்னுடைய சார்ங்கம் என்கிற தநுஸின் கோடியில் தன் சிரஸ்ஸை வைத்துக்கொண்டு நித்ரை செய்துகொண்டிருந்தார். தநுஸ்ஸானது நாண்பூட்டியிருந்தது. பகவானுடைய நித்ரை வெகுநாள் ஏற்படவே ப்ரும்ஹாதிகள் பாக்கிக் கார்யங்களை முடிப்பதற்காக பகவானை எழுப்பவினைத்து அதற்காக நாற்திசைகளிலும் தேடிக்கொண்டுமல் கலங்கியிருக்கும்போது, வெகுநாளாய்ப் பரிச்ரமத்திற்கு ஆசைப்பட்டிருந்த வம்பி(கணையாயுதம்)னான ராக்ஷஸர்களுக்கு அவை கோரியபடி முறையாகக்கொடுத்து அவற்றைக்கொண்டு அந்தகாண்டகயிலும் அழுகுபண்ணி. செய்தார்கள். அப்போது அவர்கள் எதிர்பார்க்காத விதமாயும், அதிக பயத்தை யுண்டுபண்ணும்படியாகவும் தநுஸ்ஸானது துக்கியபடிக்கு நின்று கதிறுல் பகவானுடைய சிரஸ் அறுபட்டுக் கணையாயுதத்தில் பாய்ந்திட்டது. அதிறுல் திகிலுடம் வருத்தமுமடைந்த தேவர்கள், ஐயோ! பிரார்த்திக்கவே, அம்பாள் அவர்களைப்பார்த்து ஒரு குதிரையினுடைய தலையைக்கொண்டு வந்து சேர்த்து வைக்கச் சொன்னதாகவும், அப்படிச் சேர்த்ததினால் குதிரை முகத்தோடும் விஷ்ணு சிரஸ்ஸோடும் உயிர்பெற்றெழுந்ததாகவும் இதன்

பாகவதத்தில் மூதல் ஸ்கந்தத்தில் சொல்லியபடி நான்முகனுடைய அதனால் இவருக்கு ஹயக்ரீவர், அச்வானனர், ஹரிமுகர் என்ற பெயர்கள் ஏற்பட்டன. பிறகு அவர் ஹயக்ரீவனென்ற அசுரனை ஸம்ஹாரம் செய்ததாகவும் சொல்லியிருக்கிறபடி அதுவே அகஸ்த்யருக்கு இப்போது ஹயக்ரீவர் என்ற ராக்ஷஸனைக் விஷ்ணுதான் என்பதான ஹரி முகத்தை ஹாபகமாக அச்வானனர் என்று இங்கு சொல்லியிருக்கிறது. மேலும், அம்பாளுடைய உபாஸனையிலிருக்கும் முதலான

யங்களையும் அம்பாளை இவருக்கு உபதேசம் செய்ததாகச் சொல்லப்படுவதையும் அது குறிக்கிறது. ஆகவே இவரை மறைபுத்தி என்றும் ஸர்வசாஸ்த்ர விசாரத! என்றும் சொல்வது பொருத்தமானதே தவிர, வேறும் புகழ்ச்சியல்ல.

3. இவ்விதமான மஹிமையுள்ள குரு சிஷ்யர்கள் மூலமாகத்தான் ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாமமும், ஸ்ரீ லலிதா த்ரிசதியும் லோகத்தின் க்ஷேமத்திற்காக வெளியிடப்பட்டன. ஆகவே குரு, சிஷ்யன், உபதேசம் பண்ணப்பட்ட விஷயம் இவை மூன்றும் ஒன்றுக்கொன்று தான் பொருத்தம். மற்றவைகளோடு ஸமான மாகச் சொல்லமுடியாது.

4. அம்பாளுடைய உபாஸகர்களில் முக்கியமானவர்கள் பன்னிரண்டுபேர்களென்றும், அவர்கள் செய்த உபாஸனைபேதங்களை அனுஸரித்து ஸ்ரீ வித்யையானது பன்னிரண்டு வகை என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இவர்களில் அகஸ்த்யர் ஒருவர்.

'மநு: சந்த்ர: குபேரச்ச லோபா முத்ரா சமன்மத:।
அகஸ்தி: அக்னி: ஸம்வர்தச்ச இந்த்ர. ஸ்கந்த: விஸ்வகர்மா ।
க்ரோதபட்டாரகோ தேவ்யா: த்வாதசாரி உபாஸகா: ॥'

(க்ரோதபட்டாரகர் என்பவர் துர்வாஸர். இவர் இயற்றிய லலிதாஸ்தவரத்னமும் தேவீமஹிம்ன ஸ்தோத்ரமும் அபார மஹிமையுடைய க்ரந்தங்கள். அகஸ்த்யர் இயற்றியதும் ஸ்ரீ வித்யா விஷயமான ஸ்தோத்ரங்கள் உண்டு).

5. இப்படி ஸ்ரீ வித்யோபாஸகர்களில் முக்கியமானவரான அகஸ்த்யர் தன் குருவான ஹயக்ரீவரிடமிருந்து (ப்ரம்மாண்ட புராணத்தில் அடங்கிய) மந்த்ர, ந்யாஸ, தந்த்ர, புரஸ்சரண, ரஹஸ்ய, ஸ்தோத்ரங்களென்கிற ஏழு கண்டங்களில் அடங்கிய ஸ்ரீ வித்யையுடைய ப்ராதுர்பாவம் முதலான ரஹஸ்யங்களையும் கேட்டபிறகும் பரம ரஹஸ்யமான காம ஸேவனம் என்ற இருபத்தாறாவது கண்டத்தை தன் தபோபலத்தினால் நிச்சயம் செய்துகொண்டு, தான் அவருடைபக்காக இருந்தும் தனக்கு என்ன அனுக்ரஹமில்லை என்ற விஷயத்தில் ஸந்தேஹமுற்று தன் குருவைக் கேட்க வ்ருத்தாந்தமானது ஸ்தோத்ரமால் சொல்லப்படுகிறது.

6. 'லோகான் அதிக்ய லலிதா லலிதா தேவ்யாஸ்தே ।

என்று பத்ம புராணத்தில் சொல்லப்பட்டபடி ஸகல லோகங்களுக்கும் அதிதமாய் க்ரீடித்து (கொஞ்சி)க் கொண்டிருப்பதால், அம்பாளுக்கு லலிதா என்று பெயர் ஏற்பட்டது. இந்த நாமத்திற்கு இதர அர்த்தங்களும் உண்டென்பது 'லலிதா ஹேய உச்யதே'—அதிலுமும் லலிதா என்று சொல்லப்படுகிறாள் என்று மேலே சொன்ன பாத்ம வசனத்திலிருந்து ஏற்படுகிறது. இந்தப் பெயரின் மற்ற அர்த்தங்களை இந்த ஸஹஸ்ரநாமத்தின் கடைசி நாமமாகிய 'லலிதாம்பிகா' என்பதில் பார்க்கவும்.

7. சக்தி, சிவன், இருவர்களுக்கும் பராசக்தி, ஸதாசிவன் என்ற ரூபங்களிலிருந்து படிப்படியாக அபகர்ஷத்தை(குறைவை)ச் சொல்லுகிறவைகளாய் அனேகம் ரூபங்களிருக்கின்றன. அவர்களுடைய லோகங்களும் அனேகவிதங்களாய் இருப்பதாகவும் சொல்லப்பட்டிருக்கிறது. பரமசிவனேடு அபின்னமாக இருக்கும் மஹாசக்தியானவள் ஸகல லோகங்களுக்கு அதிதமாகவும், பரமகைலாஸம், அபராஜிதம் முதலான பதங்களால் குறிக்கப்படுகிற நிலையான ஸர்வலோகோத்தமமான லோகத்தில் வீற்றிருக்கிறாள். அவளுடைய சரீரமானது கர்பூரமான (உணர்வு) மயமாகி, ரஜஸ்தமோ குணங்களின் சேர்க்கையைச் சிறிதுமில்லாது சுத்த ஸத்வகுணபாவமானது. மற்றபடி இருக்கும் சிவசக்தி ரூபங்களுக்கு ஸாத்விக சரீரமானது இருப்பதில் அதில் ஸத்வகுணமும் ரஜஸ்தமோ குணங்களின் சேர்க்கையானது அல்பமாகவாவது இருக்குமே தவிர, சுத்தஸத்வமாக இருப்பதில்லை. ஆகவே இதுதான் ஸர்வோத்தமமான பரப்ரம்மஸ்வரூபமூர்த்தி. இப்படிப்பட்ட மூர்த்தியானது ரஹஸ்யமான டம்பரிக தேஹங்களையுடையதாக இருந்தாலும் அவற்றில் காமேச்வரி என்று சொல்லப்பட்ட மூர்த்தியேதான் இந்த ஸஹஸ்ரநாமத்தில் சொல்லப்படுகிறது என்பதைக் காட்டவும் லலிதா என்ற நாமமானது இந்த சொல்லப்பட்டதாம். ச்ருங்காரத்தின் கண்ணாடியை (அல்லது ச்ருங்காரஸத்தை உதிர்ப்பனம் என்றாலும்) க்ரியா சக்திக்கு லலிதம் என்று பெயராகையால், அதைஉடையவளாகிய லலிதா என்று பெயர். ஆகவே, இந்த மூர்த்தியானது ச்ருங்காரஸத்தை உதிர்ப்பனமாக ஸ்ருஷ்டிக்கப்பட்டது. அவள் க்ரீடை, ஜயம் பெறும் நோக்கம், முதலியவற்றுடன் இருப்பதால் தேவி என்றும் சொல்லப்பட்டது.

8. அப்போர்பட்ட லலிதா தேவியினுடைய சரிதம், அதாவது, சிதக்நி குண்டலத்திலிருந்து ப்ராதுர்பாவமானது முதல் ஸமஸ்த தேவர்களாலும் அனேகவிதமாக ஸ்தோத்ரங்கள் செய்யப்பட்டது வரையில் ஹயக்ரீவரால் சொல்லப்பட்டதை இங்கு குறிக்கப்பட்டது. இதின் விவரங்களைப் பின்வரும் ச்லோகங்களில் சொல்லப்படுகிறது.

9. 'பரமாத்புதம்'— அம்பாளுடைய சரித்ரமானது அதி உத்தமமானதென்பதும் இதற்கு முன் கேள்க்கப்படாதென்பதும், உபமானம் யாதொன்றும் இல்லாததென்பதும், இந்தப் பதத்தினால் சொல்லப்பட்டது. அதிலுடைய முக்கியமான அம்சங்களை மேலே சொல்லுகிறார்.

पूर्वं प्रादुर्भवो मातुस्ततः पट्टाभिषेचनम्
भण्डासुरवधश्चैव विस्तरेण त्वयोदितः ॥ २ ॥

2 பூர்வம் ப்ராதுர்பவோ மாதுः, ததः
[பட்டாபிஷேசநம் |
பண்டாஸுர வதச்சைவ விஸ்தரேண
[த்வயோதிதः ॥

அம்பாள் ஆதியில் ஆவிர்பவித்ததும், பிறகு (அம்பாளுடைய) பட்டாபிஷேகமும், பண்டாஸுரனை வதம் செய்ததும் தங்களால் விஸ்தாரமாகச் சொல்லப்பட்டது.

1. 'பூர்வம்' என்பதினால் தன்னிடம் இதற்கு முன் என்றும், அல்லது மேலே சொல்லப்பட்ட பட்டாபிஷேகம் முதலிய வற்றிற்கு முன் என்றும் சொல்லலாம்.

2. ப்ராதுர்பாவம்—'அஸத்வா இதமக்ர ஆஸீத்', 'ஸதேவ ஸோம்யேதமக்ர ஆஸீத்', 'நாஸதாஸீந்நோ ஸதாஸீத்' என்பனவை முதலான ச்ருதிவாக்யங்களில் சொல்லப்பட்டதும், ஸ்ருஷ்டிக்கு முன்னதாக நிர்விசேஷ சின்மாத்ரமாக இருந்ததுமான பரப்ரம்ஹமானது முதல் முதலில் காமகலா ரூபமாக உண்டானதைச் சொன்னதாகவும் சொல்லலாம். [காமகலா ரூபத்தின் ரஹஸ்யம் களைப்பற்றி குருமுகமாகத் தெரிந்துகொள்ள வேண்டியது].

3. அல்லது 4-வது நாமமான 'சிதக்நிகுண்ட ஸம்பூதா' என்பதில் சொல்லப்பட்டபடி, அம்பாள் சிதக்நிகுண்டத்திலிருந்து ஆவிர்பவித்ததைச் சொன்னதாகவும் சொல்லலாம். இதையும் பின்னால் சொல்லப்படும் விஷயங்களில் அநேகமும் லலிதோபாக்யானத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. அதையும் இந்த ஸஹஸ்ரநாமமும் (அதற்கு முந்தியும் பிந்தியும் உள்ள பாகங்களும்) ப்ரம்மாண்ட புராணத்தில் உத்தர காண்டத்தைச் சேர்ந்தவை என்று சொல்லப்படும்.

4. 'பட்டம்' என்பது ஸகல புவனங்களுடைய ஸாம்ராஜ்யாதிகாரம். அது ஏற்பட்டதற்கு அடையாளமாகச் செய்யப்படும் கார்யங்களில் ஒன்றான அபிஷேகத்திற்கு பட்டாபிஷேகம் என்று பெயர்.

5. பண்டன் என்ற அஸுரனிடன் அம்பாள் யுத்தம் செய்தது (இந்த ஸஹஸ்ர நாமத்தில் சொல்லப்பட்டிருப்பதுபோல்) லலிதோபாக்யானத்தில் விஸ்தாரமாக வர்ணிக்கப்பட்டிருப்பதால் இங்கு சொல்லப்பட்டது. லலிதோபாக்யானம் ஹயக்ரீவரால் அகஸ்த்யருக்குச் சொல்லப்பட்டது.

वर्णितं श्रीपुरंचापि महाविभवविस्तरम् ।
श्रीमत्पञ्चदशाक्षर्या महिमा वर्णितस्तता ॥ ३ ॥

3. வர்ணிதம் ஸ்ரீபுரம் சாபி மஹாவிபவ விஸ்தரம் |
ஸ்ரீமத் பஞ்ச தசாக்ஷர்யா: மஹிமா வர்ணிதஸ்ததா ||

ஸ்ரீபுரம் (அதின்) மஹத்தான விபவங்களோடுகூடிய விஸ்தாரத்துடன் வர்ணிக்கப்பட்டது. ஸ்ரீமத் பஞ்சதசாக்ஷரி மந்த்ரத்தின் மஹிமையும் (தங்களால்) வர்ணிக்கப்பட்டது.

1. அதற்கு ஸமானமில்லாதது என்று பொருள். அம்பாள் வஸிக்கும் புரத்திற்கே 'புரம்' என்று பெயர். மனஸுக்கு ப்ரியமானது, கண்களுக்கு விஷயமானது, தர்மங்களினால் பூர்ணமாயிருப்பது என்று பலவிதமாகப் பொருள் சொல்லலாம். முக்யமாக 'புரம்' என்று பிரத்யக்ஷமாகத் தெரிவது ஸ்ரீசக்ரம்.

2. மேன்மையான வஸ்துக்களுடன் சேர்ந்து சொல்லும்போது 'ஸ்ரீ' என்ற பதத்தைச் சேர்த்துச் சொல்லுவது வழக்கம். அம்பாளுடைய புரமானதால் எல்லா விதமான விசேஷங்களும் கூடிய ஸ்ரீபுரம் (ஸ்ரீ நகரம், ஸ்ரீபுர வாஸம்) என்று சொல்லப்பட்டது.

3. ஸ்ரீபுரமானது மூன்று இடங்களில் இருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ருத்ரயாமளத்தில் ஸகல ப்ரம்ஹாண்டங்களுக்கும் வெளியிலும் மேலாகவும்,

'அனேக கோடி ப்ரம்ஹாண்ட கோடீஸும் பஹிர் ஸம்ஸ்தா:'

என்பது முதலான ச்லோகங்களில் அனந்த யோஜனை விஸ்தாரங்களை உடைய இருபத்தைந்து ப்ராகாரங்களால் சூழப்பட்டதாக வர்ணிக்கப்பட்டிருக்கிறது ஒன்று. மேருவின் சிகரத்தின் மேல் முந்தியதற்குச் சொல்லப்பட்ட லக்ஷணங்களோடு கூடியதாய் லலிதாஸ்தவரத்னத்தில் துர்வாஸரால் வர்ணிக்கப்பட்டது மற்றொன்று. க்ஷீரஸமுத்திர மத்தியில் இருப்பதாக ஸ்ரீ வித்யாரத்ன ஸூத்ரபாஷ்யத்தில் சொல்லியிருப்பது மூன்றாவது. இந்த விஷயத்தைப்பற்றி 'ஸுமேரு மத்ய ச்ருங்கஸ்தா' என்ற 57-வது நாமம் முதல் ஸுதாஸாகரமத்யஸ்தா என்ற 61-வது நாமம் முடியப் பார்க்கவும்.

4. விஸ்தாரம் என்றால் வார்த்தைகளின் கூட்டத்திற்குப் பெயர். ஸ்ரீபுரத்தின் மஹத்தான விபவங்கள் அநேக சாஸ்திரங்களால் வர்ணிக்கப்பட்டதை 'மஹாவிபவ விஸ்தாரம்' என்று சொல்லப்பட்டது.

5. 'ஸ்ரீமத் பஞ்சதசாக்ஷரீ' — ஸ்ரீராஜராஜேச்வரி கூடிய பஞ்சதசாக்ஷரீ என்று அர்த்தம். பஞ்சதசாக்ஷரீ என்பது காதிவித்யையைக் குறிக்கும். அத்துடன் ஸ்ரீசக்ரத்தைச் சேர்ப்பதானது 'சக்ரராஜம் பிப்பதி சேஷ்டாயுக்த:' என்ற ச்ருதிவாக்யத்தினால் ஸித்தமாகிறதென்றும், அது மிகவும் ரஹஸ்யமானதென்றும், குருமுகமாகத்தான் அறியப்படவேண்டும் என்றும் சிலர் சொல்லுவார்கள். இவ்வாறு சொல்லியிருப்பது தந்த்ரங்களில் காணப்படாததால் அதை ப்ரமாணமென்று ஒப்புக்கொள்வதில்லை மேலே சொல்லப்பட்ட ச்ருதியானது

'காமராஜாக்ய மந்த்ராங்கே ஸ்ரீ பீஜே ஸாண்விதா।
ஷோடசாக்ஷர வித்யேயம் ஸ்ரீ வித்யேதி ப்ரகீர்த்திதா॥'

என்றபடி, ஹயக்ரீவரால் உத்கீதமான தம் காமராஜ மந்த்ரத்தின் கடைசியில் ஸ்ரீபீஜத்தைச் சேர்ப்பதால் ஏற்படுவதான ஷோடசாக்ஷர வித்யையைக் குறிக்குமென்றும் மற்றவர்கள் சொல்லுவார்கள். ஆகவே இந்த இடத்தில் ஸ்ரீ வித்யாநாமத்தின் சாமை முதலான அர்த்தங்களோடு கூடிய விசேஷணமாகவே தனிர பீஜாக்ஷரமல்ல.

षोढान्यासादयो न्यासा न्यासखण्डे समीरिताः ॥ ४ ॥

4. ஷோடா ந்யாஸாதயோ ந்யாஸா:
ந்யாஸகண்டே ஸமீரிதா: ।

ஷோடா ந்யாஸங்கள் முதலிய ந்யாஸங்கள் ந்யாஸகண்டத்தில் சொல்லப்பட்டன.

1. *ந்யாஸம் என்பது சரீரத்தின் அந்தந்த பாகத்தில் அந்தந்த தேவதையை இருக்கச்செய்வது, அதாவது அப்படியிருப்பதாக பாவனை செய்வது. ஷோடா ந்யாஸங்கள் (ஆறு ந்யாஸங்கள்) என்பவை கரணை, க்ரமை, நகந்த்ர, ரியாதினீ ந்யாஸ, பீடங்கள் என்றவைகளை ந்யாஸம் செய்கிறவை.*

கரணை: ப்ரதமோ ந்யாஸ த்விதீயஸ்து க்ரமாஹ்வய: ।
நகந்த்ரஸ்து த்ருதீய ஸ்யாத் சதுர்த்யோ ரியாதினீ: சதுர்த்தக: ॥
ராசிபி: பஞ்சமோ ஜ்ஞேய: ஷஷ்ட: பீடை: ப்ரகீர்த்யதே ।
ஷோடா ந்யாஸஸ்த்வயம் ப்ரோக்த: ஸர்வ த்ரைலோக்ய ஜித்: ॥

இந்த ஆறு ந்யாஸங்கள் ஒவ்வொன்றும் அவாக்ஷர அதிர்வுகளென்றும் அனை ஆறும் சேர்ந்ததாய் பரம அதிர்வுகளென்றும் சொல்லப்படுகிறது. இந்த பரம அதிர்வுக்கு இணை ஆறும் சேர்ந்து செய்யும்போது ஒரு ஒளிப்பாகல் அந்த அனைத்தும் சேர்ந்து ஷோடாந்யாஸம் என்று சொல்லப்படும். அதிர்வுகளை மாலினீ முதலான தேவதைகளாய் அனைவரிக்கமானது.

2. "ஷோடாந்யாஸாதயோ ந்யாஸா:" என்பதினால் மேலில் சொல்லப்பட்ட ஷோடாந்யாஸத்தைத்தவிர சக்ர ந்யாஸம் முதலிய விஷயங்களும் சொல்லப்பட்டன.

3. *ந்யாஸ கண்டமென்பது ஸம்ஸ்கிருத பாஷையில் முக்யமாகச் சொல்லும் (க்ரந்த) பாகம்.*

अन्तर्यागक्रमश्चैव बह्यागक्रमस्तथा ।
महायागक्रमश्चैव पूजाखण्डे प्रकीर्तितः ॥ ५ ॥

5. அந்தர்யாகக்ரமஸ்சைவ பஹிர்யாகக்ரமஸ்ததா
மஹாயாகக்ரமஸ்சைவ பூஜாகண்டே ப்ரகீர்திதா: ।

பூஜாகண்டத்தில் அந்தர்யாகக்ரமம், பஹிர்யாக க்ரமம், மஹா யாகக்ரமம் இவையெல்லாம் சொல்லப்பட்டன.

1. அந்தர்யாகமென்பது மானஸீகமான தேவபூஜை, அல்லது பின்னுல் ஸஹஸ்ரநாமத்தில் சொல்லப்படுகிறபடி குண்டலினீ சக்தியானவள் மூலாதாரத்திலிருந்து ஸஹஸ்ராரத்திற் குப்போவதை பாவனை செய்வது.

2. க்ரமம் என்பது செய்யவேண்டிய விதம்.

3. பஹிர்யாகம் என்பது பாத்ராஸாதனம் முதல் சாந்தி ஸ்தவம் வரையில் பஹிர்முகமான பூஜையில் செய்யும் க்ரியா ஸமூஹம்.

4. மேலே சொல்லிய பஹிர்யாகத்தை எட்டுவிதமான அங்கங்கள் முதலியவற்றுடன் கூடிச்செய்வது மஹாயாகம். இவ்விரண்டைபற்றி பாஸ்கராயருடைய 'வரிவஸ்யா ரஹஸ்யம்' என்பதின் பூஜாப்ரகரணத்தில் நிரூபணம்செய்யப்பட்டிருக்கிறது.

पुरश्चरणखण्डे तु जपलक्षणमीरितम् ।

புரஸ்சரண கண்டே து ஜபலக்ஷணமீரிதம்

புரஸ்சரண கண்டத்தில் ஜபத்தின் லக்ஷணத்தைப் பற்றிச் சொல்லப்பட்டது.

1. புர:-மந்த்ரோபாஸனைக்கு முன்னதாக (நியமத்துக்குப் பிறகு) சரணம் செய்யவேண்டிய க்ரியைக்கு புரஸ்சரணம் என்ற பெயர்.

2. ஜபத்தின் லக்ஷணம் (அடையாளம்) என்பது—, யுவஸ்த்ரீ காபஞ்சகம், சூன்ய ஷட்கம், விஷ்ணுவக்ர பஞ்சகம், சக்ர நவகம் இவைகளை விசேஷமாக பாவனை செய்வது. இவற்றைப்பற்றி 'வரிவஸ்யா ரஹஸ்ய'த்தில் சொல்லப்பட்டிருப்பதைப் பார்க்கவும்.

होमखण्डे त्वया प्रोक्तो होमद्रव्यविधिक्रमः ॥ ६ ॥

6. ஹோமகண்டே த்வயாப்ரோக்தோ
ஹோமத்ரவ்ய விதிக்ரமः ।

ஹோமகண்டத்தில் ஹோமங்களைப்பற்றியும், அவற்றில் உபயோகப்படும் த்ரவ்யங்களைப்பற்றியும், அவற்றினுடைய விதிகளைப்பற்றியும், இருக்கும் க்ரமத்தைப்பற்றியும் தங்களால் சொல்லப்பட்டது.

चक्रराजस्य विद्यायाः श्रीदेव्या देशिकार्मनोः ।
रहस्यखण्डे तादात्म्यं परस्परमुदीरितम् ॥

7. சக்ர ராஜஸ்ய வித்யாயாः
ஸ்ரீ தேவ்யா தேசிகாத் மநேஃ ॥
ரஹஸ்யகண்டே தாதாத்ம்யம்
பரஸ்பரம் உதீரிதம் ॥

சக்ராராஜத்திற்கும் (ஸ்ரீசக்ரத்திற்கும்), ஸ்ரீ வித்யைக்கும் ஸ்ரீதேவிக்கும் குருவுக்கும் தனக்கும் (உபாஸகனுக்கும்) பரஸ்பரம் இருக்கும் தாதாத்ம்யமானது ரஹஸ்யகண்டத்தில் சொல்லப்பட்டது.

1. சக்ரராஜம் என்பதிலுள்ள முதலான நவ சக்ரத்மகமான ஸ்ரீ சக்ரம் சொல்லப்பட்டது. வித்யா என்பது பஞ்சதசீ அல்லது ஷோடசியைக் குறிக்கும். ஸ்ரீதேவி என்ற த்ரிபுரஸுந்தரியைச் சொல்லப்பட்டது.

2. தாதாத்ம்யம்—தத் என்ற பதமானது 'ஸ்ரீம் க்லீம் ஐம் நிர்தேசோ ப்ரம்மஸ்வரூபஸ்த்ரிவிதः ஸம்ஸ்ருதः' என்ற ஸ்ருதியில் சொன்னபடி ப்ரம்மஸ்வரூபத்தைக் குறிக்கும். அதையே ஸ்வரூபமாக உடைத்தாயிருப்பது தாத்மம். அவ்விதமான பாவம் தாதாத்ம்யம். இதிலுள் ஸ்ரீசக்ரம், ஸ்ரீவித்யை, ஸ்ரீதேவி, ஸ்ரீகுரு, உபாஸகன் இவ்வைவரும் ஒரே ப்ரஹ்மஸ்வரூபமென்பதிலுள் அவர்கள் அபேதமென்பதும் காட்டப்பட்டது. இவ்விதமான தாதாத்ம்யத்தின் ப்ரகாரத்தைப் பற்றி வாவஸ்யா ரஹஸ்யத்தில் சொல்லப்பட்டிருப்பதைப் பார்க்கவும்.

स्तोत्रखण्डे बहुविधाः स्तुतयः परिकीर्तिताः ॥ ७ ॥

ஸ்தோத்ரகண்டே பஹுவிதாः
ஸ்துதயः பரிகீர்த்திதாः ॥

ஸ்தோத்ரகண்டத்தில் அனேகவிதமான ஸ்தோத்ரங்கள் சொல்லப்பட்டன.

1. பஞ்சதசீ ஷோடசாக்ஷரம் முதலான உபாஸனா விதிகளான மந்த்ரங்கள் இதில் சொல்லப்பட்டன.

मन्त्रिणीदण्डिनीदेव्योः प्रोक्ते नामसहस्रके ।
नतु श्रीललितादेव्याः प्रोक्तं नामसहस्रकम् ॥ ८ ॥

8. மந்த்ரிணீ தண்டிநீ தேவ்யோ:
ப்ரோக்தே நாமஸஹஸ்ரகே |
ந து ஸ்ரீ லலிதாதேவ்யா:
ப்ரோக்தம் நாம ஸஹஸ்ரகம் ||

மந்த்ரிணீதேவி, தண்டி நீ தேவி இவர்களுடைய நாம ஸஹஸ்ரங்கள் சொல்லப்பட்டன. ஆயினும் ஸ்ரீ லலிதா தேவியினுடைய நாம ஸஹஸ்ரமானது சொல்லப்படவில்லை.

1. இவ்விதம் தனக்குச் சொல்லப்படாத ஒரு ஸஹஸ்ர நாமம் இருப்பதாக அகஸ்த்யர் தன் தபோபலத்தினால் தெரிந்து கொண்டதாக முதல் ச்லோகத்தில் குறிப்புகளில் சொல்லப்பட்டது.

2. மந்த்ரிணீ தேவி அம்பாளுடைய ஸமஸ்தமான ராஜ்ய பாரத்தையும் வஹிக்கும் மந்த்ரி பதவியிலிருப்பவள். ராஜ்ய காரத்திற்குத் தேவையான மனனக்ரியை புரிந்து ஸாமர்த்தியத்திற்கு-மந்த்ரமென்ற பெயர். ராஜ்யாமளா முதலான வேறு பெயர்களுமுண்டு.

3. தண்டிநீ தேவி அம்பாளுடைய சதுரங்க ஸைன்யத்திற்கும் நாயகியாக இருப்பவள். (பிறரை அடக்கும் ஸாதனத்திற்கு கருவிக்கு - தண்டமென்ற பெயர்.) வாராஹீ முதலான வேறு பெயர்களுமுண்டு.

4. இவ்விருவர்களும் அம்பாளுக்கு மட்டிலும் அடுத்தப்படியானவர்களென்ற சொல்லப்படுவார்கள். இவர்களுடைய பெயர்கள் மிகவும் மஹிமை பொருந்தியவைகளென்றும், அவற்றைச் சொன்னாலேயே விசேஷபலன் உண்டென்றும் சொல்லப்படுகிறது.

மந்த்ரிணீ தேவியின் முக்ய நாமங்கள் 16 பின்வருமாறு:—

• ஸங்கீத யோகினீ ச்யாமளா மந்த்ரநாயிகா |
மந்த்ரிணீ ஸபிதேவசாலி ப்ரதாநேசீ சுகப்ரியா ||
வீணாவதீ வைணிகீ சதந்த்ரிணீ ப்ரியகப்ரியா |
நீப ப்ரியா குலாம்போஜ குலாம்பாவலி வாஸிநீ |
ஸுதாமதுர சுகாநாதி வேஷாடகைதுராதி குப்ஜா ||

தண்டிநீ தேவியின் முக்ய நாமங்கள் 12 பின்வருமாறு:—

• பஞ்சமீ தண்டநாதா ச ஸங்கேதா ஸமயேச்வரீ |
தக்ஷா ஸமயஸங்கேதா வாராஹீ போத்ரிணீ சிவா. ||

வார்த்தாளீ ச மஹாலேஸ ப்யாக்ஞாசக்ரேச்வரீ ததா |
அரிக்னீ சேதி ஸம்ப்ரோக்தம் நாமத்வாதசகம் முதே ||

இவர்களைப்பற்றி ஸஹஸ்ரநாமத்தில் சொல்லியிருப்பதையும் பார்க்கவும்.

5. இதுவரையில் சொல்லப்பட்ட ரஹஸ்ய விஷயங்கள் எல்லாவற்றையும் ஹயக்ரீவர் தனக்குச் சொல்லியிருந்தும் ஸ்ரீ லலிதாம்பாளுடைய ஸஹஸ்ரநாமத்தைச் சொல்லாமலிருந்து விடவே அதற்கு இருக்கக்கூடிய காரணங்களை அகஸ்த்யர் மேலே சொல்லுகிறார்.

तत्र मे संशयो जातो हयग्रीव दयानिधे ।
किंवा त्वया विस्मृतं तज्ज्ञात्वा वा समुपेक्षितम् ॥ ९

9. தத்ர மே ஸம்சயோ ஜாதோ
ஹயக்ரீவ தயாநிதே |
கிம் வா த்வயா விஸ்ம்ருதம் தத்
ஞாத்வா வா ஸமுபேக்ஷிதம் ||

ஹே ஹயக்ரீவ! தயாநிதே! அதில் (அம்பாளுடைய நாம ஸஹஸ்ரத்தைச் சொல்லாத விஷயத்தில்) எனக்கு ஸந்தேஹமாக ஏற்பட்டிருக்கிறது. தாங்கள் (அதைச் சொல்லவேண்டுமென்பதை) மறந்து விட்டீர்களா, அல்லது தெரிந்துதான் உபேக்ஷையாக (அலக்ஷ்யமாக) இருந்து விட்டீர்களா?

मम वा योग्यता नास्ति श्रोतुं नामसहस्रकम् ।
किमर्थं भवतां नोक्तं तत्र मे कारणं वद ॥ १० ॥

10. மம வா யோக்யதாம் நாஸ்தி
ச்ரோதும் நாம ஸஹஸ்ரகம் |
நிமர்த்தம் பவதா நோக்தம்
தத்ர மே காரணம் வத ||

அல்லது ஒருவேளை நாம ஸஹஸ்ரத்தைக் கேட்க எனக்கு யோக்யதையில்லையா? தங்களால் அது சொல்லப்படாததற்குக் காரணம் சொல்லக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

1. அம்பாளுடைய நாம ஸஹஸ்ரத்தை அகஸ்த்யருக்கு ஹயக்ரீவர் சொல்லாததற்கு இருக்கக்கூடிய நான்கு காரணங்களில் மூன்றை அகஸ்த்யர் இந்த இரண்டு ச்லோகங்களில் சொல்லு

2. சொல்லவேண்டியதென்பதை மறந்திருக்கக் கூடுமென் பது முதலாவது. ஆயினும் தன் குருவான ஹயக்ரீவர் ஸர்வக் ஞரானதால் அவ்விதம் மறந்திருக்க மாட்டாரென்று உடனே நிச்சயித்து மேலே சொல்லிய ஸந்தேஹ காரணத்தைத் தள்ளி விட்டு அடுத்ததாக இருக்கக்கூடிய காரணத்தை மேலே சொல்லு

ரா. அதாவது சொல்லவேண்டுமென்ற நாபகமிருந்தும் உபேக்ஷையாக இருந்துவிட்டாரோ என்பது. இஷ்டமானதில் ப்ரவ்ருத்தியில்லாமலும் அனிஷ்டத்திலிருந்து நிவ்ருத்தியில்லா மலும் உதாஸீனமாக (நடுநிலைமையாக) இருப்பதற்கு உபேக்ஷை என்று சொல்லப்படும். அதுவும் காரணமாக இருக்காதென்று மேலே சொல்லப்படுகிறது.

3. மனுஷ்யர்களுக்குள் இருக்கக்கூடிய நாலுமுறைகளாகிய மித்ர, சத்ரு, ப்ருத்ய (ஸேவக), உதாஸீன பாவங்களில் சிஷ்ய னனவன் ப்ருத்ய பாவத்திலடங்கியவன். அவனுக்கு பக்தி, ஜிக் ஞாஸா (தெரிந்துகொள்ளவேண்டுமென்கிற ஆசை) இவையிருக்கு மாகையால் அவனிடம் குருவானவர் உதாஸீனராக இருக்க நியாயமில்லை. அப்படியிருந்தால் குருவானவர் பாரதந்ர்யம் என்று சொல்வதற்கு ஹானி ஏற்படுமல்லவா? அதனால் அந்தக் காரணமும் ஸரியல்ல என்று தள்ளிவிட்டு, மூன்றாவதான காரணத்தை மேலே சொல்லுகிறார்.

4. ஒருவேளை தனக்கு அந்த ஸஹஸ்யநாமத்தை உபதேசம் பெறும்படியான யோக்யதையில்லையா என்பதே மூன்றாவது காரணம். ('நாஸ்தி' என்ற பதத்தினால் தக்ஷயஜ்ஞம் - தற்காலம் இல்லை என்று ஸந்தேஹப்பட்டதை. ஒரு பொருளின் பெயரை அந்த அபாவம் சொல்லப்படவில்லை. அப்படியிருந்தால் மேலே சொல்லப்படும் நான்காவது காரணம் பற்றாமல் போயிருக்கும்.) தற்காலம் யோக்யதையில்லாதிருந்தாலும் ஒரு பொருளை குருவானவர் தன் கருணையினால் ப்ருத்யனை தன் சிஷ்யபாவத்தை அனுக்ரஹம் செய்து அவனுக்கு யோக்யதையை உண்டாகச் செய்யலாம். எப்படி ஸூர்யனுடைய தாபத்தை மொட்டாக

இருந்தாலும் அதைத் தன்னுடைய கிரணங்களினால் மலரும்படிச் செய்கிறதே, அம்மாதிரி குருவானவர் விவேக வைராக்யங் களோடு கூடிய வேதாந்த வாக்யங்களால் சிஷ்யனுடைய ஞானத் தை மலரும்படிச் செய்கிறார் என்று சொல்லப்பட்டது.

'தத்தத் விவேக வைராக்ய யுக்த வேதாந்த யுக்திபி: |
ஸ்ரீகுரு: ப்ராபயத்யேவ ந பத்மமபி பத்மதாம் ||
ப்ராபய்ய பத்மதாமேனம் ப்ரபோதயதி தத்க்ஷணாத் |
தஸ்மாத் ஸர்வப்ரயத்னேன ஸேவ்ய: ஸ்ரீகுருபாஸ்கர: ||
(பஞ்சரத்னம்)

(இதில் 'ந பத்மம் அபி பத்மதாம்' என்று சொன்னதிலால் யோக்யதையில்லாத சிஷ்யனிடத்திலும் யோக்யதை உண்டு பண்ணி குருவாகிய ஸூர்யன் அவனுடைய புத்தியை மலரும் படி செய்வது சொல்லப்பட்டது.)

ஆகவே குருவானர் உபதேசம் பெறுபவரான யோக்யதை யையும் கொடுத்து உபதேசம் செய்யும் ஸ்வாமியுடைய வரதை யால், தனக்கு ஒருவேளை யோக்யதையில்லாமலிருப்பதால் முயற் சிவர் நாம ஸாதர்ம்யத்தைத் தனக்குச் சொல்லுகிறதே யன்றி மூன்றுவது காரணத்தையும் அதன்பிறகு கன்னியிடுகிறதை (நாலாவதான) காரணம் என்ன இருக்கலாம்? என்று சிஷ்யனும் பண்ண முடியாதவராய் 'நிமர்த்தம்.....வது,' என்று சொல்லுகிறார்.

सूत उवाच ।

ஸூத உவாச:—

ஸூதர் சொல்லலுற்றார்.

1. முன்னொரு காலம் நைமிசாரண்யத்தில் ஒரு தர்ம யாகம் நடந்தபோது அங்கு வந்திருந்த சௌனகாதி முனிவர்கள் தங்களுடைய மேன்மேலும் ஞானத்தைத் தரவல்ல புராணத்தைச் சொன்னதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அதன் பிறகு, ஒரு யாகசாலை ஸம்பந்தமான விஷயத்தைப் பற்றி அவர் மேலே பிரஸ்தாபிக்கிறார்.

इति पृष्टः सभामध्ये सूतोऽसौ मुनिभिस्तदा ।
पहृष्टो वचनं प्राह तापसं कुम्भसम्भवः ॥ १ ॥

11. இதி ப்ருவத்யே தாபஸாக்ர்யே
முனிஸ் கும்ப ஸம்பவ:
ப்ரஹ்ருஷ்டோ வசனம் ப்ராஹ
தாபஸம் கும்பஸம்பவம் ॥

இந்தமாதிரி (கும்ப ஜன்மாவாயும் முனியுமான) அகஸ்தியரால் கேழ்க்கப்பட்ட ஹயக்ரீவரானவர் மிகுந்த மகிழ்ச்சியடைந்தவராய் (கும்பஸம்பவரான) அவரைப் பார்த்துச் சொல்லலானார்.

1. 'நாப்ருஷ்டே: கஸ்யசித் ப்ரூயாத் இதி வேதானுசாஸனம் |' என்ற பாரத வசனப்படி கேட்காத சிஷ்யனுக்கு விஷயங்களைச் சொல்வதுகூடாது என்று சொல்லப்படும். அதேச்லோகத்தின் பின்பாதியான,

'அப்ருஷ்டஸ் தஸ்ய தத் ப்ரூயாத் யஸ்ய நேச்சேத் பராபவம்' என்பதில் சொன்னது—கேட்பதற்கு ஸாமர்த்யமில்லாத போதிலும் ச்ரத்தையுள்ளவனாக இருந்தால் அவ்விதமான சிஷ்யனுக்கு (அவன்) கேட்காமலேயே சொல்லலாம், என்று தாத்பர்யம். ச்ரத்தையில்லாதவனுக்கு உபதேசம் செய்தால் மறுத்தான ஹானி ஏற்படுமென்று அனேகவாக்கியங்களில் சொல்லப்பட்டிருக்கிறது.

'ச்ரத்தயா அக்னி: ஸமித்யதே ச்ரத்தயா ஹூயதே ஹவி: |
'அச்ரத்தா பரம: பாப்மா ச்ரத்தா ஹி பரமம் தப: |
தஸ்மாத் அச்ரத்தயா தத்தம் ஹவிர் நாச்னந்தி தேவதா: ||
இஷ்ட்வா தத்வாபி வா மூர்க்க: ஸ்வர்கம் ந ஹி ஸ கச்சதி |
சங்கா விஹத சாரித்ரோ ய: ஸ்வாபிப்ராய மாச்ரித: |
சாஸ்த்ராதிக: ஸ்மருதோ மூர்க்கோ தர்மதந்த்ரோபரோதக: ||'
(போதாயனர்)

ஆகவே ச்ரத்தையில்லாதவன் கேட்டாலும் சொல்லக்கூடாது, என்பதினால் அப்போர்ப்பட்டவன் கேட்காமலிருந்தால் சொல்லவேகூடாது என்பதும் ஏற்படுகிறது. ச்ரத்தையிருக்கும் பக்ஷத்தில் அவ்விதமான சிஷ்யன்கேட்பதற்கு ஸாமர்த்தியமில்லாதிருந்தாலும் குருவானவர் அவனிடமிருந்து கேள்வியை எதிர்பார்க்காமலேயே உபதேசம் செய்யவேண்டுமென்றும் ஏற்படுகிறது.

2. அகஸ்த்யர் செய்த ச்லோகத்தினால் ஹயக்ரீவரிடத்தில் அவர் மீது அதிசயமான ப்ரியம் ஏற்பட்டு இருந்ததினால் உபதேசம் செய்யவேண்டுமென்கிற ஆசையிருந்தது. ஆனால் பக்தி ஸ்ரத்தையாய் அவரிடமிருந்து கேள்வி யாதலினால் ஹயக்ரீவர் 'ந ப்ருஷ்ட: ப்ரூயாத்' (கேட்கப்படாமலிருந்தால் சொல்லக்கூடாது) என்ற வாக்யத்தில் நிஷேதத்திற்கு பயந்து உபதேசம் செய்யமுடியவில்லையே என்ற கவலையிருந்தது. மேலும் அகஸ்த்யர் ச்ரத்தையோடிருப்பதுடன்கேட்பதிலும்ஸாமர்த்யமுடையவராயிருந்தபடியால் அவர் தன்னை என் இதுவரையில் கேட்கவில்லையென்ற

திணல் அந்தக்கவலை அதிகரித்திருந்தது. இவ்விதம் காலதாமதம் ஏற்பட்டதினல் சங்கடமுடைய மனதோடிருந்த ஹயக்ரீவர் அகஸ்தியரிடமிருந்து எதிர்பார்த்த கேள்வியானதும் வந்தவுடன் ஹயக்ரீவர் கவலை நீங்கி அதிகமான மகிழ்ச்சியடைந்தார் என்பதினல் 'ப்ரஹ்மருஜ்ஜட:' என்பதினல் சொல்லப்பட்டது.

3. 'தாபஸம்' என்ற பதத்தினல் யக்ஞம் முதலான கர்மஸாதனைகளால் ஸமஸ்தமான பாபங்களும் போய் ஞானம்பிறக்கின்றன்கிற ஆவல் ஏற்பட்டதாயும் அதினல் சாதனை இருப்பதையும் ஆகவே யோக்யதை இருப்பதையும் குறிக்கப்பட்டது.

4. 'கும்பஸம்பவம்' என்ற பதத்தினல் சித்தவ்ருத்தி நிரோதம் ஏற்படுவதற்குக் காரணமுதலான வாயுவ்ருத்தி நிரோதனமார்த்தியம் அகஸ்தியருக்கு இருப்பதையும், அதினையும் யுக்தியுக்த யோக்யதை இருப்பதையும் குறிக்கப்பட்டது. (கும்ப-கும்பகத்தில், ஸம்-வெகுகாலம், பவ:-ம்ருத்யு நிரோதனம் உடையவர் கும்பஸம்பவர்).

श्रीहयग्रीव उवाच ।

लोपामुद्रापतेऽगस्त्य सावधानमनाः शृणु ।
नाम्नां सहस्रं यन्नोक्तं कारणं तद्ब्रवीमि ते ॥ १२

12. லோபாமுத்ராபதே அகஸ்த்ய
ஸாவதானமனா: ச்ருணு !
நாம்நாம் ஸஹஸ்ரம் யந்நோக்தம்
காரணம் தத் ப்ரவீமி தே ॥

லோபாமுத்ராவின் பதியான அகஸ்தியரே ! அவதானமான மனதுடன் கேள். யாதொரு காரணத்தினால் (இந்த ஸ்தோத்ரத்தில்) ஸஹஸ்ரநாமம் என்று சொல்லி விஸ்தரித்துச் சொல்லாமல் (அஷ்டோத்தரமாக) சொல்லப்

1. அகஸ்தியருடைய பத்னியின் பெயர். மற்ற விவரங்கள். முன் சொன்னபடி (அஷ்டோத்தரமாக) பன்னிரண்டு உபாஸகர்களில் ஒருவர். பத்ர தபோவனத்திலே தபஸ்ஸினால் ஸித்தியடைந்து (அஷ்டோத்தரமாக) சொல்லி

லப்பட்டவள். அம்பாளுக்கு அவளிடத்தில் அத்யந்த ப்ரியம். லலிதா த்ரிசதியின் அவதாரிகையில் அம்பாள் ஹயக்ரீவனைப் பார்த்து த்ரிசதியை அகஸ்த்யருக்கு உபதேசம் பண்ணும்படி ஆக்ஞாபிக்கையில், அதற்கு அவர் லோபாமுத்ரையின் பதியாக இருப்பது ஒரு காரணமாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

'பத்ன்யஸ்ய லோபாமுத்ராக்யா மாமுபாஸ்தேऽதி பக்தித: |
அயம் ச நிதராம் பக்த: தஸ்மாத் அஸ்ய வதஸ்வ தத் ||'

(இவருடைய பத்னியான லோபாமுத்ரையெனப்படுகிறவள் என்னை விசேஷமான பக்தியுடன் உபாஸிக்கிறாள். இவரும் என்னுடைய பரமபக்தர். ஆகையால் நீர் அதை இவருக்குச் சொல்லும்). பர்த்தாவுக்கு ப்ரியமான தேவதையை பத்னியானவள் ஆராதிப்பது அனுகூலமான தாம்பத்யத்தை (பதி, பத்னிகளுடைய வாழ்க்கையை) கொடுப்பதுடன், அவளுக்கும் உபாஸ்தி செய்வதற்கு வேண்டிய யோக்யதையையும் கொடுக்கும். இத்துடன் பதிக்கு உபாஸ்ய தேவதையிடமிருக்கும் பக்தி விசேஷத்தினால் பத்னியின் ஆனுகூல்யமும் ஏற்படும். இவ்விரண்டும் அகஸ்த்யர், லோபாமுத்ரை இவர்களிடமிருப்பது மேலே சொல்லிய த்ரிசதீ ச்லோகத்திலிருந்து ஏற்படுகிறது.

2. அல்லது, அப்போற்பட்ட விசேஷமான பக்தையாகிய லோபாமுத்ரையின் பதிஎன்பதினால் அகஸ்த்யருக்கும் ஸ்ரீவித்யை உபதேசமாகியிருக்குமென்றும், அதினால் அவருக்கு இந்த லலிதாஸஹஸ்ரநாமத்தைக் கேட்கும்படியான யோக்யதை உண்டென்றும் 'லோபாமுத்ராபதே' என்ற பதத்தினால் சொல்லப்பட்டதாகவும் சொல்லலாம். ஏனென்றால் கேவலம் பக்தி, தெரிந்து கொள்வதற்காகக் கேட்பது, என்ற இவை இரண்டுமட்டும் உபதேசம் பெறுவதற்குப் போதாது. அவையிருந்தும் ஸ்ரீவித்யோபாஸனை இல்லாவிட்டால் உபதேசம் செய்பவரை யோகினிகள் சபித்துவிடுவதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே (உபதேசம் பெறுவதற்கு வேண்டிய) வித்யாதிகாரமும் அகஸ்த்யருக்கு இருப்பதாக இந்தப் பதத்தினால் சொல்லப்பட்டது.

3. அல்லது, லோபாமுத்ரா என்ற பதமானது, அந்தப் பெயருடைய வித்யையையும் ஸ்ரீமத் த்ரிபுரஸுந்தரியையும் குறிக்கும். அவ்விதமான லோபாமுத்ரையையே பதியாக (உபாஸ்யமாக) உடையவர் லோபாமுத்ராபதி என்றும் சொல்லலாம்.

ஆனால் அகஸ்த்யருடைய பெயராலேயே ஒரு வித்யை இருக்கையில், அவரை இன்னொரு வித்யையின் உபாஸகராகச் சொல்லலாமா என்ற ஸந்தேஹம் ஏற்படக்கூடும். ஆயினும் பஞ்சதசாக்ஷரியின் பேதங்கள் அனேகமிருந்தாலும் அவையெல்லாம் ஒரே தேவதையைக் குறித்த மந்த்ரங்களாகையால் அபேதமென்றே தான் சொல்லவேண்டும். (இதை பாஸ்கராசார்யரானவர் பாஷ்யத்தின் மூலத்தில் அனேக ச்ருதி ப்ரமாணங்களைக்கொண்டு காட்டியிருப்பதுடன், ஸௌபாக்யத்தில் மிகத் தெளிவாக இதைப் பற்றிச் சொல்லியிருக்கிறார்).

ஸாவதான மனஸ:— அவதானமுள்ள மனதையுடையவனே! அவதானம் என்பது இதர விஷயங்களில் ஸஞ்சாரம் செய்யாமலிருப்பது ஸ்வாரஸ்யமில்லாத காரணங்களே. இதுவரையில் அகஸ்த்யருடைய மனதில் தோன்றியிருப்பதாலும், அவற்றினின்று வேறுபட்டதும் அவருக்குத் தோன்றுதற்காயான ஒரு காரணத்தைத்தான் சொல்லப்போவதாலும் அது அகஸ்த்யருடைய மனதில் நன்றாய்ப் பதியவேண்டுமாகையால் ஹயக்ரீவர் அவரை ஸாவதான மனத்துடன் இருக்கும்படி சொல்லுகிறார்.

रहस्यमिति मत्वाहं नोक्तवांस्ते न चान्यथा ।
पुनश्च पृच्छसे भक्त्या तस्मात्तत्ते वदाम्यहम् ॥ १३

13. ரஹஸ்யமிதி மத்வாஹம்
நோக்தவாம்ஸ்தே ந சான்யதா |
புனச்ச ப்ருச்சஸே பக்த்யா
தஸ்மாத் தத் தே வதாம்யஹம் ॥

அது ரஹஸ்யமென்று நினைத்து நான் உனக்குச் சொல்லவில்லையே தவிர வேறுவிதமான காரணமில்லை. திரும்பவும் நீ பக்தியோடு கேட்பதினால் நான் அதை உனக்குச் சொல்லுகிறேன்.

1. ஒரு விஷயமானது வெளிப்படையாயல்லாமல் இருக்கும் அதைச் சொல்வதற்கு ப்ரச்னம் (கேட்பது), பக்தி இவையிருக்கின்றனவா அல்லவா என்று பார்க்கத் தேவையில்லை. அது ரஹஸ்யமானதாயிருந்தால் தான், அவை இரண்டும் இருக்கின்றனவா என்ற கேள்வி ஏற்படும். இவ்விதம் பக்தியுள்ளவனாயிருப்பதற்கும் உபதேசத்திற்கும் இருக்கும் ஸம்பந்தமானது இந்த ச்லோகத்தில் வெளியிடப்பட்டது.

2. தே - (கேட்காமலிருந்த) உனக்கு என்ற அர்த்தம். ந அன்யதா - நீ சொன்ன காரணங்களுக்காக அல்ல. அவை உனக்கே அஸ்வாரஸ்யங்களாகத் தோன்றிவிட்டனவே! என்ற தாத்பர்யம். பக்த்யா - பக்திபூர்வகமாய், தஸ்மாத் - பக்திபூர்வகமான ப்ரச்னம். இல்லையென்ற இடைபூறும் சேர்க்கப்பட்டதாம், தத் - லலிதா காமஸஹஸ்ரம்.

ब्रूयाच्छिष्याय भक्ताय रहस्यमपि देशिकः ।
अवक्तव्यं न देयं स्यादभक्ताय कदाचन ॥ १३

न शठाय न दुष्टाय नाविश्वासाय कर्हिचित् ।
श्रीमातृभक्तियुक्ताय श्रीविद्याराजवेदिने ॥ १५

14. ப்ரூயாத் சிஷ்யாய பக்தாய
ரஹஸ்யமபி தேசிகः ।
பவேத் ந ப்ரதேயம் வ்யயாத்
அபக்தாய கதாசன ॥

15. ந சடாய ந துஷ்டாய நாவிச்வாஸாய கர்ஹிசித்

குருவானவர் ரஹஸ்யமான விஷயத்தையும் பக்தியுள்ள சிஷ்யனிடத்தில் சொல்லலாம். அதைத்தவிர உன்னுடைய [illegible] லாதவனிடம் ஒருபோதும் சொல்லப்படக்கூடாது. [illegible] திலும், துஷ்டனிடத்திலும், நம்பிக்கையில்லாதவனிடத்திலும் போதும் சொல்லப்படக்கூடாது.

1. கதம்வம் தெரிந்துகொள்ளவேண்டுமென்ற ஆவலோடு கூடிய சிஷ்யர்களுடன் குருவானவர் இருந்தார்களாம். [illegible] யன் ஏதாவது ரஹஸ்யமான விஷயத்தைத் தனக்குச் சொல்ல வேண்டுமென்று பிரார்த்திக்கலாம். அப்போது அதில் [illegible] மற்றவர்களும் சிஷ்யர்களாக இருக்கலாகாது. ஆகையால் அந்த சிஷ்யனுக்குத் தனியாக (இதையன்றி இல்லாத இடத்தில்) உபதேசம் செய்யவேண்டுமென்பதை 'சிஷ்யாய' என்ற பதத்தில் குறிக்கப்பட்டது. (உபதேசம் செய்யுமிடத்தில் அந்த சிஷ்யன் மட்டும் தான் இருப்பதைச் சொல்லாமல்...)

2. இவ்விதம் உபதேசம் செய்யும் விஷயத்தைச் சொல்லிவிட்டுப் பிறகு அகஸ்த்யர் தான் திரும்பவும் மற்றவர்களுக்கு உபதேசம் செய்யும்போது அதின்படி நடந்துகொள்ளவேண்டுமென்பதை ஹயக்ரீவர் சொல்லுகிறார்.

3. 'சிஷ்யாய பக்தாய'—இதிலிருந்து சிஷ்யன் கேட்டாலும் அவன் பக்தியில்லாதவனாயிருந்தால் உபதேசம் செய்யக்கூடாது என்று ஏற்படுகிறது. மேலும் பக்தியிருந்தும், கேட்கும் ஸாமர்த்தியமில்லாததினால் கேட்காதிருக்கும் சிஷ்யனுக்கு (அவன் கேட்காவிட்டாலும்) உபதேசம் செய்யலாமென்பதும் ஸித்திக்கிறது.

4. அபக்தன் (பக்தியில்லாதவன்) யார் என்பதைச் சொல்லும் சுருதி வாக்யத்தை அநுஸரித்து அவனுடைய லக்ஷணங்களை மேலே சொல்லுகிறார். 'ந சடாய ந தஷ்டாய ந அனிக்வாஸாய' என்று.

5. 'வித்யா ஹ வை ப்ராம்ஹணம் ஆஜகாம, கோபாய மா சேவதிஷ்டே ஹ்ருமஸ்மி | அஸூயக தாயான்ருஜவேயதாய ந மா ப்ரூயா, வீர்யவதீ தே ததா ஸ்யாம் ||' என்பது சுருதிவாக்யம். (வித்யையானது ப்ராம்ஹணனிடம் வந்து என்னை நீ ரக்ஷிப்பதாக வைத்துக் காப்பாற்று. உனக்கு நான் எதையும் விகாரத்தைக் களஞ்சியமாக இருக்கிறேன். என்னை நீ அஸூயைபுள்ளவனுக்கும், ஸத்யமில்லாதவனுக்கும், சரளமில்லாதவனுக்கும் சொல்லாதே. அப்போதுதான் நான் வீர்யத்தைத் தரவல்லதாயிருப்பேன், என்று சொன்னதாக சுருதியில் சொல்லப்பட்டது.)

6. மேலேவந்த சுருதிவாக்யத்தில் சொல்லப்பட்ட அபக்தனென்பவனை இங்கு சடனென்றும், அஸூயகனென்பவனை இங்கு தஷ்டனென்றும், அன்ருஜுவை அனிக்வாஸனென்றும் சொல்லப்பட்டது. தான் விஷயத்தைக் குரு மூலமாகவே தெரிந்துகொண்டதோடு நிற்காமல், அந்த ஞானத்தை தெரிந்த விஷயமென்றுவந்து, இப்போது குருவினிடம் [illegible] பெற்றதோடு தன் தான் தெரிந்துகொண்ட [illegible] புயல்கிறவனை சடனென்றும் [illegible] குருவினிடம் விஷயத்தைத் தெரிந்துகொண்டதை [illegible] மாகக் காட்டியும் அவர் சொல்லியதை [illegible] தாவதிக்காதவனை [illegible] மாற்றும், அஸூயகனென்றும் சொல்லியதில் [illegible] பட்டவையெல்லாம் [illegible] வனை, அனிக்வாஸனென்றும், அவர் [illegible] வனை. (அல்லது. அபக்தன்—அந்த: [illegible] பக்தியில்லாதவன் என்பதையே இங்கு தஷ்டன் என்றும் சொன்னதாகவும் சொல்லலாம்.)

उपासकाय शुद्धाय देयं नामसहस्रकम् ।
यानि नामसहस्राणि सद्य: सिद्धिप्रदानि वै ॥ १६
ஸ்ரீ மாத்ரு பக்தி யுக்தாய
ஸ்ரீ வித்யா ராஜ்ஞீ வேதினே ॥

16. உபாஸகாய சுத்தாய தேயம் நாமஸஹஸ்ரகம் ।

ஸ்ரீ மாதாவினிடத்தில் பக்தியுள்ளவனும், ஸ்ரீ வித்யா ராஜ்ஞித் தைத் தெரிந்தவனும், உபாஸகனும், சுத்தனுமாக இருப்பவனுக் குத்தான் இந்த ஸஹஸ்ரநாமத்தைக்கொடுக்கலாம் (சொல்லலாம்).

1. முந்திய ச்லோகத்தில் உபதேசத்திற்கு அர்ஹமில்லா தவர்களைப் பற்றிச் சொல்லிவிட்டு, ஸம்பிரதாயமான ஒரு தொடர்ச்சி யாக வராமல் போய்விடப்போகிறதே என்பதற்காக இந்த ச்லோ கத்தில் உபதேசத்திற்கு அர்ஹமாயிருப்பவர்களைப்பற்றிச் சொல் லப்பட்டது.

2. பக்தி தந்த்ரத்தில் 'ஸா பராநுரக்திரீச்வரே' என்பது முதலான அதிகாரணங்களில் நிர்ணயிக்கப்பட்ட லக்ஷணங்களோடு கூடிய சித்த வ்ருத்திக்கு பக்தியென்று பெயர். அப்படிப்பட்ட பக்தியுடையவனை 'ஸ்ரீ மாத்ரு பக்தியுக்தாய' என்று சொன்ன தினால் பக்தியில்லாதவர்களைத் தள்ளப்பட்டது.

3. கேவலம் பக்திமட்டுமிருந்தால் போதாதென்பதைக் குறிப்பதற்காக, பின்னும் சில விசேஷணங்கள் சொல்லப்பட்டன. ஸ்ரீ வித்யா ராஜ்ஞியான பரந்ச திசியை குருமுகமாக அறிந்திருக்க வேண்டும். நித்ய, நைமித்திகங்களான கர்மாக்களை அநுஷ்டிப்பதின் மூலமாக சித்தசுத்தி யோடு அதே பரதேவதையிடம் மனஸ்திரத் தன்மையைக்கு உபாஸ்தியென்று, அப்படித உபாஸ்தியுடையவனை உபாஸகனென்றும் சொல்லப்படும். சுத்தனென்பதிலும் பாவம் முதலான தோஷங்களில்லாதவனாக சொல்லப்பட்டது.

4. இந்த ஸஹஸ்ர நாமமானது மிகவும் புராதனமானது, மிகவும் முக்யமான தாலும், அதிலுள்ள அர்த்தங்களிடம் ப்ரீதி ஏற்படுவதினால் அத்யாவச்யமான தாலும், அதை உபதேசம் செய்யும் விஷயத்தில் மேலே சொன்ன நிர்ப்பந்தங்கள் ந்யாயமானவை என்று (நாமங்களின் ஆரம்பம் வரையிலுள்ள) மேலே வரும் ச்லோகங்களில் காட்டுகிறார்.

तन्त्रेषु ललितादेव्यास्तेषु मुख्यमिदं मुने ।

யாணி நாமஸஹஸ்ரஸ்ய ணி ஸ்யாம்ய:

ஸிந்திப்ரதாணி ஸை

17. நந்த்ரேஷு லலிகா தேவ்யா:

தேஷு முக்யமிதம் முனே |

ஹே முனே! தந்த்ரங்களில் உடனே ஸித்தியைக் கொடுப்ப தாகச் சொல்லப்பட்ட ஸஹஸ்ர நாமங்களில் லலிகா தேவியின் இந்த ஸஹஸ்ரநாமமானது முக்யமானது.

1. அம்பாளுடைய நாம ஸஹஸ்ரங்கள் கோடி க்கணக் கானவை என்பதாக

'கோடி நாம ஸஹஸ்ர ஸ்ரீ தேவ்யா: ஸ்ரீ குப்தாயா:'

என்று இங்கு ஸஹஸ்ரநாமத்திலேயே சொல்லப்பட்டிருக்கிறது. அவை ஒவ்வொரு கல்பங்களிலும், பிரளயங்களிலும் காணப்படுகின்றன. அவைகளைக்குறித்து உடனே பலச்ருதியில் சொல்லப்பட்டிருப்பதாக, பிற்கால ஸஹஸ்ர நாமங்களைப்பற்றி கொஞ்சமும் சொல்லாதிருப்பதால்

'பிற்கால ஸஹஸ்ரநாமங்களைவிட முன்னால் ஸஹஸ்ரநாமம் இருந்தது'

என்று சொல்லப்பட்டது. இந்த பிற்கு ஸஹஸ்ர நாமங்களின் பெயர்கள் அந்தந்த ஸஹஸ்ரநாமத்தின் பெயர்களிலும் முதல் பாதி அக்கரங்களைச் சேர்த்து,

'விஷ்ணோ ஸஹஸ்ரநாம ஸ்ய, சிவ, சிவா, ஸ், ஸஹ, ஸ்ர, ஸ, ம்ய |'

என்பதாகச் சொல்லப்பட்டது. அதாவது, விஷ்ணு, சிவா, ஸஹஸ்ரி, லக்ஷ்மீ, சரபீ, பாலா, லலிகா, பராஸரா இவைகளின், ஸஹஸ்ரநாமங்கள். அவற்றிற்குள் முதல் லலிகா ஸஹஸ்ர நாமத்திற்கு மட்டும் இங்கு பெயர் சொல்லி

श्रीविद्यैव तु मन्त्राणां तत्र नामसहस्रिका ॥ १७

पुराणां श्रीपुरमिव शक्तीनां ललिता यथा ।

श्रीविद्योपासकानां च यथा देवो वरः शिवः ॥ १८

तथा नामसहस्रेषु वरमेतन्नरर्षभ ।

ஸ்ரீ வித்யைய நாமங்களாலும்

நாம் நாமஸஹஸ்ர

18. புராணம் ஸ்ரீபுரமிவ சக்தீனும் லலிதா யதா |
ஸ்ரீ வித்யோபாஸகானும் ச
யதா தேவோ ஹர: சிவ: ||

19. ததா நாம ஸஹஸ்ரேஷு
வரமேதத் ப்ரகீர்த்திதம் |

ஸமஸ்தமான மந்த்ரங்களுக்குள் ஸ்ரீ வித்யை எப்படி ப்ரதானமோ, அந்த ஸ்ரீ வித்யையின் பேதங்களிலும் காதி என்று சொல்லப்படும் மந்த்ரமானது ப்ரதானமோ, புரங்களில் ஸ்ரீபுரம் எப்படியோ, சக்திகளுக்குள் லலிதை எப்படியோ, ஸ்ரீ வித்யையின் உபாஸகர்களுக்குள் பரமசிவன் எப்படி ச்ரேஷ்டமானவரோ, அதேமாதிரி, ஸஹஸ்ர நாமங்களில் இதுதான் முக்யமானதென்று சொல்லப்பட்டிருக்கிறது.

1. புருஷ தேவதையைக் குறித்து 'மந்த்ரம்' என்றும், ஸ்த்ரீ தேவதையைக் குறித்து 'வித்யை' என்றும் சொல்லப்படுகிறது. இவ்விதம் மந்த்ரம், வித்யை என்பவைகளின் பேதமிருந்தபோதிலும், மந்த்ரங்களுக்குள் ஸ்ரீ வித்யையானது ச்ரேஷ்டமானது என்று சொன்னதற்கு காரணம், ஸ்ரீ வித்யையின் ஸ்வரூபம் ஸ்துதிக்கப்படும் விதமானது சில, சக்திகளின் ஸ்வரூபம் ஸ்துதிப்பதால், ஸ்ரீ வித்யையும் வித்யை, மந்த்ரம் இந்த இரண்டுமாக இருக்கிறது என்பது.

2. இந்த காரணத்தினாலே தான் 'அம்பாதேவி த்யானம் செய்யும்போது ஸ்திரமான புருஷ ரூபமாகவும், ஸ்த்ரீ ரூபமாகவும் அல்லது நிஷ்களமாகவும் இருப்பதாக த்யானம் பண்ண' வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது.

'பும் ரூபம் வா ஸ்மரேத் தேவி ஸ்த்ரீ ரூபம் வா விசிந்தயேத்,
அதவா நிஷ்களம் த்யாத்வா ஸச்சிதானந்த மாப்நுயாத் ||'

இதை அனுஸரித்து (இந்த ஸஹஸ்ரநாமம் போன்று) மஹாத்ரிபுரஸுந்தரியை உபாஸிக்கும் மந்த்ரங்களும் ஸ்த்ரீ, பும் தேவதாரூபமுடையவையாக இருக்கின்றன. உதாரணமாக, இந்த ஸஹஸ்ரநாமத்தின் ஆரம்பத்தில் 'ஸ்ரீமாதா' என்பது முதலான பும்லிங்க நாமங்களும், 'ஸ்ரீ மஹாராஜ்ஞி' என்பது முதலான ஸ்த்ரீலிங்க நாமங்களும், 'பரம் ஜ்யோதி:' முதலான நபும்ஸக லிங்க நாமங்களுமிருக்கின்றன.

3. மஹாவாக்யங்களுடைய கணக்குப்படி அனைவருக்குப் பெயர் உண்டு. ஒருவருடைய பெயர்

அக்ஷரங்களுடையது கர்த்தரி, மூன்று முதல் ஒன்பது அக்ஷரங்களுடையவை பிரதம, பத்து முதல் இருபது அக்ஷரங்களுடையவை மத்யம, அதற்கு மேற்பட்டவைகளெல்லாம் மாலா.

'மந்த்ர: ஏகாக்ஷர: பிண்டே: கர்த்ரர்யாம் த்ர்யக்ஷர: மத: |
வர்ணத்ரயம் ஸமாரப்ய ஷடவர்ணாவதி ப்ராஜக: ||
தசாக்ஷராவதி ப்ரோக்தா யாவத் விம்சதி மந்த்ரக: |
ததஸ்தாவத்பவேத் மாலா: ததஸ்தோ ஸ்தவ உச்யதே ||'
(நித்யாஷோடசார்ணவம்)

இதிலிருந்து பஞ்சதசியான ஸ்ரீ கூட த்ரயாக்ஷரமாக இருக்கலாம், (பதினைந்து ஸ்வரங்களோடு கூடியது) பதினைந்து அக்ஷரங்களுடைய காரணத்தால், மந்த்ரம் என்று சொல்லப்படுகிறது. இவை மந்த்ரங்களுக்குள் ஸ்ரீவித்யையான பஞ்சதசியாக இருப்பதால் என்று சொல்வதானது, இந்த அர்த்தத்திலும் பொருந்தலாமென்று சொல்லப்படுகிறது.

4. காதி: - என்று அக்ஷரத்தை தன் பெயரில் முதலாக உடையவள். காயி சக்தி என்று சொல்லலாம். அல்லது தந்த்ர காஜத்தில்,

ஸர்க்ஷுத்ர பவந்ர்யாம ஸ சக்தி: ஸர்வஸம்பதி

என்று சொல்லப்பட்ட காதி என்ற சக்தியாக இருப்பவள் என்றும் சொல்லலாம்.

5. சற்முன்னே சொல்லப்பட்டபடி. ஸ்ரீ வித்யையின் பெருமைகள் பன்னிரண்டில் (கா என்ற அக்ஷரத்தை முதலாக உடைய) காதி என்பதும், (ஹ்ரீ என்ற அக்ஷரத்தை முதலாக உடைய) ஹ்ரீகாதி என்பதும் முக்யமானவை. அவ்விரண்டிலும் குள்ளமான காதி என்பது காம முக்யமானதில் இந்த விஷயம் சொல்லப்பட்டது.

6. காதி வித்யையான ஸ்ரீ அதன் வித்யை ஸ்ரீ ஸூக்தத்தில்,

'காம: யோனி: கமலா வஜ்ரபாணி:
குஹா ஹஸா மாதரிஶ்வாப்ரமேந்த்ர: |
புனர்குஹா ஸகலா மாயயேதி
புருஷ் ஸாகோ விச்வமாதாஜ்ஜ்ரவித்வான் ||'
என்ற ருக்கில் குறிக்கப்பட்டிருக்கிறது.

7. வைவஸ்வத மந்வந்தரங்களில் வைவஸ்வத வித்யைகள் குறிக்கப்பட்டிருந்தாலும், அவைகளால் உபாஸிக்கப்படும்

ஸதவம் ஒன்றேறயாதலால், அந்த வித்யைகளரும் ஒன்றே. அயினும் அங்கங்க வித்யையின் உபாஸகர்களுடைய ருசியை அனுஸரித்து, அவர்களுக்கு தாரதம்யம் இருப்பதை இங்கு 'தக்ஷ காதி பரா' என்பதினால் சொல்லப்பட்டது. காதி வித்யையின் தீக்ஷையைப்பற்றி இங்கு சொல்லப்பட்டிருப்பதுடன் அதற்கு பல காரணங்களுமிருக்கின்றன. இவற்றைப்பற்றி பாஸ்கரராயர் விஸ்தாரமாக பரிசீலனை செய்திருக்கிறார். ஜிஜ்ஞாஸுக்கள் அவற்றில் பார்த்துக்கொள்ளலாம்.

8. உபாஸிக்கப்படும் தேவதையோடு அபேதத்தை பாவிப்பதே அடைவதுதான் உபாஸனையின் பரமபல னென. பரமசிவன் எப்போதும் அம்பாளுடன் ஸாமரஸ்ய பாவத்தையடைந்து அபேதமாயிருப்பதால், அவரை ஸ்ரீ வித்யோபாஸகர்களின் முக்ய மானவரென்று இங்கு சொல்லப்பட்டது. சிவரும் அம்பாளை உபாஸிப்பதாக,

'சம்பு: பூஜயதே தேவீம் மந்த்ர சக்தி ஸ்வரூபிணீம் |

என்று சொல்லப்பட்டிருப்பதுடன் குரு மண்டலத்தில் முதலாவதையே ஆதியாகச் சொல்லப்பட்டு மிருக்கிறது. தக்ஷிணாமூர்தான் அவருக்கு , ஆதிகுரு, பரமகுரு என்று சொல்லப்பட்டது.

9. தேவியோடு அபின்னமாயிருப்பதாக, ஸ்ருஷ்டியாதி பஞ்சகாரணம் பண்ணுவதிலும், குருவுக்கு தேவியோடு அபேதமாயிருப்பதாக சொல்லப்படுகிறது. ஆகவே அவ்விதமான அபேதத்தை, ஸாமரஸ்யத்தை, சிவத்திலும் சிவையுடனும் குருவோடு அபேதபாவனை செய்வதன் மூலமாக, அவளுக்கும் தேவியோடு அபேதபாவனை ஏற்படும். உபாஸனையின் முக்ய பலனை அபேதபாவனையான இந்த விதம் குருவின் மூலமாகவேதான் ஏற்படக்கூடியதென்பதை நினைத்தாத்த மாஹாத்ம்யத்தை இங்கு,

'ஸ்ரீ வித்யோபாஸகாநாம் ச யதா தேவீ பர: சிவ: |

என்பதினால் குறிக்கப்பட்டது.

10. சிவன் என்று சொல்லப்பட்டவர் பரமசிவன் (குணியான) ருத்ரன் முதலானவர்களில் வேறுபடுத்துவதற்காக, 'பர: சிவ:'—அதாவது, பரமசிவன் என்று சொல்லப்பட்டது.

यथास्य पठनाद्देवी प्रीयते ललिताम्बिका ॥ १९

अन्यनामसहस्रस्य पाठान्न प्रीयते तथा ।

श्रीमातुः प्रीयते तस्मादनिशं कीर्त्यतेऽसम ॥ २०

ஸஹஸ்ரநாம பாடஸ்ய ப்ரயோஜந ஸம்பந்தி:

19. அஸ்ய நாம ஸஹஸ்ரஸ்ய

பாடநாத் ப்ரயோஜந கதந

ஸ்ரீமாது: ப்ரீதயே கர்மணாம்

அநிசம் கீர்த்தநோபாத் இதம் ॥

லலிதாம்பிகையானவள் (பக்தன்) இந்த ஸஹஸ்ரநாமத்தைச் சொன்னால், ப்ரீதி அடைகிற அளவு, மற்ற நாம ஸஹஸ்ரத்தைச் சொல்வதினால் அடைகிறதில்லை

ஆகையால் (மேலே சொல்லிய காரணங்களினால்) அம்பாளுடைய ப்ரீதி ஏற்படுவதற்காக, இந்த ஸஹஸ்ரநாமத்தையே எப்போதும் கீர்த்தனம் பண்ணவேண்டும்.

1. நாம ஸஹஸ்ரங்களுக்குள் இந்த ஸஹஸ்ரநாமம் முக்யமானதென்ற (முந்திய ச்லோகத்தில்) சொல்லியிருப்பதற்குக் காரணம் இதில் சொல்லப்படுகிறது. அம்பாளுடைய ப்ரீதியை ஸம்பாதிப்பதற்கு, இதற்கு ஸமமான ஸஹஸ்ரநாம (புஸ்தகம்) மாதென்றுமில்லாமையால், இதன் முக்யத்வம் ஏற்படுகிறது

2. 'பதம்' என்பதினால், எல்லையில்லாத ப்ரீதி சொல்லப்பட்டது

3. 'அநிசம் கீர்த்தநோபாத்' என்பதினால், இரவு, பகலான இதை தேவதைகளுடைய நாமஸஹஸ்ரம், மற்ற இரண்டினுக்கும் வேறு இருக்கும் (அபிமானமுடைய) நாமஸஹஸ்ரம் என்றும் சொல்லியாய்

4. இதற்குமேல் நாமஸஹஸ்ரத்தை ஸ்துதி என்ற வகைப்படுத்தி, 'ஸ்ரீமாது: ப்ரீதயே.....கீர்த்தநோபாத் இதம்' என்று சொல்லுகிறார். கிடைக்கவேண்டிய பலன் ஸ்ரீ மாதாவின் ப்ரீதி. அது கிடைப்பதற்கு வழி கர்மாவாய் கீர்த்தனை. அந்த கீர்த்தனத்தில் கர்மாவாக இருப்பது நாமஸஹஸ்ரம். இங்கு நினைவில் வைக்கப்பட்ட விஷயங்கள் இரண்டு. அதாவது அம்பாளுடைய இந்த

நாமஸஹஸ்ரத்தைக் கீர்த்தனம் செய்யவேண்டியது. அதினால் அம்பாளுடைய ப்ரீதியை ஸம்பாதிக்கவேண்டியது. இந்தஇரண்டு விதிகளையும் சேர்த்து, மஹாவாக்யமாக இந்த நாமஸஹஸ்ரத்தின் கீர்த்தனையினால், அம்பாளுடைய ப்ரீதியை ஸம்பாதிக்கவேண்டியது என்று நிர்மானமாக ஏற்படுகிறது.

5. கீர்த்தனம் என்பது வார்த்தைகளை வெளியிட்டுச்சொல்வதான வாசிகத்தையும், அவைகளை மனதினால் ஸ்மரிப்பதான மானஸிகத்தையும் குறிக்கும். நாமங்களைச் சொல்வதினால் ஏற்படுவது மாதிரி, நாமங்களை ஸ்மரித்தாலேயே பலன் ஏற்படுகிறது என்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

6. 'அநிசம்' என்பதினால் உயிருள்ளவரையில் கீர்த்தனம் பண்ணவேண்டுமென்று சொல்லப்பட்டது. ஆகையினால் இந்த நாமஸஹஸ்ரத்தின் கீர்த்தனமானது அக்னிஹோத்ரம் மாதிரி நித்யம், காம்யம், என்ற இருவிதமான ரூபங்களுள்ள கர்மா என்று ஏற்படுகிறது.

இவ்விதம் கேவலம் நாமகீர்த்தனத்திற்கே இருக்கும் பலனைச் சொல்லிவிட்டு அதை இதர கர்மாக்களுடன் சேர்த்து செய்வதினால் ஏற்படும் பலனைப்பற்றி இனி சொல்லுகிறார்.

बिल्वपत्रैश्चकराजे योऽर्चयेल्ललिताम्बिकाम् ।
पद्मैर्वा तुलसीपत्रैरेभिर्नामसहस्रकैः ॥ २१
सद्यः प्रसादं कुरुते तस्य सिंहासनेश्वरी ।

21. பில்வபத்ரை: சக்ரராஜே
யோ²ர்ச்சயேத் லலிதாம்பிகாம் |
பத்மைர் வா துளஸீபத்ரை:
ஏபிர் நாமஸஹஸ்ரகை: ॥

22. ஸத்ய: ப்ரஸாதம் குருதே
தஸ்ய ஸிம்ஹாஸனேச்வரீ |

பில்வபத்ரங்கள், அல்லது தாமரஸபுஷ்பங்கள் அல்லது துளஸீதளங்கள் இவைகளைக்கொண்டு இந்த ஸஹஸ்ரநாமங்களால் லலிதாம்பாளை ஸ்ரீ சக்ரத்தில் யார் அர்ச்சனை செய்கிறானே அப்போது அவனுக்கு ஸிம்ஹாஸனேச்வரியான அம்பாள் உடனே அனுக்ரஹம் செய்கிறாள்.

1. 'தத்ர ஸிம்ஹாஸநேச்வரீ' என்பதற்கு பதிலாக 'ஸ்ரீமத் ஸிம்ஹாஸநேச்வரீ' என்ற பாடாந்தரம் உண்டு.

2. ஏற்கனவே சொல்லப்பட்டபடி தூணை என்பதானது அந்தர்யாகமென்றும் பஹிர்யாகமென்றும் இருவகைப்பட்டிருந்தபோதிலும், இவ்விரண்டுவிதமான பூஜனங்களிலும் பில்வபத்ரங்கள் முதலான ஸாதனங்களிலுல் சக்ர ராஜம் முதலான அதிகரணங்களில்(இடங்களில்) பூஜை செய்யவேண்டியதென்றும் தாத்பர்யம்

3. நாம ஸஹஸ்ரகை:—அர்ச்சனத்தை ஆச்ரயித்திருக்கும் ஆயிரம் நாமங்களின் தீர்த்தனத்திலுல் அம்பாளுடைய ப்ரஸாதமானது ஏற்படுவதாக பாவிக்கவேண்டும். எல்லா மஹிமையும் நாம தீர்த்தனத்திற்குத் தான்.

4. ஸ்ரீ சக்ர பூஜையில் துளஸீ, பில்வபத்ரங்களை உபயோகிக்கக் கூடாது என்பதாக

"துளஸீ பில்வபத்ராணி தாத்ரீபத்ராணி யானி ச
அர்ச்சனே சக்ர ராஜஸ்ய நோபயுஞ்ஜீத தானி ஹி"

என்று ருத்ரயாமளத்தில் சொல்லியிருந்தபோதிலும் இங்கே இந்த ஸஹஸ்ரநாமங்களால் ஸ்ரீ சக்ரத்தில் அர்ச்சனம்செய்து கொண்டு பூஜை செய்வதானது விசேஷமான பலனைத் தருமாகச் சொல்லப்பட்டிருப்பதால், ருத்ரயாமளத்தில் சொல்லப்பட்ட நிஷேதமானது ஸ்ரீ சக்ரத்தில் செய்யப்படும் வேறுவிதமான பூஜைகளைப்பற்றியது என்பது எற்படுகிறது.

5. ஸத்ய: ப்ரஸாதம் குருதே— அம்பாள் உடனேயே ப்ரஸாதத்தைச் செய்கிறாள் என்பதிலுல் பக்தனும் உடனேயே ப்ரஸாதத்தை எதிர்பார்க்கலாமென்றும் ஏற்படுகிறது.

चक्रराजमभ्यर्च्य जप्त्वा पञ्चदशाक्षरीम् ॥ २२
जापान्ते कीर्तयेन्नित्यमिदं नामसहस्रकम् ।
சக்ரராஜ மப்யர்ச்ய
ஜப்த்வா பஞ்சதசாக்ஷரீம்
22. ஜபாந்தே கீர்த்தயேந்நித்யம் நித்யம்
இதம் நாம ஸஹஸ்ரகம் ॥

தினந்தோறும் ஸ்ரீ சக்ரத்தை அர்ச்சித்து பஞ்சதசாக்ஷரியை ஜபம் செய்து அந்த ஜபத்திற்குப் பிறகு இந்த நாமஸஹஸ்ரத்தை சொல்லவேண்டியது.

1. 'ஸ்ரீ மாது: ப்ரீதயே தஸ்மாத் அர்சம் கீர்த்தயேத்'— அம்பாளுடைய ப்ரீதிக்காக இதை எப்போதும் சொல்லவேண்டும் என்று ஏற்கனவே சொன்னதில் அம்மாதிரி உயிருள்ளவரையில் கீர்த்தனம் செய்வது எப்படியென்று இதில் சொல்லப்பட்டது.

2. தினந்தோறும், அர்ச்சனை செய்து அதற்குப் பிறகு நிர்யஜபம் முடிந்த பிறகு நாமஸஹஸ்ர கீர்த்தனம் ஒரு தடவை செய்யவேண்டுமென்று சொல்லப்பட்டது. அர்ச்சனை, ஜபம், நாம கீர்த்தனம் இவை ஒவ்வொன்றும் மட்டும் செய்தால் தனித் தனியான பலன் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே இவை மூன்றும் செய்தால் எது எதற்குப் பிறகு செய்யவேண்டுமென்ற காலத்தின் சேர்க்கையானது மட்டும் இங்கு சொல்லப்பட்டதே தவிர, ஒன்றைச் செய்துவிட்டுத்தான் அதற்குமேல் மற்றொன்றைச் செய்யலாமென்பது சொல்லப்படவில்லை. ஒருக்கால் முதலிரண்டும் செய்யமுடியாமலிருந்தால் நாமகீர்த்தனம் மட்டும் செய்யலாமா, அப்படிச்செய்தால் என்ன பலன் என்பதை அடுத்தாற்போல் சொல்லப்படுகிறது.

जपपूजाद्यशक्तोऽपि पठेन्नामसहस्रकम् ॥ २३
साङ्गार्चने साङ्गजपे यत्फलं तदवाप्नुयात ।

ஜப பூஜாத்யசக்தோஅபி
படேந்நாம ஸஹஸ்ரகம்
24. ஸாங்கார்ச்சநே ஸாங்க ஜபே
யத் பலம் தத் அவாப்நுயாத் ॥

ஜபம், பூஜை முதலானவைகளைச் செய்ய அசக்தனாயிருந்தாலும் இந்த நாமஸஹஸ்ரத்தைச் சொல்லவேண்டும். அப்படிச் சொன்னால் ஸமஸ்த அங்கங்களோடு கூடிய அர்ச்சனம், ஜபம் இவைகளைச் செய்வதினால் என்ன பலன் ஏற்படுமோ அந்த பலனை அடையலாம்.

1. ஜப பூஜாதிகளென்பதினால் ந்யாஸம் முதலியவைகளையும் சேர்த்துச் சொல்லப்பட்டன.

2. உபாஸனைக்கு அர்ச்சனம், ஜபம், நாமகீர்த்தனம் இவையெல்லாம் அங்கங்கள். உபாஸனையானது அங்கி. இவையெல்லாம் நித்யகர்மாக்களாகச் சேர்க்கப்பட்டிருக்கையில் அசக்தத்தினால்

ஜடாதிகளைச் செய்யமுடியாமலிருக்கும்போது (அவைகளைக்கு அடுத்ததான காலம் என்பது எற்படாமலிருந்தாலும்) காமஸங்கீர்த்தனத்தைச் செய்யவேண்டிய காலமென்பது இருப்பதால் அதை அவச்யம் செய்தாகவேண்டுமென்றே இங்கு சொல்லப்பட்டது.

3. ஆனால் இவ்விதம் காமஸங்கீர்த்தனம் மட்டும் செய்தாலே ஜப, பூஜாதிகளின் பலன் எற்படும் என்று சொன்னதை சக்தர்களைக் குறித்தா, அசக்தர்களைக் குறித்தா என்று விசாரிக்கும்போது, சக்தனாயிருந்தால் எல்லாம் நித்யகர்மாவானதால் செய்துதான் தீரவேண்டும். அசக்தனாயிருந்தால் அவன் முழுமனதாலும் செய்யமுடியாது. செய்யும்படி சொல்வதும் நியாயமாயிருப்பதால் பிரயோஜனமுமற்ற காரியம். ஆகவே இந்த யாவையும் பற்றி என்ன சாஸ்—ந்யாஸம், அர்ச்சனை, ஜபம், காமகீர்த்தனம் இவைகளில் ஒன்றைத்தான் செய்வதற்கு சக்தியிருந்தால் மனதை ஒருமுகப்படுத்தி எதைச் செய்வதானாலும் ஆரம்பத்தில், அப்போதைக்கு, மற்ற மூன்றையும் விட்டுவிட்டு, காமகீர்த்தனத்தை மாத்திரம் செய்தால் மற்ற மூன்றையும் செய்வதால் பலனும் கிடைக்குமென்று சொல்லப்பட்டதிலும் இதனுடைய ப்ரதான்யமானதை விசேஷமாகவே இதில் சொல்லப்பட்டது.

5. அங்கங்களோடு கூடியது யாகம். அதனால் ஜபத்தோடு கூடிய ப்ரதான தேவதையின் ஸ்தோத்ரமானது யாகத்தை

சனம் என்னும், குல்லுகா, ஸேது, மஹாஸேது ஜபங்களுடன் கூடிய ஸ்ரீவித்யா ஜபத்திற்கு ஸாங்க ஜபமென்னும் பெயர்.

6. நாமகீர்த்தனத்தினல் ந்யாஸம், ஸாங்கார்ச்சனம், ஸாங்கஜபம் இவைகளின் பலன் கிடைப்பதற்கு, அவ்விதமான பலனும் கிடைக்கவேண்டுமென்ற உத்தேசத்துடன் நாமகீர்த்தனம் செய்ய வேண்டுமென்பது தாத்பர்யம்.

இதற்கு மேல், நாம கீர்த்தனமானது உபாஸனைக்கு அவைகல்பிகமான (விகல்பமில்லாத) அங்கமென்பது சொல்கிறது.

उपासने स्तुतीरन्याः पठेदभ्युदयो हि सः ॥ २४
इदं नामसहस्रं तु कीर्तयेन्नित्यकर्मवत ।
உபாஸநே நஸ்துதீ ரந்யாः
படேத் அப்யுதயோ ஹி ஸः |
25. இதம் நாம ஸஹஸ்ரம்து
கீர்த்தயேத் நித்யகர்மவத் ॥

அம்பாளுடைய உபாஸனையில் இதர ஸ்துதிகளையும் சொல்லலாம். அப்படிச்சொன்னல் விசேஷ பலன் உண்டு. ஆயினும் (நித்ய கர்மாவைப்போல்) இந்த நாம ஸஹஸ்ரத்தை கீர்த்தனம் செய்யவேண்டும்.

1. இந்த இதர ஸ்துதிகளும் உபாஸனையின் அங்கங்கள் தான். இவை த்ரைலோக்ய மோஹன கவசம் முதலியனவை. இவைகளையும் சொல்லாவிட்டால் (அங்கங்கள் குறைந்தனல் ஏற்படக்கூடிய) தோஷம் யாதொன்றுமில்லை. இவ்விதமான ஸ்தோத்ரங்களைப்பற்றி அவைகளைச் சொன்னலொழிய ஸித்தி ஏற்படாது என்னும்,

'நவலக்ஷ ப்ரஜப்தாபி ஸ்ய வித்யா ந ஸித்யதி |'

என்பது முதலாக அந்தந்த ப்ரகரணங்களில் சொல்லப்படுவதில், ஸித்தி என்பது அந்தந்த ஸ்தோத்ரத்தைச் சொல்வதினல் உண்டாகும் அப்யுதயத்தோடு கூடிய வித்யா பலன் என்னும் அர்த்தமே தவிர, அவைகளைச் சொல்லாமல் ஸ்ரீ வித்யையை மட்டும் ஜபித்தால் பலனே ஏற்படாது என்னும் அர்த்தமல்ல.

2. இந்த ஸஹஸ்ரநாம கீர்த்தனமானது அவ்விதமான அங்கமல்ல, ஸந்த்யாவந்தனம் முதலிய நித்யகர்மாவைப் போன்

றது என்று சொல்லப்பட்டது. அதை எப்படி நித்யமும் செய்வதில் விட்டுவிடமுடியாதோ, அதே மாதிரி இதுவும் விட்டுவிட முடியாது என்று தாத்பர்யம். ஆயினும் நித்யகர்மாவைவிட்டோமானுக்கையில் அதுமாதிரி க்ரத்வர்த்தமாக மட்டுமிராமல் காமநிமித்தனமானது புருஷார்த்தமாயுமிருப்பதால் உபய ரூபமானதென்பதை மறக்கக்கூடாது.

3. [காதிர வ்ருக்ஷத்தில் (கருங்காலியில்) செய்யப்பட்ட யூபத்தை வைத்துக்கொண்டு க்ரது (யாகம்) செய்யவேண்டுமென்று ஒரு ச்ருதி வாக்யமிருக்கிறது. இதற்கு வேறு ப்ரமேயானம் இங்கு சொல்லப்படவில்லையாகையால் அது க்ரத்வர்த்தமென்று சொல்லப்படும். இன்னுமொரு இடத்தில் ஸ்ரீயை விரும்புகிறவன் காதிர யூபத்தைக்கொண்டு யாகம் செய்யவேண்டுமென்ற ச்ருதிவாக்யமிருப்பதால் அது புருஷார்த்தமென்றும் சொல்லப்படும். ஆகவே காதிர யூபத்தைக்கொண்டு யாகம் செய்தால் க்ரத்வர்த்தம், புருஷார்த்தம் இரண்டும் ஆகும். பொதுவாக நித்ய கர்மாக்களை க்ரத்வர்த்தமென்று சொல்லப்படும். நாம ஸங்கீர்த்தனமோ க்ரத்வர்த்தம், புருஷார்த்தம் என்ற உபயரூபமாகவுமிருப்பதாக இங்கு சொல்லப்பட்டது.]

தேவியின் உபாஸனையில் ஸ்ரீ சக்ர பூஜனம், ஸ்ரீ வித்யா ஜபம், இந்த ஸஹஸ்ரநாமகீர்த்தனம் இவை முன்றும் விடமுடியாதவை அங்கங்கள் என்பதைக் குறிப்பிடுத்திக் திரும்பவும் சொல்லுகிறார்:—

चक्रराजार्चनं देव्या जपो नाम्नां च कीर्तनम् ॥ २५
भक्तस्य कृत्यमेतावदन्यदभ्युदयं विदुः ।

சக்ரராஜார்ச்சநம் தேவ்யா:
ஜபோ நாம்நாம் ச கீர்த்தநம் ।
25. பக்தஸ்ய க்ருத்ய மேதாவத்
அந்யத் அப்யுதயம் விது: ।

அம்பாளுடைய ஸ்ரீ சக்ரார்ச்சனம், ஜபம் இந்த நாமங்களின் கீர்த்தனம் இவை வரையில் உபாஸகனுக்கு அவச்யம் செய்யவேண்டியவை. மற்றதெல்லாம் (சேயஸ்கரம் அநுஷ்டிக்கத்தக்கதாக) செய்கிறவை) என்று அறிவார்கள். (அர்யவோன்றும்).

இம்மாதிரி நாமகீர்த்தனத்தை சக்ர பூஜார்ச்சனம், ஸ்ரீவித்யையின் ஜபம் இவைகளோடு சேர்த்துச் சொல்வதினால் இவை

களுக்கு அது ஸமமானதென்று தோன்றக் கூடிய ஸந்தேஹ மானது அடுத்தாற்போல் பரிஹரிக்கப்படு

भक्तस्यावश्यकमिदं नामसाहस्रकीर्तनम् ॥ २६
तत्र हेतुं प्रवक्ष्यामि शृणु त्वं कुम्भसंभव।

பக்தஸ்யாவச்யகமிதம்
நாமஸாஹஸ்ர கீர்த்தநம் ॥

27 தத்ர ஹேதும் ப்ரவக்ஷ்யாமி
ச்ருணு த்வம் கும்பஸம்பவ |

இந்த நாமஸஹஸ்ரத்தின் கீர்த்தனமானது பக்தனுக்கு அவச்ய மான கார்யம். அதற்குக் காரணத்தை விரிவாகச் சொல்லுகிறேன். கேள். ஹே அகஸ்த்ய !

1. 'ஆவச்யகம்' என்பது மேலே சொல்லிய பூஜை, ஜபம் இவைகளையும்விட அவச்யம் என்ற அர்த்தம். அதற்குக்காரணம், ஏற்கனவே சொல்லப்பட்டபடி, நாம ஸங்கீர்த்தனத்தினாலேயே அந்த பூஜை, ஜபம் இவைகளுடைய பலன் ஏற்படுகிறது என்பதை.

2. அம்மாதிரியான விசேஷ பலன் கொடுக்கக்கூடிய மஹிமையானது இந்த ஸஹஸ்ரநாமத்திற்கு எப்படி வந்தது என்பதைக் காட்டுவதற்காக பூர்வ வ்ருத்தாந்தத்தைச் சொல்லி, அதின் மூலமாக இந்த ஸஹஸ்ரநாமத்தில் ப்ரதிபாதிக்கப்படும் தேவதையான லலிதாம்பிகையானவள் ஸமஸ்தமான சிவசக்தி கணங்களாலும் உபாஸிக்கத் தகுந்தவளென்றும், அதினால் ஸர்வோத்தமமானவளென்றும் அறியச்செய்கிறார்.

இப்போர்ப்பட்ட மஹத்தான வ்ருத்தாந்தத்தைத் தான் மிக வாகச் சொல்லப்போவதால் 'ப்ரவக்ஷ்யாமி' என்றும், அதை வெறும் புகழ்ச்சி (அர்த்தவாதம்) என்று அகஸ்த்யர் நினைத்து உபேக்ஷையாக இருந்து விடக்கூடாது என்று எச்சரிக்கையாக 'ச்ருணு' என்றும் ஹயக்ரீவரால் சொல்லப்பட்டது. தான் சொல்லப்போவதில் அகஸ்த்யர் தன் கவனத்தைச் செலுத்த வேண்டும் என்பது அவருடைய உத்தேசம்.

पुरा श्रीललितादेवी भक्तानां हितकाम्यया ॥ २७
वाग्देवीर्वशिनीमुख्याः समाहूयेदमब्रवीत ।

டிபா டிரீ லலிதா தேவீ
டக்தாநாம் ஹிதகாம்யயா

28. வாக்தேவீர் வசிநீமுக்யா:

லமாஹ ஸ்யேதமப்ரவீத்

முன்னொருகாலத்தில் ஸ்ரீ லலிதா தேவியானவள் தன் பக்தர்களுக்கு ஹிதத்தைச் செய்யவேண்டுமென்கிற விருப்பங்கொண்டு வசினீ முதலான வாக்தேவிகளைக் கூப்பிட்டு பின் வருமாறு சொன்னாள்.

1. முதலாகச் சொல்லப்படுகிறவள் முக்யா. வசினியை முக்யையாக உடையவர்கள் வசினீ முக்யா: — அருணா, பாஷிணீ முதலான வாக்தேவிகள். இவர்கள் பெயர் வசினீ, காமேச்வரீ, மோதினீ, விமலா, அருணை, ஜயினீ, ஸர்வேச்வரீ, கௌலினீ. இவர்களைச் சேர்த்து 'வசின்யாத்யஷ்டகம்' என்று சொல்லுவார்கள். இவர்கள் வாக்குக்கு அதிஷ்டான தேவதைகள்.

2 அவாட்க மனஸ்க காமகலாரூபா (மனம் [illegible] மடைந்து, அதாவது, விருப்பமேவண்டிய [illegible] மல்) இருக்கும் அம்பாள் இந்த ஸ்தோத்ரத்தை என் சொல்லி விருப்பமேவண்டுமென்பதற்கு 'பக்தானாம் ஹிதகாம்யயா' என்பதினால் ஸமாதானம் சொல்லப்பட்டது.

3. வசினீ முக்யா: என்பதினாலேயே வாக்தேவிகளுக்கு முக்யமாதலால் வாக்தேவீ: என்று இன்னொரு நாமாவை சொல்லியதற்குக் காரணம் என்னவென்றால்— தேவ: (தேவீ) என்பது மானுஷ தேவதை என்பதினின்றும் வேறு படுத்த. இந்த ஸ்தோத்ரம் என்பதினால் க்ரீடை, விஜிகீஷா (ஜயிக்க விரும்புவது), ஸ்துதி, வ்யவஹாரம், காந்தி, கதி முதலியவைகள் குறிக்கப்பட்டாலும் என்பதாலும் குறிக்கப்பட்டாலும் தேவதைகளுக்கு மனஸ் கிடையாதாகையால் இங்கு அது சேர்க்கப்படவில்லை. வாக்கினையும் க்ரீடிப்பவர்கள், ஜயிக்க விரும்புகிறவர்கள், ப்ரகாசிப்பவர்கள், ஸ்துதிப்பவர்கள், என்று இந்த நீ ஈயில் சொல்லப்பட்டதால் வாக்தேவீ: என்று சொன்னதில் இவையெல்லாம் குறிக்கப்பட்டன.

4. இப்படி வாங்மயமான விஷயத்தில் அவர்கள் பட்டுப்போல் ஸ்வாதந்த்ரியமுடையவர்களாகையால், தான் செய்யச்சொல்லும்

போகும் ஸ்தோத்திரத்தைப் பற் அம்பாள் அவர்களிடம் சொன்னது.

वाग्देवता वशिन्याद्याः शृणुध्वं वचनं मम ॥ २८

வாக்தேவதா வசின்யாத்யா:

ச்ருணுத்வம் வசனம் மம ॥

ஹே வசினீ முதலான வாக்தேவதைகளே! நான் சொல்வதைக் கேளுங்கள்.

1. நீங்கள் வாக்தேவதைகளாயிருப்பதால் என்னுடைய வசனத்தைக் கேளுங்கள். அதாவது, நீங்கள் வாக்குக்கு ஈச்வரிகளாக இருப்பதினால் நான் சொல்வதைக்கேட்பதற்கு உங்களுக்கு மட்டும் தான் அதிகாரம் உண்டு என்று தாத்பர்யம். இதனால் அவர்கள் ப்ரோத்ஸாகப்படுத்தப்படுகிறார்களென்பதும் அறிய வேண்டியது.

வசின்யாதிகள் உபாஸகர்களான தேவதைகளாக இருந்தாலும் அவர்கள் வாகீச்வரிகளாக எப்படி ஏற்பட்டார்கள் என்பது மேலே சொல்லப்படுகிறது.

भवत्यो मत्प्रसादेन प्रोल्लसद्वाग्विभूतयः ।
मद्भक्तानां वाग्विभूतिप्रदाने विनियोजिताः ॥ २९

29. பவத்யோ மத் ப்ரஸாதேந
ப்ரோல்லஸத் வாக்விபூதய: |
மத் பக்தாநாம் வாக்விபூதி
ப்ரதாநே விநியோஜிதா: ॥

நீங்கள் எல்லோரும் என்னுடைய அனுக்ரஹத்தால் விசேஷமாய் விளங்குகிற வாக்விபூதியோடு கூடியிருக்கிறீர்கள். என் பக்தர்களுக்கு வாக்விபூதியைக் கொடுப்பதற்கு (என்னால்) நியமிக்கப்பட்டிருக்கிறீர்கள்.

1. விபூதி என்பது ஐச்வர்யம். வசின்யாதி தேவதைகளுக்கு அம்பாளுடைய அனுக்ரஹத்தால் வாக்கைப் பற்றிய ஐச்வர்யம் கிடைத்ததின்பேரில் அந்த வாக்விபூதியைத் தன் பக்தர்களுக்கும் கொடுப்பதற்காக அவர்களுக்கு அதிகாரம் அம்பாளால் கொடுக்கப்பட்டது.

2. ப்ரோல்லஸத் வாக்விபூதய:- ப்ரகர்ஷத்துடனும் உத்கர்ஷத்துடனும் விளங்குகிற வாக்விபூதியோடு கூடியவர்கள். ப்ரகர்ஷமென்றால் மற்றவைகளைப்போல் இல்லாமல் (அவைகளிடம் உயர்ந்தது) என்றும், உத்கர்ஷமென்றால் ஸர்வோத்தமமான தென்றும் அர்த்தம். அதிலிருந்து, ஸர்வோத்தமமான தேவதையாகிய ஸ்ரீ லலிதாம்பாளுடைய அனுக்ரஹத்தால் கிடைத்த விக்னையையும் ஸர்வோத்தமமாய் இருக்குமாகையால் அவ்விக விக்னையையுடைய வசின்யாதிகளே ஸர்வோத்தமமான ஸ்தோத்ரத்தைச் செய்வதற்கு அதிகாரிகள் என்றும் த்வனிக்கிறது.

3. அம்பாளுடைய அனுக்ரஹத்தினால் வாக்விபூதியை உடையவர்களில் நகுஷி, வாகீச்வரி முதலான தேவதைகளிருக்கையில், அவர்களை ஏன் இந்த ஸ்தோத்திரம் பண்ணுவதில் நியமிக்கவில்லையென்றால், அவர்கள் அம்பாளுடைய பக்தர்களுக்கு ஹிதம் செய்யும் விருப்பத்தோடு வாக்விபூதியைக் கொடுப்பதற்கு அதிகாரம் கொடுக்கப்படவில்லை. அம்பாளுடைய பக்தர்களுடன் வாதம் செய்கிற விபரீதகுணமுடைய வாக்கை ஸ்தம்பனம் (தடை) செய்கிறதற்குத்தான். அவர்களுக்கு அதிகாரம் அம்பாளால் கொடுக்கப்பட்டது. இதைப் பற்றிப் பின்னால் பலச்ருதி பாகத்தில் சொல்லப்போகிறதைப் பார்க்கவும். | நாமஸஹஸ்ரமான இது வாக்விபூதி ரூபமானது. அதனால் 'பக்தானும் ஹிதகாம்யயா' என்று எற்கனவே சொல்லப்பட்டபடி, பக்தர்களுக்கு ஹிதம் செய்யும் விருப்பத்தோடு வாக்விபூதி ரூபமான இந்த ஸஹஸ்ரநாமத்தை செய்யச்சொல்லி எண்ணமுடையவளாகையால், அதற்கு நகுஷி முதலானவர்களை நியமித்தால் வசின்யாதிகளுடைய அதிகாரத்திற்கு பங்கம் வரும்படும். அதினால்தான் நகுஷி முதலானவர்களைக் கூறவில்லை.

வசின்யாதிகள் ஏற்கனவேயே அம்பாளிடமிருந்து ஸ்தோத்ரங்கள் அனேகம் செய்திருக்கையில், இப்போது இவளைப்போய் ஸ்தோத்திரம் ஏன் செய்யவேண்டுமென்று மாண்டூகேயர் சொல்லுகிறார்.

मच्चक्रस्य रहस्यज्ञा मम नामपरायणाः ।
मम स्तोत्रविधानाय तस्मादाज्ञापयामि वः ॥ ३०

30. மச் சக்ரஸ்ய ரஹஸ்யக்ஞா:
மம நாம பராயணா: |

மம ஸ்தோத்ர விதாநாய
தஸ்மாத் ஆக்ஞாபயாமி வ: ॥

நீங்கள் என்னுடைய ஸுதர்சக்ரத்தின் ரஹஸ்யங்களை அறிந்தவர்கள். என்னுடைய நாமங்களில் எப்போதும் கவனம் செலுத்தி வருகிறீர்கள். ஆகையால் என்னுடைய ஸ்தோத்திரத்தைச் செய்யும்படி உங்களை நான் கட்டளையிடுகிறேன்.

1. பிந்து முதலாக பூபுரம் வரையிலுள்ள சக்ரத்தின் வாஸ்தவ மயமான ரூபத்தை சக்ர ரஹஸ்யமென்று சொல்லப்பட்டது. அல்லது பின்வருமாறும் சொல்லலாம்.

2. தன்னுடைய ஸம்வித்தையே விஷயமாக உடையதும், இதர விஷயங்களில் தோற்றம், உணர்ச்சியில்லாததுமான ப்ரம்ஹத்தின் ஸ்வரூபத்திற்கு விமர்சரூபம் என்று பெயர். அதற்கு சடமென்று அசைவது மாதிரியும், முழுகி எழுந்திருப்பது மாதிரியும், திடீரென்று துடிப்பு ஏற்படுவது மாதிரியும் உணர்ச்சி உண்டாகும்போது அந்த அவஸ்தைக்கு பூர்ணஹம்பாவமென்றும் தூர்யாவஸ்தை என்றும் பெயர். அப்போது அதற்கு அனந்தவிதமான சக்திகளுண்டு. அந்த சக்திகளுடைய ஸமூஹத்திற்கு சக்ரம் என்று பெயர். அந்த சக்ரத்தின் அநுஸந்தானமானது குருமுகமாக மட்டும் தெரிந்துகொள்ளக் கூடியதான ரஹஸ்யமான விஷயம். இந்த ரஹஸ்யமான அநுஸந்தானம் தெரிந்தால் தன்னைத் தவிர்த்து வேறுக இருக்கும் ஸகலபூத தனைக்குள்ளேயே உபஸம்ஹாரம் (லயம்) அடைகிறது.

'சக்தி சக்ராநுஸந்தாநே விச்வஸம்ஹார: |
குருருபாய: | ' (நிஸ்வாஸம்.

இவ்விதமான அம்பாளுடைய சக்தி சக்ர ரஹஸ்யத்தை வசின்யாதி தேவதைகள் தெரிந்திருப்பதாக இங்கு சொல்லப்பட்டதாகவும் சொல்லலாம்.

3. இவ்விதமான சக்ர ரஹஸ்யமானது இதர ஸ்தோத்ரங்களில் சொல்லப்படவில்லை. அந்த ரஹஸ்யத்தைத் தெரிந்தவர்களென்று இங்கு அம்பாள் வசின்யாதி தேவிகளைச் சொன்னதினால்தான் அவர்களைச் செய்யச்சொல்லும் ஸ்தோத்ரத்தில் அதைப்பற்றியும் வெளியிடவேண்டுமென்று அம்பாளுக்கு அபிப்ராயம் என்பதாக ஏற்படுகிறது.

4. சக்ர ரஹஸ்யமானது அருணேபநிஷத், குஹ்யோப நிஷத், த்ரிபுரோபநிஷத், முதலியனவகளில் சொல்லப்பட்டி ருப்ப தால் அதைச் சொல்வதற்காக புதிதாய் ஒரு ஸ்தோத்ரம் செய் யச் சொல்லவேண்டியது அவச்யமா, என்ற கேள்விக்கு அடுத்தா போல் 'மம நாம பாயணை:' என்பதிலுல் ஸமாதானம் சொல்லப் படுகிறது.

5. நாமமென்பது தேவதையைச் சொல்வதும் வாசிப்ப தும் அந்த தேவதையின் மந்த்ர ரூபமாகவும் இருக்கும் பதத்திற் குப்பெயர். இதை ஸ்ரீமத் ஆசார்யாள் 'ஸௌந்தர்ய லஹரி'யில் 'சிவ: சக்தி: காம:' என்ற மந்த்ரோத்தார ச்லோகத்தில் மந்த் ராக்ஷரங்களைக் குறித்துவிட்டு கடைசியில்,

'டாஜ்தே வாகுஸ்தே துரீ ஜனனீ நாமாயவைதாத்ரி'

என்பதில் சொல்லியிருக்கிறார்கள். இதுவே நாமோச்சாரணம் என்ற வ்யாஜத்தின் மூலமாக (நாமோச்சாரணம் செய்வதின் மூல மாக) சக்ர ரஹஸ்யத்தைச் சொல்வதும் மந்த்ரங்களை உத்தாரணம் செய்வதும் இந்த நாம ஸ்தோத்ரத்திலிருக்கின்றன. ஆனால், மேலே சொல்லிய உபநிஷத்துக்களிலுள் கூட இல்லை. அப்போற்பட்ட அபூர்வமான ஸ்தோத்ரம் செய்வதில், நாம நாணைப் பாராயணம் வர்களான அவர்களுக்குத்தான் அதிகாரம் உண்டு என்பது 'நாம நாம பாயணை:' என்பதிலுல் காட்டப்பட்டது.

6. ஆகவே, இந்த அபூர்வமான லக்ஷணங்களையுடைய ஸ்தோத்ரத்தைச் செய்ய வசின்யாதி தேவதைகளுக்கு மட்டும் யோக்யதை இருக்கிறதென்பதற்கு ஐந்து காரணங்கள் சொல்லப் பட்டன. அதாவது அவர்கள் வாக்கின் தேவதைகளாயிருப்ப தாலும், அம்பாளுடைய ப்ரஸாதத்திலுல் ஸர்வஜ்ஞத்வாதி வாக்விபூதியை உடையவர்களானபடியாலும், அம்பாளால் தன் பக்தர்களுக்கு வாக்விபூதியைக் கொடுப்பதற்கு நியமிக்கப்பட் டிருப்பதாலும், அம்பாளுடைய சக்தியின் ரூபங்களாயிருப்ப வர்களானபடியாலும், அம்பாளுடைய மந்த்ரமயமான நாமங் களில் பாராயணர்களாக இருக்கிறபடியாலும், அவர்களுக்குத் தான் அம்பாளால் இந்த ஸ்தோத்ரம் சொல்லப்பட்டதே தவிர வேறு பிறர்களுக்குச் சொல்லப்படவில்லை. இதுதான்

'மம ஸ்தோத்ர விதாநய தஸ்மாத் ஆக்ஞாபயாமி வ: |'
என்பதினால் சொல்லப்பட்டது.

அம்பாளால் ஆக்ஞாபிக்கப்பட்ட கார்யம் மேலே சொல்லப்படுகிறது.

कुरुध्वमङ्कितं स्तोत्रं मम नामसहस्रकैः ।
येन भक्तैः स्तुताया मे सद्यः प्रीतिः परा भवेत् ॥ ३१

31 குருத்வம் அங்கிதம் ஸ்தோத்ரம்
மம நாம ஸஹஸ்ரகை: |
யேந பக்தை: ஸ்துதாயா மே
ஸத்ய: ப்ரீதி: பரா பவேத் ॥

பக்தர்கள் எதைச் சொல்லி என்னை ஸ்துதி பண்ணினால் எனக்கு உடனே பரம ப்ரீதி ஏற்படுமோ அப்பேர்ப்பட்டதும், ஆயிரம் நாமங்களுடையதும், என்னுடைய பெயரால் அங்கிதமானது (அடையாளமிடப்பட்டது)மான ஸ்தோத்ரத்தைச் செய்யுங்கள்.

1. அதாவது, மேலே சொல்லிய லக்ஷணங்களையுடைய நாமங்கள் ஆயிரத்தையுடையதும், அதினால் ஸஹஸ்ரநாமம் என்று குறிக்கப்படுவதும், என்னுடைய (லலிதா என்ற) பெயரால் அடையாளமிடப்பட்டதுமான ஸ்தோத்ரத்தைச் செய்யுங்கள் என்று தாத்பர்யம்.

2. கடைசி ச்லோகத்தில் பெயரை வைப்பதற்கு அங்கனம் என்று பெயர். ப்ரக்ருத ஸ்தோத்ரத்தில், அம்பாளுடைய நாமங்கள் எண்ணிக்கையற்றவையாக இருந்தபோதிலும் அவைகளிலெல்லாம் லலிதா என்பதுதான் முக்யமானது. இதர நாமங்களான பவானீ முதலியவைகள் (குணீயான) ஸாமான்யமான ருத்ரன் முதலானவர்களுடைய பத்னிகளின் பெயர்களாகவும் ப்ரயோகிக்கப்படுவதால் அவைகள் ஸாதாரண நாமங்களே. த்ரிபுரஸுந்தரீ என்பதும் கூட இதர தந்த்ரங்களில் நித்ய நித்யா தேவதைகளில் ஒருவளுக்குப் பெயராகச் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த லலிதா என்ற நாமமோ அம்பாளுடைய அஸாதாரண நாமம். இதனால்தான், அதை இந்த நாமஸஹஸ்ரத்தின் கடைசி நாமமாகவும், பலச்ருதி பாகத்தின் கடைசி ச்லோகத்திலும் ப்ரயோகம் செய்யப்பட்டிருக்கிறது. இதையே தான் 'மம நாமாங்கிதம்' என்று இங்கு சொல்லப்பட்டது.

हयग्रीवउवाच ।

ஹயக்ரீவ உவாச :—

(இதுவரையில் அம்பாள் சொன்னதைச் சொல்லிவிட்டு மேலே நடந்தவற்றை) ஹயக்ரீவர் சொல்லத் தொடங்கினர்.

इत्याज्ञप्ता वचोदेव्यः श्रीदेव्या ललिताम्बया ।
रहस्यैर्नामभिर्दिव्यैश्चक स्तोत्रमनुत्तमम ॥ ३२

32. இத்யாக்ஞப்தா வசோ தேவ்ய:
ஸ்ரீ தேவ்யா லலிதாம்பயா |
ரஹஸ்யைர் நாமபிர் திவ்யை:
சக்ரு: ஸ்தோத்ரமநுத்தமம் ||

இப்படி லலிதாம்பாளான ஸ்ரீ தேவியால் கட்டளையிடப் பட்ட வாக்தேவிகள் ரஹஸ்யமானதும் திவ்யமானதுமான நாமங் களால் மேம்பாடில்லாத ஒரு ஸ்தோத்ரத்தைச் செய்தார்கள்.

1. சக்ராராஜ ரஹஸ்யப், மந்த்ரோத்கர ரஹஸ்யப் பிரகண்ட ரஹஸ்யங்கள் அடங்கியவையாகையால் 'ரஹஸ்யைர் நாமபி:' என்று சொல்லப்பட்டது. இவ்வித ரஹஸ்யங்களைப் பற்றி மற்றவே வேயே சொல்லப்பட்டுவிட்டதால் அவைகளைத் திரும்பவும் சொல் லாமல் இங்கு 'ரஹஸ்யை :' என்று மட்டும் குறிப்பிடப்பட்டது.

रहस्यनामसहस्रमिति तद्विश्रुतं परम ।

33. ரஹஸ்ய நாம ஸாஹஸ்ரம்
இதி தத் விச்ருதம் பரம் |

அந்த ஸ்தோத்ரமானது 'ரஹஸ்ய நாம ஸாஹஸ்ரம்' என்ற அதிகமான ப்ரஸித்தியடைந்தது.

1. அந்த ஸ்தோத்ரத்திற்குப் பெயரே 'ரஹஸ்ய நாம ஸாஹஸ்ரம்' என்றிருப்பதுடன், மேலே சொன்ன ரஹஸ்யங்களுக் கேளாடு சம்பந்தமாக (இரண்டு) இருப்பதால், அதற்கு ரஹஸ்ய நாம ஸாஹஸ்ரம் என்ற பெயர் பொருத்தமாக இருப்பதாகச் சொல்லப்பட்டது. அந்தப் பெயரோடு கூட அது மிகவும் பெ யடைந்தது.

ततः कदाचित्सदसि स्थित्वा सिंहासनेऽम्बिका ॥ ३३
स्वसेवावसरं प्रादात्सर्वेषां कुम्भसम्भव ।

ததः கதாசித் ஸதஸி ஸ்தித்வா
ஸிம்ஹாஸநேऽம்பிகா |
34. ஸ்வ ஸேவாவஸரம் ப்ராதாத்
ஸர்வேஷாம் கும்பஸம்பவ ॥

ஹே கும்பஸம்பவ! பிறகு ஒரு ஸமயம் அம்பிகையானவள் ஸதஸில் (ஸபையில்) ஸிம்ஹாஸனத்தின்மேல் வீற்றிருந்துகொண்டு தன்னை ஸேவிப்பதற்கு எல்லாருக்கும் அவகாசம் கொடுத்தாள்.

1. *தன்னை எல்லோரும் பார்ப்பதற்காக, ஸிம்ஹாஸனத்தின்மீது அம்பாள் வீற்றிருந்ததாக இங்கு சொல்லப்பட்டது. (ஸிம்ஹாஸனம் என்பதைப்பற்றி மூன்றுவது காமத்தில் சொல்லப்பட்டிருப்பதைப் பார்க்கவும்.)*

सेवार्थमागतास्तत्र ब्रह्माणी ब्रह्मकोटयः ॥ ३४
लक्ष्मीनारायणानां च कोटयः समुपागताः ।
गौरीकोटिसमेतानां रुद्राणामपि कोटयः ॥ ३५

35. ஸேவார்த்தம் ஆகதாஸ் தத்ர
ப்ரம்ஹாணீ ப்ரம்ஹகோடய:॥
லக்ஷ்மீ நாராயணா நாம் ச
கோடய: ஸமுபாகதா: |
கௌரீகோடி ஸமேதாநாம்
ருத்ராணாமபி கோடய:॥

அங்கு, அம்பாளுடைய ஸேவைக்காக ப்ரம்ஹாணிகளோடு கூடிய ப்ரம்ஹாக்களும், லக்ஷ்மிகளோடு கூடிய நாராயணர்களும், கௌரிகளோடு கூடிய ருத்ரர்களும் கோடிக்கணக்காக வந்திருந்தார்கள்.

1. *ப்ரம்ஹ—வேதங்களை, அணதி—சப்திக்குப்படி. செய்கிறவர் ப்ரம்ஹாண: (அதாவது, ப்ரம்ஹாவானவர் தன்னுடைய நாலு முகங்களாலும் நாலு வேதங்களையும் சொல்லுகிறார் என்ற அர்த்தம்) அவருடைய பத்னீ ப்ரம்ஹாணீ.*

'ப்ரம்ஹாணீத்ய பராசக்தி: ப்ரம்ஹ ணஸ்தி ஸங்க காமிநீ |'
(ஸ்வாச்சந்த ஸங்க்ரஹம்)

2. அல்லது, ப்ரம்ஹாவை ஆனயதி—ஜீவித்திருக்கும்படி செய்கிறவள் ப்ரம்ஹாணீ. எந்த அர்த்தத்திலும் ப்ரம்ஹாவின் பத்னியான ஸாவித்ரியானவள் குறிக்கப்படுகிறாள்.

3. 'ப்ரம்ஹாணீ ப்ரம்ஹகோடய:' என்றால் ப்ரம்ஹாவினிகளின் கோடிகளோடு கூடிய ப்ரம்ஹாக்களின் கோடிகள் என்று அர்த்தம். 'கோடய:' என்பதிலால் அனேகம் கோடிகள், அதாவது கோடிக்கணக்கான கோடிகள் என்று சொல்லப்பட்டது. கோடி கோடியை ஜலதி என்று சொல்லப்படும். இதனால் ஜலதிக் கணக்கான ப்ரம்ஹாணிகளும், அதே கணக்கான ப்ரம்ஹாக்களும் அங்கு வந்திருந்ததாக ஏற்படுகிறது.

4. இம்மாதிரி கோடி கோடிக்கணக்கான ப்ரம்ஹாக்களாலும், ப்ரம்ஹாணிகளாலும் அம்பாள் சூழப்பட்டிருப்பதாக [illegible] யாடலத்தில் ஸர்வமங்களா க்யான ப்ரகரணத்தில்,

'ஆவ்ருதம் ப்ரம்ஹஸஹித ப்ரம்ஹாணீ கோடி [illegible]'

என்று சொல்லப்பட்டிருக்கிறது.

5. அதேவிதமாக கோடி கோடிக்கணக்காய் லக்ஷ்மிகளுடன் நாராயணர்களும், கௌரிகளுடன் ருத்ரர்களும் வந்திருந்ததாகச் சொல்லப்பட்டது.

6. கௌரீ கோடி ஸமேதானாம் ருத்ரானாமபி [illegible] என்பதிலால் ஓவ்வொரு ருத்ரனிடம் கோடிக்கணக்கான கௌரிகளுடன் வந்திருந்ததாக அர்த்தம் செய்யக்கூடாது. எனெனில் மற்ற இருவகைகளைப்பற்றிச் சொல்லிய எண்ணிக்கைக்கு அது விரோதமாகும். 'ருத்ராணாம்' என்பதிலால் கோடிக்கணக்கான கௌரிகளுடன் கூடிய, கோடிக்கணக்கான ருத்ரர்களாகிய கோடிகள் என்று அர்த்தம் செய்யவேண்டும்.

7. இவ்விதம் சொல்லப்பட்ட கோடி, லக்ஷ [illegible] எண்ணிக்கைகளெல்லாம் அனந்தமான (முடிவில்லாத) [illegible] கையைக் குறிப்பவை. ப்ரம்ஹா விஷ்ணு ருத்ரர் [illegible] -யாது. ஆகவே ஒவ்வொரு ப்ரம்ஹாண்டத்தில் [illegible] ஸ்ருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரம் முதலிய காரியங்களுக்கு [illegible] களான ப்ரம்ஹா, விஷ்ணு, ருத்ரர்களுடைய சக்தி [illegible] அடங்காது.

8. இப்படி மஹத்தான கூட்டத்தை ஒரு பெரிய கூட்டமாகிய காரணம் ஸகல ப்ரம்ஹாண்டங்களிலும் இந்த காரண [illegible]

தைப் பாவச்செய்து, அதை ப்ரஸித்தமாகச் செய்யவேண்டு மென்பது.

मन्त्रिणीदण्डिनीमुख्याः सेवार्थं याः समागताः ।
शक्तयो विविधाकारास्तासां संख्या न विद्यते ॥ ३६

36. மந்த்ரிணீ தண்டிநீ முக்யா:
ஸேவார்த்தம் யா: ஸமாகதா: |
சக்தயோ விவிதாகாரா: தாஸாம்
ஸங்க்யா ந வித்யதே ॥

மந்த்ரிணீ, தண்டினீ இவர்களைத் தலைமையாக உடையவர் களும், நானாவிதமான ரூபங்களையுடையவர்களுமான எந்த சக்தி கள் அம்பாளை ஸேவிப்பதற்காக வந்திருந்தார்களோ, அவர் களுடைய கணக்கு கிடையாது.

1. அதாவது, கணக்கிலடங்காத சக்திக் கூட்டங்கள் வந்திருந்ததாகச் சொல்லப்பட்டது.

2. தந்த்ரங்களில் சக்திகளுடைய பெயர்கள் அனேகம் சொல்லப்பட்டிருக்கின்றன.

'பராசக்திச்சாதிசக்தி: இச்சா ஞான க்ரியா பலா |
பாலான்னபூர்ண பகளா தாரா வாக்வாதினீ பரா ॥
காயத்ரீ சைவ ஸாவித்ரீ ஸித்தலக்ஷ்மீ: ஸ்வயம்வரா |
நகுலீ துரகாரூடா குருகுல்லா ச ரேவதீகா ॥
ஸம்பத்கரீ ச ஸாம்ராஜ்யலக்ஷ்மீ: பத்மாவதீ சிவா |
துர்க்கா பத்ரகாளீ காளராத்ரி: ஸுபத்ரிகா |
சின்னமஸ்தா பத்ரகாளீ காளகண்டீ ஸரஸ்வதீ ॥

(ருத்ரயாமளம்)

3. எற்கனவேயே கோடி கோடிக் கணக்கென்பதாக எண்ணிக்கையற்ற ப்ரம்ஹராதிகளைச் சொன்னபோதிலும் அந்த மாதிரியே எண்ணிக்கையற்ற அண்டங்கள் ஒவ்வொன்றிலும் (ஸஜாதீயமான) ஒரோர் பாலா சக்தியிருப்பதால் எண்ணிக்கை யற்ற பாலா சக்திகளிருப்பதாக ஏற்பட்டது. திருப்பியும் ப்ரஸ் பரம் விஜாதீயமான சக்திகளின் கணக்கே எண்ணிக்கையிலடங் காதிருப்பதால் சக்திகளின் மொத்தக் கணக்கானது அவர்களின் பெயர்களைக் குறித்துச் சொல்லமுடியாத காரியமாகையால்

கோடி கோடியென்று கூடச் சொல்லாமல் 'தாஸாம் ஸம்க்யா ந வித்யதே' என்று இங்கு சொல்லப்பட்டது. எண்ணிக்கை யற்ற அண்டங்கள் ஒவ்வொன்றிலும் எண்ணிக்கையற்ற பாலா முதலான சக்திகள் இருப்பதால் சக்திகளின் மொத்தக் கணக் கானது அளவிட முடியாமலிருக்கிறது.

4. அல்லது, வந்திருந்த சக்திகளின் பெயர் கணக்கிலடங் காதது என்றும் சொல்லலாம்.

5. (ஸம்க்யா என்பதற்கு கணக்கு என்றும், நன்றாகச் சொல்வது—அதாவது, பெயரைச் சொல்வது—என்றும் அர்த் தம் உண்டு.) 'ஸம்க்யா ந வித்யதே'—என்பதினால் பெயரைச் சொல்லுகிறவன் கிடையாது என்றும் தாத்பர்யம்.

दिव्यौघा मानवौघाश्च सिद्धौघाश्च समागताः ।
तत्र श्रीललितादेवी सर्वेषां दर्शनं ददौ ॥ ३७

37 திவ்யௌகா மானவௌகாச்ச
ஸித்தௌகாச்ச வமாகுராः |
தத்ர ஸ்ரீ லலிதாதேவீ
ஸர்வேஷாம் தர்சநம் ததௌ ॥

தேவர்களும், மானவர்களும், ஸித்தர்களும் ஒருக்கணக்காக அங்கு வந்திருந்தார்கள். (அங்கு) அப்போது ஸ்ரீ லலிதாதேவியா வள் எல்லோருக்கும் தன்னுடைய தர்சனத்தைக் கொடுத்தாள்.

1. திவ்யாः— ஸ்வர்க்கத்திலிருப்பவர்கள் கின்னரர்கள் முதலான தேவர்கள்.

மானவாः— புண்யபுருஷர்களான விச்வாமித்ரர் புலஸ்த்ய ப்ரம்ஹர்ஷிகள்.

ஸித்தாः— ஸனக, நாரதாதி யோகிகள்.

இம்மூன்று வகுப்பார்களும் ஒருக்கணக்காக அம்பாளுடைய ஸதஸுக்கு வந்திருந்ததாகச் சொல்லப்பட்டது. இதற்கடுத்து

'அநேக கோடி திக்பாலாः சந்தராதித்ய ஸேவிதாः |
ஸனகாத்யைச்ச யோகீந்த்ராः வாய்வாதிஸுரஸேவிதாः |
நாரதாதி மஹாகணாச்ச கோடிசः பரிவாரிதாः ॥'

என்று ருத்ரயாமளத்திலும் சொல்லப்பட்டிருக்கிறது.

2. ஓகம் என்பது (லக்ஷம், கோடி இவைபோல்,) ஒரு எண்ணிக்கையைக் குறிக்கும். ஸமுத்ரமென்பதை லக்ஷம் மடங்கு பெருக்கினால் ஓகம் என்பது வரும். ஜ்யோதி: சாஸ்திரம், வாயு புராணம் முதலானவைகளில் எண்ணிக்கைகளைச் சொல்லுமிடங்களில் இந்த பதமானது சொல்லப்படவில்லையாகிலும் ராமாயணத்தில் யுத்தகாண்டத்தில்

'சதம் சதஸஹஸ்ராணம் கோடிமாஹுர் விபச்சித: |'

என்று ஆரம்பித்து

'சதம் ஸமுத்ரஸாஹஸ்ரம் மஹௌகமிதி விச்ருதம் |'

என்று இதைப்பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது.

சங்கு என்பதே பெரிய எண்ணிக்கை. அதிலிருந்து லக்ஷம் லக்ஷமாகப் பெருக்கிக் கொண்டுபோனால் வரும் எண்ணிக்கைகள்

மஹாசங்கு, வ்ருந்த, மஹாவ்ருந்த, பத்ம, மஹாபத்ம, கர்வ, மஹாகர்வ, ஸமுத்ர, மஹௌகமென்பவற்றில் கடைசியாக ஓகமென்பது சொல்லப்பட்டிருக்கிறது. இதைப்பற்றி விபரமாகத் தெரியவேண்டுமென்றால் பாஷ்யத்தின் மூலத்தைப் பார்த்துக்கொள்ளலாம்.

3. ஓகமென்பதற்கு ஸம்ப்ரதாயக்ரமமான உபதேசம் என்றும் அர்த்தமுண்டு. இந்த அர்த்தத்தில் குருபரம்பரையை திவ்யௌகம், மானவௌகம், சித்தௌகம் என்று மூன்றுவிதமாகப் பிரிக்கலாம். காதியென்ற காமராஜ வித்யா பரம்பரையில் திவ்யௌகம் என்பது பரப்ரகாசானந்தநாதர் முதலிய ஏழு பரமகுருக்களையும், மானவௌகம் என்பது ககனானந்தநாதர் முதலிய எட்டு பராபர குருக்களையும், ஸித்தௌகம் என்பது போகானந்தநாதர் முதலிய நாலு அபர குருக்களையும் குறிக்கும்.

இதர பேதங்களாகிய லோபாமுத்ராவித்யை

இந்த மூன்று குருபரம்பரையின் பெயர்கள்

வெவ்வேறுகச் சொல்லப்பட்டிருப்பதை ஞானார்ணவம், நித்யோத்ஸவம், முதலிய கிரந்தங்களில் பார்க்கலாம். என்னவென்றாலும் திவ்யாதி குரு க்ரமமானது குருவின் உபதேசத்தால் அறியவேண்டியது. (ஓகம் முதலான எண்ணிக்கையைக் குறிக்கும் பதங்கள் சொல்லப்பட்டிருந்த போதிலும் அவைகள் எண்ணிக்கையற்றதான கூட்டங்களைக் குறிக்குமேதவிர கணக்காக

तेषु दृष्टोपविष्टेषु स्वे स्वे स्थाने यथाक्रमम् ।

38. தேஷு த்ருஷ்டோவா பவிஷ்டேஷு
ஸ்வேஸ்வே ஸ்தாநே யதாக்ரமம் ।

அப்படி அம்பாளுடைய தர்சனமானவுடன் எல்லோரும் க்ரமப்படி தங்கள் தங்களுக்குரித்தான இடங்களில் உட்கார்ந்த பிறகு.

விச்வகர்ம சாஸ்திரத்தில் ராஜாவினுடைய வலதுபாகத்தில் ராஜகுமாரனும், இடது பாகத்தில் அந்த மந்திரியைப் இம்மாதிரி பிறர்களும் இன்னின்ன இடத்தில் உட்காரவேண்டுமென்பதும் சொல்லப்பட்டிருக்கிறது. அம்மாதிரி இவர்களெல்லோரும் உட்கார்ந்ததை 'யதாக்ரமம்' என்று இங்கு குறிக்கப்பட்டது.

तत्र श्रीललितादेवीकटाक्षाक्षेपनोदिताः ॥ ३८
उत्थाय वशिनीमुख्या बद्धाञ्जलिपुटास्तदा ।
अस्तुवन्नामसाहस्रैः स्वकृतैर्ललिताम्बिकाम् ॥ ३९

தத்ர ஸ்ரீலலிதா தேவீ
கடாக்ஷா க்ஷேப தோதிதா: ॥
39. உத்தாய வசினீமுக்யா:
பத்தாஞ்ஜலிபுடாஸ்ஸ்ததா ।
அஸ்துவந நாமஸாஹஸ்ரை:
ஸ்வகீயை: லலிதாம்பிகாம் ॥

அப்போது ஸ்ரீ லலிதாதேவியினுடைய கடைக்கண் பார்வையின் அனைப்பினல் ஆக்ஞை செய்யப்பட்ட வசினீ முதலான வாக்தேவிகள் ஸபையில் எழுந்து அஞ்ஜலி பந்தத்துடன் தாங்கள்செய்த நாம ஸஹஸ்ரங்களால் லலிதாம்பிகையை ஸ்தோத்ரம் செய்தார்கள்.

श्रुत्वा स्तवं प्रसन्नाभूल्ललिता परमेश्वरी ।
सर्वे ते विस्मयं जग्मुर्ये तत्र सदसि स्थिताः ॥ ४०

40. ச்ருத்வா ஸ்தவம் ப்ரஸந்நாபூத்
லலிதா பரமேச்வரீ ।
ஸர்வே தே விஸ்மயம் ஜக்மு:
யே தத்ர ஸதஸி ஸ்திதா: ॥

அந்த ஸ்தோத்ரத்தைக் கேட்டு லலிதா பரமேச்வரியானவள் ஸந்தோஷமடைந்தாள். இன்னம் அந்த ஸதஸிலிருந்த(ப்ரம்ஹாணீ முதலான)எல்லோரும் அதைக்கேட்டு) ஆச்சர்யம் அடைந்தார்கள்.

1. இப்படி ஸந்தோஷம், ஆச்சர்யம் இவையிரண்டும் ஒரு ங்கே ஏற்பட்டதற்குக் காரணம் - இந்த நாம ஸஹஸ்ரத்தில் சப் தம், அர்த்தம் இவைகள், அலங்காரம் முதலான அழகுகளோடு பூர்ணமாயிருப்பதும், ஒருவிதமான தோஷமுமில்லாதிருப்பதும் தான். விஷ்ணு ஸஹஸ்ரநாமத்தில் 'கோஷ்த்ரக்ரோஷ்டுகோஷ்ட்ரவே' என்பவைகளில் நிரர்த்தகமான அவ்யய ப்ரயோகங்களும், நூறு நாமங்கள் வரையில் இரண்டு, மூன்று நான்கு தடவைகள் கூட நாமங்கள் திரும்பித்திரும்பி வருவதும் காணப்படுகின்றன. அம் மாதிரியான ஸ்தோப(நிரர்த்தக)ப்ரயோகமும் புனருக்தியும் இந்த ஸஹஸ்ரநாமத்தில் கிடையாது. விஷ்ணு ஸஹஸ்ரநாமத்திற்குத் தான் எழுதிய பாஷ்யத்தில் ஸ்ரீமத் ஆசார்யாள் இவ்விதமான புனருக்தி தோஷத்தைப் போக்குவதற்காக ஒரே நாமமானது பல இடங்களில் வரும்போது அந்தந்த இடத்தில் அதற்கு வெவ் வேறான அர்த்தம் சொல்லியிருந்தாலும் அது புனருக்திதோஷத் திற்கு பரிஹாரமாக ஏற்படமாட்டாது. அங்கங்கே வெவ்வேறான அர்த்தத்தோடிருந்தாலும் பதம் ஒன்றாயிருப்பதனால் அந்த தோஷமானது நீக்கப்படாமல் தான் இருந்துவருகிறது. மேலும் பல அர்த்தங்களையுடைய ஒரே நாமமானது அனேக இடங்களில் வந்தால் அப்படி வரும்போது தான் அவ்விதமான அர்த்தபேதங் களைச் சொல்லவேண்டுமென்பதும் அவச்யமில்லை. ஒரே இடத் திலிருக்கும் நாமத்தையே பலதடவை உச்சாரணம் பண்ணினாலே யே அவ்வித அர்த்தபேதங்களைச் சொல்லக்கூடும். ஆகவே ஒரே நாமமானது பல இடங்களில் வரும்போது அந்தந்த இடங்களில் அதற்கு வெவ்வேறான அர்த்தங்கள் சொல்லியபோதிலும் புன ருக்தி தோஷம் இருக்கத்தான் செய்யும்.

2. மேலும் இந்த ஸ்தோத்ரமான நூற்றெட்டு சொல்லிய படி சக்ர ரதஸ்யங்கள், மந்த்ரோத்தாரங்கள் முதலான ரஹஸ்ய அர்த்தாந்தரங்களை ஆச்சர்யப்படும் விதமாகப் பிரதிபாதிக்கப் பட்டிருக்கிறது. இவைகள் குருமுகமாகவே தெரிந்துகொள்ளவேண்டி யவைகளானாலும் வித்வான்களுடைய மனதிற்கு த்ருப்தியுண்டா வதற்காக (பாஷ்யத்தில்) அங்கங்கே கொஞ்சம் கொஞ்சம் காட் டப்பட்டிருக்கின்றன.

ततः प्रोवाच ललिता सदस्यान्देवतागणान् ।
मंमाज्ञयैव वाग्देव्यश्चक्रुः स्तोत्रमनुत्तमम् ॥ ४१
अङ्कितं नाममिर्दिव्यैर्मम प्रीतिविधायकैः ।

41. ததः ப்ரோவாச லலிகா
ஸதஸ்யாந் தேவதாகணாந் |
மமாக்ஞயைவ வாக்தேவ்யः
சக்ருः ஸ்தோத்ர மநுத்தமம் ॥

அப்போது ஸதஸிலிருக்கும் தேவதா கணங்களைப் பார்த்து லலிதாம்பாளானவள் (பின்வருமாறு) சொல்லலானாள் :—

இந்த மேம்பாடில்லாததும் எனக்கு ப்ரீதியுண்டுபண்ணுகிற திவ்ய நாமங்களால் அங்கிதமாயுமிருக்கப்பட்ட ஸ்தோத்ரத்தை வாக்தேவிகள் என்னுடைய ஆக்ஞையால் செய்தார்கள்.

1. இந்த ஸ்தோத்ரத்தைக் கேட்டு ஆச்சர்யமடைந்த தேவதா கணங்களைப்பார்த்து அவர்கள் அடைந்த ஆச்சர்யத்திலிருந்து தெளிவிப்பதற்காக அம்பாள் 'மமாக்ஞயைவ..... விதாயகைः' என்று சொன்னது.

2. வாக்தேவதைகள் இந்த ஸ்தோத்ரத்தைத் தங்கள் புத்தியின் தோற்றத்திலல் செய்துவிடவில்லையென்றும், தன்னுடைய ஆக்ஞையின் பேரில் செய்தார்களென்றும், ஆகையால் அதில் ஆச்சர்யப்படவேண்டிய காரணம் யாதொன்றுமில்லை என்றும் அம்பாள் சொன்னதின் பாவம்.

तत्पठध्वं सदा यूयं स्तोत्रं मत्प्रीतिवृद्धये ॥ ४२
प्रवर्तयध्वं भक्तेषु मम नामसहस्रकम् ।

தத் படத்வம் ஸதா யூயம்
ஸ்தோத்ரம் மத் ப்ரீதி வ்ருத்தயே ॥

43. ப்ரவர்த்தயத்வம் பக்தேஷு
மம நாமஸஹஸ்ரகம் |

ஆகையால் நீங்கள் என்னுடைய ப்ரீதியானது அதிகரிப்பதற்காக இதை எப்போதும் சொல்லுங்கள். இந்த நாமஸஹஸ்ரத்தை என் பக்தர்களுக்குள் பரவச்செய்யுங்கள்.

1. நாமஸஹஸ்ரத்தைச் சொல்வது முதலாவது அதிஷ்டையுடைய முக்யமான ப்ரயோஜனம் அம்பாளுடைய ப்ரஸாதம் ஏற்படுவதும் அதிகப்படுவதும். இம்மாதிரி ஏற்கனவே

'ஸ்ரீ மாது: ப்ரீதயே தஸ்மாத் அனிசம் கீர்த்தயேத் இதம் |'

என்று இதற்கு அனுவாதமாகச் சொல்லப்பட்டிருந்தபோதிலும், வக்தா (சொல்லுகிறவர்) ச்ரோதா (கேட்கிறவர், சொல்லப்படுகிறவர்) இவர்கள் வேறாக இருப்பதால் செய்யச்சொல்லப்படுவது ஒரேகர்மாவாக இருந்தாலும் அந்த வாக்யமும் விதிவாக்யந்தான். ஆனால் இது இரண்டாவது விதி. (ஸ்ரீ வித்யா நிஷ்டையடைந்தவர்களை பக்தர்கள் என்று இங்கு சொல்லப்பட்டது.)

2. இந்த ஸ்தோத்ரத்தை பக்தர்களுக்குள் பரவச்செய்யும் இந்த ஸம்ப்ரதாயமானது நீடித்திருக்கவேண்டுமென்பதற்காக மேலே சொல்லப்படுகிறது.

इदं नामसहस्रं मे यो भक्तः पठतेऽसकृत् ॥ ४३
मम प्रियमतो ज्ञेयस्तस्मै कामान्ददाम्यहम् ।

44. இதம் நாமஸஹஸ்ரம்மே
யோ பக்த: படதேऽஸக்ருத் ॥
மம ப்ரியதமோ ஜ்ஞேய:
தஸ்மை காமாந் ததாம்யஹம்

எந்த பக்தன் இந்த நாம ஸஹஸ்ரத்தை ஒரு தடவை (யாவது) சொல்லுகிறானே அவன் எனக்கு அத்யந்தம் ப்ரியப்பட்டவன். அவன் விரும்பியவற்றையெல்லாம் நான் அவனுக்குக்கொடுக்கிறேன்.

(ஸக்ருத்) ஒரு தடவை சொல்வதிலேயே அம்பாளுடைய அனுக்ரஹம் இவ்விதமாக ஏற்படுமானால், (அஸக்ருத்) பலதடவை ஆவ்ருத்தி பண்ணினால் மிகுதியான பலன் ஏற்படும் என்பது இதின் மூலமாகச் சொல்லப்பட்டது. இதிலிருந்து பல ச்ருதிபாகத்தில் சொல்லப்படும் காம்யப்ரயோகங்களில் இந்தஸ்தடவை ஆவ்ருத்தி பண்ணவேண்டுமென்று சொல்லாவிட்டாலும் (சொல்லியிருந்தாலும்) உத்தேசித்த காமங்கள் ஏற்படும் வரையில் ஆவ்ருத்தி செய்யவேண்டுமென்பது ஏற்படுகிறது.

முதலாவது விதியில் 'ஸதா' (எப்போதும்) இந்த நாம ஸஹஸ்ரத்தைச் சொல்லவேண்டுமென்று சொன்னதைப்பற்றிக் திரும்பவும் சொல்லுகிறார்.

श्रीचक्रे मां समभ्यर्च्य जप्त्वा पञ्चदशाक्षरीम् ।
पश्चान्नामसहस्रं मे कीर्तयेन्मम तुष्टये ॥ ४४

45. ஸ்ரீ சக்ரே மாம் ஸமப்யர்ச்ய
ஜப்த்வா பஞ்சதசாக்ஷரீம் ॥
பச்சாந் நாமஸஹஸ்ரம் மே
கீர்த்தயேந் மம துஷ்டயே ।

ஸ்ரீ சக்ரத்தில் என்னை விசேஷமாக அர்ச்சனை செய்துவிட்டு பஞ்சதசாக்ஷரியை ஜபம் செய்து பிறகு எனக்கு ப்ரீதி உண்டாகுவதற்காக இந்த நாமஸஹஸ்ரத்தைக் கீர்த்தனம்செய்யவேண்டும்.

1. இது ஏற்கனவே சொல்லியபடி நித்யகர்மாவாகச் செய்யவேண்டியதைக் குறிப்பது.

2. இவ்விதம் சக்ரார்ச்சனம், பஞ்சதசி ஜபம் இவற்றோடு செய்யப்படும் நாம கீர்த்தனத்தின் பலனைப்பற்றிச் சொல்லிவிட்டு முதலிரண்டும் செய்யமுடியாதவன் நாம கீர்த்தனம் மாத்திரம் செய்தானேயாகில் அதற்கிருக்கும் பலனைப்பற்றிச் சொல்லுகிறார்.

ममार्चयतु वा मा वा विद्यां जपतु वा न वा ॥ ४५
कीर्तयेन्नामसाहस्रमिदं मत्प्रीतये सदा ।

46. மாம் அர்ச்சயது வா மா வா
வித்யாம் ஜபது வா ந வா ॥
கீர்த்தயேத் நாமஸஹஸ்ரம்
இதம் மத் ப்ரீதயே ஸதா ।

என்னை (ஸ்ரீசக்ரத்தில்) அர்ச்சனம் பண்ணினாலும் சரி, விட்டாலும் சரி, என்னுடைய வித்யையை ஜபம் பண்ணினாலும் சரி, பண்ணாவிட்டாலும் சரி, என்னுடைய ப்ரீதிக்காக இந்த நாமஸஹஸ்ரத்தை எப்போதும் கீர்த்தனம் செய்யவேண்டும்.

அதாவது, ஸபார்ச்சனாதிகள் செய்வதற்கு சக்தியிருப்பவன், இந்த நாம ஸஹஸ்ர கீர்த்தனம் செய்வதாலேயே இதின் மூலமாக அவற்றின் பலனையும் அடைந்தவனாகி விடுகிறான் என்று சொல்லப்பட்டது.

मत्प्रीत्या सकलान्कामाँल्लभते नात्र संशयः ॥ ४६
तस्मान्नामसहस्रं मे कीर्तयध्वं सदादरात् ।

47. மத் ப்ரீத்யா லகலாந் காமாந்
லபதே நாத்ர லம்சய:॥
தஸ்மாந் நாமலஹஸ்ரம் மே
கீர்த்தயத்வம் லதாதராத்

(இப்படி உண்டாதும்) என்னுடைய ப்ரீதியினல் பக்தனை வன் ஸமஸ்தமான காமங்களையும் (விரும்பியவற்றையெல்லாம்) அடைகிறன். அதில் ஸந்தேஹமில்லை. ஆகையால் நீங்களெல் லோரும் என்னுடைய இந்த நாம ஸஹஸ்ரத்தை எப்போதும் ஆதரவுடன் (பக்தி, மர்யாதையுடன்) கீர்த்தனம் செய்யுங்கள்.

श्रीहयग्रीव उवाच ।

ஸ்ரீ ஹயக்ரீவ உவாச :—

(இப்படி அம்பாள் சொன்னதைச் சொல்லிமுடித்து மேலே) ஹயக்ரீவர் சொல்லலானர் :—

इति श्रीललितेशानी शास्ति देवान्सहानुगान् ॥ ४७

இதி ஸ்ரீ லலிதேசாநீ
சாஸ்தி தேவாந் லஹாநுகான்॥

இம்மாதிரி ஸ்ரீலலிதேசானியானவள் பரிவாரங்களோடுகூடிய ஸமஸ்தமான தேவர்களையும் பார்த்து கட்டளையிடுகிறுள்.

1. ஈசான: என்றால் ஆளுகிறவன். ப்ரபு என்று அர்த்தம். லலிதாம்பிகையானவள் ஸமஸ்த ப்ரபஞ்சத்திற்கும், ஸகல ப்ராணி களுக்கும் யஜமானியாக இருந்து ஆளுகிறபடியால் 'லலிதேசானீ' என்று சொல்லப்பட்டது.

2. கட்டளையிட்டாள் என்று சொல்லாமல், சாஸ்தி-கட்டளை என்று சொன்னதினல், இச்சா ரூபியான அம்பா ளுடைய கட்டளையானது மேலுக்குமேல் வருகிற எல்லோரா லும் சாச்வதமாகக் கீழ்ப்படியவேண்டியதாயிருப்பதால் அப்போது தேவர்களுக்குச் செய்த ஆக்ஞையானது இப்போதும் அமூலில் இருக்கிறதென்பது குறிக்கப்பட்டது.

இதேமாதிரியான ப்ரயோகமானது

'ஆக்ருச்ய புத்ரம் அகவான் யதஜாமிளோகபி
நாராயணேதி ம்ரியமாண ()யாய ம்
என் மே காணபட

तदाज्ञया तदारभ्य ब्रह्मांवेष्णुमहेश्वराः ।
शक्तयो मन्त्रिणीमुख्या इदं नामसहस्रकम् ॥ ४८
पठन्ति भक्त्या सततं ललितापरितुष्टये ।

48. ததாக்ஞயா ததாரப்ய
ப்ரம்ஹ விஷ்ணு மஹேச்வரா: |
சக்தயோ மந்த்ரிணீ முக்யா:
இதம் நாம ஸஹஸ்ரகம்॥

49. படந்தி பக்த்யா ஸததம்
லலிதா பரிதுஷ்டயே |

அதுமுதல் அம்பாளுடைய ஆக்ஞையின்படி ப்ரம்ஹா, விஷ்ணு, மஹேச்வரர், மந்த்ரிணீ முதலான சக்திகள் எல்லோரும் லலிதாம்பாளுடைய ப்ரீதி ஏற்படுவதற்காக இந்த நாம ஸஹஸ்ரத்தை பக்தியுடன் எப்போதும் சொல்லிவருகிறார்கள்.

तस्मादवश्यं भक्तेन कीर्तनीयमिदं मुने ॥ ४९

தஸ்மாத் அவச்யம் பக்தேந
கீர்த்தனீயமிதம் முநே॥

ஆகையினால் ஹே முனியே! இந்த நாம ஸஹஸ்ரமானது பக்தனால் அவச்யம் சொல்லப்படவேண்டும்.

1. நாம ஸஹஸ்ரம் ஏற்பட்டதைப் பற்றிய வ்ருத்தாந்தத்தைச் சொல்வதற்கு முன்,

'தத்ர ஹேதும் ப்ரச்நாயாமி ச்ருதாயம் கும்பஸம்பவ |'

என்று ஆரம்பித்து இதுவரையில் நாம ஸஹஸ்ர கீர்த்தனம் செய்யவேண்டியது அவச்யமானது என்பதற்குக் காரணத்தைச் சொல்லிவிட்டார்.

2. இனி அவ்விதம் விசேஷமான பலனைக் கொடுக்கும் நாம ஸஹஸ்ரத்தைச் சொல்லப்போவதால், அதைத்தான் அதிகாரியைப் பற்றியும், அப்படிச்சொல்லுவதற்கு அதிகாரியிடம் இருக்கவேண்டிய குணங்களைப்பற்றியும் பேசி சொல்லுகிறார்.

आवश्यकत्वे हेतुस्ते मया प्रोक्तो मुनीश्वर ।
इदानीं नामसाहस्रं वक्ष्यामि श्रद्धया शृणु ॥ ५०

50. ஆவச்யகத்வே ஹேது ஸ்தே
மயா ப்ரோக்தோ முனீச்வர |

இதா நீம் நாம ஸாஹஸ்ரம்
வக்ஷ்யாமி ச்ரத்தயா ச்ருணு ॥

(இந்த ஸ்தோத்ரத்தைக் கீர்த்தனம் செய்யவேண்டியதின்) ஆவச்யகத்திற்குக் காரணமானது என்னல் சொல்லப்பட்டது. ஹே முனீச்வர! இப்போது அம்பாளுடைய நாம ஸாஹஸ்ரத்தைச் சொல்லுகிறேன். அதைச் ச்ரத்தையுடன் கேள்.

இதற்கு மேல் ஹயக்ரீவர் அம்பாளுடைய த்யானத்தைப் பற்றிய ச்லோகத்தைச் சொல்லிவிட்டு நாம ஸாஹஸ்ரத்தைச் சொல்லுகிறார்.

நாம ஸாஹஸ்ரமானது ஏற்கனவே சொல்லியபடி மாலா மந்த்ரமாக இருப்பதால் அதைக் கீர்த்தனம் செய்வதற்கு முன்னும் பின்னும் (இதர மந்த்ரங்களை ஜபம் பண்ணும்போது செய்வதுபோல்) ஸங்கல்பம், அங்கந்யாஸ கரந்யாஸங்கள், த்யானம், பஞ்சபூஜை முதலியவைகளைச் செய்யவேண்டும். இவையெல்லாம் குருமுகமாகத் தெரிந்துக்கொள்ளவேண்டியதாயிருந்த போதிலும், பாஷ்யத்தின் மூலத்தில் சொல்லியிருப்பவைகள் கீழேசொல்லப்படுகின்றன.

அஸ்ய ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாம ஸ்தோத்ர மாலா மந்த்ரஸ்ய வசின்யாதிப்யோ வாக்தேவதாப்யः ரிஷிப்யோ நமः (சிரஸி)

அனுஷ்டுப் சந்தஸே நமः (முகே)

ஸ்ரீ மஹாத்ரிபுரஸுந்தர்யை தேவதாயை நமः (ஹ்ருதயே)

க .....பீஜாய (நாபௌ)

ஸ .....சக்தயே (குஹ்யே)

ஹ.....கீலகாய (பாதயோः)

சதுர்வித புருஷார்த்த ஸித்யர்த்தே ஜபே விநியோகः (ஸர்வாங்கே).

பஞ்சதசியின் கூடத்ரயத்தையாவது, மாலா மந்த்ரத்தின் பீஜ த்ரயத்தையாவது இரண்டு தடவை சொல்லி கரந்யாஸ, ஹ்ருதயாதி கந்யாஸங்களைச் செய்துவிட்டு (கீழே சொல்லப்படும்) த்யான ச்லோகத்தைச் சொல்லி பஞ்சபூஜை செய்து நாமஸஹஸ்ரத்தைச் சொல்லவேண்டும்.

ந்யாஸம் முதலியவைகளைப் பற்றித் தெரியவேண்டுமானால் ப்ரபஞ்சஸாரம், சாரதா திலகம், அதற்கு ராகவபட்டரால் எழுதப்பட்ட பதார்த்தாதர்சம் என்ற பாஷ்யம், வரிவஸ்யாரஹஸ்யம் முதலியவற்றைப் பார்க்கவும். ———

ध्यानम्

अथ ध्यानश्लोकः

த்யான ச்லோகம்.

सिन्दूरारुणविग्रहां त्रिनयनां माणिक्यमौलिस्फुर
त्तारानायकशेखरां स्मितमुखीमापीनवक्षोरुहाम् ।
पाणिभ्यामलिपूर्णरत्नचषकं रक्तोत्पलं बिभ्रतीं
सौम्यां रत्नघटस्थरक्तचरणां ध्यायेत्परामम्बिकाम् ॥

ஸிந்தூராருண விக்ரஹாம்,
த்ரிநயநாம், மாணிக்ய மௌளிஸ்புரத்
தாராநாயகசேகராம்,
ஸ்மிதமுகீம், ஆபீன வக்ஷோருஹாம்
பாணிப்யாம் அலிபூர்ண ரத்னசஷகம்
ரக்தோத்பலம் பிப்ரதீம்,
ஸௌம்யாம், ரத்ன கடஸ்த
ரக்த சரணம், த்யாயேத் பராம் அம்பிகாம் ॥

ஸிந்தூரம் போன்ற சிகப்பான சரீரமுடையவளும், மூன்று நேத்ரங்களையுடையவளும், மாணிக்ய கசிதமான கிரீடத்தில் சோபித்துக்கொண்டிருக்கும் சந்த்ரனை சிரோபூஷணமாக உடையவளும், சிரித்த முகத்தோடு கூடியவளும், பருத்த குசங்களையுடையவளும், மத்யத்திலுல் நிரம்பியதும், ரத்னமயமானதுமான குடத்தையும், சிவந்த நிறமுடைய உத்பல புஷ்பத்தையும், கைகளில் வைத்திருப்பவளும், ப்ரஸன்னமான முகத்தையுடையவளும், ரத்னங்கள் நிரம்பிய குடத்தின் மேல் வைக்கப்பட்ட சிவந்த பாதங்களையுடையவளும், ஸர்வோத்க்ருஷ்டமானவளுமான அம்பாளை த்யானம் செய்யவும்.

1. மௌளி என்பது உத்தமமாயிருப்பதையும் குறிக்குமாகையால் மாணிக்யம் போல் சிரேஷ்டமான (தாராநாயக சேகராம்) என்றும் சொல்லலாம்.

2. 'அலி' என்றால் மத்யம். 'அலிபூர்ணம்' என்றால் மத்யபூர்ணம் என்று அர்த்தம்.

3. 'அலி' என்றால் தேனீக்கும் பெயர். மதுவிஞல்(தேனால்) நிரம்பி இதின் வாஸனையினால் இழுக்கப்பட்ட தேனீக்களோடு இருப்பதால் ஆவைகளால் பூர்ணமாகப்பட்டது போல் தோன்றுவது 'அலிபூர்ணம்' என்று சொல்லலாம்.

4. 'உத்பலம்'-நெய்தல் புஷ்பம் அல்லது தாமரைப்புஷ்பம்.


5. 'மாணிக்ய மௌளிம் ஸ்புரத்', 'மணிபூர்ண ரத்னசஷகம்', 'ரத்னேத்பலம்', 'ரத்ன கடஸ்த ஸவ்ய சரணம்' என்ற பாடாந்தரங்கள் 'சாரதா திலக' ல

इति श्रीब्रह्माण्डपुराणे उत्तरखण्डे श्रीहयग्रीवागस्त्यसंवादे
श्रीललितानामसहस्रपूर्वभागो नाम
प्रथमोध्यायः ॥

இதி ஸ்ரீ ப்ரம்ஹாண்டபுராணே உத்தரகண்டே
ஸ்ரீ ஹயக்ரீவாகஸ்த்ய ஸம்வாதே
ஸ்ரீ லலிதாநாமஸஹஸ்ர பூர்வபாகோ நாம
ப்ரதமாத்யாயः ॥

ஸ்ரீ லலிதாஸஹஸ்ரநாமம்
பூர்வபாகம் முற்றிற்று."

श्रीचक्रम्



बिन्दुत्रिकोणवसुकोणदशारयुग्म मन्वश्रनागदलसंयुतषोडशारम् ।
वृत्तत्रयं च धरणीसदनत्रयं च श्रीचक्रमेतदुदितं परदेवताया: ॥

ஸ்ரீ லலிதா மஹா த்ரிபுரஸுந்தர்யை நமः

ஸ்ரீ லலிதா ஸஹஸ்ர நாமம்.

श्रीमाता

ஸ்ரீமாதா (1)

ஸர்வோத்க்ருஷ்டமான தாயாராக இருப்பவள்.

1. லோகத்தில் துக்க தசையில் தாயாரை ஸ்மரிப்பது ப்ரஸித்தமான விஷயம். ஆயினும் நாம் எடுத்திருக்கும் அனேக ஜன்மங்களில் அனேகம் தாயார்கள் இருந்தபோதிலும் அவர்கள் நம்முடைய தாபத்ரயாத்மகமாகிய துக்கங்களைப் போக்கடிக்க முடியாதவர்களாகையால், அந்த ஸாமார்த்தியமுள்ள ஸர்வோத்தமமான ஜகன்மாதாவைத்தான் 'மாதா' என்று சொல்லமுடியும். எல்லாவிதமான தாயார்களையும் விட உத்க்ருஷ்டமானவளாகையால் 'ஸ்ரீமாதா' என்று பெயர்.

"நாராயணீ ஸஹஸ்ர ஸம்பவவைசாத் ஜாதா ஜனன்யः கதிப்ரக்யாதா ஜனகாः கியந்த இதிமே ஸந்ஸ்யந்தி சாக்ரோகதி!
ஏதேஷாம் கணனாவ காஸ்தி மஹதः ஸம்ஸார ஸிந்தோர்விதேः
பீதம் மாம் நிதராம் அகண்ய சரணம் ரக்ஷாத்ரிகாம்பாதிதே!!

(தேவீ மஹிம்ந ஸ்தோத்ரம்)

2. ஸ்ரீ - லக்ஷ்மியினுடைய அல்லது ஸரஸ்வதியினுடைய மாதா - தாயார். 'ஸ்ரீ' என்கிற பதத்திற்கு லக்ஷ்மி, ஸரஸ்வதி முதலான அர்த்தங்கள் உண்டு. ஆனால் இந்த இடத்தில் அம்பாள் அவர்களுக்கு ஸமானமான நாத்தானி அல்ல. அவர்களையெல்லாம் உண்டாக்கினவளாயும், பரமசிவ மஹிஷியாயும் பராபட்டாரிகையாகவும் இருக்கிற ரூபத்தைச் சொல்லப்பட்டிருக்கிறது.

3. 'மா' என்பதற்கு அளக்கிறது என்று அர்த்தம். 'லக்ஷ்மியை அளக்கும்படியான வஸ்து' என்று பொருள். அளக்கப்படுவதைவிட அளக்கிற வஸ்து ச்ரேஷ்டமாகையால் அம்பாள் அனைவரிக்க ஸ்ரீ ரூபமான 'மோக்ஷலக்ஷ்மிரூபி' என்று அர்த்தம்.

4. 'ஸாதரி ஸ்ரீரம்ருதா ஸகாம்' என்ற ச்ருதியில் சொன்ன ப்ரகாரம், ஸ்ரீ என்பதற்கு அர்த்தமான வேதங்களை ப்ரும்மாவுக்கு சொல்லியதால் 'ஸ்ரீ மாதா' என்று பெயர்.

"யோ ப்ரும்ஹாணம் விததாதி பூர்வம் யோவை
வேதாம்ச்ச ப்ரஹிணோதி தஸ்மை" (சுருதி)

5. வேதத்தை முதல் முதலாக வெளிப்படுத்தியவள். மாதா வது வியாஸருடா என்று அர்த்தம்.

6. ஸ்ரீ-ஸீஷத்தை, மாதா-(கண்டத்தில்) தரித்துக்கொண்டி ருக்கிறவள். (ஸ்ரீகண்டன் என்று பரமசிவனுக்குப் பெயர். அவ ரோடு அபின்னமாக இருப்பதால் அம்பாளுக்கும் அதே பெயர்.)

7. மஹாத்மானவர்களையோ, மஹாத்மாண வஸ்துக்களையோ சொல்லும்போது அந்தப் பெயருக்கு முன் 'ஸ்ரீ' என்ற பதம் சேர்க் கப்படுவது வழக்கம். ஸ்ரீ சக்ரம், ஸ்ரீ சைலம், ஸ்ரீ வித்யா முதலிய வைகளில் காணலாம். அதேமாதிரி இன்னுருடைய தாயார் என்று இல்லாமல் எல்லாவற்றிற்கும் அம்பாள் தாயாராக (ஜனனியாக) இருப்பதால் அவளை 'ஸ்ரீமாதா' என்று சொல்லப்பட்டது.

"யதோவா இமானி பூதானி ஜாயந்தே" (சுருதி)

8. 'ஈசான' 'ஈச்வர' என்ற பதங்கள் பரமசிவனைத்தவிர வேறு ஒருவரையும் குறிப்பிடாதது போல் 'மாதா' என்ற பெயர் ஸாக்ஷாத் த்ரிபுரஸுந்தரி என்று அர்த்தமே தவிர வேறல்ல.

9. 'லகுஸ்துதி'யிலிருக்கும் 'மாயாகண்டலினீக்ரியா மதுமதி' என்ற மந்த்ரோத்தார ச்லோகத்தை அனுஸரித்து 'மாதா' என் பது ஒரு மந்த்ரமாகையால் அந்த மந்த்ர ஸ்வரூபமாக இருப்பவள்.

श्रीमहाराज्ञी
ஸ்ரீமஹாராக்ஞீ (2)

ஸர்வோத்க்ருஷ்டமான ராணியாக இருப்பவள், அதாவது ஸகல ப்ரபஞ்சத்தையும் பரிபாலனம் செய்பவள்.

1. ச்ருதியிலும் 'ஏன ஜாதானி ஜீவந்தி' என்று இதில் சொல்லப்பட்டிருக்கிறது.

2. இதில் அடங்கியிருக்கும் மந்த்ர விசேஷங்களை குருமுக மாகத் தெரிந்துகொள்ள வேண்டியது.

श्रीमत्सिंहासनेश्वरी
ஸ்ரீமத் ஸிம்ஹாஸனேச்வரீ (3)

ஸர்வோத்க்ருஷ்டமான ஸிம்ஹாஸனத்தில் வீற்றிருப்பவள்.

1. மிருகங்களுக்குள் சிங்கம் பிரதானமாகையால், அரசர்கள் உட்காரும் ஆஸனமானது சிங்கம்போன்ற உருவங்களின் மேல் வைக்கப்பட்டிருக்கும். அதனால் 'ஸிம்ஹாஸனம்' என்ற பெயர். அம்பாள் ப்ரபஞ்ச ஸாம்ராஜ்யலக்ஷ்மியோடு கூடிய ஸிம்ஹாஸனத்துக்கு ஈச்வரீ, ஸிம்ஹாஸனத்தில் இருப்பவள்.

2. ஸிம்ஹத்தையே ஆஸனமாக உடையவள், 'ஸிம்ஹ வாஹினி' என்ற அர்த்தம்.

ஸிம்ஹம் ஆருஹ்ய கன்யாத்வே நிஹதோ மஹிஷோ யா |
மஹிஷக்னீ ததோ தேவீ தஸ்யா ஸிம்ஹாஸ்ரயச்வரீ ||
(தேவீபுராணம்)

2. 'பச்யகன்' என்ற பதம் 'சுச்யபன்' என்றும், 'வஹி' என்பதிலிருந்து 'ஸிவ' என்றும் மாற்றக்கூடியதுபோல் 'ஸிம்ஹ' என்ற பதத்தை 'ஹிம்ஸ' என்றும் மாற்றலாம். அந்த விதத்தில் 'ஹிம்ஸா ஈனேச்வரீ'—ஜகத்தையெல்லாம் ஸம்ஹாரம் பண்ணும் படியான சக்தியுள்ளவள் என்ற அர்த்தம்.

'யத் ப்ரயந்தி அபிஸம்விசந்தி' (சுருதி)

4. சைதன்ய பைரவி முதல், ஸம்பத்ப்ரதா பைரவி முடிய எட்டு மந்த்ரங்கள் உண்டு. அவைகள் 5 ஸிம்ஹாஸனங்களாக நாலுதிக்குகளில் நாலுபக்கம், நடுவில் ஒன்றுமாகவும் இருப்பதாக ஞானார்ணவ தந்த்ரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. அந்த ஸிம்ஹாஸனங்களுக்கெல்லாம் ஈச்வரீ என்ற மந்த்ரபரமாக அர்த்தமுண்டு.

5. அப்பாள் 'மஹாராஜ்ஞீ'யென்று சொல்லப்பட்டாலும், ராஜாவுக்கு லக்ஷணம் ஸிம்ஹாஸனம் ஆனபடியாலும் அதிகாற்போல் 'ஸிம்ஹாஸனேச்வரீ' என்ற நாமம் சொல்லப்பட்டது.

முதல் மூன்று நாமங்களாகிற ஸ்ரீமாதா, ஸ்ரீமஹாராஜ்ஞீ ஸ்ரீமத் ஸிம்ஹாஸனேச்வரீ, இவைகளில் முன்னுள்ள அம்பாளாகிற ப்ரும்ஹத்தினுடைய ஸ்ருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரம் இம்மூன்று கர்த்ருத்வமும் சொல்லப்பட்டிருக்கிறது. 'பஞ்சக்ருத்யபராயணை' என்று பின்னால் சொல்லப்பட்டபடி, பாக்கி இரண்டாகிய 'திரோதானம், அனுக்ரஹம்' இவைகளை 'சைதன்யைக்ய ரூபிணீ' என்ற நாமம் முடிய இனிவரும் நாமங்களால் வர்ணிக்கப்படுகிறது. புராணங்களில் இருக்கும் அம்பாளுடைய அவதார வர்ணனையைப் பெரும்பாலும் அனுஸரித்து, திரோதான அனுக்ரஹமாகிற பந்தமோக்ஷங்களுக்கு ப்ரும்ஹ ஸ்வரூபிணியாகிய அம்பாள்தான் கர்த்தா என்பதைச் சொல்லப்பட்டிருக்கிறது.

चिदग्निकुण्डसंभूता

சிதக்னி குண்ட ஸம்பூதா [4]

சிதக்னி குண்டத்தில் ஆவிர்ப்பவித்தவள்.

1. சித் - கேவலமான ப்ரும்ஹம் அதாகிற அக்னிகுண்டம்- அவித்யையாகிற இருட்டுக்கு விரோதியானதால்-அதில் ஸம்பூதா - ஆவிர்ப்பவித்தவள். சக்தி, சக்தியுள்ளவன் இவையிரண்டும் அபேதமாக இருப்பதுபோல், கேவலம் ப்ரும்ஹஸ்வரூபியா யிருப்பவள்.

" அந்தர் நிரந்தர நிரிந்தனம் ஏதமானே மோஹாந்தகார
பரிபந்தினி ஸம்விதாக்நெள "

"சித்சக்தி: பரமேச்வரஸ்ய விமலா சைதன்ய மேவோச்யதே".
(ஸங்கேஷபசாரீரகம்)

2. 'சித்' - ஞானம் என்பதே அக்னிக்கு ஸமமானதென்று பிரஸித்தம். அந்த குண்டத்திலிருந்து உதித்தவள்.

ஞாநாக்னி: ஸர்வகர்மாணி பஸ்மஸாத் குருதே அர்ஜுன'
(பகவத்கீதை)

3. ப்ரும்ஹாண்ட புராணத்தில் சொல்லப்பட்டபடி, பண்டாசுரனால் பீடிக்கப்பட்ட தேவர்களால் மூடப்பட்ட அக்னி குண்டத்திற்கு 'சிதக்னி குண்டம்' என்றபெயர். அதில் ஆவிர்ப்பவித்தவள்.

'குண்டம் யோஜன விஸ்தாரம் ஸம்யக் க்ருத்வா அதிசோபனம்'

देवकार्यसमुद्यता

தேவகார்ய ஸமுத்யதா (5)

தேவர்களுடைய கார்யத்தைச்செய்வதில் முயற்சியுடையவள்.

1. நித்யையான அம்பாள் எதற்காக அவதாரம் எடுக்க வேண்டுமென்பதற்குக் காரணம் சொல்லப்படுகிறது. தேவர்களுடைய கார்யம்—பண்டாஸுரன், மஹிஷாஸுரன் முதலிய அஸுரர்களை ஸம்ஹாரம் செய்வது—அதற்காக ஆவிர்ப்பவித்தவள்.

'தேவானாம் கார்யஸித்யர்த்தம் ஆவிர்பவதி ஸா யதா |
உத்பன்னேதி ததா லோகே ஸா நித்யா ப்யபிதீயதே ||
(ஸப்தசதி)

2. இந்த இரண்டு நாமங்களால் அம்பாளுடைய சித்ஸ்வரூபத்தைச் சொல்லிவிட்டு விமர்சரூபத்தை வர்ணிக்க ஆரம்பிக்கப்படுகிறது.

उद्यद्भानु सहस्राभा

உத்யத் பாநு ஸஹஸ்ராபா (6)

"ஸஹஸ்ரம்" என்ற பதத்திற்கு, "கணக்கில் அடங்காதது" என்று அர்த்தம் உண்டு.

1. பாநு ஸஹஸ்ர – கணக்கில்லாத கிரணங்களையுடைய (பாநு - கிரணம்) ஸூர்யன் உதிக்கும்போது இருக்கும், ஆபா - (சிகப்பு) நிறத்தோடு கூடியவள்.

2. பாநு - ஸூர்யன் என்கிற அர்த்தத்தில் கணக்கில்லாத ஸூர்யன்கள் ஏககாலத்தில் உதித்தால் என்ன காந்தி இருக்குமோ அம்மாதிரி காந்தி உடையவள்.

இந்த இரண்டு விதத்திலும் அம்பாளுடைய காந்தியையும் சிகப்பு நிறத்தையும் சொல்லப்பட்டிருக்கிறது.

ஸ்வாத்மைவ தேவதா ப்ரோக்தா லலிதா விச்வவிக்ரஹா |
லலிதாயாஸ்து தத்விமர்ச: ஸ்யாத் உபாஸ்திரிதி பாவநே ||
(ஸ்வதந்த்ர தந்த்ரம்)

ஸ்வயம் ஹி த்ரிபுராதேவீ லலிதாயம் தத்விமர்சனம்
(வாமகேச்வர தந்த்ரம்)

இம்மாதிரி ப்ரகாசம், விமர்சம் இவ்விரண்டின் ஸாமரஸ்யத்தோடு கூடிய அம்பாளுக்கு ஸ்தூலம், ஸூக்ஷ்மம், பரம் என்ற மூன்றுவித ரூபங்கள் உண்டு. கர சரணாதி அவயவங்களோடு கூடியது ஸ்தூலரூபம். மந்த்ரமயமாக இருப்பது ஸூக்ஷ்மம். வாஸனாமயமாக இருப்பது பரம். ஸூக்ஷ்ம ரூபம் திரும்பவும் மூன்றுவிதம். இவையில் ஸ்தூல ரூபத்தை இனி சொல்லப்படுகிறது.

चतुर्बाहु समन्विता

சதுர் பாஹு ஸமந்விதா (7)

நான்கு கைகளுடன் கூடியவள்.

த்யானத்தில் சொல்லப்படும் அவயவ மந்த்ரங்களுக்கும் உபலக்ஷணமாகச் சொல்லலாம். அதாவது அச்வாரூடா, ஸம்பத்கரீ, மந்த்ரிணீ, வாராஹீ இந்த நால்வரையும் அம்பாளுடைய கரங்களாகவும் சொல்லலாம்.

கைகளைப்பற்றிச் சொன்னதால் அவைகளிலிருக்கும் ஆயுதங்களைப்பற்றி அடுத்தாற்போல் சொல்லப்பட்டிருக்கிறது.

रागस्वरूप पाशाढ्या

ராக ஸ்வரூப பாசாட்யா (8)

இச்சாரூபமான பாசாயுதத்துடன் கூடியவள்.

1. பாசம் என்பது ஒரு வஸ்துவைப் பிடித்து இழுப்பதற்காகப் போடும் கயிறு. இதைக்கையில் வைத்துக்கொண்டிருப்பது ஸ்தூல ரூபம். இது இடதுகைகளிரண்டில் கீழ்க்கையில் இருப்பதாகச்சொல்லப்படும். இதற்கு அதிஷ்டான தேவதை அச்வாரூடா.

2. ராக - அனுராக என்கிற சித்தவ்ருத்தி விசேஷம், இச்சை, ஆசை என்று அர்த்தம். அதையே வாஸனைமய ரூபத்தில் பாசமாக அம்பாள் கைக்கொண்டு விளங்குகிறாள்.

क्रोधाकाराङ्कुशोज्ज्वला

க்ரோதாகாராங்குஶோஜ்வலா (9)

க்ரோதம் - த்வேஷம் என்கிற சித்தவ்ருத்தி. அந்த ரூபமான அங்குசத்தோடு ஜ்வலிக்கின்ற கையை உடையவள்.

1. 'ஆகாரம்' என்றால் ஸவிஷயகமான ஞானம். ஆகவே க்ரோதம், ஞானம் இவைகளான அங்குசத்தோடு கூடியவள்.

2. ஸ்தூல ரூபத்தில் அங்குசத்தை (கண்டாரக்கோடாவியை) அம்பாள் தன் வலதுகைகளிரண்டில் கீழ்க்கையில் வைத்துக் கொண்டிருக்கிறாள். இதற்கு அதிஷ்டான தேவதை லம்பத்காரீ.

मनोरूपेक्षुकोदण्डा

மனோரூபேக்ஷு கோதண்டா [10]

மனஸ் - ஸங்கல்பம், விகல்பம் இந்த க்ரியைகளை உடையது - அதாகிற, இக்ஷு-கோதண்டா - கரும்புவில்லையுடையவள்.

ஸ்தூல ரூபத்தில் புண்ட்ரேக்ஷு கோதண்டத்தை (செங்கரும்பு வில்லை) இடதுகைகளிரண்டில் மேல்கையில் அம்பாள் வைத்துக்கொண்டிருக்கிறாள். அதற்கு அதிஷ்டான தேவதை

पञ्चतन्मात्रसायका

பஞ்சதன்மாத்ரஸாயகா [11]

ஐந்து தன்மாத்ரைகளை (சப்த, ஸ்பர்ச, ரூப, ரஸ, கந்தம்) பாணங்களாக உடையவள்.

ஸ்தூல ரூபத்தில் ஐந்துவிதமான புஷ்ப(ங்களாகிய) பாணங்களை அம்பாள் தன் வலது மேல்கையில் வைத்துக் கொண்டிருக்கிறாள். இதற்கு அதிஷ்டான தேவதை கண்டாகர்ணா என்கிறவாராஹீ. இந்த புஷ்பங்கள் - கமலம், கைரவம், சிவந்த கல்ஹாரம் சிவந்த இந்தீவரம், ஸஹகாரம். இவைகளின் குணம் - ஹர்ஷணம், ரோசனம், மோஹனம், சோஷணம், மாரணம்.

'இச்சா சக்தி மயம் பாசம் அங்குசம் ஞான ரூபிணம் |
க்ரியா சக்திமயே பாண தநுஷீ தத்த உஜ்வலம் ||

என்றபடி பாசம் என்பது இச்சாசக்தி, அங்குசம் என்பது ஞானசக்தி, பாணம் தநுஸ் இவையிரண்டும் க்ரியாசக்தி.

இந்த நாலு ஆயுத நாமங்களிலும் அந்தந்த ஆயுதத்தின் மந்த்ரமானது ரஹஸ்யரூபமாக சொல்லப்பட்டிருப்பதை குருவினிடம் தெரிந்து கொள்ளவேண்டியது.

அம்பாளுக்கு மன்மதனைப்போல கரும்புவில்லும் புஷ்ப பாணங்களும் சொல்லப்பட்டிருப்பது கவனிக்கத் தக்கது. சக்ரன் காரணஸம்ப்ரதாயனையாகையால் காமேச்வரீ என்ற அம்பாளுக்கு 'லலிதா' என்ற பெயராதலால் அழகான வஸ்துக்கள் அம்பாளுக்கு ஆயுதமாக இருப்பது பொருத்தமானது.

'லலிதேதி நாமயுக்தம் தவேஷு திவ்யா நவா வ்ருதய: |
தநுர் ஜ்யா வம் அஸ்தராண்யபி: குஸுமானி ததாகிலம் லலிதம் ||

निजारूण प्रभापूर मज्जद्ब्रह्माण्डमण्डला

நிஜாருண ப்ரபாபூர மஜ்ஜத் ப்ரம்ஹாண்ட மண்டலா [12]

தன்னுடைய சிகப்பான காந்தியின் ப்ரவாஹத்தினால் ப்ரும்ஹாண்டங்களினுடைய மண்டலங்களை முழுகச் செய்கிறவள்.

அம்பாள் சம்பந்தப்பட்டு விசேஷமாக த்யானிக்கப்படுவது வழக்கம்.

"யதேதத் தவத் ரூபம் ஸகலம் அருணாபம்"
"அருணம் கருண தரங்கிதாக்ஷீம்"
"ஸிந்தூராருண விக்ரஹாம் த்ரிநயநாம்"

இனி அம்பாள் சிதக்னி குண்டத்
பிரகாரம் சிஸ்ஸ முதல் பாதபத்மம் வரையில் அம்பாளுடைய ஸ்தூல ரூபம் வர்ணிக்கப்படுகிறது. (பஞ்சதசியிலும் வாக்பவ கூடம் முதலியிருக்கிற பிரகாரம் அதின் ஸ்தானமாகிற சிரஸ் ஸிலிருந்து ஆரம்பிப்பதும் பொருத்தமாக இருக்கிறது).

चम्पकाशोक पुन्नाग सौगन्धिक लसत्कचा

சம்பகாசோக புன்னாக ஸௌகந்திக லஸத்கசா (13)

சம்பகம், அசோகம், புன்னாகம், ஸௌகந்திகம் இவைகளின் புஷ்பங்களுடன் சோபிக்கிற கூந்தலை உடையவள்.

அம்பாளுடைய கூந்தலுக்கு இயற்கையாகவே வாஸனை இருப்பதால், தரிக்கப்படும் புஷ்பங்கள் அலங்காரமாக இருக்கின்றனவே தவிர, அவைகளால் வாஸனை உண்டுபண்ணவேண்டிய அவச்யமில்லையென்றும் அர்த்தம்.

ஜாநுஸி புஷ்ப கந்தான் ப்ரமரத்வம் ப்ரூஹி தத்வம் மே |
தேவ்யா: கேச கலாபே கந்த: கேனோபமீயேத ||

कुरुविन्द मणिश्रेणी कनत्कोटीरमण्डिता

குருவிந்த மணிச்ரேணீ கனத்கோடீரமண்டிதா (14)

பத்மராகங்களின் கோர்வைகளால் ப்ரகாசிக்கின்ற கிரீடத்தால் அலங்கரிக்கப்பட்டவள்.

குருவிந்தமணி என்கிற பத்மராகமானது அதின் தியான மாத்ரத்தால் காமம், ஆரோக்யம், மங்களம், விஷ்ணுபக்தி இவைகளை அதிகரிக்கும்படி செய்யும் தன்மை உடையது. இங்கே சொல்லப்பட்ட காரணம் பூர்தாடு கூடிய கிரீடத்தை உடையவளாக அம்பாளை த்யானம் செய்தால் பக்தி அதிகரிக்கும் என்பதும் ஸூசனை செய்யப்பட்டிருக்கிறது.

अष्टमी चन्द्रविभ्राजदलिकस्थल शोभिता

அஷ்டமீ சந்த்ர விப்ராஜத் அலிகஸ்தல சோபிதா (15)

அஷ்டமீ திதியில் இருக்கும் சந்த்ரனைப்போல் – அர்த்த சந்த்ரனைப்போல் – பிரகாசிக்கிற நெற்றியுடன் சோபிக்கிறவள்.

कलङ्काभ मृगनाभि विशेषका

ஸகசந்த்ர களங்காப ம்ருகநாபி விசேஷகா (16)

சந்த்ர மண்டலத்தில் களங்கம் காணப்படுவது போல் தன் முகமாகிற சந்த்ர மண்டலத்தில் களங்கத்துக்கு ஸமானமான கஸ்தூரி திலகத்தை உடையவள்.

वदनस्मर माङ्गल्य गृहतोरण चिल्लिका

வதனஸ்மர மாங்கல்ய க்ருஹதோரண சில்லிகா (17)

ஸ்மர மாங்கல்ய க்ருஹ – மன்மதனுடைய மங்களகரமான வீடு அரண்மனை)க்கு ஸமானமான முகத்தில் அந்த அரண்மனையில் கட்டப்பட்டிருக்கும் தோர் சீலைபோல் இருக்கும் புருவங்களை உடையவள்.

वक्त्रलक्ष्मी परीवाह चलन्मीनाभलोचना

வக்த்ர லக்ஷ்மீ பரீவாஹ சலன் மீனாபலோசனா (18)

தன் முகத்தினுடைய ஸௌந்தர்ய (காந்தி) ப்ரவாஹத்தில் ஓடும் மீன்கள்போல் இருக்கும் கண்களை உடையவள்.

மீன் தன் குஞ்சுகளைப் பால்கொடுத்து வளர்ப்பதில்லையென்றும், அவைகளைத் தன் கண்களால் பார்ப்பதிலேயே வளர்க்கிறதென்றும் சொல்வதுண்டு. அந்தமாதிரி அம்பாள் ஸமஸ்த லோகத்தையும் தன் கண்பார்வையாலேயே ரக்ஷித்துவருவதால் மீன் போன்ற கண்களையுடையவள்' (மீனாக்ஷி) என்று சொல்வதுபோல், 'மீனபலோசனா' (மீனலோசனீ) என்று இங்கு சொல்லப்பட்டு இருக்கிறது.

नवचम्पक पुष्पाभनासादण्ड विराजिता

நவ சம்பக புஷ்பாப நாஸாதண்ட விராஜிதா (19)

புதிதாக (அல்லது கொஞ்சம்) மலர்ந்திருக்கும் சம்பக புஷ்பத்தைப்போன்ற மூக்கினால் அதிகமான சோபையுடையவள்.

ताराकान्ति तिरस्कारी नासाभरण भासुरा

தாராகாந்தி திரஸ்காரீ நாஸாபரண பாஸுரா (20)

சுக்ர நக்ஷத்திரத்தின் காந்தியைத் தோற்கடிக்கிற காந்தியோடு கூடிய(மாணிக்ய மூக்குத்தியான) மூக்குத்தியுடன் விளங்குகிறவள்

कदम्बमञ्जरी क्लृप्तकर्णापूर मनोहरा

கதம்ப மஞ்ஜரீ க்லுப்த கர்ணபூர மனோஹரா (21)

கதம்பத்தின் துளிர்களே தன் காதுகளில் (கர்ணப்பூ மாதிரி) தரித்திருக்கும் மனோஹரமான ரூபத்தை உடையவள்.

वाटङ्क युगलीभूत तपनोडुप मण्डला

தாடங்க யுகளீபூத தபனோடுப மண்டலா (22)

ஸூர்யன் சந்த்ரன் இவர்களே இரு காதுகளில் தாடங்கங்களாய் (ஓலைகளாய்) தரித்துக்கொண்டிருப்பவள்.

"ஸூர்ய சந்த்ரௌ ஸ்தனௌ தேவ்யா: தாவேவ நயனே
ஸ்ம்ருதௌ |
உபௌ தாடங்க யுகளம் இத்யேஷா வைதிகீ ச்ருதி: 11

ஸுமங்கலிகளுக்கு தாடங்கம் விசேஷமான ஆபரணம். அம்பாளுடைய தாடங்கத்தின் மஹிமையைப்பற்றி நமது ஆசார்யாள் 'ஸௌந்தர்ய லஹரி'யில் சொல்லுகையில் அந்த மஹிமையால் தான் பரமசிவன் ஹாலாஹல விஷத்தை சாப்பிட்ட போதிலும், உயிருக்கு ஹானி ஒன்றும் ஏற்படவில்லை என்பதாக வர்ணித்திருக்கிறார்கள்.

ஸுதாமப்யாஸ்வாத்ய ப்ரதிபய ஜராம்ருத்யு ஹரிணீம்
விபத்யந்தே விச்வே விதிசதமகாத்யா திவிஷத:
கராளம் யத்க்ஷ்வேளம் கபளிதவத: காலகலனா
ந சம்போஸ்தன்மூலம் தவ ஜனனி தாடங்க மஹிமா 11

पद्मरागशिलादर्श परिभावि कपोलभूः

பத்மராக சிலாதர்ச பரிபாவி கபோலபூ: (23)

நிர்மலமாயும் ப்ரதிபிம்பத்தைக் காட்டக் கூடியதாயும் இருப்பதில் பத்மராகரத்னத்தில் செய்யப்பட்ட கண்ணாடியை அதிசயித்த கன்னங்களை உடையவள்.

नवविद्रुमबिम्बश्री न्यक्कारि दशनच्छदा

நவவித்ரும பிம்ப ஸ்ரீ ந்யக்காரி தசனச்சதா (24)

புதியதான பவழம், கோவைப்பழம் இவைகளின் காந்தியை தாழ்த்துகின்ற (அவைகளைவிட அழகான) உதடுகளை உடையவள். (காமத்தில் 'ரதனச்சதா' என்றும் சொல்வதுண்டு).

शुद्धविद्याङ्कुराकार द्विजपङ्क्ति द्वयोज्ज्वला (25)

சுத்தவித்யாங்குராகார த்விஜ பங்க்தி த்வயோஜ்வலா

சுத்த வித்யையின் துளிர்கள் (அல்லது மூளைகள்) போன்ற வரிசைகளோடு சோபிக்கிறவள்.

1. 'த்விஜ'என்பதற்கு பல் என்றும், பக்ஷி என்றும்,ப்ராம்மணன் என்றும் அர்த்தம். ஒரு தடவை முளைத்து விழுந்து பிறகு முளைப்பதினாலும், முட்டையாகப் பிறந்து திரும்பவும் அந்த முட்டையிலிருந்து வெளிப்படுவதாலும், உபநயனம் இரண்டாவது பிறப்பாகச் சொல்லப்படுவதாலும், இவை மூன்றும் இம்மாதிரி 'த்விஜ' என்ற பதத்திற்கு அர்த்தமாகிறது.

2. 'ஸா பவதி சுத்தவித்யாயா இதம்தாஹ்ரம் தேயோர் அபேதம்' என்ற வாக்கியத்திற்கு தத்தாத்ரேய ஸம்ஹிதை முதலிய வைகளில் ஸ்ரீவித்யையே சுத்தவித்யை என்று சொல்லப்படுகிறது. அதற்கு ஷோடசாக்ஷரீ மந்த்ரம் அங்குரமாக (முளையாக) இருக்கிறது. அவற்றில் முளையொன்றுக்கு இரண்டு தளம் இருப்பதால் 32 தளமாகிறதென்றும் அவைகளை அம்பாளுடைய பல் வரிசைகளாக இருக்கின்றனவென்றும் அர்த்தம்.

3. 'வித்யா ஹ வை ப்ராம்மணம் ஆஜகாம' என்றபடி வேதம் முதலான வித்யைகள் ப்ராம்மணரிடம் ஆச்ரயித்து இருக்கின்றன. அவன் அவைகளைத் தெரிந்துக்கொண்டு பிறருக்குச் சொல்லிக்கொடுத்து விஸ்தாரப்படுத்துவதால் அம்மாதிரி சொல்லப்பட்டிருக்கிறது. அதனால் ப்ராம்மணர்கள் 'வித்யாம்ருதான்'. அதேமாதிரி (சுத்த) நிர்மலமாயும் வித்யைகளுக்கு அங்குரமாயுள்ள ப்ராம்மணர்களுடைய பங்க்தி த்வயத்தினால் சொல்லியிருப்பவள் என்று அர்த்தம் சொல்லலாம். 'ப்ராம்மணோஸ்ய முகம் ஆஸீத்' என்றபடி ப்ராம்மணர்கள் அம்பாளுடைய முகத்திலிருந்து உதித்தவர்களாகையால் தந்தங்களை மூர்த்தீகரித்து வந்ததாகவும் சொல்லலாம்.

4. சுத்தவித்யை முதல் அனுத்தமா பர்யந்தம் 32 வித்யைகள் தந்த்ரங்களில் சொல்லப்பட்டிருக்கின்றன. 'நிஷாதா ஜன்ம க்ருதியம் ஸ்யாத்' என்றபடி நிஷாதனாலாகிற முன்றாவது பிறப்பு என்று சொல்லப்படுகிறது. பிதாவினிடமிருந்து மனைவி, உபநயனம், பிறகு தீக்ஷை என்று மூன்று பிறப்பில், தீக்ஷை மூன்றுவதாக இருந்தாலும், உபநயனத்திலிருந்து தீக்ஷை இரண்டாவது பிறப்பாகச் சொல்லப்படுமாகையால் மேலே சொல்லிய தீக்ஷைகளையும் 'தந்த்ரபங்க்தி' என்றும் சொல்லலாம். 32 ஆக இருப்பதால் 32 பல்களுக்கு ஸமானமாக 'தந்த்ரபங்க்தித்வயம்' என்று வரும்.

ம். சுத்தவித்யா என்றால் 'த்ர்யக்ஷரீ' மந்த்ரத்திற்கும் அர்த்தம். அது உபதேசம் ஆனபிறகுதான் மேலே சொல்லிய தீக்ஷைகள் அடையவேண்டியதாகையால் அவற்றிற்கு முன்போல் இருப்பதால் மேலே சொல்லிய 'த்விஜபங்க்தி த்வய' த்தினுடைய ஆகாரமான(ரூபமான)'சுத்தவித்யாங்குர' மாகவுமிருக்கிறது என்றும் அர்த்தம். ஸம்ப்ரதாயக்ரமமாக 32 தீக்ஷைகளையும் பெற்ற மஹான்களுக்குத் தான் அம்பாளுடைய அனுக்ரஹம் கிடைக்குமென்று ஸூசனை செய்யப்பட்டிருக்கிறது.

कर्पूर वीटिकामोद समाकर्षिदिगन्तरा

கர்பூர வீடிகா மோத ஸமாகர்ஷிதிகந்தரா (26)

(தன்னுடைய முக கமலத்திற்கும்) கர்பூரவீடிகா என்கிற தாம்பூல விசேஷத்தினுடைய வாஸனையினால் தன்னிடம் இழுக்கப்பட்ட திக்குகளை உடையவள்.

1. பத்து திக்குகளுடைய தேவதைகள் அம்பாள் முகத்திலிருக்கும் தாம்பூலத்திற்கு ஆசைப்பட்டு, அது கிடைக்காததினால் அதின் வாஸனையாவது நமக்கு கிடைக்கட்டும்என்று ஒருவருக்கொருவர் போட்டிபோட்டுக்கொண்டு பிறருக்குத் தெரியாமல் அம்பாளையே சூழ்ந்துக்கொண்டு எப்போதும் இருப்பதாகவர்.

2. 'ஸமாகர்ஷித்' என்பதற்கு வாஸனையோடு கூடியதாய் செய்யப்பட்டது என்றும் சொல்லலாம். அம்பாளுடைய கர்பூர வீடிகையினுடைய வாஸனையானது பத்து திக்குகளிலும் பரவி அவைகளை பரிமளிக்கும்படி செய்கிறது என்று தாத்பர்யம்.

3. கர்பூரவீடி என்பது

ஏலா லவங்க கர்பூர கஸ்தூரீ கேஸராந்விதா: |
ஜாதிபலதலா: பூகா: லாங்கல்யூஷணாகரா: |
சூர்ணா: கதிரஸாத்யைச்ச யுக்தா கர்பூர வீடிகா ||

4. அம்பாளுடைய முகத்திலிருக்கும் வீடிராஜஸத்தின் மஹிமையைப்பற்றி ஆசார்யாள் சொல்வது:

கவித்வ பரிபாடீம் அகாதிப ஸுதா
கோடீகுலாத் அதிகதாடீம் உதாரமுக வீடீரஸேன தநுதாம்||
(அம்பாஷ்டகம்)

5. அம்பாளுடைய வீடிராஜம் தான் காளிதாஸனுடைய கவித்வ சக்திக்கு ஆதாரம் என்பது ப்ரஸித்தமான விஷயம்.

निजसल्लाप माधुर्य विनिर्भर्त्सित कच्छपी

நிஜஸல்லாப மாதுர்ய விநிர் பர்த்ஸித கச்சபீ (27)

தன்னுடைய பேச்சின் இனிமையினால் கச்சபீ என்கிற வீணையைக்கூட தோற்கடித்தவள்.

1. 'கச்சபீ' என்பது ஸரஸ்வதி தேவியின் வீணைக்குப் பெயர். (விச்வாவஸு என்னும் கந்தர்வனுடையது ப்ருஹதீ, தும்புருவுடையது கலாவதீ, நாரதருடைய மஹதீ.)

2. லோகத்தில் நாதத்தில் எவற்றையும் விட இனிமையானது வீணை என்பது பிரஸித்தம். அதிலும் வாக் தேவதையான ஸரஸ்வதியின் வீணையைப்பற்றிச் சொல்லவேண்டியதில்லை. அதையும்விட இனிமையாக இருக்கிறது அம்பாளுடைய பேச்சு. ஆசார்யாளும் இதைப்பற்றி சொல்லியிருக்கிறார்கள்.

'வீபஞ்ச்யா காயந்தீ விவிதம் அபதானம் பசுபதேः
த்வயாரப்தே வக்தும் சலிதசிரஸா ஸாதுவசனே |
ததீயைர் மாதுர்யைः அபலபித தந்த்ரீ கலரவாம்
நிஜாம் வீணாம் வாணீ நிசுளயதி சோலேன நிபுதம் ||
(ஸௌந்தர்யலஹரி 66)

मन्दस्मित प्रभापूर मज्जत्कामेश मानसा

மந்தஸ்மித ப்ரபாபூர மஜ்ஜத்காமேச மாநஸா (28)

தன்னுடைய மந்முதுவான புன்சிரிப்பினுடைய காந்தியின் ப்ரவாஹத்தால் காமேச்வரருடைய மனஸ்தை முழுகச் செய்கிறவள்.

1. 'ஸ்மித' என்றாலேயே புன்சிரிப்பு. 'மந்தஸ்மித' என்பது அதிலும் விசேஷமானது.

2. 'மஜ்ஜத்' என்ற பதம் உபமேயாலங்காரமாகக் காரணம், முழுகிப்போய்விடுவோமே, அவ்வளவிட்டு வெளிவரமுடியாமல் தானாகவே முழுகிப்போகிறபடி, அந்த ப்ரவாஹம் முழுகிவிடுவதான ஆழமுடைய இருப்பதிலேயே முழுகினதும் முழுகாததுமாக அப்படியே வைத்துக் கொண்டிருக்கிறதாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

3. அம்பாள் சிதக்னிகுண்டத்திலிருந்து லலிதாபரமேச்வரனாக ஆவிர்ப்பவித்த பிறகு, பரமேச்வரன் காமேச்வரனாக வந்து இரு வருக்கும் விவாஹம் நடந்ததை லலிதோபாக்யானத்தில் சொல்லப் பட்டிருக்கிறது. அம்பாளுக்கும் காமேச்வரி, என்ற பெயர். இருவருடைய ஸௌஹார்தம் அன்யாத்ருசம். அம்பாள் காமேச்

வாருடைய மடியில் உட்கார்ந்திருப்பதாகவும், அந்த ஆனந்தத்தில் ஈடுபட்டு காமேச்வரர் எப்போதும் இருப்பதாகவும் சொல்லப்பட்டிருக்கிறது. இருவரும் ஒரே (சிகப்பு) நிறம், சந்த்ரகலாதாரர் பாசாங்குச இக்ஷு-புஷ்ப பாணங்கள் உடையவர்கள் சக்ருங்கார ரஸப்ரதானமானவர்கள்.

4. 'காமேச' என்பதற்கு காமகலா ரூபமாக இருக்கிறவரும் ராஜராஜேச்வரருமான பரமசிவன் என்று அர்த்தம்.

अनाकलित सादृश्य चिबुकश्री विराजिता

அனாகலித ஸாத்ருச்ய சிபுகஸ்ரீ விராஜிதா (29)

(வாக் தேவதைகள் முதல் யாராலும்) ஒப்பிட்டுச் சொல்ல முடியாத முகவாய்க்கட்டின் அழகோடு ப்ரகாசிக்கிறவள்.

'கதம்காரம் ப்ருமஸ்தவ சுபுகம் ஔபம்ய ரஹிதம்'

(ஸௌந்தர்யலஹரி)

कामेश बद्धमाङ्गल्य सूत्रशोभितकन्धरा

காமேச பத்த மாங்கல்ய ஸூத்ர சோபிதகந்தரா (30)

விவாக காலத்தில் காமேச்வரரால் கட்டப்பட்ட ஸௌபாக்யாபரணமான திருமங்கல்யத்தினால் சோபிதமான கழுத்தை உடையவள்.

कनकाङ्गद केयूरकमनीय भुजान्विता

கனகாங்கத கேயூர கமனீய புஜான்விதா (31)

ஸ்வர்ணமயமான தோள்வளைகளால் அலங்கரிக்கப்பட்ட (சதுர்) புஜங்களை உடையவள்.

கனக - ஸ்வர்ணமயமான, அங்கத-கைவளை, கேயூர-தோள்வளை, என்றும் அர்த்தம் உண்டு.

'கேயூராங்கத ஹார கங்கண முகாலங்கார விப்ராஜிதம்'

रत्नग्रैवेय चिन्ताक लोलमुक्ता फलान्विता

ரத்ன க்ரைவேய சிந்தாக லோல முக்தா பலான்விதா (32)

ரத்னகசிதமான கண்டாபரணத்தினுடைய பதக்கத்தோடும், ஆடிக்கொண்டிருக்கிற முத்துமாலைகளோடும் கூடியவள்.

'க்ரீவா' என்றால் கழுத்து. க்ரைவேயம் என்றால் கழுத்தில் போடும் ஆபரணம்.

1. ரத்ன க்ரைவேய - ரத்னகசிதமான கண்டாபரணத்தை யுடைய, சிந்தாக - (ஸ்வர்ண) பதக்கத்தோடும், லோல - ஆடிக் கொண்டிருக்கிற, (தொங்கிக்கொண்டிருக்கிற) முக்தா பலாவலீதா - முத்து மாலைகளோடும் கூடியவள்.

2. 'க்ரைவேய சிந்தாக' - கழுத்துவரையில்தான் த்யானம் பண்ண சக்தியுள்ளவர்கள். அதாவது தஹராகாசத்தில் அம்பாளுடைய ஸ்வரூபத்தை த்யானம் பண்ணமுடியாதவர்கள், மத்யம

'லோல', - சஞ்சலமான மனதுடையவர்கள், அதம அதிகாரிகள். முக்த - முக்தர்கள், உத்தம அதிகாரிகள்.

இந்த மூன்றுவிதமான பக்தர்களுக்கும் 'ரத்ன பூதான்யா பலானி' - ப்ரார்த்திக்கப்பட்ட அல்பபலம், அதிகபலம் இவை எவற்றையும் ... ய சக்தியை உடையவள்.

कामेश्वर प्रेम रत्न मणि प्रतिपणस्तनी

காமேச்வர ப்ரேம ரத்ன மணி ப்ரதிபணஸ்தனீ (33)

காமேச்வரருடைய ப்ரேமையாகிற ரத்னத்திற்கு பதிலாகக் கொடுத்த ரத்னங்களாகிற ஸ்தனங்களை உடையவள்.

1. அம்பாள் காமேச்வரருடைய ப்ரேமரத்னத்தைத் தன் ஸ்தன ரத்னங்களால் வாங்கியிருப்பதாக அர்த்தம்.

2. தான் வாங்கும் ப்ரேமையாகிற ஒரு ரத்னத்திற்கு, தன் ஸ்தனங்களாகிற இரண்டு ரத்னங்களை அம்பாள் கொடுத்ததிலிருந்து பதிலுக்குப் பதில் மட்டுமில்லாமல் இரட்டிப்பாகக் கொடுத்ததில் அம்பாளுடைய ப்ரேமாதிசயமும், பாதிவ்ரத்யாதிசயமும் வர்ணிக்கப்பட்டிருக்கிறது.

नाभ्यालवाल रोमालि लताफलकुचद्वयी

நாப்யாலவால ரோமாளி லதாபலகுசத்வயீ (34)

தொப்புளாகிற பாத்தியிலிருந்து கிளம்பியிருக்கும் மயிர் வரிசையாகிற கொடிக்கு பழங்களோ என்னும் தோன்றுகிற இரண்டு ஸ்தனங்களை உடையவள்.

நாபீ (தொப்புள்) ஆகிற, ஆலவால - பாத்தியிலிருந்து கிளம்பியிருக்கும், ரோமாளி லதா-மயிர் வரிசையாகிற கொடிக்கு, பல - பழங்களோ என்று தோன்றுகிற, குசத்வயீ - இரண்டு ஸ்தனங்களை உடையவள்.

'ஸ்தன முகுள ரோமாவலி லதாகலாவாலம்' (ஸௌந்தர்யலஹரீ)
லஸத்வ்ருத்த கம்பீர நாபீ ஸரஸ்தீர சைவால
சங்காகர ச்யாம ரோமாவலீ பூஷணே (ச்யாமளாதண்டகம்)

लक्ष्य रोम लताधारता समुन्नेय मध्यमा

லக்ஷ்ய ரோம லதாதாரதா ஸமுன்னேய மத்யமா (35)

(மேலே சொன்ன) ரோமலதையானது தெரிவதினால் மட்டும் ஊஹிக்க வேண்டியதாயிருக்கிற இடுப்பை உடையவள்.

உத்தம ஜாதி ஸ்திரீகளுக்கு இடுப்பு மிகவும் சிறியதாயிருக்கும் என்பது வர்ணனை. கண்ணுக்குத் தெரியாதபடி அவ்வளவு சிறியதாக இடுப்பு இருந்தபோதிலும், அது இருப்பதானது, ரோமலதை இருப்பதினால் ஊஹிக்க வேண்டியதாயிருக்கிறது.

'மித்யா த்ருஷ்டாந்த மத்ய பாகம் தே' (நவரத்னமாலா)

स्तन भार दलन्मध्य पट्टबन्ध वलित्रया

ஸ்தன பார தளன்மத்ய பட்டபந்த வளித்ரயா (36)

ஸ்தனங்களின் பாரத்தினால் முறிந்துபோய் விடுமோ என்று தோன்றக்கூடிய (மத்ய ப்ரதேசம்) இடுப்புக்கு கட்டப்பட்ட ஸ்வர்ண பட்டங்கள் போல் தோன்றுகிற, (த்ரிவலீ) மூன்று மடிப்புகளை உடையவள்.

உத்தமஜாதி ஸ்திரீ புருஷர்களுக்கு வெற்றியிலும் கழுத்திலும் வயிற்றிலும் மும்மூன்று கோடுகள் போன்ற மடிப்புகள் இருக்குமென்றும் ஸாமுத்ரிகா சாஸ்திரத்தில் சொல்லப்பட்டிருக்கிற.

"லலாடே சகளே சைவ மத்யேசாபி வளித்ரயம் |
ஸ்திரீபும்ஸயோர் இதம் ஜ்ஞேயம் மஹா ஸௌபாக்ய ஸூசகம்" ||

अरुणारुण कौसुम्भ वस्त्र भास्वत्कटीतटी

கௌஸும்ப வஸ்த்ர பாஸ்வத்
கடீதட (37)

அருணாருண - மிகவும் சிவந்த, அல்லது ஸூர்யனுடைய வராதியான அருணனைப்போல் சிவந்த, கௌஸும்ப (குஸும்பா) வஸ்த்ரத்தோடு ப்ரகாசிக்கும் இடையை உடையவள்.

रत्न किङ्किणिकारम्य रशनादामभूषिता

ரத்ன கிங்கிணிகாரம்ய ரசனாதாம பூஷிதா (38)

ரத்னமயமான கிங்கிணி மணிகளோடு மனோஹரமாக இருக்கும் இடுப்புக்கோடி (மேகலா ஸூத்ரம், ஒட்டியாணம்) யால் அலங்கரிக்கப்பட்டவள்.

'சாரு சிஞ்ஜத்கடீஸூத்ர' (*ச்யாமளாதண்டகம்*)

कामेशज्ञात सौभाग्य मार्दवोरुद्वयान्विता

காமேசக்ஞாத ஸௌபாக்ய மார்தவோருத்வயான்விதா (39)

காமேச்வரரால் மட்டும் தெரிந்து கொள்ளப்பட்ட (யாசிக்கப்பட்ட) அழகு, ம்ருதுத்வம் இவைகளையுடைய துடைகளோடு கூடியவள்.

माणिक्य मुकुटाकार जानुद्वय विराजिता

மாணிக்ய முகுடாகார ஜானுத்வய விராஜிதா (40)

ஒரோர் மாணிக்யத்தினால் செய்யப்பட்ட மகுடம் (தொப்பி) போல் இருக்கும் முழங்கால் சில்லுகளுடன் ப்ரகாசிக்கிறவள்

इन्द्रगोप परिक्षिप्त स्मर तूणाभजङ्घिका

இந்த்ரகோப பரிக்ஷிப்த ஸ்மர தூணாப ஜங்கிகா (41)

மினு மினுப் பூச்சிகளால் அலங்கரிக்கப்பட்ட (கசிதமான) மன்மதனுடைய அம்பறாத்தூணிகள் போன்ற முழங்கால்களை உடையவள்.

அதாவது, அவை பரமசிவனை ஜயிப்பதற்காக மன்மதனால் ஏற்படுத்தப்பட்ட அம்பறாத்தூணிகள் என்று வர்ணிக்கப்பட்

'பராதேஜதும் ருத்ரம் த்ரிகுண சரகர்பௌ கிரிஸுதே
நிஷங்கௌ ஜங்கே தே விஷம விஸிகோ பாடலம் அக்ருத'
(*ஸௌந்தர்யலஹரீ*)

'அனங்க தூணீர சங்காகாரோ தார ஜங்காலதே'
(*ச்யாமளாதண்டகம்*)

गूढगुल्फा

கூட குல்பா (42)

உருட்சியான(மாம்ஸலங்களான,பருத்த)குதிகால்களை உடையவள்

कूर्म पृष्ठ जयिष्णु प्रपदान्विता

கூர்ம ப்ருஷ்ட ஜயிஷ்ணு ப்ரபதான்விதா (43)

ஆமையினுடைய முதுகு ஓட்டைவிட அழகாய் வளைந்திருக்கும் புறங்கால்களோடு கூடியவள்.

'பதம்தே கீர்த்திஞ்ச ப்ரபதம் அபதம் தேவி விபதாம்
கதம் நீதம் ஸத்பி: கடின கமடூ கர்பர துலாம்'

(ஸௌந்தர்யலஹரீ)

नखदीधिति संछन्न नमज्जन तमोगुणा

நகதீதிதி ஸம்ச்சன்ன நமஜ்ஜன தமோகுணை (44)

தன் பாதங்களில் இருக்கும் நகங்களின் காந்தியினால் தன்னை நமஸ்கரிக்கும் ப்ரும்ஹா விஷ்ணு முதலியவாகளுடைய (தமோ குணம்) அக்ஞானமாகிற இருட்டைப் போக்கடிக்கிறவள்.

அம்பாளுடைய பாதங்களின் த்யானத்தால் அக்ஞான நாசம் ஏற்படுகிறது என்பது அர்த்தம்.

'சரணௌ பத்மஸங்காசௌ அஸ்யா: ஸ்வச்ச நகாத்யுபை:
ஸுராஸுராணம் நமதாம் கிரீடமணி காந்திபி: ॥
விசித்ர வர்ணைர் ஹரஸ்யந்தி ஸ்வச்சாயம் ப்ரதிபிம்பிதை: ॥
ப்ரவிச்ய நாசயிஷ்யந்தி தேஷாம் தூர்தம் குணாஸ்தம் ॥

(பத்மபுராணம்)

पदद्वय प्रभाजाल पराकृत सरोरुहा

பதத்வய ப்ரபாஜால பராக்ருத ஸரோருஹா (45)

தன் இரு பாதங்களுடைய காந்தி ஸமூஹத்தினால் தாமரைப் புஷ்பத்தைத் தோற்கடிப்பவள்.

शिञ्जान मणि मञ्जीर मण्डित श्रीपदाम्बुजा

சிஞ்ஜான மணி மஞ்ஜீர மண்டித ஸ்ரீ பதாம்புஜா (46)

சப்திக்கின்ற மணிகளையுடைய பாதஸரங்களால் அலங்கரிக்கப்பட்ட ஸ்ரீயுடைய பாதபத்மங்களோடு கூடியவள்.

मरालीमन्द गमना

மராளீமந்த கமனை (47)

(பெண்) ஹம்ஸம்போல் மெதுவான நடையை உடையவள்.

அன்னபக்ஷி சாதாரணமாகவே மெதுவாகநடக்கும் ஸ்வபாவ முடையது. அதிலும் பெண் அன்னமானது இன்னும் மெதுவாக நடக்குமாகையால், அதற்கு ஸமானம் என்று சொல்லப்பட்டது.

அம்பாளுடைய சிருஹத்திலிருக்கும் அன்னபக்ஷிகள் அம்பாளுடைய நடையின் அழகைப்பார்த்து, அம்மாதிரி நடக்க ஆசைப்பட்டு, கூடவே வருவதாகவும், அதை அவைகளுக்குச் சொல்லிக் கொடுப்பதுபோல் அம்பாளுடைய பாதஸரத்தின் மணிகள் சப்திக்கின்றன என்றும் ஆசார்யாள் வர்ணித்திருக்கிறார்கள்.

பதன்யாஸ க்ரீடா பரிசய மிவாரப்து மனஸ:
ஸ்கலந்தஸ்தே கேலம் பவன கலஹம்ஸா ந ஜஹதி |
அதஸ்தேஷாம் சிக்ஷாம் ஸுபகமணி மஞ்ஜீர ரணித:
சலாத் ஆசக்ஷாணம் சரண கமலம் சாருசரிதே ||

(ஸௌந்தர்யலஹரீ)

महालावण्यशेवधिः

மஹா லாவண்ய சேவதி: (48)

அழகுக்கெல்லாம் ஒரு களஞ்சியமாக இருப்பவள்.

'ஸௌந்தர்ய ஸார ஸீமந்தா' என்றபடி அம்பாள் ஸௌந்தர்யத்திற்கு இருப்பிடமென்றும், அவளுடைய ஸௌந்தர்யத்தைவிட அதிசயித்த ஸௌந்தர்யம் வேறு ஒருவருக்கும் இல்லையென்றும் அர்த்தம்.

'த்வதீயம் ஸௌந்தர்யம் துஹினகிரிகன்யே துலயிதும்
கவீந்த்ரா: கல்பந்தே கதமபி விரிஞ்சி ப்ரப்ருதய: |
யதாலோகௌத்ஸுக்யாத் அமரலலநா யாந்தி மனஸா
தபோபிர் துஷ்ப்ராபாம் அபி ஸிரிச ஸாயுஜ்ய பதவீம் ||'

என்ற ஸௌந்தர்யலஹரியில் சொன்னபடி அம்பாளுடைய ஸௌந்தர்யத்தைப் பார்த்து, ரம்பை, ஊர்வசி, திலோத்தமை முதலியவர்கள் கூட அதை அநுபவிக்க ஆசைப்பட்டு, அது பரமசிவனுக்கு மட்டுமே கிடைக்கக்கூடியதாகையால், தாங்களும் பரமசிவனையிருக்கக்கூடாதாவென்று நினைக்கிறதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. லோகத்தில் புருஷன் ஸ்திரீயைப்பார்த்தும், ஸ்திரீ புருஷனைப்பார்த்தும், ஸௌந்தர்ய விசத்திலில் ஆசைப்படுவது ஸாமான்யம். அதைவிட ஒரு ஸ்திரீ மற்றொரு ஸ்திரீயினுடைய ஸௌந்தர்யத்தைப் பார்த்தும், புருஷன் மற்றொரு புருஷனுடைய ஸௌந்தர்யத்தைப் பார்த்தும் ஆசைப்படுவது, ஸௌந்தர்ய

ந்தைக் காட்டக்கூடியது. 'பும்ஸாம் மோஹன ரூபாய' 'பும்ஸாம் த்ருஷ்டி சித்தாப ஹாரிணம்' என்றபடி ஸ்ரீ ராமனை கண்டகாரண்ய வாஸிகளான ரிஷிகள் பார்த்து, அவரது அழகைக்கண்டு மயங்கி, அதை அனுபவிக்க வேண்டி அவர் உத்தரவின் பேரில், அவர் ஸ்ரீ கிருஷ்ணவதார மெடுத்தபோது கோபிகைகளாகப் பிறந்தார்கள் என்பது ப்ரஸித்தம்.

सर्वरुणा

ஸர்வாருணா (49)

தன்னுடைய வஸ்த்ரம், ஆபரணம், புஷ்பம், காந்தி முதலிய எல்லாம் சிவந்த நிறமாக உடையவள்.

ப்ரத்யக்ர குங்கும ரஸா கலிதாங்கராகம்
ப்ரத்யங்க தத்த மணிபூஷண ஜால ரம்யம் |
தாம்பூல பூரித முகம் தருணேந்து சூடம்
ஸர்வாருணம் கிமபி வஸ்து மமாவிரஸ்து ॥

(ஆனந்தஸாகரஸ்தவம்)

अनवद्याङ्गी

அநவத்யாங்கீ (50)

ஸகலகுணங்களாய் (குற்றம், தோஷம் ஒன்றும் சொல்ல முடியாததாய்) இருக்கும் அவயவங்களை உடையவள்.

सर्वाभरणभूषिता

ஸர்வாபரண பூஷிதா (51)

ஸமஸ்தமான ஆபரணங்களாலும் அலங்கரிக்கப்பட்டவள்.

அம்பாள் தரிக்கும் ஆபரணங்கள், காளிகா புராணத்திலும், கல்ப ஸூத்ரத்திலும் சொல்லப்பட்டிருக்கிறது. மேலும் ஆபரணங்கள் ஸ்திரீகளுக்கு ஏற்பட்டனவையாகையாலும், அம்பாளுக்கு உபயோகப்படாத ஆபரணங்கள், ப்ரயோஜனமற்றனவையாகையாலும், ஸகலவிதமான ஆபரணங்களும் அம்பாளுக்குப் போடப்பட்டதாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

இதுவரையில் அம்பாளுடைய ஸ்தூல ரூபத்தை வர்ணித்து விட்டு இனி அம்பாள் இருக்குமிடத்தைப்பற்றி சொல்லப்படுகிறது.

शिवकामेश्वराङ्कस्था

சிவகாமேச்வராங்கஸ்தா (52)

தன் பர்த்தாவாகிய சிவகாமேச்வருடைய (இடது) துடையின் மேல் இருப்பவள்.

1. 'காம' என்றால் கமநீயமான (அழகான) ரூபத்துடன் இருப்பவன். காமேச்வரர் ஸௌந்தர்யத்தில் அம்பாளுக்கு ஸமானமானவர் என்று சொல்லப்படுகிறது.

2. அல்லது விரும்பிய ரூபத்தை எடுக்கக்கூடியவன் என்றும் அர்த்தம். இது மன்மதனிடத்திலிருப்பதால் அவனுக்கு 'காம' என்று பெயர். காமேச்வரரும் ச்ருங்கார ரஸப்ரதான நாதலாலும், காமனைவிட ஸௌந்தர்யத்தில் அதிகமானவராதலாலும், அந்தப் பெயர் அவருக்கு உரியது.

3. காம என்றால் ப்ரக்ஞானம் என்றும் ச்ருதியில் சொல்லப்பட்டிருக்கிறது. அந்த இடத்தில் பாமசிவனைப்பற்றி அம்மாதிரி சொல்லியிருக்கிறது.

4. "ஆத்மைவ இதமக்ர ஆஸீத் ஏக ஏவ ஸோ அகாமயத ..... ஏதாவான்வை காம:" என்று ப்ருஹதாரண்யகத்தில் சொன்னபடி, ஜகத்தை ஸ்ருஷ்டிபண்ண விரும்பிய ஈச்வரனுக்கு, காம: என்று பெயர்.

5. சிவனும் காமனுமாக இருக்கிற ஈச்வரன் 'சிவகாமேச்வர:' ஸாதாரண ருத்ரன், மன்மதன், இவரல்ல என்று வேற்றுமை காட்டப்பட்டிருக்கிறது.

(அம்பாளுக்கு சிவகாமஸுந்தரீ என்று பெயர் நடப்பதும் இதனால் தான்).

சிவா (53)

"வசகாந்தேள சிவ: ஸம்ருத:" என்றபடி பராப்ரம்மத்தினுடைய இச்சாரூபமாக இருப்பவள்.

1. சிவனோடு அபேதமாக இருப்பவள் — இங்கே 'சிவன்' என்பது சைவாகமங்களில் சொல்லப்பட்டபடி, ஜ்ஞேச க்ரியாஹிதமாய், ஸச்சிதானந்த ரூபமாய் இருக்கும் கேவலமான பராப்ரம்மத்தைக் குறிக்கிறது.

2. (சிவம்) மங்களத்தைச் செய்கிறவள்.

3. அம்பாளிடத்தில் ஸர்வமும் (சேதே) லயிக்கிறது என்பதால் சிவா.

4. சோபநமான (மங்களகாமான) குணங்கள் அம்பாளிடத்தில் இருப்பதால் சிவா.

5. 'சிவா' என்பதற்கு சமனம் (சாந்தம்) பண்ணுகிறவர் என்றும் அர்த்தம்.

'ஸமாபவந்தி மே ஸர்வே தாநவாச்சாமராச்சயே |
சிவங்கரோ(ஸ்மி பூதாநாம் சிவத்வம் தேந மே ஸ்ரா: ||
'த்ரிலோசநம் நீலகண்டம் ப்ரசாந்தம்'

6. சிவனோடு அபின்னமாக இருப்பவள்.

'யதா சிவஸ் ததா தேவீ யதா தேவீ ததாசிவ: |
தஸ்மாத் அபேத புத்யைவ சிவேதி கதயந்த்யுமாம் |
உமாசங்கரயோர் பேத: நாஸ்த்யேவ பரமார்த்தத: |
த்விதாஸ்ரள ரூபமாஸ்தாய ஸ்தித ஏகோ ந ஸம்சய: ||
'பரமாத்மா சிவ: ப்ரோக்த: சிவா ஸைவ ப்ரகீர்த்திதா'
'ஸா சிவா பரமா தேவி சிவாபின்ன சிவங்கரீ'

8. (சிவம்) மோக்ஷத்தைக் கொடுக்கிறவன்.

'சிவா முக்தி: ஸமாக்யாதா யோகிநாம் மோக்ஷதாயினீ |
சிவாய ஜயதே தேவீ தபோலோகே சிவா ஸ்ம்ருதா ||'
'பாவகஸ்யோஷ்ணதேவேயம் பாஸ்கரஸ்யேவ தீதிதி: |
சந்த்ரஸ்ய சந்த்ரிகேவேயம் சிவஸ்ய ஸஹஜா சிவா ||'

स्वाधीनवल्लभा

ஸ்வாதீன வல்லபா (54)

தனக்கு அதீனராய் (தன் வசப்பட்டவராய்) இருக்கிற (காமேச்வரராகிய) பர்த்தாவை உடையவள்.

அம்பாளாகிற சக்தியின் ஒத்தாசையில்லாவிட்டால் சிவனுஸ் ஒன்றும் செய்யமுடியாது என்று அர்த்தம்.

'சக்தோ யயா ஸ சம்பு: புக்தெள முக்தெள ச பசுகணஸ்யா
தாமேநாம் சித்ரூபாம் ஆத்யாம் ஸர்வாத்மநாஸ்மி நத:|' [ஸ்ய||
'ஜகத் காரணம் ஆபன்ன: சிவோ யோ முனிஸத்தமா: |
தஸ்யாபி ஸாபவத் சக்தி: தயா ஹீநோ நிரர்த்தக: ||'

ஆசார்யாளும் 'ஸௌந்தர்யலஹரி'யில் முதல் ச்லோகத்திலும் இதே விஷயத்தை சொல்லியிருக்கிறார்:—

'சிவ: சக்த்யா யுக்தோ யதி பவதி சக்த: ப்ரபவிதும்
நசேத் ஏவம் தேவோ நகலு குசல: ஸ்பந்திதுமபி |'
அதஸ்த்வாம் ஆராத்யாம் ஹரிஹரவிரிஞ்சாதிபிரபி
ப்ரணந்தும் ஸ்தோதும் வா கதம் அக்ருதபுண்ய: ப்ரபவதி ||

யாருடைய அனுக்ரஹத்தால் ஸ்த்ரீகள் தங்கள் பதிகளை அடைகிறார்களோ, அப்பேர்ப்பட்டவள்.

ஸுகன்யை ச்யவனரை அடைந்தது்ம், சசிதேவியானவள் இந்த்ரனை அடைந்ததும், அ்ப்போஸோப் பிரார்த்திக்கிறவர்கள் கவ்ன் என்பது தேவீ பாகவதத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. அதே மாதிரி ருக்மிணியானவள் அப்போஸோப் பிரார்த்தனை செய்த ஸ்ரீ கிருஷ்ணரை பதியாக அடைந்தாள் என்பதும் விஷ்ணு வகத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

'பத்ப்யாம் வினீயௌ த்ரஷ்டும் பவான்யா: பாதபல்லவம்' என்றபடி ருக்மிணியானவள் அப்போஸோப் பிரார்த்தனை செய்த வார்த்தை சொன்னது —



'ஸுரேஸ்வர' என்று [illegible] ஸுரேஸ்வரனுடைய நெஞ்சிலிருக்கும் உச்சியிலிருப்பதை [illegible] தோளுடைய நெஞ்சிலிருக்கும் (ஸு)தோளானது உச்சியிலிருப்பதை

'தேவஸ்ய ஸுரேஸ்வரஸ்ய தேஹமாஸ்ரித:' என்று [illegible] இந்த ஸுதேஹத்தை கண்ணாடி பார்ப்பதைவிட ஸுலபமாக [illegible] பால் திருஷ்டிதோஷம் [illegible] ஸுலபமாக [illegible] ஸுலபமாக [illegible] ஸுதேஹத்தை [illegible] ஸுதேஹத்தை [illegible] ஸுதேஹத்தை

श्रीमन्नगरनायिका

ஸ்ரீமன் நகர நாயிகா (56)

ஸ்ரீமத் – லக்ஷ்மீ விலாஸத்தோடு கூடிய, நகர – வித்யாநகரம் அதினுடைய நாயிகா – அதிபதியாய் இருப்பவள்.

1. இன்ன நகரம் என்று சொல்லப்படாவிட்டாலும், மேலே 'ஸ்ரீமாதா' என்ற நாமத்திற்குச் சொல்லியதுபோல், இங்கே 'நகரம்' என்றால் ஸ்ரீவித்யா நகரம் என்று அர்த்தம்.

2. அந்த நகரம் இரண்டு இடத்தில் இருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. லலிதாஸ்தவரத்னத்தில் சொல்லியபடி மேருவின் மத்ய ச்ருங்கத்தில் இருப்பது ஒன்று.

'தத்ர சதுஃசத யோஜந பரிணாஹம் தேவசில்பிநா ரசிதம் |
நாநாஸால மதோஜ்ஜ்வல நமோத்ய ஹம் நகரம் ஆதிவித்யாயா: ||
(லலிதாஸ்துதிரத்னம்)

3. இன்னொரு நகரம் ருத்ரயாமளத்தில் சொல்லியபடி ஸமஸ்த ப்ரும்மாண்டத்திற்கும் வெளியில், லோகா லோகத்தின் நடுவிலிருக்கும் ரத்ன(மணி)த்வீபத்தில் இருப்பது. இதுவே ச்யாமளாதண்டகத்தில் வர்ணிக்கப்பட்டிருக்கிறது.

'அனேககோடி ப்ரும்மாண்ட கோடிகம் பஹிர் வர்த்துல: |
ஸஹஸ்ரகோடி விஸ்தீர்ணம் ஸுதாஸிந்தோஸ்து மத்யகே |
ரத்னத்வீபே ஜகத்வீபே சதகோடி ப்ரவிஸ்தரே |
பஞ்சவிம்சதி தத்வாத்ம பஞ்சவிம்சதி வப்ரகை: |
த்ரிலோகீ மோஹநாத்யங்கை: ஸ்ரீவித்யாயா: புரம் மஹத்'
(ருத்ரயாமளம்)

4. 'ஸ்ரீமன் நகரம்' என்பது ஸ்ரீசக்ரம் என்றும் அர்த்தம் பண்ணப்பட்டிருக்கிறது. ஆகவே ('ஸ்ரீசக்ர நாயிகா') என்றும் சொல்லலாம்.

चिन्तामणि गृहान्तस्था

சிந்தாமணி க்ருஹாந்தஸ்தா (57)

சிந்தா (மணி) ரத்னங்களால் நிர்மிக்கப்பட்ட க்ருஹத்தில் இருப்பவள்.

1. "சிந்தாமணிகணாசிதம் சிந்தாம தூரீகரோது மே மனஸம்" (லலிதாஸ்தவ ரத்னம்).

2. சிந்தா (மணி) ரத்னத்திற்கு ஆகர்ஷண சக்தியும் எல்லாம் கொடுக்கும் சக்தியும் உண்டென்று சொல்லப்படும்.

3. இந்த சிந்தாமணி க்ருஹம் நகரத்தில் அம்பாள் இருக்கும் இடம்.

4. சிந்திதமான அர்த்தங்களைக் கொடுப்பதால் மந்த்ரங்களுக்கு சிந்தாமணிகளென்றும், அவைகளை சிர்மாணிக்கும் இடமாகையால் சிந்தாமணி க்ருஹம் என்றும் சொல்லலாம்.

पञ्चब्रह्माऽऽसनस्थिता

பஞ்ச ப்ரும்ஹாஸந ஸ்திதா (58)

பஞ்ச ப்ரும்ஹாஸனத்தில் உட்கார்ந்திருப்பவள்.

ப்ரும்ஹா, விஷ்ணு, ருத்ரன், ஈசானன் இவர்கள் ஆக்னேயாதி மூலைகளில் கால்களாகவும் ஸதாசிவன் மேல் பலகையாகவும், உடையகட்டிலில் அம்பாள் காமேச்வரோடு இருப்பதாகச்சொல்லப்பட்டிருக்கிறது. இவர்கள் ஐந்துபேருக்கும் பஞ்ச ப்ரும்ஹாக்கள் என்றும், பஞ்சப்ரேதங்கள் என்றும் பெயர். இங்கே அம்பாளுடைய மஞ்சத்தை 'பஞ்சப்ரும்ஹாஸனம்' என்றும் பின்னல் 249வது நாமத்தில் 'பஞ்சப்ரேதாஸனம்' என்றும் 947வது 'பஞ்சப்ரேத மஞ்சம்' என்றும் சொல்லியிருக்கிறது. நாலுகால்களாயிருப்பவர்கள் முடியிலும், அடியிலும் கால்போலவும் நடுவில் தங்கள் ரூபத்தோடும் கூடியவர்கள். ஆனாலும் அம்பாளை த்யானம் செய்வதால் தங்களுடைய சக்தி ரூபத்துடனும், மூடிய கண்களுடன் நிச்சலமாகவும் இருந்துகொண்டிருப்பார்கள். இவர்கள் இப்படிக் கட்டில்கால்களாக இருந்துகொண்டிருப்பதற்குக் காரணம், அப்படியாவது அம்பாளுடைய ஸமீபத்தில் இருந்துகொண்டு அந்த ஸாமீப்ய ஸேவை செய்யவேண்டுமென்கிற எண்ணம் தான்.

'சிவாத்மகே மஹாமஞ்சே மஹேசாநோப பர்ஹணே |
அதிரமயதலே தத்ர கசிபுச்ச ஸதாசிவ: |
ப்ருதகாச்ச சதுஷ்பாதா: மஹேந்த்ரச்ச பதாங்க்ரஹ: |
தத்ராஸ்தே பரமேசானீ மகாத்ரிபுரஸுந்தரீ |

(வாராஹீதந்த்ரம்)

'தத்ர ஸ்ரீ லலிதாதேவ்யா: பஞ்ச ப்ரும்ஹ மயம் மஹத் |
ஜாகர்த்தி மஞ்சரூபம் ச ப்ரபஞ்ச த்ரய மூலகம் |
தஸ்ய மஞ்சஸ்ய பாதாஸ்து சத்வார: பரிகீர்த்திதா: ||
ப்ரும்ஹ விஷ்ணு மஹேசாநேச்வர ரூபத்வம் ஆகதா: |
தேஷாமுபரி மஞ்சஸ்ய பலகஸ்து ஸதாசிவ: |

(லலிதோபாக்யானம்)

महा पद्माटवी संस्था

மஹா பத்மாடவீ ஸம்ஸ்தா (59)

[illegible] இருப்பவள்.

இந்த மஹா பத்மாடவீ சேதனத்தில் இருப்பதாக லலிதா ஸஹஸ்ரநாமத்திலும், ஸௌந்தர்ய லஹரியில் இரண்டாவது ஸ்லோகத்திலும் வர்ணிக்கப்பட்டிருக்கிறது. ப்ரபஞ்ச மத்தியத்தில் இருக்கும் ஸஹஸ்ரதள பத்மத்திற்கு பத்மாடவி என்ற பெயர். அதில் இருப்பவள்.

'ஷண்ணவதிப்யுபரி [illegible] மஹா பத்ம [illegible]'

([illegible])

'தஸ்மாத் ஊர்த்வம் குலம் பத்மம் ஸஹஸ்ரதள [illegible]

.....மஹா பத்மவனம் மீசதத்' ([illegible])

कदम्बवन वासिनी

கதம்பவந வாஸினீ (60)

கதம்ப வ்ருக்ஷங்களடர்ந்த வனத்தில் [illegible]

1. சிந்தாமணி க்ருஹத்தைச் சுற்றி [illegible] அதைச்சுற்றி கதம்பவனம் [illegible] இருப்பதாகச் [illegible]

'பிந்துஸ்தானம் ஸமாஸாதி பஞ்ச [illegible]

தத்ர சிந்தாமணி [illegible]

([illegible])

2. ஸ்ரீபுரத்தில் 20 கதவுகளில் [illegible] கங்கள் பத்னங்கள் இவைகளால் [illegible] 20 [illegible] இருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. [illegible] இந்த மதில்களுக்கு நடுவில் கதம்பவனம் [illegible].

காதம்ப விபின வாஸா அம [illegible]

([illegible])

सुधासागरमध्यस्था

ஸுதா ஸாகர மத்யஸ்தா (61)

அம்ருத ஸமுத்ரத்தின் மத்தியில் இருப்பவள்.

இது பல இடங்களில் இருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

1. 'யோவைதாம் ப்ருஹ்மணே லோக ஆத்மலோகமாத்ரம் புரிம்' என்று ச்ருதியில் சொல்லப்படுவது.

2. ஸஹஸ்ரார பத்மத்தில் இருக்கும் சந்த்ரமண்டலத்தில் பிந்துஸ்தானத்தில் இருப்பது. "பிந்துஸ்தானம் ஸுகாஸிந:"

(மைபாவயா ப்ளம்)

3. சாக்தோபாஸனையில் அபாஸனத்தில் மன்சிறு பத்தில் இருப்பதாகச் சொல்லப்படும் ஸரஸ்வதி தேவன்று இரண்டு அப்ருது மடுவுகள்.

4. 'அகாவ்ருத்தி: சப்தாத்' என்று ப்ரம்மஸூத்ரத்தில் சொல்லப்பட்ட பாஷ்யத்தில் இதை ஸுகா ஸரஸ்வதிகள் சொல்லப்பட்டிருக்கின்றன. இலையில்லாத இந்த காடத்தில் சேர்த்தலை.

மேலே கண்ட காடங்களில் சொல்லிய [illegible] யுள்ள °ஸைவாக்தர்பலேஸ்வரி'யில் சொல்லியிருப்பது

[illegible]

காமாக்ஷி

சுப்ரபா சுகி (12)

அழகான கண்களை உடையவள். கோடிசூர்யர்களின் தேஜஸ்ஸுக்கு ஸமமான கண்ணை உடையவள். தன் கண்களால் பார்த்தே தன்னிடமுள்ள அபிமானிகளுடைய பாபங்களை நீக்குபவள்.

'ஸர்வஜ்ஞா ஸாகுஷி பாலனை [illegible]
[illegible]
[illegible]

1. கா - ஸரஸ்வதி ஆ - லக்ஷ்மி. இவர்களுக்கு ஸமமான உடையவள்.

2. காஞ்சிபுரத்தில் [illegible] உடையவள். அந்த ஊருக்கு 'காமாக்ஷி' என்ற இந்த பெயர் வந்தது.

காமாக்ஷியை கடாக்ஷ சக்தி, மந்த்ரிணி சக்தி, வாராஹி சக்தி, ஸ்யாமள சக்தி, ஆர்யா சக்தி, ஸ்வப்ன சக்தி என்று 100 சக்திகளும் ஆவரண தேவதைகளாகவும் ஸுகஸரஸ்வதி வர்ணிக்கிறபடி இருப்பது ப்ரஸித்தமான விஷயம்.

कामदायिनी (63)

காமதாய

விரும்பிய மனோரதங்களைக் கொடுப்பவள்.

1. காம - காமேச்வரனை, தன் பக்தர்களுக்கு, தாயிநீ - கொடுப்பவள். அதாவது அவருடன் அபேதமாக இருக்கும் தன்மையைக் கொடுக்கிறாள்.

2. காம - மன்மதனை, த்யதி - நாசம் செய்கிறவர், அதாவது காமதர் - பரமசிவன், அவரால் அயினீ - மங்களத்தோடு கூடியவள்.

3. பிதா முதலானவர்களால் பரம்பரையாக ஆர்ஜிதம் பண்ணப்பட்ட ஸ்வத்துக்கு 'தாயம்' என்று பெயர். காம - காமேச்வரையே, தாயமாக உடையவள். அதாவது அனந்தகாலமாக அவரோடு அபின்னமாய் இருப்பவள்.

இனிமேல் அம்பாள் ஸ்தூலரூபத்தில் செய்த கார்யங்களை வெளிப்படையாக வர்ணித்துக்கொண்டு அதிலேயே அம்பாளுடைய பரமான ரஹஸ்யரூபத்தை ஸூக்ஷ்மமாகவும் சொல்லப்படுகிறது. 64 முதல் 84 உள்பட நாமங்களில் அம்பாள் லலிதாம்பிகையாக அவதரித்தது முதல், பண்டாஸுர ஸம்ஹாரம் செய்து மன்மதனை உயிர்பெறச் செய்தது முடிய, 'லலிதோபாக்யான'த்தில் விஸ்தாரமாக வர்ணிக்கப்பட்டிருப்பதைக் காணலாம்.

देवर्षिगण संघात स्तूयमानात्म वैभवा (64)

தேவர்ஷிகண ஸங்காத ஸ்துயமானாத்ம வைபவா

தேவர்கள், ரிஷிகள் இவர்களுடைய ஸமூஹங்களால் ஸ்தோத்ரம் செய்யப்பட்ட (தன்னுடைய) ஸ்வரூபத்தின் வைபவத்தை உடையவள்.

1. 'வைபவம்' என்றால் வ்யாபகத்வம், எங்கும் பரவியிருக்கிறது என்று பொருள். அம்பாள் ஸர்வ வ்யாபியாக இருப்பதை ஸ்தோத்ரம் செய்தார்கள் என்று சொல்லலாம்.

2. 'ஸங்காதஸ்துயமான' என்று சேர்த்து, பஹுவசனமாக என்றும், அர்த்தம் பண்ணலாம்,

3. 'ஸங்காத' என்று ஒருஷித நாகத்திற்குப் பெயர். அதிலிருந்து விடுவிக்கும்படி தேவர்ஷிகணங்களால் ஸ்துதி செய்யப்பட்டவள.

4. 'ஸங்காத்' என்பதை 'ஸம்யக், காத்' என்று பிரித்து பண்டாஸுரனுடன் நடக்கப்போகும் பெரிய யுத்தத்தை உத்தேசித்து ஸ்தோத்ரம் பண்ணப்பட்டதாகவும் சொல்லலாம். இனிவரும் நாமங்கள் அதைப்பற்றியிருப்பதால் அதுவும் பொருத்தமாகும்.

5. 'தேவர்ஷிகண' என்பதைப் பின்வருமாறு பிரித்து அர்த்தம் செய்யலாம். தேவ – ப்ரும்ஹுமா முதலானவர்கள் ரிஷி – வஸிஷ்டாதி ரிஷிகள், தேவர்ஷி – நாரதர் முதலியவர்கள், கண – ஆதித்யன் முதலிய கணங்கள், இவர்கள் எல்லோராலும் ஸ்துதிக்கப்பட்டவள்.

6. அம்பாளுடைய பரரூப ஸம்பந்தமான அர்த்தம் – ஸர்வவ்யாபியாயும் ஸமஸ்த அநுபவத்திற்கு கூடியதும், ஸர்வஸ்மாத பரமாகவும் (அதாவது ஸத், சித், ஆனந்தரூபமாக) இருக்கும் சைதன்ய ஸ்வரூபமே ஆத்மா என்று சொல்லப்பட்டிருக்கிறது.

தஸ்ய சைதன்யம் ஆத்மேதி ப்ரதமம் ஸூத்ரம் பவதி |
ஞான மந்த இதீதம் து த்விதீயம் ஸூத்ரம் பவதி: ||
(அக்நிபுராணம்)

இப்படி தேவர்ஷிகணங்களால் ஸ்துதிக்கப்பட்ட ஆத்மஸ்வரூபமானது 'ஸ்வாத்மைவ தேவதா ப்ரோக்தா லலிதா விச்வவிக்ரஹா' என்று அக்னி புராணத்தில் சொன்னபடி அம்பாளுடைய அபின்ன ரூபமானதால் அந்தவிதமாக அம்பாளுடைய வைபவம், விபுத்வம், அனந்தமான சக்தியுடன் இருக்கும்படியான ப்ரபாவம் வர்ணிக்கப்பட்டிருக்கிறது.

भण्डासुर वधोद्युक्त शक्तिसेना समन्विता

பண்டாஸுர வதோத்யுக்த சக்திஸேனா

ஸமன்விதா (65)

பண்டாஸுரனை ஸம்ஹாரம் செய்ய ஸன்னத்தமாக இருக்கும் சக்திகளுடைய ஸைன்யத்தோடு கூடியவள்.

1. அல்லது அந்த விதமான சக்திகளுடன் அபின்னமாக இருப்பவள்.

'பண்டாஸுர ஸைன்யானாம் ஏகைவ அஸினீகா'
(லலிதாபாத ஸ்ரீபாஷ்யம்)

2. 'பண்டாஸுரன்' என்னும்படியான ஆணவமுள்ள. அனைத்தாசம் செய்யவேண்டிய சக்தி — ஸாமார்த்தியத்தின் ஸ்வரூபத்தோடு கூடியவள்.

3. பூர்வம் மன்மதன் தன் ஸ்வரூபத்தோடு தக்ஷாக்னியிலிருந்து பஸ்மீகரிக்கப்பட்டபோது, அந்த பஸ்மத்தை ஸ்ரீ சக்ரத்தில் ஸ்தாபனம் செய்து, அதன் உச்சியிலுள்ள பிந்துஸ்தானத்தில் ஸ்ரீ மஹாத்ரிபுரஸுந்தரியின் ஸ்வரூபத்தை அதற்குப் பார்த்தபடி இருக்கும்படி [illegible] என்று சொன்னாள். அதிலிருந்து அவளுக்கு [illegible] பெயர் வந்தது. ஸஹஸ்ரம் என்ற ஸங்஖்யை ஸ்ரீ சக்ரத்தில் [illegible] இருக்கிறது. ருத்ர யமை [illegible] சொல்லப்பட்டிருக்கிறது. ருத்ர ஸ்வரூபமாயிருக்கிறது. [illegible]

ருத்ர [illegible]

நஸ்மத் [illegible]

அவள் ஸ்வரூபத்தை [illegible]

தேவர்களை [illegible] ஆயுதமாக [illegible] [illegible] [illegible]

'இந்த்ரியாத்தான் கஜான் பூர்வே தன்ரும்னவ ஸமர்ச்சயேத்'

3. ஞானம் (அறிவு), ஞாத்ரு (அறிகிறவன்), ஜ்ஞேயம் (அறியப்படும் பொருள்) இம்மூன்றுக்கும் த்ரிபுடீ என்ற பெயர். இம்மூன்றினுடைய வித்யாஸங்களைத் தெரிந்துகொண்டு, அவைகளை லம்பங்கப்படுத்தும ஞான ரூபமான சித்தவ்ருத்திக்கு 'ஸாதகலம்பக்கரீ' என்ற பெயர்.

अश्वारूढाधिष्ठिताश्व कोटि कोटिभिरावृता

அச்வாரூடாதிஷ்டிதாச்வ கோடி கோடிபிரா

வ்ருதா (67)

அச்வாரூடா தேவியின் ஆக்ஞைக்குள்பட்ட கோடி கோடிக் கணக்கான குதிரைகளால் சூழப்பட்டவள்.

1. அச்வாரூடா தேவி அம்பாளுடைய சதுரங்க பலத்தில், குதிரை ஸைன்யங்களுக்கு அதிகாரியாக நியமிக்கப்பட்டவள். அம்பாளுடைய ஆயுதங்களில் பாசத்திலிருந்து ஆவிர்பவிக்கவள். அச்வாரூடா தேவியின் குதிரைக்கு 'அபராஜிதம்' என்ற பெயர்.

2. இந்த்ரியங்களை அச்வங்களாகச்சொல்லி, அவைகளின் மேல் மனஸ் ஆரூடமாக (ஏறி) இருப்பதாகச் சொல்லப்படும். இந்த்ரியங்களின் மூலமாக மனதானது, தன்னுடைய ஸங்கல்ப விகல்பாத்மகமான வ்யாபாரங்களைச் செய்வதனால் அம்மாதிரி சொல்லியது. மனதுக்கு அடங்கிய இந்த்ரியங்களாகிற குதிரைகளால் சூழப்பட்டவள். அதாவது அனந்தமான இந்த்ரியங்களுக்கு அதிஷ்டாத்ரி, எஜமானி என்ற பொருள்.

'இந்த்ரியாணாம் அதிஷ்டாத்ரீ பூதாபூதேஷு பாகிவை |
பூதாதவ ஸாதனம் தஸ்யை வ்யாப்தயை தேஹினாம் ஸ்ம்ருதா ||
(ஸரஸ்வதி)

இதற்கு மேல் அம்பாள், பத்ரிணி, தண்டினீ இவர்களுடைய ஆதங்களைப்பற்றிச் சொல்லப்படுகிறது. அம்பாளுடைய ஸைந்யத்தில் இருக்குப்படியான சக்திகளில் பத்ரிணி, தண்டினீ என்றவர்கள். இவர்களுக்கு மேல் ஸ்தானம் வகிப்பது அம்பாளுக்கு ஸமீபமே யாகுமில்லை. இவர்களுடைய உத்தரவு இல்லாமல் அம்பாளைப் பார்க்கமுடியாது என்றபடி சொல்லப்படும். மற்ற ஸம்பத்கரீ, அச்வாரூடா முதலிய ஸைன்ய சக்தி

களும் இவ்விருவர்களுக்கு உள்பட்டுத்தான். இவர்களுடைய ப்ரபாவமானது அபாரம். இவர்கள் எப்போதும் அம்பாளுடைய ஸன்னிதியில் இருப்பதாகவும், ஒருபோதும் பிரியாமல் அம்பாளுடைய ஸேவையில் ஈடுபட்டிருப்பதாகவும் சொல்லியிருக்கிறது. மந்த்ரிணீ தேவதை அம்பாளுக்கு ப்ரதான மந்திரி ஸ்தானம் வஹிப்பவள். ஸங்கீதத்திற்கு அதிஷ்டான தேவதை ராஜ்ய ச்யாமளை என்றும், ஸங்கீத ச்யாமளை என்று பெயர். அம்பாள் மந்த்ரிணியிடம் தன்னுடைய ராஜ்யபாரம் முழுவதையும் ஒப்புவித்திருப்பதாகப் பின்னால் வரும் 'மந்த்ரிணீ ந்யஸ்த ராஜ்யதூ:' என்ற (786-வது) நாமத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. அம்பாளுடைய இச்சா கோதண்டத்திலிருந்து உத்பவமானவள் மந்த்ரிணீ.

அதேமாதிரி முக்யமான சக்தி தேவதை வாராஹீ. அம்பாளுடைய ஸர்வ ஸைன்யத்திற்கும் அதிகாரியானவள். அதிலும் தண்டநாதா என்று பெயர். வார்த்தாளீ என்றும் பெயர். பஞ்சபாணத்திலிருந்து உத்பவமானவள். வராஹ முகத்தையுடையவள். துஷ்ட நிக்ரஹ, சிஷ்ட அனுக்ரஹ சக்தியைப் பரிபூர்ணமாக அம்பாளால் கொடுக்கப்பட்டவள். இவர்களுக்கும் அம்பாளுக்கும் ரதங்கள் உண்டு அம்பாளுடைய ரதம், சக்ரராஜ ரதம். மந்திரிணியுடையது கேய சக்ர ரதம். வாராஹியினுடைய ரதம், கிரி சக்ர ரதம். இம்மூன்றும் ஒன்றைவிட்டு ஒன்று பிரியாமல் யுத்தக்களத்தில் சேர்ந்து இருந்ததாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இருவரும் அம்பாளுடைய பார்ச்வ தேவதைகளானபடியால் அம்மாதிரி சேர்ந்திருப்பதற்குக் காரணம்.

"சக்ரராஜ ரதோயத்ர தத்ர கேய ரதோத்தம:।
யத்ர கேய ரதஸ்தத்ர கிரி சக்ர ரதோத்தம:।
ஏதத் ரதத்ரயம் தத்ர த்வைலோக்யவிஜயாவஹம்।"

இந்த மூன்று ரதங்களின் பெயரைக்கேட்டாலேயே ஜயம் உண்டென்று சொல்லப்பட்டிருக்கிறது.

चक्रराज रथारूढ सर्वायुध परिष्कृता

சக்ரராஜ ரதாரூட ஸர்வாயுத பரிஷ்க்ருதா (68)

சக்ரராஜ ரதத்தில் ஆரூடமாயிருக்கும்படியான ஸமஸ்த ஆயுதங்களினால் அலங்கரிக்கப்பட்டவள்.

1. யுத்த காலத்தில் தேவி ஸமீபத்தில் ஸர்வாயுதங்களும் சக்ரராஜ ரதத்தில் பூர்ணமாய் வைக்கப்பட்டிருந்தன என்று

அர்த்தம். அம்பாளுடைய ரதத்தின் கொடிக்கு 'ஆனந்த க்வஜம்' என்ற பெயர். ரதத்திற்கு 9 கட்டு, 10 யோஜனை உயரம், 4 யோஜனை விஸ்தாரம்.

2. சக்ர ராஜம் என்பதற்கு, 'ஸ்ரீசக்ரம்' என்றும் சொல்லலாம். சக்ர ராஜ ரதத்திற்கு 9 கட்டுகள் மாதிரி, ஸ்ரீசக்கிரத்திற்கும 9 பிரிவுகள் உண்டு. அதாவது த்ரைலோக்ய மோஹனம், ஸர்வாசா பரிபூரகம், ஸர்வஸம்க்ஷோபணம், ஸர்வ ஸௌபாக்ய தாயகம், ஸர்வார்த்தஸாதகம், ஸர்வரக்ஷாகரம், ஸர்வரோகஹரம் ஸர்வஸித்திப்ரதம், ஸர்வானந்தமயம் (பிந்து, அம்பாள் இருக்குமிடம்). அதில் இருக்கும்படியான ஆயுதங்கள் — ஆத்மக்ஞானம் அடைவதற்கு ஸாதனங்கள் என்று அர்த்தம். ஸ்ரீசக்ரத்தில் அம்பாளை உபாஸனை பண்ணினால் ஆத்மக்ஞானம் அடைவது நிச்சயம் என்றும், சக்ரஸித்தி ஏற்படுகிறது தான் யோகம் முதலிய சாஸ்திரங்களில் சொல்லப்படும் ஸாதனங்களுக்கெல்லாம் பிரயோஜனம் என்ற பொருள்.

3. சக்ர ராஜ—ஷட் சக்ரானாம், ரத—ஆதாரமாக உடையது 'சக்ரராஜ ரதம்'. அல்லது 'சக்ரோத்ஸவம்' அனைவரும், ஆசை அடக்குவதற்கு அல்லது போரிப்பதற்குமேலும், ஸர்வாயுத-சம்ஸ்த கர்மாதி ரூபங்களான ஸாதனங்கள், அதாவது சுத்த வித்யை என்ற அர்த்தம். அதனால் பரிஷ்க்ருதா—அலங்கரிக்கப்பட்டவள்.

"பத்த வித்தோ ததயாத் சக்ரோத்ஸவ ஸித்தி:"

"யதா யோ தத்தா தஸ்ய சக்ரோத்ஸவ: அனுத்தம:

மாதேஹச்வர்யா: ஸமாவேசாத் பத்வா ஸித்யதி யோகிந:"

गेय चक्र रथारूढ मन्त्रिणी परिसेविता

கேய சக்ர ரதாரூட மந்த்ரிணீ பரிஸேவிதா (151)

கேய சக்ரம் என்கிற ரதத்தில் ஆரோஹணம் செய்திருக்கும் மந்த்ரிணீ தேவியால் (சுற்றிவந்து) ஸேவிக்கப்பட்டவள்.

1. இந்த ரதத்திற்கு 7 கட்டுகள் இருப்பதாகச் சொல்லப்படும்.

2. கேய — ப்ரஸித்தமான, சக்ர — சக்ரங்களையுடைய, ரதம் — ரதமான ஸைந்ய மண்டலம். அதில் ஆரூடர்களான — இருக்கும்படியான, மந்த்ரிணீ — ஸ்ரீ வித்யாபாலகர்களான தேவதைகளால் ஸேவிக்கப்பட்டவள்.

3. கேய – முக்யமான, சக்ரரதா – சக்ரராஜமான ரதத்தில் இருப்பவளான ஸ்ரீ த்ரிபுரஸுந்தரீ அம்பாளை, ஆரூட – புத்தியில் விஷயீகரணம், அல்லது அனுஸந்தானம் செய்யும், மந்த்ரிணீ – மந்த்ராலோசித்தி உடையவர்களால், ஸேவிக்கப்பட்டவள்.

தன்னையும் அம்பாளையும் அபேதமாக அனுஸந்தானம் செய்வதை தந்த்ர ராஜத்தில் சொல்லியிருப்பதை குருமுகமாக தெரிந்து கொள்ளவேண்டியது.

किरि चक्र रथारूढ दण्डनाथ पुरस्कृता

கிரி சக்ர ரதாரூட தண்டநாத புரஸ்க்ருதா (70)

கிரி சக்ரம் என்கிற ரதத்தில் ஆரோஹணம் செய்திருக்கும் தண்டநாதையை முன்னிட்டிருப்பவள்

1. 'கிரி' என்றால் வராஹம். தண்டநாதையின் ரதம் வராஹ ரூபமாக இருக்கிறதினால் அதற்கு கிரி சக்ர ரதம் என்று பெயர்.

2 வாராஹிக்கு தண்டநாதை என்று பெயர்.

"ஸர்வதா தண்டபாணித்வாத் தண்ட நாமேதி கீயதே |"

3. கிரி – கிராணங்கள், அதாவது ஸ்ருஷ்டி, ஸ்திதி, லயம் இவைகளுடைய, சக்ரம்–ஸமூஹமாகிற ரதத்தில், ஆரூட – அதில் ஏறியிருந்தவளாக இருந்தாலும், தண்டநாத – யமனால், அபுரஸ்க்ருதா – ஸ்வாதீனம் செய்யப்படாதவள். இதின் தாத்பர்யம் – யோகியானவன் ஸ்ருஷ்டி, ஸ்திதி, லயத்தில் அகப்பட்டவனாயிருந்தாலும் யம யாதனைக்கு உள்பட்டவன் அல்ல என்பது.

"தத் ப்ரவ்ருத்தாவபி அதிராஸ: ஸ்வ ஸம்ஸ்தேவத்ஸு ப்ரவர்தத்"

ज्वाला मालिनि काक्षिप्त वह्नि प्राकार मध्यगा

ஜ்வாலா மாலிநி காக்ஷிப்த வன்ஹி ப்ராகார மத்யகா (71)

ஜ்வாலாமாலினியால் சுற்றிப்போடப்பட்ட அக்னி ப்ராகாரத்தின் நடுவில் இருப்பவள்.

1. பஞ்சதச நித்யைகள் பின்னால் வரும் 'ப்ரதிபன் முகா காந்த திதி மண்டல பூஜிதா' என்ற (610-வது) நாமத்தில் சொல்லப்பட்டபடி, சாந்த்ராயண மாதத்தின் பதினைந்து திதிகளுடைய தேவதைகள். அவர்கள் பெயர்–காமேச்வரீ, பகமாலினி, நித்யக்லின்னை, பேருண்டா, வன்ஹிவாஸினீ, வஜ்ரேச்வரி, சிவதூதி,

த்வரிதா, குலலோலக்தரி, நித்யா, நீலபதாகா, விஜயா, ஸர்வமங்களா, ஜ்வாலாமாலினீ, சித்ரா. அம்பாளே பதிணைவது நித்யையாகச் சொல்லப்படும். இவர்களில் பதிணலாவது நித்யையான ஜ்வாலாமாலினி 'வத்மே த்வம் வன்ஹிரூபாஸி ஜ்வாலா மாலா மயாக்ருதி:' என்று சொல்லப்பட்டப்படி அக்னி ஜ்வாலாமாயமாக இருக்கப்பட்டவள்.

2. பண்டாஸுர யுத்தத்தில் அவனுல் சக்தி சேனைகளுக்கு இரவில் யாதொரு கெடுதியும் நேரிடாமலிருப்பதற்காக அம்பாள் ஜ்வாலாமாலினியை 100 யோஜனை விஸ்தாரம், 30யோஜனை உயரமுள்ள ஒரு நெருப்புக்கோட்டையாக இருக்கும்படி சொல்லி அதற்குள் தன் ஸைன்யங்களுடன் இருந்ததாக லலிதோபாக்யானத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

3. ஜ்வாலாமாலைகளால் எறியப்பட்ட நெருப்புப் பொறிகளுக்கு நடுவில் இருப்பவள். ஏற்கனவே சொல்லப்பட்டபடி ஸ்ருஷ்டி முதலான கர்த்ருத்வம் இருந்தபோதிலும், அந்தக்காரியங்களால் விகாரம் அடையாதவள், பாதிக்கப்படாதவள், அதாவது தன்னுடைய சக்தியினல் ஸ்ருஷ்டி முதலிய காரியங்களைச் செய்தபோதிலும் அவற்றில் அகப்படாதவள். கர்த்ருத்வம் காரியம் என்று இரண்டு அவஸ்தைகள் உண்டு. இவைகளில் காரியம் நச்வரமாகப் போனலும், கர்த்ருத்வ சக்தியானது அழியில்லாமல் நிர்விகாரமாக இருப்பதைச் சொல்லப்பட்டிருக்கிறது. 'ஞானக்னி: ஸர்வ கர்மாணி பஸ்மஸாத் குருதே அர்ஜுன' என்றபடி ஞானியானவன் அக்ஞானத்தைப் போக்குகிற அக்னி (ஞானாக்னி)க்கு நடுவில் இருக்கிறான். ஆயினும் பிரபஞ்சத்தில் நடக்கும் காரியங்களாகிற நெருப்புப் பொறிகளால் தாக்கப்படுகிறான். இந்தமாதிரி உள்ளும் புறமும் ஜ்வாலாமாலைகளால் ஏற்பட்ட வன்ஹி ப்ராகாரங்கள் — நெருப்புப் பொறிகளுக்கு நடுவில், மத்யக — நடுவான (நிர்விகாரமான) நிலைமையை உடையவளாகிறான் என்று அர்த்தம்.

4. ஜ்வாலாமாலினிகா:, சக்தி த்ரிகோணங்கள் மூன்று. இவைகளாது ஆக்ஞேய-ஸாமரஸ்யம் அடைந்த(கலந்த), வன்ஹி ப்ராகாரா: — அக்னி கோணங்கள் நான்கு, இவைகளுக்கு மத்யகா — மத்யஸ்தானமாகிற பிந்துவில் இருப்பவள்.

'சதுர்பி: சிவசக்ரைச்ச சக்தி சக்ரைச்ச பஞ்சபி: |
நவ சக்ரைச்ச ஸம்ஸித்தம் பூர்சச்ரம் சிவயோர்வபு: ||'

என்றபடி, ஸ்ரீசக்ரமானது கீழ்நோக்கிய ஐந்து (சக்தி) சக்கரங்கள் மேல் நோக்கிய நாலு (சிவ) சக்ரங்கள் இவைகள் கலந்ததினால் ஏற்படுகிறது. (சிவயோர்வபுः என்பதினால் ஸ்ரீ சக்ரமானது சிவன், சக்தி இவர்களுடைய ஐக்யமான ரூபம் என்று அர்த்தம்). அவைகளுக்கு நடுவில் இருக்கும் ஸர்வானந்தமயம் என்னும் பிந்துவானது அம்பாளுடைய ஸ்தானம்.

भण्डसैन्य वधोद्युक्त शक्तिविक्रम हर्षिता

பண்டஸைன்ய வதோத்யுக்த சக்தி விக்ரம ஹர்ஷிதா (72)

பண்டாஸுரனுடைய ஸைன்யத்தை வதம் செய்வதில் முயற்சியுடைய (நகுலீ முதலிய) சக்திகளுடைய பராக்ரமத்தினால் ஸந்தோஷம் அடைந்தவள்.

பண்ட – ஜீவாத்மாவினுடைய, ஸைன்ய – அனுகுணமாக இருக்கும் த்வைத பாவனைகள் (தன்னை பரமாத்மாவிடமிருந்து வேறாக நினைக்கும் சித்தவ்ருத்திகள்), அவைகளுடைய வதம் – அவைகளை நாசம் செய்வது, அதில் உத்யுக்தமாய் இருக்கும் சக்திகளுடைய – அத்வைத வ்ருத்தி ரூபமான சக்திகளுடைய முன்னேற்றத்தைப் பார்த்து ஸந்தோஷப்படுகிறவள்.

'தத் அபாகுர்வான ஸ்வசக்தி வ்யாமோஹிதா ஸர்வஸாக்ஷித்வம்' என்ற சக்தி ஸூத்ரத்தில் சொல்லியபடி ஆத்ம சக்தியைப் பற்றிய ஞானம் ஏற்படாதவரையில், ஜீவன் ஸம்ஸாரத்தில் தன்னுடைய வேறு பாவனைகளால் வ்யாமோஹிக்கப்பட்டிருக்கிறான். ஆத்மானந்தம் கொஞ்சம் ஏற்பட்டாலும் அவனுக்கிருக்கும் அக்ஞானமாகிற ஆவரணம் நாசமாகிறது. இம்மாதிரி அந்தர்முக வ்ருத்திகள், பஹிர்முக வ்ருத்திகளை நாசம் செய்வதைப்பார்க்க பரமாத்மாவாகிய அம்பாளுக்கு ப்ரியம் ஏற்படுகிறதாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

नित्यापराक्रमाटोप निरीक्षण समुत्सुका

நித்யாபராக்ரமாடோப நிரீக்ஷண ஸமுத்ஸுகா (73)

(மேலே சொல்லப்பட்ட)நித்யா தேவதைகளுடைய பராக்ரமமானது அதிகரித்ததைப் பார்ப்பதில் ச்ரத்தை உடையவள் (பார்த்து ஸந்தோஷம் அடைந்தவள்).

1. பண்டாஸுர யுத்தத்தில் ஒரு ஸமயம் ராத்ரியில் தமன கன், சித்ரகுப்தன் முதலிய அஸுர ஸைந்திபதிகள், அம் பாளுடைய சக்ராராஜரதத்தை சூழ்ந்து கபட யுத்தம் செய்ய வந்த போது, திதி நித்யா தேவதைகள் அம்பாளுடைய முன்னிலையில் தங்கள் பராக்ரமத்தைக்காட்டி, அஸுர ஸைந்திபதிகளை ஸம்ஹாரம் பண்ணினதை இங்கே சொல்லப்பட்டிருக்கிறது.

'தாச்ச நித்யா: கலக்வாண கங்காஸார் யுதி பாணிபி: |
ஆக்ருஷ்யமாண கோதண்டா: தேனிரே யுத்தம் அத்புதம்' ||

2. நித்யா - அநாதிஸித்தமான (சாச்வதமான) ஆத்மசக்தி கள், பராக்ரமாடோப - (அந்தர்முகமான ஆத்ம ஞானத்திலை) அதிகரித்துவருவது, அதைப் பார்க்கப் பார்க்க ஸந்தோஷம் அடைகிறவள். ஆத்மாவினுடைய சக்திகள் அப்யாஸம் பண்ணத் திலை நசித்துவிடுகின்றனவென்றும், அந்தராத்மக்ஞானம் கொஞ்சம் ஏற்பட்டுவிட்டால் அது மேலுக்குமேல் வளர்ந்து வரும் என்று அர்த்தம்.

ஸர்வா ஏவ கலா ஜ்ஞேதா: அலப்யா ஸேவ நச்யதி |
இயம் ஞானகலா த்வந்த: ஸக்ருத ஜாதா பி வர்த்ததே ||'

(யோக வாஸிஷ்டம்)

मण्ड पुत्र वधोद्युक्त बालविक्रम नन्दिता

பண்டபுத்ர வதோத்யுக்த பாலாவிக்ரம நந்திதா (71)

பண்டாஸுரனுடைய புத்ரர்களை வதம் செய்வதில் உத்யுக்த மாக (முயற்சியோடு) இருந்த பாலாம்பிகையினுடைய பராக்ரமத் தைக்கண்டு மகிழ்ந்தவள்.

1. பாலா அம்பாளுடைய புத்ரீ. ஒன்பது வயதுள்ளவள். அம்பாளைபோல் ஸௌந்தர்யம், சக்தி இவைகளை உடையவள் பாலாம்பிகையினுடைய உபாஸனை மிகவும்விசேஷமான பலனை யுடையதாகச் சொல்லப்படும். அம்பாளுடைய பரிபூர்ண ப்ரேமை பாலாம்பிகையிடத்தில் இருப்பதினால் குழந்தையான பாலாம் பிகையினுடைய ப்ரீதியைப் பெற்றால் அம்பாளுடைய தயவும் தானாகவே ஏற்பட்டுவிடும்.

2 பண்டாஸுர யுத்தத்தில் பண்டனுடைய புத்ரர்களான சதுர்பாஹு, உபமாயன் முதலிய முப்பதுபேருடன் யுத்தம் செய்ய பாலாம்பிகை, அம்பாள் எவ்வளவு தடுத்தும், போன பிறகு, குழந்தை கோமளமாகவும் ஜயத்துடனும் திரும்பி வர வேண்டுமே என்கிற கவலையுடன் அம்பாள் இருந்தபோது

தண்டநாதையும் யஜமானியின் குழந்தையின் சௌர்யத்தையும், பண்டபுத்ரர்களை வதம் செய்ததையும்டார்த்து; அந்த ஸந்தோஷ ஸமாசாரத்தை அம்பாளிடம் ஓடோடியும் வந்து சொன்னபோது, தன் குழந்தையிலடைய வ்ருத்தாந்தத் தைக் கேட்ட அம்பாளுக்கு அளவில்லா ஆனந்தம் ஏற்பட்டதாம்.

'தாபிர் நிவேத்யமாளுனி ஸா தேவீ லலிதாம்பிகா |
புத்ரியா புஜாபதாளுனி ச்ருத்வா ப்ரீதிம் ஸமாயயௌ ||'

3. அம்பாள், ச்யாமா, வார்த்தாளீ இம்மூவருக்கும் அங்கதேவதை, உபாங்கதேவதை, ப்ரத்யங்கதேவதை என்று மூன்று தேவதைகள் உண்டு. அம்பாளுக்கு அங்கதேவதை பாலா, உபாங்கதேவதை அன்னபூர்ணை, ப்ரத்யங்கதேவதை அச்வாரூடா. அதேமாதிரி மந்த்ரிணிக்கு அங்கதேவதை லகு ச்யாமா, உபாங்கதேவதை வாக்வாதினீ, ப்ரத்யங்கதேவதை சுகுலீ. வாராஹியிலடைய அங்கதேவதை லகுவார்த்தாளீ, உபாங்கதேவதை ஸ்வப்னவார்த்தாளீ, ப்ரத்யங்கதேவதை திரஸ்கரிணீ.

मन्त्रिण्यम्बा विरचित विषङ्ग वध तोषिता

மந்த்ரிண்யம்பா விரசித விஷங்க வத தோஷிதா (75)

(மந்த்ரிணீ) ச்யாமளாம்பா, விஷங்கன் என்கிற அஸுரனை வதம் செய்ததினால் ஸந்தோஷம் அடைந்தவள்.

विशुक्रप्राणहरण वाराही वीर्य नन्दिता

விசுக்ரப்ராணஹரண வாராஹீ வீர்ய நந்திதா (76)

விசுக்ரன் என்கிற அஸுரனுடைய ப்ராணனைப் போக்கடித்த (வதம் செய்த) வாராஹியினுடைய வீர்ய சௌர்ய)த்தினால் மகிழ்ச்சியடைந்தவள்.

1. விஷங்கன் ாகள இருவருமே பண்டாஸுரனுடைய ாகள. அவனால் தன்னுடைய இருபுஜங்க ஸ்ருஷ்டிக்கப்பட்டவர்கள். இருவருமே மிகவும் பராக்ரமசாலிகள்.

'புரா பண்டாஸுரோ நாம ஸர்வ ைதத்ய சிகாமணி: |
பூர்வதேவான் பஹுவிதான் ய: ஸ்ரஷ்டும் ஸ்வேச்சயா படு: ||
விசுக்ரம் நாம தைதேயவர்க ஸம்ரக்ஷண க்ஷமம் |
சுக்ரதுல்ய விசாரக்ஞம் தக்ஷாம்ஸேன ஸஸர்ஜ ஸ: |
வாமாம்ஸேன விஷங்கம் ச ஸ்ருஷ்டவான் ப்ராதராவுபௌ ||'

2. லலிதாபாக்யாணத்தில் மந்த்ரிணீ விசுக்ரஹாயும் வாராஹீ விஷங்கஹாயும், ஸம்ஹாரம் பண்ணினதாக பாத்ரிச் சொல்லியிருந்தபோதிலும் ஸஹஸ்ரநாமத்தில் சொல்லியதுதான் ப்ரமாணம்.

3. "பண்டபுத்ரர்கள், என்பது ஆணவ மலம் என்ற பொருள். விஷங்க – விருத்தமான, ஸங்கம்–விஷயங்களில் பற்று தல். விசுக்ர – விருத்தமான (மறைக்கப்பட்ட) சுக்ர (தேஜஸ்), அதை உடையது ஜீவத்வ பாவம். இம் மூன்றையும் ஸம்ஹாரம் செய்ததாகச் சொல்லும் பாலா, மந்த்ரிணீ, வாராஹீ இவை அந்தர்முகமான வ்ருத்திகள். இவையால் மேலே சொல்லிய ஆணவ மலம் முதலியவை நாசம் அடைவதினால் ஆத்மாவுக்கு ஸந்தோஷம் ஏற்படுகிறது. ('ஸ்வாத்மைவ தேவதா ப்ரோக்தா லலிதா விச்வ விக்ரஹா' என்றபடி ஆத்மாவையே அம்பாளாகச் சொல்லப்பட்டிருக்கிறது.)

कामेश्वर मुखालोक कल्पित श्रीगणेश्वरा

காமேச்வர முகாலோக கல்பித ஸ்ரீ கணேச்வரா (77)

காமேச்வருடைய முகத்தைப் பார்த்ததினாலேயே ஸ்ரீ கணேச்வரரை ஸ்ருஷ்டித்தவள்.

महागणेश निर्भिन्न विघ्न यन्त्र प्रहर्षिता (78)

மஹா கணேச நிர்பின்ன விக்ன யந்த்ர ப்ரஹர்ஷிதா

மஹா கணேசரால் விக்ன யந்த்ரம் நாசமடைந்ததைப் பார்த்து ஸந்தோஷப்பட்டவள்.

1. பண்டாஸுரன் இதர அஸுரர்களைவிட சக்தி அதிகம் உள்ளவன் என்று ஏற்கனவே சொல்லப்பட்டிருக்கிறது. மாயினி களுடைய ஸ்தூல ரூபம், ஸூக்ஷ்ம ரூபம் இவ்விரண்டையும் நாசம் பண்ணும்படியான அஸ்த்ர சஸ்த்ர பலம், மந்த்ர பலம் இவையுடையவன். இவனுக்கு விசுக்ரன் உதவியும் இருந்ததினால் இவன் ஜயிக்கமுடியாத பல காரியங்களைச் செய்யமுடிந்தது. (தேவதைகளுக்கு ஒத்தாசை செய்யும் ப்ரதியாயினி தேவதை குருவாகிய சுக்ரன் ஸாமர்த்யமுடையவன், யஜ்ஞ அவருக்குக் குறைந்தவனல்ல. அந்த சுக்ரனுக்கு ஸாமர்த்யமுடையவன் விசுக்ரன்).

2. இவர்கள் தங்களுடைய மந்த்ர சக்தியினல் அம்பாளு டைய ஸைன்யத்திற்கு அனேக உபத்திரவங்கள் செய்து கடைசி யாக விசுக்ரன் 'ஜயவிக்னம்' என்கிற யந்த்ரத்தைத் தயார்செய்து அதை அம்பாள் ஸைன்யமிருக்குமிடத்தில் (எவல் தகடு வைப்பது மாதிரி)வைத்துவிடவே, ஸமஸ்த சக்தி ஸைன்யமும் தங்கள் யுத்த உத்ஸாஹத்தை இழந்து சோர்ந்து போய் விக்ன யந்த்ரத்தின் மாயையில் இருக்கும்போது, அம்பாள் காமேச்வரைப்பார்த்து புன்னகை செய்ததின் பேரில், அம்பாளுடைய மந்தஸ்மிதத்தின் காந்தியிலிருந்து மஹாகணபதி ஆவிர்பவித்து, விக்னயந்த்ரத்தை உடைத்துப் பொடிபண்ணினர் என்றும், அதன் பிறகு சக்தி ஸைன்யம் முன்மாதிரி உத்ஸாஹத்தோடு யுத்த ஸன்னத்தமாக இருந்தார்கள் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

'தத: ஸா லலிதா தேவி காமேச்வர முகம் ப்ரதி |
தத்தாபாங்க ஸமுல்லஸத் நாதி வ்யக்த ரதாவளீ |
தஸ்யா மந்தஸ்மித ருச: குஞ்சராக்ருதிமான் அபூத் |
கடக்ரோட களத்தான: கச்சித் தேதேவ யாயஜ்ரும்பதே |

3. காமேச்வர – கேவல நிர்குணமான சிவஸ்வரூபம், அதி னுடைய மூகாலோக – தத் அனுபவத்தினல் (அதை அடைவ தினல்) கல்பித – உண்டுபண்ணப்பட்ட, ஸ்ரீ கணேச்வரா – பூர்யஷ் டகத்தின் ஈச்வரத்தோடு கூடியிருப்பவள்.

4. 'பூர்யஷ்டகம்' என்பது (1) பஞ்ச காமேந்த்ரியங்கள் (2) பஞ்ச ஞானேந்த்ரியங்கள். (3) மனஸ், புத்தி, அஹங்காரம், சித்தம் இன்னென்று. (4) பஞ்ச ப்ராணன்கள். (5) பஞ்ச பூதங் கள். (6) காமம். (7) கர்மா. (8) அவித்யை இவைகளுடைய ஈச்வரத்வம் என்பது சிதானந்தகணைக்யகமாய், பரமாய் பூர்ண மான தன்மயத்தை அடைவது மேலே சொல்லிய பூர்யஷ்டகத் திற்குக் கட்டுப்பட்ட ஜீவனனவன் தன்னுடைய அஹம்ஸ்வரூப ஞானம் அடைந்தவுடன் அந்த சித்ஸ்வரூபத்தில் கலந்து ஜீவன் முக்தனகிறன்.

'பூர்யஷ்டக ப்ரமாத்ருத்வ அபிமான கலனத் அவஸ்தா |
தத்வரூபம் ஸமாவிஷ்ட: சிதானந்து கஸ்வபாவகம் |
தத ஏவ பர: பூர்ண: ஸம்யக் ஜ்ஞானமயதாம் கத: |

भण्डासुरेन्द्र निर्मुक्त शस्त्र प्रत्यस्त्र वर्षिणी

பண்டாஸுரேந்த்ர நிர்முக்த
சஸ்த்ர ப்ரத்யஸ்த்ர வர்ஷிணீ (79)

பண்டாஸுரனுல் விடப்பட்ட அஸ்த்ர சஸ்த்ரங்களை நாசம் பண்ணும் அஸ்த்ர சஸ்த்ரங்களை வர்ஷிக்கிறவள்.

1. முக்யமான லேணதிபதிகளும், ஸைன்யமும் நாசமான பிறகு பண்டாஸுரன் அம்பாளுடன் யுத்தம் செய்தது சொல்லப் பட்டிருக்கிறது

2. சஸ்த்ரம் என்பது கையில் பிடித்துக்கொண்டு அடிப்பது; அஸ்த்ரம் என்பது கையால் விடப்பட்டு ப்ரயோகம் செய்வது.

3. விக்னயந்த்ரம், பண்டாஸுர அஸ்த்ரங்கள் இவை யெல்லாம் ஆத்மக்ஞானம் ஏற்படாதபோது இருக்கும் அவித்யை யின் வ்ருத்தி ரூபங்கள். ப்ரத்யஸ்த்ரம் என்பது ஆத்மக்ஞானம் அடைந்திருக்கும் நிலைமை.

कराङ्गुलि नखोत्पन्न नारायण दशाकृतिः

கராங்குளி நகோத்பன்ன நராயண தசாக்ருதி: (80)

மஹாவிஷ்ணுவினுடைய தசாவதாரங்களையும் தன்னுடைய நகக் கண்களிலிருந்து ஆவிர்பவிக்கும்படி செய்தவள்.

1. அம்பாள் பண்டாஸுரனுடன் யுத்தம் செய்தபோது பண்டாஸுரன் 'ஸர்வாஸுராஸ்த்ரம்' என்னும் அஸ்த்ரத்தினால், ஸோமக, ராவண, பலி, ஹிரண்யாக்ஷன் முதலிய பலிஷ்டரான அஸுரர்களை உண்டுபண்ணி, அவர்கள் அம்பாளுடன் யுத்தம் செய்யத் தொடங்கவே, அம்பாள் தன்னுடைய (வலதுகைக் கட்டை விரல் முதல் இடதுகை சுண்டுவிரல் முடிய) பத்து விரல்களின் நகக்கணுக்களிலிருந்து மஹாவிஷ்ணுவின் பத்து அவதாரங்களை யும் ஆவிர்பவிக்கும்படி செய்து அவர்களால் மேலே சொல்லப் பட்ட அஸுரர்களை ஸம்ஹாரம் செய்ததாகச் சொல்லப்படுகிறது

2. 'நாராயண' என்ற பதம் நீலன், க்ருஷ்ணன், நீலவர்ணத்தைக் குறிக்கும் 'தசாக்ருதி:' என்பதை நீலநிறமுடைய தசை, க்ருஷ்ண னுடைய க்ருதி என்று நாராயண பதத்தின் அர்த்தத்தைக் கூட்டி அர்த்தம் சொல்லலாம். ஜீவனுடைய தசைகள் நான்கு பதங்க ளாக, ஸ்வப்ன, ஸுஷுப்தி, துரீயம், துரீயாதீதம். சுத்தஜீவ னுடைய க்ருதிகள் ஐந்து—ஸ்ருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரம், திரோ தானம், அனுக்ரஹம். இந்தப் பதத்தையும் அம்பாள் தன் நகக் கணுக்களிலிருந்து உண்டுபண்ணினாள் என்பதும், அவ்வளவு அனுயாஸமாகச் செய்கிறாளென்பதைக் குறிக்கிறது.

महा पाशुपतास्त्राग्नि निर्दग्धासुरसैनिका (81)

மஹா பாசுபதாஸ்த்ராக்னி நிர்தக்தாஸுர ஸைநிகா

மஹா பாசுபதாஸ்த்ரத்தின் அக்னியினல் பண்டாசுரனுடைய ஸைந்யங்களை அடியோடு கொளுத்தியவள்.

1. 'ருத்ராதய: பிசாசாந்தா: பசவ: பரிகீர்த்திதா: |
தேஷாம் பதித்வாத் ஸர்வேசோ பவ: பசுபதிர் மத: ||

என்றபடி, ருத்திரர்களுக்கும் மேல்பட்ட ஸர்வேச்வரனுக்கு பசுபதி என்ற பெயர். அவருடைய அஸ்த்ரம் பாசுபதாஸ்த்ரம். இங்கு சொல்லப்பட்ட மஹா பாசுபதாஸ்த்ரம் அதற்கும் மேல்பட்ட வேறு அஸ்த்ரம், அவருடையது.

2. மஹா பாசுபதாஸ்த்ரம் என்பது அப்யாஸாதிசயத்தினல் மநுக்குமேல் ஏற்படும் அத்வைத வ்ருத்திகள். அவைகளின் அக்நியினல் கொளுத்தப்படும் அஸுரஸைந்யமென்பது அவித்யையினல் ஏற்படும் வ்ருத்திகள்.

कामेश्वरास्त्र निर्दग्ध सभण्डासुर शून्यका (82)

காமேச்வராஸ்த்ர நிர்தக்த ஸபண்டாஸுர சூன்யகா

மஹா காமேச்வராஸ்த்ரத்தினல் பண்டாஸுரனையும் அவனுடைய பட்டணமான சூன்ய நகரத்தையும் அடியோடு கொளுத்தியவள்.

1. மஹா காமேச்வராஸ்த்ரம் என்பது மஹா பாசுபதாஸ்த்ரத்தையும்விட மஹிமையுடையது. அதனல் பண்டாஸுரன் ஸமூலமாக அழிக்கப்பட்டதோடு அவனுடைய பட்டணமும் அழிந்துபோய் 'சூன்யகம்' என்ற பெயரையொட்டி சூன்யமாகவே போயிற்று.

'அதைக சேஷிதம் துஷ்டம் நிஹதாசேஷ பாந்தவம் |
க்ரோதேந ப்ரஜ்வலந்தம் ச ஜகத் விப்லவ காரிணம் |
மஹாஸுரம் மஹாஸத்வம் பண்டம் சண்ட பராக்ரமம் |
மஹாகாமேச்வராஸ்த்ரேண ஸஹஸ்ரா திந்ய வர்ச்சஸா |
கதாஸுரம் அகோராத்ம மாதா லலிதா பரமேச்வரீ |
ததஸ்த்ர ப்ரஹிதைர் ஜ்வாலை: சூன்யகம் தஸ்ய பத்தனம் |
ஸஸ்த்ரீகம் ச ஸபாலம் ச ஸகோஷ்ட தனதான்யகம் |
நிர்தக்தம் ஆஸீத் ஸஹஸா ஸ்தலமாத்ரம் அசிஷ்யத |
சூன்யகம் தத்புரம் நாம சூன்யம் ஆஸீத் யதாபவத்தத: |

2. இதுவரையில் வந்த நாமங்களில் ஜீவதசையிலேயே ஆத்மஸாயுஜ்யமடைந்தவன் சிவதுல்யமான ஸ்திதியில் இருப்ப

னைச் சொல்லிவிட்டு, அப்போப்பட்ட உத்க்ருஷ்டமான ஸ்திதி யை அடைந்த பிறகு பாக்கியிருப்பது என்னவென்று இந்த நாமத்தில் சொல்லப்பட்டது.

'காமேச்வர' என்பவர் சிதாத்மா. 'ஆத்மந: காமாய ஸர்வம் ப்ரியம் பவதி' என்றபடி எல்லாவற்றையும் விரும்புவதாலும், எல்லாவற்றாலும் விரும்பப்படுவதாலும், சிதாத்மாவுக்கு காமேச் வரத்வம் ஸித்திக்கிறது. 'பண்டாசுரன்' என்பது த்வைத(பேத) வ்ருத்தியுடைய ஜீவாத்மா. காமேச்வராஸ்த்ரம் என்னும்படியான சிதக்னியிலால் பண்டாசுர (த்வைத பாவத்தோடு கூடிய ஜீவ) னுடைய பேத வ்ருத்திகள் கொளுத்தப்பட்டு ஜீவன் ஜீவாத்மா வுடன் ஸாயுஜ்யமடைந்து 'ஜீவன் முக்தன்' ஆனபிறகு பாக்கி நிற்கும் லிங்க சரீரமானது எரிந்த துணிபோல் ஆத்ருதியோடு இருப்பதைத் தவிர வாஸ்தவத்தில் சூன்யமாகப் போய்விடுகிறது சின்மயமான ஸ்வரூபமே பாக்கியிருக்கிறது என்று அர்த்தம். அம்மாதிரி பண்டாசுரனை வதம் செய்வதற்காக தேவர்களால் ஸ்தோத்ரம் பண்ணப்பட்ட அம்பாள், அவர்கள் கோரிக்கைப்படி அந்த அஸுரனை ஸம்ஹாரம் செய்தபிறகு, அதினால் ஸந்தோஷ மடைந்த தேவர்களால் திரும்பவும் ஸ்தோத்ரம் செய்யப்பட்டதாக அடுத்த நாமத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

ब्रह्मोपेन्द्र महेन्द्रादि देवसंस्तुत वैभवा (५३)

ப்ரும்ஹா, விஷ்ணு, இந்திரன் முதலிய தேவர்களால் (நன் ருக) ஸ்தோத்ரம் செய்யப்பட்ட பராக்ரமத்தோடு கூடியவள்

1. ப்ரும்ஹா முதலானவர்களால் அந்தர்முகமாக தரி சனத்துள் கண்டு அறியப்பட்ட விபுத்வம் (அபரிச்சின்னத்வம், ஸர் வாத்மத்வம்) உடையவள். அவர்களால் அறியப்பட்ட ஆத்ம ரூபமானவள்.

हरनेत्राग्नि संदग्ध काम संजीवनौषधिः (५४)

ஹரநேத்ராக்னி ஸந்தக்த காம ஸஞ்ஜீவனௌஷதி:

பரமசிவனுடைய நெற்றிக் கண்ணின் அக்னியினால் பஸ்மீ பூதனான மன்மதனுக்கு ஸஞ்ஜீவனம் என்ற ஔஷதிபோல் இரு ப்பவள். (மன்மதனை உயிர்பெறும்படி செய்தவள்).

1. **ஸஞ்ஜீவனீ** என்னும் பிழைப்பிக்கும் சக்தியுடையது. 'ஜீவாது' என்னும் பெயர்.

2. பண்டாஸுர வதம் ஆனபிறகு ப்ரும்மஹத்திகளால் ப்ரார்த்திக்கப்பட்டதின் பேரில் அம்பாள் மன்மதனை உயிர்பெறும் படி செய்தது லலிதோபாக்யானத்தில் சொல்லியிருப்பதை இந்த நாமம் குறிக்கிறது.

3. 'பித்ரா ஹிர்பர்த்ஸிதோ பால: மாத்ரைவ ஆச்வாஸ்யதே கில' என்றபடி (ஜகத்துக்கெல்லாம்) தகப்பனரான பரமசிவனல் மன்மதன் தண்டனை அடைந்தபோதிலும், (ஜகத்துக்கெல்லாம்) மாதாவான அம்பாளால் அந்த தண்டனையிலிருந்து விடுவிக்கப் பட்டதானது தகப்பனரால் அதட்டப்பட்ட குழந்தையானது தாயாரால் ஸமாதானப்படுத்தப்படுகிற உலகவழக்கத்தை ஸூசிப்

4. 'ஹரொள ருஷ்டே குருஸ்த்ராதா குரொள ருஷ்டே ந கச்சன' என்றபடி ஈச்வரன் கோபம் கொண்டாலும் அதிலிருந்து குரு காப்பாற்றுவார் என்று சொல்வதுண்டு. அம்பாளுக்கு (பின்னல் சொல்லப்பட்ட) குருமூர்த்தி என்று நாமம் உண்டு. அப்படி குருவின் மூர்த்தியான அம்பாள் ஈச்வரனுடைய கோபத்திற்கு பாத்ரமான மன்மதனை காப்பாற்றியது இந்த நாமத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

'குருஸ்ச்ய பதே ஸ்தித்வா ஸ்வயமேவ ஸதாசிவ: |
ப்ரச்னேத்தர பதார் வாக்யை: தந்த்ரம் ஸமவதாரயத் | '

என்றபடி ஈச்வரன் தன் ப்ரகாச விமர்சரூபங்களான சிவன், சக்தி இவர்களுடைய ஸம்பாஷண ரூபமாக ப்ரச்னைக்காரங்களால் ஸகல தந்த்ர சாஸ்த்ரத்தையும் ஜகத்திற்கு வெளியிட்டார் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதிலிருந்தும் அம்பாள் குரு என்பது விளங்குகிறது.

5. 'ஸ்ரீ வித்யோபாஸகானம் ச யதா தேவோ வர: சிவ: என்றபடி அம்பாளுடைய உபாஸகர்களில் முதலானவர் பரம சிவன் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதனால் அவருக்கு குரு மண்டலத்தில் ஆதிநாதர் என்னும் பெயர். மேலும் 'சக்த்யா விஹீன சிவே ஸுகஸ்மே நாம தாம நவித்யதே' என்பதிலிருந்தும் ஆசார்யாள் ஸௌந்தர்யலஹரியில் 'சிவ: சக்த்யா யுக்தோ' என்ற முதல் ச்லோகத்தில் சொல்லியிருக்கிறபடி, சக்தியே சிவனுக்கு இன்றியமையாதவளானபடியாலும் இச்சா சக்தி ரூபிணி

யான அம்பாளுடைய ஏவலால் பரமசிவனுடைய கர்த்தாவம் ஏற்படுகிறபடியாலும் அம்பாள்தான் குரு என்று ஏற்படுகிறது.

6. ஆத்மஸ்வரூபத்தை அபஹரணம் பண்ணுவது 'ஹர', அதற்கு ஹேதா - வழிகாண்பிப்பது—அதாவது மூல அக்ஞானம் அது அக்னிபோல் எங்கும் சூழ்ந்துகொண்டிருப்பதால் 'ஹர ஹேத்வாக்னி' என்று ஏற்படுகிறது. அந்த மூல அக்ஞானம் அதிகமாக இருக்கிறபடியால் அதனால், ஸம்தக்த — நன்றாகக் கொளுத்தப்பட்ட, காம - ஜீவபாவத்தையடைந்த காமேச்வர ஸ்வரூபமான ஆத்மா, அதற்கு ஸம்-நன்றாக, அதாவது அக்ஞான மாகிற ஆவரணத்தைப் போக்கடிப்பதினால் நன்றாக, ஜீவன்-தன்னுடைய பரமாத்ம ஸ்வரூபத்தை அடைவதற்கு, ஓஷதி: - மூலி கையாக இருப்பவள். வித்யாரூபிணியான அம்பாளை உபாஸிப்பதினால் அவித்யையை நீங்கி தன்னுடைய ஸ்வரூபத்தை அடைகிறதான மோக்ஷம் ஏற்படும் என்று அர்த்தம்.

7. மன்மதன் ஆதியில் தேஹத்தோடிருந்தும், பின்னால் பரமசிவனால் எரிக்கப்பட்டபோது தேஹமில்லாமலும், இருந்துகொண்டிருந்ததினால் இன்னொரு விசேஷம் தெரிகிறது. ஆத்மாவானது தில் பரமாத்ம ஸ்வரூபமாக இருந்து, பிறகு அவித்யாவசத்தால் சரீரத்தை அடைந்தாலும் அந்த அவித்யையினின்றும் விடுபட்டிருப்பதால் சரீரம் என்கிற பற்றில்லாமல் பிரும்மத்தோடு ஐக்யத்தை அடைகிறது. ஆகவே பிரும்ம ஸ்வரூபத்தை அடைவது யோகிகளுக்குப் புதிதல்ல.

'யத் சிவத்வம் அநங்கோபாத்தம் புராபூச்சாம் துஷ்டுவோபாதிவை: |
ஸ்வபாவ ஏவ தன்மாயாசக்தி ப்ரோத்தாபிதான் னிஜாத் |
நாஸ விகல்ப தெளராத்ம்யாத் பராபூதபவ ஸ்மிதம் |
விம்ருஷ்டம் குருணித்திஷ்ட ப்ரோதாபாய க்ரியாவஸை தத் |
சிவத்வம் வ்யக்தம் ஏதீதி சிவசேஷ்டாநுகாரிணம் |'

(விஸ்வ ப்ரபஞ்சஸார.)

இதுவரையில் பண்டாஸுரவதமாகிற அர்த்தவாதரூபத்தின் காரியங்களைச் சொல்லிவருகையில், அந்த பண்டாஸுரனுக்கு பந்துவான காமங்களில் அம்பாளுடைய பரமான ரூபத்தை இவ்வளவு (உள்ளடங்கிய, ரஹஸ்யமான) அர்த்தமாகச் சொல்லிக்கொண்டு வரப்பட்டது. ஏனென்றால் அந்த பரமான ரூபம் ஸூக்ஷ்மத்திற்கும் ஸூக்ஷ்மமானது. அதனால் அம்பாதன் ரஹஸ்யமாகச் சொல்லவேண்டியிருக்கிறது.

இனி, அம்பாளுடைய ஸ்தூலரூப அபின்னமான ஸ்ரீசக்ர ரூபத்தை வர்ணிக்கப்படுகிறது. அது ஸ்ரீசக்ரம், ஸ்ரீசக்ரமகாரம், ஸ்ரீசக்ரமகமம் என்று மூன்று வகைப்பட்டது. பஞ்சதசீவித்யாஸ்வரூபம் ஸ்ரீசக்ரம். காமகலாரூப ரூபம் ஸ்ரீசக்ரமகாரம். குண்டலினீ ரூபம் ஸ்ரீசக்ரமகமம். இனி அடுத்தவரும் மூன்று நாமங்களில் ஸ்ரீசக்ரமரூபம் சொல்லப்படுகிறது.

श्रीमद्वाग्भव कूटैक स्वरूप मुखपङ्कजा.

ஸ்ரீமத் வாக்பவ கூடைக ஸ்வரூப முகபங்கஜா (85)

ஞானப்ரதம் முதலிய மாஹாத்ம்யத்தோடு கூடிய பஞ்சதசியில் முதல் பாகமும், ஐந்து அக்ஷரங்களோடு கூடியதுமான, வாக்பவம் என்னும் கூடமே முக்யமான தன்னுடைய ரூபமாக இருக்கிற முகபங்கஜ (வதனகமல)த்தை உடையவள்.

ஸ்ரீமத் – ஞானப்ரதம் முதலிய மஹாத்ம்யத்தோடு கூடிய, வாக்பவ கூட – பஞ்சதசியில் முதல் பாகமும் ஐந்து அக்ஷரங்களோடு கூடியதுமான 'வாக்பவம்' என்னும் கூடமே, ஏக – முக்யமான, ஸ்வ – தன்னுடைய ரூபமாக இருக்கிற, முகபங்கஜ (வதனகமல)த்தை உடையவள்.

कण्ठाधः कटिपर्यन्त मध्यकूट स्वरूपिणी

கண்டாதः கடிபர்யந்த மத்யகூட ஸ்வரூபிணீ (86)

கழுத்துக்குக் கீழ் இடுப்பு வரையில் இருக்கும் மத்யபாகமான (பஞ்சதசியின் மத்யபாகமாகிறதும் ஆறு அக்ஷரங்களையுடையது மாகிய காமராஜகூடத்தை தன்னுடைய ரூபமாக உடையவள்.

शक्तिकूटैकतापन्न कट्यधोभाग धारिणी

சக்தி கூடைகதாபன்ன கட்யதோபாக தாரிணீ (87)

சக்திகூட – பஞ்சதசியின் கடைசிபாகமாகிறதும், நான்கு அம்சங்களோடு கூடியதுமாகிய சக்திகூடத்தோடு, ஏகதா ஆபன்ன – ஐக்யத்தை அடைந்த, கட்யதோபாக – இடுப்புக்குக் கீழ் உள்ள பாகத்தை, தாரிணீ – தரிக்கிறவள், உடையவள்.

அம்பாளுடைய முக்கிய மந்த்ரமாகிய பஞ்சதசியின் மூன்று பாகங்களையும் அம்பாளுடைய ஸ்தூலரூபத்திற்குச் பொருத்தமானதாகக் காட்டப்படுகிறது.

வாக்காம சக்தி கூடை: அவயவசோ விக்ரஹோ மாது: ।
ப்ரதிபாத்யோ அத்ர ஆகண்டாத் ஆமத்யாத் ஆசபாதாக்ராத் ॥
(வாிவஸ்யா ரஹஸ்யம்)

இதில் வாக்பவகூடமானது ஸகல வித்யாபாதமும், ஸாஸ்த்ர மான ஞானத்தையும் கொடுக்கக்கூடியது. இச்சாசக்தி ஸ்தானம் காமராஜகூடம், விரும்பப்பட்ட ஸகலவிதமான வஸ்துக்களைக் கொடுக்கக்கூடியது, ஞானசக்தி ஸ்தானம். சக்திகூடம் ஸ்ருஷ்டி முதலிய சக்திகளைக் கொடுக்கக்கூடியது, க்ரியாசக்தி ஸ்தானம்.

'காமஸ்தே ஹ்ருதி வஸதி காமராஜம்
ஸ்ரஷ்டாருத்வாத் ததது தவாம்ப சக்திகூடம்'

இம்மூன்று கூடங்களைப்பற்றியும் அவைகளின் ஸூக்ஷ்மார்த்தங் களைப்பற்றியும் சக்தி மஹிம்ன ஸ்தோத்ரத்திலும், வாிவஸ்யா ரஹஸ்யத்திலும் மற்ற க்ரந்தங்களிலும் காணலாம்.

मूलमन्त्रात्मिका

மூலமந்த்ராத்மிகா (११)

சதுர்வித புருஷார்த்தங்களுக்கும் மூலகாரணமாயுள்ள பஞ்ச தசாக்ஷர மந்த்ரமே ஸ்வரூபமாக உடையவள்.

மந்த்ரம் என்பதற்கு மனனம் (அனுஸந்தானம்) செய்வது என்று அர்த்தம். ஆவ்ருத்தி பண்ணுவதினால் காப்பாற்றுவது என்று அர்த்தம்.

मूलकूटत्रयकलेबरा

மூலகூடத்ரயகளேபரா (89)

மேலே சொல்லியபடி மூலமந்திரமாகிற பஞ்சதசியின் மூன்று கூடங்களுக்கு ஸமமான (ஸ்தூலரூப) சரீரத்தை உடையவள். அல்லது அவைகளையே ஸூக்ஷ்ம ரூபத்தில் சரீரமாக உடையவள்.

உண்மையில் இந்த நாமத்திலும் இதற்கு முந்தியதிலும் வரும் 'மூல' என்ற பதம் 'காமகலா' என்று அர்த்தம். காம கலைக்கும் மூன்று பாகங்கள் உண்டென்பதாகவும், அவைகள் க்ரமமாய் பஞ்சதசாக்ஷரியின் மூன்று பாகங்களையும் சரீரத்தையும் மேலே சொல்லிய மூன்று பிரிவுகளையும் குறிக்கும் என்பதாகவும் சொல்லப்பட்டிருக்கு

பிந்துரூ முகம் பிந்துத்வயேந குசௌ ஸபார்த்வதள
யோணிம் க்ருத்வா காமகலாம் இதி த்யாத்வா
(கல்பஸூத்ரம்)

'முகம் பிந்தும் க்ருத்வா குசயுகம் அதஸ்தஸ்ய தத் அதோ
ஹரார்தம் த்யாயேத்யோ ஹரமஹிஷி தம் மன்மதகலாம்'
(ஸௌந்தர்யலஹரி)

காம கலாகூடத்தின் ரஹஸ்யங்கள் குருமுகமாகத் தெரிந்து கொள்ளவேண்டியவைகள்.

ஆகவே இந்த இரண்டு நாமங்களிலும் அம்பாளுடைய காம கலாகூட ரூபமான ஸூக்ஷ்மமான ரூபத்தைச் சொல்லப்பட்டிருக்கிறது.

இம்மாதிரி ப்ருஹ்மாண்டத்தில் (வெளியில்) அருமையாக இருக்குமிடமான அம்பாளுடைய ரூபத்தை வர்ணித்துவிட்டு பிண்டாண்டமாகிய சரீரத்தில் அத்தகையதாக இருக்கும் 'குண்டலினீ' என்ற பெயரோடுகூடிய அம்பாளுடைய ஸூக்ஷ்மமான ரூபத்தை வர்ணிக்க ஆரம்பிக்கப்படுகிறது.

இந்த குண்டலினீ சக்தியானது மூலாதார சக்ரத்தில் வர்ப்பம் போன்ற மூன்றரை வளைய ரூபமாக துங்கிக்கொண்டிருப்பதாகவும், யோகாப்யாஸத்தினால் மேற்படிப்பட்ட கீழான ஸுஷும்ன மார்க்கமாகக் கிளம்பி ஆறு சக்ரங்களையும் பிளந்து, விஷ்ணு, ருத்ர, க்ரந்திகளையும் அக்னி, ஸூர்ய சந்த்ரமண்டலங்களையும், பேதனம்செய்து மேலே ஸஹஸ்ரமாக பத்ம மத்திய இடத்திற்குப்போய் அங்கே அந்த பரமசிவன் என்ற சந்த்ர மண்டலத்திலிருக்கும் அடியார்களுக்கு நேராகச்செய்து திருப்பவும் அதே வழியாகத் தன்னிருப்பிடமான மூலாதாரத்திற்கு வந்து முன்போல் இருப்பதாகவும் சொல்லப்படுகிறது. யோகாப்யாஸம் இல்லாதவர்களுக்கு தன்வந்திரியின் உபதியால் இந்த அநுபவத்தை அடையலாம்.

'ஸௌதாதாரஸாரை: சரணயுகளாந்தர்விகளிதை:
ப்ரபஞ்சம் ஸிஞ்சந்தீ புநரபி ரஸாம்நாய மஹஸ:
அவாப்ய ஸ்வாம் பூமிம் புஜகநிபம் அத்யுஷ்டவலயம்
ஸ்வமம் ஆத்மானம் க்ருத்வ ஸ்வபிஷி குலதைவம் தநுஹரி:
(ஸௌந்தர்யலஹரி)

'பிஸதன்வீ தடிதாபா மூலாதாரஸ்த பஞ்சகாத்மாநம்
பித்வா மூலஷ்ட்கதாக்ரோதத் வன் ஹ்ரிதயவீம் அநுஸ்மரதி
வ்யோமமணி சித்சதி மண்டலமத்யே த்ரிகுணிலை ஸங்கம்ய
உபயாங்க ஸங்கஜன்யம் ப்ரவாஹயந்தீ ஸுதாபூரம்

ஸ்வயமபி தத்பாவைசாத் மத்தா பூத்வா புனச்ச தேவைவ |
மார்கேண பராவ்ருத்ய ஸ்வஸ்மின் ஸ்தானே ஸுகம் ஸ்வபிதி:11
(விஜ்ஞான ரஹஸ்யம்)

(இது பின்வரும் நாமங்களில் விஸ்தாரமாகச் சொல்லப்படுகிறது)

कुलामृतैकरसिका

குலாம்ருதைக ரஸிக (40)

குலாம்ருதத்திலேயே அதிகமான ரஸத்தை உடையவள். அதாவது அதைப் பானம் பண்ணுவதில் அதிக ப்ரியமுள்ளவள்.

1. மேலே சொல்லியபடி குண்டலினீ சக்தியினால் ஸஹஸ்ர தள பத்மத்திலிருந்து சந்த்ர மண்டலத்திலிருந்து பெருகுவது செய்யப்படும். அப்படி ப்ரவாஹமான அது குலாம்ருதம். அந்த குண்டலினீ சக்தியும் பானம்பண்ணி மேலிருப்போய் திரும்பவும் ஸஹஸ்ரத்தை மார்க்கமாக மூலாதார பத்மத்திற்கு வந்து முன்போல். அதின் தளங்களிலுள்ள த்ரிகோணத்தின் மேல் பாகத்தில் அதே முகமாகவும் மூன்றரை வளையாகாரமாகவும் தங்குகிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது.

'ஸ்வயமபி தத்பாவைசாத் மத்தா பூத்வா'
(விஜ்ஞான ரஹஸ்யம்)

2. ஸஹஸ்ராரபத்மமான கீழ்நோக்கி இருப்பதாகவும், அதிலுள்ள சித் சந்த்ர மண்டலத்தில் அகுல குண்டலினீ இருப்பதாகவும். அத்துடன் கீழிருந்துவருகிற குண்டலினீ சக்தி சேருவதில் (உபயாங்க ஸம்யோகத்தால்) அம்ருத ப்ரவாஹமாய் மாறுபடுவதாகவும் சொல்லப்பட்டிருக்கிறது.

குலாங்கனா ஸஹஸ்ர அப்ஜ ரந்த்ரவிகீர்ண:
ப்ரவிச்ய ஸங்கேத க்ருதாந்தரேண |
விச்ராம்ய விச்ராம்ய விரேண பும்ஸா
ஸங்கம்ய ஸங்கம்ய ரஸம் ப்ரஸூதே
(சித்தாந்த ஸ்வரூப)

3. 'குலம்' எனபது ஸஹஸ்ரதள ஸரோஜமான சஹஸ்ரார பத்மத்தை. அதாவது ஒரே மாதிரி ஸம்பந்தமுள்ள வஸ்துக்களுக்குப் பெயர். இங்கே நாக்கு, கோபம், நானம் இம்மூன்றின் சேர்க்கை (த்ரிபுரை) யை சொல்லப்பட்டிருக்கிறது. (விதரிக்குவிகொள்கிறவள் நாக்கு, விதரிக்குவிகொள்ளப்படுவது வஸ்து கோபம், விதரிக்குவிகொள்வது நானம்) இந்த த்ரிபுரையைக்காண் ஆசார்யாள் 'ஸஹஸ்ரதள கமல

பாந்தம் அநுபாத்யேதத் ஸமஸ்தம் ஜகத்' என்றதினால் சொன்னது. இதையே குலம் என்றும் சொல்லப்பட்டது.

'மேய மாத்ரு மிதிலக்ஷ்ணம் குலம் ப்ராந்தரே தா வ்ரஜே
தியத்ரவிச்ராமம்'
(சித்கன சந்த்ரிகா)

(மேயம் - அளக்கப்படும் வஸ்து, மாத்ரு - அளக்கிறவன், மிதி - அளப்பது. இதுவும் மேலே சொல்லிய நேய, நாத்ரு, நாணம் மாதிரி ஒரு த்ரிபுடி)

மேல் நோக்கியும் கீழ்நோக்கியும் சரீரத்தில் முப்பத்தாண்டு பத்மங்கள் இருப்பதாகவும், அதில் அடிபாகத்தில் இருப்பதற்கு 'அகுலம்' என்றும், அதற்கு மேல் இருப்பவைகளுக்கு 'குலம்' என்றும் 'ஸ்வச்சந்தஸங்க்ரஹம்' முதலிய க்ரந்தங்களில் சொல்லப்பட்டிருக்கிறது.

5. 'கு' என்றால் ப்ரிதிவீ தத்வம். அதின் இருப்பிடமாகிய மூலாதார சக்ரத்தையும் அல்லது அத்துடன் ஸம்பந்தப்பட்டு இருப்பதினால் ஸுஷும்ன மார்க்கத்தையும் 'குலம்' என்று சொல்லலாம் அந்த ஸுஷும்னையின் மேல் உச்சியிலிருக்கும் ஸஹஸ்ராரத்திலிருந்து பெரும் அம்ருதமானது 'குலாம்ருதம்'.

'சிவார்க்க மண்டலம் பித்வா த்ராவயந்தீ மண்டலம் |
தத் உத்பூதாம்ருத ஸ்யந்தி பரமானந்த நந்திதா |
குலயோஷித் குலம் த்யக்த்வா பரம் வ்ருஷணம் யுத்ய ஸா' |
(பைரவயாமளம்)

மேலே சொல்லியதில் 'குலஸ்திரீயானவள் குலத்தைவிட்டுப் போய்' என்பதில் 'குலம்' என்பது குலமார்க்கமாகிய ஸுஷும்ன மார்க்கம். குலஸ்திரீயென்பது குண்டலினீ சக்தி.

6. 'சரீரம் குலம் இத்யுக்தம்' என்றும் ஸ்வச்சந்தஸங்க்ரஹத்தில் சொன்னபடி சரீரத்தையே குலம் என்றும், அதிலுள்ள ஸஹஸ்ராரத்திலிருந்து பெருகும அம்ருதத்தை குலாம்ருதம் என்றும் சொல்லலாம்.

कुलसंकेतपालिनी

குல ஸங்கேத பாலினீ (91)

'குலம்' ஸம்பந்தமான (ஸங்கேத) ரஹஸ்யங்களை பசு ஜனங்களுக்கு (அதாவது அவைகளைத் தெரிந்துகொள்ளக்கூடிய யோக்யதை இல்லாதவர்களுக்கு) தெரிந்துபோகாமல் காப்பாற்றுகிறவள்

ஸ்தோத்திரம்

1. அதாவது, அம்பாளுடைய உபாஸனை ரஹஸ்யங்கள் ஸம்ப்ரதாயத்தை ஒட்டி குரு சிஷ்ய பாம்பரையாய்த் தான் தெரிந்துகொள்ள முடியுமென்று அர்த்தம்.

2. 'குல புஸ்தகானி கோபாயேத்' என்று கல்பஸூத்ரத்தில் சொன்னபடி அம்பாளுடைய உபாஸனையைப் போதிக்கும் சாஸ்திரத்திற்கும் 'குலம்' என்று பெயர். அவைகளின் ரஹஸ்யங்கள்.

3. 'ந குலம் குலமித்யாஹு: ஆசார: குலமுச்யதே |
ஆசார ரஹிதோ நாஜன் நேஹ நாமுத்ர விந்ததி ||

என்று சொன்னபடி ஆசாரத்துக்கும் 'குலம்' என்று பெயர். அந்த ஆசாரத்தின் ரஹஸ்யங்கள்.

4. அம்பாளுடைய உபாஸனையின் ஸங்கேதங்கள் சக்ர ஸங்கேதம், மந்த்ர ஸங்கேதம், பூஜா ஸங்கேதம், என்று மூன்று வகை.

5. 'ஸங்கேதம், என்றால் ரஹஸ்யமாகக் கூடும் இடம் என்றும் அர்த்தம். ஆகவே 'ஸஹஸ்ராரே பத்மே ஸஹ ரஹஸி பத்யா விஹராஸே' என்று ஆசார்யாள் சொன்னபடி ஸஹஸ்ரார பத்மமானது குலஸங்கேத ஸ்தலம் ஆகிறது.

कुलाङ्गना

குலாங்கநா (12)

பாதிவ்ரத்யம் முதலிய குணங்களால் பூர்ணமாக இருக்கும் வம்சத்திற்கு 'குலம்' என்று பெயர். அதைச் சேர்ந்த ஸ்த்ரீ (குலாங்கனை) யானவள் எப்படி மறைந்து இருப்பாளோ அந்த மாதிரி அவித்யை (யாகிற ஜவனிகை) யினால் மறைக்கப்பட்டவளாகையால் அம்பாளை 'குலாங்கநா' என்று சொல்லப்பட்டது.

அம்பாளுடைய உபாஸனையான ஸ்ரீ வித்யை நிகரும் ரஹஸ்யமானது என்றும், பிறருக்கு ஸாமான்யமாக வெளியிடப்படாதது என்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

'அன்யாஸ்து ஸகலா வித்யா: ப்ரகடா லோகயோ: ஸ்திதா |
இயம் து சாம்பவீ வித்யா குப்தா குலவதூரிவ ||
(குப்தாகமம்)

வேத்ய இவ ப்ரகடா வேதாதி வித்யா: ஸர்வலோகே
தர்சனேஷு குப்தேயம் வித்யா (கல்பஸூத்ரம்)

कुलान्तस्था

குலாந்தஸ்தா

ஏற்கனவே சொல்லப்பட்ட 'மாத்ரு, மான, மேய' ரூபமாகிய 'குலம்' என்பதின் நடுவில் 'மான' ரூபமாக இருப்பவள், அல்லது குலசாஸ்தர ப்ரகாரம் 'ஞாத்ரு, ஞான, ஞேய' ரூபமாகிய த்ரிபுடியில் 'ஞேய' ரூபமாக இருப்பவள்.

'குலம் ஜகதே க்ருஹே |
ஸஜாதீயகணே கோத்ரே தேஹேபி கதிதம் குலம்'

என்றபடி குலம் என்பது நகரம், வீடு, தேஹம், வம்சம் இவை களைக் குறிக்கும். அந்த அர்த்தத்தில் மேலே சொல்லிய எல்லா இடங்களிலும் பூஜிக்கப்பட்டு இருப்பவள்.

'பூஜநீயா ஜனைர்தேவீ ஸ்தானே ஸ்தானேபுரே, புரே |
க்ருஹே க்ருஹே சக்திபரை: க்ராமே க்ராமே வனேவனே' ||
(பவிஷ்யோத்தர புராணம்)

कौलिनी

கௌலினீ (94)

'குலம்' என்றால் சக்தி என்றும், 'அகுலம்' என்றால் சிவன் என்றும், அவ்விருவர்களுடைய ஸாமரஸ்யம் (சேர்க்கை) கௌலம் என்றும் சொல்லப்படும். அந்த ரூபமாக இருப்பவள் 'கௌலினீ'.

1. ஸஹஸ்ரபத்மினியின் உச்சியில் ஒரு ஸஹஸ்ரதள கமலம் இருப்பதுபோல் அதற்கு அடியிலும் ஒரு (சிகப்பு நிற முள்ள) ஸஹஸ்ரதள கமலம் இருப்பதாகச் சொல்லப்படும். அதற்கு 'குலம்' என்ற பெயர். அதின் இதழ்களில் குல சக்திகள் இருப்பதாகவும், நடுவில் குலேசுவியாகிய அம்பாள் இருப்பதாகவும், ஸ்வச்சந்த தந்த்ரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. அப்படியிருப்பதால் 'கௌலினீ' என்ற பெயர்.

குலம் சக்திரிதி ப்ரோக்தம் அகுலம் சிவ உச்யதே |
குலே அகுலஸ்ய ஸம்பந்த: கௌலம் இத்யபிதீயதே ||

2. பாஹ்யாகாசத்தில் (வெளிப்படையாக) சக்ரத்தை ஏற்படுத்தி அதைப் பூஜை செய்வதான ஸமஸ்த கார்யங்களுக்கும் 'குலம்' எனப்படும். அந்தமாதிரி உபா[illegible]
'கௌலினீ'.

कुलयोगिनी

குலயோகினீ (95)

மேலே சொன்ன 'குலம்' என்பதுடன் ஸம்பந்தம் உடையவள்.

अकुला

அகுலா (96)

ஸாஷடாம்னாயின் உச்சியில் இருக்கும் ஸஹஸ்ரார பத்மத்திற்கு 'அகுலம்' என்ற பெயர். அந்த ரூபத்தை உடையவள். அல்லது அதில் இருப்பவள்.

1. அகேவ ஸாஷடாம்னாயின் மேலும் கீழும் ஸஹஸ்ர தள பத்மங்கள் இருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கின்றது.

இதை ஸ்வச்சந்த ஸம்க்ரஹத்தில்,

'அதஸ்தாச்சோர்த்வ: ஸாஷடாம்னாய: ஸஹஸ்ரதல பங்கஜம் |
பங்கஜத்ரயமப்யேவ குலாகுலாகுலம் தத: ' ||

என்கிற ச்லோகத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

2. இன்னொரு அர்த்தத்தில் ஏகாரம், வம்சம் முதலியவை யில்லாதவள் என்பதால் 'அகுலா'.

समयान्तस्था

ஸமயாந்தஸ்தா (97)

சிவ சக்திகளுடைய ஸாம்யமான ரூபத்தோடு இருப்பவள்.

1. தஹராகாசத்தில் (அந்தர்முகமாக) சக்ரத்தை பாவனை செய்து அதற்குச் செய்யும் பூஜை முதலிய உபாஸனைகளுக்கு 'ஸமய' என்ற பெயர். (பஹிர்முகமாக சக்ரத்தை வைத்துப் பூஜை செய்வது 'குலம்' என்ற பெயர் என்பது முன்னரே சொல்லப்பட்டிருக்கிறது. ஸமயாதத்வ அந்தர்முகமான பாவனை சக்ர பூஜை). அது ஸகல யோகிகளாலும் ஸர்வ தத்துவங்களுடனும் என்ற ஒரே மனதாக நிச்சயிக்கப்பட்டு, அறிந்திருக்கப்பட்ட காரணத்தால் ஸமய: என்ற பெயர். இந்த ஸமயாவை 'ஸமய பஞ்சகம்' 'ஸமய பஞ்சகம்' என்று வஸிஷ்ட, சுக, ஸனக, ஸனந்தன. ஸனத்குமார தந்த்ரங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த விதமான ஸமய பஞ்சகத்தில் சொல்லப்பட்டவள் (ப்ரதிபாதிக்கப்பட்டவள்) 'ஸமயாந்தஸ்தா'.

2. சிவன், சக்தி இவ்விருவர்களும் ஸாம்யமாய்—ஸமானமாயிருப்பதால் சிவனுக்கு ஸமய: என்றும், சக்திக்கு ஸமயா என்றும் பெயர். இந்த ஸாம்யமானது (ஸாம்ய பஞ்சகம்) ஐந்து விதம். சக்ரம் முதலியனவைகளின் பூஜையில் ஸமமாக இருப்பது அதிஷ்டான ஸாம்யம், ஸ்ருக்ஸ்ருவ முதலிய க்ரியைகளில் ஸமமாக இருப்பது அனுஷ்டான ஸாம்யம், ந்ருத்யம் முதலிய க்ரியைகளில் ஸமமாக இருப்பது அவஸ்தான ஸாம்யம், சிவ, சிவா, பைரவ பைரவீ, முதலிய நாமங்களால் நாம ஸாம்யம். சிகப்பு நிறம் முகலியவைகளால் ரூபம் ஸாம்யம். இம்மாதிரி சிவ சக்திகளுடைய ஸாம்யமான ரூபத்தோடு இருப்பவள். [‘அந்த’ என்ற பதத்திற்கு ஸ்வரூபம் என்றும் அர்த்தம்.]

3. ஸ்ரீசக்ரமானது இம்மாதிரி பாஹ்யாகாசம் தஹராகாசம் அந்த இரண்டுவிதமான ஆகாசத்திலும் ஏற்படுத்தி உபாஸனை செய்யப்படுவதால் அதற்கு ‘வியத் சக்ரம்’ என்றும் பெயர். (வியத்-ஆகாசம்).

समयाचारतत्परा

ஸமயாசார தத்பரா (98)

ஸமாயாசாரத்தில் ஈடுபட்டவள். அதாவது மேலேசொல்லிய ஸமயமார்க்கமாக உபாஸனை செய்வதால் ஸந்தோஷம் அடைகிறவள்.

1. இந்த ஸமய மார்க்கத்திலுடைய ஆசார (உபாஸனைக்ரம) மானது ருத்ரயாமளத்தில் பத்து படலங்களில் விஸ்தாரமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. பின்வருமாறும் சொல்லப்படும்.

2. ஸாதகனானவன் தீக்ஷையடைந்த பிறகு தன் குருவிலுடைய கடாக்ஷத்தால் ஷட்விதைக்ய ஸந்தானம், சதுர்விதைக்ய ஸந்தானம் முதலியனவைகளால் பாவனாதார்ட்யம் ஏற்பட்ட பிறகு மஹாநவமியில் ‘மஹாசீவதா’ என்ற ஸம்ஸ்காரம் பெற்றபின்,

ஸுதாப்தௌ நந்தநோத்யானே ரத்னாகாரே மதுத்யகாம் |
பாலார்க மண்டலாபாஸம் சதுர்பா ஹுபி: ஸ்ரிலேசாயும் ||
பாசாங்குச சராம்ச்சாபம் தாரயந்தீம் சிவாம் ச்ரியம் |
த்யாத்வாச ஹ்ருத்கதம் சக்ரம் வ்ரஸ்த: பரமேச்வரீம் ||
பூர்வோக்த த்யானயோகேன சஞ்சிந்த்ய ஜபமாசரேத் ’ |

என்று சொல்லப்பட்டபடி அம்பாளை த்யானம் செய்யும்போது, அம்பாளான குண்டலினீ சக்தியானவள் மேலே சொல்லியபடி

மூலாதார பத்மத்திலிருந்து கிளம்பி, அதையும் ஸ்வாதிஷ்டான சக்ரத்தையும் பேதித்து, மணிபூர சக்ரத்தில் ப்ரத்யக்ஷமாவாள். அங்கே அவளை அர்க்யம், பாத்யம் முதல் பூஷணம் வரையிலுள்ள உபசாரங்களைச் செய்து அனாஹத சக்ரத்திற்கு அழைத்துவந்து, அங்கே தூபம் முதல் தாம்பூலம் வரையிலுள்ள உபசாரங்களைச் செய்து விசுத்தி சக்ரத்திற்கு அழைத்துவந்து, அங்கே ஸிம்ஹாஸனத்திலிருக்கச்செய்து, சந்த்ரகலா ரூபமான சுத்த ஸ்படிக நிற முடைய மணிகளால் பூஜித்து, அங்கிருந்து ஆக்ஞா சக்ரத்திற்கு அழைத்துவந்து, நீராஜனம் செய்து, அங்கிருந்து ஸஹஸ்ரார கமலத்திற்கு அழைத்துவந்து, அங்கே நடுவிலிருக்கும் சிச்சந்த்ர மண்டலத்தில் ஸதாசிவருடைய ஸமீபம் சேர்ப்பித்து, அவர்களைச் சுற்றி படுதாவைப்போட்டு தான் ஸமீபத்திலிருந்துகொண்டு, அம்பாள் அங்கிருந்து திரும்பவும் மூலாதார கமலத்திற்கு வரும் ஸமயத்தை எதிர்பார்த்துக்கொண்டிருப்பது என்பது ஸமயாசார ரஹஸ்யம். இதின் ஸூக்ஷ்மங்களை குருமுகமாகத் தெரிந்து கொள்ளவேண்டியது.

3. இவ்விதமான ஸமயாசார உபாஸனையைப்பற்றி ஆசார்யாளுடைய 'ஸௌந்தர்யலஹரி'யிலும், அதற்கு லக்ஷ்மீதரர் இயற்றிய பாஷ்யத்திலும் சொல்லப்பட்டிருக்கிறது. பின்வரும் நாமங்களிலும் குண்டலினீ சக்தியானவள் மேல்நோக்கிக் கிளம்பி ஸஹஸ்ரார கமலம் அடைந்து அம்ருதஸ்ராவம் செய்வது முதலிய மேலே சொல்லிய விஷயங்கள் வர்ணிக்கப்படுகின்றன.

मूलाधारैकनिलया

மூலாதாரைக நிலயா (19)

மூலாதாரத்தில் முக்யமான ஸ்வபாவமான இருப்பிடத்தை உடையவள்.

1. சரீரத்தில் மேருதண்டம் என்று சொல்லப்படும் முதுகு எலும்பில் ஸூஷும்ணை என்ற நாடி இருப்பதாகவும், அதன் அடி ஸ்தானத்திலிருந்து கடைசிக்குள் ஆறு சக்ரங்கள் இருப்பதாகவும் சொல்லப்படும். அடியிலிருந்து சொல்லுகையில் மூலாதாரம் என்பது குதஸ்தானம், லிங்கஸ்தானம் இவைகளுக்கு நடுவிலும், ஸ்வாதிஷ்டானம் என்பது லிங்கத்தின் மூலப்ரதேசத்திலும்,

மணிபூரம் என்பது நாபிப்ரதேசத்திலும், அனாஹதம் என்பது ஹிருதய ப்ரதேசத்திலும், விசுத்தி என்பது கண்டப்ரதேசத்திலும், ஆக்ஞா என்பது புருவங்களின் மத்திய ப்ரதேசத்திலும் இருப்பதாகச் சொல்லப்படும். [இவை ஆறுக்கும்மேல் ஸஹஸ்ராரசக்ரம் இருக்கிறது.] இவைகளை பத்மம் என்றும்,கமலம் என்றும் சொல்வதும் வழக்கம். இந்த ஆறு சக்ராத்மகமான ப்ரதேசத்தை குலம் என்றும் சொல்லப்படும். 'மூலாதாராதிகம் சக்ர ஷட்கம் குலமிதி ஸ்மிருதம்.' இவைகள் வகையே இரண்டு இரண்டு ஒரோர் கண்டமாகச் சொல்லப்படும். ஒரோர் கண்டத்தின் மேல் ஒரு கிரந்தி (முடிச்சு) இருக்கிறது. இந்த கண்டங்கள் அக்னி, ஸூர்ய, சந்த்ராத்மகமானவை. முதல் கண்டமாகிய அக்னி கண்டத்தில் மூலாதாரம், ஸ்வாதிஷ்டானம் இவையிரண்டும் அடங்கியவை. அதற்குமேல் இருக்கும் முடிச்சு ப்ரும்ஹ கிரந்தி என்ற பெயர், அக்னி ஸ்தானம். அதற்கு அடுத்த கண்டமாகிய ஸூர்ய கண்டத்தில், மணிபூரம், அனாஹதம் இவையிரண்டும அடங்கியவை. அதற்குமேல் இருக்கும் முடிச்சுக்கு விஷ்ணு க்ரந்தி என்ற பெயர், ஸூர்ய ஸ்தானம். அதற்குமேல் இருக்கும் கண்டமாகிய சந்த்ர (ஸோம) கண்டத்தில் விசுத்தி, ஆக்ஞா இவையிரண்டும் அடங்கியவை. அதற்குமேலிருக்கும் முடிச்சுக்கு ருத்ர க்ரந்தி என்ற பெயர், ஸோமஸ்தானம். அதற்குமேல் ஸஹஸ்ராரபத்மம். அது இருக்கும் கண்டத்திற்கு துரீய கண்டம என்ற பெயர். இதேமாதிரி விபாகம் ஷோடசீ மந்த்ரத்திற்கும் உண்டென்றும், வாக்பவம், காமராஜம், சக்தி இந்த மூன்று கூடங்களும் அக்னி, சூர்ய, ஸோம கண்டங்களாகவும், ஷோடசியின் துரீய கூடத்தை துரீய கண்டமாகவும் மூன்று ஹ்ருல்லேகைகளை மூன்று க்ரந்திகளாகவும் சொல்லப்படும். இதிலுடைய பற்ற விபரங்கள் ரஹஸ்ய மாகையால் குருமுகமாகத் தெரிந்துகொள்ளவேண்டியவை. சில பின்னல்வரும் 475, 534 நாமங்களில் சொல்லப்பட்டிருக்கின்றன.

2. மூலாதார பத்மம் என்பது நாலு இதழ்களுடன் கூடியது. அதில் இருக்கும் கர்ணிகையின் நடுவில் குலகுண்டம் என்று சொல்லப்பட்ட பிரதேசத்தில் தன் முகத்தை மறைத்துக்கொண்டு (அம்பாள் ரூபமான) குண்டலினீ சக்தியானது எப்போதும் உறங்கிக்கொண்டிருப்பதாக ஏற்கனவே சொல்லப்பட்டிருக்கிறது.

3. ஆகவே மூலாதாரத்தில், ஏக - முக்யமான ஸ்வபாவமானை, நிலயா - இருப்பிடத்தை உடையவள்.

4. குண்டலினீ சக்திக்கு ஆதார (இருப்பிட)மாக இருப்பதாலும் ஸ்வயம்பூ லிங்கத்தின் மூலமாக இருப்பதாலும் மூலாதாரம் என்ற பெயர்.

ब्रह्मग्रन्थिविभेदिनी

ப்ரும்ஹ க்ரந்தி விபேதிநீ (100)

மேலே சொல்லிய ப்ரும்ஹ க்ரந்தி என்பதை பேதனம்செய்து (பிளந்துகொண்டு) மேலே வந்தவள்.

இந்த நாமம் முதல், ஏற்கனவே சொல்லியபடி குண்டலினீ சக்தியானவள் ஷட் சக்ரங்களையும் மூன்று க்ரந்திகளையும் பேதனம்செய்து, ஸஹஸ்ராரம் வந்து, அம்ருதவர்ஷம் செய்வது முதலியவை சொல்லப்படுகின்றன.

मणिपूरान्तरुदिता

மணிபூராந்தருதிதா (101)

மணிபூரபதமமானது பத்து தளமுடையது. ஸமய பூஜையில் அங்கே அம்பாளை மணிகளால் (ரத்னங்களால்) அலங்காரம் செய்யப்படுவதால் அதற்கு மணிபூரம் என்ற பெயர். அதில் அம்பாள் ஆவிர்ப்பவிப்பதால் மணிபூராந்தர் உதிதா.

विष्णुग्रन्थिविभेदिनी

விஷ்ணுக்ரந்தி விபேதிநீ (102)

மேலே சொல்லிய விஷ்ணுக்ரந்தியை பேதனம் செய்பவள்.

आज्ञाचक्रान्तरालस्था

ஆக்ஞா சக்ராந்தராலஸ்தா (103)

ஆக்ஞா சக்ரபத்மமானது இரண்டு தளமுடையது. ஆக்ஞை செய்பவராகிய ஸ்ரீ குருவின் ஸ்தானமாகையால் அதற்கு அப்படிப் பெயர். மேலும் அதுவரையில் செய்யப்பட்ட ஸாதனைகளால் ஸத்கர்மங்கள் ஸஞ்சிதம் (சேர்ந்தது) ஞானம் ஏற்படுவதால் ஆக்ஞா என்றும் பெயர். அதனுடைய அந்தராளத்தில் (அதற்குள்) இருப்பதினால் ஆக்ஞா சக்ராந்தராலஸ்தா.

रुद्रग्रन्थिविभेदिनी

ருத்ர க்ரந்தி விபேதிநீ (104)

மேலே சொல்லிய ருத்ரக்ரந்தியை பேதநம் செய்பவள்.

இந்த மூலாதார, ஸ்வாதிஷ்டான, மணிபூர, அநாஹத, விசுத்தி, ஆக்ஞா சக்ரங்கள் முறையே ப்ருதிவீ, அப்பு (ஜலம்), அக்னி, ஸூர்யன், வாயு, ஆகாசம் இவைகளின் ரூபமாகவும், அக்னி கண்டத்தை ப்ரும்ஹக்ரந்தியென்றும், ஸூர்ய கண்டத்தை விஷ்ணுக்ரந்தியென்றும், ஸோம கண்டத்தை ருத்ரக்ரந்தியென்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

ப்ருதிவ்யாப்ய சக்ர த்விதயம் ப்ரும்ஹக்ரந்தி பதோதிதம் |
வன்ஹிஸூர்யமயம் சக்ர த்வயம் தேஜோமயம் மஹத் |
விஷ்ணுக்ரந்தி பதேஷ்டைக்தம் தைஜஸம் ஸர்வஸித்திதம் ||
வாய்வாகாசத்வயீ ரூபம் சக்ரத்விதயம் உத்தமம் |
ருத்ரக்ரந்தி பதேஷ்டைக்தம் மங்களாயதனம் மஹத் ||
(தத்தாத்ரேய ஸம்ஹிதை)

सहस्राराम्बुजारूढा

ஸஹஸ்ராராம்புஜாரூடா (105)

ஸஹஸ்ர (கணக்கில்லாத) தளங்களையுடையது ஸஹஸ்ராரபத்மம். ப்ரும்ஹ ரந்த்ரத்தின் கீழ் இருப்பது. அந்த பத்மத்தின் மேல் எழுந்தருளியிருப்பவள் (அங்கு வரும்படி செய்யப்பட்டவள்)

सुधासाराभिवर्षिणी

ஸுதா ஸாராபி வர்ஷிணீ (106)

மேலே சொல்லியபடி ஸஹஸ்ரார பத்மத்தின் நடுவிலிருக்கும் சந்த்ர மண்டலத்திலிருந்து அம்ருதத்தை (ஸமஸ்த நாடிகளிலும்) பெருகும்படி செய்கிறவள்.

ஸுதாதாரா ஸாரை: சரணயுகளாந்த: விகளிதை:
பரபஞ்சம் ஸிஞ்சந்தீ..... (ஸௌந்தர்யலஹரி)

1. இம்மாதிரி அம்ருதப்ரவாஹம் ஆவஹிப்பதற்கு

'அம்ருதஸ்ய தாரா பஹுதா தேவஹிமாலயம் |
சரணம் நோ லோகே ஸுதிதாம் ததாது' |

என்றும் ச்ருதியிலும் சொல்லப்பட்டிருக்கிறது. 2. 'ஸுதாதாராபிவர்ஷிணீ' என்றும் இந்த நாமம் சொல்லப்படும்.

तटिल्लतासमरुचिः

தடில்லதாஸமருசி: (107)

மின்னல் கொடிக்கு ஸமமான காந்தியுள்ளவள்.

'வித்யுல்லேகேவபாஸ்வரா' என்று ச்ருதி.

षट्चक्रोपरि संस्थिता

ஷட்சக்ரோபரி ஸம்ஸ்திதா (108)

ஏற்கனவே சொல்லப்பட்ட ஆறு சக்ரங்களுக்கும் மேல் (ஸஹஸ்ரார பத்மத்தில்) வீற்றிருப்பவள்.

महासक्तिः

மஹாஸக்தி: (109)

'மஹ' என்றால் உத்ஸவம் என்ற அர்த்தம். அதில் ஆஸக்தி (அதிக ப்ரியம்) உடையவள்

இங்கே உத்ஸவம் என்பது சொல்லப்பட்டது சிவசக்தி ஸமாயோகம்.

1. இம்மாதிரி ஷட்சக்ரபேதனம் செய்து ஸஹஸ்ராரபத்மத்திற்கு குண்டலினீ ரூபமான அம்பாள் வந்தவுடன், அங்கிருக்கும் தன் பதியாகிய பரமசிவனை அடைந்து, அவருடன் க்ரீடித்துக் கொண்டிருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

மஹீம் மூலாதாரே கம் அபி மணிபூரே ஹ்ருதவஹம்
ஸ்திதம் ஸ்வாதிஷ்டானே ஹ்ருதி மருதம் ஆகாசம் உபரி |
மனோऽபி ப்ரூமத்யே ஸகலமபி பித்வா குலபதம்
ஸஹஸ்ராரே பத்மே ஸஹ ரஹஸி பத்யா விஹரஸே ||
(ஸௌந்தர்யலஹரீ)

'வாஸுதே பும்ஸா, ஸங்கர்ஷண ஸங்கம்ய ரஸம் ப்ரஸூதே'
(வாஸுதேவஸ்ய ரஹஸ்யம்)

कुण्डलिनी

குண்டலினீ (110)

குண்டலினீ ஸ்வரூபமாக இருப்பவள். குண்டலினீ சக்தியானவள். மூன்றரைச் சுற்று (குண்டலங்) களுடைய ஸர்ப்பம் போன்ற வடிவமுடையவள்.

1. மூலாதாரத்திலிருக்கையில் தூங்கிக்கொண்டிருக்கும் ஸர்ப்பம்போல் ச்வாஸம் விட்டுக்கொண்டிருப்பவள். ஜீவசக்தியான குண்டலினியின் இந்த ச்வாஸம் தான் ப்ராணன். இருகாதுகளையும் அழுத்தி மூடிக்கொண்டால் இந்த ச்வாஸத்தின் சப்தமானது கேட்குமென்றும் அப்படிக் கேட்காதிருந்தால் மரணம் ஸமீபித்துவிட்டதற்கு அடையாளமென்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

மூலாதாரஸ்த வன்ஹ்யாத்ம தேஜோ மத்யே வ்யவஸ்திதா |
ஜீவசக்தி: குண்டலாக்யா ப்ராணகாரா அதைஜஸீ ||

ப்ரஸூப்த புஜகாகாரா த்ரிராவர்த்தா மஹாத்யுதி: |
மாயா சீர்ஷா நதந்தீம் தாம் உச்சரத் பணிசம் கதே ||
ஸுஷும்ணா மத்யதேசே ஸா யதி கர்ணத்வயஸ்ய து |
பிதாய ந ச்ருணேத்யேனம் த்வனிம் தஸ்ய ததா ம்ருதி: ||
(தந்த்ர ராஜம்)

2. வாக்பவ பீஜத்திற்கும் குண்டலினீ என்று பெயராகையால் அந்த ரூபமாக இ ருப்பவள்.

बिसतन्तुतनीयसी

பிஸதந்து தனீயஸீ (111)

தாமரைத் தண்டிலிருக்கும் நூல் போன்ற மெல்லியதான ையை உடையவள்.

1. 'நீவார சூகவத் தன்வீ பீதா பாஸ்வத்யணூபமா' என்று ச்ருதி. இம்மாதிரி 'குலாம்ருதை காஸிகா' என்ற நாமம் முதல் இந்த நாமம் வரையில் குண்டலின்யாத்மகமான அம்பாளுடைய ஸூக்ஷ்மதம ரூபத்தை வர்ணிக்கப்பட்டது. எல்லாம் வாம கேச்வ தந்த்ரத்தில் ஸ்பஷ்டமாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

புஜங்காகார ரூபேண மூலாதாரம் ஸமாச்ரிதா |
சக்தி: குண்டலினீ நாம பிஸதந்து நிபா சுபா ||
மூலகந்தம் முணக்ரேண தம்ஷ்ட்ரா கமல கந்தவத் |
முகேன புச்சம் ஸம்க்ருஹ்ய ப்ரும்ஹரந்த்ரம் ஸமாச்ரிதா ||
பத்மாஸன: கதஸ் ஸ்வஸ்த்தோ குதம் ஆகுஞ்ச்ய ஸாதக: |
வாயும் ஊர்த்வகதம் குர்வன் கும்பகாவிஷ்ட மானஸ: ||
வாய்வாகாத வசாத் அக்னி: ஸ்வாதிஷ்டான கதோ ஜ்வலன் |
ஜ்வலனகாத பவனு காதை: உன்னித்ரிதோ அஹிராட் ||
ப்ரும்ஹக்ரந்திம் ததோ பித்வா விஷ்ணுக்ரந்திம் பினத்யத: |
ருத்ர க்ரந்திம் விபித்யைவ கமலானி பினத்தி ஷட் ||
ஸஹஸ்ர கமலே சக்தி: சிவேந ஸஹ மோததே |
ஸா ச அவஸ்தா பரா ஜ்ஞேயா ஸைவ நிர்வ்ருதி காரணம் ||

2. குண்டலினீ சக்தியானவள் மூலாதாரத்திலிருந்து கிளம்பும்போது பிறந்த குழந்தைபோல் சப்தம் செய்வதால் அங்கே குமாரீ, என்றும், அநாஹத சக்ரத்திற்கு மேலிருக்கும் ஸூர்ய ஸ்தானத்திற்குப் போகும்போது அங்கே இருக்கும் உஷ்ணத்தினால் பக்குவமாகி தகுந்த வயதுள்ளவளாய் (தருணியாய்) இருப்பதால், அங்கே தருணீ என்றும், ஸஹஸ்ராரபத்மத்தில் தன் பதியாகிய பரமசிவனை அடைவதால் அங்கே பதிவ்ரதை என்றும், சொல்லப்படுவது வழக்கம்.

யத் குமாரீ மந்த்ரயதே யத் யோஷித் யத் பதிவ்ரதா |
அரிஷ்டம் யத் கிம் சக்ரியதே அக்னிஸ் தத் அனுவேததி ||
(தைத்திரீய ஆரண்யகம்)

भवानी

பவானீ (112)

1. 'பவ' என்றால் மஹாதேவர், ஸம்ஸாரஸாகரம், மன்மதன் என்ற அர்த்தம். இவர்களுக்கு (ஆனந்தம்) உபாஸனை கொடுப்பதால் பவானீ என்ற அம்பாளுக்குப் பெயர்.

ருத்ரோ பவோ பவ: காமோ பவ: ஸம்ஸாரஸாகர: |
தத் ப்ராணரூபிணீ தேவீ பவானீ பரிகீர்த்திதா ||
(தேவீ புராணம்)

2. பரமசிவன் ஸகல ப்ராணிகளையும் உண்டுபண்ணி ரக்ஷிப்பதால் பவ என்ற பெயர்.

'பவனாத் பாவனாத் சைவ பூதானாம் ஸ பவ: ஸ்ம்ருத:'

3. பரமசிவனுடைய அஷ்ட மூர்த்திகளில் ஜலமூர்த்தியானவர் பவர். அவருடைய பத்னீ பவானீ. (பவஸ்ய தேவஸ்யா பத்னீ).

4. 'தஸ்மாத் ஆபோ பவ: ஸ்ம்ருதா' என்றபடி பவ என்ற ஜலத்திற்குப் பெயர். ஜீவன ரூபமான ஜலத்திற்கு உயிரைக் கொடுப்பவள் பவானீ.

5. ஸதாசிவேச்வர கூஷ்மாண்டத்திலிருக்கும் அம்பாளுக்கு 'பவானீ' என்ற பெயர். அந்த ரூபமாக இருப்பவள்.

6. 'பவானீ' என்பதற்கு "நான் ஆவேனாகவும்" என்ற அர்த்தம். பக்தன் அம்பாளைப் பார்த்து 'பவானீ'! த்வம் (நீ,) உன்னுடைய தாஸன் ஆகிய என்மீது கருணையான பார்வையை செலுத்தக்கூடாதா என்ற சொல்லை ஆயப்படுத்தி 'பவானி த்வம்' என்ற முதல் இரண்டு வார்த்தைகளைக் கேட்டவுடனேயே அம்பாள், இதென்ன இவன் நாடாக ஆவேனாகவும் என்ற மஹா வாக்யத்தின் அர்த்தத்தைச் சொல்லுகிறானே என்ற நினைத்து; பரம கருணை தோன்றி அப்போது அவனுக்கு ப்ரும்மாத்மைக்யமான தன்னுடைய ஸாயுஜ்ய பதவியைக் கொடுக்கிறாள் என்று ஆசார்யாள் வர்ணித்திருக்கிறார்கள்.

பவானி த்வம் தாஸே மயி விதர த்ருஷ்டிம் ஸகருணாம்
இதி ஸ்தோதும் வாஞ்சன் கதயதி பவானி த்வம் இதி ய: |
ததைவ த்வம் தஸ்மை திசஸி நிஜஸாயுஜ்ய பதவீம்
முகுந்த ப்ரும்மேந்த்ர ஸ்புட மகுட நீராஜித பதாம் ||
(ஸௌந்தர்ய லஹரி)

இம்மாதிரி அம்பாளுடைய ஸ்தூல, பர, ஸூக்ஷ்ம, ஸூக்ஷ்மதர, ஸூக்ஷ்மதமாகிய ரூப பஞ்சகத்தை வர்ணித்துவிட்டு அதை அடையும் உபாயங்கள் சில நாமங்களால் சொல்லப்படுகின்றன.

भावनागम्या

பாவநாகம்யா (113)

பாவனையினால் அடையக்கூடியவள்.

1. இம்மாதிரி பாவனை மூலமாக அம்பாளை உபாஸனைசெய்யக்கூடிய வழியை 'பாவநோபநிஷத்'திலும் அதற்கு பாஸ்கராசார்யர் இயற்றிய பாஷ்யத்திலும் சொல்லியிருப்பதைப்பார்க்கவும்.

2. பாவனை என்பது சப்தத்தைப் பற்றியது என்றும் அர்த்தத்தைப்பற்றியது என்றும் இரண்டு விதம். சப்த ஸம்பந்தமான பாவனையானது குருவினுடைய உபதேச ப்ரகாரம் வைதிக மந்த்ரங்களால் உபாஸிப்பது. அந்த ஸம்பந்தமான பாவனையானது ப்ரவ்ருத்தி, அவைகளினுடைய அர்த்தத்தை அனுஷ்டானம் பண்ணுவதைப் பொறுத்தது. இதைப்பற்றி பாஸ்கராசார்யருடைய 'வாதகௌதூஹலம்' என்ற க்ரந்தத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

3. இன்னும் ப்ராம்ஹீ, மாஹேச்வரீ அகூர பாவனைகள் என்று மூன்று விதமாகவும், ஸகளம், ஸகளநிஷ்கலம், நிஷ்கலம் என்று மூன்று விதமாகவும் பிரித்துச் சொல்லப்படும். இவைகளின் விபரங்களை தீக்ஷிதர்வாளுடைய 'ரத்னத்ரய பரீக்ஷையி'லும் 'யோகினீ ஹ்ருதய'த்திலும் காணலாம்.

4. 'பாவனை' என்பதற்கு கர்ம மார்க ப்ரவ்ருத்தி என்று அர்த்தம். 'அகம்யா' என்பதாகப் பிரித்து, அதினால் அடையமுடியாதவள் என்றும், 'கம்யா' என்று பிரித்து கர்ம மார்க ப்ரவ்ருத்தியினால் ஏற்படும் சித்த சுத்தியினால் அடையக் கூடியவள் என்றும் சொல்லலாம்.

5. 'பாவனா கார்ட்யாத் ஆக்ஞா ஸித்தி:' என்று கல்ப ஸூத்ரத்தில் சொல்லியபடி த்ருடமான பாவனையினால் அம்பாளுடைய ஸாக்ஷாத்காரம் ஏற்படும் என்று அர்த்தம்.

भवारण्यकुठारिका

பவாரண்ய குடாரிகா (114)

பவ(ஸம்ஸாரமாகிய)ஆரணியத்திற்கு கோடாலி போன்றவள்.

காடானது மேலுக்குமேல் முளைக்கும் மாங்களுடன் அடர்ந்து இருப்பதுமாதிரி, ஸம்ஸாரம் என்பது ஓயாமல் ஏற்பட்டுக் கொண்டு கஷ்டமான அனுபவத்தே தாடுகூடியிருப்பதால் காட்டுக்கு ஸமானமாகச் சொல்லப்பட்டது. அம்பாளுடைய ஞானம் ஏற்பட்டால் ஸம்ஸாரபந்தம் அற்றுவிடும் என்று அர்த்தம்.

भद्रप्रिया

பத்ரப்ரியா (115)

மங்களத்தில் ப்ரியமுள்ளவள், அதாவது பக்தர்களுக்கு ஸமஸ்த மங்களங்களையும் கொடுப்பதில் ப்ரியமுள்ளவள்.

भद्रमूर्तिः

பத்ரமூர்த்திः (116)

மங்களமான ரூபத்தை உடையவள்.

'ப்ரும்ஹ தன் மங்களம் விது:' என்று விஷ்ணு புராணத்தும், 'மங்களாணும் ச மங்களம்' என்று பாரதத்திலும் சொல்லப்பட்டபடி, அம்பாள் ஸர்வ விதமான மங்களங்களுக்கும் இருப்பிடம், 'மங்களாயதனம்'.

भक्तसौभाग्यदायिनी

பக்த ஸௌபாக்யதாயினீ (117)

பக்தர்களுக்கு ஸகலவிதமான ஸௌபாக்யத்தையும் கொடுப்பவள்.

1. 'பகம்' என்றால் ஸ்ரீ, காம, மஹாத்ம்ய, வீர்ய, யத்ந, அர்க (ப்ரகாசம்), கீர்த்தி இவைகளுக்குப் பெயர். இவைகளுக்கெல்லாம் லலிதாம்பாள் இருப்பிடமாகையால் 'ஸுபகா' என்று பெயர். அவளுடைய தன்மை 'ஸௌபாக்யம்'.

2. மங்களகரமான கார்யங்களில் உபயோகப்படுத்துவதால், இக்ஷுவஸ் தருராஜஸ் ச நிஷ்பாவா ஜீர தான்யகே |
வீகாரவத் ச கோக்ஷீரம் கௌஸும்பம் குஸும்பாத் ததா |
லவணம் ச அஷ்டமம் தத்வத் ஸௌபாக்யாஷ்டகம் ஸ்ம்ருதம் ||

என்று அக்னி புராணத்தில் சொல்லியபடி கரும்பு, அக்வத்வ்ருக்ஷம், முளைவிட்ட ஜீரகம், கொத்துமல்லி இரண்டும், பசும்பால் (அதின் பேதங்களான தயிர், வெண்ணை, நெய் உள்பட)

மஞ்சள் நிறமான வஸ்துக்கள் புஷ்பம், உப்பு இவை எட்டுக்கும் 'ஸௌபாக்யாஷ்டகம்' என்று சொல்லப்படும்.

3 ஸுஷ்டு = சிறந்த, பாக்கியம் = நியதி:, அதிருஷ்டம், அதை உடைய பாவம் 'ஸௌபாக்கியம்' அதை பக்தர்களுக்குக் கொடுப்பவள். அதாவது பக்தர்களுக்கு எதிர்பார்க்காத ஐச்வர்யங்களைக் கொடுப்பவள்.

भक्तिप्रिया
பக்திப்ரியா (118)

பக்தியில் ப்ரியமுள்ளவள்.

அதாவது பக்தியால் உபாஸனை செய்தால் அம்பாளுடைய ப்ரியம் ஏற்படும் என்று அர்த்தம்.

1. பக்தி என்பது முக்யம், ஸாமான்யம் (கௌணம்) என்று இருவகை. முக்ய பக்தி என்பது ('ஸா பராநுரக்திரீச்வரே' என்று பக்தி ஸூத்ரத்தில் சொல்லியிருப்பது போல்) ஈச்வரனிடத்தில் அநுராகம் என்ற சித்தவிருத்தியோடு கூடியிருப்பது. இதைப்பற்றி சொல்லும்போது, அழிஞ்சில மரத்தின் விரையானது தாய் மரத்தையும், ஊசியானது காந்தத்தையும், பதிவ்ரதையானவள் தன் பதியையும், கொடியானது மரத்தையும், நதியானது ஸமுத்ரத்தையும், ஸ்வபாவமாக வந்தடைவதுபோல், மனதானது பரமாத்மாவை அடைவது தான் பக்தி என்று ஆசார்யாள் 'சிவானந்த லஹரி'யில் சொல்லியிருக்கிறார்கள்.

அங்கோலம் நிஜபீஜஸந்ததி: ஸ்வயஸ்காந்தோபலம் ஸூசிகா
ஸாத்வீ நைஜவிபும் லதா கபிதருஹம் ஸிந்துஸ்ஸரி த்வல்லபா|
ப்ராப்னோதீஹ யதாததா பசுபதே: பாதாரவிந்தத்வயம்
சேதோவ்ருத்திருபேத்ய நிஷ்டதிஸதா ஸா பக்திரித்யுச்யதே ||

2. ஸாமான்ய பக்தி என்பது ஸேவாரூபமான பக்தி. இது ஸ்மரணம், கீர்த்தனம் முதலிய பலவகைப்பட்டது. எட்டு விதம் என்று கருட புராணத்திலும், ஒன்பது விதமென்று பாகவதத்திலும், பத்து விதமென்று ப்ருகன்னாரதீயத்திலும் இம்மாதிரியாக பலவகையாகச் சொல்லப்படும்.

ச்ரவணம் கீர்த்தனம் விஷ்ணோ: ஸ்மரணம் பாதஸேவனம்|
அர்ச்சனம் வந்தனம் தாஸ்யம் ஸக்யம் ஆத்மநிவேதனம் ||

भक्तिगम्या
பக்திகம்யா (119)

பக்தியோடு உபாஸனை செய்வதால் ப்ரத்யகூஷமாகிறவள், அல்லது பக்திமார்க்கத்தால் அடையக்கூடியவள்.

1. பரமாத்மாவை ஸாதாரணமாக நேரிடப்பார்க்க முடியாத போதிலும் பக்தியினுடைய உறுதியால் பரமாத்மாவின் ஸ்வரூபத்தைப் பார்க்கலாமென்று அநேக இடங்களில் சொல்லப்பட்டிருக்கிறது.

'பராஞ்சி கானி வ்யத்ருணத் ஸ்வயம்பூ:
தஸ்மாத் பராக் பச்யந்தி நாந்தராத்மன் |
கச்சித் தீர: ப்ரத்யகாத்மானம் ஐக்ஷத்
ஆவ்ருத்தசக்ஷு: அம்ருதத்வமிச்சன் ll (ச்ருதி)
யோஇனஸ்தம் ப்ரபச்யந்தி பகவந்தம் ஸநாதனம்'

'பக்த்யா த்வனன்யயா சக்ய: அஹம் ஏவம் விதோ அர்ஜுன!
ஞாதும் த்ரஷ்டும் ச தத்வேன ப்ரவேஷ்டும் ச பரந்தப ll
(கீதை)

2. பக்தி என்பது ஒரு மார்க்கமாக (வழியாக) இருப்பதால் அந்த வழியாகப்போனால் அடையக்கூடிய (கம்யமான) இடமாகிற அம்பாளை 'பக்திகம்யா' என்று சொல்லப்பட்டது.

3. பக்தி என்பதற்கு லக்ஷணம் என்று அர்த்தம். இந்த விதத்தில் 'பக்திகம்யா' என்றால் உள்ளப்படியாகத் தெரியாததாக இருந்தாலும் லக்ஷணங்களினால் அறியக்கூடிய ஸ்வரூபத்தை உடையவள் என்று அர்த்தம். ப்ரும்மஹத்தைச் சொல்லும் ஸத்யம், ஞானம் முதலிய பதங்கள் ப்ரும்மத்தினுடைய லக்ஷணங்களைச் சொல்லுகின்றனவே தவிர, உண்மையான ரூபத்தைச் சொல்லவில்லை. அதனால் தான் லலிதாத்ரிசதியில் அம்பாளை "லக்ஷணைகம்யா" என்று சொன்னது.

4. இவ்விதமாக "கம்யா" என்ற பதத்திற்கு ப்ராப்யகூடமாகிறவள், அடையப்படுகிறவள், அறியப்படுகிறவள் என்று மூன்றுவிதமான அர்த்தம்.

भक्तिवश्या

பக்திவச்யா (120)

பக்திக்குக் கட்டுப்பட்டவள், அல்லது பக்தி வசமாகக் கூடியவள், பக்தபராதீனை.

1. பக்தியினுடைய பெருமையைப்பற்றி ஆசார்யாள் சிவானந்த லஹரியில் சொல்லும்போது, கண்ணப்பநாயனார் பரம

சிவனை பூஜை செய்கையில் செருப்பை பூஷணமாகவும், உமிழ் நீரை அபிஷேக ஜலமாகவும், எச்சில் பண்ணப்பட்ட மாம்ஸத்தை நிவேதனமாகவும், உபயோகப்படுத்தியிருந்தும் அவர் ஒன்று மறியாத வேடனையிருந்தும், அவர் உண்மையான பக்தியோடு கூடியிருந்தபடியால், அவர் செய்த அபசாரமான கார்யங்களை பரமசிவன் உத்க்ருஷ்டமாக ஏற்றுக்கொண்டு அவருக்குப் ப்ரத்யக்ஷமானது, பக்தியின் மஹிமையையும் அதற்கு ஈச்வரன் கட்டுப்படுவதையும் காட்டுவதாகச் சொல்லியிருக்கிறார்.

'மார்காவர்த்தித பாதுகா பசுபதே: அங்கஸ்ய கூர்ச்சாயதே
கண்டூஷாம்பு நிஷேசனம் புரரிபோ: திவ்யாபிஷேகாயதே |
கிஞ்சித் பக்ஷிதமாம்ஸசேஷ கபளம் நவ்யோபஹாராயதே
பக்தி: கிம் ந கரோத்யஹோ வனசரோ பக்தாவதம்ஸாயதே ||

2. உண்மையான பக்திமட்டும் ஒருவனுக்கிருக்குமேயானில், பகவான் அவனிடம் எந்தக் குறைவு இருந்தாலும் அதை கவனியாது அவனுக்கு அனுக்ரஹம் செய்வானென்று சொல்லப்பட்டிருக்கிறது.

'வ்யாதஸ்ய ஆசரணம் த்ருவஸ்யசவய: வித்யா கஜேந்த்ரஸ்ய கா
கா ஜாதி: விதுரஸ்ய யாதவபதே: உக்ரஸ்ய கிம் பௌருஷம் |
குப்ஜாயா: கமனீயரூபம் அதிகம் கிம் தத்ஸுதாம்மே தனம்
பக்த்யா துஷ்யதி கேவலம் ந து குணை: பக்திப்ரிய: கேசவ: ||

भयापहा

பயாபஹா (121)

பயத்தை போக்குகிறவள்.

எந்தக் காரணத்தால் பயமேற்பட்டாலும் அம்பாளை ஸ்மரணம் செய்து அம்பாளுடைய நாமாவைச் சொன்னால், அதிலிருந்து நிவாரணம் செய்கிறாள் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

'அரண்யே ப்ராந்தரே வாபி ஜலே வாபி ஸ்தலேபிவா |
வ்யாக்ர கும்பீர சோரேப்ய: பயஸ்தஸ்ய விசேஷத: |
ஆதிஷ்வபி ச ஸர்வேஷு தேவீநாமானி கீர்தயேத் ||

ப்ரும்மஹானந்தத்தை அடைந்தவனுக்கு ஒருவிதமான பயமும் இல்லையென்று ச்ருதி வாக்யம்.

'ஆனந்தம் ப்ரும்மணோ வித்வான் ந பிபேதி குதச்சன'

ஸம்ஸாரமே பயங்கரமானது என்றும், அதிலிருந்து அம்பாள் விடுவிக்கிறாள் என்றும் அர்த்தம்.

ஸம்ஸார ஸிந்தோர் விதே:

'பீதம் மாம் நிதராம் அனன்ய சரணம் ரக்ஷ அனுகம்பாநிதே I
ப்ரஸீத பரதேவதே மமஹ்ருதி ப்ரபூதம் பயம், விதாரய,
(தேவீமஹிம்நஸ்தோத்ரம்)

शांभवी

சாம்பவீ (122)

சம்புவினுடைய பத்னீ, அல்லது சாம்பவர்(பரமசிவனுடைய பக்தர்)களுடைய மாதா.

1. யோகசாஸ்திரங்களில் சாம்பவீ முத்திரையென்ற ஒரு விதமான முத்ரை சொல்லப்பட்டிருக்கிறது.

அந்தர் லக்ஷ்யம் பஹிர்த்ருஷ்டி: நிமேஷோன்மேஷவர்ஜிதா I
ஏஷா ஸா சாம்பவீ முத்ரா ஸர்வதந்த்ரேஷு கோபிதா II

2. கல்பஸூத்ரத்தில் சாக்ததீக்ஷை, சாம்பவீதீக்ஷை, மந்த்ரதீக்ஷையென்ற மூன்றுவகை சொல்லப்பட்டிருக்கிறது.

3. 'அஷ்டவர்ஷா ச சாம்பவீ' என்ற தேவீ பாகவதத்தில் சொல்லியபடி எட்டு வயதுள்ள கன்யாரூபமாக இருப்பவள்.

शारदाराध्या

சாரதாராத்யா (123)

சாரதையினால் பூஜிக்கப்பட்டவள்.

1. 'சாரதா' என்றால் ஸரஸ்வதீ அல்லது சிந்யாதி வாக்

2. சரத்காலத்தில் ஆராதிக்கப்பட்டவள். சரத்காலமென்பது இலையுதிர்காலம். அற்பிசி, கார்த்திகை மாதங்கள் (இதற்கே சார்ஜக்ச சரத்ருது) சரத்ருது. இந்த ருதுவின் மத்யம் கவாராத்ரிக்கு சாரத கவாராத்ரி என்றார், மஹாகாளத்தில் வரும் கவாராத்ரிக்கு மாஸிக கவாராத்ரி என்றார், இந்த இரண்டு கவாராத்ரிகளும் அம்பாளுக்கு விசேஷ பூஜாகாலம் என்றால் சொல்லவேண்டும்.

'சரத்காலே மஹா பூஜா க்ரியதே யாச வார்ஷிகீ (சண்டீ)

3. 'சாரத' என்றால் விசாரதர்கள், பண்டிதர்கள் அல்லது சரணிடம் என்ற ஆத்ரய விசேஷத்தையுடையவர்கள். இவர்களால் பூஜிக்கப்பட்டவள்.

4. சாரதா, ஆராத்யா என்ற பிரித்து 'சாரத' என்ற பெயரை உடையவள் என்றும் சொல்லலாம்.

சரத்காலே புராயஸ்மாத் கவம்யாயம் போதிதா ஸுரை: I
சாரதா ஸா ஸமாக்யாதா பூஜிதா ஸர்வதா ஸுரை: II
(காளிகா புராணம்)

ஆசார்யாளால் சிருங்கேரியில் ஸ்தாபனம் பண்ணப்பட்ட அம்பாளுக்கு சாரதா என்ற பெயரும், அந்தப் பீடத்திற்கு சாரதாபீடமென்ற பெயரும் உலகப்ரஸித்தம்.

5. ஆராத்யா என்ற பதத்திலிருக்கும் ஆ என்ற பதத்தை அ, ஆ என்று பிரித்து

'அகாரோ வாஸுதேவஸ் ஸ்யாத் ஆகாரஸ்து பிதாமஹ:'

என்றபடி விஷ்ணு, பிரும்மா, இவர்களால் பூஜிக்கப்பட்டவள் என்று சொல்லலாம்.

शर्वाणी

சர்வாணீ (124)

பரமசிவனுடைய பத்னீ.

பரமசிவனுடைய அஷ்ட மூர்த்திகளில் பூமி ரூபமாக இருக்கும் மூர்த்திக்கு 'சர்வ:' என்று பெயர். அவருடைய பத்னீ (சர்வஸ்ய தேவஸ்ய பத்னீ).

शर्मदायिनी

சர்மதாயினீ (125)

ஸுகத்தைக் கொடுக்கிறவள்.

பக்தர்களுக்கு சர்ம (ஸுக)த்தைக் கொடுப்பதால் சர்மதாயினீ என்று பெயர்.

ஸுகம் ததாதி பக்தேப்ய: தேனைஷா சர்மதாயினீ

(தேவீபாகவதம்)

शांकरी

சாங்கரீ (126)

சங்கரருடைய பத்

1. சம் – ஸுகம், அதைச் ா சுகரா.

2. ஒவ்வொரு ஸ்ருஷ்டியினுடைய ஆதி, மத்யம், அந்தம் இந்த எல்லாக் காலங்களிலும் பரமசிவனுடனேயே அம்பாள் இருப்பதாகவும், அப்போது அம்பாளே தேவர்கள் விஷ்ணு மாயா என்றும், யோகநித்ரா என்றும், ஜகன்மயீ என்றும், சாங்கரீ என்றும், ருத்ராணீ என்றும் ஸ்தோத்ரம் செய்வதாகவும் சொல்லப்பட்டிருக்கிறது.

'ப்ரதிஸர்க ஆதிமத்யாந்தம் அஹம் சம்பும் நிராகுலம் |
ஸ்திரீ ரூபேண அனுயாஸ்யாமி ப்ராப்ய தஷாத் அஹம்தனும் ||

ததஸ்து விஷ்ணுமாயாம் மாம் யோகநித்ராம் ஜகன்மயீம் |
சாங்கரீதி ஸ்துவிஷ்யந்தி ருத்ராணீதி திவௌகஸ: ||

श्रीकरी

ஸ்ரீகரீ (127)

ஸ்ரீயைக் கொடுக்கிறவள்.

1. ஸ்ரீ என்ற பதத்திற்கு ஸம்பத்து, லக்ஷ்மீ, மங்களம், சோபை, காம்பீர்யம், அழகு ஒளி முதலிய அர்த்தங்கள் உண்டு.

2. ஸ்ரீகர:, ஸ்ரீகர:, ஸ்ரீமான்' என்று விஷ்ணு ஸஹஸ்ர நாமத்தில் சொல்லப்பட்டபடி ஸ்ரீ விஷ்ணுவுக்கு ஸ்ரீகர: என்று பெயர். அம்பாளும் ஸ்ரீ விஷ்ணுவும் அபின்னமாகையால் அம்பாளுக்கும் ஸ்ரீகரீ என்று பெயர். பின்னல் நாராயணீ (298), முகுந்தா (838), கோவிந்த ரூபிணீ (267), வைஷ்ணவீ (892), விஷ்ணு ரூபிணீ (893) இந்த நாமங்களையும் பார்க்கவும்.

साध्वी

ஸாத்வீ (128)

பதிவ்ரதையாக இருப்பவள்.

1. அம்பாளுடைய பாதிவ்ரத்யத்தின் மஹிமையையும் பெருமையையும் பற்றி மிகவும் விசேஷமாகச் சொல்லப்பட்டிருக்
'ஸாத்வீத்யனன்ய ஸாமான்ய பாதிவ்ரத்யேன ஈயஸே'
(தேவீபாகவதம்)

2. அம்பாள் தன் பிதாவன தக்ஷ ப்ராஜாபதியால் தன் புருஷனிடம் காட்டப்பட்ட அலக்ஷ்யத்திற்காகத் தன்உயிரையே விட்டு விட்டுப் பிறகு பார்வதியாக அவதாரம் செய்தது பிரஸித்தம்.

3. காலத்ரயத்திலும் வேறு புருஷனை அடையாதது அம்பாளுக்கு விசேஷமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. லக்ஷ்மீ, ஸரஸ்வதீ இவர்களைப் பற்றியோ வென்றால், தனம் உள்ளவனை லக்ஷ்மீக்குப் பதியாகவும், வித்யை உள்ளவனை ஸரஸ்வதிக்குப் பதியாகவும், கவிகள் சொல்லுவது வழக்கம். ஆகவே லக்ஷ்மீக்கும் ஸரஸ்வதிக்கும் அனேகம் பதிகள் இருக்கையில் அம்பாள் மட்டும் தன் புருஷனை பரமசிவனைத்தவிர வேறு யாரையும் அடைந்திலள் யாதலால், அம்பாளுடைய பாதிவ்ரத்யமானது மற்றவர்களுடையதைவிட விசேஷ மஹிமை பொருந்தியதென்று ஆசார்யாள் வர்ணித்திருக்கிறார்கள்.

களத்ரம் வைதாத்ரம் கதிகதி பஜந்தே நகவய:
ச்ரியோதேவ்யா: கோ வா ந பவதி பதி: கைரபி தனை: |
மஹாதேவம் ஹித்வா தவ ஸதி ஸதீனும் அசரமே
குசாப்யாம் ஆஸங்க: குரவகதரோரப்யஸுலப: 11
(ஸௌந்தர்யலஹரீ)

शरच्चन्द्रनिभानना

சரச்சந்த்ர நிபானனை (129)

சரத்காலத்து சந்த்ரனுக்கு ஸமானமான முகத்தையுடையவள்.

शातोदरी

சாதோதரீ (130)

நுட்பமான (அல்லது அழகான) இடையை உடையவள்.

நூற்றுக்கணக்கான குகைகளிருப்பதால் ஹிமவானுக்கு சதோதரன் என்ற பெயர், ஆகவே அவருடைய பெண்ணான அம்பாளுக்கு 'சதோதரீ என்ற பெயர்'.

शान्तिमती

சாந்திமதீ (131)

(பக்தர்களுடைய அபராதங்களைப் பாராட்டாமல்) பொருமையுடன் கூடியவள்.

निराधारा

நிராதாரா (132)

ஆதாரம் (இருப்பிடம்) இல்லாதவள்.

1. அல்லது, மூலாதாரத்திலிருந்து கிளம்பியவள்.

2. ஸர்வஜகத்துக்கும் அம்பாள் ஆதாரமாக இருப்பதால் அம்பாளுக்கு ஆதாரம் யாதொன்றுமில்லை, தேவையுமில்லை.

3. நிராதாரமென்கிற பூஜா விசேஷத்தின் ஸ்வரூபமாக இருப்பவள். பராசக்தியினுடைய பூஜை பாஹ்யம், ஆந்தரம் என்று இரண்டுவிதமென்றும், அதில் பாஹ்யம் என்பது வைதிகம், தாந்த்ரிகம் என்று இரண்டுவிதமென்றும், ஆந்தரமான பூஜை ஸாதாரம், நிராதாரம் என்று இரண்டுவகையென்றும், ஸுதஸம்ஹிதை முதலிய க்ரந்தங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. ஸாதாரம் என்பது, குருவின் உபதேசப்படி மந்த்ரமயமான மூர்த்தியாக அம்பாளை பாவனை செய்து ஆராதனம் செய்வது. நிராதாரா பூஜையென்பது அம்மாதிரி ஞானத்தினால்

ஏற்படும் அம்பாளுடைய ரூபத்தில் மனதை லயம் செய்வது. இவற்றில் எல்லாம் நிராதார பூஜையென்பது தான் மிகவும் சிரேஷ்டமென்றும், ஸம்ஸாரபந்தம் அற்றுப்போவதற்கு ஸர்வ ஸாக்ஷிணியாயும் ஆத்மரூபிணியாயும் இருக்கும் பராசக்தியை நிராதார பூஜா மார்க்கமாக ஆராதனம் செய்வது தான் உபாய மென்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

இனிவரும் நாமங்களில் மேலே சொல்லியபடி நிராதார பூஜாமார்க்கமாக அடையக்கூடிய ஸம்மித்ஸ்வரூபிணியான அம்பாளை வர்ணித்து, அம்மாதிரி அடையும் வழியையும் அடைந்த பிறகு ஏற்படும் ப்ரயோஜனங்களையும் சொல்லப்படுகிறது.

निरञ्जना

நிரஞ்ஜநா (133)

மாசற்றவள்.

1. அஞ்ஜநம் என்றால் (கருப்பு)மை, இங்கே அவித்யை யென்ற அர்த்தம். அவித்யையினால் ஞானம் மறைபட்டு, மனதில் இருள் சூழ்ந்து கொள்வதினால், அவித்யையை கருப்பு மைக்கு ஸமானமாகச் சொல்லப்பட்டது. அம்பாள் அவித்யை, மாயை இவைகளினுடைய ஸம்பந்தமில்லாதவள் என்ற அர்த்தம்.

2. 'நி, ரஞ்ஜன' என்று பிரித்து அதிகமான ஸந்தோஷத்தை உடையவள் என்றும் சொல்லலாம்.

निर्लेपा

நிர்லேபா (134)

(கர்ம ஸம்பந்தத்தால் ஏற்படும்) மேற்பூச்சு இல்லாதவள்.

1. அதாவது ஞானஸ்வரூபிணியானதால் கர்ம ஸம்பந்தம் யாதொன்றும் இல்லாதவள்.

'ந மாம் கர்மாணி லிம்பந்தி' (கீதை)

2. அம்பாளுடைய ஞானம் ஏற்பட்டுவிட்டால் கர்மாவின் பற்றுதல் யாதொன்றும் பக்தனுக்குக் கிடையாது என்று சொல்லப்பட்டிருக்கிறது.

'லிப்யதே ந ஸ பாபேன பத்மபத்ரமிவாம்பஸா (கீதை)

3. லேபம் என்றால் மேலே பூசப்படும் வஸ்து, சந்தனம் முதலியது.

निर्मला

நிர்மலா (135)

(ஆணவ) மல ஸம்பந்தம் இல்லாதவள்.

அவித்யையே மலம் என்று சொல்லப்படும்.

नित्या

நித்யா (136)

பூத, பவிஷ்யத், வர்த்தமானமாகிய காலத்ரயத்திலும் அழிவில்லாதவள், எப்போதும் இருப்பவள்.

'அவிநாசி வா அரே அயமாத்மா' (ச்ருதி)

'அவிநாசி து தத் வித்தி யேன ஸர்வமிதம் ததம்' (கீதை)

அல்லது நிதி நித்யா ரூபமானவள். கால நித்யா ரூபமானவள், பா மந்த்ர ரூபமானவள்.

निराकारा

நிராகாரா (137)

ஆகாரத்தோடு கூடாதவள். ஆக்ருதி இல்லாதவள்.

ஸம்வித் ரூபிணீயாகிய பராசக்தியானவள் ஜகமெங்கிலும் வியாபித்திருப்பதால், அவளுக்கு குண ஸம்பந்தமான உருவம் என்பது இல்லை என்று அர்த்தம்.

निराकुला

நிராகுலா (138)

கலக்கமற்றவள்.

1. அவித்யைக்கு காரணபூதையாலும் அதனால் ஏற்படும் கலக்கமானது அம்பாளுக்கும் கிடையாது. அவளுடைய பக்தர்களுக்கும் கிடையாது என்று அர்த்தம்.

2. அல்லது கலக்கமுள்ள மனதுடையவர்களுக்கு எட்டாதவள் என்றும் சொல்லலாம்.

3. ஆகுல என்பதற்கு அபாவம் சூன்யம் என்ற அர்த்தத்தில் அம்மாதிரி இல்லாதவள், எங்கும் நிறைந்தவள் என்றும் சொல்லலாம்.

निर्गुणा

(139)

(ஸத்வ, ரஜஸ், தமோ) குணங்கள் இல்லாதவள்.

'ஸாக்ஷீ சேதா கேவலோ நிர்குணச்ச' (ச்ருதி)

குணங்கள் சரீரத்தை ஸம்பந்தித்திருப்பதாலும், அம்பாள் சித் ரூபிணீயானதாலும் குணங்களால் பாதிக்கப்படாதவள் என்ற அர்த்தம்.

निष्कला

ரா (140)

அம்சங்களோடு(அதாவது அவயவங்களோடு)கூடியிருக்காதவள்.

நிர்குணமாக அம்பாளை பாவனைசெய்வது நிஷ்களா த்யானம் என்ற பெயர்.

'த்யானம் யா நிஷ்களா சிந்தா நிராதாரா நிராச்ரயா |
ந து த்யானம் சரீரஸ்ய முக ஹஸ்தாதி கல்பனை ||'

शान्ता

சாந்தா (141)

சாந்தியை உடையவள்.

'ச' என்ற அக்ஷரத்தை அர்த்தமாக உடைய அம்ருத பீஜத்தின் ஸ்வரூபமாக இருப்பவள் என்றும் சொல்லாம்.

निष्कामा

நிஷ்காமா (142)

விருப்பம் யாதொன்றுமில்லாதவள்.

'அவாப்தாகில காமாயா: த்ருஷ்ணா கிம் விஷயா பவேத்'

என்ற தேவீ பாகவதத்தில், சொல்லியபடி அம்பாள் பரிபூர்ண மானவளாகையால் அவள் அபேக்ஷிக்குப்படியானது யாதொன்றுமில்லையென்று சொல்லப்பட்டது.

निरुपप्लवा

நிருபப்லவா (143)

அழிவில்லாதவள்.

அல்லது 'நிர், உப, ப்லவ,' என்று பிரித்து அதிகமாக ஜலம் பத்தினிருக்கும் பிண்டாண்டமாகிற சரீரத்தில், அம்ருத ஸ்ராவம் உண்டுபண்ணுகிறவள் என்று அர்த்தம் பண்ணலாம்.

(ஸுதா ஸாராதி வர்ஷிணீ, 106.)

नित्यमुक्ता

நித்யமுக்தா (144)

எப்போதும் பந்தம் யாதொன்றுமில்லாதவள்.

1. தன்னுடைய பக்தர்கள் நித்யமுக்தர்களாக இருக்கிறபடியால் 'நித்யமுக்தா'.

2. நித்ய முக்தர்களுடைய லக்ஷணமாகிய மோக்ஷஸ்வரூபிணியாக இருப்பவள்.

निर्विकारा

நிர்விகாரா (145)

விகாரங்கள் (மாறுபாடுகள்) யாதொன்றுமில்லாதவள்

விகாரங்கள் இருபத்திமூன்று விதங்களென்று ஸாங்க்ய மதத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. இதன் விபரங்களை ஸாங்க்ய தத்வ கௌமுதி முதலிய க்ரந்தங்களில் பார்க்கவும்.

निष्प्रपञ्चा

நிஷ்ப்ரபஞ்சா (146)

பிரபஞ்சத்திற்கு உள்படாதவள்.

'பிரபஞ்சம்' என்ற பதத்திற்கு லோகம், விஸ்தாரம், தோற்றம் முதலிய அர்த்தங்கள் உண்டு. இப்படிப்பட்ட கட்டுப்பாடுகளுக்கு உள்படாததினால் 'நிஷ்ப்ரபஞ்சா' என்று அம்பாளுக்குப் பெயர்.

निराश्रया

நிராச்ரயா (147)

ஆச்ரயம் யாதொன்றும் இல்லாதவள்.

அம்பாள் ஸகல வஸ்துக்களும் ஆச்ரயிக்குமிடமாயிருப்பதால் அம்பாள் ஆச்ரயிக்கும்படியான இடம் யாதொன்றுமில்லை என்று அர்த்தம்.

'விச்வம் ப்ரதிஷ்டிதம் யஸ்யாம் தஸ்யா: குத்ர ப்ரதிஷ்டி-தி:'

नित्यशुद्धा

நித்யசுத்தா (148)

(காலத்ரயத்திலும் மாலின்யம் இல்லையாகையால்), எப்போதும் சுத்தமாக இருப்பவள்.

'அஸ்பர்சச்ச மலைன் சுசி:' (சுருதி)

'அத்யந்த மலினே தேஹே தேஹீ சாத்யந்த நிர்மல:' (ஸ்மிருதி)

नित्यबुद्धा

யபுத (149)

எப்போதும் ஞானத்தோடு இருப்பவள்.

1. அதாவது அம்பாள் சித்ரூபிணியாகையால் அவளிடத்தில் ஞானம் எப்போதும் குடிகொண்டிருப்பதைச் சொல்லப்பட்டது.

2. 'நித்யசுத்தா', நித்யபுத்தா' என்ற இரண்டு நாமங்களில் வரும் சுத்த, புத்த இவ்விருவர்களும் ஜைனர்களுடைய மதத்தில் தீர்த்தங்கார்களென்கிற அவதார புருஷர்களென்றும், அவர்கள் அம்மாளை உபாஸனை செய்ததினால் நித்யமுக்தர்களாக ஆனர்களென்றும், இந்த இரண்டு நாமங்களில் சொல்லப்பட்டதாகவும் அர்த்தம் பண்ணலாம். ஷட் தர்சனங்களிலடங்கிய ஜைன மதத்திலும் அம்பாளுடைய உபாஸனை சொல்லப்பட்டிருக்கிறது. அந்த மதத்தில் உபாஸிக்கப்படும் 'தாரா' என்ற தேவதையானவள் அம்பாள்தானென்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

निरवद्या

நிரவத்யா (150)

குற்றமொன்றும் இல்லாதவள்.

1. 'அவத்யம்' என்பதற்கு பாபம், குற்றம், குறை என்ற அர்த்தம்

2. அவத்யமென்பது அவித்யையின் காரணமாக ஏற்படுவதால் அது அம்பாளிடத்தில் இருப்பதற்கு நியாயமில்லை.

'நிரவத்யம் நிரஞ்ஜனம்' (சுருதி)

3. 'அவத்யம்' என்பது ஓர் நரகத்தின் பெயர். அம்பாளுடைய பக்தர்கள் அந்த நரகத்திலிருந்து விடுவிக்கப்படுவதால் 'நிரவத்யா' என்று அம்பாளுக்குப் பெயர்.

தஸ்மாத் அமோர்நிசம் தேவீம் ஸம்ஸ்மரேத் புருஷோ யதி |
ந யாத்யவத்யம் நரகம் ஸம்ஸாரீ சைவ பாதக: ||
(கூர்மபுராணம்)

निरन्तरा

நிரந்தரா (151)

இடைவெளி இல்லாதவள்.

'அந்தர' என்ற பதத்திற்கு இடைவெளி, அவகாசம், முடிவு, வஸ்த்ரம், மறைவு, பேதம் முதலிய பலவித அர்த்தங்கள் உண்டு.

निष्कारणा

நிஷ்காரண (152)

காரணமில்லாது இருப்பவள்.

1. அம்பாளே ஸர்வ ஜகத்துக்கும் காரணபூதையாகையால் அவளுக்குக் காரணமான வஸ்து யாதொன்றுமில்லை என்ற அர்த்தம்.

"ஸகாரணம் கர பர பாரு சாஸ்ய கச்சித் ஜநிதாரு
[சாதிப:"

2. காரணத்ரவ்யத்தைப் பூர்ணமாக உடையவள், அதாவது அதனால் ஏற்படும் ஆனந்தத்தோடு கூடியவள் என்ற அர்த்தம்.

"மஹாபத்மவநாந்தஸ்தாம் காரணானந்த விக்ரஹாம்"

निष्कलङ्का

களங்கா (153)

களங்கம் (பாபம்) ஸம்பந்தமில்லாதவள்.

'சுத்தம் அபாப வித்தம்' (ச்ருதி)

निरुपाधिः

நிருபாதி: (154)

உபாதி யாதொன்றும் இல்லாதவள்.

1. சம்பாத்தைப் புஷ்பமானது நிலைக்கண்ணாடியினிடம் கொண்டுபோனால் தன்னுடைய சிகப்பு நிறத்தைக் கண்ணாடியில் காட்டுவதானது உபாதியென்பதற்கு ஒரு த்ருஷ்டாந்தம். அதே மாதிரி அவித்யையானது சித்தத்தில் பேத பாவனையை உண்டு பண்ணுவதும் உபாதி. சுத்த சைதன்ய ரூபிணியான அம்பாளிடம் அவித்யையினால் ஏற்படும் உபாதி யாதொன்றும் இல்லாத படியால் அம்பாளுக்கு 'நிருபாதி:' என்ற பெயர்.

2. உபாதி என்பது ஸகண்டோபாதி என்றும், அகண்டோபாதி என்றும் இரண்டுவகை.

निरीश्वरा

நிரீச்வரா (155)

பிறர் ஆஞ்ஞைக்கு உள்படாதவள்.

1. அம்பாள் ஸமஸ்த லோகத்திற்கும் ஈச்வரியாகையால் அம்பாளுக்கு மேற்பட்ட ஆஞ்ஞை வேறுயாருக்கும் இல்லை.

2. ஈச்வரன் உண்டென்று சொல்லும் உத்தர மீமாம்ஸா சாஸ்த்ரம், ஈச்வரன் இல்லையென்று சொல்லுகிற லாங்க்ய சாஸ்த்ரம், இவையிரண்டின் ரூபமாக இருப்பதால் அம்பாளுக்கு 'நிரீச்வரா' என்று பெயர்.

இனி வரும் நாமங்களில் காம, க்ரோத, லோப, மோஹ, மதமாத்ஸர்யம் ஆகிய அரிஷட்வர்கமென்ற குணங்கள் ஆத்மாவின் ஸ்வபாவத்தைச் சேர்ந்ததில்லை என்றும், அவற்றை ஜயித்தால் தான் ஆத்மரூபிணியான அம்பாளுடைய ஸாக்ஷாத்காரம் ஏற்படும் என்பதைச் சொல்லப்படுகிறது.

नीरागा

நீராகா (156)

ஆசை (இச்சை) யாதொன்றும் இல்லாதவள்.

1. அதாவது அம்பாள் அவாப்த ஸமஸ்த காமனையானதால், அவள் விரும்பக்கூடியது யாதொன்றுமில்லை.

2 ராகமென்றால் ஆசை. சாண்டில்யபக்தி ஸூத்ரங்களில் பக்தியையும் ராகமென்று சொல்லியிருப்பதால், அந்த அர்த்தத்தில் அம்பாள் பக்திக்கு உறைவிடமாதலாலும், அம்பாள் பக்தி பண்ணும்படியானவர் வேறு யாருமில்லையாதலாலும், அம்பாளுக்கு 'ராகா' என்று பெயர்.

3. நீரம் என்றால் ஜலம். அக என்றால் பர்வதம். ரெண்டு ரூபமாகவும் இருப்பதால் 'நீராகா'.

रागमथनी

ராகமதனீ (157)

(தன்னுடைய பக்தர்களுக்கு வைராக்யத்தைக் கொடுத்து ராகத்தை போக்கடித்துவிடுகிறவள்.

निर्मदा
நிர்மதா (158)

காவம் இல்லாதவள்.

मदनाशिनी
மத நாசினீ (159)

கர்வத்தை போக்கடிப்பவள்.

1. மதன என்றால் ஸுமத்தம்பூ என்றும் அர்த்தம். அதை அசினீ - சாப்பிடுபவள். அதாவது அதில் பிரியமுள்ளவள்.

2. ஸுமத்தம்பூவுக்கு பல விசேஷங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. அது தங்கம் பண்ணுவதில் (ரஸவாதத்தில்) உபயோகப்படுவது வழக்கம். தங்கத்தின் பெயர்கள் அதற்கும் உண்டு. பரமேச்வரனுல் சிரஸில் தரிக்கப்படுவதாகவும் சொல்லப்படும்.

'மஹாஸத்வாம் தத்தே சிரஸி ரஸராஜஸ்ய ஜயினீ
விசுத்திஸ் த்வத் ஸங்காத் கனகமயம் ஏதத் த்ரிபுவனம்'

निश्चिन्ता
நிச்சிந்தா (160)

கவலையில்லாதவள்.

1. சிந்தா என்பதற்கு ஸாமான்யமாக நினைவு என்ற அர்த்தமிருந்தாலும், இந்த இடத்தில் துக்கம் உண்டுபண்ணும் நினைவு என்ற பொருள். அது பிணங்களைக்கொளுத்தும் சிதையைவிட கஷ்டமானது என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஏனென்றால் சிதையானது ஜீவன்போன சரீரத்தைதான் கொளுத்துவதாலும், சிந்தையானது உயிருடன் இருக்கும் சரீரத்தையே கொளுத்துவதாலும, சிந்தையானது சிதையைவிட கடுமையானது.

'சிந்தா சிதாஸமா ஹ்யேயா சிந்தா வை பிந்துநாதிகா |
சிதா தஹதி நிர்ஜீவம் சிந்தா தஹதி ஜீவிதம் ||

2. சிந்தா என்றால் சூது, வஞ்சனை, மோசம் என்றர்த்தம். இந்த இரண்டு அர்த்தத்திலும் அம்பாளுக்கு சிந்தை கிடையாதாகையால் 'நிச்சிந்தா'.

निरहंकारा
நிரஹங்காரா (161)

அஹங்காரம் இல்லாதவள்.

அஹங்காரமென்பது ஸத்வ, ரஜஸ், தமோகுணங்களை அனுஸரித்து வைகாரிகம், தைஜஸம், பூதாதி என்று மூன்று விதம்.

निर्मोहा

நிர்மோஹா (162)

மோஹம் (மயக்கம், ப்ரமை) இல்லாதவள்.

मोहनाशिनी

மோஹநாசினீ (163)

பக்தர்களுடைய மோஹத்தை அழிப்பவள்.

பக்தர்களுக்கு ஏகத்வம் (எல்லாம் பரப்ரும்மம்) என்கிற ஞானத்தைக்கொடுத்து அவர்கள் மனதிலிருக்கும் மோஹத்தைப் போக்கடிக்துவிடுகிறாள் என்று அர்த்தம்.

'தத்ர கோ மோஹ: க: சோக: ஏகத்வம் அனுபச்யத:' (ச்ருதி)

निर्ममा

நிர்மமா (164)

மமதை இல்லாதவள்.

மமதை என்பது 'இது என்னுடையது' என்று பிரித்துச் சொல்லும் பேத புத்தியினால் ஏற்படும் எண்ணம். எல்லாமே அம்பாளுடையதாக இருப்பதால் அம்பாளுக்கு பேதபுத்தி என்பது கிடையாது.

ममताहन्त्री

மமதாஹந்த்ரீ (165)

(மேலே சொல்லப்பட்ட) மமதையென்பதைப் போக்கடிப்பவள்.

निष्पापा

நிஷ்பாபா (166)

பாபம் யாதொன்றும் இல்லாதவள்.

पापनाशिनी

பாபநாசினீ (167)

பாபத்தைப் போக்கடிப்பவள்.

பக்தர்கள் தன்னுடைய மந்த்ரத்தை ஜபம் பண்ணுவதினால் அவர்களுடைய ஸமஸ்தமான பாபங்களையும் போக்கடிப்பவள். எப்பேர்பட்ட பாபங்களைச் செய்திருந்தாலும் அம்பாளை உபாஸித்தால் அவையெல்லாம் நாசமடைகின்றனவென்று சொல்லப் பட்டிருக்கிறது.

மேரு பர்வத மாத்ரோபி ராசி: பாபஸ்ய கர்மண: |
காத்யாயனீம் ஸமாஸாத்ய நச்யதி க்ஷண மாத்ரத: ||
துர்கார்ச்சன ரதோ நித்யம் மஹாபாதக ஸம்பவை: |
தோஷைர் ந லிப்யதே வீர பத்மபத்ரமிவாம்பஸா ||
(பத்மபுராணம்)

க்ஷித்வா பித்வா ச பூதானி ஹத்வா ஸர்வாரிதம் ஜகத் |
ப்ரணம்ய சிரஸா தேவீம் ந ஸ பாபைர் லிப்யதே ||
ஸர்வாவஸ்தா கதோவாபி யுக்தோ வா ஸர்வபாதகை: |
துர்க்காம் த்ருஷ்ட்வா நர: பூத: ப்ரயாதி பரமம் பதம் ||
(தேவீபாகவதம்)

வர்ணாச்ரம விஹீனஞ்ச பாபிஷ்டானஞ்ச நிர்ணமபி |
யத்ருட்சா த்யான மாத்ரேண துஷ்க்ருதம் ஸுக்ருதாயதே ||
(ப்ரும்மாண்ட புராணம்)

निष्क्रोधा

நிஷ்க்ரோதா (168)

கோபமில்லாதவள்

சத்ருக்கள் யாருமில்லாதகால் கோபம் ஏற்பட வேண்டிய காரணமே அம்பாளுக்கு இல்லை

'ந மே த்வேஷ்யோஸ்தி ந ப்ரிய: (கீதை)

क्रोधशमनी

க்ரோத சமனீ (169)

கோபத்தை சமநம் செய்பவள்

கோபமுடையவன் செய்யும் தானம், யக்ஞம், தபஸ், உபாஸனை முதலியவையெல்லாம் பச்சை மண்ணாலிய (சுடாத) கலயத்தில் எடுத்த ஜலம் மாதிரி கைகூடாமல் போய்விடுமென்று சொல்லப்பட்டிருக்கிறது.

'க்ரோதயுக்தோ யத் யஜதி யத் ஜுஹோதி யதர்சதி |
ஸ தஸ்ய ஹரதே ஸர்வம் ஆலகும்போ யதோ ஹ்யஸுகம் ||
(ஆபஸ்தம்பர்)

निर्लोभा
நிர்லோபா (170)

பேராசை (உலோபித்தனம்) இல்லாதவள்

அம்பாள் அத்யந்தமான உதார ஸ்வபாவமுடையவளாதலால் 'நிர்லோபா' என்று பெயர்.

लोभनाशिनी
லோபநாசினீ (171)

பக்தர்களுடைய உலோபித்தனத்தைப் போக்கடிப்பவள்.

லோபமானது ஸகலவிதமான நல்ல குணங்களையும் அழித்துவிடும் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

निःसंशया
நிஃஸம்சயா (172)

ஸந்தேஹமில்லாதவள்

संशयघ्नी
ஸம்சயக்னீ (173)

(பக்தர்களுடைய) ஸந்தேஹத்தைப் போக்கடிப்பவள்.

தக்ஷ யாஜ்ஞத்தில் குரு சிஷ்யர்களைப் பற்றிச் சொல்லுகையில் 'அஸம்சயஃ ஸம்சயச்சித்' என்று வர்ணித்திருக்கிறபடி, குருவானவர் தான் ஸந்தேஹமற்றவராகவும் சிஷ்யனுடைய ஸந்தேஹத்தைப் போக்கடிப்பவராகவும், இருப்பதாகவும் சொல்லப்பட்டிருக்கிறது. அம்பாளும் குருவும் அபேதமாகையால் இங்கேயும் இந்த இரண்டு நாமங்களால் சேர்ந்தாற்போல் அம்பாளை வர்ணிக்கப்பட்டிருக்கிறது.

निर्भवा
நிர்பவா (174)

(ஆதி) உத்பத்தி இல்லாதவள்.

'அனாதிமத் பரம் ப்ரும்ஹ' (கீதை)

भवनाशिनी
பவநாசினீ

ஸம்ஸார பந்தத்தைப் போக்கடிப்பவள்.

1. அம்பாளுடைய உபாஸனையினல் ஸம்ஸாரபந்தமானது அற்றுப்போய்விடுவதாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

அஹம் வை மத்பரான் பக்தான் ஐச்வரம் யோகமாச்ரிதான் I
ஸம்ஸார ஸாகராத் அஸ்மாத் உத்தராம்யசிரேண து II

2. ப்ருஹஜ்ஜாபாலோப நிஷத்தில் சொல்லப்பட்ட பவநாசினீ என்ற பெயரையுடைய நதி ரூபமாக இருப்பவள்.

निर्विकल्पा

நிர்விகல்பா (176)

விகல்பம் இல்லாதவள்

1. விகல்பம் என்பது ஒரு வஸ்து உண்மையில் இல்லாதிருக்கையில் அதன் பெயரின் சப்தத்தினல் அதைப்பற்றி ஏற்படும் ஞானம்.

'சப்தமாத்ராநுபாதி வஸ்து சூன்யோ விகல்பः'

(யோகஸூத்ரம்)

2. அம்பாளுக்கு விகல்பமான ஞானம் இல்லை என்பது அம்பாள் விஷய ஸம்பந்தமில்லாததும், நித்யமுமான ஞானரூபிணியென்ற அர்த்தம்.

3. விகல்பம் என்பது விருத்தமான (எதிரிடையான) கருத்தி என்றும் அர்த்தம். இங்கே அம்பாளை 'நிர்விகல்பா' என்றது சொன்னது அம்பாளுக்கு எதிரிடையான வஸ்து அல்லது கருத்தியாதொன்றும் இல்லையென்றும் அர்த்தம். அதாவது ஸர்வம் அம்பாளோடு அபின்னமாக இருப்பதால் அம்பாளைத் தவிர்த்த கருத்தி யாதொன்றும் இல்லை.

निराबाधा

நிராபாதா (177)

கலக்கமில்லாத (புத்தியுடைய)வள்.

முத்துச் சிப்பியின் வெளுப்பான நிறத்தைப் பார்த்து அதை வெள்ளி என்று நினைப்பது மனநிறைவுடைய கலக்கம். அது வெள்ளியல்ல, முத்துச்சிப்பி என்று தெரிந்தவுடன் அந்தக் கலக்கமானது மறைந்து விடுகிறது. அம்பாளைத் தவிர வேறு இரண்டாவது வஸ்து கிடையாதானையால் அம்மாதிரி கலக்கம் யாதொன்றுமில்லாதவள்.

निर्भेदा

நிர்பேதா (178)

பேதமில்லாதவள்.

1. வேற்றுமையான புத்தி ஏற்படக்கூடிய வஸ்து அப்பாலுக்கு யாதொன்றுமில்லையாகையால் 'நிர்பேதா.'

'த்வம் ஹரி ஸா பரமா சக்தி: அனந்தா பரமேஷ்டினீ ।
ஸர்வபேத வினிர் முக்தா ஸர்வபேத விநாசினீ' ॥
(கூர்ம புராணம்)

2. சக்தி, சக்தியுள்ளவர் (சிவன்) இவ்விருவர்களும் வெவ்வேறு என்று சிலர் உண்மை தெரியாததினால் சொன்னாலும் தத்வ சிந்தையுள்ள யோகிகள் அபேதம் என்று தெரிந்துகொண்டிருக்கிறார்கள்.

'சக்தி சக்தி மதோர் பேதம் வதந்த்யபரமார்த்தத: ।
அபேதம் சானுபச்யந்தி யோகினஸ் தத்வசிந்தகா:' ॥
(கூர்ம புராணம்)

भेदनाशिनी

பேத நாசினீ (179)

பேத புத்தியைப் போக்கடிப்பவள்.

அதாவது பக்தர்களுக்கு தத்வ ஞானம் உண்டுபண்ணி பேதையை அகற்றுபவள்.

निर्नाशा

நிர்நாசா (180)

அழிவில்லாதவள்.

'ஸத்யம் ஞானம் அனந்தம் ப்ரும்ஹ' (ச்ருதி)

ம்ருத்யு மதநீ (181)

பக்தர்களுக்கு மரணம் இல்லாமல் செய்பவள்.

காலனுக்குக் காலனான பரமேச்வரனுடைய சக்தியானவும் பாள், மார்க்கண்டேயர் விஷயத்தில் அவர் செய்ததுபோல தன்னுடைய பக்தர்களுக்கு மரண பயம் ஏற்படாமல் காப்பாற்றுவாள் என்று அர்த்தம். அம்பாளுடைய பக்தன் உபாஸனையின் விசேஷத்தால் அம்பாளுடைய தாதாத்ம்யத்தை அடைவதனால் அவனுக்கு மரணம்

'அத சஸ்மாத் உச்யதே மாம்ருதாத் இத்யம்ருதத்வம் ப்ராப்னோதி
த்யக்ஷயத்வம் ப்ராப்னோதி நித்ரத்வம் ப்ராப்னோதி ஸ்வயம்
ருத்ரோபவதி' ॥ (த்ரிபுரோபநிஷத்)

निष्क्रिया

நிஷ்க்ரியா (185)

(செய்ய வேண்டிய) க்ரியை யாதொன்றுமில்லாதவள்.

1. க்ரியைகள் விஹிதம் நிஷித்தமென்றும் இருவகை. விஹிதம் என்பது அவச்யம செய்யவேண்டியவை. நிஷித்தமென்பது செய்யக்கூடாதவை. இவை இரண்டும் அம்பாளுக்குக் கிடையாதென்று சொல்லப்பட்டிருக்கிறது.

2. க்ரியை என்பது இல்லாமலேயே கர்த்ருத்வம், ஸர்வேச்வரியான அம்பாளுக்கு உண்டென்று சொல்லப்பட்டிருக்கிறது. மணமுள்ள புஷ்பமானது வேறு ஒன்றும் செய்யாமல் தான் இருப்பதிலேயே மனதுக்கு மாறுகலில உண்டுபண்ணுவது மாதிரி, பரமேச்வரன் தான் ஒருவிதமான க்ரியையும் செய்யாமல் உலகத்தை நடத்திவருகிறானென்று சொல்லப்பட்டிருக்கிறது.

'யதா ஸந்நிதி மாத்ரேண கந்த: கஸ்யாபி ஜாயதே ।
மனஸோ நோபகர்த்ருத்வாத் ததா ஸ்ருஷ்டி பரமேச்வர: ॥'
(விஷ்ணு புராணம்)

निष्परिग्रहा

நிஷ்பரிக்ரஹா (183)

பரிஜனங்கள் யாரும் இல்லாதவள்.

பரிக்ரஹம் என்றால் சொத்து, பரிஜனம், பரிசு என்ற அர்த்தம். இவை யாதொன்றும் அம்பாளுக்குக் கிடையாதென்று சொல்லப்பட்டது.

निस्तुला

நிஸ்துலா (184)

ஒப்பில்லாதவள்.

அம்பாள் இன்னதற்கு ஸமானம் என்று சொல்லக்கூடிய வஸ்து யாதொன்றுமில்லையாகையால் 'நிஸ்துலா.'

'யஸ்ய துல்யம் நவித்யதே' (த்ரிபுரோபநிஷத்)

नीलचिकुरा
நீலசிகுரா (185)

நீல நிறமுள்ள கூந்தலையுடையவள்.

निरपाया
நிரபாயா (186)

(அபாயம்) நாசமில்லா தவள்.

निरत्यया
நிரத்யயா (187)

வரம்பு கடக்காதவள்.

ஈச்வரன் தர்மங்களுக்கு வரம்பு ஏற்படுத்தி அவைகளை மீறி ஜனங்கள் நடக்கா தபடி ரக்ஷிக்கிறார் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

"தர்மஸேது ரீச்வராணாம் தர்ம அபிரக்ஷிதா" (பாகவதம்)

தான் ஈச்வராணையிருப்பதை முன்னிட்டு அவரே ஏற்படுத்தி யிருப்பதான ஏற்படுத்திய வரம்பு கடந்து நடந்ததாகச் சொல்லப்பட்டபோதிலும், அம்பாளைப்பற்றி அப்படிச் சொல்லமுடியாது.

दुर्लभा
துர்லபா (188)

(யோகிகளுக்குக்கூட) சிரமப்பட்டுக் கிடைக்கக்கூடிய (பதவியுடைய)வள்.

दुर्गमा
துர்கமா (189)

கிட்டமுடியாதவள்.

1. யோகிகளால்கூட வெகு கஷ்டத்தினால் கிடைக்கக் கூடிய பதவியை உடையவளாகையால் பிறரால் கிட்டக்கூடப் போகமுடியாதவள்.

2. 'அதுர்கமா' என்று பிரித்து லோலபமாக அடையக் கூடியவள். அதாவது ஸுலபமான குணத்தையுடையவள் என்

மும் அர்த்தம் பண்ணலாம் மேலும் அம்பாள் துர்கமன் என்ற அஸுரனை ஸம்ஹாரம் செய்தபடியால் 'அதுர்கமா'.

दुर्गा
துர்கா (190)

துர்காரூபமாக இருப்பவள், அல்லது துர்கா என்ற பெயரோடு கூடியவள்

1. துர்கமன் என்ற அஸுரனைக் கொன்றதால் 'துர்கா' என்ற அம்பாளுக்கு பெயர் ஏற்பட்டது.

"தத்ரைவச வதிஷ்யாமி துர்கமாக்யம் மஹாஸுரம் ।
துர்காதேவீதி விக்யாதம் தன்மே நாம பவிஷ்யதி ॥"

2. இந்திரன் முதலிய தேவர்களை கஷ்டங்களிலிருந்தும் சத்ருபயத்திலிருந்தும் காப்பாற்றியதால் துர்கா என்ற பெயர் வந்ததாகவும் சொல்லப்பட்டிருக்கிறது.

"ஸுபலாதிபயே துர்கே தாரிதா ரிபுஸங்கடே ।
தேவா: சக்ராதயோ யேன தேன துர்காப்ரகீர்த்திதா ॥"
(தேவி புராணம்)

3. முன்னொருக்கால் ஸுபாகு என்னும் அரசனுடைய வேண்டுகோளுக்கிணங்கி காசியில் துர்கா ரூபமாக அம்பாள் இருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

'நகரே அத்ர த்வயா மாத: ஸ்தாதவ்யம் ஸர்வதா சிவே ।
துர்காதேவீதி நாம்னைவ த்வம் சக்திரிஹ ஸம்ஸ்திதா ॥'
(தேவீ பாகவதம்)

4. பீமரதி என்ற [illegible]ன் கரையில் இருக்கும் [illegible]க்கும் அம்பாளுக்கு துர்கா என்ற பெயர்.

5. 'நவ வர்ஷா ப[illegible] துர்கா' என்றபடி ஒன்பது வய[illegible]துள்ள கன்யா ரூபமாக [illegible]ப்பவள்.

दुःखहन्त्री
துஃகஹந்த்ரீ (191)

ஸாம்ஸாரிகமான துக்கத்தைப் போக்கடிப்பவள்.

'துஃகேனத்யந்த விமுக்தச்சாதி (ச்ருதி)

सुखप्रदा
ஸுகப்ரதா (192)

ஸுகத்தைக் கொடுப்பவள்.

அதாவது ஐஹிக ஆமுஷ்மிகங்களான ஸகல ஸுகங்களையும் அவிவில்லாமல் கொடுப்பவள் என்ற அர்த்தம்.

'ரஸம் ஹ்யேவாயம் லப்த்வா ஆனந்தீ பவதி' (ச்ருதி)

இதைப்பற்றி பத்மபுராணத்தில் புஷ்கர கண்டத்தில் கடைசி ஆறு அத்யாயங்களில் விஸ்தாரமாகச் சொல்லப்பட்டிருப்பதைப் பார்க்கவும்.

दुष्टदूरा

துஷ்டதூரா (193)

துஷ்டர்களால் அடையமுடியாதவள்.

துஷ்டர்கள் என்றால் துராசாரமுடையவர்கள், துஷ்கர்மம் செய்பவர்கள்.

'ந பஜந்தி துஷ்கர்மாணோ மாம் விசக்ஷணாம் ஜனாஹம்'

(ஸ்ரீமத் பாகவதம்)

दुराचारशमनी

துராசார சமநீ (194)

துராசாரத்தை அடக்குபவள்

துராசாரம் என்பது சாஸ்த்ரவிருத்தமான நடவடிக்கை. சாஸ்த்ரங்களில் விதி ரூபமாக இன்னவற்றைச் செய்யவேண்டுமென்றும், நிஷேதரூபமாக இன்னவற்றைச் செய்யக்கூடாதென்றும், நடவடிக்கைகளைப்பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. செய்யவேண்டியவற்றைச் செய்யாததாலும், செய்யக்கூடாததைச் செய்வதாலும், எற்படும் ஸகல பாபங்களையும் அம்பாளருளால் நாசமாகச் செய்து போக்கடித்துவிடுகிறதால் இந்நாமம் அந்த அத்யாயத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

'நிர்யாதயாம அஸ்மை துராசாராய நிஷூன் கராலாம்ஸ்ச அஹம்

யத் பாபம் ஜாயதே பும்ஸாம் துஷ்ஸங்கம் தத்ர தத்ருஷாம் ॥'

दोषवर्जिता

தோஷவர்ஜிதா (195)

(ராகம் த்வேஷம் முதலிய) தோஷங்கள் இல்லாதவள்.

ஸர்வக்ஞா (196)

எல்லாம் அறிந்தவள்.

'ஸர்வக்ஞா ஸர்வ வேதந்ருத்வாத்' (தேவீ புராணம்)

सान्द्रकरुणा

ஸாந்த்ர கருணை (197)

அதிகமான கருணையோடு கூடியவள்.

समानाधिकवर्जिता

ஸமாநாதிக வர்ஜிதா (198)

தனக்கு ஸமானமாகவாவது, மேலாகவாவது யாருமில்லாதவள்.

'ந தத்ஸமச்சாப்யதிகச்ச த்ருச்யதே (ச்ருதி)

सर्वशक्तिमयी

ஸர்வ சக்தி மயீ (199)

ஸகலவிதமான சக்தியையும் உடையவள்.

1. அல்லது பாலா, பகளா முதலிய ஸகல சக்திகளோடு அபின்னமாக இருப்பவள்.

2. அல்லது ஸகல தேவர்களுடைய சக்தி ஸ்வரூப ரூபமானவள். அதாவது மஹாவிஷ்ணுவுக்கு இருக்கிற சங்கு சக்கரம் அம்பாளுடைய விபூதிகள் என்றும், அப்பாலுடைய அநுக்ரஹத்தால் அந்தந்த சக்திகளை அந்தந்த தேவதைகளும் அடைந்திருக்கிறார்களென்றும் அர்த்தம். அம்பாளுடைய சக்திகளை டால் அதைவதற்குக்கூட அவர்களால் முடியாது என்பதை தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

மதீயா: சக்திலேசா யே முத்ருத்ய விதயே சிரகா: |
ஸம்பூயதே மமாபூவன் நடாம் பரமவிஷ்ணவம் ||
ஆயுதானி ச தேவாணாம் யாவி யாவி ஸ ஸ்ரேஷ்டர |
மச்சக்தயஸ் தாவகாரா: ஆயுதானி தவாம்பிகே ||

இதைப்பற்றி ஸப்தசதியில் உத்தம சரித்திரத்தில் சொல்லியிருப்பதைப் பார்க்கவும்.

3. 'ஸர்வ' என்றால் அகண்டமான, அளவிடமுடியாத என்று அர்த்தம்.

सर्वमङ्गळा

ஸர்வ மங்களா (200)

ஸமஸ்தமான மங்களங்களோடு கூடியவள்.

அதாவது அவற்றை யுடைத்தாயிருப்பதால் அவைகளைத் தன்னுடைய பக்தர்களுக்குக் கொடுப்பவள்.

ஸர்வாணி ஹ்ருதயஸ்தானி மங்களானி சுபானி ச |
ஈப்ஸிதானி ததாதீதி தேவி ஸா ஸர்வமங்களா ||
சோபனானி ச சித்தேஷ்டானி யா தேவீ தத்தே ஹரே |
பக்தானும் ஆர்த்தி ஹரணீ தேவேயம் ஸர்வமங்களா ||

(தேவீபுராணம்)

सद्गतिप्रदा

ஸத்கதிப்ரதா (201)

நல்ல கதியைக் கொடுப்பவள்.

1. 'ஸத்' என்றால் ஸ்வர்கம் முதல் மோக்ஷம் வரையிலுள்ள இடங்கள் என்ற அர்த்தம். அல்லது (ஸத்) ப்ரும்ஹத்தை அடையும்படியான (கதி) மார்க்கத்தை, அதாவது ஞானத்தைக் கொடுப்பவள் என்றாம் அர்த்தம் பண்ணலாம்.

2. ஸத்துக்கள் அடையும்படியான தன்னுடைய பதவியைக் கொடுப்பவள் என்றும் சொல்லலாம்.

'கதிஸ்த்வம் ஸதிஸ்த்வம் ஸ்வமேகா பவானீ'

3. பத்மபுராணத்தில் அம்பாளைப் பூஜை செய்து அந்தந்த பதவியை அடையும்படியான மார்க்கங்களைப்பற்றி நாரத அத்யாயங்களில் சொல்லியிருப்பதைப் பார்க்கவும்.

सर्वेश्वरी

ஸர்வேச்வரீ (202)

எல்லோருக்கும் ஈச்வரீ.

(மேலே சொல்லியபடி எல்லோரையும் நல்ல கதிக்குக் கொண்டுபோய்ச் சேர்க்கிறபடியால்) எல்லோருக்கும் ஈச்வரீ.

'ஸமாஸாதிக வர்ஜிதா' என்றபடி அம்பாவுக்கு ஸமானம் அல்லது மேல் பட்டவர் யாருமில்லையாகையால் அம்பாளை எல்லோருக்கும் ஈச்வரீ என்று ஏற்பட்டது.

सर्वमयी

ஸர்வமயீ (203)

எங்கும் வியாபித்திருப்பவள். அல்லது எல்லா ரூபத்தோடும் இருப்பவள்

1. க்ஷிதி (பூமி) முதல் சிவன் வரையிலுள்ள தத்வங்களோடு அபின்னமாக இருப்பவள்.

2. அம்பாளை அடைவதற்கு ஆறு வழிகள் (அத்வாக்கள்) இருப்பதாகச் சொல்லப்படும். அவையாவன பதாத்வா, புவனத்வா, வர்ணத்வா, தத்வாத்வா, கலாத்வா, மந்த்ராத்வா. இருநூற்றிருபத்திநான்கு புவனங்களிருப்பதாகவும், அவைகளை பகவானுடைய (சிவனுடைய) ரோமங்களாக பாவனை செய்து உபாஸிப்பது புவனத்வா என்றும், ஐம்பத்தாறு தத்வங்களை பகவானுடைய தோலாக பாவனை செய்து உபாஸிப்பது வர்ணத்வா என்றும், ஐம்பதகோடி மஹாமந்த்ரங்களால் உபாஸனை செய்வது மந்த்ராத்வா என்றும், அம்மாதிரி மந்த்ரங்களின் சேர்க்கையினால் ஏற்படும் பதங்களால் உபாஸனை செய்வது பதாத்வா என்றும், பரிதிவி முதல் சிவபர்யந்தமிருக்கும் தத்வங்களோடு அபின்னமாக பாவனை செய்து உபாஸிப்பது தத்வாத்வா என்றும் சொல்லப்படும். இவைகளைப்பற்றி 991-வது நாமமான 'ஷடத்வாதீதரூபிணி' என்ற நாமத்திலும் சொல்லப்பட்டிருக்கிறது.

3. இவைகளில் 'சிவாத்யவனி பர்யந்தம்' என்ற தத்வங்களோடு அபின்னமாக இருப்பதால் அம்பாளை 'ஸர்வமயீ' என்று இங்கே சொன்னது.

सर्वमन्त्रस्वरूपिणी

ஸர்வ மந்த்ர ஸ்வரூபிணீ (204)

ஸமஸ்த மந்த்ரங்களின் ஸ்வரூபமாக இருப்பவள்.

1. மேலே சொல்லிய மந்த்ராத்மாவிலும் உபாஸனை செய்யப்படுவது இங்கு சொல்லப்பட்டது.

2. மந்த்ரங்கள் ஸப்த கோடி-க்களாக்கியவைகள் என்று இங்கு சொல்லப்படும்.

3. அம்பாள் ஸர்வ மந்த்ரஸ்வரூபினியாக இருப்பதை 'மித்யா ப்ர: ப்ரதிவாத்ரூபம் அபவதை ஜாதா' என்று தைவீ பாத ஸ்தோத்ரத்திலும் அதின் பாஷ்யத்திலும் விளக்கமாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

सर्वयन्त्रात्मिका

ஸர்வயந்த்ராத்மிகா (205)

ஸமஸ்த யந்த்ரங்களுக்கும் ஆத்மஸ்வரூபமாக இருப்பவள்.

யந்த்ரங்கள் கடை, அர்களை பல வகைப்பட்டனவு.

सर्वतन्त्ररूपा

ஸர்வதந்த்ரரூபா (206)

ஸகல தந்த்ரங்களுமே தன்னுடைய ரூபமாக இருப்பவள்.

1. அல்லது ஸகலவிதமான தந்த்ரங்களும் அம்பாளைக் குறித்தே இருக்கிறபடியாலும் அம்பாளிலேயே நிரூபிக்கிறபடியாலும் "ஸர்வதந்த்ரரூபா" என்று சொன்னது.

பஹுதாப்யாகமைர் பின்ன: பந்தா: ஸித்திர்ஹிதாந்ருணாம் |
த்வய்யேவ நிபதந்த்யேதே ஸ்ரோதாம்ஸ்யம்பு இவார்ணவே ||

2. ஸமஸ்த தந்த்ரங்களும் அம்பாளுடைய சரீரத்தில் அவயவங்களாக இருப்பதாகவும் சொல்லப்பட்டிருக்கிறது.

காமிகம் யோகஜம் சிந்த்யம் காரணாக்யம் ததைவ ச |
அஜிதம் தீப்தகம் சைவ ஸூக்ஷ்மம் ஸஹஸ்ரகம் ததா |
அம்சுமான் ஸுப்ரபேதம் விஜயாக்யம் நிஷ்வாஸகம் ததா ||

முதலிய ச்லோகங்களால் காமிகாகமத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

मनोन्मनी

மனோன்மனீ (207)

மனோன்மனீ ரூபமாக இருப்பவள்.

1. புருஷர்களுக்கு மத்யஸ்தானமாயிருந்து ப்ரம்மரந்த்ரம் வரை இருக்கும் ஸ்தானங்களில் மட்டாவது ஸ்தானம் மனோன்மனீ என்ற பெயர். அவை இச்சை, ஜ்ஞானி, நாத, நாதாந்த, சக்தி, வ்யாபினீ, ஸமனா, உன்மனீ அல்லது மனோன்மனீ, மஹாபிந்து என்பன. இவற்றில் மனோன்மனீயின் லக்ஷணம்:-

யா சக்தி: காரணத்வேன தத்தாத்ம்யம் போதயன்மனீ ஸ்வரூபா |
ஸர்வ கலாகலாமானம் ரூபத்வம் ச ஸமேதவதா ||
ஸச்சிதானந்த பரம சுத்தம் ருத்ரவக்த்ரம் தத் உச்யதே |
விசக்ஷிதி க்யாதா நிர்விகல்பா நிரஞ்ஜனா ||

2. 'வாமேதவாய நமோ ஜ்யேஷ்டாய நம:' என்று சொன்ன வாக்யத்தில் சொல்லப்பட்ட மனோன்மனன் என்ற சிவனுடைய சக்தியே மனோன்மனீ என்ற பெயர்.

3. மனமானது உன்மனீ பாவம் அடையும்போது தெரியப் பட்டவள் என்று அர்த்தம்.

ஸகல விஷயங்களுடைய பற்றுதலை விட்டு ஹ்ருதய கமலத் திலிருக்கும் பரப்ரும்மஹ்ருத்தை த்யானம் பண்ணும்போது ஏற்படும் நிலைமைக்கு உன்மனீ பாவம் என்று பெயர்.

நிரஸ்த விஷயாஸங்கம் ஸன்னிருத்தம் மனோ ஹ்ருதி
யதாயாத்யுன்மனீ பாவம் ததா தத் பரமம் பதம் ॥
(த்ரிபுரோபநிஷத்)

4. மனோன்மனீயென்று ஒரு விதமான முத்ரா விசேஷத் தின்பெயர். அதோடு அபின்னமாக இருப்பவள். அந்த முத்ரை யின் லக்ஷணம் கண்கள் மூடாமலும் திறக்காமலும், ப்ராணவாயு வானது ரேசகம், பூரகம் இவையில்லாமலும் மனதானது ஸங்கல் பம், விகல்பம் இவையில்லாமல் உன் மனீபாவம் அடைந்து அம் பாளுடைய ஸ்வரூப த்யானமாகவே இருப்பது என்று சொல்லப் பட்டது.

'ரேத்ரே யதோன்மேஷ நிமேஷ முக்தே
வாயுர்யயா வர்ஜித ரேசபூர: |
மனச்ச ஸங்கல்ப விகல்ப சூன்யம்
மனோன்மனீ ஸா மயி ஸந்நிதத்தாம் ॥

த்யான த்யாதிருத்ருத்யேயங்களாகிற வித்பாஸம் போய்விட் டால் மனதுக்கு இருக்கும் பாவமானது உன்மனீ என்று பெயர்.

த்யான த்யாத்ருத்ருத்யேய பாவோ யதா ஸர்வதஸ்நிவர்ததே |
ததோன்மனத்வம் பவதி ஸாமரஸ்யஸ்ய நிர்வசநம் ॥
(ப்ருஹந்நாரதீயம்)

5. அல்லது, தன்னை த்யானம் பண்ணுவதால் பக்தர்களு டைய மனதுக்கு உன்மனீ பாவம் (உத்க்ருஷ்டமான ஞானத் தோடு கூடியிருக்கும் தன்மை) உண்டுபண்ணுவதால் அம்பா ளுக்கு 'மனோன்மனீ' என்று பெயர்.

மஹேச்வரரான பரமசிவனுடைய பத்னீ.

யோ வேதாதௌ ஸ்வர: ப்ரோக்த: வேதாந்தே ச
ப்ரதிஷ்டித: |
தஸ்ய ப்ரக ணஸ் ய ய: பர: ஸ மஹேச்வர: ॥

என்கிற ச்ருதிவாக்யத்திலை குறிக்கப்பட்ட மஹேச்வரரான பரமசிவன் த்ரிகுணாதீதமானதும் நிர்குணமானதுமான ஸ்வரூபமுடையவர் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

தமஸா காலருத்ராக்யோ ரஜஸா கமலாஸனஸ்: |
ஸத்வேன ஸர்வகோ விஷ்ணுர்: நிர்குணேன மஹேச்வர: ||
(லிங்க புராணம்)

'மஹேச்வர' என்ற பதத்திற்கு ஸமஸ்த பூதங்களுக்கும் மஹேச்வரர் அல்லது, மஹாத்மானவர்களுக்கெல்லாம் ஈச்வரர் என்று அர்த்தம்.

महादेवी

மஹாதேவீ (209)

மஹாதீயாயிருக்கும் தேவி.

1. மஹதீ என்பதிலை அளவிடமுடியாத பெரிய சரீரத்தையுடையவள் என்று அர்த்தம்.

'பிருஹதஸ்ய சரீரஸ்ய யத் அப்ரமேயஸ்ய ப்ரமாணத:
தாதுர் மஹேஸ்வரஸ்ய மஹதீ தேவீ ருத்ர: ஸ்மருத:' ||
(தேவீ புராணம்)

2. மஹாதேவராகிய பரமசிவனுடைய பத்னீ.

3. கண்டகியில் சக்ரதீர்த்தமென்பதில் அதிஷ்டானமாயிருக்கும் தேவியின் பெயர் மஹாதேவீ.

महालक्ष्मी

மஹாலக்ஷ்மீ (210)

மஹதீயான லக்ஷ்மீ ஸ்வரூபமாக இருப்பவள்.

1. அல்லது மஹாவிஷ்ணுவின் பத்னியான மஹாலக்ஷ்மி ரூபமாக இருப்பவள். (அவரோடு அபின்னமாக இருப்பவள்.)

2. காவீரகேஷேத்ர (கோலாபுர)த்திலிருக்கும் தேவிக்கு மஹாலக்ஷ்மீ என்ற பெயர்.

'சாலாக்ராமே மஹாதேவீ, காவீரே மஹாலக்ஷ்மீ' (பத்மம்)

3. அம்பாளுடைய அம்சமான மஹாலக்ஷ்மீ தேவியிடமல்லவள் மஹாலன் என்ற பெயருடைய அஸுரனை ஸம்ஹாரம் பண்ணினதாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

'மஹாலாகாமகம் ஸைத்யம் ஸ்யந்தி கூபயதிந்ரி ச |
மஹாலஸ்ய மஹாலக்ஷ்மீரிதி சக்யாந்திமாகதா' ||
(மைலாரதந்த்ரம்)

4. 'அம்பாளுக்கு மஹாலக்ஷ்மீ என்ற பெயர் இருப்பதாகப் பல இடங்களில் சொல்லப்பட்டிருக்கிறது.

தஸ்யாங்க மண்டலாருடா சக்திர் மாரீஹச்யுர் பரா !
மஹா லக்ஷ்மீ ரிதிக்யாதா ச்யாமா ஸர்வ மங்களா ॥
(தேவி புராணம்).

ச்ரியம் லக்ஷ்மீம் அம்பிகாம் ஔபலாங்காம்(ஆயுஷ்யஸூக்தம்).

ஸர்வஸ்யா த்யா மஹா லக்ஷ்மீ: த்ரிகுணா ஸா விமோஸ்திதா
(மார்க்கண்டேய புராணம்)

5. 'த்ரயோதசே மஹாலக்ஷ்மீ' என்றபடி பதிமூன்றாவது அக்ஷரமாக இருப்பவள்.

मृडप्रिया

ம்ருடப்ரியா (211)

ம்ருடனுகிய பரமசிவனுக்கு ப்ரியமானவள்.

விச்வத்துக்கு ஸ்திதிகர்த்தாவும் ஸத்வ குணத்தோடு கூடிய வருமான சிவனுக்கு ம்ருடனென்ற பெயர்.

'ஜகத: ஸகலஸ்யாதௌ ஸத்வவத்ரிகுணாத்மன: ம்ருட ப்ரியம்ருடஸ்யாயம்
(சிவரஹஸ்யம்)

महारूपा

மஹாரூபா (212)

மஹத்தான ரூபத்தையுடையவள்.

பரப்ரம்மத்துக்கு புருஷ, வ்யக்த, அவ்யக்த காலமாகிய நான்கு அம்சமான ரூபங்களிருப்பதாகவும், அந்த ரூபங்கள் அந்தந்த விபாகத்துக்குத்தக்கபடி ஸ்திதி, லயக்ரம, ஸர்க்கம், வ்யக்தி ஸத்பாவங்களுக்கு ஹேதுக்களென்றும், இந்த நான்கு ரூபங்களைக் கடந்த மஹாரூபம்தான் பரப்ரம்மமென்றும் விஷ்ணு புராணத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

'பரஸ்ய ப்ரம்மண: ரூபம் புருஷ: ப்ரதமம் த்விஜ |
வ்யக்தாவ்யக்தே ததோ ஜாதௌ தஸ்யாஸ்தௌ ரூபஸம்ஜ்ஞிதே ப்ரதமம் |
ப்ரதமஸ்ய புருஷஸ்யாபி காலரூபம் பரம் ஸ்மரேத் |
பச்யந்தி ஸூரய: யஸ்மிம் ஸர்வம் ஸர்வஸ்ருஜி: பரம் பரம் ||
ப்ரதமஸ்ய புருஷஸ்யாபி காலாக்யஸ்ய ப்ரவர்தக: |
ரூபஸ்ய ஸ்திதி ஸர்கஸம்யமஸ்ய ஸத்பாவஹேதவ: ||

இம்மாதிரி ரூபசதுஷ்டயத்தைக் கடந்த உத்க்ருஷ்டமான ரூபத்தையுடையவள் மஹாரூபா.

महापूज्या

மஹாபூஜ்யா (213)

மஹாதீயாயும் பூஜ்யையாயுமிருப்பவள்.

இதரர்களால் பூஜை செய்யப்படுகிறவர்களான சிவன் முதலானவர்களாலும் கூட ஆராதிக்கப்பட்டவள் என்றார்த்தம். அம்பாளே சிவன், ப்ரும்ஹா, விஷ்ணு, குபேரன் முதலியவர்களும் பூஜிக்கும் பிரகாரங்களும், அவர்கள் அப்படி பூஜைசெய்யும் அம்பாளுடைய ரூபங்களும், விஸ்தாரமாக பத்மபுராணம், தேவீபாகவதம் இவைகளில் சொல்லப்பட்டிருக்கிறது.

महापातकनाशिनी

மஹாபாதகநாசினீ (214)

ப்ரம்மஹத்தி முதலிய மஹாபாபங்களையெல்லாம் போக்கடிப்பவள்.

1. ஸௌபாக்ய ரத்னாகரம் முதலிய க்ரந்தங்களில் ப்ராயச்-ப்ரகரணத்தில் அந்தந்தப் பாபங்களுக்குத்தக்கபடி செய்ய வேண்டிய அம்பாளுடைய ஜப விதானங்களைப்பற்றிச் சொல்லப்படடிருக்கு

2. அம்பாளுடைய பாதஸ்மரணையே ஸகல பாபங்களுக்கும் ப்ராயச்சித்தமாக இருக்கிறதென்று சொல்லப்பட்டது.

க்ருதஸ்யாகில பாபஸ்ய நாஸாயாலுர்ய பேதினே |
ப்ராயச்சித்தாய பரம் ப்ரோக்தம் பரா சக்த்யா: பதஸ்மரணம்: ||

இந்த மாதிரியாகவே அம்பாளுடைய இந்த ஸஹஸ்ரநாமத்தின் ஒரு நாமத்திற்கிருக்கும் பாப நிவர்த்தனா சக்தியையே பாபம் செய்ய இந்தப் பதினாலு லோகங்களாலும் முடியாதென்று பலச்ருதி அத்யாயத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

அத்ரைக நாம்னோ யா சக்தி: பாபக்ஷயே ஸ்வாந்த்ய தா |
தன்னிவர்த்யம் அகம் கர்த்தும் நாலம் ஸர்வைக: சதுர்முக: ||

महा

மஹா மாயா (215)

(ப்ரம்ஹாதிகளுக்குங்கூட மோஹத்தை உண்டுபண்ணுவதால்) மஹாமாயாரூபிணியாக இருப்பவள்.

யே தான் மார்க்கண்டேய புரா ல.

'ஞானினுமபி சேதாம்ஸி தேவீ பகவதீ ஹரி ஸா |
பலாத் ஆக்ருஷ்ய மோஹாய மஹாமாயா ப்ரயச்சதி ||

என்று சொல்லப்பட்டிருக்கிறது.

மாயை என்பதற்கு க்ருபை என்ற அர்த்தத்தில் க்ருபை நிறைந்தவள் என்றும் சொல்லலாம்.

महाशक्ति

மஹாஸத்வா

மஹத்தாக இருக்கிற ஸத்வத்தோடு கூடியவள்.

ஸத்வம் என்பது குணம் பலம், இருக்கும் தன்மை(பண்பு) அர்த்தம். அம்பாள் மஹத்தான குணத்தை உடையவள், அல்லது மஹத்தான பலத்தையுடையவள், அல்லது மஹத்தான ஸ்திதியை உடையவள் என்று அர்த்தம்.

महाशक्तिः

மஹாசக்தி: (217)

மஹத்தான சக்தியை உடையவள்.

1. ஸகல ஜகத்தையும் நிர்வஹிக்கும்படியான நம் எங்கும் பரவினதும் விஸ்தாரமான சக்தியை (ஸாமார்த்யத்தை)யுடையவள் என்று அர்த்தம்.

2. சக்தி என்பதற்கு பலம், ஆயுதம் என்று அர்த்தமாகும்.

3. இந்த நாமத்தை 'மஹாசக்தி:' என்றும், ரிக்வேதம் 109-வது நாமத்தை 'மஹாஸக்தி:' என்றும் வித்யாரண்யர் சொல்லியிருப்பதை கவனிக்கவும். இந்த ஸஹஸ்ர நாமத்தில் புநருக்தி (ஒரே பதத்தைத் திரும்பவும் சொல்லுகிறது) என்ற தோஷம் இடையாதானையால் இம்மாதிரி வித்யாஸமாகச் சொல்லாது.

महारतिः

மஹாரதி: (218)

(பக்தர்களாகிய ஞானிகளுக்கு) மஹத்தான ஆனந்தத்தைக் கொடுப்பவள்.

महाभोगा

மஹாபோகா (219)

மஹாத்தான ஆபோகங்களுடன் கூடியவள்.

மஹாத்தான ஆபோகங்களுடன் (ப்ருதிவ்யு முதலிய ரூப ஷிஸ்தாரங்களுடன் கூடியவள்.)

அல்லது 'போக' என்று பிரித்து மஹாத்தான ஸுகம் அல்லது தனம் உடையவள் என்று சொல்லலாம்.

மஹைச்வர்யா (220)

மஹாத்தாயிருக்கிற ஐச்வர்யத்துடன் (அல்லது விபூதியுடன்) கூட இருப்பவள்.

महावीर्या

மஹாவீர்யா (221)

மஹாத்தான வீர்யத்தோடு கூடியவள்.

வீர்யம் என்பதற்கு சுக்ரம், ப்ரபாவம், தேஜஸ், ஸாமர்த்யம் என்று பொருள். இவைகளை மிகவும் அதிகமாக உடையவள்.

महाबला

மஹாபலா (222)

மஹாத்தான பலத்தை உடையவள்.

1. பலம் என்பதற்கு வாஸனை, ரஸம், ரூபம், ஆத்மா முதலிய அர்த்தங்கள் உண்டு.

2. பலம் என்றால் காக்கைகளுக்குப் பெயர். மஹாகாள புஸுண்டன் முதலான காக்கைகள் அம்பாளுடைய ப்ரஸாதத்தினால் முக்தர்களாக ஆனதை போகவாஸிஷ்டத்தில் (புஸுண்டோபாக்யானத்திலேயே) சொல்லப்பட்டிருப்பதால் அம்பாள் மஹாபலா என்ற பெயருடையவளாகிறாள்.

'ப்ரஹ்மாதய: சண்டகாலாந்தா: யாயஸ்ய ஏகவிம்சதி |
ப்ரஹ்மரூபி: ஸதா ஹ்ருதம்ஸரூபி: ப்ரஹ்மாத்மநீ பகவதீ ததா |
சிரம் ஆராதிதா அஸ்மாபி: ஸர்வாதி விரோதம் ஸதி |
ப்ரஸாதபரயா காலே பகவத்யா ததா: ஸ்வயம் |
ததைவானுக்ரஹீதா ஸ்மோ போத மோக்ஷ வயம் ஸ்திதா: ||

महाबुद्धिः

மஹாபுத்தி: (223)

மஹத்தீயாயும் புத்திரூபிணியாயுமிருப்பவள்.

1. 'யஸ்மின் விக்ஞாதே ஸர்வம் இதம் விக்ஞாதம்ஸ்யாத்' என்ற ச்ருதி வாக்யப்படி யாரைத் தெரிந்துவிட்டால் தெரிய வேண்டியது யாதொன்றும் பாக்கியிருக்காதோ அவருக்கு 'மஹதீ' என்ற பெயர்.

2. மஹத்தான புத்தியானது எந்த தேவியின் ப்ரஸாதத்திலால் கிடைக்கப்படுமோ அந்த தேவிக்கு மஹாபுத்தி: என்ற பெயர்.

महासिद्धिः

மஹாஸித்தி: (224)

மஹதீயாயும் ஸித்திரூபிணியாயும் இருப்பவள்.

1. மஹதீ என்ற பதத்தில் பொருள் பொருந்திய நாமத்தில் சொல்லப்பட்டது.

2. ஸித்திகள் என்பவை அணிமா, மஹிமா, லகிமா, கரிமா, ப்ராப்தி, ப்ராகாம்யம், ஈசித்வம், வசித்வம் என்ற அஷ்ட மஹாஸித்திகள். இவைகளைத் தவிரவும் ஸித்திகள் ஸ்கந்தபுராணத்தில் சொல்லப்பட்டிருக்கின்றன.

3. மேலே சொல்லப்பட்ட மஹாஸித்திகள் அம்பாளுடைய ப்ரஸாதத்திலால் கிடைப்பதால் அம்பாளுக்கு மஹாஸித்தி: என்ற பெயர்.

महायोगेश्वरेश्वरी

மஹாயோகேச்வரேச்வரீ (225)

மஹா யோகேச்வரர்களுக்கும் ஈச்வரீயாக இருப்பவள்.

महातन्त्रा

மஹாதந்த்ரா (226)

மஹத்தான தந்த்ர சாஸ்திரங்கள் தன்னைப்பற்றி உடையவள்.

महामन्त्रा

மஹாமந்த்ரா (227)

மஹத்தான மந்த்ரங்கள் தன்னைப்பற்றியனவையாக உடையவள்.

महायन्त्रा

மஹாயந்த்ரா (228)

மஹத்தான யந்த்ரங்களையுடையவள். (அவைகளின் மூல மாக ஆராதிக்கப்பட்டவள்).

1. அம்பாளைப்பற்றி மஹிமை பொருந்தியவையும் விசேஷ மான பலன்களைக் கொடுக்கக்கூடியவையுமான தந்த்ர சாஸ்த்ரங் கள் குலார்ணவம், ஞானார்ணவம் முதலியவை. மந்த்ரங்கள் பாலா, பகளா முதலியவை. யந்த்ரங்கள் பூஜாசக்ர, பத்மசக்ர, அம்ருதகட, மேரு, லிங்கம் முதலியன.

2. இவைகளைத்தவிர ஓரோர் தந்த்ர, மந்த்ர, யந்த்ர, விசேஷத்தையும் அம்பாளுக்கு முக்யமானவையென்று சொல்லப் படுவதால் அவைகளைத்தான் இங்கு மறா என்ற விசேஷத்தில் சொல்லப்பட்டது என்று சொல்லலாம். இந்த அர்த்தத்தில் பூ வித்யையை மஹா மந்த்ரமென்றும், லலிதவஜ்ர யந்த்ரத்தை மஹாயந்த்ரமென்றும் சொல்லப்படும். "ஸ்வதந்த்ரம்" என்ற பெயரோடுகூடிய தந்த்ர சாஸ்த்ரத்தை இங்கு மஹாதந்த்ரமென் ரு சொல்லப்பட்டது. அம்பாள் பரமசிவனைக்குறித்து "தாங்கள் எனக்கு ஸகல தந்த்ரங்களையும் சொல்லீர்கள். அவைகள் ஒவ் வொன்றையொன்று அவலம்பித்திருப்பதினால் மனக்கு திருப்திக்கலக்கம் ஏற்படுகிறது. ஆகையால் நிரபேக்ஷமான ஒரு தந்த்ர சாஸ்த்ரத்தை எனக்குத் தாங்கள் சொல்லவேண்டும்" என்று கேட்க அதற்கு பதிலாக பரமசிவன் "ஸ்வதந்த்ரம்" என்னும் தந்த்ர சாஸ்த்ரத்தை உபதேசம் செய்தார் என்று சொல்லப்பட்டது. ஸௌந்தர்ய லஹரியிலும் இந்த விஷயத்தைப்பற்றிச் சொல்லியிருக்கிறது.

'சதுஷ் ஷஷ்ட்யா தந்த்ரை: ஸகலமபிஸந்தாய புவனம்
ஸ்திஸ் ருத்ருத் ஸிந்திப்ரஸவ பரதந்த்ர: பசுபதி: |
புனஸ் த்வம்நிர்பந்தாத் அகில புருஷார்த்தைக கடனா
ஸ்வதந்த்ரம் தே தந்த்ரம் க்ஷிதிதலமவாதீதரதம் இதம் ||

महासना

மஹாஸன (229)

மஹத்தான ஆஸனத்தை உடையவள்.

க்ஷிதி (ப்ருதிவி) முதலிய முப்பத்தாறு தத்வங்களும் அம்பா ளுக்கு ஆஸனமாக இருப்பதாக,

'ஏஷா பகவதீ ஸர்வ தத்வாஸ்ரயாத்மிகா நிஷ்டதி'

என்று தேவீ பாகவதத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

महायागक्रमाराध्या

மஹாயாகக்ரமாராத்யா (230)

மஹாயாகத்தினுடைய க்ரமத்தினால் (மஹாயாகம் செய்வதின் மூலமாக) ஆராதிக்கத்தகுந்தவள்.

1. மஹாயாகமென்பது ப்ராம்ஹீ முதலிய மாத்ருகா தேவதைகளின் அம்சங்களான அகோரா முதலான அறுபத்திநாலு யோகினிகளுடைய பூஜையுடன் கூடிய யாகம். இதர ப்ரயோகங்களைவிட அதிசீக்ரமாக பலத்தைக் கொடுக்கக்கூடியதென்று சொல்லப்படும்.

2. பாவநோபநிஷத்தில் சொல்லியிருப்பதும் மிகவும் ரஹஸ்யமானதும் சிவயோகிகளால் மட்டும் செய்யக்கூடியதுமான ப்ரயோகத்திற்கு மஹாயாகமென்று பெயர். தேவீ ஸம்மந்தமான உபநிஷத்துக்களில் பாவநோபநிஷத்தானது முக்யமான உபநிஷத். சிறியதாக இருந்தாலும் பாவனையை எற்படுத்தக்கூடிய மிகவும் அரிய விஷயங்கள் அடங்கியது. அதற்கு ஒரு பாஷ்யமும் அதில் சொல்லிய பாவனைமார்க்கத்திற்கு ஒரு ப்ரயோகமும் பாஸ்கராராயர் ஏர். விபரங்களை அவைகளில் பார்க்கவும்.

महाभैरवपूजिता

மஹாபைரவபூஜிதா (231)

மஹாபைரவரால் பூஜிக்கப்பட்டவள்.

1. லோகத்திற்கு பரணம் (ஸ்ருஷ்டி), ரமணம் (ஸ்திதி), வமனம் (ஸம்ஹாரம்) செய்வதால் பரமசிவனுக்கு பைரவர் என்ற பெயர். மஹாபைரவரால் அம்பாள் பூஜிக்கப்பட்டதை பத்ம புராணத்தில் சொல்லியிருப்பது,

சம்பு: பூஜயாத தேவீம் மந்த்ர சக்ரேமயீம் சுபாம் |
அஷ்டமாலாம் கதே க்ருத்வா ம்யாமிஸானை ரதிவ்ரதம்: ||
கபாலிமக ஸமச்சாய: ஸ்கந்தே சூலகபாலி ருத் |
த்விபுஜச்ச த்ரிநேத்ரச்ச ஸ்மயமான முகோபி ச: ||

என்ற பைரவருடைய தியானம்.

2. இதிலும் இதற்கு முந்திய நாமத்திலும் மஹாசம்புநாதராகிய மஹாபைரவர் மஹாயாகக்ரமத்தினால் சிதக்னி குண்டத்தில் ஆத்மாதிபண்ணி ஸ்ரீ லலிதாம்பிகையை அவிர்ப்பவிக்கும்படி செய்ததைக் குறிக்கப்பட்டது. இதைப்பற்றி லலிதோபாக்யானத்தில் விஸ்தாரமாகச் சொல்லியிருப்பதைப் பார்க்கவும்.

महेश्वरमहाकल्पमहातान्डवसाक्षिणी

மஹேச்வர மஹாகல்ப மஹாதாண்டவ ஸாக்ஷிணீ (232)

மஹாகல்ப காலத்தில் மஹேச்வரரால் செய்யப்படும் மஹா தாண்டவத்திற்கு ஸாக்ஷிணியாக இருப்பவள்.

1. மஹாகல்பம் என்பது மஹாப்ரளயகாலம். அப்போது மஹேச்வர் ஸகல லோகங்களையும் ஸம்ஹாரம் செய்து தான் ஏக சேஷமாக இருப்பதினால் ஏற்பட்ட ஆனந்தத்தினால் தாண்டவம் செய்கிறாரென்றும், அந்த ஸமயம் அம்பாள் மட்டுமே ஸாக்ஷியாக இருப்பதாகவும் சொல்லப்படும். இம்மாதிரி ஈச்வரனுடைய மஹாதாண்டவத்தின்போது அம்பாள் ஏகஸாக்ஷிணியாக இருப்பதை பஞ்சதசீ ஸ்தவத்திலும் வர்ணிக்கப்பட்டிருக்கிறது.

'கல்போப ஸம்ஹரண கல்பித தாண்டவஸ்ய
தேவஸ்ய கண்டடபரேச: பரமேச்வரஸ்ய |
பாசாங்குசக்ஷுவ சராஸன புஷ்ப பாணை.
ஸா ஸாக்ஷிணீ விஜயதே தவ மூர்த்திரேகா ||

2. புருஷர்கள் செய்யும் நர்த்தனத்திற்கு தாண்டவமென்றும், ஸ்த்ரீகள் செய்யும் நர்த்தனத்திற்கு லாஸ்யமென்றும் பெயர். மஹேச்வரன் மஹாதாண்டவம் செய்யும்போது அம்பாளும் லாஸ்யநடனம் செய்கிறாளென்று சொல்லப்பட்டிருக்கிறது. இப்படி இருவரும் நர்த்தனம் செய்யும்போது கருணைநதியான அம்பாளுடைய வேண்டுகோளின் பேரில் பரமசிவனுக்கும் கருணை பிறந்து இருவரும் லோகங்களைத் திரும்பவும் ஸ்ருஷ்டி செய்வதற்காக அனுக்ரஹரூபமான நர்த்தனம் செய்கிறார்களென்றும் சொல்லப்படுகிறது.

"கல்போபஸம்ஹரண கேளிஷு பண்டிதாயா
சண்டோனி கண்டபரசேரபி தாண்டவாயா |
ஆலோகனேன தவ கோமளிதாயா மாத:
லாஸ்யாத்மநே டமிணமந்தி ஜகந்விபுத்யை ||" (அம்பாஸ்தவம்)

"தவாதாரே மூலே ஸஹ ஸமயயா லாஸ்யபரயா
நவாத்மானம் மன்யே நவரஸ மஹாதாண்டவநடம் |
உபாப்யாம் ஏதாப்யாம் உதயவிதிம் உத்திச்ய தயயா
ஸநாதாப்யாம் ஜக்ஞே ஜனக ஜனனீமத் ஜகதிதம் ||"
(ஸௌந்தர்யலஹரீ)

3. இம்மாதிரி ஸம்ஹார காலத்தில் சிவதம்பதிகளுடைய அத்யத்புதமும் அதிபயங்கரமுமான நிருத்யத்தை மஹாவாக்யேயத்தில் மிகவும் விஸ்தாரமாக வர்ணித்திருப்பதைப் பார்க்கவும்.

महाकामेशमहिषी

மஹாகாமேச மஹிஷீ (233)

மஹாகாமேச்வரருடைய மஹிஷீயாக இருப்பவள்.

ஒரு ராஜாவோடு ராஜ்யாபிஷேகம் பெற்ற பத்னிக்கு (பட்ட) மஹிஷீ என்ற பெயர். பரமசிவனோடு அபின்னரான மஹாகாமேச்வரருடைய பட்டமஹிஷியாக அம்பாளைச் சொல்லப்பட்டது.

महात्रिपुरसुन्दरी

மஹாத்ரிபுரஸுந்தரீ (234)

மஹதீயாயும் த்ரிபுரையாயும் ஸுந்தரியாயுமிருப்பவள்.

மாத்ரு, மான, மேயங்களாகிய த்ரிபுடியே ஒரு ரகசியமாக இருப்பது த்ரிபுரம். அதின் ஸ்வரூபமாக (தாதாத்ம்யத்தோடு) இருப்பவள் த்ரிபுரா. (இதர அர்த்தங்களுக்கு மேலே வரும் 626-வது நாமமான "த்ரிபுரா" என்பதில் பார்க்கவும்).

चतुःषष्ट्युपचाराढ्या

சதுஃ ஷஷ்ட்யுபசாராட்யா (235)

அறுபத்திநாலுவகையான உபசாரங்களை தனமாக உடையவள்.

1. இந்தக் கணக்குடைய உபசாரங்களை பரமசிவ கல்ப ஸூத்ரத்தில் காணலாம். பாஸ்கரராயர் வரிவரியாக ஆஹ்வான காரணத்திலும் அவைகளைப்பற்றி விளக்கியிருக்கிறார். ஸ்ரீ சங்கர பகவத்பாதர்களால் வரிவரியாகவும் விளக்கப்படுகிறது இவைகளைப்பற்றி ஸ்ரீவித்யார்ணவம் ஒன்று உண்டு.

2. இந்த அறுபத்திநாலு உபசாரங்களையும் ஒரு பெரிய தட்டில் அதிகமாகச் சேர்த்து வரிவரியாக ஒவ்வொரு உபசாரங்களை விளக்கி சொல்லிவருகிறார்கள். ஆயினும் பிரதானமாகவும் அவசியமாகவும் இருப்பவை மேலே விளக்கிய அறுபத்திநாலு ஆகும்.

3. இந்த உபசாரங்கள் எல்லாவற்றையும் அம்பாளிடம் நேராக (ப்ரத்யக்ஷமாக) வந்திருப்பதாகப் பாவனை செய்து உபசரிப்பவளாக மாற்பாதைகளைச் செய்வது தான்.

4. இந்த அறுபத்திநாலும் பின்வருமாறு சொல்லப்படும். அம்பாளை ஆவாஹனம் (வரவேற்பு) செய்து இவைகளை க்ரமமாக ஒவ்வொன்றையும் தனித்தனியாக உபசாரமாகச் செய்ய

வேண்டும் :— 1. பாத்யம். 2. ஆபரணவஸ்த்ராபணம் (ஆபரணங்களைக் கழற்றிவைப்பது). 3. ஸுகந்த தைலாப்யங்கம். 4. மஜ்ஜன சாலாப்ரவேசம். 5. மஜ்ஜன மண்டபமணிபீடோபவேசனம். 6. திவ்ய ஸ்நானீயோபத்வர்த்தனம். (வாஸனைப் பொடிகளைப் பூசுவது). 7. உஷ்ணோதக ஸ்நானம். 8. கனக கலசாத்யுத ஸகல தீர்த்தாபிஷேகம். (புண்ய தீர்த்தங்கள் எல்லாவற்றையும் தங்கக் குடங்களால் ஸ்நானம் செய்வது). 9. தௌத வஸ்த்ர பரிமார்ஜனம். (தோய்த்து சுத்தமான வஸ்த்ரத்தால் உடம்பைத் துடைத்துக்கொள்வது). 10. அருண துகூல பரிதானம். (சிகப்புப் பட்டு தரிப்பது). 11. அருண துகூல குமோசாத்தரீயம். (சிகப்புப்பட்டில் ரவிக்கை). 12. ஆபரண மண்டப ப்ரவேசனம். 13. ஆபரண மண்டப மணி பீடோபவேசனம். 14. சந்தன, அகரு, குங்குமa, ஸங்கு, ம்ருகமத, கர்ப்பூர, கஸ்தூரீ, கோரோசனாதி, திவ்ய கந்த ஸர்வாங்கீண விலேபனம் (இவை முதலான லோகப்ரஸித்த மான த்ரவ்யங்களை உடம்புமுழுவதும் பூசிக்கொள்ளுதல். ஸங்கு என்பது வாஸனையுள்ள ஒரு மரம். ம்ருகமதம் என்பது கஸ்தூரியில் ஒரு விதம், அல்லது ஜவ்வாது என்றும் சொல்லலாம்). 15. கோப பரஸ்ய காலாகருதூபம். (கோபலோபத்தை க்ருஷ்ண அகருவின் புகையினால் மணக்கச்செய்வது). 16. மல்லிகா, மாலதீ, ஜாதீ, சம்பக, அசோக, சதபத்ர, பூக, குட்மளீ, புன்னாக, கல்ஹார முக்ய ஸர்வர்து குஸுமமாலா: (இவை முதலான ஸகல ருதுக்களிலும் புஷ்பிக்கும் ஸுகந்த புஷ்பங்களின் மாலை களை தரித்தல்). 17. பூஷண மண்டப ப்ரவேசனம். 18. பூஷண மண்டப மணி பீடோபவேசனம். 19. நவமணி மகுடம் 20. சந்த்ர சகலம். 21. ஸீமந்த ஸிந்தூரம். 22. திலக ரத்னம். (ரத்னத்தைத் திலகமாக தரித்தல்). 23. காலாஞ்ஜனம். (கருப்புமை) 24. பாலர்யுகளம். (முக்கில் இருபக்கத்திலும் வாரியை தரித்தல்) 25. மணிகுண்டலயுகளம். (காதில் ரத்னதோடுகள்) 26. நாஸாபரணம். (மூக்குத்தி) 27. அதர பாவகம். (உதடு களுக்கு ராகஷாரஸம் தடவிக்கொள்ளுதல்) 28. ப்ரதம பூஷணம். (மாங்கல்ய ஸூத்ரம்) 29. கனக சிந்தாகம். (தங்க வடம்) 30. பதகம். 31. மஹாபதகம். 32. முக்தாவளி. 33. ஏகாவளி. (இருபத்தேழு முத்துக்கள் சேர்த்தமாலை) 34. சன்னவீரம் (இருபக்கமும் பூஜூலால் மாதிரி தரிக்கும் பூஷணம்)

35. கேயூர யுகள சதுஷ்டயம் (ஒவ்வொரு கையிலும் இரண்டு கேயூரங்களாக நாலு கைகளிலும்) 36. வளயாவளி (வரிசையல் களின் அடுக்குகள்) 37. ஊர்மிகாவளி (மோதிரங்களின் அடுக்கு கள்) 38. காஞ்சிதாம (சலங்கை ஒட்டியாணம்) 39. கடி ஸூத்ரம். (அரைஞாண்) 40. ஸ்ரைவேயாபரணம். 41. பாதகடகம். (கால்காப்பு) 42. ரத்ன நூபுரம் (ரத்னங்களாலான கால் சிலம்பு, தண்டை) 43. பாதாங்குளீயகம் (கால் விரல்களிலணியும் மெட்டி, பீலி முதலியவை) 44. வாம கரே பாசம் (ஒரு கையில் பாசம்) 45. அன்ய கரே அங்குசம் (மற்றொரு கையில் அங்குசம்) 46. இதரகரே புண்டரேக்ஷு சாபம் (ஒரு கையில் கரும்பு வில்) 47. அபர கரே புஷ்பபாண: (மற்றொரு கையில் புஷ்பபா ணங்கள்) 48. ஸ்ரீமன் மாணிக்ய பாதுகே. 49. ஸ்வஸமான வேஷாபி: ஆவரண தேவதாபி: ஸஹ மத்ய பாதுகோபவிஷ்டம் (தன்னைப்போலவே அலங்காரங்களையுடைய ஆவரண தேவதை களுடன் ஸ்ரீசக்ரத்தில் எழுந்தருளி). 50. காமேச்வராங்க பர்யங்க கோபவேசனம். (காமேச்வருடைய மடியில் வீற்றிருப்பதாக) 51. அம்ருதாலய சஷகம். (அம்ருத ரூபமான மதுபாத்ரம் கையில் கடிப்பது). 52. ஆசமனீயம். 53. கர்பூரவீடிகா (வாஸனை பொருந்திய வெற்றிலை கூடிய வெத்திலை விடையம்) 54. ஆனந்த தாண்டவ ஹாஸம். (ஆனந்தம் ஏற்பட்டிருப்பதை வெளிக்காட்டும் சிரிப்பு) 55. மங்களாராத்திகம். (மங்கள ஹாரதி) 56. சாமர (சாமரை) 57. சாமரயுகளம். 58. தர்ப்பணம். (கண்ணாடி முகம் பார்க்கிற அதை ஸத்தை மருதுவாக பாவிக்கிறவர்களுக்கு). 59. தாம்பூல (வெற்றிலை) 60. கந்தம். 61. புஷ்பம், 62. தூபம். 63. தீபம். 64. நைவேத்யம். (ஆசமனம், பானீயம், மத்யாஹ்ன பானம், ஸுஸ்நாப் பிரக்ஷாளனம், கண்டூஷம், ஆசமனம் கர்பூரவீடிகை)

5. அம்பாள் வந்துவுடன் ஆபத்து காலங்களை கருதியும், லலிதாம்பாள் ஸ்நானம் பண்ணும் இடத்திற்கு அழைத்து போக வேண்டும். அங்கே இருக்கும் மனிதிடத்தில் அம்பாளை வீற்றிருக்கச் செய்ய வேண்டும். பிறகு ஆலில மண்டபம் (ஸுகந்த புஷ்பங்களை புஷ்பமாலைகள் இவை முதலியவற்றை தரித்துக்கொள்ளும் இடம்), பூஷண மண்டபம்(ஆபரணங்கள் முதலியவைகளை தரித்துக்கொள்ளும் இடம்) இவைகளுக்கு அழைத்து வந்து அங்கங்கே இருக்கும் வில் வீற்றிருக்கச் செய்து அங்கங்கே செய்யவேண்டிய

உபசாரங்களைச் செய்ய வேண்டும். பிறகு பூஜாசக்ரத்தில் ஆவாஹனம் முதலிய உபசாரங்கள் நடைபெற வேண்டும்.

6. அம்பாளுடைய ஆயுதங்கள் நான்கு கரங்களிலிருப்பவை என்கனவே "ராகஸ்வரூபபாசாட்யா" முதலான நான்கு நாமங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. அங்குச புஷ்பபாணங்கள் இவை வலது கைகளிரண்டிலும், பாசம் இக்ஷுகோதண்டம் இவை இடது கைகளிரண்டிலும் இருப்பவை. அம்பாளுடைய கைகளில் மேலாக இருக்கும் வலது இடது கைகளில் முறையே பாணங்களும் இக்ஷுகோதண்டமும், கீழாக இருக்கும் வலது, இடது கைகளில் முறையே அங்குசமும் பாசமும் இருப்பதாக பாஸ்கர ராயர் சொல்லியிருக்கிறார். இதற்கு மாறாக தக்ஷிணாமூர்த்தி ஸம்ஹிதையில் அங்குசமும் பாசமும் மேலாகவும், பாணங்களும் இக்ஷுகோதண்டமும் கீழாகவும் இருப்பதாகச் சொல்லப்பட்டுள்ளது.

'தக்ஷிணாமூர்த்தே: கரே பாசஞ்ச அங்குசம் சாபபாணயோ: |
வாமேஷ்வேவ பாசமாரப்ய தக்ஷிணாத்வே து ஸ்ருணயோ: ||

ஆகவே அவரவர்கள் குருவினுபதேசப்படி அந்தஸ்தானம் செய்ய வேண்டியது. எப்படியிருந்தாலும் அங்குசமும் பாணங்களும் வலது கைகளிலும், பாசமும் இக்ஷுகோதண்டமும் இடது கைகளிலுமிருப்பதாக பாவனை செய்வதைப்பற்றி ஸந்தேகமில்லை.

7. பாசத்தைப் பலமும் மாதிரி நிகப்பாகவும், அங்குசத்தை வெள்ளிமாதிரி நிறத்திதாடும், பஞ்ச புஷ்பபாணங்களை அந்தந்த புஷ்பத்தின் நிறத்திதாடும், கோதண்டத்தை செங்கரும்பாகவும் திபானிக்க வேண்டும்.

8. இம்மாதிரி பாவனை பண்ணி ஸமஸ்தமான உபசாரங்களைச் செய்வதில் மேலே சொல்லிய த்ரவ்யங்கள் கிடைக்காவிட்டால் குஸுமம் அல்லது அக்ஷதைகளை அனுகல்பமாக மனதால் பாவனைசெய்து பூஜை செய்யலாமென்று சொல்லப்பட்டது.

'தந்தந் த்ரவ்யாபாவே மனஸா குஸுமாக்ஷதாதி:
மனஸ: பாவயேன் குர்யாத் தேன பூஜா பலம் பவேத் ||

சுத்த வெள்ளையான அக்ஷதைகளால் பூஜை செய்யக் கூடாது. குங்குமப்பூ அல்லது மஞ்சள் அல்லது குங்குமம், அல்லது சிகப்பு சந்தனம் கலந்ததும், லக்ஷணமானதும், அரிசியானதும், சுத்தமானதும், முழுவதுமான அக்ஷதைகள் தான் உபயோகப்படவேண்டும்.

'சிந்தாரக்ஷதைர்ந பூஜாஸ்யாத் த்ரிபுரா பரமேச்வரி |
காச்மீரைர் வா ஹரித்ரைர்வா (குங்குமைர்வா) ரக்த
[சந்தநை: பங்கஜை: |
ரஞ்ஜிதாநாம் சாலிபூநாம் சுத்தாநாம் அகண்டைர் அர்ச்சயேத் பரமேச்வரீம்||

இப்படி புஷ்பம், அக்ஷதை இவைகளை பிரதிநிதியாக வைத்து பூஜை செய்வதில் முக்கியமான உபசார பதார்த்தமாகிய கந்த புஷ்ப, தூப, தீப, நைவேத்தியங்களுக்கு பிரதிநிதிய கிடையாது. அப்படி பிரதிநிதிகளால் பூஜை செய்தால் பலன் கிடையாது.

உபசாரான் அலாபே து புஷ்பாக்ஷதாந் விநா ஸ்வயம் |
கந்த புஷ்ப தூப தீப நைவேத்யாந்யபி ந ஹ்யேவ |
கந்தாதி பஞ்சகாபாவே பூஜா ஸ்யாத் க்ஷதை ஸ்மிதா ||

[சதுஷ்ஷஷ்ட்யுபசாரங்களைப்பற்றி மற்று மின்தாடமாகச்-
சொன்னதற்கு வாசகர்களை சுலபமிக்கும்படியாகக் கோருகிறோம்.
இவைகளை வாசித்து மனதில் ஆநந்தானம் பண்ணினால் இந்த
லோகமாதாவுக்கு பூஜை செய்தது மாதிரி எப்பதிமாகைபாலும்,
அதுவே தான் ஸ்ரீ வித்யைக்கு முக்கிய பிரபோதநமாகைபாலும்
இந்த விபரங்களை எழுதத் துணிந்தேன். அம்பாளுடைய ஸ்வரூ
பத்தை ஆநந்தானம்பண்ணி இந்த உத்க்ருஷ்டமான ஸபர்யை
யைச் செய்வது தான் தேவியின் பக்தர்களுடைய முக்யமான
கடமை. அதுதான் அவர்களுடைய உபாஸநையின் முடிவு||.

चतुःषष्टिकलामयी

சதுஷ்ஷஷ்டி கலாமயீ (236)

அறுபத்திநாலு கலைகளின் ஸ்வரூபமாக இருப்பவள்.

1. இவைகளைப்பற்றி விலாவாரியாக பாஸ்கரராயருடைய சதாகோசம், ஸ்ரீதரருடைய லக்ஷ்மீ ரமண பிரதியில் கொடுக்கப்பட்டிருக்கிறது. இவைகளை பாஸ்கரராயர் பரிசீலனை செய்து தொகுத்திருப்பது பிரயோஜநமாயிருக்கும்.

'அஷ்டாதச விதிப்ரோக்தா: தஸ்யலக்ஷ்ம்யாச்சரேயஸே திநம் |
பஹுவிதா பாஷா நாநாம் நாநாவித்யா: ப்ரகாசிதாஸ்தாந்த்ரிகாஸ்தா:
வேதா உபவேதாச்ச: சாஸ்த்ராங்கபுராணாநி தேகதேவை |
தந்த்ரபுராணை ஸ்மிருதிகம் காவ்யாலங்கார டீகாதிகாதிபே |
சாந்திர் வச்யாகர்ஷண வித்வேஷோச்சாட மாரணாதி சகட் |
கதி ஜலத்ருஷ்ட்யாகர்ண்யாயுத வாக்தோத: மாநாம்பஸ்தகம்
[நில்பம் |

கஜ ஹய ரத நர நிகூர: ஸாமுத்ரிக மல்ல ஸூதகாருடகா: |
நந்தந் ஸுவிரானத்தகனேந்த்ர ஜாலங்ருந்தானி
[இந்ரஸபை நன |
ரத்ன பரீக்ஷா சௌர்யம் தாதுபரீக்ஷாப்யத்ருச்யர்வம் |

1. பதினெட்டு விதமான பாஷைகளின் எழுத்துக்களைத் தெரிவது. 2. அவைகளை எழுதுவது. 3. அவைகளை வேகமாக வாசிப்பது. 4. சித்ரமெழுதுவது. 5. அனேக விதமான பாஷைகளைத் தெரிவது. 6. அவைகளில் கவனம் செய்வது. 7. அவைகளில் ப்ரஸங்கம் செய்வது. 8. சூதாட்டம். 9—12. காமசாஸ்த்ரங்கள். 13—16. உபவேதங்களான காமசாஸ்த்ரங்கள் பனிரண்டு. 29. தந்த்ர, புராண, ஸ்மிருதிகள். 30. காவ்ய அலங்கார நாடகங்கள். 31—36. பாந்தி, வச்ய, ஆகர்ஷண, வித்வேஷண, உச்சாடன, மாரண ப்ரயோகங்கள். 37—43. கதி (கடப்பது) ஜல, த்ருஷ்டி, அக்னி, ஆயுத, வாக், ப்ரதிஸ், ஸ்தம்பனங்களை ஸ்தம்பனம் செய்வது. 44. சில்பம். 45—48. கஜ, ஹய, ரத, நர, சிக்ஷைகள் (இவைகளை பழக்குவது). 49. ஸாமுத்ரிக சாஸ்த்ரம். 50. மல்ல சாஸ்த்ரம் (குஸ்தி முதலியன). 51. ஸூத சாஸ்த்ரம் (சாப்பிடும் வஸ்துக்களைத் தயார் செய்வது). 52. காருட ப்ரயோகங்கள் (விஷயங்களை இறக்குவது). 53. நடம் (நர்த்தி வாத்யங்கள் வாசிப்பது). 54. ஸுவிரம் (ஸ்ரோத்ருஜன முதலிய காற்று வாத்தியங்கள் வாசிப்பது). 55. ஆனந்தம் (ம்ருதங்கம் முதலியவைகள் வாசிப்பது). 56. கனம் (வெண்கலத்தினால தாளம் முதலியவைகள் அடிப்பது).

'நந்தம் வீணாதிகம் வாத்யம் ஆனந்தம் முரஜாதிகம் |
வம்சாதிகம் து ஸுவிரம் காம்ஸ்யதாளாதிகம் கனம் 11'

57. இந்த்ரஜாலம். 58. ந்ருத்தம். 59. கீதம் (பாடுவது). 60. ரஸவாதம். 61. ரத்னபரீக்ஷை. 62. சௌர்யம் (திருடுவது). 63. தாதுபரீக்ஷை (காடி பரீக்ஷை). 64. அத்ருச்யத்வம் (மறைந்து போகிறது).

2. இவைகளில் சிலவற்றிற்குப் பதிலாகப் பின்வருபவைகளைச் சொல்வது வழக்கம். நகைகள் செய்வது, புஷ்பமாலைகட்டுவது, வாஸனைப்பொடி தயார் செய்வது, புருஷர்களுக்கும் ஸ்திரீகளுக்கும் யௌவனம் உண்டுபண்ணும் ஸாமக்ரிகள் தயார்செய்வது, பொம்மலாட்டம், புதிர் போடுவது, அந்தாக்ஷரி கூறுவது, ஸமஸ்யைபூர்த்திசெய்வது, தச்சுவேலை, வீடுகட்டுவது,

தலையைவாரிப் பின்னுவது, எண்ணை தேய்ப்பது, கோரி முதலியவைகளின் சண்டை முறையைத்தெரிவது, பூ முதலியவை வைத்து ஆருடம் சொல்லுவது, பிறர் மனதிலிருப்பதை அறிவது, மாறுவேஷம் போடுவது, பட்டம் பறக்க விடுவது, குழந்தை விளையாட்டுகள், யந்த்ரங்கள் முதலியவை செய்வது, படுக்கை தலை பின்னை முதலியவை தயார்செய்வது, படுக்கையைப்போடுவது, மரங்களுக்கு வைத்யம் செய்வது, கிளி முதலியவைகளைப் பேசப் பழக்குவது, உடம்பைப் பிடித்துவிடுவது முதலானவை. இவைகளில் பெரும்பாலும் மிகவும் சில்லரையான விஷயங்களைப்பற்றியிருப்பதினால் பாஸ்கரராயர் எழுதியதையே நாம் ஒப்புக்கொள்ளலாம்.

3. கலைகள் என்பது தந்த்ர சாஸ்த்ரங்களைக் குறிப்பதாகவும் சொல்லலாம். இவைகள் அறுபத்திநாலு என்று சொல்லப்படும். இவைகளின் விபரத்தை வாமகேச்வர தந்த்ரத்திலும் அதின் ஒரு பாகத்திற்கு பாஸ்கரராயர் எழுதியிருக்கும் சௌபாக்யஹ்ருதயத்திலும் சொல்லப்பட்டிருக்கிறது. சௌந்தர்யலஹரியிலும் இந்தக் கணக்கை

‘சதுஷ் ஷஷ்ட்யா தந்த்ரை: ஸகலமதிஸந்தாய புவனம்
ஸ்தித: தந்த்ரே ஸ்மிந் ஸ்ரீபுரஸமய பாரதந்த்ர்ய: படுதியி: ।

என்று சொல்லப்பட்டிருக்கிறது.

அவைகளில் அம்பாவின் ப்ரதானமாகச் சொல்லியிருப்பதால்

“சதுஷ்ஷஷ்டி கலாமயீ” என்ற பெயர்.

महाचतुःषष्टिकोटियोगिनीगणसेविता

மஹா சதுஷ்ஷஷ்டிகோடி யோகினீ கண சேவிகா
(237)

மஹா சதுஷ் ஷஷ்டிகோடி யோகினீ கணங்களால் சேவிக்கப்பட்டவள்.

1. அம்பாவுடைய ஸ்ரீசக்ரத்தில் முதலாவதான பூபுரமாகிய த்ரைலோக்ய மோஹனசக்ரத்தில் ப்ராம்ஹீ முதலான எட்டு மாத்ருகா சக்திகளிருக்கிறார்கள். அவர்கள் ஒவ்வொருவருக்கும் அவரவருடைய அம்சமாக அநேகாப்யா முதலிய எட்டு யோகினீகளுண்டு. ஆக இவர்கள் அறுபத்திநாலு சக்திகளாகிறார்கள். திரும்பவும் இந்த அறுபத்திநாலு சக்திகள் ஒவ்வொருவரு

குள் அவரவருடைய அம்சமாக கோடிம்யோகினீகளிருக்கிறார்கள். ஆக அறுபத்திநாலுகோடி. இப்படிக் கணக்குடையவும் மஹாத்தா யுமிருக்கும் யோகினீகளால் லலிக்கப்பட்டவள் என்ற அர்த்தம்

2. ஆயினும் பின்வருமாறு தந்த்ர ராஜத்தில் சொல்லி யிருப்பதைத்தான் இங்கு சொல்லப்பட்டதாக எடுத்துக்கொள்ள வேணும். அதின்படி மேலே த்ரைலோக்ய மோஹனசக்ரத்தி லிருப்பதாகச் சொன்னது மாதிரி பாக்கி எட்டு சக்ரங்களிலு மிருப்பதாகவும் ஆக யோகினீகளின் கணக்கு ஒன்பது தடவை அறுபத்திநாலு (ஐந்நூற்றி எழுபத்தாறு) கோடியென்றும் சொல் லப்பட்டது. [இதைத்தான் மஹாத் என்ற பதத்தில் இங்கே குறிக்கப்பட்டது].

லலிதா சக்ர ஸகல ப்ரதிஷ்டாகம் சக்தய: ப்ரியா:
சதுஷ்ஷஷ்டி மிதா: ஸேவாட்யை: ||

3. இந்த நாமம் ஸம்பந்தமான தாய் பாஸ்கர ராயரைப் பற்றிய ஒரு கதையுண்டு. இவர் காசியிலிருந்து மிகவும் கஷ்டமுள்ள நாளில் அங்கே இருந்த பண்டிதர்களில் சிலர் இவர் வாமாசாரப் படி அம்பாளை உபாஸித்து வருவதை பலமாக ஆக்ஷேபித்து வந்தார்கள். இது தெரிந்த பாஸ்கரராயர் அவர்களைத் தான் வியப்புடன் மஹா பாகமான்றுக்கு வரும்படி அழைக்க, அவர்கள் அதற்கு வந்து அங்கே அவரைக் கேள்விகள் கேட்டு வாதத்தில் அவரை தோற்கடித்து விடவேண்டுமென்ற எண்ணங்கொண்டார் கள். அந்த ஸமயம் எதைப்பற்றிக் கேட்பது என்ற அவர்கள் ஆலோசனை செய்து கடைசியாக ஒரு புராணத்திலும், இதி ஹாஸத்திலும், வேறு க்ரந்தங்களிலும் சொல்லப்படாதது மும் இந்த நாமத்தில் சொல்லப்பட்ட அறுபத்திநாலு கோடி யோகினீகளைப் பற்றியதுமான அவர்களுடைய உத்பத்தி, லக்ஷணம், சரித்ரம் முதலியவைகளைப்பற்றிச் சொல்லும்படி கேட்டார்கள். உடனே பாஸ்கரராயர் அதைத்தான் சொல்லிக்கொண்டுவருவதாகவும் அவர்கள் அதை எழுதிக்கொண்டுவரலாமென்றும் சொல்லிவிட்டு சிறிதும் தயங்குதலாவது தடங்கலாவது இல்லாமல் முப்பதாரு யோகினீயின் நாமம், உத்பத்தி முதலியவைகளைச் சொல்லிக் கொண்டு வரவும் எழுதியவர்களை எழுதச்சொல்லி தனியே பாஸ்கர ராயர் சிறிதும் சிரமமே யில்லாமல் சொல்லிக்கொண்டுவந்தாராம். (இதைப்பற்றிய அதிக விபரங்களுக்கு "பாஸ்கரராயரும் அவரு டைய மஹிமையும்" என்பதில் பார்க்கவும்).

मनुविद्या

மனுவித்யா (238)

மனுவினால் உபாஸிக்கப்பட்ட வித்யாரூபிணியாக இருப்பவள்.

चन्द्रविद्या

சந்த்ரவித்யா (239)

சந்த்ரனால் உபாஸிக்கப்பட்ட வித்யாரூபிணியாக இருப்பவள்

'மனு: சந்த்ர: குபேரச்ச லோபாமுத்ரா ச மன்மதி: |
அகஸ்திரக்னி: ஸூர்யச்ச இந்த்ர: ஸ்கந்த: சிவஸ்ததா |
க்ரோத பட்டாரகோ தேவ்யா: த்வாதசாரி ர் உபாஸகா:||

என்றபடி மனு முதலிய பன்னிரண்டு உபாஸகர்கள் பன்னிரண்டு விதமாக ஸ்ரீவித்யாரூபிணியான அம்பாளை உபாஸனை செய்ததால் ஸ்ரீவித்யையின் ப்ரஸ்தாரங்கள் அவர்களும் பெயருடையதாக பன்னிரண்டு உண்டு. அவைகளின் விபரத்தை வரலாற்றை நகத் ரத்தில் பார்க்கவும்.

லோபாமுத்ரா என்பவள் இங்கு அகஸ்தி: என்ற சொல்லப் பட்ட அகஸ்த்யருடைய பத்னீ. அவள் தன்னை பக்தியுடன் உபாஸிப்பதாக அம்பாளை ஸ்ரீ லலிதா த்ரிசதியில் சொல்லியிருப் பது :—

'பத்ன்யாஸ்ய லோபாமுத்ராக்ய மாதேயாஸ்ரித அர்சிதா:'

லோபாமுத்ரையின் விக்ரஹத்தை பூஜை செய்பவர்களின் ஒரு பேதமாகிய ஸ்ரீ தேவி விக்ரஹ. க்ரோதபட்டாரகர் கம்பஹர், தர்மாஸ மதுரிஷி, அத்ரிமகரிஷி, அகஸ்ய ஸஹித ஸ்ரீவர்களின் பிள்ளை, தந்தாத்ரேயருடைய ஸஹோதரர். இவர் விரும்பு ஸ்ரீ தாஸ்தவரத்னமென்ற ஸ்தோத்ரம், த்ரிபுரோபநிஷத், த்ரிபுரோபநிஷத் ஸ்தோத்ரம் இவை இரண்டும் அம்பாளுடைய பக்தர்களால் அவச்யம் வாசிக்கப்படவேண்டியவை.

चन्द्रमण्डलमध्यगा

சந்த்ர மண்டல மத்யகா (240)

சந்த்ர மண்டலத்தின் நடுவிலிருப்பவள்.

1. ஸஹஸ்ராரகமலத்தில் சந்த்ரமண்டலமிருப்பதாகவும் அந்த சந்த்ரமண்டலமானது எப்போதும் பூர்ணமான கலைகளுடனிருப்பதாகவும் சொல்லப்படும். அதுவே ஸ்ரீசக்ரமென்பது ஸஹஸ்ரமான விஷயம்.

2. குண்டலினீ சக்தியானவள் எற்கனவே சொல்லப்பட்டபடி ஷட் சக்ர பேதனம் செய்து ஸஹஸ்ரார கமலத்திற்கு வந்து அங்கிருக்கும் சந்த்ரமண்டலத்தின் மத்தியில் பரமசிவனைச் சேருவதால் சந்த்ரமண்டலத்தின் மத்யத்திற்கு வருபவள் என்றும் இந்த நாமத்திற்கு அர்த்தம் பண்ணலாம்.

3. ஸாயங்கால ஸந்த்யாவந்தனத்திலும் ஆயுஷ்ஹோம முதலிய ப்ரயோகங்களிலும் அம்பாளை சந்த்ரமண்டலத்திலிருப்பதாக த்யானம் செய்து உபாஸிக்கவேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. இந்த ஆயுஷ்ஹோம ப்ரயோகத்தைப்பற்றி இந்த ஸஹஸ்ர நாமத்திற்கு பலச்ருதி அத்யாயத்திலும் சொல்லப்பட்டிருக்கிறது

4. பரமசிவன் அக்னியினுடைய சிகையிலிருப்பதாகவும் அம்பாள் சந்த்ரமண்டலத்திலிருப்பதாகவும் (பரமசிவ-அக்னிபே அம்பாளுக்கு) சிவ புராணத்தில் சொல்லப்பட்டிருக்கிறது :—

'அஹம் அக்னி ரிதீராக்ஷ: த்வம் தேவீ ஸோம சிரஸீ ஸ்ரிதா |
அக்னீஷோமாத்மகம் விச்வம் ஆவயோர்யம் ஸமாஸ்ரிதம் ||'

चारुरूपा

சாருரூபா (241)

ஸுந்தரமான ரூபத்தையுடையவள்.

चारुहासा

சாருஹாஸா (242)

அழகான புன்சிரிப்பையுடையவள்.

அம்பாளுடைய திருவுதடியின் லக்ஷணம் ஸுஸ்பஷ்டமாகவும் அம்பாளுடைய புன்சிரிப்பின் தாத்பர்யமானது சந்த்ரமண்டலமிருப்பதாகச் சொல்லப்பட்டது.

'அம்ப ஸ்மேதமுகீ நய: அருணபாஸுரா தி
த்ருஷ்டய: பாஸ்நஸ்மேர ஸிதாருணா ஸிதரு: ||'

चारुचन्द्रकलाधरा

சாரு சந்த்ர கலாதரா (243)

அழகிய சந்த்ர கலையை(சிரஸில்)தரித்திருப்பவள்.

1. பரமசிவன் மாதிரி அம்பாளுடைய சிரஸிலும் சந்த்ர கலை இருப்பதாகச் சொல்லப்படும்.

2. சாரு (வளர்வு, தேய்வு இல்லாத) சந்த்ரகலா, (நித்ய மான ஸாதாக்ய தத்வமாகிய) சந்த்ரகலைக்கு ஆதாரமாக இருப்பவள். அம்பாள் பஞ்சவிம்சதி தத்வராகிய ஸதாசிவனுடன் அபின்னமாகக் கலந்து இருபத்தாராவதாகிய ஸாதாக்யமெனப் படும் தத்வத்திற்கும் அம்பாள் தான் ஆதாரம் என்று இந்த நாமத்தில் சொல்லப்பட்டது.

3. முன்னொரு காலத்தில் காசி ராஜாவுக்கு சுசிஸ்மிதை (சந்த்ர கலை) என்ற பெண் இருந்ததாகவும், அவளுடைய ஸ்வயம்வரத்தில் அம்பாள்தான் அவளைத் தன்னுடைய பக்தனான ஸுதர்சனன் என்ற அரசகுமாரனை கல்யாணம் செய்துகொள்ளும்படி சொன்னதாகவும், அதேமாதிரி அவ்விருவர்களுக்கும் அம்பாளுடைய அனுக்ரஹத்தினால் கல்யாணம் நடந்ததாகவும், தேவீ பாகவதத்தில் ஒருகதையுண்டு. இதையொட்டி சந்த்ரகலையினுடைய பிரதமத் திற்கு ஆதாரபூதையானவள் என்றும் அர்த்தம் சொல்லலாம்.

'ஸ்வப்னே தஸ்யை: ஸமாகத்ய ஜகதம்பா சிதம் ப்ரதி |
உவாச வசனம் சேதம் ஸமாச்வாஸ்ய ஸுகம் ஸ்திரம் ||
வரம்வராய ஸுச்ரோணி மம பக்தாய ஸுவ்ரதே |
ஸர்வ காமப்ரதம் தேஸ்து சைலன் [illegible] ||'

चराचरजगन्नाथा

சராசர ஜகன்னாதா (244)

ஜங்கம, ஸ்தாவராத்மகமான ஜகத்திற்கெல்லாம் நாயகியாக இருப்பவள்.

चक्रराजनिकेतना

சக்ர ராஜ நிகேதனா (245)

(த்ரைலோக்ய மோஹனம் முதலான ஒன்பது சக்ரங்களடங் கிய) ஸ்ரீ சக்ரத்தை வாஸஸ்தானமாக உடையவள்.

पार्वती

பார்வதீ (246)

பர்வத ராஜனான ஹிமவானுடைய புத்ரீ.

पद्मनयना (247)

பத்ம நயன

தாமரை புஷ்பங்கள்போன்ற கண்களையுடையவள்.

पद्मरागसमप्रभा (248)

பத்மராகஸமப்ரபா

பத்மராகமென்ற ரத்னத்திற்கு ஸமானமான காந்தியை உடையவள்.

1. அல்லது, பத்மத்தினுடைய சிகப்புக்கு ஸமமான காந்தியை உடையவள் என்றும் சொல்லலாம்.

2. 'ரக்தபத்ம குங்குமாதி குங்கும பங்கதாம்ரே' என்று சொன்னபடி குங்குமினீ சக்தியானவள் குங்குமப்பூவைப் போன்ற சிவப்புடையவளென்று சொல்லியிருப்பதால் அதைப்போல இந்த நாமத்தில் சொல்லப்படுகிறவளும் சொல்லலாம்.

पञ्चप्रेतासनासीना (249)

பஞ்சப்ரேதாஸனாஸீன

பஞ்சப்ரேதங்களாலாகிய ஆஸனத்தில் வீற்றிருப்பவள்.

1. ப்ரம்ஹா, விஷ்ணு, ருத்ரன், ஈசானன், ஸதாசிவன் இவர்கள் ஐந்துபேரும் தங்களுடைய சக்திகளான வாமா, ஜ்யேஷ்டா, ரௌத்ரீ முதலானவர்களுடன் சேர்ந்திராவிட்டால் அவர்கள் தன்னிடம் சேர்வதற்கு முடியாமல் ப்ரேதங்களாக இருக்கிறார்களென்று சொல்லப்படும். இவர்களில் முதல் நால்வர் கட்டில் கால்களாகவும் ஸதாசிவன் மேல் பலகையாகவும் இருப்பதாகவும் இப்படி இவர்களாகிய கட்டிலின் மீது அம்பாள் வீற்றிருப்பதாகவும் சொல்லப்படும்.

2. இதைப்பற்றி ஸௌபாக்யரத்னாகரத்தில் சொல்லியிருப்பது :—

பஞ்சப்ரேதாஸனாஸீன பஞ்சப்ரஹ்மஸ்வரூபிணீ
சிந்தயேத் அனிசம் சண்டீம் ஸர்வகாமப்ரதாயினீம் ||

என்று அம்பாள் மேலுள்ள தாமஸிவன் சொல்லுவது :—

'ஸாது ப்ருவ்மி தவாக்ரே பஞ்சப்ரேதாஸனம் சுபம் |
ப்ரம்ஹா விஷ்ணுச்ச ருத்ரச்ச ஈச்வரச்ச ஸதாசிவ: ||
பஞ்சப்ரேதா வரா ப்ரேதே ஹ்ருத்பத்மே ஸ்திதா ஸதா |
ப்ரம்ஹணஸ்து பரமேசானி கர்த்ருத்வம் ஸ்ருஷ்டிரூபகம் |
வாமா சக்திஸ்து ஸர்வேஷாம் ப்ரம்ஹா ப்ரேதாதிகா ஸதா ||
சிவஸ்ய காரணம் கர்த்ரி சக்திஸ்து கரணம் மத: |

என்று

'ஸதாசிவோ மஹாப்ரேத: மஞ்சஸ்தோ நிச்சலோ: ப்ரியே |'
சக்த்யா விஞ்சுக்ருதோ தேவி கதம்சிதபி ந க்ஷம: ||'
3 'சிவோபி சவதாம் யாதி குண்டலின்யா விவர்ஜித: |'
'சக்தியா விஶ சிவே ஸாமர்த்யோ ஜாயதாம் ந வித்யதே |'
'சிவ: சக்த்யா யுக்தோ யதிபவதி சக்த: ப்ரபவிதும்
ந சேந்நவம் தேவோ ந கலு குசல: ஸ்பந்திதுமபி |'

என்று சொல்லப்பட்டபடி சக்திபோடு சேர்ந்திராவிட்டால் சிவனால் யாதொன்றும் முடியாது என்பதுதான் இதில் தாத்பர்யம். கட்டில் கால்களுக்கு மேல் பலகையாகச் சொல்லப்பட்ட சதாசிவன் தத்வங்களில் எல்லாவற்றிற்கும் மேற்பட்டதான இருபத்தைந்தாவது தத்வம். அவருடன் சக்தி சேர்ந்தால் இருபத்தியாறுவது தத்வமான ஸாதாக்ய தத்வமாகிறது. இது அவர்களிருவர்களுடைய ஸாமரஸ்யரூபம். இதில் அவர்கள் அபின்னமாக இருக்கிறார்கள்.

पञ्चब्रह्मस्वरूपिणी

பஞ்சப்ரம்ம— (பிரி

பஞ்சப்ரம்மஸ்வரூபங்களின் ஸ்வரூபமாக இருப்பவள்

1. மேலிலிருந்து சொல்லிய ப்ரம்மா, விஷ்ணு, ருத்ரன், ஈச்வரன், ஸதாசிவன் இவர்களை பஞ்ச ப்ரம்மாக்களென்றும் சொல்வ— அதாவது அவர்கள் பரப்ரம்மத்தினிடமிருந்து மாயை யின் விலாஸத்தினால் ஏற்படுவதால் அவர்கள் ப்ரம்மத்தின் கோடியில் அடங்கியவர்களாக ஆகிறார்கள். இப்படிப்பட்ட பஞ்சப்ரம்மாக்களின் ஸ்வரூபமாக அம்பாள் இருப்பதாகச் சொல்லப்பட்டது.

'ஸ்ரீவித்யாஸமயே ப்ரம்மா ஸ்ருஷ்டேர்ன்[illegible] ஸ்ருஜ: |
ப்ரம்மா விஷ்ணுச்ச ருத்ரச்ச ஈச்வரச்ச ஸதாசிவ: |
இத்யாக்யாவசதா: பஞ்ச ப்ரம்மாண ஏவ ஸம்ஸ்திதா:'
(ஸ்ரீ புராணஸ்தோத்ரம்)

2. அல்லது பரமசிவனுடைய பஞ்சமுகங்களாகிய ஸத்யோ ஜாத, அகோர, வாமதேவ, ஸத்யோஜாதர்களை பஞ்ச ப்ரம்மாக்களென்று சொல்லலாம். அதேமாதிரி சேதனத்தை, ப்ரக்ருதி, புத்தி, அஹங்காரம், மனஸ் இவைகளைபற்றியும், சப்த, ஸ்பர்ச, ரூப, ரஸ, கந்தம் இவைகளைபற்றியும் ப்ரம்மாவின் ஸ்வரூபங்களென்றும் அவைகளிலிருந்து ப்ருதிவி, அப்பு, தேஜஸ், வாயு, ஆகாசங்களாகிய பஞ்சமஹாபூதங்கள் உண்டாவதாகவும் சொல்லப்பட்டிருக்கிறது. இம்மாதிரி ஸ்வரூபங்களையுடையவளென்றும் சொல்லலாம்.

3. ஸத்யக்ஞானாதி லக்ஷணங்களை யுடையவரும் விகார மில்லாமல் சுத்தரையுமிருக்கும் சிவன் தன்னுடைய (ஸ்ருஷ்டி (முதலான) சக்தியுடன் கூடி ஐந்துவிதமாக இருப்பதாகச் சொல்லப்பட்டது. அதாவது ஸ்ருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரம், திரோதானம், அனுக்ரஹம் இந்த பஞ்சக்ருத்யங்களைச் செய்யும் சக்தியோடுகூடி, ஸதாசிவாதர் முதலிய ரூபங்களோடு கூடியிருப்பதாகத் சொல்லப்பட்டது.

'ஸ ஏவசிவ: ஸாக்ஷாத் ஸத்யக்ஞானாதி லக்ஷண: |
சிதாத ரஹித: சுத்த: ஸ்வசக்த்யா பஞ்சதா ஸ்தித: ||'

4. இம்மாதிரியே விஷ்ணுவும் பஞ்சரூபங்களோடு கூடியிருப்பதாக கருடபுராணத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

'ஸர்வகாரணகாரணம் விஷ்ணு: ஸர்வதுஷ்ட விநாசன: |
வாஸுதேவஸ்ய ரூபாணி தத்ர ஸங்கர்ஷணாதய: ||
ப்ரத்யும்னஸ்ய ஸ்வரூபேண அனிருத்தாத்மனா ஸ ஸ்தித: |
சதுர்பாஹு ஸ்வரூபேண பஞ்சதா ஹ்யவஸ்திதஸ்த்ரிக: ||'

5. மேலே சொல்லிய பஞ்சவித ஸ்வரூபங்களல்லாம் அம்பாளுடைய ரூபங்களென்றும், அம்பாள் பேசும் வார்த்தைகளே வேதங்களென்றும், கண்களின் காந்தியின் லேசமே ஸூர்யனென்றும், புன்சிரிப்பிலுடைய அழகின் தாளியே சந்த்ரனென்றும் ஆசார்யாள் வர்ணித்திருக்கிறார்கள்.

'பும்பாவ ஸ்ரீ புருஷாஸ்து பஞ்ச
யாத்ருக்சிகம் ஸம்விதும் த்ராயிதே |
அம்ப த்வதீக்ஷணே: அருணாம்சமாலி
தனைவ மந்தஸ்மிரு சிந்துரிக்து: ||'

चिन्मयी
சின்மயீ (251)

சைதன்யமே ரூபமாக இருப்பவள்.

சித் என்றால் ஞானம். கேவலம் ஞான ரூபிணியாக அம்பாள் இருப்பதாகச் சொல்லப்பட்டது.

परमानन्दा
பரமானந்தா (252)

உத்க்ருஷ்டமான ஆனந்தமே ஸ்வரூபமாக உடையவள்.

அகண்டாகாரமுடைய பரப்ரம்மமானது ஸச்சிதானந்த ரூபமென்பது ச்ருதியிலும் 'யோ வை பூமா தத் ஸுகம்' என்றும் சொல்லப்பட்டது.

विज्ञानघनरूपिणी

விக்ஞான கனரூபிணீ (253)

(கனீபூதமான) கனமாக இருக்கும் சைதன்யத்தின் ஸ்வரூபமாக இருப்பவள்.

1. அல்லது சைதன்யத்தின் ஸாரமாக (தத்தகாஸமாக) இருப்பவள் என்றும் சொல்லலாம்.

'விக்ஞானகன ஏவைதேப்யோ பூதேப்ய ஸமுத்தாய' (ச்ருதி)

2. 'ஏஷ விக்ஞானே திஷ்டன் விக்ஞானமந்தரோ யமயதி' என்ற ச்ருதி வாக்யத்தில் விக்ஞானமென்ற பதத்திற்கு ஜீவன் என்ற அர்த்தம் சொல்லப்பட்டிருக்கிறது. விக்ஞானமென்றால் ஜீவர்கள்ளுடைய (ஸமஷ்டி) கூட்டம். அந்த ஸமஷ்டிபாதமகமான ரூபத்தையுடையவள் என்று அர்த்தம். அதாவது ஸமஷ்டியாத்மகமான ஹிரண்யகர்ப்பருடைய ரூபத்தையுடையவள். 'ஏதஸ்மாத் ஜீவகனாத்' என்ற ச்ருதி வாக்யத்துக்கு இம்மாதிரிதான் அர்த்தம் பண்ணப்பட்டிருக்கிறது.

ध्यानध्यातृध्येयरूपा

த்யான த்யாத்ரு த்யேயரூபா (254)

த்யானம் செய்வது த்யானம் செய்பவர், த்யானம் செய்யப்படுகிறவர் இம்மூன்று ரூபமாகவும் இருப்பவள்.

'த்ரய சிந்தாயாம்' என்று சொன்னபடி த்யானம் என்ற மனதில் எற்படும் ஞானத்தைக் குறிக்குமாகையால் அம்பாள் ஞான, ஞாத்ரு, ஞேய ஸ்வரூபிணியாக இருப்பதாகச் சொல்லப்பட்டது.

धर्माधर्मविवर्जिता

தர்மாதர்ம விவர்ஜிதா (255)

தர்மம், அதர்மம் இவைகளோடு கூடியிருக்காதவள்.

1. இஷ்டமான பலன்களைக் கொடுக்கும் கார்யங்கள் தர்மமென்றும் (அதற்கு எதிராக) அனிஷ்டமான (விரும்பப்படாத) பலன்களைக் கொடுக்கும் கார்யங்கள் அதர்மமென்றும் சொல்லப்படும். இவைகளைப்பற்றி வேதத்தில் விதிகளென்றும், நிஷேதங்களென்றும் இருவகையான வாக்யங்களிருக்கின்றன. விதிகளென்பது இன்னின்ன கார்யங்கள் செய்யவேண்டுமென்று

சொல்லுகிறவைகள். 'ஜ்யோதிஷ்டோமேன ஸ்வர்க்ககாமோ யஜேத' 'ஸத்யம் வத தர்மம் சர' முதலியவைகள். அவைகளைச் செய்தால் இஷ்ட ப்ராப்தி, ச்ரேயஸ் முதலியவை உண்டாகும் என்று சொல்லப்படும். நிஷேதங்களென்பது இன்னின்ன வைகளை செய்யக்கூடாது என்று சொல்லுகிறவைகள். 'ப்ராட்மணோ ந ஹந்தவ்யோ ந ஸுராம் பிபேத்' முதலியவைகள். இவைகளைச் செய்யக்கூடாதென்றும், செய்தால் அனிஷ்டம் (கெடுதல்) ஏற்படுமென்றும் சொல்லப்படும். இப்படி வேதத்திலிருக்கும் விதி, நிஷேத ரூபங்களான வாக்யங்களை அனுஸரித்து நடப்பது தர்மமென்றும், அவைகளுக்கு மாறாக நடப்பது அதர்மமென்றும் சொல்லப்படும்.

2. அந்தந்த ரிதுக்களில் பரம்பரையாக அனுஷ்டிக்கப் படுவதும் மந்த்ரத்திற்கு விருத்தமாக இல்லாததுமான ஆசாரத்திற்கும் தர்மமென்ற பெயர்.

'ரிதுச்ச ரிதுச்ச ஆசார: பாரம்பர்யக்ரமாகத: |
ஆம்நாயைரவிருத்தச்ச ஸ தர்ம: பரிகீர்த்தித: ||

3. இம்மாதிரி கர்மாக்களெல்லாம் மனிதர்களுக்கு மட்டும் உற்பட்டதாகையாலும் தேவர்களுக்கு அவ்விதகர்மாக்கள் கிடை யாதாகையாலும் அம்பாளை அவைகளிலிருந்து 'விவர்ஜிதா' என்று சொல்லப்பட்டது.

4. தர்ம தர்மஸ்ய வைச்யஸ்ய விஷயம்ருது மயஸ்ய ச' என்று தந்த்ரராஜ வர்ணத்திற்கு வ்யாக்யானம் செய்திருப்பதை அனுஸரித்து தர்மாதர்ம பதங்களுக்கு பந்தம், மோக்ஷம் என்றும் அர்த்தம் சொல்லலாம். அவையிரண்டும் அம்பாளுக்குக் கிடையாது என்று சொல்லப்பட்டது.

'ந நிரோதாதுர மோக்ஷாத்பத்தி: ந பந்தோ ந ச ஸாதக: |
ந புமாகூ ர்த்வரணைவமுக்திர்நியதா பரமார்த்த: ||'

5. தர்ம என்பதிலுள்ள தர்மமென்ற குணத்தையுடைய வஸ்து (தர்மி) என்றும், அதர்ம என்ற பதத்திற்கு தர்மமென்ற குண மென்றும் அர்த்தம் சொல்லலாம். அம்பாள் இவையிரண்டு மில்லை யென்ற இந்த நாமத்தில் சொல்லப்பட்டது. அதாவது அம்பாள் ஜகத்தோடு அத்யந்தம் அபின்னமாக இருப்பதாக அர்த்தம்.

6. தர்மாதர்ம பதங்கள் சக்தி சிவாகாரங்களைக் குறிக்கு மென்றும், அவைகளால் விசேஷமாக அபிவ்ருத்தி அடைந்தவள், அதாவது பஞ்சதசீ ஸ்வரூபமாக இருப்பவள் என்றும் அர்த்தம்

சொல்லலாம். இந்த விஷயத்தைபபற்றி ஸ்ரீலலிதா த்ரிசதி பரிருதி பாகத்திலும், பாஸ்கரராயரியற்றிய வரிவஸ்யா ரஹஸ்யம், ஸௌபாக்யஹ்ருதயம் இவைகளிலும் சொல்லியிருப்பதைப் பார்க்கலாம்.

இனிமேல்வரும் பத்தொன்பது நாமங்களில், ஜீவன், ஈசுவரன் இவர்களின் பேதங்களைப்பற்றிச் சொல்லுகையில் அம்பாள் அவை இரண்டோடு தாதாத்ம்யமாக இருப்பதும் சொல்லப்படுகிறது.

विश्वरूपा

விச்வரூபா (259)

விச்வன் எனப்படும் ஸ்வரூபமாக இருப்பவள்.

1. அல்லது (விச்வமென்ற) ஸமஸ்த ஜகத்திலும் பரவியிருப்பவளென்றும் சொல்லலாம். அதையே ரூபமாக உடையவள். எங்கும் நிறைந்த வஸ்து. எப்படி வாழையானது தண்டு இலை, பட்டை இவைகளிலிருந்து வித்யாஸமாக இல்லாமல் அவைகளின் ரூபமாகவே இருப்பதுபோல பரப்ரம்ஹமானது ஸகல ப்ரபஞ்சத்திலுமிருப்பதால் அவைகளின் ரூபமாகவே இருப்பதாகச் சொல்லப்பட்டது.

'பரப்ரஹ்ம சக்தயே தஸ்மை பத்ரகாள்யை நமோ நம: |
ஏவம் விச்வஸ்ய ரூபேண ஸ்திதாயை தஸ்யை சக்தயே நமோ நம: ||'

(விஷ்ணு புராணம்)

'வடபத்ர சயனாய விஷ்ணவே பாலரூபிணே |
சேலோக்யரூபிணே தஸ்மை ப்ரஹ்மணே பரமாத்மனே |
ஸர்வபூத சரீரஸ்தமேவாஹம் நாராயணஸ்தி ஸர்வதா ||'

(தேவி பாகவதம்)

2. பரப்ரம்ஹத்திலிருந்து வேறுபட்டதாக இருக்கும் ஜீவபாவத்தை பசுபாவமென்று சொல்லப்படும். எப்படி (ஸ்வர) நாயானது மிகவும் கீழ்ப்பட்ட ஜந்துவாகச் சொல்லப்படுகிறோமோ அம்மாதிரி இந்த பசுபாவத்தை ச்வபாவமென்றும் ச்வரூபமென்றும் சொல்லப்படும். (நீசர்களை ரக்ஷிக்கிற தொழிலையும் ச்வஸ்ருத்தி என்று சொல்வது வழக்கம்.) அம்பாளுடைய அநுக்ரஹத்தினால் இந்த ச்வரூபமானது (விகதமாக) விடுபட்டுப்போய் (பதிபாவம்) சச்சிதானந்த தாதாத்ம்யம் ஏற்படுவதால் அம்பாளை விச்வரூபா என்று சொல்லப்பட்டதாகவும் சொல்லலாம்.

பரப்ரம்ஹமமானது ஸகல ஜீவன்களிலும் சித்ரூபமாக இருப்பது யாவரும் ஒப்புக்கொள்ளும் விஷயம். அப்படியிருப்பதில்

அந்த சைதன்யமானது ஒருவிதமான பேதமில்லாமலிருந்தாலும் ஜீவன் மூலமாகத் தெரியும்போது வெவ்வேறு விதமாக இருப்பதாகத் தெரிகிறது. ஜீவனானவன் வெளிப்ரபஞ்சத்தில் வ்யவஹாரம் பண்ணும்போது விழித்துக் கொண்டிருப்பதான ஜாக்ரதாவஸ்தையிலிருக்கிறான். அப்போது அவனுக்கு பாஹ்ய வஸ்துக்களில் ப்ரக்ஞையிருக்கிறது. அவைகளை இந்திரியங்கள், மனது இவை மூலமாக அனுபவிக்கிறான். அதற்கடுத்தாற்போல் தூங்கும்போது ஸ்வப்னம் ஏற்படுகிறது. அப்போது இந்திரியங்கள் அடங்கியிருந்தாலும் மனதில் ப்ரபஞ்சத்தில் இருப்பதுபோலவும் அதின் வ்யவஹாரங்களில் தான் கலப்பது போலவும் அவனுக்கு அனுபவம் ஏற்படுகிறது. அந்த ப்ரக்ஞையிருக்கிறது. அப்போது ஏற்படும் அனுபவங்கள் அவனுக்கு எவ்வளவு உண்மையாகத் தோன்றினாலும் அவைகள் வாஸ்தவத்தில் நடைபெற்றவை யல்ல. இந்த நிலைமையை ஸ்வப்னாவஸ்தை யென்றும் அந்த அவஸ்தையிலிருக்கும் ஜீவனுக்கு தைஜஸனென்றும் பெயர்.

இதற்கடுத்தாற்போல் ஸ்வப்னமேயில்லாத தூக்கத்தை யடையும்போது மனதும் அடங்கிவிடுகிறது. அப்போது மனதில் உண்டாகும் அனுபவங்களனைத்தும் கிடையாது. அதிலிருந்து விழித்த பிறகு 'அப்பாடா! நன்றாய் தூங்கினேன், எனக்கு ஒன்றுமே தெரியவில்லை' என்று பிரசாலிக்கிறான். இம்மாதிரி ஸ்வப்னமேயில்லாத அவஸ்தைக்கு ஸுஷுப்தி யென்று பெயர். இந்த அவஸ்தையிலிருக்கும் ஜீவனுக்கு ப்ராக்ஞனென்று பெயர். அப்போது ஜீவனுக்கு ஒன்றுமே தெரியாத நிலைமையேற்படுகிறது. இது ப்ரம்மானந்த அனுபவத்திற்கு முதல்படியாக ஆகிறது. ஆயினும் அவித்யையின் ஸம்பந்தம் இருப்பதால் அது சூன்யமான அனுபவத்தோடு இருக்கிறது. இதற்கடுத்தாற்போல் ஸமாதி யோகத்தால் ஏற்படக்கூடிய நிலைமைக்கு (காலாவது) துரீய அவஸ்தையென்று பெயர் (அதற்குத் தனிப்பெயர் கிடையாது). அப்போது ஜீவனுக்கு பரப்ரம்மத்துடன் அத்வைதம்பம் (பாதி சேர்ந்திருப்பது) ஏற்படுகிறது. இந்த நிலைமையில் இருப்பதைத்தான் சிவதுல்ய: என்பதாக 'தத்பரச் சிவதுல்யோ ஜாயதே' என்ற சிவஸூத்ரத்தில் சொன்னது. இதற்கு மேற்பட்ட அவஸ்தையில் பூர்ண ஜீவன் பூர்ண சிவனுடன் அபின்னமாகக் கலந்து விடுவதால் பரமஸாம்ய மேற்படுகிறது. இதைத்தான்

'நிரஞ்ஜன: பரமம் ஸாம்யமுபைதி' என்று ச்ருதியில் சொன்னது. இந்த நிர்லேபமையை துரியாதீதம் (நான்காவதையும் கடந்தது) என்று சொல்லப்படும்.

4. மேலே சொல்லியபடி ஜாக்ரதாவஸ்தையிலிருக்கும் ஸகல ஜீவன்களுக்கும் சேர்க்கையான ஜீவாத்மா ரூபத்திற்கு வைச்வானரன் என்று பெயர். (பிண்டாண்டமான சரீரத்திலிருக்கும் ஜீவன் ஜாக்ரதாவஸ்த்தையிலிருக்கையில் விச்வன் என்று சொல்லப்படுவதுபோல் ப்ரம்ஹாண்டத்திலிருக்கும் ஆத்மஸ்வரூபத்தை வைச்வானரன் என்று சொல்வது) அதேமாதிரி தைஜஸரூபமான ஜீவாத்மாக்களின் ஸமஷ்டி ரூபத்திற்கு ஹிரண்யகர்பனென்றும் ப்ராக்ஞரூபமான ஜீவாத்மாக்களின் ஸமஷ்டி ரூபத்திற்கு ஈச்வரன் என்றும் பெயர்.

5. மேலே சொல்லியபடி ஜீவனுக்கு இருக்கும் ஜாக்ர அவஸ்தைகளிலும் அவன் ஐந்துவிதமான கோசங்களின் மூலமாக வ்யவஹரிப்பதாகச் சொல்லப்படும். அன்னமய, ப்ராணமய, மநோமய, விக்ஞானமய, ஆனந்தமய கோசங்கள்.

6. ஜகத்பிதாவான ஈச்வரனே புருஷனென்றும், சக்தியை ப்ரக்ருதியென்றும் சொல்வது வழக்கம். இந்த ப்ரக்ருதியானது வ்யக்தமாக இருப்பது விக்ருதி. இந்த விக்ருதிகளைத்தான் தத்வங்களென்று சொல்வது. இம்மாதிரி ப்ரக்ருதியிலிருந்து ஏற்படும் விக்ருதிகள் இருபத்தொன்றுவிதம். அவை மனஸ், பஞ்ச ஞானேந்த்ரியங்கள், பஞ்ச கர்மேந்த்ரியங்கள், பஞ்ச தன்மாத்ரைகள், பஞ்சபூதங்கள். இவைகளால் தான் ப்ரபஞ்சமே ஏற்படுகிறது. இவைகளின் மூலமாகத்தான் ஜீவன் வ்யவஹாரம் செய்கிறான்.

7. இப்படி வ்யவஹாரம் பண்ணும் ஜீவனுக்கு காரண, ஸூக்ஷ்ம, ஸ்தூலங்களென்று மூன்று சரீரங்களிருப்பதாக ஸாதாரணமாகச் சொல்வது வழக்கம். இந்த சரீரங்களில் அபிமானியும் அக்ஞானமாகிற உபாதியோடும் கூடியிருப்பதினால் தான் ஜீவன் தான் பரப்ரஹ்மமமாக இருந்தும் அதிலிருந்து வேறுபட்டவனாக நினைக்கிறான். இம்மாதிரியான அபிமானம், அக்ஞானம், அவித்யையைத்தான் பாசமென்றும் அதனால் கட்டுப்பட்ட ஜீவனைப் பசுவென்றும் அவைகளுக்குக் கட்டுப்படாமல் அவைகளுக்கு யஜமானராக இருக்கும் ஈச்வரனைப் பதியென்றும் சொல்வ-

படுப். பசுவாகிய ஜீவனவன் இந்தப் பாசத்திலிருந்து விடுபட்டு விட்டால் பதியாக ஆகிவிடுகிறான், என்று சொல்லப்பட்டது.

"பாசபத்தோ பவேத் ஜீவ: பாசமுக்த. ஸதாசிவ:

(குலார்ணவம்)

8. மேலே சொல்லிய காரண சரீரமானது மற்றைய ஸூக்ஷ்ம ஸ்தூல சரீரங்களுக்கு காரணமாக இருப்பதால், அதற்கு அம்மாதிரிப்பெயர். இது ப்ரக்ருதி மயமான சரீரம். இது ஜீவனானவன் முக்தியடையும்வரையில் அவனுக்கிருந்து முக்தியடையும்போது அதிலிருந்து விடுபட்ட ஜீவனானவன் பரப்ரம்மத்துடன் ஐக்யமாகிறான்.

ஜீவனானவன் ஸுஷுப்தியவஸ்தையிலிருக்கும்போது இந்தக் காரண சரீரத்தின் மூலமாக வ்யவஹரிக்கிறான். காரண சரீரத்திலிருந்து ஸூக்ஷ்ம சரீரம் ஏற்படுகிறது. இதைப்லிங்க சரீரமென்றும் புர்யஷ்டகமென்றும் சொல்லப்படும். இதின் அங்கங்களின் விவரம்பாவன — அந்த: கரணமாகிய மனஸும், பாஹ்ய கரணங்களான இந்த்ரியங்களைந்தும் அவைகளால் அறியப்படும் தன்மாத்ரைகளைந்தும். இந்த்ரியங்கள் இருவகை — க்ஷ்ரோத்ர, த்வக், சக்ஷுஸ், ஜிஹ்வா, க்ராணமென்கிற ஜ்ஞானேந்த்ரியங்கள் ஐந்தும், வாக், பாணி, பாத, பாயு, உபஸ்தங்களான கர்மேந்த்ரியங்கள் ஐந்தும், ஆகப் பத்து இந்த்ரியங்கள். இந்த இந்த்ரியங்கள் எல்லாம் மனதிற்குக் கட்டுப்பட்டவை. அவைகளின் மூலமாக மனதானது பாஹ்யமான ஜகத்தில் சம்பந்தப்படுகிறது. ஆயிரும் இந்த்ரியங்களெல்லாவற்றிற்கும் மனதானது யஜமானனைப்போல் அவைகளின் ஒத்தாசையில்லாமலேயே தனக்கு இஷ்டமான கார்யங்களை சாதித்துக்கொள்ளும்படியான சக்தி அதற்கு உண்டு. ஜீவனானவன் ஸ்வப்னாவஸ்தையிலிருக்கும்போது இந்த ஸூக்ஷ்ம சரீரத்தின் மூலமாக வ்யவஹரிக்கிறான்.

9. ஸ்தூலரூபமான ஜகத்தை ஜீவனானவன் ஸ்தூல விந்த்ரியங்களால் அறிகிறான். இந்த விந்த்ரியங்கள் பிரகாசிப்பது, தொடுவது, பார்ப்பது, ருசிபார்ப்பது, முகருவது. இவ்வைந்து விதமாக பஞ்சபூதாத்மகமான ஜகத்தை ஜீவனானவன் அறிகிறான். இந்த அறிவுகளுக்கு தன்மாத்ரைகளென்று பெயர். இந்த அறிவுகள் ஐந்து விதம் — பஞ்சதன்மாத்ரைகள். அவையாவன சப்த, ஸ்பர்ச, ரூப, ரஸ, கந்தம். பஞ்சபூதங்களான ப்ருதிவீ, அப்பு, தேஜஸ், வாயு,

ஆகாசம். ப்ரிதிவியை மேலேசொல்லிய ஐந்து அறிவுகளாலேயும் தெரிந்துகொள்ளலாம். அப்புவுக்கு (சுத்த ஜலத்திற்கு) வாசனை கிடையாதாகையால் அதற்கு கந்த தன்மாத்ரையைத் தவிர பாக்கி யெல்லாம் உண்டு. ஆகவே ப்ருதிவியை அறியக்கூடிய தன்மாத்ரை சுத்தமாகையால், ப்ரிதிவிக்கு கந்தம் தன்மாத்ரையென்று சொல்லப்படும். பாக்கி தன்மாத்ரைகளிலிருந்தோ இவற்றுக்கு தத்தின் மூலமாக விசேஷமாக அறியப்படுவதால் அம்மாதிரி சொல்லப்பட்டது. இம்மாதிரியே அப்புவுக்கு ரஸம் தன்மாத்ரை; தேஜஸுக்கு ரூபம் தன்மாத்ரை, வாயுவுக்கு ஸ்பர்சம் தன்மாத்ரை, ஆகாசத்திற்கு சப்தம் தன்மாத்ரை.

10. இம்மாதிரியான தன்மாத்ரைகளுக்கு இந்திரியங்கள் தான் காரணம், ஆதாரம். இந்திரியங்களுக்கு மனஸ்தான் ஆதாரமென்றும் காரணமென்றும் ஏற்கனவே சொல்லப்பட்டது. மனஸ், இந்திரியங்கள், தன்மாத்ரைகள் இவையடங்கிய சரீரத்தை ஸூக்ஷ்ம சரீரமென்று சொல்லப்படும்.

11. மேலே சொல்லிய பஞ்சதன்மாத்ரைகள் பஞ்ச பூதங்களுக்கு ஆதாரமாகவும், காரணமாகவுமிருக்கின்றன. இந்த பஞ்ச பூதாத்மகமான தேஹத்தை ஸ்தூல தேஹமென்று சொல்லப்படும். இதின் மூலமாகத்தான் ஜீவனானவன் தான் ஜாக்ரவஸ்தையிலிருக்கும்போது லோகத்தில் வ்யவஹாரம் பண்ணுகிறான். (பாஹ்ய கரணங்களால் அறியப்படும் ஜ்ஞானவை பூதமென்று சொல்லப்படும்.)

12. ஸ்தூல தேஹத்தின் மூலமாக வ்யவஹாரம் பண்ணும் ஜீவனுக்கு விச்வன் என்னும், ஸூக்ஷ்ம தேஹத்தின் மூலமாக வ்யவஹாரம் பண்ணும் ஜீவனுக்கு தைஜஸன் என்றும், காரண சரீரத்தின் மூலமாக வ்யவஹாரம் பண்ணும் ஜீவனுக்கு ப்ராஜ்ஞன் என்றும் பெயர்.

13. ப்ரக்ருதியிலிருந்து ப்ருதிவி வரையில் தத்வங்கள் ஏறுவதைச் சொல்வது ஸ்ருஷ்டி க்ரமமென்றும், ப்ருதிவியிலிருந்து ஆரம்பித்த தத்வங்கள் மேலுக்குமேல் ஸூக்ஷ்மமாகி கடைசியில் ப்ரக்ருதியில் லயமாவதைச் சொல்வது ஸம்ஹார க்ரமமென்றும் சொல்லப்படும். ஸ்ருஷ்டி க்ரமமாகச் சொல்லிக்கொண்டுவருகையில் ஆதியில் தமஸ் ஏற்படுகிறது. பிறகு மஹத் என்று சொல்லப்படும் புத்தியானது ஏற்படுகிறது. அப்போது அஹம் என்று

நமான பற்றுமில்லாததாக இருக்கிறது. அதற்கு பிறகு அஹம் என்ற நினைவுடன் ஜீவன் இருக்கிறான். அதற்குமேல் பஞ்ச தன்மாத்ரைகளும், பஞ்ச ஞான சக்திகளும், பஞ்ச கர்ம சக்திகளும் ஏற்படுகின்றன. பஞ்ச ஞான சக்திகள் தனித்தனி யாகப் பஞ்ச ஞானேந்த்ரியங்களையும் சேர்த்தாற்போல் அந்த:கரணத்தையும் உண்டாக்குகின்றன. அதேமாதிரி பஞ்ச கர்ம சக்திகள் தனித்தனியாகப் பஞ்ச கர்மேந்த்ரியங்களையும் சேர்த்தாற்போல் ப்ராணனையும் உண்டாக்குகின்றன. பஞ்ச தன்மாத்ரைகள் பஞ்ச பூதங்களாக விரிந்து தோன்றுகின்றன. இதில் சப்தன்மாத்ரை தனித்தனியான ஆகாச பூதத்துடைய உபாதிகளோடு கூடியிருக்கும்போதும், ஸ்பர்சத்தம் பூதத்துடைய உபாதிகளோடு கூடியிருக்கும்போதும், ரூபத்துடைய உபாதிகளோடு கூடியிருக்கும்போதும், ரஸத்துடைய விச்வன், தைஜஸன், ப்ராக்ஞன் என்ற பெயர்களால் சொல்லப்படுகிறது. இந்த விச்வ, தைஜஸ, ப்ராக்ஞர்களின் ஸமஷ்டி ரூபங்கள் முறையே வைச்வானரன்றும், ஹிரண்யகர்ப்பனன்றும், சர்வரென்றும் பெயருடையவையென்ற கருத்துகளே சொல்லப்பட்டது. பரமாத்மாவானது அந்த:கரணமாகிற காரணரூபத்தில் தோன்றும்போது ஹிரண்யகர்ப்பன் என்ற பெயர். ப்ராணன் என்கிற காரண ரூபத்தில் தோன்றும்போது ஸூத்ராத்மா என்ற பெயர். இந்த அந்த:கரணம், ப்ராணன் இவையிரண்டும் வேறுபடாமல் சேர்ந்திருக்கும்போது அப்போது தோன்றும் பரமாத்மாவை அந்தர்யாமீ என்று சொல்லப்படும். இந்த ஹிரண்யகர்ப்பன், ஸூத்ராத்மா, அந்தர்யாமீ இம்மூவரையும்தான் முறையே ப்ரம்ஹா, விஷ்ணு, ருத்ரன் என்று சொல்லப்படும்.

இம்மாதிரி பிரிவைத்தான் உபநிஷத்துக்களை அநுஸரிப்பவர்கள் ஒப்புக்கொள்ளுவார்கள். அவர்கள் ஜாக்ரத், ஸ்வப்ன, ஸுஷுப்தி என்ற மூன்று அவஸ்தைகள் தானென்றும், ஸ்ருஷ்டி-ஸ்திதி ஸம்ஹாரமென்ற மூன்று க்ரியைகள் தானென்றும், சொல்லுவார்கள். தாந்த்ரிகர்களோ இவைகளுடன் துரீயம், துரீயாதீதம் என்ற இரண்டு அவஸ்தைகளையும், திரோதானம், அநுக்ரஹமென்ற இரண்டு க்ரியைகளையும் சேர்த்துச் சொல்வார்கள். இங்ஙனே இவர்கள் மதத்தின்படி பஞ்சவிதமான அவஸ்தைகளும் பஞ்சவிதமான க்ரியைகளுமிருப்பதாகச் சொல்லப்படும். ஸுஷுப்தியில் ஜீவனானவன் பரப்ரம்ஹத்தோடு முற்றிலும் கலந்துவிடுகிறபடி

திவ்யமென்றும், அதற்குமேல் துரீயம், துரீயாதீதம் என்ற இரண்டு அவஸ்தைகளிருப்பதற்குக் காரணமும் எற்கனவேயே சொல்லப்பட்டது. ஸுஷுப்தியில் ஜீவனானவன் காரண சரீரத்துடன் வ்யவஹாரம் செய்வதுபோல் துரீயாவஸ்தையில் ஜீவன் வ்யவஹாரம் பண்ணும் சரீரத்திற்கு மஹாகாரண சரீரமென்று பெயர். அதற்குமேல் துரீயாதீத அவஸ்தையில் ஜீவனானவன் எவ்வித உபாதியும் அவஸ்தையுமில்லாமல் பரப்ரம்மத்தோடு ஐக்கியமாகிவிடுகிறான். அதைத்தான் பின்வரும் நாமங்களில் சொல்லப்பட்டது.

(இந்த விஷயத்தையொட்டி இன்னம் அதிகமாக பாஷ்யத்தின் மூலத்தில் சொல்லப்பட்டிருந்தபோதிலும் அது மிகவும் ஸூக்ஷ்மமான விஷயமாகையால் விரிவுக்கஞ்சி இத்துடன் நிறுத்தப்பட்டது.)

जागरिणी

ஜாகரிணீ (257)

ஜாகராவஸ்தையிலிருக்கும் ஜீவனோடு அபின்னமாக இருப்பவள்.

ஸ்தூல சரீராபிமானியாகிய விச்வனெனப்படும் புருஷனானவன் ஜாகராவஸ்தையிலிருப்பதால் அவனை ஜாகரீ என்று சொல்லப்படும்.

स्वप्नन्ती

ஸ்வப்நந்தி (258)

ஸ்வப்நாவஸ்தையிலிருக்கும் ஜீவனுடன் அபின்னமாக இருப்பவள்.

तैजसात्मिका

தைஜஸாத்மிகா (259)

(மேலே சொல்லிய) தைஜஸரூபியான ஜீவன்களுடைய ஸூக்ஷ்ம ரூபமான ஹிரண்யகர்ப ஸ்வரூபமாக இருப்பவள்.

सुप्ता

ஸுப்தா (260)

ஸுஷுப்தியவஸ்தையிலிருக்கும் ஜீவனுடன் அபின்னமாக இருப்பவள்.

ஸாஜ்ஞ்ஞிகா

ப்ராக்ஞாத்மிகா (261)

(மேலே சொல்லிய)ப்ராக்ஞனாகிய ஜீவன்களுடைய ஸமஷ்டி ரூபமான ஈச்வர ஸ்வரூபமாக இருப்பவள்.

ஸுஷுப்தியிலிருக்கும் ஜீவனானவன் கண்விழித்தவுடன் 'எனக்கு ஒன்றுமே ஸுகமாகத் தூங்கினேன்' என்று சொல்லும்போது அவனிடமிருக்கும் அவித்யையின் மூன்று வ்ருத்திகள் வெளியாகின்றன. அதாவது அக்ஞானம் (ஒன்றும் தெரியாமலிருப்பது) அஹம்தா (நான் என்று வேறு பட்டு நிற்பது) ஸுகம், இம்மூன்றும் இருக்கும்படியான அவ ஸுஷுப்தியென்ற பெயர்.

துர்

துர்யா (262)

(மேலே சொல்லிய) துரீயாவஸ்தையிலிருக்கும் ஜீவனோடு அபின்னமாக இருப்பவள்.

1. ஜாக்ரத், ஸ்வப்ன, ஸுஷுப்தி அவஸ்தைகளையும், அவைகளில் வ்யவஹாரம் பண்ணும் ஜீவாத்மாக்களையும், நன்றாகப் பகுத்தறிவதால் உண்டாகும் சுத்தவித்யா என்பது உதயமாகும் அவஸ்தைக்கு துரீயாவஸ்தை என்ற பெயர். இந்த அறிவை யடைந்தவன் மற்ற மூன்று அவஸ்தைகளிலிருந்தபோதிலும் அவைகளால் பாதிக்கப்படாமலிருப்பான் என்று சொல்லப் பட்டது.

த்ரிஷு தாமஸீ யத்போக்யம் போக்தா யச்ச ப்ரயுங்க்தே: |
வித்ய: தத்துபயம் யஸ்து ஸ புஞ்ஜானோ ந லிப்யதே ||
(ஸ்படிக ஸ்தவம்)

இந்த நிலைமையையடைந்த யோகிகளுக்கு அந்த அவஸ்தை தான் உண்மையானது என்றும் மற்ற மூன்றும் உண்மையில்லை யென்றும் தோன்றும்

'துர்யம் காம பரம் தாம தத்தா போகச் சமத்கரியா |
போதேபி ஜாக்ருதாதீனம் யோகிநஸ்தஸ்ய ஸம்பவேத் ||'
'ஜாக்ரத் ஸ்வப்ன ஸுஷுப்தி போதேபி துர்யாபோகஸம்பவ: |
இந்த துரீயாவஸ்தையிலேற்படும் ஆனந்தமானது 'த்ரிஷு தாமஸீ யத்போக்யம்' என்றபடி மற்ற மூன்று அவஸ்தை

கவர்ஷும் (விஸ்தீர்ணம் தைலம் பரவியிருப்பதுபோல) பரவி யிருக்கும்.

2. இந்த அவஸ்தையிலிருப்பவனும் மஹாகாரணை சரீராபி மானியாயுமிருக்கும் ஜீவனுக்கு தூர்பனென்று பெயர். கார்ய ஜீவன்களுடைய தனித்தனியான ரூபமாகவும் ஸமஷ்டி ரூபமாக வும் அம்பாள் இருப்பதினால் 'தூர்பா' என்று பெயர்.

3. இம்மாதிரியான துரீயாவஸ்தை அடையும் மார்க்கத் தைப்பற்றி 'மன: ஸ்வசித்தேன ப்ரவிசேத்' என்ற சிவ ஸூத்ரத் திலும் அதின் வார்த்திகத்திலும் சொல்லப்பட்டிருக்கிறது.

சிவமத்வைதம் சதுர்த்தம் மன்யந்தே' என்ற ச்ருதி வாக் யத்தில் சொல்லப்பட்ட ப்ரவிக்த ஸ்வரூபமுடைய தேவதை யைக் குறித்ததாகவும் சொல்லலாம். அல்லது துரீயாவஸ்தை காதரென்ற குருவுக்கு ப்ரஸன்னமானதினால் தூர்பா என்று அம் பாளுக்குப் பெயர் வந்ததாகவும் சொல்லலாம்.

'துரீயாவஸ்தா காதஸ்ய ப்ரஸன்னத்வாத் வரானலை |
தூர்பேதி காடம விக்யாதம் தஸ்ய தேவ்யா நிரந்தரம் ||'
(த்ரிபுரா ஸித்தாந்தம்)

5. எப்படி ஸதாசிவனைவர் ப்ரம்மா, விஷ்ணு, ருத்ரன் முதலானவர்களாக இல்லாமல் அவர்களுக்கு மேல்பட்டவராக இருப்பதுமாதிரி அம்பாள், ஸரஸ்வதி, லக்ஷ்மீ, பார்வதி முதலா வர்களாக இல்லாமல் மஹாமாயா என்ற துரீயஸ்வரூபமாக இருப் பதாக ஆசார்யாளால் வர்ணிக்கப்பட்டிருக்கிறது.

'ஹ்ரீமாகாரீம் தேவீம் த்ருஹிண க்ருஹிணீம் ஆகமவிதா
ஹரே: பத்னீம் பத்மாம் ஹரஸஹசரீம் அத்ரிதனயாம் |
துரீயா காமேபி த்வம் துரதிகம நிஸ்ஸீம மஹிமா
மஹாமாயா விச்வம் ப்ரமயஸி பரப்ரம்ம மஹிஷி ||'
(ஸௌந்தர்யலஹரீ)

सर्वावस्थाविवर्जिता

ஸர்வாவஸ்தா விவர்ஜிதா (263)

ஸர்வ விதமான அவஸ்தைகளோடும் கூடியிருக்காதவள்.

1. துரீயாவஸ்தையையும் கடந்த (துரீயாதீதமான) அவ ஸ்தை ஒன்று ஜீவனுக்கு உண்டென்று ஏற்கனவே சொல்லப்பட் டது. அப்படிப்பட்ட அவஸ்தையிலிருக்கும் ஜீவன்களோடு

ப்ரத்யேகமாகவும் ஸமஷ்டியாகவும் அம்பாள் அபின்னமாக இருப்பது இங்கு சொல்லப்பட்டது. இந்த துரீயாதீதமான ஸ்வரூபமானது வாஸ்தவத்தில் யாதொரு விதமான அவஸ்தைக்கும் உள்படாததாக இல்லாததினால் அதை ஸர்வாவஸ்தா விவர்ஜிதமான ரூபமென்று சொல்லப்பட்டது. அது துரீயத்தையும் கடந்த தாகையாலும் அதில் பூர்ண ஞானவன் அவஸ்தாரஹிதனாயிருக்கும் பரப்ரம்ஹத்துடன் ஒன்றுபட்கலந்துவிடுவதால் அதற்கு துரீயாதீதம் என்பதைத் தவிர வேறு பெயர் கிடையாது. இது துரீயத்தை கடந்ததாகையாலும் துரீயமானது ஜாக்ரத், ஸ்வப்ன ஸுஷுப்தி அவஸ்தைகளைக் கடந்ததாகையாலும் இதை அவ்விதமான ஸகல அவஸ்தைகளையும் கடந்ததென்று சொல்லப்பட்டது. மேலும் இந்த துரீயாதீத ஸ்வரூபம் வந்தவுடன் முந்திய அவஸ்தைகளுக்குத் திரும்புவது என்பட்டதாகையால் அவைகளிலிருந்து (விவர்ஜித) விடுவிக்கப்பட்டதாகச் சொல்லப்பட்டது. பெயருக்கு மாத்திரம்தான் அதை (துரீயாதீதமான) அவஸ்தையென்று சொல்வது.

2. இந்த ஜந்தாவதான அவஸ்தையான துரீயாவஸ்தையில் த்ருடமாக இருப்பது என்பட்டபிறகு ஜீவனுக்கு உண்டாகும்

'துர்யாவஷ்டம் பரிதா லோயம் துர்யாதீத பரம் பதம் |'
'துர்யாப்யாஸ ப்ரகர்ஷேண துர்யாதீதத்வமாப்நுயாத் |
ஸம்ப்ராப்த: ஸாது: ஸாதுத்வம் ஸம்ஸிலிகாந்தராத்மநி |
துல்ய: சிதேவ நின்மாத்ர ஸ்வச்சந்தாவஸ்த சாலிநி ||'

3. இந்த துரீயாதீத நிலைமையிலிருக்கும் ஜீவனுடைய லக்ஷணங்களைப்பற்றி பின்வருமாறு வர்ணிக்கப்பட்டிருக்கிறது.

"சரீரவ்ருத்திர் வ்ரதம்", "கதா ஜ்ஞ:", "நாலம் ஆத்மக்ரமம்"
(பிரஹதாரண்யம்)

தன்னுடைய ஆத்மாவை சிலரிடம் அடங்காமல் பண்ணுவதின் மூலமாக சிவ பூஜையைச் செய்வதினால் அவனுடைய சரீரத்தை தரிப்பது (சிவ பூஜாத்மகமான) விரதத்தைத் தவிர்த்தே வேறு தக்ஷமான ப்ரயோஜனத்திற்காக அல்ல.

சான்,

'அந்தருல்லஸித ஸ்வச்ச சக்தி பீயூஷ போஷிதம் |
பவத் பூஜோசித போகாய சரீரமிதமஸ்து மே ||'

என்று பட்டோத்பவரால் சரீரம் வேண்டுமென்று பிரார்த்திக்கப் பட்டது.

4. மேலும் அவனுடைய சித்தமானது ஸத்யத்தையே கடைப்பிடித்ததாலையால் அவன் ஸாதாரணமாகப் பேசும் வார்த்தைகள் கூட ஜப ரூபமாக இருக்கிறதாகச் சொல்லப்பட்டது.

'த்விசாரு ஸ்மிதாயை அத்யாக்ஷ பிரஸாத:'
'ருசி பரா தந்த்ர ப்ரக்ஞா' (தியான ஸ்லோ)

5. "பத்னி மனஸா த்யாபதி தத்வாசா வததி" என்ற ச்ருதியில் சொல்லப்பட்டபடி அவன் சொல்லும் எல்லா வார்த்தைகளும் பதார்த்த ரூபமாகயிருப்பதால் மந்த்ர ரூபமாக இருக்கின்றன. இந்தக் காரணத்தால்தான் ஸாதுக்கள் உபதேசம் என்று செய்யாவிட்டாலும் அவர்கள் ஸாதாரணமாகப் பேசும் வார்த்தைகளே உபதேசங்களாக இருப்பதால் அவர்களை அணுகி தரிசனம் செய்வேண்டுமென்று யோகவாஸிஷ்டத்தில் சொல்லப்பட்டது.

'ஸந்த: ஸந்தோஷயந்த்யேவ யத்யப்யுபதிசந்தி நோ |
யத் ஹி ஸ்வைரகதா ஸ்தேஷாம் உபதேசா பலந்தி நா: |'

6. பிறர்களுக்கு ஆத்மோபதேசத்தைச் செய்வதே தானமாக அவர்கள் கைக்கொண்டிருப்பதாகச் சொல்லப்பட்டது. ஆத்ம ஸாக்ஷாத்காரம் என்கிற மஹத்தான தனம் அனுபவத்தில் கிடைத்தவுடன் அதை அவன் பிறர்களுக்கு தானம் செய்யத் தயாராக இருக்கிறான்.

'ப்ரேக்ஷ சைதன்ய ரூபஸ்ய ஸாக்ஷாத்கார வாரிணா: |
யத்ரக்ருதானம் தேதுவாஸ்ய தாவம் யாந்தி நவ ஸ்ரியா: ||'

தூர்யாதீதமான அவஸ்தையிலிருக்கும் ஜீவன்முக்தர்கள் பரம்பொருளோகத்தில் செய்யும்படியான ஸகலவிதமான கார்யங்களையும் அம்பாளுடைய பூஜாப்ரகாரமாக இருக்குமென்று அதர்வண ரஹஸ்யத்திலும் சொல்லப்பட்டிருக்கிறது.

'ஜபோ ஜல்ப: சில்பம் ஸகலமடபி முத்ராவிரசனா
கதி: ப்ரதக்ஷிண்யக்ரமணம் அசலாத்யா ஹுதி விதி: |
ப்ரணாம: ஸம்வேச: ஸுகமகிலம் ஆத்மார்பணதிருசா
ஸபர்யா பர்யாயஸ்தவ பவது யன்மே விலஸிதம் !! '

(ஸௌந்தர்ய லஹ ?)

7. மோ யோகத்தான் வார்திகத்திலும் சொல்லப்பட்

'இதிப்ரகாத்தம் வ்ரதம் குர்வன் ஜபம் சர்யாம் ச பாஸ்யன் |
சிவதுல்ய: ஸதார ஸ்கபாத்மா சிவாராதன தத்பர: ||
அயாமேவ மஹாதேயாதி மஹாமந்த்ர துரந்தர: |
அந்தேவாஸி ஜனஸ்யாந்த: தத்வதஸ்தத்வபோதக: ||'

8. இந்த அவஸ்தைபானது வர்ணனைக்கு கோசரமில்லாதது, அதின் ஸ்வரூபம் அதை அனுபவித்தவர்களுக்குத் தான் தெரியும்.

'ஆனந்தக கணத்வம் யத்வாசாமடி ந கோசரா ந்ருணாம் |
தத்யாதீதாவஸ்தா ||' (விவஸ்யாப ரஹஸ்யம்)

இம்மாதிரி அவித்தையினால் வசப்பட்டிருக்கும் ஜீவனுடைய ஜந்துவின் தமான பேதங்களைச் சொல்லிவிட்டு மாயை (அவித்தை) யை வசப்படுத்தியிருக்கும் ஈச்வரனுடைய பேதங்களை அவரவர் கருடைய க்ருத்யங்களின் பேதங்கள் ப்ரகாரம் வர்ணிக்கத் தொடங்குகிறார்.

सृष्टिकर्त्री

ஸ்ருஷ்டிகர்த்ரீ (264)

ஸ்ருஷ்டியைச் செய்கின்றவள்.

ஸ்ருஷ்டி, அதாவது லோகங்களின் நிர்மாணம் செய்வதன் காரணமாகுணப்ரதானராகிய ஈச்வரனுடைய காரியம். அதை அம்பாள் செய்வதாக இங்கு சொல்லப்பட்டது.

ब्रह्मरूपा

ப்ரம்ஹரூபா (265)

ப்ரம்ஹா என்ற ரூபமாக இருப்பவள்.

சதுர் முகத்தோடு கூடிய ப்ரம்ஹாவானவர் பராப்ரம்ஹத்தினுடைய மூன்று சக்திகளில் ஒருவரென்பது.

ப்ரம்ஹ விஷ்ணு சிவா ப்ரம்ஹன் ப்ரதா ய ப்ரம்ஹ சக்தய: |
என்று விஷ்ணுபுராணத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

गोप्त्री

கோப்த்ரீ (266)

காப்பாற்றுகிறவள்.

கோபனம் என்பது லோகங்களுக்கு ரக்ஷிணையைக் கொடுப்பது. அது ஸத்வகுணப்ரதானரான ஈச்வரனுடைய காரியம். அதை அம்பாள் செய்வதாக இங்கு சொல்லப்பட்டது.

கோவிந்தரூபிணீ (267)

(கோவிந்தாகிய) விஷ்ணு என்ற ரூபமாக இருப்பவள்.

உமாதேவியும் விஷ்ணுவும் ப்ரக்ருதியின் அம்சங்களென்பது

'ப்ரக்ருத்யா: ப்ரதமோ பாக: உமா தேவீ யசஸ்வினீ
த்விதீய: ஸர்வபூதேஷு விஷ்ணு: ஸ்திரிஸம்ஜ்ஞக: ஸதா'

என்ற நாரதரால் ஹரிவம்சத்தில் சொல்லப்பட்டது.

கோவிந்த என்ற பதத்திற்கு அனேக அர்த்தங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. பகவான் கிருஷ்ணாவதாரத்தில் பசுக்களை ரக்ஷிக்கையால் இந்திரனாக இருந்ததால் கோவிந்தன் என்ற பெயர் எனபதாக.

அஹமத்ரைவ ஸ்ரீ தேவகீபுத்ரம் த்வம் கவாம் இந்த்ரதாம் குரு:
கோவிந்த இதி நாம்னா த்வாம் புவி காஸ்யந்தி மானவா: ||

என்று (பாரதம்) மோக்ஷதர்மத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. வாக்கின் (சப்தத்தில்) விசேஷத்தை தெரிந்துகொள்ளாதலால் கோவிந்தன் என்று பெயர் வந்ததாக.

கதாசித்ஸு தத்தா வாணீ நாம் ச விந்தயமீஸ்வரம்
கோவிந்தஸ்து ததோ தேவ முனிபி: கத்யதே ஸதா ||

என்று ஹரிவம்சத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

"கோவிந்தோ வாஸுதேவ ஸ்யாத்கவாத்பிஷேக ப்ருஹஸ்பதே" என்றபடி கோவிந்த: என்ற பதமானது ப்ருஹஸ்பதியையும் குறிக்குமாகையால் அவர் ரூபமாக இருப்பவளென்றும் சொல்லலாம்.

संहारिणी
ஸம்ஹாரிணீ (268)

ஸம்ஹாரம் செய்பவள்.

ஸம்ஹாரமென்பது லோகங்களை பரமாத்மாவுக்களாக நிலைபெறச் செய்வது. இது தமோகுண ப்ரதானமாகிய ஈச்வரனுடைய கார்யம். அதை அம்பாள் செய்வதாக இங்கு சொல்லப்பட்டது.

रुद्ररूपा
ருத்ரரூபா (269)

ருத்ரன் என்ற ரூபமாக இருப்பவள்.

1. ருத்ரன் என்பவர் மேலே சொல்லிய க்ருத்யத்தை செய்யும் சக்வரஹஸ்யடைய ரூபம்.

2. ருத்ரன் என்ற பதத்திற்கு அனேக அர்த்தங்கள் உண்டு 'ருஜம் த்ராவயதே தஸ்மாத் ருத்ர: பரிகீர்த்தித: ஸ்மிருத:' என்ற சிவரஹஸ்யத்திலும்.

'ருத் துக்கம் து: கமேஹதுர்வா தத் த்ராவயதி ய: ப்ரபு: |
ருத்ர இத்யுச்யதே தஸ்மாத் சிவ: பரமகாரணம் ||'

என்ற வாயவீய ஸம்ஹிதையிலும் சொன்னபடி துக்கத்தைப் போக்கடிப்பதினால் ருத்ரன் என்ற பெயர்.

2. ருத் என்பதற்கு அழுவது, ரோதனம் செய்வது என்ற அர்த்தம். மஹா ப்ரளய காலத்தில் ருத்ரனுடைய ஸ்ரீர் யிலிருந்து நேத்ரத்திலிருந்து உண்டாகும் கண்ணீரானது மழை யாகப் பெய்வதாகச் சொல்லப்பட்டது.

'ஸோரோதீத் யதரோதீ தத்ருத்ரஸ்ய ருத்ரத்வம்' (ச்ருதி)

ப்ரம்ஹாவினுடைய நெற்றியிலிருந்து ருத்ரன் உண்டானா ரென்றும் அப்போது பலமாகவும் பயங்கரமாகவும் ரோதனம் செய்தாரென்ற.

'துஷ்ட்யர்த்தே ப்ரம்ஹண: புத்ரோ லலாடாத் உத்திர: |
அருதத் ஸுஸ்வரம் கோரம் ஜகத: ப்ரபுரவ்யய:||' [ஸ்மரம்]

என்று பாரதத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

தேஹத்திலிருக்கும் ப்ராணன்களுக்கும் ருத்ரனென்று பெயர்.

'ப்ராயு வாவ ருத்ரா ஏதே ஹீதம் ஸர்வம் ரோதயந்தி'
(சாந்தோக்யோபநிஷத்)

तिरोधानकरी

திரோதானகரீ (270)

மனை

1. மேலே சொல்லியபடி ஸகல லோகங்களையும் பரமாணுக் களாக ஸம்ஹாரம் பண்ணிய பிறகு அந்த பரமாணுக்களையும் பாக்கியில்லாமல் த்வம்ஸம் செய்து ஆணவங்களை மறைத்து ப்ரக் ருதியில் லயம் அடையும்படிச் செய்வது திரோதானம். [எரிந்து கொண்டிருக்கும் விளக்கை அசோகத்தால் அந்த தேஜஸ்ஸை மறைத்துவிடுவதை இதற்கு உபமானமாகச் சொல்லப்படும்.]

இது கனதரமான (மிகவும் அதிகமான) சுத்த ஸத்வ குணத்தை ப்ரதானமாகவுடைய ஈச்வர ரூபத்தின் கார்யம். இதை அம்பாள் செய்வதாகச் சொல்லப்பட்டது.

2. திரஸ்கரிணீ என்று சொல்லப்படும் சக்தி விரோத ரூபமாக அம்மாள் இருப்பதாகவும் சொல்லலாம். பக்தி இல்லாதவர்களுக்கு அம்பாளுடைய ஸாகூஷாத்காரம் ஏற்படாமலிருக்கும்படி மறைத்துவிடுவதாக திரஸ்கரீணியைப்பற்றிச் சொல்லப்படும்.

'அபக்தாநாம் ச ஸர்வேஷாம் திரோதானகரீ யதஃ !
ஸ்ரீஸ் திரஸ்கரிணீ தஸ்மாத் ப்ரோக்தா ஸத்யம் வராநநே !!'
(த்ரிபுரா ஸித்தாந்தம்)

ईश्वरी

ஈச்வரீ (271)

ஈச்வர ரூபமாக இருப்பவள்.

1. மேலே சொல்லிய திரோதானமென்ற க்ருத்யத்தைச் செய்யும் அதிகாரமுடையவர் ஈச்வரன். இவர் கனதாமான சித்த குணத்தையே ப்ரதானமாக உடையவர். (பொதுவாக ஈச்வர னென்ற பெயர் ஆதிபுருஷரான ஸர்வேச்வரனைக் குறிப்பதாக யிருந்தாலும் இங்கு அவருடைய சக்திபேதங்களை ப்ரஸரிக்கத னியான அர்த்தமுடைய பெயராக இருக்கிறது.) திரோதான சக்தியையுடைய ஈச்வரனே அபின்னமாக அம்பாள் இருப்ப தாக இந்த நாமத்தில் சொல்லப்பட்டது.

2. ஈச்வரத்வம் என்பதின் அர்த்தம் பராதீநம்தா ஸர்வ கர்த்ருத்வம், ஸ்வதந்த்ரதை.

'ஈச்வரதா கர்த்ருத்வம் ஸ்வதந்த்ரதா தித்ஸைரூபதா சேதி !
ஏதே சாஹந்தாயாஃ பர்யாயாஃ ஸத்பிருச்யந்தே !!'
(விருபாக்ஷ பஞ்சாசிகை)

அம்மாதிரி அம்பாள் இருப்பதால் ஈச்வரீ என்ற பெயர். இப் படி அம்பாள் ஈச்வரனுடைய பராஹந்தா ரூபமாக இருப்பதை

'புரஸ்தாத் ஆஸ்தாம் ஃ புருஷதிரு ராதேஹி புருஷிகா'

என்று ஆச்சார்யாளால் ஸௌந்தர்யலஹரியில் சொல்லப்பட்டது.

सदाशिवा

ஸதாசிவா (272)

ஸதாசிவரூபமாக இருப்பவள்.

अनुग्रहदा

அனுக்ரஹதா (273)

அனுக்ரகத்தைச் செய்பவள்.

1. பாக்கியில்லாமல் த்வம்ஸம் செய்யப்பட்டு திரோதான மடைந்த ஜகத்தைத் திரும்பவும் ஸ்ருஷ்டிப்பதற்காக பரமாணு முதலான ரூபமாக உண்டாகும்படி செய்வதை அனுக்ரஹம் என்று சொல்லப்படும். இது மேலே சொல்லிய ஸதாசிவனுடைய க்ருத்யம். இவ்விதமான அனுக்ரஹம் என்பதைச் செய்யும் ஸதாசிவனிடமிருந்து அப்பாள் அபின்னமாக இருப்பதால் ஸதாசிவா, அனுக்ரஹதா என்று பெயர்கள் ஏற்பட்டன.

2. ஸதாசிவன் மிகவும் உயர்ந்தவன் (உத்க்ருஷ்டமான) சுத்த ஸத்வகுண ப்ரதானராய சதாசிவனுடைய ரூபம்.

3. திரோதானம், அனுக்ரஹம் இவையிரண்டுக்கும் முறையே பந்தம், மோக்ஷம் என்ற அர்த்தங்கள் உண்டு. இவை யிரண்டுக்கும் சதாசிவன், ஸதாசிவன் இவர்கள் காரணம் என்ப தாக இங்கு சொல்லப்பட்டதாகவும் சொல்லலாம்.

पञ्चकृत्यपरायणा

பஞ்சக்ருத்ய பராயண (274)

(மேலே சொல்லிய) ஐந்துவிதமான க்ருத்யங்களிலும் மிகுந்த முயற்சியுடையவள்.

1. அல்லது, அவைகளில் மிகவும் ப்ரியமுள்ளவளென்றாவது சொல்லலாம். அவைகள் அம்பாளை ஆச்ரயித்திருப்பதாகவும் சொல்லலாம்.

" பரமாணம் அபீஷ்டம் ஸ்யாத் க்ருத்யாரம்பாயவை "

2. மேலே சொல்லிய ஸ்ருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரம், திரோ தானம், அனுக்ரஹம் இவைகளை பஞ்சக்ருத்யங்கள் என்று சொல்லப்படும். இவைகளுக்கு பரப்ரம்மமான தி காரண

" ஜகஜ்ஜன்ம ஸ்திதித்வம்ஸ திரோதானாதீனாக காரணம் |
பூத டௌதிக பாவாநாம் நியாமஸ்யைததீச்வரி ||"

(ப்ருஹத்கந்த ஸம்ஹிதை)

" பஞ்சவிதம் தத்கிருத்யம் ஸ்ருஷ்டி: ஸ்திதிஸம்ஹ்ருதி
[திரோபாவ:
தத்ஸ¢ அனுக்ரஹகரணம் ஜகத: ஸததோதிதஸ்யாஸ்யா ॥ "

3. இவையெல்லாவற்றையும் ஈச்வரரூபமேதங்களான ப்ரம்ஹா, விஷ்ணு முதலானவர்கள் அம்பாளாகிற சக்தியின் ஓந்தாசையினால் தான் செய்கிறார்களென்றும் அம்பாள் ஸகல ஜகத்தையும் அறம், மம என்கிற பாவங்களான மாயாபாசத்தால் கட்டிவிடுகிறாளென்றும் அந்த பாசத்திலிருந்து விடுவிக்கப்பட வேண்டுமென்று (மோக்ஷம் அடையவேண்டுமென்று) விரும்பும் மஹான்கள் அதற்காக அம்பாளை உபாஸனை செய்கிறார்களென்றும் சொல்லப்பட்டது.

" ஸாவித்ரீம் குருதே காமம் ஸா பாலயதி பாலிதம் |
கல்பாந்தே ஸம்ஹரத்யேவ த்ரிரூபா விச்வமோஹினீ ॥
தயா யுக்த: ஸ்ருஜத் ப்ரம்ஹா விஷ்ணு: பாதி தயான்வித: |
ருத்ர: ஸம்ஹரதே காமம் தயா ஸம்மிளிதோ ஜகத் ॥
ஸ பத்னுதி ஜகத் க்ருத்ஸ்னம் மாயாபாசேன மோஹிதம் |
அஹம் மமேதி பாசேன ஸுத்ருடேன நரா திப ॥
யோகிந ஏனு முக்தஸங்கா: ச முக்திகாமா முமுக்ஷவ: |
தாமேவ ஸமுபாஸந்தே தேவீம் விச்வைச்வரீம் சிவாம் ॥ "

(தேவீபாகவதம்)

4. இம்மாதிரி பஞ்சக்ருத்யங்களை அததிலுடைய அதிகாரியானவர் அம்பாளுடைய அனுமதியைப் பெற்றுக்கொண்டு செய்வதாகவும் அந்த ஆக்ஞையை அம்பாள் தன் புருவங்களை சுருக்கமாத்ரம் அசைப்பதினால் வெளியிடுகிறாளென்றும் ஆசார்யாளால் "ஸௌந்தர்ய லஹரி"யில் வர்ணிக்கப்பட்டிருக்கிறது.

" ஜகத்ஸ்ருஷ்டௌ தாதா ஹரிரவதி ருத்ர: க்ஷபயதி
திரஸ்குர்வன்னேதத் ஸ்வமபி வபுரீச: ஸ்திதகயதி |
ஸதாபூர்வ: ஸர்வம் ததிதமனுக்ருண்ஹாதி ச சிவஸ்
தவாக்ஞாம் ஆலம்ப்ய க்ஷணகலிதயோர் ப்ரூலதிகயோ: ॥

5. சக்தி ஸூத்ரங்களிலும் இம்மாதிரியே,

" ததா தத்வத் பஞ்சவிதக்ருத்யானி கரோதி "

என்று சொல்லப்பட்டிருக்கிறது.

भानुमण्डलमध्यस्था

பானுமண்டல மத்யஸ்தா (275)

ஸூர்ய மண்டலத்தின் மத்தியிலிருப்பவள்.

1. அம்பானுடைய த்பானப்ரகாரங்களில் அம்பாள் ஸ்ரீசக்ர மண்டலத்தின் நடுவில் இருப்பதாக த்பானம் சொல்லுகிறது.

"ஸுதாப்தேர்மண்டலே மத்யஸ்தாம் நிஜவீர்த்ரிபுரஸுந்தரீம் |
பாசாங்குச தநுர்பாணான் தாரயந்தீம் சிவாம் பஜே ||"

2. ஸ்ரீசக்ரமத்தில் அம்பாள ஸ்ரீசக்ரமண்டலத்தின்நடுவில் பத்மாஸநம் சொல்லவேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது.

3. ஸ்ரீசக்ரமண்டலத்தில் நிறையும் ஹிரண்மய மான புருஷன் பரமேச்வரன் என்பதாக "பஞ்சாத்காராத்மிகே ஹிரண்மயபுருஷே புருஷோத்தமே" என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதே விதமாக கூர்ம புராணத்திலும் த்ரிமூர்தி அம்பாள் பாதாந்தம் பண்ணுகிறது.

"அத்ருச்யே பரமே வ்யோம்நி ஏக ஏவ ஸ்திதோ ஹரி: |
த்ரிதா பவதி ஸம்ஸ்தித்யை ஸர்க ரக்ஷண ஸம்யம: ||"

பைரவி

பைரவீ (276)

(பரமேச்வரனுக்கு) பைரவரூபமுடைய பத்னீ.

1. த்ரிபுரை பைரவரூபமுடைய சிவனுடைய பத்னியென்று ஸ்ரீருத்ரயாமளம் சொல்லுகிறது. அவர்களுடைய ஸம்வாதமாக (சேர்க்கையாக) அம்பாள் இருப்பதால் பைரவீ என்று சொல்லப்படுகிறாள். த்ரிபுரை பிங்களாக்ஷருடைய ஸம்பந்தமுள்ளவளாதலால் பார்வதி குறிக்கும் மாயை என்று தேவீ பாகவத புராணத்திலும் சொல்லப்பட்டிருக்கிறது.

"அம்பிகா சண்டிகா தேவீ பைரவீ பார்வதீ ஸதீ |
த்ரிபுரா பிங்களாக்ஷஸ்ய மாயா ஸர்வ ஜகன்மயீ ||"

2. த்ரிபுரபைரவிகளை சக்தீசனுடைய மந்த்ரஸ்தானத்தில் ரஹஸ்யயோகினீ தேவதைகளை எடுத்துவிட்டால் அவை பைரவீ என்று சொல்லப்படும். ஆகவே அந்த மந்த்ரஸ்வரூபமாக அம்பாள் இருப்பதாக இங்கு சொல்லப்பட்டதாகச் சொல்லலாம்.

3. "த்வாதசாப்தா தனயாவதீ" என்றபடி பன்னிரண்டு வயதுள்ள கன்யா ரூபமாக இருப்பவள் என்றும் விசாலாக்ஷி.

भगमालिनी

(277)

பகமாலிநீ மாலையை உடையவள்.

பகமென்ற பதத்திற்கு ஐச்வர்ய அர்த்தங்களுண்டு.

'ஐச்வர்யஸ்ய ஸமக்ரஸ்ய தர்மஸ்ய யசஸ: ச்ரிய: |
ஞான வைராக்யயோச்சைவ ஷண்ணாம் பக இதீரிங்க: ||'
(விஷ்ணு புராணம்)

'பகம் ஐச்வர்ய மாஹாத்ம்ய தர்ம யசோ ச்ரீ ஞான வைராக்ய ரூபாணி ||
யத்ர சாவ்யய ப்ரயத்நேச்சா தத்ர பூர்ணம் வபுர்மம ||'

1. பூர்ணமான ஐச்வர்யம், தர்மம், யசஸ், ச்ரீ, முக்தானந்தம், விக்ஞானம், மாஹாத்ம்யம், வைராக்யம், இச்சா, ஸம்பன், முக்தி இவைகள் பகமென்ற பதத்தால் குறிக்கப்படுகிறவை. இவைகளோடு அம்பாள் கூடியிருப்பதால் இவளை பகமாலினீ என்று சொல்லப்பட்டது.

2. பகத்தோடுகூடிய ஸகல பதார்த்தங்களையும் அம்பாளுடைய அட்டங்கினையும் விங்கத்தோடுகூடிய ஸகல பதார்த்தங்களுக்கு சிவனுடைய அட்டங்கினியையும் விங்க புராணமானது தெளிவாக பாகவதம் முதலியவைகளில் சொல்லப்பட்டிருக்கிறது.

'அம்பா பத்ராத்ர விங்காம்பஸ் தத்ர பாதார்த்த ரூபிண: |
அஷ்டாங்கிநஸ் தாம்ர பத்ர ஸ்ரீ ஸம்ஜ்ஞா விஷ்ணு ரூபிண: ||'

3. திதி திதீச்வரி தேவதைகளில் பகமாலினீ என்று சொல்லப்படுகிற ஒருவள் உண்டு. அந்த ரூபமாக அம்பாள் இருப்பதாகவும் இங்கு சொல்லப்பட்டதாகவும் சொல்லலாம். இந்த தேவதைகளின் மந்த்ரத்திலும் இவளுடைய பரிவார தேவதைகளின் மந்த்ரங்களிலும் பக சப்தமானது அடிக்கடி வருவதால் பகமாலினீ என்று பெயர் ஏற்பட்டது.

पद्मासना

பத்மாஸனா

(278)

பத்மத்தை ஆஸனமாக உடையவள்.

1. அம்பாள் ப்ரம்மரூபமாக இருப்பதாலும், ப்ரம்மா பத்மத்தை ஆஸனமாக உடையவராக இருப்பதாலும், அம்பாளுக்கு பத்மாஸனா என்று பெயர்.

2. அல்லது, ப்ரக்ருதி மயமான இலக்ஷணத்தோடும் விகாரமய மான இதன் லக்ஷணத்தோடும் ஸம்பந்தமில்லாத தண்டோடும் கூடிய பத் மத்தைப் பீடமாக உடையவனென்றும் சொல்லலாம்.

3. அல்லது, பக்தர்களுக்கு பத்மாஸனத்தை (ஸந்தோஷத்தை) பங் கிட்டுக் கொடுப்பவனென்றும் அர்த்தம் சொல்லலாம்.

'அஸ்ஸாபிக்ய: தந்த்ரே பரம ஸுக போகாஸ்பதயோ
விதிந்ரபத்ந்ரு ஹரி ப்ரதி ப்ருது கபர்தஸ்வர ப்ருஹத்
மிஷ்ட: பஞ்சாங்க ஸ ஸுமதி கபர்தார தரணம்
ப்ரஸாதாத் ஸீதந்தி ப்ரண வ ஜபமாத்ரேண யதய குருதே பி'

இந்த ச்லோகத்தில் பதங்களைத் தகுந்தவாறு பிரிப்பதில்(ல்) அம்பாளுடைய ப்ரஸாதம், தீக்ஷாதம் இவைகளால் எற்படக்கூடிய ப்ரதீபாஜ்ஞாங்களைப் பிரஸ்துதமாக இரண்டு விதமாகவும் பிரித்து அர்த்தம் சொல்லலாம்.

4. பத்மனென்றால் சூரபத்மனைச் சொல்லப்படும். (சூர) ஸம்ஹாரம் பண்ணினபடியால் பத்மாஸுரஸம்ஹாரனென்று பெயர்.

5. சிந்தாயுக்ருத பத்மம் என்று பெயர் உண்டு. (ல) நட்டவள் பத்மாஸனஸ்தை).

6. 'பத்மம் ஸ்வாத் அம்புஜ வ்யூஹ நிதி ஸம்க்யாஸு சிந்தாயாம்' என்றபடி பத்மம் என்ற பதத்திற்கு இருக்கும் இதர அர்த்தம் இம்மாதிரியாகவே சொல்லலாம்.

भगवती

பகவதி

(279)

ஐச்வர்யத்தோடு கூடியவள்.

1. பகமென்ற பதத்தினுடைய அர்த்தங்களை "பகமாலினீ" என்ற 277-வது நாமத்தில் சொல்லப்பட்டது. பகத்தையுடை யவள் பகவதீ.

2. அம்பாளுக்கு பகவதீ என்ற பெயர் வந்ததற்குக் காரணம் பின்வருமாறு சொல்லப்பட்டிருக்கிறது.

'ஸ்ருஷ்டிஸ்திதி ப்ரளய கேஷு ஸதாத்மசக்திம்
நிக்ருஹ்யமாகதிபி: ஷட்பிரஸௌ பகாக்ய
அவிச்யதா விஹரதேயதஸ் தத்தீம் சிவேந்தீ பகவதீத்யபிதாம் ॥'

(தேவீ பாகவதம்)

'ஜ்ஞாநம்ய யா ஸகலா: ஸகலேஷு தாரம்சைவ பஜந்த யமுத: ।
ஸகலாயாம் பஜதிர்த்ய துர: பகவத்பதேவ ஸா ஸ்ரும்தா ॥'

(சக்தி ரஹஸ்யம்)

पद्मनाभसहोदरी

पद्मतात पद्मेहेतात्

பத்மநாபனை விஷ்ணுவுடன் பிறந்தவள்.

1. நித்யமானதும், நிர்தோஷமானதும், நிரதிசயமான ஸுகஸ்வரூபமானதும், சைதன்ய ஸ்வரூபமானதுமான பரப்ரம்மமானது தர்ம:, தர்மீ என்று இரண்டு விதமாக இருக்கிறது. அதில் தர்ம: என்பது ஸகல விஷயங்களை அநுக்ரஹிப்பதும் ஸகல ஜீவர்களுக்கு அநுகூலமானதுமான இச்சா சக்தி ஸ்வரூபமாகும். இவளையுடையவர் தர்மீ. தர்ம: என்பது திருமேனியும் ஆகும், பிரபஞ்சம் என்று இரு விதமாகி விஷ்ணு, சக்தி என்று சொல்லப்படுகிறது. விஷ்ணுவானவர் ஸகல ஜகத்திற்கும் உத்பாதகமும் ரக்ஷகமும் சக்தியானவர் பரமசிவனுடைய மஹிஷியாகவும் ஆகிறார். ஆகவே இவர்களிருவரும் ஒருங்கு சேர்ந்ததுதான் அர்த்தநாரீச்வர பரப்ரம்மமென்பதுமே ரஹஸ்யம். இந்த விஷயம் கூர்ம புராணம் முதலியவைகளில் சொல்லப்பட்டு அப்பைய தீக்ஷிதரால் சந்த்ரகலா த்ரய பரீக்ஷையில் விஸ்தாரமாக நிரூபணம் செய்யப்பட்டிருக்கிறது.

'தத்பரம் நிர்தோஷகம் நிரதிசய ஸுகம்
ப்ரம்மஸ்வரூபமன்யத்பரம்
தர்மேதி தர்மிதி பேதத்வயமிதி சப்ருதக்பூய பரமார்த்தம்
தர்மஸ் தத்ராநுக்ரஹ: ஸகல விஷயேஷ்வேவ கர்த்ருத்வம்
சக்திச்சேச்சாதிரூபா பவதி குணகணச்சாத்ரயஸ்
தத்ரயோ
கர்த்ருத்வம் தத்ர தர்மீ கலயதி ஜகதாப்யாயநாதி
[ஸ்ருஷ்டி ஸ்திதி
தர்ம: பும் ரூபமாத்யாத் ஸகல ஜகதுபகரண பரமாத் பிரபஞ்சி
ஸ்திரீ ரூபம் ப்ரஸாப்ய திவ்யா பவதி சமஹிஷீ
ஸ்வைஸ்ரயஸ்யாத்திகர்துஃ
ப்ரேரகத்தள தர்மப்ரபேதாவபி நிகம விஷயம் தர்மிணம்
[ப்ரம்ஹ ரூபம்
(ரத்னகர்ப்ப ரூபிணம்)

2. இந்த அபிப்ராயத்தோடுதான் 'பூர்வ ஜன்மத்தில் ஸுமேதஸ் என்பவனுடைய பத்னியாகிய மேதாவிக்குப் பிறந்த பார்கவனான இந்த ஜன்மத்தில் க்ருஷ்ணனுடைய ஸோதரியாகி தேவகி பிடம் சுபத்ரையென்று பிறந்தாள்' என்பதாக ப்ரஹ்மவைவர்த்த புராணம் ப்ரகிருதிகண்டத்தில் சொல்லப்பட்டது.

'ய ஸுமேது ருக்மி ஸம்பூதா ஸுபத்ரா பூர்வ ஜன்மனி
க்ருஷ்ணஸ்ய ஸைவ தேவக்யாம் ஸாஸ்மின் ஜன்மனி குக்ஷிஜா'

'ஸுபத்ரா ப்ராணை ஸாதாரய ஜகன்னாதாய மங்களம்' என் பதில் இதற்கு மாறுபாடாகச் சொல்லியிருப்பதாகத் தோன்றி னும் அங்கே ஸுபத்ரா என்று சொல்லப்பட்டது ஸிங்கமீபாகை பால் எற்கனவே சொன்னதற்கு விரோதமில்லை.

3. இம்மாதிரியாக "காத்யாயனீ யா ஜாதா கம்ஸ சத் ரோன் ஸரீஹரா தீ" என்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

4. மேலும் ருக்மாங்கன் சாஸ்த்ரீ கூஹத்ரத்தில் ப்ரம்ஹரா வான வர் அம்பாளைக் குறித்துத் தபஸ் பண்ணும்போது அம்பாள் தன் ஸாக்ஷாத்கார ரூபத்தை விஷ்ணுவுடன் அனுப்பினாள் என்று சொல் லும்போது இவ்விதமாகத்தான் சொல்லப்பட்டிருக்கிறது.

'கஸ்மிந்ச் சைத்ர ப்ரதி ப்ரபூத ஸோபாயு கபிரானஹ: |
ஸ்ரீ ப்ரபவ ப்ரசுரோ ந்ருபோ ஜனஸ்ய ஸ ஸுரத நுஜ்ஞா ||
ஆராதயத்பி ரபிலை ரபீஷ்டதம் தபஸ்ய தஸ்ய ப்ரதி ஜக்ஞிரே ஸ்ம: |
ப்ரத்யக்ஷ ஸ்ரீரஸ்ய ஸ விஷ்ணு ரேவ ஸாக்ஷாத் ஸ்ம ஸ்ரீ ஸஹ ||'

5. 'பத்மாலயா பத்ம பலாஸி பத்மாகர ஸ்ரீ ரிதி' என்று காமேச்வரியின் பஞ்சதசாக்ஷரியின் ஒரு பிரதமா ஸாக்ஷாத்காரத்தைப் பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த மந்த்ர பரமாக்ஷரங்களில் அதிகாரமுடையவர்கள் பாலத்தில் ஆலத்தைப் பார்த்துக்கொள்ளவும்.

उन्मेषनिमिषोत्पन्नविपन्नभुवनावली (281)

உன்மேஷ நிமிஷோத்பன்ன விபன்ன புவனாவளீ

கண்களைத் திறப்பதிலும், மூடுவதிலும் (முறையே) உற்பத்தி, நாசம் இவைகளையுடையும் லோகங்களின் பங்க்தி களோடு கூடியவள்.

1. அதாவது அம்பாள் தன் கண்களைத் திறப்பதிலும் மூடுவதிலும் லோகங்களும் ஸ்ருஷ்டிக்கப்படுகின்றன, கண்ணை மூடினால் அந்த லோகங்கள் அழிந்து போகின்றன என்பதாம், கண்ணை மூடுவதில் ஸ்ருஷ்டி ஸம்ஹாரங்கள் இரண்டும் ஒரே ஸமயத்தில் நடக்கின்றன என்பதாம்.

' இச்சாசக்தி ஜகந்மோஹிந்யை நித்யாயை '
' இச்சாசக்தி ரூபம் ப்ரதேவதா: ஸ்ருஷ்டி: '
' த்ருஷ்டி: த்ருச்யத்ருஷ்டி லக்ஷணம் ஜகத் '
' ஸ க்ஸ்ம்ருதேஸ்ச்வரி தத்ர ஸம்ஹ்ருதி:
உன்மிஷத்யபி புனஸ்தவ துர்மதே
த்வம்மயே ஸ்திதி ஸ்வரூபி ஸ்வதந்த்ரயா ' (காளிதாஸர்)

விச்வ மன்ன மயஜகச்சயாம் தேஹிக ஸ்தனய யாவனாவஸா: |
கச்சனஸ்ப்ரதிதே விச்வதிமேஷ்யபி தாவதேனை பவதி ||
(மஹாபாரத ஸாவித்ரி)

2. இதே அர்த்தத்தைபலஸரித்துச் சொல்லையில் லோகங்களுடைய க்ஷேமத்திற்காகவும் அவைகள் நசித்துப் போகாமலிருக்க வேண்டியும் அம்பாள் தன் கண்களை மூடுவதில்லை என்று ஆசார்யாளால் ஸௌந்தர்யலஹரியில் வர்ணிக்கப்பட்டிருக்கிறது.

நிமேஷோன்மேஷாப்யாம் ப்ரலய முதயம் யாதி ஜகதீ
தவேத்யாஹ: ஸத்தோ ஹரணிதர ராஜன்ய துஹிதா |
ததுன்மேஷாத் ஜாதம் ஜகதிதமசேஷம் ப்ரலயது:
பரித்ராதும் சங்கே பரிஹ்ருத நிமேஷாஸ்தவ த்ருச: ||

सहस्रशीर्षवदना

ஸஹஸ்ர சீர்ஷவதனை (282)

கணக்கில்லாத சிரஸ், முகம் இவைகளை உடையவள்.

1. ஸஹஸ்ரம் என்ற பதத்திற்கு இங்கு பரிபாஷை ஸ்தானம் என்ற அர்த்தமல்ல. அனந்தம், கணக்கில்லாதது என்ற அர்த்தம். இதே மாதிரித்தான் ' ஸஹஸ்ர சீர்ஷா புருஷ: ஸஹஸ்ர ாக்ஷ: ஸஹஸ்ரபாத் ' என்பதிலும் அர்த்தம்.

2. பரப்ரம்ஹமானது :—

' ஸர்வத: பாணிபாதம் தத் ஸர்வதோ க்ஷிசிரோமுகம் |
ஸர்வத: ச்ருதிமல்லோகே ஸர்வமாவ்ருத்ய திஷ்டதி ||'

என்ற கீதையில் சொல்லப்பட்டிருக்கிறது.

இதே மாதிரி அம்பாளைப்பற்றி,

' ஸஹஸ்ர யஜனாமா ஸஹஸ்ர கரஸம்யுத |
ஸஹஸ்ர சீர்ஷசரண பாதி தூரகதஸ்மய ||'

என்று தேவீ பாகவதத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

ஸஹஸ்ராக்ஷ (283)

கணக்கிலடங்காத கண்களையுடையவள்.

सहस्रपात्

ஸஹஸ்ரபாத் (284)

கணக்கிலடங்காத பாதங்களையுடையவள்.

1. ப்ரயோகத்தில் இந்த நாமத்தை ஸஹஸ்ரபாதீ நம: என்று சொல்லவேண்டும்.

2. உன்மேஷ நிமிஷோத்பன்ன விபன்ன புவனாவளி முதல் ஸஹஸ்ரபாத் வரையில் இருக்கும் நாமங்களின் காந்தியையுடைய இரண்டாவது மூன்றாவது கூடங்கள் சொல்லப்பட்டிருக்கும் விபரத்தை பாவபத்தின் முடிவில் பார்க்கவும்.

आमलकीदजननी

ஆம்லகீட (285)

ப்ரம்மஹத்தி முதலே புழுவரையிலிருக்கும் ஸகல ஜீவனகளுக்கும் ஜனனீயாக இருப்பவள் (ஸகலத்தையும் உண்டுபண்ணுகிறவள்.)

ப்ரம்மஹத்தி என்பவள் ஸர்வ ஜீவன்களுடைய ஸமஷ்டியும் ஸ்தூலசரீரமான தாமரை வரிசைகளிலிருப்பவள். கீட மென்பது மிகவும் ஸூக்ஷ்மமாயும் ஸ்வேத்ய சக்ரத்தில் கரீஷம், மரீஷம் என்ற இரு பிரிவான தாமரை இதழ்களிலிருப்பதும் மிகவும் ஸூக்ஷ்ம ஜீவ ஜாதிகளாகும். இப்படியுள்ளவைகளில் அடங்கியிருப்பதையும் கடைசியிலிருப்பதையும் சொல்லியதிலிருந்து மத்தியிலிருக்கும்படியான ஸகல ஜீவன்களையும் குறிக்கப்பட்டது. ப்ரம்மஹத்தி ஸ்தம்பபர்யந்தமான ஸகல ஜீவ ஜாதிகளுக்கும் ஜனனீ என்ற அர்த்தம்.

वर्णाश्रमविधायिनी

வர்ணாச்ரம விதாயினீ (286)

வர்ணம், ஆச்ரமம் இவைகளைப் பிரிவுசெய்து ஸ்தாபித்தவள்.

1. மேலே சொல்லியபடி ஜீவன்கள் நிர்மிக்கப்பட்டபிறகு அவைகளுக்கு ஸன்மார்க்கத்தைக் காட்டுவதற்காக அப்பன் தன்னுடைய அக்ஷஸ்தானங்களில் வேதங்களின் ரூபமாக வந்திட்டான். வேதங்கள் அம்பாளுடைய நிச்வாஸங்கள் என்பது அறிந்ததாகும். "நிஜாக்நாஸ்ருபதிகமா" என்ற நாமத்தில் சொல்லப்பட்ட

அவைகள் கர்ம காண்டம்மென்றும் ப்ரம்ம காண்டம் (ஞான காண்டம்) என்றும் இரண்டு பிரிவையுடையவை. ஜீவன்களில் தேவர்களுக்கும், சிரேஷ்ட ஜந்துக்களான மிருகாதிகளுக்கும் கர்மாக்கில் அதிகாரமில்லை. மனுஷ்யர்களுக்கு மட்டும் இருக்கிறது. கர்மாக்களைப்பற்றி அவரவர்களுடைய வர்ணாச்ரமங்களை அனுசரித்து அம்பாள் சட்டங்கள் ஏற்படுத்தி வ்யவஸ்தையையும் செய்திருப்பதாக இங்கு சொல்லப்பட்டது.

2. இதைப்பற்றி விஸ்தாரமாக கர்ம புராணத்தில் அம்பாளால் தன் பிதாவான ஹிமவானுக்குச் சொல்லப்பட்டிருக்கிறது.

'அத² ஸ꞉ ஸர்வ கர்மாணி நிச்ய நைமித்திகானி ச |
ஸஸ்மார ப்ரணம்ய பித்ரே ஸ்ப்ருஹயன்னபி பஞ்சமம் வேதம் |
ச்ருணுஷ்வ ஸைலராஜ குஹ்யம் ஸர்வரஹஸ்யம் ச |
உபதேக்ஷ்யே நிகிலேஷ்வபி ஸர்வேஷ்வபி ப்ரம்ஹரூபேண ஸ்தி꞉ ||

என்று தூரம்பித்து வாதனங்களைச் சொல்லிவிட்டு

'ப்ரதி நேயா தர்மாணாம் கேவல மத்யாபி முக்தயே ஸர்வேஷாம் |
ப்ரதி நேயம் ஹி நிச்சிதம் ஸர்வாதி ஸ்ருதி ஸாரபூதம் ஸ்யாத் ||

என்பதாகச் சொல்லி பிறகு கர்மயோகத்தைப்பற்றிச் சொல்லுகையில்

'தருதி ஸ் ருதிஸ்ம்ருதிபி꞉ கர்ம வர்ணாச்ரமாணாம் ஸ்யாத் |
அத்ர꞉ ச்ரு ஹரணை ஸஹிதம் உத்பாத்ய ஸ்ருதம் குரு |
தத்ர꞉ ஸ ஜாதநிர்வேத பக்தி꞉ பக்த்யா ஸம்ஜாதபோத꞉ ஸன் |
தருதி ஸ்ருதிப்ய꞉ ஸகலாத் நிகிலோ நாக்நோதி நிர்வேத꞉ |
ஸன் ப்ரதி ஸ்ருதி ஸாரம் ஸ்வயமேவ ஸ்ரோஷ்யதி ஸ்ருதிம் ஸர்வாம் |
ப்ரதி ஸ்ருதினாம் ஸஸ்ருதிம் ஸ்வயமேவ ஸ்ரோஷ்யதி ஸ்ருதிம் ஸர்வாம் ||

3. வர்ணங்கள் ப்ராம்மணன், க்ஷத்ரியன், வைச்யன், சூத்ரன் என்று நான்குவிதம். ஆச்ரமங்கள் ப்ரம்மசாரீ, க்ருஹஸ்தன் வானப்ரஸ்தன், ஸந்யாஸி, என்று நான்குவிதம்.

निजाङ्गरूपनिगमा

தன்னுடைய ஆக்ஞா ரூபங்களான வேதங்களையுடையவள்.

1. அதாவது வேதங்களிலிருக்கும் வாக்யங்கள் அம்பாளுடைய ஆக்ஞா ரூபமாக இருப்பதாகச் சொல்லப்பட்டது. கிடைக்கவேண்டிய பலன், அதைப் பெறும் மார்க்கம், அதற்குச்

செய்யவேண்டிய க்ரியைகள், இவைகளை வேதம் தெரிந்தவர்கள் அதிலிருக்கும் வாக்யங்களின் சப்தங்களை பாவனை செய்வதின் மூலமாக நன்றாக அறிந்துகொண்டு அதன்படி நடப்பார்கள். இப்போற்பட்ட ஆக்ஞா ரூபமான வாக்யங்கள் வேதங்களில் ஒரு பாகமான கர்ம காண்டத்தில்

'மமைவாக்ஞா பராசக்தி: வேத ஸம்ஞா புராதனீ |
ருக்யஜுஸ் ஸாமரூபேண ஸர்காதௌ ஸம்ப்ரவர்த்ததே ||'
(கூர்ம புராணம்)

2. சைவ தந்த்ரங்கள் இரு பிரிவாக வேதங்களை யனுசரித் தவைகளான காமிகம் முதலான இருபத்தெட்டும், வேத விருத் தங்களான காபால, பைரவ தந்த்ரங்கள் முதலியவைகளும் இருக் கின்றன. அவைகளில் வைதிகமான தந்த்ரங்கள் சிகமங்களென் றும், அவை பரமேச்வரனுடைய முகத்திலிருந்து வெளிக் கிளம் பினபடியால் அவருடைய ஆக்ஞா ரூபங்களென்றும் சொல்லப் படும். வேத விருத்தமான தந்த்ரங்கள் பரமேச்வரனுடைய காயிக்குக் கீழிருந்து வெளிவந்தபடியால் அவை ஆக்ஞா ரூபங்க ளென்று சொல்வதற்கில்லை. [பரமேச்வரனுடைய பஞ்சமுகங் களில் ஸத்யோஜாதத்திலிருந்து காமிகம் முதலான ஐந்தும், வாம தேவத்திலிருந்து தீப்தம் முதலான ஐந்தும், அகோரத்திலிருந்து விஜயம் முதலான ஐந்தும், தத்புருஷத்திலிருந்து வைரோசனம் முதலான ஐந்தும், ஈசானத்திலிருந்து ப்ரோத்கீதம் முதலிய எட் டும், வெளிவந்ததாகச் சொல்லப்படும்.]

'ஸத்யோ ஜாத முகாத் ஜாதா: பஞ்சாத்யா: காமிகாதய: |
வாமதேவ முகாத் ஜாதா: தீப்தாத்யா: பஞ்ச ஸம்ஹிதா: ||
அகோரவக்த்ராத் உத்பூதா: பஞ்சாப்தி விஜயாதய: |
பும்வக்த்ராதபி ஸம்பூதா: பஞ்ச வைரோசனாதய: ||
ஈசானவதனாத் ஜாதா: ப்ரோத்கீதாத்யஷ்ட ஸம்ஹிதா: |
ஊர்த்வ ஸ்ரோதோபவா ஏதே நாப்யத: ஸ்ரோதஸ: பரே ||'
(தேவீ பாகவதம்)

3. 'குரு சிஷ்யபதே ஸ்தித்வா ஸ்வயமேவ ஸதாசிவ: ||
ப்ரச்னேத்தர பதைர் வாக்யை: தந்த்ரம் ஸமவதாரயத் ||'

என்று சொன்னபடி ஸதாசிவனானவர் தன்னைடு அபின்னமாக இருக்கும் சக்தியுடன் குரு சிஷ்ய க்ரமமாக ஸம்பாஷணை செய்து அந்த ப்ரகாரமாக தந்த்ரங்களை வெளியிட்டாரென்றும் சொல்வ

தண்டு. அவைகளில் சிவன் குருவாகவும் அம்பாள் சிஷ்ய பரமாகவும் வெளியிடப்பட்டவைகள் நிகமங்களென்றும் பெயர். இப்போற்பட்ட நிகமங்கள் அம்பாளுடைய ஆக்ஞா ரூபமாக இருப்பதாக இங்கு சொல்லப்பட்டதாகவும் சொல்லலாம்.

पुण्यापुण्यफलप्रदा

புண்யாபுண்ய பலப்ரதா (288)

புண்யம், அபுண்யம் (பாபம்) இவைகளுடைய பலனைக் கொடுப்பவள்.

1. மேலே சொல்லியபடி அம்பாள் வர்ணாச்ரம தர்மங்களை விதாயம் செய்த பிறகு அவைகளை அனுஸரித்து நடப்பதினால் ஏற்படும் விசேஷ பலன்களை உறுதி பண்ணுவதற்காக அந்த விதாயங்களில் விதிரூபமான (இன்னதைச் செய்யவேண்டுமென்று சொல்லும்) வாக்யங்களை அனுஸரிப்பதால் ஏற்படும் புண்யத்தின் பலனையும், அவைகளில் நிஷேத ரூபமான (இதைச் செய்யக் கூடாது என்று சொல்லும்) வாக்யங்களை மீறி நடப்பதால் ஏற்படும் பாபத்தின் பலனையும் அம்பாளே கொடுப்பதாக இங்கு சொல்லப்பட்டது.

2. புண்யத்தின் பலன் ஸ்வர்க்காநுபவம், பாபத்தின் பலன் நரகாநுபவம். இவை இரண்டும் முறையே விதி நிஷேதங்களைச் செய்வதால் ஏற்படுமென்று சொல்லப்பட்டது.

'யே ந குர்வந்தி தத் தர்மம் ததர்த்தம் ப்ரம்ஹணஃ க்ருதாஃ |
நிரயாஸ்தேஷாம் சமனஃ பாதயேத் தான் மதாக்ஞயா ||
தர்மம் குர்வந்தி வேதோக்தம் யே மத் பக்திபராயணாஃ |
ஸ்வர்காதிஷ்வ சசிசாத்யாஃ தான் நயந்தி மதாக்ஞயா ||'

(கூர்ம புராணம்)

श्रुतिसीमन्तसिन्दूरीकृतपादाब्ज धूलिका

ச்ருதி ஸீமந்த ஸிந்தூரீக்ருத பாதாப்ஜ தூளிகா (289)

ச்ருதிகளாகிற ஸ்திரீகள் தங்களுடைய தலைமயிரின் வகுட்டில் தரிக்கும் ஸிந்தூரமாக இருக்கும் (தன்னுடைய) பாத கமலங்களின் தூளியையுடையவள்.

1. வேதங்களாகிற ஸ்திரீகள் அம்பாளுடைய பாத கமலங்களை எப்போதும் வணங்கியிருப்பதாகவும், அப்படி வணங்கும் போது அவர்களுடைய சிரஸானது அம்பாளுடைய பாதங்க

படுவதினால் அந்த பாதங்களிலிருக்கும் தூளியானது வ பிருக்கும் ஸ்திரீகளின் தலைமயிரின் வகுட்டில் தரிக்கப்படும் ஸிந் தூரம் மாதிரி யிருப்பதாகவும் இங்கு சொல்லப்பட்டது. பாதங் களில் செம்பஞ்சுக்குழம்பு பூசியிருப்பதினால் அதிலிருக்கும் தூளி யும் சிவப்பு நிறமாக மாறுவதால் ஸிந்தூரம் மாதிரித் தோன்று வது பொருத்தமாக இருக்கிறது. மேலும் தாமரை புஷ்பங்களில் மகரந்தம் இருப்பதுபோல் அம்பாளுடைய பாத கமலங்களில் தூளியிருப்பதாக 'பாதாப்ஜ தூளிகா' என்று சொன்னது. ச்ருதி என்ற பதமும் ஸ்திரீலிங்க பதமானதால் ச்ருதிகளை ஸ்திரீ களாகச் சொல்லுவதற்கு பொருத்தமாக இருக்கிறது.

2. மேலே வேதங்களில் க்ரியைகள் ஸம்பந்தமாக இருக்கும் கர்மகாண்டத்தைப்பற்றிச் சொல்லிவிட்டு, இது முதல் அதற்கு மேல்பட்ட பாகமாகிய ஞானகாண்டத்தைப்பற்றிச் சொல்ல ஆரம் பிக்கிறார். அந்த ஞானகாண்டத்தில் விந்துவான பரப்ரம் மத்தைப் பற்றி ப்ரதிபாதிக்கப்பட்டிருப்பதும் அம்பாளுடைய ஆக்ஞைபோல்தானென்று சொல்லப்பட்டது.

3. ஞானகாண்டமாகிய உபநி ஷத்துக்களை வேதங்களுக்கு சிரோபாகமென்றும், வேதாந்தமென் று, சொல்வது வழக்கம். எப்படி சரீரத்திற்கு ஸீமந்த ப்ரதேசமான தோ அம்மாதிரி ஞானகாண்டமும் வேதங்களின் மேல்பட்டதோ அம்மாதிரி ஞானகாண்டமும் வேதங்களைப்போல் உபநிஷத்தும் அதிகமாக வற்படுகிறது.

4. ச்ருதிகளுக்கும் அம்பாளுடைய ஸ்வரூபத்தின் லேசம் தான் தெரியப்படுகிறதென்பதை "தூளி" என்ற பதத்தினால் சொல்லப்பட்டது. வேதங்கள் ப்ரம்மஞானத்தின் ஸ்வரூபத்தைப் பற்றிச் சொல்லும்போது அது இன்னதென்று நேரிடைச்சொல்ல முடியாமல் (நேதி) அது இன்னதல்ல மின்னதான் சொல்ல முடி கிறபடியால் அம்பாளுடைய பாதாப்ஜத்தின் தூளிமட்டும் கிடைக் கப்பெற்றதாகச் சொல்லப்பட்டது. சரஸ்வதியின் பாதங்களை பக்தி யுடன் வணங்கிவிட்டு பயத்துடனும் லஜ்ஜையுடனும் எட்டி நின்றுகொண்டிருக்கும் பரிஜனங்களைப்போல வேதங்களாகிற ஸ்திரீ கள் அம்பாளை வணங்கிவிட்டு அந்த சரணங்களிலிருக்கும் தூளியை அனுக்ரஹமாகப் பெற்றுக்கொண்டு அம்பாளுடைய ஸ்வ ரூபம் தெரியவில்லையே யென்ற லஜ்ஜையுடனும் பயத்துடனும் எட்டிநின்று கொண்டிருப்பதாக

அந்த தூளிபோன்ற லவலேசமான ஞானமும் அம்பாளுடைய அனுக்ரஹ வசத்தினால்தான் கிடைப்பதாகவும் சொல்லப்பட்டது. இதையே பாஸ்கராசார்யர் தானியற்றிய சிவஸ்தவத்தில் சொல்லி யிருக்கிறார்.

ஸர்வ க்ஞா:ச்ருதயோபி யா: பரசிவ த்வத்ப்ராணரூபா: ப்ரியா: ச்ருங்கக்ராஹிகயா த்ரபாப்ருத இவ த்வாம் க ப்ரஜல்பந்தி தா: அன்யானேவ து நேதிநேதி பதவீசோ வாசா யிஷ்வதந்திசேத் கோ2ன்யஸ்த்வாம் இதமித்தமித்யனுவதேத் தத்ராபி மாத்ருக் ஜன: ॥

5. அம்பாளுடைய பாததூளியின் மஹிமையைப்பற்றி ஆசார்யாள் "ஸௌந்தர்யலஹரி"யில் "தனீயாம்ஸம் பாம்ஸும் தவ சரண பங்கேருஹ பவம்" முதலான ச்லோகங்களில் விசேஷ மாக வர்ணித்திருப்பதையும் பார்க்கவும்.

सकलागमसंदोहशुक्तिसंपुटमौक्तिका

ஸகலாகம ஸந்தோஹ சுக்தி ஸம்புட மௌக்திகா

(290)

ஸமஸ்தமான வேதங்களின் கூட்டமாகிற முத்துச்சிப்பிக்கு உள்ளிருக்கும் முத்தாகிய நாஸாபரணத்தை உடையவள்.

1. அதாவது, "யதோ வாசோ நிவர்த்தந்தே அப்ராப்ய மனஸா ஸஹ" என்ற ச்ருதி வாக்யத்தின்படி, வேதங்களில் அம் பாளுடைய முகத்திற்கு ஸமீபத்திலிருக்கும் மூக்குத்தி, முத்து முதலியவைகள் சொல்லப்படுகின்றனவே தவிர அம்பாளுடைய ஸ்வரூபமானது சொல்லப்படவில்லை என்பது தாத்பர்யம். ஸ்தூ லமாயிருக்கும் வஸ்துவைக்காட்டி, அதிலிருந்து அதற்கு அரு காமையிலிருக்கும் ஸூக்ஷ்மமான வஸ்துவைத் தெரிந்து கொள் ளுவது என்பதை ஸ்தூலாருந்ததீ ந்யாயம் என்று சொல்லப்படும். அம்மாதிரி வேதங்கள் ஸ்தூலமாகத் தோன்றும் நாஸாபரணத் தைச் சொல்லுவதைத் தவிர ஸூக்ஷ்மமான அம்பாளுடைய ஸ்வ ரூபத்தைச் சொல்லமுடியாமலிருப்பதால் வேதங்களாகிற ஸம் புடத்தில் (முத்துச்சிப்பிக்குள்) அம்பாளுடைய நாஸாபரணம் தான் அடங்கியிருப்பதாக இங்கு சொல்லப்பட்டது. முத்துச் சிப்பிக்குள் முத்து இருப்பதுபோல் வேதங்களாகிற முத்துச் சிப்பிக்குள் அம்பாளுடைய முத்து மூக்குத்தியானது இருப்ப தாகச் சொல்லப்பட்டது.

2. அல்லது வேதங்களாகிற முத்துச்சிப்பிக்குள் (ஜம்புடத்திற்குள் இருப்பதுபோல்) இருக்கும் முத்து மாதிரி இருப்பவள் என்றும் சொல்லலாம். அதாவது வேதங்கள் அம்பாளுடைய ஸ்வரூபத்தைப்பற்றிச் சொல்வதிலும் முத்துச்சிப்பிக்குள் முத்து இருப்பதுபோல் வேதங்களின் ஸமூஹமாகிற முத்துச்சிப்பிக்குள் முத்துப்போலிருப்பவளென்று தாத்பர்யம்.

3. மூன்றிய நாமமாகிய 'ச்ருதி ஸீமந்த ஸிந்தூரீக்ருத பாதாப்ஜ தூளிகா' என்பதில் த்ரைவர்ணிகர்களாகிய ப்ராம்ஹண, க்ஷத்ரிய, வைச்யர்களால் அம்பாள் உபாஸிக்கப்படுவதைப்பற்றிச் சொல்லிவிட்டு, இந்த நாமத்தில் ஸகல ஆகமங்களாலும் ப்ரதிபாதிக்கப்பட்டவளென்று சொல்வதிலும் நான்காவது வர்ணத்தவர்களாகிய சூத்ரர்களுள்பட எல்லோராலும் அம்பாள் உபாஸிக்கப்படுகிறாளென்பதைப்பற்றிச் சொல்லப்பட்டதென்றும் சொல்லலாம்.

'யத் வேதைர் கம்யதே ஸ்தானம் தத் தந்த்ரைரபி கம்யதே |
ப்ரம்ஹ க்ஷத்ரிய விட் சூத்ராஸ் தேன ஸர்வேऽதிகாரிண: ||'

(ருத்ரயாமளம்)

पुरुषार्थप्रदा

புருஷார்த்தப்ரதா (291)

(தர்மார்த்த காம மோக்ஷங்களாகிய) சதுர்வித புருஷார்த்தங்களைக் கொடுப்பவள்.

1. இதர தேவர்கள் ஒரோர் பலத்தைத்தான் கொடுப்பார்களென்றும், நான்கு புருஷார்த்தங்களைக்கொடுக்கும் சக்தியானது அம்பாளுக்கு மட்டும்தான் இருக்கிறதென்றும், ஆகவே அம்பாளுடைய ஆராதனையில்லாவிட்டால் போகம் மோக்ஷம் இவையிரண்டும் சேர்ந்து கிடைக்காது என்று சொல்லப்பட்டிருக்கிறது

கணேசம் பூஜயேத் யஸ்து விக்னஸ்தஸ்ய ந பாதகே |
ஆரோக்யார்த்தே ऽர்சயேத் ஸூர்யம் தர்மமோக்ஷாய
மாதவம் |
சிவம் தர்மார்த்த மோக்ஷாய சதுர்வர்க்காய சண்டிகாம் ||'

(பத்மபுராணம், புஷ்கர கண்டம்)

'யே ऽர்ச்சயந்தி பரா சக்திம் விதிநா ऽவிதிநாபிவா |
ந தே ஸம்ஸாரிணோ நூனம் முக்தா ஏவ ந ஸம்சய: |
தஸ்மாத் அசேஷ வர்ணைஸ்தும் த்ரிபுராராதனம் விநா |
ந ஸ்தோ போகாபவர்கௌ து யௌகபத்யேன குத்ரசித் ||'

(ப்ரம்ஹாண்ட புராணம்)

2. 'புருஷோ வை ருத்ர;' என்ற ச்ருதிவாக்யப்படி புருஷ ரூபிய ருத்ரனெவர் யாருடைய ஒத்தாசையின் பேரில் பக்தர் களுக்கு அர்த்தங்களைக் கொடுக்கிறாரோ அப்பேர்ப்பட்ட அம்பா ளுக்கு 'புருஷார்த்தப்ரதா' என்று பெயர். அதாவது, நிஷ்கல மான ப்ரம்மரூபமானது உபாஸிக்கப்படுவதும், அவ்விதஉபாஸனைக் குப் பலத்தைக்கொடுப்பதும், அம்பாளுக்குக் கட்டுப்பட்டு இருக் கிறது அம்பாளிடம் ஆயத்தமாயிருக்கிறது) என்று தாத்பர்யம்.

பூர்ணா
பூர்ணை (292)

நிறைந்திருப்பவள்.

1. பரப்ரம்மரூபமாகிய அம்பாளைத்தவிர மற்றவையெல்லாம் தேசம், காலம், வஸ்து என்பதான வரையரைகளுக்குள் அடங் கியவைகளென்றும், பரப்ரம்மரூபமொன்றே எவ்வகையிலும் நிறைந் தது என்றும் சொல்லப்படும்.

'பூர்ணமத: பூர்ணமித: பூர்ணாத் பூர்ண முதச்யதே |
பூர்ணஸ்ய பூர்ண மாதாய பூர்ணமே வாவ சிஷ்யதே ||'

2. பூர்ணை என்ற பதத்திற்கு பஞ்சமீ, தசமீ, பஞ்சதசீ திதிகளென்று அர்த்தமுண்டு. சுக்லபக்ஷ சதுர்தசீ ராத்ரிக்கும் பூர்ணை என்று பெயருண்டு. இந்த திதிகளின் ஸ்வரூபமாக இருப்பவள் பூர்ணை.

3. பூர்ணை என்று பெயரையுடைய சக்தியின் ஸ்வரூபமாக இருப்பவள்.

भोगिनी
போகினீ (293)

போகத்தை உடையவள்.

1. போகமென்பது ஸுக அனுபவித்தல், ஸுகத்தை அ ய ஸாக்ஷாத்காரத்தை

2. போகினீ என்றால் நாக கன்யகைக்கும் பெயர். அந்த ஸ்வரூபமாக இருப்பவளென்றும் சொல்லலாம்.

भुवनेश्वरी
புவனேச்வரீ (294)

சதுர்தச புவனங்களுக்கும் ஈச்வரியாக இருப்பவள்.

1. புவனமென்ற பதத்திற்கு ஜலம் என்றும் அர்த்தம் உண்டு.

2. ஹ்ரீம்கார பீஜத்திற்கு புவனேச்வரீ பீஜமென்ற பெயருண்டு. அதற்கு தேவதையாக இருப்பவள் அல்லது அந்த மந்த்ரத்தின் ஸ்வரூபமாக இருப்பவள் புவனேச்வரீ. (இந்த மந்த்ரமானது ஹ்ருல்லேகா பீஜமென்றும், மாயாபீஜமென்றும், சிந்தாமணி பீஜமென்றும், லஜ்ஜா பீஜமென்றும், பலவிதமான பெயர்களுடைய உத்க்ருஷ்டமான மந்த்ரம்).

3. தாந்த்ரிகர்களுடைய குரு பரம்பரைகள் மூன்றுவிதம்:- திவ்யௌகம், ஸித்தௌகம், மானவௌகம்—இம்மாதிரி மூன்று பரம்பரைகள் அல்லது ஓகங்களென்று சொல்லப்படும். இவர்களில் மானவௌகத்தில் புவனானந்தநாதரென்ற குரு ஒருவர் உண்டென்றும், அவரிடம் ப்ரீதியடைந்து அவருக்கு ப்ரசன்னமானதினால் அம்பாளுக்கு புவனேச்வரீ யென்ற பெயர் வந்ததாகவும் சொல்லப்படும்.

'புவனானந்தநாதஸ்ய ப்ரஸன்னத்வாத் மஹேச்வரீ |
புவனேஷ்வதி விக்யாதா சாம்பவீ புவனேச்வரீ ||'

(த்ரிபுரா ஸித்தாந்தம்)

4. புவனேச்வரீ பீஜத்திலிருந்து ஸகல புவனங்களுமே வந்து பட்டிருக்கின்றனவென்றும், ஆகவே அம்பாளுக்கு புவனேச்வரீ யென்றும் புவனஸ்வாமினீயென்றும் பெயர் வந்ததாகவும் தக்ஷிணாம்நாயத்தில் விபரமாகச் சொல்லப்பட்டிருப்பதைப் பார்க்கவும்.

अम्बिका

அம்பிகா (295)

தாயாராக இருப்பவள்.

1. அம்பா, அம்பிகா என்ற பதங்கள் தாயாரை பிரியத்துடன் கூப்பிடும் வார்த்தைகள். லோகங்களுக்கெல்லாம் அம்பாள் தாயாராக (ஜனனியாக) இருப்பதால் அம்பிகா என்ற பெயர்.

2. அம்பிகா என்ற பதத்திற்கு ஜகன்மாதா, பாரதீ (ஸரஸ்வதீ), ப்ருத்வீ என்ற அர்த்தங்களும், இச்சா, ஞான, க்ரியா சக்திகளுடைய ஸமஷ்டி ரூபமான ருத்ராணி என்ற அர்த்தமும் உண்டு. அந்த ரூபங்களாக அம்பாள் இருப்பதாகவும் சொல்லலாம்.

3. 'அம்பிகா கைதவே ஹித்தே நித்ராயாம் நிசி கீர்த்யதே' என்றபடி அம்பிகா என்ற பதத்திற்கு இரவு என்றும், நித்ரை என்றும் அர்த்தங்களுண்டு.

'ராத்ரி ரூபா மஹாதேவீ திவாரூபோ மஹேச்வர:'

என்று ஸ்காந்தம் நவராத்ரா ப்ரதீபத்தில் சொல்லியபடி, பரமசிவன் பகல் ரூபமாகவும், அம்பாள் ராத்திரி ரூபமாகவும், இருப்பதாகச் சொல்லப்படும். அம்பாள் நித்ராரூபமாக இருப்பதைப் பின்வருமாறு சொல்லப்பட்டிருக்கிறது.

'யா ஹ்யேஷா கஹ்வரீ மாயா நித்ரேதி ஜகதி ஸ்திதா |
தஸ்யாஸ்தனுஸ் தமோத்வாரி நிசா திவஸநாசினீ |
ஜீவிதார்தஹரீ கோரா ஸர்வ ப்ராணி ப்ருதாம் புவி ||
கதயா கச்சிதாவிஷ்டோ ஜ்ரும்பமாணே முஹுர்முஹு: |
ஸக்த: ப்ரஸஹிதும் வேகம் மஜ்ஜன்னிவ மஹார்ணவே ||'

(ஹரிவம்சம்)

'சித்சேச்வரீம் ஜகத்தாத்ரீம் ஸ்திதி ஸம்ஹார காரிணீம் |
நித்ராம் பகவதீம் விஷ்ணோரதுல தேஜஸ: ||'

'யா தேவீ ஸர்வ பூதேஷு நித்ராரூபேண ஸம்ஸ்திதா |
நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமோநம: ||'

(தேவீ மஹாத்ம்யம்)

अनादिनिधना

அநாதிநிதநா (296)

ஆதி, அந்தம் இல்லாதவள்.

1. ஆதி என்றால் ஜனனம். நனம் என்றால் மரணம், வள்

2. வாருணியின் கடபயாதி ஸங்க்யையின்படி ஆதி (அதி) சப்தமானது 80 என்பதைக் குறிக்கும். 80 விதமான நிதனங்கள் (மரண ஸாதனங்கள்) சொல்லப்பட்டிருக்கின்றன. அம்பாளுடைய உபாஸனையினால் இந்த 80 விதமான நிதனங்கள் (அதி நிதனங்கள்) பக்தர்களுக்கு ஏற்படாமலிருப்பதினால் அம்பாளுக்கு அனதிநிதனா என்று பெயர். அம்பாளுடைய பக்தனுக்கு ம்ருத்யு இல்லையென்று ஆசார்யாளாலும் சொல்லப்பட்டிருக்கிறது.

'சிரம் ஜீவன்னேவ க்ஷபித பசுபாச வ்யதிகர:
பராநந்தாபிக்யாம் ரஸயதி ரஸம் த்வத் பஜனவான் ||'

(ஸௌந்தர்யலஹரீ)

3. நிதன(மரண)ஸாதனங்கள் பாசங்களென்றும், வதங்களென்றும் இருவகை. அவற்றில் பாசங்கள் 52 விதங்களென்றும்,

வதங்கள் 28 விதங்களென்றும் ஆக நிதான ஸாதனங்கள் 80 என்றும் விஷ்ணு புராணம், லிங்க புராணம், ஸாங்க்ய தத்வ கௌமுதி ஸாங்க்ய காரிகை முதலியவைகளில் சொல்லப்பட்டிருக்கிறது. இதர விபரங்களை அவற்றில் பார்க்கவும்.

5

ஹரி ப்ரம்ஹ்ரேந்திர வைபவ விதா (297)

ப்ரம்ஹா, இந்திரன் இவர்களால் ஸேவிக்கப்பட்ட

டேஸ்ரீ

1. ஸ்ரீநகரத்தில் அம்பாளுடைய வாஸஸ்தானமாகிற சிந்தாமணி க்ருஹத்தைச் சுற்றியிருக்கும் ப்ராகாரங்களில் 18, 17 ப்ராகாரங்களுக்கு மத்தியில் விஷ்ணுவும், 17, 16 ப்ராகாரங்களுக்கு நடுவில் ப்ரம்ஹாவும், 15, 14 ப்ராகாரங்களுக்கு நடுவில் இந்திரன் முதலான திக்பாலகர்களும் இருந்துகொண்டு அம்பாளை ஸதா த்யானம் செய்துகொண்டிருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

'ப்ரம்ஹா விஷ்ணுஸ் தத்ர சாபுர் வாஸவோ வருணோ யம:।
வாயுரக்னி: குபேரச்ச த்வஷ்டா பூஷாச்விநௌ பக:॥
ஆதித்யா வஸவோ ருத்ரா விச்வேதேவா மருத்கண:।
ஸர்வே த்யாயந்தி தாம் தேவீம் ஸ்ருஷ்டிஸ்தித்யந்த காரிணீம்॥'
(தேவீபாகவதம்)

ஸ்ரீநகரத்தை வெகு அழகாகவும் விஸ்தாரமாகவும் லலிதா

வரத்னக்கிலம் [illegible]

தைப் பார்க்கவும்.

2. இப்படி ஹரி ப்ரம்ஹேந்திராதிகளாலும் அம்பாள் உபாஸிக்கப்படுவதால் அம்பாளுடைய பக்தர்களுக்கு இவர்களை உபாஸிக்கவேண்டியது அவசியமில்லை யென்பதும் இந்த நாமத்தின் தாத்பர்யமென்று சொல்லலாம். ஒரு யாசகன், எதையும் தரக்கூடிய சக்தியுள்ள ஒருவனிருக்கும்போது அவனிடம் போய் யாசிப்பானே தவிர மற்ற யாசகர்களை அண்டியமாட்டானல்லவா? அம்மாதிரி ஸகலவிதமான புருஷார்த்தங்களையும் கொடுக்கக் கூடிய அம்பாளைச் சரணமடைந்தவன், அம்பாளிடமிருந்து (தன் மாதிரி) அனுக்ரஹத்துக்காகக் காத்துக்கொண்டிருக்கும் இதர தேவர்களை உபாஸிப்பது அவசியமில்லை என்று சொல்லப்

பட்டது. இதே அபிப்பிராயத்தைப் பரமசிவபரமாக ஆசார்யாளும் பாஸ்கரராயரும் சொல்லியிருக்கிறார்கள்.

'ஸஹஸ்ரம் வர்த்தந்தே ஜகதி விபுதா: க்ஷுத்ரபலதா:
க மன்யே ஸ்வப்னே வா ததநுஸரணம் தத்க்ருத பலம் |
ஹரி ப்ரம்ஹாதிகமபி நிகட பாஜாம் அஸுலபம்
சிரம் யாசே சம்போ சிவ தவ பதாம்போஜ பஜனம் ||'
(சிவானந்த லஹரீ)

த்வத் தத்தைச்வர்ய பாஜ: பரமசிவ கதம்கார மன்யா: ன்
ஆசார்யாள்
ப்ரசே தேவஹீதி சக்ர த்ருஹிண ஹரிமுகான் பிக்ஷு யகான்
பிக்ஷு கோடிஹம் | (சௌந்தர்யலஹரி)

नारायणी

நாராயணீ (298)

நாராயணீ என்ற நெயரையுடையவள்.

1. நாராயணன் என்ற பதத்திற்கு சிவன் என்றும், விஷ்ணு என்றும் அர்த்தங்களுண்டு. அவரோடு ஸம்பந்தமுடையவள் நாராயணீ. நாராயணன் என்ற பதம் சிவனைக்குறிப்பதாக வைத்துக்கொண்டால் அவருடைய பத்னீ என்ற முறையில் அம்பாளை நாராயணீ என்று சொல்லலாம். அல்லது, நாராயணன் என்ற பதம் விஷ்ணுவைக் குறிப்பதாக வைத்துக்கொண்டால் அம்பாள் அவருடைய ஸஹோதரீ என்பதாலும் அவரோடு அபின்னமாக இருப்பதாலும் அம்பாளை நாராயணீ என்று சொல்லலாம்.

2. நரனெனப்படும் ப்ரம்ஹத்தினிடமிருந்து ஜலம் உண்டானதால் அதற்கு நாரமென்று பெயர். அதில் சயனிப்பதால் விஷ்ணுவுக்கு நாராயணன் என்று பெயர்.

'ஆபோ நாரா இதி ப்ரோக்தா ஆபோ வை நரஸூநவ: |
அயனம் தஸ்ய தா யஸ்மாத் தேந நாராயண: ஸ்ம்ருத: ||'
(மநுஸ்ம்ருதி)

3. நரனென்றால் ஜீவனுக்குப் பெயர். அயனம் என்றால் அடையும் இடம், கடைசியில் போய்ச்சேருமிடம் (நாந்ய: பந்தா வித்யதேऽயநாய) இந்த அர்த்தத்தில் சிவனைக் குறிப்பதாகச் சொல்லப்படும்.

'நராணாம் அயனம் யஸ்மாத் தஸ்மாத் நாராயண: ஸ்ம்ருத: |'
(ப்ரம்ஹவைவர்த்த)

4. 'நயதீதி நர: ப்ரோக்த: பரமாத்மா ஸநாதந:'

என்று தேவீ பாகவதத்தில் சொன்னபடி, ஜீவன்களை வழிகாட்டி அழைத்துக்கொண்டு போவதால் பரமாத்மாவுக்கு நரன் என்று பெயர். அவரோடு ஸம்பந்தபட்டவர்களான, அல்லது அவரிடத்திலிருந்து உண்டானவர்களான ஜீவன்கள், நாரா: அவர்கள் கடைசியாகப்போய்ச் சேர்வதினால் பரமாத்மாவுக்கு நாராயணன் என்று பெயர்.

'நராத் ஜாதானி தத்வானி நாராணீதி விதுர் புதா: |
தான்யேவ சாயனம் தஸ்ய தேந நாராயண: ஸ்ம்ருத:||'
(மஹாபாரதம்)

5. இப்போப்பட்ட துரீயமான பரப்ரம்ஹத்தை,

'ஸ: ஸ்ரீபதி. ஸ்ரீபதி ச பார்வதீபதி:'

என்று காசி கண்டத்தில் சொல்லியிருக்கிறது. (அல்லது லக்ஷ்மீ, பார்வதீ இருவரும் அபேதமென்பதான அர்த்தத்துடன் இம் மாதிரி சொல்லப்பட்டதாகவும் சொல்லலாம்.)

6. 'நாராயண் ஸஹசராய நம: சிவாய'

என்பதற்கு வியாக்யானம் செய்திருப்பதையொட்டி நாராயண் ரென விஷ்ணுவின் ஸஹோதரியானபடியால் அம்பாளுக்கு நாராயணீ என்று பெயர் வந்ததாகவும் சொல்லலாம். அம்பாளுக்கு "விஷ்ணு ஸ்வஸா" என்றும், (280-வது நாமமான) பத்மநாப ஸஹோதரீ என்றும் பெயர்களுண்டு.

7. நாராயணரென விஷ்ணுவும் அம்பாளும் அபேதமான படியால் அம்பாளுக்கு நாராயணீ என்று பெயர்.

"அஹம் நாராயணீ கௌரீ ஜகன்மாதா ஸகாதநீ |
விபஜ்ய ஸம்ஸ்திதோ தேவ: ஸ்வாத்மாகம் பரமேச்வர: ||
ந மே வித்ய: பர: தத்வம் தேவாத்யா ந மஹர்ஷய: |
ஏகோ(அ)ஹம் வேத விச்வாத்மா பவாநீ விஷ்ணுரேவ ச ||'
(கூர்ம புராணம்)

அம்பாளும் அபேதமென்கிற விஷயம் நீல கண்ட தீக்ஷிதரவர்கள் இயற்றிய "நீலகண்ட பூ" அனேக இடங்களில் சொல்லப்பட்டிருக்கிறது.

'சிவா கோரா சேதி ச்ருதிஷு விதிதே யே மம தநு
தயோராத்யா மூர்தி: பரமரமணீயா த்வமஸி மே |
த்வமஸ்யர்த்தம் தேவோ த்வமஸி வதநம் தக்ஷிணமிதி
த்வயி ப்ரீயே யாவத் தவ பவதி தாவச்ச விதிதம் ||'

"அமும் யம் வீக்ஷத்வே புருஷம் அரவிந்தேக்ஷணமஸௌ
ஸவித்ரீ ஸர்வேஷாமபி ச பவதாம் மத் ப்ரியதமா |

மதாக்ஞாம் அஸ்யாக்ஞாம் மம பஜநமேதஸ்ய பஜநம்
விஜ்ஞானந்தே யூயம் விநமத ததாஸ்மின் மயி யதா ॥'
'பவாந்தி பவாநீதி பச்ய பேத: கியாந் அயம் ।
விக்ரஹம் ப்ராப்தயோரேகம் விச்லேஷ: க இவாவயோ: ॥'

இவ்விதமான அபேதமானது மிகவும் ப்ரஸித்தமாகச் சொல்லப்பட விஷயம். இது இந்த ஸஹஸ்ரநாமத்திலேயே "சோஷிக்ந்ய பூபிணே," "மூகுந்தா," "விஷ்ணு ரூபிணீ" முதலிய நாமங்களில் சொல்லப்பட்டிருக்கிறது.

'கதாசித் லலிதேசானீ புண்ய ரூபா க்ருஷ்ண விக்ரஹா ।
தேவ்யுவாத தவிநோதேந கதேராதி விவசம் ஜகத் ॥'
'யோ(அ)யம் சகாஸ்தி ககநார்ணவ ரத்ன காந்தி:
யோ(அ)யம் ஸுராஸுரகுரு: புருஷ: புராண: ।
யத்வா மமார்த்தமிதம் அந்தகஸூதநஸ்ய
தேவி த்வமேவ ஸ இதி ப்ரதிபாதயந்தி ॥'

8. "நாராயணீ ஸுபார்ச்வே து த்ரிகூடே பத்ரஸுந்தரீ" என்று பத்ம புராணத்தில் சொல்லியபடி ஸுபார்ச்வ கோத்ரத்திலிருக்கும் அம்பாளுக்கு நாராயணீ என்று பெயர்.

नादरूपा

நாதரூபா (209)

நாதத்தில் ரூபத்தையுடையவள்.

1. ஹ்ரீம்காரம் முதலியவைகளில் பிந்துவுக்குமேல் சுட்டும் வர்ணங்கள் (அக்ஷரபேதங்கள்) ஒன்றைவிட ஒன்று ஸூக்ஷ்மமாக இருப்பதாகச் சொல்லப்படும். அவை அர்த்தசந்த்ர, ராதிநீ, நாத, நாதாந்த, சக்தி, வ்யாபிநீ, ஸமநா, உன்மநீ. இவற்றில் மூன்றுவதான நாதத்தை மஹாஸ்வச்சந்ததந்த்ரத்தில்

'ரோதிந்யாக்யம் யதூர்த்தம் தே நாதஸ்தஸ்யோர்த்வ ஸர்ஸ்ருக்: ।
பத்மகிஞ்ஜல்கஸங்காச: ஸூர்யகோடி ஸமப்ரப: ॥'

என்று ஆரம்பித்து வர்ணித்துவிட்டு அங்கு இருக்கும் அம்பாளுடைய ரூபத்தை,

தஸ்யோத்ஸங்க கதாம் ஊர்த்வகாமிநீம் பரமாம் சிவாம் ।

என்பதாக வர்ணிக்கப்பட்டிருக்கிறது.

2. அல்லது, நாதத்தையே ரூபமாக உடையவளென்றும் சொல்லலாம்.

नामरूपविवर्जिता

நாம ரூப விவர்ஜிதா (300)

நாமரூபங்களிலிருந்து விடுபட்டவள்.

1. அதாவது நாமரூபங்களைக் கடந்தவள், அவற்றுக்கு அப்பாலிருப்பவள் என்று அர்த்தம்.

2. ஜகத்தானது சித், அசித் இவைகளுக்குள் அடங்கிய தாய் ஐந்து விதமான பிரிவுகளாக இருக்கிறது. அவை—ஸத், சித் ஆனந்தம், நாமம், ரூபம் என்பவை. இவற்றில் முதல் மூன்றும் பரப்ரம்மத்தின் ரூபம். மற்ற இரண்டும் ஜகத்தின் ரூபம்.

'அஸ்தி பாதி ப்ரியம் நாம ரூபம் சேத்யம்ச பஞ்சகம் |
ஆத்ய த்ரயம் ப்ரம்ம ரூபம் ஜகத்ரூபம் ததோ த்வயம் |

நாமரூபங்கள் மித்யையான ஜகத்தைச் சேர்ந்தவையாகையால் பரப்ரம்மமான அம்பாள் அவற்றைக் கடந்திருப்பதாகச் சொல்லப்பட்டது.

3. ஆகாசோ ஹ வை நாம நாமரூபயோர் நிர்வஹிதா
தே யதந்தரா தத் ப்ரம்ம

என்று சாந்தோக்யத்தில் சொன்னபடி சித்சக்தி ரூபமான ஆகாசத்தினுல் நாமரூபங்கள் நிஷ்கிஷிட்டால் பாக்கியிருப்பது ப்ரம்மமென்று சொல்லப்பட்டது.

ஹ்ரீங்காரி

ஹ்ரீம்காரீ (301)

ஹ்ரீம் என்ற (புவனேச்வரீ) பீஜாக்ஷரூபமாக இருப்பவள்.

1. ஹ்ரீ என்றால் லஜ்ஜை, வெட்கம் அதைச் செய்பவள் ஹ்ரீம்காரீ. அம்பாள் ஸகல ஜீவன்களிடமும் லஜ்ஜாரூபமாக இருந்துகொண்டிருப்பதாக,

'யா தேவி ஸர்வபூதேஷு லஜ்ஜா ரூபேண ஸம்ஸ்திதா |
நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமோ நமஃ ||

என்று தேவீமாஹாத்மியத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

2. ஸ்ருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரங்களைச் செய்வதால் ஹ்ரீம்காரீ என்று அம்பாளுக்குப் பெயர் என்பதாக ஸிவதந்த்ர ரஹஸ்யத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

3. 'ஹரீம்' என்பதே அம்பாளுடைய நாமங்களில் மூன்று என்பதை ஸௌபாக்யஹ்ருதயத்தில் காணலாம்.

4. பஞ்சதசி மந்த்ரத்தில் சிவாக்ஷரங்களைம்றும் சக்த்யக்ஷரங்கள் என்றும் இரண்டு இருப்பதாகச் சொல்லப்பட்டு

ஹ்ரீம்காரபீஜமானது உபயாத் மகமென்று (சிவசக்தி ஐம் ரீமளனமானதென்று) சொல்லப்பட்டிருக்கிறது. இதின் விபரங் களை ஸ்ரீ லலிதாத்ரிசதியில் பார்க்கவும்.

வீமதி (302)

ரமத்

லஜ்ஜையோடு கூடியவள்.

அப்பாளைப்பற்றி ச்ருதியில் "லஜ்ஜாமதீ துஷ்டரிஷ்டா சபுஷ்டி" என்று சொல்லப்பட்டிருக்கிறது.

ஹ்ருத்யா (303)

ஹ்ருத்யா

ஹ்ருதயத்திலிருப்பவள்.

1. அதாவது பக்தர்களுடைய (முநீச்வரர்களுடைய) ஹ்ருத கமலத்திலிருப்பவள்.

2. அல்லது ரமணீயமானவள் என்றும் சொல்லலாம்.

ஹேயோபாதேயவர்ஜிதா (304)

ஹேயோபாதேய வர்ஜிதா

உபேக்ஷிக்கவேண்டியது, ஒப்புக்கொள்ளவேண்டியது, இவை ஒன்றும் இல்லாதவள்.

ப்ரவ்ருத்தி, நிவ்ருத்தி இவைகளைச் சொல்லும் சாஸ்த்ரங் கள் அவித்யையின்காரணமாக அறிவில்லாதவர்களுக்கு ஏற்பட்ட வைகளானதாலும், அம்பாள் (சின்மயமாய்) ஞானஸ்வரூபிணியாக இருக்கிறபடியாலும் அவைகளுக்கு அம்பாளிடம் யாதொரு ஸம்பந்தமுமில்லையென்பது தாத்பர்யம்.

ராஜராஜார்சிதா (305)

ராஜராஜனால் உபாஸிக்கப்பட்டவள்.

1. மனு, குபேரன் இவர்களுக்கு ராஜராஜன் என்ற பெயர். அம்பாளுடைய உபாஸகர்களில் முக்யமாகப் பன்னி ரண்டு பெயர்களிருப்பதாகவும் அவர்களில் மனு, சந்த்ரன், குபே ரன் இவர்கள் சேர்ந்தவர்களென்றும் ஏற்கனவே வந்த "மனு வித்யா", "சந்த்ரவித்யா" என்ற நாமங்களில் சொல்லப்பட்டிருக்

றது. இந்தப் பன்னிரண்டு உபாஸகர்களும் பன்னிரண்டு விதமாக அம்பாளை உபாஸனை செய்தார்களென்றும் அதிலிருந்து ஸ்ரீவித்யையானது பன்னிரண்டு பேதங்களோடு கூடியது என்றும் அவைகளின் விபரங்களும் "நாகார்ணவம்" முதலிய க்ரந்தங்களில் சொல்லப்பட்டிருக்கிறது.

2. மேலே சொல்லியதை அநுஸரித்து, மனு, குபேரன், இவர்களால் உபாஸிக்கப்பட்ட ஸ்ரீவித்யையின் பேதங்களின் ரூபமாக இருப்பவளென்றும் அர்த்தம் சொல்லலாம்.

3. அம்பாளுடைய சிந்தாமணி க்ருஹத்தைச் சுற்றியிருக்கும் ப்ராகாரங்களில் 14, 15-ப்ராகாரங்களுக்கு நடுவில், மாணிபத்ரன் முதலான யக்ஷகணங்களுடன் குபேரன் இருந்துகொண்டு அம்பாளை உபாஸிப்பதாக 'லலிதாஸ்தவ ரத்ன'த்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

'தல்லோக பூர்வபாகே தநதம் த்யாயாமி சேவதிகுலேசம் |
அபி மாணிபத்ர முக்யாந் அம்பா சரணவலம்பிநோ யக்ஷாந் ||'

ராக்ஞி (306)

ராணியாக இருப்பவள்.

அம்பாள் ராஜராஜேச்வரரான மஹாகாமேச்வருடைய பட்ட மஹிஷியானதால் ராக்ஞீ என்று பெயர்.

रम्या

ரம்யா (307)

லலிதாத்தையுடையவள்.

राजीवलोचना

ராஜீவலோசநா (308)

ராஜீவத்தைப்போன்ற கண்களையுடையவள்.

1. ராஜீவமென்ற பதத்திற்கு,

'ராஜீவாக்ஷா ம்ருகே மத்ஸ்யே பத்மே ராஜோபஜீவிநி'

என்றபடி மான், மீன், தாமரைபுஷ்பம் என்ற அர்த்தங்களுண்டு. மான் மீன் இவைகளின் கண்களைப்போன்ற, அல்லது தாமரைபோன்ற கண்களையுடையவள் என்று அர்த்தம்.

2. ராஜீவபதத்திற்கு ராஜாவை அண்டியிருப்பவள் என்றும் அர்த்தமுண்டு. தன் புருஷனான ராஜராஜேச்வரரை (மஹா

காமேச்வரரை) அண்டியிருக்கும் பக்தர்களை அனுகூலமாகப் பார்ப்பதினால் அம்பாளுக்கு ராஜீவலோசநா என்று பெயர் வந்ததாகவும் சொல்லலாம்.

रञ्जनी (309)

(பக்தர்களை) ஸந்தோஷப்படுத்துகிறவள்.

அல்லது தான் ஸமீபத்திலிருப்பதால் தன்னுடைய நிறத்தினால் சுத்தஸ்படிகம் போன்ற நிறத்தையுடைய பரமசிவனை நிகப்பு நிறமுள்ளவராக அம்பாள் செய்வதால் ரஞ்ஜநீ என்று பெயர் வந்ததாகவும் சொல்லலாம். அம்பாளுடைய நிறம் நிகப்பு என்பது "அருணம் கருணதரங்கிதாக்ஷீம்", "ஜபாகுஸுமபா ஸாதாம்" "ஜபாபுஷ்ப நிபாக்ருதி:" என்று பல இடங்களில் சொல்லப்பட்டிருக்கிறது.

रमणी (310)

(பக்தர்களோடு) விளையாட்டாகப் பழகுகிறவள்

"ஜகந்நித் க்ரீடந் ரமமாண:" என்று

ல்

சொல்லப்பட்டிருப்பதைக் கவனிக்கவும்.

रम्भा (311)

ஆஸ்வாதிக்கத் தகுந்தவள்.

பரப்ரம்மமானது 'ரஸோ வை ஸ:' என்று ச்ருதியில் சொன்னபடி ஸச்சிதானந்தஸ்வரூபமானபடியால் அம்பாளை 'ரம்பா' என்று சொன்னது.

रशनाकिङ्किणिमेखला

रशना किङ्किणी मेखला (312)

தும் சலங்கைகளுடன் கூடிய ஒட்டியாணத்தை

யுடையவள்

ஸ்ரீ மாதா ஆசார்யாளாலும் 'க்வணத் காஞ்சீ தாமா' என்று ஸௌந்தர்யலஹரியில் அம்பாளை வர்ணிக்கையில் சொல்லப்பட்

'க்வணத் காஞ்சிதாமா கரிகலபகும்ப ஸ்தனபர
பரிக்ஷீண மத்யே பரிணத சரச்சந்த்ர வதனா |
தநுர்பாணான் பாசம் ஸ்ருணிமபி ததாநா கரதலை:
புரஸ்தாத் ஆஸ்தாம் ந: புராரிதது ராராஹோ புருஷிகா ||

रमा (313)

ரமா

லக்ஷ்மீ ஸ்வரூபமாக இருப்பவள்.

ஸ்ரீதலம்ஹிதையிலும் இம்மாதிரி 'லக்ஷ்மீ வாகதிரூபேண சர்த்தகீவ விபாதி யா' என்று சொல்லப்பட்டிருக்கிறது.

राकेन्दुवदना (314)

ராகேந்து வதநா

பூரண சந்த்ரன்போன்ற முகத்தையுடையவள்.

रतिरूपा (315)

ரதிரூபா

ரதியின் ரூபமாக இருப்பவள்.

1. ரதியானவள் காமனுடைய பத்நிபாகையாலும், துர்வாஸர் காமேச்வரருடைய பத்நிபாகையாலும் ரதிரூபா என்று சொல்லப்பட்டது.

2. ரமா, ராகேந்துவதநா என்று நாமங்களிலிருந்து ரதிரூபா எனப்படும் காமகலாரூபம் ஏற்படுவதாகச் சொல்லப்படும்.

रतिप्रिया (316)

ரதிப்ரியா

ரதியினிடத்தில் ப்ரியமுள்ளவள்.

ரதி: என்றால் ஸம்போகம் என்ற அர்த்தமும் உண்டு.

रक्षाकरी (317)

ரக்ஷாகரீ

காப்பாற்றுகிறவள்

ரக்ஷை என்றால் பஸ்மத்திற்கும் பெயர். அம்பாள் ஸ்ரீ சக்ர (ரக்ஷணம்) ஸம்ஹாரம் (பஸ்மீகரணம்), இவைகளைச் செய்வதால் ரக்ஷாகரீ என்ற பெயர்.

राक्षसघ्नी

ராக்ஷஸக்ந்

(318)

ராக்ஷஸர்களை ஸம்ஹாரம் செய்கிறவள்.

'ஸந்தாவதீ புவன ஸந்தாரணே' என்றபடி அம்பாள் ஸகல புவனங்களையும் காப்பாற்றுகிறதாக பிரதிக்ஞை செய்திருக்கிறது போல அவற்றிற்குக் கெடுதல் செய்ய எத்தனிக்கும் ராக்ஷஸர்களை ஸம்ஹாரம் செய்யவும் அவதரிப்பதாகச் செய்திருக்கும் ப்ரதிக்ஞையை தேவீமாஹாத்ம்யத்தில் சொல்லியிருக்கிறது.

'இத்தம் யதா யதா பாதா தாநவோத்தா பவிஷ்யதி |
ததா ததாவதீர்யாஹம் கரிஷ்யாம்யரி ஸம்க்ஷயம் ||

रामा

ராமா

(319)

ஸ்தீர் மாத்ரமான ஸ்வரூபத்தையுடையவள்.

1. லோகத்திலிருக்கும்படியான ஸமஸ்த ஜீவராசிகளிலும் ஸ்திரீலிங்கவாச்யமானவை யெல்லாம் அம்பாளுடைய அம்சங்களென்றும், பும்லிங்க வாச்யமானவைகளெல்லாம் பரமசிவனுடைய அம்சங்களென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. ஆக ஸ்திரீ புருஷர்களெல்லாரும் முறையே அம்பாள், பரமசிவன் இவர்களுடைய விபூதிகள் (ஆவிர்பாவங்கள்) என்று சொல்லப்படும்.

'ஸ்திரீலிங்கம் அகிலம் கௌரீ' (லிங்க புராணம்)

'சங்கர: புருஷ: ஸர்வே ஸ்திரிய: ஸர்வா மஹேச்வரீ |
பும்லிங்க சப்தவாச்யா யே தே ச ருத்ரா: ப்ரகீர்த்திதா: |
ஸ்த்ரீலிங்க சப்தவாச்யா யா: ஸர்வா கௌர்யா விபூதய: ||
ஏவம் ஸ்த்ரீபுருஷா: ப்ரோக்தா: தயோரேவ விபூதய: ||'

(லிங்க புராணம்)

'யத் கிஞ்சித் த்ரிஷு லோகேஷு ஸ்த்ரீரூபம் தேவி திஷ்டதே |
தத்ஸர்வம் த்வத்ஸ்வரூபம் ஸ்யாத் இதி சாஸ்த்ரேஷு நிச்சய: ||'

(ப்ரம்ஹவைவர்த்தம்)

இதேமாதிரி லக்ஷ்மீ, ஸரஸ்வதி இவர்களைப்பற்றி விஷ்ணுபுராணத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

'தேவதிர்யங் மனுஷ்யாதௌ பும்ஸாம்ஸி பகவான் ஹரி: |
ஸ்த்ரீ ஸாம்ஸி லக்ஷ்மீர் மைத்ரேய ஸாஸ்ருஜத்யோர் விதேருத பரம் ||

2. இந்தக் காரணத்தினால்தான் ஸ்திரீகளிடத்தில் அன்புடனும் மரியாதையுடனும் நடந்துகொள்ளவேண்டுமென்றும்,

அவர்களை சந்தோஷப்படுத்த வேண்டுமென்றும், அவர்கள் ஸந்தோஷப்பட்டால் தேவர்களெல்லோரும் ஸந்தோஷமடைந்து குலம் வ்ருத்தியடையுமென்றும், அப்படிக்கில்லாமல் அவர்களைத் துக்கமடையும்படிச் செய்தால் தேவர்களுக்குக் கோபமேற்பட்டு குலமே நசித்துவிடுமென்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

ஸ்த்ரீயஸ்துஷ்டா: ஸ்த்ரீயோருஷ்டா துஷ்டாருஷ்டாச்ச தேவ
வர்த்தயந்தி குலம் துஷ்டா: நாசயந்த்யபமானிதா: ll [தா:
(ப்ருஹத் பராசரஸ்ம்ருதி)

இதேமாதிரி மனுஸ்மிருதி முதலியவைகளிலும் சொல்லப்பட்டிருக்கிறது.

3. போகிகள் அம்பாளுடைய த்யானத்திலும் உபாஸனையிலும் ரமிப்பதால் (ஸந்தோஷமாக முயற்சிப்பதால்) அம்பாளுக்கு ராமா என்று பெயர் வந்ததாகவும் சொல்லலாம்.

रमणलम्पटा

ரமண லம்பட (320)

தன்னுடைய பதியுடன் ரமிப்பதில் ஆசையுடையவள்.

1. அம்பாள் ஸமஸ்த ஸ்திரீகளுடைய ரூபமாக இருப்பதால், அந்தந்த புருஷனுடன் ரமிப்பதில் ஆசையுள்ளவளாக இருப்பது அம்பாளுடைய அம்சமாக இருப்பதின் காரணமாகத்தான் என்று சொல்லப்பட்டது. அதாவது ஸ்திரீகளுடைய பாதிவ்ரத்யமானது அவர்கள் 'ஸதீரூபம் அசரமே' என்று சொல்லப்பட்ட அம்பாளுடைய அம்சமாக இருப்பதினால்தான் ஏற்படுகிறது என்று தாத்பர்யம்.

2. ரமணம் என்றால் ஸம்போகம், க்ரீடை என்று அர்த்தம்.

काम्या

காம்ய (321)

1. முமுக்ஷுக்கள் ஞானத்தின் மூலமாக அம்பாளுடைய ஸாயுஜ்யத்தை அடைய விரும்புவதால் அம்பாளுக்கு காம்யா என்று பெயர்.

2. அல்லது, கிருஷ்ண பக்ஷத்து தவாதசி இரவுக்கு காம்யா என்று பெயர். அதின் ஸ்வரூபமாக அம்பாள் இருப்பதால் காம்யா என்று அம்பாளுக்குப் பெயர்வந்ததாகவும் சொல்லலாம்.

कामकलारूपा

காமகலாரூபா (332)

காமகலா ரூபமாக இருப்பவள்.

1. யாக ஸ்வரூபத்தைப் பற்றி ஏற்கனவே வாக்ய 89-ல் விளக்கமாக "ஸர்வ யாகமயீ" என்பதில் விளக்கப்பட்டுள்ளது. அந்த யாகங்கள் முன்னர் பிரம்மனுக்கு வாக்தேவியின் மூலம் சொல்லப்பட்டது. அவைகளில் முதலாவதாக பிரம்மனுக்கு காமமென்னும், கலந்திருக்கிற வாக்தேவிகளுக்கு காமகலா என்னும் பெயரிருப்பதினால் அவை காதுர் பிரம்மத்திற்கு முன்னால் பெயர், இது அம்பாளுடைய ஸ்வரூபத்தைப் பற்றியும் இதனுடைய ஸ்வரூபத்தைப்பற்றியும் மற்ற விபாகங்களைப் பற்றியும் "காமகலா விலாஸம்" என்ற க்ரந்தத்தில் பார்க்கலாம்.

2. காமேச்வருடையவும் காமேச்வரியுடையவும் ஸமமான ரூபமாக இருப்பதால் அம்பாளுக்கு காமகலா என்ற பெயர் வந்ததாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

'தஸ்ய காமேச்வரஸ்ய காமேச்வர்யாச்ச ரூபம்
ஸமாஸ்ய ஸர்வஸாஸ்ய சக்யாத்தா காமகலேதி ஸா'

(நித்யா ஷோடசார்ணவம்)

3. காமா என்ற பெயருடனும் கலா ரூபமாகவும் இருப்பதால் அம்பாளுக்கு காமகலா என்ற பெயர் வந்ததாகவும் சொல்லப்படுகிறது:—

'காமாக்ருத்யாகதா ரூபாத் பரா ஸாத்ரிபுரா பரா
காமாக்யா ப்ரதமே பக்ஷே த்ரயீ தேஜோ பலாத்மிகா
காமாந்தா காமினீ காம்யா காமேசாங்கநிவாஸினீ
காமாங்கதாகிலா யஸ்யாத் காமாக்ஷ்யா தேந கீர்த்யதே'

(காமாக்ஷி ஸ்தவம்)

कदम्बकुसुमप्रिया

கதம்ப குஸுமப்ரியா (333)

கதம்ப புஷ்பங்களில் ப்ரியமுடையவள்.

कल्याणी

கல்யாணீ

மங்கள ஸ்வரூபமானவள்.

1. சபரத்மகபோன வாக்குக்கு கல்பா எனப் பெயர். அது ஒரு உபாதிபஸ்ரு ஹேவதோன் அப்போ அர்த்தத்துக் கல்பாவோ எனப் பெயர்.

2. மலபாசலத்திலிருந்து அப்போ அருகு கல் எனப் பெயர் எனப்படுகின்ற கல்பா மலபாரில் எனும் பகுதியிலிருந்து தருகிறது.

கிரிதாகிருதி

நடுத்தரமான (3:5)

நடுத்தரமான உருவமுடைய இருப்பவன்

கருமையும் மிகுந்த நிறமும் கொண்டவனாய் இருப்பவன். இவன் நாடி நரம்புகள் தெரியும் படியான உடலமைப்பைக் கொண்டவன்.

கருணாகரன்

கருணை யுள்ளம் (3:6)

கருணை நெஞ்சத்தையுடைய மனம் கொண்டவன்

எனும் பொருள் தரும். கருணையினால் தனது சொத்துக்களை மற்றவர்களுக்கு அள்ளிக் கொடுப்பவர்களை இப்பெயர் குறிக்கும். அதனால் மனதளவில் மிகவும் கருணை உள்ளம் கொண்டவர்களாகவும், அபாரமான கருணை மிகுந்தவர்களாகவும் இருப்பர்.

கலாவதி

கலாவதி (3:7)

கலைகளையுடையவள்.

கலைகளைப் பற்றி எந்தவொரு விளக்கமும் இல்லாத போதும் - ஆனால் கலைகளில் ஒரு சில கலைகளாவது எனும் பொருள் தரும் வகையில் இப்பெயர் அமைந்துள்ளது.

கலாலயா

கலாலயா (3:8)

கலைகளையே நிரம்பவுடையவளாக உடையவள்.

1. அப்படியான [illegible] (மேலே சொல்லிய) கலைகளும் நிறைவாக [illegible] பட்டவர். இவ்விதமாக [illegible]

'ஸுமுன் மீலத் ஸம்வித் கமல மகரந்தைக ரஸிகம்
பஞ்ச ஹம்ஸத்வந்த்வம் கிமபி மஹதாம் மானஸசரம் |
மதாலாபாத் அஷ்டாதசகுணித வித்யா பரிணதி:
யதாதத்தே தோஷாத் குணமகிலம் அத்ப்ய: பய இவ ||

என்று லலிதாம்பிகையின் லஹரியில் சொல்லியிருக்கிறார்கள்.

2. அல்லது மதுரமான பேச்சை உடையவள் என்றும் அர்த்தம் சொல்லலாம். அம்பாளுடைய பேச்சின் இனிமை பைப்பற்றி ஏற்கனவே வந்த 27-வது நாமமாகிய 'நிஜஸல்லாப மாதுர்ய விநிர்பர்த்ஸித கச்சபீ' என்பதில் சொல்லப்பட்டிருக்

3. கம் என்றால் ப்ரம்மம். லலா என்றால் எச்சில். அம்பாளுடைய க்ருபையிருந்தால் எச்சில் வருவதுபோல் அவ்வளவு ஸுலபமாக ப்ரம்மத்தை அடையமுடிவதாலும், லலா ஜலப் ராயமாக ப்ரம்மத்தை அடைய்க்கூடுமானதாலும் அம்பாளுக்கு கலாலாபா என்று பெயர் வந்ததாகவும் சொல்லலாம்.

कान्ता

காந்தா (329)

அழகுள்ளவள்.

1. அல்லது மேலே சொல்லியபடி கம் என்ற பதத்திற்கு ப்ரம்மம் என்று அர்த்தமிருப்பதாலும் அம்பாள் முடிவில் ப்ரம் மமாகவே இருப்பதாலும், காந்தா என்று பெயர் வந்ததாக வும் சொல்லலாம்.

2. கிருஷ்ண பகவத்திய எகாதசியின் ராத்திரிக்கு காந்தா என்று பெயர். அந்த ஸ்வரூபமாக அம்பாள் இருப்பதால் காந்தா என்று பெயர்.

कादम्बरीप्रिया

காதம்பரீப்ரியா (330)

உத்தமமான மத்யத்தில் ப்ரியமுள்ளவள்.

1. மத்யம் முதலியவைகளை மஹாதேவிக்கு நிவேதனம் செய்துவிட்டுப் பிறகு ஸ்வீகரிக்கலாமென்று சொல்லப்பட்டிருக் கிறது.

'பரிஸ்ருதம் ஹவிராத்யம் பலம் ச
பக்தானி யோனே: ஸ பரிக்ருதானி |

நிவேதயன் தேவதாயை மஹத்யை
ஸ்வாத்மீக்ருத்ய ஸுக்ருதி ஸித்திமேதி ॥ (த்ரிபுரோபநிஷத்)

இம்மாதிரி உபாஸனையானது அனைவகளை வழக்கமாக ஸ்ரீ கரிப்பவர்களுக்குத்தான் ஏற்பட்டது என்று சொல்வதும் உண்டு.

वरदा

வரதா (331)

வரங்களைக் கொடுப்பவள்.

1. அதாவது ப்ரம்மா, விஷ்ணு முதலான பக்தர்களுக் கெல்லாம் அவர்கள் விரும்புகிற ஸகலவிதமான வரன்களையும் அம்பாள் கொடுப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

2. கைகளால் காட்டப்படும் முத்ரைகளில் அபயம், ஆபத்து இவைகளிலிருந்து காப்பாற்றுவதாகக் காட்டும் முத்ரைக்கு அபய மென்றும், ஸகல அபீஷ்டங்களையும் கொடுப்பதாகக் காட்டும் முத்ரைக்கு வரதமென்றும் பெயர். அபயமுத்ரை வலதுகையிலும் வரதமுத்ரை இடதுகையிலும் காட்டப்படுவது வழக்கம்.

3. தேவர்கள், அசுரர்கள், முனிவர்கள் முதலிய எல்லாருக்கும் வேண்டிய ஸகல வரன்களையும் கொடுப்பதாக அம்பாள் தன் கையில் எப்போதும் காட்டிக்கொண்டிருப்பதாக மத்ஸ்ய புராணம் பத்மபுராணம் இவைகளில் சொல்லப்பட்டிருக்கிறது.

'யச்சாஹம் உக்தவானஸ்ய உத்தராகரதாம ஸுர |
உத்தாரேண வரத: பாணி ஏஷ தேவ்யா: ஸமர்பித: |
ஸுராஸுர முனிப்ராத வர தாயம் பவிஷ்யதி ॥

லோகத்தில் ஸாதாரணமாகக் கொடுப்பது கைகளாலாகையால் இங்கு அம்பாள் வரன்களைக் கைகளால் கொடுப்பதாகச் சொல்லப்பட்டது. வாஸ்தவத்தில் அம்பாள் கோரிய வரங்களெல்லாம் கொடுப்பதில் வரதா என்ற பெயர் ஏற்பட்டதே தவிர கையில் வரத முத்ரையைக் காட்டுதில்லை. அம்பாளுடைய ரூபத்தை த்யானம் செய்யும்போது அபயமாதா முதலானவர்களுடன் த்யானம் செய்வது வழக்கமில்லை. அம்பாளுடைய நாலுகைகளிலும் பாசாங்குச சாபபாணங்களிருப்பதாகவே த்யானம் செய்வது வழக்கம். ஏனென்றால் இதர தேவதைகளைப்போலன்றி தான், அபயம், வரம், இவைகளைக் கொடுப்பதைத் தன் ஸ்வபாவத்தின் மூலமாகக் காட்டவேண்டிய அவசியம் அம்பாளுக்கு இல்லையென்றும், அனைவர்களுக்கும் கொடுப்பதற்கு அம்பா

ஸ்ரஷ்டாவை பாதுகாக்கிறான் ஸம்ஹாரமூர்த்தியாகவும் இருக்கிறான் என்று சொல்லப்படுகிறது. இதர தேவதைகள் தங்கள் கைகளால் கொடுப்பதை அம்பாள் தன் கால்களாலேயே கொடுக்கிறாள் என்பதும் அதிலும் அம்பாள் ஒருவனை வேண்டப்பட்ட அளவுக்கு அதிகமாகவே வரங்களைக் கொடுக்கிறாளென்றும் சொல்லப்பட்டதும் இதையேதான் ஆசார்யாள்,

'த்வத்பாதன்யஸ ப்ரணதவ்யக்தி அபயவரதோ நாவந்தகணா:
த்வத்பாதாப்ஜ ஸ்வரஸபி ப்ரகடித வரதாபீத்யபிர்யாத:
பத்மத்ராணாதுல்ய தரதுல பலபடி சதவாஞ்சாஸமதிகம்
சரண்யே லோகானாம் தவ ஹி சரணாவேவ நிபுணௌ'

என்று 'ஸௌந்தர்யலஹரி'யில் வர்ணித்திருக்கிறார்கள்.

4. அம்பாளுக்கு வரதா என்ற பெயர் வந்ததைப்பற்றி

'வராங்குச்யை நம: ஸுராதிப்யை நம: காமான் பூரயதித்ரை நம:'

தாதுர் விருஞ்ச வரதேன பதோரகத்தஸ் தேன ஸ்ரீ வரதா ஸ்மிருதா'

என்று தேவீ பாகவதத்திலும்,

'நவம்யாம் ச ஸதா பூஜ்யா ஜிதேந்த்ரியை தேவீ ஸமாதிபி:
வரதா ஸர்வலோகானாம் பவிஷ்யதி ந ஸம்சய:'

என்று வராஹ புராணத்திலும் சொல்லப்பட்டிருக்கிறது.

वामनयना

வாமநயனா (332)

அழகான கண்களையுடையவள்.

1. அல்லது அழகான ப்ரமாணங்களோடு கூடியவள் என்று சொல்லலாம். [ப்ரமாணம் என்ற பதத்திற்கு அறிவும் மிதம், ஆக்ருதி, ஆக்ஞை முதலான அர்த்தங்களுண்டு.]

2. அல்லது, வாமம் எனப்படும் உபாஸனா மார்க்கத்தில் பக்தர்களை அழைத்துக்கொண்டு போவதால் வாமநயனா என்ற பெயர் வந்ததாகவும் சொல்லலாம்.

3. கர்மாவுக்கு ஏற்படும் பலனுக்கு வாமமென்ற பெயர். கர்மாவின் பலன்களை அடையும்படி செய்வதால் அம்பாளுக்கு வாமநயனா என்ற பெயர் வந்ததாகவும் சொல்லலாம். ஏற்கனவே வந்த 'புண்யா புண்ய பலப்ரதா' என்ற நாமத்தையும் த்ரிசதியில் வரும் 'கர்ம பலப்ரதா' என்ற நாமத்தையும் இங்கு கவனிக்கவும்.

वारुणीमदविह्वला

வாருணீமத விஹ்வலா (333)

வாருணீ என்ற மத்யத்தைப் பானம் செய்வதினால் ஏற்படும் ஆனந்தத்தினால் மெய் மறந்திருப்பவள்.

1. வாருணீ என்பது பேரீச்சையிலிருந்து உண்டாகும் ஒருவிதமான மத்யம். அது வருணனுக்கு ப்ரியமானதால் அதற்கு வாருணீ என்று பெயர். 'விஹ்வல' என்றால் பாஹ்ய பதார்த்தங்களை மறந்திருப்பது. இதனால் அம்பாள் ஸ்வாத்மானந்தத்தில் ஈடுபட்டிருப்பது சொல்லப்பட்டது. இதையே தான் பின்னால் வரும் 878-வது நாமமான "ஸ்வாத்மாராமா" என்பதில் சொல்லப்பட்டிருக்கிறது.

2. "உபாயஸ்தே ஸ்வயம் காந்த்யா யோ வாருண்யா ச மூர்த்தயா" என்று விஷ்ணு புராணத்தில் சொல்லியபடி ஆதி சேஷனை வாருணீ மத்யத்தினால் உபாஸனை செய்வதால் அவருக்கு வாருணீமான் என்று பெயர். அவர் பதினாலு லோகங்களையும் தம் ஆயிரம் தலைகளால் தாங்கிக்கொண்டிருப்பதாகச் சொல்லப்படும். அப்படிச் சுமந்துகொண்டிருப்பதில் அவருக்கு விஹ்வலம் (களைப்பு மயக்கம்) ஏற்படாமலிருக்கும்படி அம்பாள் செய்வதால் வாருணீ மத விஹ்வலா என்று பெயர்.

வாருணீமத், அவிஹ்வலா என்று பதத்தைப் பிரிக்கவேண்டும். அம்பாளுடைய பாததூளிகளில் ஒன்றைக்கொண்டு ப்ரம்மாவானவர் ஸகல லோகங்களையும் ஸ்ருஷ்டிக்கிறார் என்றும் அந்த லோகங்களை சௌரியானவர் (ஆதிசேஷன்) தன் ஆயிரம் தலைகளினால் எப்படியோ கஷ்டப்பட்டுக்கொண்டு (கதமபி) தாங்கிக்கொண்டிருக்கிறார் என்றும் ஆசார்யாள் ஸௌந்தர்யலஹரியில் வர்ணித்திருக்கிறார்கள்.

"தநீயாம்ஸம் பாம்ஸூம் தவசரண பங்கேருஹபவம்
விரிஞ்சிஸ் ஸஞ்சிந்வன் விரசயதி லோகாநவிகலம் |
வஹத்யேநம் சௌரி: கதமபி ஸஹஸ்ரேண சிரஸாம்
ஹரஸ் ஸம்க்ஷுத்யைநம் பஜதி பஸிதோத் தூளனவிதிம் ||"

இப்படித் தாங்குவதில் ஆதிசேஷனுக்கு ஒருவிதமான ச்ரமும் ஏற்படாமலிருக்கும்படி அம்பாள் அனுக்ரஹம் செய்திருப்பதாக இந்நாமத்தில் சொல்லப்பட்டதாக வைத்துக்கொள்ளலாம்.

3. அல்லது, ஆதிசேஷன் எப்படிக் கொஞ்சமும் களைப்பில்லாமல் ஸகல லோகங்களையும் தாங்குகிறானோ; அம்மாதிரியே களைப்பு மயக்கம் முதலியவை இல்லாதவள் என்று சொல்லலாம்.

4. தேகத்திலிருக்கும் நாடிகளில் வாருணீ என்று(வாயுவை தேவதையாக உடைய) ஒரு நாடி உண்டு. அதை போகாப்பாஸத்தினல் வசப்படுத்திக்கொண்டவருக்கு வாருணீமான் என்று பெயர். இப்படி வாருணியை ஜயித்த போகிகளான பக்தர்களுக்கு விஹ்வலம் ஏற்படாமல் செய்வதால் அம்பாளுக்கு இந்தப்பெயர் வந்ததாகவும் சொல்லலாம்.

"அதச் சோர்த்வம் ஸ்ருதா நாடி வாருணீ ஸர்வகாமிநீ |
பூஷா திக்தேவதா ப்ரோக்தா வாருணீ வாயுதேவதா ॥"
(யோகசாஸ்த்ரம்)

विश्वाधिका

விச்வாதிகா (334)

விச்வத்திற்கெல்லாம் மேல்பட்டவள், உத்க்ருஷ்டமானவள்.

விச்வமென்ற பதமானது ப்ருதிவீ முதல் சிவனேடு முடியும் ஸகல தத்வங்களையும் குறிக்கும். அம்பாளானவள் இந்த தத்வங்களையெல்லாம் கடந்ததும் சிவபக்தி ஸாமரஸ்யமான ஸாதாக்ய தத்வஸ்வரூபிணியானதால் விச்வாதிகா என்று பெயர்.

वेदवेद्या

வேதவேத்யா (335)

வேதங்களால் அறியத்தகுந்தவள்.

1. "வேதைச்ச ஸர்வைரஹமேவ வேத்ய:" என்று ச்ரு. ஸ்ம்ருதிகளில் சொன்னபடி ருக், யஜுஸ், ஸாம, அதர்வணங்களாகிற வேதங்களால் அம்பாள் அறியத்தகுந்தவளாகையால் இந்தப்பெயர் ஏற்பட்டது.

2. அம்பாளிருக்கும்படியான சிந்தாமணிக்ருஹத்திற்கு நாலு திக்குகளிலும் நாலு வாசற்படிகளாக நாலு வேதங்களுமிருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

"சிந்தாமணிக்ருஹபூமிர் ஜீயாத் ஆம்நாயமாய சதுர்த்வாரா" ।
(லலிதாஸ்தவ ரத்னம்)

இந்த வாசற்படிகள் வழியாகப் போனலொழிய அம்பாளுடைய தர்சனம் கிடைக்காதாகையால் அம்பாள் (வேதவேத்யா) வேதங்களால் மட்டும் அறியப்படுகிறாள் என்று ஏற்படுகிறது.

தான்

"ருசாம் ப்ராசீ மவதி திருச்யதே
தக்ஷிணமாஹுர் யஜுஷாமபாராம் ।

அதர்வணம் அங்கிரஸாம் ப்ரதிஷ்டாம்
ஸாம்ராம் உதிஷ மஹதி திகுச்யதே ll''

என்று ச்ருதியில் சொன்னது.

3. அல்லது ருக், யஜுஸ், அதர்வண, ஸாமவேதங்களுக்கு முறையே தேவதைகளான சுத்த வித்யை முதலானவை, ஸௌபாக்யவித்யை முதலானவை, லோபாமுத்ரா வித்யை முதலானவை, துரீயாம்பா முதலானவை இந்த வித்யைகளால் அறியப்படுவதால் அம்பாளுக்கு வேதவேத்யா என்று பெயர் வந்ததாகவும் சொல்லலாம்.

विन्ध्याचलनिवासिनी

விந்த்யாசல நிவாஸி நீ (336)

விந்த்யமெனப்படும் பர்வதத்தில் இருப்பவள்.

1. விந்த்யாசலத்திலிருக்கும் அம்பாளுடைய ரூபத்திற்கு விந்த்யாதி வாஸிநீ என்று பெயர் என்பதாக பத்ம புராணத்தில் அம்பாளுடைய சஹஸ்ரநாமங்களைச் சொல்லுகையில் சொல்லப்பட்டிருக்கிறது.

'த்ரிகூடே ச ததா ஸீதா விந்த்யே விந்த்யாதிவாஸிநீ |'

2. அம்பாள் விந்த்யாசலத்தில் தான் இருப்பதாகவும் அந்த ரூபத்தில் அஸுரர்களை ஸம்ஹாரம் பண்ணப்போவதாகவும் சொன்னதாக தேவீ மஹாத்ம்யத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

''வைவஸ்வதேZந்தரே ப்ராப்தே அஷ்டாவிம்சதிமே யுகே |
சும்போ நிசும்பச்சைவான்யௌ உத்பத்ஸ்யேதே
மஹாஸுரௌ ll
நந்தகோபக்ருஹே ஜாதா யசோதா கர்பஸம்பவா ll
ததஸ்தௌ நாசயிஷ்யாமி விந்த்யாசல நிவாஸிநீ ll''

மார்க்

''வைவஸ்வதேZந்தரே தௌ ச புனः சும்பநிசும்பகௌ |
உத்பத்ஸ்யேதே வராந் மத்தௌ தேவோபத்ரவகாரிணௌ ll
நந்தகோபகுலே ஜாதா யசோதா கர்பஸம்பவா |
தாவஹம் நாசயிஷ்யாமி நந்தாக்யா விந்த்யவாஸிநீ ll''

என்று பாஞ்சராத்ர லக்ஷ்மீ

विधात्री

விதாத்ரீ (337)

(ஜகத்தை) தாங்குகிறவள்.

1. அல்லது ஜகத்தைப் போஷிக்கிறவள் என்றும் அர்த்தம் சொல்லலாம்.

"தாத்ரீ மாதா ஸமாக்யாதா தாரணாச் சோபகீயதே |"
(தேவீ பாகவதம்)

அம்பாளுக்கு தாத்ரீ, ஜகத்தாத்ரீ என்ற பெயர்களும் உண்டு.

2. (விதாதா எனப்படும்) ப்ரம்ஹாவினுடைய பத்னீ ஸ்வரூபமாக அம்பாள் இருப்பதனல் விதாத்ரீ என்று பெயர் என்றும் சொல்லலாம்.

3. அம்பாளுக்கு தாத்ரீ (நெல்லிக்கனி) விசேஷமான ப்ரியமுள்ள வஸ்துவாகையால் விதாத்ரீ என்ற பெயர் வந்ததாகவும் சொல்லலாம்.

वेदजननी

வேதஜநநீ (338)

வேதங்களை உத்பாதனம் பண்ணினவள் (உண்டு பண்ணினவள்.)

1. வேதங்கள் ப்ரம்ஹத்தினிடமிருந்து உண்டானவை என்பது அநேக வாக்யங்களால் ப்ரதிபாதிக்கப்பட்டிருக்கிறது.

"யஸ்ய நிச்வஸிதம் வேதா:"

"அஸ்ய மஹதோ பூதஸ்ய நிச்வஸிதம் ஏதத்யத்ருக்வேதோ
யஜுர்வேத:"

"ருச: ஸாமாநி ஜக்ஞிரே"

2. அம்பாளுடைய ஸ்வரூபமான குண்டலியினிடமிருந்து ஸகல சப்தங்களும் உண்டானவையென்றும் அதனல் அம்பாளுக்கு வேதமாதா என்ற பெயர் வந்ததாகவும்,

"யத: ச்ருங்காடகாகார குண்டலிந்யா: ஸமுத்கதா |
ஸ்வராச்ச வ்யஞ்ஜநாநீதி வேதமாதா தத: ஸ்ம்ருதா ||"

என்று தேவீ பாகவதத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

विष्णुमाया

விஷ்ணு மாயா (339)

விஷ்ணுவினுடைய மாயா ரூபிணியாக இருப்பவள்.

1. தேசம், காலம் முதலிய கட்டுக்களுக்கு அடங்காமல் எங்கும் வ்யாபித்திருப்பதினல் விஷ்ணு என்று பெயர். அவரையும் சூழ்ந்து கட்டில் அடக்குவதால் அம்பாளுக்கு விஷ்ணுமாயா என்று பெயர்.

2. அல்லது, விஷ்ணுவினுடைய மாயை என்று அர்த்தம் சொல்லலாம்.

"தைவீ ஹ்யேஷா குணமயீ மம மாயா துரத்யயா |"

அம்பாளை விசேஷமாக விஷ்ணுமாயா என்ற பெயரால் தேவீ மாஹாத்ம்யத்தில் அனேக இடங்களில் சொல்லப்பட்டிருக்கிறது.

"யா தேவீ ஸர்வபூதேஷு விஷ்ணுமாயேதி சப்தித |
நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமோநம: ||"

3. விஷ்ணு மாயையானது ஸகல வஸ்துக்களுக்கும் அவை யவைகளுடைய (ஸத்வ ரஜஸ் தமோ) குணங்களின் பேதங்களின் ப்ரகாரம் வ்யக்தம், அவ்யக்தம் என்பதான பேதத்திற்குக் காரண மாக இருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

"அவ்யக்த வ்யக்த ரூபேண ரஜஸ் ஸத்வ தமோ குண: |
விபஜ்ய யார்த்தம் குருதே விஷ்ணுமாயேதி ஸோச்யதே ||"
(காளிகா புராணம்)

विलासिनी

(340)

விலாஸத்தோடு கூடியவள்.

1. விலாஸமென்ற பதத்திற்கு கேளி, விளையாட்டு, காமோ த்பத நடத்தைகள் என்று அர்த்தம்.

2. "நித்யா விலாவஹீ தோக்த்ரீ" என்றபடி விலாவஹீ என்பது ஒருவிதமான பீட சக்திக்குப் பெயர். அந்த ரூபமாக அம்பாள் இருப்பதால் விலாவஹீ என்று பெயர்.

3. 'வபயோரபேத:' என்றபடி பிலாவினீ என்றும் இந்த நாமத்தைச் சொல்லலாம். ப்ரம்ஹாந்த்ரத்தை பிலம் என்று சொல்வது உண்டு. அது மோக்ஷத்திற்கு துவாரமென்றும் அதை அடைத்துக்கொண்டு ப்ரம்ஹாணீ என்ற ஒரு சக்தியான வள் இருப்பதாகவும் சொல்லப்படும். அந்த சக்தி ரூபமாக அம்பாள் இருப்பதால் விலாவஹீ என்று பெயர் வந்ததாகச் சொல்லலாம்.

'தத்ர ப்ரம்ஹவிலம் ரௌயம் ருத்ர கோட்யர்புதைர் வ்ருதம் ||
ப்ரம்ஹாணீத்யபரா சக்தி: ப்ரம்ஹரேணுத்ஸங்க காமிநீ |
த்வாரம் ஸா மோக்ஷமார்கஸ்ய ரோதயித்வா வ்யவஸ்திதா ||'
(ஸ்வச்சந்த தந்த்ரம்)

क्षेत्रस्वरूपा

க்ஷேத்ரஸ்வரூபா (341)

க்ஷேத்திரத்தை தன்னுடைய நிஜமான ரூபமாக உடையவள்

1. க்ஷேத்திரமென்பது அம்பாள் இருக்கும்படியான காம ரூபம் முதலான திவ்ய க்ஷேத்திரங்களைக் குறிக்கும். தக்ஷப்ரஜா பதியின் யாகத்தை அழித்தபிறகு பரமசிவன் தன்னுடைய பத்னி யாகிய ஸதீதேவியின் சரீரத்தைத் தோளின்மேல் போட்டுக் கொண்டு துக்காக்ராந்தராக அலையும்போது ஸமஸ்த தேவர்களும் ஒன்றும் தோன்றுதவர்களாக மஹா விஷ்ணுவைவயடைந்து வேண்டிக்கொள்ளவே அவர் ஸதீதேவியின் சரீரம் இருக்கும் வரையில் பரமசிவன் அம்மாதிரி இருப்பாரென்று உணர்ந்து தன்னுடைய சக்ராயுதத்தால் அந்த சரீரத்தை துண்டம் துண்டமாகப்பண்ணினாரென்றும், அத்துண்டுகள் விழுந்த இடங்களெல்லாம் ஒவ்வொன்றும் ஒரோர் க்ஷேத்ரமாக ஏற்பட்டதென்றும் சொல்லப்படும்.

2. அல்லது, க்ஷேத்ரமென்பது ப்ருதிவீ முதல் சிவாந்தமான முப்பத்தாறு தத்வங்களடங்கிய சரீரத்தையும் குறிக்கும். ஜீவனை க்ஷேத்ரக்ஞனென்றும் சொல்லப்படும். இந்தப்பிரிவைப்ரக்ருதி, புருஷன் என்றும் சொல்வதுண்டு.

'பிபர்தி க்ஷேத்ரதாம் தேவீ த்ரிபுராந்தகவல்லபா |
க்ஷேத்ரக்ஞத்வம் அஜோ தத்தே பகவான் அந்தகாந்தக: ll'
(லிங்கபுராணம்)

3. ஸமஸ்த ஜ்வராசிகளையும் அறிந்தவரும் ஸகல ஜீவன்களிலும் இருப்பவருமான பரமாத்மாவை க்ஷேத்ரக்ஞனென்று சொல்லப்பட்டிருக்கிறது. இந்த க்ஷேத்ர க்ஷேத்ரக்ஞ ஸம்பந்தத்தை பகவத்கீதையில் விஸ்தாரமாகச் சொல்லப்பட்டிருக்கிறதையும் பார்க்கவும்.

'இதம் சரீரம் வஸுதே க்ஷேத்ரமித்ய பிதீயதே |
ஏதத் யோ வேத்தி தம் ப்ராஹு: க்ஷேத்ரக்ஞமிதி தத் வித: ll
க்ஷேத்ரக்ஞம்சாபி மாம் வித்தி ஸர்வக்ஷேத்ரேஷு பாரத ll
(விஷ்ணுஸ்ம்ருதி)

'சதுர்விம்சதி தத்வாநி க்ஷேத்ரசப்தேந ஸூசய: |
ஆஹு: க்ஷேத்ரக்ஞ சப்தேந போக்தாரம் புருஷம் ததா ll'
(லிங்கபுராணம்)

'அவ்யக்தம் சேஷத்திரமுத்திஷ்டம் ப்ரம்ஹா சேஷத்ரக்ஞ
உச்யதே |' (வாயுபுராணம்)

'சேஷத்ராக்யாநி சரீராணி தேஷாம் சைவ யதா ஸோகம் |
தாநி வேத்தி ஸ யோகாத்மா தத: சேஷத்ரக்ஞ உச்யதே ||'
(ப்ரம்ஹபுராணம்)

'யோ(அ)ஸ்யாத்மந: காரயிதா தம் சேஷத்ரக்ஞம் ப்ரசக்ஷதே |
ய: கரோதி து கர்மாணி ஸ பூதாத்மோச்யதே புதை: |
ஜீவஸம்ஜ்ஞோ(அ)ந்தராத்மாந்ய: ஸஹஜ: ஸர்வதேஹிநாம் |
யேந வேதயதே ஸர்வம் ஸோகம் து:கம் ச ஜந்மஸு ||
தாவுபௌ பூதஸம்ப்ருக்தௌள மஹாந் சேஷத்ரக்ஞ ஏவ ச |
உச்சாவசேஷு பூதேஷு ஸ்திதம் தம் வ்யாப்ய திஷ்டத: ||
அஸங்க்யா மூர்தயஸ்தஸ்ய நி:பதந்தி சரீரத: |
உச்சாவசாநி பூதாநி ஸம்ததம் சேஷ்டயந்தி யா: ||'
(மநுஸ்மிருதி)

क्षेत्रेशी

சேஷத்ரேசீ (342)

சேஷத்ரேசனுகிய பரமசிவனுடைய பத்னீ.

क्षेत्रक्षेत्रज्ञपालिनी

சேஷத்ர சேஷத்ரக்ஞ பாலிநீ (343)

சேஷத்திரம், சேஷத்ரக்ஞன் இவர்களிருவரையும் பரிபாலிப்பவள்.

क्षयवृद्धिविनिर्मुक्ता

சூஷயவ்ருத்தி விநிர்முக்தா (344)

சூஷயம், வ்ருத்தி இவைகளில்லாதவள்.

1. சூஷயம் என்பது குறைவது, வ்ருத்தி என்பது அதிகப்படுவது. இவையிரண்டும் சேஷத்ரத்தோடு ஸம்பந்தப்பட்ட பாவங்கள். அம்பாள் சேஷத்ரங்களுக்கு அதிஷ்டாதாவாக இருந்தாலும் அப்போர்ப்பட்ட பாவ விகாரங்கள் பாதிக்கப்படாமலிருப்பது இங்கு சொல்லப்பட்டது. இதைபோதான்,

நைநம் சிந்தந்தி சஸ்த்ராணி நைநம் தஹதி பாவக: |
ந சைநம் க்லேதயந்த்யாபோ ந சோஷயதி மாருத: ||

முதலான வாக்கியங்களால் பகவத்கீதை முதலிய சாஸ்திரங்களில் சொல்லியிருக்கிறது.

2. அல்லது, இவையிரண்டும் சூஷயம், வ்ருத்தி கர்மாவின் பலன்கள் என்று சொல்லப்படுவதாலும் அம்பாள் கர்மாவின்

ஸம்பந்தமேயில்லாமலிருக்கிறபடியாலும் இந்தப்பெயர் வந்ததாக வும் சொல்லலாம். இதையே தான்,

'ஏஷ நித்யோ மஹிமா ப்ராம்ஹணஸ்ய
ந கர்மணா வர்ததே நோ கநீயாந்' (காடகச்ருதி)

'ஸ ந ஸாதுநா கர்மணா பூயாந்நோ ஏவாஸாதுநா கநீயாந்'
(வாஜஸநேயச்ருதி)

என்று ச்ருதியில் சொல்லப்பட்டிருக்கிறது.

क्षेत्रपालसमर्चिता

கேஷத்ரபால ஸமர்ச்சிதா (345)

கேஷத்ரபாலரால் நன்றுய் ஆராதிக்கப்பட்டவள்.

1. முன்னொருக்கால் தாருகனென்ற அசுரனை ஸம்ஹாரம் செய்வதற்காக காளியானவள் சிவனால் நிர்மிக்கப்பட்டாளென்றும், அந்த அஸுரனை ஸம்ஹாரம் செய்த பிறகும் காளியின் கோபாக் னியானது தணியாமல் லோகங்களெல்லாம் நாசம் செய்து விடும் போலிருந்ததைப் பார்த்த பரமசிவன் தான் ஒரு சிறு குழந் தையாக ரூபம் எடுத்துக்கொண்டு காளியின் ஸன்னிதியில் அழுது கொண்டிருந்ததாகவும், அப்போது காளியானவள் அழுகிற குழந் தையைப் பார்த்துக் கையிலெடுத்து ஸ்தன்யபானம் செய்வித்த தாகவும், அப்போது குழந்தையான பரமசிவன் காளியின் ஸ்தன் யத்தோடு அவளுடைய கோபத்தையும் பானம் செய்துவிடவே காளியின் கோபம் அடங்கிவிட்டதாகவும் லிங்கபுராணம் முதலிய வைகளில் சொல்லப்பட்டிருக்கிறது. இப்போற்பட்ட சிவனு டைய அவதாரத்திற்கு கேஷத்ரபாலன் என்று பெயர். அம்பா ளுடைய பக்தர்களுக்குக் கெடுதல் வராமல் காப்பாற்றுகிறவர் நவரென்று பலச்ருதி அத்யாயத்தில் சொல்லப்பட்டிருக் கிறது. ஸஹஸ்ரநாம ஜபம் செய்கிறவர்களுடைய தனத்தை து அபஹரித்தானேயாகில் அவன் யாராயிருந்தாலும் சரி, எங்கே இருந்தாலும் சரி அவனை கேஷத்ரபாலன் ஸம்ஹாரம்

'தநம் யோ ஹரதே சோரை: நாமஸாஹஸ்ர ஜாபிந:।
யத்ர குத்ர ஸ்திதம் வாபி கேஷத்ர பாலோ நிஹந்தி தம் ॥

2. கேஷத்ரம் என்றால் யாகசாலைக்குப் பெயர். அதைக் காப்பாற்றுகிறவன் கேஷத்ரபாலன். அவனால் அர்ச்சிக்கப்பட்ட வள் கேஷத்ரபால ஸமர்ச்சிதா.

विजया

விஜயா (346)

எப்போதும் ஜயத்தோடு கூடியவள்.

1. "விஜயம் சைவ காச்மீரே" என்றபடி காச்மீர தேசத்திலிருக்கும்படியான சிவனுடைய மூர்த்திக்கு விஜயனென்ற பெயர் என்பதாக தேவீ புராணத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. அந்த ரூபத்தோடு இருப்பதால் அம்பாளுக்கு விஜயா என்ற பெயர் ஏற்பட்டதாகவும் சொல்லலாம்.

2. அம்பாளுக்கு இந்தப்பெயர் ஏற்பட்டதற்குக் காரணம்,

'விஜித்ய பத்மசாமாநம் தைத்யராஜம் மஹாபலம் |
த்ரிஷு லோகேஷு விக்யாதா விஜயா சாபராஜிதா ||'

என்று தேவீபுராணம் நிர்வசநாத்யாயத்தில் சொல்லப்பட்டிருக்

3. சில்பசாஸ்த்ரத்தில் விஜயா என்று பிரஸித்தமான ஒரு க்ருஹ விசேஷத்தைப்பற்றிச் சொல்லியிருக்கிறது. அந்த ரூபமாக இருப்பதால் விஜயா என்ற பெயர்.

4. விஜயா என்பது ஒரு மூஹூர்த்த விசேஷத்திற்கும் பெயர். ஆச்வின (புரட்டாசி) மாதம் சுக்ல பக்ஷம் தசமியன்று ஸாயங்காலத்திற்குப் பிறகு நக்ஷத்திரங்கள் உதயமாகும் தருணத்திற்கு விஜயா என்று பெயர் என்றும், அப்போது ஆரம்பிக்கும் ஸகல காரியங்களும் ஜயமாக முடியுமென்றும் முஹூர்த்த சிந்தாமணியில் சொல்லியிருக்கிறது.

'ஆச்வினஸ்ய ஸிதே பக்ஷே தசம்யாம் தாரகோதயே |
ஸ காலோ விஜயோ ஜ்ஞேய: ஸர்வகார்யார்த்த ஸித்தித: ||'

அதே விதமாக அன்றுதினம் ஸாயங்காலத்திற்குப் பிறகு நக்ஷத்திரங்கள் உதயமாகும் தருணத்திற்கு (11-வது முஹூர்த்தத்திற்கு) விஜயா என்று பெயர் என்றும், இந்த விஜயா என்ற முஹூர்த்தத்தில் தான் (விஜயதசமி யன்று) அம்புபோடுவது என்பதாகக் கொண்டாடப்படுவது என்றும், அதில் ஆரம்பித்த ஸகல காரியங்களும் ஸித்தியாகுமென்றும், விஜயம்பெற விரும்புவோர்கள் அப்போது யாத்திரையை ஆரம்பிக்கவேண்டுமென்றும் நக்ஷத்ரகோசத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

சுத்த ஸந்த்யாம் அதிக்ராந்த: கிஞ்சி த்திந்நித்ரதாரக: |
விஜயோ நாம காலோ(ஸ்)யம் ஸர்வ கார்யார்த்த ஸாதக: ॥
ஏகாதசோ முகூர்த்தோ யோ விஜய: பரிகீர்த்தித: |
தஸ்மிந் யாத்ரா விதாதவ்யா ஸர்வைர் விஜயகாங்க்ஷிபி: ॥

அம்பாள் இப்பேர்ப்பட்ட காலரூபிணியாக இருப்பதால் விஜயா என்று பெயர்.

विमला

விமலா (347)

மல ஸம்பந்தம் (மாலின்யம்) இல்லாதவள்.

1. அவித்யையினால் ஏற்படும் மலத்தினுடைய ஸம்பந்தம் யாதொன்றும் அம்பாளுக்கு இல்லையாகையால் விமலா என்று பெயர்.

2. 'விமலா புருஷோத்தமே' என்று பத்மபுராணத்தில் சொல்லியபடி தேவீ க்ஷேத்ரங்களில் ஒன்றான புருஷோத்தம க்ஷேத்திரத்திலிருக்கும் அம்பாளுக்கு விமலா என்று பெயர்.

3. சில்ப சாஸ்திரத்தில் விமலா என்பது ஒரு க்ருஹ விசேஷத்தின் பெயராகச் சொல்லப்பட்டிருக்கிறது. அந்த ரூபமாக இருப்பதால் விமலா என்று பெயர் வந்தது.

த்ருவம் தார்யம் ஜயம் காந்தம் விபுலம் விஜயம் ததா |
ஸுமுகம் விமலம் நந்தம் நிதனம் ச மனோரமம் ॥

என்பதாக க்ருஹ விசேஷங்களின் பெயர்கள் சொல்லப்பட்டிருக்

वन्द्या

வந்த்யா (348)

वन्दारुजनवत्सला

வந்தாரு ஜந வத்ஸலா (349)

பக்த ஜனங்களுக்கு அநுக்ரஹம் செய்பவள்.

அதாவது, பக்தர்களைக் குழந்தைகளைப்போல் பிரியத்துடன் போஷிப்பவள் என்று அர்த்தம்.

वाग्वादिनी

வாக்வாதிநீ (350)

வாக்கை (வார்த்தையை)ச் சொல்லுகிறவள்.

அல்லது, சொல்லும்படி செய்கிறவள். அல்லது வாக்வாதிநீ என்ற தேவதா ரூபமாக இருப்பவள்.

'சப்தாநாம் ஜநநீ த்வமேவ புவநே வாக்வாதிநீத்யுச்யஸே'
(லகுஸ்துதி)

'ஸர்வேஷாம் ச ஸ்வபக்தாநாம் வாத ரூபணே ஸர்வதா |
ஸ்திரத்வாத் வாச விக்யாதா லோகே வாக்வாதிநீதி ஸா ||
(த்ரிபுராஸித்தாந்தம்)

वामकेशी

வாமகேசீ (351)

அழகான கூந்தலையுடையவள்.

1. பரமசிவனுக்கு வாமகேச்வரரென்றும் வாமேச்வரரென்றும் பெயர்கள் உண்டு. ஆகவே அவருடைய பத்னிக்கு வாமகேசீ என்று பெயர்.

2. 'ஜடே வாமேச்வரம் வித்யாத்' என்றபடி அந்த ஜட க்ஷேத்ரத்தில் இருக்கும் பரமசிவனுக்கு வாமேச்வரர் என்று பெயர் என்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

3. வாமகேசரால் (பரமசிவனால்) சொல்லப்பட்ட ஒரு தந்த்ரத்திற்கு வாமகேச (அல்லது வாமகேச்வர) தந்த்ரம் என்று பெயர். அதில் அம்பாள் ப்ரதிபாதிக்கப்பட்டிருப்பதால் வாமகேசீ என்று பெயர் என்பதாகவும் சொல்லலாம்

वह्निमण्डलवासिनी

வந்ஹிமண்டல வாஸி நீ (352)

அக்னியினுடைய மண்டலத்திலிருப்பவள்.

1. அக்னிமண்டலமானது மூலாதாரத்திலும் பரமாகாசத்திலும் இருப்பதாகச் சொல்லப்படும்.

2. வந்ஹி என்ற பதமானது மூன்று என்ற எண்ணிக்கையையும் குறிக்கும். ஆகவே வந்ஹி மண்டலமென்பது ஷட்சக்ரங்களுடைய பாகங்களான ஸோமஸூர்யாக்னி மண்டலங்களையும் பஞ்சதசாக்ஷரியின் மூன்று மண்டலங்களையும் குறிக்கும்.

भक्तिमत्कल्पलतिका

பக்திமத் கல்பலதிகா (353)

பக்தர்களுக்கு கல்பகக்கொடி போன்றவள்.

1. கல்பகக்கொடியானது எப்படித்தன் களுக்குக் கோரியவற்றையெல்லாம் கொடுக்குமோ அதேவிதம் அம்பாள் தன்னுடைய பக்தர்களுக்கு எல்லா அபீஷ்டங்களையும் கொடுப்பதால் அதற்கு ஸமானமென்று சொல்லப்பட்டது.

2. ஆசார்யாள் அம்பாளுடைய பாதங்களின் ப்ரபாவத்தை வர்ணிக்கையில் அவை பக்தர்களுடைய விருப்பத்திற்கு அதிக மாகவே கொடுக்கும் சக்தியையுடையவைபென்றும், கல்ப விருக்ஷ மானது (ஒன்றுமே தேவையில்லாமல்) ஸ்வர்க்கத்திலிருக்கும் தேவர்களுக்கு அவர்கள் வேண்டுகிற வஸ்துக்களைத் தன்னுடைய (துளிர்களாகிற) கைகளால் கொஞ்சமாகக் கொடுப்பது மாதிரியல் லாமல் யாவருக்கும் தாராளமாகக் கொடுக்கும் சக்தியோடும் கூடியவையென்று வர்ணித்திருக்

‘பயாத் த்ராதும் தாதும் பலமபி ச வாஞ்சாஸமதிகம்
சரண்யே லோகானாம் தவ ஹரி சரணாவேவ நிபுணௌ |’

‘நகைர் நாகஸ்த்ரீணாம் கர கமல ஸங்கோச சசிபி:
தருணம் திவ்யானாம்·ஹஸத இவ தே சண்டி சரணௌ |
பலானி ஸ்வஸ்த்தேப்ய: கிஸலய கராக்ரேண தநதாம்
தரித்ரேப்யோ பத்ராம் ச்ரியமநிசம் அந்ஹாய தததௌ ll’

3. கல்ப என்ற பதமானது அனேகமாக சற்றேறக்குறைய என்று அர்த்தம் கொடுக்கும். ஆகவே அபூர்ணமான பக்தியுடை யவர்களை பக்திமத்கல்பர்களென்று சொல்லலாம். அப்படிப்பட்ட வர்களுக்கு தன்னிடத்திலிருக்கும் அபூர்ணமான பக்தியை (கொடி படருவது போல்) அம்பாள் விஸ்தாரப்படுத்துவதால் பக்திமத் கல்பலதிகா என்று பெயர் ஏற்பட்டதாகவும் சொல்லலாம்.

4. லதை என்று கஸ்தூரிக்குப் பெயர் உண்டு. தன்னிடம் அபூர்ணமான பக்தியுடையவர்களுடைய பக்தியை (கஸ்தூரி போல்) பரிமளிக்கும்படி செய்வதால் அம்பாளுக்கு இந்தப்பெயர் என்பதாகவும் சொல்லலாம்.

5. க்ரமம் தெரியாமலும் அர்த்த (பாதி) பக்தியுடனும் தன்னை உபாஸனை செய்கிறவர்களுக்கும் கூட அம்பாள் ஜன்மாந் தரத்தில் க்ரமத்துடனும் பூர்ணபக்தியுடனும் தன்னை உபாஸனை செய்யும்படியான சக்தியைக்கொடுக்கிறாளென்று சொல்லப்பட்

‘அக்ரமேணார்த்த பக்த்யா வா பவாந்யா: க்ருதமர்ச்சநம்:
ஜந்மாந்தரே க்ரமப்ராப்த்யை பூர்ணபக்தியை ச கல்பதே ll’
(சக்ர ரஹஸ்யம்)

पशुपाशविमोचिनी

பசு பாச விமோசி நீ (354)

பசுக்களைப் பாசத்திலிருந்து விடுவிப்பவள்.

1. (தானும் பரப்ரம்மமும் ஒன்று என்பதான) அபேத ஞானரூபமான வித்தையில்லாதவர்கள் பசுக்களென்று சொல்லப்படுவார்கள்.

யோ(ஸ்யாம் தேவதாம் உபாஸ்தேஸ்(ஸ்யோ(ஸாவஸ்யோ
(ஸஹமஸ்மீதி ந ஸ வேத யதா பசு:' (ச்ருதி)

2. பாசம் என்பது பேதபாவத்தைக் கொடுக்கும் அவித்யை, மாயை. இந்தப்பாசத்தினால் ஜீவனானவன் பஞ்சபூதாத்மகமான தேஹத்தைத் தான் என்று நினைத்து (மாடு தாம்புக்கயிற்றால் கட்டுப்பட்டிருப்பதுபோல்) அதோடு கட்டுப்பட்டிருக்கிறான். இப்பேர்ப்பட்ட ஜீவனுக்கு ஞானத்தைக் கொடுத்து அபேத ஞானம் ஏற்படச்செய்து (தாம்புக்கயிற்றை அவிழ்த்து மாட்டை விடுவிப்பதுபோல்) பாசத்திலிருந்து அம்பாள் விடுவிப்பதால் பசு பாசவிமோசநீ என்று பெயர் ஏற்பட்டது.

3. பசுக்களாகிற ஜீவன்களுக்கெல்லாம் பரமசிவன் பதியாக இருப்பதால் அவருக்குப் பசுபதியென்று பெயர். அபேதஞானம் ஏற்படுவதினால் பாசமானது விடுபட்டுப்போனால் ஜீவனானவன் (பரமசிவனைய) பதியாகவே ஆகிவிடுகிறான் என்று சொல்லப்பட்டது.

பாசபத்தோ பவேத் ஜீவ: பாசமுக்த: ஸதாசிவ: |

4. பாசம் என்ற பதத்தைப் பிரித்து பானம், அசனம் (சாப்பிடுவது) என்று அர்த்தம்பண்ணி இந்த விருப்பங்களோடு ஜீவன் இருக்கும் வரையில் அவனைப் பசு என்று சொல்லப்படும்.

5. இன்னும் பசு, பதி, பாசம் என்ற பதங்களுக்கிருக்கும் ஸூக்ஷ்மமானதும் விசேஷமானதுமான அர்த்தங்கள் வ்யாக்யானத்தின் மூலத்தில் சொல்லப்பட்டிருக்கின்றன. இந்தப்பதங்கள் சைவ சாஸ்த்ரங்களில் விசேஷமாகப் பிரயோகிக்கப்படுகிறவை.

संहताशेषपाषण्डा

ஸம்ஹ்ருதாசேஷ பாகண்டா (355)

ஸகலவிதமான பாதண்டிகளையும் ம் செய்தவள்.

1. வேத பாஹ்யமானதும் மத வருதமானதுமான ஆசாரத்தையுடையவர்களைப் பாகண்டிகள் என்று சொல்வது வழக்கம். அவர்களோடு த்விஜர்கள் பேசக்கூடக்கூடாதென்று சொல்லப்பட்டிருக்கிறது.

'வேத பாஹ்ய வ்ரதாசாரா: ச்ரௌதஸ்மார்த்த பஹிஷ்க்ருதா:।
பாகண்டிந இதி க்யாதா: ந ஸம்பாஷ்யா த்விஜாதிபி: ॥'

2. இதேவிதமாக புராணம், நியாயம், மீமாம்ஸை, தர்ம சாஸ்திரம், வேதாங்கங்கள் 6, வேதங்கள் 4, இந்தப்பதினைந்தான் வித்யைக்கும் தர்மத்திற்கும் இருப்பிடமென்றும் இவற்றிற்கு பாஹ்யமாக (வெளியில்) இருப்பவையெல்லாம் பாகண்டமென்றும் புத்தியின் கல்பனையினால் ஏற்பட்டவையென்றும், அவைகளால் புத்தியின் குழப்பம் (மோஹம்) ஏற்படுமென்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

'புராண ந்யாய மீமாம்ஸா தர்மசாஸ்த்ராங்க மிச்ரிதா: ।
வேதா: ஸ்த்தாநாநி வித்யாநாம் தர்மஸ்ய ச சதுர்தச ॥
ஏதத்ஸத்யம் இத: சான்யத் பாகண்டம் புத்திகல்பிதம் ।
தைத்யாநாம் மோஹநார்த்தாய மஹாமோஹந நிர்மிதம் ॥'
(ப்ரம்ஹவைவர்த்தம்)

3. பா என்றால் வேதத்திற்குப் பெயர். அதைக் கண்டிக்கிறவன் பாகண்டன்.

4. 'பாஷண்ட' என்ற பாடாந்தரத்திலும் மேலே சொல்லிய அர்த்தங்கள் தான்.

सदाचारप्रवर्तिका

ஸதாசார ப்ரவர்த்திகா (356)

ஸதாசாரத்தில் ப்ரவர்த்திக்கும்படி செய்பவள்.

1. மேலே சொல்லியபடி அம்பாள் பாகண்டிகளை ஸம்ஹாரம் செய்வதால் எல்லாரையும் ஸதாசாரத்தை அனுஸரிக்கும்படி செய்கிறாள் என்பதாக இந்த நாமத்தில் சொல்லப்பட்டது.

2. ஸதாசாரமென்றால் உத்தமமான ஆசாரம், அல்லது ஸத்துக்களுடைய (சிஷ்டர்களுடைய) ஆசாரம், அல்லது ப்ரம்ஹத்தை அடைபக்கூடிய ஆசாரம் என்று அர்த்தம்.

3. வேதத்தினுடைய கர்மகாண்டத்தில் தர்மத்தையும், ப்ரம்ஹகாண்டத்தில் (ஞானகாண்டத்தில்) அத்வைதமான பர

ப்ரம்ஹத்தையும் புராணங்களில் அவைகளை அடையக்கூடிய மார்க்கங்களையும் வெளியிட்டு அவைகளை யாவரும் அனுஷ்டிக்க வேண்டுமென்று அம்பாள் கட்டளையிட்டிருப்பதாகச் சொல்லப் பட்டிருக்கிறது.

'அஷ்டாதச புராணானி வ்யாஸேந கதிதானி து |
நியோகாத் ப்ரம்ஹணோ ராஜன் தேஷு தர்ம: ப்ரதிஷ்டித: ||
அந்யாந் யுப புராணானி தச்சிஷ்யைர் வ்யாக்ருதானி து |
யுகே யுகே து ஸர்வேஷாம் கர்தா வை தர்மசாஸ்த்ரவித் ||
சிக்ஷா கல்போ வ்யாகரணம் நிருக்தம் சந்த ஏவ ச |
ஜ்யோதி: சாஸ்த்ரம் ந்யாயவித்யா ஸர்வேஷாம் உபப்ரும்
ஏவம் சதுர்தசைதானி வித்யா ஸ்த்தானானி ஸத்தம | [ஹணம்
சதுர்வேதை: ஸஹாங்தானி தர்மோ நான்யத்ர வித்யதே ||
ஏவம் பைதாமஹம் தர்மம் மநுவ்யாஸாதய: பரம் |
ஸ்த்தாபயந்தி மமாதேசாத் யாவத் ஆபூதஸம்ப்லவம் ||

(கூர்ம புராணம்)

तापत्रयाग्निसंतप्तसमाह्लादनचन्द्रिका (357)

தாபத்ரயாக்நி ஸம்தப்த ஸமாஹ்லாதந சந்த்ரிகா

தாபத்ரயங்களாகிற அக்நியினல் தஹிக்கப்பட்டவர்களை உத் ஸாஹப்படுத்துவதில் சந்த்ரிகை போன்றவள்.

மனுஷ்யர்களை மூன்றுவிதமான தாபங்கள் (தாபத்ரயங்கள்) கஷ்டப்படுத்துவதாகச் சொல்லப்படும். அவை (1) ஆத்யாத் மிகம்-மனோபுத்தியஹங்கார சித்தங்களாகிற மனோந்த்ரியங்கள். 4, பஞ்ச ஞானேந்த்ரியங்கள், பஞ்ச கர்மேந்த்ரியங்கள் இவைகளடங் கிய சரீரத்தை ஒட்டியது. (2) ஆதிபௌதிகம் - மேலே சொல்லிய இந்த்ரியங்களின் விஷயங்களாகிய பஞ்சபூதங்களால் ஏற்படுவது. (3) ஆதிதைவிகம் - தேவதைகளால் ஏற்படுவது. இம் மூன்று தாபங்கள் தான் ஸம்ஸாரம் என்பதின் லக்ஷணங்கள். இவைகளால் கடுமையாக தஹிக்கப்படும் ஜீவனை அம்பாள் தன் கருணையாகிற நிலவினல் அவனுடைய தாபத்தைப்போக்கி ஸர்
கிறாள் என்று இந்த நாமத்தில் சொல்லப்பட்டது.

तरुणी

தருணீ (358)

நித்ய யௌவனத்தோடு கூடியவள்.

'தம்ருத:' என்று ச்ருதியில் சொன்னபடி பரப்ரம் ஹமானது ஜராமரணவர்ஜிதமாக இருக்கிறபடியால் இங்கே அம் பாளை நித்ய யௌவனமுடையவளென்று சொல்லப்பட்டது.

तापसाराध्या

தாபஸாராத்யா (359)

தபஸ்விகளால் ஆராதிக்கப்பட்டவள்.

அல்லது தாப, ஸாரா, ஆத்யா என்று பிரித்து, தாபத்தின் மூலகாரணமாகிற ஸம்ஸாரத்திற்கு ஸாரபூதமாகிறபடியால் விசேஷமாக த்யானம் செய்யப்படுகிறவள் என்றும் சொல்லலாம்.

तनुमध्या

தநுமத்யா

மெல்லியதான இடையை உடையவள்.

1. அம்பாளுடைய மத்யப்ரதேசத்தைப்பற்றி ஏற்கனவே வந்த 35-வது நாமமாகிய,

'லக்ஷ்ய ரோமலதாதாரதா ஸமுந்நேய மத்யமா'

என்பதில் சொல்லப்பட்டிருக்கிறதைப் பார்க்கவும்,

2. 'மாம் பாது நிவாயாஸ்தி ரே நிவஸந்தி
பில்வேச்வர காந்தா தேவீ தநுமத்யா'

என்று சொன்னபடி காஞ்சீதேசத்தில் தநுமத்யா என்ற பெயரோடு அம்பாள் இருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

3. தநுமத்யா என்ற பெயரையுடைய ஒரு வ்ருக்ஷ விசேஷ ரூபமாக இருப்பவள் என்றும் சொல்லலாம்: (
சந்தஸ் சாஸ்திரங்களில் பார்க்கவும்.)

तमोपहा

தமோபஹா (361)

அவித்யையாகிற இருட்டைப் போக்கடிப்பவள்.

அவித்யையை உபாஸிக்கிறவர்கள், அதாவது, ஸ்ரீவித்யையை உபாஸிக்காதவர்கள் பயங்கரமாயிருக்கும் இருட்டை அடைவார்களென்று சொல்லப்பட்டிருக்கிறது.

'அந்தம்தம: ப்ரவிசந்தி யேऽவித்யாம் உபாஸதே' (ச்ருதி)
'அந்தம்தம: ப்ரவிசந்தி யேऽவித்யாம் ஸமுபாஸதே |
இதி ச்ருதிரபாஸ்தாந் அவித்யோபாஸகாந் புந: |
வித்யாந் யோபாஸகாநேவம் நிந்தத்யாரண்யக ச்ருதி: 11'
(ஸ்ரீ லலிதா த்ரிசதி)

चितिः

(362)

சித் (ஞான) ஸ்வரூபமாக இருப்பவள்.

1. அவித்யைக்குச் சத்ருவாக இருக்கும் ஞானத்திற்குச் சித் என்று பெயர்.

2. சித் என்பது ஸ்வதந்த்ர சக்தியோடும் ப்ரபஞ்சத்தின் ஸ்திதிக்கு ஹேதுவாயும் இருப்பதாக 'சிதி: ஸ்வதந்த்ரா விச்வ விதிந்திஹேது:' என்று சக்தி ஸூத்ரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

3. ஜீவித்திருப்பதில் ஆசையுள்ளவர்களுக்கு ஜீவனைக் கொடுப்பதால் அம்பாளுக்கு 'சிதி:' என்று பெயர் என்பதாக மஹா வாலிஷ்டத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

'ஸைஷா சிதிரிதி ப்ரோக்தா ஜீவநாத் ஜீவிதைஷிணாம்' |

तत्पदलक्ष्यार्था

தத்பத லக்ஷ்யார்த்தா (363)

தத் என்ற பதத்தினால் குறிக்கப்படுகிறவள்.

'தத்த்வமஸி' முதலான மஹா வாக்யங்களில் வரும் 'தத்' என்ற பதத்திற்கு ஜகத்தினுடைய ஸ்ருஷ்டி முதலான காரியங்களைச் செய்யும் ரூப பேதங்களையுடைய ப்ரம்ஹமென்பது வாச்யார்த்தம். அதே பதத்திற்கு க்ருத்ய ரஹிதமாயும் கேவலம் சுத்தஸ்வரூபமாயுமிருப்பதான ப்ரம்ஹமென்பது லக்ஷ்யார்த்தம். இதே ரூபபேதங்களையுடைய ப்ரம்ஹமும் கேவல சுத்த ஸ்வரூபமான ப்ரம்ஹமும் தாதாத்ம்யத்தோடு (ஒன்றாக) இருக்கும். இப்படி தத் என்ற பதத்தினால் லக்ஷ்யார்த்தமாகக் குறிக்கப்படும் ப்ரம்ஹஸ்வரூபமாக அம்பாள் இருப்பதால் "தத்பத லக்ஷ்யார்த்தா" என்று பெயர்.

चिदेकरसरूपिणी

சிதேக ரஸரூபிணீ (364)

சித் என்பதோடு ஏகரஸமான (அபேதமான) ரூபங்களோடு கூடியவள்.

1. அல்லது, சித் என்பதை ஏக (முக்யமான) ரஸமாக உடைய ரூபங்களோடு கூடியவள் என்றும் சொல்லலாம்.

2. இந்த ரூபங்கள் ஆனந்தம், சைதன்யம் முதலியவை. கேவலமான (சுத்தமான) ப்ரம்ஹத்திற்கும் இவ்வித ஆனந்தம்

சைதன்யம் முதலிய விசேஷங்கள் உண்டு. ஆயினும் இந்த விசே ஷங்கள் ப்ரம்ஹத்தில் அபேதமாக இருப்பதை இந்த நாமத்தில் சொல்லப்பட்டது.

स्वात्मानन्दलवीभूतब्रह्माद्यानन्दसंततिः

ஸ்வாத்மாநந்த லவீபூத ப்ரம்ஹாத்யாநந்த ஸந்ததி:

(365)

தன்னுடைய ஆத்மானந்தத்தில் லவப்ராயமாக இருக்கும் ப்ரம்ஹா முதலியவர்களின் ஆனந்த பரம்பரையை யுடையவள்.

1. அதாவது, அம்பாளுடைய ஆத்மரூபமான ஆனந்த மானது ஸமுத்ரம்போல் அபாரமானதென்றும், ப்ரம்ஹா முத லானவர்களுடைய ஆத்மரூபமான ஆனந்தமானது அதின் ஒரு துளி (லவம்) போன்றதென்றும் தாத்பர்யம்.

2. ப்ரம்ஹாதிகள் என்பதினால் ஸ்ருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹா ரம் முதலான கர்த்ருத்வங்களால் பேதரூபமாய் இருக்கும் ப்ரம்ஹா, விஷ்ணு, ருத்ரன் இவர்கள் குறிக்கப்பட்டார்கள்.

3. தைத்திரீயோபநிஷத்தில் மாநுஷானந்தத்திலிருந்து ஆரம்பித்து மேலுக்கு மேலான ஆனந்தங்களைச் சொல்லி வருகை யில் ப்ராஜாபதி (ப்ரம்ஹா) முதலானவர்களுடைய ஆனந்தத்தைச் சொல்லும்போது அதெல்லாம் பூர்ணமான (அபரிச்சின்னமான) ஆனந்தமல்லவென்றும், அபரிச்சின்னமான ப்ரம்ஹானந்தமே எல்லாவற்றிற்கும் மேலானதென்றும், அதை அடைவதே தான் உத்தமமான புருஷார்த்தமென்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

4. இதையேதான் ச்ருதியில் 'ஏதஸ்யைவ ஆனந்தஸ்ய அந்யாநி பூதாநி மாத்ராம் உபஜீவந்தி' என்று சொல்லியிருக்கிறது.

5. ஆகவே இந்த இரண்டு நாமங்களால் அம்பாள் தத்பத லக்ஷ்யார்த்தமான பரப்ரம்ஹ ஸ்வரூபமென்றும், அம்பாளுடைய ஆத்மானந்தத்திற்கு ஸ்ருஷ்டட்யாதி கர்மாக்களுக்கு அதிகாரி களான ப்ரம்ஹா முதலானவர்களுடைய ஆனந்தமானது லேசும் கூட ஸமானமல்லவென்றும் சொல்லப்பட்டது.

परा

பரா

(366)

பரா என்ற சப்தத்தின் ஸ்வரூபமாக இருப்பவள்.

1. இது முதல் வரும் நாமங்களில் அம்பாள் சப்த ப்ரம்ஹத்தோடு அபிந்நமாக இருப்பது சொல்லப்படுகிறது.

2. ப்ரளயகாலத்தில் (அதற்குப் பிறகு) ஸ்ருஷ்டிக்கப்படும் படியான ப்ராணிகளுடைய (பூர்வ) கர்மாவானது பரிபாகம் அடையாமலிருக்கிறது. அப்போது அந்த கர்மாவோடு அபின்னமாக இருக்கும் மாயையினல் சூழப்பட்ட ப்ரம்ஹமானது கனீபூதமாக (உறைந்து) இருப்பதாகச் சொல்லப்படும். பிறகு காலக்ரமத்தில் கர்மாவானது பரிபாகமடைய ஆரம்பிக்கவே, அந்த கனீபூதமாக இருக்கும் தன்மையானது மாறுதல் அடையும். அப்போது ப்ரம்ஹத்திற்கு இருக்கும் அவஸ்த்தையை விசிகீர்ஷா (க்ரியையில் இச்சையோடு கூடியது) என்று சொல்லப்படும். பிறகு கர்மாவானது பூராவாக பரிபாகமடையும்போது, ப்ரம்ஹமானது (அவ்விதம் பரிபாகமடைந்த கர்மாவோடு அபின்னமாக இருக்கும்) மாயையோடு கூடியதாக இருக்கிறது. அப்போது ப்ரம்ஹத்தை அவ்யக்தம் (வெளியில் தெரியாது) என்று சொல்லப்படும். இவ்விதமான அவ்யக்த ப்ரம்ஹமே ஜகத்திற்கு மூலகாரணமாக இருப்பதால் அதைக் காரணபிந்து என்று சொல்வதுண்டு.

3. இவ்விதமான காரணபிந்துவிலிருந்து கார்யபிந்துவும், கார்யபிந்துவிலிருந்து நாதமும், நாதத்திலிருந்து பீஜமும் உண்டா)ம் மூன்றுதான் பர, ஸூக்ஷ்ம, ஸ்தூலங்களென்றும் சொல்லப்படும். இவையின் ரூபங்கள் சித் அம்சமும், சித் அசித்துக்களின் மிச்ரமும் (கலப்பும்), அசித் அம்சமும் ஆகும்.

"காலேந பித்யமாநஸ்து ஸ பிந்துர் பவதி த்ரிதா |
ஸ்தூல ஸூக்ஷ்ம பரத்வேந தஸ்ய த்ரைவித்யமிஷ்யதே |
ஸ பிந்துநாத பீஜத்வ பேதேந ச நிகத்யதே ||"

(ரஹஸ்யாகமம்)

4. மேலே சொல்லிய காரணபிந்து, கார்யபிந்து, நாதம், பீஜம் இவைகளுக்கு அவ்யக்த ப்ரம்ஹம், ஈச்வரன், ஹிரண்யகர்பன், விராட் இவர்களும், சாந்தா, வாமா, ஜ்யேஷ்டா, ரௌத்ரீ இவர்களும், அம்பிகை, இச்சா, ஞான, க்ரியா சக்திகளும் அதிதைவத ஸ்வரூபங்கள். அதிதைவிதமாக அவைகளுக்கு காமரூப, பூர்ணகிரி, ஜாலந்தர, ஓட்யாண பீடங்கள் அதிபௌதிக ஸ்வரூபங்கள். அத்யாத்மமாகச் சொல்லுகையில் காரணபிந்துவானது குண்டலிநீ ரூபமாக மூலாதாரத்திலிருக்கிறது. இதையேதான்

'சக்தி: குண்டலிநீதி வீச்வஜநந வ்யாபார பத்தோத்யமாம்
ஞாத்வேத்தம் ந புநர் விசந்தி ஜநநீகர்பேZர்பகத்வம் நரா: |'

என்று லகுஸ்துதி யில் சொல்லியிருப்பதுபோல் அநேக டங களில் வர்

5. இப்படி மூலாதாரத்தில் குண்டலிநீ ரூபமாகவும் யாதொரு பிரிவுமில்லாமலுமிருக்கும் காரணபிந்துவானது கார்யபிந்து முதலிய (மேலே சொல்லிய) மூன்றையும் உண்டுபண்ண முயலும் போது அது பேதிக்கப்பட்டு (வெடித்து அல்லது மலர்ந்து) அந்த ஸமயம் அதிலிருந்து அவ்யக்தமானதும் சப்தப்ரம்ஹமென்று சொல்லப்படுவதுமான ஒருவிதமான ஓசையானது உண்டாகிறது.

'பிந்தோஸ் தஸ்மாத் பித்யமாநாத் அவ்யக்தாத்மா ரவோ
ஸ ரவ: ச்ருதிஸம்பந்ந: சப்தப்ரம்ஹேதி கீயதே !!' [Zபவத் !

இவ்விதஓசையானது காரணபிந்துவோடு தாதாத்ம்யமாக இருப்பதால் ம் பரவியிருந்தபோதிலும் மூலாதாரத்தில் தான் முதன் முதலாக ல் ப்ராண வாயு வானது மூலாதா ல் தான் முதலில் ம் பேசவேண்டுமென்கிற ஆசையுண்டாகும்போது அந்த முயற்சி யினால் தூண்டப்பட்ட வாயுவானது எங்கும் நிறைந்த சப்தப்ரம்ஹமாக ஏற்படுகிறதென்றும் சொல்லப்பட்டது.

'தேதேஹZபி மூலாதா ரேZஸ்மிந் ஸமுதேதி ஸாரணா: |
விவக்ஷோரிச்சயோத்தேந ப்ரயத்நேந ஸ ஸம்ஸ்க்ருத: |
ஸ வ்யஞ்ஜயதி தத்ரைவ சப்தப்ரம்ஹாடி ஸர்வகம் !!'

இம்மாதிரி காரணபிந்துவாத்மகமான சப்தப்ரம்ஹமானது ஆவிர்பவித்தபோதிலும் தான் உற்பத்தியான இடத்திலேயே (மூலாதாரத்தில்) அசைவற்று (நிஷ்பந்தமாக) இருக்கிறது. இதுதான் பரா வாக்கென்று சொல்லப்படும்.

6. பின்பு இந்த சப்தப்ரம்ஹமானது வாயுவினால் மேலே வரும்போது நாபிக்கு ஸமீபம் வந்தவுடன் அங்கே விமர்சரூபமான (ஆராய்ந்து பார்க்கும் ஸ்வபாவமுள்ள) மனஸ்ஸுடன் கலந்து ஸாமான்ய ஸ்பந்தத்துடன் (கொஞ்சமான சலனத்துடன்) கூடிய கார்யபிந்துமயமாக ஆகிறது. அப்போது அதை பச்யந்தீ வாக் கென்று சொல்லப்படும்.

7. பிறகு அந்த சப்தப்ரம்ஹமானது அதேமாதிரி வாயுவினால் நாபியைத் தாண்டி அதற்கு மேல் ஹ்ருதய பர்யந்தம் வந்தவுடன் அங்கு நிச்சயாத்மகமான (தீர்மானம் செய்யும் சக்தியை

யுடைய) புத்தியுடன் கலந்து விசேஷமான ஸ்பந்தத்துடன் கூடிய நாதமயமாக ஆகிறது. அப்போது அது மத்யமா வாக்கென்று சொல்லப்படும். அதற்கப்புறம் அந்த சப்தப்ரம்ஹமானது அதே மாதிரியாக வாயுவினல் கழுத்து முதலிய ஸ்தானங்களின் வழி யாக வந்து வாயின் மூலமாக வெளியே வருகிறது. அப்போது அது அகராதி வர்ணங்களின் (அக்ஷரங்களின்) ரூபத்துடனும் காதினல் கேட்கக்கூடியதாகவும் பீஜாத்மகமாகவும் இருக்கிறது. அதைத்தான் வைகரீ வாக்கென்று சொல்வது.

'மூலாதாரே பரா ப்ரோக்தா பச்யந்தீ நாபிஸம்ஸ்திதா |
மத்யமா புத்திஸம்யுக்தா அஷ்டஸ்தாநேஷு வைகரீ ||'

8. இதுதான்,

'மூலாதாராத் ப்ராதமமுதிதோ யச்ச பாவ: பராக்ய:
பச்சாத் பச்யந்த்யத ஹ்ருதயகோ புத்தியுங் மத்யமாக்ய: |
வ்யக்தே வைகர்யத ருருதிவதாஸ்ய ஜந்தோ: ஸுஷும்ண
பத்தஸ் தஸ்மாத் பவதி பவதே ப்ரேரிதா வர்ணஸம்க்ஞா ||'

என்று ஆசார்யாளாலும்,

'மூலாதாரே ஸமுத்பந்ந: பராக்யோ நாதஸம்பவ: |
ஸ ஏவோர்த்வதயாநீத: ஸ்வாதிஷ்டாநே விஜ்ரும்பித: ||
பச்யந்த்யாக்யாம் அவாப்நோதி ததைவோர்த்வம் சநை: சநை: |
அநாஹதே து புத்திதத்வஸமேதா மத்யமாபித: ||
ததா நபோர்த்வ நுந்ந: ஸந் விசுத்தேள கண்டதேசத: |
வைகர்யாக்ய:..... ||'

என்று நித்யா தந்த்ரத்திலும் சொல்லப்பட்டிருக்கிறது.

9. மமாதிர் வாகுகானது நாலு)ருக்க. முதல் மூன்று இருப்பதைத் தெரியாதவர்கள் ஸ்தூலமாகத் தெரியும் வைகரீ என்பதே வாக்கென்று சொல்லுகிறது வழக்கம்.

'தஸ்மாத் யத்வாசோ நாப்தம் தந் மநுஷ்யா உபஜீவந்தி'
(ச்ருதி)

'சத்வாரி வாக் பரிமிதா பதாநி
தாநி விதுர் ப்ராம்ஹணா யே மநீஷிண: |
குஹா த்ரீணி நிஹிதா நேங்கயந்தி
துரீயம் வாசோ மநுஷ்யா வதந்தி ||' (ச்ருதி)

10. மேலே சொல்லியதிலிருந்து தத் பதமானது பரா வாக்காக வைத்துக்கொண்டாலும் அது அவ்யக்தமானதும் நிர்குணமானதுமான ப்ரம்ஹத்தைக் குறிக்காது என்று ஏற்படும் போது ஸாமான்யமான வைகரீ வாக்காக இருக்கும் தத்பதமானது

அப்பேர்ப்பட்ட ப்ரம்ஹத்தைக் குறிக்காதல்லவா. ஆகையால்தான் அம்பாளை 'தத்பத லக்ஷ்யார்த்தா! என்று முந்தி சொல்லப்பட்டது.

11. பரா என்றால் மேல்பட்டவள் என்றும் அர்த்தம். பாக்கி மூன்றுவிதமான பச்யந்தீ, மத்யமா, வைகரீ வாக்குக்களுக்கு மேல்பட்டதான வாக் ஸ்வரூபாக அம்பாளிருப்பதால் பரா என்று பெயர் என்பதாகவும் சொல்லலாம்.

12. ஸ்ரீ பரானந்த நாதர் என்பவருக்கு ப்ரஸன்னமான தினாலும், பரானந்தம் என்ற தந்த்ரத்தில் ப்ரஸித்தமாகச் சொல்லப்பட்டிருப்பதாலும், பக்தர்களிடத்தில் விசேஷமான ப்ரஸாதத்தோடு (அனுக்ரஹத்தோடு) இருப்பதாலும் அம்பாளுக்கு பரா என்று பெயர் என்பதாக த்ரிபுராஸித்தாந்தத்தில் சொல்லப்பட்

ஸ்ரீ பராநந்தநாதஸ்ய ப்ரஸந்நத்வாத் பரேதி ஸா |
பராநந்தாபிதே தந்த்ரே ப்ரஸித்தத்வாச்ச ஸா பரா |
ப்ராஸாத ரூபிணீ சேதி பரா ஸா சாம்பவீ பரா ||'

प्रत्यक्चितीरूपा

ப்ரத்யக் சிதீரூபா (367)

உள்நோக்கியிருக்கும்படி திருப்பும் சித் ரூபமாக இருப்பவள்.

அதாவது ஸ்வாத்மாபிமுகமாக இருக்கும்படி செய்வதும் சித் ரூபமானதும் அவ்யக்தமென்று சொல்லப்படுவதுமான ப்ரம்ஹ ஸ்வரூபமாக இருப்பவளென்று அர்த்தம்.

पश्यन्ती

பச்யந்தீ (368)

பச்யந்தீ என்ற வாக் ஸ்வரூபமாக இருப்பவள்.

அல்லது எதையும் பார்க்கிறபடியால் பச்யந்தீ என்று பெயர். அம்பாள் ஸகலத்தையும் தன்னிடமே பார்க்கிறபடியால் பச்யந்தீ என்றும், (செய்யவேண்டியதான) காரணங்களுக்கு மேலெழுந்திருப்பதால் உத்தீர்ணை என்றும் பெயர்களையுடையவளென்றும் ஸௌபாக்ய ஸுதோதயத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

'பச்யதி ஸர்வம் ஸ்வாத்மநி காரணரூபம் ஸரணிமபி யதுத்
[தீர்ணா ।'
தேநேயம் பச்யந்தித்யுத்தீர்ணேத்யப்யுதீர்யதே மாதா॥'

परदेवता

பரதேவதா (369)

உத்க்ருஷ்டமான தேவதையாக இருப்பவள்.

मध्यमा

மத்யமா (370)

மத்யமா என்ற வாக் ஸ்வரூபமாக இருப்பவள்.

பச்யந்தீபோல் சற்றுக் கிளம்பியதோடு நிற்காமலும் வைகரீ போல் மிகத்தெளிவாகவும் ஸகல அவயவங்களோடு இல்லாமலும் இருப்பதால் மத்யமா என்று பெயர்.

'பச்யந்தீவ ந கேவலம் உத்தீர்ண நாபி வைகரீவ பதஸ்ரீ: |
ஸ்புடதரஸகிலாவயவா வாக்ரூபா மத்யமா தயோரஸ்மாத் ||'

वैखरीरूपा

வைகரீரூபா (371)

வைகரீ என்ற வாக் ஸ்வரூபமாக இருப்பவள்.

1. வைகரீ என்ற பதத்திற்கு விசேஷமாய்க் கடினமானது என்று அர்த்தம். பரா முதலான வாக்கின் நாலு ரூபங்களில் அது ஸ்தூலமானதும் கனமான பாவத்தோடும் இருப்பதால் வைகரீ என்று பெயர்.

2. வை-நிச்சயமாய், கம்-காதின் த்வாரத்தை, ராதி-அடைகிறது, என்று இந்தப் பதத்திற்கு ஸௌபாக்யஸுதோதயத்தில் அர்த்தம் சொல்லப்பட்டிருக்கிறது.

3. விகரமென்ற ப்ராண (வாயுவி) னல் ப்ரேரிக்கப்படுவதால் வைகரீ என்று பெயர் என்பதாக யோக சாஸ்த்ரங்களில் சொல்லப்பட்டிருக்கிறது.

'ப்ராணேந விகராக்யேந ப்ரேரிதா வைகரீ புந: |'

भक्तमानसहंसिका

பக்தமாநஸ ஹம்ஸிகா (372)

பக்தர்களுடைய மனதில் ஹம்ஸம் போலிருப்பவள்.

1. 'மாநஸ' என்பதினல் மாநஸ ஸரஸ் (மாநஸ ஸரோவரம்)என்று பெயரையுடைய ஏரியும் சொல்லப்பட்டது. பூர்வப்ரம்ஹாவானவர் தன்னுடைய மனதால் ஒரு ஸரஸ்ஸை ஸ்ருஷ்டித்தாரென்றும், அதற்கு (அந்தக் காரணத்தால்) மாநஸஸரஸ்

என்று பெயர் என்பதாகவும் அது கைலாஸ சிகரத்திலிருப்ப தாகவும் சொல்லப்பட்டிருக்கிறது.

'கைலாஸ சிகரே ராம மாநஸா நிர்மிதம் ஸர:
ப்ரஹ்மணா ப்ராகிதம் யஸ்மாத் ததபூன் மாநஸம் ஸர: ॥'

அங்கே எண்ணிக்கையற்ற ஹம்ஸ பக்ஷிகள் இருப்பதாக வும் அவை எங்கு போனாலும் திரும்பவும் (முக்யமாக வர்ஷா காலத்தில்) அந்த ஸரோவரத்துக்கே வர ஆசையுடையவைகளாக இருப்பதாகவும் வர்ணிக்கப்பட்டிருக்கிறது.

'மேகச்யாமா திசோ தருஷ்ட்வா மாநஸாத்ஸோத்க சேதஸாம்।
கூஜிதம் ராஜஹம்ஸாநாம் நாதயந்தம் நபோ திசி ॥'
'யஸ்யாஸ்தோயே க்ருதவஸதயோ மாநஸம் ஸந்நிகருஷ்டம்।
நாத்யாஸ்யந்தே வ்யபகதசுச: த்வாமபி ப்ரேக்ஷ்ய ஹம்ஸா: ॥'

2. பக்தர்களுடைய மனதாகிற மாநஸ ஸரஸ்ஸில் அம் பாள் ஒரு ஹம்ஸம்போல் இருப்பதாக இங்கு சொல்லப்பட்டது.

3. இதே விதமாக ஆசார்யாளும் 'ஸௌந்தர்யலஹரீ'யில் வர்ணித்திருப்பது கவனிக்கத்தக்கது.

'ஸமுந்மீலத் ஸம்வித்கமல மகரந்தைக ரஸிகம்
பஜே ஹம்ஸத்வந்த்வம் கிமபி மஹதாம் மாநஸசரம் ।
யதாலாபாத் அஷ்டாதசகுணித வித்யா பரிணதி:
யதாதத்தே தோஷாத் குணமகிலம் அத்ப்ய: பய இவ ॥

4. பக்தர்களைத் தவிர பிறருக்குத் தெரியாமலிருப்பதால் 'ஹம்ஸிகா' என்று சொல்லப்பட்டது.

कामेश्वरप्राणनाडी

காமேச்வர ப்ராண நாடீ (373)

மஹா காமேச்வருடைய ஜீவநாடியாக இருப்பவள்.

1. லோகங்களுடைய ஸம்ஹார காலத்தில் இதர தேவர் கள் (அம்ருதத்தைச் சாப்பிட்டிருந்தபோதிலும்) நாசமடைகிறார்க ளென்றும், பரமசிவன் மிகக் கொடியதான ஹாலாஹல விஷத் தைச் சாப்பிட்டபோதிலும் அவருக்கு யாதொரு விதமான ஹானி யும் ஏற்படவில்லையென்றும், அது அம்பாளுடைய தாடங்கங் களின் மஹிமையால் தானென்றும் ஆசார்யாள் வர்ணித்திருக் கிறார்கள்.

'ஸ்ரீதாமப்யாஸ்வாத்ய ப்ரதிபயஜராம்ருத்யுஹரிணீம்
விபத்யங்தே விச்வே விதிசத மகாத்யா திவிஷத:।

கராளம் யத் க்ஷ்வேளம் கபளிதவத: காலகலநா
ந சம்போஸ் தன்மூலம் தவ ஜநநி தாடங்க மஹிமா ||'
(ஸௌந்தர்யலஹரீ)

இதுதான் ச்ருதியிலும்,

'யா தே ருத்ர சிவா தநூ, சிவா விச்வா ஹ பேஷஜீ,
சிவா ருத்ரஸ்ய பேஷஜீ, தயா நோ ம்ருட ஜீவஸே |'

என்று சொல்லப்பட்டிருக்கிறது.

க்ருதக்ஞா

க்ருதக்ஞா (374)

செய்யப்பட்ட கார்யங்களையெல்லாம் அறிகிறவள்.

1. அதாவது, ப்ராணிகள் செய்யும் ஸகலவிதமான ஸுக்ருதங்கள், துஷ்க்ருதங்கள் எல்லாம் அம்பாளுக்குத் தெரியுமென்று தாத்பர்யம்.

2. ப்ராணிகள் செய்யும் ஸகல கார்யங்களுக்கும் ஸூர்யன், சந்த்ரன், யமன், காலம், பஞ்சமஹாபூதங்கள் இவை ஒன்பதும் ஸாக்ஷிகளென்று சொல்லப்பட்டிருக்கிறது.

'ஸூர்ய: ஸோமோ யம: காலோ மஹாபூதாநி பஞ்ச ச |
ஏதே சுபாசுபஸ்யேஹ கர்மணோ நவ ஸாக்ஷிண: ||'

அம்பாள் இந்த ஒன்பது ஸர்வ ஸாக்ஷிகளோடு அபிந்நமாக இருப்பதால் 'க்ருதக்ஞா' என்று பெயர்.

3. அல்லது, நாம் (நல்ல) கார்யங்களாகிற உபகாரம் செய்தால் ப்ரத்யுபகாரமாக ஞானத்தை அம்பாள் கொடுப்பதால் இந்தப்பெயர் வந்ததாகவும் சொல்லலாம். அம்பாளுக்கு க்ருதக்ஞதை இருப்பதாக தாத்பர்யம்.

4. அல்லது, ஸ்வதஸ்ஸித்தமான ஞானத்தோடு இருப்பதால் இந்தப் பெயர் என்பதாகவும் சொல்லலாம்.

5. அல்லது, க்ருதயுகத்தில்போல பூர்ணமான ஞானத்தோடு இருப்பவள் என்றும் சொல்லலாம். இதர யுகங்களைக் காட்டிலும் க்ருதயுகத்தில் தர்மம் பூர்ணமாக இருந்ததுபோல் ஜனங்களுக்கு ஞானமும் பூர்ணமாக இருந்ததாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

6. த்யூத சாஸ்த்ரத்தில் (சொக்கட்டான் ஆட்டத்தில்) க்ருத, த்ரேதா, த்வாபர, கலி என்பதான நாலு ஆட்டங்கள்

ண்டு. அவைகளுக்கு முறையே 4, 3, 2, 1 என்று லக்கமிருந் தாலும் ஆட்டக்கணக்கில் 10, 6, 3, 1 என்று கணக்கிடப்படும். (ஒவ்வொன்றுக்கும் அதின் பிந்தி வருகிறவைகளின் எண்ணிக் கையும் சேர்த்துக் கொள்ளப்படும்.)

'தே வா ஏதே பஞ்சாந்யே பஞ்சாந்யே கச ஸம்தஸ்
தத் க்ருதம்' (ச்ருதி)

ஆகவே க்ருதமென்கிற ஆட்டத்தில் ஜயித்தவனை மற்ற மூன்று ஆட்டங்களிலும் ஜயித்தவனாக எண்ணப்படும்.

'க்ருதாயவிஜிதாயாததேZயா: ஸம்யந்தி' (ச்ருதி)

க்ருதம் என்னும் ஆட்டமானது பாக்கி ஆட்டங்களை யெல் லாம் எப்படி வ்யாபித்திருக்கிறதோ அம்மாதிரி அம்பாளுடைய ஞானமானது ஸர்வ வ்யாபகமாகவும் ஸர்வ விஷயகமாகவும் இருப்பதால் 'க்ருதக்ஞா' என்று பெயர் என்பதாகவும் சொல்ல லாம்.

7. மேலே சொல்லிய க்ருதம் என்ற ஆட்டத்தைத் தெரிந்த வளாகையால், 'க்ருதக்ஞா' என்று பெயர் வந்ததாகவும் சொல்ல லாம். பரமசிவன் அம்பாளுடன் சொக்கட்டான் ஆடும்போது அம்பாளுக்கு எதையும் ஜயிக்கக்கூடியதான க்ருதம் என்ற ஆட் டம் தெரியுமாதலால் அம்பாள் தான் வெற்றிபெறுவாள் என்று தாத்பர்யம்.

कामपूजिता

காமபூஜிதா (375)

மன்மதனால் உபாஸிக்கப்பட்டவள்.

அம்பாளுடைய முக்யமான உபாஸகர்கள் பன்னிருவரில் மன்மதன் ஒருவனென்பது ஏற்கனவே வந்த 'மஹாவித்யா' 'சந் த்ரவித்யா,' 'ராஜராஜார்ச்சிதா' என்ற நாமங்களில் சொல்லப் பட்டிருக்கிறது. ஆசார்யாளும்,

'ஸ்மரோZபி த்வாம் நத்வா ரதிநயந லேஹ்யேந வபுஷா |
முநீநாம் அப்யந்த: ப்ரபவதி ஹி மோஹாய மஹதாம் ||'
'தனு: பௌஷ்பம் மௌர்வீ மதுகரமயீ பஞ்ச விஸிகா:
வஸந்தஸ் ஸாமந்தோ மலயமருதாயோதந ரத: |
ததாப்யேகஸ் ஸர்வம் ஹிமகிரிஸுதே காமபி க்ருபாம்
அபாங்காத் தே லப்த்வா ஜகதிதம் அநங்கோ விஜயதே ||'

என்று ஸௌந்தர்யலஹரியில் சொல்லியிருக்கிறார்கள்.

2. மன்மதன் ஸ்ரீவித்யையான வித்யாதத்வத்தை அடைந்
தவளப்பற்றி,

'புத்தோ நிர்ருத்யா வைதேஹ அசேதா யச்ச சேதந: |
ஸ தம் மணிம் அவிந்தத்'

என்பது முதலான வாக்யங்களால் அருணேபநிஷத்தில் சொல்லி
யிருப்பதைப் பார்க்கவும்.

शृङ्गाररससंपूर्णा

ச்ருங்கார ரஸ பூர்ண (376)

ச்ருங்கார ரஸத்தைப் பூர்ணமாக உடையவள்.

1. அம்பாளுடைய ரூபவிசேஷங்களில் லலிதாம்பிகையான
வள் ச்ருங்கார ரஸப்ரதாநமான மூர்த்தியென்பது முக்யமான
விஷயம். இதைப்பற்றி பின்வரும் 'லலிதாம்பிகா' என்ற கடைசி
நாமத்தில் சொல்லப்படும்.

2. பின்னல் வரும் நாமங்களில் ஜாலந்தரபீடம், ஓட்யாண
பீடம் இவை சொல்லப்படுவதால் முன்பு வந்த 'காமபூஜிதா'
என்ற நாமத்தில் காமகிரி பீடமும், இந்த நாமத்தில் பூர்ணகிரிபீட
மும் சொல்லப்பட்டதாகச் சொல்லலாம்.

3. சப்தப்ரம்ஹத்தினுடைய ரூபங்களான காரணபிந்து,
கார்யபிந்து, நாதம், பீஜம் இவை சரீரத்தில் முறையே காமகிரி,
பூர்ணகிரி, ஜாலந்தர, ஓட்யாண பீடங்களில் அதிபூதமாக வ்யா
பித்திருப்பதாக ஏற்கனவே வந்த 'பரா' என்ற நாமத்தில் சொல்
லப்பட்டது. இந்த பீடங்கள் முறையே மூலாதாரம், அநா
ஹதம், விசுத்தி, ஆக்ஞா என்ற ஸ்தானங்களிலிருப்பதாகச் சொல்
லப்படும்.

'குதமேட்ராந்தராளஸ்த்தம் மூலாதாராம் த்ரிகோணகம் |
யதேதத் காமரூபாக்யம் பீடம் காம பலப்ரதம் ||
த்வாதசாரம் மஹாசக்ரம் அமலாநஹதாஹ்வயம் |
தத்தேதத் பூர்ணகிர்யாக்ய. பீடம் தவ வராநநே ||
கண்டகூபே விசுத்யாக்ய யச்சக்ரம் ஷோடசாச்ரகம் |
பீடம் ஜாலந்தரம் நாம திஷ்டத்யத்ர மஹேச்வரீ ||
ஆக்ஞா காம ப்ருவோர்மத்யம் த்விதளம் சக்ரமுத்தமம் |
ஓட்யாணக்யம் மஹாபீடம் உபரிஷ்டாத் ப்ரதிஷ்டிதம் ||

இந்த பீடங்களில் அம்பாள் இருப்பதாகவும் அவைகளில்
பூஜிக்கப்படுவதாகவும் இந்த நாமங்களால் சொல்லப்பட்டிருக்

4. சக்ரங்க என்றால் கொம்பு என்ற அர்த்தம். கொம்புகள் ஸாதாரணமாக இரண்டாகையால் சக்ரங்க என்ற பதம் இரண்டைக் குறிக்கும். ஆர என்றால் தளம், இதள். ரஸ என்ற பதமானது (ஷட்ரஸங்களாகையால்) ஆறு என்ற எண்ணிக்கையைக் குறிக்கும். ஆகவே சக்ரங்க, ஆர, ரஸ என்று பிரித்து (2 × 6) பன்னிரண்டு தளங்களையுடைய அநாஹதசக்ரத்தில்(ஸம்பூர்ண) கன்றுப் வீற்றிருப்பவள் என்ற அர்த்தம் என்பதாகவும் சொல்லலாம்.

जया

ஜயா (377)

ஜயஸ்வரூபமாக இருப்பவள்.

'ஜயா வராஹமுகே து' என்ற பதம் புராணத்தில் சொல்லியபடி வராஹமுகசலத்திலிருக்கும் அப்பாருக்கு ஜயா என்று பெயர்.

जालन्धरस्थिता

ஜாலந்தரஸ்தா (378)

ஜாலந்தரமென்கிற பீட விசேஷத்திலிருப்பவள்.

என்ற பதம் புராண வசனப்படி ஜாலந்தரமெனப்படும் தேவீ க்ஷேத்ரத்திலிருக்கும் அப்பாருக்கு விஷ்ணுமுகீ என்று பெயர்.

ओड्याणपीठनिलया

ஓட்யாண பீடநிலயா (379)

ஓட்யாணமென்கிற பீட விசேஷத்திலிருப்பவள்.

बिन्दुमण्डलवासिनी

பிந்து மண்டலவாஸி நீ (380)

பிந்துவாகிய மண்டலத்தில் வஸிப்பவள்.

1. நவசக்ராத்மகமான ஸ்ரீசக்ரத்தில் நடுவிலிருக்கும் ஸர்வானந்தமய சக்ரமானது பிந்து என்று சொல்லப்படும்.

2. பிந்து என்றால் வெளுப்பு என்ற அர்த்தம். பஞ்சமி ப்ரம்மரந்த்ரத்தை பிந்து மண்டலமென்றும், அதில் அப்பாள் இருப்பதை இங்கு சொல்லப்பட்டதென்றும் சிலருடைய அபிப்ராயம்.

यागक्रमाराध्या

ரஹோயாக க்ரமாராத்யா (381)

ரஹோயாகத்தினுடைய ப்ரயோகத்தின் மூலமாக ஆராதிக்கப்படுபவள்.

1. ரஹோயாகமென்பதற்கு ரஹஸ்யத்தில் (தனிமையில், ஏகாந்தமாக) செய்யப்படும் யாகமென்று அர்த்தம். ஸஹஸ்ரார டலீநீ அதிஷ்டானமாக இருக்கும் சிதக்னியில் புண்யம் முதலான அஷ்ட மோஹாமங்களால் செய்யப்படும் யாகமானது ரஹோயாக மென்று சொல்லப்படும். அந்த ப்ரயோகத்தால் ஆராதிக்கப்படு கிறவள் — ரஹோயாகக்ரமாராத்யா.

2. குண்டலீநீ சக்தியானவள் ஷட்சக்ரபேதநம் செய்து ஸஹஸ்ரார பத்மத்திற்கு வந்து அங்கே பரமசிவனுடன் ரஹஸ்ய பத்தில் சேர்ந்து க்ரீடிப்பதாக

'ஸஹஸ்ராரே பத்மே ஸஹ ரஹஸி பத்யா விஹரஸே'

என்று ஆசார்யாள் 'ஸௌந்தர்யலஹரி'யில் வர்ணித்திருக்கிறார்கள்.

3. மோக்ஷமானது சப்த சாஸ்திரத்தில் (வியாகரண சாஸ் திரத்தில்) மட்டும் கவனம் செலுத்துகிறவனுக்காவது, ரம்யமான வீடு முதலியவைகளில் பிரியமுடையவனுக்காவது, போஜனம், வஸ்த்ரங்கள் இவைகளில் தத்பரனாக இருப்பவனுக்காவது, லோக விஷயங்களில் பற்றுதல் உடையவனுக்காவது கிடையாதென்றும், ஏகாந்த சீலத்துடனும் த்ருடமான வ்ரதத்துடனும் ப்ரீதியுண் டாக்கும் விஷயங்களிலிருந்து நிவ்ருத்தியுடனும் அத்யாத்ம யோகத்தில் முயற்சியுடனும் அஹிம்ஸையை எப்போதும் கைக் கொண்டும் இருப்பவனுக்கே மோக்ஷம் கிடைக்குமென்று ஆபஸ்தம்பர் சொல்லியிருக்கிறார்.

'ந சப்தசாஸ்த்ராபிரதஸ்ய மோக்ஷோ
ந சைவ ரம்யாவஸத ப்ரியஸ்ய |
ந போஜநாச்சாதந தத்பரஸ்ய
ந லோகசித்தக்ரஹணே ரதஸ்ய ||
ஏகாந்தசீலஸ்ய த்ருடவ்ரதஸ்ய
மோக்ஷோ பவேத் ப்ரீதி நிவர்த்தகஸ்ய |
அத்யாத்மயோகே நிரதஸ்ய ஸம்யக்
மோக்ஷோ பவேத் நித்யமஹிம்ஸகஸ்ய ||

4. ஜீவித்வையே மிகவும் ரஹஸ்யமானதென்றும் அதி னுடைய உபாஸனையும் மிகவும் ரஹஸ்யமாகச் செய்யப்பட வேண்டுமென்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

'வேச்யா இவ ப்ரகடா ச
ஸர்வேஷா தர்சநேஷு குப்தேயம் வித்யா'
(பரசுராம கல்பஸூத்ரம்)

'யதி ப்ரவிசேத் மிதோ சரித்வா ப்ரவிசேத்' (அருணோபநிஷத்)

'அந்த: சாக்தா: பஹி: சைவா: ஸபாயாம் வைஷ்ணவா மதா: |
நாநாரூபர்த்திதரா: கௌலா: விசரந்தி மஹீதலே ||'
(ச்யாமாரஹஸ்யம்)

रहस्तर्पणतर्पिता

ரஹஸ்தர்ப்பண தர்ப்பிதா (382)

ரஹஸ்யமான தர்ப்பணத்தால் ஸந்தோஷிப்பிக்கப்படுமவள்.

1. மந்த்ரத்தினுடைய அர்த்தத்தை நன்றாய்த் தெரிந்து கொள்ளுதலே ரஹஸ்தர்ப்பணம் என்று சொல்லப்படும். (த்ருப்தி யைக் கொடுக்கும் கர்மாவுக்குத் தர்ப்பணம் என்று பெயர்.)

2. மேலே சொல்லிய ரமேஹாபாகம், ரஹஸ்தர்ப்பணம் இவைகள் பின்வருமாறு வர்ணிக்கப்பட்டிருக்கின்றன. "உள்ளுக்குள்ளே இடைவிடாமலும் விறகில்லாமலே வளர்ச்சியுடன் எரிந்து கொண்டிருப்பதும் மோஹமாகிற அந்தகாரத்திற்குச் சத்ருவுமாயும் அத்புதமான காந்தி ஸமூஹத்தை விளைவித்துக்கொண்டிருப்பதுமான ஸம்வித்அக்நி (ஞாநாக்நி)யில் ப்ருத்வீ முதல் சிவன் வரையிலுள்ள தத்வங்களடங்கிய விச்வத்தை (ஜகத்தை) ஆஹுதி பண்ணுகிறேன்."

'அந்தர் நிரந்தர நிரிந்தந மேதமாதே
மோஹாந்தகார பரிபந்தினி ஸம்விதக்நௌ |
கஸ்மிம்ச்சித் அத்புத மரீசி விகாஸ தூமௌ
விச்வம் ஜுஹோமி வஸுதாதி சிவாவஸாநம் ||'

'ப்ரகாச விமர்சங்களாகிற கைகளிலிருக்கும் உன்மநீயாகிற ஸ்ருக்கினால் (யாகத்தில் உபயோகிக்கப்படும் கரண்டியினால்) தர்மம், அதர்மம், கலை இவைகளாகிற நெய்யைப் பூர்ணாக்நியில் செய்கிறேன்.

'ப்ரகாசாமர்சஹஸ்தாப்யாம் அவலம்ப்யோன்மநீ ஸ்ருசம் |
தர்மாதர்மகலாஸ்நேஹம் பூர்ணாஹுதி ஜுஹோம்யஹம் ||'

सद्यःप्रसादिनी

ஸத்ய: ப்ரஸாதிநீ (383)

அநுக்ரஹத்தை உடனே கொடுப்பவள்.

1. அதாவது, பக்தன் மேலே சொல்லிய ரமேஹாயாகம், ரஹஸ்தர்ப்பணம் இவைகளைச் செய்தால் அம்பாள் உடனே ஸந்தோஷப்பட்டு அவனுக்கு அனுக்ரஹம் செய்வதாக இந்த நாமத்தில் சொல்லப்பட்டது.

2. இதேமாதிரி பரமசிவனுக்கு 'ஆசுதோஷ:'— சீக்கிரத்தில் ஸந்தோஷமடைகிறவர்—என்று ஒரு நாமமுண்டு. அதாவது, பரமசிவனுக்குப் பக்தனிடத்தில் வெகு சீக்கிரம் ஸந்தோஷம் ஏற்பட்டுவிடுமென்று அர்த்தம். இந்த விஷயத்தைப்பற்றிப் பாகவதத்தில் தசம ஸ்கந்தம் உத்தரார்த்தத்தில் 88-வது அத்யாயத்தில் சொல்லப்பட்டிருக்கிறதைப் பார்க்கவும்.

विश्वसाक्षिणी

விச்வஸாகூஷிணீ (384)

ஸகலத்தையும் ஸாகூஷாத்தாய்ப் பார்ப்பவள்.

அதாவது, ாம் எவ்விதமான மறைவின் இடஞ்சலில்லாமலும் ஸ்வரூபாத்மகமான அறிவுடனும் அம்பாள் பார்த்துக்கொண்டிருப்பதாக இங்கு சொல்லப்பட்டது.

साक्षिवर्जिता

ஸாகூஷிவர்ஜிதா (385)

தனக்கு ஸாகூஷி யாருமில்லாதவள்.

அதாவது, அம்பாள் ஸர்வஸாகூஷிணியாக இருப்பதால் அவளுக்கு ஸாகூஷ்யந்தரம் கிடையாதென்று

षडङ्गदेवतायुक्ता

ஷடங்கதேவதாயுக்தா (386)

ஆறு அங்கங்களின் சக்தி தேவதைகளால் சூழப்பட்டவள்.

1. ஷடங்கங்கள்—ஆறு அவயவங்கள்—ஹ்ருதயம், சிரஸ், சிகை, நேத்ரம், கவசம், அஸ்த்ரம். இவைகள்தான் ஷடங்கந்யாஸத்தில் சொல்லப்படுவது. இவைகளின் தேவதைகளை ஆவரண (சூழ்ந்திருக்கும்) தேவதைகளாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

'அதாங்காவரணம் குர்யாத் ஸ்ரீ வித்யா மநுஸம்பவம் |
ஷடங்காவரணைத் பாஹ்யஸமீபே க்ரமதோ(அ)ர்ச்சயேத் |
பரிவாரார்ச்சநம் பச்சாத் ஆதாவங்காவ்ருதி: ப்ரியே' ||

(ஞானர்ணவம்)

2. ஸர்வக்ஞதை, த்ருப்தி, அநாதியான ஞானம், ஸ்வதந்த்ரதை, எப்போதும் குறைவில்லாத சக்தி, அனந்தமாக இருப்பது இவை ஆறும் மஹேச்வரனை பரமசிவனுக்கு அங்கங்களென்று தேவீபாகவதத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

இப்படி ஷடங்கங்களின் தேவதையாக இருக்கும் பரமசிவனுடன் அம்பாள் கூடியிருப்பதால் 'ஷடங்கதேவதாயுக்தா' என்று பெயர்.

3. சிக்ஷை, கல்பம், வ்யாகரணம், நிருக்தம், சந்தஸ், ஜ்யோதிஷம் இந்த ஷடங்கங்களின் அபிமானி தேவதைகளால் சூழப்பட்டிருக்கும் ச்ருதியின் ஸ்வரூபமாக அம்பாள் இருப்பதை இந்த நாமத்தில் சொல்லப்பட்டதாகவும் வைத்துக்கொள்ளலாம்.

षाट्गुण्यपरिपूरिता

ஷாட்குண்யபரிபூரிதா (387)

ஷட்விதமான குணங்களோடு நிரம்பியிருப்பவள்.

1. காமந்தகீய நீதிசாஸ்த்ரத்தில் ஸந்தி (பிற அரசர்களுடன் சேர்தல்), விக்ரஹ (யுத்தம் செய்தல்), யான (படைகளுடன் போகுதல்), ஆஸன (படைகளோடு பாசறையிலிருத்தல்), த்வைதீபாவ (அணிவகுத்தல்), ஸமாச்ரய (ஒத்தாசையாகப் பிறரை ஆச்ரயித்தல்) என்பதாக ராஜாவுக்கு ஆறு குணங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன.

2. புராணங்களில் ஐச்வர்யம், தர்மம், யசஸ், ஸ்ரீ, ஞானம், வைராக்யம் என்பதாக ஆறு குணங்கள் ப்ரஸித்தமாகச் சொல்லப்பட்டிருக்கின்றன.

नित्यक्लिन्ना

நித்யக்லிந்நா (388)

எப்போதும் தயையோடு கூடியவள்.

1. க்லிந்ந என்றால் நனைந்த என்று அர்த்தம். இங்கு அம்பாள் ஏற்றுதபமானது எப்போதும் தயையினால் (கருணையினால்) நனைந்திருப்பதாகச் சொல்லப்பட்டது.

2. பஞ்சதசதிதிதேவதைகளுக்குள் ஒன்றான நித்யை என்ற பெயருள்ள மூன்றாவது திதியுடன் அம்பாள் அபின்னமாக இருப்பது இங்கு சொல்லப்பட்டதாகவும் சொல்லலாம். இந்த

[illegible]யைப் [illegible]க் கருட புராணத்தில்,

வக்ஷ்யே த்ரிபுராம் புக்திமுக்திதாம்' என்பது முதலான ச்லோகங்களிலும் தந்த்ர ராஜதந்த்ரத்திலும் சொல்லியிருப்பதைப் பார்க்கவும்.

निरुपमा

நிருபமா (389)

ஸாத்ருச்யம் (உவமை) இல்லாதவள்.

ப்ரம்ஹத்தைப்பற்றிச் சொல்லுகையில் 'ந தஸ்ய ப்ரதிமாஸ்தி' என்று ச்ருதியில் சொல்லப்பட்டிருக்கிறது.

निर्वाणसुखदायिनी

நிர்வாண ஸுகதாயிநீ (390)

இன்னதென்று வர்ணிக்கமுடியாத ஸுகமாகிய முக்தியைக் கொடுப்பவள்.

1. பாண, வாண என்ற பதங்கள் ம் ஒன்றே. 'ஏதத்பாணம் அவஷ்டப்ய' என்ற ச்ருதிவாக்யத்தில்வரும் பாண என்ற பதமானது சரீரத்தைக் குறிக்குமென்று வேதாந்திகள் சொல்வார்கள். அமேதமாதிரி 'நிர்வாண' என்பதில் வரும் வாண என்ற பதமானது சரீரத்தைக் குறிக்குமென்று மீமாம்ஸகர்கள் சொல்வார்கள். ஆகவே 'நிர்வாண' என்றால் சரீரமில்லாதது, அதாவது இன்னது என்பதாகக் குறிப்பிடமுடியாதது என்று அர்த்தம். மோக்ஷம் ஒன்றுதான் நிர்வாணமான ஸுகமானதால் அதை அம்பாள் கொடுப்பதாக இந்த நாமத்தில் சொல்லப்பட்டது.

தமேவ பாந்தமநுபாதி ஸர்வம்
தஸ்ய பாஸா ஸர்வமிதம் விபாதி !!'

3. காந்தியென்ற பதத்தினால் இச்சா சக்தி குறிக்கப்பட்டதாகவும் சொல்லலாம்.

(மேலே சொல்லப்பட்ட துஷ்டி முதலிய அம்சங்கள் யாரிடம் காணப்பட்டாலும் அவர்கள் அம்பாளுடைய க்ருபைக்கு விசேஷ பாத்ரர்களாக இருக்கிறார்கள் என்பதை நாம் கொள்ளவேண்டிய முக்யமான விஷயமாக).

नन्दिनी

(450)

நந்த(கோப)ருடைய பெண்ணையிருப்பவள்.

1. மஹாராமாயை நந்தகோபருக்குப் பெண்ணாகப்பிறந்த வ்ருத்தாந்தம் பாகவதம் தசமஸ்கந்தத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

2. காமதேனுவின் வம்சத்திலுதித்த ஒரு பசுவுக்கும், கங்கைக்கும் நந்திநீ என்று பெயர். அந்த ரூபமாக அம்பாள் நப்பது இங்கு சொல்லப்பட்டதாகவும் சொல்லலாம். (நந்திக்குத் திலீபன் சுச்ரூஷை செய்ததைப்பற்றி ரகுவம்சத்தில் சொல்லப்பட்டிருப்பது பார்க்கத்தகுந்தது).

विघ्ननाशिनी

(451)

இடையூறுகளை நாசம் செய்பவள்.

அதாவது வித்யைக்கு இடையூறுகளாயிருப்பவைகளை போக்கடிக்கும் ஸாமார்த்தியமுடையவள் என்று அர்த்தம்.

तेजोवती (452)

தேஜோவதீ

ஸ்ஸை உடையவள்.

முதலான 6 ஸகல்லாம் பரப்ரம்

ஹமே ஆதாரமென்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

'ஏதஸ்மிந் கல்வக்ஷரே கார்கி
ஸூர்யாசந்த்ரமஸௌ வித்ருதௌ திஷ்டத: ॥ (ச்ருதி)

त्रिनयना (453)

த்ரிநயநா

மூன்று நேத்ரங்களையுடையவள்.

1. இந்த மூன்று நேத்ரங்கள் ஸோம, ஸூர்ய, அக்னி என்பதாக சொல்லப்படும்.

2. 'ஸௌஷட்' என்ற சப்தத்திற்கு 'த்ரிநயந' என்று அர்த்தமுள்ளதாக (ஸ்ரீஸூக்தம்) என்பதாக நாமபாராயணத்தில் சொல்லப்படுவதால் அந்த ரூபமாக அம்பாள் இருப்பதாக இங்கு சொல்லப்பட்டதாகவும் சொல்லலாம்.

3. நயனமென்றால் அனைத்துப்போவது. ஒரு வஸ்துவை பற்றியோ ஒரு விஷயத்தைப்பற்றியோ நமக்கு அறிவு ஏற்படுத்துவதற்குக் காரணமாக இருப்பதை ப்ரமாணம் என்று சொல்வது வழக்கம். இவ்விதம் நமது புத்தியை அனைத்துப்போய் முடிவாகு சேர்ப்பதால் ப்ரமாணங்களை நயனங்கள் என்று சொல்வதுண்டு. இவ்விதமான ப்ரமாணங்கள் ருத்ரனுடைய கண்களாகிய சூர்யன் சந்த்ரன் சாண்டில்ய ஸூத்ரத்தில்,

'த்ரீண்யேவைதானி தைத்திரீய சப்தவிங்காக்ஷீபதத் ருத்ரவத்'

என்று சொல்லுவதை அவைகளை நேத்ரங்கள் என்று சொல்லியிருக்கிறது. இந்த ப்ரமாணங்கள் மூன்றுவகை - சபதம், அனுமானம், பரதபசகம். சபதம் எனபதிலை ரவணமும், அனுமானம் என்பதில் மனனமும், ப்ரத்யக்ஷம் என்பதில் நிதித்யாஸனமும் குறிக்கப்பட்டிருக்கின்றன.

'ப்ரத்யக்ஷம் சாநுமாநம் ச சாஸ்த்ரம் ச விவிதாகமம் |
த்ரயம் ஸுவிதிதம் கார்யம் தர்மசுத்திமபீப்ஸதா ॥'
(மநு ஸ்ம்ருதி)

'த்ரிவிதம் ப்ரமாணம் |' (ஸாங்க்ய ஸமாஸ ஸூத்ரம்)

'ப்ரத்யக்ஷாநுமாநாகமா: ப்ரமாணாநி |' (யோக ஸூத்ரம்)

4. மேலேசொல்லிய மூன்றுவிதமான ப்ரமாணங்களையுடை யவள் (அதாவது, அவைகளால் அறியப்பட [illegible] வள்)

5. அல்லது மூன்றுவிதமான மார்க்கங்களில் (அதிகாரி களுக்குத் தகுந்தபடி) அழைத்துப்போவதால் த்ரிமயகா என்ற பெயர். அப்பாலுடைய உபாஸனையில் தக்ஷிணமார்க்கம், உத்தர மார்க்கம், ப்ரம்மமார்க்கம் என்று மூன்று வழிகளிருப்பதாக மேலே விபரமாகச் சொல்லப்படும். அவைகளில் தன் பக்தர்களை அழைத்துப்போவதால் அப்பாலுக்கு இந்தப் பெயர்ஏற்பட்டது.

'தக்ஷிணம் சோத்தரம் லோகம் ததா ப்ரம்மாயநம் பரம் |
நயம் ஸன்மார்கவர்கம் ச நேத்ரீ த்ரிமயகா மதா ||'

(தேவீ புராணம்)

लोलाक्षी कामरूपिणी

லோலாக்ஷீ காமரூபிணீ (454)

ஸ்திரீகளுடைய காமமாகிற ரூபத்தையுடையவள்

1. இந்த மாதிரியான பாவத்தைப்பற்றி இன்னுமுறுவிதமாக ஏற்னவே வந்த 'ரமணலம்படா' என்ற 320-வது நாமத்தில் சொல்லியிருப்பதைப் பார்க்கவும்.

2. காமத்திற்கு அபிமானிதேவதை மோகேச்வரீ என்று சொல்லப்படுவதால் அந்த தேவதையின் ரூபமாக இருப்பவள் என்றும் சொல்லலாம். காம, க்ரோத, லோப, மத, மோஹ, மாத்ஸர்ய, பைசுன்ய, அஸூயா என்ற எட்டு குணங்களுக்கும் எட்டு அபிமானி தேவதைகளுண்டென்றும், அவர்களுக்கு அஷ்ட மாதாக்கள் என்று பெயர் என்பதாகவும் வராஹபுராணத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

'காம: க்ரோதஸ்ததா லோபோ மதோ மோஹச்ச பஞ்சம: ||
மாத்ஸர்யம் ஷஷ்டமித்யாஹு: பைசுன்யம் ஸப்தமம் ததா ||
அஸூயா த்வஷ்டமீ ஜ்ஞேயா இத்யேதா அஷ்டமாதர: |
காமம் யோகேச்வரீம் வித்தி க்ரோதம் மஹேஷ்வரீம் ததா ||
லோபஸ்து வைஷ்ணவீ ப்ரோக்தா ப்ரம்மாணீ மத ஏவ ச |
மோஹ: ஸ்வயம்பூ: கல்யாணீ மாத்ஸர்யம் சேந்த்ராஜம் விது: ||
யமதண்டதரா தேவீ பைசுன்யம் ஸ்வயமேவ ச |
அஸூயா ச வராஹாக்யா இத்யேதா: பரிகீர்த்திதா: ||'

3. சிலர் இந்த நாமத்தை லோலாக்ஷீ, காமரூபிணீ என்று பிரித்து இரண்டு நாமங்களாகச் சொல்லுவார்கள்.

मालिनी

மாலினீ (455)

மாலையைத் தரித்திருப்பவள்.

1. மாலினீ என்ற பதத்திற்கு அனேக அர்த்தங்களுண்டு.

'மாலிநீ வ்ருத்தபேதே ஸ்யாத் மாலாகாரஸ்த்ரியாமபி |
சம்பாநகர்யாம் கௌர்யாம் ச மந்தாகிந்யாம் ச மாலிநீ ||'
(விச்வ:)

ஒரு வ்ருத்த பேதமும், கங்கை, பார்வதி என்ற பதங்களின் பெயரையுமுண்டாயிருக்கும்.

2. ஐம்பத்தொரு அக்ஷரங்களின் (மாத்ருகைகளின்) அதிதேவதைக்கு மாலினீ என்று பெயர். அந்த ரூபமாக இருப்பவள் என்றும் சொல்லலாம்.

3. மாதங்க புராணத்தில் பார்வதியின் விவாஹத்தைக் கொண்டுவரும் ப்ரகரணத்தில், லக்ஷ்மியும் கடல்தனயும் பார்த்துக் கொண்டிருக்கையில், அப்போதுவந்த மாலினீ என்பவள் பார்வதியின் நிலையை அடைய பார்த்ததைப் பிடித்துக்கொண்டதாகவும், அவள் காரணம் கேட்டு எதற்குக்கேட்டாயென்று தெரிந்துகொள்ளலென்று மாலினீயானவள் உள்ளுக்குள் வைராக்யம் வரும்படி பார்வதியிடம் கொடுக்கவென்றென்ற பிரார்த்திக்க, அவள் அதற்கு ஸம்மதித்ததின் பிறகுதான் அவளுடைய பாதத்தை விட்டதாகவும் சொல்லப்பட்டிருக்கிறது.

'ததோ ஹராங்கிநிர் மாலிந்யா க்ருஹீதோ தாயகாரணத் ||
கிம் யாசஸே ததாம்யேஷ முஞ்சஸ்வேதி ஹரோ(அ)ப்ரவீத் ||
மாலிநீ சங்கரம் ப்ராஹ மத்ஸக்யை தேஹி சங்கர |
ஸௌபாக்யம் நிஜகோத்ரீயம் ததோ மோக்ஷமவாப்ஸ்யஸி ||
அதோவாச மஹாதேவோ தத்தம் மாலிநி முஞ்ச மாம் ||'

இவ்விதானே மாலினீயின் ரூபமாக இருப்பவள் என்றும் சொல்லலாம்.

4. 'லக்ஷ்மிர் மாலினீ ஸாம்யாத்' என்ற கண்டாக்ய காரணத்தில் தெளிவாய் சொன்னபடி மாலினீ என்றால் எழுபத்தொன்ன கண்டகைகளைக் குறிக்குமாதலால் அவ்விதமான கண்டகரூபமாக இருப்பவள் என்றும் சொல்லலாம்.

हंसिनी

(456)

ஹம்ஸக்கோயுடையவள்.

I. அம்பாளுடைய க்ருஹத்தில் ஹம்ஸபக்ஷிகள் இருப்பதாகவும், அவை அம்பாளுடைய நடையினழகைப் பார்த்து அம்மாதிரி நடக்க ஆசைப்பட்டு பின்தொடர்ந்து போவதாகவும், அப்போது அம்பாள் காலிலணியப்பட்டிருக்கும் சலங்கைகளானது தங்கள் சப்தத்தினால் அந்த ஹம்ஸபக்ஷிகளுக்கு சொல்லிக்கொடுப்பது போலிருப்பதாகவும் ஆசார்யாளால் அம்பாளுடைய நடையின் அழகைப்பற்றி வர்ணிக்கையில் 'ஸௌந்தர்யலஹரீ'யில் சொல்லப்பட்டிருக்கிறது.

'பதந்யாஸக்ரீடா பரிசயமிவாரப்து மநஸ:
ஸ்கலந்தஸ் தே கேலம் பவநகலஹம்ஸா ந ஜஹதி |
அதஸ்தேஷாம் சிக்ஷாம் ஸுபகமணி மஞ்ஜீர ரணித
ச்சலாதாசக்ஷாணம் சரணகமலம் சாருசரிதே 11' (91)

2. பரமஹம்ஸர்களென்ற யதிவிசேஷர்கள் அம்பாளிடம் அபேதமாக இருப்பதாலும் இந்தப்பெயர் வந்ததாகச் சொல்லலாம்.

3. ஹம்ஸமென்றால் அஜபாமந்த்ரத்தைக் குறிக்குமாதலாலும் அது அம்பாளுடைய மந்த்ரரூபமாதலாலும் இந்தப் பெயர் வந்ததாகவும் சொல்லலாம்.

माता

(457)

மாதா

ஜகதீயாக இருப்பவள்.

1. அம்பாள் ஸகல லோகப்ரபஞ்சத்திற்கும் ஜகதீயாக இருப்பதால் மாதா என்ற பெயர்.

2. எல்லா மந்த்ரங்களும் அம்பாளிடமிருந்து உண்டாவதால் (அம்பாள் மாத்ருகாரூபமானதால்) மாதா என்ற பெயர்.

'மந்த்ராணாம் மாத்ரு பூதா ச மாத்ருகா பரமேச்வரீ' (ஸ்காந்தம்)

3. நாமபாராயணத்தில் தசமீதிதி நித்யா தேவதையின் மந்த்ரத்திற்கு மாதா என்ற ஸங்க்ஞை சொல்லப்பட்டிருக்கிறது. அந்த நித்யா தேவதை ரூபமாக அம்பாளிருப்பதால் மாதா என்ற பெயர்.

4. "மாதா காயாவரோஹணே" என்று பாத்மத்தில் சொன்னபடி காயாவரோஹண க்ஷேத்ரத்திலிருக்கும் அம்பாளுக்கு மாதா என்று பெயர். அந்த ரூபமாக இருப்பவள் என்றும் சொல்லலாம்.

5. லக்ஷ்மீ பீஜத்திற்கு மாதா என்று பெயர் (லக்ஷ்மை)

'ஸ்ரீர்மா ரமா ச கமலா மாதா லக்ஷ்மீச்ச மங்களா |' (விச்வ:)

मलयाचलवासिनी

மலயாசலவாஸி நீ (458)

மலயாசலத்தில் (மலயபர்வதத்தில்) வஸிப்பவள்.

மலயாலய பகவதி என்ற அம்பாளுடைய ரூபவிசேஷத்தைப்பற்றி சாபசிந்தாமணியில் ப்ரஸித்தமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அந்த ரூபமாக அம்பாளிருப்பது இங்கு சொல்லப்பட்டிருக்கிறது.

सुमुखी

சுமுகீ (459)

சோபனமான (ப்ரகாசிக்கும்) முகத்தையுடையவள்.

1. ஞானத்தினால் முகத்தின் காந்தியானது அதிகரிக்கு மென்று சொல்லப்படும். ப்ரம்மஞானமிருப்பதை முகத்தின் காந்தி விசேஷத்தினால் ஊஹிக்கப்படுமென்று ச்ருதியில் அனேக இடங்களில் சொல்லப்பட்டிருக்கிறது.

'சோபதேZஸ்ய முகம் ய ஏவம் வேத |'

'ப்ரம்மவித இவ தே ஸௌம்ய முகமாபாதி |'

2. ஷோடசியின் அங்கமாக உபாஸிக்கப்படும் திரிபுர விசேஷத்திற்கும் ஸுமுகி என்று பெயர்.

नलिनी

நளினீ (460)

தாமரைபுஷ்பம் போன்றவள்.

1. அம்பாளுடைய கர, சரண, முக, நேத்ராதி அவயவங்களெல்லாம் தாமரை புஷ்பத்திலிருந்து உண்டானதைப் போல் இருப்பதால் அம்பாளையே தாமரை புஷ்பமாக இங்கு சொல்லப்பட்டது. (கர கமலம், சரண கமலம், முக கமலம், நேத்ர கமலம் என்று வர்ணிப்பது ப்ரஸித்தம்.)

2. நதீ என்ற கங்கைக்குப் பெயர். அந்த ரூபமாக அம்பாளிருப்பதை இங்கு சொன்னதாகவும் சொல்லலாம்.

'நந்தீ நதீ கங்கா'

3. நளனென்ற ராஜாவானவன் அம்பாளை உபாஸித்து அம்பாளோடு தாதாத்ம்யமடைந்ததினால் அம்பாளுக்கு இந்தப்பெயர் வந்ததாகவும் சொல்லலாம்.

நலா (461)

அழகிய புருவங்களையுடையவள்.

அம்பாளுடைய புருவங்களின் அழகை ஆசார்யாள் பின்வருமாறு 'ஸௌந்தர்யலஹரி'யில் வர்ணித்திருக்கிறார்கள்.

'பருவெள புக்மே கிஞ்சித் புவநபய பங்கவ்யஸநிநி
த்வதீயே நேத்ராப்யாம் மதுகரருசிப்யாம் த்ருதகுணம் |
தநுர்மந்யே ஸவ்யேதரகர க்ருஹீதம் ரதிபதே:
ப்ரகோஷ்டே முஷ்டௌ ச ஸ்தகயதி நிகூடாந்தரம் உமே ||'47

லகல புவனங்களுக்கும் அபயம் கொடுக்கும் தாயே! கொஞ்சமாக வளைந்திருக்கும் உன்னுடைய புருவங்கள் உனது கண்களாகிற வண்டுகளை காண்பதற்காக உபயோகிக்கும் நாணையுடைய வில்லைப்போலவும், அதை (உனது கண்களாகிய) தனது வலது முழங்கையிலுள்ள பிடித்தத்தில் தன் கால் அட்டியிட்டுப் பிடித்திருக்கும் மன்மதனின் மறைந்திருக்கும் நடுவுடன் கூடியதாகவும் தோன்றுகிறது.

शोभना

சோபநா (462)

மஹா ஸௌந்தர்யவதியாக இருப்பவள்.

பின்னல் வரும் 972-வது நாமத்தை ஆசோபநா என்.ம சொல்லவேண்டும்.

सुनायिका

ஸுநாயிகா (463)

தேவர்களுக்கெல்லாம் ஈச்வரீ.

இது 'மஹத்தரா மஹிமா தேவாநாம்' என்ற ச்ருதியிலும் சொல்லப்பட்டிருக்கிறது.

कालकण्ठी

காலகண்டீ

காலகண்டருடைய பத்நீ.

1. பரமசிவன் ஹாலாஹலவிஷத்தைக் பானம் செய்யும் போது, அது அவருடைய கழுத்திலேயே நின்று விட்டதாலும், அந்த விஷத்தின் கரிய நிறம் அங்கே தெரிவதாலும் அவருக்கு காலகண்டனென்ற பெயர் ஏற்பட்டது.

'பச்யதாம் தேவஸங்காதாம் பிசாசோரகராக்ஷஸாம் |
நிருதம் கண்டே விஷம் கோரம் காலகண்டஸ்ததோ
[Zஸ்ம்ய ஹம் 11' (வாயு புராணம்)

2. காலஞ்ஜரகேஷத்திரத்தில் பரமசிவன் காலகண்ட னென்ற உபாவிக்கப் பினதாக ரேவீ புராணத்தில் சொல்லப் பட்டிருக்கிறது. அந்த கேஷத்திரத்தில் அதிவ்டானமாயிருக்கும் அப்பாசோ இங்கு சொல்லப்பட்டதாகவும் சொல்லலாம்.

3. மதுரமானதும் விஷமாகவுள்ளதுமான மனிக்குக் கலியென்ற பெயர். அதனை இனிமையான குரலுடையவள் என்றும் சொல்லலாம். அப்படியதைடைய குரலின் இனிமையைப்பற்றி ஏற்கனவே 27-வது நாமமாகிய,

'மஞ்ஜுஸல்லாப மாதுர்ய விநிர்பர்த்ஸித கச்சபீ'

என்றதில் சொல்லப்பட்டிருக்கிறது.

4. காருகனென்ற ஆணானவர் பாதரசத்தை பரமசிவம் காளியை ஸ்ருஷ்டிக்கக் காளிக்கு காலகண்டீ என்ற பெயரென்பதாகவும் விங்கபுராணத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

'ஸஸர்ஜ காளீம் காமாரி: காலகண்டீம் கபர்திநீம் |'

कान्तिमती

காந்திமதீ (465)

காந்தீயோடு கூடியவள்.

क्षोमिणी

க்ஷோபிணீ (466)

கிளர்ச்சி (சுருசுருப்பு, தீவிரவுணர்ச்சி)யை உண்டுபண்ணுகிறவள்

1. ஸ்ருஷ்டிகாலத்தில் பரமசிவனுடையமனதில் ஸ்ருஷ்டிக்கும் விஷயமாக ப்ரக்ருதிரூபிணியான அம்பாள் ஒருவித

உணர்ச்சியை (கேதாரத்தை) உண்டுபண்ணுவதாக ஏற்கனவே சொல்லப்பட்டிருக்கிறது. அந்தக் காரணத்தால் அம்பாளுக்கு கேதாரிணீ என்று பெயர்.

'ப்ரக்ருதிம் புருஷம் சைவ ப்ரவிச்யாத்மேச்சயா ஹரி: |
கேதாபயாமாஸ பகவான் ஸர்ககாலே வ்யபாச்ரித: ||
(விஷ்ணு புராணம்)

2. ஸனத்குமாரனுடைய கேதாரத்திலும் (கயக்கத்திலும்) சில தேவ கணங்களை உண்டுபண்ணினதிலும் இந்தப் பெயர் வந்ததாகவும் சொல்லலாம். முன்னொருக்கால் அம்பாளுடைய மூன்று த்ரயங்களில் ஒருவளான வைஷ்ணவியானவள் மந்த்ரபர்வதத்தில் தபஸ் செய்துகாகவும், அப்போது ஸனகாதிகளுக்கு ஒருவித கலக்கம் ஏற்பட்டு அதிலிருந்து கோடிக்கணக்கான ஸுந்தரயுவதிகள் உண்டானதாகவும் வராஹ புராணத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

'யா மந்த்ரம் கதா தேவீ தபஸ்தப்தும் து வைஷ்ணவீ |
தஸ்யாஸ்தபந்த்யா: காலேந மஹதா கூர்பிதம் மந: ||
தஸ்மாத் கேதாபாத் ஸமுத்தஸ்து: குமார்ய: ஸௌம்யதர்சநா:
நீலகுஞ்சித கேசாந்தா: பிம்போஷ்ட்ய: பத்மலோசநா: [நா:
இந்தீவரஸமா தாமநூபுராட்ய: ஸுவர்சஸ: |
ஏவம்விதா: ஸ்த்ரியோ தேவ்ய: கேதாபீதே மநஸி த்ருதம் |
உத்தஸ்து: சதஸாஹஸ்ரா: கோடிசோ விவிதாநநா: ||'

सूक्ष्मरूपिणी

வ [illegible] (467)

ஸூக்ஷ்மமான (எளிதில் அறியமுடியாத) ரூபத்தையுடையவள்.

1. இந்தநாமாவிலே ச்ருதியில் 'ஸூக்ஷ்மாத் ஸூக்ஷ்மதராய நித்யம்', 'அணோரணீயான்' என்று சொல்லப்பட்டது.

2. ஸூக்ஷ்மமென்று ஒருவிதமான நோயைப் சொல்லுவதுண்டு. இதைப்பற்றி தந்த்ர ராஜத்தில்,

'நித்யா நித்யோதிதே மூலாதார மத்யேऽஸ்தி பாவக: |'

என்று ஆரம்பித்து,

'ஏவம் த்வாதசதா தோஷம் அக்ஷரை: ஸ்யாதஸுதீநிதை: |'

என்று சொல்லப்பட்டிருக்கிறது. அந்த நோயாவிசேஷத்தின் ரூபமாக இருப்பவள் என்றும் சொல்லலாம்.

3. ஏற்கனவே சொல்லப்பட்டபடி அம்பாளுக்கு இருக்கும் ஸ்தூல, ஸூக்ஷ்ம, பரமென்கிற ரூபங்களில் ஸூக்ஷ்ம ரூபம் இங்கு சொல்லப்பட்டதாகவும் சொல்லலாம்.

वज्रेश्वरी

வஜ்ரேச்வரீ (468)

வஜ்ரேச்வரீ என்ற தேவதா ரூபமாக இருப்பவள்.

1. வஜ்ரேச்வரி ஷஷ்டிதிதியின் நித்யாதேவதை, ஜாலந்தர பீடத்தின் அதிஷ்டான தேவதை.

2. ஸ்ரீகரத்தின் பணிரெண்டாவது நித்யாவான வஜ்ரேச்வரி என்பதாகும், அதற்குப் பதினேழாவது நித்யாவுக்கு நடுவில் வஜ்ரேச்வரி இருக்கிறாள் என்றும், அந்த நித்யாவுக்கு அதிஷ்டான தேவதையாக வஜ்ரேச்வரி தேவதை இருக்கிறாள் என்றும் ஸ்ரீவித்யார்ணவத்தில் லலிதாம்பிகையைத் தியானம் சொல்லப்பட்டிருக்கிறது.

'தத்ர ஸதா ப்ரவஹந்தீ தடிந் வஜ்ராபிதா சிரம் ஜீயாத் |
சடுலோர்மி ஜாட ந்ருத்யத் கலஹம்ஸீ குல கலக்வணித புவ்டா ||
ரோதஸி தஸ்யா ருசிரே வஜ்ரேஷி ஜயதி வஜ்ர பூஷாட்யா |
வஜ்ர ப்ரதாந தோஷித வஜ்ரிமுக த்ரிதச விந்ருத சாரித்ரா ||'

அம்பிகையான வஜ்ரேசீ ரூபமாக இருப்பாள் என்றாம் சொல்லலாம்.

3. இந்த நித்யாவுக்கு வஜ்ரபைரவனான (அவனுடைய தியானத்தில் பைரவீ ஸமேதனாக) அபிராமனால் சொல்லப்பட்டிருக்கிறது.

'தஜ்ஜலாத் உத்திதா தேவீ வஜ்ரம் தத்வா பலத்விஷ |
புநரந்தர்ததே ஸோபி க்ருதார்த்த: ஸ்வர்கமேயிவாந் ||'

वामदेवी

வாமதேவீ (469)

வாமதேவருடைய பத்னியாக இருப்பவள்.

1. எல்லாராலும் வணங்கத்தக்கவராக இருப்பதால் பரமசிவனுக்கு வாமதேவரென்ற பெயர்.

'தம் தேவா அப்ருவந்நயம் வை ந: ஸர்வேஷாம் வாம
இதி தஸ்மாத் வாமதேவ: | (அதர்வய சுருதி)

2. வாமபாகத்தால் (சரீரத்தின் இடது பாகத்தில் அம்பாள் இருப்பதால்) ப்ரகாசிக்கிறதினால் வாமதேவரென்றார் பெயர். அதாவது, அர்தநாரீச்வர ரூபத்தில் அம்பாள் பரமசிவனுடைய வாமபாகத்திலிருப்பதினால் அதினால் அவர் ப்ரகாசிப்பதினால் வாமதேவர் என்ற பெயருக்குறியவராகிறார்.

3. பரமசிவனுடைய மூர்த்திகளில் (ஸதாசிவ மூர்த்தியில் அந்தர்கதமான மூர்த்திகளில்) வாராதேவர் ஒன்று. அவருடைய பஞ்சமுகங்களில் ஸத்யோஜாதர் மேற்கிலும் வாமதேவர் வடக்கிலும் தத்புருஷர் கிழக்கிலும் அகோரர் தெற்கிலும் ஈசானர் மேலிலுமாக இருப்பதாகச் சொல்லப்படும்.

'குங்குமக்ஷோத ஸங்காசம் வாமாக்யம் வரவேஷத்ருத் |
வக்த்ரமுத்தரமீசஸ்ய ப்ரதிஷ்டாயாம் ப்ரதிஷ்டிதம் ||'

(சிவ புராணம்)

4. வாரா என்றால் அழகான (ஸுந்தரியான) ஸ்த்ரீ என்றும் அர்த்தம். ஆகையால் அழகான தேவி என்றும் சொல்லலாம்.

5. வாரா என்றால் கர்மாக்களின் பலத்தைக் குறிக்கும். அவ்விதமான கர்மபலன்களுக்கு அதிஷ்டாத்ரி தேவதையாக அம்பாளிருப்பதால் வாராதேவி என்றும் பெயர்.

6. வாராசாரத்தில் ஈடுபட்டு அனுஷ்டிப்பவர்களை வாராக்கள் (வாராஃ) என்றும் சொல்லப்படும். அப்படிப்பட்டவர்களுடைய உபாஸனா மார்க்கங்களில் வாமாசாரம், தக்ஷிணாசாரம் என்று இரண்டு பேதங்கள் உண்டு. இவைகளில் வாமாசாரத்தால் உபாஸனை செய்பவர்களுக்கு (வாமர்களுக்கு) தேவியாக (உபாஸனை மூர்த்தியாக) இருப்பதால் வாராதேவி என்றும் பெயர்.

'பூஜகோடி பவேத் வாம: தம்மார்கே ஸதம் ஸ்ம்ருத: |'

(காளிகா புராணம்)

7. வாரா என்றால் விருத்தரூபமானது, விபரீதமானது என்றும் அர்த்தம் உண்டு. இந்த அர்த்தமும் வாமாசாரத்திற்கு உண்டு. இவ்விதமான உபாஸனையில் அம்பாள் ஸுகத்தைக் கொடுப்பதால் வாராதேவி என்றும் பெயர் என்பதாக தேவி புராணத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

'வாமம் விருத்தரூபம் து விபரீதம் ச யத்தே |
வாமேந ஸுகதா தேவி வாமதேவீ தத: ஸ்ம்ருதா ||'

वयोवस्थाविवर्जिता

வயோவஸ்த்தா விவர்ஜிதா (470)

வயதின் அவஸ்தைகளிலிருந்து ப்பவள்.

அம்பாள் சாச்வதமாக (எப்போதும் ஒரேவிதமாக) இருப்பதால் பால்யம், பௌகண்டம், கைசோரம் முதலான ஜீவனின் அவஸ்தைகள் கிடையா என்பது ஏற்பட

सिद्धेश्वरी

ஸித்தேச்வரீ (471)

ஸச்வரியாக இருப்பவள்.

1. வித்தர்கள்-கோரகூர், மத்ஸ்யேந்த்ர நாதர் முதலியவர்கள்.

2. காசியில் இவ்விதமான பெயரோடு அம்பாள் இருப்பதாகச் சொல்லப்படும்.

सिद्धविद्या

ஸித்தவித்யா (472)

ஸித்தமான (சாச்வதமான) வித்யா ரூபிணியாக இருப்பவள்.

வித்தவித்யா என்பது பஞ்சதசியைக் குறிக்கும். அந்த மந்த்ரம் வித்தவித்யையாக இருப்பதால் இதர மந்த்ரங்களைக் குச் செய்யவேண்டியதான வித்தாரிசக்ரசோதனம் முதலிய வைகள் தேவையில்லையென்பதாக காதிமதத்தில் சொல்லப்

'सिद्धमाता

ஸித்தமாதா (473)

ஸித்தர்களுக்கு மாதாவாக (ரக்ஷாகரியாக) இருப்பவள்.

यशस्विनी

யசஸ்வி (474)

மஹத்தான யசஸ்ஸோடு கூடியவள்.

இது 'தஸ்ய நாம மஹத் யச:' என்ற ச்ருதியில் சொல்லப்பட்டிருக்கிறது,

வரும 62 நாமங்களால் யோகிநீ ந்யாஸக்ரமத்தில் அம்பாளை ஸ்தோத்ரம் செய்யப்படுகிறது. ந்த யோகிநிகள் ஏற்கனவே சொல்லப்பட்ட மூலாதாரம் முதலான ஷட சக்ரங்களிலும் ஸஹஸ்ரகமலத்திலும் இருப்பவர்களாகச் சொல்லப்படும். இவ்விதம் செய்யப்படும் யோகிநீ ந்யாஸமானது 'ஷோடாந்யாஸம்' என்று சொல்லப்படும் ஆறுவிதமான ந்யாஸங்களில் ஒன்று.

ந்யாஸம் என்பது அந்தந்த தேவதையை ஸாதகன் தன் உடைய சரீரத்திலிருக்கும் அந்தந்த அவயவத்தில் ஸ்தாபனம் (இருக்கும்படி) செய்வது. அதாவது அவ்விதம் இருப்ப ப்பாவனை செய்வது. இதனுடைய நோக்கமென்ன ரூல், விதத்தால் தாதாத்ம்யம் ஏற்படுத்திக்கொள்ள வேண்டுமென்பது. ஸ்ரீவித்யா விஷயத்தில் அடையவேண்டிய ந்த தாதாத்ம்யமானது ஸ்ரீசக்ரம், ஸ்ரீவித்யா, ஸ்ரீதேவி, குரு, ஸாதகன் இந்த ஐந்தும் ஐக்யமாக இருப்பது போல் அனுஸந்தானம் செய்வதிலல் ஏற்படும்.

இவ்விதமான ந்யாஸங்களைப்பற்றி ஹயக்ரீவர் அகஸ்த்ய ருக்கு இந்த ஸஹஸ்ரநாமத்தைச் சொல்லுவதற்கு முன்னமே ந்யாஸகண்டத்தில் சொல்லிவிட்டதாக,

'ஷோடாந்யாஸாதயோ ந்யாஸா: ந்யாஸகண்டே ஸமீரிதா:।'

என்று இதின் பூர்வபாகத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. மேலே சொல்லிய ஐந்துவிதமான தாதாத்ம்யத்தைப்பற்றியும் ரஹஸ்ய கண்டம் என்பதில் தனக்கு ஹயக்ரீவரால் சொல்லப்பட்டதாகவும் பூர்வபாகத்தில் சொல்லுகிறார்.

'சக்ரராஜஸ்ய வித்யாயா: ஸ்ரீதேவ்யா தேஸிகாத்மநோ: ।
ரஹஸ்யகண்டே தாதாத்ம்யம் பரஸ்பரம் உதீரிதம் ॥'

மேலே சொல்லிய ந்யாஸங்களில் 'ஷோடாந்யாஸம்' என்பது ஒருவிதம். அது ஆறுவிதமான ந்யாஸம். சரீரத்தின் அவயவங்களில் கீழே சொல்லப்படும் ஆறுவிதமான கூட்டங்கள் இருப்பதாக ந்யாஸம் செய்யவேண்டும். அந்த ஆறுவிதமான கூட்டங்கள் ஆவன—கணேசர்கள், க்ரஹங்கள், நக்ஷத்ரங்கள், யோகினிகள், ராசிகள், பீடங்கள். ஒவ்வொரு கூட்டத்தைச் சேர்ந்தவைகளை அவயவங்களின் ஒவ்வொரு இடத்தில் இருப்பதாக பாவனை செய்வது அதின் ந்யாஸமாகும்.

கணேசர்கள் 51, க்ரஹங்கள் 9, நக்ஷத்ரங்கள் 27, யோகினிகள் 7, ராசிகள் 12, பீடங்கள் 51, இந்த ஆறு கூட்டங்களையும் ஸ்மரணம் செய்தால் தேவீயோடு தாதாத்ம்யம் ஏற்படுவதற்கு ஸாதகமாகும்.

'ஷோடாந்யாஸம் ப்ரகுர்வீத தேவதாத்மத்வ ஸித்தயே |'

ஏனென்றால் இந்த ஆறு கூட்டங்களுமே அம்பாளுடைய ரூபமாக இருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

'கணேச க்ரஹ நக்ஷத்ர யோகிநீ ராசி ரூபிணீம் |
தேவீம் மந்த்ரமயீம் ஸௌம்யாம் மாத்ருகா பீட ரூபிணீம் ||'

இந்த ஷோடாந்யாஸத்தின் விவரங்களை பாஸ்கர ராயருடைய ஸௌபாக்ய ஹ்ருதயம், வாமகேச்வர ரஹஸ்யம் என்கிற க்ரந்தங்களில் பார்க்கவும்.

நாமங்களில் யோகினிகளின் ந்யாஸத்தை அனுஸரித்து அம்பாளை ஸ்தோத்ரம் செய்யப்பட்டிருக்கிறதென்று ஏற்கனவே சொல்லப்பட்டது. அந்த யோகிநிகள் ஏழுவர் — டாகிநீ, ராகிநீ, லாகிநீ, காகிநீ, ஸாகிநீ, ஹாகிநீ, யாகிநீ என்ற பெயர்களையுடையவர்கள். [இந்த யோகிநீக்கூட்டத்தை அவர்களுடைய பெயர்களின் முதல் எழுத்துக்களைக்கொண்டு டாலகஸஹயாத்ய யோகினீ ஸங்கதம் என்று சொல்லப்படும்.] இவர்கள் மூன்றையே விசுத்தி, அனாஹதம், மணிபூரம், ஸ்வாதிஷ்டானம், மூலாதாரம், ஆக்ஞை, ஸஹஸ்ராரம் என்ற சக்ரங்களின் அதிஷ்டான தேவதைகள். மேலும் இவர்கள் மூன்றையே சரீரத்தின் தாதுக்களான த்வக், அஸ்ருக், மாம்ஸம், மேதஸ், அஸ்தி, மஜ்ஜா, சுக்ல இவைகளின் தேவதைகள்.

இச் சொல்லுகையில் மூலாதாரத்தில் இருந்து ஆரம்பிப்பது வழக்கமென்று மேலே தாதுக்களை சொல்லிய வரிசைப்படி சொல்லுவது வழக்கமாயிருப்பதால் அந்த வரிசையை அனுஸரித்து இந்த நாமங்களில் விசுத்தி சக்ரத்திலிருந்து ஆரம்பித்து மேலே காணப்படும் வரிசைப்படி சொல்லப்பட்டிருப்பது கவனிக்கத்தக்கது. மேலும் யோகினிகளின் முகங்களுடைய கணக்குப்படியும் வரிசையாக இருப்பதால் அது பொருத்தமாக இருக்கிறது.

'யோகினீ ந்யாஸமாதத்யாத் விசுத்தௌ ஷோடஶதயே ததா |
நாபௌ ஸ்வாதிஷ்டிதே மூலேப்ரும்மத்யே மூர்த்தனி க்ரமாத்||'

'ஷட் சக்ரங்கள்' என்று சொல்லி ஸஹஸ்ரநாமத்தைத் தனியாக சொல்லுவதுபோல் அங்கிருக்கும் (அதிஷ்டான) யோகினீகளைத் தனியாகச்சொல்லி ஸஹஸ்ராரத்திலிருக்கும் கடைசி யோகினியாகிய யாகினீ தேவியைத் தனியாகச் சொல்வதுமுண்டு. எப்படி ஸஹஸ்ரார கமலமானது எல்லாவற்றிற்கும் மேல்பட்டதாய், எண்ணிக்கையற்ற இதழ்களுடன் இருக்கிறதோ அதேமாதிரி யாகினீ தேவதையானவள் ஸர்வ வர்ணங்களோடு சோபிக்கிறவள், ஸர்வமான ஆயுதங்களையும் தரிப்பவள், ஸர்வதோமுகமானவள், ஸர்வ அன்னங்களிலும் ப்ரீதியுள்ளவள் என்று எல்லா விஷயங்களிலும் பூர்ணமானவளாகச் சொல்லப்படுகிறாள். மேலும் ஸகல தாதுக்களுமும் ஸாரமானதும் ஸர்வோத்க்ருஷ்டமானதுமான சுக்லத்திற்கு அதிஷ்டான தேவதையாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

இந்த யோகினீ தேவதைகளை சொல்லுகையில் அவர்கள் அதிஷ்டானமாக இருக்கும் சக்ரம், அவர்களுடைய வர்ணம், முகம், ஆயுதம், பரிவாரதேவதைகள், குணங்கள் முதலிய விபரங்களெல்லாம் இனிவரும் நாமங்களில் சொல்லியுள்ளதைக் காட்டும் (Table) அடுத்தப்பக்கத்தில் காட்டப்பட்டிருக்கிறது. முதல் ஆறு யோகினிகளைப்பற்றி 'வரிவஸ்யா ரஹஸ்ய'த்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

ந.	பெயர்	சக்ரம்	ரூபம்	வர்ணம்	முகம்	ஆயுதம்	குணம்	பரிவாரதேவதை	தாது	ப்ரீதியான அன்னம்
1.	டாகிநீ	விசுத்தி	த்ரிலோசனை	ஆரக்தம்	1	கட்வாங்காதி	பசுலோக பயங்கரீ	அர்ருதாதி	த்வக்	பாயஸான்னம்
2.	ராகிநீ	அநாஹத	தம்ஷ்ட்ரோஜ்வலா தம்	ச்யாமம்	2	அங்குடலாதி	மஹாவீரேந்த்ரவராதா	காலராத்ர்யாதி	ருதிரம் (அஸ்ருக்)	ஸ்னிக்தான்னம்
3.	லாகிநீ	மணிபூரம்	——	ரக்தம்	3	வஜ்ராதி	ஸடஸ்தபக்த ஸுகதா	டாமர்யாதி	மாம்ஸம்	குடான்னம்
4.	காகிநீ	ஸ்வாதிஷ்டானம்	——	பீதம்	4	சூலாதி	அதிகர்விதா மதப்ரீதா	பந்தின்யாதி	மேதஸ்	தத்யன்னம்
5.	ஸாகிநீ	மூலாதாரம்	——	——	5	அங்குசாதி	——	லயதாதி	அஸ்தி	மூத்கான்னம்
6.	ஹாகிநீ	ஆக்ஞா	——	சுக்லம்	6	——	——	ஹம்ஸவத்யாதி	மஜ்ஜா	ஹரித்ரான்னம்
7.	யாகிநீ	ஸஹஸ்ராரம்	——	ஸர்வவர்ணம் ஸர்வதோமுகம்		ஸர்வாயுதம்	——	——	சுக்லம்	ஸர்வான்னம்

'நரபதி ரவிகாஷ்டா ஷட்ஸமுத்ர த்வி ஸங்கயை:
அகட பவஹ பூர்வை: அக்ஷரை: வேஷ்டிதாபி: |
டாலகஸஹ வர்ணத்யாகிநீபிஸ்து ஷட்பி:
கடித தநுரிதியம் கத்யதே யோகிநீதி ||'

இதில் யோகினிகளுடைய பரிவார தேவதைகளின் எண்ணிக்கையும், முதல் பெயர்களும், அவர்களுக்குரிய வர்ணங்களும் (அக்ஷரங்களும்) அந்தந்த சக்ரங்களின் தளங்களுடைய கணக்கும், மற்ற விபரங்களும் சொல்லப்பட்டிருக்கின்றன. நரபதிகள் 16, ரவிகள் (ஆதித்யர்கள்) 12, காஷ்டைகள் (திக்குகள்) 12, ஷட் 6, ஸமுத்ரங்கள் 4, த்வி 2 என்ற பரிவார தேவதைகளின் கணக்கும், அவர்களுக்குரிய மாத்ருகைகளும் சொல்லப்பட்டிருக்கின்றன. அவர்களில் முதல் தேவதையின் பெயருடைய முதல் அக்ஷரமானது இரண்டாவது வரியில் சொல்லப்பட்டது. அகடபவஹ என்பதிலுள் அம்ருதாதி, காலராத்ர்யாதி, டாமர்யாதி, பந்திந்யாதி, வரதாதி, ஹடஜ்வதத்யாதி பரிவார தேவதைகள் குறிக்கப்பட்டார்கள். இவர்கள் முறையே டாலகஸஹ என்ற அக்ஷரங்களை தங்கள் பெயர்களில் முதலாக உடைய யோகினிகளின பரிவார தேவதைகள். இம்மாதிரியான யோகினீ தேவதைகளால் சூழ்ப்பட்டவளாய் விச்வரூபிணியாய் அம்பாள் இருப்பதாகச் சொல்லப்பட்டது.

த்வகாதி தாதுராதாபி: டாகிந்யாதிபிரப்யஸேவ |
வர்காஷ்டக விவிஷ்டாபி: யோகிநீபிச்ச ஸம்யுதா |
யோகிநீ ரூபமாஸ்தாய ராஜதே விச்வ விக்ரஹா ||'

द्विचक्र निलया

சக்ர நிலயா (475)

யெனப்படும் சக்ரத்தைத் தன்னுடைய வாஸஸ்தான மாக உடையவள்.

1. விசுத்தி சக்ரமென்பது கண்டதேசத்தில் (கழுத்தில்) இருக்கும் சக்ரம். அதற்குப் பதினாறு தளங்கள் உண்டு. ஒவ்வொரு தளத்திலும் ஒவ்வொரு ஸ்வரம் (vowel) ஆக அகாரம் முதல் விஸர்க்கம் (அ:) உள்பட பதினாறு ஸ்வரங்களுமிருப்பதாகச் சொல்லப்படும்.

'விசுத்தாக்யம் கண்டே ஸரஸிஜம் அமலம்
தாமதாம்ராவபாஸம்

ஸ்வரை: ஸர்வை: சோணை: தளபரிலஸிதை:
திபிதம் திப்தபுத்தே:

2. ய ம ற ற ச க ர ஷ க ள வ ண ஷ
களை (அகூகூரங்களை) தகூஷிணவர்த்தமாக (கெடியாரம் ஓடும் போது முள்ளுகள் திரும்புவது மாதிரி) ஆரம்பம் செய்து பாவனை செய்யவேண்டும்.

'ஸர்வ வர்ணாத்மகம் பத்ரம் பத்மாகாரம் பரிகீர்த்திதம் |
தகூஷிணவர்தயோகேந லிகாரம் சிந்தயேத் தியா ||'

மேலும் அவைகளைப் பிந்துவோடு கூடியதாக (அம், ஆம், இம், ஈம், என்பதாக பாவனை செய்யவேண்டும்.

3. இந்த சக்ரத்தில் ஜீவனனவன் ஏறி ஸஞ்சரிக்கும் ப்ரம்மநாடியைப் பார்ப்பதினால் சுத்தனை ஆகிறபடியால் இதற்கு விசுத்தி என்று பெயர்.

'விசுத்திம் தநுதே யஸ்மாத் ஜீவஸ்ய ஸம்ஸரோகநாத் |
விசுத்தம் பத்மமாக்யாதம் ஆகாசாக்யம் மஹத் பரம் ||'

आरक्तवर्णा

ஆரக்தவர்ணை (476)

கொஞ்சம் சிவந்த நிறமுடையவள்

1. 'ச்வேத ரக்தஸ்து பாடல:' என்றபடி வெண்சிகப்பு நிறம், அதாவது பாடலிபுஷ்பம் போன்ற வர்ணமுடையவளாகச் சொல்லப்பட்டது.

2. இந்த நாமத்தை 'ஆரக்தவர்ணை' என்றும், பின்னல் லாகிநீ தேவியைப்பற்றிச் சொல்லுமிடமாதலால் வரும் நாமத்தை 'ரக்தவர்ணை' என்றும் விகல்பமாகச் சொல்லப்பட்டிருப்பதை நினைக்கவேண்டியது.

त्रिलोचना

த்ரிலோசநா (477)

மூன்று கண்களோடு கூடியவள்.

खट्वाङ्गादिप्रहरणा

கட்வாங்காதி ப்ரஹரணை (478)

கட்வாங்கம் முதலிய ஆயுதங்களை உடையவள்.

1. கட்வாங்கம் என்பது ஆயுதமானது ஈர கபாலத்தை நுனியில் கோர்த்திருக்கும் தண்டம். டாகிநீதேவியின் ஈரல

கைகளில் கட்வாங்கம், கட்கம், சூலம், மஹாசர்மம் இவைக
ளிருப்பதாகச் சொல்லப்படும்.

2. கட்வா என்றால் கட்டில் என்று அர்த்தம். கட்வாங்க
மென்றால் கட்டில்கால். அது முதலான ஆயுதங்களை யுடைய
வளென்றும் சொல்லலாம்.

वदनैकसमन्विता (479)

வதனைக ஸமா

ஒரு முகத்தையுடையவள்.

पायसान्नप्रिया (480)

பாயஸான்நப்ரியா

பாயஸான்னத்தில் ப்ரியமுள்ளவள்.

பசும்பாலில் அரிசியை வேகவைத்துத் தயாரிக்கப்படுவதை
பாயஸம். அதுவே பாயஸான்னம் எனப்படுகிறது.

त्वक्स्था (481)

த்வக்ஸ்தா

த்வக் தாதுவின் அபிமானி தேவதையாக இருப்பவள்.

पशुलोकभयंकरी (482)

பசுலோக பயங்கரீ

பசுலோகத்திற்கு பயத்தை உண்டுபண்ணுகிறவள்.

தானும் பரப்ரஹ்மமும் ஒன்று என்பதான அத்வைத
ஞானமில்லாதவனுக்கு பசு என்று பெயர். (த்வைதபாவனா
கிற பாசத்தினால் கட்டப்பட்டிருக்கும் வரையில் ஜீவனானவன்
பசுவாக இருக்கிறானென்று முன்பே சொல்லப்பட்டது.)

'யோ அந்யாம் தேவதாம் உபாஸ்தே, அந்யோ(அ)ஸௌ,
அந்யோ(அ)ஹமஸ்மீதி ந ஸ வேத யதா பசு: |'

'த்விதீயாத்வை பயம் பவதி,

'ய ஏதஸ்மிந்நுதர மந்தரம் குருதே(அ)த தஸ்ய பயம் பவதி'

अमृतादिमहाशक्तिसंवृता (483)

அம்ருதாதி மஹாசக்தி ஸம்வ்ருதா

அம்ருதா முதலிய மஹாசக்திகளால் நன்றாய்ச் சூழப்பட்டவள்.

இவர்கள் பெயர் (மேலே சொல்லியபடி பதிறு ஸ்வரங்களை முதல் எழுத்துக்களாக) அம்ருதா, ஆகர்ஷிணீ, இந்திராணீ, சசாங்கீ, உமா, ஊர்த்வகேசி, ருக்மிதா, ரூகாரா, லுகாரா, லூகாரா, ஏகபாதா, ஐச்வர்யாத்மிகா, ஓங்காரா, ஔஷதி, அம்பிகா, அகூகாரா, இவர்கள் ஒவ்வொருவருடன் ஒவ்வொருத்தனத்தில் இருப்பதாக பாவனை செய்யவேண்டும்.

डाकिनीश्वरी

டாகிநீச்வரீ (484)

(மேலே சொல்லிய ஒன்பது விசேஷணங்களையுடைய) டாகிநீ என்ற ஈச்வரீ ரூபமாக இருப்பவள்.

டாகிநீ தேவி பின்வருமாறு வர்ணிக்கப்பட்டிருக்கிறாள்—

'தஸ்மா தேகாங்குளாதூர்த்வம் விசுத்தம் ஷோடசாகூரம்
மத்யகா டாகிநீ பாஹ்யபத்மேஷு பரமேச்வரீ |
அம்ருதாத்யகூராந்தா: ஸ்யு: சந்த்ரபிம்பம் ததூர்த்வத: ||'

'க்ரீவாகூபே விசுத்தெள ந்ருபதளகமலே
ச்வேதரக்தாம் த்ரிநேத்ராம் |
ஹஸ்தை: கட்வாங்க கட்கௌ த்ரிசிகமபி மஹா சர்ம
ஸந்தாரயந்தீம் |
வக்த்ரேஷ்வேகேக யுக்தாம் பசுஜநபயதாம்
பாயஸாந்நைக ஸக்தாம்
த்வக்ஸ்தாதாம் வந்தேऽம்ருதாத்யை: பரிவ்ருதவபுஷம்
டாகிநீம் வீரவந்த்யாம் ||'

अनाहताब्जनिलया

அநாஹதாப்ஜநிலயா (485)

அநாஹதமெனப்படும் கமலத்தில் வீற்றிருப்பவள்.

இந்த சக்ரமானது ஹ்ருதய ப்ரதேசத்திலிருப்பது. பன்னிரண்டு தளங்களுடையது. இந்த தளங்களில் க(4)ங, ச(4), ஞ, ட(2) ஆகப் பன்னிரண்டு வர்ணங்களை பாவனை செய்யவேண்டும்.

श्यामाभा

ச்யாமாபா (486)

ச்யாமள வர்ணமான காந்தியோடு கூடியவள்.

பதிறுவயதுடைய கன்யகைக்கு ச்யாமா என்ற பெயரானகையால் அந்த ரூபத்தோடு இருப்பவள் என்றுசொல்லலாம்.

वदनद्वया

வதனத்வயா (487)

இரண்டு முகங்களையுடையவள்.

दंष्ट्रोज्ज्वला

தம்ஷ்ட்ரோஜ்ஜ்வலா (488)

கோரைப் பல்லுகளுடன் ப்ரகாசிப்பவள்.

अक्षमालादिधरा

அக்ஷமாலாதி தரா (489)

அக்ஷமாலை முதலியவைகளைத் தரித்திருப்பவள்.

1. அகாரம் முதல் க்ஷகாரம் வரையிலுள்ள அக்ஷரங்களின் எண்ணிக்கையோடு கூடிய மாலைக்கு அக்ஷமாலையென்று பெயர்.

2. ராகிணீதேவியின் நான்குகைகளில் அபயம், சூலம், கபாலம், டமரு இவை நாலும் இருப்பதாகச் சொல்லப்படுகிறது.

रुधिरसंस्थिता

ருதிர ஸம்ஸ்தித (490)

ருதிர தாதுவின் அபிமானி தேவதையாக இருப்பவள்.

कालरात्र्यादिशक्त्यौघवृता

காலராத்ர்யாதி சக்த்யௌகவ்ருதா (491)

காலராத்ரி முதலான சக்திக் கூட்டங்களால் சூழப்பட்டவள்.

1. இவர்களின் பெயர்—காலராத்ரி, கண்டகா, காயத்ரீ, கண்டாகர்ஷிணீ, நார்ணை, சண்டா, சாயா, ஜயா, ஜங்காரிணீ, ஞானரூபா, டங்கஹஸ்தா, டங்காரிணீ. இவர்கள் அனாஹதாக கமலத்தின் பன்னிரண்டு தளங்களில் வீற்றிருப்பார்கள்.

2. தேவியிடையே மூர்த்தி த்ரயங்களில் ஒன்றான ரௌத்ரியின் பெயர் காலராத்ரீ என்பதாக மராத்தி பாராயணத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

'யா ஸா நீலகிரிம் பாதா தபஸே த்ருதமாநஸா |
ரௌத்ரீ தமோபவா சக்திः தஸ்யாः ச்ருணு தோ வ்ரதம் ||
... ...
ரௌத்ரீ தபோரதா தேவீ தாமஸீ சக்திருத்தமா |
ஸம்ஹாரகாரணீ நாம்நா காலராத்ரீதி தாம் விதுः ||'

स्निग्धौदनप्रिया

ஸ்நிக்தௌதனப்ரிய: (492)

நெய் ஸஹ அந்தத்தோடு கூடிய அன்னத்தில் ப்ரியமுள்ளவள்.

महावीरेन्द्रवरदा

மஹாவீரேந்த்ர வரதா (493)

மஹா வீரேந்த்ராகளுக்கு வரங்களைக் கொடுப்பவள்.

1. அறர், இதர் என்ற இரு பாவங்களையும் போக் கடித்தவர்களாயும் பராக்ரமசாலிகளாயும் ஸ்வாத்மாராமர் களாயும் இருப்பவர்களுக்கு வீரர்களென்ற பெயர்.

'அறமி ப்ரளயம் குர்வந்தி தமः ப்ரதியோகிந:।
பராக்ரமம் பரோ புங்க்தே ஸ்வாத்மாநம் அசிவாபஹம் ॥'

இவர்களில் மஹான்களாயும் இந்த்ரன்போல் ச்ரேஷ்ட மானவர்களாயுமிருப்பவர்களுக்கு வரங்களைக் கொடுப்பவளாக இங்கு சொல்லப்பட்டது.

2. வீரர்கள் என்றால் விவிதமான வாக்கையுடையவர் கள், அதாவது சமத்காரமாகப் பேசும் வன்மையுடையவர்கள் என்றும் அர்த்தம்.

3. லோகயாகத்தில் உபயோகப்படும் ஒரு பாத்ரவிசே ஷத்திற்கு மதுர வீரமென்ற பெயர். அவ்விதமான(பான) பாத்திரத்திலுள்ள ப்ரம்ஹரஸாம்ருதத்தைப் பானம் செய்பவர் களுக்கு மதுர வீரர்கள் என்ற பெயர் ஏற்படுகிறது. அவ் விதர் (பானம் செய்வதிலுள்) பரிபக்வமடைந்தவர்கள் ப்ரம்ஹ வித்துக்களாக இருக்கிறபடியால் அவர்களுக்கு இந்த்ர் களென்றும் பெயர். ப்ரம்ஹ ஸாக்ஷாத்காரம் ஏற்பட்டு தன் னுடைய ஆத்மாவும் பரப்ரஹ்மமும் அபேதமென்ற எண்ணி, பாக்கியில்லாமற்றையும் 'இதம்' என்ற பாவனையோடு ஸாக்ஷி பாகப் பார்த்திருப்பவர்களுக்கு இந்த்ரர்களென்ற பெயர்.

'இதமதர்சம் இதமதர்சமிதி தஸ்மாத் இந்த்ரோ நாம(ச்ருதி)

4. 'த்ரித்யாபோக்தா வீரேச:' என்ற சிவ ஸூத்ரத்தில் சொல்லியபடி ஜாக்ரதா, ஸ்வப்நம், ஸுஷுப்தி, இம்மூன்று அவஸ்தைகளிலும் தூய நிலையோடு இருப்பவர்களுக்கு வீரேந்த்ரர்களென்ற பெயர்.

5. உள்ளும் புறமும் பரவிக்கொண்டு த்வைத புத்தியைக் கொடுத்து அதின் மூலமாக துக்கத்தை விளைவிக்கும் இந்த்ரியங்களுக்கு வீரர்களென்றும், அவைகளை அடக்கி ஆளுபவனுக்கு வீரேசனென்றும் பெயர் என்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

'வீரேச இதி வீராணாம் பேதவ்யஸநகாரிணாம் !
அந்தர்பஹிர் விஸரதாம் இந்த்ரியாணாம் அதீச்வர: 11'

6. மஹா வீரனென்றால் ப்ரஹ்லாதனுக்குப் பெயர். முன்னொருக்கால் ப்ரஹ்லாதனும் இந்த்ரனும் நூறு தேவர்வர்ஷம் சண்டைபோட்டுப் பிறகு இருவரும் அம்பாளிடம் ஸ்தோத்ரம் செய்ததாகவும், அப்போது அம்பாள் ப்ரஸன்னமாகி அவர்களுக்கு வரங்களைக் கொடுத்ததாகவும் தேவீ பாகவதத்தில் சாலம்வது ஸ்கந்தத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

राकिण्यम्बास्वरूपिणी

ராகிண்யம்பா ஸ்வரூபிணீ (494)

(மேலேசொல்லிய விசேஷணங்களையுடைய) ராகிணீ யோகினீயின் ஸ்வரூபத்தையுடையவள்.

ராகிணீ தேவியின் த்யானம் பின்வருமாறு:—

'ஹ்ருத்பத்மே பாநுபத்ரே த்வி வதந லஸிதாம்
தம்ஷ்ட்ரிணீம் ச்யாமவர்ணாம்
அக்ஷம் சூலம் கபாலம் டமருமபி புஜை:
தாரயந்தீம் த்ரிநேத்ராம் |
ரக்தஸ்த்தாம் காலராத்ரீ ப்ரப்ருதி பரிவ்ருதாம்
ஸ்நிக்த பக்தைக ஸக்தாம்
ஸ்ரீமத் வீரேந்த்ர வந்த்யாம் அபிமதபலதாம்
ராகிணீம் பாவயாம: 11'

मणिपूराब्जनिलया

மணிபூராப்ஜநிலயா (495)

மணிபூர பத்மத்தை வாஸ ஸ்தானமாக உடையவள்.

மணிபூர பத்மம் நாபியிலிருப்பது. பத்து தளமுடைய கமலம். இந்த தளங்களில் ட(2), ண, த(4), ந, ப(2) ஆகிய பத்து வர்ணங்களிருப்பதாகப் பாவனை செய்யவேண்டும்.

वदनत्रयसंयुता

வதநத்ரயஸம்யுதா (496)

மூன்று முகங்களோடு கூடியவள்.

वज्रादिकायुधोपेता

வஜ்ராதிகாயுதோபேதா (497)

வஜ்ராயுதம் முதலான (நான்கு) ஆயுதங்களையுடையவள்.

லாகிநீ தேவியின் நான்கு கைகளில் வஜ்ரம், சக்தி, தண்டம், அபயமுத்ரை இவை நாலுமிருப்பதாகச் சொல்லப்படும்.

डामर्यादिभिरावृता

டாமர்யா திபிராவ்ருதா (498)

டாமரீ முதலானவர்களால் சூழப்பட்டவள்.

இவர்கள் பதின்மருக்கும் பெயர் — டாமரீ, டங்காரணீ, ணர்ணை, தாடஸீ, ஸ்தாண்வீ, தாகூகாயணீ, தாத்ரீ, நாரீ, டார்வதீ, பட்காரிணீ என்பன.

रक्तवर्णा

ரக்தவர்ணா (499)

சிகப்பு நிறமானவள்.

मांसनिष्ठा

மாம்ஸநிஷ்டா (500)

மாம்ஸதாதுவின் அபிமானி தேவதையாயிருப்பவள்.

गुडान्नप्रीतमानसा

குடாந்நப்ரீதமாநஸா (501)

வெல்லம் கலந்த அன்னத்தினால் ப்ரீதியடையும் மனதையுடையவள்.

समस्तभक्तसुखदा

ஸமஸ்த பக்த ஸுகதா (502)

(தன்னுடைய) எல்லா பக்தர்களுக்கும் ஸுகத்தைக் கொடுப்பவள்.

लाकिन्यम्बास्वरूपिणी

லாகிந்யம்பாஸ்வரூபிணி (503)

லாகிநீ தேவியின் ஸ்வரூபமாக இருப்பவள்.

லாகிநீதேவியைப் பின்வருமாறு வர்ணிக்கப்பட்டிருக்கிறது :—

'திக்பத்ரே நாபிபத்மே த்ரிவதந விலஸத்
தம்ஷ்ட்ரிணீம் ரக்தவர்ணம்
சக்திம் தம்போளி தண்டாவபயமத புஜைர்
தாரயந்தீம் மஹோராத்ராம் |
டாமர்யாத்யை: பரீதாம் பசுஜநபயதாம்
மாம்ஸதாத்வேக நிஷ்டாம்
கௌடாந்நா ஸக்தசித்தாம் ஸகல சுபகரீம்
லாகிநீம் பாவயாம: ll'

(திக்குகள் டத்தானடியால் திக்பத்ரொன்பதை பத்து தளங்களாக் குறிக்கும்).

स्वाधिष्ठानाम्बुजगता

ஸ்வாதிஷ்டாநாம்புஜ கதா (504)

ஸ்வாதிஷ்டான கமலத்தை அடைந்தவள்.

ஸ்வாதிஷ்டான பத்மம் குஹ்யஸ்தானத்திலிருப்பது, ஆறு தளங்களுடையது. இந்த தளங்களில் ப (2), ர, ய, ர, ல என்ற வர்ணங்களிருப்பதாக பாவனை செய்யவேண்டும்.

चतुर्वक्त्रमनोहरा

சதுர் வக்த்ர மநோஹரா (505)

நான்கு முகங்களோடு அழகாக இருப்பவள்.

शूलाद्यायुधसंपन्ना

சூலாத்யாயுத ஸம்பந்நா (506)

சூலம் முதலான ஆயுதங்களோடு நிறைந்த கைகளையுடையவள்.

இந்த ஆயுதங்கள்—சூலம், பாசம், கபாலம், அங்குசம்.

पीतवर्णा

பீதவர்ண (507)

மஞ்சள் நிறமானவள்.

பொன் நிறத்திற்கும் பீதவர்ணமென்று பெயர். பீத மென்றால் குங்குமப்பூவுக்கும் பெயர்.

अतिगर्विता

(508)

மிகுந்த கர்வத்தோடு கூடியவள்.

காகிநீதேவி அதிகமான லௌகர்யம் முதலானவைகளு டனிருப்பதால் கர்வத்தோடிருப்பதாகச் சொல்லப்பட்டது.

मेदोनिष्ठा

மேதோ நிஷ்டா (509)

மேதஸ் (கொழுப்பு) என்ற தாதுவிலிருப்பவள்.

கர்வத்திற்கு மூலதாதுவான கொழுப்பிற்கு அபிமானி தேவதையாக இருப்பதால் அதிக கர்வமடைந்தவள் என்று எற்படுகிறது.

मधुप्रीता

(510)

மத்யத்தில் ப்ரீதியுள்ளவள்.

1. மது என்றால் தேனுக்கும் பெயர்.

2. அம்பாள் மதுவிலில் ப்ரீதியடைவது ச்ருதியிலும் சொல்லப்பட்டிருக்கிறது.

'யத் மதுநா ஜுஹோதி மதுதிமேவ தத்தேவதாம் ப்ரீணாதி'

बन्धिन्यादिसमन्विता

பந்திந்யாதி ஸமந்விதா (511)

பந்தினீ முதலானவர்களோடு கூடியவள்.

இவர்கள் பெயர் — பந்தினி, பத்ரகாளி, மஹாமாயா, பகஸ்வினி, ரக்தா, லம்போதரி என்பது.

दध्यन्नासक्तहृदया

தத்யந்நாஸக்த ஹ்ருதயா (512)

தயிர்கலந்த அன்னத்தில் அதிக விருப்பமுடையவள்.

काकिनीरूपधारिणी

காகிநீ ரூபதாரிணீ (513)

காகிநீ தேவியின் ரூபத்தையுடையவள்.

காகிநீ தேவியின் த்யானம் பின்வருமாறு :—

பத்மே ரஸதள

வேதவக்த்ராம் த்ரிநேத்ராம்

ஹஸ்தாப்யாம் தாரயந்தீம் த்ரிசிக குணகபாலாங்குசான்

ஆத்தகர்வாம் |

மேதோதாது ப்ரதிஷ்டாம் அலிமதமுதிதாம்
பந்திநீ முக்ய யுக்தாம்
பீதாம் தத்யோதநேஷ்டாம் அபிமதபலதாம்
காகிநீம் பாவயாம: ll'

(ரலைங்கள் ஆருனபடியால் ரஸதள மென்பது ஆறு தளங் களைக் குறிக்கும். வேதங்கள் நான்காகையால் வேதவக்த்ராம் என்பது நான்கு முகங்களைக் குறிக்கும்).

मूलाधाराम्बुजारूढा

மூலாதாராம்புஜாரூடா (514)

மூலாதாரபத்மத்தில் ஏறியிருப்பவள்.

1. அதாவது அதின் கர்ணிகையில் இருப்பவள் என்ற அர்த்தம்.

2. மூலாதாரபத்மமென்பது குஹ்யஸ்தானம், பாயு (ஆஸனம்) இவற்றின் நடுவிலிருப்பது. நான்கு தளங்களுடை யது. இவற்றில் வ, ச, ஷ, ஸ என்ற நான்கு வர்ணங்களிருப் பதாக பாவனை செய்யவேண்டும்.

पञ्चवक्त्रा

பஞ்சவக்த்ரா (515)

ஐந்து முகங்களையுடையவள்.

अस्थिसंस्थिता

அஸ்த்திஸம்ஸ்த்திதா (516)

அஸ்தி (எலும்பு) தாதுவில் இருப்பவள்.

अङ्कुशादिप्रहरणा

அங்குசாதி ப்ராஹரண (517)

அங்குசம் முதலிய ஆயுதங்களையுடையவள்.

இந்த ஆயுதங்கள்—அங்குசம் (ஸ்ருணி), தாமரை, புஸ் தகம் ஞானமுத்ரை என்பன.

वरदादिनिषेविता

வரதாதி நிஷேவிதா (518)

வரதா முதலான சக்திகளால் ஸேவிக்கப்பட்டவள்.

இவர்கள் பெயர்—வரதா, ச்ரீ (ஸ்ரீ), ஷண்டா, ஸரஸ்வதீ.

मुद्गौदनासक्तचित्ता (519)

முத்கான்னத்தில் அதிக விருப்பமுடையவள்.

முத்கமென்பது சிறுபயறு. முத்கான்னமென்பது முத் செய்யப்பட்ட குழம்பில் கலந்த அன்னமென்று அர்த்தம். அது—உடைத்த முத்கம், வெல்லம், தேங்காய், மிளகு, உப்புப்பொடி முதலான ஸாமக்ரிகளால் தயாரிக்கப் படுகிறது.

'ஸௌபாக்யசாலிதண்டுல ப்ரஸ்தம் ததர்தம் முத்க பிங்ஹகம் |
சதுர்பலம் குடம் ப்ரோக்தம் தந்மாநம் நாளிகேரகம் ||
முஷ்டி மாத்ரம் மரீசம் ஸ்யாத் ததர்தம் ஸைந்தவம் ரஜ: |
ததர்தம் ஜீரகம் வித்யாத் குடவம் கோக்ருதம் விது: ||
கோக்ஷீரேண ஸ்வமாத்ரேண ஸம்யோஜ்யா கமலாஸனம் |
மந்தாக்நி பசநாதேவ ஸித்தான்னமிதமுத்தமம் ||'

(குமாரஸம்ஹிதை)

साकिन्यम्बास्वरूपिणी

ஸாகிந்யம்பாஸ்வரூபிணீ (520)

ஸாகிநீ தேவியின் ரூபமாக இருப்பவள்.

ஸாகிநீ தேவியின் த்யானம் பின்வருமாறு:—

'மூலாதராஸ்த்த பத்மே ச்ருதிதள லஸிதே
பஞ்சவக்த்ராம் த்ரிநேத்ராம்
தூம்ராபாம் அஸ்த்தி ஸம்ஸ்த்தாம் ஸ்ருணிமபி கமலம்
புஸ்தகம் ஞானமுத்ராம் |
பிப்ராணம் பாஹுதண்டை: ஸுலலிதவரதா
பூர்வ சக்த்யாவ்ருதாம் தாம்
முத்காந்ந ஸக்தசித்தாம் மதுமதமுதிதாம்
ஸாகிநீம் பாவயாம: ||'

आज्ञाचक्राब्जनिलया

ஆ சக்ராப்ஜ நிலயா (521)

ஆக்ஞா சக்ரமாகிய கமலத்திலிருப்பவள்.

ஆக்ஞாசக்ரமானது புருவங்களுக்கு நடுவிலிருப்பது. இரண்டு தளங்களையுடையது. ஹ, க்ஷ என்ற இரண்டுவர்ணங் களையும் அந்த இரண்டு தளங்களிலிருப்பதாகப் பாவனை செய்யவேண்டும்.

शुक्लवर्णा
சுக்லவர்ணை (522)

வெண்மையான வர்ணத்தை யுடையவள்.

षडानना
ஷடாநநா (523)

யவள்.

मज्जासंस्था
மஜ்ஜாஸம்ஸ்தா (524)

எனப்படும் தாதுவின் அபிமானி தேவதையாக இருப்பவள்.

ரஜ்ஜ(ண்) என்பது எலும்பு, மாம்ஸம் முதலைகளின் ஸாரம், ஊன் என்பது.

हंसवती मुख्यशक्तिसमन्विता
ஹம்ஸவதீ முக்ய சக்தி ஸமந்விதா (525)

ஹம்ஸவதீயை முதன்மையாகவுடைய சக்திகளோடு கூடியவள்.

இவர்கள் பெயர்கள்—ஹம்ஸவதீ, க்ஷமாலவதீ என்பன.

हरिद्रान्नैकरसिका
ஹரித்ராந்நைகரஸிகா (526)

மஞ்சள் கலந்த (நிறமான) அன்னத்திலேயே அதிகமான ப்ரியமுள்ளவள்.

हाकिनीरूपधारिणी
ஹாகிநீரூபதாரிணீ (527)

ஹாகிநீ தேவியின் ரூபத்தைத் தரிப்பவள்.

1. ஹாகிநீ தேவியின் த்யானம் பின்வருமாறு:—

'ப்ரூமத்யே பிந்துபத்மே தலயுக கலிதே
சுக்லவர்ணம் கராப்ஜை:
பிப்ராணம் ஞானமுத்ராம் டமருகமமலாம்
அக்ஷமாலாம் கபாலம் |
ஷட்சக்ராதாரமத்யாம் த்ரிநயநலலிதாம்
ஹம்ஸவத்யாதியுக்தாம்
ஹாரித்ராந்நைக ஸக்தாம் ஸகலஸுககரீம்
ஹாகிநீம் பாவயாம: ||'

2. ஹாகிநீ தேவியின் நான்கு கைகளில் ஞானமுத்ரை, டாருகர், அக்ஷமாலை, கபாலம் என்ற நான்கும் இருக்கின்றன.

सहस्रदलपद्मस्था।

ஸஹஸ்ரதளபத்மஸ்தா (528)

ஸஹஸ்ரார கமலத்திலிருப்பவள்.

ஸஹஸ்ரார காலென்பது ப்ரம் *டமாகும்.*

सर्ववर्णोपशोभिता

ஸர்ஸவர்ணோபசோபிதா (529)

ஸர்வவிதமான வர்ணங்களால் சோபிக்கிறவள்.

1. அதாவது பாடல, ச்யாம, ரக்த, பீதம் முதலான எல்லாவிதமான வர்ணங்களோடு கூடிய ரூபத்தையுடையவள், சித்ரவர்ணமாயிருப்பவள்.

2. வர்ணமென்றால் அக்ஷரத்திற்கும் பெயர். இந்த அர்த்தத்தில் அகாரம் முதல் க்ஷகாரம் வரையிலுள்ள ஐம்பது அக்ஷரங்களுக்குறிய அம்ருதா முதல் க்ஷமாவதி முடிய இருப்பவர்கள் ஐம்பது தேவதைகள். இது அநுலோமக்ரமம். இவர்களையே (விலோமக்ரமமாக) க்ஷமாவதி முதல் அம்ருதா முடியக் கணக்கிட்டால் ஐம்பது; ஆக நூறு. இந்த நூறு பேரும் ஒவ்வொருவரும் பத்து தளம் வீதம் வீற்றிருப்பதால் நூறுபேரும் ஆயிரம்தளங்களிலிருக்கிறார்கள். இவ்விதம் ஸர்வ வர்ணங்களின் தேவதைகள் தன் ஸமீபத்திலிருக்க விளங்கிக் கொண்டிருப்பதால் யாகிநீ தேவியை ஸர்வ வர்ணோபசோபிதா என்று சொல்லுகிறது. (உப என்றால் ஸமீபத்தில் என்று அர்த்தம்.)

3. வாருணியின் கடபயாதி ஸங்க்யையின்படி உப என்பது (உ-0, ப-1) பத்து என்கிற எண்ணைக்குறிக்கும். ஒரோர் தேவதையும் பத்து தளங்களிலிருப்பதாக மேலே சொல்லியது இதின் மூலமாகவும் ஏற்படுகிறது.

4. இந்தக் கணக்கையொட்டியே சிலர்கள் யாகிநீ ந்யாஸம் செய்யும்போது ஒவ்வொரு தேவதையையும் பத்து தடவை சொல்லி ந்யாஸம் செய்வதுண்டு.

सर्वायुधधरा

ஸர்வாயுததரா (530)

ஸகல விதமான ஆயுதங்களைத் தரித்தவள்.

மாக சருதியிலும்,

'ஸஹஸ்ராணி ஸஹஸ்ரதா பாஹ்வோஸ்தவ ேஹதய: |

என்று சொல்லப்பட்டிருக்கிறது,

शुक्लसंस्थिता

சுக்ல ஸம்ஸ்த்திதா (531)

சுக்ல (வீர்ய) தாதுவின் அபிமானி தேவதையாக இருப்பவள்.

ரமணகாலத்தில் செய்யவேண்டியதாக பவிஷ்யோத்தர புராணத்தில் சொல்லப்பட்ட ஒரு த்யானத்திற்குச் சுக்ல மென்று பெயர். அதில் நிலையுள்ளவள் என்றும் அர்த்தம் சொல்லலாம்.

सर्वतो

ஸர்வதோமுகீ (532)

எல்லாத் திக்குகளிலும் திரும்பிய முகங்களையுடையவள்.

இவ்வாறே "ஸர்வதோகூதி சிரோமுகம்" என்று கீதையிலும் சொல்லப்பட்டிருக்கிறது.

सर्वौदनप्रीतचित्ता

ஸர்வௌதன ப்ரீத சித்தா (533)

ஸகலவிதமான அன்னங்களாலும் ப்ரீதியடையும் மனதையுடையவள்.

याकिन्यम्बास्वरूपिणी

யாகிந்யம்பாஸ்வரூபிணீ (534)

யாகிநீ தேவியின் ஸ்வரூபத்தையுடையவள்.

யாகிநீ தேவியின் த்யானம் பின்வருமாறு:—

முண்டவ்யோமஸ்த பத்மே தச சததளகே
கர்ணிகா சந்த்ர ஸம்ஸ்தாம்
ரேதோ நிஷ்டாம் ஸமஸ்தாயுத கலிதகராம்
ஸர்வதோ வக்த்ர பத்மாம் |
ஆதி க்ஷாந்தார்ண சக்தி ப்ரகட பரிவ்ருதாம்
ஸர்வ வர்ணம் பவாநீம்
ஸர்வாங்காஸக்த சித்தாம் பரசிவரஸிகாம்
யாகிநீம் பாவயாம: ||'

வ்விதமாக அம்பாளை யோ பமாய வாக
வேறு ப்ரகாரங்களால் வர் ந் தொடங்குகிறார்.

स्वाहा

ஸ்வாஹா (535)

ஸ்வாஹா என்ற ரூபமாக இருப்பவள்.

स्वधा

ஸ்வதா (536)

ஸ்வதா என்ற ரூபமாக இருப்பவள்.

1. 'ஸ்வாஹா தேவ ஹவிர்தானே க்ரௌஷட் வௌஷட் வஷட் ஸ்வதா' என்றபடி ஹவிஸ்ஸை யாகாக்னியில் போடும் போது சொல்லப்படும் வசனங்கள் ஸ்வாஹா, க்ரௌஷட், வௌஷட், வஷட், ஸ்வதா என்பவைகள். இவற்றில் தேவ தைகளைக் குறித்துச் செய்யும்போது ஸ்வாஹா என்றதையும், பித்ருக்களைக் குறித்துச் செய்யும்போது ஸ்வதா என்பதையும் பிரயோகம் செய்வார்கள்.

2. இந்தப்பதங்களை ஒருவன் உச்சரிப்பதினால் தேவாதி களுக்கு எப்படி த்ருப்தி ஏற்படுமோ, அதேமாதிரியான த்ருப்தியானது அவர்களுக்கு அவன் அம்பாளுடைய பெயரைச் சொல்வதினால் ஏற்படுவதாகவும், ப்ரம்ஹஞானிகள் அம்பாளுடைய பெயரைச் சொல்வதிலேயே (ஸ்வாஹா, ஸ்வதா முதலான பதங்கள் சொல்வதின் ப்ரயோஜனமாகிய) தேவாதிகளுடைய ப்ரீதியை அடைவதாகவும் சொல்லப்பட்டிருக்கிறது

'ஸோம ஸம்ஸ்தா: ஹவி: ஸம்ஸ்தா: பாக ஸம்ஸ்தாச்ச
[ஸப்த யா: |
தாஸ்த்வதுச்சாரணத் தேவி க்ரியந்தே ப்ரம்ஹவாதிபி: ||
யஸ்யா: ஸமஸ்த ஸுரதா ஸமுதீரணேந
த்ருப்திம் ப்ரயாதி ஸகலேஷு மகேஷு தேவி |
ஸ்வாஹாஸி வை பித்ருகணஸ்ய ச த்ருப்திஹேது:
உச்சார்யஸே த்வம் அத ஏவ ஜனை: ஸ்வதா ச ||'

(மார்க்கண்டேய புராணம்)

3. ஆகவே அம்பாள் ஸ்வாஹா, ஸ்வதா என்ற ரூபிணி யாக இருக்கிறாள் என்பதாக இங்கு சொல்லப்பட்டது.

4. சிவனுடைய அக்னிரூபமான சூர்த்தியின் பத்னிக்கு ஸ்வாஹா என்ற பெயரென்றும், இவரே ஸ்கந்தருடைய தாயாரென்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

ஸ்வாஹா வக்ஷ்யாத்மநஸ்தஸ்ய ப்ரோக்தா பசுபதேः ப்ரியா।
ஷண்முகோ பகவான் தேவோ புதைः புத்ர உதாஹ்ருதः ॥
(லிங்க புராணம்)

'நாம்நா பசுபதேர்யாது தநுரக்னிர் த்விஜைः ஸ்ம்ருதா।
தஸ்ய பத்நீ ஸ்ம்ருதா ஸ்வாஹா ஸ்கந்தச்சாபி ஸுதः
ஸ்ம்ருதः ॥' (வாயு புராணம்)

5. 'ஸ்வாஹா மாஹேச்வரே புரே' என்ற பத்மபுராண வசனத்தின்படி மாஹேச்வர பீடத்தின் அதிஷ்டான தேவிக்கு ஸ்வாஹா என்ற பெயர்.

6. இந்த நாமங்களை ப்ரயோகத்தில் 'ஸ்வாஹாயை நமः' 'ஸ்வதாயை நமः' என்றும், 'ஸ்வாஹாயை நமः' 'ஸ்வதாயை நமः' என்றும் சொல்லலாம்.

अमतिः

அமதிः (537)

அவித்யா ரூபமாக இருப்பவள்.

1. ஸ்ருஷ்டி க்ரமத்தைப்பற்றிச் சொல்லுகையில் முதல் முதலாக இருக்கும் மூலப்ரக்ருதியைப்பற்றி ஏற்கனவே வந்த 397 நாமமாகிய 'மூலப்ரக்ருதிः' என்பதில் சொல்லப்பட்டிருக்கிறது. அதற்குப் புத்தியினுடைய அடையாளமில்லாமலிருக்கிறபடியால் 'அமதி' என்ற பெயர் ஏற்படுகிறது. அவ்விதமான ரூபமாக அம்பாளிருப்பதாகவும் ஏற்கனவே அங்கே சொல்லப்பட்டிருக்கிறது.

2. அ என்பது கொஞ்சம் என்ற அர்த்தமுடையதாகையால் அதையொட்டி வ்ருத்யாத்மகமான ஞானரூபத்தோடு கூடியவள் என்றும் சொல்லலாம்.

3. இந்த பதத்திற்கே ஸ்வாதந்த்ரியஜ்ஞானமென்ற அர்த்தமிருப்பதாகத் துர்க்கபட்டரால் சொல்லப்பட்டிருக்கிறது.

मेधा

மேதா (538)

புத்தி விசேஷ ரூபமாக இருப்பவள்.

1. மேலே சொல்லிய 'அமதிः' என்பதற்குப் பிறகு புத்தியோடு கூடியதாக ஏற்படும் ஸ்ருஷ்டிக்கு மேதா என்ற பெயராகையால், அந்த ரூபமாகவும் அம்பாளிருப்பது இங்கு சொல்லப்பட்டது.

2. 'தீர்தாரணுவதீ மேதா' என்ற அக்னிபுராண வசனப்படி ஞாபகசக்திக்கு மேதா என்றும், தீ என்றும் பெயர். முந்திய ஜன்மாந்தரங்களில் செய்தகார்யங்களின் வாஸனையானது அடங்கியொடுங்கி 'அமதி:' என்ற முதல் ஸ்ருஷ்டிரூபத்திலிருந்த பிறகு அவைகளின் ஞாபகம் ஏற்படுவதான இரண்டாவது ஸ்ருஷ்டிரூபத்திற்கு மேதா என்று பெயர்.

3. அம்பாள் மேதாரூபமாக இருப்பதைத் தேவீமஹாத்ம்யத்தில்

'மேதாஸி தேவி விதிதாகில சாஸ்த்ரஸாரா |'

என்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

4. அம்பாள் ஸகல பூதங்களிலிருக்கும் மேதாரூபமாக இருப்பதை,

'யா தேவீ ஸர்வபூதேஷு மேதாரூபேண ஸம்ஸ்தித |'

என்பதாக தேவீமாஹாத்ம்யத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

5. 'மேதா காச்மீர மண்டலே' என்ற பாத்மவசனப்படி காச்மீரத்திலிருக்கும் அம்பாளுக்கு மேதா என்று பெயர்.

(539)

வேதங்களின் ரூபமாக இருப்பவள்.

स्मृतिः

ஸ்ம்ருதி: (540)

ரூபமாக இருப்பவள்.

1. வேதங்கள் அம்பாளுடைய ரூபமாக இருப்பது அனேக டங்களில் சொல்லப்பட்டிருக்கிறது.

'சப்தாத்மிகா ஸுவிமலர்க்யஜுஷாம் நிதாநம்
உத்கீதரம்ய பத பாடவதாம் ச ஸாம்நாம் |
தேவி த்ரயீ பகவதி பவ பாவநாய
வார்த்தாஸி ஸர்வஜகதாம் பரமார்திஹந்த்ரீ ||'

(தேவீமாஹாத்ம்யம்)

'ருசோ யஜூம்ஷி ஸாமாநி ததைவாதர்வணாநி ச |
ப்ரம்ஹணை: ஸஹஜம் ரூபம் நித்யையஷா சக்திரவ்யயா ||'

(கூர்ம புராணம்)

2. ச்ருதி என்றால் கேட்பது, ஸ்ம்ருதி என்றால் நினைவு, ஞாபகம் என்றும் அர்த்தம். ஆகவே ச்ரவண ஸ்மரணத்திற்கான ஞானரூபமாக அம்பாளிருப்பது இந்த நாமங்களில் சொல்லப்பட்டதாகவும் சொல்லலாம்.

'யா தேவீ ஸர்வபூதேஷு ஸ்ம்ருதிரூபேண ஸம்ஸ்திதா |'
(தேவீமஹாத்ம்யம்)

'ஸ்ம்ருதி: ஸம்ஸ்மரணூத் தேவீ' (தேவீ புராணம்)

'வர்த்தமாநாந்யதீதாநி ததைவாநாகதாந்யபி |
ஸ்மரதே ஸர்வகார்யாணி தேநாஸௌ ஸ்ம்ருதிருச்யதே ||'
(வாயு புராணம்)

நடக்கிற, நடந்த, நடக்கப்போகிற ஸகல கார்யங்களைப்பற்றிய நினைவுடனிருப்பதால் அம்பாளுக்கு ஸ்ம்ருதியென்ற பெயர்.

अनुत्तमा
அநுத்தமா (541)

தனக்கு மேற்பட்டவரில்லாதவள்.

1. அதாவது அம்பாளைவிட உத்தமமானவர் என்று சொல்லக்கூடியதாக ஒருவருமில்லையென்று தாத்பர்யம்.

'ந தத் ஸமச்சாப்யதிகச்ச த்ருச்யதே' (ச்ருதி)

'ந த்வத் ஸமோ(அ)ஸ்த்யப்யதிக: குதோ(அ)ந்ய:' (பகவத்கீதை)

2. லோகத்தில் மனுஷ்யர்களில் அதமனையிருப்பவனை ருத்ரஹீனனென்றுவது விஷ்ணுஹீனனென்றுவது சொல்லாமல் சக்திஹீனனென்று சொல்வது வழக்கமாயிருப்பதிலிருந்து அம்பாளே அநுத்தமமான தைவமென்று ஏற்படுகிறது.

'ருத்ரஹீநம் விஷ்ணுஹீநம் ந வதந்தி ஜநாஸ்ததா |
சக்திஹீநம் யதா ஸர்வே ப்ரவதந்தி நராதமம் ||'
(தேவீபாகவதம்)

3. அல்லது, ந நுத்தா—பிறருடைய அதீனமாக இல்லாத, மா—புத்தி (அல்லது, ஐச்வர்யம்) அதோடு கூடியவள் அநுத்தமா. அதாவது, ஸ்வதந்த்ரமான புத்தி, ஸஹஜமான ஐச்வர்யம் இவைகளையுடையவள் என்று தாத்பர்யம்.

(542)

புண்யத்தைக்கொடுக்கும் கீர்த்தியை யுடையவள்.

அம்பாளுடைய கீர்த்தியை ஸ்மரிப்பதும் சொல்லுவதும் புண்யத்தைக் கொடுக்குமென்றும், தன்னுடைய பக்தர்களுக்குப் புண்யத்தைக் கொடுப்பதில் கீர்த்திவாய்ந்தவளென்றும் சொல்லலாம்.

पुण्यलभ्या
புண்யலப்யா

புண்யத்தால் அடையக்கூடியவள்.

அதாவது முன் செய்திருக்கும் புண்ய விசேஷத்தின் பலனைத்தான் அப்போதைடைய க்ருஷியை அடையக்கூடும் என்று தாத்பர்யம்.

'பச்யந்தி புண்யபுஞ்ஜா யே யே வேதாந்தாஸ்தபஸ்விந: |
தாதிணே நைவ பச்யந்தி தேவீம் பகவதீம் சிவாம்||'
(தேவீபாகவதம்)

'அதஸ்த்வாம் ஆராத்யாம் ஹரிஹர விரிஞ்சாதிபிரபி
ப்ரணந்தும் ஸ்தோதும் வா கதம் அக்ருதபுண்ய: ப்ரபவதி |'
(ஸௌந்தர்யலஹரீ-1)

पुण्यश्रवणकीर्तना

புண்யச்ரவணகீர்த்தநா (544)

புண்யமான ச்ரவண, கீர்த்தனங்களையுடையவள்.

1. அதாவது, அப்போதைடைய கதாச்ரவணமும், அப்போதைடைய நாமகீர்த்தனமும் புண்யமாதலால் அவைகளென்ற தாத்பர்யம்.

2. அல்லது, அப்போதைடைய கதாச்ரவணமும், நாமகீர்த்தனமும் விஹிதமான (அவச்யம் செய்யவேண்டியதான) கர்மரூபமாக இருக்கின்றனவென்றாம் சொல்லலாம்.

पुलोमजार्चिता

புலோமஜார்ச்சிதா (545)

இந்த்ராணியினால் ஆராதிக்கப்பட்டவள்.

ருத்ரனுடன் தேவலோகத்தை ஆளுகிறபோது, இந்த்ராணியானவள் இவளை ஆராதித்தாள் திருப்தியுடன் அனுக்ரஹிப்பதற்காக அப்போதே பூஜித்து வருகிறாளாதலால் தேவீபாகவதம் ஸ்கந்தத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

बन्धमोचनी

பந்தமோசநீ (546)

பந்தங்களிலிருந்து விடுவிப்பவள்.

1. பந்தமென்பது அவித்யாரூபமான பந்தம், மாயாபந்தம்.

2. அல்லது, காமாக்ருஹாதி முதலிய ஸ்தலங்களில் கர்மிகளை இருப்பதும் பந்தமென்று சொல்லப்படுகிறது. அவைகளிலிருந்தும் அப்போதே விடுவிப்பதாகச் சொல்லப்படுகிறது.

'ராகிண்யா க்ருத்தேந சாகிண்யுப்தோ வத்யோ பந்தகதோ பிவா ।
... ...
ஸ்மரன் மனுமதச்சரிதம் நரோ முச்யேத ஸங்கடாத் ॥'
(தேவீமாஹாத்ம்யம்)

'பந்தே வதே மதிர் ம்ருத்யுபயே ப்ரஸக்தே
வித்தக்ஷயே ச விவிதே ச மஹோபதாபே ।
யத்பாதபூஜநமிஹ ப்ரதிகாரமாஹு:
ஸா மே ஸமஸ்த ஜநநீ சரணம் பவாநீ ॥'
(துர்க்காசந்த்ரகலாஸ்துதி)

3. பாணஸுரனால் கட்டுண்ட அநிருத்தன் அப்பாலை ஸ்தோத்ரம்செய்து விடுபட்ட வ்ருத்தாந்தமானது ஹரிவம்சத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

'பாணஸுர ப்ரஹித பந்தக பந்தமோக்ஷ:
தத் பாஹு தர்பதளநாத் உஷயா ச யோக:।
ப்ராத்யும்நிநா த்ருதம் அலப்யத யத் ப்ரஸாதாத்
ஸா மே சிவா ஸகலமப்யநுபம் க்ஷிணோது ॥'
(துர்க்கா சந்த்ரகலாஸ்துதி)

இதேமாதிரி காலகேதுவென்ற அஸுரனால் சகாவஹி என்ற ராஜகன்யகையானவள் சிறையிலிடப்பட்டபோது, அவளுடையஸகியான யசோவதி என்பவள் அப்பாலை உபாஸித்து மந்த்ர பலத்தால் ராஜகன்யகையை விடுதலையடையச் செய்தாள் என்றதான வ்ருத்தாந்தமானது தேவீபாகவதம் ஆறாவது ஸ்கந்தத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

बन्धुरालका

பந்துராலகா (547)

(அலைகள்போல்) வளைவுகளுடைய கூந்தலையுடையவள்.

1. அளகமென்றால் முன்நெற்றி மயிருக்குப் பெயர்.

2. இந்த நாமத்தை 'பர்பராலகா' என்றும் சொல்லுவதுண்டு. அப்போது, வளைந்த முன்நெற்றி மயிர்களையுடையவள் என்று அர்த்தம். 'பர்பராலகா' என்பதுதான் விசேஷமாக அங்கீகரிக்கப்படும் பாடம்.

'ஆபாடலாதராணம் ஆலி ஸ்நிக்த பர்பரகசாகாம்'
(லலிதாஸ்தவரத்னம்)

विमर्शरूपिणी

விமர்சரூபிணீ (548)

விமர்சரூபத்தையுடையவள்.

1. பரப்ரம்ஹமானது சிவசக்தி ஸம்பேளனமான ரூபம் என்பது பூர்வ வித்யையின் ஸித்தாந்தம். அதில் சிவன் வேறு, சக்தி வேறு என்பது இல்லை. இவ்விதமான அபேதரூபத்தோடு கூடியிருக்கும் அம்பாஸஹ ப்ரகாச விமர்ச ஸாமரஸ்ய ரூபிணீ என்று சொல்லுவது வழக்கம். ப்ரகாசமாத்ரமான சிவனுஸஹவர் அருவமேயான முகமான அஹம்ப்ரத்யயத்தையுடையவர்-அதாவது, இதர வஸ்துக்களுடைய ஸம்பந்தமில்லாமல் சுத்த சைதன்ய ரூபமாக இருப்பவர். சக்திரூபிணியான அம்பாள் இந்த சுத்தசைதன்யத்தில் ஒரு ஸ்புரணம் (உணர்ச்சி) ஏற்படுத்துவதோது அதின்மூலமாக ஜகத்தானது (ஏற்கனவே சொல்லப்பட்ட) பஞ்சவித க்ருத்யங்களுக்குப் பொருட்டாக ஏற்படுகிறது. இவ்விதமான உணர்ச்சியானது பரமசிவனுக்கு ஸ்வாபாவிகமாக இருந்தபோதிலும் அதை ஏற்படுத்தும் (அவருடைய) விமர்சரூபமென்று சொல்லப்படும்.

'ஸ்வாபாவிகீ ஸ்புரத்தா விமர்சரூபாஸ்ய வித்யதே சக்தி: |
ஸைவ சராசரமகிலம் ஜநயதி ஜகதேததபி ச ஸம்ஹரதி ||'
(ஸௌபாக்ய ஸுதோதயம்)

இவ்விதமான விமர்சரூபத்தோடு அம்பாளிருப்பது இங்கு சொல்லப்பட்டது. பூர்வவித்யையில் ப்ரகாச ரூபத்தைக் காமேச்வரர் என்றும், விமர்சரூபத்தைக் காமேச்வரீ என்றும் சொல்வது வழக்கம்.

2. அல்லது, விமர்சமென்றால் வாசகசப்தத்தை (வார்த்தைகளை) குறிக்கும். வாச்யமான (சொல்லவேண்டியதான) ஞானத்திற்கு வார்த்தையானது இன்றியமையாததுபோல், வாசகத்திற்கு வாச்யமானதும் இன்றியமையாததாக இருக்கிறது. அதாவது, வாக்கு, அர்த்தம் இவையிரண்டும் ஒன்றைவிட்டொன்று பிரியாமலிருக்கிறது.

'வாசகேந விமர்சேந விநா கிம் வா ப்ரகாச்யதே |
வாச்யேநாபி ப்ரகாசேந விநா கிம் வா விம்ருச்யதே ||
தஸ்மாத் விமர்சோ விஸ்பூர்த்தெள ப்ரகாசம் ஸமபேக்ஷதே |
ப்ரகாசச்சாத்மநோ ஞானே விமர்சம் ஸமபேக்ஷதே ||'
(மாத்ருகா விவேகம்)

இவ்விதம் வாக்கு, அர்த்தம் இவையிரண்டும் சேர்ந்திருப்பதுபோல், பார்வதீ—பரமேச்வரர்கள் கலந்திருக்கும் ரஹஸ்யத்தைக் காளிதாஸரானவர்—

வாகர்த்தாவிவ ஸம்ப்ருக்தௌ வாகர்த்த ப்ரதிபத்தயே |
ஜகத: பிதரௌ வந்தே பார்வதீ பரமேச்வரௌ ||

என்று ரகுவம்சத்தில் சொல்லியிருக்கிறார். இதில் வாக்கானது விமர்சரூபிணியான அம்பாள், அர்த்தமானது ப்ரகாச ரூபமான பரமேச்வரர்.

विद्या (549)

யா

வித்யா ரூபமாக இருப்பவள்.

1. அதாவது, மோக்ஷத்தைக் கொடுக்கும் ஞானஸ்வரூபமாக இருப்பவள் என்று தாத்பர்யம். இதுவே தான்,

'வித்யாஸி ஸா பகவதீ பரமா ஹி தேவீ |'

என்று தேவீ மாஹாத்ம்யத்திலும்,

'சைதன்யஸ்வரூபா சக்தி: | ஸைவ வித்யா |'

என்று கௌடபாதருடைய ஸ்ரீ வித்யாரத்ன ஸூத்ரத்திலும் சொல்லப்பட்டிருக்கிறது.

2. மாயையினுடைய கார்யங்களைப்பற்றிய விவேகத்தின் மூலமாக ஸரியான ஞானத்தைக் கொடுப்பதும், ஞானக்ரியாத்மகமானதும், தேஜஸ்ஸிலிருப்பதுமான ஒரு கால விசேஷத்திற்கு சைவ தந்த்ரத்தின்படி வித்யையென்று பெயர்.

'மாயாகார்ய விவேகேந வேத்தி வித்யாபதம் யயா |
ஸா கலா பரமா ரௌத்ரீ வித்யா ஞானக்ரியாத்மிகா ||'

அந்த ரூபமாக இருப்பவளென்றும் சொல்லலாம்.

वियदादिजगत्प्रसूः

வியதாதி ஜகத் ப்ரஸூ: (550)

ஆகாசம் முதலான ஜகத்திற்கு ஜநநீயாக இருப்பவள்.

'ஆத்மந ஆகாச: ஸம்பூத:' என்பது முதலான ச்ருதிவாக்யங்களிலும் இதுவேதான் சொல்லப்பட்டிருக்கிறது.

सर्वव्याधिप्रशमनी

ஸர்வ வ்யாதி ப்ரசமநீ (551)

ஸகலவிதமான வ்யாதிகளையும் சமனம் பண்ணுகிறவள்.

सर्वमृत्युनिवारिणी

ஸர்வ ம்ருத்யு (552)

ஸகலவிதமான மரணங்களையும் தடுப்பவள்.

1. ஸகலவிதமான மரணங்களென்பதிலே அபம்ருத்யு (அகால மரணம்), காலம்ருத்யு (வயதினுடைய க்ரமத்தில் ஏற்படும் மரணம்) முதலியவை குறிப்பிடப்பட்டன.

2. அம்பாளுடைய இந்த ஸ்ரஸ்ராமக மாராயணத்திலேயே ஸகல வ்யாதிகளும் ஸகலவிதமான ம்ருத்யுவும் நீங்குவதாக பலச்ருதி அத்யாயத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

'ஸர்வரோகப் ப்ரசமநம் ஸர்வஸம்பத் ப்ரவர்த்தநம் ||
ஸர்வாபம்ருத்யு சமநம் காலம்ருத்யு நிவாரணம் |
ஸர்வஜ்வரார்த்தி சமநம் தீர்க்காயுஷ்ய ப்ரதாயகம் ||'

3. ப்ரம்ஹஹத்தை அறிந்து மரணத்திலிருந்து விடுபடுகிறான் என்பதாக,

'ஞாத்வா தேவம் ம்ருத்யுமுகாத் ப்ரமுச்யதே |'

என்ற ச்ருதியில் சொல்லப்பட்டிருக்கிறது.

अग्रण्या

அக்ரகண்யா (553)

முதன்மையாக எண்ணப்படுகிறவள்.

1. அம்பாள் ஸகலவிதமான ஜகத்திற்கும் மூலகாரணமாக இருப்பதால் அம்பாளையேதான் முதன்முதலாகக் கணக்கிட வேண்டியதாக இருக்கிறது.

2. அல்லது, கணங்களையுடையவள் கண்யா. அப்படிப்பட்ட கண்யர்களில் முதலாக இருப்பதால் அக்ரகண்யா.

अचिन्त्यरूपा

அசிந்த்யரூபா (554)

மனதுக்குக் கோசரமில்லாத ரூபத்தையுடையவள்.

அதாவது, அம்பாள் குணங்களின் ஸம்பந்தமில்லாமலிருப்பதால் நினைவுக்கு எட்டாத ரூபத்தையுடையவளாக இருக்கிறாள் என்ற தாத்பர்யம்.

कलिकल्मषनाशिनी

கலிகல்மஷ நாசிநீ (555)

கலியுகத்திலிருக்கும் கல்மஷத்தையெல்லாம் நாசம்செய்பவள்

'கலௌ பாபைக பஹு-ளே தர்மாநுஷ்டாந வர்ஜிதே |'

என்று லலிதோபாக்யானத்தில் சொன்னபடி கலியுகமானது. மிகுந்த பாபத்தோடு (மிகுந்த பாபம் செய்கிறவர்களோடு) கூடியிருக்குமாதலால், அந்த பாபத்தைப் போக்கடிக்க வேறு யாராலும் ஸாத்யமில்லையென்றும், அதை அம்பாள் ஒருவளே செய்ய ஸமர்த்யமுடையவளென்றும் தாத்பர்யம். இதுவே,

சமாயாலம் ஜலம் வந்தே: தமஸோ பாஸ்கரோதய: |
சாந்த்யை கலேரகௌகஸ்ய தேவீ நாமாநுகீர்தநம் ||'

என்ற வாமன புராணத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. தெரிந்தோ, தெரியாமலோ செய்த எப்பேர்ப்பட்ட பாபத்திற்கும் அம்பாளுடைய நாமஸ்மரணம் தான் பரம ப்ராயச்சித்தமென்பதாக,

க்ருதஸ்யாகில பாபஸ்ய ஞானதோ Zஞானதோ Zபி வா |
ப்ராயச்சித்தம் பரம் ப்ரோக்தம் பராசக்தே: பதஸ்ம்ருதி:||'

என்று ப்ரம்மாண்ட புராணத்தில் சொல்லியிருப்பது

कात्यायनी

காத்யாயநீ (556)

கதரென்ற ரிஷியின் கோத்ரத்தில் உத்பவித்தவள்.

1. இந்த 'காத்யாயநீ' என்ற (அம்பாளுடைய) ரூபமானது ஸகல தேவதைகளுடைய தேஜஸ்ஸின் சேர்க்கையான ரூபம் என்று வாமன புராணத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

'தச்சாபி தேஜோ வரமுத்தமம் மஹத்
காம்நா ப்ருதிவ்யாம் அபவத் ப்ரஸித்தம் |
காத்யாயநீத்யேவ ததா பபௌ ஸா
நாம்நா ச தேநைவ ஜகத்ப்ரஸித்தா ||'

2. ஓட்யாண பீடத்தின் அபிமானினியான தேவதைக்கு காத்யாயநீ என்று பெயர். அந்த ரூபமாக அம்பாளிருப்பது இங்கு சொல்லப்பட்டதாகவும் சொல்லலாம். (ஏற்கனவே சொல்லப்பட்ட ஓட்யாணம், காமரூபம், பூர்ணகிரி, ஜாலந்தரம் என்ற நான்கு பீடங்களிலும் முறையே காத்யாயநீ, காமாக்ஷ, பூர்ணேச்வரீ, சண்டீ என்ற தேவதைகள் அபிமானினிகளாக இருப்பதாக காளிகாபுராணத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.)

'காத்யாயநீ சோட்டியாணே காமாக்ஷ காமரூபகே |
பூர்ணேச்வரீ பூர்ணகிரௌ சண்டீ ஜாலந்தரே ஸ்ம்ருதா ||'

3. காளிகுல ப்ரம்மஹம், சிரஸ், கல் இவைகளுக்குப் பெயர். அம்பாள் ஜகத்தைத் தாங்குவதினாலும் அதில் பரவியிருப்பதினாலும் காத்யாயநீ என்ற பெயர் ஏற்படுகிறது.

'கம் ப்ரம்ஹ கம் சிர: ப்ரோக்தம் அச்மஸாரம் ச கம் மதம் |
தாரணாத் வாஸநாத்வாபி தேந காத்யாயநீ மதா ||'

(தேவீ புராணம்)

कालहन्त्री

காலஹந்த்ரீ (557)

காலனை (ம்ருத்யுவை) நாசம் செய்கிறவள்.

ப்ரம்ஹமானது காலனுக்கும் காலனாக இப்படிதான் ச்ருதியில் சொல்லப்பட்டிருக்கிறது.

'ந: காலகாலோ குணீ ஸர்வ வித்ய: |'

कमलाक्षनिषेविता

கமலாக்ஷநிஷேவிதா (558)

ல மாக உபாஸிக்கப்பட்டவள்.

ஸ்வானைவர் இந்த நீலமயமான ரூபத்தையுடைய ஸாக்ஷாத் தேவியை எப்போதும் உபாஸிக்கிறார்களென்றும், அதினால் தனக்கிருக்கும் பதவியை அடைந்தாரென்றும் பத்ம புராணத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

இந்த்ரநீலமயீம் தேவீம் விஷ்ணுரர்ச்யதே ஸதா |
விஷ்ணுத்வம் ப்ராப்தவாம்ஸ்தேந ...||

ताम्बूलपूरितमुखी

தாம்பூல பூரித முகீ (559)

தாம்பூலத்தோடு நிறைந்த முகத்தை (வாயை) உடையவள்.

அம்பாளுடைய தாம்பூலத்தின் பரிமளத்தைப்பற்றி,

'கர்பூர வீடிகாமோத ஸமகார்ஷத் திகந்தரா |'

என்ற 26வது நாமத்திலும்'

'கர்பூர் வீடி ஸௌரப்ய கல்லோலித குகுப்தடா |'

என்ற லலிதாத்ரிசதியிலும் சொல்லப்பட்டிருக்கிறது.

அந்த தாம்பூல ரஸத்தின் மஹிமையானது காளிதாஸன் காளமேகம் முதலியோர்களுடைய மஹாகவித்வத்திற்குக் காரணமென்பது ஸாமான்யமாகத் தெரிந்த விஷயம்.

दाडिमीकुसुमप्रभा

தாடிமீகுஸு²மப்ரபா (560)

மாதுளம்பூவின் காந்தியைப்போன்ற காந்தியுடையவள்.

मृगाक्षी

ம்ருகாக்ஷீ (561)

மானின் கண்களைப்போன்ற கண்களையுடையவள்.

मोहिनी

மோஹநீ (562)

மோஹமடையும்படிச் செய்பவள்.

1. ஸர்வஜகத்தையும் (தன் ஸௌந்தர்யத்தினால்) மோஹ மடையும்படி செய்வதால் அம்பாளுக்கு மோஹநீ என்றபெயர் வந்ததாக லகுநாரதீய புராணத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

'யஸ்மாதிதம் ஜகத் ஸர்வம் த்வயா ஸௌந்தரி மோஹிதம் |
மோஹநீத்யேவ தே நாம ஸ்வகுணேந தம் பவிஷ்யதி ||

2. அட்ருதத்திற்காக கூர்மாட்டியானது கடையப்படும் போது, மஹாவிஷ்ணுவானவர் அம்பாளை அபேதகடாவினை யோடு த்யானம் செய்து எடுத்த மோஹநீ ரூபத்தை இங்கு சொல்லப்பட்டதாகவும் சொல்லலாம். ஆதியில் ப்ரம்ஹா விஷ்ணுடைய த்யான யோகத்தால் அம்பாள் எடுத்த ரூபமானது ப்ரக்ருதியென்றும், இரண்டாவதாக அம்பாள் எடுத்தது இந்த மோஹநீ ரூபமென்றும் ப்ரம்ஹாண்ட புராணத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

'ஆதௌ ப்ராதுரபூத் சக்தி: ப்ரம்ஹமேண த்யாநயோகத: |
ப்ரக்ருதிர் நாம ஸா க்யாதா தேவநாம் இஷ்டஸித்திதா ||
த்விதீயமுதபூத் ரூபம் ப்ரஹ்ருத்தேஷ்டம்ருத மந்தநே |
ஸர்வஸம்மோஹ ஜநகம் அவாங்மநஸ கோசரம் ||
யத்தர்சநாத் ஆபூதீச: ஸர்வக்ஞோஷி விமோஹித: ||'

விஷ்ணுவானவர் அம்பாளைத் தியானம் செய்து மோஹநீ ரூபமெடுத்தது,

'யத் த்யாந வைபவால்லப்தம் ரூபமத்வைதமத்புதம் |
தாமேவாகண்யமனஸா த்யாத்வா கிஞ்சித் விஹஸ்ய ஸ: ||'

என்று அதிலேயே சொல்லப்பட்டிருக்கிறது.

मुख्या

முக்யா (563)

முதன்முதலாக (முக்யமாக) இருப்பவள்.

இதுவே ச்ருதியில் 'அஹமஸ்மி ப்ரதமஜா ருதஸ்ய' என்று சொல்லப்பட்டிருக்கிறது.

मृडानी

ம்ருடானீ (564)

(ம்ருடருடைய) பரமசிவனுடைய பத்னீ.

ஜனங்களுக்கு ஸுகத்தைக் கொடுப்பதால் பரமசிவனுக்கு ம்ருட: என்று பெயர்.

'ஜகஸ்ருகேதே ஸத்வோத்ரிக்தௌ ம்ருடாய நமோ நம:'
(சிவரஹஸ்யம்)

मित्ररूपिणी

மித்ரரூபிணீ (565)

ஸுஹ்ருத் (அன்பன், மித்ரன்) ஸ்வரூபத்தையுடையவள்.

மித்ரர்களென்றால் த்வாதச ஆதித்யர்களைக் குறிக்கும். அவர்களைப்போல் (ப்ரகாசமான) ரூபத்தையுடையவளென்றும் சொல்லலாம். இவர்களே அம்பாளுடைய கிரீடத்தில் அலங்கரிக்கப்பட்ட ரத்னங்களாக இருக்கிறார்களென்று 'ஸௌந்தர்ய லஹரி'யில் வர்ணிக்கப்பட்டிருக்கிறது.

'கதௌ மாணிக்யத்வம் கததமணிபி: ஸாந்த்ரகடிதம்
கிரீடம் தே தைன்யம் ஹிமகிரிஸுதே...!' (42)

नित्यतृप्ता

நித்யத்ருப்தா (566)

ஸர்வகாலமும் த்ருப்தியோடிருப்பவள்.

1. எப்போதும் த்ருப்தியோடிருப்பது மஹேச்வரனுடைய ஆறு குணங்களில் ஒன்று என்பது ஏற்கனவே வந்த 386-வது நாமமான 'ஷடங்கதேவதாயுக்தா' என்பதில் சொல்லப்பட்டிருக்கிறது.

2. அல்லது, நித்யமான ஸ்வரூபாநுபவத்தினால் த்ருப்தியோடிருப்பவள் என்று சொல்லலாம்.

भक्तनिधिः

ப (567)

பக்தர்களுக்கு போக்கிஷம் போலிருப்பவள்.

1. அதாவது, அவர்கள் விரும்பியவற்றை யெல்லாம் கொடுப்பதால் அம்பாளுக்கு 'பக்தநிதி:' என்ற பெயர்.

2. ப்ரயோகத்தில் இந்த நாமாவை 'பக்தநிதயே நம:' என்று சொல்லவேண்டும். 'பக்தநித்யை நம:' என்று அல்ல.

नियन्त्री

(568)

ஜகத்தையெல்லாம் நியமிக்கிறவள் வழிகாட்டி அழைத்துப் போகிறவள்).

निखिलेश्वरी

நிகிலேச்வரீ (569)

ஸமஸ்தமான ப்ரபஞ்சத்திற்கும் ஈச்வரீயாக இருப்பவள்.

मैत्र्यादिवासनालभ्या

மைத்ர்யாதி வாஸநாலப்யா (570)

மைத்ரீ முதலான வாஸனைகளால் அடையக் கூடியவள்.

1. பிறரிடமிருக்கக்கூடிய சித்தவ்ருத்திகள் (வாஸனைகள்) நான்குவிதம். ஸுகத்தோடிருப்பவர்களிடம் மைத்ரீ (ஸ்நேஹத்தோடிருப்பது), துக்கப்படுகிறவர்களிடம் கருணை, புண்ய வான்களிடம் முதிதா (ஸந்தோஷத்தோடிருப்பது), பாபிகளிடம் உபேக்ஷா (கவனிக்காமலிருப்பது), இவைகளைப்பற்றி (விஷ்ணு) பாகவதத்தில் சொல்லியிருக்கிறது.

2. இந்த வாஸனைகள் சித்தத்தைச் சோதனம் செய்து பரிசுத்தமாக்குகின்றவை.

'மைத்ரீ கருணா முதிதோபேக்ஷாணாம் ஸுகது:க புண்யபாப
விஷயாணாம் பாவநாத: சித்தப்ரஸாதநம் |' (யோகஸூத்ரம்)

3. இவ்விதமான வாஸனைகளால் பரிசுத்தமாக்கப்பட்ட மனதையுடைய ஞானிகள் தக்ஷத்திலிருந்து விடுபட்டு யோகத்தின் ரஹஸ்யங்களை யறிந்து ஸமாதிநிலையைக்கூட கடந்தவிட விரும்புகிறார்களென்று சொல்லப்பட்டிருக்கிறது.

மைத்ர்யாதி சித்த பரிகர்ம விதோ விதாய
க்லேசப்ரஹாணமிஹ லப்த ஸபீஜயோகா: |
க்யாதிம் ச ஸத்வபுருஷான்யதயாதிகம்ய
வாஞ்சந்தி தாமபி ஸமாதிப்ருதோ நிரோத்தும் ||' (மாகம்)

महाप्रलयसाक्षिणी

மஹாப்ரளயஸாக்ஷிணீ (571)

மஹாப்ரளயகாலத்தில் ஸாக்ஷியாக இருப்பவள்.

1. மஹாப்ரளயகாலத்தில் பரமசிவனைவர் மஹாளம் ஹார தாண்டவம் செய்யும்போது ப்ரம்ஹா, விஷ்ணு முத லான தேவர்களெல்லாம் நாசமடைகிறார்களென்றார், அப் பான் ஒருவளே அப்போது அதற்கு ஸாக்ஷியாக இருக்கிற ளென்றார் ஏற்கனவே வந்த 232-வது நாமமிய,

'மஹேச்வர மஹாகல்ப மஹாதாண்டவ ஸாக்ஷிணீ |'

என்பதில் சொல்லப்பட்டிருக்கிறது.

2. இவ்விதம் இதர தேவர்களுக்கு அழிவு ஏற்படும் காலத்தில் பரமசிவன் உயிரோடிருப்பதானது அம்பாளுடைய பாதிவ்ரத்யத்தின் பலனென்றும் (மாங்கல்யத்தின் பலனென் றும்), ஆகவே 'ஸுவாஹினீ' என்ற பதத்திற்கு அம்பாள் ஒரு வளே உரித்தானவளென்றும், (மஹாப்ரளயத்தில் நாசத்தை யடையும் பதிகளையுடைய) ஸுஸ்வதீ முதலியவர்கள் அந்த பதத்திற்குரியவல்லவர்களென்றும் வர்ணிக்கப்பட்டிருக்கிறது.

'விரிஞ்சி: பஞ்சத்வம் வ்ரஜதி ஹரிராப்நோதி விரதிம்
விநாசம் கீநாசோ பஜதி தநதோ யாதி நிதநம் |
விதந்தீ மாமேவந்தீ விததிரபி ஸம்மீலிதத்ருசா
மஹாஸம்ஹாரே Zஸ்மிந் விஹரதி ஸதி த்வத்பதிரஸௌ 11' 26'

(ஸௌந்தர்யலஹரி)

'ஸுரேந்த்ரருத்ர பத்மஜாச்யுதாதயோ Yபி யே ம்ருதே:
வசம்வதா க தத்ஸ்த்ரிய: ஸுவாஸினீ பதஸ்ப்ருச: |
மஹேச்வரஸ்ய ம்ருத்யுகஸ்மரஸ்ய ஸாக்ஷிணீ துயா
ஸுமங்களீரியம் வதூரிமாம் ஸமேத பச்யத !!' (குருகலா)

पराशक्तिः

பராசக்தி: (572)

ஸர்வோத்க்ருஷ்டமான சக்திரூபமாக இருப்பவள்.

1. தேஹத்தில் இருக்குப்படியான தாதுக்களில் த்வக் அஸ்ருக், மாம்ஸ, மேதஸ், அஸ்தி என்ற ஐந்தும் சக்தியை மூலமாக உடையவையென்றார், ஜ்ஜன், சுக்ல, ப்ராண, ஜீவ தாதுக்கள் நாலும் சிவனை மூலமாக உடையவையென்றும், ஆகவே இந்த ஒன்பது தாதுக்களாலான தேஹமானது நவ யோனிகளிலிருந்து உண்டானதென்றும் பத்தாவது தாது

ஒன்றே பராசக்தி என்ற பெயரையுடையதென்றார் சொல் லப்பட்டிருக்கிறது.

'த்வகஸ்ருக் மாம்ஸமேதோஸ்த்தி தாதவ: சக்திமூலகா: |
மஜ்ஜ சுக்லப்ராணஜீவ தாதவ: சிவமூலகா: ||
கவதாதுரயம் தேஹா கவயோகி ஸமுத்பவ: |
தசமீ தாதுரேகைவ பராசக்திரிதிரிதா ||' (காமிகாகமம்)

இவ்விதம் எல்லா தாதுக்களுக்கும் மேல்பட்டதான பரா சக்தியென்ற தசமீதாது ரூபமாக அம்பாளிருப்பது இங்கு சொல்லப்பட்டதாகவும் சொல்லலாம்.

2. சக்தியின் சேர்க்கையினால் தான் சிவனுடைய உத்கர் ஷம் ஏற்படுகிறதென்பது தேவீ உபாஸகர்களின் முக்யமான விஷயம். இதைப்பற்றி 'சிவ: சக்த்யா யுக்தோ' என்ற ஸௌந்தர்ய லஹரீ முதல் ச்லோகத்திலும் இதர க்ரந்தங்களி லும் சொல்லப்பட்டிருப்பது ப்ரஸித்தமான விஷயம். இப் படி சக்தனான பரமசிவனுடைய சக்தியானது 'பராஸ்ய சக்தி: விவிதைவ ச்ரூயதே' என்று ச்ருதியில் சொன்னபடி பதார்த் தங்களில் வெவ்வேறு விதமாக இருக்கிறதென்றார், இவ்வித மாக பதார்த்தங்களிலிருக்கும் சக்தியானவை ஸௌரியினு டைய (பராசக்தியினுடைய) விபூதிகளென்றும், அந்த சக்தி யையுடைய பதார்த்தங்கள் மஹேச்வரனுடைய விபூதிகளென் றும் சொல்லப்பட்டிருக்கிறது.

யஸ்ய யஸ்ய பதார்த்தஸ்ய யா யா சக்திருதாஹ்ருதா |
ஸா ஸா விச்வேச்வரீ தேவி சக்த: ஸர்வோ மஹேச்வர: ||
சக்திமந்த: பதார்த்தா யே தே வை ஸர்வ விபூதய: |
பதார்த்தசக்தயோ யா யாஸ்தாஸ்தா கௌரீம் வித்துர்புதா: ||
(லிங்க புராணம்)

3. பரா எனப்படும் மந்த்ரத்தின் சக்தியஸ்வரூபமாக இருப்பவள் என்றும் சொல்லலாம்.

4. ப்ரயோகத்தில் இந்த நாமத்தை 'பரஸ்யை சக்த்யை நம:' என்றும் 'பராசக்த்யை நம:' என்றும் சொல்லலாம்.

पञ्चाशिष्ठा

பாசநிஷ்டா (573)

உத்க்ருஷ்டமான முடிவாக இருப்பவள்.

1. அதாவது, அவ்விதம் முடிவான ஞான விடமா கப்பவள் என்று தாத்பர்யம். அவ்விதமான

ஞானம் எறபடடவுடன் ஸகல கர்மாக்களும் ஸகல கர்மங்களும் முடிவடைந்து விடுவதாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

'ஸர்வம் கர்மாகிலம் பார்த்த ஞானே பரிஸமாப்யதே |'
(பகவத்கீதை)

இவ்விதமான ஞானத்தைப்பற்றி ஸமதகீதையில் சொல்லப் பட்டிருப்பதாவது :— சாஸ்த்ரங்களின் மூலமாகவும் ஆசார்ய உபதேசத்தினால் சாஸ்த்ரங்களையொட்டிய தர்க்கங்களாலும் தான் ஸர்வ ஸாக்ஷியாக இருப்பதை நன்றாய் மனதில் நிச்சயம் செய்துகொண்டு, பிறகு ஸ்திரமான பாவனையோடு தன்னைத் தவிர்த்திருக்கிற ஸகல பதார்த்தங்களையும் ஸ்வாத்மாத்மாவாகவே என்று தெரிந்துகொண்டும், திருப்தியும் ஸ்வாநுபவத்தினால் தன்னை அத்வயமான சுத்தமான ப்ரம்மமென்று நிச்சயித்துக்கொண்டும், அதினால் அஸ்விதமான நிச்சயத்தை விகாரமில்லாததும் அத்வயமானதுமான தன்னுடைய சித்தத்தில் லயம்செய்து அதற்குப் அப்பால் தேஹாலம்பத்திற்காக நிலைத்து நிற்கும்போது இருக்கும் ஞானமே பராநிஷ்டா என்பது. இதுவே ச்ருதிகளையொட்டினதும் ஸ்வாநுபவாத்மகமானது.

'சாஸ்த்ராசார்யோபதேசை தர்க்கை: சாஸ்த்ராநுஸாரிபி: |
ஸர்வஸாக்ஷிதயாத்மாநம் ஸம்யக் நிச்சித்ய ஸுஸ்திர: ||
ஸ்வாத்மநோऽந்யதயா பாதம் ஸமஸ்தம் அவிசேஷத: |
ஸ்வாத்ம மாத்ரதயா பூத்வா புந: ஸ்வாத்மாநம் அத்வயம் ||
தத்ரம் ப்ரம்ஹேதி நிச்சித்ய ஸ்வயம் ஸ்வாநுபவைக சு |
நிச்சயம் ச ஸ்வசித்மாத்ரே விலாப்யாவிக்ரியே ऽத்வயே ||
விலாபநம் ச சித்தஸ்ய பூத்வா கேவலரூபத: |
ஸ்வயம் நிஷ்டோதயம் ஸாக்ஷாத் ப்ரம்ஹவித்ப்ராவரோ முநி: |
சுத்ருசியம் பரா நிஷ்டா ச்சைஷா ஸ்வாநுபவாத்மிகா ||'

2. இந்த ஸாரத்தை ப்ரயோகத்தில் 'பராயை நிஷ்டாயை ...:' என்று சொல்லவேண்டும்.

ப்ரக்ஞாநம் கந ருபிணீ (574)

நித்யமானதும் கனீபூதமானதுமான ஞானரூபமாகஇருப்பவன் ப்ரக்ஞாநமென்பது வ்ருத்தி பிந்நமான (மாறுதல்களில்லாத), நித்யமான ஞானம். அது கனீபூதமென்பது எக்காலத்திலும் அவித்யையின் லேசத்தால்கூட கலப்பு ஏற்படாதது. எப்படி உப்புக்கல்லானது உள்ளும் புறமும் பூராவும் ஒரே

ருசியாக (ரஸகனமாக) இருக்கிறதோ; அதேமாதிரி ஆத்மாவும் உள்ளும் புறமும் சுத்தமாகவும் ப்ரக்ஞானகனமாக இருக்கிறதென்று ச்ருதியில் சொல்லப்பட்டிருக்கிறது.

'ஸ யதா ஸைந்தவகனோ(அ)ந்தரோ(அ)பாஹ்ய: க்ருத்ஸ்னோ ரஸகன ஏவ ஏவம் வா அரே(அ)யமாத்மாந்தரோ(அ)பாஹ்ய: க்ருத்ஸ்ன: ப்ரக்ஞானகன ஏவ |'

माध्वीपानालस!

மாத்வீபாநாலஸா (575)

மாத்வீபானத்தினால் ஆலஸ்யத்தோடு இருப்பவள்.

1. த்ராக்ஷா ரஸத்திலிருந்து உண்டாகும் மத்யத்திற்கு மாத்வீ என்று பெயர்.

2. அலஸா என்பதினால் உள்நோக்கிய நிஷ்டையோடிருப்பதால் சிதளமாயிருப்பது குறிக்கப்பட்டது.

मत्ता

மத்தா (576)

மயங்கியிருப்பவள்.

1. அதாவது, முந்திய நாமத்தையொட்டி. மாத்வீபானத்தினால் மயங்கியிருப்பவள் (போலிருப்பவள்) என்று சொல்லப்பட்டது.

2. மத் என்ற சப்தமானது 'அஹம்' என்பதைக் குறிக்கும். அவ்விதமான அஹமென்ற பாவமானது (அஹம்பாவமானது) மத்தா என்று சொல்லப்படும். இங்கு அம்பாளை மத்தா என்று சொல்லப்படும். இங்கு அம்பாளை மத்தா என்று சொன்னதினால் பராசிவனுடைய அஹம்கார ரூபிணியாக அம்பாள் இருப்பது சொல்லப்பட்டது. இதேவிதமாக அம்பாளிருப்பதை,

'புரஸ்தாத் ஆஸ்தாம் ந: புரமதிதயாமேஹபுருஷிகா |' (7)

என்று ஆசார்யாள் 'ஸௌந்தர்யலஹரி'யிலும்,

'அஹம் தாம் ஆலம்பே த்ருடதரம் அஹம்தாம் பசுபதே: |

என்று நீலகண்ட தீக்ஷிதர் 'நீலகண்டவிஜய'த்திலும் வர்ணித்திருக்கிறார்கள்.

मातृकावर्णरूपिणी

மாத்ருகாவர் (577)

மாத்ருகாவர்ணங்களின் ரூபமாக இருப்பவள்.

1. அதாவது, ஜம்பத்தோறு அக்ஷரங்களின் ரூபமாக இருப்பவள் என்று தாத்பர்யம். (ஸ்வரங்கள் 16, க முதல் ம முடிய 25, ய முதல் க்ஷ முடிய 10, ஆக 51). இவைகளை மாத்ருகைகளென்றும், வர்ணங்களென்றும் சொல்வது வழக்கம்.

2. மாத்ருகைகளுக்கே தனித்தனியான வர்ண (நிறங்) களுண்டென்றதாகச் சொல்லப்படும். இவ்விதம் வர்ணங்களின் ஸ்ரூபமாக அம்பாள் இருப்பது இங்கு சொல்லப்பட்டதாக வும் சொல்லலாம்.

அகாராதி ஸ்வரங்கள் புகை வர்ணமென்றும், க முதலான பனிரெண்டும் வெண்மை வர்ணமென்றும், ட (3) முதலான பத்தும் வெளுப்பு நிறமென்றும், ப (3) முதலான ஐந்தும் அருணை வர்ணமென்றும், ல முதல் ஸ முடிய பொன் நிற மென்றும் ஹ, க்ஷ இரண்டும் மின்னல் போன்ற நிறமென்றும் ஸௌந்தர்யலஹரியில் சொல்லப்பட்டிருக்கிறது.

'அகாராத்யா ஸ்வரா தூம்ரா: பிந்தூராபாஸ்து காதய: |
டாதிபாந்தா: கௌரவர்ண அருணா: பஞ்ச பாதய: |
லகாராத்யா: காஞ்சநாபா: ஹகாராந்த்யௌ தடிந்நிபௌ ||'

இதர தந்த்ரங்களில் இதற்கு மாறாக

'ஸ்படிகாபா: ஸ்வரா: ப்ரோக்தா: ஸ்பர்சா வித்ரும ஸந்நிபா: |
யாதயோ ரவ பீதா: ஸ்யு: க்ஷகாரஸ்த்வருணோ மத: ||'

என்று சொல்லப்பட்டிருக்கிறது.

சிலர் எல்லா அக்ஷரங்களுமே வெளுப்பு நிறமென்றும் சொல்லுவார்கள். மாத்ருகா விவேகத்தில்

'அகாரம் ஸர்வதேவத்யம் ரக்தம் ஸர்வ வசங்க்ரஹம் |'

என்பது முதலாக ஒவ்வொரு அக்ஷரத்திற்கும் ஒரோர் வர்ண மிருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

3. அல்லது, மாத்ருகா வர்ணங்களால் நிரூபிக்கப்பட்ட வன் என்றும் சொல்லலாம். எப்படி பரசம்புவானவர் சக்தி, சிவன் என்ற இரு பிரிவோடு இருக்கிறாரோ, அப் மாதிரி மாத்ருகா தேவியானவள் இரண்டு ரூபமாக இருக் கிறாள் என்றும், ஒரு ரூபத்தில் (பூ கண்டன் முதலான பெயர் களுடைய) சிவ வாசங்களென்றும், மற்றொரு ரூபத்தில் (பூர் முதலான பெயர்களுடைய) சக்தி வாசங்களென்

நம் ஸ்ரீதஸம்ஹிதை பிக்ஞவைபவ கண்டத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

யதா பரதர: சம்பு: த்விதா சக்திசிவாத்மகா |
ததைவ மாத்ருகாதேவி த்விதா பூதா ஸதீ ஸ்வயம் ||
ஏகாகாரேண சக்தேஸ்து வாசிகா சேதரேண து !
சிவஸ்ய வாசிகா ஸாக்ஷாத் வித்யேயம் பதகாமிநீ ||'

4. அல்லது, அக்ஷமாலாஸ்வரூபிணியாக இருக்கிறாள் என்று சொல்லலாம். மாத்ருகா வர்ணங்கள் அ முதல் க்ஷ முடிய இருப்பதால் அவையெல்லாம் சேர்ந்த மாலைக்கு (ஸமூஹத்திற்கு) அக்ஷமாலா என்ற பெயர். அப்படிப்பட்ட ப்ரஹ்மஸ்வரூபஸ்வரூபிணியாக இருந்தாலும் அதற்கும் அதிகமான ஸ்வரூபத்தையுடையவளென்பது ரஹஸ்யமான விஷயம்.

'அகார: ப்ரதமோ தேவி க்ஷகாரோந்த்யஸ்ததா: பரம் |
அக்ஷமாலேதி விக்யாதா மாத்ருகாவர்ணரூபிணீ |
சப்தப்ரம்ஹ ஸ்வரூபேயம் சப்தாதீதம் து ஜப்யதே ||'
(ஞானர்ணவம்)

5. அல்லது, மாத்ருகா வர்ணங்களை உண்டுபண்ணுகிறவள், அவைகளின் 'ஜநயித்ரீ' என்றும் சொல்லலாம். சிவனுடைய அநுத்தர ரூபத்தில் இச்சா சக்தியானது சேர்வதால் வர்ணங்கள் உத்பத்தியாவதின் ப்ரகாரமானது ஸௌபாக்ய ஸுதோதயத்தில் சொல்லப்பட்டிருப்பதைப் பார்க்கவும்.

6. மாத்ருகா வர்ணங்களே ஸ்ரீ சக்ரத்மகமாக இருக்கின்றனவென்றும் சொல்லப்படும். இதைப்பற்றி மாத்ருகா விவேகத்தில் விஸ்தாரமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அப்படியானால் மாத்ருகா வர்ணங்களின் ந்யாஸத்தினால் ஸ்ரீ சக்ரத்தைப் பாவனை செய்வது கைலாஸ ப்ரஸ்தாரமென்றும், திதி நித்யா தேவதைகளின் ந்யாஸத்தினால் ஸ்ரீ சக்ரத்தைப் பாவனை செய்வது மேரு ப்ரஸ்தாரமென்றும், வஹ்ந்யாதி தேவதைகளின் ந்யாஸத்தினால் பாவனை செய்வது பூப்ரஸ்தாரமென்றும் ஸுந்தரி ஸம்ஹிதையில் சொல்லப்பட்டிருக்கிறது. இவைகளில் மாத்ருகா, ஸ்ரீசக்ரம் இவைகளுடைய ஐக்யவிபாகமாகிய கைலாஸ ப்ரஸ்தாரத்தை இங்கு சொன்னதாகவும் சொல்லலாம்.

7. "ப்ரசண்டாஜ்ஞா" (827—28) என்னும் நாமத்தை பிரிக்காமல் ஒரே நாமமாக வைத்துகொண்டும், அல்லது வேறு இரண்டு நாமங்களை ஒன்றுகக் கணக்கிட்டும் இந்த நாமத்தை மாத்ருகா, அ வர்ணரூபிணீ என்று இரண்டு நாமமாகவும்

சொல்வதுண்டு. 'ஸ்கந்தோத்பாதேந மாத்ருகா', என்ற தேவீ புராண வசனப்படி ஸ்கந்தருடைய ஜனனியானதினால் அம்பாளுக்கு 'மாத்ருகா' என்ற தனியான பெயருமுண்டு.

महाकैलासनिलया

மஹாகைலாஸ நிலயா (578)

மஹா கைலாஸமென்பதை வாஸஸ்தானமாக உடையவள்.

1. மஹா கைலாஸமென்பது கைலாஸத்திற்கும் அப்பால் இருப்பதும், பரமசிவனுடைய இருப்பிடமுமான லோகமென்பது சிவபுராணம் முதலியவைகளில் ப்ரஸித்தமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. [லலிதாம்பிகா ரூபிணியான அம்பாளோப்புற்றிச் சொல்லுகையில் ஸர்வோத்க்ருஷ்டமான தேவதையாகையால் மஹாகாமேச்வரீயென்றும், பரமசிவனை மஹாகாமேச்வரர் என்றும், கணேசனை மஹாகணேசரென்றும், பாசுபதாஸ்த்ரத்தை மஹாபாசுபதாஸ்த்ரமென்றும் தனிப்பெயர்களோடு சொல்லப்பட்டிருப்பது கவனிக்கத்தக்கது.]

2. அல்லது, மேலே சொல்லிய கைலாஸ ப்ரஸ்தாரமென்ற அதிதபோவனா விசேஷத்தை இங்கு கைலாஸமென்றும் சொன்னதாகவும் சொல்லலாம். விந்த்யாதி தாதாத்ம்யமாகிற ஹிமாலயதாரமென்ன, நித்யாதாதாத்ம்யமாகிற மேருப்ரஸ்தாரமென்ன, இவையிரண்டிற்கும் வேற்றுமையானதும் மேலிட்டதாகையால் மஹா என்ற விசேஷணமாகச் சொன்னது.

3. அல்லது, ப்ரம்மரந்த்ரத்திலிருக்கும் ஸஹஸ்ராரத்தையே கைலாஸமென்றும் சொன்னதாகவும் சொல்லலாம்.

'ஏதத் கைலாஸஸம்க்ஞம் பதமகல பதம் பிந்துரூபீஸ்வரூபீ,
யத்ராஸ்தே தேவதேவ:..... |' (த்ரிபுராஸாரம்)

मृणालमृदुदोर्लता

ம்ருணால ம்ருது தோர்லதா (579)

தாமரைத் தண்டிலிருக்கும் பால் ம்ருதுவான கொடி போன்ற கைகளையுடையவள்.

महनीया

மஹநீயா (580)

எல்லோராலும் பூஜிக்கத்தக்கவள்

दयामूर्तिः

தயாமூர்த்தி: (581)

தயையே மூர்த்தீகரித்ததான ஸ்வரூபத்தையுடையவள்.

महासाम्राज्यशालिनी

மஹாஸாம்ராஜ்யசாலி நீ (582)

மஹத்தான ஸாம்ராஜ்யத்தோடு விளங்குகிறவள்.

அரசர்களுக்கெல்லாம் அரசனையிருப்பவனுக்கு ஸம்ராட் என்று பெயர். அம்பாள் ஸர்வைச்வர்யமான மஹா கைலாஸத்தின் ஆதிபத்யத்தோடிருப்பதால் மஹா ஸாம்ராஜ்யத்தையுடையவளென்று சொல்லப்பட்டது.

आत्मविद्या

(583)

ஆத்மஞான ரூபிணியாக இருப்பவள்

1. அதாவது, ஆத்மாவே ப்ரம்மமென்று ப்ரதிபாதிக்கும் உண்மையான ஞானரூபமாக இருப்பவள் என்று அர்த்தம்.

2. அல்லது, ஆத்மாஷ்டாக்ஷர மந்த்ர ரூபிணீயென்றும் சொல்லலாம்.

महाविद्या

மஹாவித்யா (584)

ஸர்வோத்க்ருஷ்டமான வித்யாரூபிணியாக இருப்பவள்.

1. மேலே சொல்லப்பட்ட ஆத்மவித்யையே ஸர்வோத்க்ருஷ்டமானதால் அதையே மஹா வித்யையென்று இங்கு சொன்னது.

2. அல்லது மஹதீயாயும், வித்யாரூபிணியாகவுமிருப்பவளென்றும் சொல்லலாம். ஸகலவித்தான அர்த்தங்களையும் நிவாரணம் செய்வதால் மஹத்வம் ஏற்படுகிறது.

3. நவ (வன) துர்கா வித்யைக்கும் மஹா வித்யையென்ற ஸம்க்ஞை உண்டு. அந்த வித்யாஸ்வரூபிணியாகவும் அம்பாள் இருக்கிறாள் என்றும் சொல்லலாம்.

श्रीविद्या

யா (585)

பஞ்சதசீ ஸ்வரூபமாக இருப்பவள்.

வித்யை நாலுவிதமாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. யக்ஞ வித்யா (கர்மாக்களைப் பற்றியது), மஹாவித்யா (உபாஸநா வித்யை), குஹ்யவித்யா (மந்த்ர வித்யை), ஆத்மவித்யா (ப்ரம்ஹ வித்யை). இம்மாதிரி வித்யா என்ற பதத்திற்கு அர்த்தமிருப்பதாகவும் அவ்விதமான வித்யைகளெல்லாம் அம்பாளுடைய ரூபங்களென்றும் விஷ்ணுபுராணத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

'யக்ஞவித்யா மஹாவித்யா குஹ்யவித்யா ச சோபமே |
ஆத்மவித்யா ச தேவி த்வம் விமுக்திபலதாயிநீ |
ஆன்வீக்ஷிகீ த்ரயீ வார்த்தா தண்டநீதிஸ் த்வமேவ ச ||'

कामसेविता

காமேவேவிதா (586)

மன்மதனால் உபாஸிக்கப்பட்டவள்.

1. மன்மதன் ஸ்ரீவித்யையின் தேதங்களில் ஒன்றின் ரிஷி (மந்த்ர த்ரஷ்டா) என்பது ஏற்கனவே வந்த 'மநு வித்யா', 'சந்த்ரவித்யா' முதலிய நாமங்களில் எழுதப்பட்ட

'மநு: சந்த்ர: குபேரச்ச லோபாமுத்ரா ச மன்மத: |'

என்ற ச்லோகத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த வித்யா தேதமானது அனங்கவித்யையென்று சொல்லப்படும். இதைப் பற்றி அருணேஷ மிஷத்தில் மிகு அழகாகவும் சுருக்கமாகவும் சொல்லப்பட்டிருக்கிறது. [அங்கே அவன் ஸ்ரீவித்யையென்ற ஒரு ரத்னத்தைக் கிடைக்கப்பெற்றதாகவும் அதை அவன் (த்வாரம் செய்து) கோர்த்ததாகவும் வர்ணித்திருப்பதை யொட்டி இந்த நாமத்தில் வரும் 'ஸேவிதா' என்ற பதத்திற்கு கோர்க்கப்பட்ட (வித்யாரூபியாயிருப்ப)வள் என்றும் அர்த்தம் சொல்லலாம்.] இந்த உபநிஷத்தின் வியாக்யானமான தாவ்ய்யத்தின் மூலத்திலும் 'ஸௌந்தர்யலஹரி'க்கு லக்ஷ்மீதரர் எழுதியிருக்கும் வியாக்யானத்திலும் காணலாம்.

2. மன்மதன் அம்பாளை உபாஸித்து அனுக்ரஹ படைத்ததைப்பற்றி 'ஸௌந்தர்யலஹரி'யில் பின்வருமாறு சொல்லப்பட்டிருக்கிறது.—

'ஸ்மரோபி த்வாம் நத்வா ரதிநயந லேஹ்யேந வபுஷா
முநீநாமப்யந்த: ப்ரபவதி ஹி மோஹாய மஹதாம் ||' (5)

'தநு: பௌஷ்பம் மௌர்வீ மதுகரமயீ பஞ்ச விசிகா:
வஸந்த: ஸாமந்தோ மலயமருத் ஆயோதநரத:|
ததாப்யேகஸ்ஸர்வம் ஹிமகிரிஸுதே காமபி க்ருபாம்
அபாங்காத் தே லப்த்வா ஜகதிதம் அநங்கோ விஜயதே!!' (6)

5. காமனென்றால் மஹாகாமேசனையும் குறிக்கும்.

श्रीषोडशाक्षरीविद्या

ஸ்ரீ ஷோடசாக்ஷரீவித்யா (587)

மஹிமை பொருந்திய ஷோடசாக்ஷரீ வித்யா ரூபிணீயாக இருப்பவள்.

1. பதிணாறு அக்ஷரங்களோடு கூடியது ஷோடசாக்ஷரீ. மஹிமை வாய்ந்ததும் பதிணாறு அக்ஷரங்களையுடையதுமான வித்யை ஸ்ரீ ஷோடசாக்ஷரீவித்யை.

2. கௌடபாதருடைய ஸ்ரீ வித்யா ரத்னஸூத்ரத்தில்,

'அத வித்யா அஷ்டாவிம்சத் வர்ண விசிஷ்டா|'

என்று சொல்லப்பட்டிருக்கிறபடி ஷோடசாக்ஷரீ வித்யையானது இருபத்தெட்டு அக்ஷரங்களோடு கூடியிருந்தபோதிலும், ஏடுவிலிருக்குப்படியான பஞ்சதசியின் கடத்ராயத்தை மூன்று அக்ஷரமாக கணக்குப்பண்ணி மொத்தம் பதிணாறு ஆகிறதினால் விரோதமும் யாதொன்றுமில்லை.

3. அல்லது ஸ்ரீ என்னும் அக்ஷரத்தை பதிணாறாவது அக்ஷரமாக உடைய வித்யையென்றும் சொல்லலாம்.

4. ஷோடசாக்ஷரீயே தான் ஸ்ரீவித்யை என்று சொல்லப்படும்.

'வக்த்ர கோடிஸஹஸ்ரைஸ்து ஜிஹ்வாகோடி சதைரபி|
வர்ணிதும் நைவ சக்யேயம் ஸ்ரீ வித்யா ஷோடசாக்ஷரீ!!'

த்ரிகூடா (588)

மும்மூன்றுன ஸமூஹங்களோடு கூடியவள்.

1. இவை த்ரிமூர்த்திகள், அவஸ்தாத்ரயம், பிடத்ரயம், லோகத்ரயம், குணத்ரயம் முதலியவை. இம்மாதிரியான த்ரிகூடங்களின் ரூபமாக அம்பாளிருப்பது இங்கு ஒரே படமாகச் சொல்லப்பட்டது.

2. அல்லது, வாக்பவம் முதலான கூடத்ரயத்தோடு அபின்னமாக இருப்பதைச் சொன்னதாகவும் சொல்லலாம்.

कामकोटिका

காமகோடிகா (589)

பரமசிவனுகிற ஏகதேசத்தையுடையவள்.

பரப்ரம்மமானது சிவசக்தி ஸாமரஸ்யரூபமாக இருப்பதால் அம்பாள் காமகோடிகா என்று சொல்லப்பட்டாள். அம்பாள் வேறு, பரமசிவன்வேறு என்பது கிடையாது என்று தாத்பர்யம்.

कटाक्षकिङ्करीभूतकमलाकोटिसेविता

கடாக்ஷகிங்கரீபூத கமலாகோடி ஸேவிதா (590)

தன்னுடைய கடாக்ஷத்திற்குக் கிங்கரிகளாக இருக்கும் கோடிக்கணக்கான லக்ஷ்மீதேவிகளால் ஸேவிக்கப்பட்டவள்.

1. (கிம் கரோமி) என்ன செய்யவேண்டுமென்று தன் பாலனுடைய கட்டளையை எதிர்பார்த்துக்கொண்டிருக்கும் ஸேவகருக்குக் கிங்கரனென்று பெயர். அம்பாளுடைய கடாக்ஷத்தின் லேசத்தினால் அனுக்ரஹிக்கப்பட்ட பக்தனே கோடிக்கணக்கான ஸ்ரீ தேவிகள் கிங்கரிகளாக ஸேவிப்பதற்கு ஸித்தமாக இருந்துகொண்டிருக்கிறார்களென்று தாத்பர்யம்.

2. அல்லது, அவர்கள் அம்பாளு கடாக்ஷ வெளியிடும் உத்தரவுகளுக்குக் காத்துக்கொண்டிருக்கிறார்கள் என்பதாகவும் சொல்லலாம்.

சிரஸ்ஸ்வத்திதா (591)

சிரஸில் இருப்பவள்.

அதாவது, ப்ரம்மரந்த்ரத்தில் ஸஹஸ்ரதளபத்மத்தில் குரு ரூபமாக இருப்பவள் என்று தாத்பர்யம்.

चन्द्रनिभा

சந்த்ரநிபா (592)

சந்த்ரனைப்போன்ற (காந்தியையுடைய)வள்.

ப்ரம்மரந்த்ரத்தின் கீழாக சந்த்ரனிருக்கிறான். அவன் ஸ்ரீவித்யையின் த்ருதீய கூடாத்மகமானவன். ஆகவே அம்பாளுக்கு இந்தப்பெயர் ஏற்பட்டது.

मालस्था

பாலஸ்த்தா (593)

நேற்றியிலிருப்பவள்.

அதாவது ஹ்ரு்ல்லேகையின் பிந்து ரூபமாக (நெற்றி யில்) இருப்பவள் என்று தாத்பர்யம்.

इन्द्रधनुष्प्रभा

இந்த்ரதநுஷ்ப்ரபா (594)

இந்த்ர தனுஸ்ஸின் ப்ரபைகளைப்போன்ற ப்ரபைகளோடிருப் பவள்.

அதாவது, மேலே சொல்லப்பட்ட பிந்துவுக்கும் மேலாக இருக்கும் அர்த்தசந்த்ர ரூபமாக இருப்பவளென்று தாத்பர்யம்

'தீபாகாரோ(ர்)தமாத்ரச்ச லலாடே வ்ருத்த இஷ்யதே |
அர்தசந்த்ரஸ்ததாகார: பாதமாத்ரஸ் ததூர்த்வத: ||'
(நித்யாஹ்ருதயம்)

'மத்யே பாலம் பிந்துர் தீப இவாபாதி வர்துளாகார: |
ததுபரி கதோ(ர்)ர்த சந்த்ரோ(ர்)ங்வர்த்த: காந்த்யா ததா(ர்)வ்
க்ருத்யா ||' (வாமகேஸ்வர ரஹஸ்யம்)

हृदयस्था

ஹ்ருதயஸ்த்தா (595)

ஹ்ருதயத்திலிருப்பவள்.

1. அதாவது, ஹ்ருதயத்தில் த்யானம் செய்யப்படுகிற வளாக இருப்பதால் இத்தப்பெயர்.

2. 'ப்ரபுர்ஹ்ருதயஜ்ஞாது: பதேபதே ஸுகாதி பவத்தி |' என்ற கல்பஸூத்ரவசனப்படி பராபீஜத்திற்கு ஹ்ருதய மென்று பெயர். ஆகவே, அந்த மந்த்ரத்திலிருப்பவளென்றும் சொல்லலாம்.

3. பரமேச்வர ஹ்ருதயமென்று பெயரையுடைய உடம்பிலுள்ள ஹ்ருதயமென்று சொல்லப்படும். அதில் அம்பாள் (அந்தர்யாமியாக) ப்ரதிபாதிக்கப்படுவதால் ஹ்ருதயஸ்த்தா என்று பெயர்.

4. ஸர்வ ஜகத்திற்கும் ஹிருதயமே பீஜமென்று சொல் லப்படும். இவ்விதமான பீஜத்தில் ஜகத்ரூபமாக அம்பாளி ருப்பது இங்கு சொல்லப்பட்டதாகவும் சொல்லலாம்.

'யதா ந்யக்ரோத பீஜஸ்த்த: சக்திரூபோ மஹாத்ரும: |
ததா ஹ்ருதய பீஜஸ்த்தம் ஜகதேதத் சராசரம் ||'
(அநுத்தராத்ரிம்சிகா)

रविप्रभ्या

ரவிப்ரக்யா (596)

ஸூர்யனைப்போன்ற (காந்தியையுடைய)வள்.

1. ஹ்ருதயத்தில் ஸூர்யமண்டல மிருப்பதாலும், அதுவே ஸ்ரீவித்யையின் த்விதீயகூடமாக இருப்பதாலும் இங்கு அம்பாளை ரவிப்ரக்யா என்று சொன்னது.

2. நிடி, ப்ரக்ய என்ற பதங்கள் (ஸாதாரணமாய்) ஸமானமாக இருப்பதைக் காட்டுகிறவையாக இருந்தாலும் இங்கு (த்ருதீய த்விதீய கூடங்களோடு) அபேதமாக இருப்பதைக் காட்டுகின்றன.

त्रिकोणान्तरदीपिका

த்ரிகோணாந்தரதீபிகா (597)

த்ரிகோணத்திற்குள்ளிருக்கும் தீபமாக இருப்பவள்.

1. மூலாதார பத்மத்திலுடைய கர்ணிகையின் நடுவில் த்ரிகோணமிருக்கிறது. அதில் அக்னிமண்டல மிருக்கிறது. அதுவே ஸ்ரீவித்யையின் ப்ரதம கூடம். அதோடு அம்பாள் அபின்னமாக இருப்பதால் 'த்ரிகோணாந்தர் தீபிகா' என்று சொன்னது.

2. மூலாதாரத்தில் அக்னியும், ஹ்ருதயத்தில் ஸூர்ய மண்டலமும், ப்ரஹ்மரந்த்ரத்தில் சந்த்ரமண்டலமிருப்பதும், அவை மூன்றும் ஸ்ரீவித்யையின் மூன்று கண்டங்களோடு அபின்னமாக இருப்பதும், தந்த்ர ராஜத்தில் பின்வருமாறு சொல்லப்பட்டிருக்கின்றன.

'நித்யா நித்யோதிதே மூலாதாரமத்யேऽஸ்தி பாவக: |
ஸர்வேஷாம் ப்ராணிநாம் தத்வத் ஹ்ருதயே ச ப்ரபாகர: ||
மூர்த்தநி ப்ரம்ஹரந்த்ராத: சந்த்ரமாச்ச வ்யவஸ்த்தித: |
தத்த்ரயாத்மகமேவ ஸ்யாத் ஆத்யா நித்யாத்ரிகண்டகம் ||

3. மேற்சொன்னது அவ்கடகோணத்மகமான பர்வதம். இதை ஸூர்யன் ப்ரதக்ஷிணம் செய்துவரும்போது ஒரே ஸமயத்தில் மூன்று கோணங்களைத்தான் ப்ரகாசப்படுத்துகிறான். இந்த்ரன், அக்னி, யமன், நிர்ருதி, வருணன், வாயு, குபேரன், ஈசானன் இந்த எட்டுத்திக்குக் கோணங்களில் இந்த்ரபுரத்தில் மத்யான்ஹ ஸமயத்தில் ஸூர்யன் உச்சியிலிருந்தால் குபேரபுரத்தில் அஸ்தமனமும், யமபுரத்தில் உதயமும் நடை

பெறும். இப்படி குபேர, இந்த்ர, யமகோணத்ரயத்திலிருக்கும்போது, அவர்களுடைய மூன்று புரங்களை மட்டும்தான் ப்ரகாசப்படுத்துகிறது. குபேர இந்த்ர, இந்த்ர யம, ரேகைகளின் (அந்தரத்தில்) நடுவிலிருக்கும் ஈசான, அக்னிபுரங்களிலும் அதி வெளிச்சம் தெரியுமென்பதும் இதிலிருந்து ஏற்படுகிறது. இவைகளில் ஈசானபுரத்தில் மூன்றுவது யாமமும், அக்னி புரத்தில் முதலாவது யாமமுமாக இருக்கும். ஆகவே, ஸூர்யன் இந்த்ரபுரத்தில் மத்யான்ஹத்திலிருந்தால் குபேர, இந்த்ர, யம திக்த்ராயங்களையும் ஈசான, ஆக்னேய விதிக்குகளின்மீதும் ப்ரகாசப்படுத்தும். இதே மாதிரியே ஆக்னேயபுரத்தில் மத்யான்ஹத்திலிருந்தால் ஈசான, அக்னி, நிர்ருதி திக்த்ராயங்களையும் இந்த்ர, யம விதிக்குத்வயங்களையும் ப்ரகாசப்படுத்துகிறான். இதே மாதிரியே மற்ற இடங்களில் மத்யான்ஹ காலத்திலிருந்தால் ப்ரகாசிப்பதைச் சொல்லவேண்டும்.

4. ஆகவே தானிருக்கும் கோணம் ஒன்று, தனக்கு தக்ஷிண வாமபாகங்களிலிருக்கும் கோணங்கள் இரண்டு. ஆக மூன்று கோணங்கள், அவைகளுக்கு அந்தாமாக இருக்கும் தக்ஷிண, வாம ரேகைகள் இரண்டு, ஆக இந்த ஐந்து புரங்களையும் ப்ரகாசப்படுத்தும் ஸௌம்ய ரூபமாக இருப்பதால் 'த்ரிகோணாந்தர தீபிகா' என்று அம்பாளுக்குப் பெயர்.

'சக்ராதிகாம் புரே திஷ்டந் ஸப்ருசத்யேஷ புரத்ரயம் |
த்ரிகோணைள த்வைள விகோணஸ்த்த: த்ரீந்கோணாந் த்வே புரே
[தத II' (விஷ்ணுபுராணம்)

(598)

தக்ஷிணையுடைய பெண்.

1. அல்லது, அச்வினீ முதலான நக்ஷத்ரங்களின் ரூபமாக இருப்பவள் என்றும் சொல்லலாம்.

'தாக்ஷாயணீ த்வபர்ணேயாம் ரோஹிண்யாம் தாரகாஸு ச |'

2. தக்ஷபுத்ரிமார்களின் ஆவுருத்திக்கு தாக்ஷாயணியாக்ஞென்று பெயர். அந்த ரூபமாக இருப்பவள் என்றும் சொல்லலாம்.

दैत्यहन्त्री

தைத்யஹந்த்ரீ (599)

(பண்டாஸுரன் முதலான) தைத்யர்களை ஸம்ஹாரம்செய்பவள்.

दक्षयज्ञविनाशिनी

தக்ஷயக்ஞ விநாசிநீ (600)

தக்ஷனுடைய யக்ஞத்தை நாசம்செய்யும் ஸ்வபாவமுள்ளவள்

தக்ஷன் என்ற பெயருடையவர்கள் இருவர். ப்ரஜாபதியானவர் ஒருவர். அவருடைய மானஸ அவதார விசேஷமான ராஜா மற்றொருவர். இவர்களிருவராலும் செய்யப்பட்ட யக்ஞங்களை நாசம் செய்பவளென்று இங்கு சொல்லப்பட்டது. நாசமானது சிவனால் செய்யப்பட்டபோதிலும் அம்பாள் அதற்குக் காரணமாக இருந்ததால் அம்பாளே நாசம் செய்ததாகச் சொல்லப்பட்டது. (இதே விதமாகத்தான் மதுகைடபர்களை டஞ்ஜரீ என்றும் அம்பாளுக்குப் பெயர் ஏற்பட்டது.)

'அபிவ்யாஹ்ருத்ய ஸப்தர்ஷீந் தக்ஷம் யோऽப்யசபத் புந:।
பவிதா மாநுஷோ ராஜா சாக்ஷுஷஸ்ய த்வம் அந்வயே ॥
ப்ராசீந பர்ஹிஷ: பௌத்ர: புத்ரச்சைவ ப்ரசேதஸ:।
தக்ஷ இத்யேவ நாம்நா த்வம் மாரிஷாயாம் ஜநிஷ்யஸி ॥
கந்யாயாம் சாகிநாம் சைவ ப்ராப்தே வை சாக்ஷுஷாந்தரே ।
அஸிக்நீத்ராபி தே யக்ஞம் ஹந்மி தேவ்யா: ப்ரியேப்ஸயா ॥'

(ப்ரம்ஹ, வாயு புராணங்கள்)

दरान्दोलितदीर्घाक्षी

தராந்தோளித தீர்காக்ஷீ (601)

கொஞ்சம் சஞ்சலமானதும் (காது வரையில்) நீண்டதுமான கண்களையுடையவள்.

1. அம்பாளுடைய நேத்ரங்களின் அழகைப்பற்றி ஆசார்யாள் 'ஸௌந்தர்யலஹரி'யில் பதிமூன்று ச்லோகங்களில் வெகு அழகாக வர்ணித்திருக்கிறார்கள்.

2 தரமென்றால் பயமென்று அர்த்தம். பயத்தைச் சஞ்சலமாகச் செய்யும், அதாவது பயத்தைப் போக்கும், நீண்ட கண்கள் என்றும் அர்த்தம் சொல்லலாம். அதாவது அம்பாளுடைய கடாக்ஷம் பட்டாலேயே பயமானது நாசமடைகிறதென்று தாத்பர்யம்.

दरहासोज्ज्वलन्मुखी

தரஹாஸோஜ்வலந் (602)

புன்சிரிப்பினால் ப்ரகாசிக்கும் முகத்தையுடையவள்.

गुरुमूर्तिः (603)

குருவின் ரூபமாக இருப்பவள்.

1. குரு, மந்த்ரம், தேவதை இம்மூன்றும் ஒன்றாக என்ப தாகப் பாவனை செய்து உபாஸிக்கவேண்டுமென்பதற்கு, இவற் றுடன் ஸ்ரீசக்ரத்தையும் சேர்த்து இந்த நாலும் தன்னுடன் அபேதமாக இருப்பதாகப் பாவனை செய்யவேண்டுமென்பதற்கு மந்த்ர சாஸ்த்ரத்தின் வித்தாந்தம்.

'தாமிச்சாவித்³ரஹாம் தேவீம் குருரூபாம் விபாவயேத் |'
(நித்யாஹ்ருதயம்)

யதா கடஸ்ச கலச: கும்பச்சைகார்த்த வாசகா: |
ததா மந்த்ரோ தேவதா ச குருச்சைகார்த்த வாசகா: ||
(ஸௌந்தர்ய தாபிநீயம்)

'இத்தம் மாதா வித்யா சக்ரம் ஸ்வகுரு: ஸ்வயம் சேதி |
பஞ்சாகமபி பேதாபாவோ மந்த்ரஸ்ய கௌலிகார்த்த
தோ²Zயம் ||' (விவஸ்யாரஹஸ்யம்)

2. குரு என்ற வார்த்தையானது உபாஸனைக்குக் காரணம் பலவிதமாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

'குகாரஸ்த்வந்தகார: ஸ்யாத் ருகாரஸ்தந்நிவர்தக: |
அந்தகார நிரோதித்வாத் குருரித்யபிதீயதே ||'

'குகார: ஸதி³தி ப்ரோக்தோ ருகாரோ ஞானவாசக: |
ப்ரம்ஹஞானோ²பதே³சத்வாத் குருரித்யபிதீயதே ||'

गुणनिधिः
குணநிதி: (604)

குணங்களுக்கெல்லாம் போக்கிடம் போலிருப்பவள்.

1. குணங்களென்பது ஸத்வ, ரஜஸ், தமஸ் என்ற மூன்று கச் சொன்னபோதிலும் அவைகளுடைய சக்திகளானது கணக்கற்றவையென்று ஸாங்க்யர்கள் சொல்லுகிறார்கள்.

'லகுத்வாதி தர்மை: அந்யோந்யம் ஸாதர்ம்யம் வைதர்ம்யம்
ச குணோநாம் | (ஸாங்க்ய ப்ரவசந ஸூத்ரம்)

இம்மாதிரி அனந்தமான குணங்களுக்கு இருப்பிட மானவள் என்று இங்கு சொல்லப்பட்டது.

2. குணங்களென்றால் ஸ்துதிகளுக்குப் பெயர். அவை கள் நிதிகளின் எண்ணிக்கைபோல (நவநிதிகள் என்றபடி) ஒன்பது வகையென்று சொல்லப்படும். பராசரபட்டரானவர்

இந்த ஒன்பது வ்யூஹங்களோடு கூடி நவவ்யூஹாத்மகராக இருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

'நவ வ்யூஹாத்மகோ தேவ: பராநந்த: பராத்மக: |'
'காலவ்யூஹ: குலவ்யூஹோ நாமவ்யூஹஸ்ததைவ ச |
ஞானவ்யூஹஸ்ததா சித்தவ்யூஹ: ஸ்யாத் ததநந்தரம் |
நாதவ்யூஹஸ்ததா பிந்துவ்யூஹ: ஸ்யாத் ததநந்தரம் |
கல்பவ்யூஹஸ்ததா ஜீவவ்யூஹ: ஸ்யாத் இதி தே நவ ||'

இவைகளின் விபரங்கள் 'தவாக்ஞா சக்ரஸ்தம்' என்ற 'லௌந்தர்யலஹரீ' (36)ச்லோகத்தின் வ்யாக்யானத்தில் லக்ஷ்மீதரரால் சொல்லப்பட்டிருக்கின்றன.

3. சூன்ய: என்றால் கயிற்றுக்குப் பெயர். அது இவ்விடத்தில் படகை இழுத்துக்கட்டும் கயிற்றுக்குச் சொல்லப்பட்டது. அது அப்பாவால் கெட்டியாகப் பிடித்து இழுக்கப்படுவதால் அப்பாவுக்கு சூன்யநி: என்ற பெயர். முன்னொரு கால் ப்ரளயத்தின்போது பகவானுடைய ஆக்ஞையினால் மனுவானவர் ஸகல ஜீவராசிகளையும், எல்லா ரிஷிகளையும் ஒரு படகில் ஏற்றி, அந்தப் படகின் கயிற்றை பகவானுடைய அவதாரமாகிற மத்ஸ்யத்தின் கொம்பில் கட்டியதாகவும் அப்போது அந்தக்கயிறானது அப்பாவால் அதிஷ்டானமடைந்ததாகவும் இருந்ததென்றும் மத்ஸ்ய புராணம், காளீ புராணம் முதலியவைகளில் சொல்லப்பட்டிருக்கிறது.

'நவயோஜநதீர்காம் துயாமத்ரய ஸுவிஸ்தருதாம் |
குருஷ்வ சர்மணு தார்ணம் ப்ருஹதீம் இரிகாவடிம் ||
ஜகத்தாத்ரீ மஹாமாயா லோகமாதா ஜகந்மயீ |
தருடயிஷ்யதி தாம் ரஜ்ஜும் ந த்ருட்யதி யதா ததா ||'

गोमाता

கோமாதா (605)

(பசுக்களுக்குத் தாயாரான) காமதேனு ரூபமாக இருப்பவள்.

கௌ: என்ற பதத்திற்கு வாக்கு, கிரணம், ஸ்வர்கம் முதலான அனேக அர்த்தங்களுண்டு. இவைகளுக்கெல்லாம் மாதா என்றும் சொல்லலாம்.

'கௌ: ஸ்வர்க்கே வ்ருஷபே ரச்மௌ வஜ்ரே சந்த்ரமஸி ஸ்ம்ருத:|
அஞ்ஜனீ நேத்ர திக்பாண பூ வாக் வாரிஷு கௌர்மதா ||'
(விச்வ:)
'பாணே வாசி பசௌ பூமௌ திசி ரச்மௌ ஜலேऽகினி |
ஸ்வர்கே மாதரி வஜ்ரேऽக்ஷௌ மூகே ஸத்யே ச
கோத்வணி: ||' (அநேகார்த்தத்வனிமஞ்ஜரீ)

गुहजन्मभूः

குஹஜந்மபூ:

ஸ்கந்தருக்கு உத்பத்தி ஸ்தானமாக இருப்பவள்.

குஹ என்ற தாதுவுக்கு சூழ்கிறது என்று பொருளாகையால் அவித்தையினால் சூழப்பட்டிருக்கும் ஜீவர்களுக்கு குஹர்கள் என்று பெயர். இந்த ஜீவன்கள் பரப்ரஹ்மஸ்வரூபிணியான அம்பாளிடமிருந்து (நெருப்பிலிருந்து பொறிகள் கிளம்புவதுபோல்) உத்பத்தியாவது இங்கு சொல்லப்பட்டது.

'யதாக்நே: க்ஷுத்ரா விஸ்புலிங்கா வ்யுச்சரந்தி |' (ச்ருதி)
'ஏ: ஸர்வே யதா லோஹபிண்டாத் தப்தாத் ஸ்புலிங்கிகா: |
ஸகாசாத் ஆத்மந: தத்வத் ஆத்மா: ப்ரபவந்தி ஹி ||'
(யாக்ஞ்யவல்க்ய ஸ்ம்ருதி)

देवेशी (607)

தேவேசீ

(ப்ரம்ஹா, விஷ்ணு முதலான) தேவர்களுக்கெல்லாம் ஈச்வரியாக இருப்பவள்.

दण्डनीतिस्था (608)

தண்டநீதிஸ்த்தா

அர்த்த சாஸ்த்ரத்தில் நிலையுடையவள்.

தண்டநீதி யென்பது குற்றங்களையும், அதற்காகவும் எற்பட்டிருக்கும் தண்டனைகளையும் சொல்லும் சாஸ்த்ரம். ஆகவே அர்த்த சாஸ்த்ரம் முதலானவைகளை ஒழுங்காக நடத்தி கெட்ட வழிகளில் செல்கிறவர்களை தண்டித்து நல்லவழியில் திருப்பி அடக்கியாளுவதால் அம்பாளுக்கு தண்டநிதியென்ற பெயரென்பதாக தேவீபுராணத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

நயாநயகதாந் லோகாந் அவிகல்பே நியோஜயத் |
தண்டநாத் தமநாத் வாபி தண்டநீதிரிதி ஸ்ம்ருதா ||'

दहराकाशरूपिणी (609)

தஹராகாச ரூபிணீ

(ஹ்ருதய குஹரத்திலிருக்கும்) அல்பமான (ஸூக்ஷ்மமான) ஆகாச ஸ்வரூபமாக இருப்பவள்.

இந்த ஸூக்ஷ்மமான ஆகாசமே பரப்ரஹ்மமென்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

'தஹர உத்தரேப்ய: |' (ப்ரம்ஹஸூத்ரம்)
அத யதமஸ்மிந் ப்ரம்ஹபுரே தஹரம் புண்டரீகம் வேச்ம
தஹரோ(அ)ஸ்மிந்அந்தராகாச: தஸ்மிந் யதந்தஸ்ததந்
[வேஷ்டவ்யம் |' (ச்ருதி)

நான உடாஸஹாமார்க்கம் தஹரவித்யா என்று சொல்லப்படும்.

प्रतिपन्मुख्यराकान्ततिथिमण्डलपूजिता

ப்ரதிபந் முக்ய ராகாந்த திதிமண்டல பூஜிதா (610)

ப்ரதமை முதலாக பூர்ணிமாந்தமான திதி ஸமூஹத்தினால் பூஜிக்கப்பட்டவள்.

1. ப்ரதிபத்என்பது ப்ரதமை. ராகாஎன்பது பூர்ணிமா. இவைகளை முறையே ஆதியும் அந்தமுமாக உடைய திதிமண்டலம் பதினைந்து திதிகளுடையது. ஒவ்வோர் திதியிலும் அம்பாளை இன்னவிதமாகப் பூஜிக்கவேண்டுமென்பதாகத் தந்த்ரசாஸ்த்ரங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. இம்மாதிரியான பூஜாவிசேஷங்களின் ப்ரகாரம் அர்ச்சிக்கப்பட்டவள் என்று இங்கு சொல்லப்பட்டிருக்கிறது.

2. சந்த்ரமண்டலத்தில் ஸாதா என்ற கலையைத்தவிர்த்து
'தர்சா த்ருஷ்டா தர்சதா விச்வரூபா ஸுதர்சநா ஆப்யாய
ஆப்யாயமாநா ஆப்யாயா ஸும்ருதா [மாநா
இரா ஆபூர்யமாண ஆபூர்யமாண பூரயந்தீ பூர்ண
பௌர்ணமாஸீ'

என்ற ச்ருதிவாக்யத்தின்படி பதினைந்து கலைகளிருக்கிறார்கள். அவர்களை ப்ரதிபத் முதல் பூர்ணிமா முடிய இருக்கும் திதிகள். இவர்கள் இந்த திதி ஸ்வரூபமாக இருப்பதில் காமேச்வரி முதல் சித்ரா முடிய இருக்கும் நித்யைகளோடு அபின்னமாக இருக்கிறார்கள். அவர்களின் பெயர் காமேச்வரீ, பகமாலிநீ, நித்யக்லிந்நா, பேருண்டா, வஹ்நிவாஸிநீ, வஜ்ரேச்வரீ, சிவதூதீ, த்வரிதா, குலஸுந்தரீ, நித்யா, நீலபதாகா, விஜயா, ஸர்வமங்களா, ஜ்வாலாமாலிநீ, சித்ரா என்பது.

3. ப்ரதிபத் என்பது காமேச்வரியையும், ராகா என்பது சித்ராவையும் குறிக்கும். ஆகவே 'ப்ரதிபந் முக்ய ராகாந்த திதி மண்டலம்' என்பது மேலே சொல்லிய நித்யா தேவதைகளின் ஸமூஹத்தைக் குறிக்கும். இவர்கள் ஸ்ரீசக்ரத்தின் மத்யவான பிந்துவைச் சுற்றியிருக்கும் த்ரிகோணத்திலிருக்கிறார்கள்.

டத்தியிலிருக்கும் பிந்துவான ஸர்வாநந்தமய சக்ரமானது ஸாதா என்ற ஷோடசகலாரூபிணியான ஸ்ரீலலிதாம்பாவுடைய புரஸுந்தரியின் ஸ்தானம். இப்படி அம்பாளைச்சுற்றி நித்யா தேவதைகளின் மண்டலமானது த்ரிகோணத்தின் ரேகாத்ரயமாகச் சூழ்ந்திருப்பதால் அம்பாளுக்கு இந்தப்பெயர் ஏற்பட்டது.

'தர்சாத்யா: பூர்ணிமாந்தாச்ச கலா: பஞ்சதசைவ து |
ஷோடசீ து கலா ரூபா ஸச்சிதாநந்த ரூபிணீ ||'

அந்த த்ரிகோணத்தின் மூன்று ரேகைகளில் ஒவ்வொரு ரேகை ஒன்றுக்கு ஐந்து நித்யைகளாக, பதினைந்து நித்யைகளுமிருக்கிறார்கள்.

'விபாவ்ய ச மஹத் த்ர்யஸ்ரம் அக்ரதஷ்சாத்தக்ரமாத் |
ரேகாஸு விலிகேத் பச்சாத் பஞ்ச பஞ்ச க்ரமேண து ||'
(ஞானர்ணவம்)

திதி நித்யா தேவதைகளைப்பற்றியும் அவர்களுடைய உபாஸநா பேதங்களைப்பற்றியும் தந்த்ர ராஜர், ஞானார்ணவர், ஸௌந்தர்யலஹரீ பாஷ்யம் முதலியவைகளைப் பார்க்கவும்.

4. இந்த திதிகளுக்கு அக்னி முதலானவர்கள் தேவதைகளென்பதும் அது ஸம்பந்தமான மற்ற விஷயங்களும் வராஹ புராணத்தில் சொல்லப்பட்டிருக்கின்றன.

कलात्मिका

கலாத்மிகா (611)

கலா ஸ்வரூபமாக இருப்பவள்.

1. கலா என்ற பதத்தினால் அக்னியினுடைய பத்துக் கலைகள், ஸூர்யனுடைய பன்னிரண்டு கலைகள், சந்த்ரனுடைய பதினாறு கலைகள், இவைகள் தவிர ப்ரஸித்தமான அறுபத்து நாலு கலைகள் இவையெல்லாம் குறிக்கப்படும்.

2. ஜாக்ரத், ஸ்வப்ந, ஸுஷுப்தி, துரிய அவஸ்தைகள் வெவ்வேறு கலைகளோடிருப்பதாகச் சொல்லப்படும்.

'உத்பத்திர் ஜாகரோ போதோ வ்யாவ்ருத்திர் மனஸ: ஸதா |
கலா சதுஷ்டயம் ஜாக்ரதவஸ்த்தாயாம் வ்யவஸ்திதம் ||
ஜாக்ரத் ஸர்வகுணா: ப்ரோக்தா கேவலம் சக்தி ரூபிணீ |
அபிலாஷோ ப்ரமச்சிந்தா விஷயேஷு புந: ஸ்ம்ருதி: ||
கலா சதுஷ்டயம் தேவீ ஸ்வப்நாவஸ்த்தா விதீயதே |
சிவரூபா: சக்திரூபாஸ்தா: கலாஸ் த்ரிபுராத்மிகா: ||
மரணம் விஸ்ம்ருதிர் மூர்ச்சா நித்ரா ச தமஸா வ்ருதா |

ஸுஷுப்தேஷு கலா ஜ்ஞேயாஸ்த்ரா: ஸர்வா ஸ்ரீகலாத்மிகா:||
வைராக்யம் ச முமுக்ஷுத்வம் ஸமாதிர்விமலம் மந:|
ஸதஸத் வஸ்து நிர்தார: துர்யாவஸ்த்தா: கலா இமா:||'

எழுந்திருப்பது, விழித்திருப்பது, நினைவோடிருப்பது, மனதின் வ்ருத்திகளோடிருப்பது இவை நாலும் ஜாக்ரதையின் கலைகளென்றும், ஆசை, ப்ரமம், சிந்தை, விஷயங்களைப்பற்றி ஞாபகம் இவை நாலும் ஸ்வப்நத்தின் கலைகளென்றும், மரணம் ஞாபக மறதி, மூர்ச்சை, தாமஸமான நித்ரை இவை நாலும் ஸுஷுப்தியின் கலைகளென்றும், வைராக்யம் முமுக்ஷுத்வம், மனதின் விமலமான ஸமாதிநிலை, ஸத், அஸத் என்பதாக வஸ்துக்களைப்பற்றிய நிர்தாரணம் இவை நாலும் துரீயத்தின் கலைகளென்றும் சொல்லியிருக்கிறது. இவைகளில் ஜாக்ரத்தின் கலைகள் ஸகல குணங்களோடும் கூடியவையாய் கேவலம் சக்தி ஸ்வரூபமானவையென்றும், ஸ்வப்னத்தின் கலைகள் சிவ - சக்தி ரூபமானவையென்றும், ஸுஷுப்தியின் கலைகள் சிவமாக வென்றும் சொல்லப்பட்டன.

3. துர்தீயாக ப்ரகரணத்தில் காமகலைகள் பதிணறு என்று சொல்லப்பட்டிருக்கின்றன. அந்த துர்தீ ப்ரகரணத்தில் ஸ்ரீவித்யையின் பதிணறு கலைகள் சொல்லப்பட்டிருக்கின்றன. இவைகளைத் தவிர பிந்து, அர்தசந்த்ர, நிராதிநீ முதலியவைகளுக்கு வெவ்வேறு கலைகளிருப்பதாக ஸ்வச்சந்தபைரவர் முதலான க்ரந்தங்களில் சொல்லப்பட்டிருக்கிறது.

4. இவ்விதமான கலைகள்யாவும் அம்பாளுடைய ஸ்வரூபம் தான் என்பதாக இந்த நாமத்தில் சொல்லப்பட்டது.

कलानाथा

கலாநாதா (612)

(மேலே சொல்லிய) கலைகளுக்கெல்லாம் ஸ்வாமினீயாக இருப்பவள்.

சந்த்ரனுக்குக் கலாநாதனென்று பெயர். சந்த்ரமண்டலமே ஸ்ரீசக்ர ஸ்வரூபமாக இருப்பதால் அம்பாளைச் சந்த்ர ரூபமாக இருப்பவள் என்று இந்த நாமத்தில் சொல்லப்பட்டதாகவும் சொல்லலாம்.

काव्यालापविनोदिनी

காவ்யாலாப வினோதினீ (613)

காவ்யங்களுடைய ஆலாபத்தினால் விசேஷமாக ஸந்தோஷமடைகிறவள்.

காவ்யக்களென்பது வால்மீகி முதலான மஹாகவிகளால் செய்யப்பட்ட ப்ரபந்த விசேஷங்கள். பதினெட்டு லக்ஷணங்களோடு கூடியவைகளென்று சொல்லப்படும். இவைகளைக் கேட்பதில் அம்பாளுக்கு மிகவும் ப்ரியமென்று இங்கு சொல்லப்பட்டது. அதாவது அம்பாளை க்ரமப்படி உபாஸனை செய்து அனுக்ரஹம் பெற்றவன் சிறந்த காவ்யங்களைச் செய்யும் சக்தியுடையவனாக ஆகிறான் என்று தாத்பர்யம். இதையே தான் ஆசார்யாளும்,

'ஸவித்ரீபிர் வாசாம் சசிமணிசிலா பங்கருசிபி:
வசிந்யாத்யாபிஸ்த்வாம் ஸஹ ஜநநி ஸஞ்சிந்தயதி ய: |
ஸ கர்தா காவ்யாநாம் பவதி மஹதாம் பங்கருசிபி:
வசோபிர் வாக்தேவீ வதந கமலாமோத மதுரை: ॥ (17)

என்று 'ஸௌந்தர்யலஹரி'யில் சொல்லியிருக்கிறார்கள்.

सचामररमावाणीसव्यदक्षिणसेविता

ஸசாமர ரமாவாண ஸவ்யதக்ஷிணை

சாமரங்களையுடைய லக்ஷ்மீ, ஸரஸ்வதி இவர்களால் (முறையே) இடது, வலது பக்கங்களில் ஸேவிக்கப்பட்டவள்.

1. லக்ஷ்மீதேவி அம்பாளுக்கு இடதுபக்கத்திலும், ஸரஸ்வதிதேவி வலது பக்கத்திலும் இருந்துகொண்டு அம்பாளுக்கு வெண்சாமரம் வீசிக்கொண்டிருக்கிறார்கள் என்று சொல்லப்பட்டது. அதாவது அம்பாளுடைய பக்தனுக்கு அவர்களிருவரும் கிங்கரிகள் மாதிரி காத்துக்கொண்டு தங்களுடைய பூர்ண அனுக்ரஹத்தைக் கொடுக்கத் தயாராக இருக்கிறார்கள் என்று தாத்பர்யம். இதை ஆசார்யாள்,

'ஸரஸ்வத்யா லக்ஷ்ம்யா விதிஹரிஸபத்நோ விஹரதே |' (99)

என்று 'ஸௌந்தர்யலஹரி'யில் சொல்லியிருக்கிறார்கள்.

2. ஸாதாரணமாக ஸவ்யமென்றால் வலது என்று அர்த்தம். ஆனால் இங்கு சொல்லப்பட்டபடி சில இடங்களில் இடது என்ற அர்த்தத்திலும் ப்ரயோகம் செய்யப்படும். இவ்விதமான ப்ரயோகமானது

'தநுர்மந்யே ஸவ்யேதர கரக்ருஹீதம் ரதிபதே: |' (47)

என்று 'ஸௌந்தர்யலஹரி'யிலும் காணப்படுகிறது.

आदिशक्तिः

ஆதிசக்தி: (615)

ஆதிசக்தியாக இருப்பவள்.

ஸகல ஜகத்தையும் உத்பாதகம் பண்ணுவதில் ஆதியாய்-காரணபூதையாய் - சக்திரூபிணியான அம்பாளிருப்பதால் ஆதிசக்தியென்ற பெயர் ஏற்பட்டது.

अमेया

அமேயா (616)

அளவிடமுடியாத ஸ்வரூபத்தையுடையவள்.

அல்லது அம்பாளுடைய ஸ்வரூபத்தை, அளக்கும்படியான இதர வஸ்து யாதொன்றுமில்லாதபடியால் இத்தப் பெயர் ஏற்பட்டதாகவும் சொல்லலாம்.

'ஸ்வர்க பாதாள லோகாந்த ப்ரம்ஹாண்டாவரணேஷ்டகே |
மேயம் ஸர்வம் உமாரூபம் மாதர தேவோ மஹேச்வர: ||'
(லிங்க புராணம்)

आत्मा

ஆத்மா (617)

ஆத்மரூபிணியாக இருப்பவள்.

1. இதனுடைய நாமமாகிய 'பரமா' என்பதிலில் பரமாத்மா சொல்லப்படுவதால் இந்த நாமமானது ஜீவாத்மாவைக் குறிக்கும். இந்த இரண்டுவிதமான ஆத்மாவும் அம்பாள் தான் என்பதாக இந்த நாமங்களால் சொல்லப்பட்டது.

2. ஸகல ஜீவாத்மாக்களும் பரமாத்மாவினுடைய அம்சங்களென்று சொல்லப்படும்.

'விஷ்ணுலிங்கா யதா தாவத் அக்ஷர ச பரஸ்தா ஸ்ம்ருதா:|
ஜீவா: ஸர்வே ததா சர்வா: பரமாத்மா ச ஸ ஸ்ம்ருத: ||'
(லிங்க புராணம்)

'ஆத்மா தஸ்யாஷ்டமீ மூர்த்தி: சிவஸ்ய பரமா தநு: |
வ்யாபிகேதர மூர்த்தீநாம் விச்வம் தஸ்மாத் சிவாத்மகம் ||'
(சிவபுராணம்)

3. இந்த அர்த்தத்தில் இந்த நாமத்தை 'ஆத்மநே நம:' என்றும், இதனுடைய நாமத்தை 'பரமாத்மநே நம:' என்றும் ப்ரயோகத்தில் சொல்லவேண்டும்.

4. ஆத்ம சப்தமானது பரப்ரம்ஹத்தையே (பரமாத்மாவையே) குறிக்கும்.

'யச்சாப்நோதி யத் ஆதத்தே யச்சாத்தி விஷயாநிஹ |
யச்சாஸ்ய ஸததோ பாவ: தஸ்மாத் ஆத்மேதி கீர்த்யதே ||'

5. இன்னும், ஆத்மசப்தமானது சரீரத்தையும் குறிக்கும்.

'கௌரீரூபாணி ஸர்வாணி சரீராணி சரீரிணம் |
சரிரிணஸ் ததா ஸர்வே சங்கராப்சா வ்யவஸ்த்திதா: ||'

அதாவது சரீரங்களெல்லாம் அம்பாளுடைய ரூபங்களென்றும், சரீரிகளெல்லாம் சிவபரம்சங்களென்றும் சொல்லப்பட்டது.

6. இவைகளைத்தவிர ஆத்ம சப்தத்திற்கு மனஸ், ஸ்வபாவம், த்ருதி, புத்தி முதலிய அர்த்தங்களுமுண்டு.

ஆத்மா தேஹமநோ ப்ரம்ஹ ஸ்வபாவ த்ருதிபுத்திஷு |'
(விச்வ:)

புத்திரூபமாக அம்பாள் ஸகல ஜீவராசிகளிலும் இருப்பதாக,

'யா தேவீ ஸர்வபூதேஷு புத்தி ரூபேண ஸம்ஸ்த்திதா |'

என்று தேவீ மாஹாத்ம்யத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

परमा

பரமா (618)

ஸர்வோத்க்ருஷ்டமாக இருக்கிறவள்.

1. அல்லது பரம் என்ற (அபரிச்சின்னமான) ப்ரம்ஹத்தை பரிச்சின்னமுடையதாக (அளவிடக்கூடியதாக) செய்வதால் அம்பாளுக்கு பரமா என்று பெயர்.

2. அல்லது பர: என்ற சொல்லுடைய, ம-லயத்தீயாக ரேப்டவள் பரமா.

3. பரப்ரம்ஹத்திற்கு மூன்று ரூபங்கள் உண்டென்று சொல்லியிருப்பதால் அவைகளில் ஸர்வோத்க்ருஷ்டமான பரமென்ற ரூபம் இங்கு சொல்லப்பட்டதாகவும் சொல்லலாம்.

'பரஸ்ய ப்ரஹ்மணோ ரூபம் புருஷ: ப்ரதமம் த்விஜ: |
வ்யாக்தாவ்யக்தே ததைவாந்யே ரூபே காலஸ் ததா பரம் ||
ப்ரதாந புருஷ வ்யக்த காலாநாம் பரமம் ஹி யத் |
பச்யந்தி ஸூரய: சுத்தம் ததி விஷ்ணோ: பரம் பதம் ||
ப்ரதாந புருஷவ்யக்த காலாஸ்து ப்ரவி பாகச: |
ரூபாணி ஸ்திதி ஸர்காந்த வ்யக்தி ஸத்பாவ ஹேதவ: ||'
(விஷ்ணு புராணம்)

पावनाकृतिः

பாவநாக்ருதிः (619)

பரிசுத்தமாகச்செய்யும் ஆக்ருதி, சரித்ரம், ஞானம், இவைகளை யுடையவள்.

1. அம்பாளுடைய பாதஸ்பரிசனையே ஸகலவிதமான பாபங்களையும் போக்கிப் பாவனமாகச் செய்யக்கூடியதென்று சொல்லப்பட்டிருக்கிறது.

'க்ருதஸ்யாகில பாபஸ்ய ஞாநதோZக்ஞாநதோZபி வா |
ப்ராயச்சித்தம் பரம் ப்ரோக்தம் பராசக்தே: பதஸ்ம்ருதி: 11'

2. பூதாத்மாவை தபஸ், வித்யை இவையிரண்டும் பரிசுத்தம் செய்கின்றனவென்றார், புத்தியை ஞானம் பரிசுத்தமாக்குகிறதென்றார், கேவலத்ரக்ஞனை சுத்தஞானமானதுவிசேஷமாக சுத்தி செய்கிறதென்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

'பூதாத்மநஸ் தபோ வித்யே புத்தேர் ஞாநம் விசோதநம் |
கேவலத்ரக்ஞஸ்யேச்வரஞாநாத் விசுத்தி: பரமா மதா 11'
(யாக்ஞ்யவல்க்ய ஸ்ம்ருதி)

3. இதேமாதிரியாக அம்பாளை 'புண்யகீர்த்தி:' 'புண்யச்ரவணகீர்த்தநா' என்பதாக 542, 544 நாமங்களில் சொல்லப்பட்டிருக்கிறது.

अनेककोटिब्रह्माण्डजननी

அநேககோடி ப்ரம்ஹாண்ட ஜநநீ (620)

அனேககோடிக்கணக்கான ப்ரம்ஹாண்டங்களை உண்டுபண்ணினவள்.

அல்லது, அனேககோடி ப்ரம்ஹாண்டங்களையுடையவர்களின் ஜனனீ என்று பிரித்தும் அர்த்தம் சொல்லலாம். இவர்கள் விராட் முதலியவர்கள். கோடான விதமான விகாரங்களுக்குள்பட்டதும் பஞ்சீக்ருதமான ஸ்தூலபூதங்களின் காரியமான ப்ரபஞ்சத்திற்கு ப்ரம்ஹாண்டமென்று பெயர். இதற்கு அபிமானியாக இருப்பவர் விராட். இவ்விதமான ப்ரம்ஹாண்டத்திலிருக்கும் ஜீவன்களுடைய லிங்க சரீரங்களின் ஸமஷ்டிக்கு அபிமானியாக இருப்பவர் ஸ்வராட். இவையிரண்டுக்கும் காரணமாக அவ்யாக்ருதத்திற்கு அபிமானியாக இருப்பவர் ஸம்ராட்.

'ப்ராதாந்யேந விராடாத்மா ப்ரம்ஹாண்டமபிமந்யதே |
ஸ்வராட் ஸ்வரூபமுபயம் ஸம்ராடித்யப்ரவீத் ச்ருதி: 11'

அவ்விதமான விராட் முதலியவர்களின் ஜனனீயென்ற அம்பாள் இங்கு சொல்லப்பட்டாள்.

दिव्यविग्रहा
திவ்யவிக்ரஹா (621)

ரமணீயமான தேஹத்தையுடையவள்.

1. அல்லது, திவ்ய-ஆகாசத்தில் உடம்பு, விக்ரஹா-யுத்தத்தையுடையவள். அம்பாள் சுர்டமேறு யுத்தம் செய்தபோது இருவரும் பூமியைவிட்டுக் கிளம்பி ஆகாசத்தில் யுத்தம் செய்தது தேவீ மாஹாத்ம்யத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

'தத்ராபி ஸா நிராதரா யுயுதே தேந சண்டிகா |'

2. விக்ரஹமென்றால் தேஹம், மாகங்களின் விஸ்தாரம் முதலிய அர்த்தங்களுமுண்டு.

'விக்ரஹ: ஸமரே தேஹே விஸ்தார: ப்ரவிபாகயோ: |'
(மேதிநீகோசம்)

क्लींकारी
க்லீம்காரீ (622)

காமபீஜத்தைச் செய்கிறவள் (உண்டாக்குகிறவள்).

1. க்லீம் என்பது காமராஜபீஜம்.

2. க்லீம்காரீ என்றால் காமபீஜஸ்வரூபமாயிருப்பவள் என்றும் சொல்லலாம்.

3. க்லீம்காரர் என்றால் சிவகாரம், காமேச்வரம். அவருடைய ஸ்த்ரீ (பத்னீ) க்லீம்காரீ.

केवला
கேவலா (623)

கேவல ஸ்வரூபமாயிருப்பவள்.

1. அதாவது எவ்விதமான தர்மத்தோடுமில்லாமல், ஏகாகினியாயிருப்பதால் இந்தப்பெயர்.

2. அல்லது, 'தத் விமுக்தஸ்து கேவலீ' என்ற சாஸ்த்ரத்தில் ப்ரஸித்தமாகச் சொல்லப்பட்ட ஞானவிசேஷரூபமாக இருப்பவள் என்றும் சொல்லலாம்.

3. கேவலமென்றால் முழுவதிலுமிருக்கும் தன்மை. நிர்ணயமான அர்த்தம். அவ்விதமாக இருப்பவள், அல்லது அனைவரோடு அபின்னமாக இருப்பவள் கேவலா.

'கேவலம் ஞாநபேதே ஸ்யாத் கேவலச்சைக க்ருத்ஸ்நயோ: |
நிர்ணீதே கேவலம் ப்ரோக்தம் கேவல: குஹநே க்வசித் ||'
(விச்வகோசம்)

4. அல்லது மேலே சொல்லிய 'க்லீம்' என்ற காமராஜ பீஜத்தில் கேவலமாக இருப்பது, அதாவது ககார லகாரங்களான வ்யஞ்ஜனங்களில்லாதிருப்பது. இதனல் பாக்கியிருக்கும் கேவல தூர்யஸ்வரூபமான காமகலாரூபிணியென்று இந்த நாமத்தின் அர்த்தம்.

இதைப்பற்றிச்சொல்லும்

'யதீம் ச்ருணேத்யலகம் ச்ருணேதி, நஹி ப்ரவேத ஸுக்ருதஸ்ய பந்தாம் |'

என்ற ச்ருதி வாக்யத்தின் தாத்பர்யமாவது-கேவலம் காமகலையை உபாஸிப்பவன் ஸுக்ருதங்களான லக்ஷ்மீகடாக்ஷங்களின் பலனை உத்தம லோகங்களையடையமாட்டான். ஆனல் நிர்குண ஞானத்தினல் கிடைக்கும் லோகத்தையடைவான் என்பது. அதாவது காமராஜ பீஜத்தினல் த்ரிவர்கமான தர்மார்த்த காமங்களையடைவானென்றும், காமகலாக்ஷரத்தினல் மட்டும் தான் மோக்ஷத்தையடைவானென்றும் தாத்பர்யம்.

गुह्या

குஹ்யா (624)

அதி ரஹஸ்யமான அர்த்தத்தையுடையவள்.

1. மூன்றாமாக்ஷரத்தின் கடைசியில் சொல்லிய அர்த்தமே இந்நாமத்தில் இதனுடைத்து வருவதில் சொல்லப்படுகிறது.

2. குஹ்யா என்றல் குஹையில் ப்ரவேசித்திருப்பவள். அதாவது அதி ரஹஸ்யமான அர்த்தத்தோடு கூடியவள்,

3. குஹ்யா (குஹாயாம் பவா) என்பதினல் ஜீவாத்மா, பரமாத்மா இவர்களுடைய ஐக்யமானது சொல்லப்படும்.

'ருதம் பிபந்தௌ ஸுக்ருதஸ்ய லோகே குஹாம்
ப்ரவிஷ்டௌ பரமே பார்த்யே |'
'யோ வேத நிஹிதம் குஹாயாம் பரமே வ்யோமந் |' (ச்ருதி)

அவ்விதமான பயனைக் கொடுப்பதான உபாஸநாமார்கமானது குஹ்யமென்றும், அவ்வித ஐக்யரூபிணியான அம்பாள் குஹ்யா என்றும் சொல்லப்படும்.

कैवल्यपददायिनी

கைவல்யபததாயிநீ (625)

கைவல்யமான பதவியைக் கொடுப்பவள்.

1. கைவல்யமென்றால் தீக்ஷிதரவர்கள் 'ரத்னத்ரய பரீக்ஷை'யில் சொல்லியிருக்கிறபடி தர்மிக்ராஹ்யவிசேஷமான பரப்ரஹ்மஸ்வரூபம். அதைக்கொடுப்பவனென்றால் அவ்விதமான கைவல்ய ஸ்வரூபத்தைக் கொடுப்பவள் என்று அர்த்தம்.

2. மோக்ஷமென்பது ஐந்து வகைப்படுகிறது—ஸாலோக்யம், ஸாரூப்யம், ஸாமீப்யம், ஸாயுஜ்யம், கைவல்யம். இவைகளில் முதல் நாலும் பதங்களென்று சொல்லப்படுகிறது. இதை அனுஸரித்து இந்த நாமத்தை 'கைவல்யத்தையும் பதங்களையும் கொடுக்கக்கூடியவள்' என்று பின் விவரித்திருக்கிறபடி அர்த்தம் பண்ணலாம்.

3. விக்ரஹங்கள் முதலானவைகள் மூலமாக உபாஸனை செய்வதனால் ஸாலோக்யம் கிடைக்கும். அவைகள் மூலமாக (வெளிப்படையாக) ஆராதனை செய்யாமல், ஆயிரம் தன் னைத் தவிர்த்து வேறுனதான தேவதையைத் தனக்குள்ளாக உபாஸனை செய்வதினால் ஸாரூப்யம் கிடைக்கும். இதுவே ஸார்ஷ்டிதா என்றும் சொல்லப்படுகிறது. இதில் தனக்கில்லாத தான ஐச்வர்யாதி விசேஷங்களால் தனிப்பட்டதாக தேவதை யானது பாவனை செய்யப்படுவதால் ஸாமீப்யம் ஏற்படுகிறது. இதற்குமேல், உபாஸிக்கப்படும் தேவதையின் ரூபத்தைத் தன்னுடன் ஏகீபாவமாக இருப்பதாக பாவனை செய்து அதைப்போலவே ஸகுணமான தாதாத்ம்யம் ஏற்படுவ தானது ஸாயுஜ்யம். ஊர்த்வ ரேதஸ்ஸுகளாக இருப்பவர்கள் தங்கள் தங்கள் ஆச்ரமங்களிலிருந்துகொண்டு அந்த ஆச்ரமத் திற்கு யுக்தமான தர்மானுஷ்டானத்தைச் செய்துவருவதால் ஸாமீப்யம் ஏற்படும். இவைகளில் முதல் மூன்றை,

'ஏதாஸாமேவ தேவதானாம் ஸாயுஜ்யம்
ஸார்ஷ்டிதாம் ஸமானலோகதாமாப்நோதி |'

என்ற தைத்திரீய ச்ருதி வாக்யத்திலும், நான்காவதை,

'தப: ச்ரத்தே யே ஹ்யுபவஸந்த்யரண்யே
சாந்தா வித்வாம்ஸோ பைக்ஷசர்யாம் சரந்த: |
ஸூர்ய த்வாரேண தே விரஜா: ப்ரயாந்தி
யத்ராம்ருத: ஸ புருஷோ ஹ்யவ்யயாத்மா ||'

என்ற மண்ட [illegible]

4. இவை நான்கும் கர்மாவின் பலன்களாகவும், அநித்யமாகவும், ஒன்றைப் பொருத்ததாகவுமிருக்கிறபடியால் அவைகள் பதங்கள்(ஸ்தானங்கள்)என்று சொல்லப்படும்.

5. ஐந்தாவதான கைவல்யமோ ஞானத்தின் பலனாகவும் நிரதிசயமான ஆனந்தத்தை லக்ஷணமாக உடையதாய், நித்யமாகவும் இருப்பது. இதைப்பற்றி,

'ய ஏவம் வித்வாந் உதகயமே ப்ரமீயதே....தஸ்மாத்
ப்ரம்ஹணே மஹிமாநமாப்நோதி |'

என்ற தைத்திரிய ச்ருதி வாக்யத்தில் சொல்லியிருக்கிறது. இந்த மோக்ஷத்தில் சித்சக்தியானது ச்ருத்திகளுடைய ஸம்பந்தமில்லாமல் தனக்குள்ளேயே ப்ரதிஷ்டையடைந்திருப்பதாக

'கைவல்யம் ஸ்வரூப ப்ரதிஷ்டா சிதிசக்தே: |'

என்ற கைவல்யோபநிஷத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

6. இவையெல்லாவற்றையும் சேர்த்து சுருக்கமாக,

ஆத்மாத்ம்யா ப்ரதீகம மாத்ருபுத்யாப்யஹம்தியா |
கர்மணுபி பஜந் மர்த்ய: கைவல்யபதமச்நுதே ||'

என்ற சாக்ர ஹஸ்யத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

7. இவ்விதமான கைவல்ய பதவியே லக்ஷ்மிதந்ரத்தில் சொல்லப்பட்டதென்றார். அதையே பகவான் தன் பக்தர்களுக்குக் கொடுக்கிறோமென்பதை நீலகண்ட தீக்ஷிதரவர்கள் 'ரிஷோத்கர்ஷ ரத்நாஜி'யில் மிகுந்த அழகாக வர்ணித்திருக்கிறார்கள். பாக்கி தன்னால் கொடுக்கக்கூடிய லக்ஷ்மீ முதலிய வைதங்கள் எல்லாவற்றையும் விஷ்ணுபக்தர் முதலானவர்களுக்குக் கொடுத்து விட்டு தன்னுடைய (ஆகாசமூர்த்தமான) வஸ்த்ரத்தையும் தேவர்களுக்குக் கொடுத்துவிட்டு தான் கேவலமாக இருக்கும் நிலையில் கருட்மன் தன்னையண்டி வந்தபோது வேறு ஒன்றும் கொடுப்பதற்கில்லாதிருப்பதை யோசித்து தயாநிதியான பரமாத்மாவின் கைவல்யத்தையே அவனுக்குக் கொடுத்தாராம்.
(கேவலர் என்றால் மிகவும் இழிவானதையும் குறிக்கும்)

'தந்தா ஸ்ரீரிஷதே ஸிஸாதயிஷவே வாஸோக்ருஹீதம் ஸுரை:
ஸ்வதாய வ்யயிதா கரச்ச கிமிதோ தாதாஸ்ம்யஹம் கேவல:
இத்யாலோச்ய தயாநிதி: கலயதே கைவல்யமேவார்த்திநாம்
ஸ ஸ்வாமீ மம தைவம் ததிதரே நாம்நாபி நாம்நாயதே ||.

மும்மூர்த்திகளுக்கு முக்தியிருப்பவள்.

1. அதாவது, ப்ரம்மா, விஷ்ணு, ருத்ரன் இவர்கள் மூவருக்குமுன்னதாகவும் ஆதிகாரணமாகவும் மிருக்கிறுளென்று சொல்லப்பட்டது. இதிலிருந்து ஸ்ருஷ்டி, ஸ்திதி, லயங்களுக்குப் பூர்வமாகவும் அதீதமாகவுமிருப்பது சொல்லப்பட்டது.

'மூர்த்தி த்ரயஸ்யாபி புராதநத்வாத்
தத் அம்பிகாயாஸ் த்ரிபுரேதி நாம |'

2. மும்மூன்று இருப்பவைகளையெல்லாம் த்ரிபுரங்களென்று சொல்லப்படும். இவைகளிலெல்லாம் அம்பாள் இருப்பதாகவும், இவற்றிற்கெல்லாம் அதீதமாகவுமிருப்பதாகவும், இந்நாமத்தில் சொல்லப்பட்டது. ஸ்ருஷ்டி, ஸ்திதி, லயம், ஸத்வம், ரஜஸ், தமஸ், வாக்பவாதி பீஜத்ரயம், அக்னி ஸோமாதி (ஸ்ரீவித்யா) கண்டத்ரயம், ஸ்ரீசக்ரத்தின் கோணத்ரயம், ரேகாத்ரயம், பூபுரத்ரயம், பூலோகாதி ஜகத் த்ரயம், ஜாலந்தராதி பீடத்ரயம், இடா முதலான நாடித்ரயம், ஸ புத்தி சித்தம் முதலியன. இதுவேதான் 'தத்வ த்ரயேஷ பிதா' என்ற கௌடபாத ஸூத்ரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

'நாடீத்ரயம் து த்ரிபுரா ஸுஷும்ண பிங்களா இடா |
மநோ புத்திஸ் ததா சித்தம் புரத்ரயமுதாஹ்ருதம் |
தத்ர தத்ர வஸத்யேஷா தஸ்மாத்து த்ரிபுரா மதா ||'
(த்ரிபுரார்ணவம்)

காளிகா புராணத்தில் இதுவே,

த்ரிகோணம் மண்டலம் சாஸ்யா பூபுரம் ச த்ரிரேககம் ||
மந்த்ரோ(அ)பி த்ரயகூட: ப்ரோக்த: ததா ரூபத்ரயம் புந: |
த்ரிவிதா குண்டலீ சக்தி: த்ரிதேவாநாம் ச ஸ்ருஷ்டயே |
ஸர்வம் த்ரயம் த்ரயம் யஸ்மாத் தஸ்மாத்து த்ரிபுரா மதா |'

என்று சொல்லப்பட்டிருக்கிறது.

த்ரிமூர்த்தி ஸர்காத் ச புராபவத்வாத்
த்ரயீ மயத்வாத் ச புரைவ தேவ்யா: |
லயே த்ரிலோக்யா அபி பூரகத்வாத்
ப்ராயோ அம்பிகாயாஸ் த்ரிபுரேதி நாம ||

'தேவநாம் த்ரிதயம் த்ரயீ ஹ்ருத புஜாம் சக்தி த்ரயம் த்ரிஸ்வரா
த்ரைலோக்யம் த்ரிபுரீ த்ரிபுஷ்கரமத த்ரிப்ரம்ஹ வர்ணஸ்த்ரய:|
யத் கிஞ்சித் ஜகதி த்ரிதா நியமிதம் வஸ்து த்ரிவர்காத்மகம்
தத் ஸர்வம் த்ரிபுரேதி நாம பகவத்யம்வேதி தே தத்வத: |.
(லகுஸ்துதி)

त्रिजगद्वन्द्या

त्रिजगत्वन्द्या (627)

மூன்று லோகங்களாலும் வணங்கத்தக்கவள்.

त्रिमूर्तिः

த்ரிமூர்த்தி: (628)

ப்ரம்ஹாதிமூர்த்தி த்ரய ரூபமாயிருப்பவள்.

1. அல்லது மூன்று வயதுடைய கன்யா ரூபமாக டபவள் என்றும் சொல்லலாம். 'த்ரிமூர்த்திஸ்து த்ரிவர்ஷா வ்யாத்'

2. முறையே ஸத்வ, ரஜஸ், ட (மூன்று டாகுணமுடைய) சுக்ல, ரக்த, மிச்ர வர்ணத்ரயங்களையுடைய மூர்த்தி த்ரயரூபமாக இருப்பவள் த்ரிமூர்த்தி: (இவற்றின் மந்த்ரோத்தாரம், ஸ்வரூபம் முதலியவைகள் தந்த்ரங்களில் சொல்லப்பட்டிருக்கின்றன.)

3. டாமா , விஷ்ணு, ட்ரன்; டாமா, ஜ்யேஷ்டா ரௌத்ரீ; இச்சா, ஞானம், க்ரியா, இம்மாதிரியான மூர்த்தி த்ரயங்களாக அம்பாளிருப்பது இங்கு சொல்லப்பட்டது.

4. ஒரு ஸமயம் ப்ரம்ஹா, விஷ்ணு, சிவன் இவர்கள் மூவருடைய த்ருஷ்டியின் சேர்க்கையிலிருந்து திவ்ய ரூபமான ஒரு குமாரீ உண்டானதும், அவர்கள் ஸ்தோத்ரம் செய்ததின் பிறகு அந்தக் குமாரியானவள் அவர்கள் வேண்டுகோளுக்கிணங்கி தன்னுடைய சுக்ல, ரக்த, க்ருஷ்ண வர்ணங்களின் சேர்க்கையோடு கூடியிருந்த சரீரத்தை மூன்றாகப் பிரித்து முறையே ப்ராஹ்மீ, வைஷ்ணவீ, ரௌத்ரீ என்ற சக்திகளாக மாற்றி ச்வேத, ரக்த, நீல பர்வதங்களில் தபஸ் செய்யப் போனதாக வராஹ புராணத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

'அஸ்யத் ச காரணம் தேவி யத் வக்ஷ்யாமி ச்ருணுஷ்வ தத் |
ஸித ரக்த க்ருஷ்ண வர்ணை: த்ரிவர்ணஸி வராநநே ||
மூர்த்தித்ரயம் த்ரிபிர்வர்ணை: குரு தேவீ ஸ்வவிக்ரஹே |
ஏவ முக்தா ததா தேவை: அகோராத் த்ரிவிதாம் தநும் |
ஸிதாம் ரக்தாம் ததா க்ருஷ்ணம் த்ரிமூர்த்தித்வம் ஜகாம ஹ' ||
'ஏஷா தரிமூர்த்திருத்ருதிஷ்டா நயஸித்தாந்த காமிநீ |
ஏஷா ச்வேதா பரா சக்தி: ஸாத்விகீ ப்ரம்ஹ ஸம்ஸ்தித: ||
ஏஷைவ ரக்தா ரஜஸி வைஷ்ணவீ பரிகீர்த்திதா |
ஏஷைவ க்ருஷ்ண தமஸி ரௌத்ரீ தேவி ப்ரகீர்த்திதா ||
பரமாத்மா யதா தேவ ஏக ஏவ த்ரிதா ஸ்த்தித: |
ப்ரயோஜந வசாத் சக்தி: ஏகைவ த்ரிவிதாZபவத் ||'

5. இம்மாதிரி குணங்களுக்குத் தக்கபடி இருக்கும் அம்பாளுடைய ரூப வர்ணங்கள் 'சாம்பவீ வித்யா ச்யாமா' என்ற கௌடபாத ஸ்தோத்திரம்,

'சாம்பவீ சுக்லரூபா ச ஸ்ரீவித்யா ரக்த ரூபிகா ॥
ச்யாமளா ச்யாமரூபா ஸ்யாத் இத்யேதா குணசக்தய: ॥'

என்று தேவீ பாகவதத்தில் சொல்லப்பட்டிருக்கின்றன.

त्रिदशेश्वरी

த்ரிதசேச்வரீ (629)

தேவர்களுக்கெல்லாம் ஈச்வரீயாக இருப்பவள்.

1. த்ரி தசைகள் என்றால் ஜாக்ரத், ஸ்வப்ன, ஸுஷுப்தி என்ற அவஸ்தைகளைக் குறிக்கும்.

2. த்ரி தசர்களென்றால் (மூன்றோடு கூடிய பத்து), அதாவது) பதின்மூன்று விச்வே தேவர்களையும் குறிக்கும்.

3. அல்லது, மூன்று தடவை பத்து, அதாவது முப்பத்து த்ரிதசர், இதனுடன் (மூன்றைச் சேர்த்து) முப்பத்தி மூன்று (தேவ) கணங்கள் குறிக்கப்பட்டனவாகவும் சொல்லலாம்.

त्र्यम्बकेश्वरी

த்ர்யம்பகேச்வரீ (630)

மூன்று அக்ஷரங்களின் சேர்க்கையான ரூபமாயிருப்பவள்.

'வாகீச்வரீ ஞானசக்தி: வாக்பவே மோக்ஷரூபிணீ ।
காமராஜே க்ரியாசக்தி: காமேசீ காமரூபிணீ
சக்திபீஜே பராசக்தி: இச்சைவ சிவரூபிணீ ।
ஏவம் தேவீ த்ர்யக்ஷரீ து மஹாத்ரிபுரஸுந்தரீ ॥'

(வாமகேச்வராதந்த்ரம்)

1. 'த்ர்யக்ஷரீ சுத்தவித்யா ரூபா ச' என்ற கௌடபாத ஸ்தோத்ரத்தின்படி த்ர்யக்ஷரீ என்பது சுத்தவித்யை, ரூபரீ (பாலை) என்று அர்த்தம்.

2. 'தத் ஏதத் த்ர்யக்ஷரம் ஹ்ருதயம்,' 'தத ஏதத் த்ர்யக்ஷரம் ஸத்யம்' என்ற ச்ருதிவாக்கியங்களின்படி த்ர்யக்ஷரமென்றால் ஹ்ருதயம், ஸத்யம் என்று அர்த்தம்.

3. சில பாராயணங்களில் சொல்லப்படும் அ, ஊ என்ற சப்தங்களால் பலவிதமான (மூடிவாக உடைய) யுகாக்ஷர, மாஸாக்ஷர, நித்யாக்ஷரங்களின் சேர்க்கைக்கு த்ர்யக்ஷரீ என்று பெயர். இவ்விதமான அக்ஷரச் சேர்க்கையில் எற்படும் அம்பாளுடைய நாமங்களைப் பற்றி,

'ஆ ச பல்லவிதை: பரஸ்பரயுதை: த்வி த்ரி க்ரமாத்யகூரை:
காத்யை: கூர்ந்தகதை: ஸ்வராதிபிரத கூர்ந்தைச்ச தை:
ஸஸ்வரை: |
காமாகி த்ரிபுரே பவந்தி கலு யாந்யத்யந்த குஹ்யாநி தே
தேப்யோ பைரவபத்நி விம்சதி ஸஹஸ்ரேப்ய: பரேப்யோகம:||'

என்று 'லகுஸ்துதி'யில் சொல்லப்பட்டிருக்கிறது.

दिव्यगन्धाढ्या

திவ்ய கந்தாட்யா (631)

திவ்யமான பரிமளத்தைப் பூர்ணமாக உடையவள்.

1. திவ்யமென்றால் தேவலோகத்திலிருப்பது என்று அர்த்தம். ஆகவே தேவலோகத்திய ஹரிசந்தனாதி விருக்ஷங்களின் பரிமளம் சொல்லப்பட்டது.

2. அம்பாள் கந்தத்திலும் (வாஸனையிலும்) ஆட்சியாக இருப்பது ச்ருதியிலும் சொல்லப்பட்டிருக்கிறது.

'கந்த த்வாராம் துராதர்ஷாம்'

3. அம்பாள் ஸாமான்யமான ராஜாக்கள் மாதிரி பூமியிலிருக்கும் பதார்த்தங்களால் சூழப்பட்டவளல்லவென்றும் (தேவலோகத்திலிருக்கும்படியான) தேவாதிகளான சேதன வஸ்துக்கள், அசேதனவஸ்துக்கள் இவற்றால் முற்றிலும் சூழப்பட்டிருப்பவளாக இந்த நாமத்தில் சொல்லப்பட்டதாகவும் சொல்லலாம்.

4. 'ஸம்யமாத் தின்யம்' என்ற யோக ஸூத்ரத்தின்படி ச்ரவணேந்த்ரியமான காது, ஆகாசம் இவைகளுடைய ஸம்பந்தத்தில் ஸம்யமத்தோடு (ஏகாக்ரமான முயற்சியோடு) இருக்கும் யோகிக்கு திவ்யமான ச்ரோத்ரம் (அதாவது கேட்கும் ஸாமர்த்தியம்) ஏற்படும். அந்த மாதிரியே பாக்கி இந்த்ரியங்களுக்கும். இவ்விதம் திவ்யமான கந்தம் யைகே அறியும்படியான சக்தியானது அம்பாளுடைய திலால் யோகிகளுக்கு ஏற்படுவதால் இந்தப் பெயர் வந்தது என்றும் சொல்லலாம்.

सिन्दूरतिलकाञ्चिता

ஸிந்தூர திலகாஞ்சிதா (632)

ஸிந்தூரத்திலிடப்பட்ட திலகத்தால் அலங்கரிக்கப்பட்டவள்.

1. ரத்த (சிவப்பு நிறமுள்ள) சூர்ணம். (குங்குமம்), கோரோசனை இவைகளுக்கு லிங்தூரமென்று பெயர்.

2. திலகமென்றால் முன் நெற்றி மயிருக்கும் பெயர். இந்த அர்த்தத்தில் லிங்தூரம், திலகம் இவைகளோடு கூடிய மேனி லாவண்யமான ரூபத்தையுடையவளென்று சொல்லலாம்.

'திலகம் சித்ரகே ப்ராஹுர் லலாமே திலகாளகே |. (விச்வ:)

3. லிங்தூரதிலகமென்றால் யாவனைக்கும், (ஜீவித்திருக்கும் பதியோடு கூடிய) ஸ்திரீக்கும் பெயர். இவர்களால் சூழப்பட்டிருப்பவள் என்றபடி இந்நாமத்திற்கு அர்த்தம் சொல்லலாம்.

'ஸிந்தூரதிலகே நாகே ஸிந்தூரதிலகா ஸ்த்ரியாம் |' (விச்வ:)
'ஸிந்தூரதிலகோ ஹஸ்தீ ஸிந்தூரதிலகாங்கநா |'
(ஹேமசந்த்ர:)

4. மேலே லிங்தூரதிலகமென்ற பதத்திற்கு சொல்லிய அர்த்தத்தை யொட்டி, யாவனையிட்டோன்ற குடையுள்ளவள். (கஜகாமினீ, ஸாமஜகாமினீ) என்ற அர்த்தம் சொல்லலாம். சுவிராவுடன், ஸ்திரீகளால் பூஜிக்கப்பட்டவள் என்றும் அர்த்தம் சொல்லலாம். நந்தகோகுலத்தில் கோபஸ்த்ரீகள் தங்களுக்கு க்ருஷ்ணனிடத்திலிருக்கும்படியான பிரியத்தின் காரணமாக அவருடைய விரஹத்தை ஸஹிக்க முடியாதவர்களாய், அதின் தீவ்ரமான தாபத்தினால் போக்கடிக்கப்பட்ட அசடங்களையுடையவர்களாய்,

('துஸ்ஸஹ ப்ரேஷ்ட விரஹ தீவ்ரதாப துதாகுபா:')

அம்பாளைச் சரணமடைந்து பூஜித்து,

'காத்யாயனி மஹாமாயே மஹாயோகின்யதீச்வரி |
நந்தகோப ஸுதம் தேவி பதிம் மே குரு தே நம: ॥'

என்று வேண்டிக்கொண்டு அம்பாளுடைய அநுக்ரஹத்தினால் தங்களுடைய மநோரதத்தின் பூர்த்தியை அடைந்த விருத்தாந்தமானது (விஷ்ணு) பாகவதத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. அதிலேயே, ருக்மிணியானவள், தான் சொல்லியனுப்பியும் க்ருஷ்ணன் வருவதற்கு தாமதமாகவே,

'அர்பகாயா ஹரி மே தாதா காதுகூலோ மதேஹ்வர: |
தேவீ ச விமுகா கௌரீ ருத்ராணீ கிரிஜா ஸதீ ॥'

என்று வருத்தப்பட்டுவிட்டு,

கன்யா சாந்த: புராத் ப்ராகாத் படைர் குப்தா அம்பிகாலயம் |
பத்ப்யாம் விநிர்யயௌ த்ரஷ்டும் பவாநீபாதபல்லவம் ॥'

என்றபடி ச சரணாகதிக்கு ஆரா
தன் பா யை அடைந்த வருத்தாந்தமும் சொல்
லப்பட்டிருக்கிறது.

उमा

உமா என்ற பெயரையுடையவள்.

1. அப்பாலுடைய)க்கு பாபாரனது விச்சுதமான ரூபினையை உடையது.

2. உகாரமானது சிவ வாசகமான அக்ஷரம். மா என்றால் லக்ஷ்மிக்குப் பெயர். ஆகவே சிவனுடைய ஸௌ பாக்ய ரூபிணியாக இருப்பவள் என்று சொல்லலாம்.

3. அல்லது, பரமசிவனை (மாதி) பரிச்சின்னமாகச் செய்பவள், அதாவது அகண்டமான பரப்ரம்மத்தை அவிலடங்கும்படியாகச் செய்பவள் என்றும் சொல்லலாம்.

4. உமா என்ற பதத்திற்கு,

'உமா அதஸீ, மாமவதீ, மாரீத்ரா, கீர்த்தி, காந்திஷு |'

என்றபடி அதஸீகுஸுமம் (காயாம்பூ) மஞ்சள், கீர்த்தி, காந்தி என்ற அர்த்தங்களுண்டு. அவ்விதங்களான ரூபங் களிளாடிருப்பதால் உமா என்று பெயர்.

'யா தேவீ ஸர்வபூதேஷு காந்திரூபேண ஸம்ஸ்திதா |'

5. உ என்பது கூப்பிடுதற்போதும், மா என்பது தடுக் கும் போதும் உபயோகிக்கப்படும் பதங்கள். அப்பாள் ஹிம வானுக்குப் புத்திரியாகப் பிறந்த பிறகு, ஓர் ஸமயம் கடுமை யான தபஸ்ஸைச் செய்ய ஆரம்பித்தபோது தன் தாயாரான மேனையால் கூப்பிடப்பட்டு அவ்விதமான தபஸ் செய்வதி லிருந்து தடுக்கப்பட்ட வருத்தாந்தமானது காளிகாபுராணம், ப்ரம்மபுராணம், பத்மபுராணம் முதலியவைகளில் சொல் லப்பட்டிருக்கிறது. கூப்பிட்டுத் தடுக்கப்பட்டவள் ஆனதால் 'உமா' என்று பெயர்.

'யதோ ஹிமவந்தா தபஸே வநம் கந்தும் து மேநயா |
உமேதி தேந லோகேஷு நாம ப்ராப ததா ஸதீ ||'

'அபர்ண து ஹிமாவாரா தாம் மாதா பரத்யபாஷத |
உமா இதி நிஷேதாந்தீ உமேத்யேவ ததாபவத் ||'

மா தபோக்த்வா தயா மாத்ரா தேவீ துச்சரசாரிணீ |
தேவைவ நாம்நா லோகேஷு விக்யாதா ஸுரபூஜிதா ||

'தத்தோ(அ)ந்தரிக்ஷாத் திவ்யா வாக் அப்ரவீத் புவநத்ரயே |
உமேதி துத்வயா மேநே யதுக்தம் தயயாம் ப்ரதி ||
உமேதி நாம தேநாஸ்யா புவநேஷு பவிஷ்யதி ||'

6. உ என்றால் உத்தமமானை, மா என்றால் சித்தவ்ருத்தி, அவ்விதமான ரூபத்தையுடையவள் உமா.

'மாதாபூதிம் பவபாசநாசிநீம் ஸதாசிவஸ்யாப்யதிசோபநாட்யாம் |
உமாபிதாம் உத்தமசித்தவ்ருத்திம் நமாமி நாகாவித
லோகவைபவாம் ||' (ஸௌதஸம்ஹிதை)

7. ப்ரணவத்திலுடைய அக்ஷரங்களான அகார, உகார, மகாரங்கள் விஷ்ணு, சிவ, ப்ரம்ஹாக்களைக் குறிக்கும். இந்த மூன்றும் சேர்ந்து உமா என்ற பதமாகிறபடியால் த்ரிமூர்த்யாத்மகமான ரூபத்தையுடையவள் அம்பாள் என்று இந்த நாமத்தினால் சொல்லப்பட்டதாகவும் சொல்லலாம். இவ்விதமாக, ப்ரணவத்திற்குச் சொல்லப்படும் எல்லாவிதமான அர்த்தங்களையும் இந்த நாமத்திற்குச் சொல்லலாம்.

8. இந்தக்காரணத்தினால் இந்த உமா என்ற பதமானது தேவீ ப்ரணவமென்பதாக சாஸ்த்ர ரஹஸ்யம் தெரிந்தவர்கள் சொல்லுவார்கள். (சிவ)ப்ரணவத்தில் அகார, உகார, மகாரங்களும், (தேவீ)ப்ரணவத்தில் உகார, மகார, அகாரங்களும் வரிசையாக இருக்கின்றன. இந்த ரஹஸ்யம்

'அகாரோகாரமகாரா மதியே ப்ரணவே ஸ்திதா: |
உகாரம் ச மகாரம் ச அகாரம் சக்ரமோரிதம் |
த்விதீயம் ப்ரணவம் வித்தி த்ரிமாத்ரம் ப்லுதமுத்தமம் ||

என்று பரமசிவன் தேவியைப் பார்த்துச் சொன்னதாக லிங்க புராணத்திலும்,

'ஓம்காரஸ்ய சக்தித்வாத் உமேதி பரிகீர்த்திதா ||'

என்று மஹாவாவிஷ்டத்திலும் சொல்லப்பட்டிருக்கிறது.

9. ஸகல ப்ராணிகளும் தூங்குவதும், விழித்திருக்குவதும் அவரவர்களுடைய ஹ்ருதயத்தில், அநாஹதநாதமென்று சொல்லப்படுவதும், அகார, உகார மகாரங்களான இம்மூன்று மாத்ரைகள் தனியாக இல்லாததும், ப்ரணவநாதத்தின் பாகமானதும், சப்தப்ரஹ்மாத்மகமானதும், எப்போதும் உச்சாரணம் பண்ணப்படுவதும், ஹ்ருதயகமலத்தில் தஹராகாச ரூபமாயிருப்பதுமான சிவனுடைய சிரஸிலிருக்கும் பிந்துரூபமான இந்துகலைக்கு உமா என்று பெயர் என்பதாகச் சொல்லப்படும்.

'ஸுப்தாநாமத புத்தீநாம் அமாத்ரோச்சாரணேத் ஹ்ருதி |
நித்யம் த்ரைலோக்ய பூதாநாம் உமேதிந்துகலோச்யதே ||'
(மஹாவாஸிஷ்டம்)

இதையே வாயவீய ஸம்ஹிதையில் ஓங்காரமே ப்ரம்ஹ மென்பதாகச் சொல்லி அதின் அவயவங்களையும் சொல்லி விட்டு,

'அர்த்தமாத்ராத்மகோ நாத: ச்ருயதே லிங்கமூர்த்தநீ |'

என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஹம்ஸோபநிஷத்தில் ஜீவ னை ஹம்ஸத்தின் வ்ருத்திகள் ஹ்ருதய காலத்திலிருப்பதைச் சொல்லிவிட்டு, அதின் ஜாக்ரதாதி அவஸ்தா பஞ்சகத்தைப் பற்றிச் சொல்லும்போது, ஜீவனை தஹராகாச ரூபியான லிங்கத்தைஅடையும்போது ஸுஷுப்தி ஏற்படுகிறதென்றும், ஹ்ருதயகாலத்தின் ஆச்ரயத்தைவி மேலே போகும்போது துரீயாவஸ்த்தை ஏற்படுகிறதென்றும், லிங்கத்தின் கிரோ பாகத்திலிருப்பதான (மேலே சொல்லப்பட்டபடி உமா ரூப மான) நாதத்தில் லயமடைந்தால் துர்யாதீத அவஸ்தை ஏற் படுகிறதென்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

'கேஸரே ஜாக்ரதவஸ்தா, கர்ணிகாயம் ஸ்வப்நம்,
லிங்கே ஸுஷுப்தி: பத்மத்யாகே துரீயம்,
பரா ஹம்ஸோ நாதே லீநோ பவதி ததா துர்யாதீதம் |'

10. 'இச்சா சக்திருமாரூடா' என்ற நாமத்தாலழைத்த தின்படி, பரமேச்வர பாகத்தையடைந்த யோகிகளுடைய இச் சாசக்திக்கு உமா என்ற பெயர்.

'பரமேச்வராதாம் உக்தாம் க்ரமாநஸ்ய சாச்வதீம் |
தஸ்யைவ யோகிநோ யேச்சா சக்திஸ்தாம் நிகதந்த்யுமாம் ||'

11. 'உமாதேவீ விநாயகே' என்றபடி விநாயகபீடத்திலும் 'உமாஸஹிதாய நம:' என்றபடி சிவாநுக்ரஹத்திலும் அதிஷ்டானமாயிருக்கும் அம்பிகா ரூபத்திற்கு உமா என்ற பெயர்.

12. 'உமா ஷட்மார்கஸித்தே மதா' என்றபடி ஆறுபாதுள்ள கன்யகா ரூபமாயிருப்பவள் உமா.

शैलेन्द्रतनया

சைலேந்த்ரதநயா (634)

பர்வதராஜனை ஹிமவானுடைய பெண்.

பர்பாணுக்கு பார்வதி மைநாக முதலான பெயர்கள் இந்தக்காரணத்தால் ஏற்பட்டன.

'ஜாதா சைலேந்த்ரகேஹே ஸா சைலராஜஸுதா தத:'
(தேவீ புராணம்)

गौरी

கௌரீ (635)

கொஞ்சம் மஞ்சள் நிறமாக இருப்பவள்.

1. தங்கப்போன்ற நிறத்திற்கு கௌரவர்ணமென்று பெயர். அப்பாருடைய தேஹமானது கௌரவர்ணமாயிருப்பதினால் கௌரீ என்ற பெயர் என்பதாக 'கௌரீ கௌராங்க தேஹத்வாத்' என்ற மஹா வாஸிஷ்டத்திலிர் சொல்லப்பட்டிருக்கிறது.

2. கௌரமென்றால் வெண்மையான நிறத்திற்கும் பெயர். அப்பாள் தக்ஷனுடைய புத்ரியாகப் பிறந்து பிறகு அந்த சரீரத்தை வெறுத்து அதை யோகாக்னியினால் நாசம் செய்து ஹிமவானுக்குப் புத்ரியாக அவதரித்தபோது அப்பாருடைய சரீரமானது சங்கு, மல்லிகைப்பூ, சந்த்ரன் இவைபோல் வெளுப்பாக இருப்பதினால் கௌரீ என்ற பெயர் வந்ததாக தேவீ புராணத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

'யோகாக்நிநா து யா தக்தா புரர்ஜாதா ஹிமாலயாத் |
சங்க குந்தேந்து வர்ண சேத்யதோ கௌரீதி ஸா ஸ்ம்ருதா ||.

3. இது தவிர,

'நதி பேதே ஷி கௌரீ ஸ்யாத் தசாப்தாயாம் ச யோஷிதி |'

என்றபடி ஒரு நதிக்கும், பத்துவயதுள்ள கன்னிகைக்கும் கௌரீ என்ற பெயர். 'வருணஸ்ய ப்ரியா கௌரீ' என்றபடி வருணனுடைய பத்னிக்கும் கௌரீ என்ற பெயர். இந்த ரூபங்களாக அம்பாளிருப்பதால் இந்தப் பெயர் வந்ததாகவும் சொல்லலாம்.

4. 'கான்யகுப்ஜே ததா கௌரீ' என்ற பத்மபுராண வசனத்தின்படி கான்யகுப்ஜ பீடத்தில் அதிஷ்டானமாயிருக்கும் அம்பாளுக்குக் கௌரீ என்ற பெயர்.

गन्धर्वसेविता

கந்தர்வ ஸேவிதா (636)

(விச்வாவஸு முதலான) கந்தர்வர்களால் ஸேவிக்கப்பட்டவள்.

1. கந்தர்வனென்றால் குதிரைக்கும் பெயர். இந்த அர்த்தத்தில் அம்பாளுடைய சதுரங்க ஸைன்யத்தில் குதிரைப் படைகளுக்கு ஸ்வாமினியான அச்வாரூடா தேவியின் ரூபமாக இருப்பவள் என்றும் சொல்லலாம்.

2, திவ்யமான (தேவலோகத்திய) கானத்திற்கு கந்தர்வனென்ற பெயர். அதனால் ஸேவிக்கப்பட்டவள் என்றும் சொல்லலாம்.

विश्वगर्भा

விச்வகர்ப்பா (637)

ஸகல ப்ரபஞ்சத்தையும் தன் கர்ப்பத்தில் உடையவள்.

स्वर्णगर्भा

ஸ்வர்ண கர்ப்பா

ஸ்வர்ணத்திலிருந்து உண்டானவள்.

1. அல்லது, ஸ்வர்ணத்தை கர்ப்பத்தில் உடையவள். ஸ்வர்ணத்தையே கர்ப்பமாக உடையவள் என்றும் சொல்லலாம். இதனால் ஹிரண்ய கர்ப்பருக்குப் பெயர் உண்டானதாக வாயுபுராணத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

'ஹிரண்யமஸ்யா கர்ப்பேZபூத் ஹிரண்யமஸ்யாபி கர்ப்பஜ: |
யஸ்மாத் ஹிரண்யகர்ப்ப: ஸ புராணேZஸ்மிந்நிருச்யதே ||'

2. அர்ணங்களென்றால் மாத்ருகைகளுக்குப் பெயர். அந்த அர்த்தத்தில், அர்ணங்களுக்கு கர்ப்ப(சோடந)த்தைக்கொடுப்பவள், அதாவது மாத்ருகைகளால் ப்ரதிபாதிக்கப்பட்டவள் என்றும் சொல்லலாம்.

3. இதே அர்த்தத்தில், ஸ்வர்ண :- சோடனமான அக்ஷரங்களுடன் கூடிய மந்த்ரங்கள், யாருடைய கர்ப்பத்திலிருக்கின்றனவோ அவள் ஸ்வர்ண கர்ப்பா என்றும் சொல்லலாம்.

अवरदा

அவரதா (639)

ஸ்ரேஷ்டர்களால் கண்டிக்கிறவள்.

1. அவரர்களென்றால் அநார்யர்கள், அஸுரர்கள்.

2. அல்லது, காந்தியோடு கூடிய பற்களையுடையவள் என்றும் சொல்லலாம்.

वागधीश्वरी

வாகதீச்வரீ (640)

வாக்குகளுக்கெல்லாம் ஸ்வாமினீயாக இருப்பவள்.

ஸகலவிதமான வாக்குகளும் அம்பாளுடையதே என்பதாக,

'த்வதீயாபிர் வாக்பிஸ்தவ ஜநநி வாசாம் ஸ்துதிரியம்: |'[100]

என்று ஆசார்யாள் 'ஸௌந்தர்யலஹரீ'யில் சொல்லியிருக்கிறார்கள்.

ध्यानगम्या

த்யாநகம்யா (641)

த்யானத்தினால் அறியக்கூடியவள்.

த்யானமென்பது சித்தத்தின் வ்ருத்திகளை நிரோதம் செய்து பாவனை செய்வது. இதனால் அம்பாளை அறியலாமென்று ச்ருதியிலும் சொல்லப்பட்டிருக்கிறது.

'தே த்யாநயோகாநுகதா அபச்யந்
தேவாத்ம சக்திம் ஸ்வகுணைர் நிகூடாம்'

अपरिच्छेद्या

அபரிச்சேத்யா

அளவிட முடியாதவள்.

அதாவது தேசம், காலம் முதலிய அளவுகளுக்கு அடங்காதவள். எப்போதும், எல்லிடமும் இருப்பவள் என்றபடி தாத்பர்யம். பரிபூர்ணஸ்வரூபத்தையுடையவள் என்றும் சொல்லலாம்.

ज्ञानदा

ஞாநதா (643)

ஞானத்தைக் கொடுப்பவள்.

1. அதாவது, கைவல்யத்தைக் கொடுப்பதினால் விரும்பப்படுவதான ஞானத்தைக்கொடுப்பவள் என்று அர்த்தம். அம்பாளுடைய அநுக்ரஹத்தினால்தான் இவ்விதமான ஞானை மேற்படுகிறதென்று சொல்லப்பட்டிருக்கிறது.

ில்,

'தஸ்மிந் ஆகாசே ஸ்த்ரியமாஜகாம பஹுசோபமாநாம்
உமாம் ஹைமவதீம், தாம் ஹோவாச ப்ரமேதத் யக்ஷமிதி,
ப்ரம்ஹேதி ஹோவாச'

என்பது முதலான இடத்திலும், ஸ்காந்தத்தில்

'சத்ருஜி பரமா வித்யா சாங்கரீ பவநாசிநீ |
ப்ரஸாதாதேவ ஜந்தூநாம் சக்தேரேவ ஹி ஜாயதே ||'

என்றும், ஸௌதஸம்ஹிதையில்

'வித்யாரூபா யா சிவா வேதவேத்யா
ஸத்யாநந்தாநந்த ஸம்வித்ஸ்வரூபா |
தஸ்யா வாச: ஸர்வலோகைக மாது:
பக்த்யைவ ஸ்யாத் அம்பிகாய: ப்ரஸாதாத் ||'

என்றும் இது சொல்லப்பட்டிருக்கிறது. அவித்யையிலிருந்து சூழ்ப்படுவதற்கும், ஞானத்திலிருந்து மோசகமடைவதற்கும் அம்பாள்தான் காரணம் என்று சொல்லப்படும்.

2. அல்லது, பேத பாவத்தைத் கொடுப்பதான (அ) ஞானத்தை நாசம் செய்பவள் என்றாவது சொல்லலாம். இவ்விதமான ஞானத்தை பந்தமென்பதாக 'ஞானம் பந்த:' என்ற சுலோகத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. பஹிர்முகமான விஷயங்களில் உன்முகமாகச் செய்து அதனால் ஏற்படும் அந்த: ஸுகத்தினால் அறியப்படுவதால், ஆத்மாவாக இல்லாத வஸ்துக்களில் ஆத்மபாவத்தைக் கொடுப்பதுமான ஞானத்தைப் போக்கடித்து உண்மையான ஞானத்தை அம்பாள் கொடுப்பதாக இந்த நாமத்தில் சொல்லப்பட்டது.

ज्ञानविग्रहा

ஞானவிக்ரஹா (644)

ஞானத்தையே தன் சரீரமாக உடையவள்.

1. அதாவது, ஸர்வ ஜகத்தும் ஞாநாத்மகமாக இருப்பதால் இவ்விதமான பெயர் ஏற்பட்டது.

'ஞாநமேவ பரம் ப்ரம்ஹ ஞாநம் பந்தாய சேஷ்யதே |
ஞாநாத்மகமிதம் விச்வம் ந ஞாநாத் வித்யதே பரம் |
வித்யாவித்யேதி மைத்ரேய ஞாநமேவோபதாரய ||'

[விஷ்ணு புராணம்]

2. விக்ரஹமென்றால் விஸ்தாரமென்றும் அர்த்தமுண்டு. அம்பாளுடைய அனுக்ரஹ விசேஷத்தினால் ஞான விஸ்தாரம் ஏற்படுவதால் இந்தப்பெயர் வந்ததாகவும் சொல்லலாம்.

सर्ववेदान्तसंवेद्या

ஸர்வவேதாந்த ஸம்வேத்யா (645)

எல்லா உபநிஷத்துக்களாலும் நன்றாய் அறியப்பட்டவள்.

வேதங்களுக்கு ஞானகாண்டமே முடிவானதாலும், அவைகள் வேதாந்தங்கள், வேத சிரோபாகங்கள் என்றும் சொல்லப்படும். அவைகளில் அம்பாளுடைய பரப்ரம்ம ஸ்வரூபமானது ப்ரதிபாதிக்கப்பட்டிருப்பதால் இந்தப்பெயர் ஏற்பட்டது.

'ஏஷா த்ரிசக்திருத்திஷ்டா நயஸித்தாந்த காமிநீ |
ஏஷா ஞானத்மிகா சக்தி: ஸர்வ வேதாந்தகாமிநீ 11'

[வராஹ புராணம்]

सत्यानन्दस्वरूपिणी

ஸத்யாநந்த ஸ்வரூபிணீ

ஸத்யம் ஆனந்தம் இவையே தன் ரூபமாக உடையவள்.

1. ஸத்என்பதானது எப்போதுமிருப்பது, அழிவில்லாதது. அவ்விதமாகவும், ஆனந்தமயமாகவும் அம்பாளுடைய ரூபமிருப்பதாக இங்கு சொல்லப்பட்டது.

2. சிலர் இந்த நாமத்தை ஸத்யா, ஆனந்த ஸ்வரூபிணீ என்று இருநாமங்களாகப்பிரித்து, அதற்குப்பதிலாக அம்பா (616) ஆத்மா (617) என்ற நாமங்களை அம்பாயாத்மா என்றும் சொல்லுவார்கள்.

3. ஸத்யா என்பதினால்,

'ஸதிதி ப்ரஹ்மாத்யந்தமயம் இத்யஸாவாதித்ய: |'

என்ற ச்ருதிவாக்கியத்தின்படி, ப்ரஹ்மன், அன்னம், ஆதித்யன் என்பவை குறிக்கப்படும்.

4. ஸத்துக்களிடத்தில் ப்ரியமாக இருப்பவள் என்றும் சொல்லலாம். அல்லது ஸத்யபாராயணர்களாயிருப்பவளென்றும் சொல்லலாம்.

लोपामुद्रार्चिता

லோபாமுத்ரார்ச்சி (617)

லோபாமுத்ரையினால் பூஜிக்கப்பட்டவள்.

1. லோபாமுத்ரையென்பவள் அகஸ்த்யருடைய பத்னீ, அம்பாளுடைய உபாஸகச்ரேஷ்டர்களில் ஒருவளென்றும், ஸ்ரீவித்யையின் பேதங்களில் ஒன்றான மஹாதிவித்யையின் பதின் ரிஷி (மந்த்ர த்ரஷ்டா) என்றும், நற்கனவே வந்த 'மநுவித்யா', 'சந்த்ரவித்யா' முதலிய நாமங்களில் சொல்லப்

பட்டிருக்கிறது. தன்னுடைய பக்தர்களில் முக்யமானவள் என்பதாக அப்பாளாலேயே சொல்லப்பட்டதாக ப்ரம்மாண்ட புராணத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

'பத்நி அஸ்ய லோபாமுத்ராக்யா மாம் உபாஸ்தே அதிபக்தித:'

2. இதனால் அப்பாளுக்கே லோபாமுத்ரா என்றுபெயர் என்பதாக த்ரிபுராவித்தாந்தத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

'அகஸ்த்யபத்நியா லோபாக்ய முத்ராயா: பரமேச்வரீ |
ப்ரஸங்கத்வாத் இயம் தேவீ லோபாமுத்ரேதி கீயதே ||'

இந்த மாதிரி அர்த்தத்தில் இந்த நாமத்தை லோபா முத்ரா, அர்ச்சிதா என்று இரண்டாகப் பிரித்துச்சொல்வதும் பொருத்தமாகத்தானிருக்கிறது.

3. அல்லது, லோபாமுத்ரையென்பதும் வித்யையின் மூலமாக உபாஸிக்கப்படுகிறவள் என்றும் சொல்லலாம்.

'வித்யா த்ருதீய கண்டேந குர்யாத் ஸர்வோபசாரகாந் |'
(காதிமதம்)

लीलाक्लृप्तब्रह्माण्डमण्डला

லீலா க்ல்ப்த ப்ரம்ஹாண்டமண்டலா (648)

ப்ரம்ஹாண்ட மண்டலத்தையெல்லாம் லீலையாகவே நிர்மாணம் செய்பவள்.

அதாவது, அவ்வளவு அநாயாஸமாகச் செய்பவள் என்று தாத்பர்யம். இதையே 'ஸ்வேச்சயா ஸ்வபித்தௌ விச்வமூர்தீலயதி— என்று சக்தி ஸூத்ரத்திலும்,

'விதிவிஷ்ணுமுகாமரோதய ஸ்திதி நாசேஷு சிவோப்யநீச்வர: |
ஜகதம்ப தவ த்வயம் க்ரம: கலு முத்தாலக புஷ்ப பஞ்ஜிகா ||'

என்று பாஸ்கர ராயருடைய தேவீஸ்தவத்திலும் சொல்லியிருக்கிறது.

अदृश्या

அத்ருச்யா (649)

பிறரால் பார்க்கமுடியாதவள்.

அதாவது (மாம்ஸ) சக்ஷுராதி முதலான இந்த்ரியங்களுக்கு அகோசரமாக இருப்பவள் என்று தாத்பர்யம்.

'ந த்ருச்யதே நாபி த்ருச்யதே பச்யே: |' (ச்ருதி)

இதையே தேவீபாகவதத்தில் மூன்றாவது ஸ்கந்தத்தில்

'நிர்குணஸ்ய முதே ரூபம் ந பவேத் த்ருச்யதே கோசரம் |'

योगदा

யோகதா (654)

யோகத்தைக் கொடுப்பவள்.

योग्या

யோக்யா (655)

யோகத்திற்குத் தகுந்தவள்.

1. யோகமென்பது ஏகத்வமான (ஐக்யமான) பாவனை. அந்த ரூபமாக அம்பாள் இருப்பதாலும், அதைத் தன் பக்தர்களுக்குக் கொடுப்பதாலும், அதிலல் அறியப்பட்ட ஸ்வரூபத்தோடிருப்பதாலும் இம்மூன்று நாமங்களும் ஏற்பட்டன.

மனதள்பட்ட ஞானேந்தரியங்களையெல்லாம் அடக்கி கேவந்தரக்ஞ, பரமாத்மாக்களுடைய ஏகத்வத்தைப் பாவனை செய்வதானது யோகமம் என்று சொல்லப்படும்.

'ஞானேந்த்ரியாணி ஸர்வாணி நிக்ருஷ்ய மநஸாஸஹ |
ஏகத்வபாவநா யோக: கேஷத்ரக்ஞ பரமாத்மநோ: ll'

யோக: சித்தவ்ருத்தி நிரோத: l (யோகஸூத்ரம்)

இதனல் தக்ஷத்திலுடைய சேர்க்கையே இல்லாமல் போய்விடுவதாக,

'தம் வித்யாத் துக்கஸம்யோக வியோகம் யோகஸம்ஞிதம் |'

என்று கீதையில் சொல்லப்பட்டிருக்கிறது.

2. யோகமென்பது மந்த்ர, லய, ஹட, ராஜயோகங்களென்று நான்கு பிரிவுகளையுடையது. ராஜயோகமானது திரும்பவும் ஸாங்க்ய, தாரக அமனஸ்கமென்று மூன்று பிரிவுகளையுடையது.

இவைகளின் விவரங்களை யோக சாஸ்த்ரங்களில் பார்த்துக்கொள்ளவும்.

3. ஜ்யோதி:சாஸ்த்ரத்தில் பங்களாமுதல் லங்கடா வரையில் பெயருள்ளவர்களும், இருபத்தாறு வருஷங்களுக்கு ஒருமுறை பரிவர்த்தனம் செய்கிறவர்களுமான எட்டு யோகினிகள் இருப்பதாகச் சொல்லப்படும். இவர்கள் ரூபமாகவும், மந்த்ர சாஸ்த்ரத்தில் சொல்லப்படும் டாகிநீ முதலான ஏழு யோகினிகள் ரூபமாகவும் அம்பாளிருப்பதால் யோகிநீ என்று பெயர்.

4. அல்லது, யோகமென்றால் விஷயங்களுடைய ஸம்பந்தத்தையுடைய போகத்திற்குப் பெயர். அந்த அர்த்தத்தில் போக்தா, போகப்ரதன், போக்யம் இம்மூன்றையும் இந்த மூன்று நாமங்கள் முறையே குறிக்கும். போகத்தைப்பற்றிய இம்மூன்றும் ப்ரம்ஹத்தின் ஸ்வரூபமென்பதாக,

'போக்தா போக்யம் ப்ரேரிதாரம் ச மத்வா
ஸர்வம் ப்ரோக்தம் த்ரிவிதம் ப்ரம்ஹமைதத் |'

என்ற ச்வேதாச்வதரோபநிஷத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

5. மாயை என்பது ப்ரதானமென்றும், ஸ்வதந்த்ரமென்றும் ஸாங்க்யர்கள் சொல்லுகையில் வேதாந்திகள் அதைச் சிவனுடைய சக்தியென்றே சொல்லுவார்கள். இதனல் சக்தியானது, பரதந்த்ரமென்று கற்படுவதாக ப்ரகாசாத்மஸ்ரீ சரணர் தனது விவரணமென்ற கிரந்தத்தில் சொல்லியிருக்கிறார்கள். இவ்விதசக்தியானது ஸத்வ, ரஜஸ், தமோகுணங்களையுடையது. இந்த குணங்கள் ஒன்றையொன்று அடக்கிமேலிட்டிருக்கும் ஸ்வபாவமுடையவள்.

'ரஜஸ் தமச்சாபிபூய ஸத்வம் பவதி பாரத |
ரஜ: ஸத்வம் தமச்சைவ தம: ஸத்வம் ரஜஸ்ததா ||' [கீதை]

இதனல் சக்தியானது மூன்றுவிதமாக முடிவடைகிறது. ரஜஸ், தமஸ் இவை அத்யந்தம் அடங்கி ஸத்வமே மேலிட்டிருப்பது ஒன்று. கொஞ்சமாக வெளிப்பட்ட ரஜஸ், தமோ குணங்களால் மலினமான ஸத்வத்தோடிருப்பது இரண்டாவது. அத்யந்தமாய் அடக்கப்பட்ட ஸத்வ, ரஜோகுணங்களுடையதாய், கேவலம் தமோமயமாயிருப்பது மூன்றாவது. இம்மூன்றில் முதலாவதுடன் சக்தியிருக்கும்போது, சித் சக்தியென்ற பெயர்களோடு, போக ப்ரதமாயிருப்பதால் யோகதா என்று சொல்லப்படும். இரண்டாவதுடனிருக்கும்போது ஜீவனென்ற பெயருடன் போக்த்ரீயாக இருப்பதால் யோகினீ என்று சொல்லப்படும். மூன்றாவதுடனிருக்கும்போது ஜடவஸ்துவென்ற பெயருடன் போக்யமான வஸ்துவாகவிருப்பதால் யோக்யா என்று சொல்லப்படும். இம்மூன்றையுமே இந்த மூன்று நாமங்களில் முறையே சொல்லியிருக்கிறது.

योगानन्दा

யோகாநந்தா

யோகத்திலேயே ஆனந்தத்தையுடையவள்.

1. சிவ, சக்திகளுடைய ஸாமரஸ்யம் (சேர்க்கை) யோகம் என்று சொல்லப்படும்.

2. அல்லது, நித்தையானது ஆனந்தத்தைக் கொடுப்பதால் யோக நித்தையென்று சொல்லப்படும். ஆகையினல் அதற்கே யோகாநந்தா என்றும் பெயர். அதுவே தேவியின் ரூபமென்று சொல்லப்படும்.

'யா தேவீ ஸர்வ பூதேஷு நித்தாரூபேண ஸம்ஸ்தித⁴ா |'

[தேவீமாஹாத்ம்யம்]

இதை ஹரிவம்சத்தில்,

'யாப்யாநந்தகரா யோகநித்தேதி ஜகதி ஸ்தி²தா |'

என்று ஆரம்பித்து

'தே³வேஷ்வபி த³தா³ரகாம் நாம்யோ நாராயணத்ருதே |
ஸகீ ஸதாசிவஸ்யைஷா மாயா விஷ்ணோ: சரீரஜா 11
ஸைஷா நாராயணமுகே த்ருத்யா கமலலோசந |
லோகாந் அல்பேந காலேந பஜதே ப்ருசமோஹிநீ 11'

என்று சொல்லப்பட்டிருக்கிறது.

3. அம்பாளுடைய யோகநித்தா ஸ்வரூபமானது தேவீ மாஹாத்ம்யம் ப்ரதம சரித்ரத்தில் விசேஷமாக வர்ணிக்கப்பட்டிருப்பதைப் பார்க்கவும். இந்த ரூபமான தேவியின் அனுக்ரஹத்தால் விஷ்ணுவானவர் மது - கைடபர்களை ஸம்ஹாரம் செய்ததால் அம்பாளுக்கு மதுகைடபக்நீ, மதுகைடபப்ரசமநீ, மதுகைடபஞ்ஜநீ என்பதான பெயர்களுண்டாயின.

4. அல்லது யோகானந்தர் என்று பெயருடைய ந்ருஸிம்ஹமூர்த்தியின் ரூபத்தையுடையவள் என்றும் சொல்லலாம்.

5. சிலர் இந்நாமத்தை அயோகா, நந்தா என்று இரண்டு நாமங்களாகப் பிரித்து அதற்கு ஸரியாக மோஹிநீ, முக்யா என்ற நாமங்களை ஒரே நாமமாகச் சொல்லுவார்கள். இந்தப் பிரிவை அனுஸரித்து இனி சொல்லப்படும்.

6. யோகமென்றால் பற்றுதல், ஸங்கம். அது இல்லாதவள் அயோகா. 'அஸங்கோ ஹ்யயம் புருஷ:' என்ற ச்ருதி வாக்யத்தில் இது சொல்லப்பட்டது. அல்லது அய: (இரும்பு) பர்வதரூபமாக இருப்பவள், அதாவது, அவ்விதமான பர்வதம் போல் அபேத்யமானவள் என்றும் சொல்லலாம். அல்லது சுபாவஸுமான கார்யங்களால் பரம அனை ள. அவரிடம் பக்தர்களைச் சேர்ப்பிக்கிறவள் என்றும் சொல்லலாம்.

7. அளகநந்தா என்று பெயருடைய கங்கா ரூபமாக அம்பாள் இருப்பது இங்கு நந்தா என்ற பெயரால் சொல்லப்பட்டதாகவும் சொல்லலாம். ப்ரதிபத் (ப்ரதமை,) ஷஷ்டி, ஸப்தமி திதிகளுடைய தேவதைகளுக்கு நந்தா என்று பெயர். அந்த ரூபமாக இருப்பவள் என்றும் சொல்லலாம்.

'நந்தா பகவதீ நாம யா பவிஷ்யதி நந்தஜா |'

என்ற மார்க்கண்டேய புராண வசனத்தின்படி நந்தனென்ற கோபனுக்குப் பெண்ணாகப்பிறந்த அம்பாளுடைய மூர்த்தி விசேஷத்திற்கு நந்தா என்று பெயர்.

'நந்தா ஹிமவத: ப்ருஷ்டே' என்ற பத்மபுராண வசனத்தின்படி ஸரஸ்வதீ நதியானவள் ஹிமாசலத்தின் அருகிலிருக்கையில் நந்தா என்று பெயர்.

புஷ்கர க்ஷேத்ரத்தின் ஸமீபத்திலிருக்கும் (தக்ஷிணமாக ஹரியான) நதி விசேஷத்திற்கும் நந்தா என்று பெயர். அதில் ஸ்நானம் செய்யாதிருந்தாலும், அதின் நாமோச்சாரணத்தினாலேயே ஸகல ஸுகங்களையும் கொடுக்கக்கூடிய மஹிமை வாய்ந்தது அந்நதி யென்பதாக பத்ம புராணத்தில் புஷ்கர மாஹாத்ம்யத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

'புண்யா புண்ய ஜலோபேதா நதீயம் ப்ரம்ஹண: ஸுதா |
நந்தா நாம்நீதி விபுலா ப்ரவ்ருத்தா தக்ஷிணோகி ||
அகச்சந்தபி யஸ்தஸ்யா நாம க்ருண்ணாதி மாநவ: |
ஸ ஜீவந் ஸுகமாப்நோதி ம்ருதோ பவதி கேசர: ||'

8. அம்பாளுக்கு இந்த 'நந்தா' என்ற நாமம் ஏற்பட்டதற்குக் காரணம் பின்வருமாறு சொல்லப்பட்டிருக்கிறது.

'யதாகதம் து தே ஜக்ம: தேவீம் ஸ்தாப்ய ஹிமே கிரௌ |
ஸம்ஸ்தாப்யாநந்திதா யஸ்மாத் தஸ்மாந் நந்தா து
ஸாபவத் ||' [வராஹ புராணம்]

'நந்தாதே ஸுரலோகேஷு நந்தாநே வஸதேரிதவா |
ஹிமாசலே மஹாபுண்யே நந்தா தேவீ தத: ஸ்ம்ருதா ||'
[தேவீ புராணம்]

இவ்விதம் தேவர்களால் ஹிமாசலத்தில் ஸ்தாபனம் செய்யப்பட்டு ஸந்தோஷமாக வீற்றிருப்பதாலும், ஸுரலோகத்திலிருப்பதில் ஸந்தோஷமுடையவளாயிருப்பதாலும், மந்தி ணைத்யானத்தில் இருப்பதாலும் நந்தா என்ற பெயரோடு கூடிய அம்பாளுடைய ரூபவிசேஷத்தின் ஸ்வரூபமானது

நமாறு வர்

'காயத்ர்யஷ்ட புஜா யா து சைத்ராஸ்ரம் அயோதயத் |
ஸைவ நந்தாபவத் தேவீ தேவகார்யசிகீர்ஷயா ||
ஸ்வாயம்புவே ஹரேதோ தைத்யோ வைஷ்ணவ்யா மந்தரே
[கிரௌ ||'
மஹிஷாக்யோ(ஸ்ர: பச்சாத் ஸ வை சைத்ராஸ்ரோ(பவத்
நந்தயா நிஹரேதோ விந்த்யே மஹாபலபராக்ரம: |
ஞானசக்திஸ்து ஸா தேவீ மஹிஷோ(க்ஞான மூர்த்திமாந் |
அக்ஞானம் ஞானராச்யம் து பவத்யேவ ந ஸம்சய:||
[வராஹம்]

இது தவிர தேவீ மாஹாத்ம்யத்தில் மூன்றாவது சரித்ரத்தில் இந்த ரூபத்தைப்பற்றிச் சொல்லியிருப்பதையும் பார்க்கவும்.

युगंधरा

யுகந்தரா (657)

நூகத்தடியைத் தரிப்பவள்.

'யுகம் ஹஸ்தே சதுஷ்கே(பி ரதஸீராங்கயோர் யுக: |
யுகம் க்ருதாதௌ யுகளே வ்ருத்தி நாம ஔஷதே(பி ச ||'

என்ற விச்வகோச வசனத்தின்படி யுகமென்றால் நான்கு முழங்கையளவு, வண்டி, கலப்பை முதலியனவைகளின் நுகத்தடி, க்ருதயுகம் முதலான யுகங்கள், இரட்டை (யுகளம், ஜோடி), வ்ருத்தி என்ற ஔஷதம் முதலியனவைகளுக்குப் பெயர். நுகத்தடியை அச்வ, வ்ருஷபங்கள் தாங்கி நிர்வாஹம் செய்வதுபோல், ஸகல ஜகத்தையும் நிர்வாஹம் செய்வதால் இந்தப்பெயர் ஏற்பட்டது. க்ருதயுகம் முதலானயுகங்களையும், சில சக்தியுகளத்தையும் காரணம் செய்வதால் இந்தப்பெயர் பொருத்தமாக இருக்கிறது.

इच्छाशक्तिज्ञानशक्तिक्रियाशक्तिस्वरूपिणी

இச்சாசக்தி ஞானசக்தி க்ரியாசக்திஸ்வரூபிணீ (658)

இச்சை, ஞானம், க்ரியை இந்த சக்திகளை ஸ்வரூபமாக உடையவள்.

1. இவை மூன்றும் இச்சா, ஞான, யத்ன ரூபமான மூன்று குணங்களைக் குறிக்கும். இவற்றில் இச்சையென்பது சிரஸ்ஸையும், ஞானமென்பது உடலையும், க்ரியை என்பது பாதங்களையும் குறிக்கும். ஆகவே இந்த சக்திகள் மூன்றும் அம்பாளுடைய சரீரத்தின் பாகங்களாக இருக்கின்றன.

'இச்சா சிர: ப்ரதேசச்ச ஞாநா ச தததோ(கதா |
க்ரியா பதகதா ஹ்யஸ்யா ஏவம் சக்தித்ரயம் வபு: ||'
[ஸங்கேத பத்ததி]

2. இம்மூன்று சக்திகளுக்கும் மூலமே மாதா, ஜ்யேஷ்டா, ரௌத்ரீ என்று பெயர்களென்றும், அவர்கள் ப்ரம்ஹா, விஷ்ணு, ருத்ரன் இவர்களுடைய சக்திகளென்றும், அவர்களே ஜகத்தினுடைய ஸ்ருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரங்களுக்குக் காரண பூதர்களென்றும் சொல்லப்படும்.

'த்ரிபுரா த்ரிவிதா தேவி ப்ரம்ஹ விஷ்ணுவீசரூபிணீ |
ஞானசக்தி: க்ரியாசக்திரிச்சா சக்த்யாத்மிகா ப்ரியே ||'

[வாமகேச்வர தந்த்ரம்]

'யா ஸா சக்திர் ஜகத்தாது: கதிதா ப்ரம்ஹணா: பரா |
இச்சாத்வம் தஸ்ய ஸா தேவி ஸிஸ்ருக்ஷோ: ப்ரதிபத்யதே ||
ஏவமேததிதி ஜ்ஞேயம் காங்யதேதி ஸஞ்சிதம் |
ஞாபயந்தீ ஜடித்யந்தர் ஞானசக்திர் நிகத்யதே ||
ஏவம் பூதமிதம் வஸ்து பவத்விதி யதா புந: |
ஞாத்வா ததேவ தத்வஸ்து குர்வந்த்யத்ர க்ரியோச்யதே ||'

[மாலினீ விஜய தந்த்ரம்]

இம்மூன்று சக்திகளையும் தனக்குள் அடக்கிக்கொண்டு இவர்களுக்கு மேல்பட்டதாக இருக்கும் அம்பாளுடைய ஸ்வரூபத்திற்கு அம்பிகா என்று பெயர்.

3. ஸ்ருஷ்டிதடான ஞான, இச்சா, க்ரியா குணங்கள் ஒன்றுமே அதற்கடுத்தாற்போலிருப்பதான குணத்திற்குக் காரணமாக இருக்கின்றன. க்ரியை என்பது யத்னத்தைக் குறிக்கும்.

4. சலனாத்மகமான (நகர்வது என்பதான) க்ரியையானது ஐந்துவிதமாகப் படிப்படியாக உண்டாகிறதென்பதாக ஸாங்க்ய சாஸ்த்திரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

'ஸ்பந்தச்சைவ பரிஸ்பந்த: ப்ரக்ரம: பரிசீலந: |
ப்ரசார இதி வித்வத்பி: கதிதா: பஞ்ச தா: க்ரியா: ||'

[யக்ஞவைபவ கண்டம்]

सर्वाधारा

ஸர்வாதாரா (659)

ஸகலத்திற்கும் ஆதாரமாக இருப்பவள்.

1. அல்லது, எல்லாம் எந்த அம்பாளுக்கு ஆதாரமோ என்றும் சொல்லலாம். அதாவது அம்பாள் ஸர்வாந்தர்யாமியாக இருப்பதால் இப்படி சொல்லப்பட்டது.

2. அல்லது, ஸகல ஜகத்துக்களுடைய தாரா (பரம் பரா) ரூபமாக இருப்பவள் என்றும் சொல்லலாம். ஜன்ய (உண்டாக்கப்படுவது), ஜனகர் (உண்டாக்குகிறவர்) களுடைய அபேதத்தையொட்டி இவ்விதமாகவும் அர்த்தம் சொல்லலாம்

3. அம்பாள் ஸகல வஸ்துக்களுக்கும், ஸகல ப்ரபஞ் சத்திற்கும் ஆதாரமாக இருப்பது மார்க்கண்டேய புராணத் தில் சொல்லப்பட்டிருக்கிறது.

'யே அர்த்தா நித்யா யே விநச்யந்தி சாம்பே
யோர்த்தா: ஸ்தூலா யே ச ஸூக்ஷ்மாச்ச ஸூக்ஷ்மா: |
யச்சாபூர்த்தம் யச்ச பூர்த்தம் ஸமஸ்தம்
யத் யத் பூதேஷ்வேகமேகம் ச கிஞ்சித் ||
யேவர்த்தா பூமௌ யேவந்தரிக்ஷே வ்யோம்யதோ வா
தேஷாம் தேவி த்வத்த ஏவோபலப்தி: ||'

सुप्रतिष्ठा

ஸுப்ரதிஷ்டா (660)

ஜகத்துக்கு சோபநமான அதிஷ்டானமாக இருப்பவள்.

1. அதாவது, ஜகத்துக்கெல்லாம் சோபனையைக் கொடுக்கும் ஆதாரமாக இருப்பவள்.

2. இருபது அக்ஷரங்களோடு கூடிய சந்தோ விசே ஷத்திற்கு ஸுப்ரதிஷ்டா என்று பெயர். அந்த ரூபமாக இருப்பவள் என்றும் சொல்லலாம்.

दशसद्रूपधारिणी

ஸத், அஸத் என்ற ரூபங்களைத் தரித்திருப்பவள்.

1. ஸத் என்பது பரம்பொருள். அஸத் என்பது (ப்ரம் மத்திலிருந்து வேறுபட்டதான) ஜகத். இவ்விரண்டு ரூபங் களையும் அம்பாள் தரிப்பதாக இங்கு சொல்லப்பட்டது.

2. அல்லது, ஸத் என்பது வ்யாவஹாரிகமான ஸத்யம் அல்லது பாரமார்த்திகமான ஸத்யம், இவைகளைக் குறிக்கும். அஸத் என்பது துச்சமான ப்ராதிபாஸிக ஸத்யத்தைக் குறிக் கும். இந்த இரண்டு ரூபங்களை விளக்கும்படி செய்வதாகவும் சொல்லலாம்.

3. அதாவது மேலேசொல்லப்பட்ட ஸத், அஸத் இவை களின் விஷயகமான ஞானஸ்வரூபமாக இருப்பவளென்று சொல்லப்பட்டது.

4. ஸத், அஸத் என்ற பதங்கள் முறையே பாவ, அபாவங்களையும் குறிக்கும். இவ்விரண்டுக்கும் அப்பாள் அதிஷ்டானமாயிருப்பது இங்கு சொல்லப்பட்டதாகவும் சொல்லலாம்.

'யத் யதஸ்தி தயா பாதி யத் யந்நாஸ்தி தயாபி ச |
தத் தத் ஸர்வம் மஹாதேவ மாயயா பரிகல்பிதம் ||'
[ஸ்காந்தம்]

अष्टमूर्तिः

(662)

எட்டுவிதமான மூர்த்திகளையுடையவள்.

1. இந்த எட்டுவிதமான ரூபங்கள் பலவாறுகச் சொல்லப்பட்டிருக்கின்றன.

'லக்ஷ்மீர் மேதா தரா புஷ்டி: கௌரீ துஷ்டி: ப்ரபா த்ருதி: |
ஏதாபி: பாஹி தநுபி: அஷ்டாபிர் மாம் ஸரஸ்வதி ||'
(மத்ஸ்ய புராணம்)

ஆத்மாவே குணபேதத்தால் எட்டு விதமாக இருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

'குணபேதாத் ஆத்மமூர்த்தி: அஷ்டதா பரிகீர்த்திதா |
ஜீவாத்மா சாந்தராத்மா ச பரமாத்மா ச நிர்மல: ||
சுத்தாத்மா ஞானரூபாத்மா மஹாத்மா ஸப்தம: ஸ்ம்ருத: |
அஷ்டமஸ்தேஷு பூதாத்மேத் யஷ்டாத்மாக: ப்ரகீர்த்திதா: ||'
(யோகசாஸ்த்ரம்)

பஞ்சமஹாபூதங்கள், ஸூர்யன், சந்த்ரன் இவ்வேழுடன் ஜீவாத்மா, ஸ்வர்க்கர், தீக்ஷிதன் என்ற பலவிதமாகச் சொல்லப்பட்ட எட்டாவதுடன் சேர்ந்த எட்டுவிதமான மூர்த்திகளையும் இங்கு சொன்னதாகவும் சொல்லலாம்.

'பூதாநி புஷ்பவந்தௌ ஸ்வரிதி தேவ்யஷ்ட மூர்த்தய: |'
(சக்தி ஸூத்ரம்)

'ஸூர்யோ ஜலம் மஹீ வஹ்நி: வாயுராகாச ஏவ ச |
தீக்ஷிதோ ப்ராம்ஹண: ஸோம இத்யஷ்டௌ மூர்த்தயோ
பத்ந்ய: ஸுவர்ச்சலா ஸோமா ஸுகேசி சாபரா சிவா [மதா:||
ஸ்வாஹாதிதிஸ் ததா தீக்ஷா ரோஹிணீ சயதாக்ரமம் ||
சனைச்சரஸ்ததா சுக்ரோ லோஹிதாங்கோ மநோஜவ:
ஸ்கந்த: ஸ்வர்கோ ஸுத ஸந்தாநோ புதச்சாநுக்ரமாத் ஸுதா:||
[விஷ்ணு புராணம்]

'அஷ்டௌ ப்ரக்ருதயோ தேவ்யா மூர்த்தய: பரிகீர்த்திதா: |
ததா விக்ருதயஸ்தஸ்யா தேஹா பத்த விபூதய: ||'
[லிங்க புராணம்]

'பூமிராபோ ऽநலோ வாயு: கம் மநோ புத்திரேவ ச |
அஹம்கார இதியம் மே பிந்நா ப்ரக்ருதிரஷ்டதா ||'

'யா ஸ்ருஷ்டி ஸ்ரஷ்டுராத்யா வஹதி விதிஹுதம்
யா ஹவிர் யா ச ஹோத்ரீ
யே த்வே காலம் விதத்த: ச்ருதி விஷயகுணா
யா ஸ்த்திதா வ்யாப்ய விச்வம் |
யாமாஹு: ஸர்வபூத ப்ரக்ருதிரிதி யயா
ப்ராணிந: ப்ராண்வந்த:
ப்ரத்யக்ஷாபி: ப்ரபந்நஸ்தநுபிரவது வஸ்-
தாபிரஷ்டாபிரீச: ||' [சாகுந்தளம்]

'ஜலம் வன்ஹிஸ் ததா யஷ்டா ஸூர்யா சந்த்ரமஸௌ ததா |
ஆகாசம் வாயுரவநீ மூர்த்தயோ ऽஷ்டௌ பிநாகிந: ||'

'புனி பயஸி க்ருசாநௌ மாருதே கே சசாங்கே
ஸவிதரி யஜமாநே ऽப்யஷ்டதா சக்திரேகா |
யஹதி குசபராப்யாம் யாவிவநம்ராபி விச்வம்
ஸகல ஜநநி ஸா த்வம் பாஹி மாமத்ய வச்யம் ||'

[ஸகல ஜநநீ ஸ்தவம்]

2. களலாசாரத்தில் ஸம்பந்தப்படக்கூடிய எட்டுவித மான குல ஸ்த்ரீகளை (குலாஷ்டகத்தை) இங்கு சொன்னதாகவும் சொல்லலாம்.

'கணிகா சௌண்டிகீ சைவ கைவர்த்தீ ரஜகீ ததா |
தந்த்ரகாரீ சர்மகாரீ மாதங்கீ பும்ச்சலீ ததா ||'

[ஸமயாசாரஸ்ம்ருதி]

ஸ்வல்பாங்கி முதலான எட்டுப் பெயர்களுடைய பெயர் களும் லக்ஷணங்களும் ருத்ரயாமளத்தில் சொல்லப்பட்டிருக் கிறதைப் பார்க்கவும்.

3. இது தவிர, ப்ராம்ஹீ முதலான அஷ்ட மாதாக்கள், வசிநீ முதலான அஷ்ட வாக்தேவதைகள், இந்த ரூபங்களையும் இந்த நாடகத்தில் சொல்லப்பட்டதாகவும் சொல்லலாம்.

अजाजैत्री

அஜாஜைத்ரீ (663)

அவித்யையை ஜயித்தவள்.

'அஜாமேகாம் லோஹிதசுக்லக்ருஷ்ணாம்' என்ற ச்ருதி வாக்யத்தில் சொல்லப்பட்ட அஜா என்ற பதமானது அவித் யையைக் குறிக்கும். அம்பாள் ஞானரூபிணியாகையால் அவி த்யாமான அவித்யையை (அக்ஞானத்தை) நாசம் செய்பவளாக இங்கு சொல்லப்பட்டது.

लोकयात्राविधायिनी

லோகயாத்ராவிதாயி நீ

(சதுர்தச) லோகங்களின் யாத்ரையை நடத்தும் ஸாமர்த்திய முடையவள்.

யாத்ரை என்பது ப்ரளயம், ஸம்ரக்ஷணம் இவைகளைக் குறிக்கும்.

एकाकिनी

ஏகாகிநீ (665)

ஒருவளாக (தனியாக) இருப்பவள்.

அதாவது, இரண்டாவதான வஸ்து யாதொன்றுமில்லாமல் தனியாக (எஞ்சி) இருப்பவள் என்று தாத்பர்யம்.

'ஸோ(அ)பிபேத், தஸ்மாத் ஏகாகீ(அ)பிபேதி, ஸஹாய மீக்ஷாம் சக்ரே யம்மதந்யத்நாஸ்தி கஸ்மாத் நு பிபேமீதி, தத ஏவாஸ்ய பயம் வீயாய!' [ப்ருஹதாரண்யகம்]

'ஏகைவ லோகாந் க்ரஸதி ஏகைவ(அ)ஸ்தாபயத்யபி |
ஏகைவ ஸ்ருஜதே விச்வம் தஸ்மாத் ஏகாஹிநீ மதா |'
[தேவீ புராணம்]

'ஏகைவாஹம் ஜகத்யத்ர த்விதியா(அ)கா மமாபரா |
பச்யைதா துஷ்ட மயிஏவ விசந்த்யோ மத்விபூதய: ||
[தேவீ மாஹாத்ம்யம்]

भूमरूपा

பூமரூபா (666)

ப்ரஹ்மஸ்வரூபமாக இருப்பவள்.

1. பூமா என்ற பதத்தினால் ப்ரஹ்மமே குறிக்கப்படுகிறதென்பதாக ப்ரம்ஹஸூத்ரத்தின் பூமாதிகரணத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. இதுவே தான் 'யத்ர நான்யத் பச்யதி நான்யத் ச்ருணோதி' என்று ஆரம்பித்து 'யோ வை பூமா தத் ஸுகம்' என்று சாந்தோக்யோபநிஷத்தில் சொல்லப்பட்டது.

2. பூமா என்ற பதத்திற்கு பஹு (அனேகம்) என்ற அர்த்தமுமுண்டு. முந்திய நாமத்தில் சொல்லியபடி அம்பாள் வஸ்துவத்தில் ஏகாகினியாக இருந்தாலும் உபாதிகளோடு கூடி, நாமரூபங்களோடு இருக்கும்போது, பலவாறுகத்தோன்றுவதால் இந்த நாமம் ஏற்பட்டது. இதுவேதான் பலவிதமான உபமானங்களோடு தேவீபுராணத்தில் சொல்லப்பட்

'ஏகாப்யுபாதிதோ பூமா சிவா ஸர்வத்ர வீச்ருதா |
யதாநுரஜ்யதே வர்ணை: விசித்ரை: ஸ்படிகோ மணி: ||
ததா குணவசாத் தேவீ பூமா நாமேதி வர்ண்யதே |
ஏகோ பூத்வா யதா மேக: ப்ருதக்த்வேந ச திஷ்டதி ||
வர்ணதோ ரூபதச்சைவ ததா குணவசாத் உமா |
நபஸ: பதிதம் தோயம் யதா நாநாரஸம் பவேத் ||
பூமே: ரஸவிசேஷேண ததா குணவசாத் உமா |
யதா த்ரவ்ய விசேஷேண வாயுரேக: ப்ருதக் பவேத் ||
துர்கந்தோ வா ஸுகந்தோ வா ததா குணவசாத் உமா |
யதா வா கார்ஹபத்யோZக்நி: அந்ய ஸம்ஞாந்தரம் வ்ரஜேத் ||
தக்ஷிணாக்நவநீயாதி ப்ரம்ஹாதிஷு ததைவ ஸா |
ஏகத்வேந ச பூம்நா ச ப்ரோக்தா தேவீ நிதர்சனை: |
தஸ்மாத் பக்தி: பரா கார்யா ஸர்வகத்வ ப்ரஸித்தயே ||'

இதையே கூர்ம புராணத்திலும்,

'ஏகா காமேச்வரீ சக்தி: அநேகோபாதியோகத: |
பராவரேண ரூபேண க்ரீடதே தஸ்ய ஸந்நிதௌ ||'

என்று சொல்லியிருக.

நிர்த்வைதா

நிர்த்வைதா (667)

த்வைத பாவத்திலிருந்து நீங்கப்பெற்றிருப்பவள்.

பரப்ரம்ஹத்திலிருந்து வேறுபட்டதான இரண்டாவது வஸ்து எதுவும் அழிவுள்ளது, சாச்வதமல்ல என்பதாக 'யத்ர நான்யத் பச்யதி' என்று ஆரம்பித்து 'யதல்பம் தத் மர்த்யம்' என்பதாக சாந்தோக்ய உபநிஷத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. அவ்விதமான இரண்டாவது வஸ்து என்ற பாவமே பரப்ரம்ஹ ஸ்வரூபிணியான அம்பாளிடமில்லை யென்பதாக இங்கு சொல்லப்பட்டது.

நிர்த்வைதா

த்வைத வர்ஜிதா

எக்காலத்திலும் இரண்டாவது வஸ்து என்பது இல்லாதவள்.

மூன்றாம் நாமத்தில் சொல்லப்பட்ட த்வைதமான பாவமானது முன்பும், பின்பும், எக்காலத்திலும் அம்பாளைப் பற்றியவரையில் இல்லையென்பதாக இந்த நாமத்தில் சொல்லப்பட்டது.

अन्नदा (669)

அந்நதா

ஸகல ஜனங்களுக்கும் அன்னத்தைக் கொடுப்பவள்.

वसुदा (670)

வஸுதா

ஸகல ஜனங்களுக்கும் தனத்தை (அல்லது ரத்னத்தை)க் கொடுப்பவள்.

இவ்விதப் ப்ரப்ரம்ஹத்தை அறிந்தவனுக்கு அன்னம், வஸு இவைகள் கிடைப்பதாக ச்ருதியில் சொல்லப்பட்டிருக்கிறது.

'ஸ வா ஏஷ மஹாந் அஜ ஆத்மா அந்நாதோ வஸுதானோ
விந்ததே வஸு ய ஏவம் வேத |'

वृद्धा (671)

வ்ருத்தா

வயதில் முதிர்ந்தவள்.

1. அம்பாள் ஸகல ப்ரபஞ்சத்திற்கும் மூர்த்தியாளாய், காரண பூதையாய் இருப்பதால் எல்லாவற்றிற்கும் (வயதில்) புராதனமானவள் என்பதாக இந்த நாமத்தில் சொல்லப்பட்டது. இவ்விதமாயிருக்கும் ப்ரப்ரம்ஹத்தின் கிழத்தனத்தை 'த்வம் ஜீர்ண தண்டேன வஞ்சஸி' என்று ச்ருதியிலும் சொல்லப்பட்டிருக்கிறது.

2. மிகவும் புராதனமான (அல்லது அபிவிருத்தியடைந்த) இந்த ஜகத்ரூபமாக இருப்பவள் என்றும், ஜகத்தை அபிவிருத்தி செய்கிறவள் என்றும் சொல்லலாம்.

ब्रह्मात्मैक्यस्वरूपिणी

ப்ரம்ஹாத்மைக்ய ஸ்வரூபிணீ (672)

ப்ரம்ஹமும், ஆத்மா இவர்களுடைய ஐக்யமாகிற ஸ்வரூபத்தையுடையவள்.

1. அதாவது, சுத்த சைதன்ய ரூபமான ப்ரப்ரம்ஹத்திற்கும் ஜீவாத்மாக்களுக்கும் இருக்கும்படியான ஐக்யமானது அம்பாளுடைய நிஜமான (ஸ்வ)ரூபமென்று தாத்பர்யம்.

2. அல்லது, ப்ரப்ரம்ஹமென்றால் சிவனைக் குறிக்கும். சிவன், ஜீவன்கள் இவர்களுடைய ஐக்யத்தை பிரதிபாதிக்

கிறதான ஹர்ஸாக்த்ரத்தைத் தன் ரூபமாக உடையவள் என்றும் சொல்லலாம். அந்த மந்த்ரத்தில் அஹம் என்பதானது ஜீவாத்மாவையும், சக்தி மந்த்ரமான ஸகாரமானது பரமேச்வரனுக்குரியதென்றும், ஆகவே ஹர்ஸமந்த்ரமானது ஜீவாத்மா, பரமாத்மா இவர்களுடைய ஐக்யத்தை ப்ரதிபாதனம் செய்து அவ்விதமான ஞானத்தைக் கொடுக்குமென்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

'அதவா ஜீவமந்த்ரோ(உ)யம் ஜீவாத்மப்ரதிபாதக: |
அஹம் சப்தஸ்ய ரூடத்வாத் லோகே ஜீவாத்மவஸ்துனி ||
சக்திமந்த்ர: ஸகாராக்ய: பரமேச்வரவாசக: |
ப்ரக்ருதார்த்தே ப்ரஸித்தத்வாத் ப்ரஸித்த: பரமேச்வர: ||
மஹதாத்யணுபர்யந்தம் ஜகத்ஸர்வம் சராசரம் |
ஜாயதே வர்த்ததே சைவ லீயதே பரமேச்வரே ||
ஸம்ஸாரித்வேந பாதோ(உ)ஹம் ஸ ஏவ பரமேச்வர: |
ஸோ(உ)ஹமேவ ந ஸந்தேஹ: ஸ்வாநுபூதி ப்ரமாணத: ||'

[ஸ்காந்தம் யக்ஞவைபவ கண்டம்]

இந்த அர்த்தத்துடன் தான் ஸுலலிதா த்ரிசதியில் அம்பாளை 'ஹர்ஸமந்த்ரார்த்த ரூபிணீ' என்று சொல்லியிருக்கிறது

बृहती

ப்ருஹதீ (673)

பெரியவள்.

1. 'மஹதோ மஹீயான்' என்றபடி எப்போர்ப்பட்ட பெரிய வஸ்துவுக்கும் பெரியவளாகையால் இந்தப் பெயர் ஏற்பட்டது.

2, சந்தஸ் சாஸ்த்ரத்தில் முப்பத்தாறு டைய ஒரு சந்தோ விசேஷத்திற்கு ப்ருஹதீ என்று பெயர். அந்த ரூபமாக இருப்பவள் என்றும் சொல்லலாம். 'காயத்ரீ சந்தஸாமஹம்' என்று கூர்ம புராணத்தில் சொல்லப்பட்ட போதிலும், அம்பாள் அவ்விரண்டு சந்தோ விசேஷங்களின் ரூபமாகவுமிருப்பதால் வசன விரோதம் யாதொன்றுமில்லை. இதேபோதிரி பகவானுடைய விச்வரூபத்தைக் கீதையில் வர்ணிக்கையில் 'ப்ருஹத் ஸாம ததா ஸாம்நாம்' என்று சொல்லுவதற்கும், அம்பாளுடைய விச்வரூபத்தைக் கூர்மபுராணத்தில் வர்ணிக்கையில் 'ஜ்யேஷ்டம் ஸாம ச ஸாமஸு' என்று சொல்வதற்கும் யாதொரு விரோதமுமில்லை. தலவகாரர்களுடைய

சாகையில் 'உதுக்யம்' 'சித்ரம்' என்ற ரிக்குகளில் சொல்லப் படும் ஸாமமானது ஜ்யேஷ்ட ஸாமம் என்பதாக ஹரதத்தா சார்யர் உஜ்ஜ்வலையில் சொல்லியிருக்கிறார். 'ஸத்வம் ந: சித்ர' என்ற ரிக்கில் கானம் பண்ணப்படும் ஸாமானது ப்ருஹத் ஸாமமென்பதை ப்ரஸித்தம். ப்ருஹத், ஜ்யேஷ்ட என்ற பதங் கள் ஸமாநார்த்தமாகையால் அம்பாளை ப்ருஹத்ஸாமரூபா என்றும், ஜ்யேஷ்ட ஸாமரூபா என்றும் சொல்லலாம்.

ब्राह्मणी
ப்ராம்ஹணீ (674)

பரமசிவனுடைய பத்னீ.

1. பரமசிவன் ப்ராம்ஹண ஜாதியைச் சேர்ந்தவரென் பதாகச் சொல்லப்படும். சாந்தோக்யத்தில் 'விரூபாக்ஷோவி தந்தாஞ்சி:' என்பதாக சிவனைக்குறித்து ஆரம்பித்து 'த்வம் வை தேவேஷு ப்ராம்ஹணோஸ்யஹம் மனுஷ்யேஷு ப்ராம்ஹண வைவை ப்ராம்ஹணமுபதாவத்யுப த்வா தாவாமி' என்று இது சொல்லப்பட்டிருக்கிறது. இன்னும் பராசர, ஆதித்ய, கூர்ம வாமலிங்க புராணங்களிலும் இது சொல்லப் பட்டிருக்கிறது.

'ப்ராம்ஹணோ பகவான் ஸாம்போ ப்ராம்ஹணாம் ஹி தைவதம்।
விசேஷாத் ப்ராம்ஹணோ ருத்ரம் ஈசானம் சரணம் வ்ரஜேத் ॥'

விஷ்ணு பாகவதத்திலும் 'ருத்ரோ கர்ப்பமிமம் ப்ராம்ஹணம்' என்பது முதலான ச்லோகங்களில் சிவனுடைய கோபத்திற் குப் பயந்தவர்களாக ஆதித்யர்களைச் சொல்லுகையில் சிவ னுடைய ப்ராம்ஹணத்வம் வ்யக்தமாகச் சொல்லப்படுவதாக 'சிவதத்வ விவேக'த்தில் சொல்லியிருப்பதையும் பார்க்கவும்.

2. 'ப்ராம்ஹணீ பஞ்சிகா ஸ்ப்ருக்கா த்விஜபத்நீஷு விச்ருதா।' என்ற விச்வ கோசத்தின் வசனப்படி ப்ராம்ஹணீ என்ற பத மானது ஒரு ஓஷதி விசேஷத்தையும், த்விஜ ஸ்த்ரீயையும், ஸம்வித்(ஞான) விசேஷத்தையும் குறிக்கும். கடைசி அர்த்தம்

'ப்ராம்ஹணீ ச்வேத புஷ்பாட்யா ஸம்வித் ஸா தேவதாத்மிகா।'

என்று மைத்ராயணீஸம்ஹிதையிலும் சொல்லப்பட்டிருக்கிறது. அந்த ரூபங்களாகவும் அம்பாளிருப்பதால் இந்தப் பெயர் ஏற்பட்டதாகவும் சொல்லலாம்.

ब्राह्मी
ப்ராம்ஹீ (675)

ப்ரம்ஹபத்நியான ஸரஸ்வதீ ரூபமாக இருப்பவள்.

1. அதாவது, வாகாத்மகமான ரூபத்தோடிருப்பவள் என்று தாத்பர்யம்.

2. அல்லது, அவித்யையிலிருந்து வேறுபட்டதான ஜட ஜாதி இருப்பதற்கு ப்ரமாணம் யாதொன்றுமில்லாததால் இந்தப்பெயர் வந்ததாகவும் சொல்லலாம்.

ब्रह्मानन्दा

ப்ரம்ஹாநந்தா (676)

ப்ரம்ஹானந்தத்தையுடையவள்.

அல்லது, (ஸகுண ரூபமாயிருக்கும்போது) ப்ரம்ஹத்தை ஆனந்தமாக உடையவள் என்றும் சொல்லலாம்.

बलिप्रिया

பலிப்ரியா (677)

பலசாலிகளிடத்தில் ப்ரியமுள்ளவள்.

1, அதாவது, அவித்யையை நிரஸனம் பண்ணுவதில் (போக்குவதில்) ஸாமார்த்தியமுடையவர்களுக்கு, அல்லது காமாதி சத்ருக்களை ஜயித்தவர்களுக்கு அனுக்ரஹம் செய்பவள் என்று தாத்பர்யம்.

2. பலி சக்ரவர்த்தியிடம் ப்ரியமுள்ள வாமநரூபியான விஷ்ணுவோடு அபின்னமாயிருப்பதால் இந்தப்பெயர் ஏற்பட்டதாகவும் சொல்லலாம்.

3. பூஜையில் கொடுக்கப்படும் பலிகளில் (உபஹாரங்களில்) ப்ரியமுள்ளவள் என்றும் சொல்லலாம்.

भाषारूपा

பாஷாரூபா (678)

பாஷைகளின் ரூபமாக இருப்பவள்.

1. ஸம்ஸ்கிருதம், ப்ராக்ருதம் முதலான பாஷைகளெல்லாம் அம்பாளுடைய ரூபமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அம்பாளே ஸகலவிதமான சப்தங்களுக்கும் ஜனனீயென்றும், பரா, பச்யந்தீ முதலான வாக்குகளெல்லாம் அம்பாளுடைய ரூபங்களென்றும் ஏற்கனவே வந்த நாமங்களில் சொல்லப்பட்டது.

2. அல்லது ஸகலவிதமான பாஷைகளாலும் பூஜை (வர்ணனை, ஸ்தோத்ரம்) செய்யப்பட்டவள் என்றும் சொல்லலாம்:

ஸம்ஸ்க்ருதேனைவ கேப்யாஹ: கேசித் ம்லேச்சாதி பாஷயா |
ஸாதாரண்யேந கேZ பி த்வாம் ப்ராக்ருதேனைவ கே சந ||'

बृहत्सेना

ப்ருஹத்ஸேநா (679)

அபாரமான (சதுரங்க பல) ஸேனையையுடையவள்.

அல்லது. ட்ருஹத்ஸேனன் என்ற பெயருடைய ராஜ விசேஷ ரூபமாயிருப்பவள் என்று சொல்லலாம்.

भावाभावविवर्जिता

பாவாபாவ விவர்ஜிதா (680)

பாவம், அபாவம் இரண்டுமில்லாதவள்.

1. அதாவது, உத்பத்தி, விநாசம் இவ்விரண்டுமில்லாதவள்.

2. பாவங்களென்பது த்ரவ்ய குணகர்மங்களைக் குறிக்கும். அபாவங்களென்பது ப்ராகபாவ, த்வம்ஸாபாவ, அத்யந்தாபாவங்களைக் குறிக்கும். அம்பாள் இவ்விதமான பாவாபாவங்களோடு இல்லாமல் பாரமார்த்திக ஸத்தாவோடு கூடிய ப்ரம்ஹ ஸ்வரூபிணியாய், பாவாபாவங்களான வஸ்துக்களிலடங்காமல் (அவைகளின்) அதிஷ்டானமாக இருப்பதால் இத்தப் பெயர் ஏற்பட்டது. இவ்விதமான அதிஷ்டானத்திற்கு பாவம் இல்லாதபோதோ அபாவமும் கிடையாதென்பதாக ஸ்காந்தம் யக்ஞவைபவ கண்டத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

அதிஷ்டாநாவசேஷோ ஹி நாச: கல்பித வஸ்துந: |
பாவஸ்யைவ ஹ்யபாவத்வம் நாசோ பாவஸ்ய பாவதா ||
பாவாபாவஸ்வரூபாப்யாம் அந்ய ஏவ ஹி கல்பித: |
அதிஷ்டாநஸ்ய நாசோ ந ஸத்யத்வாதேவ ஸர்வதா ||'

सुखाराध्या

ஸுகாராத்யா (681)

ஸுகமாக ஆராதிக்கக்கூடியவள்.

1. அதாவது, உபவாஸம் முதலான காயக்லேசங்களில்லாமலும், த்யானிக்கவேண்டிய ரூபத்தைப்பற்றிய நியம, நிர்ப்

பந்தங்களில்லாமலும் அம்பாளை ஆராதிக்கலாமென்று தாத்பர்யம். இதுவேதான் அடியில்கண்டபடியும் சொல்லப்பட்டது.

'தேஹ கேஹாபகரைர் வ்ரதைர் பஹுவிதை: தானைச்ச
தேஹாமைர்ஜபை:
ஸந்தாபைர் ஹ்யமேத முக்ய ஸுமகை: நாநாவிதை: கர்மபி: |
யத் ஸங்கல்ப விகல்ப பாவ மலிநம் க்யாதம் பதம் தஸ்ய தே
தூராதேவ நிவர்ததே பரதரம் மாத: பதம் நிர்மலம் ||'
[த்ரிபுரா மஹிம்நஸ்தோத்ரம்]

ரே மூடா: கிமயம் வ்ருதைவ தபஸா காய: பரிக்லிச்யதே
யக்ஞைர் வா பஹுதக்ஷிணை: கிமிதரே நிக்தீ க்ரியந்தே
க்ருஹா: |
பக்தி: சேத் அவிநாசிநீ பகவதீபாதத்வயீ ஸேவ்யதாம்
உந்நித்ராம்புருஹாதபத்ர ஸுபகா லக்ஷ்மீ: புரோ தாவதி ||'

2. இவ்விதம் தன்னை ஸுலபமாக ஆராதிக்கும் வழி களைப்படிப்படியாக அம்பாள் தன் பிதாவான ஹிமவானுக்குச் சொல்லியதைக் கூர்மபுராணத்தில்,

'அசக்தோ யதி மாம் த்யாதும் ஸ்வரம் ரூபமவ்யயம் |'

என்பது முதலான ச்லோகங்களில் பார்க்கவும்.

शुभकरी

சுபகரீ (682)

(பக்தர்களுக்கு) சுபத்தை(யே) செய்கிறவள்.

நியம நிர்பந்தங்களில்லாமல் அம்பாளை ஆராதித்தால் ஒரு வேளை ஏதாவது கெடுதல் (அல்லது பாவம்) ஸம்பவிக்குமோ என்ற ஸ)ந்த ஸாமத்தால் ங் க்கப்பட்டது.

शोभना सुलभागतिः

சோபநா ஸுலபா கதி: (683)

சோபனமும் ஸுலபமுமான அடையக்கூடிய ஸ்தானமாய் இருப்பவள்.

1. மோக்ஷம் முதலிய புருஷார்த்த ரூபமாக இருப்பதால் சோபனமும், ஸுகமாக உபாஸிக்கத்தக்கதாயிருப்பதால், ஸுலபமுமான கதியாக (அடையக்கூடியவளாக) அம்பாள் இருக்கிறாள் என்று சொல்லப்பட்டது.

'கதிர் மார்க்கே தசாயாம் ச ஞானே யாத்ராப்யுபாயயோ: |'

என்ற விச்வதிகாச வசனத்தின்படி கதி என்ற பதமானது அடையவேண்டிய ஸ்தானம் (பலம்), ஞானம், உபாயம், உபாஸனா மார்க்கம் முதலியவைகளைக் குறிக்கும். மாதிரி கூர்மபுராணம். 'ல.

'ஸவஷவ ஸர்வபூதானாம் கதிர்நாம் உத்தமா கதி: |'

என்று சொல்லப்பட்டது

2. இந்த பதங்கள் மூன்றும் சேர்ந்து ஒரே நாமமாக இருக்கிறது. ப்ரயோகத்தில் இந்த நாமத்தை 'சோபநாயை ஸுலபாயை கத்யை நம:' என்று சொல்லவேண்டும்.

3. இந்த ஸஹஸ்ரநாமத்தில் சோபநா என்ற பதம் மூன்று இடங்களில் வருகிறது. இந்த இடம் ஒன்று. 'ஸுமுகீ நளினீ ஸுப்ரு: சோபநா' என்ற இடத்தில் வரும் 462-வது நாமம் ஒன்று. 'ஸுவாஸின்யர்ச்சநப்ரீதா சோபநா' என்ற இடத்தில் வரும் 972-வது நாமம் ஒன்று. இப்படி வருவதில் புநருக்தி (ஒரே நாமத்தைத் திரும்பச் சொல்வது) என்ற தோஷம் ஏற்படுவதால் அதை நீக்க 462-வது நாமத்தை சோபநா என்றும், இந்த 683வது நாமத்தை அடுத்த இரண்டு பதங்களுடன் சேர்த்து ஒரே நாமமாகவும், 972-வது நாமத்தை ஆசோபநா என்றும் சொல்லவேண்டும். இதேமாதிரி 537-வது நாமமான மதி: என்பதை அமதி: என்று ஏற்கனவே சொல்லப்பட்டிருக்கிறது. இவ்விதம் புநருக்தி தோஷத்தைப் பரிஹாரம் செய்வதற்காக ஒரு பதத்தை அதினுத்த பதத்துடன் சேர்த்தும், ஒரு பதத்திற்கு முன்னல் அ, ஆ இவைகளைச் சேர்த்தும், ஸ்ரீமத் ஆசார்யாளும் விஷ்ணு ஸஹஸ்ர நாம பாஷ்யத்தில் சொல்லியிருக்கிறார்கள். 'அவ்யய: புருஷ: ஸாக்ஷீ' என்று வருவதால் 'நிதிரவ்யய:' என்பதை ஒரே நாமமாகவும், இதேமாதிரி 'ஸ்தவிரோத்ருவ:, சாச்வதஸ்தாணு:, ஸர்வவித்பாநு:, வாசஸ்பதிருதாரதீ:' என்பதில் சொல்லப்பட்டிருக்கிறது. இன்னும் 'ஜகதோ ஜய ஜந்மாதிர் பீம:', என்று வருவதால் 'அதுல: சரபோ பீம:' என்பதில் வரும் பீம: என்பதை அபீம: என்று பிரித்திருக்கிறார்கள். இதேமாதிரி இஷ்டோ விசிஷ்ட: என்றது போன்ற நாமங்களிலும் சொல்லப்பட்டிருக்கிறது.

4. மேலே சொல்லிய புநருக்தி தோஷ பரிஹாரமாக இந்த நாமத்தை சிலர் சோபநாகதி:, ஸுல்பாகதி: என்று

(கதி: என்ற பதத்தை முற்கிய இரண்டு பதங்களொடு தனித் தனியாகச் சேர்த்து) சொல்லுவார்கள். எனென்றால் வாகள் 'ப்ரசண்டா' என்ற 827-வது வாக்கியத்தையும், ' ' என்ற 828-வது வாக்கியத்தையும் சேர்த்து 'ப்ரசண்டாகதா' என்ற ஒரே வாக்கியமாகச் சொல்லுவார்கள். ஆயினும் அதற்காக கதி: என்பதை முன்கிய வாக்கியங்களுடன் இரண்டு தடவை சேர்க்கவேண்டியிருப்பதால் அது பொருத்தமாக இல்லை.

5. இது தவிர இந்த வாக்கியத்தை சோடா, அலோலடா, ஆகதி: என்று பிரித்தும் அர்த்தம் சொல்லலாம். அப்போது சோடா என்பது அலோலடா என்பதான ஆகதியோடிருப்பவள் என்று அர்த்தம். அலோலடா என ஆகதியென்பது எவளால் புராணமுத்தி ஸாக்ஷாத்காரமானதோ (கிடைப்பதற்கரியதோ) என்ற தாத்பர்யம். அதாவது, அப்பாலை ஆராதித்தால் புராணமுத்தி (ரிலீஜன்ஸ்) கிடையாதென்றார், அவ்விதமான மோக்ஷமானது சோடனமானது என்று பொருள். இதையே ப்ரஹ்மாண்டபுராணத்தில்

'யஸ்ய நோ பச்சிமம் ஜன்ம யதி வா சங்கர: ஸ்வயம் |
தேனைவ லப்யதே வித்யா ஸ்ரீமத் பஞ்சதசாக்ஷரீ ||'

என்றும்

'ஞாத்வேத்தம் ந புந: ஸ்ப்ருசந்தி ஜநநீகர்பேஷ்வர்பகத்வம் நர:|'

என்று லகுஸ்துதியிலும் சொல்லியிருக்கிறது.

6. அல்லது, ஸாதர்லபரான மானுஷாதி ஜன்மமானது, எவளால் சோடனமாக எற்படுகிறதோ அப்பேர்ப்பட்டவள் என்றும் சொல்லலாம். இதையே தேவீபாகவதத்தில்,

'யைர் ந ச்ருதம் பாகவதம் புராணம்
நாராதிதா யை: ப்ரக்ருதி: புராணீ |
ஹாதம் முதே நைவ தராமராணம்
தேஷாம் வ்ருதா ஜன்ம கதம் நராணம் ||'

என்றும், விஷ்ணுபாகவதத்தில் இந்த ச்லோகத்தையே இரண்டாவது அடியை,

'நாராதிதோ யை: புருஷ: புராண: |'

என்று மாற்றியும் சொல்லியிருக்கிறது.

7. சிலர் மூன்வாக்ய 462, 463 வாக்கியங்களாகிய சோடாகா, ஸாராயிகா என்ற வாக்யங்களை சோடா ஸாராயிகா என்று

(அதாவது, மங்களத்தோடு கூடிய ப்ரஹ்லாதன் முதலான அஸுரர்களுக்கு ராயிகா என்ற அர்த்தத்தோடு கூடிய) ஒரே நாமமாகச் சொல்லி இந்த நாமத்தை மேலே சொல்லியபடி மூன்று நாமங்களாகப் பிரித்துச் சொல்லுவார்கள்.

राजराजेश्वरी

ராஜராஜேச்வரீ (684)

ராஜராஜர்களுக்கெல்லாம் ஈச்வரீயாக இருப்பவள்.

1. அதாவது, தேவராஜனை இந்த்ரன் முதலானவர்களுக்கும், ராஜர்களான ப்ரஹ்மா, விஷ்ணு, ருத்ரர்களுக்கும் சக்தி என்று அர்த்தம்.

2. குபேரனுக்கு ராஜராஜனென்று பெயர். அவனுக்கு சக்தி என்றும் சொல்லலாம்.

राज्यदायिनी

ராஜ்ய (685)

ராஜ்யத்தைத் கொடுப்பவள்.

ராஜ்யம் என்பது ஸ்வாராஜ்யம், அல்லது வைகுண்டம், கைலாஸம் முதலியவைகளைக் குறிக்கும்.

राज्यवल्लभा

ராஜ்யவல்லபா (686)

(மேலே சொல்லப்பட்ட) ராஜ்யங்களில் ப்ரியமுள்ளவள்.

ராஜ்யமென்பதிலே அந்த ராஜ்யங்களின் பதிகளாகிய தேவராஜன், பூபாலர்கள் முதலியோரும் சொல்லப்பட்டார்கள். இந்தப் பூபாலர்களெல்லோரும் (அம்பாளுடைய) ஸ்ரீநகரத்தில் 13, 14-வது ப்ராகாரங்களுக்கு நடுவில் வாஸம் பண்ணிக்கொண்டு அம்பாளை உபாஸித்து வருவதாக துர்வாஸரால் 'ஆர்யாத்விசதி'யில் சொல்லப்பட்டிருக்கிறது.

'மத்ய சோஷாண்யாம் அமுயோ: மகேந்த்ர நீலாத்மகாநி ச
ஸராம்ஸி |
சாதோதரீ ஸஹாயாந் பூபாலாநபி புந: புந: ப்ரணமே: 11

राजत्कृपा

ராஜத் க்ருபா (687)

சோபிக்கிற க்ருபையோடு கூடியவள்.

राजपीठनिवेशितनिजाश्रिता

ராஜபீட நிவேசித நிஜாச்ரிதா (688)

தன்னை ஆச்ரயித்தவர்களை ராஜபீடங்களில் வீற்றிருக்கும்படி செய்பவள்.

அதாவது, அம்பாள் தன் பக்தர்களுக்கு இந்த்ரன் முதலானவர்களுடைய பதவியைக் கொடுப்பாள் என்று சொல்லப்பட்டது. இவ்விதம் தன் பக்தர்களில் ஒருவனுக்கு வித்யாதரர்களும் வணங்குமபடியான சக்ரவர்த்தி பதவியை அம்பாள் கொடுத்ததை,

ஜாதோZப்யல்ப பரிச்சதே க்ஷிதிபுஜாம் ஸாமான்யமாத்ரேகுலே
நி:சேஷாவனி சக்ரவர்த்தி பதவீம் லப்த்வா ப்ரதாபோந்நத: |
யத் வித்யாதர ப்ருந்த வந்திதபத: ப்ரூவத்ஸராஜோZபவத்
தேவி த்வச்சரணாம்புஜப்ரணதிஜ: ஸோZயம் ப்ரஸாதோதய:

என்று ஸௌந்தர்யலஹரியிலும்,

'ப்ருத்வீபுஜோZப்யுதயாய ப்ரவஸ்ய தஸ்ய
வித்யாதர ப்ரணதி சும்பித பாத பீட: |
தத் சக்ரவர்த்தி பதவீ ப்ரணய: ஸ ஏஷ:
த்வத் பாதபங்கஜரஜ: கண ஜ: ப்ரஸாத: ॥'

என்று சர்ச்சா ஸ்தோத்ரத்திலும் சொல்லியிருக்கிறது.

राज्यलक्ष्मीः

ராஜ்யலக்ஷ்மீ: (689)

ராஜ்யாபிமானினியான லக்ஷ்மீரூபமாக இருப்பவள்.

1. அதாவது, ராஜாக்களுடைய ஸம்பத்தெல்லாம் அம்பாளால் அனுக்ரஹம் செய்யப்படுகிறவையென்றும், அவை அம்பாளுடைய ரூபங்களென்றும் சொல்லப்பட்டது.

2. இப்போப்பட்ட ராஜ்யலக்ஷ்மீ சக்தியின் மந்த்ரமானது தந்த்ர ராஜத்தில் சொல்லப்பட்டிருப்பதைப் பார்க்கவும்.

कोशनाथा

கோசநாதா (690)

பொக்கிஷத்திற்கு நாதையாக (ஸ்வாமிநியாக) இருப்பவள்.

கோசம் என்பது ராஜாங்கத்திய பொக்கிஷத்தைக் குறிக்கும். அல்லது, அன்னமயகோசம் முதலான (ஜீவனுடைய) பஞ்சகோசங்களையும் குறிக்கும்.

சதுரங்கபலேச்வரீ (691)

(ரத, கஜ, துரக, பதாதிகளென்ற) சதுரங்க ஸைன்யத்திற்கு ஈச்வரீயாக இருப்பவள்.

1. அல்லது, அங்கபலங்கள் என்பதற்கு மேலே சொல்லிய சதுர்விதங்களால் உடைய ஸ்ரீ ஹயக்ரீவரைக் குறிக்கும். [அங்கபலத்தை சதுர்முக ஸ்ரீ ஹயக்ரீவத்தைக் குறிக்கும்]. ஸ்ரீ ஹயம் என்பது ஆனிவகுப்பு. தவிரவும் ஸ்ரீ ஹயக்ரீவரென்பதாக ஸில புராணங்களில் சொல்லப்பட்ட வரலாறு, லக்ஷ்மீ ஹயக்ரீவர், அதிருத்ர ஸ்ரீ ஹயக்ரீவர் முதலிய ஸ்ரீ ஹயக்ரீவர்களைக் குறிக்கும். இவையொன்ற ஸ்ரீ ஹயங்கள் ஸில, சாக்த புராணங்களில் சொல்லப்பட்டிருக்கின்றன. இப்படிப்பட்ட சதுர் ஸ்ரீ ஹயாத்மகமாக அம்பாளிருப்பதை இங்கு சொல்லப்பட்டதாகவும் சொல்லலாம்.

2. அல்லது, மேலே சொல்லிய ஸ்ரீ ஹயங்கள் பற்றிய சோடஸாக்ஷரத்தில் சொல்லப்பட்ட சரீர புருஷன், சக்தி புருஷன், வேதபுருஷன், மஹாபுருஷன் என்பவைகளைக் குறிப்பதாகவும் சொல்லலாம்.

साम्राज्यदायिनी

ஸாம்ராஜ்யதாயிநீ (692)

(பக்தர்களுக்கு) ஸாம்ராஜ்யத்தைக் கொடுப்பவள்.

ராஜஸூய யாகம் செய்த சக்ரவர்த்திக்கு அல்ல ராஜாதி ராஜனுக்கு ஸ்ரீ ராட் என்றும், அவனுடைய ஆட்சிக்கு ஸாம்ராஜ்ய மென்றும் பெயர்.

यो नेष्टुं राजसूयेन मण्डलस्येश्वरः शुचिः ।
सान्ति यच्छाक्नुया राज्ञः स सम्राट्.....॥'

[அக்னி புராணம்]

सत्यसन्धा

ஸத்யஸந்தா (693)

மீறமுடியாத ப்ரதிக்ஞா, மர்யாதைகளையுடையவள்.

1. அதாவது, அம்பாளால் சொல்லப்பட்ட ப்ரதிக்ஞைகள் மர்யாதைகள் (எல்லைகள், கட்டளைகள்) இவைகள் யாராலும் மீற முடியாவென்று தாத்பர்யம்.

2. அல்லது, எதுபலனைடோக (தன்னல் செய்யப்பட்ட ஸத்யத்தைக் காட்டாற்றதிறனாக) இருப்பவன் என்றும் சொல்லலாம். அப்டான் ஸகல புவனங்களையும் காப்பாற்று வதாகப்ரதிக்ஞை செய்திருப்பதாகவும், அதற்கு எடுத்தோதலும் உத்புஷ்டதயாக இருப்பதாகவும் சொல்லப்பட்டிருக்கிறது.

'ஸந்தாவதி புவனஸந்தாரணே' [அம்பாஷ்டகம்]

'ப்ருவௌ புக்ரே சிஞ்சித் புவன பய பங்க வ்யஸனினி |' [47]

[ஸௌந்தர்யலஹரீ]

இத்தம் யதா யதா பாதா தானவோத்தா பவிஷ்யதி |
ததா ததா Z வதீர்யாஹம் கரிஷ்யாம்யரிஸம்க்ஷயம் 11'

[தேவீமாஹாத்ம்யம்]

सागरमेखला

வாகரமேகலா (694)

ஸமுத்ரங்களையே மேகலையாக (ஒட்யாணமாக, காஞ்சியாக) உடையவள்.

அதாவது, அப்படியிருக்கும் பூமி முடியாக இருப்பவள் என்று தாத்பர்யம்.

'ஸமுத்ரவஸனே தேவி பர்வதஸ்தனமண்டிதே |'

என்றபடி ஸமுத்ரங்களைப் பூமிக்கு வஸ்த்ரமாகவும், இங்கு சொல்லப்பட்டபடி மேகலையாகவும் வர்ணிப்பது வழக்கம்.

மேலே வந்த 684-வது நாமம் முதல் இந்த நாமம் முடிய இருக்கும் நாமங்களில் ராஜராஜேச்வரியான அம்பாளுடைய ஐச்வர்யங்களைப்பற்றிச் சொல்லப்பட்டது. இம்மாதிரி ஜகன்மாதாவின் வைபவத்தைப்பற்றி அடுக்கடுக்காக நாமங்கள் இந்த ஸஹஸ்ர நாமத்தில் வருவதுமாதிரி வேறு ஸஹஸ்ர நாமங்களில் இல்லையென்பதை நாம் கவனிக்கவேண்டிய முக்யமான விஷயம்.

(695)

ஜ்ஞானத்தை அடையும்படி செய்பவள்.

1. திகதிதன் என்றால் ஜ்ஞானத்தை அடையச் செய்பவன் என்பதாக ஆதர்வண ப்ராதிஸாக்யத்தில்,

'அதாதோ திக்ஷா கஸ்ய ஸ்வித் தேஹதோர் திகதி இத்யாசக்ஷதே'

என்று ஆரம்

'தம் வாஏதம் தீக்ஷிதம் ஸந்தம் தீக்ஷித இச்யாசக்ஷதே'

என்று சொல்லப்பட்டிருக்கிறது.

2. அல்லது, சிஷ்யர்களுக்கு க்ருடையோடு மந்த்ரோபதேசம் செய்து அதினால் அவர்களுடைய பாபங்களைப் போக்கடிப்பதால் தீக்ஷிதன் என்று பெயர் என்பதாகவும் சொல்லப்பட்டிருக்கிறது.

'சிஷ்யேப்யோ மந்த்ரதானேந பாபம் க்ஷபயதீதி வா |
தியதே க்ருபயா சிஷ்யே க்ஷீயதே பாபஸம்சய: |
தேந தீக்ஷேதி கதிதா.....ll' [பரானந்த தந்த்ரம்]

3. இவ்விதமான தீக்ஷிதரிடத்தில் அபின்னமாயிருப்பவள் என்று இங்கு சொல்லப்பட்டது.

दैत्यशमनी

தைத்யசமநீ (696)

(பண்டாஸுரன் முதலான) தைத்யர்களை நாசம் செய்பவள்.

सर्वलोकवशंकरी

ஸர்வலோகவசம்கரீ (697)

ஸகல லோகங்களையும் தன் வசமாக (தனக்கு அதீனமாக) செய்பவள்.

सर्वार्थदात्री

ஸர்வார்த்த தாத்ரீ (698)

(தன் பக்தர்களுக்கு) ஸகலவிதமான புருஷார்த்தங்களைச் செய்பவள்.

இதுவே தேவீ புராணத்தில் பின்வருமாறு சொல்லப்பட்டது—

தர்மாதீந் சிந்திதாந் அர்த்தாந் ஸர்வலோகேஷு யச்சதி |
அதோ தேவீ ஸமாக்யாதா ஸர்வை: ஸர்வார்த்தஸாதநீ ll'

सावित्री

ஸாவித்ரீ (699)

ஸாவித்ரீ ரூபமாக இருப்பவள்.

1. ஜகத்தை உண்டுபண்ணுவதால் ப்ரம்மாவுக்கு ஸவித்ரு என்று பெயர். அவருடைய பத்னியாகையால் அம்பாளுக்கு இந்தப்பெயர் ஏற்பட்டது.

'ப்ரஜாநாம் ச ப்ரஸவநாத் ஸவிதேதி நிகத்யதே |'
[விஷ்ணுதர்மோத்தரம்]

2. ஜகத்தை ஸ்ருஷ்டிப்பதாலும் ஸூர்யனுக்கு (ஸவிதாவுக்கு) ப்ரகாசத்தைக் கொடுப்பதாலும் ஸாவித்ரீ என்ற பெயர் என்பதாக,

ஸவித்ரு ப்ரகாசகரணத் ஸாவித்ரீ த்யபிதா பவேத் |
ஜகத: ப்ரஸவித்ரீதி வேதநாநேந வாபி ச ||'

என்று பாரத்வாஜஸ்ம்ருதியில் சொல்லப்பட்டிருக்கிறது. இதேபோதிரி 'ஸாவித்ரீ ப்ரஸவஸ்த்தித' என்று வாஸிஷ்ட ஸாமாயணத்திலும் சொல்லப்பட்டிருக்கிறது.

3. ஸகல தேவர்களாலும், வேதங்கள், யாகம், இவைகளாலும் பூஜிக்கப்படுவதாலும் ஸ்வபாவமாகவே சுத்தமான ஸ்வரூபமாயிருப்பதாலும் ஸாவித்ரீ யென்ற பெயர் என்பதாக

'த்ரிதசைர் அர்ச்சிதா தேவீ வேதயோகேந பூஜிதா |
பாவசுத்தஸ்வரூபா ச ஸாவித்ரீ தேந ஸ்ம்ருதா ||'

என்று தேவீ புராணத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

4. தேஜஸ் (ஒளி) ஆனது விரவிப்படுதால் (உண்டாகி ஓடி வருவதால்) ஸாவித்ரீ என்பதாக,

'ஸ்ரவணம் ஸ்யந்தநார்த்தே ச தாதுரேஷ நிபாத்யதே |
ஸ்ரவணே தேஜஸோத்பத்தி: ஸாவித்ரீ தேந கத்யதே ||'

என்று தேவீ பாகவதத்திலும் சொல்லப்பட்டிருக்கிறது.

5. ஸாவித்ரீ புஷ்கரே நாம்நா தீர்த்தாநாம் ப்ரவரே சுபே |' என்ற பத்ம புராண வசனப்படி புஷ்கர க்ஷேத்திரத்திலிருக்கும் அப்பாளுக்கு ஸாவித்ரீ என்று பெயர்.

सच्चिदानन्दरूपिणी
ஸச்சிதாநந்த ரூபிணீ (700)

ஸத், சித், ஆனந்தங்களே தன்னுடைய ரூபமாக உடையவள்.

ஸத் என்பது நித்யமானதையும், சித் என்பது ஞான (சைதன்ய) மானதையும் குறிக்கும். அம்பாள் நித்யமானதும் ஞானமயமானதும், ஆனந்தமயமானதுமான ஸ்வரூபத்தை யுடையவள் என்பதாக இந்த நாமத்தில் சொல்லப்பட்டது.

देशकालपरिच्छिन्ना
தேசகாலாபரிச்சிந்நா (701)

தேசம் காலம் இவைகளுடைய அளவுக்கு (பாகுபாட்டுக்கு) உட்படாதவள்.

1. அதாவது, இன்ன இடத்தில்தான், இன்ன காலத்தில்தான் இருப்பவன் என்று சொல்லமுடியாதபடி எல்லா இடத்தையும் என்று தாத்பர்யம். இன்ன இடத்தில் இந்த காலத்தில் என்ன தேசகாலமாயினும் [illegible] ஒரு வஸ்துவைக் குறித்து அது இன்ன வஸ்து இன்ன யென்பதை அன்யோன்யாபாவ [illegible] முன்பு இலலை (ப்ராகபாவம்), மறி இருக்கப் போகிறதில்லை (ப்ரத்வம்ஸாபாவம்) என்கிற [illegible] வங்கள் இருக்கின்றன. இவையெல்லாம் அந்யாபோஹத்தால் சொல்லமுடியாதாகையால் இந்த நாமம் ஏற்பட்டது. இதுதான் மேற்கண்ட வாக்யங்களில் சொல்லியிருக்கிறது.

'ஸ பூர்வேஷாமபி குரு: காலேநாநவச்சேதாத்'
[யோகஸூத்ரம்]

'புமான் ஆகாசவத் வ்யாபீ ஸ்வாதிரிக்தம் ம்ருஷா யத: |
தேசத: காலதச்சாபி ஹ்யகண்டோ வஸ்துத: ஸ்ம்ருத: ||'
[ஸௌரஸம்ஹிதை]

அனந்தன் என்ற பெயருள்ள இந்த அர்த்தத்தோடு கூடியது.

सर्वगा

ஸர்வகா

(702)

எங்கும் செல்லுபவள் (இருப்பவள்).

1. மேலே சொல்லியபடி அப்பாள் தேசகாலங்களினால் அபரிச்சின்னமாயிருப்பதால் எல்லிடத்திலும், எல்லா காலத்திலும் வ்யாபித்திருப்பவள் என்று இந்த நாமத்தின் சொல்லப்பட்டிருக்கிறது.

2. ஒரு ஸமயம் ஸ்ருஷ்டி சக்தியானவன் த்யானத்தில் தபஸ் செய்யும்போது ப்ரம்மஸ்வரூபமான தேஜஸ்ஸில் தேவர்களை, அவர்களுடைய

வேண்டிய வரத்தைத் தெரிவிக்கும்படி சொல்லி,

'பகவந் ஏகதேசேऽஹம் தோத்ஸேஹ ஸ்தாதுமந்ஜஸா |
அதோऽர்த்தம் த்வாம் வரம் யாசே ஸர்வகத்வம் அதீப்ஸதி ||'

என்றபடி எங்குமிருக்கும்படியான வரத்தைக் கேட்டதால்

'ஏவமுக்தஸ்ததா ப்ரம்ஹா ஸ்ருஷ்ட்யை தேவ்யை ப்ரஜாபதி: |
உவாச ஸர்வரூபே த்வம் ஸர்வகாஸி பவிஷ்யஸி ||'

என்றபடி அப்போர்ப்பட்ட ஏரத்தை ப்ரம்ஹாவானவர் கொடுத்ததாகவராஹ புராணத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. மேலே சொல்லப்பட்ட வாக்யத்தில் அம்பாள் ஸர்வவிதமான ஸுபங்களோடும் அபின்னமாயிருப்பதைச் சொல்லி, ஸகல சேஷத்ரங்களிலும் (ஜீவன்களிலும்) அம்பாளுடைய ஸகுணமான மூர்த்திகள் இருப்பதாகச் சொல்லப்பட்டது. அதாவது அம்பாள் ஸர்வஸுபிணியாகவும், ஸர்வவ்யாபிநியாகவும், ஸர்வாந்தர்யாமிணியாகவும் இருப்பதைத் தேவீபுராணத்தில் பின்வருமாறு வர்ணிக்கப்பட்டிருக்கிறது.

'தேவ்யா வா ஏஷ ஸித்தாந்த: பரமார்த்தோ மஹாமதே |
ஏஷா வேதாச்ச யக்ஞாச்ச ஸ்வர்கச்சைவ ந ஸம்சய: ||
தேவ்யா வ்யாப்தமிதம் ஸர்வம் ஜகத் ஸ்தாவரஜங்கமம் |
பூஜ்யதே பூஜ்யதே தேவீ அந்தபாகாத்மிகா ச ஸா ||
ஸர்வத்ர சாங்கரீ தேவீ தநுபிர் நாமபிச்ச ஸா |
வ்ருக்ஷேஷ்வவ்யாம் ததாவாயௌ வ்யோம்ந்யப்ஸ்வக்நௌ
[ச ஸர்வகா ||
ஏவம் விதா ஹ்யஸௌ தேவீ ஸதா பூஜ்யா விதாநத: |
ஸத்ருசீம் வேத்தி யஸ்த்வேநாம் ஸ தஸ்யாமேவ லீயதே ||'

सर्वमोहिनी

ஸர்வமோஹிநீ (703)

எல்லோரையும் மோஹமடையச் செய்பவள்.

I. மேலே சொல்லியபடி நித்யம், அநித்யம், ஜடம், சித் முதலான பரஸ்பர விருத்தமான குணங்களோடு ப்ரம்ஹ ஸ்வரூபிணியான அம்பாள் இருப்பதாகத் தோன்றுவதற்குக் காரணம் அம்பாளுடைய மாயை என்பதாக இந்த நாமத்தில் சொல்லப்பட்டது. அதாவது, ஸாஸ்தமான ப்ராக்ருத (ஞானமில்லாத) ஜனங்களும் அம்பாளுடைய மாயையின் காரணமாக மோஹமடைந்து அந்த மோஹத்தால் ப்ரம்ஹமும், ஜகத்தும் வெவ்வேறாகத் தோன்றுவதை வாஸ்தவமென்று நினைத்து, அத்வைத விஷயகமான ஞானமில்லாமலிருக்கிறார்கள் என்று தாத்பர்யம். இவ்விதமிருக்கும் அம்பாளுடைய மோஹன சக்தியைப்பற்றி சிவரஹஸ்ய கூர்மபுராணத்தில் பின்வருமாறு சொல்லப்பட்டிருக்கிறது.

'இயம் ஸா பரமா சக்தி: மந்மயீ ப்ரம்ஹரூபிணீ |
மாயா மம ப்ரியாSநந்தா யயேதம் மோஹிதம் ஜகத் ||

அநயைதத்ஜகத்ஸர்வம் ஸதேவாஸுர மானுஷம் |
மோஹயாமி த்விஜச்ரேஷ்டா: ஸ்ருஜாமி விஸ்ருஜாமி ச ||'

2. லோகத்தில் ச்ருதி, ஸ்ம்ருதிகளுக்கு விருத்தமாக இருக்கும் சாஸ்திரங்களெல்லாம், ஜனங்கள் மோஹமடைந்து த்வைத பாவத்தோடிருப்பதற்காக ஏற்பட்டதாகச் சொல்லப் பட்டிருக்கிறது. இதுவும் கூர்மபுராணத்தில் (ஹிரண்யாக்ஷனுக்கு அம்பாளால்) சொல்லப்பட்டிருக்கிறது.

'யானி சாஸ்த்ராணி த்ருச்யந்தே லோகேஸ்மிந் விவிதானி து |
ச்ருதி ஸ்ம்ருதி விருத்தானி த்வைதவாத ரதானி ச ||
காபாலம் பைரவம் சைவ சாகலம் கௌதமம் மதம் |
ஏவம் விதானி சான்யானி மோஹநார்த்தானி தானி து ||
யே குசாஸ்த்ராபியோகேந மோஹயந்தீவ மாநவாந் |
மயா ஸ்ருஷ்டானி சாஸ்த்ராணி மோஹாயைஷாம் பவாந்தரே ||'

இம்மாதிரி மோஹகரமான சாஸ்திரங்கள் உண்டு பண்ணப்பட்டதைப்பற்றி ஆசார்யாள் 'ஸௌந்தர்யலஹரி'யில் 'சதுர: ஷஷ்டிம் தந்த்ரை:' என்ற (31) ச்லோகத்தில் சொல்லி யிருக்கிறார்கள்.

3. இவ்விதம் மோஹமடைந்த ஜனங்கள் ஈச்வரனுடைய நிஜமான ஸ்வரூபம் தெரியாமல், ஜனன மரணங்களால் பீடிக்கப்படுவதை ஸூதஸம்ஹிதையிலும் சொல்லப்பட்டிருக்

'ப்ரஸாதஹீநா: பாபிஷ்டா மோஹிதா மாயயா ஜநா: |
கைவ ஜாநந்தி தேவேசம் ஜந்மநாசாதி பீடிதா: ||

4. ஸர்வ என்ற பதத்திலுள் த்ரைலோக்யத்தையும், (மூன்று லோகங்களிலுமுள்ளவற்றையும்) சொல்லப்பட்ட தாகவும் சொல்லலாம். இந்த அர்த்தத்தில் இந்த நாமாவால் அம்பாள் த்ரைலோக்ய மோஹனமென்கிற சுத்த ரூபிணியா கவும் அதின் வித்யா ரூபிணியாகவும் இருப்பதைச் சொல்லு வதாகவும் சொல்லலாம்.

सरस्वती

வரவ்வதீ (704)

ஞானபீமாநிநியான ஸரஸ்வதீ தேவியின் ரூபமாக இருப்பவள்.

1. அதாவது ஞானஸமுத்ர ரூபிணியென்று தாத்பர்யம். இங்கு, விஷயங்களின் ஸம்பந்தமில்லாத (அதீந்த்ரியமான) ஞானமானது சொல்லப்பட்டது.

2. மேலே சொல்லியபடி உண்மையில் பேதமில்லாத ஜகத், ப்ரம்ஹம் இவையிரண்டும் மோஹத்தின் (அக்ஞானத்தின்) காரணமாக பேதமுள்ளதாய்த் தோன்றுவது மாதிரி, கட பட்டாதி வஸ்துக்களின் பேதமும் அவ்விதமான மோஹத்தினால் தான் தோன்றுகிறது. அந்த ஜடபதார்த்தங்களைப் பற்றியவரையில் மோஹத்திற்கு இடமில்லையென்று சொல்லக் கூடுமானாலும்,

அக்ஞாநேநாவ்ருதம் ஞானம் தேந முஹ்யந்தி ஜந்தவ: |

என்ற கீதா வசனத்தின்படி ஞானமே அக்ஞானத்தால் சூழப்பட்டிருப்பதால் இவ்விதமான அக்ஞானமானது எல்லா வஸ்துக்களைப்பற்றியுமிருக்கிறது. ஞானமேற்பட்டால் அத்வைத பாவம் ஏற்படும். அப்போது லௌகிகமான அனர்த்தங்களும் நசித்து, பர புருஷார்த்தமான மோக்ஷமானது கிடைக்கும். இது அப்படாருடைய பக்தர்களுக்குத் தான் கிடைக்குமாதலால் அப்படாருடைய அனுக்ரஹத்திற்கு பாத்ரமாயில்லாதவர்களான பாபிகளுக்கு இவ்விதமான ஞானமானது ஏற்படாதிருப்பதற்காக மோஹமானது அவச்யமாக இருக்கிறது.

3. 'த்விவர்ஷா து ஸ்ரஸ்வதீ' என்ற தைளட்ய வசனத்தின்படி இரண்டு வயதுள்ள கன்யா ஸ்வரூபமாயிருப்பவள் என்றாம் சொல்லலாம்.

4. ஸகல ப்ராணிகளின் நாக்குகளிலிருந்துகொண்டு அவர்கள் பேசுவதற்குக் காரணமாயிருப்பதால் ஸரஸ்வதீ என்ற பெயர் என்பதாக—

'யா வஸேத் ப்ராணி ஜிஹ்வாஸு ஸதா வாகுபவர்தநாத் |
ஸரஸ்வதீதி நாம்நேயம் ஸமாக்யதா மஹர்ஷிபி: ||'

என்று பரத்வாஜ ஸ்ம்ருதியில் சொல்லப்பட்டிருக்கிறது. இது தவிர, ஸகல த்ருஷ்டிகளின் (இந்த்ரியங்களின்) மூலமாக ஸரிப்பதால் (வெளிவருவதால்) ஸரஸ்வதீ என்ற பெயர் என்பதாக,

'ஸரணாத் ஸர்வத்ருஷ்டிநாம் கதிதைஷா ஸரஸ்வதீ |'

என்று வாலிஷ்ட ராமாயணத்திலும் சொல்லப்பட்டிருக்கிறது

शास्त्रमयी
சாஸ்த்ரமயீ

சாஸ்த்ரங்களில் பூர்ணமாக வ்யாபித்திருப்பவள்.

1. விருத்தமான தர்மங்களின் சேர்க்கை முதலான ஆயிரக் கணக்கான யுக்திகளால் பேத (த்வைத) பாவமானது அனுமானிக்கப்படுவதால், அதை உண்டுபண்ணும் சொல்லே (சொல்லிப) பேதமானது ஸாமான்யமானதன்று. அனைத்து சாஸ்த்ரங்களின் மூலமாக ஏற்படும் ஞானமானதாலும், அவ்விதமான சாஸ்த்ரங்களே 'ஸர்வம் கல்விதம் ப்ரஹ்ம' முதலான வாக்யங்களின் மூலமாக அத்வைதமான ஸ்வரூபத்தின் ப்ரதானமான நிரூபணங்களாக இருப்பதாலும் இந்தப் பெயர் ஏற்பட்டது.

2. ப்ரத்யக்ஷம், அநுமானம், சப்த (சாஸ்த்ர)ங்களென்ற மூன்றுவித ப்ரமாணங்களில் சாஸ்த்ரங்களின் ப்ரமாணமே பலிஷ்டமென்பதாகச் சொல்லப்படும். இதுவேதான் (சாஸ்த்ர யோநித்வாத்' என்ற ப்ரஹ்மஸூத்ரத்தில் சொல்லப்பட்டது. இவ்விதம் வேதங்களின் மூலமாகத்தான் ப்ரஹ்மமானது அறியப்படுமென்பதை 'தத் த்வௌபநிஷதம் புருஷம் ப்ருச்சாமி:' என்பது முதலான ச்ருதி வாக்யங்களில் காணலாம்.

ஸகலவிதமான வஸ்து ஜாதங்களுக்கும் ப்ரஹ்மமே அதிஷ்டானமாக இருப்பதை சாஸ்த்ரங்கள் சொல்வதாலும், அதுவே ஸ்ரீவித்யையின் மூலமுதலாக இருப்பதாலும், அதற்கு விரோதமாக அனுமானிக்கப்படும் த்வைத பாவமானது ப்ரமத்திலேயே ஏற்படுகிறதே தவிர வேறல்ல. ஏனென்றால் எல்லா வேதாந்தங்களும் ப்ரஹ்மம் ஒன்றே என்பதை நிர்ணயிக்க ஒன்றோடொன்று ஒத்திருக்கின்றன. சாத்ர ரம்பாடலான ஸ்ரீ ஜனங்களுடைய பார்வைக்கும் சிறியதாயிருப்பதாகத் தோன்றினாலும் வாஸ்தவத்தில் ஜ்யோதிஸ் சாஸ்த்ரங்களில் சொல்லப்பட்டபடி மிகவும் பெரிய ரூபத்தோடிருப்பதால் அப்பார்வைக்கு ஏற்படும் தோற்றமானது ப்ரமம் என்று ஏற்படுகிறது. அதேவிதமாய் ஜகத்தானது ப்ரஹ்மத்தினின்றும் வேறுபட்டது என்பதாகத் தோன்றுவதானது சாஸ்த்ர விருத்தமாயிருப்பதால் அதுவும் ப்ரமமென்று ஏற்படுகிறது.

ஸ்கந்தருடைய (ஸுப்ரஹ்மண்யருடைய) தாயார்.

1. முன்னொருக்கால் தாரகாஸுரனால் பீடிக்கப்பட்ட தேவர்கள் அவனுடைய வதத்திற்காக அம்பாளை ப்ரார்த்தித்ததும், பிறகு சிவ சக்திகளுடைய ஸம்யோகமும், அதற்கு ஏற்பட்ட விக்னமும், அதினாலுண்டான கோப சாபாதிகளும், சிவனுடைய ரேதஸ்ஸான து அக்னி, கங்கா, சரவணம் முதலிய வைகளில் அடுத்தடுத்து தங்கி அதிலிருந்து ஸ்கந்தர் உத்பத்தியானதும் இவை முதலான கதைகளும் சாஸ்த்ர புராணாதிகளில் காணப்படுகின்றன.

2. அல்லது, குஹையிலிருக்கும்படியான அம்பாளென்று சொல்லலாம். குஹை என்ற பதத்தைப்பற்றி ஏற்கனவே வந்த 'குஹ்யா' என்ற (624) நாமத்தில் சொல்லியிருப்பதைப் பார்க்கவும்.

3. ஹ்ருதய குஹாவை குஹை என்று சொல்லப்படும். அதில் சாயா (நிழல்), ஆதபா (வெளிச்சம்) என்ற இருவர் இருப்பதாகச் சொல்லும்,

'ருதம் பிபந்தௌ ஸுக்ருதஸ்ய லோகே
குஹாம் ப்ரவிஷ்டௌ பரமே பரார்தே |
சாயாதபௌ ப்ரம்ஹவிதோ வதந்தி
பஞ்சாக்நயோ யே ச த்ரிணசிகேதா: ll'

என்ற ச்ருதிவாக்யத்தில் சொல்லப்பட்ட சாயா ரூபிணியாக அம்பாளிருப்பதாகவும் சொல்லலாம்.

गुह्यरूपिणी
குஹ்யரூபிணீ (707)

பரம ரஹஸ்யமான ரூபத்தையுடையவள்.

1. அதாவது, ப்ரபாவ ஹாரிகமான த்ருஷ்டிக்குக் கோசரமில்லாததான ஞானமே அம்பாளுடைய ரூபமென்பது தாத்பர்யம். அதான்,

'குரு மூர்த்திதராம் குஹ்யாம் குஹ்யவிக்ஞான ரூபிணீம் |
குஹ்ய பக்தஜந ப்ரீதாம் குஹாயாம் நிஹிதாம் நம: ll'

என்ற ஸஹஸ்ரநாமத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

2. மேலே சொல்லிய ச்ருதிவாக்யத்தில் சாயை, என்றும், ஸ்கந்தர், அவருடைய தாயார் என்றும் இரண்டாகத் தனித்தனி லக்ஷணங்களோடு சொல்லப்பட்டதிலிருந்தும்,

இதுமாதிரி இதர ச்ருதி வாக்யங்களிலிருந்தும் த்வைத பாவ மானது விலக்கப்படுகிறதென்பதாகச் சொன்னோம், அவையெல்லாம் உபசாரமாகச் சொல்லப்பட்ட பதங்களே தவிர, வாஸ்தவத்தில் அத்வைத பாவத்தைக்காட்டும் வாக்கியங்களே. உதாரணமாக 'யஜமான: பரஸ்தாத்' என்ற ச்ருதியில் சொல்லப்பட்டிருக்கிறது. ஆயினும் அது ப்ரத்யக்ஷத்திற்கு விரோதமாக இருக்கிறது. ஆகவே மேலே சொல்லியவையெல்லாம் நிஜமென்பதாகத் தோன்றினாலும் வ்யாவஹாரிக ஸத்யங்களே தவிர பாரமார்த்திகமான ஸத்யமல்ல. அத்வைதமோ பாரமார்த்திகமான ஸத்யத்தை அவலம்பித்தது. அதின்படி பரஸ்பர விலக்ஷணங்களோடு கூடிய ரூபங்களெல்லாம் ஒரே ப்ரம்ஹத்தினுடைய ரூபங்களென்றும் இரண்டுவிதமாகச் சொல்லும் ச்ருதிவாக்யங்களெல்லாம் அந்த ஒரே ப்ரம்ஹத்தைத்தான் வாஸ்தவத்தில் சொல்லுகின்றனவென்றும் சொல்லவேண்டும்.

3. இவ்விதமான (ப்ரம்ஹத்தின் பாரமார்த்திக) ஸத்ய ரூபமானது மிகவும் ரஹஸ்யமானதால் அம்பாளுக்கு இந்தப் பெயர் ஏற்பட்டது.

4. குஹ்யமென்பதால் குஹ்யோபநிஷத்தைச் சொன்னதாகவும் சொல்லலாம். உபநிஷத்துகளில் குஹ்யோபநிஷத்தானது அம்பாளுடைய ரூபமென்பதாக,

'ஸர்வோபநிஷதாம் தேவி குஹ்யோபநிஷதுச்யதே |'

என்ற கூர்மபுராணத்தில் (அம்பாளுடைய விபூதியோக வர்ணனையில்) சொல்லப்பட்டிருக்கிறது.

सर्वोपाधिविनिर्मुक्ता

ஸர்வோபாதி விநிர்முக்தா (708)

ஸகலவிதமான உபாதிகளிலிருந்தும் விடுபட்டவள்.

1. உபாதி என்றால் தேசம், காலம், வஸ்து முதலிய அளவு (அல்லது எல்லை)களைக் குறிக்கும். இவ்விதமான அளவுகள் யாதொன்றுக்கும் அடங்காத ஸ்வரூபத்தையுடையவள் அம்பாள் என்பதற்காக இந்த நாமத்தில் சொல்லப்பட்டது.

2. அம்பாளை இதற்கு முன்வந்த நாமங்களில் குஹாம்பா (ஸ்கந்தருடைய மாதா), சாயா ஆதபமென்பதாக உபாதிகளிலடங்கியதாக ச்ருதிகள் சொல்வதாகச் சொல்லப்பட்டது.

இப்படி அம்பாளுடைய ரூபமானது வேதங்களோடு கூடிய தென்று சில ச்ருதிவாக்யங்களும், மற்றும் சில ச்ருதிவாக்யங்கள் அந்த ரூபத்தை அவேதமென்றும், இரண்டுவிதமாகச் சொல்லும்போது, அத்வைதமானது எப்படி விளங்குகிறது என்று ஸந்தேஹம் உண்டாகலாம். ஆயினும் அவைகளில் வேதமான ரூபங்களைப்பற்றிச் சொல்லும் வாக்யங்களை அவேதத்தைப்பற்றிய வாக்யங்களைப்போல் அர்த்தம் சொல்லக் கூடாது. அவை ஸாதாரணமாக முத்துச்சிப்பியில் வெள்ளியிருப்பதாகத் தோன்றுவதைச் சொல்வதுபோல் சொல்லுகின்றனவே தவிர வேறல்ல. வெள்ளியாக இருக்கும் தன்மையானது தோற்றத்திற்குத் தெரியுமே தவிர அது முத்துச்சிப்பியினுடைய உண்மையான தன்மையாகாதல்லவா. இவ்விதம் முத்துச்சிப்பி, வெள்ளியின் தோற்றம் இவைகளுக்கு இருப்பதாகப் புலப்படும் ஸம்பந்தமானது மித்யை (பொய்)யாக இருப்பதுமாதிரி, சில ச்ருதிவாக்யங்களில் சொல்லப்பட்ட வேதபாவமானது ஸ்தூலமாகச் சொல்லப்பட்டதே தவிர வாஸ்தவத்தில் எல்லா வேதாந்தங்களிலும் பாரமார்த்திகமான ப்ரம்மம்ஸ்வரூபம்தான் சொல்லப்பட்டிருக்கிறது. க்ரமணங்களைப் பற்றிய சாஸ்த்ரங்களில் 5 அல்லது 6 அங்குலங்களென்று அளவு சொலவதான்து ஸ்தூலத்ருஷ்டிக்காகச் சொல்வது போல, மேலே சொல்லிய த்வைத பாவ வாக்யங்களெல்லாம் வ்யாவஹாரிகமாய்த் தோன்றுவதைச் சொல்லுகின்றனவே தவிர, அவைகளை அத்வைத பாவ வாக்யங்களோடு ஒரே மாதிரியாகத் தாத்பர்யம் சொல்லக்கூடாது. ஆகவே ப்ரம்மஸ்வரூபிணியான அம்பாளானவள் ஸகண்டமோ, அகண்டமோனல்வகையான தர்மங்களுடைய ஸம்பந்தமுமேயில்லாமல் (தர்ம ஸம்பந்த சூன்யையாக) இருப்பதை இந்த நாமத்தில் சொல்லப்பட்டது.

3. அல்லது தர்க்க சாஸ்த்ரங்களில் சொல்லப்பட்ட உபாதிகளுக்குட்படாதவள், அதாவது (அந்த சாஸ்த்ரங்களில் சொல்லப்பட்ட) ஸத்தேஹதுவினல் அறியப்படுகிறவள் என்றும் சொல்லலாம்.

सदाशिवपतिव्रता

ஸதாசிவ பதிவ்ரதா (709)

ஸதாசிவருடைய பதிவ்ரதை (நெறிதவறுத பத்னி)யாக இருப்பவள்.

1. அல்லது, சிவனே தன் பதியென்ட'தான நியாத்துடன் எப்போதும் இருப்பவள் என்றுர் சொல்லலாம்.

2. மேலே சொல்லியபடி, சக்திரூபிணியான த்ரிபுர ஸுந்தரியானவள் தர்மஸம்பந்த சூன்யையாக இருக்கும் பக்ஷத்தில், அவளைப்பற்றி பரமசிவனுடைய பாரஹந்தா ரூபமென்ற தர்மத்தைதத்தவிர மற்றபடி சொல்லப்படும் தர்மங் களைச் சொல்லுவதானது மித்யை என்பதாக இந்த நாமத்தில் சொல்லப்பட்டது. சிவனுக இருப்பதானது (அதாவது, ப்ரம்ஹமானது) காலத்ரயத்திலும் பாதிக்கப்படாமலிருப்பது போல், சிவனுடைய பத்னியாக இருப்பதும் (அதாவது, ப்ரம் ஹத்தினுடைய சக்தியும்) ஸார்வகாலிகமானது. இதர பதார்த்தமானது, தர்மத்வமானது நம்மால் கல்பிதமாயிருப்ப தனுடன் அந்த பதார்த்தங்களுமே கல்பிதமாயிருக்கின்றன. சக்தியைப்பற்றியோ வென்ருல் அதில் தர்மத்வம் கல்பிதமா கிறதே தவிர சக்தி கல்பிதமன்று. சக்தியானது ப்ரம்ஹத்தினு டைய கோடியே (முடிவு, அதாவது ப்ரம்ஹமே) தவிர வேறல்ல.

संप्रदायेश्वरी

ஸம்ப்ரதாயேச்வரீ (710)

ஸம்ப்ரதாயத்திற்கு ஈச்வரியாக இருப்பவள்.

1. ஸரியானபடி சிஷ்யபரம்பரையாகச் செய்யப்படும் உபதேசத்திற்கு ஸம்ப்ரதாயமென்று பெயர். அதற்கு ஈச்வரீ, அதாவது அதின் மூலமாக அறியப்படக்கூடியவள் என்று இந்த நாமத்தில் சொல்லப்பட்டது. அம்பாளுடைய நிஜஸ்வ ரூபமானது ந்யாயங்களாலும் ஸம்ப்ரதாயத்தின் மூலமாயும் அறியக்கூடியது என்று தாத்பர்யம்.

2. அம்பாளுக்கு இருப்பதாகச் சொல்லப்படும் தர்மங் களெல்லாம் மித்யை என்று மேலே சொல்லப்பட்டதற்கு ஆதாரம் என்னவென்று வற்படும் சங்கைக்கு இந்த நாமத்தில் ஸமாதானம் சொல்லப்பட்டது. ஸம்ப்ரதாய ஞானத்தின் மூலமாயும் அறியக்கூடியது என்று சொல்லப்பட்டது.

3. நிர்தர்மகமான பரப்ரம்ஹத்தினிடம் ஆகாசம் முதலான தர்மங்களை நாம் கல்பிக்கிறோம். திரும்பவும் அந்த ஆகாசம் முதலியவைகளில் சப்த விஷயத்வம், த்ரவ்யத்வம், தர்மத்வம் முதலானவைகளையும், திரும்பவும் அவைகளால் அவச்சிந்நமாகும் சைதன்யங்களுக்கு தர்மங்களையும் கல்பித்துக்கொண்டு போகிறோம். ஆகவே ஒரு வஸ்துவினிடத்தில் தர்மத்வமும், தர்மித்வமும் ஏக காலத்திலிருப்பதுமாதிரி நிர்தர்மகமான ப்ரம்ஹத்தினிடத்திலும் தர்ம, தர்மி பாவங்கள் விதிக்கின்றன. இவ்விரண்டில் தர்மீ (தர்மத்தையுடையவர்) சிவனென்றும், தர்மமானது சக்தியென்றும் ஸம்ப்ரதாயமறிந்தவர்கள் சொல்லுவார்கள்.

4. பஞ்சதசியின் அர்த்தங்கள்,

'பாவார்த்த: ஸம்ப்ரதாயார்த்தோ நிகர்பார்த்தச்ச கௌலிக:।
ததா ஸர்வரஹஸ்யார்த்தோ மஹாதத்வார்த்த ஏவ ச ॥'

என்றபடி யோகினீ ஹ்ருதயம், தத்தாத்ரேய ஸம்ஹிதை முதலியவைகளில் சொல்லப்படுவதில் ஸம்ப்ரதாயமென்று சொல்லப்படும். அந்த அர்த்தங்களுக்கு ஈச்வரீ என்றும் சொல்லலாம்.

'ஜ்ய ஜ்ஞகயோர் பேதாபாவாத் வாச்யஸ்ய வாசகேநாபி |
ப்ரம்ஹணி ஜ்ஞதோ ஜ்ஞதிச விபேதஸ்து ஸம்ப்ரதாயார்த்த: ॥'

நமான அர்தத்தையும் அது காதிவித்யைக்குத் தான் பொருத்தமானதென்பதையும் விவஸ்யா ரஹஸ்யத்தில் சொல்லியிருக்கிறது.

साधु

வாது (711)

(மேலே சொல்லியிருப்பது) உசிதமாயிருப்பவள்.

1. லோகத்தில் எரிப்பது முதலான சக்திகள் அக்னி முதலானவைகளின் தர்மங்களாகத் தெரிவதுபோல், பரா ஹந்தாரூபிணியான சக்திக்குத் தர்மத்வத்தை (மேற்கண்டபடி) சொல்வது உசிதமென்பதாக இந்த நாமத்தில் சொல்லப்பட்டது.

2. இந்த நாமம் நபும்ஸகமானதால் ப்ரயோகத்தில் இதை 'ஸாதுதே நம:' என்று சொல்லவேண்டும். ஆகவே

பின்னல்வருகும் 'ஸாத்வீ ஸத்கதிதாயிநி' எனறதிலவருமஸாத்
என்ற நாமத்திற்கு பௌநருக்த்யம் ஏற்படாது. (ஏனென்றால்
இப்போது வரும் ஸாத்வீ என்பதைப் பிரித்து ஸாது + ஈ
என்று இரண்டு நாமங்களாகச் சொல்லப்பட்டிருக்கிறது.)

ஈ (712)

(காமகலாரூபமான) ஈ கார ரூபிணியாயிருப்பவள்.

1. ஈ என்பது நான்காவது ஸ்வரம். அ என்ற முதலாவது ஸ்வரமானது விஷ்ணுவைக்குறிக்கும். அவருடைய பகினி (ஸஹோதரி) யான சக்தியை ஈ என்ற நான்காவது ஸ்வரமானது குறிக்கும். இவ்விருவர்களுடைய சேர்க்கையான ரூபத்தை (அ + ஈ =) ஈ என்பதே குறிக்கும்.

2. ஒரு பெயருடன் ஈ என்பதைச் சேர்த்தால் பார்யா ரூபம் ஏற்படுவது தவிர புத்ரீ, ஸஹோதரீ என்ற ரூபங்களும் ஏற்படும். வஸுதேவருடைய புத்ரியான ஸுபத்ரையை வஸுதேவீ என்றும், இந்த புத்ரனை ஜயந்தனுடைய ஸஹோதரியை ஜயந்தீ என்றும் சொல்வதுண்டு. அதேமாதிரி,

'நாராயணீ ஸஹசராய நம: சிவாய |'

என்பதில் வரும் நாராயணீ என்ற பதமானது நாராயணனுடைய ஸஹோதரீ என்று அம்பாளைக் குறிக்கும். மேலே சொல்லப்பட்டபடி ஒரே தர்மியினிடத்தில் இருக்குமிடமான இரண்டு தர்மங்களை ஸஹோதரர்கள் என்று சொல்வது யுக்தமாகத்தானிருக்கிறது.

3. ஆகவே இந்த ஈ என்ற நாமத்தினால் அம்பாளை விஷ்ணுரூபிணீயென்றும் அவருடைய பகினீ ரூபிணியென்றும் சொல்லப்பட்டது.

4. மூன்றிய நாமங்களில் சொல்லப்பட்டபடி ஒன்றான ப்ரம்ஹமானது தர்மம், தர்மீ என்ற இரண்டு ரூபங்களையும் அடைந்தது. அதில் தர்மமென்பது திரும்பவும் புமான், ஸ்திரீ என்று இரண்டாக ஆயிற்று. அவர்களை ஸ்த்ரீ ரூபமான அம்பாளானவள் பரமசிவனுடைய மனை யாகவும் புமானான விஷ்ணுவானவர் ஜகத்திற்கு உபாதான காரணமாகவும் ஆனார்கள். இவர்கள் மூவருமே சேர்ந்து அகண்டமான ப்ரம்ஹமாக ஆகிறார்கள் என்பது சைவ மதத்

தின் கொள்கை. இது கூர்மபுராணம் முதலியவைகளை அனுஸரித்தது. இதை அப்பய்ய தீக்ஷிதரவர்கள் தமது 'ரத்நத்ரய பரீக்ஷை'யில் விஸ்தாரமாக நிரூபணம் செய்திருக்கிறார்கள்.

5. மேலே சொல்லப்பட்ட காமகலையின் ஸ்வரூபமானது,

'சூன்யாகாராத் விஸர்காந்தாத் பிந்துப்ரஸ்யந்த ஸம்விதः |'

என்பது முதலான ச்லோகங்களில் வாமகேச்வர தந்த்ரத்திலும்,

'ஈகாராத் விச்வகர்த்ரீயம் மாயா த்ரர்யாத்மிகா ப்ரியா |'

என்பது முதலான ச்லோகங்களில் ஞானார்ணவத்திலும்,

'ஈகாரः ஸ மநுர்ஜ்ஞேயோ ரக்தவர்ணः ப்ரதாபவாந் |'

என்பது முதலான ச்லோகங்களில் வாயுபுராணத்திலும் சொல்லப்பட்டிருக்கிறது. இதைப்பற்றியே விஸ்தாரமாக 'காமகலா விலாஸம்' என்ற க்ரந்தத்தில் சொல்லியிருக்கிறது. ஆசார்யாளும் இது ஸம்பந்தமான மாதனப்ரயோகத்தைப் பற்றி 'ஸௌந்தர்யலஹரி'யில் 'முகம் பிந்தும் கருத்வா' என்ற (19) ச்லோகத்தில் சொல்லியிருக்கிறார்கள்.

6. இந்த காமகலா ரூபமானது அம்பாளுடைய ஸூக்ஷ்ம தரமான ரூபம். இதின் த்யானப்ரகாரமானது பின்வருமாறு:-

'அக்ரபிந்து பரிகல்பிதாகாம் அந்யபிந்து ரசித ஸ்தநத்வயீம் !
நாதபிந்து ரசநா குணஸ்பதாம் நௌமி தே பரசிவாம் பராம் கலாம் !!' (கல்பஸூத்ரம்)

7. ப்ரயோகத்தில் இந்த நாமத்தை 'யை நமः' என்று சொல்லவேண்டும்.

இவ்விதம் அதிரஹஸ்யமான அம்பாளுடைய ஸ்வரூபமானது குருமுகமாகத்தான் அறியக்கூடியது என்பது இதன் அடுத்த நாமத்தில் சொல்லப்படுகிறது.

गुरुमण्डलरूपिणी
குருமண்டல ரூபிணீ (713)

குருக்களால் பாரம்பர்யக்ரமமாக நிரூபணம் செய்யப்பட்ட ஸ்வரூபத்தையுடையவள்.

அதாவது, பரமசிவன் முதலாகத் தன்னுடைய குரு பர்யந்தம் இருக்கும்படியான குருக்களால் அவிச்சின்னமாய் (இடைவிடாமல்) பாரம்பர்யக்ரமமாக சிஷ்யர்களுக்கு இந்த ரஹஸ்யமானது உபதேசிக்கப்பட்டு வந்ததாகச் சொல்லப்

பட்டது. இந்த ரஹஸ்யமானது கர்ணபரம்பரையாக உபதேசிக்கப்பட்டதே தவிர புஸ்தகங்களில் எழுதப்பட்டதன்று. இதுவேதான் 'யோகினீஹ்ருதய'த்தில் பின்வருமாறு சொல்லப்பட்டது.

'ச்ருணு தேவி ப்ரவக்ஷ்யாமி யோகினீஹ்ருதயம் பரம் |
த்வத் ப்ரீத்யா கதயாம்யத்ய கோபிதவ்யம் விசேஷத: |
கர்ணத் கர்ணோபதேசேந ஸம்ப்ராப்தம் அவனீதலே ||'

இவ்விதம் ரஹஸ்யமாயிருப்பது பின்வரும் நான்கு நாமங்களிலும் சொல்லப்படுகிறது.

குலோத்தீர்ணா
குலோத்தீர்ணா (714)

குலத்தை அதிக்ரமித்து இருப்பவள்.

குலம் என்ற பதத்திற்கு ஏற்கனவே வந்த நாமங்களில் பலவிதமான அர்த்தங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. இங்கு குலம் என்பது இந்திய ஸமூஹத்தைக் குறிக்கும். அவற்றால் அறியமுடியாத (அவற்றிற்கு அப்பாலிருக்கும்) ரூபத்தை யுடையவளென்பதாக இந்த நாமத்தில் சொல்லப்பட்டது.

பகாராத்யா
பகாராத்யா (715)

ஸுர்யமண்டலத்தில் உபாஸிக்கப்படுகிறவள்.

1. ஸவித்ரு மண்டலத்தில் அர்பாளை த்யானித்து உபாஸிப்பதைப்பற்றி கல்பஸூத்ரம், நித்யோத்ஸவம் முதலிய க்ரந்தங்களில் பார்க்கவும். அந்த மண்டலம் ரஹஸ்யோபாஸனைக்குத் தகுந்த இடமாயிருப்பதால் அதைக் குறிப்பிட்டு இங்கு சொல்லியது.

2. பகமென்பது பதினேராவது ஸ்வரத்தை (எகாரத்தை)க் குறிக்கும். அது நாகரலிபியில் ए என்றிருப்பதை ஸம்ப்ரதாயமறிந்தவர்கள் த்ரிகோணாகாரமாக (த்ரிகோணம் போல்) எழுதுவார்கள். ஆகவே, த்ரிகோணத்தில் உபாஸிக்கப்படுகிறவள் என்றும் சொல்லலாம்.

3. அ என்னும் ஸ்வரமானது பரமசிவனையும், ஈ என்னும் ஸ்வரமானது சக்தியையும் குறிக்கும். ஆகவே அ, ஈ இரண்டும் சேர்வதினாலுண்டாகும் ஏ என்ற ஸ்வரமானது சிவசக்தி ஐக்ய மேளனமானது. எப்படி சிவசக்தி ஸமாயோகமானது ஜகத்

திற்குப் பீஜமாக இருக்கிறதோ அதேமாதிரி அந்த ஸம்மோஹன ரூபமான ஏகாரமும் பீஜமாகச் சொல்லப்பட்டது.

'யதேகாதசமாதாரம் பீஜம் கோணத்ரயாத்மகம் |
ப்ரம்ஹாண்டாதி கடாஹாந்தம் ஜகத் அத்யாபி த்ருச்யதே ||'

(வாமகேச்வரதந்த்ரம்)

4. பகவன்பதும் த்ரிகோணமென்பதும் யோனியையும் குறிக்கும்.

माया

மாயா (716)

மாயா ரூபிணியாக இருப்பவள்.

1. எவ்வளவு தெளிவாகத் தெரியக்கூடிய வஸ்துவையும் தெரியாமல் செய்வதற்கு அனுகூலமாக இருக்கும் சக்திக்கு மாயை என்ற பெயர்.

2. ஆயினும் மாயையானது தெரியக்கூடியதை மறைக்கும் சக்தியோடு கூடியது மட்டுமல்ல. ஸ்வப்னம், இந்த்ரஜாலம் முதலியவைகளில் காணப்படுவதைபோல் விசித்ரமான கார்யங்களைச் செய்வதாலும், அசிந்திதமான (எதிர்பார்க்கப்படாத) பலன்களைக் கொடுப்பதாலும் மாயா என்ற பெயர் என்பதாக தேவீபுராணத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

'விசித்ர கார்யகரணே அசிந்தித பலப்ரதா |
ஸ்வப்நேந்த்ரஜாலவல்லோகே மாயா தேந ப்ரகீர்த்திதா ||'

3. இவ்விதமான மாயையின் லீலைகளைப்பற்றி விஸ்தாரமாக தேவீபுராணத்தில் விஷ்ணுவிஷ்ணுவை ப்ருதிவிக்கு,

'பர்ஜந்யோ வர்ஷதே தத்ர ஜலபூரச்ச ஜாயதே |
திசோ நிர்ஜலதாம் யாந்தி ஸைஷா மாயா மம ப்ரியே ||
ஸோமோ(அ)பக்ஷீயதே பக்ஷே பக்ஷே சாபி விவர்த்ததே |
அமாயாம் தருச்யதே தைவ மாயேயம் மம ஸுந்தரி ||'

என்று ஆரம்பித்து,

'மம மாயாபலம் ஹ்யேதத் யேந திஷ்டாம்யஹம் ஜலே |
ப்ரஜாபதிம் ச ருத்ரம் ச ஸ்ருஜாமி ச ஹராமி ச ||'

என்று முடிய முப்பத்தேழு ச்லோகங்களில் தன்னுடைய அத்புதமான மாயையின் விசித்ரகார்ய கர்த்ருத்வமானது சொல்லப்பட்டிருக்கிறது. இவ்விதமான கார்யங்களும் மாயையாக இருப்பதுடன், அவைகளைச் செய்யும் சக்திக்கு மாயை என்றும் பெயர் என்பதாகவும் சொல்லப்பட்டது.

'தத் சக்திர் மாயா ஜடஸாமான்யாத் |'
(சாண்டில்ய பக்தி, ஸூத்ரம்)

मधुमती (717)

மது மதுவோடு இருப்பவள்.

1. அதாவது, பூஜா முதலான ஸமயங்களில் கொடுக்கப் படும் உபஹாரங்களில் தேன் ஒன்றுகையால், அதோடு இருப்பவள் என்று சொல்லப்பட்டது.

2. அம்பாளுடைய ரூபமே தேன் போன்றது என்பதாக

ல,

மஹத்யை வா ஏதத் தேவதாயை ரூபம் யத் மது |'

என்று சொல்லப்பட்டது.

3. தவிர, 'ஆதித்யோ வை தேவ மது' என்ற ச்ருதி வாக்யத்தில் சொல்லப்பட்ட மதுமதீ என்ற வித்யா விசேஷத்தின் ரூபமாக இருப்பவள் என்றும் சொல்லலாம்.

4. யோக சாஸ்த்ரங்களில் நான்குவிதமான யோகிகள் சொல்லப்பட்டிருக்கிறார்கள். அவர்களில் நான்காமவர்களுக்கு க்ரியாந்த்யபாவர்கள் என்று பெயர். அந்த க்ரியாந்த்யபாவர் மற்ற மூன்று வகுப்பாரைவிட உத்தமரென்று சொல்லும் அவர் கடக்கவேண்டியவைகளாக ஏழு படிகள் இருக்கின்றன. இந்தப் படிகளில் கடைசிப்படிக்கு மதுமதீ என்று பெயர். அந்த ரூபமாக அம்பாள் இருப்பதாக இங்கு சொல்லப்பட்டதாகவும் சொல்லலாம்.

5. அவ்விதமான கடைசிப்படிக்கு வந்தவுடன் ஏற்படும் ஞானமானது தாரகமானதால் அந்தப்பெயரை அம்பாளுக்குச் சொல்லும்போது ஸம்ஸாரதாரிகா (ஸம்ஸாரத்தைக் கடந்து போகச் செய்பவள்) என்று தாத்பர்யம். இந்த விஷயம்பற்றி,

'தாரகம் ஸர்வவிஷயம் ஸர்வதா
விஷயக்ரமம் சேதி விவேகஜம் ஞானம் |'

என்ற யோக ஸூத்ரத்திலும் அதின் பாஷ்யங்களிலும் ஸ்பஷ்டமாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

6. மதுமதீ என்ற பெயரையுடைய ருதீ விசேஷத்தின் ரூபமாக இருப்பவள் என்றும் சொல்லலாம்.

இவ்விதமான ரஹஸ்ய ரூபத்தோடு அம்பாளிருந்த போதிலும் ப்ருத்வீ (பூமி) மாதிரி தெளிவாகத் தெரியக்கூடிய வள் என்று அடுத்த நாமத்தில் சொல்லப்படுகிறது.

मही

மஹீ (718)

பூமி ரூபமாக இருப்பவள்.

1. அம்பாள் ஜகத்திற்கெல்லாம் ஆதாரமாய் மஹீ ரூபமாக இருப்பது தேவீ மாஹாத்ம்யத்தில்,

'ஆதாரபூதா ஜகதஸ்த்வமேகா மஹீஸ்வரூபேண யத: ஸ்தித
அபாம் ஸ்வரூப ஸ்தித்யா த்வயைதத் ஆப்யாயதே [தாஸீ I
[க்ருத்ஸ்நம் அலங்க்ய வீர்யே II

என்று சொல்லப்பட்டிருக்கிறது.

2. எங்கும் வ்யாபித்திருப்பதால் ப்ரக்ருதிக்கு மஹீ என்ற பெயர் என்பதாக,

'மஹத் வ்யாப்ய ஸ்தித்தா ஸர்வம் மஹீதி ப்ரக்ருதிர்மதா |'

என்று தேவீ புராணத்தில் சொல்லப்பட்டது.

3. மஹீ என்ற நதீவிசேஷத்தின் ரூபமாக இருப்பவள் என்றும் சொல்லலாம்.

गणाम्बा

கணம்பா (719)

கணங்களுக்கெல்லாம் தாயாராக இருப்பவள்.

1. பரமசிவனுடைய பரிவாரங்களான ப்ரமதர்கள் முதலானவர்களுக்குக் கணங்களென்ற பெயர். விநாயகர் அவர்களுக்கெல்லாம் தலைவரானதால் அவருக்கு கணபதி, கணேசன் என்ற பெயர்கள் ஏற்பட்டன.

2. கணனென்றால் கணபதிக்கும் பெயராகையால் இந்த நாமத்திற்கு கணேசஜநநீ என்றும் அர்த்தம் சொல்லலாம்.

गुह्यकाराध्या

குஹ்யகாராத்யா (720)

குஹ்யர்களென்ற தேவவிசேஷர்களால் ஆராதிக்கப்பட்டவள்.

அல்லது, அக்ஞாதமான ரஹஸ்ய ஸ்தலத்தில் பூஜிக்கப் படுகிறவள் என்று சொல்லலாம்.

कोमलाङ्गी
கோமளாங்கீ (721)

ஸுகுமாரமான (ம்ருதுவான) அங்கங்களையுடையவள்.

गुरुप्रिया
குருப்ரியா (722)

ஜகத்குருவான (ஜகத்திலிருப்பவர்களுக்கெல்லாம் ச்ரேஷ்டரான) சிவனுடைய ப்ரியையாக இருப்பவள்.

1. அல்லது, குருவினிடத்தில் ப்ரியமுள்ளவள், அல்லது, குருவின் பத்னியோடு அபின்னமாயிருப்பவள், என்றும் சொல்லலாம்.

2. குரு என்கிற ப்ருஹஸ்பதிக்குப் பெயர். அவரிடம் ப்ரியமுள்ளவள் என்றும் சொல்லலாம்.

स्वतन्त्रा
ஸ்வதந்த்ரா (723)

(பிறருடைய ஆச்ரயத்தை அபேக்ஷிக்காமல்) ஸ்வதந்த்ரமாயிருப்பவள்.

1. அதாவது, எந்த கார்யத்தைச் செய்வதற்கும் பிறருடைய ஒத்தாசையை அபேக்ஷிக்காமல் ஸ்வதந்த்ரமாய் செய்பவள். இதுவே அத்வைதிகளுக்கும் தாந்த்ரிகர்களுக்கும் இருக்கும் அபிப்ராய பேதங்களில் முக்யமானதென்று ஏற்கனவே சொல்லப்பட்டது.

2. அல்லது, தன்புருஷனை பரமசிவன் தனக்கு அதீனமாகவும், தான் அவருக்கு அதீனமாகவும், இப்படி பரஸ்பராதீனமாகவுமிருப்பவள் என்றும் சொல்லலாம். இதையே தான் காளிகா புராணத்தில் காமரூப கேஷேத்ர மஹாத்ம்யத்தில்வருமாறு சொல்லியிருக்கிறது.

नित्यं वसति तत्रापि पार्वत्या सह कर्मभिः ॥
मत्ये देवीक्रुहं तत्र ततहीनस्तु शंकरः ॥
ईशान्यां नाटके शैले शंकरस्य सदाश्रयम् ।
नित्यं वसति तत्रेशः ततहीना तु पार्वती ॥'

3. அல்லது, ஸகல தந்த்ரங்களையும் ஆத்மீயமாய் (தன்னுடையதாய்) உடையவள் என்றும் சொல்லலாம். அதாவது, சைவ, வைஷ்ணவ, காணபத்யாதி தந்த்ரங்களெல்லாம் அம்

பாலுடைய விபூதியை (மாஹாத்ம்யத்தை) ப்ரதிபாதிப்பதால் (அம்பாலுடைய) ஆத்மீயங்களென்று தாத்பர்யம்.

4. அல்லது, ஸ்வதந்த்ரம் என்று பெயரையுடைய தந்த்ரத்தின் ரூபமாக இருப்பவள் என்றும் சொல்லலாம். இது நித்யாதந்த்ரம் என்று பெயரையுடைய தந்த்ரத்தைக் குறிக்கும்

5. இந்த 'ஸ்வதந்த்ரம்' என்ற பெயர் ஆசார்யாளால் 'ஸௌந்தர்யலஹரி'யில் 'சதுஷ்ஷஷ்ட்யா தந்த்ரை:, என்ற (31) ச்லோகத்தில்,

'ஸ்வதந்த்ரம் தே தந்த்ரம் கதிதமலம் அவாதிதரத் இதம் |'

என்று சொல்லப்பட்டிருக்கிறது. இந்த 'ஸ்வதந்த்ரம்' என்பது எதைக் குறிக்கிறது என்பதைப்பற்றி வ்யாக்யாநக்காரர்களுக்குள் அபிப்பிராயபேதமிருந்துவருகிறது. சிலர் இது பஞ்சதசீவித்யை என்றும், சிலர் இது 'ஸௌந்தர்யலஹரி'யே என்றும் சொல்லுவார்கள். இது வாமகேச்வர தந்த்ரத்தைக் குறிக்குமென்று பாஸ்கரராயர் அந்த தந்த்ரத்திற்குத் தான் எழுதியிருக்கும் 'ஸேதுபந்தம்' என்ற வ்யாக்யானத்தில் சொல்லியிருக்கிறார். அந்த அபிப்ராயம் ஸரியல்லவென்றும், 'தந்த்ரராஜம்' என்ற தந்த்ரம் தான் குறிக்கப்பட்டதென்றும் ஆர்தர் அவலன் என்ற பெரியார் தான் வெளியிட்ட 'தந்த்ரராஜ' புஸ்தகத்தின் முகவுரையில் சொல்லியிருக்கிறார்.

सर्वतन्त्रेशी

வர்வ: (724)

ஸகல தந்த்ரங்களையும் ஸமர்த்தனம் செய்பவள்.

'தந்த்ரங்கள் அறுபத்துநாலு என்று கணக்குச் சொல்லப்படும். அவைகளைப் பொருந்தும்படி செய்பவள், அல்லது அவைகளை அர்த்தத்தோடு இருக்கும்படி செய்பவள், அதாவது அவைகளுக்கு ஆதாரமாயிருப்பவள் என்று தாத்பர்யம்.

दक्षिणामूर्तिरूपिणी

தக்ஷிணாமூர்த்தி ரூபிணீ (725)

தக்ஷிணாமூர்த்தி என்ற ரூபத்தோடு கூடியவள்.

1. ப்ரம்ஹா, விஷ்ணு முதலியவர்களுக்கு உபதேசிப்பவரான சிவனுடைய ரூபத்திற்கு தக்ஷிணாமூர்த்தி என்று

பெயர். தக்ஷிணைபிமுகமாக (தெற்கு நோக்கி) இருப்பதால் இந்தப்பெயர் ஏற்பட்டது. வட வ்ருக்ஷத்தின் கீழிருந்து கொண்டு ஸ்வாத்மாராமராய், மௌனியாய், கையில் தரித்த சின்முத்ரையுடன், யுவாவாய், ஆனந்தமான ரூபத்துடன் இருக்கும் இந்த மூர்த்தியே சிவஞானப்ரதராய், குருக்களுக் கெல்லாம் குருவாய், குருமூர்த்தியென்று எல்லோராலும் உபாஸிக்கப்பட்டு வருவது பரமசிவனுடைய ஞானஸ்வரூப மான ரூபம். ஸனகாதி நால்வர்களும் முக்யமான சிஷ்யர் களாகச் சொல்லப்படுவார்கள். ஆசார்யாளால் குருமூர்த்தி யைப்பற்றி செய்யப்பட்ட 'தக்ஷிணமூர்த்தி ஸ்தோத்ர'மானது மிகவும் விசேஷமானது. இந்த மூர்த்தியைப்பற்றி மந்த்ரங் களும் உபாஸநாக்ரமமும் தந்த்ரங்களில் ப்ரவிஸ்தமாக இருக் கின்றன.

2. இப்பேர்ப்பட்ட ஞான மூர்த்தியானது பின்வருமாறு வர்ணிக்கப்பட்டிருக்கிறது.

'மௌந வ்யாக்யா ப்ரகடித பரப்ரம்ஹதத்வம் யுவாநம்
வர்ஷிஷ்டாந்தே வஸத்ருஷிகணை: ஆவ்ருதம் ப்ரம்ஹ நிஷ்டை:।
ஆசார்யேந்த்ரம் கரகலித சின்முத்ரம் ஆநந்த மூர்த்திம்
ஸ்வாத்மாராமம் முதிதவதநம் தக்ஷிணாமூர்த்திம் ஈடே ॥'

'வடவிடபிஸமீபே பூமிபாகே நிஷண்ணம்
ஸகல முநி ஜநாநாம் ஞாநதாதாரம் ஆராத்।
த்ரிபுவந குருமீசம் தக்ஷிணாமூர்த்தி தேவம்
ஜந மரண து:கச்சேததக்ஷம் நமாமி ॥'

'சித்ரம் வடதரோர் மூலே வ்ருத்தா: சிஷ்யா குரூர் யுவா।
குரோஸ்து மௌநம் வ்யாக்யானம் சிஷ்யாஸ்து சிந்ந ஸம்சயா:

3. இவ்விதமான மூர்த்தியையே மேலே வரும் இரண்டு

நா

सनकादिसमाराध्या

ஸநகாதி ஸமாராத்யா (726)

ஸநகாதி மஹர்ஷிகளால் (யோகிகளால்) ஆராதிக்கப்பட்டவள்

1. ஸனகர், ஸனந்தனர், ஸனாதனர், ஸனத்குமாரர் இந் நால்வரும் ப்ரம்ஹாவினுடைய மானஸ புத்ரர்கள். யோகி ச்ரேஷ்டர்களும் மஹர்ஷிச்ரேஷ்டர்களுமானவர்கள். ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தியின் சிஷ்யர்களாகச் சொல்லப்படுவார்கள். அம்பாளுடைய உபாஸனா மார்க்கங்களில் முக்யமான ஸம்ய மதத்தை ப்ரதிபாதிக்கும் சுபாகம பஞ்சகத்தில் இவர்களால்

இயற்றப்பட்டதாக ஸனகஸம்ஹிதா, ஸனந்தன ஸம்ஹிதா, ஸனத்குமார ஸம்ஹிதா என்று மூன்று ஸம்ஹிதைகளாகச் சொல்லப்படுகிறது.

2. இவர்கள் அம்பாளுடைய பரப்ரஹ்மாண்ட புராணத்தில் சொல்லப்பட்டிருக்கிறது

'த்வமேவ அஹாதிரகிலா கார்யகாரண ரூபிணீ |
த்வாமேவ ஹி விசிந்வந்தி யோகிந: ஸஹகாதய: ||'

இதிலேதான் அவர்கள் குருபரம்பரையில் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள்.

शिवज्ञानप्रदायिनी

சிவக்ஞான ப்ரதாயிநீ (727)

சிவ விஷயகமான ஞானத்தை (தன் பக்தர்களுக்கு) கொடுப்பவள்.

1. சின்மாத்ரமும், அமலமும், சாந்தமுமான சிவஸ்வரூபமானது (ஸ்பந்தமய) சக்தியின் மூலமாகத்தான் அறியப்படக் கூடுமென்பதாக வாஸிஷ்ட ராமாயணத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

'ஸ்பந்தேந லப்யதே வாயு: வன்ஹிரௌஷ்ண்யேந லப்யதே |
சின்மாத்ரமமலம் சாந்தம் சிவ இத்யுதிதம் து யத் |
யத் ஸ்பந்தமய சக்த்யைவ லக்ஷ்யதே நான்யதா கில ||'

2. அல்லது, அம்பாளைப்பற்றிய ஞானத்தை சிவனே கொடுப்பதாக இந்நாமத்திற்கு அர்த்தம் சொல்லலாம். இதுமாதிரி, த்ரிமூர்த்திகளைப்பற்றிய ஞானமானது ருத்ரனே அறிந்தால்தான் ஏற்படுகிறதென்பதாக வராஹபுராணத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

'ஏதாஸ்திஸ்ரோ(அ)பி ஸித்யந்தி யோ ருத்ரம் வேத்தி தத்வத:||'

चित्कला

சித்கலா (728)

சித் (ஞானத்)தின் கலையோடு கூடியவள்.

1. சித் என்றால் ஞானம், கலை என்றால் பாகம்.

2. ஸத், சித், ஆனந்தம் என்ற லக்ஷணங்களோடு கூடிய ப்ரம்மஹ்ருதத்தின் சித் என்ற பாகத்தைத் தன் ஸ்வரூபமாக உடையவள், அதாவது, சித்ரூபிணீ என்று தாத்பர்யம்.

3. ஜீவனுடைய அந்த:கரணத்திலடங்கிய சைதன்யமானது நிருபாதிகமான (ப்ரம்ஹ) சைதன்யத்தின் ஒரு கலை (பாகம்) என்று சொல்லப்பட்டிருக்கிறது.

'மமைவாம்சோ ஜீவலோகே ஜீவபூத: ஸநாதந: |' (கீதை)

4. பத்மபுராணத்தில் அம்பாளுடைய மூர்த்திகளைப் பற்றிச் சொல்லுகையில் ஸகல சரீரிகளுடைய சித்தங்களில் இருப்பதான சித்கலா என்ற சக்தியானது அவற்றில் ஒன்று என்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

'சித்தேஷு சித்கலா நாம சக்தி: ஸர்வசரீரிணாம் |'

आनन्दकलिका
ஆநந்தகலிகா (729)

ஆனந்தத்தின் அம்ச (மாத்ர)மாயிருப்பவள்.

1. அதாவது, ஜீவசைதன்யமானது ப்ரம்ஹ சைதன்யத்தின் கலையென்று முந்திய நாமத்தில் சொல்லியதை அனுஸரித்து இந்த நாமத்தில் ஜீவனுடைய ஆனந்தமானது ப்ரம்ஹானந்தத்தின் ஓர் அம்சமாக இருப்பது சொல்லப்பட்டது.

'ஏதஸ்யைவ ஆநந்தஸ்ய அந்யாநி பூதாநி மாத்ராம்
உபஜீவந்தி |' [ச்ருதி]

2. அல்லது, ஸச்சிதானந்தமான பரப்ரம்ஹத்திலுடைய ஆனந்தமான அம்சத்தின் ரூபமாயிருப்பவள் என்றும் சொல்லலாம்.

3. அல்லது, 'கலிகா கோரக: புமான்' என்றபடி ஆனந்தமய கோசத்தின் மொக்கு (மொட்டு) மாதிரி இருப்பவள் என்றும் சொல்லலாம்.

प्रेमरूपा
ப்ரேமரூபா (730)

ஸ்நேஹம் (அல்லது பக்தி) என்ற ரூபத்தோடிருப்பவள்.

'ஆயுர்க்ருதம்' என்ற வசனம் மாதிரி ஒரு வஸ்துவினால் வெளியிடப்படும் ரூபத்தையே அந்த வஸ்துவின் ரூபமாகச் சொல்வதுபோல், அம்பாளுடைய பக்தர்களுக்கு ஏற்படும் ப்ரேமை, அல்லது பக்தி அம்பாளுடைய ரூபமாக இங்கு சொல்லப்பட்டது.

प्रियंकरी
ப்ரியம்கரீ (731)

ப்ரியத்தைச் செய்பவள் (உண்டுபண்ணுகிறவள்).

அதாவது, ஜீவனைதன்யமாக இருந்துக்கொண்டு, சப்தாராதி இந்த்ரியங்களின் மூலமாக ஸ்ரக், சந்தனாதிகளில் ப்ரியத்தை உண்டுபண்ணுகிறவள், அல்லது அவிதமான ப்ரியத்தோடிருப்பவள் என்று தாத்பர்யம்.

नामपारायणप्रीता

நாமபாராயண ப்ரீதா (732)

(தன்னுடைய) நாமங்களைப் பாராயணம் செய்வதால் ப்ரியமடைபவள்.

1. அ, ஆ, இ, ஈ என்பது முதல் க்ஷ முடிய இருக்கும் அக்ஷரங்களெல்லாம் அப்பாளுடைய நாமங்கள் தான். இவற்றில் அ முதல் அ: வரையில் ஸ்வரங்கள் 16, பாக்கி அக்ஷரங்களாகிய வ்யஞ்ஜனங்கள் க காரம் முதல் க்ஷ காரம் வரையில் 35 அக்ஷரங்கள்.

2. அ காரமும் வ்யஞ்ஜனங்கள் 35-ம் சேர்ந்து ஆகும் 36 அக்ஷரங்களும் முப்பத்தாறு வர்ஷங்களின் ரூபங்களாகின்றன. அவற்றில் ப்ரதி அக்ஷரத்துடன் பதிணாறு ஸ்வரங்களை பெருக்கினால் (36 x 16 = 576) வர்ணங்கள் வருவன, அத்தனை மாதங்களாகின்றன. இந்த 36 வர்ஷங்களை 576 மாதங்களால் பெருக்கினால் வரும் 20,736 என்ற எண்ணிக்கையானது நாமங்களின் ஸம்க்யையாகின்றது. ஒவ்வொரு நாமமும் ஏழு அக்ஷரங்களுடையது. முதல் மூன்று அக்ஷரங்கள் மேலே சொல்லப்பட்டபடி வருவன. அவற்றிற்கப்புறம் ஆம், ஈம், நம: என்று சேர்த்தால் ஏழு ஆகின்றன. (இந்த ஆ, ஈ இவ்விரண்டையும் பல்லவங்கள்—துளிர்கள், கடைசி அக்ஷரங்கள்—என்று சொல்லப்படும்.)

3. உதாரணமாக, முதல் நாமமானது அம், கம், அம், ஆம், நிம், நம: என்பது. இரண்டாவது அம், கம், கம், ஆம், சம், நம: எனபது. மூன்றாவது அம், கம், கூம், ஆம், சம் நம: என்பது. இம்மாதிரி முதல் மூன்று பீஜங்களையும் மாற்றிச் சொல்லவேண்டியது.

4. இம்மாதிரி நாமங்கள் ஏற்படுவதில் ஒவ்வொரு நாமத்திலும் ஆதியிலுள்ள பீஜக்ரமமானது முறையே நித்யாக்ஷர, யுகாக்ஷர, மாஸாக்ஷரங்களென்று சொல்லப்படும்.

இவைதான் மேலே சொல்லியபடி மாறிமாறிக்கொண்டு போகும். இவற்றில் ஸ்வரங்கள் விமர்சாம்சமென்றும், வ்யஞ்ஜனங்கள் ப்ரகாசாம்சமென்றும் இவையிரண்டின் ஸம்யோகமானது ப்ரம்மஸ்வரூபமென்றும் சொல்லப்படும்.

5. இவ்விதமான நாமபாராயணத்தைப்பற்றிப் பின்வரும் மாறு சொல்லப்பட்டிருக்கிறது.

'ஆ ச பல்லவிதை:ஃபரஸ்பரயுதை: த்விதீக்ரமாத்யகூடை:
காதிகூடாந்தகதை: ஸ்வராதிபீத கூடாந்தைச்ச தை: ஸஸ்வரை:।
நாமாநி த்ரிபுரே பவந்தி கலு யாந்யத்யந்தகோப்யாநி தே
தேப்யோ பைரவபத்நி விம்சதி ஸஹஸ்ரேப்ய: பரேப்யோ நம:॥
[லகுஸ்துதி]

'அகாராதி கூகாராந்தை: ஸ்வரைர் வர்ணைஸ்து யோஜிதை: ॥
அஸங்க்யேயாநி நாமாநி பவந்தி ரகுநந்தன ॥'
[தேவீபாகவதம்]

6. இப்படிப் பாராயணம் செய்யும்போது முதல் பீஜத்ரயத்திற்குப் பின்னும், பல்லவங்களுக்கு முன்னும், மூலமந்த்ரத்தைச் சொல்லவேண்டும்.

7. இந்த பாராயணக்ரமமானது ஐந்து விதம். ஒரு ஸம்வத்ஸரத்திலாவது, ஒரு வாரத்திலாவது, ஒரு பக்ஷத்திலாவது, ஒரு மாஸத்திலாவது, முப்பத்தாறு தினங்களிலாவது செய்யலாமென்று காதிமதத்தில்,

'திநதோ வாரத: பக்ஷாந்மாஸாத் ஷட்த்ரிம்சதா திநை: ।'

என்பது முதலான ச்லோகங்களில் சொல்லப்பட்டிருக்கிறது.

8. மேலே சொல்லப்பட்ட லகுஸ்துதி (ச்லோகத்தை)க்குராகவானந்தர் எழுதிய வ்யாக்யானத்தில் நாமத்தில் அக்ஷரங்களைச்சேர்ப்பதானது வேறுவிதமாக சொல்லப்பட்டிருக்கிறது. பாஸ்கரராயருடைய அபிப்ராயம் பின்வருமாறு:-அ முதலான ஸ்வரங்கள் பதிநாறு. க முதலான வ்யஞ்ஜனங்கள் ஒவ்வொன்றோடு பதிநாறு ஸ்வரங்களையும் சேர்த்தால் (35 × 16 =) 560 வர்ணங்களாகின்றன. ஆக மொத்தம் 576. இவ்விதமான இரண்டு அக்ஷரங்களின் சேர்க்கைகள் ஒவ்வொன்றுடன் அடுத்தாற்போல் (அகாரம் + 35 வ்யஞ்ஜனங்கள் =) 36 அக்ஷரங்களில் ஒவ்வொன்றையும் சேர்த்தால் (576 × 36 =) 20,736 பேதங்கள் ஏற்படுகின்றன. இவற்றுடன் ஒரோரு கடைவையிலும் (மேலே சொல்லிய) பல்லவத்தைச் சேர்க்கவேண்டும்.

9. அது தவிர இன்னம் பேதங்கள் இருக்கக்கூடுமாதலால் இந்த நாம பாராயணத்தின் ரஹஸ்யங்களைக் குருமுகமாகவே தெரிந்துகொள்ளவேண்டியது.

10. அல்லது, நாமபாராயணம் என்பதினால் இந்த ஸஹஸ்ரநாம பாராயணமே சொல்லப்பட்டதாகவும் சொல்லலாம். இதின் பாராயணத்தின் மஹிமையைப்பற்றி பூர்வபாகத்திலும், உத்தரபாகத்திலும் விஸ்தாரமாகச் சொல்லப்

'மாம் அர்ச்சயது வா மா வா வித்யாம் ஜபது வா நவா |
கீர்த்தயேத் நாம ஸாஹஸ்ரம் இதம் மத் ப்ரீதயே ஸதா 11'

'இதம் நாம ஸஹஸ்ரம் மே யோ பக்த்யா படதே ஸக்ருத் |
ஸ மே ப்ரியதமோ லோகே தஸ்மை காமாந் ததாம்யஹம் 11'

नन्दिविद्या

நந்திவித்யா (733)

கங்கேச்வரரால் உபாஸிக்கப்பட்ட வித்யாரூபமாக இருப்பவள்.

नटेश्वरी

நடேச்வரீ (734)

நடேச்வருடைய பத்னீ.

1. அதாவது, சிதம்பர நடனை பரமசிவனுடைய பத்னி அவருக்கு அனுகாரிணீ (அவருடன் சேர்ந்து நடனம் செய்பவள்) என்று அர்த்தம். இவர்களிருவரும் நடனம் செய்வதை,

'தவாதாரே மூலே ஸஹ ஸமயயா லாஸ்யபரயா
நவாத்மாநம் மந்யே நவரஸ மஹாதாண்டவநடம் |' [41]

என்று ஆசார்யாருடைய ஸௌந்தர்யலஹரியிலும்,

'ஜங்கா காண்டோருநாளோ நக கிரணலஸத்கேஸராளீ கராள:
ப்ரத்யக்ராலக்தகாபா ப்ரஸரகிஸலயோ மஞ்ஜு மஞ்ஜீர ப்ருங்க:|
பர்த்துர்ருத்தாநுகாரே ஜயதி நிஜதநு ஸ்வச்சலாவண்யவாபீ
ஸம்பூதாம்போஜஸோபாம் விதத் அபிநவோத் தண்ட பாதோ

[பவாந்யா: 11'

என்றும்

मिथ्याजगदधिष्ठाना

மித்யாஜகத் அதிஷ்டாத்ரீ (735)

மித்யாரூபமான ஜகத்திற்கு அதிஷ்டானமாயிருப்பவள்

1. அதாவது வெள்ளியின் தோற்றத்திற்கு முத்துச் சிப்பிபோல், மித்யையான ஜகத்திற்குத்தான் இருந்துகொண்டு அந்த ஜத்தானது தோன்றுவதற்குக் காரணமாயிருப்பவள் என்ற தாத்பர்யம். இப்படி ஜகத்தானது மித்யையென்பதற்கு அனேக வாக்யங்களிருக்கின்றன.

'மாயாமாத்ரமிதம் த்வைதம் அத்வைதம் பரமார்த்தத: |'

'நேஹ நாநாஸ்தி கிஞ்சந |'

'ஸர்வம் கல்விதமேவாஹம் நாந்யதஸ்தி ஸநாதனம் |'

(தேவீபாகவதம்)

'யத்ர த்ரிஸர்கோ ம்ருஷா |' (விஷ்ணுபாகவதம்)

2. அல்லது, அதிஷ்டா, அன: என்று பிரித்து, அவ்விதமான ஜகத்திற்கு அதிஷ்டாதாவான (ஜகத்தைத் தாங்குவதான) ப்ரம்ஹமே தன்னுடைய (அன:) ப்ராணனாக உடையவள் என்றும் சொல்லலாம்.

3. அல்லது, மித்யை என்று சொல்லப்படும் ஜகத்து எவனிடத்தில் அதிஷ்டிதமாயிருக்கிறதோ என்றும் சொல்லலாம்.

4. தாந்த்ரிகர்களுடைய மதத்தின்படி ஜகத்தானது (மண்டானையானது மண்ணின் பரிணாமமாயிருப்பதுபோல்) ப்ரம்ஹத்தினுடைய பரிணாமமாயும் அத்யந்தம் அபேதமாயுமிருக்கிறது. ஆகவே ப்ரம்ஹம் ஸத்யமாயிருப்பதால் அதின் பரிணாம ரூபமான ஜகத்தும் ஸத்யமென்பதே அவர்களுடைய கொள்கை. இவ்விதம் வாஸ்தவத்தில் அபேதமான ப்ரம்ஹம், ஜகத் இவ்விரண்டிற்குமிருப்பதாகத் தோன்றும் பேதமானது மித்யை என்று அவர்கள் சொல்லுவதால் அத்வைதத்தைப் பற்றிச் சொல்லும் எல்லா ச்ருதி வாக்யங்களையும் அவர்கள் ஒப்புக்கொள்வார்கள். எப்போது பேதமானது மித்யை என்று சொல்லப்பட்டதோ அப்போதே பேதத்தின்பேரிலேற்படும் ஆதார, ஆதேய பாவமான ஸம்பந்தமும் மித்யையென்று ஏற்படுகிறது. இவ்விதம் மித்யையானது மிகவும் ஸ்வல்பமாக இருக்கையில் ஜகத்தே மித்யையென்று வேதாந்திகள் சொல்வதானது அனர்த்தகம் என்பதைப்பற்றி சாம்பவானந்த கல்பலதையில் விஸ்தாரமாகச் சொல்லப்பட்டிருப்பதை பார்க்கவும்.

5. ஆகவே ஜகத்திற்கு அதிஷ்டானமானது மித்யாபூதமாக இருப்பதானது, அதாவது பேதபாவத்தோடு கூடியஸம்பந்தத்தினால் ஜகத்து இருப்பதானது அம்பாளால் என்பதாக இந்த நாமத்தில் சொல்லப்பட்டது.

முக்திதா (736)

மோக்ஷத்தைக் கொடுப்பவள்.

அப்பாள் தன்னை உபாஸிப்பவர்களுக்கு முக்தியைக் கொடுப்பதைப்பற்றி அனேக இடங்களில் சொல்லப்பட்டிருக்

'தஸ்மாத் விமுக்திமன்விச்சந் பார்வதீம் பரமேச்வரீம் |
ஆச்ரயேத் ஸர்வபூதாநாம் ஆத்மபூதாம் சிவாத்மிகாம் ||'

[கூர்மபுராணம்]

'யேऽர்ச்சயந்தி பராம் சக்திம் விதிநாऽ விதிநாபி வா |
ந தே ஸம்ஸாரிணோ நூநம் முக்தா ஏவ ந ஸம்சய: ||'

[ப்ரம்ஹாண்ட புராணம்]

முக்திரூபிணீ (737)

முக்தியையே ரூபமாக உடையவள்.

அவித்தையிலிருந்து விடுபடுவது என்பது த்வம்ஸரூபமாயினும், அல்லது ஜந்தர்வது அவஸ்தையை அடைவதாயினும் பர புருஷார்த்தமான மோக்ஷமல்லவென்றும் அப்போது தெரியும் ஸ்வாத்மானந்தமே மோக்ஷமென்றும், சொல்லப்பட்டிருக்கிறது. ஆத்ம ஸ்வரூபமானது யையினல் மறைக்கப்பட்டிருப்பதால் அவ்விதமான யையை வித்யையினல் அகற்றியவுடன் ஆத்ம ஸ்வரூபமானது தெரிந்து ஸ்வாத்மானந்தம் ஏற்படுகிறது. இதுவே முக்தி. இந்த (ஆத்மஸாக்ஷாத்கார, ஆத்மானந்த) ரூபமாக அம்பாளிருப்பது இங்கு சொல்லப்பட்டது. ஞானமானது காரகமல்ல (மோக்ஷத்தைக் கொடுப்பதல்ல). அதினல் நாம் நம்முடைய ஸ்வரூபத்தைப்பற்றி நினைவுமூட்டப்படுகிறோம். ஞானம் உண்டாகும் வரையில் நம்முடைய ஸ்வரூபமானது அவித்யையினல் மறைவுபட்டு நமக்குப் புலப்படாது இருக்கிறது. இதைப்பற்றி ஸௌரஸம்ஹிதையில் பதினலாவது அத்யாயத்தில் தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

'ஞானம் ந காரகம் வித்வத்போதகம் கலு கேவலம் |'
... ...
தஸ்மாத் ஆத்மஸ்வரூபைவ பராமுக்திரவித்யயா |
திரோபூதா விசுத்தஸ்ய வித்யயா வ்யஜ்யதேऽநக ||'

लास्यप्रिया

லாஸ்யப்ரியா (738)

நர்த்தனத்தில் ப்ரியமுள்ளவள்.

நடன நர்த்தனத்தில் லாஸ்யமென்றும், புரு ஷர்களுடைய நர்த்தனத்திற்குத் தாண்டவமென்றும் பெயர் சொல்லப்படும்

लयकरी

லயகரீ (739)

लयத்தை உ ள்.

1. சித்தத்தை நிலைநிறுத்துவதின் ஒரு விதத்திற்கு லய மென்று பெயர். அது 'தச த்யாநஸமோ லய:' என்றபடி த்யானத்தைவிட பதின்மடங்கு அதிகமென்று சொல்லப்படும்.

2. ந்ருத்தம், கீதம் இவைகளைத் தாளங்களால் ஸமகால மாக வகுப்பதற்கும் லயமென்று சொல்லப்படும்.

लज्जा

லஜ்ஜா (740)

லஜ்ஜா ரூபமாக இருப்பவள்.

1. லஜ்ஜை (நாணம், அடக்கம்) ஸ்த்ரீகளுக்கு அதிலும் முக்யமாக பதிவ்ரதைகளுக்கு விசேஷமான லக்ஷணமென்று சொல்லப்படும். அது அம்பாளுடைய ரூபமென்பதாக,

'யா தேவீ ஸர்வபூதேஷு லஜ்ஜாரூபேண ஸம்ஸ்திதா |'

என்று தேவீமாஹாத்ம்யத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

2. அம்பாள் லஜ்ஜாரூபமாக இருப்பதால் அம்பாளு டைய ஸ்வரூபத்க்ருஷ்டமான பீஜாக்ஷரமான ஹ்ரீம்காரத்தை லஜ்ஜா பீஜமென்று சொல்லப்படும். (ஹ்ரீ என்றால் லஜ்ஜை, வெட்கம்) இதை யொட்டியே ஸ்ரீ லலிதா த்ரிசதியில் 'லஜ்ஜா பத ஸமாராத்யா' என்ற ஒரு நாமமிருக்கிறது.

रम्भादिवन्दिता

ரம்பாதி வந்திதா (741)

ரம்பை முதலான அப்ஸரஸ் ஸ்த்ரீகளால் வணங்கப்பட்டவள்.

இனிவரும் எட்டுநாமங்களில் ரூபகாலங்கார த்தையொட்டி

அம்பாளை பலவிதமாகவும் அழகாகவும் வர்ணிக்கப்படுகிறது கவனிக்கவேண்டிய விஷயம்.

भवदावसुधावृष्टिः
பவதாவ ஸுதாவ்ருஷ்டி: (742)

ஸம்ஸாரமாகிற காட்டுத்தீக்கு அம்ருதவர்ஷமாயிருப்பவள்.

1. அதாவது காட்டுத்தீயானது மழையின் வர்ஷத்தினால் எப்படி அணைக்கப்படுமோ அம்மாதிரி ஸம்ஸாரமென்ற காட்டுத்தீயை அணைக்கும் அம்ருதவர்ஷம்போல் அம்பாளிருப்பதாக வர்ணிக்கப்பட்டது.

2. தாவ: என்ற பதம் அரண்யத்தையும் குறிக்கும். அந்த அர்த்தத்தில், ஸம்ஸாரமானது புங்காலு புங்கமாக உண்டாவதாலும் அது அம்மாதிரி உண்டாவதற்கு அம்பாள் காரணமாக அம்ருதவர்ஷம்போலிருப்பதால் இந்தப்பெயர் எற்பட்டதாகவும் சொல்லலாம்.

3. பவதா, வஸுதா, வ்ருஷ்டி: என்று இந்த நாமத்தை மூன்று பதங்களாகப் பிரித்தும் அர்த்தம் சொல்லலாம். பவ: என்றால் சிவன். அவரைக் கொடுப்பவள் (அதாவது சிவபதம், மோக்ஷம் கொடுப்பவள்) பவதா. வஸு என்றால் ரத்னம், தனம், ஐச்வர்யம். அதைக்கொடுப்பவள் வஸுதா. இவ்விரண்டையும் வர்ஷிக்கிறவள் பவதா வஸுதா வ்ருஷ்டி: அதாவது அம்பாள் தன் பக்தர்களுக்கு போகம், மோக்ஷம் இவ்விரண்டையும் ஒருங்கே கொடுப்பவள் என்று தாத்பர்யம். இது ருத்ரயாமளம் மங்களராஜஸ்தவத்தில் பின்வருமாறு சொல்லப்பட்டிருக்கிறது.

'யத்ராஸ்தி போகோ ந து தத்ர மோக்ஷ:
யத்ராஸ்தி மோக்ஷோ ந து தத்ர போக: |
ஸ்ரீஸுந்தரீ ஸாதக புங்கவாநாம்
போகச்ச மோக்ஷச்ச கரஸ்த ஏவ ॥'

पापारण्यदवानला
பாபாரண்ய தவாநலா (743)

பாபங்களாகிய அரண்யத்திற்கு காட்டுத்தீயாக இருப்பவள்.

1. துக்கத்தை உண்டுபண்ணுவதால் பாவங்களை அரண்யத்திற்கு ஸமமாகவும், அவற்றை நாசம் பண்ணுவதால் அம்பாளைக்காட்டுத்தீக்கு ஸமமாகவும் இங்கு சொல்லப்பட்டது.

2. அல்லது, பாபாரண்யங்களுக்கு தவாநலா என்ற பெயரையுடையவளாகச் சொல்லப்பட்ட கங்கா ரூபமாக இருப்பவள் என்றும் சொல்லலாம்.

'கங்காயா: பரமம் நாம பாபாரண்ய தவாநல: |
பவவ்யாதிஹரீ கங்கா தஸ்மாத் ஸேவ்யா ப்ரயத்நத: ||'

[ப்ருஹந்நாரதீயம்]

3. அல்லது, பாபாரண்யங்களுக்குத் தவங்களாக (நாசம் செய்யும் உபாயங்களாக) இருக்கும் உபாஸனைகளுக்கு ப்ராணன்களை (உயிரை)க் கொடுப்பவள், அதாவது, பாபங்களைப் போக்கடிக்கும்படியான கர்மாக்களை வெளிப்படுத்தி ப்ரவர்த்தமாகச் செய்பவள் என்றும் சொல்லலாம். அம்பாளுடைய பாதஸ்மரணமே தெரிந்தும், தெரியாமலும், செய்யப்பட்ட ஸகல பாபங்களுக்கும் பரம ப்ராயச்சித்தம் என்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

க்ருதஸ்யாகில பாபஸ்ய நாநதோ(அ நாநதோ(அபிவா |
ப்ராயச்சித்தம் பரம் ப்ரோக்தம் பராசக்தே: பதஸ்ம்ருதி: ||'

[ப்ரம்ஹாண்ட புராணம்]

மேலும், பக்திச்ரத்தையுடன், ஸ்நானம்செய்து, ஜலத்திலிருந்துகொண்டு, பஞ்சதசாக்ஷரியை 1008 தடவை ஜபித்து, பராசக்தியை ஆராதித்தால் ஸகல பாபங்களும் உடனே நாசமாகிவிடுமென்று அதிலேயே சொல்லப்பட்டிருக்கிறது.

'இதம் ச ச்ருணு தேவேந்த்ர ரஹஸ்யம் பரமம் மஹத் |
ஸர்வேஷாமேவ பாபாநாம் யௌகபத்யேந நாசநம் |
பக்திச்ரத்தாஸமாயுக்த: ஸ்நாத்வாந்தர்ஜலஸம்ஸ்தித: |
அஷ்டோத்தர ஸஹஸ்ரம் து ஜபேத் பஞ்சதசாக்ஷரீம் |
ஆராத்ய பரமாம் சக்திம் முச்யதே ஸர்வகில்பிஷை: ||'

दौर्भाग्यतूलवातूला

தௌர்பாக்ய தூல வாதூலா (744)

தௌர்பாக்யமாகிய பஞ்சுப்பொதியை சிதற அடிக்கும் சுழற்காற்றாக இருப்பவள்.

1. அதாவது, அம்பாளுடைய க்ருபையிருந்தால் ஸகல விதமான தௌர்பாக்யங்களும் (பஞ்சானது சுழற்காற்றினால் சிதறுண்டு போவதுபோல்) பறந்துபோய் விடுமென்பது தாத்பர்யம்.

2. தௌர்பாக்யமென்பது ப்ராரப்த கர்மாவினுடைய அனுபவம். அவ்விதமான அனுபவமானது அக்ஞானம்

நம் வரையில் அவச்யம் இருந்தே தீருமென்றும், ஞான மேற்பட்டவுடன் அது ஸகல கர்மாக்களையும் அக்னிபோல் தஹித்துவிடுமென்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

'ஞானாக்நி: ஸர்வகர்மாணி பஸ்மஸாத்குருதேऽர்ஜுந |' [கீதை]

3. தெளர்பாக்யத்தைப் பஞ்சுபோல் லகுவாகச் செய்து அகற்றக்கூடிய தர்ம விசேஷங்களுக்கு தெளர்பாக்யதூலங்க ளென்று பெயர். அலைகள் சுழல்காற்று மாதிரி அம்பாளிட மிருந்து உண்டாவதால், அதாவது அலைகள் அம்பாளுடன் ஸம்பந்தப்பட்டிருப்பதால், அம்பாளுக்கு தெளர்பாக்யதூல வாதூலா என்று பெயர்.

जराध्वान्तरविप्रभा

ஜராத்வாந்தரவிப்ரபா (745)

ஜரை (கிழத்தன்மை, மூப்பு)என்கிற அந்தகாரத்தைப் போக்கும் ஸூர்ய ப்ரபையாக இருப்பவள்.

शास्त्रीविद्याचन्द्रिका

பாக்யாப்தி சந்த்ரிகா (746)

பாக்யமாகிற ஸமுத்ரத்தைப் பொங்கச்செய்யும் சந்த்ரிகையாக இருப்பவள்.

भक्तचित्तकेकिघनाघना

பக்த சித்த கேகி கநாகநா (747)

பக்தர்களுடைய சித்தங்களாகிற மயில்களுக்கு உல்லாஸத் தைக்கொடுக்கும் மேக ஸ்வரூபமாயிருப்பவள்.

1. மயில்கள் நீருண்ட மேகத்தைப்பார்த்தால் ஆனந்த மடைந்து நர்த்தனம் செய்வதாகச் சொல்லப்படும்.

2. கனமென்றால் மேகத்திற்குப் பெயர். அம்பாளு டைய லீலாவிசேஷங்கள் பக்தர்களுடைய மனதிற்கு உல்லா ஸத்தைக் கொடுப்பதால் அந்த சித்தங்களாகிற மயில்களுக்கு (உல்லாஸத்தைக் கொடுக்கும்) மேகங்களாக இருக்கின்றன. (பக்த சித்தகேகிகன) இவ்விதமான சரித்ரங்களை (கனமாக) நிரம்ப உடையவளாகையால் அம்பாளுக்கு இந்தப்பெயர் ஏற் பட்டதாகவும் சொல்லலாம்.

रोगपर्वतदम्भोलिः

ரோகபர்வத தம்போளி: (748)

ரோகமாகிற பர்வதத்திற்கு வஜ்ராயுதம் மாதிரி இருப்பவள்.

1. வஜ்ராயுதமானது பர்வதங்களைப் பிளந்து நாசம் செய்யும் ப்ரபாவமுடையதென்று சொல்லப்படும்.

2. வ்யாதியானது மலைபோல் பெரிதாகையால் அதற்கு இங்கு ஒப்பிடப்பட்டது.

3. ப்ரயோகத்தில் இந்த நாமத்தை 'ரோக பர்வத தம்போளயே நம:' என்று சொல்லவேண்டும்.

मृत्युदारुकुठारिका

ம்ருத்யுதாரு குடாரிகா (749)

ம்ருத்யுவாகிற மரத்தை வெட்டும் கோடாலி போன்றவள்.

ம்ருத்யுவென்ற பதத்தினால் மரணமானது குறிக்கப்படுவதுடன் 28-விதமான துக்கங்களும் குறிக்கப்படுகின்றன. இவைகளைப்பற்றி ஏற்கனவே வந்த 'பசுபாசவிமோசநீ' என்ற 354-வது நாமத்திய வ்யாக்யானத்தின் மூலத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. தாரு என்பது மரத்தைக் குறிப்பதுடன் வருஷியின் கடபயாதி ஸங்க்யையின்படி 28 என்ற எண்ணிக்கையையும் குறிக்கும். ஆகவே ம்ருத்யுதாரு என்ற பதமானது பொருத்தமாக இருக்கிறது.

महेश्वरी

மஹேச்வரீ (750)

மஹத்தியாயும் (பெரியவளாயும்) ஈச்வரியாயும் இருப்பவள்.

ஏற்கனவே இந்த அர்த்தத்துடன் வந்த 208-வது நாமமானது 'மாஹேச்வரீ' என்பதால் இந்த நாமமானது புனருக்தி தோஷத்திற்குட்பட்டதல்ல.

महाकाली

மஹா காளீ (751)

மஹத்தியாயும் காளியாயுமிருப்பவள்.

1. காலத்தின் வ்ருத்திக்குள்படுத்துகிறவள் (முடிவுசெய்கிறவள்) காளீ, காலனை ம்ருத்யுவுக்கும் முடிவுசெய்வதனால் மஹா காளீ என்று பெயர் அம்பாளுக்கு ஏற்பட்டது. இதுவேதான் காளிதாஸனால் பின்வருமாறு சொல்லப்பட்டது.

'ஏததம்ப ஸதிதம் து நேதி ந:
சங்கயா ஹ்ருதி விகல்ப லக்ஷணை: |
யோ யம: ஸ கலு கால்யதே த்வயா
பூத ஸம்யமந கேளி கோவித: ||'

2. உஜ்ஜயினீ பீடத்திலிருக்கும் சிவனுடைய மூர்த்திக்கு பஹாகாளர் என்று பெயர். அவருடைய பத்னீ மஹா காளீ.

महाग्रासा

மஹாக்ராஸா (752)

பெரியதான பிடியை உடையவள்.

1. அதாவது அபரிமிதமான ப்ரபஞ்சாத்மகமான கபளத்தையுடையவள்.

'யஸ்ய ப்ரம்ஹ ச க்ஷத்ரம் சோபே பவத ஓதந: |' (ச்ருதி)

2. அந்தர்முகமாக இருக்கும்போது ப்ரபஞ்சத்தையெல்லாம் தனக்குள் அடக்கியிருப்பவள் என்று தாத்பர்யம்.

महाशना

மஹாசநா (753)

பெரியதான ஆஹாரத்தையுடையவள்.

1. அதாவது, சராசராத்மகமான ப்ரபஞ்சத்தைக் கபளமாக வைத்திருப்பதாக மூந்திய நாமத்தில் சொல்லியிருப்பதை அனுஸரித்து அவ்வித கபளத்தைச் சாப்பிடுவதாக இங்கு சொல்லப்பட்டது. விறகை நெருப்பிலிட்டால் அது நெருப்பிலில் அனுபவிக்கப்பட்டு நசிக்கப்படுவதுபோல் ப்ரபஞ்சமானது அப்பாள் பஹிர்முகமாயிருக்கும்போது அனுபவிக்கப்பட்டு பிறகு அந்தர்முகமாயிருக்கும்போது நாசமடையும்படி செய்யப்படுவது இந்த இரண்டு நாமங்களில் சொல்லப்பட்டது.

2. முன்வந்த 'மஹாஸநா' என்ற 229-வது நாமமும் இந்த நாமமும் ஒன்றுவது அகோரத்தில் வித்யாஸப்படுவதால் புனருக்தி என்கிற தோஷமில்லாதது கவனிக்கவும்.

अपर्णा

அபர்ணை (754)

குணமில்லாதவள்.

1. அதாவது, தீக்கையெண்டியதான கடன் யாதொன்று மில்லாதவள். பக்தர்களுக்குக் கடன்பட்டிருப்பதைத் தீர்த்தவள் என்று தாத்பர்யம். இந்த அர்த்தம் பாஸ்கரராயரால் அவருடைய தேவீஸ்தலத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

'ருணமிஷ்டம் அதத்வைவ த்வந் நாம ஜபதோ மம |
சிவே கதம் அபர்ணேதி ரூடிர் பாராயதே ந தே ||'

2. நிருக்தத்தின்படி பர்ணம் என்றால் பதனம் (விழுங்குதல்) என்ற அர்த்தமாகையால், பதனம் இல்லாதவள் என்றும் இந்த நாமத்திற்கு அர்த்தம் சொல்லலாம்.

3. பர்ணம் என்றால் இலை. இலைகூட (ஆஹாரத்திற்கு) இல்லாதவள் அபர்ணை. அம்பாள் ஹிமவானுடைய புத்ரியாக அவதரித்து தபஸ் செய்கையில் இலைகளைக்கூட ஆஹாரமாக்கொண்டு கடுமையான தபஸ் செய்ததாலால் அம்பாளுக்கு அபர்ணை என்ற பேயர் ஏற்பட்டதாகச் சொல்லப்பட்டது.

'ஆஹாரே த்யக்த பர்ணத்வாத் யஸ்மாத் ஹிமவதஃ ஸுதா |
தேந தேவைர் அபர்ணேதி கதிதா ப்ருதிவீதலே ||'

[காளிகா புராணம்]

'அபர்ணே து நிராஹாரா தாம் மாதா ப்ரத்யபாஷத |'

[ப்ரம்ஹ புராணம்]

चण्डिका

சண்டிகா (755)

கோபமுள்ளவள்.

1. அதாவது, தன்னிடம் பக்தியில்லாதவர்களிடம் கோபமுள்ளவள் என்று அர்த்தம்.

2. 'சண்டிகா ஸப்தவர்ஷா ஸ்யாத்' என்ற தேவீபாகவத வசனப்படி ஏழு வயதுள்ள கன்யாரூபமாக இருப்பவள் என்றும் சொல்லலாம்.

चण्डमुण्डासुरनिषूदनी

சண்ட முண்டாஸுர நிஷூதநீ (756)

சண்டன், முண்டன் என்ற அஸுரர்களை ஸம்ஹாரம் செய்தவள்.

1. இவர்களிருவரும் அம்பாளுடைய ரூபவிசேஷமான காளீ தேவியால் ஸம்ஹாரம் செய்யப்பட்டதையும், அதனால் காளீதேவிக்கு சாமுண்டா என்ற பெயர் அம்பாளால் கொடுக்

கபாடபேதத்தையும், தேவீ பாகவதம், தேவீ மாஹாத்ம்யம் முதலியவற்றில் சொல்லியிருக்கிறது.

'யஸ்மாத் சண்டம் ச முண்டம் ச க்ருஹீத்வா த்வம் உபாகதா।
சாமுண்டேதி ததோ லோகே க்யாதா தேவீ பவிஷ்யஸி॥'
(மார்கண்டேய புராணம்)

2. அம்பாளுக்கு சாமுண்டா என்ற பெயர் வந்ததற்கு வராஹபுராணத்தில் வேறுவிதமான காரணம் சொல்லப்பட்டிருக்கிறது. முன்னொருகால் ருரு என்ற தைத்யனை அம்பாள் யுத்தத்தில் கொல்லும்போது அவனைத் தன் சூலாயுதத்தினால் குத்தினாள். அவனுடைய முண்டம் (சிரஸ்), சர்மம் (உடல்) இவையிரண்டும் தனியாகப்போக அவற்றை அபஹரித்துக்கொண்டு போனதினால் அம்பாளுக்கு சாமுண்டா (சர்மமுண்டா) என்ற பெயர் ஏற்பட்டதாக அதில் சொல்லப்பட்டிருக்கிறது.

'தேவீ சத்ரிஜகந்நாதஜ்ஞ தம் ருரும் ஸமதாடயத்।
தயா து தாடிதே தஸ்ய தைத்யஸ்ய சுபலோசநே॥
சர்மமுண்டே உபே ஸம்யக் ப்ருதக்பூதே பபூவது:।
ருரோஸ்து தாநவேந்த்ரஸ்ய சர்மமுண்டேஷணாத் யத:।
அபஹ்ருத்யாசரத் தேவீ சாமுண்டா தேந ஸாபவத்॥'

3. அம்பாளுடைய ரூப விசேஷத்திற்கு இம்மாதிரி பெயர்களிருப்பது,

'கர்மதோமாம் து சாமுண்டா சர்மமுண்டா ச சர்ச்சிகா।'

என்ற அபரஜிதாசு வசனத்திலும் சொல்லப்பட்டிருக்கிறது.

4. சண்டங்களான (ப்ரசண்டங்களான, அதாவது அத்யுக்ரமான கோபமேற்படுவதால் சிவந்த நேத்ரங்களோடுகூடிய) முண்டங்களையுடைய (சிரஸ்ஸுகளையுடைய) அஸுரர்களை ஸம்ஹாரம் செய்பவள் என்றும் சொல்லலாம். இதிலிருந்து, அவ்விதம் ஸம்ஹாரம் செய்யப்பட்ட அஸுரர்களின் முண்டங்களை மாலையாகத் தரித்திருப்பவளாக வர்ணிக்கப்படும் காளிகாதேவியின் ரூபமானது குறிப்பிடப்படுகிறதாகவும் சொல்லலாம்.

அழிவுள்ளதும் அழிவில்லாததுமான பதார்த்தங்களை ஸ்வரூபமாக உடையவள்.

1. அல்லது, எண்ணிக்கையற்ற அநந்தரங்களை (வர்ணங்களை) ஸ்வரூபமாக உடையவள் என்றும் சொல்லலாம்.

தான் ராக் என்ற லை

த்ரிசதியிலும்,

'ஏகாக்ஷரேதி விக்யாதா ஸர்வாக்ஷரமயீ சுபா |
ஸைவ விச்வேச்வரீ தேவீ ஸைவ க்வாப்யமிதாக்ஷரா ||'

என்ற வராஹபுராண ; யம் சொல்லப்பட்டது.

2. ஸகல பூதங்களும் அழிவுள்ளவையாகையால் அவற்றை க்ஷரமென்றும், கூடஸ்தனை ப்ரம்மத்தை அக்ஷரமென்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

'க்ஷர: ஸர்வாணி பூதானி கூடஸ்தோ(ஸ்)க்ஷர உச்யதே |' (கீதை)

இப்படிப்பட்ட இரண்டுவிதமான ரூபத்தோடு (உடையதாகமாக) அம்பாளிருப்பது இந்த நாமத்தில் சொல்லப்பட்டது. இதுவேதான் 'ஸதஸத் க்ஷராக்ஷரா' என்ற மகாபாரதத்திலும்,

'விஷ்ணோஸ்து த்ரீணி ரூபாணி புருஷாக்யானி யே விது: |
ப்ரதமம் மதுஜித: ஸ்ரஷ்டா த்விதீயம் த்வண்டஸம்ஸ்தித: |
த்ருதீயம் ஸர்வபூதஸ்தம் தானி ஜ்ஞாத்வா விமுச்யதே ||'

என்ற விஷ்ணுவைபாகவதத்திலும் சொல்லப்பட்டது.

सर्वलोकेशी

ஸர்வலோகேசீ (758)

ஸமஸ்தமான லோகங்களுக்கும் ஈச்வரியாக இருப்பவள்.

विश्वधारिणी

விச்வதாரிணீ (759)

விச்வத்தை (ஸமஸ்தமான ப்ரபஞ்சத்தையும்) தாங்குகிறவள்.

त्रिवर्गदात्री

த்ரிவர்க்கதாத்ரீ (760)

தர்மார்த்த காமங்களைக் கொடுப்பவள்.

தர்ம, அர்த்த, காமங்களாகிற ஸமூஹத்திற்கு த்ரிவர்க்கமென்றும், அம்மூன்றுடன் மோக்ஷத்தைச் சேர்த்த ஸமூஹத்திற்கு சதுர்வர்க்கமென்றும் பெயர்.

'த்ரிவர்க்கோ தர்மகாமார்த்தை: சதுர்வர்க்க: ஸமோக்ஷகை: |
[அமரம்]

சுபகா (761)

ஸுபகா

சோபனமான பகத்தோடு கூடியவள்.

1. அல்லது, பக பதவாச்யங்களானவைகள் (பகம் என்ற பதத்தினால் குறிக்கப்படுகிறவைகள்) தன்னிடமிருப்பதால் அவற்றிற்குச் சோபனையைக்கொடுப்பவள் என்றும் சொல்லலாம்.

2. பகம் என்ற பதத்திற்கு ஸ்ரீ, காம, மாஹாத்ம்ய, வீர்ய, யத்ன, கீர்த்தி முதலிய அர்த்தங்களுண்டு.

'பகம் ஐச்வர்ய மஹாத்ம்ய ஜ்ஞான வைராக்ய யோனிஷு |
யதோ வீர்ய ப்ரயத்நேச்சா ஸ்ரீ தர்ம ரவி முக்திஷு ॥'
[விச்வகோசம்]

3. அல்லது, ஸூர்யனுக்குச் சோபனையைக் கொடுக்கிறவள் என்றும் சொல்லலாம். ப்ராப்ஹஸ்வரூபிணியான அம்பாள் அவருக்குள்ளிருப்பதால் அவரால் செய்யப்படும் ஸகல காரியங்களும் அம்பாளுடைய சக்தியினால் தான் என்று தாத்பர்யம். இம்மாதிரி ஸூர்யனுடைய ஸகல சக்தியும் அவருக்குள்ளிருக்கும் விஷ்ணு சக்தியினால் தான் என்பதாக விஷ்ணு புராணம் இரண்டாவது அம்சத்தில் விஸ்தாரமாக சொல்லப்பட்டிருக்கிறது.

'மாஸி மாஸி ரவிர்யத்ர தத்ர தத்ர ஹரி ஸ்வ பரா |
த்ரயீமயீ விஷ்ணுசக்தி: அவஸ்தாநம் கரோதி வை ॥
மூர்த்திரேஷா த்ரயீ விஷ்ணோ: ருக்யஜு: ஸாம ஸம்ஜ்ஞிதா |
விஷ்ணுசக்திரவஸ்தாநம் ஸதாதித்யே கரோதி யா ॥.

4. அல்லது, த்ரிலோகத்திலுமிருக்கப்பட்ட ஸௌபாக்யமானது, சரங்களுடையதோ, அசரங்களுடையதோ, எல்லாம் அம்பாளுடைய ரூபமென்பதாகச் சொல்லப்படும். ஸௌபாக்யத்தையுடைய சரஸ்துக்கள் ஸுவாஸினிகளே (உயிர்ராசிருக்கும் புருஷர்களையுடைய ஸ்த்ரீகளே.) அசரஸ்துக்கள் கரும்பு, அச்வத்த வ்ருக்ஷம், மூலத்திருக்கும் ஜீரகம், கொத்தமல்லி, கோகூரம் (அதின் விகாரங்களான தயிர், வெண்ணெயுள்ளிட), மஞ்சள் நிறமுள்ள வஸ்த்ரம், புஷ்பம், லவணம் இவை யெட்டும் என்பதாக பத்ம புராணத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

'இக்ஷுவஸ் தருராஜம் ச ஷிஷ்பாவா ஜீரதாங்யகே |
விகாரவச்ச கோக்ஷீரம் குஸும்பம் குஸுமம் ததா |
லவணம் சேதி ஸௌபாக்யாஷ்டகம் ஸ்த்தாவர முச்யதே ||'

ஸ்த்ரீகள் ஸௌபாக்கியமான அம்பாளை உபாஸித்தால் எது தான் கிடைக்காது (எவ்வித ஸௌபாக்யமும் கிடைக்கும்) என்பதாக அந்த புராணத்திலேயே சொல்லப்பட்டிருக்கிறது.

'த்ரிவிஷ்டப ஸௌபாக்யமயீம் புக்தி முக்தி ப்ரதாம் உமாம் |
ஆராத்ய ஸௌபகாம் பக்த்யா நாரீ வா கிம் ந விந்ததி ||'

5. 'ஸௌபாக்ய பஞ்சவர்ஷாத்மா ஸ்யாத்' என்ற தொடர்ப்படி ஐந்து வயதுள்ள கன்யாரூபத்தோடு அபின்னமாயிருப்பவள் என்றும் சொல்லலாம்.

त्र्यम्बका

(762)

த்ர்யம்பகா

மூன்று நேத்ரங்களையுடையவள்.

ஸோம, ஸூர்ய, அநலர்கள் மூவரும் அம்பாளுடைய நேத்ரங்களாக இருக்கிறார்கள் என்று சொல்லப்படும்.

'ஸோம ஸூர்யாநலாஸ்த்ரீணி யந் நேத்ராண்யம்பகாநி ஸா |
தேந தேவீ த்ர்யம்பகேதி மூநிபி: பரிகீர்த்திதா |'
(தேவீ புராணம்)

அல்லது, த்ரிமூர்த்திகளுடைய அம்பிகையாக (தாயாராக) இருப்பதால் இந்தப்பெயர் வந்ததாகவும் சொல்லலாம்.

त्रिगुणात्मिका

(763)

(ஸத்வ, ரஜஸ், தமோ குணங்களாகிய) த்ரிகுணங்களுடைய ஸாம்யமான ரூபத்தோடு கூடியவள்.

स्वर्गापवर्गदा

ஸ்வர்க்காபவர்க்கதா

(764)

ஸ்வர்க்கமென்ற அநித்யமான ஸுகத்தையும், ப்ரம்ஹஞானந் தாலுபவமான நித்ய ஸுகத்தையும் கொடுப்பவள்.

1. ஸ்வர்க்கமென்பது அநித்யமான ஸுகத்தைக் குறிக்கும். அது, செய்யப்பட்ட புண்யத்தின் ப்ரயோஜனமாகக் கிடைக்குமென்றும், அந்தப் புண்யம் குறைந்துவிட்டால் ஸ்வர்

கத்திலிருந்து திரும்பவும் இந்த லோகத்திற்குத் திரும்பி வர வேண்டுமென்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

'யத் ந துஃகேந ஸம்பிந்நம் ந ச க்ரஸ்தம் அநந்தரம் |
அபிலாஷோபஹதம் யத் தத் ஸுகம் ஸ்வஃ பதாஸ்பதம் ||'
'தஸ்மிந் புண்யே மர்த்யலோகம் விசந்தி |'

2. ப்ரம்ஹானந்தானுபவமென்ற நித்யமான (அழிவில்லாத) ஸுகம் அடைவர்க்கமென்று சொல்லப்படும்.

சுத்தா (765)

ல் ஏற்படும் மாலின்யம் (அழுக்கு, களங்கம்) யாதொன்றுமில்லாத சுத்தமான் ஸ்வரூபத்தையுடையவள்.

जपापुष्पनिभाकृतिः

ஜபாபுஷ்ப நிபாக்ருதிः (766)

செம்பரத்தைப் புஷ்பத்திற்கு ஸமானமான (நிறத்தோடு கூடிய) ரூபத்தையுடையவள்.

1. இந்த நாமத்தை முந்திய நாமத்திலிருந்து பிரிக்கையில் 'அஜபா புஷ்பநிபாக்ருதிः' என்று பிரித்து அஜபா, புஷ்பநிபாக்ருதிः' என்று இரண்டு நாமங்களாகச் சொல்லலாம். அவ்விதம் சொல்பவர்கள் பின்னல்வரும் 955, 956 நாமங்களை ஒன்றுகச் சேர்த்து 'தாதரஸுதா' என்று ஒரே நாமமாகச் சொல்லுவார்கள்.

2. அப்படிச் சொல்லும்போது, அஜபா என்ற மந்த்ர விசேஷத்தின் ரூபமாக இருப்பவள் என்றும், புஷ்பத்திற்கு ஸமானமான (மார்தவத்துடனும் அழகுடனும் கூடிய) ரூபத்தையுடையவள் என்றும் அவ்விரண்டு நாமங்களுக்கு அர்த்தம்.

3. அஜபா மந்த்ரத்தைப்பற்றி தக்ஷிணாமூர்த்தி ஸம்ஹிதையில்,

'விநா ஜபேந தேவேசி ஜபோ பவதி மந்த்ரிணः |
அஜபேயம் ததः ப்ரோக்தா பவபாச நிக்ருந்தநீ ||'

என்று சொல்லப்பட்டிருக்கிறது.

4. புஷ்பம் என்ற பதத்திற்கு முதுகாலத்தில் ஏற்படும் விகாஸம், குபேரனுடைய விமானம், பூ, நேத்ராவ்யாதி முதலியன அர்த்தங்களுண்டு.

'புஷ்பம் விகாஸ ஆர்த்தவே |
தநதஸ்ய விமாநே ச குஸு²மே நேத்ரருஜ்யபி ||'
[ஸஹமகோசம்]

ओजोवती
ஓஜோவதீ (767)

ஓஜஸ்ஸை உடையவள்.

1. 'ஓஜோ2வ்ருடாதாது:' என்ற வேதபாஷ்ய வசனப்படி தேஹத்திலிருக்கும்படியான ஒன்பது தாதுக்களில் எட்டாவது தாதுவுக்கு ஓஜஸ் என்று பெயர். இதைச் சிலர் இந்த்ரிய ஸாமர்த்தியம் என்று சொல்வார்கள்.

2. ஓஜஸ் தேஜஸீ தாதூநாம் அவஷ்டம்ப ப்ரகாசயோ: |
ஓஜோ பலே ச தீப்தௌ ச ... ... ||'

என்ற விச்வகோச வசனத்தின்படி ஓஜஸ் என்ற பதத்திற்கு தேஜஸ், தாதுக்களின் வீர்யம், ப்ரகாசம், பலம், காந்தி முதலிய அர்த்தங்களுண்டு. அவையெல்லாம் அம்பாளிடமிருப்பது இந்த நாமத்தில் சொல்லப்பட்டது.

द्युतिधरा
த்யுதிதரா (768)

காந்தியைத் தரிப்பவள் (காந்தியோடிருப்பவள்).

यज्ञरूपा
யக்ஞரூபா (769)

யக்ஞங்களைத் தன் ரூபமாக உடையவள்.

1. அல்லது, 'யக்ஞோ வை விஷ்ணு:' என்ற ச்ருதி வாக்யத்தின்படி விஷ்ணுவோடு அபின்னமான ரூபத்தையுடையவள் என்றும் சொல்லலாம்.

2. யக்ஞங்கள் ஈச்வரனுடைய ரூபமாக இருப்பதைப் பற்றி ஹரிவம்சம், பத்மபுராணம் முதலியவைகளில் விஸ்தாரமாக வர்ணிக்கப்பட்டிருக்கிறது.

3. 'முக்யாம்நாயரஹஸ்ய'த்தில்,

'இந்த்ரியத்வாரஸம்க்ருஹ்யைர் கந்தாத்யைராத்மதேவதாம் |
ஸ்வபாவேந ஸமாராத்ய ஞாது: ஸோயம் மஹாமக: ||'

என்று சொல்லப்பட்ட மஹாயக்ஞத்தின் ரூபமாக இருப்பவனென்றும் சொல்லலாம்.

प्रियव्रता

ப்ரியவ்ரதா (770)

வ்ரதங்களில் ப்ரியமுள்ளவள்.

அதாவது, ஸகல தேவதைகளைக் குறித்து அனுஷ்டிக்கப் படும் வ்ரதங்களெல்லாம் அம்பாளுக்குப் ப்ரியத்தைக் கொடுக் கின்றனை என்று தாத்பர்யம். லோகம் முழுவதுமே சிவசக்தி மயமாக இருப்பதால் எந்த தேவதையை உத்தேசித்துச் செய்யப்பட்ட வ்ரதமாயிருந்தாலும் அது அவ்விருவர்களுக்கு ப்ரியத்தைக் கொடுக்குமென்று பவிஷ்யோத்தர புராணத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

'தேவம் தேவீம் ச வோத்திச்ய யத் கரோதி வ்ரதம் நர: |
தத் ஸர்வம் சிவயோஸ்துஷ்ட்யை ஜகஜ்ஜநக சிலயோ: |
ந பேதஸ்தத்ர மந்தவ்ய: சிவசக்திமயம் ஜகத் ||'

दुराराध्या

துராராத்யா (771)

ச்ரமப்பட்டு ஆராதிக்கப்படுகிறவள்.

அதாவது, சபலமான இந்த்ரியங்களையுடையவர்களால் அம்பாளை ஆராதிப்பது ச்ரமமான கார்யம் (அதாவது, முடி-யாது) என்று தாத்பர்யம். இதுவே தான் ஆசார்யாள்,

'புராராதே: அந்த: புரமஸி ததஸ் த்வச்சரணயோ:
ஸபர்யா மர்யதா தரளகரணாநாம் அஸுலபா |' [95]

என்று 'ஸௌந்தர்யலஹரி'யில் சொல்லப்பட்டிருக்கிறது.

दुराधर्षा

துராதர்ஷா (772)

ஜயிக்க முடியாதவள்.

அல்லது, மறிக்கமுடியாதவள், வசப்படுத்தமுடியாதவள் என்றாவது சொல்லலாம்.

पाटलीकुसुमप्रिया

பாடலீ குஸுமப்ரியா (773)

பாதிரிப் புஷ்பங்களில் ப்ரியமுள்ளவள்.

பாடலீபுஷ்பம் என்பது வெளுப்பும், சிகப்பும் கலந்த நிறமுள்ளது.

'ஸ்ரீவ்ருக்ஷ சங்கரோ தேவ: பாடலாயாம் து பார்வதி |'

என்ற பத்மபுராண வசனத்தின்படி பில்வ வ்ருக்ஷமானது பரமசிவனுக்கும், பாடலீமரமானது பார்வதிக்குப், ப்ரிய முள்ளதாகச் சொல்லப்படும். (லக்ஷ்மீ நிவாஸம் பண்ணுவ்ம் ஸ்தானங்களில் பில்வ வ்ருக்ஷத்தை ஒன்றாகச் சொல்லப்படு வதால் அதற்கு ஸ்ரீவ்ருக்ஷம் என்ற பெயர்).

महती

மஹதீ (774)

மிகவும் பெரியவள்.

1. ஸகல வஸ்துக்களும் அம்பாளுடைய பரிணாமரூபங் களாக இருப்பதால் அப்பாள் எல்லாவற்றையும் விடப் பெரி யவள் என்று சொல்லப்பட்டது.

2. மஹத் என்ற விசேஷணமானது, பிறவஸ்துக்களுக்கு அளவு கருவியாக இருப்பதால், அல்லது அவற்றால் வணங்கப் படுவதால், ஏற்படுகிறது.

3. நாரதருடைய வீணைக்கு மஹதீ என்ற பெயராகை யால் அந்த ரூபமாக இருப்பவள் என்றும் சொல்லலாம்.

मेरुनिलया

மேருநிலயா (775)

மேருவையே வாஸ ஸ்தானமாக உடையவள்.

1. 'மேரு: ஸுமேருர் ஹேமாத்ரி:' என்றபடி மேரு வென்பது ஸ்வர்ணமயமான பர்வதம். இதைப்பற்றி ஏற்கனவே வந்த 'ஸுமேருமத்ய ச்ருங்கஸ்தா' என்ற 55-வது நாமத் தைப் பார்க்கவும். இதனுடைய நடு சிகரத்தின்மேல் ஸ்ரீநக ரமும் அதில் அம்பாளுடைய சிந்தாமணிக்ருஹமும் இருப்ப தாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

2. பண்டாஸுர யுத்தம் முடிந்தபிறகு தேவர்களெல் லோரும் காமேச்வராருக்குப், லலிதாம்பிகைக்குப் தகுந்தான வாஸஸ்தானங்களை ஏற்படுத்த உத்தேசம்பண்ணி தேவசில்பி யான விச்வகர்மனையும், அஸுர சில்பியான மயனையும் அழைத்து பதினாறு நித்யைகளின் ரூபமாக இருக்கும் அம்பா ளுக்குப் பதினாறு ஸ்ரீநகரங்கள் நிர்மாணம் செய்யும்படியாகக் கட்டளையிட்டார்கள்.

'யுவாப்யாம் லலிதாதேவ்யா: நித்யஞான மதோதாதே: |
தோடசசக்ர மத்யேஷு தத்சக்ர ஸமஸங்க்யயா ||
கர்தவ்யா: ஸ்ரீநகர்யோ ஹி நாநாரத்நைரலங்க்ருதா: |
யத்ர தோடசதா பிந்நா லலிதா பரமேச்வரீ |
விச்வத்ராணாய ஸததம் நிவாஸம் ரசயிஷ்யதி ||'

3. அப்படியே அந்த சில்பிகளும் பதினாறு சக்ரங்களில் பதினாறு நகரங்கள் நிர்மாணம் பண்ணினார்கள். அவை ஒன்பது பர்வதங்களிலும் எழு ஸமுத்ரங்களிலும் இருப்பவை.

'ப்ரதமம் மேருப்ருஷ்டே ச நிஷதே ச மஹீதரே |
ஹேமகூடே ஹேமகிரௌ பஞ்சமே கந்தமாதநே ||
நீலமேஷே ச ச்ருங்காக்யே மதோந்த்ரே ச மஹாகிரௌ |
சக்ராணி வா நவைதாநி பௌமாநி விதிதாந்யத ||
ஔதகாநி து ஸப்தைவ ப்ரோக்தாந்யகில ஸிந்துஷு |
லவணேக்ஷு ஸுராப்தி ஸுராப்தி க்ருதஸாகரா: ||
ஸப்தம: |
பூர்வோக்தா நவ சைலேந்த்ரா: பச்சாத் ஸப்த ச ஸிந்தவ: ||'

4. இந்த நகரங்கள் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு நித்யையின் பெயர் இடப்பட்டது. அவையாவன, காமேச்வரீ பூரீ, பகமாலாபுரி, நித்யக்லிந்நாபுரீ முதலியன.

5. இவற்றில் மேரு பர்வதத்திற்கு இந்த்ர, நிர்ருதி, வாயு திக்குகளில் மூன்று நகரங்களும், மத்தியில் ஒரு நகரமும் உண்டு. அந்த மூன்று நகரங்களில் ப்ரம்ஹ, விஷ்ணு, சிவ லோகங்களும், மத்ய நகரத்தில் அம்பாளுடைய நகரமும் இருக்கின்றன.

'ஸ ஜயதி ஸுவர்ணசைல: ஸகல ஜகச்சக்ர ஸங்கடித மூர்த்தி: |
காஞ்சந நிகுஞ்ஜவாட கந்தலதமரீ ப்ரபஞ்ச ஸங்கீத: ||
ஹரிஹர நைர்ருத மாருத ஹரிதாம் அந்தேவஷ்வவஸ்திதம்தஸ்ய |
விநுத: ஸாநுத்ரிதயம் விதி ஹரி கௌரீச விஷ்டபாதாரம் ||
மத்யே புநர் மதோஹர ரத்நருசிஸ்தபக ரஞ்ஜித திகந்தம் |
உபரி சது: சதயோஜநம் உத்துங்கம் ச்ருங்கபுங்கவம் உபாஸே ||'

6. இவ்விதமான பூரீ புரங்களின் நிர்மாணத்தைப்பற்றி தக்ஷராஜம் இருபத்தெட்டாவது படலத்தில்,

'அத வோடச நித்யாநாம் லோகாத்மத்வம் வதாமி தே |'

என்று ஆரம்பித்து, ஸப்த ஸமுத்ரங்கள், த்வீபங்கள், பூமி இவற்றை வர்

'மத்யஸ்த மேஷௌ லலிதா ஸஹைவாஸ்தே மஹாத்யுதி: |
தஸ்யாபிதோ ஜ்வலாப்த்யந்த: சேஷாஸ்தா: ஸ்யுச்சதுர்தச |
தத் பஹி: பரமே வ்யோம்நி த்வந்தே சித்ரா து ஸம்ஸ்த்திதா ||

என்பது முதலான ச்லோகங்களில் விசேஷமாக வர்ணிக்கப் பட்டிருக்கிறது. லலிதோபாக்யானத்திலும் விபரங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. மேரு, ஸ்ரீநகரம், சிந்தாமணிக்ருஹம் முதலியவற்றைப்பற்றி லலிதோபாக்யானம், லலிதாஸ்தவரத்னம், சிந்தாமணிஸ்தவம் முதலியவற்றில் விஸ்தாரமாக வர்ணிக்கப்பட்டிருப்பதையும் பார்க்கவும்.

7. சக்ரராஜத்திற்கு (ஸ்ரீசக்ரத்திற்கு) பூமி, கைலாஸ, மேரு ப்ரஸ்தாரங்களென்பதாக மூன்றுவிதமான பாவனை ப்ரகாரங்கள் உண்டு. வசின்யாதி அஷ்டதேவதைகளோடு இருப்பதாகப் பாவனைசெய்வது பூ ப்ரஸ்தாரம். மாத்ருகாக்ஷரங்களோடு இருப்பதாகப் பாவனைசெய்வது கைலாஸ ப்ரஸ்தாரம். ஷோடசநித்யாதேவதைகளோடு இருப்பதாகப் பாவனைசெய்வது மேரு ப்ரஸ்தாரம். இவற்றில் மேரு எனப்படும் நித்யாதாத்ம்ய பாவனையையே நிலையமாக உடையவள் என்றும் இந்த நாமத்திற்கு அர்த்தம் சொல்லலாம். இந்தாதிரியாக பாவனை செய்வது ஸனத்குமார, ஸனந்தன, வஸிஷ்ட ஸம்ஹிதைகள் மூன்றிலும் மூன்றுவிதமாகச் சொல்லப்பட்டிருக்

8. அல்லது, [illegible] த்தில் சொல்லப்பட்டபடி,

'பூமிச்சந்த்ர : சிவோ மாயா சக்தி: க்ருஷ்ணத்வ மாதனௌ |
அர்தசந்த்ரச்ச பிந்துச்ச நவார்ணே மேருருச்யதே ||'

என்றபடி ஒன்பது அக்ஷரங்களையுடைய மந்த்ரத்திற்கு மேரு என்ற பெயர். அதையே நிலையமாக உடையவள், அதாவது, தன்னுடைய எல்லா மந்த்ரங்களுக்கும் அதையே உத்பவஸ்தானமாக உடையவள் என்றும் இந்த நாமத்திற்கு அர்த்தம் சொல்லலாம்.

'மஹாத்ரிபுர ஸுந்தர்யா மந்த்ரா மேருஸமுத்பவா: |

मन्दारकुसुमप्रिया

மந்தாரகுஸுமப்ரியா (776)

மந்தார புஷ்பத்தில் ப்ரியமுள்ளவள்.

மந்தாரமென்பது தேவலோகத்திய ஐந்து வ்ருக்ஷங்களில்

ஒன்று. ச்வேதகார்க்கம் (வெள்ளெருக்கு) என்பதற்கும் இந்தப் பெயர் சொல்லப்படும்.

वीराराध्या

வீராராத்யா (777)

வீரர்களால் ஆராதிக்கப்படுகிறவள்.

த்வைதபாவத்திற்கு அடையாளமாக இருக்கும் அஹம் (நான்), இதம் (இது) என்ற பாவங்களை ப்ரளயமடையச் செய்து (அவ்வித) பராக்ரமத்தையுடையவர்களாய், துக்கத்தைப் போக்கும்படியான ஆத்மஸ்வரூபத்தை அனுபவிப்பவர்களுக்கு வீரர்கள் என்று பெயர்.

'அஹமி ப்ரளயம் குர்வந் இதம: ப்ரதியோகிந: |
பராக்ரமம் பரோ புங்க்தே ஸ்வாத்மாநம் அசிவாபஹம் ||'
(பராபஞ்சாசிகா)

विराड्रूपा

விராட்ரூபா (778)

விராட் ஸ்வரூபமாக இருப்பவள்.

ஸ்தூல சரீர ஸமஷ்ட்யபிமானியான சுத்ரனுக்கு விராட் என்று பெயர்.

विरजाः

விரஜா: (779)

பாபமில்லாதிருப்பவள்.

1. உத்கல தேசத்திலிருக்கும் விரஜா என்ற பெயருடைய க்ஷேத்ரத்தில் அதிஷ்டானமாயிருக்கும் அம்பாளுக்கு விரஜா என்று பெயர். அந்த ரூபமாக இருப்பவள் என்றும் சொல்லலாம்.

'விரஜே விரஜா மாதா ப்ரம்ஹணை ஸம்ப்ரதிஷ்டிதா |
யஸ்யா: ஸம்தர்சநாத் மர்த்ய: புநாத்யாஸப்தமம் குலம் ||'
(ப்ரம்ஹாண்ட புராணம்)

2. ரஜஸ் என்ற பதத்திற்கு ஜ்யோதி, உதகம், லோகங்கள் என்றும் அர்த்தங்களுண்டு.

3. ப்ரயோகத்தில் இந்த நாமத்தை "விரஜாயை நம:" என்று சொல்லவேண்டும்.

(780)

விச்வதோ முகீ

எல்லாப் பக்கங்களிலும் முகத்தையுடையவள்.

அதாவது, பக்தனனவன் எந்த திக்கை நோக்கி அம்பா ளுடைய ரூபத்தைக் கல்பித்து த்யானம் செய்தோமோ அந்த இடத்தில் அம்பாள் ஆவிர்பாவமாவாள் என்று தாத் பர்யம். இந்த அர்த்தத்தில் தான்,

'விச்வதச் சக்ஷுருத விச்வதோ முக:'

என்றும்,

'ஸர்வத: பாணிபாதம் தத் ஸர்வதோக்ஷி சிரோ முகம்'

என்றும் வாக்யங்கள் சொல்லப்படுகின்றன. இவை கல்பித மான ரூபத்தைச் சொல்வதால், ப்ரம்ஹத்திலுடைய பார மார்த்திகமான ரூபத்தைச் சொல்லும் 'அபாணிபாதோ ஜவனோ க்ரஹீதா' என்பதுபோன்ற வாக்யங்களுக்கு விரோத மில்லை.

प्रत्यग्रूपा

(781)

ப்ரத்யக்ரூபா

உள்ளே நோக்கித் திரும்புவதிலுல் தெரியும் ரூபத்தை யுடையவள்.

1. ப்ரதிகூலமாக இருக்கும் வஸ்துக்களை ஒதுக்கிவிட்டு அவைகளிலிருந்து திரும்புவதை ப்ரத்யக் என்று சொல்லப் படும்.

2. இந்த்ரியங்கள் விஷயபோன்முகங்களாக (விஷயங் களில் பற்றுதலோடு) இருப்பதை பஹிர்முகத்வமென்றும், பராங்முகத்வமென்றும் சொல்லப்படும். அதைத் தள்ளிவிட்டு அந்தராத்மாவினிடம் உன்முகத்வத்தோடிருப்பதை அந்தர் முகத்வமென்றும், ப்ரத்யங்முகத்வமென்றும் சொல்லப்படும். இப்படி பராங்முகமாயிருக்கும்போது தெரியாததும், ப்ரத்யங் முகமாக இருக்கும்போது தெரிவதுமான (ப்ரத்யகாத்ம) ஸ்வரூபத்தோடிருப்பவள் என்று இந்த நாமத்தின் தாத்பர்யம். இதைப்பற்றி ச்ருதியில்,

'பராஞ்சி காநி வ்யத்ருணத் ஸ்வயம்பூ: தஸ்மாத் பராங் பச்யதி நாந்தராத்மந் |'

என்று சொல்லியிருக்கு

पराकाशा

பராகாசா (782)

உத்க்ருஷ்டமான ஆகாச ஸ்வரூபமாயிருப்பவள்.

1. இந்த ஆகாசம் என்ற பதத்தினால் பரப்ரம்ஹமானது குறிக்கப்படுகிறது.

'ஆகாச இதிஹோவாச ஆகாசோ ஹ்யேவைப்யோ
ஜ்யாயாந் ஆகாச: பராயணம்'

என்ற சாந்தோக்ய வாக்யத்தில் சொல்லப்பட்ட ஆகாசபதமானது பஞ்சபூதங்களில் ஒன்றான (ஸாமான்ய) ஆகாசத்தைக் குறிப்பதில்லையென்றும், அது பரப்ரம்ஹத்தைச் சொல்லுகிறதென்றும் 'ஆகாசஸ் தல்லிங்காத்' என்ற ப்ரம்ஹ ஸூத்ரமானது நிர்ணயிக்கிறதென்று சொல்லப்படும். பரப்ரம்ஹ ஸ்வரூபிணியான அம்பாளானவள் பராகாச ஸ்வரூபமாயிருப்பதைக் கூர்மபுராணத்தில்,

'யஸ்ய ஸா பரமாதேவீ சக்திராகாசஸம்ஸ்திதா |
'இத்தம் ஹி ஸா ஜகதோ யோநிரேகா
ஸர்வாத்மிகா ஸர்வ நியாமிகா ச |
மாஹேச்வரீ சக்திரநாதி ஸித்தா
வ்யோமாபிதாநா திவி ராஜதேவ ||'

என்று சொல்லியிருக்கிறது.

2. 'பரமே வ்யோமந் ப்ரதிஷ்டி-த:' என்ற ச்ருதி வாக்யத்தில் சொல்லப்பட்ட வ்யோம (ஆகாச)மானது ப்ரம்ஹமாண்ட, பிண்டாண்ட பேதத்தால் இரண்டுவிதமாக இருந்தபோதிலும் இரண்டும் ப்ரம்ஹாபிவ்யக்திஸ்தானமான பராகாசமென்று சொல்லப்படும். பிண்டாண்டத்திலிருப்பதான பராகாசமானது இரண்டுவிதமாக சொல்லப்பட்டிருக்கிறது. ஹ்ருதயத்திலிருக்கும் ஸூர்ய, சந்த்ரர்களுக்கு நடுவிலுள்ள ஆகாசத்தில் அக்னியிருக்கிறதென்றும், அதன் சிகரத்திற்கு மேலிருக்கும் ஆகாசமே பராகாசமென்றும், சித்கன சாந்த்ரியில் சொல்லப்பட்டது.

'ஹ்ருத் க்ரியாத்ம சசி பாநுமத்யக:
கே சரத்யநலத்ருஷ்டி தாம ய: |
யத்தத் ஊர்த்வ சிகரம் பரம் நப:
தத்ர தர்சய சிவம் த்வம் அம்பிகே ||

லலாடத்திற்கு மேல், கபாலத்தின் உச்சிவரையிலுள்ள இடத்திற்கு த்வாதசாந்த ஸ்தானமென்றும், சிரோ தேசத்

திற்குமேல் இரண்டு அங்குலம் வரையிலுள்ள இடமானது பரம் வ்யோம (பராகாசம்) என்றும் ஸ்வச்சந்த ஸங்க்ரஹத்தில் சொல்லப்பட்டது.

'த்வாதசாந்தம் லலாடோர்த்வம் கபாலோர்த்வாவஸாநகம் |
த்வ்யங்குலோர்த்வம் சிரோதேசாத் பரம் வ்யோம ப்ரகீர்த்திதம்॥'

3. அல்லது, ஸப்த ஸமுத்ரங்களுக்கும் அப்பாலிருக்கும் ஆகாசத்திற்குப் பராகாசம் என்று பெயராகையாலும், அந்த லலிதாம்பிகையானவள் (பின் சொல்லப்படுகிறபடி) பதிணாறுவது வருஷத்திலிருப்பதாலும், அந்த பராகாச ரூபமாக நிற்பவள் என்றும் சொல்லலாம்.

4. பூகோளத்திற்கு உத்தரபாகத்தில் மேரு பர்வதமிருக்கிறது. அதின் தக்ஷிண திக்கில் ஜம்பூ, ப்லக்ஷ, சால்மலி, குச, க்ரௌஞ்ச, சாக, புஷ்கரங்களென்ற ஸப்த த்வீபங்களும், அவைகளுக்கு நடு நடுவே பூகோளத்தைச்சுற்றி (வலயாகாரமாய்) லவண, இக்ஷு, ஸுரா, ஸர்ப்பி, மது, க்ஷீர மதுரோதக கங்களென்ற ஸப்த ஸமுத்ரங்களும், கடைசியான மதுரோதக ஸமுத்ரத்திற்குத் தெற்காக பராகாசமும் இருப்பனவாகச் சொல்லப்படும். இவ்வாறிருக்கும் (மேரு + ஸப்தத்வீபங்கள் + ஸப்த ஸமுத்ரங்கள் + பராகாசம்) பதிணாறு ஸ்தானங்களில் லலிதா முதல் சித்ரா வரையிலுள்ள பதிணாறு நித்யா தேவதைகளும் ஆதியான க்ருத யுகத்தின் முதல் வருஷத்தில் இருக்கிறார்கள். இந்த ஸ்தானங்களின் வரிசையானது மேரு, ஜம்பூ த்வீபம், க்ஷீராரஸமுத்ரம், ப்லக்ஷத்வீபம், இக்ஷுஸமுத்ரம் என்றவிதமாகச் சொல்லி கடைசியில் புஷ்கரத்வீபம், மதுரோதக ஸமுத்ரம் பராகாசம் என்று முடிக்கவேண்டும்.

5. இப்படி க்ருதயுக ப்ரதம வருஷத்தில் மேருவிலிருக்கும் லலிதாம்பாளானவள் இரண்டாவது வர்ஷத்தில் ஜம்பூ த்வீபத்திற்கும் அடுத்தவர்கள் அவரவர்களுக்கடுத்த ஸ்தானத்திற்கும் கடைசியான சித்ராவானவள் மேருவுக்கும் வருவார்கள். இதேவிதமாய் அடுத்தடுத்த வருஷங்களில் ஸ்தானம் மாறி பதிணாறு வருஷங்களானவுடன் லலிதாம்பிகை திரும்பவும் மேருவுக்கு வந்துவிடுவாள். இம்மாதிரியான பரிவர்த்தனத்தைப்பற்றி,

'க்ருதாதி வர்ஷாதாரப்ய ப்ரதிவர்ஷமிதி ஸ்த்திதா: |
த்விதீயாதிஷு வர்ஷேஷு க்ரமாத் தா: பரிவ்ருத்திபி: ॥

ஷோடசேபசாரைப்தே பரே வ்யோம்நி லலிதா ஸலிலாம்புதௌ'
சித்ராச பவதித்தம் ஹி பஜந்தே பரிவர்த்தநம் ll'

என்ற சூத்திரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

6. பாகமென்றால் ஒருவிதமான க்ருச்சிரத்திற்குப் பெயராகையால் அது இங்கு தபஸ்ஸைக் குறிக்கும். அதனுடைய ஆசா (திக்கு) பாகாசா, அதாவது தபஸினால் அடையக்கூடிய மார்க்கமாயிருப்பவள் என்றும் சொல்லலாம்.

7. அல்லது மேலே சொல்லப்பட்ட பாகம் முதலான தபஸுகளைச் செய்வதினால் உண்டாகும் பலன்களின் போக்த்ரீ (அனுபவிப்பவள்) என்றும் சொல்லலாம்.

8. 'அகம் பாபே ச துஃகே ச' என்ற விச்வேகாசனத்தின்படி அகம் என்ற பதமானது பாபம், துக்கம் இவைகளைக் குறிக்கும். இந்த அர்த்தத்தில் உத்க்ருஷ்டமான (எப்போப்பட்டதான) பாபதுக்கங்களையும் நாசம் செய்கிறவள் என்றும் சொல்லலாம்.

9. ப்ரதீகாசமென்றால் உபமா (உவமை) என்றும் அர்த்தம். பராகாசமென்ற பதமானது ப்ரதீகாசமென்பதற்கு எதிரிடையான பதமாதலால் இந்த நாமத்திற்கு அனுபமா (ஒப்பு, உவமை இல்லாதவள்) என்றும் அர்த்தம் சொல்லலாம்.

प्राणदा

ப்ராணதா (783)

ப்ராணனைக் கொடுப்பவள்.

1. பராணன்களென்றால் ப்ராண, அபான, ஸமான, வ்யான மென்ற ப்ராண பஞ்சகத்தையும், நாகாதீந்த்ரியங்களையும் குறிக்கும்.

2. அல்லது அவ்விதமான ப்ராணன்களை (க்ரியதி-கல்பய நிப்பிக்கிறவள் என்றும் சொல்லலாம்.

प्राणरूपिणी

ப்ராண ரூபிணீ (784)

ப்ராண ரூபமாயிருப்பவள்.

1. 'ப்ராணோஸ்மி ப்ரஜ்ஞாத்மா தம்மாம் ஆயுரம்ருதமுபாஸ்வ' என்ற கௌஷீதகி ப்ராஹ்மண வசனத்தில் வரும் ப்ராண் என்ற பதமானது ப்ரம்ஹமத்தைக் குறிக்குமென்று ப்ரம்ஹ ஸூத்ரம் ப்ராணாதிகரணத்தில் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது.

இதுவே,

'ப்ராணே பரம்ஹ கம் ப்ரம்ஹ (க்)கம் ப்ரம்ஹ'

என்ற ச்ருதி வாக்யத்திலும் சொல்லப்பட்டிருக்கிறது.

2. 'ப்ரா பூரணே' என்றதாதுவிலிருந்து ஏற்பட்ட ப்ராணனென்ற பதத்திற்கு பூர்ணமென்று அர்த்தம் ஏற்படுவதிலும், 'பூர்ணாத: பூர்ணமிதம்' என்ற ச்ருதி வாக்யத்தில் சொல்லப்பட்டபடி பூர்ணமானவஸ்து ப்ரம்ஹமொன்றே ஆனதாலும் ப்ராணனென்றபதமானது ப்ரம்ஹத்தையே குறிக்கும்.

3. இப்படி ப்ராண என்ற பதத்திற்கு ப்ரம்ஹமென்ற அர்த்தமிருப்பது,

'ஏகமேகே வதந்த்யக்நிம் மநுமந்யே ப்ரஜாபதிம் |
இந்த்ரமந்யே பரம் ப்ராணம் அபரே சமஹேச்வரீம் ||'

என்று பஹ்வ்ருசியிலும் சொல்லப்பட்டிருக்கிறது.

4. அல்லது, ப்ராணன்களென்பது காமேச்வரீ முதலான நித்யாதேவதைகளைக் குறிக்கும். நித்யாதேவதைகள்,

'ஏதா தேவீ ஸ்வரூபா: ஸ்யு: மஹாபல பராக்ரமா: |
ப்ரதமா முக்ய திதிதாம் கதா வ்யாப்த ஜகத்த்ரயா: |
காலரூபா வர்த்தமாநா: காலக்ராஸ விசக்ஷணா: ||'

என்றபடி காலரூபிணிகளாக இருக்கிறார்கள். காலத்தினுடைய கணக்குக்களான தினம், மாதம் முதலியவை ச்வாஸத்தின்காலத்திலிருந்து ஏற்படுவதால் காலரூபிணிகளான நித்யாதேவதைகள் அவ்விதமான ச்வாஸத்தின் காரணமான ப்ராண இருக்கிறார்களென்பது நித்யா தந்த்ரத்தில்,

'அத ஷோடச நித்யாநாம் காலேந ப்ராண தோச்யதே |'

என்பது முதலான ச்லோகங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. அவ்விதமான ஷோடச நித்யைகளில் அம்பாள் ஒருவளானதாலும், பாக்கி நித்யைகளுக்கும் அம்பாளுக்கும் யாதொரு விதமான பேதமும் இடையாதாகையாலும் அம்பாள் இங்கு 'ப்ராண ரூபிணீ' என்று சொல்லப்பட்டாள்.

5. மேலும்,

'ஸார்த்த த்வாவிம்சதி: ச்வாஸா: க்ரமாத் த்வாதசராசய: |'

என்றபடி இருபத்து இரண்டரை ச்வாஸங்களே க்ரமமாக பன்னிரண்டு ராசிகளை ஏற்படுத்துகின்றனவென்றும், இவ்விதம் ச்வாஸங்களிலிருந்தே ராசிகள், சந்த்ர, ஸூர்யாதிகளுடைய கல்பனையானது ஏற்படுகிறதென்றும் சொல்லப்பட்டிருக்கி--

मार्तण्डभैरवाराध्या

மார்த்தண்ட பைரவாராத்யா (785)

மார்த்தண்ட பைரவரால் ஆராதிக்கப்பட்டவள்.

1. ஸ்ரீபுரத்தில் 22, 23-ஆது ப்ராகாரங்களுக்கு நடுவில் உள்ள பூமியில் மார்த்தண்ட பைரவரென்ற தேவீ உபாஸகர் இருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

'சக்ரேஷ்மதீ ப்ரகாசந சக்திச் சாயா ஸமாரசித கேளிம் |
மாணிக்ய முகுடாரம்யம் மத்யே மார்த்தண்ட பைரவம்
ஹ்ருதயே ll' [லலிதாஸ்தவரத்னம்]

தேவியின் உபாஸகர்களிடம் விரோதம் பாராட்டி அவர் களைக் கொல்லவுள்ள பார்வையுடன் பார்க்கிறவர்களை மார்த் தண்ட பைரவர் அந்தர்களாக (கண்களை இழந்தவர்களாக) செய்துவிடுகிறரென்ற பலச்ருதி அத்யாயத்தில் சொல்லப் பட்டிருக்கிறது.

'யே க்ரூரத்ருஷ்ட்யா வீக்ஷ்யந்தே ஸாமஸாஹஸ்ர பாடகம் |
தாந் அந்தாந் குருதே க்ஷிப்ரம் ஸ்வயம் மார்த்தண்ட பைரவ: ll'

2. முன்னெருக்கால் மணிமல்லனென்ற அஸுரனுடம் ஹாரம் பண்ணுபொருட்டு சிவனைவர் அச்வாரூடராய் கர்ணாடக தேசத்திலிருக்கும் ப்ரோடபுரத்தில் அவதரித்து அவனை வம் ஹாரம் பண்ணியதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இவரைப்பற்றி மஹாராஷ்ட்ர தேசத்தில் பிகவும் விசேஷ மாகச் சொல்லப்படுகிறது. இவருடைய மந்த்ரங்களும் ப்ரயோ கங்களும் (முக்ரயாளத்திலிருக்கும்) மைராள தந்த்ரத்தில் விசேஷமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இவருக்கு மல்லாரி என்ற பெயரும் உண்டு. இவர் அம்பாளை ஆராதித்ததைப் பற்றி மல்லாரி மாஹாத்ம்யத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

3. ம்ருதேऽண்டே யேந ஸம்ஜாதோ மார்த்தண்டஸ்தேந
பாஸ்கர: |

என்ற ஸ்காந்தத்தில் சொல்லப்பட்டபடி மார்த்தண்டனென்ற ஸூர்யனுக்குப் பெயர். பைரவர் என்பதனால் பெருகர் முதலானவர்கள் குறிக்கப்படுவார்கள். ஸூர்யன் அம்பாளை ஆராதித்ததைப்பற்றி,

'தேவ்யா ரத்நமயீம் மூர்த்திம் பக்த்யா நித்யம் திவாகர: |
பூஜயித்வா ஆப்தவாந் திவ்யம் ஸூர்யத்வம் சுபமுத்தமம் ll'

என்ற பத்மபுராணத்திலும், பைரவர் அம்பாளை ஆராதித்தது காளிகாபுராணத்தில் பல இடங்களிலும் சொல்லப்பட்டிருக்

4. பீரு என்றால் பயந்த ஸ்வபாவமுள்ளவர், பயப்படுபவர் என்ற அர்த்தம். இவர்களுடைய ஸமூஹம் பைரவி என்று சொல்லப்படும். பயமடைந்தவர்கள் அம்பாளை த்யானித்தால் காப்பாற்றப்படுகிறார்களென்பது,

'துர்கே ஸ்ம்ருதா ஹரஸி பீதிம் அசேஷ ஜந்தோ: |'

என்ற தேவீ பாகவதத்தில் தேவீ ஸ்துதி ப்ரகரணத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

5. ஸ்த்ரீகள் பயந்த ஸ்வபாவமுள்ளவர்களாகையால் அவர்களுக்கும் பீருக்கள் என்ற பெயர். அவர்கள் எல்லோராலும் அம்பாள் ஆராதிக்கப்படுவதாகவும் சொல்லலாம்.

6. அல்லது, 'உத்யமோ பைரவ:' என்ற சிவஸூத்ரத்தில் சொல்லப்பட்டபடி பைரவ பதத்திற்கு உத்யோகம் (முயற்சி) என்ற அர்த்தம். அது மோகமாகிற அந்தகாரத்தை (இருட்டை) போக்கடிப்பதால் ஸூர்யனைச் சொல்லப்பட்டது.

'மோஹஜ்யாத் அந்தாபோகாத் ஸஹஜம் வித்யாஜ்ய:'

என்ற சிவ ஸூத்ரத்திலும், அதன் வார்த்திகத்தில்,

'மோஹஸ்ததோ நிஜாக்யாதி: தஜ்ஜ்யாத் தத் பராபவாத் |
உத்யமார்க்கோதித்தோ(அ)ந்த: ஸம்ஸ்கார ப்ரசமாவதி: ||
ஆபோகோ யஸ்ய விஸ்தார: ஈத்ருசாத் தர்சிதாத்மக: |
பவேத் ஸஹஜவித்யாயா ஜயோ லாபோ(அ)ஸ்ய யோகிந: ||'

என்றும் சொல்லப்பட்டது.

ஆகவே, (மேலே சொல்லப்பட்டபடி மோஹாந்தகாரத்தைப் போக்குவதினால்) ஸூர்யனுக்கு ஸமானமாயிருக்கும் உத்யோக (முயற்சி) விசேஷத்தினால் ஆராதிக்கப்படுகிறவள் (அடையப்படுகிறவள்) என்ற தாத்பர்யம்.

मन्त्रिणीन्यस्तराज्यधूः

மந்த்ரிணீ ந்யஸ்த ராஜ்ய தூ: (786)

ம [illegible] த்தில் வைக்கப்பட்ட ராஜ்யபாரத்தோடிருப்பவள்.

1. மந் [illegible] ஸகிவேசானீ, ச்யாமளாம்பா, ராஜ்ய ச்யாமளை, ஸக் ச்யாமளை என்பவை முதலான பெயர்களுண்டு,

ஸங்கீத யோகிநீ ச்யாமா ச்யாமளா மந்த்ரிநாயிகா |
மந்த்ரிணீ ஸபிவேசாநீ ப்ரதாநேசீ சுகப்ரியா |
வீணுவதீ வைணிகீ ச முத்ரிணீ ப்ரியகப்ரியா |
நீபப்ரியா கதம்பேசீ கதம்பவநவாஸிநீ |

2. மந்த்ரிணியைப்போல் தண்டநாதைக்குப் ஸைன்யம், பூஷணங்கள், ப்ரபாவம், ப்ராக்ரமம், ஆச்ரித ரக்ஷணம், அம்பாளிடம் பக்தி முதலிய அம்சங்கள் ஸாமானங்களென்று சொல்லப்பட்டிருக்கிறது.

'யதைவ ஸைன்ய ஸங்காதேஹா மந்த்ரிண்யா: கும்பஸம்பவ |
யதா பூஷண வேஷாதி யதா ப்ராபவ லக்ஷணம் |
யதா புஜஸ்ய விக்ராந்தி: யதைவாச்ரித ரக்ஷணம் |
யதா தைத்யௌக ஸம்ஹாரோ யதா ஸர்வைச்ச பூஜ்யதா |
யதா பக்திர் மஹா ராக்ஞ்யாம் தண்டிந்யாச்ச ததாகிலம் ||'

அப்படி ஸாமாக இருந்தபோதிலும் சியாமளாம்பா வானவள் அம்பாளுடைய மந்த்ரியாகையால் அம்பாளுடைய ராஜ்யபாரம் முழுவதும் அவளிடத்தில் ஒப்புவிக்கப்பட்டு அதற்கு அடையாளமாக அம்பாளுடைய ஆக்ஞா முத்ரை யோடு கூடிய மோதிரத்தை அவள் தரித்துக்கொண்டிருக்கிறாளென்று சொல்லப்பட்டிருக்கிறது.

'விசேஷஸ்து பரம் தஸ்யா: ஸபிவேச்யா: பரம் கரே |
மஹாராக்ஞீ விதீர்ணம் ததாக்ஞாமுத்ராங்குளீயகம் ||'
'லலிதா பரமேசாந்யா ராஜ்ய சர்சா து யாவதீ |
சக்திநாமபி யா சர்ச்சா ஸர்வா தஸ்யாம் வசம் வதா ||'

3. மந்த்ரோபாஸகர்களை மந்த்ரிகள் என்று சொல்லலாம். அல்லது, மனனம், த்ராணம் (காப்பாற்றுவது) என்ற தர்மங்களோடிருப்பதால் நிர்மலமான சித்தத்தையே மந்த்ர மென்றும், அதையுடையவர்களை மந்த்ரிகளென்றும் சொல்லப்படும். இவர்களை அம்பாளோடு ஐக்யமாயிருக்கும் தன்மை யை அடையச்செய்யும் ப்ரயத்ன விசேஷத்திற்கு மந்த்ரிணீ என்று பெயர். இவ்விதமான யத்ன விசேஷத்தில் ந்யஸ்த மான (வைக்கப்பட்ட) ராஜ்யத்தினுடைய (தன்னுடைய ஸாம் ராஜ்ய ரூபமான ஐக்ய ரஹஸ்யத்தினுடைய) பாரத்தை அவ் விதமான ஸாம்ராஜ்யத்தைக் கொடுக்கும் தர்மத்தை உடையவள் என்றும் சொல்லலாம். அதாவது உபாஸகர்களுக்கும் யோகிகளுக்கும் ப்ரயத்ன விசேஷத்தினால் ஐக்யபாவம் கிடைப் பதானது அம்பாளுக்கு அதீனமாக இருக்கிறதென்று தாத் பர்யம்.

त्रिपुरेशी (787)

த்ரிபுரேசீ

த்ரிபுரேசீ என்ற த்தின் ரூபமாயிருப்பவள்.

ஸ்ரீசக்ரத்தின் ஒன்பது பாகங்களில் ஸர்வாசாபரிபூரக மென்ற சக்ரத்தில் அதிஷ்டானமாயிருக்கும் தேவிக்கு த்ரிபுரேசி என்ற பெயர்.

ஸர்வாசாபரிபூரக சக்ரஸ்வாமிந் குப்தயோகிநீ ஸேவ்யா |
த்ரிபுரேசீ மம துரிதம் துத்யாத் கண்டா வலம்பிமணிஹாரா||'
[லலிதாஸ்தவரத்னம்]

जयत्सेना (788)

ஜய

(பண்டாஸுரன் முதலானவர்களோடு யுத்தம் செய்து) ஜயத் துடனிருக்கும் ஸேனையோடு கூடியவள்.

அல்லது ஜயத்ஸேனன் என்ற பெயருடைய ராஜாவின் ஸ்வரூபமாயிருப்பவள் என்றும் சொல்லலாம்.

निर्गुणा (789)

நிர்த்ரைகுண்யா

குணத்ரயங்கள் நீங்கியிருக்கும் ரூபத்தையுடையவள்.

परापरा (790)

பராபரா

பர, அபர, பராபர என்ற பதங்களால் குறிக்கப்படும் ப்ரம்ஹத்தின் ஸ்வரூபமாயிருப்பவள்.

1. பர என்ற பதமானது அன்யனையும் (அதாவது எதிரான பதமாகிய) அபரனென்பதை தன்னைச் சேர்ந்தவனையும் குறிக்கும். அதாவது ஸ்வாமீ, மித்ரன் என்ற அர்த்தம். ப்ரம்ஹமானது இந்த இரண்டு ரூபமாக இருப்பதை,

ந மே த்வேஷ்யோ(ஸ்தி ந ப்ரிய:

என்ற ச்ருதியில் சொல்லப்பட்டது.

2. பர என்றால் உத்க்ருஷ்டம் (மேலானது). அபரனென்றால் நிக்ருஷ்டம் (தாழ்ந்தது). ப்ரம்ஹம் இவ்விரண்டு விதமாகவுமிருப்பதை,

'ப்ரம்ஹவதாஸ்ய ப்ரம்ஹவதாசார ப்ரம்ஹவமே கிதவா உத |'

என்ற ச்ருதியில் சொல்லப்பட்டது.

3. பரனென்றால் தூரத்திலிருப்பவன், அபரனென்றால் அருகிலிருப்பவன். இவ்விதம் ப்ரம்ஹமிருப்பதை 'தூரஸ்தம் சாந்திகே தத்' என்று ஸ்ம்ருதியில் சொல்லியிருக்கிறது.

இவ்விதமான அர்த்தங்கள் பரமென்ற பதத்திற்கு இருப்பது,

'பர: ஸ்யாத் உத்தமாகாத்ம வைரிதூரேஷு கேவலே |'

என்று விச்வகோசத்தில் சொல்லப்பட்டது.

4. ப்ரம்ஹமானது கேவலம் சுத்தஸ்வரூபம், சாவித்ரமான (கலப்பற்ற) ஸ்வரூபம் என்ற ரூபரீபதத்தையொட்டி பரம், அபரம் என்ற இரண்டுவிதமாக இருப்பதாக ஸாமான்யமாகச் சொல்லப்படும். பராபரம் என்பது மூன்றுவிதமான ரூபம்.

'ஏதத்வை ஸத்யகாம பரம் சாபரம் ச |' (ச்ருதி)

'த்வே ப்ரம்ஹணீ வேதிதவ்யே பரம் சாபரமேவ ச |' (ஸ்ம்ருதி)

பரம் என்றால் ப்ரம்ஹத்திற்குப் பிரியதானது, அதாவது அதின் விசேஷணம், சக்தி. பரம் அல்லாதது அபரம், ரூபமுள்ளது, அதாவது விசேஷ்யமானது தான். ஸாமான்ய ஸம்பந்தத்தால் எப்படியோ சக்தியோடுகூடிய தன்மையாலோ பரஸ்வரூபம், ப்ரம்ஹஸ்வரூபம். அவ்விதமான ரூபத்தையுடையவள் என்று இந்த நாமத்தில் சொல்லப்பட்டது. இப்படி பர, அபர என்ற பதங்களுடைய பிரிய, ரூபிய (அதிர்ச்ய, தூர்ச்ய) என்ற அர்த்தங்களால் சக்தி, தன் இருவரும் குறிக்கப்படுவதை த்ரிபுரியின் கீழே கண்டபடி சொல்லப்பட்டிருக்கிறது.

'யுஷ்மவாம் ப்ரம்ஹ பூர்வ்யம் நமோவி: |'

'ஏஷோ உஷா அபூர்வ்யா வ்யுச்சதி ப்ரியா திவ: |'

இந்த விஷயத்தைப்பற்றி சௌனகதலஹரியில் விரிவாக சொல்லப்பட்டிருப்பதைப் பார்க

5. ஸ்தோம (ஆகாச)மானது பர, அபரமென்ற இரண்டுவிதமானதென்று சொல்லப்படும். தவிர, விக்ஞையானது அதே மாதிரியான இரண்டுவிதமானதென்று மூன்றாம் ல் சொல்லப்பட்டது. விக்ஞையே பரமாத்மாவென்பதாகவும், பாக்கியுள்ள வேத, வேதாங்கங்கள் முதலிய எல்லாம் அபரமாத்மாவென்பதாகவும் வித்யாபுராணத்தில்,

'த்வே ப்ரம்ஹணீ வேதிதவ்யே பரா சைவாபரா ததா |
அபரா தத்ர ருக்வேதோ யஜுர்வேதோ த்விதீயகஃ ||
ஸாமவேதஸ்ததாதர்வவேத: ஸர்வார்த்த ஸாதக: ||
சிக்ஷா கல்போ வ்யாகரணம் நிருக்தம் ச்சந்த ஏவ ச ||
ஜ்யோதிஷம் சாபரா வித்யா பரா அக்ஷரமிதி ஸ்த்திதம் |
தத் அத்ருச்யம் தத் அக்ராஹ்யம் அகோத்ரம் தத் அவர்ணகம் ||
... ...
அஸம்வ்ருதம் தத் ஆத்மைவ பராவித்யா நசாந்யதா ||'

என்று சொல்லப்பட்டிருக்கிறது.

6. பரம், அபரம் என்று ப்ரணவம் இரண்டுவிதமான தென்று சொல்லப்பட்டிருக்கிறது.

'பராபரவிபாகேந ப்ரணவோ த்விவிதோ மத: |
பர: பரதரம் ப்ரம்ஹ ப்ரக்ருதாநந்தாதி லக்ஷணம் ||
ப்ரகர்ஷேண நவம் யஸ்மாத் பரம் ப்ரம்ஹ ஸ்வபாவத: |
அபர: ப்ரணவ: ஸாக்ஷாத் சப்தரூப: ஸுநிர்மல: ||
ப்ரகர்ஷேண நவத்வஸ்ய ஹேதுத்வாத் ப்ரணவ: ஸ்ம்ருத: |
பரமப்ரணவ ப்ராப்தி ஹேதுத்வாத் ப்ரணவோ(அ)தவா ||'
(ஸ்காந்தம், யக்ஞவைபவகண்டம்)

7. வேதார்த்தாரணத்தில் பரம், அபரமென்று இரண்டுவிதமென்றும், பரமென்பது பரப்ரம்மாரண பாரம்பொருளென்றும், அபரமென்பது அவிதாரண பரத்தை அடைவதற்கு ஸாதனமான தர்மமென்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

'பராபரவிபாகேந வேதார்த்தோ த்விவித: ஸ்ம்ருத: |
வேதார்த்தஸ்து பர: ஸாக்ஷாத் பராத் பரதரம் பரம் |
அபரோ தர்ம ஸம்ஞ: ஸ்யாத் தத் பரப்ராப்தி ஸாதநம் ||'
(ஸ்காந்தம், யக்ஞவைபவகண்டம்)

8. யோக சாஸ்த்ரத்தில் பரம், அபரம், பராபரம் என்பதான மூன்றுவிதமான ஞானமிருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அவற்றில் பரமென்பது பர, பர, ஆத்ம தர்சனத்தைக் கொடுப்பதென்றும், அபரமென்பது கேவல பாச தர்சனத்தை மட்டும் கொடுப்பதென்றும், பராபரமென்பது (மனிதன், பூனை இவைகளுக்கு ராத்ரிவேளையில் தூங்கும்போதும் ஏற்படுவது போதனியான) விலக்ஷணமான ஞானமென்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

'ஞாநம் தத் த்ரிவிதம் ஜ்ஞேயம் பராபர விபேதத: |
தத்ராத்யம் பரமம் ஞானம் பசுபாசாத்ம தர்சநம் ||
த்விதீயம் பரமம் ஞானம் கேவலம் பாச தர்சநம் |

யதா த்ருஷ்ட்யந்தரம் ராத்ரௌ நரமார்ஜார கேத்ரயோ: |
ததா விலக்ஷணம் ஞானம் பராபரமுதீரிதம் ||'

அம்பாளுடைய பூஜையானது பர, அபர, பராபரமென்று மூன்று வகைப்படும். பரமென்பது எவ்விதம் செய்தபோதிலும் அத்வைத பாவத்தோடு (ஸாஹம் பாவம்) பூஜிப்பது. அபரமென்பது ஸ்ரீசக்ர பூஜை. அம்பாளுடைய நாநாவித மான மூர்த்திகளைப் பூஜிப்பது பராபரம்.

'தவ நித்யோதிதா பூஜா த்ரிபிர் பேதைர் வ்யவஸ்த்திதா |
பரா சாப்யபரா கௌரீ த்ருதீயா ச பராபரா ||
ப்ரதமாத்வைதபாவஸ்த்தா ஸர்வப்ரசரகோசரா |
த்விதீயா சக்ரபூஜா ச ஸதா நிஷ்பாத்யதே மயா |
ஏவம் ஞானமயீ தேவீ த்ருதீயா ஸ்வப்ரதாமயீ ||'

[நித்யாஹ்ருதயம்]

10. வாக்தானது பர, அபர என்ற இருவகையென்றும், அவற்றில் அபர என்பது பச்யந்தி, மத்யமா, வைகரீ என்று மூன்றையும் குறிக்குமென்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

11. அவஸ்த்தையானது பர, அபர என்ற இருவகை யென்றும், அவற்றில் பர, என்பது துர்யாவஸ்தையையும், அபர என்பது ஜாக்ரதாதி மூன்று அவஸ்தைகளையும் குறிக் குமென்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

12. தேஹாபிமானது பரம், அபரம் என்ற இருவகை யென்றும், அவற்றில் அபரமென்பது ஸ்தூல, ஸூக்ஷ்ம பேத மாக இருவகையென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. ஸ்தூல தேஹமும் ஸாதாரணமாகத் தெரிந்தது. ஸூக்ஷ்மமென்பது மூலாதாராக்னியிலுல் செய்யப்படுவது, ப்ராணக்ரியோஹ்ரத் ரத்திற்கு ஸமானமான தர்மத்தையுடையது. பரமென்பது ஞான, த்ராத்ரு, த்ரேயங்களையொட்டிய ஸகலவிதமான பேத பாவங்களையும் ஸ்வாத்மரூபமான மஹாக்னியில் தஹனம் செய்வது.

வாச்யார்த்தாநாம் அசேஷேண வேத்யவேத்ருவிதாத்மநாம் |
ஸ்திதி: பரோ பவேத்தேஹாம: ஸர்வபேத விலாபநாத் ||
ஸ்வாத்மரூப மஹாவஹ்நி ஜ்வாலாரூபேண ஸர்வதா |
நிருத்தேந்தந ரூபேண பராமார்த்தாத்மநி ஸ்த்திரே |
நிர்வ்யுத்தாந விலாபஸ்து பரதேஹாம: ஸமீரித: ||'

[ஸ்வதந்த்ரதந்த்ரம்]

'அந்தா நிரந்தர நிரிந்தநமேதமாந
மோஹாந்தகார பரிபந்தநி ஸம்விதக்நௌ

கஸ்மிம்ஸ்சித் அத்புத மரீசி விகாஸபூமௌ
விச்வம் ஜுஹோமி வஸுதாதி சிவாவஸாநம் ||'

[சிந்தாமணிஸ்தவம்]

ஸம்விதக்நௌ மஹாஸாதே விமர்சைக சரீரிணி |
பேதபாஸமிதம் ஹவ்யம் ஜுஹோம்யபுநருத்பவம் ||

13. மந்த்ர பாராயணத்திலடங்கிய பராபரா என்ற பெயருடைய மந்த்ர விசேஷத்தின் ரூபமாக இருப்பவளென்றார் சொல்லலாம்.

14. ஸ்ருஷ்டி சக்தியை பரா என்றும், ஸ்ரீ விஷ்ணுவி சக்தியை அபரா என்றும், ரௌத்ரி சக்தியை பராபரா என்றும் இம்மூன்று த்ரிமூர்த்திகளையணுஸரித்து மூன்று விதமாக அம்பாளிருப்பதாகவும் சொல்லப்பட்டிருக்கிறது.

'தத்ர ஸ்ருஷ்டி: பரா ப்ரோக்தா ச்வேதவர்ண ஸ்வரூபிணீ |
யா ஸ்ரீவிஷ்ணவி விசாலாக்ஷீ ரக்தவர்ண ஸ்வரூபிணீ ||
அபரா ஸா ஸமாக்யாதா ரௌத்ரீ ஸைவ பராபரா |
ஏதாஸ் திஸ்ரோ(ஏ)பி ஸித்யந்தி யோ ருத்ரம் வேத்தி தத்வத :||'

(வராஹபுராணம்)

सत्यज्ञानानन्दरूपा

ஸத்யஜ்ஞாநாநந்தரூபா (791)

ஸத்ய, ஞான, ஆனந்தமயமான ரூபத்தையுடையவள்.

1. அதாவது, ஸத், சித், ஆனந்த ரூபிணீ என்று அர்த்தம்

'ஸத்யம் ஞானம் அநந்தம் ப்ரம்ஹ |' (ச்ருதி)
'நித்யம் விக்ஞாநம் ஆநந்தம் ப்ரம்ஹ |' (ச்ருதி)

2. அல்லது, ஸத்வித்தையைப்பற்றி அக்ஞர்களாயிருப்பவர்களுக்கு (தெரியாதவர்களுக்கு) அஞ்ஞாநத்தை (அதாவது அக்ஞத்தை) கொடுப்பவள் என்றும் சொல்லலாம். இப்படி ஸத்வித்யோபாஸனையில்லாமல் அவித்யோபாஸனையோடிருப்பவர்கள், ஆனந்தமேயில்லாதவையும் ஒரே இருட்டாக இருப்பவையுமான லோகங்களை அடைவார்களென்பதாக ஸருஹதாரண்யக, ஈசாவாஸ்ய உபநிஷத்துக்களில் சொல்லப்பட்டிருக்கிறது.

'அந்தம் தம: ப்ரவிசந்தி யே஽வித்யாமுபாஸதே |'

3. அல்லது,

'அநந்தா நாம தே லோகா அந்தேந தமஸாऽऽவ்ருதா: |
தாம்ஸ்தே ப்ரேத்யாபிகச்சந்தி அவித்வாம்ஸோऽபுதோ ஜநா:||

என்ற வாக்யத்தின்படி ஸத்யாரூபிணியான அம்பாள் அக்ஞானத்தோடி-ருப்பவர்களுக்கு அகந்தங்களான (ஆனந்தமில்லாத) லோகங்களைக் கொடுக்கிறாளென்றும் சொல்லலாம்.

सामरस्यपरायणा

ஸாமரஸ்யபராயணை (792)

ஸாமரஸ்யத்தையே உத்க்ருஷ்டமான ஸ்தானமாயுடையவள்.

1. கூடுதல், குறைவு இவைகளில்லாமல் ஸமமானரஸத்தோடி-ருக்கும் பாலமான து ஸாமரஸ்யமெனப்படும். இவ்மான ஸாமரஸ்யத்தோடு சிவசக்திகளிருப்பதால் அதுவே அம்பாளுடைய உத்க்ருஷ்டமான ஸ்தானமாகச் சொல்லப்பட்டது.

'பக: சக்திர் பகவான் காம ஈச:
உபா தாதாராவிஹ ஸௌபகாகாம் |
ஸமப்ரதாஹௌள ஸமஸத்வௌள ஸமௌளதயோ:
ஸமசக்திரஜா விச்வயோநி:11
(த்ரிபுரமதேஹாபநிஷத்)

'பரஸ்பர தப: ஸம்பத் பலாயித பரஸ்பரௌள |
ப்ரபஞ்ச மாதாபிதரௌள ப்ராஞ்சௌள ஜாயாபதீ ஸ்தும:11'
'போக்த்ரு போக்ய கரணேர்மிஸம்கூயே
ஸாமரஸ்ய ரஸ தோஹமீ சிவா | '

2. ஆமரர்களோடு கூடிய (ஸாமரஸ்ய) லோகத்திற்கு (தேவலோகத்திற்கு) பராயணமாக (ஆச்ரயமாக) இருப்பவள் என்றும் சொல்லலாம்.

3. பாடப்படும் ஸாகானங்களில் ப்ரியமுள்ளவள் என்றும் சொல்லலாம்,

'பராயணமபீஷ்டம் ஸ்யாத் தத்பராச்ரயயோரபி |' [விச்வ:]

कपर्दिनी

கபர்தி நீ (793)

(கபர்த்தீ என்ற பெயருடைய) சிவனுடைய பத்னீ.

1. பரமசிவனுடைய ஜடாஜூடத்திற்கு கபர்தமென்ற பெயர்.

'கபர்த: கண்டபரசோ: ஜடாஜூடே வராடகே |' [விச்வ:]

2. கபர்தமென்பதைப்பற்றி,

'பூமி ஸிந்தா ப்ரசம்ஸாஸு நித்யயோகேஷ திசாயநே |'

என்பதை ஸுதஸம்ஹிதை வ்யாக்யானத்தில் சொல்லியிருப் பதை அநுஸரித்து, விசேஷமாகப் புகழப்பட்டவள் என்றும் சொல்லலாம்.

3. கனன்றுல் ஜலம். அதிலுடைய (பூரம்) ப்ரவாஹத்தைப் பரிசுத்தம் செய்வது கபர்தம். பரமசிவனுடைய ஜடையானது அதில் விழுந்த கங்கா ஜலத்தையும் பரிசுத்தம் பண்ணுமிடியான மஹிமையுடையதால் கபர்தமென்றுடையர் ஏற்பட்டது.

4. கபர்தமென்றுல் வராடகத்திற்கு (வராட்டிக்கு) பெயர். பரமசிவன் மைரானாவதாரம் எடுத்தபோது அம் பாள் மஹாலஸா என்ற ரூபத்தோடு அநுஸரித்ததாகவும் அந்த ரூபத்தில் வராட்டிகளாலான மாலையைத் தரித்திருந்த தாகவும் சொல்லப்பட்டிருக்கிறது.

5. பரமசிவனுடைய அறுபத்தெட்டு க்ஷேத்ரங்களில் ஒன்றான சகலாண்டமென்ற க்ஷேத்ரத்திலிருக்கும் மூர்த் திக்கு கபர்தீ என்ற பெயர் என்பதாக தேவீ புராணத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

कलामाला (794)

கலாமாலா

(அறுபத்திநாலு) கலைகளின் பரம்பரா ரூபமாக இருப்பவள்.

1. அல்லது, கலைகளையே மாலையாகத் தரித்திருப்பவள் என்றும் சொல்லலாம்.

2. அல்லது, கலையையும் (லாவண்யத்தையும்) சோபை யையும் உடையவள் என்றும் சொல்லலாம்.

कामधुक् (795)

காமதுக்

காமங்களெல்லாவற்றையும் கொடுப்பவள்.

1. அதாவது, பக்தர்களுடைய மநோரதங்கள் யாவற் றையும் பூர்த்திசெய்பவள் என்று தாத்பர்யம்.

2. வேண்டிய அளவு கறந்து கொடுக்குமாதலால்(வேண் டியவற்றையெல்லாம் கொடுக்குமாகையால்) காமதுக் என்று

பெயர். இந்தக் குணம் தெய்வலோகத்துப் பசுவாகிய காம தேனுவுக்கு விசேஷமாக உண்டென்று சொல்லப்படும். அந்த ரூபமாக இருப்பவள் என்றும் சொல்லலாம்.

'ஸா நோ மந்த்ரேஷூர்ஜம் துஹானா தேநுர் வாகஸ்மாந்
உப ஸுஷ்டுதைது [ச்ருதி]

காமரூபிணி

காமரூபிணீ (796)

காமேச்வரருடைய ரூபத்தோடிருப்பவள்.

1. காமேச்வரர், லலிதாம்பிகை இருவரும் ஒரேவிதமான நிறம், அழகு, வயது, அலங்காரம், ஆயுதங்கள் முதலியவைகளையுடையவர்களென்று சொல்லப்பட்டிருக்கிறது.

2. 'ஸாZகாமயத பஹூஸ்யாம் ப்ரஜாயேய' என்ற சுருதி வாக்யத்தில் சொன்னபடி ஜகத்தை ஸ்ருஷ்டிபண்ணும் ஆசையுடன் கூடியிருக்கும்போது ஈச்வரனுக்கு காமேச்வரர் என்று பெயர். இவரைப்பற்றி,

'ய ஏவாயம் காமமய: புருஷ: ஸ ஏவ தைவசாகல்யஸ்தஸ்ய
கா தேவதேதி ஸ்த்ரிய இதி ஹோவாச |'

என்று சுருதியில் சொல்லப்பட்டிருக்கிறது.

3. அல்லது, இஷ்டப்பட்ட ரூபங்களையுடையவள் என்றும் சொல்லலாம்.

கலா

கலா நிதி: (797)

கலைகளுக்குப் போக்கிஷம்போல் இருப்பிடமானவள்.

1. கலைகள் நானுவிதமானவையென்பதாக முன் வந்த நாமங்களில் சொல்லப்பட்டது.

2. 'ஆத்மைவாஸ்ய ஜந்தோர்நி கலா' என்ற ப்ருஹதாரண்யக வசனப்படி கலைகளென்றால் ஆத்மாக்களை (ஜீவன்களை)யும் குறிக்கும்.

3. (சந்த்ர)கலைகளுக்கெல்லாம் இருப்பிடமாகிய சந்த்ர மண்டலத்தின் ரூபமாக இருப்பவள் என்றும் சொல்லலாம்.

4. 'யோநிவர்க்க: கலா சரீரம்' என்ற சிவ ஸூத்ரத்தின் பாஷ்யத்தில் கலா என்பது கர்மாவைக்குறிக்குமென்று சொல்லப்பட்டிருக்கிறது. அந்த அர்த்தத்தில் ஸகல கர்மாக்

கணும் சேர்த்துவைக்கும்படியான (அடங்கும்படியான) இட மாக இருப்பவள் என்று சொல்லலாம்.

'ஸர்வம் கர்மாகிலம் பார்த்த ஞானே பரிஸமாப்யதே।' [கீதை]

काव्यकला

காவ்யகலா (798)

காவ்யங்களை இயற்றும் கலா ரூபமாக இருப்பவள்.

1. கவிகளால் இயற்றப்படுவது காவ்யம். அது நாடக, சாடக, பாண, டிம, ப்ரஹஸனம் முதலான அனேக பேதங் களையுடையது என்று அக்னிபுராணம் முதலியவைகளில் சொல்லப்பட்டிருக்கிறது. இவைகளை இயற்றுவதான கலை யானது சப்த ப்ரா**ண**மயியான அம்பாளுடைய ரூபமென்ப தாக இந்த நாமத்தில் சொல்லப்பட்டது.

காவ்யாலாபாச்ச யே கேசித் கீதகாந்யகிலானி ச |
சப்தமூர்த்திதரஸ்யைதத் வபுர் விஷ்ணோர் மஹாத்மந: ॥'
[விஷ்ணுபுராணம்]

2. காவ்யங்களை இயற்றும் ப்ரதிபையானது (புத்தி யோசனையே) காவ்யகலா என்று சொல்லப்படும். அம்பா ளுடைய த்யானவிசேஷத்தினால் காவ்யங்களை இயற்றும் சக்தி யானது கிடைக்கப்பெறும் என்பது தந்த்ரங்களில் பல இடங் களில் வர்ணிக்கப்பட்டிருக்கிறது.

'ஸ கர்த்தா காவ்யாநாம் பவதி மஹதாம் பங்கருஹிபி:
வசோபிர் வாக்தேவீ வதநகமலாமோத மதுரை: |'
[ஸௌந்தர்யலஹரீ—17]

3. கவி என்று அஸுர குருவான சுக்ராசார்யருக்குப் பெயர். அவருடைய கலை என்றால் (இறந்தவரைப் பிழைப்பு மூட்டும்) ம்ருதஸஞ்ஜீவினீ என்பது. அந்த ரூபமாக இருப்பவள் என் றும் சொல்லலாம்.

रसज्ञा

ரஸஜ்ஞா (799)

(ச்ருங்காரம் முதலிய பத்துவிதமான) ரஸங்களை அறிந்தவள்.

அல்லது, ரஸனேந்த்ரிய ஸ்வரூபமாயிருப்பவள் என்று சொல்லலாம்.

रसशेवधिः

ரஸஶேவதி: (800)

ப்ரம்ஹராம்ருதத்தின் நிதிபோன்றவள்.

1. ரஸம் என்பதே ப்ரம்ஹத்தையும் ஆக்கும்.

'ரஸோ வை ஸ: | ரஸம் ஹ்யேவாயம் லப்த்வா ஆநந்தீ பவதி' [ச்ருதி]

2. ரஸம் என்பது தேஹகாந்தியைக் கொடுக்குமென்றும், அதுவே ரேதஸ் என்றும் பலவிதமாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

'ரஸ ஏவ பரம் ப்ரம்ஹ ரஸ ஏவ பராகதி: |
ரஸோ ஹி காந்தி: பும்ஸாம் ரஸோ ரேத இதி ஸ்ம்ருத: | '

'ரஸோ வை ரஸ ஸம்லப்த்யா ஹ்யாநந்தீ பவதீத்யபி |
வேதப்ராமாண்ய ஸம்ஸித்யா ரஸ: ப்ராணதயா ஸ்தித: ||
கோ ஹ்யேவாந்யாச்ச க: ப்ராண்யாத் இத்யபி ச்ருதிபாஷித:|
ப்ராணேத்மகோ ரஸ: ப்ரோக்த: ப்ராணத: கும்பஸம்பவ ||'

[ப்ரம்ஹாண்ட புராணம்]

3. ப்ரயோகத்தில் இதின் முந்திய 797-வது நாமத்தையும் இந்த நாமத்தையும் கலாந்திதேய நம: என்றும், ரஸ சேவதேய நம: என்றும் சொல்லவேண்டும்.

पूषा

பூஷா (801)

பூஷ்டியோடு கூடியவள்.

1. அதாவது, மூப்படத்தாறு தத்வங்களையுமே தன் சரீரமாக உடையவளாகையால், பூஷ்டா என்று சொல்லப்பட்டது.

2. அல்லது அனேக குணங்களால், அல்லது ப்ரம்ஹானந்தத்திலால், அல்லது, ப்ரம்ஹணர்களால் போஷிக்கப்பட்டவள் என்றும் சொல்லலாம்.

'ப்ராம்ஹணீ: போஷிதம் ப்ரம்ஹ | ' [ஸ்ம்ருதி]

'ப்ரம்ஹாயுஷ்மத் தத் ப்ராம்ஹணீராயுஷ்மத் | ' [ச்ருதி]

पुरातना

புராதநா (802)

எல்லோருக்கும் முந்தியிருப்பவள்.

அல்லது, புராதனமான குணங்கள் இருக்கப்பெற்றவள் என்றும் சொல்லலாம்.

पूज्या

பூஜ்யா (803)

எல்லோராலும் பூஜிக்கத் தகுந்தவள்.

அல்லது, எல்லோராலும் என்றும் சொல்லலாம்.

புஷ்கரா (804)

புஷ்கரா

எல்லோருக்கும் புஷ்டியைக் கொடுப்பவள்.

1. அல்லது, புஷ்கரம் என்ற பெயருடைய ரூடராக இருப்பவள் என்றும் சொல்லலாம்.

2. ர, ல என்ற அக்ஷரங்கள் அபேதமானதையால் இந்த நாமத்தை 'புஷ்கலா' என்றும் சொல்லலாம். அப்போது எங்கும் வ்யாபித்திருப்பவள் என்று அர்த்தம்.

(805)

தாமரஸ புஷ்பங்களைப்போன்ற நேத்ரங்களையுடையவள்.

1. புஷ்கரமென்ற பதமானது,

'புஷ்கரம் பங்கஜே வ்யோம்நி பய: கரிகராக்ரயோ: |
ஔஷதீ த்வீப விஹக தீர்த்த ராகோராகாந்தரே |
புஷ்கரம் ஸௌம்ய வக்த்ரே ச காண்டே கட்கபலேZபி ச 11'

என்ற விச்வகோசனப்படி தாமரஸ புஷ்பம், ஆகாசம், ஜலம் முதலிய அனேக அர்த்தங்களையுடையது.

2. ஜ்யோதிஷ சாஸ்த்ரத்தில் சொல்லப்பட்ட யோகங்களில் புஷ்கரம் என்ற பெயருடையது ஒன்று உண்டு.

'விசாகாஸ்தோ யதா பாநு: க்ருத்திகாஸு ச சந்த்ரமா: |
ஸ யோக: புஷ்கரோ நாம புஷ்கரேஷ்வதி துர்லப: 11'
[பாத்மம்]

3. புஷ்கரமென்பது பூமியையும் குறிக்கும்.

'யா பத்மகர்ணிகா தேவா: தாம் ப்ருத்வீம் பரிசக்ஷதே |
யே பத்மே ஸாரகுரவ: தாந் திவ்யாந் பர்வதாநிஹ 11
யாநி பர்ணாநி பத்மஸ்ய ம்லேச்சதேசாஸ்து தேZபவந் |
யாந்யதோபாக பத்ராணி தே ஸர்ப்பாணும் ஸுரத்விஷாம் 11
ஏவம் நாராயணஸ்யார்த்தே மஹீ புஷ்கரஸம்பவா |
ப்ராதுர்பாவோச் ச்ரயஸ் தஸ்மாத் நாம்நா புஷ்கர ஸஞ்ஞிதா11
[பாத்மம்]

4. சுகுணை என்றால் நிர்வ்யாபாரமாக (ஒரு காரியமும் செய்யாமல்) இருப்பது, காலவிசேஷம், உத்ஸவம் என்பதான அர்த்தங்களுண்டு.

'நிர்வ்யாபார ஸ்திதௌ காலவிசேஷோத்ஸவயோ: க்ஷண: |'
[அமரம்]

ஆகவே, மேலே சொல்லப்பட்ட பூமி முதலியவைகளில் நிர்வ்யாபார ஸ்த்திதியோடிருப்பவள் புஷ்கரேக்ஷணை.

5. புஷ்கரமென்பது ந்யக்ரோத வ்ருக்ஷ (ஆலமர)த்தை யும் குறிக்கும். அந்த மரங்களிருப்பதினால் புஷ்கரத்வீபத் திற்கு அம்மாதிரிப் பெயர் ஏற்பட்டதாகப் பத்மபுராணத்தில் சொல்லப்பட்டது.

'ந்யக்ரோத: புஷ்கரத்வீபே புஷ்கரஸ்தேந ஸ: ஸ்ம்ருத: |

அந்த மரத்தில் ப்ரம்ஹா இருப்பதாகவும் சொல்லப்பட்டிருக்

'ந்யக்ரோத: புஷ்கரத்வீபே ப்ரம்ஹணு: ஸ்தாநமுத்தமம் |'
[விஷ்ணு புராணம்]

ஸ ப்ரஜாபதிரேக: புஷ்கரபர்ணே ஸமபவத் | [ச்ருதி]

6. விஷ்ணுவானவர் ந்யக்ரோத பர்ணத்தில் (ஆலிலையில்) சயனித்திருப்பதாகச் சொல்வது வழக்கமாதலால், புஷ்கர பதத்தினல் அவரே குறிக்கப்பட்டதாகவும் சொல்லலாம். அவரிடத்தில் அம்பாள் (க்ருபையோடு கூடிய) பார்வையுட னிருப்பதால் இந்தப்பெயர் ஏற்பட்டதாகவும் சொல்லலாம்.

'வடபத்ரசயாநாய விஷ்ணவே பாலரூபிணே |
ச்லோகார்தேந கதா ப்ரோக்தம் பகவத்யாகிலார்த்ததம் ||'
[தேவீபாகவதம்]

7. மேலே சொல்லியபடி புஷ்கரமென்ற பதத்திற்கு ஜலமென்ற அர்த்தத்தில் ஜலங்களில் பார்வையோடு கூடியவள் என்றும் சொல்லலாம். ஜலங்களென்றால்,

'தாநி வா ஏதாநி சத்வார்யம்பாம்ஸி
தேவா மநுஷ்யா: பிதரோ(ஸு)ரா: |'

என்று ச்ருதியில் சொல்லப்பட்டபடி தேவர்கள், மநுஷ்யர் கள், பித்ருக்கள், அஸுரர்கள் என்று அர்த்தம்.

परंज्योतिः

பரம்ஜ்யோதி: (806)

ஸர்வோத்க்ருஷ்டமான ஜ்யோதி ஸ்வரூபமாக இருப்பவள்.

1. ப்ரம்ஹாதிமானது ஸூர்யன் முதலானவர்களுக்கெல் லாம் ப்ரகாசத்தைக்கொடுக்கும் பரம்ஜ்யோதி ஸ்வரூபமாக

இப்படி

'தத் தேவா ஜ்யோதிஷாம் ஜ்யோதிராயுர் ஹோபாஸதேऽம்ருதம்।
'ந தத்ர ஸூர்யோ பாதி ந சந்த்ரதாரகம்
நேமா வித்யுதோ பாந்தி குதோऽயமக்னி: |
தமேவ பாந்தமநுபாதி ஸர்வம்
தஸ்ய பாஸா ஸர்வமிதம் விபாதி ॥'
'யேந ஸூர்யஸ்தபதி தேஜஸேத்த: | '
'பரம் ஜ்யோதிருபஸம்பத்ய | '

என்பவை முதலான ச்ருதிவாக்யங்களில் சொல்லப்பட்டது.

2. ஜ்யோதி என்பதிலுல் 'ந தே ஜ்யோதிர்ஜுஷதாம்' 'வாசைவாயம் ஜ்யோதிஷாஸ்தே' என்றவாக்யங்களில் ப்ரயோகிக்கப்பட்டபடி ப்ரகாசபதத்தால் சொல்லப்பட்டது. ப்ரகாசத்தோடிருக்கும் வஸ்துக்களுக்குள் அநாவ்ருதமான ஆத்மஜ்யோதியே எல்லாவற்றிற்கும் மேலானதென்பதாக மேலே சொல்லிய வாக்யங்களின் தாத்பர்யம்.

3. தக்ஷிணாமூர்த்தி ஸம்ஹிதையில் ஐந்தாவது படலத்தில் சொல்லப்பட்ட பரம் ஜ்யோதியென்ற அஷ்டாக்ஷர மந்த்ரத்தின் ஸ்வரூபமாயிருப்பவள் என்றிம் சொல்லலாம்.

परंधाम

பரம்தாம (807)

ஸர்வலோகாதிஷ்டானமான தாம ஸ்வரூபமாயிருப்பவள்.

1. தாம என்ற பதத்திற்கு தேஜஸ், அவஸ்தானம் (நிலை) இருப்பிடம் (பதம்) முதலான அர்த்தங்களுண்டு.

'ந தத் பாஸயதே ஸூர்யோ ந சசாங்கோ ந பாவக: |
யத் கத்வா ந நிவர்த்தந்தே தத் தாம பரமம் மம ॥' [கீதை]
'த்ரிஷு தாமஸு யத் போக்யம் போக்தா யச்ச ப்ரகீர்த்தித:
வேதாதத்ருபயம் யஸ்து ஸ புஞ்ஜாநோ ந லிப்யதே ॥'
'ஜாக்ரத் ஸ்வப்ந ஸுஷுப்த்யாக்யம் வேததாமத்ரயம் து ய: |
ஸ ஏவாத்மா ந தத் த்ருச்யம் த்ருச்யம் தஸ்மிந் ப்ரகல்பிதம் ॥'
த்ரிதாம ஸாக்ஷிணம் ஸத்யஞாநாநந்தாதி லக்ஷணம் |
த்வமஹம் ஸப்தலக்ஷ்யார்த்தம் பரம் தாம ஸமாச்ரயே ॥'
[ஸுதஸம்ஹிதை]

2. அம்பாள் பர (ஸர்வோத்தம) மான பதஸ்வரூபமாயிருப்பதை,

'ஸைஷா மாஹேச்வரீ கௌரீ மம சக்திர் நிரஞ்ஜநா |
சாந்தா ஸத்யா ஸதாநந்தா பரம் பதமிதி ச்ருதி: ॥'

என்று கூர்ம புராணத்தில் சொல்லப்பட்டது.

3. ப்ரயோகத்தில் இதற்கு முந்திய நாமத்தையும், இந்த நாமத்தையும் பரஸ்மை ஜ்யோதிஷே நம:; பரஸ்மை தாம்னே நம: என்று சொல்லவேண்டும்.

परमाणुः

பரமாணு: (808)

மிகவும் ஸூக்ஷ்மமான அணுவாயிருப்பவள்.

1. அதாவது, 'அணோரணீயான்' என்று ச்ருதியில் சொல்லியிருப்பதுபோல் அணுவுக்கும் அணுவாய் இருப்பவள் என்று சொல்லப்பட்டது. அறிவதற்கு முடியாத ரூபத்தை யுடையவள் என்று தாத்பர்யம்.

2. தாக்ஷ சாஸ்தரத்தில்,

ஜாலாந்தரஸ்த ஸூர்யாம்சௌ யத் ஸூக்ஷ்மம் த்ருச்யதே ரஜ:।
பாகஸ்தஸ்ய ச ஷஷ்டோ ய: ப்ரமாணு: ஸ உச்யதே ॥

என்று சொல்லப்பட்ட(ஸகல பதார்த்தங்களுக்கும் மூலமான) பரமாணு ரூபமாக அம்பாளிருப்பதாகவும் சொல்லலாம்.

3. பர, ஸர்வோத்க்ருஷ்டமான, அணு:- மந்த்ர ரூபமாக இருப்பவள் என்றும் சொல்லலாம்.

परात्परा

பராத்பரா (809)

உத்க்ருஷ்டமாயிருப்பவற்றையும்விட ச்ரேஷ்டமாயிருப்பவள்.

1. அதாவது, உத்க்ருஷ்டமாகச் சொல்லப்படும் ப்ரம்ஹ, விஷ்ணு, ருத்ராக்னியுடன்விட ச்ரேஷ்டதரமாயிருப்பவள் என்று அர்த்தம்.

2. ப்ரம்ஹாவினுடைய ஆயுளின் அளவுக்குப் பரம் என்று பெயர். அதற்கு மேல்பட்டவள், அதாவது அவ்விதமான கணக்கு, அளவுக்கு உட்படாதவள் பராத்பரா. அம்பாளுடைய பரம்தாமத்வமும், பரமாணுத்வமும் தான் இதற்குக் காரணம். ப்ரம்ஹாவினுடைய ஆயுளில் ஒரு பகல், ஒரு ராத்ரி சேர்ந்தது பரமென்றும், அவ்விதமான பகலையும், ராத்ரியையும் தனித்தனியாகச் சொல்லும்போது பரார்த்தமென்றும் சொல்லப்படும்.

'தஸ்ய ப்ரம்ஹஸ்வரூபஸ்ய திவாராத்ரம் ச யத்பவேத் |
தத்பரம் நாம தஸ்யார்த்தம் பரார்த்தமபிதீயதே ||
ஸ ஈச்வரஸ்ய திவஸ: தாவதீ ராத்ரிருச்யதே |
ஸ்த்தூலாத் ஸ்த்தூலதம: ஸூக்ஷ்மாத்யஸ்து ஸூக்ஷ்மதமோ
ந தஸ்யாஸ்தி திவாராத்ரி வ்யவஹாரோ ந வத்ஸர:||' [மத: |
[காளிபுராணம்]

पाशहस्ता

பாசஹஸ்தா (810)

பாசத்தைக் கையிலுடையவள்

1. அம்பான் ராகஸ்வரூபமான பாசத்தை தன் கைகளிரண்டில் கீழாக இருக்கும் கையில் என்று ஏற்கனவேயே சொல்லப்பட்டது.

2. அல்லது, பாசங்களைத் தன் கைகளால் விலக்குகிறவள் என்றும் சொல்லலாம்.

पाशहन्त्री

பாசஹந்த்ரீ (811)

பாசங்களை நாசம் செய்பவள்.

1. அதாவது, அவித்யை, அல்லது ஆசை முதலான பாசங்களைப் போக்கடிப்பவள் என்று அர்த்தம்.

2. அனிருத்தன் பாணாஸுரனால் போடப்பட்ட நாக பாசத்திலிருந்து கிளம்பிய ஸர்ப்பங்களால் கட்டுண்டிருக்கும் போது அம்பாளுடைய அனுக்ரஹத்தினால் அவற்றிலிருந்து அவன் விடுவிக்கப்பட்டானென்பது ஹரிவம்சம், விஷ்ணு பாகவதம் முதலியவைகளில் சொல்லப்பட்டிருக்கிறது.

'நாகபாசேந பத்தஸ்ய தஸ்யோபஹத சேதஸ: |
த்ரோடயித்வா கரைர் நாகபஞ்ஜரம் வஜ்ர ஸந்நிபம் ||
பத்தம் பாணபுரே வீரம் அநிருத்தம் அபாவத |
ஸாந்த்வயந்தீ ச ஸா தேவீ ப்ரஸாதாபிமுகீ ததா ||'

परमन्त्रविभेदिनी

பரமந்த்ர விபேதிநீ (812)

எதிரிகளுடைய மந்த்ரங்களை விசேஷமாய் பேதனம்செய்பவள்.

1. அதாவது, தன்னுடைய உபாஸகர்களுக்கு விரோதிகளான ராஜர்களால் தங்களுடைய ப்ரபுசக்தி, மந்த்ரசக்தி,

உத்ஸாஹ சக்தி இம்மூன்றின் மூலமாய் எவப்படும் சக்தி விசேஷங்களை த்வம்ஸம் செய்பவள் என்று அர்த்தம்.

2. அல்லது, பிறரால் அபிசாரம் முதலானவற்றைக் குறித்துப் ப்ரயோகம் செய்யப்படும் மந்த்ரங்களை, அல்லது சத்ருக்களால் ப்ரயோகிக்கப்பட்ட அஸ்த்ரமந்த்ரங்களை நாசம் செய்கிறவள் என்றும் சொல்லலாம். இது ஹரிவம்சத்தில் ப்ரத்யும்னனுக்கு இந்த்ரனல்,

'தஸ்த்ர ப்ரதிகாதாய தேவீம் ஸ்மர்த்துமிஹார்ஹஸி |'

என்று சொல்லப்பட்டது.

3. அல்லது, பர (ஸர்வோத்க்ருஷ்டமான) மந்த்ரமாகிய பஞ்சதசியை மனு முதலான தன்னுடைய உபாஸகர்களுக்குப் பலனிதமாக விதேதனம் செய்பவள் என்றும் சொல்லலாம்.

4. அவி என்ற பதமானது பாபத்தைக் குறிக்குமென்றும், அவ்விதம் பாபங்களைப் போக்குவதினல் அவிமுக்த க்ஷேத்ரத்திற்கு அந்தப் பெயர் ஏற்பட்டதென்றும் லிங்க புராணத்தில் சொல்லப்பட்டது.

'அவி சப்தேந பாபானி கத்யந்தே ச்ருதிஷு த்விஜை: |
தைர் முக்தம் ந மயா த்யக்தம் அவிமுக்தம் அத: ஸ்ம்ருதம் 11'

இந்த அர்த்தத்தில் பர மந்த்ரிகளுடைய (ஸர்வோத்க்ருஷ்டர்களான அம்பாளுடைய உபாஸகர்களுடைய) பாபங்களை நாசம் செய்பவள் என்றும் சொல்லலாம்.

मूर्ता (813)

மூர்த்தா

ரூபத்தோடிருப்பவள்.

अमूर्ता (814)

அமூர்த்தா

ரூபமே இல்லாதவள்.

1. ரூபத்தோடிருப்பவை மூர்த்தங்கள். வாயு, ஆகாசம் முதலானவை அமூர்த்தங்கள்.

2. அல்லது, பஞ்சீக்ருதமான காசம் முதலான ஐந்து) மஹாபூதங்களை மூர்த்தங்களென்றும், அபஞ்சீக்ருதமான மஹாபூத ஸூக்ஷ்மங்களை அமூர்த்தங்களென்றும் சொல்லுவது வழக்கம். [பஞ்ச மஹாபூதங்களின் தாம

ஸாம்ச ஸ்வரூபம் ஒவ்வொன்றையும் இரண்டாகப் பிரித்து ஒரு பாதியைத் தனியாக இருத்தி மற்றொரு பாதியை ஈச்வரன் காகப் பிரித்துத் திரும்பவும் ஈச்வரியும் ஏற்கனவே தனியாக வைக்கப்பட்ட பாதியோடு சேர்த்தால் பஞ்சீகரணம் ஆகிறது. இவ்விதம் பஞ்சீக்ருதமான மஹா பூதங்களிலிருந்து ஸ்தூல சரீரம் உண்டாகிறது. பஞ்சீகரணத்தைப்பற்றி மேதாந்த சாஸ்த்ரங்களில் விசேஷமாகச் சொல்லப்பட்டிருக்கிறது.]

3. 'த்வா வாவ ப்ரம்ஹணே ரூபே மூர்த்தம் சாமூர்த்தம் ச' என்ற ச்ருதி வாக்யத்திற்கு மேலே சொல்லிய இரண்டு விதமாகவும் வ்யாக்யானம் சொல்லப்பட்டிருக்கிறது.

அல்லது, ப்ரபஞ்சம் மூர்த்தமென்றும் சொல்லப்படும்.

'த்வே ரூபே ப்ரம்ஹணஸ்தஸ்ய மூர்த்தம் சாமூர்த்தமேவ ச |
அமூர்தம் ப்ரம்ஹ கூடஸ்தம் மூர்தம் ஸர்வமிதம் ஜகத் ||'

[விஷ்ணுபுராணம்]

अनित्यतृप्ता

அநித்யத்ருப்தா (815)

அநித்யங்களான உபசாரங்களாலேயே த்ருப்தியடைபவள்.

1. அதாவது, அவ்வித உபசாரங்கள் அநித்யமாயிருந்தாலும், பக்தியோடு செய்யப்பட்டால் ப்ரீதியடைகிறவளென்று தாத்பர்யம்.

2. அநித்ய என்றால் ச்வாஸம் விடுவது என்று அர்த்தமாகையால் ஜீவனைக் குறிக்கும். ஜீவன்களால் அத்ருப்தா (த்ருப்தியடையாதவள்) அநித்யத்ருப்தா. ப்ருஹ்மானந்தமானது 'யஸ்ய ப்ரம்ஹ ச சக்ஷுத்ரம் சோபே பவத ஏதஸ:' என்ற ச்ருதி வாக்யத்தில் சொல்லப்பட்டபடி ஸர்வ(ஆ)சக்ஷுகமானதால் ஜீவன்களால் மட்டும் த்ருப்தியடைவதில்லையென்று இங்கு சொல்லப்பட்டது.

3. அல்லது 'எந்த விதத்திலும் த்ருப்தியடைவதில்லை என்பது இல்லை', அதாவது, எவ்விதமாக உபசரிக்கப்பட்டாலும் த்ருப்தியடைகிறவள் என்றும் சொல்லலாம். அப்படிருக்கத் த்ருப்தியை விளக்காதது இன்னது என்று சொல்லக்கூடியதாக யாதொன்றுமில்லை. யதேச்சையாகக் கொடுத்தாலும் பக்தியோடு மட்டும் அது கொடுக்கப்பட்டால் அம்பாளுக்குத் திருப்தியுண்டாகுமென்று தாத்பர்யம்.

'பத்ரம் புஷ்பம் பலம் தோயம் யோ மே பக்த்யா ப்ரயச்சதி |
ததஹம் பக்த்யுபஹ்ருதம் அச்நாமி ப்ரயதாத்மநः |' (கீதை)

मुनिमानसहंसिका
முனிமாநஸ ஹம்ஸிகா (816)

முநீச்வரர்களுடைய மனதாகிய (மானஸ) ஸரஸில் ஸஞ்சரிக்கும் ஹம்ஸ பக்ஷியாக இருப்பவள்.

1. இதேமாதிரி முன்வந்த 372-வது நாமமாகிய 'பக்த மானஸ ஹம்ஸிகா' என்பதில் சொல்லியிருக்கும் விஷயங்களைப் பார்க்கவும்.

2. மானஸமென்பதிலுள் பஹுமானம், மரியாதை, கௌரவம் என்பவை குறிக்கப்படும். ஹம்ஸிகா என்பது 'ஹம்ஸக: (கெஜ்ஜையை) குறிக்கும். ஆகவே, முனீச்வரர்கள் செய்யும் பஹுமானத்திலுள் கெஜ்ஜையணிந்தவள் போலிருப்பவள், அதாவது அதனால் ஸந்தோஷப்பட்டு நர்த்யம் செய்கிறவள் போலிருப்பவள் என்றும் சொல்லலாம்.

सत्यव्रता
ஸத்யவ்ரதா (817)

ஸத்யமான வ்ரதத்தோடு இருப்பவள்.

1. அல்லது, ஸத்யத்தையே வ்ரதமாக உடையவள் என்றும் சொல்லலாம். [ஏற்கனவே வந்த 'ஸத்யஸந்தா' என்ற 693-வது நாமத்தைப் பார்க்கவும்.] மேலும், ஸத்யம் பேசுவது என்பதான வ்ரதத்திலுலேயே அடையக்கூடியவள் என்றும் சொல்லலாம்.

2. ஸத்யமென்பது ப்ரம்ஹத்தைக் குறிக்கும். வ்ரதமென்பது உபசாரமாகச் சொல்லுகையில் பக்த்யத்தைக் குறிக்கும். (பயோவ்ரதம் ப்ராம்ஹணஸ்ய' என்ற ச்ருதி வாக்யத்தில் வ்ரதமென்பது பக்த்யத்தைக் குறிப்பதற்கு ப்ரயோகம் செய்யப்பட்ட பதம்.) ஆகவே பக்த்யம் மாதிரி ப்ரம்ஹத்தில் ப்ரியமுள்ளவள் என்றும் சொல்லலாம்.

3. ஸத்யமான—ரிக்கிரம் பலனைக் கொடுக்கக்கூடிய—வ்ரதங்களையுடையவள் என்றும் சொல்லலாம். அதாவது, அம்பாளைக் குறித்து அனுஷ்டிக்கப்படும் வ்ரதங்கள் ரிக்கிரம் பலனைக்கொடுப்பவை என்று தாத்பர்யம். க்ருஷ்ணனை அடைவதற்காக கோபஸ்த்ரீகள் காத்யாயனீ வ்ரதங்களை அனுஷ்டித்

ததும், அதனல் அவர்களுடைய மனோரதங்கள் ஸித்திராகப் பூர்த்தியானதும் ஹரிவம்சத்திலும் பாகவதத்திலும் சொல்லப்பட்டிருக்கிறது.

4. ஸக்ருதேவ ப்ரபந்நாய தவாஸ்மீதி ச யாசதே |
அபயம் ஸர்வ பூதேப்யோ ததாம்யேதத் வ்ரதம் மம ||'

என்ற பகவத்வசனத்தில் சொல்லப்பட்ட அமோகமான அபய ப்ரதான வ்ரதத்தையுடையவள் என்றும் சொல்லலாம்.

5. 'சரீரவ்ருத்திர் வ்ரதம்' என்ற ஸ்மிருதி வசனப்படி சரீரதாரணத்தையே வ்ரதமாக அனுஷ்டிக்கவேண்டுமென்று சொல்லப்பட்டது. சிவபக்தியாகிய அம்ருதத்தில் பூர்ணமாயிருக்கும் சரீரத்தைக் கவனமாகத் தாரணம் செய்வதே வ்ரதமென்றும், அவ்விதம் தாரணம் செய்வது நிச்சயமான கார்யமல்லவென்றும், மேலே சொல்லிய ஸ்மிருதியின் வார்த்திகத்தில் சொல்லப்பட்டது.

'சிவபக்திஸுதாபூர்ணே சரீரே வ்ருத்திரஸ்ய யா |
வ்ரதமேததநுஷ்டேயம் ந நிச்சம் தச்ச தாரணம் ||'

அம்பாளுடைய பக்திக்காக மேலே சொல்லப்பட்ட வ்ரதமானது ஸத்யமாக—அவச்யமாக—இருப்பதால் இந்த நாமம் ஏற்பட்டதாகவும் சொல்லலாம். இதை உத்தேசித்தே பட்டோத்பலரால் சரீரதாரணம் ப்ரார்த்திக்கப்பட்டது.

'அந்தர்ஜ்யோதிரவிச்சின்ன சக்திபீயூஷ போஷிதம் |
பவத் பூஜோபபோகாய சரீரம் இதமஸ்து மே ||'

6. ஸத்யவ்ரதன் என்ற ப்ராம்ஹணன் ஒருவன் ஒரு பன்றிக்காக பயந்து ஐ, ஐ என்ற சப்தம் செய்ததாகவும், அவ்விதமான பிந்து இல்லாத வாக்பவ பீஜத்தைச் சொல்வதான தபஸ்விஜனல் மஹாகவியாகவும், தேவீ பக்தனாகவும் ஆனதாகச் சொல்லப்பட்டிருப்பதால், அவ்விதமான ப்ரான் அபின்னமாயிருப்பவள் என்றும் சொல்லலாம்.

'ஐகாரோ மன்மதாமூர்க்கோ காம்ராஜ ஸத்யவ்ரதோ த்விஜ: |
ச்ருத்வாகூதம் கோலமுகாத் ஸமுச்சார்ய ஸ்வயம் ததா: ||
பிந்துஹீநம் ப்ரஸங்கேந ஜாதோ(ஸௌ விபுதோத்தம: |
ஐகாரோச்சாரணேதவ துஷ்டா பகவதீ ததா |
சகார கவிராஜம் தம் தயார்த்ரா பரமேச்வரீ ||'

[தேவீபாகவதம்]

த்ருஷ்ட்வா ஸம்ப்ரமகாரி வஸ்து ஸஹஸா ஐ ஐ இதி வ்யாஹ்ருத்ய யோகாகூதவசாதபீஜ வரதே பிந்தும் விஹாப்யகூடம் | [தம்

தஸ்யாபி த்ருவமேவ தேவி தரஸா ஜாதே தவாநுக்ரஹே
வாச: ஸூக்திஸு தாரஸத்ரவமுசோ நிர்யாந்தி
வக்த்ரோதராத் ll' [லகுஸ்துதி]

सत्यरूपा
ஸத்யரூபா (818)

காலத்ரயத்திலும் பாதிக்கப்படாத ரூபத்தையுடையவள்.

அல்லது, ஸத்யத்தை ரூபவத்காகச் செய்கிறவள், அதாவது, ஸத்யத்தை ஸம்ரக்ஷிப்பவள் என்றும் சொல்லலாம். ஸத், அஸத் இவையிரண்டில் ஸத் என்பதை ஸோமஸூனவர் (அதாவது உமையோடு கூடிய சிவனானவர்) காப்பாற்றி, அஸத் என்பதை நாசம்செய்கிறார் என்பதாக பஹ்வ்ருசத்தில் சொல்லப்பட்டது.

'ஸச்சா ஸச்ச வசளீ பஸ்ப்ருதாதே | தயோர் யத்ஸத்யம்
யதரத் ருஜீயஸ் ததித் ஸோமோZவதி ஹந்த்யாஸத் | '

सर्वान्तर्यामिणी
ஸர்வாந்தர்யாமிணீ (819)

எல்லோருடைய அந்த: காரணங்களுக்கும் நியாமிகையாக

1. இதேமாதிரி ச்ருதியில்,

'ஏஷ த ஆத்மா அந்தர்யாம்யம்ருத:'

என்றும்,

'ஏஷோZந்தர்யாம்யேஷ யோநி: ஸர்வஸ்ய'

என்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

2. அல்லது ஸர்வா, அந்தர்யாமிணீ என்று பிரித்து, ஸர்வ ஸ்வரூபையாயும், எல்லோருக்குள்ளும் ப்ரவேசித்தும் இருப்பவள் என்றும் சொல்லலாம்.

'தத் ஸ்ருஷ்ட்வா ததேவாநுப்ராவிசத் ததநுப்ரவிச்ய ஸச்ச
த்யச்சாபவத் | ' [ச்ருதி]

'ஸர்வஸ்ய ஸர்வதா ஞாநாத் ஸர்வஸ்ய ப்ரபவாப்யயௌ |
ஸதோZஸதச்ச குருதே தேந ஸர்வேதி கத்யதே ll' [ஸ்ம்ருதி]

सती
ஸதீ (820)

மஹாபதிவ்ரதையாயிருப்பவள்.

1. அல்லது, ஸத் ரூபிணியாக இருப்பவள் என்றும் சொல்லலாம்.

2. அப்பாலுடைய பாதிவ்ர . . ன் ம.
ஸர்வோத்க்ருஷ்டமானது என்பதைப்பற்றி ஏற்கனவேயே சொல்லப்பட்டிருக்கிறது.

ब्रह्माणी (821)

ப்ரம்ஹ—

ப்ரம்ஹாவை ஜீவித்திருக்கச் செய்பவள்.

1. இதேபோதிரி,

'ப்ரம்ஹாண் ப்ரம்ஹஜநநா ப்ரம்ஹரூபிணீ ஜீவரூபிணீ |'

என்று தேவீபுராணத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

2. ப்ரம்ஹாணைன்றால் பிதாமஹருக்கு (ப்ரம்ஹாவுக்கு) பெயராதலால் அவருடைய ஸ்த்ரீ, பத்னீ ப்ரம்ஹாணீ, ஸரஸ்வதீ. அந்த ரூபமாக இருப்பவளென்றும் சொல்லலாம்.

3. அணீ என்றால்,

'அணிரணூகாக்ரகீலே ஸ்யாத் அணி: புச்சேऽக்நிஸீமயோ: |'

என்ற சாச்வதகோச வசனத்தின்படி புச்சத்தை (வாலை) குறிக்கும். ஆனந்தமயகோசத்தின் கடைசியிலிருக்கும் புச்சத்தின் ஸ்வரூபமாக ப்ரம்ஹம் இருப்பதாக 'ப்ரம்ஹண அணீஸ்த்த:' என்று ச்ருதியிலும் வேதாந்த ஸித்தாந்தங்களிலும் சொல்லப்பட்டிருக்கிறது. அந்த புச்சப்ரம்ஹரூபமாக இருப்பதாகச் சொல்லப்பட்டதாகவும் சொல்லலாம்.

4. தன் சிரஸில் சூலத்தின் கூர் (அணீ, புச்சம்) இருப்பதினால் மாண்டவ்ய மஹர்ஷிக்கு அணீமாண்டவ்யர் என்ற பெயர் ஏற்பட்டது.

ब्रह्म (822)

ப்ரம்ஹ

ப்ரம்ஹ ஸ்வரூபமாயிருப்பவள்.

முக்தியின்போது கிடைப்பதும், பேதபாவமில்லாமல், ஸ்வாத்மாவோடு அபின்னமானதுமான ஞானத்திற்கு ப்ரம்ஹமென்று பெயர்.

'ப்ரத்யஸ்தமிதபேதம் யத் ஸத்தாமாத்ரமகோசரம் |
வசஸாம் ஆத்மஸம்வேத்யம் தத் ஞானம் ப்ரம்ஹ ஸம்ஜ்ஞிதம் ||'
(விஷ்ணுபுராணம்)

जननी

(823)

ஸகல ப்ரபஞ்சத்தையும் உத்பாதனம் செய்பவள்.

சிலர்கள் இந்த நாமத்தையும் இதற்கு முந்தியதையும் ஒரே நாமமாக 'ப்ரம்ஹஜனனீ' என்று சொல்லுவார்கள். அப்போது 819-வது நாமமாகிய 'ஸர்வாந்தர்யாமிணீ' என்பதை 'ஸர்வா', 'அந்தர்யாமிணீ' என்று இரண்டு நாமங்களாகப் பிரித்துச் சொல்லுவார்கள். அந்தர்யாமிணீ என்றாலேயே ஸர்வத்திலும் அந்தர்யாமிணீயாக இருப்பது சொல்லப்படுவதால் அப்படிதிரிப் பிரிவுக்கு ஸம்மதானம் சொல்லப்படுகிறது.

बहुरूपा

பஹுரூபா (824)

அனேகவிதமான ரூபங்களோடிருப்பவள்.

1. அதாவது, முந்திய நாமத்தில் ஸகல ப்ரபஞ்சத்தும் ஜனனியாக இருப்பதாகச் சொல்லியிருப்பதை அனுஸரித்து அவ்விதமான ப்ரபஞ்சமெல்லாம் அம்பாளுடைய ரூபங்களென்பதாக இங்கு சொல்லப்பட்டது.

'பஹுமநி யஸ்யா ரூபாணி ஸ்திராணி ச சராணி ச |
தேவமாநுஷ திர்யஞ்சி பஹுரூபா ததः சிவா ||'

(தேவீ புராணம்)

2. பரஸ்வரூபத்தில் அம்பாள் அரூபமாயிருந்தாலும் க்ரியாத்மிகையாக இருக்கையில் அனேகவிதமான ரூபங்களோடிருப்பதால் இந்தப் பெயர் ஏற்பட்டதாகவும் சொல்லலாம்.

'அரூபா பரபாவத்வாத் பஹுரூபா க்ரியாத்மிகா |'

(தேவீ புராணம்)

3. இதேமாதிரி, அம்பாள் ஒருவளாயிருந்தாலும் பண்டாஸுரனை ஸம்ஹாரம் செய்வது முதலான காரியங்களுக்காக எடுக்கப்பட்ட வெவ்வேறு ரூபங்களோடிருப்பதால் அனேகரூபா (பஹுரூபா), என்றும்

'பண்டாஸுர ஸுகஸார்த்தம் ஏகைவாதேகா |'

என்பதாக வேறெந்த ஸூத்ரத்திலும் சொல்லப்பட்டிருக்

4. ஸூதபஞ்சகத்திலும் வர்ணரூபிணியான அம்பாளைப்பற்றி,

'ஏகதா சதுர்விதா சைவ ததா பஞ்சாடசதா ஸ்திதா |
த்வாதசிம்சத் பேதபிந்நா வா யா தாம் வந்தே பராத்பராம் ||'

என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதில் சதுர்விதா என்பதிலுள் ஸ்வரதம், வ்யஞ்ஜனம் என்ற இருபேதங்களாக இருப்பதையும், பஞ்சாடசதா என்பதிலுள் பதினாறு ஸ்வரங்களையும், த்வாதசிம்சத் என்பதிலுள் முப்பத்திரண்டு வ்யஞ்ஜனங்களையும் சொல்லியது. பாக்கியான ள, க்ஷ, ஹ என்ற மூன்றில் ள என்பது ல என்பதோடு அபேதமாகையாலும், க்ஷ என்பது க, ஷ இவைகளின் சேர்க்கையானதாலும் ஹ என்பது,

'ஹகாரார்ணஃ கலாரூபோ விமர்சாக்யஃ ப்ரகீர்த்திதஃ |'

என்றபடி விமர்ச ஸ்வரூபமாய் sகல வர்ணங்களுக்கும் மூலமாக இருப்பதாலும், அம்மூன்றும் தனியாகக் கணக்கிடப்படவில்லை. அல்லது, முப்பத்திரண்டு என்பதிலுள் அதற்கடுத்தாற்போலுள்ள எண்ணிக்கையான முப்பத்தி மூன்றைச் சொன்னதாக வைத்துக்கொண்டு, ஹ என்பதையும் சேர்த்து முப்பத்தி மூன்று வ்யஞ்ஜனங்களையும் 'த்வாதசிம்சத்' என்ற பதத்திலுள் சொல்லப்பட்டதாகவும் சொல்லலாம். மேலுள்ள பரிபாஷா ச்லோகங்களில் சொல்லப்பட்டபடி இந்த மாத்ருகாஸ்வரூபத்திய நாமங்களின் ஆரப்பாக்ஷரங்கள் முறையாக்கி ரண்டு ஆகையால் அதை இங்கு சொன்னதாகவும் சொல்லலாம்.

5. அப்பிகையானவள் பராசக்தியிலிருந்து தானுண்டாக்கிய (சுடினை) சாதிரி பலவிதமான லோகங்களைத் தரித்து பலவிதமான ரூபங்களோடிருப்பதை அநேக இடங்களில் வர்ணிக்கப்பட்டிருக்கிறது.

'லக்ஷ்மீ வாகாதி ரூபேண நர்த்தகீவ விபாதி யா |
(தேவீபாகவதம்)

'விச்வம் பஹுவிதம் ரூபம் ஸா ச ஸர்வத்ர வர்த்ததே |
தஸ்மாத் ஸா பஹுரூபத்வாத் பஹுரூபா சிவா மதா ||'
(வாமநபுராணம்)

காத்யாயநீ கமலேதி கமலாவதிதி
ஏகா ஸதீ பகவதீ பரமார்த்ததோஷபி
ஸம்த்ருச்யஸே பஹுவிதா கது நர்த்தகீவ ||'
(அம்பாஸ்தவம்)

6. அல்லது,

'அஸம்க்யாதாஃ ஸஹஸ்ராணி யே ருத்ரா அதி பூம்யாம்'

என்று ச்ருதியில் சொல்லப்பட்டபடி ருத்ரனைவர் கோடிக் கணக்கான ரூபங்களோடிருப்பதாலும், ருத்ரனுடைய பத்னி யான அம்பாளும் அவ்விதம் கணக்கற்றதான ரூபங்களோ டிருப்பதாலும் இந்தப்பெயர் ஏற்பட்டதாகவும் சொல்லலாம். லகல சக்தி ரூபங்களும் (அம்பிகையின் பதியான) ருத்ரனே அந்த சக்திகளுக்கெல்லாம் பதியென்றும், சொல்லப்பட்டிருப் பதுடன் அவ்விதமான எண்ணிக்கையற்ற ருத்ராணிகளின் பெயர்களும் ஒவ்வொரு மஹாபுராணத்திலும், ஒவ்வொரு தந்த்ரத்திலும் சொல்லப்பட்டிருப்பதால் அம்பாளுக்கு 'பஹு ரூபா' என்ற பெயர் ஏற்பட்டிருப்பதின் காரணத்தைப்பற்றி இதற்கு சொல்லத்தேவையில்லை.

'யா ரௌத்ரீ தாமஸீ சக்தி: ஸா சாமுண்டா ப்ரகீர்த்திதா |
நவகோட்யஸ்து சாமுண்டாபேதபிந்நா வ்யவஸ்த்திதா: ||
யா ஸா து ராஜஸீ சக்தி: பாலநீ சைவ வைஷ்ணவீ |
அஷ்டாதச ததா கோட்யஸ்தஸ்யா பேதா: ப்ரகீர்த்திதா: ||
யா ப்ரம்ஹசக்தி: ஸத்வஸ்த்தா அநந்தாஸ்தா: ப்ரகீர்த்திதா |
ஏதாஸாம் ஸர்வபேதேஷு ப்ருதக் ஏகைகசோ தரே ||
ஸர்வாஸாம் பகவாந் ருத்ர: ஸர்வகத்வாத் பதிர் பவேத் |
யாவந்த்யஸ்தா மஹாசக்த்ய: தாவத் ரூபாணி சங்கர: ||
க்ருதவாம்ஸ்தாச்ச பஜதே பதிரூபேண ஸர்வதா |
யாச்சாராதயதே தாஸ்து தஸ்ய ருத்ர: ப்ரஸீததி |
ஸித்யந்தி தாஸ்ததா தேவ்யோ மந்த்ரிணோ ந ஸம்சய: ||'
(வராஹபுராணம்)

'உமைவ பஹுரூபேண பத்நீத்வேந வ்யவஸ்த்திதா |'
(நரஸிம்ஹ உபபுராணம்)

'லோபாமுத்ரா ச ஸௌபாக்யா மஹாவித்யா ச ஷோடஶீ |
தாரா: பரசிவஸ்யைதே கதிதாஸ்து வராநநே ||
ச்யாமளா சுத்தவித்யா ச ஹயாரூடா பரா ப்ரியா |
தாரா: ஸதாசிவஸ்யைதே ஞாதவ்யா: பரமேச்வரீ ||
மஹார்த்தா த்வாதசார்த்தா ச வாராஹீ பகளாமுகீ |
துரீயா புவநேசீ ச ஸ்ரீபரா சாம்பவீ சிவே ||
தாரா ருத்ரஸ்ய தஸ்யைவ ச்ருணு ஸத்யம் ந ஸம்சய: |
ஸ்ரீ திரஸ்கரணீ லக்ஷ்மீ: மிச்ரா காமகலா ப்ரியே ||
விஷ்ணோர் தாரா இதி க்யாதா அந்தபூர்ண சிவஸ்ய ச |
வாக்வாதிநீ ச பாலா ச பத்ந்யௌ தே ப்ரம்ஹண: சிவே ||
நவ தூத்யோ ஹஸந்தி ச நவ ஸித்தாச்ச தேவதா: |
இமா அந்யாச்ச ரூபாணி பஹுமநி தவ ஸுந்தரி ||'
(த்ரிபுராஸித்தாந்தம்)

बुधाचता
புதார்ச்சிதா (825)

ஞானவான்களால் பூஜிக்கப்பட்டவள்.

சுச்வரனை உபாஸிப்பவர்கள் நான்கு வகையானவர்களென்பதாகக் கீதையில் சொல்லப்பட்டிருக்கிறது.

சதுர்விதா பஜந்தே மாம் ஜநா: ஸுக்ருதிநோ(அ)ர்ஜுந |
ஆர்த்தோ ஜிக்ஞாஸுர்: அர்த்தார்த்தீ ஞாநீ ச பரதர்ஷப ||'

இவர்களில் ஞானியானவன் தான் ஆத்மஸாக்ஷாத்காரத்தை அடைந்திருந்தபோதிலும், லோகத்தினுடைய க்ஷேமத்தை உத்தேசித்து உபாஸனை செய்கிறானென்பதாக சொல்லப்பட்டிருக்கிறது. இதைப்பற்றி பலச்ருதிபாகத்தில் சொல்லியிருப்பதைப் பார்க்கவும்.

प्रसवित्री
ப்ரஸவித்ரீ (826)

யாவற்றையும் படைத்தவள்.

அதாவது, வியத் முதலான ஸகல ப்ரபஞ்சத்தையும், அல்லது ஸகலப்ராணிகளையும், பெற்றிருப்பதால் இந்தப் பெயர் ஏற்பட்டது.

'ப்ரஜாநாம் ச ப்ரஸவநாத் ஸவித்ரீதி நிகத்யதே |'
(விஷ்ணுதர்மோத்தரம்)

'ப்ரம்ஹாத்யா: ஸ்தாவராந்தாச்ச யஸ்யா ஏவ ஸமுத்கதா: |
மஹதாதி விசேஷாந்தம் ஜகத் யஸ்யா: ஸமுத்கதம் |
தாமேவ ஸகலார்த்தாநாம் ப்ரஸவித்ரீம் பராம் நும:
(பகவதீபுராணம்)

प्रचण्डा
ப்ரசண்டா (827)

மிகவும் அதிகமான கோபத்தோடு கூடியவள்.

1. அல்லது, அம்பிகையின் தூதர்கள் ப்ரசண்டர்களாக (மிகவும் கோபமுள்ளவர்களாக) இருப்பதால் இந்தப்பெயர் ஏற்பட்டதாகவும் சொல்லலாம்.

2. ப்ரம்ஹத்தின் கோபத்திற்குப் பயந்து வாயு, அக்னி, ஸூர்யன் முதலானவர்கள் நடந்துகொள்வதாக 'பீஷாஸ்மாத் வாத: பவதி' என்பது முதலான ச்ருதி வாக்யங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. அவ்வளவான கோபம்கூட

இல்லாதவனிடம் ப்ரஜைகள் பயப்படமாட்டார்களென்றும், அப்படி ப்ரஜைகள் எவனிடம் பயப்படவில்லையோ அவன் நீதியை ரக்ஷிக்கமாட்டாதவனென்றும்,

'ந யஸ்ய கோபோ ரக்ஷணாயபி ப்ரஜாஸ்தஸ்ய ந பிப்யதி |
ஸைதாம் நீதிம் கதம் ரக்ஷேத் ப்ரஜா யஸ்ய ந பிப்யதி ||'

என்பதாக காமாந்தகர் நீதிசாஸ்த்ரத்தில் சொல்லியிருக்கிறார்.

3. இவ்விதம் ப்ரம்ஹமானது பயத்தை ப
படைப பற்றி 'மஹத பயம் வஜ்ரமுதயதம்' எனற சுருதி வாக்
யத்திலும் சொல்லப்பட்டிருக்கிறது. இங்கு சொல்லப்பட்ட
வஜ்ரம் என்ற பதமானது ப்ரம்ஹத்தைக் குறிக்கிறதென்று
ப்ரம்ஹஸூத்ரத்தில் கம்டாதிகரணத்தில் சொல்லப்பட்டிருக்

4. சண்டா என்று சங்க புஷ்பத்திற்குப் பெயராகையால் அந்தப் புஷ்பத்தில் மிகவும் ப்ரீதியுள்ளவளென்றும் அர்த்தம் சொல்லலாம்.

'சண்டா தகஹரீ சங்கபுஷ்பீ சண்டோZதிகோபகே |
ப்ரசண்டோ ஸர்வதேவ ச்வேதகரவீரே ப்ரதாபிநீ ||'
(விச்வகோசம்)

இதில் சொல்லிய இதர அர்த்தங்களையும் அனுஸரித்து ப்ரதாபத்தோடு விளங்குகிறவள் (ப்ரதாபினி) என்பதான அர்த்தங்களையும் சொல்லலாம்.

आज्ञा
ஆஜ்ஞா (828)

ஆஜ்ஞா (கட்டளை) ரூபமாக இருப்பவள்.

1. வேதவாக்யங்கள் இன்னதைச் செய்யவேண்டும், இன்னதைச் செய்யக்கூடாதுஎன்பதான விதி, நிஷேத வாக்யங்களாக இருப்பதாலும், அவைகள் ஏற்கனவே வந்த 'நிஜாக்ஞா ரூபங்களமர'என்ற (287) நாமத்தில் சொல்லப்பட்டபடி அம்பிகையின் ஆஜ்ஞா (இச்சா) ரூபங்களாக இருப்பதாலும் இந்த நாமத்தில் அம்பிகையே அவ்விதமான ஆஜ்ஞா ரூபமாக ப்பதாகச் சொல்லப்பட்டது.

'ந ஹ்யேஷோ ப்ரக்ருதிர் ஜீவோ விக்ருதிர் வா விசாரத: |
புரா மமாஜ்ஞா மத்வக்த்ராத் ஸமுத்பந்நா ஸநாதநீ |
பஞ்சவக்த்ரா மஹாபாகா ஜகதாம் அபயப்ரதா ||'
(லிங்கபுராணம்)

'ருத்ராத்மைகா ஸ்திதா தேவீ த்ரயாணாம் முக்திரம்பயா |'
[சிவபுராணம்]

2. இந்த நாமத்தை ஜ்ஞ (ज्ञ) என்ற ஏகாக்ஷரத்தை யுடைய நாமமாகவும் சொல்லலாம். அப்போது குணபோக் தாவான புருஷனின் ஸ்வரூபத்தையுடையவள் என்று அர்த்தம்

'கதயந்தி ஜ்ஞ சப்தேந புருஷம் குணபோகிநம் |' **[லிங்கம்]**

3. ஜ்ஞ: என்றால் ப்ரம்ஹா, புதன், செவ்வாய், புத்தி மான் முதலியவர்களுக்குப் பெயர்.

'ஜ்ஞோ விரிஞ்செள புதே ஜ்ஞௌ மங்கலே |'

அவ்விதமான ரூபங்களோடிருப்பவள் என்றும் சொல்லலாம்.

4. ஜ்ஞ: என்றால் ஈச்வரனையும், அஜ்ஞ: என்றால் ஜீவ னையும் குறிக்கும்.

'ஜ்ஞ: காலகாலோ குணீ ஸர்வவித்ய: |' **[ச்ருதி]**

'ஜ்ஞாஜ்ஞௌ த்வாவஜாவீசநீசௌ |' **[ச்ருதி]**

ஆகவே ஜ்ஞா என்பது ப்ரப்ரஹ்மஸ்வரூபிணியான அம் பாளைக் குறிக்கும்.

प्रतिष्ठा
ப்ரதிஷ்டா (82)

ஸகல ஜகத்தும் தன்னில் ப்ரதிஷ்டிதத்திருப்பவள்.

1. அதாவது, ஸகல ப்ரபஞ்சத்திற்கும் அம்பாள் அதிஷ் டானமாயிருப்பதால் அனைவையெல்லாம் அம்பாளை ஆதாரமாக (அடிப்படையாக)க் கொண்டிருப்பது இங்கு சொல்லப் பட்டது.

'விச்வஸ்ய ஜகத: ப்ரதிஷ்டா |' **[ச்ருதி]**

'ப்ரதிஷ்டா ஸர்வஸ்தூநாம் ப்ரஜ்ஞைஷா பரமேச்வரீ |'
[ப்ரம்ஹ கீதை]

2. பதிநாறு அக்ஷரங்களுடைய சுத்தோவித்யா க்ஷத்திற்கு ப்ரதிஷ்டா என்று பெயர்.

3. ஜலதத்வத்திலிருக்கும் கலைகளில் ஒன்றுக்கு ப்ரதிஷ் டா என்று பெயர். அது ஆத்மாவைச் சிவபக்தியில் ஸ்தாபிப் பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

'சிவ ராகாநுரக்தாத்மா ஸ்தாப்யதே பௌருஷே யயா |
ஸா ப்ரதிஷ்டா கலா ஜ்ஞேயே.....||' **[சைவாகமம்**

4. இவை தவிர, ப்ரதிஷ்டா என்று பதத்திற்கு ஸ்திரமாயிருத்தல், கௌரவம், யசஸ், ச்லோகத்தின் பாதம் (நாலில் ஒருபாகம்) முதலான அர்த்தங்களுண்டு.

'ப்ரதிஷ்டாஸ்த்தாநமாத்ரகே |
கௌரவே யாக நிஷ்பத்தி சதுராக்ஷர பத்யயோ: | '
[விச்வகோசம்]

प्रकटाकृतिः

ப்ரகடாக்ருதி: (830)

எல்லோராலும் அனுபவிக்கப்படும் (எல்லோருடைய அனுபவத்திற்கும் தெரிவதான) ஸ்வரூபத்தோடு கூடியவள்.

1. ப்ரகடமென்றால் வெளிப்படையாகத் தெரிவது என்ற அர்த்தம்.

2. மாயாரூபிணியான அம்பாளை எல்லோரும் அறியும் ப்ரத்யய வ்யாஜத்தினால் அறிகிறார்களென்று ஸௌதஸர் ஹிதையில் சொல்லப்பட்டிருக்கிறது.

'தாம் அஹம் ப்ரத்யய வ்யாஜாத் ஸர்வே ஜாநந்தி ஜந்தவ: |
ததாபி சிவரூபேண ந விஜாநந்தி மாயயா ll'(ஸௌதஸம்ஹிதை)

3. பூஜாக்ரமத்தின் முதலாவதான ஆவரணத்திலிருக்கும் ப்ரகடயோனிகளென்ற பெயரையுடைய தேவிகளின் ரூபமாகவுமிருப்பவளென்றும் சொல்லலாம்.

4. இந்த நாமத்தை 'அப்ரகடாக்ரு என்றும் பிரிக்கலாம். அப்போது, ப்ரகடமாயில்லாத, அதாவது ரஹஸ்யமான, ஸ்வரூபத்தையுடையவள் என்ற அர்த்தம்.

5. அல்லது, அம்பா (ஜலங்களில்) ப்ரகடா (தெரியும் ஸ்வரூபத்தையுடையவள்) என்றும் அவித நாமத்திற்கு அர்த்தம் சொல்லலாம்.

'அபாமேகா மஹிமாநம் பிபர்த்தி | ' [ச்ருதி]
'ஆபோ வா இதம் ஸர்வம் | ' [ச்ருதி]

प्राणेश्वरी

ப்ராணேச்வரீ (831)

இந்த்ரியங்களுக்கெல்லாம் அதிஷ்டானமாயிருப்பவள்.

I. இந்த்ரியங்களுக்கெல்லாம் அதிஷ்டான தேவதை யிருப்பதனால்.

'ஜ்யோதிராத்ய திஷ்டாநம் து ததாமநாத் |'

என்ற வேதாந்த ஸூத்ரத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது.

2. அல்லது, ஐந்து வ்ருத்திகளுடைய ப்ராணனுக்கு (பஞ்சப்ராணன்களுக்கு) அதிபதியாயிருப்பவளென்றும் சொல்லலாம்.

'ப்ராணஸ்ய ப்ராண: |' **[ச்ருதி]**

3. ப்ரக்ருஷ்டமான அண: (சப்தம்), அதாவது, வேதம், ப்ராண: அதற்கு ஈச்வரீ என்றால் அதிலுள் ப்ரதிபாதிக்கப் படும் தேவதை என்ற அர்த்தம்.

'ஸர்வே வேதா யத் பதம் ஆமநந்தி |' **[ச்ருதி]**

प्राणदात्री

ப்ராணதாத்ரீ (832)

ப்ராணன்களைக் கொடுப்பவள்.

1. அதாவது, ஸகல ஜகத்தையும் உயிருடனிருக்கும்படி செய்பவள் என்ற அர்த்தம்.

2. அல்லது, ஏகாதச இந்த்ரியங்களையும் கொடுப்பவள் என்றும் சொல்லலாம். ப்ராணன் என்ற பதமானது இந்த்ரியங்களைக் குறிக்குமென்பதாக,

'ப்ராணம் அநூத்க்ராமந்தம் ஸர்வே ப்ராண: அநூத்க்ராமந்தி

என்ற ச்ருதி வாக்யத்தின் அர்த்தத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. இதே அர்த்தமானது 'ஸப்தகதேர் விசேஷிதத்வாத் ச' என்ற வேதாந்த ஸூத்ரத்திலும் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது

पञ्चाशत्पीठरूपिणी

பஞ்சாசத் பீடரூபிணீ (833)

ஐம்பது பீடங்களின் ரூபமாயிருப்பவள்.

1. பஞ்சாசத் என்ற பதமானது ஸாதாரணமாக ஐம்பது என்ற அர்த்தமாயிருந்தபோதிலும், இங்கு லக்ஷணையால் (மறை பொருளாக) அதற்கடுத்த எண்ணிக்கையான ஐம்பத்தியொன்றைக் குறிக்கும். இதே காரணத்தால் சாரதாதிலகத்தின் முதல் ச்லோகமாகிய,

'சித்யாநந்தவபுர் நிரந்தரகளத் பஞ்சாசத் அர்ணை: க்ரமாத் |'

என்பதில் வரும் பஞ்சாசத் என்ற பதத்திற்கு ஐம்பத்தியொன்று என்பதாக ஹர்ஷதீக்ஷிதரால் தன் வ்யாக்யானத்தில்

சொல்லப்பட்டிருக்கிறது. ம் ஸாதாரணமாக பத்து இருபது எனப. பால், பத்து பத்தாகச் சொல்லும் போதும், நூறு ஆயிரம் என்பதாகச் சொல்லும்போதும், ஒன்றிரண்டு குறைந்திருந்தாலும், அல்லது கூட இருந்தாலும் அதைப்பாராட்டாமல், எண்ணிக்கை பெரியதாக இருப்பதை மட்டும் காட்டுவதற்காகப் பூர்த்தியான எண்ணிக்கையாகச் சொல்வதை நாம் பார்த்திருக்கிறோம் ஸஹஸ்ர சேதம் என்ற ந்யாயத்தின்படி நவாவதாரத்தை தசாவதார மென்றும், ஜகத்பதியை அயோத்யாதிபதியென்றும் சிற்சில காரணங்களைக்கொண்டு சொல்வதையும் பார்த்திருக்கிறோம். ஸஹஸ்ரஸம்ஹிதையில் த்வாத்ரிம்சத் (முப்பத்திரண்டு) என்ற பதத்தினால் முப்பத்தைந்து வ்யஞ்ஜனங்களையும் சொல்லப் பட்டிருக்கிறது.

2. ஆகவே, அந்தர்மாத்ருகாந்யாஸத்தில் மாத்ருகைகள் ஐம்பதைத்தான் ந்யாஸம் செய்வதையும், வ்யவஹாரத்தில் மாத்ருகைகளை பஞ்சாசத் என்பதாகச் சொல்லப்படுவதையும் நாம் பார்த்தாலும், ல, ள என்பவைகளை ஒன்றாகக் கணக்கிடுவதினாலும், க்ஷ என்பதைத் தனியாகக்கணக்கில் சேர்க்காததினாலும், அக்ஷமாலையில் அதை மேருவிலிருப்பதாகச் சொல்லிப் பாக்கி மணிகளை ஐம்பதாகச் சொல்வதினாலும் அவ்விதம் பஞ்சாசத் என்று சொல்லப்படுகிறதே தவிர, அதுவாஸ்தவத்தில் ஐம்பத்தியொன்று என்பதான எண்ணிக்கையைத்தான் குறிக்கும். இந்த அர்த்தத்தில் கவிகளால்,

'பஞ்சாசத் லிபிபிர் விபக்த முகதோர் யந் மத்ய வக்ஷஸ்த்தலம்।'

'பஞ்சாசத் வர்ணபேதைர் விஹித வதநதோ: பாதயுக்

குக்ஷிவக்ஷ: 11

என்பதாக ப்ரயோகம் செய்யப்பட்டிருப்பதைப் பார்க்கிறோம். ஸரஸ்வதியின் ஐம்பத்தியொன்று என்பதாக ந்யாஸத்தைச் சொல்லிவிட்டுக் கடைசியில்,

'பஞ்சாசத் வர்ணரூபேயம் கந்தர்பசசிபூஷணம்।'

என்பதாகச் சொல்லப்பட்டது. இவ்விதமாகவே இ தந்த ரங்களிலும் சொல்லப்பட்டிருக்கிறது.

'ஸ்ரீ கண்டாத்யாச்ச பஞ்சாசத் பஞ்சாசத் கேசவாதய:।'

என்பதான ப்ரயோகங்கள் தந்த்ர ஸார ஸங்க்ரஹம் முதலிய வைகளில் சொல்லப்பட்டிருப்பவைகளும் மாத்ருகைகளை அனுஸரித்திருப்பதால், அங்கு சொல்லப்பட்ட பஞ்சாசத் என்ற பதமும் இதே அர்த்தத்தில் ஐம்பத்தியொன்று என்பதைத் தான் குறிக்கும்.

3. மேலே சொன்ன காரணங்களினால் இந்த நாமமானது காமரூபம் முதலாக சாயாசத்ரம் முடிய உள்ள ஐம்பத்தோரு பீடங்களைத் தன்னுடைய ரூபமாக உடையவளென்பதாக அம்பாளைச் சொல்லுகிறது. இதனால்தான் கோடாம்யாஸத்தின் ஒரு பாகமாகிய பீடந்யாஸத்தில் ஐம்பத்தோரு பீடங்களின் ந்யாஸம் சொல்லப்பட்டது. இவைகளெல்லாம் மூறையே ஐம்பத்தோரு மாத்ருகைகளை (வர்ணங்களை)க் குறிக்கும்.

'யவாத் மாத்ருகமுதிதாந்யேக ஸமேதாநி பஞ்சாசத் |
பீடாநி.....ll' [வரிவஸ்யா ரஹஸ்யம்]

'ததः பீடாநி பஞ்சாசதேகம் சக்ரமதோ ந்யஸேத் |
... ...
விபிக்ரம ஸமாயுக்தாந் விபிஸ்தாநேஷு விந்யஸேத் ll'
[லலிதோபாக்யானம்]

இந்த ஐம்பத்தோரு பீடங்களின் பெயர்களைப்பற்றி சிற்சில பாடாந்தரங்களிருப்பதில் வராஹீதந்த்ர தந்த்ரத்தில் சொல்லப்பட்டிருப்பது பின்வருமாறு:—

'காமரூபம் வாராணஸீ நேபாலம் பௌண்ட்ரவர்த்தநம் |
புரஸ்த்ரம் காம்யகுப்ஜம் பூர்ணசைலம் ததாபர்புதம் ll
ஆம்ராதகேச்வரைகாம்ரம் த்ரிஸ்ரோதः காமகோடகம் |
கைலாஸம் ப்ருகு நகரம் கேதாரம் சந்த்ரபுஷ்கரம் ll
ஸ்ரீபீடமோங்காரபீடம் ஜாலந்த்ரம் மாலவம் ததா |
அட்டஹாஸம் ச விரஜம் ராஜகேஹம் மஹாபதம் |
கோலாபுர மேலாபுரம் காலேசச்ச ஜயந்திகா ll
உஜ்ஜயிந்யபி சித்ரா ச க்ஷீரகம் ஹஸ்திநாபுரம் |
உட்டீசச்ச ப்ரயாகாக்யः ஷஷ்டீ மாயாபுரீ ததா ll
ஜலேசோ மலயः சைலோ மேருர் கிரிவரஸ்ததா |
மஹேந்த்ரோ வாமநச்சைவ ஹிரண்யபுர மேவ ச ll
மஹா லக்ஷ்மீ புரோட்யாநம் சாயா சத்ரம் அதः பரம் |
ஏதே பீடாः ஸமுத்திஷ்டாः மாத்ருகாः ரூபகாः ஸ்த்திதாः ll'

இவற்றின் பெயர்களை ந்யாஸம் செய்யும்போது 'அம் காம ரூபாய நமः' என்பதுபோல் சொல்லவேண்டும்.

4. இந்த பஞ்சாசத் பீடங்களின் பெயர்களைப்பற்றி இதர தந்த்ரங்களிலும் அவற்றின் பாஷ்யங்களிலும் சொல்லியிருப்பதைப்பற்றியும், அப்படிச் சொல்லியிருப்பவைகளைப் பற்றித் தனக்கிருக்கும் அபிப்ராய பேதங்களையும் பாஸ்கர ராயர் தன்னுடைய பாஷ்யத்தில் விசேஷமாகச் சொல்லியிருப்பதுடன் ஸேதுபந்தத்திலும் சொல்லியிருக்கிறார். இதைப் பற்றியும் பீடங்களின் ந்யாஸத்தைப்பற்றியும் தெரிய விரும்புகிறவர்கள் அவற்றில் பார்த்துக்கொள்ளவும்.

5. ஐம்பத்தியொன்று என்று தெளிவாகச் சொல்லாத வரையில் பஞ்சாசத்தென்பது ஐம்பதைத்தான் குறிக்குமென்று பிடிவாதமாய்ச் சொல்லுகிறவர்களுக்கு இன்னமொரு ஸமாதானமும் உண்டு. இந்த நாமத்தில் வரும் ரூபம் என்ற பதமானது ஒன்று என்றஎண்ணிக்கையைக் குறிக்குமென்பதாகச் சொல்லலாம். 'ரூபே சூன்யம்' என்பதான பிங்கள ஸூத்திரத்திற்கு ஹலாயுதர் முதலானவர்கள் அப்படியே அர்த்தம் சொல்லியிருக்கிறார்கள்.

6. பஞ்சாசத் பீடங்களைப்பற்றிச் சொல்லப்படும் வருத்தாந்தம் ஒன்று உண்டு. தக்ஷனுடைய யாகத்திற்கு ஸதீதேவியானவள் போனபோது அங்கு தன் புருஷனுக்கும், தனக்கும் செய்யப்பட்ட அவமர்யாதையை ஸஹிக்காமல் தேவியானவள் (அவ்விதம் நிந்திக்கும் தக்ஷனை ஹிண்டானை) சரீரத்தின் மீது வெறுப்புற்று அதை விட்டுவிடவும், பரமசிவன் அங்கு வந்து உயிரற்ற சரீரத்தைப்பார்த்து துக்கித்து அதைத்தன் தோளின் மீது சாத்திக்கொண்டு வேறு நாதியும் யாதொன்றுமில்லாமல் துக்காக்ராந்தராய் ஸஞ்சரிக்க ஆரம்பித்தார். லோகங்களுக்கெல்லாம் நியந்தாவான அவர் இப்படிரியிருக்கவே, ஸகல தேவர்களும் விஷ்ணுவையழைத்து ஈச்வரனுக்கு ஏற்பட்ட துக்கத்தையும் அதினால் லோகங்களுக்கெல்லாம் ஏற்பட்ட கஷ்டத்தையும் நீக்குமிடி வேண்டுமே, ஸதீதேவியின் சரீரம் இருக்கும் வரையில் பரமசிவனுக்கு துக்கம் நீங்காதென்றறிந்த விஷ்ணுவானவர் தன் சக்ராயுதத்தினல் ஸதீதேவியின் சரீரத்தைப் பல துண்டுகளாகச் செய்தாரென்றும், அவ்விதம் தேவியின் சரீரம் போனவுடன் பரமசிவன் ஸ்வயம் ஸாபகமடைந்தாரென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. அப்போது ஏற்பட்ட ஐம்பத்தோறு துண்டுகளும் பூமியில் அங்கங்கே விழவும்

அந்தந்த இடமெல்லாம் தேவியின் மஹா பீடஸ்தானங்களாக எற்பட்டனவென்றும் சொல்லப்படும்.

विशृङ्खला

விச்ருங்கலா (834)

கர்மாதி நிர்ப்பந்தங்கள் யாதொன்றுமில்லாதவள்.

1. ச்ருங்கலையென்றால் கட்டும் சங்கிலி, விலங்கு, என்றர்த்தம். இங்கு கர்மா முதலான பந்தங்களை ச்ருங்கலையென்று சொல்லியது. அவை விதி நிஷேதங்களாலேற்படுவதாலும் அனித்யையின் விஷயங்களாக இருப்பதாலும், அவற்றினால் அம்பாளுக்கு யாதொரு விதமான பந்தமுமில்லையென்று இந்த நாமத்தின் தாத்பர்யம். பாபத்தைக் கொடுப்பவையும், புண்யத்தைக் கொடுப்பவையுமான கர்மாக்களெல்லாம் விலங்குகளாகச் சொல்லப்பட்டு அவ்விரண்டிலிருந்தும் தன்னை விடுவிக்கவேண்டுமென்று (இந்த அர்த்தத்தில்) அபியுக்த வசனமிருக்கிறது.

'பாதக பரசயவத் மம தாவத் புண்யபுஞ்ஜமபி நாத லுநீஹி।
காஞ்சநீ பவது லோஹமயீ வா ச்ருங்கலா யதி பதேதார்ந
விசே ः ॥'

தங்கமாயிருந்தாலும், இரும்பாயிருந்தாலும் விலங்கு விலங்குதானென்று சொல்லப்பட்டது.

2. அல்லது விசேஷமான கர்மாதி நிர்பந்த ரூபமாக இருப்பவள் என்றும் சொல்லலாம்.

3. ச்ருங்கலா ஸ்யாத் கடவஸ்த்ர பந்தேZபி ஹிகடேZபி ச |

என்ற விச்வகோசத்தின்படி ச்ருங்கலையென்றால் இடுப்பவஸ்த்ரத்தின்மீது கட்டிக்கொள்ளும் கடி ஸூத்ரம், அரை ஞாண் என்றும் அர்த்தம். அது இல்லாதவள் என்றால் நக்னமாயிருப்பவள் என்று தாத்பர்யம். அலம்புரா முதலான கேஷத்ரங்களில் அம்பாளுடைய மூர்த்தியானது அவ்விதமாக இருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அம்பாளுடைய பஞ்சத்தைச் சுற்றியிருக்கும் ஜவநிகா (திரை) ரூபமான திரஸ்கரிணீ
ன் த்யானமும் அம்மாதிரியாகச் சொல்லப்பட்டிருக்
து.

'பரிதோ மணி மஞ்சஸ்ய ப்ரலம்பமாநா நியந்த்ரிதா பாசை: |
மாயாமயீ ஜவநிகா மம துரிதம் ஹரது மேககச்சாயா ॥'

[லலிதாஸ்தவரத்னம்]

'முக்த கேசீம் விவஸாம் ஸர்வாபரண பூஷிதாம் |
ஸ்வயோநி தர்சநாத் முக்யத் பசுவர்காம் நமாம்யஹம் |'

ஜவநிகைக்கு வேறு ஜவநிகை தேவையில்லையாகையால் அவ்விதமான த்யானம் பொருத்தமாகத்தான் இருக்.

(835)

ஜனங்களில்லாத இடங்களிலிருப்பவள்.

1. விஜனமான (ஜனங்கள் காணப்படாத) ஸ்தலங் களெல்லாம் பரிசுத்தமானவை யென்பதாக,

ஸர்வத்ர மேத்யா வஸுதா யத்ர லோகோ நத்ருச்யதே |'

என்று ஹாரீதஸ்மிருதியில் சொல்லப்பட்டது.

2 'விவிக்தைள பூத விஜநௌ' என்ற அபரதேச வசனப்படி (பூதமான) பரிசுத்தமான ஸ்தலம் (ஜனங்களெ டிருந்தாலும்) அதையும், பரிசுத்தமாயில்லாத தேசத்தும் ஜனங் களில்லாமலிருந்தால் அதையும், விவிக்தஸ்தலமென்பதாகச் சொல்லப்படும். அப்படி பவித்ரமான ஸ்தலமாயிருப்பதும் விஜனமாகவுமிருக்கப்பட்ட ஸ்தலம்தான் இங்கு குறிப்பிடப் பட்டது. அப்படிப்பட்ட விவிக்தஸ்லத்திலிருப்பவள் என்று அர்த்தம் இங்கு சொல்லப்பட்டாள். அபவித்ரமாயிருந்தா லும் ஜனக்கூட்டமிருந்தாலும் த்யானம் செய்வதற்கு தகுந்தி யற்றதாகையால் அவ்விதமான இடங்களில் உபாஸகனுக்கு அர்த்தாங்கனையான ஆவிர்பாவம் உண்டாகாது.

3. அல்லது, ஆத்மா, அனாத்மா என்பனைகளைப்பற்றி மெய்ஞ்ஞானமுடையவர்கள்பக்கலில் இருப்பவள் என்றும் சொல்ல லாம்.

वीभत्सा
வீராசாரா

(836)

வீரர்களுக்குத் தாயாராக (வீரத்தைச் செய்பவளாக) இருப் பவள்.

1. 'அஸுமி ப்ரளயம் குர்வந் இதம: ப்ரதியோகிந:।
ப்ராக்ரமபதோ புங்க்தே ஸ்வாத்மாநம் அசிவாபஹம் ॥'

என்றபடி, போதாயத்திற்கு ஆதாரமான இதிஹாஸத்தை அதற்குச் சத்ருவான அஸுரனென்ற யுத்த ஸ்தலத்தில் ப்ரளய மடையச்செய்யும் பராக்ரமத்தையுடையவர்களாய், அவ்விதத்தை

(அடங்களத்தை)ப் போக்குகிற ஆத்மாவில் நிஷ்டர்களாயிருப்பவர்களை வீரர்களென்று சொல்லப்படும். அம்மாதிரியான உபாஸக தரந்தரர்களுக்கு ஹிதத்தைச் செய்பவள் என்றும் இங்கு சொல்லப்பட்டது.

2. அல்லது, யுத்தகளத்தில் (நேரிட்டு சண்டைசெய்து) இறந்தவர்களை வீரர்களென்று சொல்லப்படும்.

3. 'வீரம் மத்யஸ்ய பாஜநே' என்ற விச்வகோச வசனத்தின்படி பான பாத்ரத்திற்கு வீரமென்று பெயர். அதை அளப்பவள் வீரமாதா. அதாவது, பான பாத்ரத்திலடங்கிய மத்யத்தினால் ஆராதிக்கப்படுகிறவள் என்று தாத்பர்யம்.

4. வீரனென்று பெயருடைய கணேச்வரனொருவனை அம்பாள் தன் புத்ரனாக ஸ்வீகரித்துக்கொண்டதால் இந்தப் பெயர் ஏற்பட்டதாகவும் சொல்லலாம். அவனைப்பற்றிப் பரமசிவன்,

'ஸ ஏஷ வீரகோ தேவி ஸதா மே ஹ்ருதயப்ரிய: |
நாநாச்சர்ய குருத்வாரி கணேச்வர கணர்ச்சித:॥'

என்று புகழவும், அதைக்கேட்ட அம்பாள் அம்மாதிரியான புத்ரன் தனக்கு வேண்டுமென்பதாக,

'சத்ருசஸ்ய ஸுதஸ்யாஸ்தி மமோத்கண்ட்டா புராந்தக |
கதாஹமீத்ருசம் புத்ரம் த்ரக்ஷ்யாம்யாநந்த தாயகம்॥'

என்று கேட்டதின்பேரில், அவனைப் புத்ரனை எடுத்துக்கொள்ளும்படி,

ஏஷ ஏவ ஸுதஸ்தேऽஸ்து நயநாநந்த ஹேதுக: |
த்வயா புத்ர: க்ருதார்த்த: ஸ்யாத் வீரகோऽபி ஸுமத்யமே॥'

என்று பரமசிவன் சொன்னதென்றும், அதற்குமேல் அவனை அழைத்துவரும்படி தன் ஸகியான விஜயா என்பவளை அம்பாள் அனுப்பியதாக,

'இத்யுக்த்வா ப்ரேஷயாமாஸ விஜயாம் ஹர்ஷணேத்ஸுகா |
வீரகாநயநாயாசு துஹிதா பூப்ருத: ஸகீம்॥'

என்று பத்ம புராணத்தில் இந்த வ்ருத்தாந்தம் சொல்லப்பட்டிருக்கிறது. அப்போற்பட்ட வீரன் என்பவனுடைய மாதா என்று இங்கு சொல்லப்பட்டதாகவும் சொல்லலாம்.

वियत्प्रसूः
வியத் ப்ரஸூ: (887)

ஆகாசத்தை உண்டுபண்ணியவள்.

'ஆகாசாத் வாயு:, வாயோராக்னி:, அக்னேராப:, ஆப: ப்ருத்வீ' என்ற ச்ருதிவாக்யத்தில் சொல்லப்பட்டபடி ஸகல மும் ஆகாசத்திலிருந்து ஏற்பட்டதாலும் அந்த ஆகாசமும் 'ஆத்மன ஆகாச: ஸம்பூத:' என்றபடி ஆத்மாவிலிருந்து உண் டானதாகச் சொல்லப்பட்டிருப்பதாலும் அவ்வித ஆத்ம யாக அம்பாள் இங்கு சொல்லப்பட்டாள்.

मुकुन्दा
முகுந்தா (838)

முக்தியைக் கொடுப்பவள்.

1. முகு: என்றால் மோகஷம். அதைக்கொடுப்பவள் முகுந்தா.

2. அல்லது, விஷ்ணு ரூபமாயிருப்பவளென்ற சொல் லலாம். அம்பாள் க்ருஷ்ண ரூபத்தோடு இருந்தது,

'கதாசித் ஆத்யா லலிதா புரம்ருபா க்ருஷ்ண விக்ரஹா
ஸ்வ வம்ச வாதநாராம்பாத் அகரோத் விவசம் ஜகத் ॥
தத: ஸ கோபீ ஸம்ஜ்ஞாபி: ஆவ்ருதோ(அ)பூத் ஸ்வ சக்திபி:
ததா தேந விநோதாய ஸ்வம் ரூபாடா(அ)கல்பயத் வபு: ॥'

என்பது முதலாக தந்த்ரராஜத்தில் கோபால மந்த்ரோபாஸ னைப்பற்றிச் சொல்ல ஆரம்பிக்கையில் சொல்லப்பட்டிருக் கிறது. (கோபிகைகள் அம்பாளுடைய சக்திவிசேஷங்களென்ற இதில் சொல்லப்பட்டிருக்கிறது.)

3. **'முகுந்த: புண்டரீகாக்ஷ ரத்நபீடோபரி பாரதே ॥'**

என்ற விஷ்ணுஸஹஸ்ரநாமத்தின்படி. ஒரு ரத்ன விசேஷத்தை யும், ரத்நஸிம்ஹாஸனத்தையும், முகுந்தனென்ற சொல் குறிக்கும்.

मुक्तिनिलया
முக்தி நிலயா (839)

முக்திக்கு ஸ்தானமாயிருப்பவள்.

ஏற்கனவே சொல்லப்பட்ட ஸாலோக்ய, ஸாமீப்ய, ஸாரூப்ய, ஸாயுஜ்ய, கைவல்யமென்ற ஐந்துவிதமான முக்திகளிலும் அடையப்படுகிறவளென்று தாத்பர்யம்.

मूलविग्रहरूपिणी
மூலவிக்ரஹரூபிணீ (840)

ஸகல சக்திகளுக்கும் மூலபூதமான ராஜ ஸ்வரூப மாயிருப்பவள்.

பாலா, பகளா முதலான ஸகல சக்திகளும் சாம்பவீ, வித்யா, ச்யாமா என்ற மூன்றுவிதமான (அம்பிகையின்) ரூபங்களிலிருந்து உண்டானவையென்றும், அம்மூன்று ரூபங்களும் ஸ்ரீவித்யாரூபிணியான அம்பிகையிடமிருந்து ஏற்பட்டனவென்றும்,

'ஸைவேயம் அநாமாக்யா ஸ்ரீவித்யா | தத்வத்ரயேண த்ரிவிதா |
ஸா சாம்பவீ வித்யா ச்யாமா தத்வத்ரயாக்ருதி: த்ரிவிதா ஜாதா |
வித்யாயா: பூர்வோத்தராப்யாம் அநேக வித்யா ஜாதா: |'

என்பவை முதலான ஸூத்ரங்களில் கௌடபாதரால் சொல்லப்பட்டிருக்கிறது. அவ்விதமான ராஜராஜேச்வரீ விக்ரஹ ரூபமாக அம்பிகை இருப்பது இங்கு சொல்லப்பட்டது.

भावज्ञा

பாவஜ்ஞா (841)

பாவங்களை அறிகிறவள்.

I. பாவ (भाव) மென்ற பதத்திற்கு அனேகவிதமான அர்த்தங்களுண்டு.

'பாவ: ஸத்தா ஸ்வபாவாபிப்ராய சேஷ்டாத்ம ஜந்மஸு |'

என்று அமரத்திலும்,

'பாவோ யோநி புதார்த்தேஷு க்ருபாலீலா விபூதிஷு |'

என்று அமரசேஷத்திலும் சொல்லப்பட்டபடி பாவமென்றால் ஸத்தா (இருக்கை), ஸ்வபாவம், அபிப்ராயம், சேஷ்டை, ஆத்மா, ஜன்மம், யோனி, புத்திமான், அர்த்தம், க்ருபை, லீலை, விபூதி முதலான அர்த்தங்களுண்டு. 'தஸ்யபாவஸ் த்வதலௌ' என்ற ஸூத்ரத்தில் சொல்லியபடி தர்மத்தையும் குறிக்கும். 'பாவ ப்ரதான மாக்யாதம்' என்று ஸ்ம்ருதியில் சொல்லியபடி பாவநத்தையும் குறிக்கும்.

'தாத்வார்த்த: கேவல: சுத்தோ பாவ இத்யபிதீயதே |'

என்றபடி தாதுவின் கேவலம் சுத்தமான அர்த்தத்திற்கு பாவ மென்று பெயர்.

'அஸ்தி ஜாயதே வர்த்ததே பரிணமதே பரிக்ஷீயதே ம்ரியதே |'

என்று யாஸ்கர் நிருக்தத்தில் சொல்லிய ஆறுவிதமான விகா ரங்களுக்கும் ஷட் பாவங்களென்று பெயர்.

2. பாவமென்றால் பக்தியையும் குறிக்கும். தர்க்க சாஸ்த்ரத்தில் சொல்லப்படும் ஷட் பதார்த்தங்களுக்கும் பாவங்களென்ற பெயர். பவ: என்ற ஸம்ஸாரத்திற்குப் பெயராகையால் அது ஸம்பந்தப்பட்டிருப்பவர்களுக்கு (ஸம்ஸாரிகளுக்கு) பாவர்களென்ற பெயர். பவ: என்றால் சிவனுக்குப் பெயர். அவரைச் சேர்ந்தவர்களை — சைவர்களை — பாவர்களென்ற சொல்லலாம். பா என்றால் காந்தி. அதை வெளிப்படுத்துகிறவர்களான ஸூர்யன் முதலானவர்களை பாவர்களென்ற சொல்லலாம். யோகினீ ஹ்ருதய லலிதாஸஹஸ்ரநாமங்களுக்குச் சொல்லப்பட்டிருக்கும் ஆறு நாம அர்த்தங்களில் பாவார்த்தமொன்பது ஒன்று.

भवरोगघ्नी

பவரோகக்நீ (842)

ஸம்ஸாரமாகிற ரோகத்தைப் போக்கடிப்பவள்.

இதேமாதிரி, ஸம்ஸாரமானது ரோகத்திற்கு ஸமமான தென்றும், பராசக்தியே அதைப் போக்கடிக்கவல்லவரென்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

'காம்யம் பச்யாமி பைஷஜ்யம் அந்தரேண வ்ருஷத்வஜம் |'
(ராமாயணம்)

'வ்யாதிராம் பேஷஜம் யத்வத் ப்ரதிபக்ஷஸ்வபாவத: |
தத்வத் ஸம்ஸாரரோகாணாம் ப்ரதிபக்ஷ: சிவாதவ: ||'
(சிவ புராணம்)

भवचक्रप्रवर्तिनी

பவசக்ர ப்ரவர்த்தினீ (843)

ஸம்ஸார மண்டலத்தை (மேலுக்குமேல்) நடக்கச்செய்பவள்.

1. அல்லது, ஸம்ஸாரத்தை சக்ரம் மாதிரி சுற்றிச் சுற்றிச் சுழலும்படி செய்பவள் என்றும் சொல்லலாம்.

'ஏஷ ஸர்வாணி பூதானி பஞ்சபிர் வ்யாப்ய மூர்த்திபி: |
ஜன்ம வ்ருத்தி க்ஷயைர் நித்யம் ஸம்ஸாரயதி சக்ரவத் ||'
(மனுஸ்ம்ருதி)

'ஈச்வர: ஸர்வபூதானாம் ஹ்ருத்தேசேऽர்ஜுந திஷ்டதி |
ப்ராமயன் ஸர்வபூதானி யந்த்ராரூடானி மாயயா ||' (கீதை)

'துரீயா காऽபி த்வம் துரதிகம நிஸ்ஸீம மஹிமா
மஹாமாயா விச்வம் ப்ரமயஸி பராப்ரம்ஹ மஹிஷீ ||' (97)
(ஸௌந்தர்யலஹரீ)

2. பவ: என்று சிவனுக்குப் பெயர். அவரே ஸகல ஜகதாத்மாக்களுடைய பந்தமோக்ஷங்களுக்கு சாக்ஷியாயிருப்பதால் ஸம்ஸாரத்தை பவசக்ரமென்று சொல்லலாம்.

'த்வமேவ ஸர்வஜகதாம் ஸாக்ஷிரூபா பந்தமோக்ஷயோ: ॥
தம் த்வாம் அர்ச்சந்தி குசலா: ப்ரபந்நார்த்திஹரம் ஹரம் ॥'
(விஷ்ணுபாகவதம்)

3. அனாஹத சக்ரத்தில் சிவன் அவஸ்தானத்தோடிருப்பதால் அதையும் பவசக்ரமென்று சொல்லலாம். [ஸாதாரணமாய் கோணங்கள், பத்ரங்கள் (தளங்கள்) இவையிரண்டோடு கூடியதுதான் சக்ரமென்பதாக தாந்த்ரிகர்களுடைய வித்தாந்தம்.]

கோணபத்ர ஸமுச்சயம் சக்ரம் |' (வித்யாரத்னஸூத்ரம்)

அப்படிக்கிருக்க, அநாஹதம் முதலானவைகளில் கோணங்களில்லாதிருக்கும்போது அவற்றை சக்ரங்களென்று எப்படிச் சொல்லலாம்? ப்ரயோகத்திலும் அவற்றை 'அநாஹதாப்ஜநிலயா' என்றது முதலான இடங்களில் கமலங்களென்றுதானே சொல்லப்பட்டிருக்கிறது. கேவலம் பத்ரங்களோடிருந்தால் அதைக் கமலமென்றும், கேவலம் கோணங்களோடிருந்தால் அதை யந்த்ரமென்றும், சொல்வதுதானே வித்தாந்தம். பத்ரங்களோயே கோணங்களென்று கௌணமாகச் சொல்லப்படுகிறதுஎன்று சிலர் சமாதானம் சொல்வதும் சரியல்லவே. இந்த ஸம்சயத்திற்குப் பதிலென்னவென்றால், அந்த ஸ்தானங்களில் தளங்களிலிருப்பதால் கமலமென்று சொல்லக்கூடியதாயிருந்தாலும், மத்தியிலிருக்கும் கர்ணிகையில் த்ரிகோணமிருப்பதாகப் பாவிக்கப்படுவதால் அவை சக்ரங்கள்தான். ஆகவே சக்ரங்களென்று அவைகளைச் சொல்வது கௌணமாகச் சொல்வதல்ல. இதே அர்த்தத்தில்தான் மேலே வந்த ஸூத்ரத்தின் பாஷ்யகாரர் அபிப்பிராயப்பட்டிருக்கிறார்.

4. ஸ்ரீசக்ரத்திலடங்கிய பிந்து, அஷ்டதளம், ஷோடசதளம், சதுரச்ரம், (பூக்ருஹத்ரயம்) என்றவை சிவசக்ரங்களென்றும், பாக்கியான த்ரிகோணம், அஷ்டகோணம், தசாரத்வயம் மன்வச்ரம் இவையெல்லாம் சக்தி சக்ரங்களென்றும் சொல்லப்படும்.

'சதுர்பி: சிவசக்ரைச்ச சக்திசக்ரைச்ச பஞ்சபி: |
நவ சக்ரைச்ச ஸம்ஸித்தம் ஸ்ரீசக்ரம் சிவயோர் வபு: ॥

த்ரிகோணம் அஷ்டகோணம் ச தசகோணத்வயம் ததா |
சதுர்தசாரம் சைதாநி சக்திசக்ராணி பஞ்ச ச ||
பிந்துச் சாஷ்டதளம் பத்மம் பத்மம் ஷோடசபத்ரகம் |
சதுரச்ரம் ச சத்வாரி சிவசக்ராண்யநுக்ரமாத் ||'

(ஸ்ரீ லலிதாத்ரிசதீ)

இவற்றில் சிவசக்ரங்களுக்கு சக்திசக்ரங்களின் சேர்க்கை யினால்தான் ப்ரபுத்வம் ஏற்படுகிறதென்பதாக,

'சிவ: சக்த்யா யுக்தோ யதி பவதி சக்த: ப்ரபவிதும்
நசேத் ஏவம் தேவோ ந கலு குசல: ஸ்பந்திதுமபி |'

என்ற 'ஸௌந்தர்யலஹரீ' முதல் ச்லோகத்தில் சொல்லப்பட் டிருக்கிறது. அதையேதான் இங்கு சொல்லப்பட்டதாகவும் சொல்லலாம்.

5. சக்ரமென்பது மனதிற்குப் பெயரென்றும், இதையே தான் விஷ்ணுவானவர் தன்கையில் சக்ரமாக தரித்துக்கொண் டிருக்கிறரென்றும், விஷ்ணு புராணத்தில் சொல்லப்பட் டிருக்கிறது.

'சக்ரம் ஹி மந ஏவ |'

'சலத் ஸ்வரூபமத்யக்தம் ஜவேநாந்தரிதாநிலம் |
சக்ரஸ்வரூபம் ச மநோ தத்தே விஷ்ணு: கரே ஸ்திதம் ||'

இங்கே பஞ்சசக்ரமென்றால் பரமசிவனுடைய மனதைக் குறிக்கு மாகையால் அதை ப்ரவர்த்திக்கச் செய்பவனென்றும், இந்த நாமத்திற்கு அர்த்தம் சொல்லலாம்.

ஸுந்த:ஸாரா

சந்த:ஸாரா (844)

வேதங்களின் ஸாரமான உபநிஷத்துக்களின் ரூபமாயிருப்பவள்.

1. அதாவது உபநிஷத்துக்களால் நிஷ்கர்ஷிக்கப்பட்ட ஸ்வரூபத்தையுடையவள் என்று தாத்பர்யம்.

2. சந்தஸ் என்ற பதமானது வேதத்தைக் குறிப்பதுடன், காயத்ரீ முதலான சந்தோ விசேஷங்களையும், பைங்கள தந்த் ரத்தையும் குறிக்கும். ஸாரமென்றால் பலம், ஸ்திரமாயிருப் பது, உத்க்ருஷ்டமாயிருப்பது முதலானவையைக் குறிக்கும்.

'சந்த: பத்யே ச வேதே ச ஸ்வைராசாராபிலாஷயோ: |'
'ஸாரோ பலே மஜ்ஜநி ஸ்த்திராம்சே
ந்யாய்யே ச ரூபே ச தநே ச ஸாரம் |' (விச்வகோசம்)

3. சந்தஸ்ஸுக்களுக்குள் காயத்ரீ மந்திரமே ஸாரமான தையாலும், அந்த காயத்ரியின் ஸாரமாக பஞ்சதசாக்ஷரப்பதாலும், அம்பாளும் ஸ்ரீவித்யையும் அபேதமாகையாலும், சந்தஸ்ஸாரா என்பதாக அம்பாளுக்கு இந்த நாமம் ஏற்பட்டது. இதைப்பற்றி பாஸ்கரராயரால் 'வாரிவஸ்யா ரஹஸ்ய'த்தில் விஸ்தாரமாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

'தத் ஞாநார்த்தமுபாயா வித்யா லோகே சதுர்தச ப்ரோக்தா:।
தேஷ்வபி ச ஸாரபூதா வேதாஸ்தத்ராபி காயத்ரீ ॥
தஸ்யா ரூபத்விதயம் தத்ரைகம் யத் ப்ரபட்யதே ஸ்பஷ்டம்।
வேதேஷு சதுர்ஷ்வபி பரமத்யந்தம் கோபநீயதரம் ॥
காமோ யோநி: கமலேத்யேவம் ஸங்கேதிதை: சப்தை:।
வ்யவ்ருணோதி ந து ப்ரகடம் யாம் வித்யாம் வேதபுருஷோ(அ)பி ॥'

இதின் கடைசி ச்லோகத்தில் "வேதபுருஷனும் எந்த வித்யையை வெளிப்படையாகச் சொல்லாமல் 'காமயோனி: கமலா' என்பவை முதலான ஸங்கேத பதங்களால் ரஹஸ்யமான விதமாகச் சொல்லியிருக்கிறாரோ" என்று சொன்னது,

'காமோயோநி: கமலா வஜ்ரபாணி:
குஹா ஹஸா மாதரிச்வாப்ரமிந்த்ர:।
புநர்குஹா ஸகலா மாயயா ச
புருச்யைஷா விச்வமாதா ச வித்யா ॥'

என்று அதர்வண வேதத்திய த்ரைபுர ஸூக்தத்தின் 16-வது ருக்காக இருக்கிறது. [இதற்கும் பாஸ்கரராயர் பாஷ்யம் எழுதியிருக்கிறார். இந்த ருக்கில் காதிவித்யை சொல்லப்பட்டிருக்கிறதென்பது குறிக்கத்தக்கது.]

4. பைங்கள தந்த்ரத்தில் 'த்ரிகள க்லௌ। மிச்ரௌ ச।' என்ற இரண்டு ஸூத்ரங்களில் (ஸ்ரீசக்ரத்தைப்பற்றிய) மஹாப்ரஸ்தாரமானது சொல்லப்பட்டிருக்கிறது. இந்த விஷயத்தைப்பற்றியும் பாஸ்கரராயர் சந்தஸ் சாஸ்த்ரத்தைப்பற்றி எழுதியிருக்கும் சந்தோபாஸ்கரமென்ற க்ரந்தத்தில் சொல்லியிருக்கிறார். மேலே சொல்லியபடி சந்தஸ் என்ற பதமானது பைங்கள தந்த்ரத்தையும் குறிக்குமாகையாலும், அந்த தந்த்ரத்தில் இங்கு சொல்லப்பட்டபடி ஸ்ரீசக்ரமானது ஸாரமாக ப்ரதிபாதிக்கப்பட்டிருப்பதாலும் இந்த நாமத்திற்கு இந்த அர்த்தமும் பொருந்தும்.

5. ஸாரமென்றால் பலம், அதாவது மாஹாத்ம்யம் என்று அர்த்தம். அம்பாளுடைய மாஹாத்ம்யமானது

சந்தஸ்ஸுகளால் (வைகரீரூபமான வாக்குகளால்) வெளிப்படுத்தப்படுகிறது என்பது இங்கு சொல்லப்பட்டதாகவும் சொல்லலாம்.

6. சந்தஸ் என்றால் ஸ்வைராசாரம் (தன்னிஷ்டம்போல் நடந்துகொள்வது) என்பதைக் குறிக்குமென்று மேலே சொல்லிய விச்வகோச வசனத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. மனதானது எந்தெந்த இடத்தில் ஸந்துஷ்டியை அடையுமோ அந்தந்த இடங்களில் அதைச் செலுத்தவேண்டுமென்றும், அப்படியிருக்குங்போது பரமாத்மஸ்வரூபமானது ப்ரகாசிக்கிறது,

'யத்ர யத்ர மனஸ்துஷ்டி: மநஸ் தத்ரைவ தாரயேத் |
தத்ர தத்ர பராநந்தஸ்வரூபம் ஸம்ப்ரகாசதே ||'

என்று விக்ஞான பைரவபட்டாரகரால் சொல்லப்பட்டபடி, உபாஸக தூரந்தரனுயிருப்பவனுடைய மனம் எதைச்செய்ய விரும்புமோ அதுவே தர்மம், எதைச்செய்ய விரும்பாதோ அதுவே அதர்மம். இதே அர்த்தத்தில் ஸந்தோஷத்திற்கிடமான வஸ்துக்களில் ஸந்துஷ்டர்களுக்கு அவர்களுடைய அந்த: கரண ப்ரவ்ருத்தியே ப்ரமாணமென்பதாக,

'ஸதாம் ஹி ஸந்தோஷ பதேஷு வஸ்துஷு
ப்ரமாணம் அந்த:கரண ப்ரவ்ருத்ய: |'

என்று சாகுந்தலத்திலும் சொல்லப்பட்டிருக்கிறது. 'ப்ரௌடாநந்தம் ஸமயாசாரா:' என்று கல்பஸூத்ரத்தில் சொல்லப்பட்டபடி ஸமயாசாரத்தில் சொல்லப்பட்ட நிர்ப்பந்தகளெல்லாம் ப்ரௌடோல்லாஸம் வரையில்தான். [உபாஸகனுக்கு ஆரம்ப, தருண, யௌவன, ப்ரௌட, ததந்த, உந்மத, அவஸ்தைகளென்கிற ஏழு தசைகள் சொல்லப்பட்டிருக்கின்றன. ஸமயாசாரத்தில் சொல்லப்பட்ட நியமங்களெல்லாம் உபாஸகன் ப்ரௌடனுகும் வரையில்தான் அவனைக் கட்டுப்படுத்தும்] அதற்கு மேற்பட்டவனுக ஆகிவிட்டால் 'அத:பரம் யதாகாமீ' என்ற கல்பஸூத்ரத்தின்படி அவன் இஷ்டப்பட்டபடி நடக்கலாமென்று சொல்லப்படுகிறது. 'தர்மோ Zதர்ம:' அதர்மோ தர்ம:' என்று கௌலோபநிஷத்தில் சொல்லியபடி பிறருக்கு அதர்மமாயிருப்பவை அவன் செய்தால் தர்மங்களாகும். பிறருக்குத் தர்மமாகச் சொல்லப்பட்டனவைகளை அவன் செய்யவேண்டுவதில்லை. அவை அவனுக்கு அதர்ம

மானவை. அதாவது, தர்மத்திற்கு ஆதாரமான விதி நிஷேத வாக்யங்களுக்கெல்லாம் அவன் கட்டுப்பட்டவனல்லன், அவை அவனைக் குறித்துச் சொல்லப்பட்டவையல்ல, என்று தாத் பர்யம்.

7. இப்படி ஸ்வைராசாரபரரை உபாஸகளிருப்பதைப் பற்றிச் சொல்லப்பட்டதானது, அஹம், இதம் என்ற பாவங்களின் ஐக்யத்தையறிந்தவனும் 'ஸர்வம் சாம்பவீ ரூபம்', என்று கௌலோபநிஷத்தில் சொல்லியபடி எங்கும் அம்பாளுடைய ஸ்வரூபமாயிருப்பதான பாவனையையுடையவனுமான உபாஸகனைப்பற்றிச் சொல்லப்பட்டதே தவிர பிறரைப்பற்றியதல்ல.

'பிபந் ந்ருத்யந் வமந் காதந் ஸ்வைரா சாரபர: ஸ்வயம் |
அஹம்தேதந்தயோரைக்யம் பாவயந் விஹரேத் ஸ¨கம் ||'
(யோகினீஹ்ருதயம்)

அப்போர்ப்பட்டமன: ஸாதியுடையவனுடைய விருப்பத்திற்கு விஷயமாயிருப்பவையெல்லாம் அவச்யம் தர்மமாகத்தானிருக்கும் என்பது இதின் தாத்பர்யம். இதே அர்த்தத்தில், தர்மத்தின் ப்ரமாணங்களைப்பற்றி மனுஸ்மிருதி முதலியவைகளில் சொல்லுகையில்,

'ச்ருதி: ஸ்ம்ருதி: ஸதாசார: ஆத்மநஸ்துஷ்டிரேவ ச |'

என்று சொல்லப்பட்டிருக்கிறது. இவற்றில் ஆத்மநஸ்துஷ்டி என்பதினால் மனதின் ப்ரவ்ருத்தியைச் சேர்த்ததானது மேலே சொல்லப்பட்டபடி ஸதாஹிதமான மனதைப்பற்றியது. இல்லாவிட்டால் யாரும் எதையும் செய்ய இடமேற்பட்டுவிடும்.

8. இப்போர்ப்பட்ட சந்தஸ் (ஸ்வைராசரணம், ஸ்வச் சந்தவ்ருத்தி) ஆனதை ஸாரமாக (ந்யாயமாக) உடையவள் ஸஸாரா.

9. சந்தஸ் என்பது அபிலாஷையை (இச்சையை) குறிக்கும். அதையே ஸாரமாக-நிஷ்க்ருஷ்டமான ரூபமாக-உடையவள் சந்தஸ்ஸாரா. இதனால் அம்பாள் இச்சாசக்தி ஸ்வரூபமாக இருப்பது குறிக்கப்பட்டது.

शास्त्रसारा
சாஸ்த்ரஸாரா (845)

சாஸ்த்ரங்களுக்கெல்லாம் ஸாரமாயிருப்பவள்.

मन्त्रसारा

மந்த்ரஸாரா (846)

மந்த்ரங்களுக்கெல்லாம் ஸாரமாயிருப்பவள்.

1. 'சாஸ்த்ரயோனித்வாத்' என்ற ப்ரம்ஹ ஸூத்ரத்தில் சொல்லியபடி, சாஸ்த்ரமென்ற பதமானது வேதத்தைக் குறிப்பதுடன் அதை அனுஸரிக்கும் மீமாம்ஸா முதலானவை களையும் குறிக்கும். இதேமாதிரி, விதி, நிஷேதங்களை (வேதத்தில் சொல்வதுபோல்) சொல்லுகிறவையெல்லாம் சாஸ்த்ரங்களென்பதாக தாந்த்ரிகர்கள் ஒப்புக்கொள்வதுடன் பாரதத்தில்,

'ப்ரவ்ருத்திர்வா நிவ்ருத்திர்வா நித்யேநைமித்திகேவா |
பும்ஸாம் யேநோபதிச்யேத தத் சாஸ்த்ரம் அபிதீயதே ||'

என்று சொல்லப்பட்டிருக்கிறது.

2. மந்த்ரமென்ற பதமும் வேதத்தைக் குறிக்கும். அத்துடன் தந்த்ரங்களில் சொல்லப்படும் மந்த்ரங்களையும், (அவ்விதமந்த்ரங்களைச் சொல்லும்) தந்த்ரங்களையுமே குறிக்கும். (இந்த தந்த்ரங்கள் 64 என்று கணக்கிடப்படும்).

तलोदरी

தலோதரீ (847)

மெல்லியதான இடையை உடையவள்.

1. தலமென்பது கரதலம் (உள்ளங்கை) முதலியவை களைக் குறிக்கும். அவைபோல மெல்லியதாயும், ஸாமாயு மிருக்கும் உதரத்தைஉடு இருப்பவள் தலோதரீ. அம்பாளுடைய இடையானது அதிஸூக்ஷ்மமாயிருப்பதைப்பற்றி ஏற்கனவே வந்த,

'லக்ஷ்ய ரோம லதாதாரதா ஸமுந்நேய மத்யமா |'

என்ற 35-வது நாமத்தில் சொல்லியிருப்பதைப் பார்க்கவும்.

2. இந்த நாமத்தை முந்தியதிலிருந்து 'அதலோதரீ' என்று பிரிக்கலாம். அம்பாளுடைய விராட் ஸ்வரூபத்தில்,

'அதலாதி மஹாதலோகா: கட்யதோபாகதாம் கதா: |'

என்று தேவீகீதையில் சொல்லியபடி அதலமென்ற லோகமானது உதரப்ரதேசமாயிருப்பதால் அதலோதரீ என்ற பெயர் ஏற்பட்டதாகவும் சொல்லலாம்.

3. லலிதோபாக்யானத்திலடங்கிய 'லலிதாஸ்தவராஜ'த்தில் அப்பாளுடைய விராட் ஸ்வரூபத்தை வர்ணிக்கையில்,

'அதலம் து பவேத் பாதௌ விதலம் ஜாநுநீ தவ |
ரஸாதலம் கடீதேச: குக்ஷிஸ்தே தராணீ பவேத் ||'

என்று சொல்லியிருப்பதை அனுஸரித்தும், இங்கு தலோதரீ என்று பொதுவாகச் சொல்லியிருப்பதைக்கொண்டும், ரஸாதலமானது குறிப்பிட்டதாகவும் சொல்லலாம்.

उदारकीर्तिः
உதாரகீர்த்தி: (848)

மஹத்தரமான (அல்லது மிகவும் விஸ்தாரமான) கீர்த்தியையுடையவள்.

1. அல்லது, உத்க்ருஷ்டமானதும், (எங்கும் வ்யாபித்திருப்பதும்), சிக்கிரம் கிடைக்கக்கூடியதுமான கீர்த்தியை தன்னுடைய உபாஸனையினால் கிடைக்கச்செய்பவள் என்றும் சொல்லலாம். ['லகு க்ஷிப்ரம் அரம் த்ருதம்' என்ற அக்னி புராணத்திய கோசவசனத்தின்படி அரமென்றால் சிக்ரம் என்ற அர்த்தம்]

2. ரு (ऋ) என்பது தேவர்களின் தாயாரைக் குறிக்கும். அதினால் தேவர்களுக்கு அரா: என்ற பெயர் ஏற்படுகிறது. ஆகவே, அம்பாள் தேவர்களையும் கடந்ததான கீர்த்தியோடிருப்பதாக இந்த நாமத்தில் சொல்லப்பட்டதாகவும் சொல்லலாம்.

3. ஆரமென்றால் மங்களமென்று அர்த்தமாகையால் செவ்வாய் என்ற க்ரஹத்திற்குப் பெயர். அதைக்கடந்ததான கீர்த்தியையுடையவளென்று இந்த நாமத்திற்கு அர்த்தம் சொல்லலாம். அதாவது, செவ்வாய் முதலான துஷ்டக்ரஹங்களால் உண்டாகும் தோஷங்களைப் போக்கடிப்பவள் என்பது தாத்பர்யம்.

4. ஸௌர்யமண்டலத்திலிருக்கும் ஸகுணமான சைதன்யத்திற்கு உத் என்ற பெயருண்டு. இதைப்பற்றி ச்ருதியில் 'ய ஏஷோऽந்தராதித்யே ஹிரண்மய: புருஷ:' என்று ஆரம்பித்து 'தஸ்ய உதிதி நாம' என்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. 'ஆரா சர்மப்ரஸாதிகா' என்ற கோசவசனத்தின்படி ஆரா என்பது ஔஷதமான ஆயுதத்தைக் குறிக்கும்.

உத்புருஷனுக்குத் துக்கத்தைக்கொடுப்பதான கீர்த்தியையுடை யவள், அதாவது அந்த உத்புருஷனுடைய கீர்த்தியை ஜயிப்ப தான கீர்த்தியானது அம்பாளுடைய உபாஸனையிலல் ஏற்படு வதால் அம்பாளுக்கு உதாரகீர்த்தி: என்று பெயர் என்பதாக வும் சொல்லலாம்.

5. ஸகுண ப்ரம்ஹத்தை உபாஸிப்பவர்களால் அடை யப்படுவதாகச் சொல்லப்படும் அபராஜிதம் என்ற பெய ருடைய ப்ரம்ஹரகரத்தில்,

'அரச்சண்யச் சேதி த்வௌ ஸுதாஹ்ரதாவர்ணவ துல்யௌ [வர்த்தேதே |'

என்ற ச்ருதிவாக்யத்தில் சொல்லப்பட்டபடி அரமென்றும், ண்யமென்றும் இரண்டு அம்ருத மடுக்கள் ஸமுத்ரம்போல் விஸ்தாரமாயிருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இவற் றைப்பற்றி 'அரவ்ருத்தி: சப்தாத்' என்ற ப்ரம்ஹ ஸூத்ரத் தின் பாஷ்யத்தில் ஸ்ரீமதாசார்யாளாலும் சொல்லப்பட்டிருக் கிறது. அப்படி எங்கும் வ்யாபித்திருக்கும் அரமென்ற ஸுதாஹ்ரதம்போல் உத்க்ருஷ்டமான கீர்த்தியையுடையவள் உதாரகீர்த்தி: என்றும் சொல்லலாம்.

उद्दामवैभवा

உத்தாமவைபவா (849)

கட்டிலடங்காத வைபவத்தோடு கூடியவள்.

தாமமென்றால் கட்டும் கயிற்றுக்குப் பெயராகையால் கட் டில் அடங்குவதை, அதாவது, பகுக்கப்படுவதை அந்தப்பதம் குறிக்கும். அவ்விதமான கட்டைக்கடந்த, அதாவது அளவி லடங்காத(அபரிச்சின்னமான, பகுக்கமுடியாத)வைபவத்தோடு அம்பாள் இருப்பதாக இந்த நாமத்தில் சொல்லப்பட்டது.

वर्णरूपिणी

வர்ணரூபிணீ (850)

வர்ணங்களின் ரூபமாக இருப்பவள்.

1. **'த்ரிஷஷ்டிச்சதுஷ்ஷஷ்டிர் வா வர்ண: சம்புமதே மதா: | ப்ராக்ருதே ஸம்ஸ்க்ருதே சாபி ஸ்வயம் ப்ரோக்தா: [ஸ்வயம்புவா ||'**

என்று பாணினி சிக்ஷையில் சொல்லியபடி ஆதியில் பரமேச்வரன் அறுபத்திநாலு வர்ணங்களை (அக்ஷரங்களை) உபதேசித்ததாகச் சொல்லப்படும். அவைகளின் ரூபமாக அம்பாளிருப்பதாக இங்கு சொல்லப்பட்டது.

2. அல்லது, வர்ணச்ரமமென்ற பதத்தில் சொல்லப்பட்ட வர்ணங்களின் ரூபமாக இருப்பதாகவும் சொல்லலாம். வர்ண ஸங்கரமானது ஏற்பட்டால் ஜனங்களுக்கு மஹத்தான ஹானியுண்டாகுமாகையால் வர்ணங்களாகிறகட்டுப்பாடுகளின் ரூபமாக அம்பாள் இருப்பதாக இங்கு சொல்லப்பட்டது.

जन्ममृत्युजरातप्तजनविश्रान्तिदायिनी

ஜந்ம ம்ருத்யு ஜரா தப்த ஜந

விச்ராந்தியைக் கொடுப்பவள்.

பிறப்பு, இறப்பு, மூப்பு இவைகளால் தபிக்கப்பட்ட ஜனங்களுக்கு

அதாவது, அவற்றாலேற்படும் துக்கத்தைப் போக்குவதான ஆத்மஸுகத்தைக் கொடுப்பவள் என்று தாத்பர்யம்.

सर्वोपनिषदुद्घुष्टा

ஸர்வோபநிஷதுத்குஷ்டா (852)

ஸகல உபநிஷத்துக்களாலும் உத்கர்ஷத்தோடு ப்ரதிபாதிக்கப்பட்டவள்.

1. உபநிஷதென்ற பதமானது ரஹஸ்யமாயிருப்பதைக் குறிக்கும். இம்மாதிரியாகத்தான்,

'யதேவ வித்யயா கரோதி ச்ரத்தயா உபநிஷதா
ததேவ வீர்யவத்தரம் பவதி |'

என்ற ச்ருதி வாக்யத்திற்கு அர்த்தம் சொல்லப்பட்டிருக்கிறது. ஆத்மாவை அத்வைதமான ப்ரம்மஜ்ஞானத்தினிடம் சேர்த்து அவித்யையையும், அதிலிருந்து உண்டாகின்றவைகளையும் நாசம் செய்வதால் உபநிஷத் என்ற பெயர் ஏற்படுவதாக,

'உபநீய இமமாத்மாநம் ப்ரம்ஹாபாஸ்தத்வயம் ஸத: |
நிஹந்த்யவித்யாம் தஜ்ஜாம் ச தஸ்மாத் உபநிஷந்மதா ||'

என்று ஸ்ரீ மதாசார்யாளால் சொல்லப்பட்டிருக்கிறது. இதனால் தான் ச்ருதியின் சிரோபாகங்களாயும், ரஹஸ்யங்களாயுமிருக்கும் ஐதரேயம்முதலானவற்றிற்கு உபநிஷத்துக்களென்ற பெயர் ஏற்பட்டது.

2. உத்குஷ்டா என்றால் உத்கர்ஷமாகக் கோஷிக்கப்பட்டவள் என்று இங்கு அர்த்தம். உத்கர்ஷமென்றால் ஐகரூப்யம் என்று இங்கு அர்த்தம். உத்கோஷமென்றால் இரைந்து சொல்லுகிறது என்று ஸாதாரணமாகவே அர்த்தமாயிருந்த போதிலும் இங்கு அது குஷ்டா என்ற பதத்தினாலேயே,

'உச்சைர் குஷ்டம் து கோஷணம்'

என்ற கோசவசனத்தின்படி கிடைத்துவிடுவதால் உத்கர்ஷமாக கோஷிக்கப்பட்டவள் என்று அர்த்தம் சொல்லப்பட்டது.

3. ஐகரூப்யம் என்பதினால் ஒவ்வொரு வேதாந்தத்திலும் சொல்லப்பட்ட ஸகுண ப்ரம்ஹத்தின் உபாஸ்திகளுக்குள் பேதமில்லாதது குறிக்கப்பட்டது. இதுவே "ஸர்வ வேதாந்த ப்ரத்யயம் சோதநாத்யவிசேஷாத்" என்ற வேதாந்த ஸூத்ரத்திலும் சொல்லப்பட்டது. ஸகுண ப்ரம்ஹத்தின் உபாஸனையைப்பற்றி எல்லா வேதாந்தங்களிலும் சொல்லப்பட்டிருப்பவைகளுக்குள் பேதமில்லையாகையால் அம்பாளுக்கு இந்தப்பெயர் ஏற்பட்டது என்று தாத்பர்யம்.

शान्त्यतीताकलात्मिका

சாந்த்யதீதா கலாத்மிகா (853)

சாந்த்யதீதமென்ற கலாஸ்வரூபமாயிருப்பவள்.

ஆகாசத்திலிருக்கும் கலைக்கு சாந்த்யதீதமென்று பெயரென்பதாக,

'சாந்த்யதீத கலாத்வைத நிர்வாணாந்த போததா!'

என்று ஸைவாகமத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. அதோடு அபின்னமாக அம்பாளிருப்பதாக இங்கு சொல்லப்பட்டது.

गम्भीरा

கம்பீரா (854)

அந்தம் (முடிவு) இல்லாதவள்.

1. கம்பீரமென்றால் ஆழமாயிருப்ப (அளவிடமுடியாத)தற்குப் பெயர். அதாவது அனந்தமென்று தாத்பர்யம்.

2. அல்லது, மஹாஹ்ரத (மஹத்தான மடு)' ஸ்வரூபமாயிருப்பவளென்றும் சொல்லலாம். அம்பிகை மஹாஹ்ரத ஸ்வரூபமாயிருப்பதையும், அவ்வித ஸ்வரூபத்தை அநுஸந்தானம் செய்வதினால் மந்த்ரத்தின் வீர்யம் அநுபவமாவதையும்,

'மஹாஹ்ரதா நுஸந்தாநாத் மந்த்ரவீர்யா நுபவ: |'

என்ற சிவஸூத்ரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. அந்த ஸூத்ரத்தின் அர்த்தம் பின்வருமாறு வார்த்திகத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

'மஹாஹ்ரத இதி ப்ரோக்தா சக்திர் பகவதி பரா |
அநுஸந்தாநமித்யுக்தம் தத் தாதாத்ம்ய விமர்சநம் ||
மந்த்ரவீர்யமிதி ப்ரோக்தம் பூர்ணஹந்தா விமர்சநம் |
ததியோ(அ)நுபவஸ்தஸ்ய ஸ்புரணம் ஸ்வாத்மந: ஸ்புடம் ||'

அதாவது, மஹாஹ்ரத ஸ்வரூபமாயிருக்கும் அம்பிகையோடு தாதாத்ம்யமாக இருப்பதாக அனுஸந்தானம் செய்து உபாஸித்தால், தன்னுடைய ஆத்மாவின் உண்மையான ஸ்வரூபத்தின் அனுபவம் ஏற்படுமென்று தாத்பர்யம். அம்பிகையானவள் ஸகல ஜகத்துக்களையும் தனக்குள்ளிருந்து வெளிப்படுத்துவதாலும் தேசகாலங்களுக்கு அடங்காமல் இருப்பதாலும் மஹாஹ்ரதமென்று பெயரோடிருப்பதாக,

'பரா பட்டாரிகா ஸம்வித் இச்சா சக்தி புர:ஸரம் |
ஸ்தூலப்ரமேய பர்யந்தம் வமந்தி விச்வமாந்தரம் |
ப்ரமாத்ரந்தர் பஹீ ரூபா ஹ்ருஷீக விஷயாத்மகாம் |
ப்ரவர்த்தகத்வ ஸ்வச்சத்வ கம்பீரத்வாதி தர்மத: |
மஹாஹ்ரதோ ஜகத்வ்யாபீ தேசகாலாத்யகோசர: ||'

என்று சொல்லப்பட்டிருக்கிறது.

5. ர்ம்(கம்)என்பது கணபதி பீஜம். ஆகவே அது கணபதியைக் குறிக்கும். அவருடைய பயத்தை போக்கடிப்பவள் என்பதினால் கம்பீரா என்ற பெயர் ஏற்பட்டதாகவும் சொல்லலாம்.

गगनान्तःस्था

ககநாந்தஸ்த்தா (855)

ஆகாசத்தின் மத்தியிலிருப்பவள்.

1. இந்த ஆகாச பதமானது தஹராகாசம்.(பஞ்சபூதங்களிலொன்றான)பூதாகாசம், அல்லது பராகாசம் இவற்றைக் குறிக்கும். இவ்விதம் ஆகாசத்தின் மத்தியிலிருப்பதை,

'வ்ருக்ஷ இவ ஸ்தப்தோ திவி திஷ்டத்யேக: |

என்று ச்ருதியில் சொல்லப்பட்டிருக்கிறது.

2. அல்லது, ககனத்தின் (ஆகாசத்தின்) அந்த (நாச காலத்தில்) கூட, இருப்பவளென்று சொல்லலாம்

3. ககனம் (ஆகாசம்) என்பது ஹகாரத்தைக் குறிக்கும். அந்தஸ்தத்தங்களென்றால் ய, ர, ல, வ என்றஎழுத்துக்கள். இவ்வைந்தும் பஞ்சபூதங்களுடைய பீஜாக்ஷரங்கள். (இவை பஞ்ச பூஜையின்போது சொல்லப்படுவது வழக்கம்). இவை நாமத்தால் குறிக்கப்பட்டதாகவும் சொல்லலாம்.

गर्विता

கர்விதா (856)

கர்வத்தோடிருப்பவள்.

ஜகத்தை நிர்மாணிக்கும் விஷயத்திற்குக் காரணமாயிருக்கும் பரப்ரஹ்மா ரூபமாக அம்பாளிருப்பதால் இந்த நாமம் ஏற்பட்டது. (கர்வத்தை அஹங்காரமென்று ஸாமான்யமாகச் சொல்லப்படும்.)

गानलोलुपा

கானலோலுபா (857)

கானத்தில் விசேஷமான ப்ரியத்தோடிருப்பவள்.

கானமென்பது தத, ஆநத்த, ஸுஷிர, கனமென்ற நான்கு வகைகளையும், வீணை முதலான வாத்யங்களின் கானத்தையும் கந்தர்வகானம் முதலான வாய்ப்பாட்டுகளையும், ஸாமகானத்தையும் குறிக்கும்.

कल्पनारहिता

கல்பநாரஹிதா (858)

கல்பனைகள் யாதொன்றும் இல்லாதவள்.

1. இந்த்ரியங்களுக்குச் சோசரமான ஜகத்தைப்பற்றி நம்முடைய மனதில் தோன்றும் எண்ணங்களுக்குக் கல்பனைகளென்று பெயர். அவை வாஸனாமயமானவை. அவையெல்லாம் நாமாகக் கல்பித்துக்கொள்வதினால், அம்பாளுக்கு அவ்விதமான கல்பனை யாதொன்றுமில்லை என்பதாக இந்த நாமத்தில் சொல்லப்பட்டது.

2. அல்ப கல்ப (ப்ரளயகாலத்திலும் கூட), நாரா (ஜீவன்களுக்கு), ஹிதா (ஹிதத்தைச் செய்பவள்) என்று பிரித்தும் அர்த்தம் சொல்லலாம். 'ஸம்வர்த்த: ப்ரளய: கல்ப:' என்ற கோச வசனத்தின்படி கல்பமென்றால் ப்ரளயமென்று

அர்த்தம். ஜீவன்களை ஸரியான மார்க்கத்தில் அழைத்துப் போவதால் பரமாத்மாவுக்கு நரனென்று பெயர்.

'நயதீதி நர: ப்ரோக்த: பரமாத்மா ஸநாதந: |'

ஆகவே, அவரைச் சேர்ந்தவர்களான ஜீவன்களுக்கு நாரா: என்று பெயர். ஸகல வஸ்துக்களும் நாசமடைவதான ப்ரளய காலத்திலும் ஜீவன்களை அவர்களுடைய வாஸனாரூபமாகத் தன்னுடைய உதரத்தில் வைத்துக்காப்பாற்றுவதால், அவர்களுக்கு ஹிதத்தைச் செய்பவனென்று அம்பாள் இந்த நாமத்தில் சொல்லப்பட்டாள். அப்படி ப்ரளயகாலத்திலேயே ஹிதத்தைச் செய்யும்போது ஸ்ருஷ்டி, ஸ்திதி காலங்களில் ஹிதம் செய்வதைப்பற்றி சொல்லத் தேவையில்லையென்று தாத்பர்யம்.

'மய்யநந்தே சிதம்போதெள ஆச்சர்யம் ஜீவவீசய: |
உத்யந்தி க்நந்தி கேலந்தி ப்ரவிசந்தி ஸ்வபாவத: ||'
[அஷ்டாவக்ரகீதை]

काष्ठा

காஷ்டா (859)

வேதாந்த வாக்யார்த்த தத்வங்களில் நிர்ணயிக்கப்பட்ட ஸ்வரூபமாயிருப்பவள்.

1. அதாவது, வேதாந்த வாக்யங்களில் முடிவானதாகச் சொல்லப்படும் ஸ்வரூபமாயிருப்பவள். என்று அர்த்தம்.

'ஸா காஷ்டா ஸா பராகதி: |' [ச்ருதி]
'ப்ரதிதம் அப்ரதிதம் வா ஸதஸச்ச பர: சிவ: |
இதி வேதாந்தவாக்யாநாம் சிஷ்டா காஷ்டேதி கத்யதே |'
[ஸுதஸம்ஹிதை]

2. கலா, காஷ்டா என்பவை கால நியமத்தின் பேதங்கள். அவற்றில் காஷ்டா என்பது பதினெட்டு நிமிஷம் கொண்டது. அவ்விதமான கால ரூபமாயிருப்பவளென்றும் சொல்லலாம்.

'கலா காஷ்டாதி ரூபேண பரிணம ப்ரதாயிநீ |
விச்வஸ்யோபரதெள சக்தே நாராயணி நமோஸ்து தே ||'
[தேவீமாஹாத்ம்யம்]

3. 'காஷ்டா தாருஹரித்ராயாம் காலமான ப்ரபேதயோ: |'

என்ற ரபஸகோசவசனத்தின்படி காஷ்டா என்பது ஒருவித மான மரத்தைக் குறிக்கும். அது சிவ சக்திகளோடு அபின்ன மானதென்பதாக மைராளதந்த்ரத்தில் சொல்லப்பட்டிருக்

4. பரமசிவனுடைய அஷ்டமூர்த்திகளில் ஆகாசாத்மகமான மூர்த்திக்குப் பீமனென்று பெயர். அவருடைய பத்னீ ரூபத்திற்கு காஷ்டா என்று பெயர். பத்து திக்குகளுடைய ரூபமாயிருப்பவள். இவர்களுக்கு ஸ்வர்க்கமென்ற குமாரன் இருப்பதாகச் சொல்லப்படும்.

'சராசராணும் பூதாநாம் ஸர்வேஷாம் அவகாசத: |
வ்யோமாத்மா பகவாந் தேவ: பீம இத்யுச்யதே புதை: ॥
மஹாமஹிம்நே தேவஸ்ய பீமஸ்ய பரமாத்மந: |
தசஸ்வரூபா திக்பத்நீ ஸுத: ஸ்வர்கச்ச ஸௌரிபி: |
[லிங்கபுராணம்]

'நாம்நா ஷஷ்டஸ்ய யா பீமா தநுராகாச உச்யதே |
திச: பத்ன்ய: ஸ்ம்ருதாஸ்தஸ்ய ஸ்வர்கஸ்தஸ்ய ஸுத:
ஸ்ம்ருத: ॥' [வாயுபுராணம்]

5. எல்லாவற்றையும் தாண்டி (கடந்து) இருப்பதால் காஷ்டா என்று பெயர் ஏற்பட்டதாகவும் சொல்லலாம்.

'அத்யதிஷ்டத் தசாங்குலம் |' [ச்ருதி]
'விஷ்டப்யாஹமிதம் க்ருத்ஸ்நம் ஏகாம்சேந ஸ்திதோ ஜகத் ॥'
[கீதை]

अकान्ता
அகாந்தா (860)

பாபத்தைப் போக்குகிறவள்.

'அகம் பாபே ச து; கே ச' என்ற கோசவ்சனத்தின்படி அகமென்பது பாபம், துக்கம் இவற்றைக் குறிக்குமாகையால் அவைகளை நாசம் செய்பவள் அகாந்தா.

कान्तार्धविग्रहा
காந்தார்த்த விக்ரஹா (861)

தன் புருஷனுடைய சரீரத்தின் பாதியான ரூபத்தையுடையவள்.

1. இதனால் பரமசிவனுடைய அர்த்தநாரீச்வரரூபமானது சொல்லப்பட்டது.

2. பரமசிவனுடைய ரூபத்தில் பாதியாக அம்பாளிருப்பதாக இந்த நாமத்திற்கு அர்த்தம் சொல்வதுடன் அம்பாளே தன் காந்தனை (பரமசிவனை) தன் சரீரத்தின் பாதியாக உடைத்தாயிருக்கிறாளென்பதாகவும் அர்த்தம் சொல்லலாம். அதாவது, பரமசிவனை ப்ரதானமாகச் சொல்லி அவர் சரீரத்தின் பாதியாக அம்பாளிருக்கிறாளென்றும், அம்பாளை ப்ரதான

மாகச்சொல்லி அவள்சரீரத்தின் பாதியாக பரமசிவன் இருக்கிறானென்றபடி, இரண்டு விதமாகவும் இந்த நாமத்திற்கு அர்த்தம் சொல்லலாம்.

3. க என்ற அக்ஷரத்தின் மூடிவிலிருப்பது காந்தம்— அதாவது ஈ என்ற அக்ஷரம். இது ஸ்வர்கத்தைக் குறிக்கும். அர்த்தமென்றால் பாகத்தைக் குறிக்கும். ஆகவே ஸ்வர்க்கத்தைத் தன் சரீரத்தின் ஒரு பாகமாக உடையவள் என்றும் இந்த நாமத்திற்கு அர்த்தம் சொல்லலாம்.

'பாதோऽஸ்ய ஸர்வா பூதானி த்ரிபாதஸ்யாம்ருதம் திவி |'
[ச்ருதி]

कार्यकारणनिर्मुक्ता

கார்ய காரண நிர்முக்தா (862)

காரியம், காரணம் இவைகளிலிருந்து விடுவிக்கப்பட்டவள்.

1. கேவல சைதன்ய ஸ்வரூபமான பரப்ரம்ஹத்துக்கு செய்யவேண்டியதானது யாதொன்றும் கிடையாதென்று சொல்லப்படும்.

'ந மே பார்த்தாஸ்தி கர்த்தவ்யம் த்ரிஷு லோகேஷு கிஞ்சன'
[கீதை]

2. காரணமென்பது மூலப்ரக்ருதியையும், கார்யமென்பது மஹத் முதலான தத்வங்களையும் குறிக்கும். இவை யிரண்டிற்கும் காரணமான பரப்ரம்ஹஸ்வரூபிணியாக அம்பாளிருப்பதாலும், அம்பாளிடத்தில் அவை பரமார்த்தத்தில் இல்லாததாலும் இந்தப்பெயர்வந்தபட்டதென்றுசொல்லலாம்.

'ந தஸ்ய கார்யம் கரணம் ச வித்யதே |' **[ச்ருதி]**

कामकेलितरङ्गिता

காமகேளி தரங்கிதா (863)

ச்ருங்கார கேளிகளை மேலுக்குமேல் உடையவள்.

1. லலிதாம்பிகை ச்ருங்கார ரஸப்ரதாயினியென்பதாக ஏற்கனவே சொல்லப்பட்டிருக்கிறது. அம்பாளுடைய காம கேளிகள் தரங்கங்கள்(அலைகள்)போல் அடுத்தடுத்து ஏற்பட்டுக்கொண்டிருப்பதாக இந்த நாமத்தில் சொல்லப்பட்டது.

2. காமகேளி என்றால் காமேச்வரருடைய கேளிகள் என்றும் சொல்லலாம். காமேச்வரருடைய ச்ருங்கார, க்ரீடா

விலாஸங்கள் அம்பாளிடத்தில் (அலைகள்போல்) அடுத்தடுத்து ஏற்பட்டுவருவதாக இந்த நாமத்தில் சொல்லப்பட்டிருப்பதாகவும் சொல்லலாம்.

कनत्कनकताटङ्का

கநத் கநக தாடங்கா (864)

ப்ரகாசத்தோடு கூடிய லோவர்ண தாடங்கங்களையுடையவள்.

लीलाविग्रहधारिणी

லீலா விக்ரஹ தாரிணீ (865)

லீலையாக சரீரங்களைத் தரிப்பவள்.

1. அம்பாள் அவதரிக்கும்போது ரூபங்களையெடுப்பதானது லீலையாக - அதாவது அனாயாஸமாக - எடுக்கப்படுகிறதென்பது தாத்பர்யம்.

2. அல்லது, தன் விளையாட்டுக்காக (விநோதத்திற்காக) ரூபங்களையெடுப்பவள் என்றும் அர்த்தம் சொல்லலாம்.

3, அல்லது லீலையென்ற பெயருடைய பதிவ்ரதாரூபமாக இருப்பவளென்றும் சொல்லலாம். இவள் பத்மராஜன் என்பவனுடைய மஹிஷியென்றும், மஹாபதிவ்ரதையென்றும் இவளைப்பற்றிய வ்ருத்தாந்தமும் யோகவாஸிஷ்டத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

अजा

அஜா (866)

ஜன்மமில்லாதவள்.

1. அதாவது, பிறப்பில்லாதவள் என்று அர்த்தம். ஹேதமாதிரி ச்ருதியில்,

'अजामेकां लोहितकृष्ण शुक्लाम् |'

என்றும்,

'न जातो न जनिष्यते |'

என்றும், கைதையில்,

'नहि जातो न जायेऽहम् न जनिष्ये कदाचन |
क्षेत्रज्ञः सर्वभूतानाम् तस्मात्: अहम् अज स्सम्मृतः ||

என்றும் சொல்லப்பட்டது.

2. பிறப்பிருந்தால் மரணம் நிச்சயமாக உண்டு என்பதாக,

'ஜாதஸ்ய ஹி த்ருவோ ம்ருத்யு: த்ருவம் ஜன்ம ம்ருதஸ்ய ச |' என்று சொல்லப்படுவதால் ஜன்மமே இல்லாதபோது மரணமும் இல்லையென்பதாக எற்படுகிறது. இதையேதான் அடுத்த நாமத்தில் சொல்லப்படுகிறது.

யவிநிர்முக்தா (867)

மரணமில்லாதவள்.

சுத்தமென்றால் க்ருஹத்திற்குப் பெயர். அதிலிருக்கும் போதே தன் உபாஸகர்கள் விசேஷமாக முக்தியை அடையும்படி அம்பாள் செய்வதால் இந்தப் பெயர் ஏற்பட்டதாகவும் சொல்லலாம். ஸாதாரணமான மூமுக்ஷுக்கள் விஷயங்களிலிருந்து பயந்தவர்களாய் க்ருஹங்களை விட்டு ஓடிவிடுகிறார்கள். அப்பிகையின் உபாஸகர்களோ க்ருஹங்களிருந்துகொண்டே முக்தியை அடைகிறார்களென்று தாத்பர்யம். இதையேதான் பாஸ்கரராயர் தன்னுடைய 'சிவஸ்துதி'யில்,

'யதி பரமிச்சஸி தாம த்யஜ மா நாம ஸ்வகம் தாம |
பரபத நியமந தாம ஸ்மர ஹ்ருதி காமத்விஷோ காம ||'

என்றும், தர்வாஸ மஹரிஷி 'மஹிம்நஸ்தவ'த்தில்,

'கேஹம் நாகதி கர்வித: ப்ரணததி ஸ்த்ரீ ஸங்கமோ மோகஜி |'

என்றும் சொல்லியிருக்கிறார்கள்.

மூடா

முக்தா (868)

விசேஷமான ஸௌந்தர்யத்தோடு கூடியவள்.

'முக்த: ஸுந்தர மூடயோ:' என்ற கோசலசனத்தின்படி முக்தனென்றால் மூடனையும் குறிக்கும். இந்த நாமத்தை முந்திய நாமத்திலிருந்து 'அமுக்தா' என்று பிரித்து முக்தர்களான (மூடர்களான) உபாஸகர்களில்லாதவள் என்றும் அர்த்தம் சொல்லலாம்.

அப்ரமேயா

அப்ர ப்ரஸாதி நீ (869)

சீக்கிரத்தில் அனுக்ரஹம் செய்பவள்.

1. அதாவது, பக்தர்களுடைய உபாஸனையிலல் அம்பிகைக்கு ஸ்வல்ப காலத்திற்குள்ளேயே ஸந்தோஷம் ஏற்பட்டு அனுக்ரஹம் செய்கிறாள் என்று தாத்பர்யம். இதேமாதிரி பரமசிவனைப்பற்றி,

'க்ரமேண லப்யதேऽந்யேஷாம் முக்திராராதநாத் த்விஜா: |
ஆராதநாத் உமேசஸ்ய தஸ்மிந் ஜந்மநி முச்யதே ||

என்று ஸௌரபுராணத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

2. இவ்விதம் ஒரு ஜன்மத்திலேயே முக்தி கிடைத்து விடுவதாகச் சொல்வதானது மிகவும் தீவ்ரமான பக்தியோடு கூடிய உபாஸகச்ரேஷ்டர்களைப்பற்றிச் சொல்லப்பட்டது. ஸாமான்யமான பக்தியுடையவர்கள் மறுஜன்மம் அல்லது நான்காவது ஜன்மத்தில் முக்தியையடைவார்களென்பதாகச் சொல்லப்படுகிறது.

'அல்ப பாவேऽபி யோ மர்த்ய: ஸோऽபி ஜன்ம த்ரயாத் பரம் |
ந யோநி யந்த்ர பீடாயை பவிஷ்யதி ந ஸம்சய: ||

'அந்யதா ஸம்ப்ரதாயோ ஜபஹோமார்ச்சநாதிகம் |
க்ருதம் ஜந்மாந்தரே ஸம்யக் ஸம்ப்ரதாயாய கல்பதே ||'

[தந்த்ர ராஜம்]

अन्तर्मुखसमाराध्या

அந்தர்முக ஸமாராத்யா (870)

அந்தர்முகமாக இருப்பவர்களால் நன்றாய் ஆராதிக்கப்படக் கூடியவள்.

बहिर्मुखसुदुर्लभा

பஹிர்முக ஸுதுர்லபா (871)

பஹிர்முகமாக இருப்பவர்கள் ஆராதித்தாலும் மிகவும் கிடைப்பதற்கு அரிதாயிருப்பவள்.

அந்தர்முகமென்றால் (ஆத்மாவைக் குறித்து) உள்நோக்கிய சித்த வ்ருத்தி. பஹிர்முகமென்றால் (விஷயங்களைக் குறித்து) வெளிநோக்கிய சித்த வ்ருத்தி. அந்தர்முகமான சித்த வ்ருத்தியோடிருப்பவர்களால் அடைபிகை எளிதாகக் கூடியவளென்றும், பஹிர்முகமான சித்த வ்ருத்தியையுடையவர்கள் அடைபிகையை எளிதில் உபாஸிக்கக்கூடியாளும், இந்த இரண்டு நாமங்களில் சொல்லப்பட்டது.

2. பிறப்பிருந்தால் மரணம் நிச்சயமாக உண்டு என்பதாக,

'ஜாதஸ்ய ஹி த்ருவோ ம்ருத்யு: த்ருவம் ஜன்ம ம்ருதஸ்ய ச |'

என்று சொல்லப்படுவதால் ஜன்மமே இல்லாதபோது மரணமும் இல்லையென்பதாக எற்படுகிறது. இதையேதான் அடுத்த நாமத்தில் சொல்லப்படுகிறது.

ர்முக்தா (867)

மரணமில்லாதவள்.

முக்தியென்றால் க்ருஹத்திற்குப் பெயர். அதிலிருக்கும் போதே தன் உபாஸகர்கள் விசேஷமாக முக்தியை அடையும்படி அம்பாள் செய்வதால் இந்தப் பெயர் ஏற்பட்டதாகவும் சொல்லலாம். ஸாதாரணமான முமுக்ஷுக்கள் விஷயங்களிலிருந்து பயந்தவர்களாய் க்ருஹங்களை விட்டு ஓடிவிடுகிறார்கள். அம்பிகையின் உபாஸகர்களோ க்ருஹங்களிலிருந்துகொண்டே முக்தியை அடைகிறார்களென்று தாத்பர்யம். இதையேதான் பாஸ்கரராயர் தன்னுடைய 'சிவஸ்துதி'யில்,

'யதி பரமிச்சஸி தாம த்யஜ மா நாம ஸ்வகம் தாம |
பரபத நியமந தாம ஸ்மர ஹ்ருதி காமத்விஷோ நாம ||'

என்றும், துர்வாஸ தேசிகேந்த்ரர் 'தேவீ மஹிம்நஸ்துவ'த்தில்,

'கேஹம் காகதி கர்ஹித: ப்ரணததி ஸ்த்ரீ ஸங்கமோ மோகதி |'

என்றும் சொல்லியிருக்கிறார்கள்.

முக்தா (868)

விசேஷமான ஸௌந்தர்யத்தோடு கூடியவள்.

'முக்த: ஸுந்தர மூடயோ:' என்ற கோசலசனத்தின்படி முக்தனென்றால் மூடனையும் குறிக்கும். இந்த நாமத்தை முந்திய நாமத்திலிருந்து 'அமுக்தா' என்று பிரித்து முக்தர்களான (மூடர்களான) உபாஸகர்களில்லாதவள் என்றும் அர்த்தம் சொல்லலாம்.

ப்ரஸாதினி (869)

ப்ர ப்ரஸாதி நீ

சீக்கிரத்தில் அனுக்ரஹம் செய்பவள்.

1. அதாவது, பக்தர்களுடைய உபாஸனையினல் அம்பிகைக்கு ஸ்வல்ப காலத்திற்குள்ளேயே ஸந்தோஷம் ஏற்பட்டு அனுக்ரஹம் செய்கிறுள் என்று தாத்பர்யம். இதேமாதிரி பரமசிவனைப்பற்றி,

'க்ரமேண லப்யதேऽத்யேஷாம் முக்திராராதநாத் த்விஜா: |
ஆராதநாத் உமேசஸ்ய தஸ்மிந் ஜந்மநி முச்யதே ||

என்று ஸௌரபுராணத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

2. இவ்விதம் ஒரு ஜன்மத்திலேயே முக்தி கிடைத்து விடுவதாகச் சொல்வதானது மிகவும் தீவ்ரமான பக்தியோடு கூடிய உபாஸகச்ரேஷ்டர்களைப்பற்றிச் சொல்லப்பட்டது. ஸாமான்யமான பக்தியுடையவர்கள் மறுஜன்மம் அல்லது நான்காவது ஜன்மத்தில் முக்தியையடைவார்களென்பதாகச் சொல்லப்படுகிறது.

'அல்ப பாவேऽபி யோ மர்த்ய: ஸோऽபி ஜன்ம த்ரயாத் பரம்|
ந யோநி யந்த்ர பீடாயை பவிஷ்யதி ந ஸம்சய: ||'

[சிவபுராணம்]

'அந்யதா ஸம்ப்ரதாயேந ஜபே ஹோமார்ச்சநாதிகம் |
க்ருதம் ஜந்மாந்தரே ஸம்யக் ஸம்ப்ரதாயாய கல்பதே ||'

[தந்த்ரராஜம்]

अन्तर्मुखसमाराध्या

அந்தர்முக ஸமாராத்யா (870)

அந்தர்முகமாக இருப்பவர்களால் நன்றுய் ஆராதிக்கப்படக் கூடியவள்.

बहिर्मुखसुदुर्लभा

பஹிர்முக ஸுதுர்லபா (871)

பஹிர்முகமாக இருப்பவர்கள் ஆராதித்தாலும் மிகவும் கிடைப்பதற்கு அரிதாயிருப்பவள்.

அந்தர்முகமென்றால் (ஆத்மாவைக் குறித்து) உள்நோக்கிய சித்த வ்ருத்தி. பஹிர்முகமென்றால் (விஷயங்களைக் குறித்து) வெளிநோக்கிய சித்த வ்ருத்தி. அந்தர்முகமான சித்த வ்ருத்தியோடிருப்பவர்களால் அம்பிகை எளிதில் ஆராதிக்கக் கூடியவளென்றும், பஹிர்முகமான சித்த வ்ருத்தியையுடையவர்கள் அம்பிகையை எளிதில் உபாஸிக்கக்முடியாதென்றும், இந்த இரண்டு நாமங்களில் சொல்லப்பட்டது.

ஸம்மா ஸ்ரீ மதாசார்யாளும் 'தாளகாணநாம் அனாலபா' என்பதாக 'னைளந் ---ரி'யில் சொல்லியிருக்கிறார்கள்.

த்ரயீ
பீ (872)

(ருக், யஜுஸ், ஸாமமென்ற) மூன்று வேதங்களின் ரூபமாயிருப்பவள்.

1. ஸாதாரணமாக, அதர்வணவேதத்தைக் கணக்கில் சேர்க்காமல் மேலே சொல்லிய மூன்றை மட்டும் சேர்த்து வேதங்களை 'த்ரயீ' என்று சொல்வது வழக்கம்.

'ஸ்த்ரியாம் ருக் ஸாம யஜுஷீ இதி வேதாஸ்த்ரயஸ் த்ரயீ |'

என்பது கோச வசனம். இவை மூன்றும் அம்பிகையின் ரூபங்களாக சொல்லப்பட்டன.

'மமைவாங்யா பராசக்திः வேதஸம்ஜ்ஞா புராதநீ |
ருக் யஜுஸ் ஸாமரூபேண ஸர்காதௌ ஸம்ப்ரவர்த்ததே ||'

என்று அம்பாள் ஹிமவானுக்குச் சொன்னதாக கூர்மபுராண வசனமிருக்கிறது.

'ஆங்வீக்ஷிகீ த்ரயீ தேவி தண்டநீதிச்ச கத்யஸே |'
[பத்மபுராணம்]

'ருக் யஜுஸ் ஸாமபாகேந ஸாங்கவேத கதாயதः |
த்ரயீதி பட்யதே லோகே த்ருஷ்டாத்ருஷ்ட ப்ரஸாதிநீ ||'
[தேவீபுராணம்]

2. ருக்வேதமானது 'அக்நிமீடே' என்றபடி அகாரத்தோடு ஆரம்பிக்கிறது. ஸாமவேதமும் அதோமாதிரி 'அக்ந ஆயாஹி' என்றபடி அகாரத்தில் ஆரம்பிக்கிறது. யஜுர்வேதமானது 'இஷே த்வோர்ஜே த்வா' என்றபடி இகாரத்தோடு ஆரம்பிக்கிறது. ஆக, இந்த ஆரம்பாக்ஷரங்களான அ, இ, அ என்பவற்றைக் கீழே சொல்லப்பட்டபடி சேர்த்தால் (சுசி யென்ற பெயருடைய) வாக்பவபீஜமானது ஏற்படுகிறதென்றும், அதற்கு த்ரயீ வித்யையென்று பெயரென்றும்,

'அகாராதிः ஸாமவேதோ ருக்வேதச்ச ததாதிகः |
யஜுர்வேத இகாராதிः தேஷாம் ஸம்யோகதः சுசிः |
தங்விஷ்பத்திம் ச்ருணு ப்ராஜ்ஞே ப்ரோக்தாம் பூர்வாதரக்ர
விலிக்ய யோஜயேத் பூர்வம் சப்தசாஸ்த்ரா நுஸாரதः || [மாத் 1
குணஸந்த்யா ருக்யஜுஷம் ததஸ்தேநாபரம் ததா |
வ்ருத்திஸந்த்யாம் ஸமாயும்ஜ்யாத் இத்யுத்பந்நம் சுசேர் வபுः 1
தேந த்ரயீமயீ வித்யா கார்யகாரண யோகதः ||'

என்று தேவீ புராணத்தில் சொல்லியிருக்கிறது.

ஆகவே த்ரயீ என்பதானது வாக்பவ பீஜத்தைக் குறிப்பதென்றும், அந்தரூபமாக அம்பாளிருப்பதாக இங்கு சொல்லப்பட்டதாகவும் சொல்லலாம்.

3. வேதங்களைக் கணக்கிடுவதில் அதர்வண வேதத்தைச் சேர்த்து நான்குஎன்பதாகச் சொல்லவேண்டுமென்றும், த்ரயீ என்ற பதமானது வேதங்கள் மூன்று என்பதாகச் சொல்லாமல், எல்லா வேதங்களிலுமுள்ள கர்ம, உபாஸநா, ஞான காண்டங்களென்ற மூன்றைத்தான் குறிக்கிறதென்றும், இன்னொருவித அபிப்ராயமுண்டு. இதைப்பற்றி சாரதா திலகத்தின் வ்யாக்யானம் முதலியவற்றில் பார்க்கவும்.

त्रिवर्गनिलया

த்ரிவர்க்க நிலயா (873)

த்ரிவர்க்கத்தை வாஸஸ்தானமாக உடையவள்.

'த்ரிவர்க்கோ தர்ம காமார்த்தை:' என்ற கோசவசனத்தின் படி தர்ம, அர்த்த, காமங்களை த்ரிவர்கமென்றும், அவற்றுடன் மோக்ஷத்தைச் சேர்த்து சதுர்வர்கமென்றும் சொல்லப்படும்.

त्रिस्था

த்ரிஸ்தா (874)

மூன்று காலத்திலுமிருப்பவள்.

1. அதாவது, பூத, வர்த்தமான, பவிஷ்யத் என்ற மூன்று காலங்களிலும் இருப்பவள் என்று அர்த்தம்.

2. அல்லது, ப்ரணவத்தின் பாகங்களான அகார, உகார, மகாரங்களிலும், அல்லது, மூன்று லோகங்களிலும், அதேதாகவே இருப்பதாகவும் சொல்லலாம். தவிர, லோகத்திலுள்ள மூர்மூன்றாகச் சொல்லப்படும் த்ரிபுடிகள், எல்லாவற்றிலும் அந்தாளிருப்பதாக இந்த நாமத்தில் சொல்லப்பட்டதாகவும் சொல்லலாம்.

'த்ரயோ லோகாஸ் த்ரயோ தேவாஸ் த்ரைவித்யம் பாவகத்ரயம் l
த்ரீணி ஜ்யோதிம்ஷி வர்க்காச்ச த்ரயோ தர்மாதயஸ் ததா ll
த்ரயோ குணாஸ் த்ரய: சப்தா: த்ரயோ தோஷாஸ் ததாச்ரமா:l
த்ரய: காலாஸ் ததாவஸ்த்தா: பிதரோZஹர்நிசாதய: |
மாத்ரா த்ரயம் ச தே ரூபம் த்ரிஸ்த்தே தேவி ஸரஸ்வதி ll'

[மார்க்கண்டேய புராணம்]

त्रिपुरमालिनी
த்ரிபுரமாலிநீ (875)

த்ரிபுரமாலிநீ தேவியின் ரூபமாயிருப்பவள்.

ஸ்ரீ சக்ரத்திலுள்ள அந்தர் தசாரசக்ரத்தின் அபிமானினியான தேவதைக்கு த்ரிபுரமாலிநீ என்ற பெயர்.

निरामया
நிராமயா

ரோகமே இல்லாதவள்.

निरालम्बा
நிராலம்பா (877)

ஆலம்பம் யாதொன்றும் மில்லாதவள்.

ஆலம்பமென்றால் பிடிப்பு என்ற அர்த்தம். லோகத்திலுள்ள ஸகலமும் அம்பிகையால் நிலைப்பெற்றிருப்பதால் அவற்றிற்கெல்லாம் அவள் ஆலம்பனமாயிருக்கிறாள். அப்படி ஸர்வாலம்பனமாயிருப்பவளுக்குத் திரும்பவும் ஆலம்பனம் இருக்கமுடியாதாகையால் இந்தப்பெயர் ஏற்பட்டது.

स्वात्मारामा
ஸ்வாத்மாராமா (878)

தன்னுடைய ஆத்மாவினிடத்திலே க்ரீடித்துக்கொண்டிருப்பவள்.

1. அதாவது தன்னுடைய ஆத்மஸ்வரூபத்தில் ஆனந்தத்தோடு இருப்பவள் என்று சொல்லப்பட்டது.

2. அல்லது, தன்னுடைய ஆத்மாவை இரண்டாகப் பிரித்து அன்யோன்யமாக க்ரீடித்துக்கொண்டிருப்பவளென்றும் சொல்லலாம். ஆதியில் ஒன்றாக இருந்த பரப்ரஹ்மமானது தான் தனியாக இருப்பதிலில் ஸந்தோஷமடையாமலிருக்கவே ஸ்த்ரீபுமான்களாகப் பிரிந்து க்ரீடித்துக்கொண்டு ஸந்தோஷமடைந்ததாக ச்ருதியில் சொல்லப்பட்டிருக்கிறது.

'ஸ வை ந ரேமே, தஸ்மாத் ஏகாகீ ந ரமதே ஸ த்விதீயம் ஐச்சத், ஸ ஹ்யேதாவாந் ஆஸ யதா ஸ்த்ரீ புமாம்ஸௌ ஸம்பரிஷ்வக்தௌ ஸ இமமேவாத்மாநம் த்வேதா பாதயத் தத: பதிச்ச பத்நீ ச அபவதாம் |'

3. ஜகத்தானது ஸ்ருஷ்டிகாலத்தில் அம்பிகையின் மனதிலிருந்து உண்டாகி, ஸம்ஹாரகாலத்தில் அந்த மனதிலேயே ஒடுங்கி விடுவதாகச் சொல்லப்படும். அவ்விதமான ஜகத்தானது அம்பிகையின் விசித்ரமான க்ரீடோத்யானமாயிருப்பதாலும், அது (மேலே சொல்லியபடி) அம்பிகையின் மனதிலிருப்பதாலும், அந்த (தன்) மனதையே க்ரீடோத்யானமாக (ஆராமமாக) உடையவளென்றும், இந்த நாமத்திற்கு அர்த்தம் சொல்லலாம்.

'ஏகஸ்து ப்ரபுசக்த்யா வை பஹூதா பவதீச்வர: |
பூத்வா யஸ்மாச்ச பஹூதா பவத்யேக: புநஸ்து ஸ: 11'
[வாயுபுராணம்]

4. ஸ்வ—தன்னுடையதான ஜகத்தென்ன, ஆத்மா—ப்ரம்ஹமென்ன, இவற்றுடன், ஆராம—க்ரீடனம், விளையாடுதல் என்பதை உடையவள் ஸ்வாத்மாராமா. அதாவது, இரண்டிலுமிருப்பவள் என்பது தாத்பர்யம்.

'த்வம் அக்ஷரம் பரம் தேவி யச்ச ஸர்வம் ப்ரதிஷ்டிதம் |
அக்ஷரம் ப்ரம்ஹ பரமம் ஜகச்சைதத் க்ஷராத்மகம் 11
தாருண்யவஸ்த்திதோ வஹ்நி: பௌமாச்ச பரமாணவ: |
ததா த்வயி ஸ்த்திதம் ப்ரம்ஹ ஜகச்சேதம் அசேஷத: 11'
[மார்க்கண்டேய புராணம்]

ஸுதாஸ்ருதி: (879)

அம்ருத தாரா ஸ்வரூபமாயிருப்பவள்.

1. ஸஹஸ்ராரத்தின் கர்ணிகையில் சந்த்ரமண்டலமிருப்பதாகவும், அது அம்ருதமயமானதென்றும் சொல்லப்படும். குண்டலினீ சக்தியானவள் ஷட்சக்ரபேதனம் செய்து ஸஹஸ்ராரத்திற்கு வந்தபிறகு அங்கிருக்கும் சந்த்ரமண்டலத்திலிருந்து அம்ருதம் பெருகச்செய்வதைப்பற்றி ஏற்கனவே வந்த 'ஸுதாதாராபிவர்ஷிணீ' என்ற 106-வது நாமத்திலும், அதற்கு முன்பும் பின்புமுள்ள நாமங்களிலும் சொல்லப்பட்டிருக்கிறது. ஸ்ரீமத் ஆசார்யாளும் 'ஸௌந்தர்யலஹரி'யில் 'ஸஹஸ்ரம் மூலாதாரே', 'ஸுதாதாராஸாரை:, என்று 9, 10 ச்லோகங்களில் இதைப்பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். அவ்விதமான அம்ருதப்ரவாஹரூபமாக இருப்பதாகவும் சொல்லலாம்.

2. இவ்விதமான அம்ருதப்ரவாஹமானது டா முதலானவர்களுடைய மண்டலங்களை வ்யாபித்து வருவதில் அம்மாதிரி ஸ்ரவிப்பதே அம்பிகையின் ரூபமாக இங்கு சொல்லப்பட்டது.

3. சந்த்ரமண்டலத்தின் அம்ருத வர்ஷங்களிலிருந்து அக்னி, ஸூர்யன் முதலான தேவர்களுக்கு த்ருப்தி ஏற்படுவ தாகச் சொல்லப்படும். அவ்விதமான அம்ருதவர்ஷ ரூபமா யிருப்பவளென்றும் சொல்லலாம்.

'தசபி: பஞ்சபிச்சைவ ஸ்ருதாம்ருத பரிஸ்ரவை: |
க்ருஷ்ணபக்ஷே ஸதா பீத்வா ஜாயந்தே பிதரா:ஸ்ரா: |
தத் ஸர்வம் சாம்பவீ மாயா.....ll' (வாயுபுராணம்)

4. ஜ்வர, விஷஹர ப்ரயோகங்களில் அம்பிகையான வள் அம்ருதவர்ஷிணியாக த்யானிக்கப்படுவது வழக்கம். இதைப்பற்றி ஸௌந்தர்யலஹரியில்,

'ஸ்ரவத் பீயூஷதாராபி: வர்ஷந்தீம் விஷஹாரிணீம் |'

என்பது முதலான இடங்களிலும், ஸ்ரீ மதாசார்யாளுடைய 'ஸௌந்தர்ய லஹரி'யில் 'கிரந்தீம் அங்கேகப்ய:' என்ற 20-வது ச்லோகத்திலும் சொல்லப்பட்டிருக்கிறது. அவ்விதமான ரூபமானது இங்கு சொல்லப்பட்டதாகவும் சொல்லலாம்.

संसारपङ्कनिर्मग्नसमुद्धरणपण्डिता (880)

ஸம்ஸார பங்க நிர்மக்ந ஸமுத்தரண பண்டிதா

ஸம்ஸாரமாகிற சேற்றில் முழுகியவர்களைத்தூக்கி (கரை யேற்றி) விடுவதில் ஸாமர்த்திய முடையவள்.

இதனால் தான் "அம்பிகையே சரண"மென்பதாக ஒரு ஸாதனமாவது நினைப்பவர்கள் எல்லையற்றதும், ஆழம் கண்டு பிடிக்க முடியாததுமான ஸம்ஸார ஸாகரத்திற்குள்ளாவதில்லை யென்பதாகச் சொல்லியிருக்கிறது.

'யே மாகதி சர்வாணீம் ஸ்மரந்தி சரணார்த்தின: |
தஸ்தராபார ஸம்ஸார ஸாகரே ந பதந்தி தே ll'
[கூர்ம புராணம்]

यज्ञप्रिया
யஜ்ஞப்ரியா (881)

யஜ்ஞங்களை ப்ரியமாக உடையவள்.

1. அதாவது, யஜ்ஞங்களால் அம்பிகையின் ப்ரியமேற் படுமென்று தாத்பர்யம்.

2. அல்லது, 'யஜ்ஞோ வை விஷ்ணு:' என்ற ச்ருதிவாக் யத்தின்படி யஜ்ஞமென்ற பதமானது விஷ்ணுவையும் குறிக்கு மாகையால் விஷ்ணுவுக்கு ப்ரிய'மானவள் என்றும் இந்நாமத் திற்கு அர்த்தம் சொல்லலாம்.

यज्ञकर्त्री

யஜ்ஞகர்த்ரீ (882)

யஜ்ஞ கர்த்தாவின் பத்னீ ரூபமாக இருப்பவள்.

ஜன காதகதாவாகத் தீக்ஷிதனாய்ருப்பவனுக்கு யஜ மானனென்று பெயர். அவனைப் பரமசிவ ஸ்வரூபனென்று சொல்லப்படும். அவ்விதம் யஜமான ஸ்வரூபியான பரமசிவ னுடைய பத்னிக்கு தீக்ஷா என்றும், அவன் புத்ரனுக்கு ஸந் தானனென்றும் பெயரென்பதாகச் சொல்லப்படும். அந்த தீக்ஷாரூபமாக இருப்பவளென்று இங்கு சொல்லப்பட்டது.

'யஜமானாத்மகோ தேவோ மஹாதேவோ புதை: ப்ரபு: |
உக்ர இத்யுச்யதே ஸத்பி: ஈசானச்சேதி சாபரை: ॥
உக்ராஹ்வயஸ்ய தேவஸ்ய யஜமானாத்மந: ப்ரபோ: |
தீக்ஷா பத்நீ புதைருக்தா ஸந்தானாக்யஸ் ததாத்மஜ: ॥'

[லிங்க புராணம்]

'உக்ரா தநு: ஸப்தமீ யா தீக்ஷிதை: ப்ராம்ஹணை: ஸஹ |
தீக்ஷா பத்நீ ஸ்ம்ருதா தஸ்ய ஸந்தாந: புத்ர உச்யதே ॥'

[வாயு புராணம்]

यजमानस्वरूपिणी

யஜமான ஸ்வரூபிணீ (883)

யஜமானனுடைய ஸ்வரூபமாயிருப்பவள்.

1. பரமசிவனுடைய அஷ்ட மூர்த்திகளில் கடைசியான மூர்த்திக்கு யஜமானமூர்த்தியென்று பெயர். அதற்கே சிலர் ஆத்மா என்றும் பெயர் சொல்வார்கள்.

'பஞ்ச பூதாநி சந்த்ரார்க்கௌ ஆத்மேதி முநிபுங்கவா: |
மூர்த்தயஷ்டௌ சிவஸ்யாஹு: தேவதேவஸ்ய தீமத: |
ஆத்மா தஸ்யாஷ்டமீ மூர்த்தி: யஜமாநாஹ்வயா பரா ॥'

[லிங்க புராணம்]

அந்த இரண்டு பெயர்களையும் இந்த நாமத்தில் சொல்லி அந்தப் பெயர்களையுடைய மூர்த்தியின் ரூபமாக அம்பாளிருப்பது சொல்லப்பட்டது. யஜமான, ஸ்வ (= ஆத்மா) என்ற ரூபங்களையுடையவள், யஜமானஸ்வரூபிணீ.

2. அம்பிகையை 881-வது நாமத்தில் யஜ்ஞத்தில் ப்ரிய மூள்ளவளென்றும், 883-வது நாமத்தில் யஜ்ஞ கர்த்தாவான யஜமானனின் ஸ்வரூபமானவளென்றும் 882-வது நாமத்தில் அவ்விதமான யஜமானனுடைய பத்னீ ரூபமானவளென்றும் சொல்லப்பட்டதுடன், ஏற்கனவே வந்த 769-வது நாமத்தில் யஜ்ஞத்தின் ரூபமாகவே இருப்பவளென்றும் சொல்லப்பட்டது கவனிக்கத்தக்கது.

3. பரமசிவனுடைய அஷ்ட மூர்த்திகள்-பஞ்ச பூதங்கள், சந்த்ரன், ஸூர்யன், யஜமானன் (அல்லது ஆத்மா) என்பனவை. இதைப்பற்றி ஏற்கனவேவந்த 'அஷ்டமூர்த்தி:' என்ற 662-வது நாமத்தில் பார்க்கவும். இந்த அஷ்டமூர்த்திகளின் சக்தி ரூபமாக அம்பாளிருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

'புவி பயஸி க்ருசாநௌ மாருதே கே சசாங்கே
ஸவிதரி யஜமாநேऽப்யஷ்டதா சக்திரேகா |
வஹதி குசபராப்யாம் யாऽவநம்ராபி விச்வம்
ஸகலஜநநி ஸா த்வம் பாஹி மாமத்ய வச்யம் ||'
[ஸகல ஜனனீஸ்தவம்]

धर्माधारा
தர்மாதாரா (884)

தர்மத்திற்கு ஆதாரமாயிருப்பவள்.

1. அந்தந்த தேசங்களில் சிஷ்டர்களின் பரம்பரையாக வந்தவைகளும், வேதத்திற்கு விருத்தமாயில்லாதவைகளுமான ஆசாரங்களுக்குத் தர்மங்களென்று பெயர்.

'தேசே தேசே ய ஆசார: பாரம்பர்யக்ரமாகத: |
ஆம்நாயைர விருத்தச்ச ஸ தர்ம: பரிகீர்த்தித: ||'
[ஸம்வர்த்த ஸ்ம்ருதி]

2. அவ்விதமான தர்மங்களின், (ஆ=) காலாடக்கத்திலும் (அதாவது, ஸகல தேசங்களிலும்) பெருகியிருக்கும் தாரா (தடங்கலில்லாத) ப்ரவாஹ ரூபமாயிருப்பவள் - தர்ம தாரா என்றும் சொல்லலாம்.

3. அல்லது, தர்மத்தை ஆதாரமாகவுடையவள் என்றும் சொல்லலாம். இதையேதான் தர்மத்தில் நிலையாயிருப்பவள்

என்றும் சொல்வது. ஸகலமும் தர்மத்திலல் நிலையோடிருப்பதாக 'தர்மே ஸர்வம் ப்ரதிஷ்டிதம்' என்று ச்ருதியில் சொல்லப்பட்டது

4. அல்லது, தர்மத்தை எவற்றிற்கும் ஆதாரமாகச் செய்பவள் என்றும் சொல்லலாம். அதாவது, தர்மத்திற்கு ஸர்வாதாரத்வமானது அம்பிகையின் மூலமாக ஏற்பட்டது என்று தாத்பர்யம்.

धनाध्यक्षा

தநாத்யக்ஷா (885)

தனத்திற்கு ஸ்வாமிநியாக (அதிபதியாக) இருப்பவள்.

குபேரன் தனத்திற்கெல்லாம் அதிபதியானதாலும், அம்பிகையின் முக்யமான உபாஸகர்கள் பன்னிருவரில் ஒருவனானதாலும், உபாஸகனும் உபாஸிக்கப்படும் தெய்வமும் அபேதமாயிருப்பதாலும், அம்பிகையானவள் குபேரரூபமாயிருப்பவள் என்று இந்த நாமத்தில் சொல்லப்பட்டதாகவும் சொல்லலாம்.

धनधान्यविवर्धिनी

தந் தாந்ய விவர்த்திநீ (886)

(பக்தர்களுக்கு) தனம், தான்யம் இவைகளை விசேஷமாய் அதிகரிக்கும்படிச் செய்பவள்.

विप्रप्रिया

விப்ரப்ரியா (887)

விப்ரர்களிடத்தில் ப்ரியமுள்ளவள்.

1. பிறப்பினால் ப்ராம்ஹணனென்றும், (அவன்) ஸம்ஸ்காரங்கள் பெற்றபிறகு த்விஜனென்றும், வித்யையைக் ரஹித்தபிறகு விப்ரனென்றும், இம்மூன்றுமிருந்தால் ச்ரோத்ரியனென்றும் சொல்லப்படும். (வித்யை என்ற பதமானது மூன்று வித்யையைத்தான் குறிக்குமென்பதாக சாக்தர்களுடைய கொள்கை) அவ்விதமான விப்ரர்களிடதத்தில் அம்பிகைக்கு ப்ரீதியானது விசேஷமாய் ஏற்படுவதாக இந்த நாமத்தில் சொல்லப்பட்டது.

2. அவித்யோ வா ஸவித்யோ வா ப்ராம்ஹணோ மாமகீ தநு:1*

என்ற பகவத் வசனப்படி ப்ராம்ஹணன் ஹவும் இல்லாவிட்டாலும் அவன் தன்னுடைய சரீரமாக [illegible]கிறானென்பதாக பகவான் சொல்லுவதால், விப்ரர்களாயிருப்பவர்களிடத்தில் விசேஷமான ப்ரீதி வற்படுமென்பதைப்பற்றி காரணம் சொல்லத் தேவையில்லை.

विप्ररूपा

விப்ரரூபா

விப்ரர்களின் ரூபமாயிருப்பவள்.

1. இதுமேலே சொல்லிய பகவத் வசனத்திலிருந்

2. விப்ரர்களெல்லோரும் அம்பிகையின் ரூபங்களென்பதாக இந்த நாமத்தின் தாத்பர்யம். வித்யையுடைய ப்ராம்ஹணர்களின் பெருமையைப்பற்றிய வாக்யங்களில் சிலவை பின்வருமாறு:—

'யாவதீர் வை தேவதாஸ்தா: ஸர்வா வேதவிதி ப்ராம்ஹணே வஸந்தி |' [ச்ருதி]

ப்ராம்ஹண ஜங்கமம் தீர்த்தம் த்ரிஷு லோகேஷு விச்ருதம் |
யேஷாம் வாக்யோதகேனைவ சுத்யந்தி மலிநா ஜநா: ||'
[பராசர ஸ்மிருதி]

3. அல்லது, விப்ரர்களை (ஏற்கனவே பிரார்ப்பதைவிட அதிகமாக) புஷ்டியடையப்படிச் செய்கிறாள். (அதாவது) ப்ரம்ஹ தேஜஸ்ஸையுடையவர்களாகச் செய்கிறாள் என்றுமாம் சொல்லலாம். அதாவது, அம்பிகையின் மந்த்ர ஜபாதிகளால் ப்ராம்ஹணர்களுக்குப் பூர்ணமான தேஜஸ், தபோபலம் முதலியவை உண்டாகின்றனவென்று தாத்பர்யம். ஸன்மானத்தால் ப்ராம்ஹணனுடைய தபஸ்ஸானது குறையுமென்றும், அபமானத்தினால் தபஸ்ஸானது விருத்தியடையுமென்றும், பூஜிக்கப்பட்ட ப்ராம்ஹணனனவன் கறக்கப்பட்ட பசுவைப் போல் சோர்ந்து விடுகிறானென்றும், புல் முதலிய ஆகாரத்தால் பசு எப்படி போஷணை அடைகிறதோ, அம்மாதிரி ப்ராம்ஹணனவன் ஜபங்களாலும், ஹோமங்களாலும் போஷிக்கப்படுகிறானென்றும் ஆபஸ்தம்ப ஸ்மிருதியில் சொல்லப்பட்டிருக்கிறது.

'அபமாநாத் தபோவ்ருத்தி: ஸம்மாநாத் தபஸ: க்ஷய: |
அர்ச்சித: பூஜிதோ விப்ரோ தேநுர்வ ஸீததி |

ஆப்யாயதே யதாஹஸ்ஸு த்ருஷ்ணாரம்ருதஸம்பவை: |
ஏவம் ஜபைச்ச ஹோமைச்ச புநராப்யாயதே த்விஜ: |'

विश्वभ्रमणकारिणी

விச்வ ப்ரமண காரிணீ (889)

ஸமஸ்தமான ப்ரம்ஹாண்டங்களுடைய ப்ரமணத்தைச் செய்பவள்.

1. ப்ரமணமென்றால் சுழலுதல் என்ற அர்த்தம். ப்ரம்ஹாண்டங்களுடைய ப்ரமணமென்பது அவற்றின் ஸ்ருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரம் என்ற யாதாயாதத்தை (போக்கு வரத்தை) சொல்லும். இதை அம்பாள் செய்வதாக இங்கு சொல்லப்பட்டது. இதே மாதிரியாக,

'ப்ரமயந் ஸர்வபூதாநி யந்த்ரா ரூடாநி மாயயா |'

என்ற கீதையிலும்,

'ஸ்வபாவமேகே கவயோ வதந்தி
காலம் ததாऽந்யே பரிமுஹ்யமாநா: |
தேவஸ்யைஷ மஹிமா து லோகே
யேநேதம் ப்ராம்யதே ப்ரம்ஹசக்ரம் ||'

என்ற ச்ருதியிலும் சொல்லப்பட்டிருக்கிறது. இங்கு 'தேவஸ்ய மஹிமா' என்பதானது அவரிடமிருக்கும் சக்தி ரூபிணியான அம்பிகையைக் குறிக்கும்.

2. 'விச்வம் விஷ்ணுர் வஷட்கார:'

என்ற விஷ்ணு ஸஹஸ்ரநாம வசனத்தின்படி விச்வமென்ற பதமானது விஷ்ணுவைக் குறிக்கும். அதினால், விஷ்ணுவுக்கு ப்ரமணத்தைச் செய்பவளென்றும் இந்த நாமத்திற்கு அர்த்தம் சொல்லலாம். அதைப்பற்றிய வ்ருத்தாந்தமானது காளிகா புராணத்தில் பின்வருமாறு சொல்லப்பட்டிருக்கிறது.

ஒரு ஸமயம் விஷ்ணுவானவர் கருடாரூடராக ஆகாச மார்க்கத்தில் செல்லும்போது காமரூபமென்ற தேசத்தின் மேலாகப் போய்க்கொண்டிருந்தார். அப்போது கீழே நீலாசலத்தில் விளங்கா நின்ற காமாக்யா என்ற தேவியின் ரூப விசேஷமானது ஸமீபத்திலிருந்தபோதிலும், அவர் அங்கு இறங்கி அம்பிகையை நமஸ்கரிக்காமல் போய்கொண்டிருக்க, அம்பிகையின் கோபத்திற்கு ஆளாகி அதினால் ஸமுத்ரத்தில் விழுந்து சுழன்று கொண்டிருந்தார். இப்படி வெகுகாலம்

செல்லவும், தன் பதியைத்தேட ஆரம்பித்த லக்ஷ்மீயானவள் கலடசியாக நாரதர் மூலமாய் நடந்தவற்றைத்தெரிந்துகொண்டு தபஸிலை, காமாக்யாதேவியை ஸந்தோஷப்படுத்தி, அதிலை விஷ்ணுவின் சுழலுதலை நிறுத்தி விடுவித்ததாகவும், அதற்கு மேல் அவருடன் அம்பிகையை ஆராதித்து வைகுண்டம் போய்ச் சேர்ந்தாரென்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

विश्वग्रासा

விச்வக்ராஸா (890)

ஸகல ஜகத்தையும் கபளீகரணம் (அதாவது, ஸம்ஹாரம்) செய்பவள்.

அதாவது, ப்ரளயகாலத்தில் சராசராத்மகமான ஸகல ப்ரபஞ்சத்தையும் ஸம்ஹாரம் செய்து உட்கொள்ளுவதால் அம்பிகைக்கு இந்தப்பெயர் ஏற்பட்டது. இதுவே,

'யஸ்ய ப்ரம்ஹ ச கூத்ரம் சோபே பவத ஓதந: ॥
ம்ருத்யுர் யஸ்யோபஸேசநம் க இத்தா வேத யத்ர ஸ: ॥

என்று கடோபநிஷத்திலும்,

அத்தா சராசரக்ரஹணத் ।'

என்று ப்ரம்ஹ ஸூத்ரத்திலும் சொல்லப்பட்டிருக்கிறது.

विद्रुमाभा

வித்ருமாபா (891)

பவழம் போன்ற காந்தியோடு கூடியவள்.

1. அல்லது வித் — ஞானமாகிற, த்ரும: — வ்ருக்ஷம், அதைப்போன்றவள் வித்ருமாபா.

2. வ்ருக்ஷங்கள் ஒன்றிலிருந்து மற்றொன்று உண்டாகிறதுபோல் ஞானமானது தோற்றங்களை புங்காஹபுங்கமாக உண்டாக்குவதால் வ்ருக்ஷத்திற்கு ஸாம்யமாகச் சொல்லப்பட்டது. அம்பிகை ஞான ரூபிணீ என்பதாக இதின் தாத்பர்யம்.

[illegible]

விஷ்ணுவின் சக்தி ரூபமாயிருப்பவள். (892)

1. அதாவது லக்ஷ்மீ ரூபமாயிருப்பவளென்று அர்த்தம்.

2. மேலே சொல்லியதைத்தவிர, அம்பிகைக்கு வைஷ்ணவீ என்று பெயர் ஏற்பட்டதற்கு வேறு காரணங்கள்

'சங்க சக்ர கதா தத்தே விஷ்ணுமாதா ததா அரிஹா |
விஷ்ணுரூபாZதவா தேவீ வைஷ்ணவீ தோ கீயதே ll'

என்று தேவீ புராணத்தில சொல்லப்பட்டிருக்கின்றன. விஷ்ணுவைப்போல், சங்க, சக்ர, கதைகளைத் தரிப்பதாலும், அவருக்கு ஜனனியாக இருப்பதாலும், அவரைப்போலவே சத்ருக்களை ஸம்ஹாரம் செய்வதாலும், வைஷ்ணவீ (விஷ்ணுவைச் சேர்ந்தவள்) என்ற பெயர் அம்பிகைக்கு ஏற்பட்டதாக அதில் சொல்லப்பட்டிருக்கிறது.

விஷ்ணுரூபிணீ
விஷ்ணு ரூபிணீ (893)

விஷ்ணு ஸ்வரூபமாயிருப்பவள்.

1. அம்பிகையும் விஷ்ணுவும் அபேதமென்பதாக ஏற்கனவே வந்த பல நாமங்களிலும், அவற்றின் குறிப்புக்களிலும் சொல்லப்பட்டிருக்கிறது. கோபிகைகளை மோஹிக்கச்செய்த க்ருஷ்ண ரூபமானது தன்னுடைய புருஷ ரூபமென்பதாக,

'மமைவ பௌருஷம் ரூபம் கோபிகா ஜந மோஹநம் |'

என்று லலிதோபாக்யானத்தில் அம்பிகையின் வசனமிருக்

அதிலேயே, வீரபத்ரரிடத்தில் விஷ்ணு சொன்னதாக—

'ஆத்யா சக்திர் மஹேசஸ்ய சதுர்தா பிந்ந விக்ரஹா |
போகே பவாநீரூபா ஸா துர்காரூபா ச ஸங்கரே
கோபே ச காளிகா ரூபா பும்ரூபா ச மதாத்மிகா ll'

என்றுமிருக்கிறது. (மஹேச்வரனுடைய ஆதி சக்தியானவள் போகரூபத்தில் பவானியாகவும், யுத்தத்தில் துர்க்கையாகவும் கோபத்தின்போது காளியாகவும், புருஷரூபத்தில் நாணுகவும், நான்கு பேதங்களான ரூபத்தோடிருக்கிறாள்.)

2. கூர்மபுராணத்தில் நில் மேயை மவான் ஸ்தோத்ரம் செய்கையில் 'க்ஷீராப்தியில சயனித்திருக்கும் நாராயணன் என்ற உன்னுடைய ரூபத்தை நமஸ்கரிக்கிறேன்' என்பதாக,

'ஸஹஸ்ர மூர்தாநம் அநந்த சக்திம்
ஸஹஸ்ர பாஹும் புருஷம் புராணம் |
சயாநம் அப்தௌ லலிதே தவைவ
நாராயணாக்யம் ப்ரணதோZஸ்மி ரூபம் |'

என்று சொல்லப்பட்டது. அதே புராணத்தில் ஸங்கணைகனுக்கு சிவன் விச்வரூபதர்சனம் தந்தபோது அவர்பக்கத்திலிருப்பவள் யாரென்பதாக,

'ஸோமேதத் பகவத் ரூபம் ஸூர்யோரூபம் விச்வதோ முகம் |
கா சஸா பகவத் பார்ச்வே ராஜ்ஞமாநா வ்யவஸ்த்திதா ||'

என்று கேட்டபோது, பரமசிவன் தன்னுடைய ஸ்வரூபத்தின் ப்ரபாவத்தை வர்ணித்துவிட்டு,

'மம ஸா பரமா மாயா ப்ரக்ருதிஸ் த்ரிகுணாத்மிகா |
ப்ரோச்யதே முநிபி: சக்திர் ஜகத்யோநி: ஸநாதநீ |
ஸ ஏவ மாயயா விச்வம் வ்யாமோஹயதி விச்வவித் |
நாராயண: பரோ(அ)வ்யக்தோ மாயா ரூப இதி ச்ருதி: ||'

என்று தன் பக்கத்திலிருக்கும் அம்பிகையே நாராயணன் என்பதாகச் சொன்னதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஸனத்குமார ஸம்ஹிதையில் ப்ரபாகரன் என்ற ராஜாவினுடைய விஷ்ணு பக்தியையும், அவன் மஹிஷியான பத்மினீ என்பவளுடைய பார்வதீ பக்தியையும் வர்ணித்துவிட்டு,

'ஏவம் தேவ்யாத்மநா ஸ்வேந ரூபேண ச ஜநார்த்தந: |
தம்பத்யோர் ஏக காயத்வாத் ஏக ஏவ த்விதார்ச்சித: ||'

என்று ராஜா, மஹிஷி இருவரும் தனித்தனியானவர்களாயிருந்த போதிலும், தம்பதிகளாகையால் ஒரே சரீரத்தையுடையவர்களென்று சொல்லப்படுவதால் ஒருவராலேயே விஷ்ணுவானவர் இரண்டுவிதமாகப் பூஜிக்கப்பட்டதாக வர்ணிக்கப்பட்டிருக்கிறது. இதேமாதிரி ஆதித்ய புராண, சிவபுராணங்களில்,

'யா தஸ்ய பார்ச்வகா பாலா ஸா பார்வத்யம்சஜோ ஹரி: | '

என்று ஹரியானவர் பார்வதியின் அம்சத்திலிருந்து உண்டானவரென்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அம்பிகையை உபாஸித்தால் விஷ்ணுவுக்கு ப்ரீதி ஏற்பட்டு அவருடைய லோகம் கிடைக்கப்பெறும் என்பதாகவும் சொல்லப்பட்டிருக்கிறது.

'துர்காம் காத்யாயநீம் சைவ யஜந் வாக்தேவதாமபி |
சேதஸா ஸுப்ரஸந்நோ விஷ்ணுலோகமவாப்நுயாத் ||'
[ப்ருஹத் பாராசரஸ்ம்ருதி]

'சண்டிகாம் ஸ்நபயேத் யஸ்து ஜகத்வேணுரஸோ ச |
ஸௌபர்ணோ ச யாகேந விஷ்ணுநா ஸஹ மோததே ||'
[பத்ம புராணம்]

'பௌர்ணமாஸ்யாம் து யோ மாகே பூஜயேத் விதிவத் சிவாம் |
ஸோ(அ)ச்வமேதமவாப்நோதி விஷ்ணுலோகே மஹீயதே ||'
[வாமந புராணம்]

யாதொன்றிலிருந்தும் உண்டாகாதவள்.

1. அதாவது, ஸகல ப்ரபஞ்சத்திற்கும் அம்பிகையான வள் காரண ஸ்வரூபமாயிருக்கையில், அவளுக்கு யாதொரு காரணமும் கிடையாதென்று தாத்பர்யம்.

2. 'யோநிஷ்ட்ட இந்த்ர நிஷதே அகாரி' (ஹே இந்த்ர! நீ இருப்பதற்காக ஒரு ஸ்தானம் நான் ஏற்படுத்தி யிருக்கிறேன்) என்ற ச்ருதிவாக்யத்தில் சொன்னபடி, யோநி யென்ற பதமானது ஸ்தானத்தைக் குறிக்கும். அயோநி: என்றால் ஸ்தானம் இதுதான் என்பது இல்லாதவள் (அதாவது, அபரிச்சின்னமாயிருப்பவள்) என்று அர்த்தம்.

3. அல்லது அஸ்ய-விஷ்ணோ: இடையே, யோநி:—தாயார்யிருப்பவள், (விஷ்ணுமாதா) என்றும் அர்த்தம் சொல்லலாம்.

योनिनिलया

யோநி நிலயா (895)

(ஸகல ப்ரபஞ்சத்திற்கும்) யோநியாயும் நிலயமாயுமிருப்பவள்.

1. ஸம்ஹார காலத்தில் ஜகத்தானது அம்பாளிடம் ஒடுங்கிவிடுவதால் அதற்கு நிலயமாக ஏற்படுகிறாள். அதே ஜகத்தும் அம்பாளிடமிருந்து உண்டாவதால் அதற்கு யோனி யாயுமிருக்கிறாள்.

2. தவிர, யோனி என்ற பதமானது ப்ரக்ருதியைக் குறிக்கும். இந்த அர்த்தம் 'கர்த்தாரமீசம் புருஷம் ப்ரம்ஹ யோநிம்' என்ற ச்ருதிவாக்யத்திலும், 'யோநி: ச ஹி கீயதே' என்ற ப்ரம்ஹஸூத்ரத்திலும் சொல்லப்பட்டிருக்கிறது.

3. யோ யோநிம் யோநிம் அதிதிஷ்டத்யேக:।' என்ற ச்ருதிவாக்யத்திற்கு வ்யாக்யானம் செய்திருக்கிறபடி யோனியென்ற பதமானது மாயையைக்குறிக்கும். அதைப் பரிச்சேதனம் செய்பவள் (பாகுபாட்டில் வைத்திருப்பவள்) யோநி நிலயா.

4. யோநிகளான - ஜகத்காரணர்களான ப்ரம்ஹாதிகள் எல்லோரும் அம்பாளிடத்தில் விசேஷமாக லயமடைவதால் இந்தப்பெயர் ஏற்பட்டதாகவும் சொல்லலாம்.

5. ஸ்ரீசக்ரத்தின் நடுவிலுள்ள த்ரிகோணத்தையே நிலயமாக (வாஸஸ்தானமாக) உடையபிந்து ரூபிணியான தேவியை இங்கு சொல்லப்பட்டதாகவும் சொல்லலாம்.

கூடஸ்தா (896)

கூடவஸ்தா

அஜ்ஞானத்திற்கு அதிஷ்டானமாயிருப்பவள்.

1. கூடமென்றால் மோசடி, மறைவு, பொய்என்றர்த்தம். அஜ்ஞானமானது ஆனந்தத்திலிருந்து உண்டான ஆத்மாவின் ரூபத்தை மறைத்து ஸம்ஸாரத்தில் விழச்செய்வதால் அது கூடமென்று சொல்லப்பட்டது. அவ்விதமான அஜ்ஞானத்திற்கு நாயகியாக இருந்துகொண்டு ஜீவன்களுக்குள் ப்ரமாத்மகமாக இருப்பது இங்கு சொல்லப்பட்டது. இதுவேதான் தேவீமாஹாத்ம்யத்திலும்,

'யா தேவீ ஸர்வபூதேஷு ப்ராந்தி ரூபேண ஸம்ஸ்திதா |'

என்று சொல்லப்பட்டது. கீதையிலும் 'கூடஸ்தம் அசலம் த்ருவம்' என்று இதே அர்த்தத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

2. அல்லது, மேலே சொல்லிய அஜ்ஞானத்திற்கு ஸ்தானமாய் (நிலையாய்) இருப்பவளென்றும் சொல்லலாம்.

3. மேலே சொல்லியதைத்தவிர கூடமென்ற பதமானது

'கூடம் யந்த்ரேঽந்ருதே ராசௌ நிச்சலே லோஹ முத்கரே |
மாயாத்ரிச்ருங்கயோஸ்துச்சே ஸீராவயவ தம்பயோ: |
புரத்வாரே ச சம்ஸந்தி ... ... ll'

என்ற கோசவசனத்தின்படி யந்த்ரம், பொய், ராசி, அசையாதிருத்தல், சம்மட்டி, மாயை, மலையின் உச்சி, துச்சமானது, கலப்பையின் ஒரு பாகம், டம்பம், புரத்வாரம் முதலியவற்றை குறிக்கும்.

4. மலையின் சிகரம்போல் யாதொரு க்ரியையுமில்லாமல் நிச்சயமாயிருப்பவள் கூடஸ்தா.

5. இருப்புக் கொல்லர்கள் சம்மட்டிகளால் அடிப்பதற்குப் பூமியில் புதைத்திற்கும் அடியலுக்கும் கூடமென்று பெயர். அதுமாதிரி நிர்விகாரமாயிருப்பவளென்றும் சொல்லலாம்.

6. கூடமென்றால் ஸமூஹம், கூட்டம் என்றும் அர்த்தமுண்டு. லோகத்திலிருக்கும் ஸகல ஸமூஹங்களும் அம்பா

னிடம் ஸ்திதியோடிருப்பதால் இந்தப்பெயர் ஏற்பட்டதாகவும் சொல்லலாம்.

7. அல்லது வாக்பவம் முதலான கூடத்ரயத்தில் இருப்பவனென்றும் சொல்லலாம்.

8. கூடமென்று புரத்வாரத்திற்குப் பெயராகையால் அது ஸ்ரீசக்ரத்திலிருக்கும் த்ரிகோணத்தைக் குறிக்கும். அதிலிருப்பவள் கூடஸ்தா.

रूपिणी
குலரூபிணீ (897)

குலத்தின் ரூபமாக இருப்பவள்.

ஏற்கனவே வந்த நாமங்களில் குலம் என்பதற்கு மூலாதாரம், கௌலமார்க்கம், பாஹ்ய பூஜை, வம்சம், ஆசாரம் முதலான அர்த்தங்கள் சொல்லப்பட்டிருப்பதால் அவையெல்லாம் அம்பிகையின் ரூபங்களென்பதாக இந்த நாமத்தில் சொல்லப்பட்டது.

वीरगोष्ठिप्रिया
வீரகோஷ்டிப்ரியா (898)

உபாஸக ச்ரேஷ்டர்களுடைய கோஷ்டியில் ப்ரியமுள்ளவள்.

1. வீரர்களென்றால் யுத்தம் செய்வதில் ஸாமர்த்யமுள்ளவர்களைக் குறிப்பதுடன் உபாஸகபுங்கவர்களையும் குறிக்கும். அவர்கள்,

'அஹமி ப்ரளயம் குர்வந் இதம: ப்ரதியோகிந: |
பராக்ரமம் பரோ புங்க்தே ஸ்வாத்மாநம் அசிவாபஹம் ||'

என்றபடி பராக்ரமத்தோடு கூடியவர்களாகையால் அவர்களுக்கும் வீரர்களென்ற பெயர் ஏற்பட்டது.

2. கோஷ்டியென்றால் ஸபை, ஸல்லாபம் என்ற அர்த்தங்களுண்டு.

वीरा
வீரா (899)

வீர்யமுள்ளவள்.

1. அம்பிகையின் உபாஸகர்கள் வீரர்களாயிருப்பதுடன் தானும் வீர்யமுள்ளவளென்பதாக இங்கு சொல்லப்பட்டது.

அம்பிகையின் பராக்ரமத்தைப்பற்றி ஏற்கனவே வந்த பண்டாஸுர யுத்தத்தைப்பற்றிய நாமங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. அதையும், தேவீமாஹாத்ம்யம் முதலியவைகளில் சொல்லப்பட்டிருப்பதையும் பார்க்கவும்.

2. 'பதி புத்ரவதீ வீரா' என்ற நாம மாலையில் சொல்லப்பட்டபடி, பதி புத்ரர்களையுடைய ஸ்த்ரீக்கு வீரா என்ற பெயர்.

नैष्कर्म्या

நைஷ்கர்ம்யா (900)

கர்ம ஸம்பந்தம் யாதொன்றுமில்லாதவள்.

ப்ரபஞ்சத்தின் கார்யங்களெல்லாம் அம்பிகையே செய்வதாகத்தோன்றினும் வாஸ்தவத்தில் கர்மங்களின் ஸம்பந்தம் கொஞ்சமும் கிடையாதென்ற தாத்பர்யம். கர்மாக்கள் செய்யாததினால் (கர்மலோபத்தினால்) ஏற்படக்கூடிய பலனும் அம்பிகைக்குக் கிடையாதென்றும் இதனால் ஏற்படுகிறது.

'ந புண்யபாபே மம |' (கைவல்யோபநிஷத்)

'லிப்யதே ந ஸ பாபேந |' (கீதை)

'க்லேச கர்ம விபாகாசயை: அபராம்ருஷ்ட: புருஷவிசேஷ: ஈச்வர: |' (யோகஸூத்ரம்)

नादरूपिणी

நாதரூபிணீ (901)

நாதரூபமாக இருப்பவள்.

1. ப்ரணவத்தின் சிரோபாகத்திற்கு நாதமென்று பெயர். அந்த ரூபமாக அம்பாளிருப்பதாகச் சொல்லப்பட்டது. இதே மாதிரி,

'ஆநந்த லக்ஷணம் அநாஹத நாம்நி தேசே
நாதாத்மநா பரிணதம் தவ ரூபம் ஈசே |
ப்ரயத்யங்முகேந மநஸா பரிசிந்தயமாநம்
சம்ஸந்தி நேத்ர ஸலிலை: புளகைச்ச தந்வ:||'

என்பதாக 'அம்பாஸ்துதி'யில் சொல்லப்பட்டது.

2. அல்லது, நாதத்தில் ரூபத்தையுடையவளென்றும் சொல்லலாம். இதைப்பற்றி ஸ்வச்சந்த தந்த்ரத்தில்,

'நாதிந்யாக்யம் யதுக்தம் தே நாதஸ்தஸ்யோர்த்வ ஸம்ஸ்திதி:|'

என்று ஆரம்பித்து,

'தஸ்யோத்ஸங்கததாம் ஊர்த்வ காமிநீம் பரமாம் சிவாம் |
த்யாயேத் ... ... 11'

என்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

3. நாதத்தைப்பற்றி இதற்கு முன்வந்த 'நாத ரூபா' என்ற 299-வது நாமத்தில் பார்க்கவும்.

विज्ञानकलना

விஜ்ஞாநகலநா (902)

விஜ்ஞானத்தை உண்டுபண்ணுகிறவள்.

1. விஜ்ஞானமென்பது ப்ரம்ஹ ஸாக்ஷாத்காரம். அதைப்படைத்தவனுக்குக் கிடைக்கப்பெறும்படி செய்வதாக இங்கு சொல்லப்பட்டது.

2. பதினைந்து வித்யைகளை அவற்றின் அர்த்தத்துடன் மனதில் தாரணை செய்வதற்கும் விஜ்ஞானமென்று பெயர்.

'சதுர் தசாநாம் வித்யாநாம் தாரணம் யத் யதார்த்ததः |
விஜ்ஞாநமிதி தத் வித்யாத் ... ... 11' [கூர்மபுராணம்]

அதைத் தொடுப்பவள் விஜ்ஞாநகலநா.

कन्या

கன்யா (903)

உலகுனில் ஸாமர்த்யமுடையவள்.

'கல்யம் ஸர்கே ப்ரபாதே ச கல்யோ நீரோக தக்ஷயோः |
கல்யா கல்யாணவாசி ஸ்யாத் காதம்பர்யாமபி ஸ்ம்ருதா 11'

என்ற விச்வகோச வசனத்தின்படி கல்யமென்ற பதத்திற்கு ஸ்ருஷ்டி, உஷः காலம், ரோகமில்லாதிருத்தல், ஸாமர்த்யமாயிருத்தல், மங்களகரமான வாக்கு, காதம்பரி என்ற அர்த்தங்களுண்டு. இவற்றையெல்லாம் அனுஸரித்து இந்த நாமத்திற்கு அர்த்தம் சொல்லலாம்.

विदग्धा

விதக்தா (904)

சாதுர்யத்தோடு கூடிய ஸ்வபாவமுடையவள்.

बैन्दवासना

பைந்தவாஸநா (905)

ஸர்வாணந்தமய சக்ரத்தை ஸம்பந்தித்த சக்ரத்தை ஆஸனமாயுடையவள்.

1. ஸ்ரீசக்ரத்தின் மத்தியிலுள்ள த்ரிகோணத்தின் நடுவில் ஸர்வானந்தமய சக்ரமென்கிற பிந்து இருப்பதால் அதற்கு பைந்தவஸ்த்தானமென்ற பெயர்.

2. புருவங்களுக்கு மேலாக வ்ருத்த ரூபமாக இருக்கும் ஸ்த்தானத்திற்கு பைந்தவஸ்த்தானமென்ற பெயர். இதைப் பற்றி ஸ்வச்சந்த தந்த்ரத்தில்,

'ஹாகிநீ மண்டலாத் ஊர்த்வம் பிந்து ரூபம் து வர்த்துளம் |'

என்பது முதலான ச்லோகங்களில் அங்குள்ள பத்மத்தையும் அதில் வீற்றிருக்கும் சிவனையும் வர்ணித்துவிட்டு, அவருடைய வாமாங்கத்தில் மஹேஸ்வரீ ரூபமாக அம்பாளிருப்பது சொல்லப்பட்டிருக்கிறது.

'வாமபாகே ஸமாஸீநா சாந்த்யதீதா மநோன்மநீ |'

3. தவிரவும், பிந்துஸ்தானமென்பது ஸுதாவிந்துவையும், ஸஹஸ்ராரகமலத்தின் கர்ணிகையிலிருக்கும் சந்த்ர மண்டலத்தையும், காமேச்வரருடைய மடியையும் குறிக்கும். அம்மாதிரியான ஆஸனத்தையுடையவள் பைந்தவாஸநா.

4. அல்லது, பிந்துக்களின் ஸமூஹத்தை ஆஸனமாக உடையவள் (அதாவது, பிந்துக்களின் ஸமூஹத்தை ரூபமாக உடையவள்) என்றும் சொல்லலாம். அதாவது, அவற்றால் குறிக்கப்படும் அர்த்தங்களுக்கு ஆதாரமாயிருப்பவள், அவற்றால் ப்ரதிபாதிக்கப்பட்டவள் என்று தாத்பர்யம். இந்த பிந்துக்களைப்பற்றி காமகலா விலாஸம், பரிவல்யா ரஹஸ்யம் முதலியவற்றில் சொல்லியிருப்பதுடன் ஞானார்ணவத்தில்,

'பிந்துவ்யூஹம் ப்ரவக்ஷ்யாமி பீஜரூபம் வராநநே |
ஹகாரம் பிந்து ரூபேண ப்ரம்ஹாணம் வித்தி பார்வதி ||
ஸகாரம் பிந்து ஸர்காப்யாம் ஹரிச்சாஹம் ஸுரேச்வரி |
அவிகா பாவ ஸம்பந்தெள லோகே ஹரிஹராவிதி ||'

என்று, தான் பீஜ ரூபமாயிருப்பதையும், ஹரிஹரர்கள் ஏகஸ்வரூபமென்பதையும் சொல்லிவிட்டு, பரமர் முதலான மூவர் இச்சா முதலான மூன்று, இம்மாதிரி மூர்மூன்றுயிருப்பவை யெல்லாம் பிந்து ரூபமென்பதாகச் சொல்லிவிட்டு, கடைசியில் அந்தந்த மூன்று பிந்துக்களின் சேர்க்கையான ரூபமாகத் தானிருப்பதால் தனக்கு த்ரிபுரா என்ற பெயர் ஏற்பட்டதாகவும் அம்பாள் சொன்னதாக காணப்படுகிறது.

'ஏவம் பிந்துத்ரயைர் யோகாத் த்ரிபுராகாமரூபிணீ ||'

5. அம்பாளுடைய காமகலாஸ்வரூபமும் பிந்துக்களா லானதாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

'அக்ரபிந்து பரிகல்பிதாகநாம்
அந்ய பிந்து ரசித ஸ்தனத்வயீம் |
காத பிந்து ரசநா குணஸ்பதாம்
நௌமி தே பரசிவாம் பராம் கலாம் ||'

6. இந்த நாமத்தை அதற்கு முந்து ந்து 'அனைந்த வாஸநா' என்று பிரித்தும் அர்த்தம் சொல்லலாம். அப்-ஜலத் தில், ஜந்தவ-இந்து ஸரூபம்போல், அதாவது ஜலத்தில் சந்த் ரனுடைய ப்ரதி பிம்பங்கள்போல், ஜீவ கதம்பங்களில் (ஜீவன் களில்) பிம்ப ரூபமாக இருப்பவள் என்று அர்த்தம். அம்பிகை ஒருவளாக இருந்தபோதிலும் ஜீவன்களுக்குள் அனேக ப்ரதி பிம்பங்களாக அபேதமாயிருக்கிறாள் என்பது தாத்பர்யம்.

'ஏகதா பஹுதா சைவ த்ருச்யதே ஜலசந்த்ரவத் |' (ச்ருதி)

तत्त्वाधिका

தத்வாதிகா (906)

தத்வங்களைவிட உத்க்ருஷ்டமானவள்.

1. அதாவது, தத்வங்கள் நாசமடையும்போதும் ப் படாவள் என்று அர்த்தம்.

2. ப்ரபஞ்சத்திலிருக்கும் வஸ்துக்களில் ப்ரளயகாலம் வரையிலிருந்துகொண்டு ஸகல ஜீவன்களுக்கும் போகத்தைக் கொடுப்பதான வஸ்துகளுக்கு தத்வங்களென்று பெயர்.

'ஆப்ரளயம் யத் திஷ்டதி ஸர்வேஷாம் போகதாயி பூதாநாம் |
தத் தத்வமிதி ப்ரோக்தம் ந சரீர கடாதி தத்வமத: ||'
(ஸுத ஸம்ஹிதை)

ஆகவே சரீர கடாதிகளை தத்வங்களில் கணக்கிடுவதில்லை. இவை 25, 36, 51, 94 என்ற பலவிதமாக சொல்லப்படும். அவ்வித தத்வங்கள் நாசமடையும் காலத்திலும் அம்பிகைக்கு யாதொரு பேதமும் ஏற்படுவதில்லையாகையால் அவற்றைவிட அதிகமானவள் (பெரியவள்) என்பதாக இங்கு சொல்லப் பட்டது.

तत्त्वमयी

தத்வமயீ (907)

தத்வங்களின் ரூபமாயிருப்பவள்.

1. அதாவது மேலே சொல்லிய தத்வங்களின் ஸ்வரூப பரிபூர்ணமாயிருப்பவள் என்று அர்த்தம்.

2. அல்லது, இந்த இரண்டு நாமங்களில் தத்வமென்றால் சிவ தத்வமென்றும், தத்வாதீ என்றால் சிவ தத்வத்திற்கு அதிகாரமான சின்மயீ என்றும், அர்த்தம் சொல்லலாம். சிவ தத்வத்திலுள்ள அஸம்ப்ரக்ஞாத ஸமாதியும், சிவ தத்வத்தின் ஆதிக்யத்திலுள்ள ஸம்ப்ரஜ்ஞாத ஸமாதியும் உண்டாவதாக

ஸ்வயம் ப்ரஜ்ஞாத ஸம்ஞஸ்து சிவாதிக்யேந ஜாயதே |
அஸம்ப்ரஜ்ஞாத நாமா து சிவதத்வேந வை பவேத் ||

என்பதாக ஞானார்ணவத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. அதிலேயே இந்த இரண்டு ஸமாதிகளின் லக்ஷணமும் பின்வருமாறு சொல்லப்பட்டிருக்கிறது.

'ஸ்வயம்ப்ரஜ்ஞாத பேதஸ்து தீவ்ர தீவ்ரதரோ பவேத் |
அஸம்ப்ரஜ்ஞாத பேதஸ்து மந்த மந்ததரஸ் ததா ||
ஹர்ஷ ரோதந ரோமாஞ்ச கம்ப ஸ்வேதாதி லக்ஷண: |
தீவ்ர தீவ்ரதரோ தேவி ஸமாதிருபலக்ஷித: ||'
நிமேஷ வர்ஜிதே நேத்ரே வபுஸ் தல்லக்ஷணம் ஸ்த்திதம் ||
மந்த மந்ததரோ தேவி ஸமாதிருபலக்ஷித: ||'

(ப்ரஜ்ஞானத்தோடு கூடியதான) ஸம்ப்ரஜ்ஞாத ஸமாதியானது மேலுக்குமேல் தீவ்ரமாக ஏற்படுமென்றும், அதின் லக்ஷணங்கள் சிரிப்பு, அழுகை, மயிர்க்கூச்சல், படபடப்பு, வியர்வை முதலியனவென்றும், (ப்ரஜ்ஞான ரஹிதமான) அஸம்ப்ரஜ்ஞாத ஸமாதியானது மந்தம் மந்தமாக ஏற்படுமென்றும், அதின் லக்ஷணங்கள் இமைகொட்டாத பார்வை, அசைவற்ற தேஹம் முதலியவையென்றும் சொல்லப்பட்டது. இவையிரண்டும் தேஜோ விசேஷங்கள். மனதிலுடைய தாரணையில் ஏற்படுகிறவை. அந்த தேஜஸ்ஸைப்பற்றிக் குருமுகமாகத் தெரிந்துகொள்ளவேண்டியது.

3. ஆத்ம தத்வம், வித்யாதத்வம், சிவதத்வம், என்ற மூன்று வகையாகச் சொல்லப்பட்ட தத்வஸ்வரூபமாயிருப்பவள் தத்வாதீ என்றும், அம்மூன்று வகைகளின் ஸமஷ்டி (சேர்க்கை) ரூபமானதால், (ஸர்வதத்வங்களின் ரூபமாயிருப்பதால்) அம்மூன்று தத்வங்களுக்கு அதிகாரமானவள் தத்வாதிகா என்றும் சொல்லலாம். இந்த ஆத்மா, வித்யா, சிவ, ஸமஷ்டி என்ற நாலுவிதமான தத்வங்களின் ஸ்வரூபமானது

'மாயாந்தம் ஆத்மதத்வம் வித்யாதத்வம் ஸதாசிவாந்தம் ஸ்யாத்
சக்தி சிவெள சிவ தத்வம் த்ரீயதத்வம் ஸமஷ்டிரேதேஷாம் ll'

என்று சொல்லப்பட்டிருக்கிறது.

மேலே சொல்லிய ஆத்ம, வித்யா, சிவதத்வங்கள் மூன்றுக்கும் முறையே ஸத், சித், ஆனந்தமென்ற தத்வங்கள் ரூபங்களென்பதாகச் சொல்லப்படும். ஸத், சித், ஆனந்தத்தின் ஸமஷ்டிரூபமாயிருக்கும் பரப்ரம்ஹத்தினின்றும் உண்டாகும் சிவன்முதல் க்ஷித்யந்தமான தத்வங்களில் சிவ சக்திகளுக்கு ஆனந்தாம்சமானது மறைவுபடாமலிருக்கிறது. அடுத்தவையான ஸதாசிவ, ஈச்வர, சுத்த வித்யா தத்வங்களுக்கு சிதம்சமானது மறைவுபடாமலிருக்கிறது. அடுத்தவையான மாயை முதலாக க்ஷித்யந்தமான பாக்கி தத்வங்களெல்லாவற்றிற்கும் ஸதம்சமானது மறைவுபடாமலிருக்கிறது.

முதல் மாயாந்தமான தத்வங்களுக்கு ஸதம்சமும், ஈச்வர, ஸதாசிவ தத்வங்களுக்கு ஸதம்சமும், சிதம்சமும், சக்தி சிவ தத்வங்களுக்கு ஸத், சித், ஆனந்தமென்ற மூன்று அம்சங்களும், அநாவ்ருதமாக (மறைவுபடாமல்) இருப்பவை. ஆத்ம, வித்யா, சிவ தத்வங்களாகச் சொல்லப்போனால், சிவ தத்வத்தில் ஸத், சித், ஆனந்தாம்சங்கள் மூன்றும் அனாவ்ருதமாயிருப்பதாயும், வித்யாதத்வத்தில் ஸத், சித் என்ற இரண்டு அம்சங்கள் அனாவ்ருதமாயும், ஆனந்தாம்சமானது கொஞ்சம் ஆவ்ருதமாயும், இருப்பதாகச் சொல்லவேண்டும். ஆத்மா என்ற பதமானது (ஆத்மலாபமென்பது போன்ற வார்த்தைகளில் உபயோகப்படுவது மாதிரி) இருப்பது என்ற அர்த்தத்தைக் காட்டும் ஸத் என்பதாகவும், வித்யா என்ற பதமானது ஞானரூபமானதால் சித் என்பதாகவும், சிவ என்ற பதமானது மோக்ஷ ரூபமானதால் ஆனந்தமென்பதாகவும், ப்ரஸித்தமாகச் சொல்லப்படுகிறவை. ஆகவே ஆத்ம, வித்யா, சிவ என்ற பதங்கள் மூன்றும் சேர்ந்து ஸச்சிதானந்தமென்பதைக் குறிக்குமென்பது தத்வ த்ரயத்தின் ரஹஸ்யம். அம்பாள் இந்த மூன்று தத்வங்களின் மயமாக இருப்பதாகச் சொல்வதினால் ஸச்சிதானந்த ரூபிணீ என்று சொல்லப்பட்டது.

5. ஷட் (ஆறுவிதமான) அத்வாக்களாலான பரமாத்மாவின் சரீரத்தில் மூப்பத்தாறு தத்வாத்மகமான தத்வாத்வா

என்பது அவயவமாகச் சொல்லப்படும். ஆகையினால் தத்வமயீ என்ற பெயர் ஏற்பட்டதாகவும் சொல்லலாம்.

'ப்ருதிவ்யாதிஸ ஷட்த்ரிம்சத் தத்வாங்யாகமவேதிபி: |
உக்தாங்யமுஷ்ய தத்வாத்வா சுக்ரமஜ்ஜாஸ்த்தி ரூபத்ருக் ||'
(காமிகாகமம்)

இந்த ஷடத்வாக்களைப்பற்றி 'ஷடத்வாதீதரூபிணீ' என்ற 991-வது நாமத்தில் பார்க்கவும்.

तत्त्वमर्थस्वरूपिणी

தத் த்வம் அர்த்த ஸ்வரூபிணீ (908)

தத், த்வம் என்ற பதங்களின் அர்த்தஸ்வரூபமாயிருப்பவள்.

இவையிரண்டும் மஹா வாக்யங்களில் இருப்பவை இவை முறையே சிவன், ஜீவன் என்ற அர்த்தமுடையவை.

सामगानप्रिया

ஸாமகாநப்ரியா (909)

ஸாம காநத்தில் ப்ரியமுள்ளவள்.

அல்லது, யோகர்களிடத்தில் தன் உயிரினிடத்திற்போல் ப்ரியத்தைப் பாராட்டுகிறவள் என்றும் சொல்லலாம்.

सोम्या

ஸோம்யா (910)

ஸோமயாகத்திற்கு அர்ஹமானவள்.

1. அல்லது, பரமசிவன் உமாதேவியோடு கூடியிருப்பதால் ஸோமனென்ற பெயராகையால் அவரை அயலாகக் உடையவள் (அர்த்த சரீரமாக உடையவள்) ஸோம்யா என்றும் சொல்லலாம்.

2. 'ஸோம: கர்ப்பூர சந்த்ரயோ:' என்ற கோசலனத்தினபடி ஸோமனென்ற சந்த்ரனுக்குப் பெயராகையால் அவன் மாதிரி ஆஹ்லாதத்தைக் கொடுப்பவளென்றும் சொல்லலாம்.

3. இந்தநாமத்திற்கு 'ஸௌம்யா' என்ற பாடாந்தரமும் உண்டு. அப்போது, அழகானவள் அல்லது சாந்தமானவள் என்று அர்த்தம்.

सदाशिवकुटुम्बिनी

ஸதாசிவ குடும்பிநீ (911)

ஸதாசிவருடைய பார்யையாயிருப்பவள்.

அதாவது, ச்யாமளா, சுத்தவித்யா, அச்வாரூடா முதலான ரூபங்களோடிருப்பவள் என்று தாத்பர்யம்.

सव्यापसव्यमार्गस्था

ஸவ்யாபஸவ்ய மார்கஸ்தா (912)

ஸவ்ய, அபஸவ்ய, மார்கங்களுக்கு அதிகாரியாயிருப்பவள்.

1. அதாவது, லோகத்தைப்பற்றிய விதரணை, ரக்ஷணம், ஆரூடை முதலியவற்றைக் கொடுக்கக்கூடியவள் என்று அர்த்தம். அல்லது, அவை மூன்றும் அம்பாளிடத்தில் நிலையோடிருக்கின்றனவென்றும் சொல்லலாம்.

2. ஸமய மண்டலத்திற்கு உத்தர, தக்ஷிண, மத்ய மென்ற மூன்று வகையான மார்கங்களிருப்பனவாகச் சொல்லப்படும். அதாவது, ரக்ஷுத்ர மண்டலத்தை ஸூர்யன் ஸஞ்சரிக்கும் வீதிகளாகச்சொல்லி, அவைகள் திரும்பவும் மார்க்கங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. மும்மூன்று ரக்ஷுத்ரங்கள் கொண்டது ஒரு வீதி. அவ்விதமான வீதிகள் மும்மூன்று கொண்டது ஒரு மார்க்கம். இதைப்பற்றி வாயுபுராணத்தில் விஸ்தாரமாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

'அச்வினீ க்ருத்திகா யாம்யா நாகவீதி சப்திதா |
ரோஹிண்யார்த்ரா ம்ருகசிரோ நாஜவீத்யபிதீயதே ||
புஷ்யாச்லேஷா தநாதித்யா வீதி சைராவதீ ஸ்ம்ருதா |
ஏதாஸ்து வீதயஸ்திஸ்ர உத்தரோ மார்க்க உச்யதே ||
தநா த்வே சாபி பல்குந்யௌ மகா சைவார்ஷதீ மதா |
ஹஸ்தச்சித்ரா தநா ஸ்வாதீ கோவீதி து சப்திதா |
ஜ்யேஷ்டா விசாகாநுராதா வீதி ஜாரத்கவீ மதா |
ஏதாஸ்து வீதயஸ்திஸ்ரோ மத்யமோ மார்க்க உச்யதே ||
மூலாஷாடோத்தராஷாடா அஜவீத்யபிசப்திதா |
ச்ரவணம் ச தநிஷ்டா ச மார்க்கி சதபிஷஸ்ததா ||
வைச்வாநரீ பாத்ரபதே ரேவதீ சைவ கீர்த்திதா |
ஏதாஸ்து வீதயஸ்திஸ்ரோ தக்ஷிணே மார்க்க உச்யதே ||'

3. ஸாதாரணமாய், ஸவ்யமென்பது வலது பக்கத்தையும், அபஸவ்யமென்பது இடது பக்கத்தையும் குறிக்கும். சிற்சில இடங்களில் அவற்றை மாற்றிச் சொல்வதுமுண்டு.

'வாமம் சரீரம் ஸவ்யம் ஸ்யாத் அபஸவ்யம் து தக்ஷிணம் |'

'ஸவ்யம் தக்ஷிணவாமயோ: |'

மார்க்கமென்பது மத்யமானது (நடுவானது) என்று அர்த்தமுள்ளது. தக்ஷிணமென்றால் வலது, வாமமென்றால் இடது. இந்தப் பதங்களுக்கு இவ்விதமான அர்த்தங்களிருப்பதை அனுஸரித்து மேலே சொல்லிய வாயு புராணத்திய ச்லோகங்களுக்கு அர்த்தமானது பாஷ்யத்தின் மூலத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

அவ்விதமான ஸவ்ய, அபஸவ்ய, மத்யங்களென்ற மூன்று மார்க்கங்களிலுமிருப்பவளென்று சொல்லலாம்.

4. அல்லது, ஸவ்யமென்பது தேவயானத்தைக் குறிக்கும். அதுவே அர்ச்சிராதி மார்க்கமென்று சொல்லப்படும். தேஜோ ரூபமான வழி. இது நிவ்ருத்தியோடு உபாஸிப்பவர்கள் சரீரத்தை விட்டபிறகு தேவலோகங்களுக்குப் போகும் வழி. அபஸவ்யம் என்பது பித்ருயாணத்தைக் குறிக்கும். தூமாதி மார்க்கமென்றும் சொல்லப்படும். தூம (புகை) மயமான வழி. இது ப்ரவ்ருத்தியோடு உபாஸிப்பவர்கள் சரீரத்தை விட்டபிறகு பித்ரு லோகங்களுக்குப் போகும் வழி. மார்க்கஸ்தா என்பது மார்க்கத்தில் ஸ்திதியைக் கொடுக்கும் த்ருவ நக்ஷத்ரத்தோடு விளங்கும் விஷ்ணுலோகத்தைக் குறிக்கும். ஸூர்யன் முதலான க்ரஹங்களெல்லாம் அவரவர்களுடைய மார்க்கத்தில் ஸஞ்சரிப்பதானது த்ருவனுக்கு அதீனமாயிருப்பதால் த்ருவ மண்டலம் மார்க்கஸ்தமென்று சொல்லப்படும். இவ்விதமான ஸவ்ய, அபஸவ்ய, மார்க்கஸ்தங்களென்ற மார்க்கங்களின் ரூபமாயிருப்பவளென்றும் இந்த நாமத்திற்கு அர்த்தம் சொல்லலாம்.

5. பித்ருக்களிருக்கும்படியான லோகத்திற்குப் போகும் வழியானது (பித்ருயாணமானது) அகஸ்த்ய ஸ்தானத்திற்கு வடக்கிலும், அஜவீதிக்குத் தெற்கிலும், வைச்வானர வழிக்கு வெளியாகவும், ஸூர்யன் போகும்வழிக்குத் தெற்காகவுமிருக்கிறது. அங்கு மகாத்மாக்களும் அக்னிஹோத்ரிகளுமான ரிஷிகள் வேதத்தைப் புகழ்ந்துகொண்டு, அப்போதைக்கப்போது தங்கள் தங்கள் மரபில் தோன்றி, வேதத்தைஸ்தாபனம் செய்து, ஆசந்த்ரதாரகம் அங்கு இருக்கிறார்களென்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

'உத்தரம் யத் அகஸ்த்யஸ்ய அஜவீத்யாச்ச தக்ஷிணம் |
பித்ருயாண: ஸ வை பந்த்தா வைச்வாநர பதாத் பஹி: ||

தத்ரா ஸதே மஹாத்மாநோ ருஷயோ ஹ்யக்நிஹோத்ரிண: |
பூதாரம்பக்ருதம் ப்ரம்ஹ சம்ஸந்தே ருத்விகுத்யதா: ||
ப்ராரபந்தே து யே லோகா: தேஷாம் பந்தாஸ்து தக்ஷிண: |
சவிதம் தே புநர்ப்ரம்ஹ ஸ்தாபயந்தி யுகே யுகே ||
ஸம்தப்த தபஸா சைவ மர்யாதாபி: ச்ருதேந ச |
ஜாயமாநாச்ச பூர்வே ச பச்சிமாநாம் க்ருஹாஷ்வை ||
பச்சிமாச்சைவ பூர்வேஷாம் ஜாயந்தே நிதநேஷ்விஹ |
ஏவமாவர்த்தமாநாஸ்தே திஷ்டந்தி நியதவ்ரதா: |
ஸவிதுர் தக்ஷிணம் மார்க்கம் ச்ரிதா ஹ்யாசந்த்ரதாரகம் ||'

(விஷ்ணுபுராணம்-த்விதியாம்சம்)

இவர்கள் வேதத்தில் ப்ரவ்ருத்தி மார்க்கத்தைப் போதிக்கும் கர்ம காண்டத்தைப் பின்பற்றுகிறவர்கள். ஒவ்வொரு யுகத்திலும் வேதத்தை ஸ்தாபித்து அதில் சொல்லப்பட்ட கர்மாக்களைத் தெளிவுறச் செய்யவேண்டியபோதெல்லாம் அவர்கள் தங்கள் குலங்களில் தோன்றி ஜனங்களுக்கு வேதமார்க்கத்தையும் மர்யாதைகளையும் காட்டிவிட்டுத் திரும்பவும் தங்களிருப்பிடத்திற்கு பித்ருயாணத்தின் வழியாக வந்துவிடுவார்களென்று சொல்லப்பட்டிருக்கிறது.

அகஸ்த்ய ஸ்தானமென்பது லோகாலோக பர்வதத்தின் வடக்கு உச்சியென்பதாகச் சொல்லப்படும். லோகபாலகர்கள் இருக்குமிடத்திற்கு லோகாலோக பர்வதம் என்று பெயர்.

'லோகபாலா: ஸ்த்திதா ஹ்யேதே லோகாலோகே சதுர்திசம் |
தஸ்யோத்தரம் அகஸ்த்யஸ்ய ச்ருங்கம் தேவர்ஷி பூஜிதம் ||'

(மத்ஸ்ய புராணம்)

யன்பது மூலம், பூராடம், உத்திராடம்.
யது. வைச்வாநர பதமென்பது பூரட்டாதி, உத்திராட்டாதி,
இவை அடங்கியது.

6. தேவர்களிருக்கும்படியான லோகத்திற்குப் போகும் வழியானது (தேவயாநமானது) நாக வீதிக்கு வடக்கிலும், ஸப்தர்ஷிகளிருப்பதற்குத் தெற்கிலும், ஸூர்யனுடைய மார்க்கத்திற்கு வடக்காகவுமிருக்கிறது. அங்கு, இந்த்ரியங்களை வசப்படுத்தினவர்களும், விமலர்களும், ப்ரம்ஹசாரிகளும் ஸந்ததியை வெறுத்தவர்களும், ஊர்த்வரேதஸ்ஸுகளும் (ஆகவே) ம்ருத்யுவை ஜயித்தவர்களும், ஸித்தியை அடைந்தவர்களுமான முனீச்வர்களிருக்கிறார்கள். அவர்கள், லோபத்தை விட்டவர்களாய், மமதனத்தைத் தள்ளியவர்களாய், இச்சை,

த்வேஷம் மூதலியவைகளில்லாதவர்களாய், ப்ரவ்ருத்தி மார்க்கத்தைப் பரித்யாகம் செய்தவர்களாய், சுத்தர்களாய், ப்ரளய காலம் வரையில் பிறப்பு இறப்பு இல்லாதவர்களாய் இருப்பவர்கள்.

'நாகவீத்யுத்தரம் யச்ச ஸப்தர்ஷிப்யச்ச தக்ஷிணம் |
உத்தர: ஸவிது: பந்தா தேவயாநஸ்து ஸ ஸ்ம்ருத: ॥
தத்ர தே வஸிந: ஸித்தா விமலா ப்ரம்ஹசாரிண: |
ஸந்ததிம் யே ஜுகுப்ஸந்தி தஸ்மாத் ம்ருத்யுஜிதச்ச தே ॥
அஷ்டாசீதி ஸஹஸ்ராணி மூநீநாம் ஊர்த்வரேதஸாம் |
உதக் பந்தாநமர்யம்ண: ஸ்த்திதாச்சாபூதஸம்ப்லவம் ॥
தே ஸம்ப்ரயோகாத் லோபஸ்ய மைதுநஸ்ய ச விவர்ஜநாத் |
இச்சாத்வேஷாப்ரவ்ருத்யா ச பூதாரம்ப வர்ஜநாத் ॥
புநச்சாகாமஸம்யோகாத் இச்சாதேர் தோஷ தர்சநாத் |
இத்யேவம் காரணை: சுத்தாஸ்தே அம்ருதத்வம் ஹி பேஜிரே ॥
ஆபூத ஸம்ப்லவம் ஸ்த்தாநம் அம்ருதத்வம் ஹி பாஷ்யதே |
த்ரைலோக்ய ஸ்த்திதிகாலோ(அ)யம் அபுநர்மார உச்யதே ॥'
(மத்ஸ்ய புராணம்)

7. ஸப்தர்ஷிகள் ஸ்தானத்திற்கு வடக்கானதும் மேலானதும் த்ருவனிருப்பதுவுமான இடத்திற்கு விஷ்ணுபதமென்ற பெயர். அது தோஷங்களை இல்லாதவர்களும், இந்த்ரியங்களை அடக்கினவர்களும், புண்ய பாபங்களில்லாதவர்களும், துக்க ஹேதுக்கள் கொஞ்சமுமில்லாதவர்களுமான யதிகளிருக்குமிடம். அவர்கள் அங்கிருக்கும் விஷ்ணுவோடு தன்மயமாய், ஸதா அவரிடம் சென்ற மனதுடையவர்களான யோகிகள்.

'ஊர்த்வோத்தரம் ருஷிப்யஸ்து த்ருவோ யத்ர வ்யவஸ்த்தித: |
ஏதத் விஷ்ணுபதம் திவ்யம் த்ருதீயம் வ்யோம்நி பாஸ்வரம் ॥
நிர்தூத தோஷ பங்காநாம் யதீநாம் ஸம்யதாத்மநாம் |
ஸ்த்தாநம் தத் பரமம் விப்ர புண்யபாப பரிக்ஷயே ॥
அபுண்ய புண்யோபரமே க்ஷீண க்லேஷார்த்திஹேதவ: |
யத்ர கத்வா ந சோசந்தி தத் விஷ்ணோ: பரமம் பதம் ॥
நிர்வ சக்ஷூராதிதம் யோகிநாம் தன்மயாத்மநாம் |
விவேக ஞாநத்ருஷ்டம் ச தத் விஷ்ணோ: பரமம் பதம் ॥
[மத்ஸ்ய புராணம்]

இவ்விதமான மூன்று லோகங்களின் ரூபமாய் அம்பாளிருப்பதாக இந்த நாமத்தில் சொல்லப்பட்டதாகவும் சொல்லலாம்.

8. உபாஸனைக்ரமத்தில் வாம மார்க்கமென்றும் தக்ஷிண மார்க்கமென்றும் இரண்டுமார்க்கங்களிருக்கின்றன. அவற்றில்

வாமமார்க்கமென்பது தன் தன்னுடைய வர்ணச்ரமப்படி செய்யவேண்டிய எல்லாக்கர்மாக்கள் (அக்னிஹோத்ரம் முதலான ச்ரௌத கர்மாக்களென்ன, அஷ்டகை முதலான ஸ்மார்த்த கர்மாக்களென்ன மந்த்ரஸித்தி முதலான தாந்த்ரிக மான கர்மாக்களென்ன) எல்லாவற்றிலும் எந்தெந்த தேவதைகள் ப்ரதானமாகவோ, அங்கபூதமாகவோ சொல்லப்பட்டிருக்கிறார்களோ அவர்கள் ஸ்தானத்திலெல்லாம் தான் உபாஸிக்கும் (த்ரிபுர பைரவீ முதலான) தேவதையைப் பாவனைச் செய்வது. இதற்காக, இந்த மார்க்கத்திலுள்ளவர்கள் கர்மாக்களின் மந்த்ரங்களில் அந்தந்த தேவதையின் பெயர் வருமிடமெல்லாம் அதற்கடுத்தாற்போல் தான் உபாஸிக்கும் தேவதையின் பெயரை எப்போதும் சேர்த்துச் சொல்லுவார்கள்.

'ஸர்வத்ர தேவீ மந்த்ரோஷ்ண வைதிகேஷ்வபி பைரவீம் |
த்ரிபுராம் சிந்தயேத் நித்யம் வேத மந்த்ரோஷ்ண சக்ரமாத் ||
தேவ நாமஸ்ண ஸர்வேஷ்ண பைரவீதி பதம் ஸதா |
குர்யாத் விசேஷணம் நித்யம் நோச்சார்யம் நிர்விசேஷணம் ||
ஆப: புநந்து ப்ருதிவீம் உக்த்வா த்ரிபுரபைரவீம் |
குர்யாத் ஆசமநம் விப்ரோ த்ருபதாயாம் ததா சரேத் ||
இதம் விஷ்ணுர் பைரவஸ்து விசக்ரம இதீரிதம் |
ம்ருதாலம்பந க்ருத்யேஷ்ண மந்த்ரமேதம் நியோஜயேத் ||
காயத்ரீம் த்ரிபுராத்யாம் து பைரவீம் உச்சரந் சிவாம் |
மார்த்தண்ட பைரவாயேதி ஸமர்யாயார்க்யம் நிவேதயேத் ||
உதுத்யம் ஜாதவேதஸம் தேவம் வஹந்தி கேதவ: |
த்ருசே விச்வாய ஸூர்யம் து சேஷ்ண பைரவ மீரயேத் ||
தர்ப்பணதெள ப்ரயுஞ்ஜீத த்ருப்யதாம் ப்ரம்ஹ பைரவம் |
ஆவாஹநே ச ஸ்வபித்ருந் பைரவாதி தர்ப்பயேத் ||
த்ருப்யதாம் பைரவி மாத: பிதர்பைரவ த்ருப்யதாம் |
ஆதௌ ச த்ரிபுராம் பூர்வம் தர்ப்பணேஷ்வபி ப்ரயோஜயேத் ||
ஜ்யோதிஷ்டோமாச்வமேதாதௌ யத்ர யத்ர ப்ரபூஜயேத் |
தத்ர பைரவ ரூபேண தேவீமபி ச பைரவீம் ||
ஏவம் து வாம்யபாவேந யஜேத் த்ரிபுர பைரவீம் |
ஏஷா வாமேந மார்கேண பூஜ்யா தக்ஷிணதாம் விநா ||'

(காளிகா புராணம்)

9. மேலே சொல்லிய மார்கத்தில் தேவ, ரிஷி, பித்ருக்களுடைய ருணை சோதனம் (கடனைத் தீர்ப்பது) எற்படுகிறதில்லையாகையால், அதின் அபாவத்திலுண்டாகும் பாபமானது அந்த மார்க்கத்தைச் சேருகிறது. தக்ஷிண மார்க்கத்திலோவென்றால், ச்ரௌதம் முதலான ஸகல கர்மாக்களிலும்

அதில் சொல்லப்பட்ட தேவதையின் ஸ்தானத்தில் தான் உபாஸிக்கும் தேவதையைப் பாவனை செய்யவேண்டுமென்ற நிர்ப்பந்தம் யாதொன்றும் கிடையாது.

'ருஷீன் தேவாந் பித்ரும்ச்சைவ மநுஷ்யாந் பூதஸஞ்சயாந் |
யோ யஜேத் பஞ்சபிர் யஜ்ஞை: ருணைராம் பரிசோதனை: ||
விதிவத் ஸ்நாந தாநாப்யாம் ஸர்வம் யத் விதிபூஜநம் |
க்ரியதே ஸரஹஸ்யம் து தத் தாக்ஷிண்ய மிதீரிதம் ||'
(காளிகா புராணம்)

10. வாம மார்க்கத்திலிருப்பவனுடைய கொள்கையென்ன வென்றால்—தான் உபாஸிக்கும் தேவதையைப்பற்றிச் செய்ய வேண்டியதாக அந்தந்த தந்த்ரங்களில் சொல்லியிருக்கும் கர்மாக்களுக்கு மற்ற (ஸாமான்ய) கர்மாக்களெல்லாம் அங்கங்களென்பது. மற்ற தேவதைகளுக்குச் செய்யும் கர்மாக்களும், கொடுக்கும் ஹவிர்பாகம் முதலியவைகளும், தான் உபாஸிக்கும் தேவதையைத்தான் சேருவதாக அவன் பாவிப்பான். அவர்களையும் தான் உபாஸிக்கும் தேவதையாக அவன் பாவிப்பான். தக்ஷிண மார்க்கத்திலிருப்பவனுக்கு அவ்விதமான பாவனை நிர்பந்தம் யாதொன்றும் கிடையாது. ஆகவே அவன் செய்யும் கர்மாக்களின் மூலமாக தேவ, ருஷி, பித்ருக்களுடைய ருணமானது தீர்ந்துவிடுவதால் (வாம மார்க்கத்தைப்பிச் சொல்லப்பட்ட) பாபமானது ஏற்படுவது

11. இவ்விதம் ருணசோதனத்தின் ஸம்பந்தமான பாபம் யாதொன்றும் தக்ஷிண மார்க்கத்தில் ஏற்படுவதில்லையாகையால் அந்த மார்க்கத்தில் மோக்ஷமானது சீக்கிரம் கிடைக்கும். வாம மார்க்கத்திலோ (அவ்விதமான பாபம் ஸம்பவிப்பதான ப்ரதிபந்தகத்தின் காரணமாக) மோக்ஷம் கிடைப்பதற்குத் தாமதம் ஏற்படும்.

12. வாம மார்க்கத்திலிருப்பவன் ஸாமான்ய கர்மாக்களைச் செய்தாலும் செய்யலாம், செய்யாவிட்டாலும் பாதகமில்லையென்பது அவனுடைய கொள்கை. அவனுடைய மார்க்கத்தில் ஸகலமும் அவன் உபாஸிக்கும் தேவதையைப்பற்றியது. அவன் செய்பவைகளும், கொடுப்பவைகளும் அவன் உபாஸிக்கும் தேவதைக்குப் போய்ச் சேருவதால் மேலே சொல்லிய ருணசோதனம் ஏற்படுவதில்லை. அதினால் மோக்ஷமடைய தாமதம்

13. மேலே சொல்லிய மார்க்கங்களின் பெயர்களை அனுஸரித்து தக்ஷிண மார்க்கத்தில் அம்பாள் உபாஸிக்கப்படும் போது அம்பாளுக்கு தக்ஷிணை என்றும், உபாஸகனுக்கு தக்ஷிணை னென்றும், வாம மார்க்கத்தில் அம்பாளுக்கு வாமா என்றும், உபாஸகனுக்கு வாமனென்றும் பெயர்கள் சொல்லப்படும்.

'ஸர்வத்ர பித்ருதேவாதௌ யஸ்மாத் பவதி தக்ஷிணः |
தேவீ ச தக்ஷிணை யஸ்மாத் தஸ்மாத் தக்ஷிண உச்யதே ॥
யா தேவீ பூஜ்யமாநா து தேவாதீநாம் அசேஷத: |
யக்ஞ பாகாந் ஸ்வயம் புங்க்தே ஸா வாமா து ப்ரகீர்த்திதா ॥
பூஜகோ(அ)பி பவேத் வாமஸ் தம்மார்க்கே ஸததம் ரத: |
பஞ்சயஜ்ஞாந் ந வா குர்யாத் ந குர்யாத் வாமபூஜநே ॥
அந்யஸ்ய பூஜாபாகம் ஹி யதோ க்ருண்ஹாதி வாமிகா |
யः பூஜயேத் வாம்ய பாவைः ந தஸ்ய ருணசோதநம் ॥
பித்ரு தேவ நராதீநாம் ஜாயதே து கதாசந |
ஸர்வத்ர த்ரிபுராயோக: தேந மார்க்கேண கச்சத: ॥
யதா ஜாயேத ப்ராஜ்ஞஸ்ய ததா மோக்ஷமவாப்நுயாத் |
சிரேண லபதே மோக்ஷம் வாமேந த்வபுரோ நர: |
ருண சோதநைஜ: பாபை: ஆக்ராந்தத்வேந பைரவ: ॥'

14. இப்படி இவ்விரண்டு மார்க்கங்களில் வாம மார்க்கமானது அனுஷ்டானத்தில் கடினமாயும், மோக்ஷம் அடையச் செய்வதில் தாமதமான ஸாதனமாயுமிருக்கையில், சிஷ்டர்களுக்கு அந்த மார்க்கத்தில் ப்ரவ்ருத்தி ஏற்படுவதை நாம் பார்க்கிறோமே? அதன் காரணமென்ன? சிஷ்டர்களில் இரண்டு வகையுண்டு, ஐஹிக போகத்தில் விரக்தர்களான சிஷ்டர்கள் மோக்ஷத்தை அடைவதில் கொஞ்சம்கூட தாமதத்தை ஸஹிக்க மாட்டார்களாதலால் அவர்கள் தக்ஷிண மார்க்கத் தையே அவலம்பிப்பார்கள். மற்றவர்கள் பல்வகையான ஐஹிக போகங்களை இந்த ஜன்மத்திலேயே அனுபவிக்க வேண்டுமென்கிற ஆசையினால், மோக்ஷமடைவதில் ஏற்படும் தாமதத்தையும் ஸஹித்துக்கொண்டு வாம மார்க்கத்தைப் பின்பற்றுவார்கள். அந்த மார்க்கமானது பக்தி, முக்தி, இரண்டையும் கொடுக்குமாதலால் வாமாசாரிகள் விஷயப் பற்றுடையவர்களாய் அந்த மார்க்கத்தையே அனுஸரிக்கும் ப்ரவ்ருத்தியோடு கூடியவர்களாயிருக்கிறார்கள். வாம மார் க்கத்தை அனுஸரிப்பவன்-

'இஹலோகே ஸகைச்வர்யயுக்த: ஸர்வத்ர வல்லப: |
மதநோபம காந்தேந சரீரேண விராஜித: ll
ஸராஷ்ட்ரகம் ச ராஜ்யாநம் வசிக்ருத்ய ஸமந்தத: |
மோஹயந் வநிதா: ஸர்வா: குர்வம்ச்ச மதவிஹ்வலா: ll
ஸிம்ஹாந் வ்யாக்ராந் தரக்ஷூம்ச்ச பூதப்ரேத பிசாசகாந் |
வசிகுர்வந் விசரதி வாயுவேகோ ஹ்யவாரித: ll'

[காளிகா புராணம்)

என்று சொல்லப்பட்டபடி, ஸகல ஸௌபாக்யத்தோடும், ஸௌந்தர்யத்தோடும் ஸகல ராஜர்களையும் வசப்படுத்திக் கொண்டு, மநுஷ்யர்களுக்கெல்லாம் மன்னாதனாய், ஸகல ப்ராணிகளுக்கும் யஜமானனாய், ஸ்வேச்சாசாரியாய் விளங்குகிறானென்பதாகச் சொல்லப்படுவான்.

15. இந்த இரண்டுவிதமான உபாஸநா மார்க்கங்களில் மஹாமாயா, சாரதா, சைலபுத்ரீ இவர்களைத் தக்ஷிணமார்க்கமாகவே உபாஸிக்கவேண்டுமென்றும், மற்றவர்களை இவற்றில் எந்த மார்க்கமாகவும் உபாஸிக்கலாமென்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

'பாலாம் வா த்ரிபுராம் தேவீம் மத்யாம் வாப்யத பைரவீம் |
யோ யஜேத் பரயா பக்த்யா பஞ்சபாணேபம: க்ருதி ll
காமேச்வரீம் து காமாக்யாம் பூஜயேத்து யதேச்சயா |
தாக்ஷிண்யாத் அதவா வாம்யாத் ஸர்வதா ஸித்திமாப்நுயாத் ll
மஹாமாயாம் சாரதாம் ச சைலபுத்ரீம் ததைவ ச |
யதா ததா ப்ரகாரேண தாக்ஷிண்யேநைவ பூஜயேத் ll
யோ தாக்ஷிண்யம் விநா பாவம் மஹாமாயாமிஹ அர்ச்சதி |
ஸ பாப: ஸர்வலோகேப்ய: ச்யுதோ பவதி ரோகதக்ருக் ll
அந்யாஸ்து சிவதூத்யாத்யா: யா தேவ்ய: பூர்வமீரிதா: |
தா தாக்ஷிண்யாத் வாமதோ வா பூஜநீயாஸ்து ஸாதகை: ll'

[காளிகா புராணம்]

16. ஆயினும், இவ்விருவகையான உபாஸகர்களில் வாமாசாரியின் உபாஸநையானது இதர தேவதைகளுடைய ஆசையைப் பூர்த்தி செய்யாததாலும், தக்ஷிணாசாரியின் உபாஸநையிஞல் ஸகல தேவர்களுடைய ஆசையும் பூர்த்தியடைவதாலும் தக்ஷிணமார்க்கமே உத்தமமானதென்று சொல்லப்பட்ட

'ஸர்வ்யா: ஸர்வாஸ்து தேவ்ய: ஸ்யுர்வாமா: ஸோ(அ)ந்யாசாபரிலோபக: |
ஸர்வாசா பூரகோ யஸ்மாத் தக்ஷிணஸ் தத உத்தம: ll'

[காளிகா புராணம்]

17. இந்த மார்க்கங்களைப்பற்றி இந்நாமத்தில் சொல்லப்பட்டதென்னவென்றால் அப்பாள் ஸவ்ய, அபஸவ்ய (வாம) பென்ற இரண்டு மார்கங்களிலுமிருப்பவள் என்பது. அதாவது, அந்த இரண்டு மார்கங்களாலும் அம்பிகையை உபாஸிக்கலாம் என்று அர்த்தம். வாம மார்கத்திலேயே உபாஸிக்கப்படும் த்ரிபுர பைரவீ முதலான தேவதைகளும், தக்ஷிணமார்கத்திலல் மட்டுமே உபாஸிக்கப்படும் சாரதா முதலான தேவதைகளும் யதேச்சமாக (இஷ்டப்பட்டபடி வாம மார்க்கத்திலாவது தக்ஷிண மார்க்கத்திலாவது) உபாஸிக்கப் படும் சிவதூதீ முதலான தேவதைகளும், பரமார்த்தத்ருஷ்டியோடு பார்த்தால் த்ரிபுரஸுந்தரியோடு அபேதமாயிருப்பதால் அவர்களை உபாஸிப்பதின் மூலம் அம்பிகையே உபாஸிக்கப் படுகிறாளென்று ஏற்படுவதால், ஸவ்யாபஸவ்யமென்ற மார்க் கங்கள் இரண்டிலும் அம்பாளிருப்பது இந்த நாமத்தில் சொல்லப்பட்டது.

18. **'ஸவ்யாபஸவ்ய ஸௌக்யதாயை'**

என்று சிவஸூத்ரத்தில் சொல்லப்பட்டபடி ஸவ்யமென்பது இடா என்ற நாடியையும், அபஸவ்யமென்பது பிங்களா என்ற நாடியையும், மார்க்கமென்பது ஸுஷும்ணையையும் குறிக்கும். இவற்றிலிருப்பவள், அதாவது இவற்றின் ஸம்பந்தமான யோகாப்யாஸத்தால் அடையப்படுகிறவள் ஸவ்யாபஸவ்ய மார்க்கஸ்தா என்றும் சொல்லலாம்.

மேலே சொல்லிய மார்க்கங்களிலிருந்து (உபாஸனைக் குறைவினால்) ப்ரஷ்டர்களாயிருப்பவர்கள் மிகவும் கொடிய தான ஆபத்திற்குட்படுகிறார்கள் என்பது,

'அத ய ஏதேள பந்தாஸௌ ந விதுஸ்தே கிடா: பதங்கா:
யதிதம் தந்தசூகம் |'

என்ற ச்ருதியில் சொல்லப்பட்டிருக்கிறது. அவர்களுடைய அவிதமான ஆபத்தை, அநாயாஸமாகச் செய்யக்கூடிய தன் னுடைய நாமஸ்மரணம் முதலியதான ஸாதனங்கள் மூலமாகவே அம்பாள் பரமதயையுடன் தடுத்தாளிடுகிறாளென்பதாக அடுத்த நாமத்தில் சொல்லப்படுகிறது.

सर्वापद्विनिवारिणी
ஸர்வாபத்வி நிவாரிணீ (913)

ஸகலவிதமான ஆபத்துக்களையும் விசேஷமாக நிவாரணம் செய்பவள்.

அம்பிகையே சரணமென்பதாக நினைத்திருப்பவர்கள் யாராயிருந்தாலும் அவர்களெல்லோரையும் அவள் காப்பாற்றுகிறார்களென்றும், மற்றக் குணங்களில்லாவிட்டாலும் அம்பாளுடைய நாமங்களை மட்டுமாவது ஸ்மரித்துக்கொண்டு அனன்யசித்தத்துடன் உபாஸிப்பவர்கள் மஹாபோன்ற ஆபத்துக்களுக்குட்பட்டிருந்தாலும் அவர்களையும் அம்பாள் காப்பாற்றுகிறார்களென்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

'யே து ஸங்காந் பரித்யஜ்ய மாமேகம் சரணம் கதா: |
உபாஸதே ஸதா பக்த்யா யோகமைச்வரம் ஆச்ரிதா: ||
ஸர்வபூத தயாவந்த: சாந்தா தாந்தா விமத்ஸரா: |
அமானிநோ புத்திமந்த: தாபஸா: ஸம்யதவ்ரதா: ||
மச்சித்தா மத்கதப்ராணா: மஜ்ஞாநகததேரதா: |
ஸம்ஸாஸிநோ க்ருஹஸ்தாச்ச வநஸ்தா ப்ரம்ஹசாரிண: ||
யே சோக்தைர் லக்ஷணைர் ஹீநா அபி மந்நாமஜாபகா: |
தேஷாம் நித்யாபியுக்தாநாம் ஆபதாம் பர்வதாநபி |
நாசயாமி தராம் ஞாநதீபேந நிராதிநா || [கூர்மபுராணம்]

ஹரிவம்சத்தில் அம்பாளைக்குறித்து விஷ்ணு சொல்லுகையில், மனுஷ்யர்களுக்கு ஏற்படக்கூடிய ஆபத்துக்களைப்பற்றி,

'ந்ருணாம் பந்தம் வதம் ரோதம் புத்ராநாசம் தநக்ஷயம் ;'

என்பது முதலாகச் சொல்லிவிட்டு அவற்றையெல்லாம் அம்பாள் நிவாரணம் செய்வதாக,

'ஆபத்ஸு நிகிலாஸு த்வம் ரக்ஷஸ்யேவ ந ஸம்சய: |'

என்பதாகச் சொல்லப்பட்டது. ப்ரஹ்ம புராணத்தில் ப்ரம்ஹாதிகளால் தேவியைக் குறித்துச் செய்யப்பட்ட ஸ்தோத்திரத்தின் கடைசியில்,

'சரணம் த்வாம் ப்ரபத்யந்தே யே தேவி பரமேச்வரி |
ந தேஷாம் ஆபத: காச்சித் ஜாயந்தே க்வாபி ஸங்கட: ||'

என்று சொல்லப்பட்டது. ஆகவே, ஆபத்துக்காலத்தில் செய்யவேண்டியது அம்பாளுடைய சரணத்யானமொன்றே யென்றும், அந்த ஸ்மரணையானது ப்ரம்ஹாதிகளையும் கிங்கர்களாகச் செய்துவிடுகிறதென்றும் சொல்லப்படுகிறது.

'ஆபதி கிம் கரணீயம் ஸ்மரணீயம் சரணயுகளம் அம்பாயா: |
தத் ஸ்மரணம் கிம் குருதே ப்ரம்ஹாதிகபி கிங்கரீகுருதே ||'

स्वस्था

ஸ்வஸ்த்தா (914)

சாஞ்சல்யமே இல்லாதவள்.

1. அதாவது, துக்கத்தினால் எற்படும் சாஞ்சல்யம் யாதொன்றும் அம்பாளுக்குக் கிடையாதாகையால் இந்த நாமமேற்பட்டது.

2. அல்லது, தன்னிடமே நிலையுள்ளவள் என்றும் அர்த்தம் சொல்லலாம்.

स्व भवः कस्मिं प्रतिष्ठित इति, स्वे महिम्नीति
शाङ्कवाच।' [श्रुति]

3. ஸ்வ: என்றபதம் ஸ்வர்க்கத்தைக்குறிக்கும். அதற்கு அத்யல்பகூடியாக (சுலபமாக) இருப்பவள் ஸ்வஸ்த்தா.

4. ஸு - சோபனமான, அஸ்தா-ஸ்திதியில்லாமலிருப்பது, அதாவது கதி. ஆகவே, சோபனமான கதியைக் கொடுப்பவள் ஸ்வஸ்த்தா.

स्वभावमधुरा

ஸ்வபாவமதுரா (915)

இயற்கையாகவே யாவராலும் விரும்பப்படுகிறவள்.

1. அதாவது, உபாதிகளின் சேர்க்கை யாதொன்றுமில்லாதிருக்கும்போதே ஸகலமானவர்களுடைய விருப்பத்திற்குரிய இடமாயிருப்பவள் என்றும் தாத்பர்யம். மதுரமென்ற பதத்திற்கு,

'मधुरम् रसवत् स्वादु प्रियेषु मधुरो अन्यवत्।
मधुरा सप्तपुष्पायाम् मधूली नगरीषिते: ॥'

என்ற விச்வகோச வசனத்தின்படி ரஸத்தோடிருப்பது, இனிப்பு, ப்ரியத்திற்கு ஸ்தானமாயிருப்பது முதலான அர்த்தங்களுண்டு.

2. அல்லது, ஸ்வ - தன்னுடையதான, பாவ - அவஸ்தானம் (இருப்பிடம்) மதுரா - மதுரா நகரமாக உடையவள் ஸ்வபாவ மதுரா என்றும் சொல்லலாம். மீனாக்ஷிதேவி விளங்கிக்கொண்டிருப்பதும், ஹாலாஸ்ய க்ஷேத்ரமென்ற பெயருடையதுமான (தக்ஷிண) மதுரா என்ற இடத்தில் நிவாஸமாயிருப்பவள். அல்லது அந்த க்ஷேத்ர ரூபமாயிருப்பவள் என்று தாத்பர்யம்.

3. ஸ்வ - தன்னுடைய, பா - ப்ரதிபையில், அவமா - மூதன்மையானவர்களுடைய, தரா-பாரத்தைத் தாங்குகிறவள் ஸ்வபாவ மதுரா என்றும் சொல்லலாம். அதாவது ஆத்ம ஞானத்தில் உத்தமர்களாயிருப்பவர்களுடைய பொறுப்பெல் லாம் அப்பாள் ஏற்றுக்கொள்வதாகத் தாத்பர்யம். எப்படி(தூ:) துகத்தடியானது வண்டியின் ஸர்வோத்தமமான அங்கமாக இருந்துகொண்டு அதின் ஸகல பாரத்தையும் தாங்கி நிற்கிற தோ, அம்மாதிரி ஆத்மஞானிகளின் பாரங்களையெல்லாம் நிர் வாஹம் செய்கிறாள் என்று சொல்லப்பட்டது. [அவம என்ற பதமானது ரக்ஷணமென்ற அர்த்தத்தோடு கூடியதுமட்டும் அல்ல, ப்ரதமமென்ற அர்த்தமும் அதற்கு உண்டு என்பதாக பாஷ்யத்தில் ச்ருதிவாக்யங்களிலிருந்து காட்டப்பட்டிருக்கிறது.

4. ஸ்வ பாட்—ஆத்ம ஞானத்தை, யே வமந்தி — யார் உண்டுபண்ணுகிறார்களோ (கிடைக்கச் செய்கிறார்களோ), அவர் களுக்குள், தூ:—உத்தமமானவள், ஸ்வபா வம தரா என்றும் சொல்லலாம்.

5. ஸ—சோபனமான, அபாவா:—ஸ்வபாவா: ராகம், த்வேஷம், வைஷம்யம், நைர்க்ருண்யம் முதலியவைகளை பாவங் களென்று சொல்லப்படுவதால் அவைகளுக்கு எதிராக (சோ பனமாய்) இருப்பவைகளுக்கு அபாவங்களென்று பெயர். அவைகளையே இங்கு ஸ்வபாவங்களென்று சொல்லியது. அவற்றில் மதுரமாயிருப்பவள் ஸ்வபாவமதுரா. [அபாவங்கள் சோபனங்களென்று சொல்லப்படுவதால், மேலே சொல்லிய பாவங்கள் அசோபனங்களென்று ஏற்படுகிறது.]

6. ஸ்வ—தன்னைச் சேர்ந்தவர்களிடத்தில் (தன் பக்தர் களிடத்தில்) பாவ—அவஸ்தானமாயிருப்பதால், மதுரா—மதுரமானவள், ஸ்வபாவமதுரா என்றும் சொல்லலாம்.

7. ஸ்வ—தன் பக்தர்களுடைய, பாவ—பக்தியினால், மது—உத்தமமான பலத்தைக் கொடுப்பவள் ஸ்வ பாவ மதுரா. ['சரந் வை மது விந்ததி' என்ற ச்ருதிவாக்யத்தில் வரும் மது என்ற பதத்திற்கு இம்மாதிரி அர்த்தம் சொல்லப்பட்டிருக் கிறது.]

8. மேலே சொல்லப்பட்டவை மாதிரி, பாவமென்ற பதத்திற்கு இருக்கும் அபிப்பிராயம், அவதாரம் முதலான

வேறு அர்த்தங்களையும் அநுஸரித்து இந்த நாம அர்த்தம் சொல்லலாம்.

धीरा

தீரா (916)

பண்டிதையாயிருப்பவள்.

1. அல்லது, தைர்யத்தையுடையவள் என்றும் சொல்லலாம.

2. அல்லது, (அத்வைத) புத்தியைக் கொடுப்பதினால் தீரா என்ற பெயர் ஏற்பட்டதாகவும் சொல்லலாம். ஈச்வரனுடைய அனுக்ரஹத்தினால்தான் அத்வைத புத்தியானது ஏற்படுமென்பதாக அவதூத கீதையில்,

'ஈச்வராநுக்ரஹாதேவ பும்ஸாம் அத்வைதவாஸநா |'

என்று சொல்லப்பட்டது.

3. அல்லது, புத்தியைக் கொடுப்பவளான இரா என்ற பெயருடைய தசமீதிதியோடு கூடியவள் தீரா என்றும் சொல்லலாம்.

धीरसमर्चिता

தீரஸமர்ச்சிதா (917)

பண்டிதர்களால் நன்றாக அர்ச்சிக்கப்பட்டவள்.

1. தீரர்கள் ப்ரம்ஹத்தை உபாஸிப்பதைப்பற்றி 'தம் தீராஸ: கவய உந்நயந்தி' என்பதாக ச்ருதியிலும் சொல்லப்பட்டிருக்கிறது.

2. 'பாதய வ பாதாளே ஸ்தாபய வ நிகிலலோகஸாம்
ராஜ்யே |
மாதஸ் தவ பதயுகளம் நாஹம் முஞ்சாமி நைவ முஞ்சாமி ||'

என்று கல்யாணசரணர்கள் தன்னைப்பற்றிச் சொன்னதுமாதிரி, உபாஸக ச்ரேஷ்டர்கள் தங்களுக்கு எது நேரிட்டாலும் அதைப் பாராட்டாமல் அம்பாளுடைய சரணயுகளத்தைக் கெட்டியாகப் பிடித்துக்கொள்ளுவார்களாகையால் அவர்கள் தீரர்களென்று சொல்லப்பட்டார்கள்.

3. அல்லது, தீ-ஞானத்தோடு அபின்னமான, ரஸ:-ஆனந்தத்தையுத்தேசித்து, அர்ச்சிதா-உபாஸிக்கப்படுகிறவள். தீரஸமர்ச்சிதா என்றும் சொல்லலாம்.

चैतन्यार्घ्यसमाराध्या

சைதந்யார்க்ய ஸமாராத்யா (918)

சித்ரூபமான அர்க்யத்தால் நன்ரூய் ஆராதிக்கப்படத்தக்கவள்.

1. சைதன்யமென்பது சித்ரூபம். ஆத்மசைதன்யமென்ரூல் ஆத்மாவின் சித்ரூபம், சித்ரூபமான ஆத்மா. அதையே ஆத்மா என்பதாக 'ஆத்மசைதன்யாராத்மா' என்பதான சிவஸூத்ரத்தில் சொல்லப்பட்டது. அர்க்யம் என்பது பூஜைக்குயோக்யமான ஜலம் முதலியவை. நிராதாரமென்று சொல்லப்படும் பூஜையானது சித் (ஞான)த்துடன் அபேத பாவனைரூபமாயிருப்பது என்று சொல்லப்படும். இதையேதான் 'ஞானமர்க்யம்' என்று பாவநோபநிஷத்தில் சொல்லப்பட்டது.

தந்த்ர ராஜதந்த்ரமும்,

'ஞாதா ஸ்வாத்மா பவேத் ஞாநம் அர்க்யம் ஜ்ஞேயம் ஹவி:
ஸ்ரீசக்ர பூஜநம் தேஷாம் ஏகீகரண மீரிதம் ॥' [ஸ்த்திதம்]

என்று சொல்லப்பட்டது. ஸ்வாத்ம சைதன்யத்தினின்ரும் வேரூகத்தோன்ரும் ஞாத்ரு, ஞான, ஜ்ஞேயங்களின் பேதரூபத்தை அனுஸந்தானம் செய்யாமல், சின்மாத்ர ரூபமாக எல்லாவற்ரையும் ஏகீகரணம்செய்து பாவனைசெய்வதை சைதந்யார்க்யம் என்று சொல்லுகிறது. அவ்விதமான உபாஸனையிரூல் நன்ரூய் ஆராதிக்கப்படத் தகுந்தவளென்பதாக இந்த நாமத்தில் சொல்லப்பட்டது. இவ்விதமான உபாஸனையைப் பற்றி 'ஸோஹம் பாவேந பாவயேத்' என்ரும் 'ஸாஹம் பாவேந பாவயேத்' என்ரும் சொல்லப்பட்டது.

2. அல்லது, சைதன்ய-ஸ்வாத்மாவினுடைய (தன்னுடைய), அர்க்ய-ஞானத்திரூல் (ஸ்வானுபூதியிரூல்), நன்ரூ ஆராதிக்கப்படத்தக்கவள் என்ரும் சொல்லலாம். இவ்விதம் ஸ்வானுபூதியிரூல் ஆராதிப்படுவதைப்பற்றி,

'ஸ்வாநு பூத்யா ஸ்வயம் ஸாக்ஷாத் ஸ்வாத்மபூதாம் மஹேச்
பூஜயேத் ஆதரேணைவ பூஜா ஸா புருஷார்த்ததா ॥' [வாரீம்]

என்பதாக ஸ்காந்தத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

3. அர்க்ய மென்ற பதத்திற்கு,

'அர்க்ய: பூஜாவிதௌ மூல்யேऽப்யர்க்யோ வித்யாத்ருமூலயோ :॥'

என்ற விச்வகோசவசனத்தின்படி வித்யை என்ரும் அர்த்தமுண்டு. (பொதுவாக) மந்த்ரங்களென்று சொல்லப்படு

வதில் ஸ்திரீ தேவதைகளைப் பற்றியவைகளுக்கு வித்யை என்றும், புருஷதேவதைகளைப் பற்றியவைகளுக்கு மந்த்ரங்களென்றும் இரண்டு பேதங்களுண்டு.] ஆகவே, சைதன்யமென்ற பெயருடைய வித்யையினால் ஸாரஸ்வத்யா என்றும் இந்த ரஸத்திற்கு அர்த்தம் சொல்லலாம். இது புவனேச்வரீ மந்த்ரத்தைக் குறிக்கிறதென்பதாக,

'ஜபித்வா தசஸாஹஸ்ரம் மந்த்ரம் சைதன்யவாசகம் |
மஹாபாதக ஸங்கைச்ச முச்யதே பாதகாந்தரை :11'

என்ற ஸ்மிதஸஹஸ்ரீ ச்லோகத்தில் வரும் சைதன்யமென்ற பதத்திற்கு வ்யாக்யானம் செயயப்பட்டிருக்கிறது. அதினால் சைதன்யார்க்யமென்ற பதமானது புவனேச்வரீ மந்த்ரத்தை குறிப்பதாக ஏற்படுகிறது.

4. அல்லது, சைதன்யம் என்பது ஸ்விஷ்டிருடைய ரஸம் என்றும் அர்த்தம்.

சேதனா ஸம்விதி ப்ரோக்தா வாச்யவத் ப்ராணினி ஸ்ம்ருதா |'
(விச்வகோசம்)

அதனால் அர்க்ய — பூஜாத்ரவ்யம். தேவீ பூஜையில் சொல்லப்பட்ட ஸாரஸ்வார்க்ய பாத்ரம், விசேஷார்க்ய பாத்ரம், இரண்டாயிரண்டில் விசேஷார்க்ய பாத்ரத்தில் அதை நிரப்பி ஸ்ரீசக்ரராஜனால் பூஜார்ஹராகச் செய்து, அதினால் செய்யப்படும் தர்ப்பணம் முதலானவைகளால் ஆராதிக்கப்படுகிற ஸ சைதன்யாராகய ஸாரஸ்வாத்யா.

'ஸம்விதாஸவயோர் மத்யே ஸம்விதேவ கரீயஸீ |'
(ருத்ரயாமளம்)

இதில் விபரங்களோட்பற்றி பரசுராம கல்பஸூத்ரம் முதலியவற்றில் பார்க்கவும்.

5. தாந்த்ரிகர்களால் குண்டகோளோத்பவமென்று சொல்லப்படும் பஞ்சபாத்தின் ரஸத்திற்கு சைதன்யமென்று பெயர். (மேலே சொல்லப்பட்ட விச்வகோச வசனத்தின்படி) ப்ராணிகளிடமிருந்து அது ஏற்படுவதால் சைதன்யமென்று பெயர் ஏற்பட்டது. அதினால் ஸாரஸ்வாத்யா என்றும் சொல்லலாம்.

(சித்) சைதன்யமாகிற புஷ்பத்தில் ப்ரியமுள்ளவள்.

1. 'ஜடாகாம் சைதன்ய ஸ்தபக மகரந்த ஸ்ருதி ஜ்ஜரீ' (3) என்று ஆசார்யாள் 'ஸௌந்தர்ய லஹரி'யில் ப்ரயோகித்தது போல் சைதன்யத்தைப் புஷ்பமாகச் சொல்வது கவிகளின் ஸம்ப்ரதாயம். மஹத்தான பலத்தைக் கொடுப்பதால் உபமானம் பொருத்தமாக இருக்கிறது.

2. சைதன்ய குணமென்று இங்கு சொல்லப்பட்டது அதுள்பட புஷ்பாஷ்டகமென்று சொல்லப்படும் எட்டுவித புஷ்பங்களைக் குறிக்கும்.

'அஹிம்ஸா ப்ரதமம் புஷ்பம் இந்த்ரியாணாம் ச நிக்ரஹ: |
சாந்தி:புஷ்பம் தயாபுஷ்பம் ஞானபுஷ்பம் பரம் மதம் |
தப:புஷ்பம் ஸத்யபுஷ்பம் பாவபுஷ்ப மதாஷ்டமம் ||'

இவற்றில் ஞானபுஷ்பத்தை (சைதன்யகுணத்தை) பரமென்பதாகச் சொல்லப்பட்டது.

सदोदिता

ஸதோதிதா (920)

ஸதா உதயமாயிருப்பவள்.

1. அதாவது, அம்பாள் ஸ்வப்ரகாசத்தோடிருப்பதால் நித்ய காலமும் உதயமாகி விளங்கிக்கொண்டிருப்பதாக இங்கு சொல்லப்பட்டது.

2. அல்லது, ஜ்ஞானிகளின் மனதில் பூர்ணமாய் [illegible] என்றும் சொல்லலாம்.

सदातुष्टा

ஸதா துஷ்டா (921)

எப்போதும் ஸந்தோஷத்தோடு கூடியிருப்பவள்.

அல்லது, முந்திய நாம [illegible] சொல்லப்பட்டபடி, ஜ்ஞானிகளிடத்தில் பூர்ணமான [illegible] என்றும் சொல்லலாம்.

तरुणादित्यपाटला

தருணாதித்ய பாடலா (922)

மத்யான்ஹ காலத்திய ஸூர்யனைப்போல் பாடல வர்ணமாயிருப்பவள்.

1. பாடலமென்றால் [illegible] நிறமும் சிகப்பும் கலந்த [illegible]

2. இப்படிச் சொல்வதினால் கௌரீ, ச்யாமா என்று அம்பாளைச் சொல்வதற்கு விரோதம் யாதொன்றுமில்லை யென்பது கவனிக்கவேண்டிய விஷயம். அம்பாளுடைய ரூபத்தின் நிறமானது மூர்த்திபேதங்களை யொட்டியும், த்யான பேதங்களையொட்டியும், வெவ்வேறு விதமாயிருப்பதாகச் ஸ்ம்ருதியில் சொல்லப்படும்.

'சாந்தா தவளவர்ணா மோக்ஷதர்ம ப்ரகல்பநே |
ஸ்த்ரீவச்யே ராஜவச்யே ச ஜநவச்யே ச பாடலா ||
பீதா தநஸ்ய ஸம்பத்தௌ க்ருஷ்ண மாரணகர்மணி |
பப்ரூர் வித்வேஷணே ப்ரோக்தா ச்ருங்காரே பாடலாக்ருதி: |
ஸர்வவர்ணா ஸர்வலாபே த்யேயா ஜ்யோதிர்மயீ பரா ||'

இப்படிப் பல வர்ணமாயிருப்பதைப்பற்றி ச்ருதியிலும்,

'தத் யதா மஹாராஜநம் வாஸோ யதா பாண்ட்வாவிகம்
[யதேந்த்ரகோபம் | '

என்று சொல்லப்பட்டிருக்கிறது.

3. தருணாதித்யனென்பதற்கு மத்யாஹ்ன காலத்து ஸூர்யனென்று பாஸ்கராராயர் அர்த்தம் சொல்லியிருந்தாலும் அர்த்தம் பதமானது இளஞ்சூர்யனை (பாலார்க்கனை) குறிக்கும்.

दक्षिणादक्षिणाराध्या

தக்ஷிணாதக்ஷிணாராத்யா (923)

தக்ஷிண மார்கத்திலும் வாம மார்க ஆராதிக்கத்தக்கவள்.

1. அல்லது, தக்ஷிணையினால் (பூஜோபஹாரங்களால்) தக்ஷிணர்களால் (பண்டிதர்களால்) ஆராத்யா என்றும் சொல்லலாம்.

2. தக்ஷிணர்களென்றால் பண்டிதர்கள், ஸாமர்த்யசாலிகள். அதக்ஷிணர்களென்றால் மூர்க்கர்கள். இவ்விருவகைகளாலும், அதாவது பண்டிதர்களாலும், பாமரர்களாலும், ஆராதிக்கப்பட்டவள் என்றும் சொல்லலாம்.

3. அல்லது, கேவலம் கர்மாவை (கர்மமார்க்கத்தை) மட்டும் அறிய விரும்புகிறவர்கள் (கைப்பிடிப்பவர்கள்) தக்ஷி

ர,

ப்ரம்ஹஜ்ஞானிகளென்றும் சொல்லலாம்.

இவ்விதமாக, ப்ரம்ஹ ஜ்ஞானமில்லாதவர்களைத் தக்ஷிணர்களென்று,

'வித்யயா ததாரோஹந்தி யத்ர காமா: பராகதா: |
ந தத்ர தக்ஷிண யந்தி நாவித்வாம்ஸஸ் தபஸ்விந: ||'

என்ற ச்ருதிவாக்யத்தின் ஸ்யாக்யானத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

இவ்விருவிதமான உபாஸகர்களால் இந்த அம்பாள் ஆராதிக்கப்படுவது இந்த நாமத்தில் சொல்லப்பட்டது.

'சதுர்விதா பஜந்தே மாம் ஜந: ஸுக்ருதினோ(அ)ர்ஜுந |
ஆர்த்தோ ஜிக்ஞாஸு: அர்த்தார்த்தீ ஞாநீ ச பரதர்ஷப ||'
[கீதை]

दरस्मेरमुखाम्बुजा

தரஸ்மேரமுகாம்புஜா (924)

கொஞ்சும் புன்சிரிப்போடு கூடிய முகாரவிந்தத்தையுடையவள்.

1. முகம், கரம், பாதம் இவற்றைத் தாமரை புஷ்பத்திற்கு ஒப்பிடுவது கவிகளின் ஸம்ப்ரதாயம்.

'கராரவிந்தேந பதாரவிந்தம் முகாரவிந்தே விநிவேசயந்தம் |
வடஸ்ய பத்ரஸ்ய புடே சயாநம் பாலம் முகுந்தம்
மநஸா ஸ்மராமி ||'

2. முகத்தையே (தாமரை) புஷ்பமாக உடையது - அதாவது, முகமாகிற தாமரை புஷ்பத்திற்கு அழிக்காம்புபோலிருப்பது கழுத்து, அது தர - சங்கம்போல், ஸ்ரேஷ்டமாக - சோபிக்கிறதாக உடையவள் தரஸ்மேர முகாம்புஜா என்றாம் சொல்லுவார். கழுத்தை இப்படிதிரி சங்கத்திற்கு ஸமமாக 'கம்பு கண்டீ' முதலான பதங்களில் சொல்வது கவிகளின் வழக்கம்.

3. அல்லது, தர — பயகாலத்திலும், ஸ்ரேஷ்டமான முகாம்புஜத்தையுடையவளென்றும் சொல்லலாம். அதாவது, கல்பாந்தம் (ப்ரளயம்) முதலான பயங்கரமான காலங்களில் பிறருடைய முகங்களில் பயத்தினால் வைவர்ண்யம் ஏற்படுகையில், அம்பாள் அப்போதும் புன்சிரிப்புடன் விளங்கிக்கொண்டிருக்கிறாளென்பது தாத்பர்யம்.

4. தர - (பக்தர்களை) ஆதரிக்கும் விஷயத்தில், ஸ்ரேஷ்ட —ப்ரஸன்னமான, முகாம்புஜத்தையுடையவளென்றும் அர்த்தம் சொல்லலாம்.

இதற்கடுத்தாற்போல் வரும் பாதிச்லோகமாகிய,
'கௌலிநீ, கேவலா, ஊர்க்ய, கைவல்ய பததாயிநீ |'
என்பதில் நான்கு நாமங்கள் வருகின்றன, அவற்றில் மூன்று மூன்றே வர்ணனை.

'குலாங்காரா குலாந்தஸ்தா கௌலிநீ குலயோகிநீ |'
'க்லீம்காரீ கேவலா குஹ்யா கைவல்ய பததாயிநீ |'

ஆகவே, புனருக்தி என்ற தோஷத்தைப் போக்குவதற்காக இவற்றை சரியாகப் பிரித்துக்கொண்டிய அவசியம் ஏற்படுகிறது. அதற்காக சலாகூர ஸமித்ரகாரர் இந்தப் பாதி ச்லோகத்தை 'கௌலிநீ', 'கேவலாSர்க்ய கைவல்ய படதாயிநீ' என்பதாக இரண்டு பாகங்களாகப் பிரித்திருக்கிறார். ஏற்கனவே 'கௌலிநீ' என்ற வார்த்தையிடத்தில் அவர் அனைத்தினீ கௌலிநீ குலியோகிநீ' என்ற சேர்த்திருப்பதால் அவர் பாதத்தின் பொருத்தத்தில் ஏற்படவில்லை. பாஸ்கராசார்யரோ 'கௌலிநீ' என்ற வார்த்தையை அனைத்தினீ சாமான்யமாகவும் 'குலியோகிநீ' என்பதை மட்டும் தனி சாமான்யமாகவும் அவர் பிரித்திருப்பதில் பாதங்களின் கணக்கு ஒன்றாகக் கூட இருக்கலாமே என்ற தோன்றலாம். ஆயினும்,

'ப்ரணவித்ரீ ப்ரசண்டாக்ஞா ப்ரதிஷ்டா ப்ரகடாக்ருதி: |'

என்பதில் வரும் 'ப்ரகடாக்ருதி:' என்பதை சலாகூர ஸமித்ரகாரர் 'ப்ரகடா', 'ஆக்ருதி:' என்று இரண்டாகப் பிரித்திருக்கையில், பாஸ்கராசார்யரோ அனைத்தையும் ஏதோ சாமான்யமாகச் சொல்லிவிட்டதால் பாதத்தின் பொருத்தத்தைப் பற்றிக் கவலைகொள்ள விரும்பாதிருந்தால் பாஸ்கரத்தின் மூலத்தைப் பார்த்துக்கொள்ளக் கோரப்படுகிறது.

कौलिनीकेवला

கௌலிநீ கேவலா (925)

கௌல தர்மத்தையும் கேவலமென்ற ஞானத்தையுமுடையவள்

1. சுத்த ஞானம் கேவலம் என்று சொல்லப்படுகிறது. அவ்விதமான ஸாதகர்கள் அனைவரும் ஸஹஜ தந்த்ரங்களில் காணப்படுகின்றனர்.

2. அல்லது, ஸகலதர்மங்களிலிருந்தும் விடுவிக்கப்பட்டவள் (அதாவது, தர்மங்கள் யாதொன்றுமில்லாதவள்) கேவலா என்றும் சொல்லலாம்.

3. அல்லது, ஸுக, துக்கங்களிலிருந்தும் விடுவிக்கப்பட்டவள் கேவலா என்றும் சொல்லலாம். அவ்விதமான அர்த்தமானது 'தத் விமுக்திஸ்து கேவலீ' என்ற சிவஸூத்ரத்தில் கேவல பதத்திற்குச் சொல்லப்பட்டிருக்கிறது. [இங்கு வரும் தத் என்ற பதமானது இதற்கு முந்திய ஸூத்ரமான 'ஸுகா ஸுகயோர் பஹிர் மனனம்' என்பதில் சொல்லப்பட்ட ஸுக துக்கங்களைக்குறிக்கும்.

4. கேவலமென்ற பதத்திற்கு,

'கேவலம் ஞானமேதே ஸ்யாத் கேவலவச்சைக க்ருத்ஸ்நயோ:।
நிர்ணீதே கேவலம் சோக்தம் கேவல: குஹநே க்வசித்॥'

என்ற விச்வகோச வசனத்தின்படி ஏக (ஒன்றான), க்ருத்ஸ்ந (முற்றிலுமான), நிர்ணயிக்கப்பட்ட, என்ற அர்த்தங்களுண்டு. இவற்றையொட்டியும் இங்கு அந்தப்பதத்திற்கு அர்த்தங்கள் சொல்லலாம். ஆயினும் இவற்றிலுல் ஏற்படுவது என்னவென்றால் அம்பாள் கேவலம் கௌலதர்மத்தையே உடையவள் என்ற அர்த்தம் தான்.

5. அல்லது, கௌலினிகள் (கௌலமதத்தை அனுஷ்டிக்கும் ஸ்த்ரீகள்) எவளால் ஞானவதிகளாக ஆகிறார்களோ, அவள் கௌலினி கேவலா என்றும், கௌலினிகளால் நிர்ணயிக்கப்பட்டவள் கௌலினீ கேவலா என்றும் சொல்லலாம்.

6. [இந்த நாமத்திற்கு 'காலினீ கேவலா' என்ற பாடமாந் தரமிருப்பதாகச் சிலர் சொல்லுவார்கள். (பாஸ்கர ராயர் இதைத்சொல்லவில்லை.) அப்போது, காலதர்மஸ்வரூபிணீ யாயும் ஒருவித தர்மமில்லாதவளாயுமிருப்பவள் என்ற அர்த்தம்வற்படும். அல்லது காலநிர்ணய தேவதைகள் எவளால் கேவலைகளாய் (ஸாரமில்லாதவர்களாய்) இருக்கிறார்களோ அவள் காலினீ கேவலா என்றும் சொல்லலாம். அதாவது, கால நிர்ணயத்திற்கு அதீதமாயிருப்பவள் என்றதாத்பர்யம்.]

अनर्घ्यकैवल्यफददायिनी

அநர்க்ய கைவல்ய பத தாயிநீ (926)

விலையற்றதான கைவல்ய பதத்தைக் கொடுப்பவள்.

1. அதாவது, அமூல்யமான - விலை மதிக்க முடியாத (அபரிச்சின்னமான) கைவல்யமென்ற ஐந்தாவது முக்தியைக் கொடுப்பவள் என்று தாத்பர்யம்.

2. 'அனர்க்ய கைவல்ய பத தாயிநீ' என்ற பாடபேதத்தில் அ (எங்கும் நிறைந்திருக்கும்) கைவல்ய பதமென்றும், அகைவல்ய (கைவல்யம் என்பது வேறு என்று இல்லாததான) பதமென்றும் அர்த்தம் சொல்லலாம்.

स्तोत्रप्रिया

ஸ்தோத்ர ப்ரியா (927)

ஸ்தோத்ரங்களில் ப்ரியமுள்ளவள்.

1. ஸ்தோத்ரமென்பது இருவகைப்படும். லௌகிக மான ஸ்தோத்ரமானது குணங்களைப்பற்றிச் சொல்வது. அது ராஜஸ்காரர், ஆர்யாதர், லிங்காங்கத்தைச் சொல்வது, பராக்ரமத்தைச் சொல்லுவது, விபூதியைப்பற்றிச் சொல்லுவது, ப்ரார்த்தனை செய்வது என்பதாக ஆறுவகைப்படும்.

நமஸ்காரஸ் ததாசிச்ச லிங்காங்தோக்தி: பராக்ரம: |
விபூதி: ப்ரார்த்தநா சேதி ஷட்விதம் ஸ்தோத்ரலக்ஷணம்||'

இவ்வகைகளை முறை த்ரிஜகத்வந்த்யா (627) ஸ்வஸ்தி மதி (448) பரித்யாஜகதாதிஷ்டாநா (735) பண்டாஸுரேந்த்ர நிர்முக்தசஸ்த்ர ப்ரத்யஸ்த்ர வர்ஷிணீ (79) இச்சாசக்தி ஞானசக்தி க்ரியாசக்தி ஸ்வரூபிணீ (658) லலாடாக்ஷயுதாயிநீ (692) ஏதுவளியவைகளில் பார்க்கலாம். சொல்லப்படும் ஸ்தோத்ரத்தில் வார்த்தெடுத்துக்கூடிய விதயத்தினிடத்திலிருக்கும் குணம் முதலானதைச் சொல்லுவது ராஜஸஸ்தோத்ரம். இவைகளைவிட ஸ்தோத்ரங்களை அந்தணருக்குப் பிரியமானதாக (அதாவது அவர்களால் அந்தணருக்குப் ப்ரியம் வரும்படியாக) இந்த நாமத்தில் சொல்லப்பட்டது.

2. அப்படியான ஸ்தோத்ரமானது தேவர்கள், மனுஷ்யர்கள், பித்ருக்கள், அஸுரர்கள் என்ற தாழ்வானவர்களிடமும் கிடைக்கும். இதற்குப் பல ஆதாரங்கள் சாஸ்த்ரத்தில் கிடைக்கின்றன.

'தாநி வ ஏதாநி சத்வார்யம்பாம்ஸி |
'பஞ்சம்யாமா ஹைதாவாப: புருஷவசஸோ பவந்தி |'
'ஆபோ வை இதம் ஸர்வம் |'

இந்த அர்த்தத்தில், ஸ்தோத்திரம் செய்யும் தேவதைகளுடைய, பிரம்மாக்களிடத்தில் ப்ரியமுள்ளவள் என்றும் இந்த நாமத்திற்கு அர்த்தம் சொல்லலாம்.

स्तुतिमती
ஸ்துதிமதீ (928)

ஸ்துதியை உடைத்தாயிருப்பவள்.

அல்லது, எவளுடைய ஸ்துதியினால் ஞான - ஞானமும், ஈ - ஐச்வர்யமும் கிடைக்கப்பெறுகிறோமோ அவள் **ஸ்துதிமதீ**யென்றும் சொல்லலாம். அதாவது, எந்த ஸ்ரீதத்தினால் ஸ்ரேஷ்டமான ஞானம், ஐச்வர்யம் இவைகளும் கிடைக்குமோ அவள் என்று அர்த்தம்.

श्रुतिसंस्तुतवैभवा
ச்ருதிஸம்ஸ்துத வைபவா (928)

ச்ருதிகளால் நன்றாக புகழப்பட்ட வைபவத்தையுடையவள்.

1. 'நல்லது வார்த்தை: ஸ்யாத் ப்ரிசய:' என்ற ரிகாச வசனத்தினபடி ஸம்ஸ்துதியென்றால் ப்ரிசயம், அனுபவம் என்று அர்த்தம். அப்போது, ச்ருதிகளால் எந்தப் ஆனந்தம் அனுபவிக்கப்பட்ட, அதாவது, என்றும் அறியப்பட்ட வைபவத்தையுடையவள் என்றும் சொல்லலாம்.

2. 'யுகாப்தயோர்தா: ச்ருதயச்சதஸ்ர:'
என்ற சுருதி: வாக்கியத்தில் நிச்சயிக்கப்பட்டபடி ச்ருதியென்ற பதார்த்தம் நான்கு என்ற எண்ணிக்கையைக் குறிக்கும். அதாவது, நான்குவிதமாக அனுபவிக்கப்பட்ட வைபவத்தையுடையவளென்றும் சொல்லலாம். அதாவது,

'சரீரபுருஷ: சந்த:புருஷோ வேதபுருஷோ மஹாபுருஷ: |'

என்ற பஞ்சராத்ர ஆகமத்தில் சொல்லப்பட்ட நான்கு ஸ்வரூபமாயிருப்பவள் என்பதாக தாத்பர்யம்.

3. அப்பிகையானவள் சாந்தி, வித்யா, ப்ரதிஷ்டா, நிவ்ருத்தியென்ற நான்கு ஸ்வரூபமாயிருப்பதாகவும், இவ்விதமான ஸ்வரூபங்களால் சூழப்பட்ட நான்கு மூர்த்திகளாய் பரமசிவன் ஸ்வாதீனமாக்கத்தை அனுபவித்துக்கொண்டிருப்பதாகவும் கூர்ம புராணத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

'சதஸ்ர: சக்தயோ தேவ்யா: ஸ்வரூபத்வே வ்யவஸ்தித: |
அதிஷ்டாய வசாத் தஸ்யா: ச்ருணுத்வம் முனிபுங்கவா: ||

சாந்திர்வித்யா ப்ரதிஷ்டா ச நிவ்ருத்திச்சேதி தா: ஸ்ம்ருதா: |
சதுர்வ்யூஹஸ் ததோ தேவ: ப்ரோச்யதே பரமேச்வர: ||
அயா பரமோ தேவ: ஸ்வாத்மாகந்தம் ஸமச்நுதே |
சதுர்ஷ்வபி ச தேவேஷு சதுர்மூர்த்திர் மஹேச்வர: ||'

मनस्विनी

மநஸ்வி நீ (930)

மனதின் ஸ்வாதந்தர்யத்தோடு இருப்பவள்.

அர்பிகையின் ஸ்வதந்தரமானது பிறருக்கு ஆதீனமானதல்ல வென்பதும், அர்பிகை ஸ்வதந்தரமான ஸ்வரூபத்தோடு கூடியவ ளென்பதும் சாக்தர்களுடைய ஸித்தாந்தம்.

मानवती

மாநவதீ (931)

பெருந்தன்மையோடு கூடிய மனதையுடையவள்.

மானமென்றால் மனதிலுண்டாகிய பெருந்தன்மை, ஆதரவு, சக்தர்களுடைய அபாரதங்களை மன்னிப்பது, ப்ரமாணம், ரதிதேவி அர்த்தங்களாகும். அவையெல்லாம் அம்பாளிட மிருப்பதால் மானவதீ என்ற பெயர் ஏற்பட்டது.

महेशी

மஹேசீ (932)

மஹேச்வரருடைய பத்நீ.

அம்பாளுக்கு இந்தப்பெயர் ஏற்பட்டதற்குக்காரணங்கள்,

'மஹாதேவாத் ஸமுத்பந்நா மஹதப்பிர் யத ஆத்ருதா |
மஹேசஸ்ய யதோர் யஸ்மாத் மஹேசீ தேந ஸா ஸ்ம்ருதா ||'

என்ற ஸ்லோகத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

मङ्गलाकृतिः

மங்-களாக்ருதி: (933)

மங்களரூபமான ஆக்ருதியோடு கூடியவள்.

विश्वमाता

விச்வமாதா (934)

லோகங்களுக்கெல்லாம் ஜநநீயாயிருப்பவள்.

அல்லது, விச்வ: என்ற விஷ்ணுவுக்குப் பெயராலையால், அவருடைய மாதா என்றும் சொல்லலாம். இதேமாதிரி ச்ருதியில் 'லோம: பவதே' என்று ஆரம்பித்து 'ஜநிதாத விஷ்ணே:' என்று சொல்லப்பட்டிருக்கிறது.

जगद्धात्री

ஜகத்தாத்ரீ (935)

ஜகத்தைத் தாங்குகிறவள்.

1. அதாவது, ஸகல ஜகத்திற்கும் ஆதாரமாயிருப்பவ ளென்று தாத்பர்யம்.

2. அல்லது, பூமிரூபமாக இருந்துகொண்டு ஜகத்தைத் தாங்குகிறவள் என்றும் சொல்லலாம்.

3. தாத்ரீ என்றால் உபமாதா, செவிலித்தாய் என்றும் அர்த்தமுண்டு. செவிலித்தாய்போல் ஜகத்தைப் பரிபாலித்துப் போஷித்துவருவதால் ஜகத்தாத்ரீ என்ற பெயர் ஏற்பட்டதாகவும் சொல்லலாம்.

'ஏஷ பூதபால ஏஷ லோகாதர் விதரண ஏஷாம் லோகாநாம்
அலம்பேதாய |' (காண்வ ச்ருதி)

4. அம்பாளுக்கு இந்தப்பெயர் ஏற்பட்டதற்குக் காரணம்,

'யஸ்மாத் தாரயதே லோகாந் வ்ருத்திமேஷாம் ததாதி ச |
துதஞ் தாரணே தாதுர் ஜகத்தாத்ரீ மதா புதை: ||'

என்று தேவீ புராணத்தில் சொல்லப்பட்டது.

विशालाक्षी

விசாலாக்ஷீ (936)

விசாலமான நேத்ரங்களையுடையவள்.

1. 'வாராணஸ்யாம் விசாலாக்ஷீ' என்ற புத்புராண வசனப்படி வாராணஸியிலிருக்கும் அம்பிகைக்கு விசாலாக்ஷீ என்ற பெயராலையால் அந்த ரூபமாக இருப்பவள் என்றும் சொல்லலாம்.

2. விசாலா என்ற பதமானது பதரிகாச்ரமத்தைக் குறிக்கும். ஆயினும் அது ஹிமாசலத்திலிருப்பதால் அங்கிருக்கும் நேபாள பீடத்தையும் குறிக்கும். அம்பிகையைப் பீடரூபிணியாக ந்யாலம் செய்வதில் நேபாளபீடத்தை நேத்ரஸ்தானத்தில் ந்யாலம் செய்வதென்பதாக ப்ரஹ்மாண்ட

டூராணம் முதலியவற்றில் சொல்லப்பட்டிருக்கிறது. அதை அனுஸரித்து, விசால பீடத்தை ஆகுலிஸ்தானமாக உடையவர் இந்த நாமத்திற்கு அர்த்தம் சொல்லலாம்.

विरागिणी

விராகிணீ (937)

வைராக்யத்தோடு கூடியவள்.

வைராக்யமென்றால் ராகம் (பற்றுதல்) இல்லாதிருப்பது.

प्रगल्भा

ப்ரகல்பா (938)

துணிவோடிருப்பவள்.

தைர்யம், பலம் இவற்றோடிருக்கும் ஸ்திரீக்கு ப்ரகல்பா என்ற பெயர். அப்படிகையானவள் ஸ்ருஷ்டி முதலான கர்மாக்கள் செய்வதில் ப்ரௌடையாயிருப்பதால் இந்தப்பெயர் ஏற்பட்டது.

परमोदारा

பரமோதாரா (939)

உத்க்ருஷ்டமான ஔதார்யத்தையுடையவள்.

1. உதாரமென்பது 'உதாரோ தாத்ரு மஹதோ:' என்ற அமரகோச வசனத்தின்படி கொடுப்பதில் தாராளமாயிருப்பதைத் தவிர, மஹத்தானதென்பதையும் குறிக்கும். அப்படிகையானவள் ரிதசர், காலர் இவர்களைக்குறித்து மஹதீயாயிருப்பதால் பரோதாரா என்ற பெயர் ஏற்பட்டது. இதை 'ஆகாசவத் ஸர்வகதச்ச நித்ய:' என்ற ச்ருதியிலும் சொல்லப்பட்டிருக்கிறது.

2. அல்லது, (பர) மேலானதான (மோத) ஆனந்தத்தை (தா) தர்மமாய் (ஸர்வப்ரபாகமாய் கொடுக்கிறாள்) என்றும் சொல்லலாம்.

3. அல்லது, பர - மிகவும் அதிகமான, உத - ஜலத்தை தரும்படி, பரோதஸ் - ஸமுத்ரம். அது இங்கு ஸம்ஸார மாகிற ஸமுத்ரத்தைக்குறிக்கும். அதை நாசம் செய்யும் அர - ஆயுத விசேஷம் போன்றவள் பரமோதாரா என்றும் சொல்லலாம்.

4. இதை மூன்றியநாமம் என்று பிரித்தும் சொல்லலாம். அப்போது, அப-போக்கடிக்கப்பட்ட (இல்லாத), ரமா-ஸந்தோஷத்தையுடையவர்கள், அதாவது தரித்ரர்கள் அபரமா:, அவர்களிடத்தில் உதாரமாயிருப்பவள்-ஐச்வர்யத்தைக் கொடுப்பவள் அபரமோதாரா என்றும் சொல்லலாம்.

परामोदा
பராமோதா (940)

உத்க்ருஷ்டமான கீர்த்தியையுடையவள்.

1. ஆமோதமென்பது பரிபளத்தைக் குறிக்குங்கு கீர்த்தி என்று அர்த்தம்.

2. அல்லது. பர - உத்க்ருஷ்டமானதும், ஆ - எங்கும் பரவியிருப்பதுமான, மோதா — ஸந்தோஷத்தையுடையவள் என்றும் சொல்லலாம்.

मनोमयी
மநோமயீ (941)

மனதையே ரூபமாக உடையவள்.

1. அம்பாள் சிதாகாச ரூபமான சுத்த ப்ரஹ்மத்துக்கு மன:ஸ்தானத்திலிருப்பதாக, அதாவது அதோடு அபேதமாய் அதின் ஸ்பந்த சக்தியாக அம்பாளிருப்பதாக ஹயக்ரீவ ரஹஸ்ய நாமாயணத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

'ஸ பைரவ:சிதாகாச: சிவ இத்யபிதீயதே |
அநந்யாம் தஸ்ய தாம் வித்தி ஸ்பந்தசக்திர் மநோமயீ ||'

2. 'மனஸைவாநுத்ரஷ்டவ்யம்' என்ற ச்ருதியில் சொல்லப்பட்டபடி. ஆத்மஞானம் ஏற்படுவதற்கு மனதுதான் ப்ரதானமாயிருக்கிறபடியால் மன:ப்ரதாநையாயிருப்பவளென்றும் அர்த்தம் சொல்லலாம்.

व्योमकेशी
வ்யோமகேசீ (942)

ஆகாசத்தைக் கேசங்களாக உடையவள்.

1. அம்பாளுடைய விராட் ஸ்வரூபத்தில் வ்யோமமானது கேசமாக இருப்பதால் இந்தப்பெயர் ஏற்பட்டது.

2. சிவனுக்கும் வ்யோமமானது கேசமாக இருப்பதால் அவருக்கு வ்யோமகேசனென்று பெயர். ஆகவே அவருடைய பத்தினியாகிய அம்பாளுக்கு வ்யோமகேசி என்று பெயர் ஏற்படுகிறது.

3. ஒரு பதத்திற்கு க என்பதைச் சேர்த்தால் குறைவானது (சிறியது) என்று அர்த்தம் ஏற்படும். ஆகவே வ்யோமகமென்றால் அல்பமான, சிறியதான ஆகாசம் என்று அர்த்தம். அதற்கும் ஈ என்றால் அங்குக்கூட வ்யாபித்திருப்பவளென்று அர்த்தம்.

4. வ்யோமகேசனை சிவனுக்குத் திக்குகள் பத்னீ என்பதாகச் சொல்லப்பட்டிருப்பதால் அவ்விதமான திக் ஸ்வரூபமாக இருப்பவளென்றும் சொல்லலாம்.

विमानस्था

விமாநஸ்தா (943)

விமானத்தில் வீற்றிருப்பவள்.

1. விமானம் என்பது ஆகாசத்தில் போகும் வாஹனம். அதிலிருப்பவர்கள் விமானஸ்தர்கள்—தேவர்கள். அவர்களோடு அம்பாள் அபின்னமாக இருப்பதால் அந்த பெயர் ஏற்பட்டது.

2. அல்லது, வி - விசேஷமாக, மான - ஆதரிப்பதில், ஸ்தா - ஸ்திதியோடு இருப்பவள், அதாவது, பக்தர்களை ஆதரிப்பதில் விசேஷமான பற்றுதலையுடையவள் என்றும் சொல்லலாம்.

3. அல்லது, விசேஷமான மான - கௌரவத்தோடுகூடியது விமானம், அவ்விதமான அன: - சகடத்தோடுகூடியது விமானம் முதலான ரதம். அதில் இருப்பவள் விமானஸ்தா.

4. விமான - பரிமாணமில்லாத (அபரிச்சின்னமான) ப்ரஹ்மம். அதிலிருப்பவள் விமானஸ்தா.

5. மனஸ்தா என்றால் பரிமாணத்திலிருப்பவள். அதா வது பரிமாணத்திலல் அபரிச்சின்னமானவள் அதாவது இல்லாதவள் விமானஸ்தா.

6. உண்மையான அறிவை (முடிவை) விசேஷமாய் ஏற்படுத்துவதால் லோகத்திற்கு விமானமென்று பெயர். அதிலிருப்பவள், அதாவது, அதில் ப்ரதிபாதிக்கப்படுகிறவள் விமானஸ்தா.

7. விமானங்களில் – வேதத்திற்கு விருத்தமில்லாத மானங்களில் (ப்ரமாணங்களில்), தர்ம ப்ரம்ஹ ரூபமாக அம்பாளிருப்பதால் விமானஸ்தா என்று பெயர்.

8. அலலது, – – – ன் பற்றிய அறிவின்) ரூபமாயிருப்பதாகச் சொல்லப்படும் புராண, ந்யாய, மீமாம்ஸா முதலான பதிணன்கு வித்யாஸ்தானங்களிலிருப்பவள் விமானஸ்த்தா என்று சொல்லலாம்.

(944)

திந்த்ரனுடைய பத்னியான சசீ ரூபமாயிருப்பவள்.

1. அல்லது வஜ்ராயுதத்தைத் தரிப்பவளென்றும் சொல்லலாம்.

2. அல்லது, வஜ்ரங்கள் (வைரங்கள்) என்ற ரத்னங்களால் அலங்க்ருதமாயிருப்பவள் என்றும் சொல்லலாம்.

3. 'மஹத் பயம் வஜ்ரமுத்யதம்' என்ற ச்ருதியில் சொல்லப்பட்டபடி வஜ்ரமென்ற பதமானது ப்ரஹ்மத்தைக் குறிக்கும். அதைப் பரிச்சின்னமாக (அளவுக்குட்பட்டதாக) செய்வதான ஸம்பந்தத்தோடு அம்பாளிருப்பதால் ப்ரஹ்மத்தையுடையவளென்று இங்கு சொல்லப்பட்டது.

वामकेश्वरी

வாமகேச்வரீ (945)

வாமகேச்வரமென்ற தந்த்ரத்தின் ரூபமாயிருப்பவள்.

1. அல்லது, அந்த தந்த்ரத்தில் ப்ரதிபாதிக்கப்பட்டவள் என்று சொல்லலாம்.

2. வாமமார்கத்தை அலம்பித்திருப்பவர்கள் வாமர்கள் என்று சொல்லப்படுவார்கள். அவர்கள் பஞ்சயக்ஞங்களை அவச்யமாகக் கருதுவதில்லையாதலால் அவர்களைக் கொஞ்சம் குறைவாக வாமகர்களென்று சொல்வது வழக்கம். அவர்களுக்கு சக்வரீ, அதாவது அவர்களால் உபாஸிக்கப்பட்டவள் வாமகேச்வரீ.

3. ஜகத் ஸ்ருஷ்டி கர்த்தாக்களாகிய தக்ஷன் முதலிய ப்ரஜாபதிகள் வாமகர்களெனப்படுவார்கள். அவர்களுக்கு சக்வரீ என்றும் சொல்லலாம்.

पञ्चयज्ञप्रिया

பஞ்சயக்ஞப்ரியா (946)

பஞ்சயக்ஞங்களில் ப்ரியமுள்ளவள்.

1. பஞ்ச (ஐந்து) யக்ஞங்கள் என்ற பதமானது இன்னின்ன யக்ஞங்களென்று குறிப்பிட்டு ஏற்பட்டிருப்பதால் அவைகளை இந்தமாதிரி பஞ்சயக்ஞங்கள் என்ற பெயரால் சொல்வதுண்டு. ச்ருதியில்,

'ஸ ஏஷ யக்ஞ: பஞ்சவிதோ(ஃ)க்நிஹோத்ரம்
தர்சபூர்ணமாஸௌ சாதுர்மாஸ்யானி பசு: ஸோம: ||'

என்று சொல்லப்பட்டிருக்கின்றன. ஸ்ம்ருதியில் சொல்லப்பட்ட பஞ்ச (ஸ்ரௌத) யக்ஞங்கள் என்பவை தேவ, ப்ரம்ஹ, பித்ரு, பூத, மனுஷ்ய யக்ஞங்கள்.

2. அல்லது, அடியில் சொல்லப்படும் பூஜா ப்ரகாரங்களை பஞ்சயக்ஞங்களென்றும் சொல்லப்படும். பாஞ்சராத்ர ஆகமத்தில். அவை-அபிகமனம், உபாதானம், இஜ்யா, ஸ்வாத்யாயம், யோகம் என்பவை. குலாகமத்தில்,

'கேவலோ யாமலோ மிச்ர: சக்ரயுக் வீரலக்ஷண: |
இதி பஞ்சவிதா பூஜா ... ... ||'

என்ற ஐந்துவிதமான பூஜைகள் சொல்லப்பட்டிருக்கின்றன. நித்யாதந்த்ரத்தில்,

'தேஹதிபிர் மத்யமாத்யம்ஸ்யாத் த்ரிதியம் நவயோனிஷு |'

என்று ஆரம்பித்து,

'இதி பஞ்சப்ரகாரார்ச்சாப்ரோக்தா ஸர்வார்த்தஸித்திதா ||'

என்று ஐந்து ப்ரகாரங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. ப்ருஹத்தந்த்ர கௌரமுதியிலும் அதையடுத்தகான ஸந்த்ராஸோஹ்ன காதியிலும்,

'ஆதௌ ஸௌரதகே தௌர்போதீத்ராஸீஸாதகா பாவஸ் |'

என்று ஐந்துவிதங்கள் சொல்லப்பட்டிருக்கிறன.'

3. இவை தவிற, அக்நிஹோத்ரத்தின்போது ஐந்துவித ஸ்ருவ குண்டங்களில் ஆஹுதிகள் செய்வதையும் பஞ்சயக்ஞங்களென்று சொல்வதுண்டு. இதைப்பற்றி சாங்கோபாங்க உபநிஷத்தின் அர்த்தம்,

'அக்நிஹோத்ரே ஹோமயமாநா ஜுஹ்வதிருபா ஆப:
ஸோம, த்யு, ப்ருத்வீ, புருஷ, யோஷித் ரூப குண்டபஞ்சகே
புந: புநர் ஹோமயந்தே ததா தா ஏவாப: சரீரபாவம் பஜந்தி |'

என்பது முதலான பாஷ்ய வாக்யங்களில் ஸ்பஷ்டமாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

4. பஞ்ச என்றால் விஸ்தாரமென்றும் அர்த்தமாகையால் பஞ்சயக்ஞமென்பது விச்வேச்வர ஆர்ய முதலான ஐம்மையும் குறிக்கும்.

பஞ்சப்ரேதமஞ்சாதிசாயிநீ (947)

பஞ்சப்ரேதங்களாலாகிய மஞ்சத்தில் வீற்றிருப்பவள்.

ப்ரஹ்மா, விஷ்ணு, ருத்ரன், ஈச்வரன், ஸதாசிவன் இந்த ஐவரும் மாமா முதலான தங்களுடைய சக்திகளோடு இல்லாதபோது அவரவர்கள் தங்கள் தங்கள் கார்யங்களைச் செய்ய முடியாமல் இருப்பார்களாகையால் அவர்கள் ப்ரேதங்கள் என்று சொல்லப்படுவார்கள். அவர்களாலான கட்டிலின்மீது காமேச்வரரும் அவருடைய மாமாங்கத்தில் காமேச்வரியும் இருப்பதாகச் சொல்லப்படும். அந்தக் கட்டிலுக்கு ப்ரஹ்மா, விஷ்ணு, ருத்ரன், ஈச்வரன், ஸதாசிவன் இந்த ஐவரும் கால்களாயும், ஸதாசிவன்மேல் பலகையாகவும் இருப்பதால் அதற்கு பஞ்சப்ரேத மஞ்சமென்று பெயர்.

'சிவாத்மகே மஹாமஞ்சே மஹேசாநோபபர்ஹணே |
தத்ர சேதே மஹேசாநீ மஹாத்ரிபுரஸுந்தரீ ||'
[பைரவயாமளம்-பஹுரூபாஷ்டகப்ரஸ்தாரம்]

'ஸதாஸ்யோபரி தாஸாம் ஸர்வாகந்தமய காமகே பீடே |
பஞ்சப்ரம்ஹாகாரம் மஞ்சம் ப்ரணமாமி மணிகணகீர்ணம் ||
... ...
பர்யங்கஸ்ய பஜாமः பாதாந் பிம்பாம்புதேந்துஹேமருசः |
அஜஹரிருத்ரேசமயாந் அகலாஸுரமாருதேச
[கோணஸ்தாந் ||
பலகம் ஸதாசிவமயம் ப்ரணவமி ஸிம்ஹாஸநேஸுரம்
கிரணோபம் ||' [லலிதாஸ்தவரத்னம்]

'கதாஸ்தே மஞ்சத்வம் த்ருஹிணஹரிருத்ரேச்வரா ப்ருத:
சிவ: ஸ்வச்சச்சாயா கடித கபட ப்ரச்சத படः |' [92]
[ஸௌந்தர்யலஹரீ]

இந்த மஞ்சத்தைப்பற்றி விபரமாக லலிதோபாக்யானத்தில் சொல்லப்பட்டிருப்பதைப் பார்க்கவும்.

पञ्चमी
பஞ்சமீ (948)

ஸதாசிவனுடைய பத்னியாக இருப்பவள்.

1. ப்ரஹ்மா, விஷ்ணு, ருத்ரன், ஈச்வரன், ஸதாசிவன் என்ற ஐவரில் முதல் மூவருக்குள் ருத்ரன் மேலானவர் என்றார், அவரைவிட (மாயையோடுகூடிய சிவனை) ஈச்வரன் மேலானவரென்றார், அவரையுங்விட ஸதாசிவன் மேலானவ ரென்றார் சொல்லப்பட்டிருப்பதால், அவர்களில் பஞ்சமரான (ஐந்தாவதான) ஸதாசிவருடைய பத்தினியாகிய அம்பாளுக்கு பஞ்சமீ என்ற இந்த நாமம் ஏற்பட்டது.

'த்ரிஷு ருத்ரோ விரிஷ்டः ஸ்யாத் தேஷு மாயீ பரः சிவः |
மாயாவிசிஷ்டாத் ஸர்வக்ஞாத் ஸாம்பः ஸத்யாதி லக்ஷணः ||
ஸதாசிவோ விரிஷ்டः ஸ்யாத் கார்த்ர கார்யா விசாரணே ||'
[ஸுபககீதை]

2. பஞ்சமீ என்ற வாராஹிக்குப் பெயரமைவதால் அவ ருடைய ரூபமாய் இருப்பதாலென்றும் இந்த நாமத்திற்கு அர்த்தம் சொல்லலாம். வாராஹியின் பெயர்கள் பின்வரு மாறு.—

'பஞ்சமீ தண்டநாதா ச ஸங்கேதா ஸமயேச்வரீ |
ததா ஸமயஸங்கேதா வாராஹீ போத்ரிணீ சிவா ||
வார்த்தாளீ ச மஹாஸேநாப்யாக்ஞா சக்ரேச்வரீ ததா |
அரிக்ஞீ சேதி லம்போதர்கம் நாம த்வாதசகம் முதே ||'
[லலிதோபாக்யானம்]

இந்தப் பெயர்களை வாராஹியானவள் ப்ரார்த்தனா முதலான நாதங்களில் ஐந்தாவதாயும், பஞ்சதத்வ தேவதை களுள் கடைசியாகவும், பஞ்சகோச தேவதைகளில் கடைசி யாகவும் இருப்பதைக் கணக்கிலிருந்து எற்பட்டாலும், வாரா ஹிக்கே பஞ்சமீ என்ற பெயர் இயற்கையாகவே இருப்பதாக 'பஞ்சமீத் பஞ்சமீஸுதா', 'கடம் ஸ்புரஷ்டஸ்வ விஸ்புரதி த்யாத் வா பஞ்சமீம் பாதுகாம்யாமி,' 'பஞ்சமீம் சகடாரூ யத்ரம் த்ரிஷு லோகேஷு நாயிகா' என்பது முதலாக தகுதிணை மூன்றிலும் ஒரேதன்மையில் வரும் பலவிதமான ப்ரயோக களிலிருந்தும் தெரிகிறது.

3. பஞ்சமகாரங்களில் கடைசியானது ஆனந்த ரூபமா யிருப்பதால் அந்தரூபமாய் இருப்பவளென்றும் சொல்லலாம்.

'ஆகந்தம் ப்ரம்ஹரூபே ரூபம், தத் ச தேஹே வ்யவஸ்திதம் |
தஸ்யாபிவ்யஞ்ஜகா: பஞ்ச மகாரா: தைரதார்ச்சநம், குப்தயா ||'
[பரசுராம கல்பஸூத்ரம்]

தவிர, பஞ்ச - ஐந்து, மா க்களுடைய - மகாரங்களுடைய சேர்க்கையான ரூபமாயிருப்பவள் பஞ்சமீ என்றும் சொல்லலாம். இந்த பஞ்ச மகாரங்களைப்பற்றி த்ரைபுர ஸுந்தரீ தத்தில்,

'பரிஷ்ருதம் சஷுமாத்யம் பலம் ச
பக்தாநி யோநி: ஸுபரிஷ்க்ருதாநி |
நிவேதயந் தேவதாயை மஹத்யை
ஸ்வாத்மீக்ருத்ய ஸுக்ருதீ ஸித்திமேதி ||'

என்று சொல்லப்பட்டிருக்கிறது. இவற்றின் தானம், சுத்தி முதலியவைகளைப்பற்றி குருமுகமாகத் தெரிந்துகொள்ள

4. அல்லது,

'பஞ்சம்யாமாஹுதாவாப: புருஷவசஸோ பவந்தி |'

என்று ச்ருதிப்ரஸித்தமான யக்ஞமானது அங்கு சொல்லப்பட்ட யக்ஞங்களில் ஐந்தாவதாக வருவதால் அதின் ரூபமாக இருப்பதாகவும் அர்த்தம் சொல்லலாம். [இதைப்பற்றி 946 நாமத்தின் 3-வது குறிப்பில் பார்க்கவும்.]

5. அல்லது, கைவல்யமென்று சொல்லப்படும் ஐந்தாவதான முக்தியின் ரூபமாக இருப்பவளென்றும் சொல்லலாம்.

पञ्चभूतेशी
பஞ்சபூதேசீ (949)

ப்ருத்வீ முதலான பஞ்சபூதங்களுக்கு ஈச்வரியாயிருப்பவள்.

1. ப்ருத்வீ முதலான பஞ்சபூதங்களின் ஸத்தா ரூபமாக அம்பாளிருப்பதால் அவற்றிற்கு அதிகாரிணியாகச் சொல்லப்பட்டது. [இதைப்பற்றி ஸ்ரீவித்யாரண்யாருடைய பஞ்சதசியில் பஞ்சபூத விவேகத்தில் பார்க்கவும்.]

2. விஷ்ணுவின் வைஜயந்தீமாலையான பஞ்சபூதாத்மகமாயிருப்பதாகச் சொல்லப்படுவதால் அதற்கு ஈச்வரீ அதாவது, விஷ்ணுரூபிணீ என்றும் அர்த்தம் சொல்லலாம்.

பஞ்சரூபா து யா மாலா வைஜயந்தீ கதாப்ருத: |
ஸா பூததேஹதஸ்தஸ்ய பூதமாலா பவேத் த்விஜ ||'
[விஷ்ணுபுராணம்]

நேலுடம் அந்த ஸாலையான்னது முத்து, ஸாணிக்கர், மரகதம், இந்த்ரநீலம், வஜ்ரம் (வைரம்) இவற்றின் வர்ணத்தோடிருப்பதால் அதை பஞ்சவர்ணா என்ற மேலே சொல்லப்பட்டது. இந்த வைரங்கள் பஞ்சபூதங்களிலிருந்தண்டானதால் வைஜயந்தியானது பஞ்சரத்னத்தாகமென்று சொல்லப்படும்.

'ப்ருதிவ்யாம் நீலஸம்ஞாகம் அத்ப்யோ முக்தாபலானி ச |
தேஜஸ: கௌஸ்துபோ ஜாத: வாயோர் வைடூர்ய ஸம்ஞகம் ||
புஷ்கராத் புஷ்பராகஸ்து வைஜயந்த்யா ஸமோநிமே ||'

[விஷ்ணுரஹஸ்யம்]

पञ्चसङ्ख्योपचारिणी

பஞ்சஸங்க்யோபசாரிணீ (950)

ஐந்து என்பதான எண்ணிக்கையோடு கூடிய உபசாரங்களை உடையவள்.

இவை - கந்த, புஷ்ப, தூப, தீப, நைவேத்யம் - என்பவை. இவற்றை பஞ்சோபசாரங்கள் என்று சொல்லப்படும்.

शाश्वती

சாச்வதீ (951)

எப்போதும் இருப்பவள்.

1. 'சாச்வதஸ்ய த்ரோவோ நித்ய:' என்ற ஆபஸ்தம்பஸனத்தின்படி நித்யமாக இருப்பவள் சாச்வதீ.

'தேஷாம் ஸித்தி: சாச்வதீ நேதரேஷாம் |' [ச்ருதி]

2. சாச்வத் என்றால் திரும்பத்திரும்ப என்று அர்த்தம். ராகையால் திரும்பத்திரும்பத் தன் பக்தர்களால் உபாஸிக்கப்

शाश्वतैश्वर्या

சாச்வதைச்வர்யா (952)

நித்யமான ஐச்வர்யத்தையுடையவள்.

யல்லது, இந்த நாமத்தை டமந்தியதிலிருந்து சாசாச்வதைச்வர்யா என்றார். சொல்லலாம். அப்போது, சத - ஜகதீச்வரர்களான ப்ரம்மாதி முதலானவர்கள் (பஞ்சப்ரேதங்களாக இருந்தபோது, அச்வதா - அச்வரமாயிருப்பது (அதாவது நானாவிதமாய் இருப்பது) ஆன ஐச்வர்யத்தையுடையவள் என்று அர்த்தம். அதாவது, பஞ்சப்ரேதாஸனமாகாடா என்று தாத்பர்யம்.

சர்மதா (953)

ஸுகத்தைக் கொடுப்பவள்.

शंभुमोहिनी

சம்பு, (954)

சிவனை மோஹமடையச் செய்பவள்.

1. பக்தர்களுக்கு சௌபாக்யத்தைக் கொடுப்பதினால் பரம சிவனுக்கு சம்பு, சங்கரன் என்ற பெயர்களுண்டு.

2. பரமசிவன் நிர்குணராயிருந்தபோதிலும் அம்பாளிடம் ஈடுபட்டு மோஹித்திருப்பதால் அம்பாளுக்கு இந்தப் பெயர் ஏற்பட்டது.

धरा

தரா (955)

ப்ருத்வீ ரூபமாயிருப்பவள்.

1. அல்லது, ஸகல ஜகத்தையும் தாங்குவதால் இந்தப் பெயர் ஏற்பட்டதாகவும் சொல்லலாம்.

2. அல்லது, ல என்ற அக்ஷரஸ்வரூபமாயிருப்பவள் என்றும் சொல்லலாம். லகாரமானது ஸ்வர்ண, ரத்ன, கானனங்களையுடையதும், ஐந்து தத்வங்களையும் ஸகல தீர்த்தங்களையுடையதுமான ப்ருதிவீ தேவியைக் குறிக்கும்.

'லகாரஃ ப்ருதிவீதேவீ ஸஸைலவனகானகா |
பஞ்சாசத் பீடஸம்பன்னா ஸர்வதீர்த்தமயீ பரா ||'

[ஞானர்ணவம்]

धरसुता

தரஸுதா (956)

(ஹிமவத்) பர்வதத்தின் புத்ரியாயிருப்பவள்.

धन्या

தந்யா (957)

க்ருதார்த்தையாயிருப்பவள்.

1. அல்லது, தனத்தைக்கொடுப்பவள், தனத்தையுடையவள் என்ற அர்த்தங்களுடன் சொல்லலாம்.

2. அல்லது, 'மங்களா பிங்களா கன்யா' என்பதாக பாதிஷ சாஸ்த்ரத்தில் ப்ரஸித்தமான கன்யா என்ற யோகிநீ விசேஷ ரூபமாயிருப்பவள் என்றும் சொல்லலாம்.

3. சரீரத்திலிருந்து ஜீவன் பிரிவதாகிய கடைசிகாலத்தில் நான்கு விதமான சிந்தைகள் இருக்கக்கூடுமென்றும், அவற்றின் பெயர்கள் ஆர்த்த, ரௌத்ர, தன்ய, சுக்லங்களென்றும் பவிஷ்யோத்தர புராணத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. அவற்றில் தன்யா என்று சொல்லப்பட்ட த்யானரூபமாயிருப்பவளென்றும் சொல்லலாம்.

ஆர்த்தமென்பதின் லக்ஷணம்:—

'ராஜ்யோபபோக சயநாஸந ஸாதநேஷு
ஸ்த்ரீ கந்த மால்ய மணி வஸ்த்ர விபூஷணேஷு |
இச்சாபிலாஷம் அதிமாத்ரம் உதேதி மோஹாத்
த்யாநம் தத் ஆர்த்தமிதி ஸம்ப்ரவதந்தி தஜ்ஞா: 11' என்றும்

ரௌத்ரமென்பதின் லக்ஷணம்:—

'ஸஞ்சேதநைர் தஹந தாடந பீடநைச்ச
காத்ர ப்ரஹார தமநைர் விநிக்ருந்தநைச்ச 11
யஸ்யேஹ ராக உபயாதி ந சாநுகம்பா
த்யாநம் து ரௌத்ர மிதி தஸ்ய வதந்தி ஸந்த: 11' என்றும்,

தன்யமென்பது:—

'ஸமத்வார்த்த மார்கண மஹாவ்ரத பாவநாபி
நிர்பந்த மோக்ஷ கமநாகதி ஹேது சிந்தா |
பஞ்சேந்த்ரியாத்யுபசமச்ச தயா ச பூதே
த்யாநம் து தன்யமிதி தத் ப்ரவதந்தி ஸந்த: 11' என்றும்,

சுக்லமென்பது:—

'யஸ்யேந்த்ரியாணி விஷயைர் ந விசர்ச்சிதாநி
ஸங்கல்ப நாசந விகல்ப விகாஸ யோகை: |
த்வைக நிஷ்ட தர்ருதியோக ப்ருதாத்தாத்மா
த்யாநம் து சுக்லமிதி தத் ப்ரவதந்தி ஸித்தா: 11'

என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. சுருக்கமாகச்சொல்லுகையில், ஸ்நாந, சந்தன, வஸ்த்ராதி போகங்களில் ஆசையுடனிருப்பதை ஆர்த்தமென்றும், தான் கஷ்டங்களை அனுபவித்திருந்தபோதிலும் மேலேசொல்லிய ஸ்நாந சந்தனாதிகளில் உபேக்ஷையுடனிருப்பதை ரௌத்ரமென்றும், ஸமத்வார்த்தங்களாலும், மஹாவ்ரதங்களாலும் பாவனையோடும், பாச மோக்ஷங்களைப்பற்றிய அறிவுடனும், இந்த்ரியாதிகளின் சாந்தத்தோடும், ஸகல ஜந்துக்களிடத்தில் தயை

யோடுர், இருப்பதான த்யானத்திற்குத் தன்யமொன்றர், விஷயங்களில் பற்றில்லாத இந்த்ரியங்களோடுர், தத்வமொன்றிலேயே நிலையோடு கூடியதுமான த்யானத்திற்கு சுக்லமென்றும் பெயர். இவ்விதமான த்யான பேதங்களால் எற்படுர் பலன் களைப்பற்றி,

'ஆர்த்தே நிர்யக் அதோகதிச்ச நியதா த்யாநே ச ரௌத்ரே தன்யா தேவகதிः சுபம் பலமதோ சுக்லே ச ஜன்மக்ஷயः। [ஸதா தன்மாத் ஜன்மருஜாபதே ஹிததரே ஸம்ஸார நிர்வாஹகே த்யாநே ச்வேததரே ரஜः ப்ரமதநே குர்யாத் ப்ரயத்நம் புதः॥'

என்ற சொல்லப்பட்டிருக்கிறது. அதாவது, ஆர்த்தத்திலில் (புல் பூண்டு, பசுவி முதலான) நிர்யக் பிறப்பையுர், ரௌத்ரத்திலில் அதற்குர் கீழான அதோகதியையுர், தன்யமென்ப திலில் தேவலோகத்தையும், சுக்லமென்பதிலில் முக்தியையும் அடைவதாகச் சொல்லப்பட்டது.

धर्मिणी

(958)

தர்ம ஸ்வபாவத்தையுடையவள்.

அல்லது, ஆனந்தாநுபவம், ர் முதலான தர்மங் ளோடிருப்பவளென்றர் சொல்லலாம்.

धर्मवर्धिनी

தர்மவர்த்தி நீ (959)

தர்மத்தை வ்ருத்தி செய்கிறவள்.

1. அர்பிதை தன் பக்தர்களுக்கு ஜிதேந்த்ரியத்வர், சௌசம், மாங்கல்யர், பக்தி முதலிய தர்மங்களை அதிகரிக்கச் செய்வதாக,

ஜிதேந்த்ரியத்வம் சௌசம் ச மாங்கல்யம் பக்திரேவ ச।
சங்கரே பாங்கரே தேவ்யாம் தர்மோ(அ)யம் மாநுஷः ஸ்ம்ருதः॥
த்யாதः ஸாம்ப இமாந் தர்மாந் வ்ருத்திம் நயதி தேஹிநாம்।

என்ற வாமன புராணத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

2. வ்ருத் என்ற தாதுவுக்குச் சேதனர் (தெய்வடாகச் செய்கிறது) என்ற அர்த்தமுண்டு. தர்மமென்பது ப்ரம்மாதி அதிஷ்டானமாயிருக்கும் த்ருச்ய ஜாதர் (கண்ணுக்குப் புலப்படுகிறவை) எல்லாவற்றையுர் குறிக்குர். அவற்றை அறக்கிறவள் என்ற அர்த்தம். அவை தர்மமாத்ரமாயிருப்

பதில் விந்யாஸத்தோடு இருப்பதாக அம்பாள் தோன்றச் செய்வதால் தர்மவர்த்தினீ என்ற பெயர் ஏற்பட்டதாகவும் சொல்லலாம்.

लोकातीता

லோகாதீதா (960)

லோகங்களுக்கெல்லாம் அப்பாலிருப்பவள்.

1. அதாவது, இந்த்ரலோகம் முதலாக விஷ்ணுலோகம் முடிய இருக்கும் லோகங்களையெல்லாம் கடந்ததும், பரமசிவனுடைய ஸ்தானமானதும் மஹாகைலாஸமென்ற பெயருடையதுமான லோகத்திலிருப்பவள் என்று அர்த்தம். பரசிவபுரமானது ஸர்வலோகங்களுக்கும் அதீதமாயிருப்பது சிவதர்மோத்தரத்தில், கீழிருக்கும் லோகங்களை வர்ணித்துவிட்டு,

'ரௌயம் விஷ்ணுபதாத் ஊர்த்வம் திவ்யம் சிவபுரம் மஹத் |'

என்று ஆரம்பித்து,

இத்யேதத் அபரம் தூப்யம் ப்ரோக்தம் சிவபுரம் மஹத் |
தேஷாமாம் கர்மநிஷ்டானாம் புநராவர்த்தகம் ஸ்ம்ருதம் ||'

என்பதாக கர்மடர்கள் அடைவதான சிவபுரத்தை வர்ணித்துவிட்டு,

'ஊர்த்வம் சிவபுராத் ரௌயம் ஸ்தாநத்ரயம் அநுத்தமம் |
நித்யம் பரமசுத்தம் சங்கர்ஷணாத்மகம் ||'

என்று ஆரம்பித்து,

'யே ஸம்ப்ராப்தா: பரஸ்தாத்மம் த்யாகயோக ரதா நரா: |
ந தேஷாம் புநராவ்ருத்தி: கோரே ஸம்ஸார ஸாகரே ||
ஸர்வக்ஞா: ஸர்வகா: சுத்தா: பரிபூர்ண மநோரதா: |
சிவதுல்ய பலோபேதா: பரம் சிவபுரம் கதா: ||'

என்பதாக பரசிவபுரத்தை வர்ணித்து அங்கு போகிறவர்களுக்கு புநராவ்ருத்தி இல்லையென்பதாகச் சொல்லப்பட்டது.

2. அல்லது லோகங்களுக்கு – ஜீவன்களுக்கு, அதீதமாயிருப்பவள் என்றும் சொல்லலாம்.

गुणातीता

குணாதீதா (961)

குணங்களுக்கு அதீதமாயிருப்பவள்.

सर्वातीता

ஸர்வாதீதா (962)

ஸர்வத்திற்கும் அதீதமாயிருப்பவள்.

அல்லது, சப்தங்களுக்கெல்லாம் அதீதாளாய் (அவற்றால் குறிக்கமுடியாதவளாய்) இருப்பவள் என்றும் சொல்லலாம்.

'சப்தாதீதம் பரம் ப்ரம்ஹ கணாநா ரஹிதம் ஸதா |
ஆத்மஸ்வரூபம் ஜ்ஞாநஹி ... ...
[ஞாநார்ணவம்]

शमात्मिका

சமா (963)

சாந்த ஸ்வரூபமாயிருப்பவள்.

1. அல்லது, ப்ரபஞ்சத்தின் உபசாந்தி (சாந்தியே) ஸ்வரூபமாக உடையவள் என்றும் சொல்லலாம்.

ப்ரபஞ்சோபசமம் சிவம் சாந்தம் அத்வைதம்
சதுர்த்தம் மந்யந்தே |' [ந்ருஸிம்ஹதாபநீயம்]

2. அல்லது, சம் - ஸுகத்தை ஆத்மாவாக உடையவள் என்றும் சொல்லலாம்.

बन्धूककुसुमप्रख्या

பந்தூக குஸுமப்ரக்யா (964)

பந்துஜீவ புஷ்பத்தின் காந்திபோன்ற காந்தியையுடையவள்.

பந்தூக (பந்துஜீவ) என்பது வங்கதேசத்தில் ப்ரஸித்தமான ஒரு மரவகையாகும். அதின் புஷ்பமானது அதிகமான சிகப்பு நிறமாகையால் அவ்வித நிறத்தையுடையவள் என்று இங்கு சொல்லப்பட்டது.

बाला

பாலா (965)

குமாரி ஸ்வரூபமாயிருப்பவள்.

1. ஸ்ருதியில்,

'த்வம் குமார உத வா குமாரீ'

என்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

2. சிறுபெண்போல் லீலையில்(விளையாட்டில்) ஆசைப்பட்டிருப்பதால் அப்பிரகைக்கு பாலா என்ற பெயர் என்பதாக,

'பாலா லீலா விசிஷ்டத்வாத் பாலேதி கதிதா ப்ரியே |'

என்பதாக த்ரிபுராவித்தாந்தத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

3. அல்லது பாலாப்பிகா (பாலை) ஸ்வரூபமாயிருப்பவள் என்றும் சொல்லலாம். பாலாப்பிகை எப்போதும்

ஒன்பது வயதுடையவளாய், அம்பாளைப்போன்ற ரூபத்தை யுடையவளாய், அம்பாளுடைய அத்யந்தமான ப்ரியத்திற்கு இருப்பிடமாய் இருப்பதாகச் சொல்லப்படும்.

'குமாரீ லலிதாதேவ்யா: தஸ்யா நிகடவாஸிநீ |
ஸமஸ்த சக்தி சக்ராணும் பூஜ்யா விக்ரமசாலிநீ ॥
லலிதாஸத்ருசாகாரா குமாரீ ..... |
யா ஸதா நவவர்ஷேவ ஸர்வவித்யா மஹாகநி: ॥
பலாருண தநுச்சோணீ சோணவர்ண வபுர்வதா |
மஹாராஜ்ஞீ பாதபீடே நித்யமாஹித ஸந்நிதி: |
தஸ்யா பஹிச்சரா: ப்ராண யா சதுர்த்தம் விலோசநம் ॥'

[லலிதோபாக்யாநம்]

பாலாத்ரிபுரை பண்டாஸுரனுடைய புத்ரர்களை வதம் செய்வதைப்பற்றி ஏற்கனவே வந்த 74-வது நாமத்தில் பார்க்கலாம். பாலாத்ரிபுரையின் அனுக்ரஹம் ஏற்பட்டால் அம்பாளுடைய அனுக்ரஹமானது ஸுலபமாய் ஏற்பட்டுவிடுமென்பது உபாஸகர்களுடைய நம்பிக்கை.

लीलाविनोदिनी

லீலாவிநோதிநீ (966)

லீலைகளால் (விளையாட்டுக்களால்) ஸந்தோஷமடைகிறவள்.

1. இங்கு லீலையென்பது ப்ரபஞ்ச ஸ்ருஷ்டிகாரண மென்பதை முன்பே பார்த்தோமல்லவா.

'மந்வந்தராண்யஸங்க்யாநி ஸர்க்க: ஸம்ஹார ஏவ ச |
க்ரீடந்நிவைதத் குருதே பரமேஷ்டீ புந:புந: ॥' [மநுஸ்ம்ருதி]
'லோகவத்து லீலாகைவல்யம் |' [ப்ரம்ஹஸூத்ரம்]

2. பரமேச்வரனை லீலா என்பதாலோ, வி—விசேஷமாக, நோதிநீ (ஸந்தோஷிக்கிறவள்) என்றும் சொல்லலாம். பரமேச்வரனிஷ்டத்தில் பக்தராஜ்ஞுடைய பார்வையான லீலா என்பதாலோ விசேஷமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. பரமேச்வரனுடைய ஸங்கல்பஞ்ஞானம் ஸர்வஜ்ஞதா முதலிய சக்திகளுக்கு ஆயிரமாயிரம் நாணத்தைக்கொடுத்து அவனுடைய ப்ரேமையுடன் உயிர்பிழைத்து செய்தாள் என்பதாக அதில் சொல்லப்பட்டிருக்கிறது.

3. (தன்னுடைய குழந்தைகளான ஜீவகோடிகளை) லாலனம் செய்வதினால் அம்பாளுக்கு லீலா என்ற பெயர்

என்பதாக 'லக்ஷ்மீலாலநதோ ஷீலா' என்று தேவீ புராணத்தில் சொல்லப்பட்டிருப்பதை அனுஸரித்து இந்த நாமத்தை ஷீலா, விநோதினீ என்று இரண்டு நாமங்களாகவும் பிரித்துச் சொல்லலாம்.

सुमङ्गली

ஸுமங்கலீ (967)

ஸுவாஸிநீ ரூபமாயிருப்பவள்.

1. **ஸு**—சோபனமான, மங்களத்தையுடையவள் **மங்** கலீ. ஜீவித்திருக்கும் பதியையுடையவளுக்கு ஸுமங்கலீ, ஸுவாஸிநீ என்பதான பெயர்களுண்டு.

2. மங்களமென்ற பதமானது ப்ரம்ஹத்தைக் குறிக்கு மாகையால் சோபனமான ப்ரம்ஹஸ்வரூபமாயிருப்பவளென்றும் அர்த்தம் சொல்லலாம்.

'அசுபாநி நிராசஷ்டே தநோதி சுபஸந்ததிம் |
ச்ருதிமாத்ரேண யத் பும்ஸாம் ப்ரம்ஹ தத் மங்களம் விது: ||'
(விஷ்ணுபுராணம்)

3. சரியான கார்யங்களைச் செய்வதும், தப்பான கார்யங்களைச் செய்யாதிருப்பதும் மங்களமென்பதாக,

'ப்ரசஸ்தாசரணம் நித்யம் அப்ரசஸ்த விவர்ஜநம் |
ஏதத் ஹி மங்களம் ப்ரோக்தம் ருஷிபிர் ப்ரம்ஹவாதிபி: ||'

என்று அத்ரி ஸ்மிருதியில் சொல்லப்பட்டிருக்கிறது.

सुरा (968)

ஸுரா

ஸுரத்தைச் செய்பவள்.

सुवेषाढ्या

ஸுவேஷாட்யா (969)

சோபனமான வேஷத்தால் அலங்கரிக்கப்பட்டவள்.

வேஷமென்பது வஸ்த்ர, ஆபரண, மால்ய, அங்கராகாதிகளைக் குறிக்கும்.

सुवासिनी

ஸுவாஸிநீ (970)

ஸுவாஸிநீ ரூபமாயிருப்பவள்.

1. ஜீவித்திருக்கும் பதியையுடையவள் ஸுவாஸினீ. எல்லா ஸுவாஸினிகளோடு அம்பாள் அபின்னமாயிருப்பதால் இந்தப் பெயர் ஏற்பட்டது.

2. அம்பிகையின் புருஷனை பரமசிவனுக்குக் கல்பாந்தத்தில். அழிவில்லையாதலால் அம்பிகையானவள் நித்ய (ஸர்வகாலமும்) ஸுவாஸினியாக இருக்கிறாள். இதையே பரீக்ஷாசாரியார்,

'விரிஞ்சி: பஞ்சத்வம் வ்ரஜதி ஹரிராப்நோதி விரதிம்
விநாசம் கிராசோ பஜதி தநதோ யாதி நிதநம்।
விதந்த்ரீ மாதேஹந்த்ரீ விததிரபி ஸம்மீலித தத்ருசா
மஹாணம்ஹாரேZஸ்மிந் விஹரதி ஸதி த்வத் பதிரஸௌ॥' ஸி

सुवासिन्यर्चनप्रीता

ஸுவாஸின்யர்ச்சந ப்ரீதா (971)

ஸுவாஸினிகளுடைய அர்ச்சனையில் ப்ரீதியடைகிறவள்.

ஸுவாஸினிகளை அர்ச்சிப்பதில் என்றால், ஸுவாஸினிகள் செய்யும் அர்ச்சனையில் என்றால் இரண்டிலுமே அர்த்தம் சொல்லலாம். ஸுவாஸினீ பூஜையென்பதை முக்யமான அர்த்தங்களில் ஒன்றாகும்.

आशोभना

ஆசோபநா (972)

பூரணமான ஸௌந்தர்யத்தையுடையவள்.

शुद्धमानसा

சுத்த மாநஸா (973)

சுத்தமான (நிர்மலமான) மனதையுடையவள்.

चिन्दुतर्पणसंतुष्टा

சிந்து தர்பண ஸந்துஷ்டா (974)

சிந்து தர்பணத்தால் ஸந்தோஷமடைகிறவள்.

1. சிந்து என்பது பூஜாக்ரமத்தின் ஒரு பாகமாகும். அதை தர்பணமாக்ரமத்தைக்குறிக்கும். அதில் தாயார் முன்னோர்கள் பற்றி ஸுவாஸினிகளால் க்ரமமாக ஹரீ, ஆஜ்ய, ... ஆஸவ சிந்துக்களைக்கொண்டு செய்யப்படும் தர்பணம் இங்கு சொல்லப்பட்டது. இதைப்பற்றி 'ஸ்ரஸ்ஸு துதி'யில்

'விப்ரா: க்ஷோணிபுஜோ விசஸ்ததிதரே க்ஷீராஜ்யமத்வாஸவை:
த்வாம் தேவி த்ரிபுரே பராவரமயீம் ஸந்தர்ப்ய பூஜாவிதௌ |
யாம் யாம் ப்ரார்த்தயதே மந: ஸ்த்திரதயா தேஷாம் த ஏதே
தாம் தாம் ஸித்திம் அவாப்நுவந்தி தரஸா [த்ருவம்
[விக்நைரவிக்நீ க்ருதா:||'

என்று சொல்லியிருக்கிறது. இதைப்பற்றிய விபரங்கள் அந்த ஸ்தோத்ரத்தின் வ்யாக்யானத்திலும் பரசுராம கல்ப ஸூத்ரத்திலும் சொல்லப்பட்டிருக்கின்றன.

2. அல்லது, 'பிந்துநிச்சு:' என்பதில் சொல்லப்பட்ட பிந்துபதத்தை அறிந்தவர்களால் செய்யப்படும் தர்ப்பணத்தில் ஸந்தோஷமடைகிறவள் என்றும் சொல்லலாம்.

पूर्वजा
பூர்வஜா (975)

(எல்லாவற்றிற்கும்) முதலாக ஜனித்தவள்.

1. ஸ்ருஷ்டியின் ஆரம்பத்தில் பரப்ரம்ஹத்தின் இச்சா ரூபிணியாக அம்பாள் இருந்ததைப்பற்றி ச்ருதியிலும்,

'இயமேவ ஸா யா ப்ரதமா வ்யௌச்சத் |'

என்றும்,

'அஹமஸ்மி ப்ரதமஜா ருதஸ்ய |'

என்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

2. அல்லது, அபுத்திபூர்வகமானதும், குலாசாரத்தின் ஸாம்யாவஸ்தையோடு கூடியதுமான பூஜாப்ரக்ரமத்தை ரூபமானவளென்றும் சொல்லலாம்.

त्रिपुराम्बिका
த்ரிபுராம்பிகா (976)

த்ரிபுராம்பிகா என்ற தேவியின் ரூபமாயிருப்பவள்.

1. ஸ்ரீசக்ரத்தின் எட்டாது சக்ரத்தின் அபிமானினியான தேவிக்கு த்ரிபுராம்பிகா என்ற பெயர். அந்த தேவியோடு அபின்னமாயிருப்பதாக இங்கு சொல்லப்பட்டது.

2. அல்லது, ஜாக்ரத், ஸ்வப்ன, ஸுஷுப்திகளென்கிற மூன்று அவஸ்தைகளையும் உண்டுபண்ணுகிறவளென்றும், அம்மூன்று அவஸ்தைகளையுடைய ஜீவனை உண்டுபண்ணுகிறவளென்றும் சொல்லலாம்.

'புரத்ரயே க்ரீடந்ரி யச்ச ஜீவ: |' [ச்ருதி]
'யதாக்ரே: கூர்த்தா விஸ்ப்புலிங்கா வ்யுச்சரந்தி |' [ச்ருதி]

3. அல்லது,

'வாமாதிநாம் புராணம் து ஜகந் த்ரிபுராம்பிகா |'

என்ற வசனத்தின்படி வாமாதி சக்திகளின் ஜனனீயென்றும் சொல்லலாம். வாமா, ஜ்யேஷ்டா, ரௌத்ரீ என்ற சக்திகள் மூவரும் புருஷரூபத்தில் முறையே ப்ரம்மா, விஷ்ணு, ருத்ரர்களாகவும், அவர்களுடைய சக்திகளாகிய பாரதீ, லக்ஷ்மீ, ருத்ராணிகளாகவும், ஞான, இச்சா, க்ரியா என்ற சக்திரூபிணிகளாகவும், ஸத்வ, ரஜஸ், தஸ், ப்ரதானங்களாகவும் இருப்பவர்களாகச் சொல்லப்படுகிறார். இவர்களுடைய ஜனனீயாகிய அம்பாள் இவர்களுடைய ஸாவஷ்டி ரூபமாகவும், சாந்த என்ற சக்தி ரூபமாகவும், அம்பிகா என்ற பெயருடனிருப்பதாகவும் சொல்லப்படுகிறது. ஸ்ரீசக்ரத்திலிருக்கும் தேவதைகளாகச் சொல்லுகையில் இவர்கள் மூவரும் அஷ்டதளங்களிலிருக்கும் காமேச்வரீ, வஜ்ரேச்வரீ, பகமாலினீ என்ற தேவதைகளாயும், அம்பாள் சதுரஸ்ரத்திலிருக்கும் த்ரிபுரஸுந்தரியாகவும் இருப்பவர்களாகச் சொல்லப்படுகிறார்.

'ஏஷா ஸா பரமா சக்தி: ஏகைவ பரமேச்வரீ |
த்ரிபுரா த்ரிவிதா தேவி ப்ரம்ஹ விஷ்ணவீச ரூபிணீ ||
ஞானசக்தி: க்ரியாசக்தி: இச்சாசக்த்யாத்மிகா ப்ரியே |
த்ரைலோக்யம் ஸம்ஸ்ருஜத்யேஷா த்ரிபுரா பரிகீர்த்யதே ||'
[வாமகேச்வர தந்த்ரம்]

दशमुद्रासमाराध्या

தசமுத்ரா ஸமாராத்யா (977)

பத்துவிதமான முத்ரைகளால் நன்றாய் ஆராதிக்கப்பட்டவள்.

1. முத்ரைகளின் பெயர்கள்—ஸம்க்ஷோபணை, த்ராவிணை, ஆகர்ஷணை, வச்ய, உன்மாதனை, மஹாங்குச, கேசரீ, பீஜ, யோனி, த்ரிகண்டா என்பனவை. இவை பூஜாகாலத்தில் செய்யவேண்டியவை. இவற்றின் லக்ஷணங்கள் தந்த்ராந்தரம், வாராஹீதந்த்ர தந்த்ரம் முதலியவற்றில் சொல்லப்பட்டிருக்கிறது. அவைகளைப்பற்றியும், அவைகளை எப்படிச் செய்வது, எந்தெந்த ஸமயங்களில் செய்வது என்பதைப்பற்றியும் குருமுகமாகவே தெரிந்து கொள்ளவேண்டியது அவச்யம். பொதுவாகச் சொல்லுகையில் இரு கைகளிலுமுள்ள விரல்

களெல்லாவற்றையும் உபயோகப்படுத்தி, இரு கைகளையும் சேர்த்தாற்போல் ஸமானரூபமாக ப்ரதிமுத்ரையையும் செய்ய வேண்டியது. ஒவ்வொரு கையிலுமுள்ள ஐந்து விரல்களும் பஞ்சதூதங்களைக் குறிக்குமென்றும், வலது கையும் (சரீரத்தின்) அந்தப் பக்கமுமே ப்ரகாசரூபமானவை யென்றும், இடது கையும், (சரீரத்தின்) அந்தப் பக்கமுமே விமர்சாத்மகமான சக்தி ஸ்வரூபமென்றும், சொல்லப்படுகிறது. ஆகவே அந்தந்த முத்ரையில் கைகளைச் சேர்த்துக்காட்டுகிறபோது சிவ சக்தி ஸாமரஸ்ய ரூபமாக இருந்து அவர்கள் ஜகத்தைப் பற்றி செய்யும் ஸ்ருஷ்ட்யாதி க்ருத்யங்களுக்கு அனுகூலமாயிருக்

2. லோகத்தில் ஜனங்கள் ஸம்பாஷிக்குங்கபோது அவர்கள் கைகளால் காட்டும் ஸங்கேதங்கள் அவரவர்களுடைய மநோபாவத்தை வெளிப்படுத்துவதை நாம் ஸாதாரணமாய் பார்க்கிறோம். அதேபோதிநி முத்ரைகளைக் காட்டுவதால் தேவதைகளுக்கு அந்தந்த பாவமானது ஏற்பட்டு பக்தர்களிடத்தில் பூர்ணமான அனுக்ரஹமேற்படும். இவற்றை ஸரியாகச் செய்தால் தேவதைக்கு ஸந்தோஷம் ஏற்படுவதுபோல், தவறுதல் செய்தால் கோபம் ஏற்படுமென்றும் சொல்லப்படுவதால், அவற்றை ஸரியாகச் செய்வதை பிதவுர் கவனத்துடன் (குருமுகமாக) தெரிந்துகொள்ளவேண்டியது. முத்ர — ஸந்தோஷிக்கிறது, உண்டுபண்ணுகிறது, நன்மதாக முத்ரா—என்று பதம் ஏற்படுகிறது.

'ஸ்வல்ப பேதாத் கோபஸம்பவா ப்ராணிநாம் ஜாயதே ததா: |
தேநைவ ஸர்வமுத்ராணும் முத்ரா ஸம்ரக்ஷணம் மதா |
பூஜா காலே தர்சநீயா முத்ராஸ்தா: ஸர்வதா சிவே ||'

[தந்த்ர ராஜம்]

3. முத்ரைகளுக்கு அதிதேவதை (செய்பவர்), மந்த்ர, தத்வங்களையொட்டி ஸ்தூல, சூக்ஷ்ம, பர என்ற அந்த பேதங்களுண்டு.

முத்ரா: ஸ்யுஸ் த்ரிவிதா தேவி ஸாதகா மந்த்ர தத்வத: |
ஸ்தூல ஸூக்ஷ்ம பரா க்யாதா: தத்த்ரைவித்யம்
ச்ருணு ப்ரியே ||' [தந்த்ர ராஜம்]

அவற்றிற்குத் தனித்தனியான பீஜாக்ஷரங்களுமுண்டு.

4. ஸ்ரீசக்ரத்திய ஆவரண பூஜையின்போது அந்தந்த ஆவரண பூஜையின் கடைசியில் இம்முத்ரைகள் காட்டப்படு

வது வழக்கம். முதலாவது ஆவரணமாகிய த்ரைலோக்ய மோஹனை சக்ரபூஜையின் கடைசியில் ஸர்வஸம்க்ஷோபிணீ முத்ரையையும், அதிலிருந்து ஆரோஹணக்ரமத்தில் ஆவரணங்களைப் பூஜிப்பதில் ஸர்வவித்ராவிணீ முதலாக இருக்கும் முத்ரைகளையும் க்ரமமாகக் காட்டவேண்டும். கடைசியாக ஸர்வானந்தமயசக்ரத்தின் பூஜையின் அர்த்தத்தில் யோநி முத்ரையைக் காட்டவேண்டும். இந்த ஒன்பது முத்ரைகளின் ஸமஷ்டியான ரூபம் த்ரிகண்டா முத்ரை.

'முத்ராZZக்யா ஸா யதா ஸம்வித் அம்பிகா த்ரிகலாமயீ |
த்ரிகண்டா ரூபமாபந்நா ஸதா ஸந்நிதி காரிணீ |
ஸர்வஸ்ய சக்ர ராஜஸ்ய வ்யாபிகா பரிகீர்த்திதா ||

[யோகிநீ தந்த்ரம்]

त्रिपुराश्रीवशंकरी

த்ரிபுராஸ்ரீ வசம்கரீ (978)

த்ரிபுராஸ்ரீ தேவியைத் தன் வசப்படுத்துகிறவள்.

சக்ரத்தின் ஐந்தாவது சக்ரமாகிற ஸர்வார்த்தஸாதக சக்ரத்தின் அதிஷ்டான தேவதையின் பெயர் த்ரிபுராஸ்ரீ,

'ஸர்வார்த்த ஸாதகாக்யே சக்ரேZமுஷ்மிந் ஸமஸ்த பலதாத்ரீ |
த்ரிபுராஸ்ரீர் மம குசலம் திசதாத் உத்தீர்ண யோகிநீ ஸேவ்யா ||'

[லலிதாஸ்தவரத்நம்]

ज्ञानमुद्रा

ஞானமுத்ரா (979)

ஞானமுத்ரையின் ரூபமாயிருப்பவள்.

1. ஞானமுத்ரையென்பது ஜ்ஞான முத்ரை. வலது கை கட்டைவிரல், ஆள்காட்டிவிரல் இவற்றின் நுனிகளைச் சேர்ப்பதினால் ஏற்படுவது. இந்த முத்ரையை இந்த முத்ரை யோடு சேர்ப்பதாக த்யானம் செய்வது வழக்கம்.

2. அல்லது, ஞானத்தினால் ஸர்வோத்தமத்தைக் கொடுப்பவள் என்றும் சொல்லலாம்.

3. அல்லது, ஞானம்-சித் அம்சம், முதல்-ஆனந்தம் இவையிரண்டையுமளிக்கிறவள் என்றும் சொல்லலாம்.

ज्ञानगम्या

ஞானகம்யா (980)

ஞானத்தினால் அடையப்படுகிறவள்.

அம்பிகையினுடைய நிஷ்களமான ரூபமானது ஞானத்தினால் மட்டும் அடையப்பெறும் என்பதாக (அதர்வணிகையால்) கூர்மபுராணத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

'யத் தன் மே நிஷ்களம் ரூபம் சிந்மாத்ரம் கேவலம் சிவம் |
ஸர்வோபாதி விநிர்முக்தம் அகந்தம் அம்ருதம் பரம் ||
ஞாநேநைகேந தல்லப்யம் க்லேசேந பரமம் பதம் |
ஞாநமேவ ப்ரபச்யந்தோ மாமேவ ப்ரவிசந்தி தே ||'

ज्ञानज्ञेयस्वरूपिणी

நய வ்ஸவ((981)

ஞானம், ஞேயம் இவற்றின்

1. ஞானமென்பது அறிவு. ஞேயம் என்பது அறியப்படும் பொருள். இவ்விரண்டும் அம்பாளுடைய ரூபமென்பதாக இங்கு சொல்லப்பட்டது. இதுவே திருக், திருச்யமென்றும் சொல்லப்படும்.

2. அல்லது, ஞான—ஞானத்தினால், ஞேய—அறியக்கூடிய ஸ்வரூபத்தையுடையவளென்றும் சொல்லார்.

योनिमुद्रा

மூத்ரா (982)

யோனி முத்ரையின் ரூபமாயிருப்பவள்.

1. மேலே சொல்லப்பட்ட தச முத்ரைகளில் யோனி முத்ரையென்பது ஒன்பதாவது. இதையே முத்ரைகளில் ப்ரதமமென்று சொல்லப்படுகிறது. இது அம்பாளுடைய ஸ்வரூபமென்றும் இதிலிருந்து மற்ற முத்ராக்கள் உண்டாயினவென்றும்,

'ஏகா ஸைஷா மஹாமுத்ரா யோநிமுத்ராத்வமாகதா |
தயா விபக்தஃ ஸ்வாத்மா து ஸம்கேஷோபாதி ப்ரபேதத : ||'

என்று சொல்லப்பட்டிருக்கிறது. இந்த விஷயத்தைப் பற்றி பாஸ்கரராயருடைய ஸௌபாக்யத்தில் பார்க்கவும்.

2. அல்லது, யோனியில் ஸம்தோஷத்தைக் கொடுப்பவள் என்று சொல்லலாம்.

3. அல்லது, யோனியையே ஆச்சாதிகையாக(மறைவாக) உடைய பிரம்மனின் ரூபமாயிருப்பவளென்றும் சொல்லலாம்.

4. அல்லது, குதம், மேட்ரம் இவற்றின் மடிவுக்கு யோனியென்ற பெயர். அந்த இடத்தின் ஸம்பந்தமாகச் செய்யப்படும் முத்ரையானது மந்த்ரங்களின் தோஷங்களைப் போக்குவதற்காகச் செய்வது. இதைப்பற்றி, குருமுகமாகத் தெரிந்துகொள்ளவேண்டியது.

त्रिखण्डेशी

த்ரிகண்டேஶீ (983)

த்ரிகண்டா முத்ரையின் ஈச்வரியாக இருப்பவள்.

1. த்ரிகண்டா முத்ரையென்பது மேலே சொல்லிய தச முத்ரைகளில் பத்தாவது. இதுவே மஹாயோனி முத்ரை யென்றும் சொல்லப்படும்.

'கனிஷ்டாங்குஷ்ட ஸம்ச்லேஷா மஹாயோனிஸ் த்ரிகண்டிகா |'
(தந்த்ர ராஜம்)

2. அல்லது, பூர்வித்தையின் ஸாரா, ஸௌம்ய, அக்னி கண்டங்களென்ற மூன்று கண்டங்களின் அதிதேவதையென் றும் சொல்லலாம்.

त्रिगुणा

த்ரிகுணை (984)

ஸத்வ, ரஜஸ், தமோ குணங்களோடு கூடியவள்.

1. அதாவது, அம்மூன்று குணங்கள் பொருந்தியதாய் ஸாங்க்யர்கள் சொல்லும் ப்ரகிருதி ரூபமாயிருப்பவள் என்று அர்த்தம். இந்த குணத்ரயத்தோடு ஸகல சரீரங்களிலும் அபிமை ம்யாயித்திருப்பதைப்பற்றி,

'யோகேச்வரீ சரீராணி கதோதி விகதோதி ச |
நாநாக்ருதி க்ரியா ரூப நாம வ்ருத்தி: ஸ்வலீலயா |
த்ரிதா யத்ன வர்த்ததே லோகே தஸ்மாத் ஸா த்ரிகுணேச்யதே ||'

என்று மாயாபுராணத்திலும்,

'ஸர்வபூதேஷு ஸர்வாத்மந்யா சக்திரபரா தவ |
குணேச்ரயா நமஸ்தஸ்யை சாச்வதாயை ஸுதேச்வரீ ||'

என்று விஷ்ணுபுராணத்திலும் சொல்லப்பட்டிருக்கிறது.

2. விஷ்ணுவானவர் பரிசக்ரவர்த்தினை அடக்கி லோகங்களெல்லாம் அளந்தது மூன்றடியாலாகையால் அவருக்கு

த்ரிஸ்ரிக்ரஹணென்ற பெயர். கன்னையானவள் ஸ்வர்க்கத்திலிருந்து பூமிக்கு வந்து அங்கிருந்து பரகாலத்திற்குப் போனதால் த்ரிபதகா என்ற பெயர். இவ்விருவரும் அர்ப்பிணையின் ரூபமாயிருப்பதால், அர்ப்பிணையானவள் ஸத்வாதி குணத்ரயங்களால் உத்பத்தி, ஸ்திதி ஸம்ஹாரங்களைச் செய்வதால் த்ரிகுணா என்ற பெயர் என்பதாக,

'பதஸ்த்ரிபிர்பலிர்பத்ம: ஸ்வர்க்காதி த்ரிபதகா மதா |
உத்பத்தி ஸ்திதி ஸம்ஹார ஸத்வாத்யைஸ் த்ரிகுணேச்யதே ||

என்ற தேவி புராணத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

अम्बा
அம்பா (985)

(மேலே சொல்லிய குணத்ரயத்திற்கும்) ஜனனியாயிருப்பவள்.

1. அதாவது, அவற்றின் காரணபூதையாயிருக்கிறாள் என்ற தாத்பர்யம். இந்த ரூபமேதான் மந்த்ர ரூபமென்றும் சொல்லப்படும்.

'தேஜோரூபம் சக்தி மூர்த்திகாம் ப்ரபஞ்சஸ்யாபி காரணம் |
குணத்ரயம் அமிஶாம் சயத் காரணம் உதாஹ்ருதம் ||
தத் ஸ்வரூபா நுஸந்தாந ஸித்தி: ஸம்யக்த்வமீரிதம் |
தந்மந்த்ர வீர்யமுத்திஷ்டம் மந்த்ராணாம் ஜீவ ரூபிதம் : ||
(தந்த்ர ராஜம்)

2. அல்லது, ஸகல [illegible] ஜனனியாக இருப்பவள் என்றாம் சொல்லலாம்.

யோனி சக்ராத்தை அடைந்திருப்பவள்.

ஸ்ரீ சக்ரத்தின் மத்தியிலிருக்கும் யோனி சக்ரமாகிய த்ரிகோணமே அர்ப்பிணையின் ரூபமென்பதாகவும், பிந்துவானவரும் சிவஸ்வரூபமென்றும்,

'த்ரிகோணரூபிணீ சக்தி: பிந்துரூப: பர: சிவ: ஸம்ஸ்ருத: |
அவிநாபாவ ஸம்பந்த: தஸ்மாத் பிந்து த்ரிகோணயோ : ||'

என்பதாக ஸ்ரீலலிதா த்ரிசதியில் சொல்லப்பட்டிருக்கிறது.

अनघा
அநகா (987)

அகம் (பாபம், துக்கம்) யாதொன்றுமில்லாதவள்.

अद्भुतचारिता (988)
அத்புதசாரித்ரா

யகரமான சரித்திரங்களை உடையவள்.

1. இதனால் பண்டை ரதூறர், அனாகாதூறக்ரதூறர் முதலான அப்பாருடைய லீலைகள் சொல்லப்பட்டன.

2. அல்லது, அத்புதங்களின்போது - நூகப்பர் முதலான உத்பாதங்கள் காரணமாக, சரிக்கும்-வெளிவரும், துவக்கடலண்களிலிருந்து த்ராணம் செய்கிறவள் (காப்பாற்றுகிறவள்) என்றும் சொல்லலாம்.

वाञ्छितार्थप्रदायिनी (989)
வாஞ்சிதார்த்த ப்ரதாயிநீ

(பக்தர்களால்) கோரப்பட்ட அர்த்தங்களை அபரிமிதமாய்க் கொடுப்பவள்.

இதர தேவதைகள் போலல்லாமல், அர்ப்பணைகளின் சரணங்களை பக்தர்களுடைய மநோரதங்களை விரும்புவதற்கு அதிகமாகக் கொடுக்கும் சக்திவாய்ந்தவை என்பதாய்,

'த்வதங்ய: பாணிப்யாம் அபயவரதோ தைவதகண:
த்வமேகா நைவாஸி ப்ரகடிதவராபீத்யபிநயா |
பயாத் த்ராதும் தாதும் பலமபி ச வாஞ்சாஸமதிகம்
சரண்யே லோகாநாம் தவ ஹி சரணாவேவ நிபுணௌ ||' (4)

என்பதாக டூரீ பாஸ்கராசார்யர் ஸௌந்தர்யலஹரியில் வர்ணித்திருக்கிறார்கள்.

अभ्यासातिशयज्ञाता (990)
அப்யாஸாதிசயக்ஞாதா

அப்யாஸத்தின் பெருக்கினால் அறியப்படுகிறவள்.

அதாவது, அடிக்கடி

'ஆலோகே: ஸ்ரவணாத் கிம் கலமநுதே வேதாந்த சிந்தயா |'

என்ற சொல்லையடி சொய்யப்படும் ப்ரஹ்மாத்மைக்யாநுபவத்தினை (தன் ஆத்மாவுடன் ப்ரம்மத்தை ஒன்றாயிருப்பதைப் பற்றிய த்ருடமாயிருப்பதினால்) ஆலோசிக்க அதிகரிக்க அதிகரிக்க, அர்ப்பணையைப்பற்றிய ஞானமானது மோக்ஷத்தில் எற்படுத்துகிறது என்றும் சொல்லியிருக்கிறார். இதுவே தான்,

'ஆவ்ருத்திரஸக்ருத் உபதேசாத் |'

என்று வ்யாஸஸூத்ரம், கபிலஸூத்ரம் இவற்றில் சொல்லப்பட்டது. ப்ரம்ஹாண்ட புராணத்தில்,

'த்யாநைக த்ருச்யா ஞாநாங்கி வித்யாத்மா ஹ்ருதயாம்பதா |
ஆத்மைக்யாத் வ்யக்திமாயாதி சிராநுஷ்டாந கௌரவாத் ||'

என்று சொல்லப்படுகிறது.

षडध्वातीतरूपिणी

ஷடத்வ (991)

ஆறுவிதமான அத்வாக்களையும் கடந்ததான ரூபத்தையுடையவள்.

1. அத்வா என்பது வழி, மார்க்கம். (அம்பிகையை) உபாஸிப்பதில் ஆறு அத்வாக்களிருப்பனவாகச் சொல்லப்படும். அவை, வர்ண, பத, மந்த்ர, கலா, தத்வ, புவன அத்வாக்கள்.

'உக்தம் கலாத்வா தத்வாத்வா புவநாத்வேதி சத்ரயம் |
வர்ணாத்வா சபதாத்வா சமந்த்ராத்வேத்யபரம் பரம் ||'
[சாரதாதிலகம்]

இவற்றில் அகாராதி க்ஷகாராந்தமான வர்ணங்களாலானது வர்ணாத்வா என்றும், வர்ணங்களின் சேர்க்கைகளான பதங்களாலானது பதாத்வா என்றும், மந்த்ரங்களாலானது மந்த்ராத்வா என்றும், கலைகளாலானது கலாத்வா என்றும், தத்துவங்களாலானது தத்வாத்வா என்றும், புவன (அல்லது, புர)ங்களாலானது புவனாத்வா என்றும் சொல்லப்படும்.

'நிவ்ருத்யாத்யா: கலா: பஞ்ச காலாத்வேதி ப்ரகீர்த்திதா: |
தத்வாத்வா பஞ்சதாபிந்ந: சிவாத்யாகம போதித: ||
... ... |
ஸாதோ புவநாத்வேதி புவநாநி மஹேஷி: ||
வர்ணத்வேதி வதந்த்யர்ணாந் ஆதி க்ஷாந்தாந் மஹேஷிண: |
வர்ணஸங்க: பதாத்வா ஸ்யாத் மந்த்ராத்வா மந்த்ர ராசய:||'
[சாரதாதிலகம்]

2. இந்த ஆறு அத்வாக்களில் வர்ண, பத, மந்த்ர, அத்வாக்கள் மூன்றும் சப்தஸ்வரூபமாயிருப்பதால் விஸர்கமாகி களாய் சக்தி பாகமாயிருக்கின்றன. கலா, தத்வ, புவன அத்வாக்கள் மூன்றும் அர்த்தஸ்வரூபமாயிருப்பதால் ப்ரகாச அம்சங்களாய் சிவபாகமாய் இருக்கின்றன.

'மந்த்ராத்வா சபதாத்வா சவர்ணாத்வா சேதி சப்தத: |
புவநாத்வா சதத்வாத்வா கலாத்வாசார்த்ததஃ க்ரமாத் ||'
[வாயவீயஸம்ஹிதை]

'சப்த ஜாதம் அசேஷம் து தத்தே சங்கர வல்லபா |
அர்த்த ஸ்வரூபமகிலம் தத்தே மூக்தேந்து சேகர: ||'

[வாயவீயஸம்ஹிதை]

அவிமர்சஜ்ய ஏகார்ணா: பத மந்த்ரார்ணத்மகம் த்ரிதா பவதி|
புரதத்வ கலாத்மாகர்த்தோ தர்மிண இத்தம் ப்ரகாசஜ்ய ||'

[விரூபாக்ஷபஞ்சாசிகா]

(கைகப்டற்றி மேலே சொல்லிய க்ரந்தங்களுடன் ஒத்துப்பார்க்க வேண்டும். ப்ரபஞ்சஸாரம், சுபகமணிஸ்தோத்ர ஸ்ரீவித்யை முதலியவற்றையும் பார்க்கவும்.)

அம்பிகை இந்த அத்வைதத்துக்கு அதிதாயிருப்பதாக இங்கு சொல்லப்பட்டது.

3. அல்லது சிவ, விஷ்ணு, சூர்க்ய, ஸௌர்யன், கணபதி, இந்து என்ற ஆறு தேவதைகளின் உபாஸனைகளை ஒருங்கிணைத்துக் கொண்டார். (இந்து உபாஸனை என்பது மிகவும் குறைவு.) இந்த உபாஸனைகளிலும் பூர்வ ஜன்மங்களில் சித்த சுத்தியடைந்துவருவதற்கு இந்த ஜன்மத்தில் அம்பிகையின் உபாஸ்னையானது கிடைத்துள்ளதாகச் சொல்லப்பட்டிருப்பதால் அந்த ஆறுவிதமான அத்வைதத்துக்கு அதிதாயிருப்பவள் என்றும் சொல்லலாம்.

'சைவ வைஷ்ணவ தௌர்கார்க காணபத்யேந்து ஸம்பதை: |
மந்த்ரை: விசுத்த சித்தஜ்ய குலஞாநம் ப்ரகாசதே ||'

[குலார்ணவம்]

अव्याजकरुणामूर्तिः

அவ்யாஜகருணாமூர்த்தி: (992)

அவ்யாஜமான கருணையை ஸ்வரூபமாயுடையவள்.

அவ்யாஜமென்றால் நடிப்பு, வேடம் இல்லாத, அல்லது மறைவு படாத என்று அர்த்தம். அம்பிகையின் கருணையைப்பற்றி எல்லா பக்தர்களும் எதிர்மறையாகவோ படிப்பும் திருக்கிறார்கள்.

(அயதி கருணை காசித் அருணை, அருணம் கருணாதரங்கிதாகூடம்)

अज्ञानध्वान्तदीपिका

அக்ஞாநத்வாந்த தீபிகா (993)

அக்ஞானமாகிற இருட்டைப்போக்கும் தீபம் போன்றவள்.

மேலே சொல்லியபடி அம்பிகை பரம கருணைரூபிணியாய் இருப்பதால், ஜீவாத்மாக்களைச் சூழ்ந்திருக்கும் அக்ஞான,

ரூபத்தை அந்தகாரத்தை அகற்றி அவர்களுக்கு ஞானத்தைக் கொடுக்கிறாள் என்று சொல்லப்பட்டது.

இதிஹாஸத்தில்,

தேஷாமேவானுகம்பார்த்தம் அஹமம் அக்ஞானஜம் தம: |
நாசயாம்யாத்மபாவஸ்தோ ஜ்ஞான தீபேன பாஸ்வதா ||

என்று சொல்லப்பட்டிருக்கிறது.

बालगोपविदिता

ஆபால கோப வித்தா (994)

குழந்தைகளாலும் இடையர்களாலும்கூட அறியப்படுகிறவள்.

1. அக்ஞானிகளுக்கு குழந்தைகளையும், இடையர்களையும் உதாஹரணமாகச் சொல்வது வழக்கம். அவர்கள்கூட அறியக்கூடிய ஸ்வரூபத்தை உடையவளென்று சொன்னதினால் அம்பாளுடைய ஸௌலப்யத்தின் அதிசயமானது சொல்லப்பட்டது.

2. அல்லது — பாலர்களான ப்ரம்ஹாதிகளைக் காப்பாற்றுகிறவர் பாலகோபர். இதனால் ஸதாசிவன் குறிப்பிடப்படுகிறார். திருப்பவர், பாலரையும் கோபரையுமிருப்பவர் பாலகோபன். விஷ்ணுவின் அவதாரமாகிய க்ருஷ்ணன். ஆகவே, பாலகோபனென்றால் இடையர்களின் தலைவன் என்றாகிறது. ஆகவே ஆபாலகோபம் என்றால் ஸதாசிவன், க்ருஷ்ணன் முதலாக இடையர்வரை யிலுள்ள யாவருமென்று அர்த்தம். இவர்களெல்லோராலும் அறியப்படுகிறவள் என்றால் ஹரிஹராதிகள் முதல் பாமரர்கள் வரையிலுள்ள யாவருமே அம்பாளை அறிகிறார்கள் என்ற தாத்பர்யம்.

3. இதுவே தான், ஸகலர்களாலும் தான் என்ற பாலத்திலும் அம்பாளை அறிகிறார்கள் என்பதாக,

"தாம் அஹம் ப்ரத்யய வ்யாஜாத் ஸர்வே ஜாகந்தி ஜந்தவ: |"

என்று ஸ்தவத்தில் சொல்லியிருக்கிறது.

4. ஸாதாரணமாக லோக வழக்கத்தில் ஸாமான்ய ஜனங்களையும் குறிப்பதற்காக 'ஆபால கோபாலம்' என்ற சொல் வழக்கையும் பார்க்கிறோம்.

இவ்விதம் எல்லோரும் அறியக்கூடியவளாயிருப்பதினால் 'அதிபாலிகயா அவக்ஞா' என்றபடி அம்பாளிடத்தில் மர்யா

னைத்துக் குறைவு ஏற்படக்கூடுமோ என்று எப்போதும் அஞ்சி அதற்கு காரணத்தினால் போக்கப்படுகிறது.

सर्वानुल्लङ्घ्यशासना

ஸர்வா நுல்லங்க்ய சாஸனா (995)

யாவரும் மீறக்கூடாத கட்டளைகளையுடையவள்.

அதாவது, அம்பாளுடைய ஆக்ஞைகளை, ப்ரம்மா, விஷ்ணு முதலானவர்களும் அதிக்ரமிக்கமுடியாதென்று சொல்லப்பட்டது. இதே அபிப்ராயத்தில் அம்பாளுடைய புருவத்தின் அசைப்பினால் ஏற்படும் உத்தரவின்போதில் ப்ரஹ்மா முதலானவர்கள் ஜகத்திலுடைய ஸ்ருஷ்டி முதலான பஞ்சக்ருத்யங்களைச் செய்கிறார்களென்று ஸௌந்தர்யலஹரி'யில்,

'ஜகத் ஸூதே தாதா மபிரவதி ருத்ர: க்ஷபயதே
திரஸ்குர்வந்நேதத் ஸ்வமபி வபுரீசஸ்திரயதி |
ஸதா பூர்வ: ஸர்வம் ததிதம் அனுக்ருஹ்ணாதி ச சிவ:
தவாக்ஞாம் அலம்ப்ய க்ஷணசலிதயோர் ப்ரூலதிகயோ: ॥'(29)

என்ற சொல்லியிருக்கிறார்கள்.

श्रीचक्रराजनिलया

ஸ்ரீசக்ராராஜ நிலயா (996)

ஸ்ரீசக்ரத்தைத் தன்னுடையது இடமாக உடையவள்.

1. 'ஸ்ரீ சக்ரம் நவாத்மகம்' என்று ஸ்ரீ வித்யா சாஸ்திரத்தில் சொல்லியிருப்பதால் ஸ்ரீசக்ரமானது ஸ்ரீவித்யைக்கு எப்போது ஆதாரமாயிருக்கிறதோ, அப்படிக்காக ஸ்ரீ சக்ரமானது சிவன், சக்தி இருவர்களுக்கும் இருப்பிடமாக இருக்கிறதென்று சொல்லப்பட்டது.

2. சக்ரங்களுக்கெல்லாம் ராஜாவானதால் ராஜ்ஞி என்றும் சக்ரங்களுக்கெல்லாம் மஹாராஜாவான சதாசிவனுடைய சக்தியானதால் மஹாராஜ்ஞி, சக்ரராஜேச்வரி, ஸ்ரீசக்ரநாயிகை என்றும் சொல்லுவது வழக்கம்.

श्रीमत्त्रिपुरसुन्दरी

ஸ்ரீமத் த்ரிபுரஸுந்தரீ (997)

ஸ்ரீமதியாயும் பரமசிவனுடைய பாலையாயுமிருப்பவள்.

ப்ரம்ஹா, விஷ்ணு, சிவன் இவர்களுடைய சரீரங்களைத் த்ரிபுரங்களென்றும், அவற்றைத் தன்சரீரத்தின் பாகங்களாக உடைத்தாயிருப்பதால் பராசக்திக்கு த்ரிபுரனென்ற பெயர் என்பதாக,

'ப்ரதாநேச்சாவசாத் சம்போ: சரீரம் அபவத் த்ரிதா |
தத்ரோர்த்வ பாக: ஸம்ஜாத: பஞ்சவக்த்ர: சதுர்புஜ: ||
பத்ம கேஸர கௌராங்க: காயோ ப்ரஹ்மேதி மதோஹ்யவை |
தண் மத்யபாகோ நீலாங்க: ஏகவக்த்ர: சதுர்புஜ: ||
சங்க சக்ர கதா பத்மபாணி: காய: ஸ வைஷ்ணவ: |
அபவத் தததோபாகே பஞ்சவக்த்ர: சதுர்புஜ: ||
ஸ்படிகாப்ரமய: சுக்ல: ஸ காயச்சாந்த்ரசேகர: |
ஏவம் த்ரிபி: புரைர்யோகாத் த்ரிபுர: பரம: சிவ: ||'

என்ற காளிகா புராணத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. அவளுடைய ஸுந்தரீ - பார்வதி - த்ரிபுரஸுந்தரீ. அவளை ஸ்ரீயோடு பொருந்தியவளாய் இருப்பதால் ஸ்ரீமத் த்ரிபுரஸுந்தரீ என்ற பெயர்.

(998)

வா

ஸ்ரீயையுடைய சிவா.

அப்பிரகை சிவனுடைய பத்னியாயிருப்பதுடன் அவரோடு அபேதமாயிருப்பதால் சிவா என்ற பெயர். அதனால் சிவனென்ற நாமத்திற்கு என்னென்ன விதமான அர்த்தங்களுண்டோ அவை எல்லாம் சிவா என்ற நாமத்திற்கும் உண்டு.

शिवशक्त्यैक्यरूपिणी

சிவ சக்த்யைக்ய ரூபிணீ (999)

சிவன், சக்தி இவர்களுடைய ஸாமரஸ்யத்தையே ரூபமாக உடையவள்.

1. பரப்ரஹ்ம ரூபிணியான அம்பாளை தனியான சிவ ரூபமென்றுமில்லை, சக்திஸ்வரூபமென்றுமில்லை. இவ்விரண்டுடைய (ஒன்றுகக் கலந்த) ஸாமரஸ்ய ரூபமாக எண்ணவேண்டும் என்ற தாத்பர்யம். இந்த பாவத்திற்கு அனேகமித்தான உபமானங்களுண்டு. நிலத்தில் தைலம் போலவும், சந்த்ரனுள் சந்த்ரிகையுள் போலவும், ஸூர்யனுள் உஷ்ணமும் போலவும், பலமிதமாக தூப்பிடப்பட்டிருக்கிறது.

'பாவகஸ்யோஷ்ணதேவேயம் பாஸ்கரஸ்யேவ தீதிதி: |
சந்த்ரஸ்ய சந்த்ரிகேவேயம் சிவஸ்ய ஸஹஜா சிவா ||'
'சிவேச்சயா பராசக்தி: சிவ தத்வைகதாம் கதா |
தத: பரிஸ்புரத்யாதௌ ஸர்கே தைலம் திலாதிவ ||'

2. இவர்களுடைய ஸாமரஸ்யமென்பது இவர்கள் அத்யந்தம் அபேதமாயிருப்பதைக் குறிக்கும்.

'ப்ரம்ஹணோZபிந்ந சக்திஸ்து ப்ரம்ஹைவ கலு நாபரா |
ததாஸதி வ்ருதா ப்ரோக்தம் சக்திரித்யவிவேகிபி: |
சக்தி சக்திமதோர் வித்வந் பேதாபேதஸ்து துர்கட: ||'
[ஸௌந்தர்யலஹரி]

'யதைகம் பவதஸ்பந்தம் ஏகம் ஔஷ்ண்யாதலௌ யதா |
சிந்மாத்ரம் ஸ்பந்த சக்திச்ச ததைவேகாத்ம ஸர்வதா ||'
[வாஸிஷ்ட ராமாயணம்]

3. அல்லது, ஸ்ரீசக்ரத்திலிருக்கும் சில சக்ரங்கள், சக்தி சக்ரங்கள் இவற்றின் ஐக்யத்தைதையே ரூபமாக உடையவள் என்றும் சொல்லலாம். ஸ்ரீசக்ரத்திய லென்பது சக்ரங்களில் மேல்நோக்கி இருக்கும் நான்கு சக்ரங்களைச் சிவசக்ரங்களென்றும், கீழ்நோக்கி இருக்கும் ஐந்து சக்ரங்களைச் சக்தி சக்ரங்களென்றும் சொல்லப்படும். இவற்றின் தத்வார்த்தங்களைப்பற்றியும், இவற்றால் ஸ்ரீசக்ரம் அமையப்பெறுவதைப்பற்றியும் ஸ்ரீ பாஸ்காராயருடைய 'ஸௌபாக்யஹ்ருதய'த்தின் 11-வது ச்லோகமாகிய 'சதுர்பி: ஸ்ரீகண்டை:' என்ற ச்லோகத்தையும், அதின் வியாக்யானத்தையும் பார்க்கவும்.

4. ஸ்ரீசக்ரத்திலுடைய அமைப்பைப்பற்றியும், அதின் பாகங்கள் ஒன்றுக்குள் ஒன்று அவிநாபாவ ஸம்பந்தமாகப் பொருந்தி இருப்பதைப்பற்றியும், ஸ்ரீலலிதாத்ரிசதியில் பின் வருமாறு சொல்லப்பட்டிருக்கிறது.

'சதுர்பி: சிவசக்ரைச்ச சக்தி சக்ரைச்ச பஞ்சபி: |
நவ சக்ரைச்ச ஸம்ஸித்தம் ஸ்ரீசக்ரம் சிவயோர் வபு: ||
த்ரிகோணம் அஷ்டகோணம் ச தசகோண த்வயம் ததா |
சதுர்தசாரம் சைதாநி சக்தி சக்ராணி பஞ்ச ச ||
பிந்துச் சாஷ்டதளம் பத்மம் பத்மம் சோஷடச பத்ரகம் |
சதுரச்ரம் ச சத்வாரி சிவ சக்ராண்யநுக்ரமாத் ||
த்ரிகோணே பைந்தவம் சலிஷ்டம் அஷ்டாரேZஷ்டதளாம்
தசாரயோ: த்வாடசாரம் க்ருஹம் புவநாச்ரகே ||
[புரம் |

ஸைவாகாமபி சாக்தாகாம் சக்ராணும் ச பராம்பராம் |
அவிநாபாவ ஸம்பந்தம் யோ ஜாநாதி ஸ சக்ரவித் ||
த்ரிகோண ரூபிணீ சக்திः பிந்துரூபः பரः சிவः |
அவிநாபாவ ஸம்பந்தः தஸ்மாத் பிந்துத்ரிகோணயோः ||'

5. அல்லது, சிவ சக்திகளுடைய ஐக்யத்தைப் ப்ரதிபாதிக்கும் ஹம்ஸ மந்த்ரத்தின் ரூபமாயிருப்பவள் என்றும் சொல்லலாம். இந்த மந்த்ரத்தைப்பற்றி ஸமுத்ஸம்ஹிதையில்

'சாந்தாந்தம் சக்திஸம்யோக்தர ததந்தம் பீஜமுச்யதே |
விந்வா சக்திர்பவேத் பீஜம் சிவ ஏவ ச சாம்யதா ||
தோராயம் பரமோ மந்த்ரः சிவ சக்த்யாத்மகः ஸ்ம்ருதः ||'

என்று சொல்லப்பட்டது. [ப என்பதற்கு அர்தநாரீஸ்வர ரூபமானது ஸ. இதுதான் சாந்தாந்தம் என்றும் சக்தியென்றும் சொல்லப்பட்டது. அதற்குப் அர்தநாரீஸ்வரத்வ மென்றும் சிவனென்றும் சொல்லிற்று. ஆகவே இவ்விரண்டின் சேர்க்கையான ஹம்ஸமந்த்ரமானது சிவசக்த்யாத்மகம் என்று ஏற்படுகிறது.]

6. அல்லது, சிவனுடைய சக்திகளாகிய தாமாவதீ முதலான ஐவர்களுடைய ஐக்யரூபமாக—பஞ்சமியான ரூபமாக, இருப்பவளென்றும் சொல்லலாம். அவர்கள் பெயர்—தாமாவதி, ஸ்ரத்தா, டாஸ்வதீ, ஸ்பந்தா, விப்ரீ. தாமாவதீ திரோதானத்தையும், டாஸ்வதீ திரோபவத்தையும், ஸ்பந்தா அநுக்ரஹத்தையும், விப்ரீ ஸ்வரூபத்வத்தையும், ஸ்ரத்தா புஷ்டியையும், செய்யும் சக்திகள். தாமாவதீ ப்ருதிவியிலும், ஸ்ரத்தா ஜலத்திலும், டாஸ்வதீ தேஜஸ்ஸிலும், ஸ்பந்தா வாயுவிலும், விப்ரீ ஆகாசத்திலும் இருக்கும் சக்திகள். இவர்களால் ஜகத்தானது வ்யாபிக்கப்பட்டிருப்பதாகச் சொல்லப்பட்டது.

'தாமாவதி திரோதான டாஸ்வத்யவபாஸநே ஸ்ரத்வாகாம் சக்தி : |
ஸ்பந்தா வ்யாப்தென விப்ரீ ஸ்ரஷ்டா து புஷ்டென
தாமாவதி ப்ருதிவ்யாம் ஸ்ரத்தாதாப்ஸு ஸுதென து [மே ||
வாயௌ ஸ்பந்தா விப்ரீ கபஸி வ்யாப்தம் [பாஸ்வதி ப்ரதேந |
ஜகத் தாபி: ||' [விருபாக்ஷ பஞ்சாசிகா]

இம்மாதிரி இதுவரையில் சொல்லப்பட்ட நாமங்களின் முதல் மூன்றுகிய "ஸ்ரீமாதா, ஸ்ரீமஹாராஜ்ஞீ, ஸ்ரீமத் ஸிம்ஹாஸநேச்வரீ" என்ற நாமங்களால் ஜகத்தைப்பற்றிய ஸ்ருஷ்டி, ஸ ஸம்ஹாரம் என்ற மூன்று காரியங்களையும்

செய்பவளாக அம்பாளைச் சொல்லியிட்டு, பாக்கி இரண்டு காரியங்களாகிய திரோதனம், அனுக்ரஹம் என்பவளை அகந்தமான விஷயங்களைப் பற்றியவையாகையால் "சிதக்னி குண்டலஸம்பூதா" என்ற அடுத்த காலம் முதல் இந்த காலம் வரையிலான "சிவசக்த்யைக்ய ரூபிணீ" என்பது முடிய வரப்பட்ட காலங்களில் அந்த இரண்டு காரியங்களையும் பற்றிச் சொல்லியிட்டு, இவ்விதமான பஞ்சக்ருத்யங்களைச் செய்பவளான தேவதையை, இந்த தேவதைகளுக்கு இல்லாதது, தேவதைகளுக்கே உரித்தானது, என்பதான காரணத்தால் அடுத்தாற்போல் சொல்லுகிறார்.

ललिताम्बिका ओम्

லலிதாம்பிகா ஓம்: (1000)

லலிதையாயும் அம்பிகையாயுமிருப்பவள்.

1. அம்பிகா, அம்பா, முதலிய நாமங்கள் தாயாரைக் குறிக்குமாகையால் அம்பாள் ஸகல லோக ஜனனி என்பதாகும் இங்கு அம்பிகா என்பதிலும் சொல்லப்பட்டது. அதோடு லலிதையாயுமிருப்பதால் லலிதாம்பிகா என்றும் சொல்லப்பட்டது.

2. லளனம் செய்வதால் லலிதா என்ற பெயர். லளனம் என்றால் சொல்லாகவும் விளையாடுவது. அம்பாள் லோகாதிகளை யாய் க்ரீடித்துக்கொண்டிருப்பதால் லலிதா என்ற பெயர் ஏற்பட்டது என்பதாக,

'லோகாந் அதித்ய லலதே லலிதா தேந லோச்யதே |'

என்ற நாம பாஷ்யத்தில் சொல்லப்பட்டது. லோகங்கள் என்ற இங்கு வரும் நாம நாமத்திலுள்ள சப்தங்கள், அதாவது பூலோக தேவதைகளை குறிக்கும்படியாதால் அவர்களை அதிக்ரமித்து, (தூரீசக்ரத்தில்) அவர்களுடைய ஸ்தானங்களுக்கிடையில் வரும் சொல்லப்பட்டதான பிந்துஸ்தானத்தில் அதிபதிகளை விளக்குவதால் இந்தப் பெயர் ஏற்பட்டதாகவும் சொல்லலாம்.

3. மனதிற்கு ஸம்பந்தமுடைய சந்திரனுடைய மனோபாவங்களுடன் லலிதையென்ற நாமத்திலுள்ள குறிக்கப்படுகிறாள்.

'சோபா விலாஸோ மாதுர்யம் காம்பீர்யம் ஸ்தைர்ய தேஜஸீ |
லாலித்யம் சததெளதார்யம் இத்யஷ்டௌ லலநாகுணா: ||'

என்ற அபியுக்த வசனத்தில் சொல்லப்பட்ட அர்த்தங்க ளுண்டு. 'ஸௌகுமார்யம் து லாலித்யம்', 'லலிதே ஸுகுமா ரம்' என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த பாவங்களெல் லாம் அம்பாளிடமிருப்பதால் லலிதா என்ற பெயர் ஏற்பட் டது.

இப்படி இந்த மூர்த்தியைப் பற்றியதான ஸகலமும் லலிதமாயிருப்பதால் லலிதா என்ற பெயர் ஏற்பட்டதை பொருத்தமாகத்தான் இருக்கிறது என்பதாக,

'லலிதேதி காம யுக்தம் தவ ஹில திவ்யா ஸவா வ்ருதய : |
தநுரைக்ஷவம் அன்த்ராண்யபி குஸுமாநி ததாகிலம் லலிதம்||'

என்றும் சொல்லப்பட்டது.

4. தவிர, 'லலிதம் ரதிகேலிஷ்விதம்' என்றபடி லலித மென்ற பதமானது ச்ருங்கார சேஷ்டைகளை (காமோத்தீபன மான பாவ ஹாவங்களை) குறிக்கும். ஆகவே இந்த நாமத் திலும் இங்கு உபாஸிக்கப்படும் அம்பிகையின் மூர்த்தியானது ச்ருங்கார ரஸப்ரதானை என்பதாகவும் குறிப்பிடப்பட்டது.

5. பத்மபுராணத்தில் தேவியின் பீடங்களைப்பற்றிச் சொல்லுகையில்,

" ப்ரயாகே லலிதா தேவீ "

என்று சொன்னபடி ப்ரயாகையிலிருக்கும் அம்பிகையின் பீடத்திற்கு லலிதா என்று பெயர்.

சுபம்.

ஓ

ஸ்ரீ லலிதா மஹாத்ரிபுரஸுந்தர்யை நம:

ஸ்ரீ லலிதா ஸஹஸ்ர நாமம்.

உத்தர பாகம்.

(பலச்ருதி பாகம்)

அப்பாலுடைய ப்ரீதியையே முக்யமான பல னாக உடைய கீர்த்தனத்திற்கு உபயோகப்படும் நாம ஸஹஸ்ரத்தை ஹயக்ரீவர் சொல்லிவிட்டு, திரும்பவும் அந்த ப்ரீதி யின் மூலமாக ஸகலவிதக்களான பலன்களும் கிடைக்கக்கூடிய தைப்பற்றியும், விசேஷ காம்ய ப்ரயோஜனத்திற்காக (விசேஷ மான பலன்கள் கிடைப்பதற்காக) நாமகீர்த்தனம் செய்ய வேண்டிய முறைகளைப்பற்றியும் மேலே சொல்லுகிறார்.

इत्येवं नाम सहस्रं कथितं ते घटोद्भव । ॥ १ ॥

இத்யேவம் நாம ஸாஹஸ்ரம் கதிதம் தே கடோத்பவ 11(1)

இம்மாதிரியாக இந்த நாம ஸஹஸ்ரமானது, கடோத்பவ! உனக்குச் சொல்லப்பட்டது.

1. இதி என்ற பதமானது நாமஸஹஸ்ரத்தின் முடி வைக் காட்டுவதுடன் அது ஆயிரம் என்ற எண்ணிக்கைக்குக் கூடவானது குறையவாவது இல்லையென்பதையும் காட்டுகிறது.

2. ஏவம் - நான் சொன்ன ப்ரகாரம், ஆயிரம் நாமங் களடங்கியது (நாமஸஹஸ்ரம்) என்ற பெயர் சொன்னபடி ஆயிரமுடையது. ஸரஸ்வதீ, கங்கா முதலிய ஸஹஸ்ரநாமங் களில் எண்ணிக்கையானது ஆயிரத்துக்குக் குறைவாக இருக் கிறபடியால், அவற்றிற்கு ஸஹஸ்ரநாமம் என்ற பெயரிடுவது அர்த்தமற்றது, அல்லது கௌணமானது. இந்த நாம ஸஹஸ்ரத்திலோ அம்மாதிரியான குறைவு யாதொன்றும் இடையாதகாரணத்தால் நாமஸஹஸ்ரம் என்ற பெயர் பொருத்த மானதென்று தாத்பர்யம்.

रहस्यानां रहस्यं च ललिताप्रीतिदायकम्
अनेन सदृशं स्तोत्रं न भूतं न भविष्यति ॥ २ ॥

ரஹஸ்யாநாம் ரஹஸ்யம் ச லலிதாப்ரீதி தாயகம் |
அநேந ஸத்ருசம் ஸ்தோத்ரம் ந பூதம் ந பவிஷ்யதி ॥ (2)

ரஹஸ்யங்களுக்கெல்லாம் ரஹஸ்யமானதும், லலிதாம்பாளுக்கு ப்ரீதியைக் கொடுப்பதுமான இதற்கு ஸமானமான ஸ்தோத்ரம் இருந்ததுமில்லை, இருக்கும் போவதுமில்லை.

1. தேவீ ஸஹஸ்ரநாமம் முதலியவைகள் (சண்டீ ராணம் முதலியவற்றிலிருப்பவை) சரியாக ஆயிரம் நாமங்களோடிருப்பதால் இதற்கு ஸமானமாகுமே என்ற சங்கைக்கு இதில் ஸமாதானம் சொல்லப்படுகிறது. அது பின்வருமாறு :—

2. ச்யாமளம், ஜடம் முதலான ரஹஸ்யங்களோடு இந்த நாமஸஹஸ்ரமானது இருப்பதால் இது ரஹஸ்யாநாம் ரஹஸ்யமாக—ரஹஸ்யதமமாக இருக்கிறது. அம்மாதிரியான ரஹஸ்யங்களோடு கங்கா ஸஹஸ்ரநாமம் முதலியவைகள் (ஸ்காந்த புராணம் முதலியவற்றிலிருப்பவை) பொருந்தியிருந்தாலும், இதற்கு அவைகளுக்கில்லாத ரஹஸ்யத்தான இன்னொரு விசேஷ லக்ஷணமிருக்கிறது.

3. அதாவது, இது லலிதாம்பிகாதாயகம். அவையெல்லாம் லலிதாம்பாளிடமிருப்பவனும் (நாம்நாதான) கங்கா முதலான தேவீ ரூபங்களுக்கு ப்ரீதியை உண்டாக்குவதால் அவையெல்லாவற்றையும்விட இது தான் உயர்ந்தது.

4. இம்மாதிரி விசேஷமான ஸ்தோத்ரம் (லலிதாம்பிகையைப்பற்றி) வேறு இருக்கலாகாதா என்ற ஸந்தேகத்தை 'அநேந..... பவிஷ்யதி' என்பதில் நிவர்த்தி பண்ணுகிறார். இப்போது இல்லை என்பது ஏற்பட்டு விட்டது. இதற்கு முன்பும் இல்லை, இதற்குப் பின்பும் ஏற்படப்போவதில்லை என்பதில் காலத்ரயத்திலும் இதைவிட ரஹஸ்யகமமானதும் லலிதா ப்ரீதிதாயகமுமான ஸ்தோத்ரம் கிடையாது என்று சொல்லப்பட்டது. இந்த இரண்டு விசேஷணங்

களில் சொல்லிய விஷயங்களைப்பற்றி மேலே வரும் ச்லோகங்களில் சொல்லப்படுகிறது. அவற்றில் ரஹஸ்யதமமாயிருப்பது அடுத்த இரண்டு ச்லோகங்களில் சொல்லப்படுகிறது. 'ப்ரயாஸ தாரதம்யாத் பலதாரதம்யம்' என்ற ந்யாயத்தின்படி அதிகமான பலன் கிடைப்பதான அதிகமான ப்ரயாஸையின் பேரில் தான் ஸந்தோஷமென்பது ப்ரஸித்தமாயிருந்தாலும், ரஹஸ்யதமமென்பதினால் அனேகவிதமான பலன்களைக் கொடுப்பதுடன் அல்பாயாஸ ஸாத்யமானது (கொஞ்சம் ச்ரமம் எடுத்துக் கொண்டாலேயே செய்யக்கூடியது) என்றும் சொல்லப்பட்டது. இப்படி இந்த நாமகீர்த்தனமானது அல்பாயாஸ ஸாத்யமானதென்பதை 'ரஹஸ்யாநாம் ரஹஸ்யம்' என்பதினால் ஸ்பஷ்டமாகச் சொல்லப்பட்டதினால், இனி அதினால் கிடைக்கக்கூடிய பல தாரதம்யத்தை (விசேஷமான பலன்களை) மேற்படி இனி சொல்லுகிறார்.

सर्वरोगप्रशमनं सर्वसंपत्प्रवर्धनम्
सर्वापमृत्युशमनं कालमृत्युनिवारणम् । ॥ ३ ॥

ஸர்வரோக ப்ரசமநம் ஸர்வ ஸம்பத் ப்ரவர்த்தநம் |
ஸர்வாபம்ருத்யுசமநம் காலம்ருத்யு நிவாரணம் ॥ (3)

(இந்த ஸ்தோத்ரமானது) ஸகல ரோகங்களையும் அடக்கி விடும். ஸகலஸம்பத்துக்களையும் வ்ருத்தி பண்ணுவிக்கும். ஸகலவிதமான அகால ம்ருத்யுவையும் அடக்கி விடும். காலக்ரமத்தில் ஏற்படக்கூடிய மரணத்தையும் நீக்கி விடும்.

1. அஸாத்யமாயிருக்கும் முதலான பேதங்களையுடைய ரோகங்களெல்லாம், அதாவது தெளிய முடியாதென்று சொல்லப்படும் ரோகங்களுக்கூட போக்கடிக்குமென்று சொல்லப்பட்டது. தாரித்ரியம் என்பதும் ரோகத்திற்கு ஸமமாகச் சொல்லப்படுவதால் அதின் அபாவத்திற்கு அவச்யம் இருக்க வேண்டியதான ஸம்பத்தை (கொடுப்பதுடன் அதை) வ்ருத்தி செய்யுமென்று அடுத்தாற்போல 'ஸர்வ ஸம்பத் ப்ரவர்த்தநம்' என்று சொல்லப்பட்டது.

2. தனவும், ஆரோக்யம், ஸம்பத்து இவையிரண்டும் ஸஹகாரணமாய்ச் சேர்ந்து இருப்பது அரிதாகையால், ஆரோக்யமிருக்குமிடத்தில் தாரித்ரியம் அலக்ஷ்யம் இருந்து

தீருமே என்ற ஸங்கதஹத்தைத் போக்குவதற்காக, 'ஸர்வ ஸம்பத் ப்ரவர்த்தநம்' என்று 'ஸர்வரோக ப்ரசமனம்' என்பதற்கு அடுத்தாற்போல் சொல்லப்பட்டது. அதாவது இந்த நாமஸஹஸ்ரத்தைக் கீர்த்தனம் செய்தால் ஆரோக்யம், ஸம்பத்து இவையிரண்டும் ஒருங்கே எற்படும் என்று சொல்லப்பட்டது.

3. ஸர்வ ஸம்பத் என்பதிஞல் கஜ, துரகங்களின் ஸம்ருத்தி முதலான ஐச்வர்யத்தின் எல்லா பேதங்களுஞ் சொல்லப்பட்டன.

4. அபம்ருத்யு என்பது அகாலம்ருத்யு, அதாவது, ஸர்ப்பம், புலி முதலானவைகளால் எற்படும் அகால மரணம். இம்மாதிரி இறப்பவர்கள் மிகச் சிலராகையாலும் அவ்விதமரணத்தைப் போக்குவது மிகவும் குறைவான பலனைத் தோன்றப்போவதே என்பதற்காக அடுத்தாற்போல் 'கால ம்ருத்யு நிவாரணம்' என்று சொல்லப்பட்டது. ஆயுளின் அளவு முடிந்தவுடன் (காலக்ரமத்தால்) எற்படும் மரணகால ம்ருத்யு என்று சொல்லப்படும். அவ்வித அளவு முடிவதற்குள்ளே எற்படும் மரணத்தைத் தான் அகால ம்ருத்யு, அபம்ருத்யு என்று சொல்லப்படும். எண்ணை, திரி இவை களையுடைய தீபமானது தானகவே எரிந்து அவ்விரண்டு கால ம்ருத்யுவுக்கு உபமானம். அதுபோல் எண்ணை, திரி எல்லா மிருக்கும்போதே பெருங்காற்று முதலான காரணங்களால் அணைந்துபோவது மாதிரியானது அபம்ருத்யு.

सर्वज्वरातिशमनं दीर्घायुष्यप्रदायकम्
पुत्रप्रदमपुत्राणां पुरुषार्थप्रदायकम् । ॥ ४ ॥

ஸர்வ ஜ்வரார்த்திசமநம் தீர்க்காயுஷ்ய ப்ரதாயகம் ।
புத்ரப்ரதம் அபுத்ராணம் புருஷார்த்த ப்ரதாயகம் ॥ (4)

ஸகலவிதமான ஜ்வரங்களால் எற்படும் கஷ்டங்களை நீக்கி விடுவர். தீர்க்கமான ஆயுளைக்கொடுக்குவர். பிள்ளை யில்லாதவர்களுக்குப் புத்ர ஸம்பத்தைக் கொடுக்குவர். புருஷார்த்தத்தையும் கொடுக்குவர்.

1. ஒரு காலைய ஜ்வரம் முதல் ஸன்னிபாத ஜ்வரம் வரையிலுள்ள எல்லா ஜ்வர பேதங்களும் 'ஸர்வ ஜ்வர' என்று சொல்லப்பட்டன. அவைகளால் எற்படும் கலவரி

முதலான உபத்ரவங்களையெல்லாம் நாசம்செய்து விடுமென்று 'ஸர்வ ஜ்வரார்த்தி சமனம்' என்பதால் சொல்லப்பட்டது. அல்லது "ஸர்வ" என்று ஆரம்பித்து மேலே வந்த நாலு பதங்களிலும் 'ஸர்வ' என்ற பதத்திற்கு எல்லாவிதமான என்பதற்கு பதிலாக எல்லோருடைய என்றும் அர்த்தம் சொல்லலாம். ஸாதனம் ஒருவர் செய்வதால் பலனை மற்றொருவர் அடையலாம் என்ற ந்யாயத்தின்படி, அதாவது நாமகீர்த்தனம் ஒருவர் செய்தால் அதனால் பிறருக்கு இவ்விதமான பலன்கள் ஏற்படும்படிச் செய்யலாம் என்று தாத்பர்யம்.

உதாரணமாக, வைச்வாநரேஷ்டி என்ற (த்வாதசாக பாலங்களினால் ஸம்ஸ்காரம் செய்யப்பட்ட) இஷ்டி விசேஷத்தைத் தகப்பன் செய்தபோதிலும் அதினுடைய பலத்தைப் பிறந்த குழந்தை அடைவதாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

2. 'ஸர்வரோக' எனப லயே ஜ்வரங்களும் அவைகளால் ஏற்படும் உபத்ரவங்களும் அடங்கியிருக்கையில், இங்கு 'ஸர்வ ஜ்வரார்த்திசமனம்' என்று தனியாகச் சொன்னதற்குக் காரணம் ரோகங்களில் ஜ்வரமானது விசேஷமானது (முக்யமானது) என்பதைக் காட்டுவதற்காக.

3. அல்லது பின்னால் சொல்லப்போகும் காம்யப்ரயோகங்களில் சொல்லியிருப்பதை அனுஸரித்து இங்கும் ஜ்வரத்தைப்பற்றித் தனியாகச் சொன்னதாகவும் சொல்லலாம். அங்கு ரோக சாந்தி முதலிய நான்கு அவயவங்களையுடைய ஒரு (முக்யமான) பலனைக் கிடைக்கச் செய்யும் ப்ரயோகத்தைச் சொல்லிவிட்டு, அந்தந்த அவயவத்தை மட்டுமே பலனாக உடைய ப்ரயோகங்களைப்பற்றியும், ஜ்வர சமனத்தைச் செய்யும் ப்ரயோகத்தைப்பற்றியும் தனித்தனியாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இதேமாதிரி 'தீர்க்காயுஷ்ய ப்ரதாயகம்' என்று தனியாகச் சொல்லப்பட்டதற்கும் ஸமாதானம் சொல்லவும்.

4. தீர்க்கமான ஆயுஸ் என்பது பூர்ணமான ஆயுஸ். அதாவது ச்ருதியில் சொல்லப்பட்டபடி சதாயுஸ் (100-வயது). அதைக் கொடுப்பது என்றால் அதற்கு இடையூறாக இருக்கும் க்ரஹங்கள், விஷம் முதலிய கெடுதல்கள் யாதொன்றும் இல்லாமல் செய்வது.

5. அல்லது (மேலே சொல்லிய பூர்ணமான) ஆயுளை தீர்க்கமாக இருக்கச் செய்யும் என்றும் சொல்லலாம். அதாவது, ச்ருதியின்படி ஆயுளானது 100 வருஷம் என்று சொல்லப்பட்டிருந்தபோதிலும், அதற்கு மேற்பட்டுக்கூட இருக்கச் செய்யுமடியான மஹிமை இந்த ராமஸஹஸ்ரத்தின் கீர்த்தனத்திற்குச் சொல்லியிருக்கிறது. இவ்விதம் ஆயுளை நீடிக்கச் செய்வதானது சுலபமாக, ஔஷதம், யோகம் இவைகளால் கிடைக்கப்பெறும் என்று சொல்லப்படுவதாதிரி, இந்த ராமஸஹஸ்ர கீர்த்தனத்திலும் கிடைக்கப்பெறுமென்று சொல்லப்பட்டது. [இவ்விதபலனை உடனே கிடைப்பதாகத் தெரிய வேறு இல்லாவிட்டாலும் அதைப்பின்னல் கொடுக்கக்கூடியதான அபூர்வம் என்று (மீமாம்ஸகர்களால்) சொல்லப்படும் பலனை ராமகீர்த்தனம் செய்த உடனேயே கிடைப்பதாக தாத்பர்யம்.] ஆகவே இந்த ராம கீர்த்தனத்திற்கு காலம்ருத்யுவை நிவாரணம் செய்யும் பலன் மட்டுமல்ல, ஆயுளை (ச்ருதி வாக்யத்தினால் அதற்கு ஏற்படும் அளவை) நீடிக்கச்செய்யும் பலனுமுண்டு என்று ஏற்பட்டது.

6. 'அபுத்ராணம்' என்பதினால் புத்ரகாமனையுள்ளவர்களெல்லாரும் சொல்லப்பட்டார்கள். அனேகம் பிள்ளைகளுடையவர்களுக்கு ஸாதாரணமாக இன்னமும் பிள்ளை வேண்டுமென்ற ஆசையிருக்காதாகையினால், ஸாமான்யமாக பிள்ளை களில்லாதவர்களுக்குத்தான் அம்மாதிரியான ஆசையிருக்குமாகையினால், இங்கு 'அபுத்ராணம்' என்று சொல்லப்பட்டது. ஆயினும் பிள்ளையுடையவர்களும் இன்னமும் பிள்ளை வேண்டுமென்று ஆசைப்பட்டால் அவர்களுக்கும் இந்த ராம கீர்த்தனத்தின் மூலமாகப் பிள்ளை உண்டாகும் என்பது தாத்பர்யம். [ஸ்ம்ருதிகளினால் ஒரு புத்ரனையுடையவனையும், பிறந்த பிள்ளையை இழந்தவனையும் வர்க்ஷயை-யிலடி என்ற பாதத்தினால் குறிக்கப்படுவது காணப்படுகிறது.]

7. இது தவிர, அபுத்ரர்கள் புத்ரன் வேண்டுமென்ற காமனையோடில்லாவிட்டால் (மேலே சொல்லப்படும்) புத்ர காம ப்ரயோகம் அனுஷ்டிப்பதற்கு அவர்களுக்கு அதிகாரமில்லையென்பதும் இதினிருந்து ஏற்படுகிறது. இதாதிரி மேலே சொல்லப்படும் காம்ய ப்ரயோகங்களைச் செய்வதில் அந்தந்த ப்ரயோகம் செய்வதினால் கிடைக்கக்கூடிய பலனை

விரும்புகிறவர்கள் தான் அவ்விதமான காம்ய ப்ரயோகத்தைச் செய்வதற்கு அதிகாரிகள் என்பதுதான் ஏற்படுகிறது. ஒருவன் எல்லாவிதமான காமங்களையும் அபேக்ஷிப்பவனாக இருந்தால் மேலே சொல்லிய காரணத்தால் அவன் எல்லா ப்ரயோகங்களையும் செய்வதற்கு அதிகாரியாக இருக்கிறான். அப்போது அவன் எதை முதலில் செய்யவேண்டுமென்ற சங்கை ஏற்படக் கூடும். அப்போது தந்த்ர ந்யாயத்தின்படி அவன் ஸர்வ பலன்களையும் கொடுக்கக்கூடியதான ப்ரயோகம் ஒன்றையே செய்தால் போதும். [வெவ்வேறு விதமான பலன்கள் கிடைப்பதற்கு ஒரே விதமான ப்ரயோகம் சொல்லப்பட்டிருந்தால், அதைத் திரும்பத் திரும்பச் செய்யாமல் ஒரே தடவை செய்வதானது தந்த்ரமென்று சொல்லப்படும்.]

8. இவ்விதம் சொல்வது 'தந்த்ர ஸர்வாபீக்ஷாதம்' என்ற மீமாம்ஸா ஸூத்ரத்திற்கு விரோதமாகத் தோன்றும். அதாவது, அனேகவிதமான பலன்களைக் கொடுக்கக்கூடியதாக ஒரு கர்மாவைப்பற்றிச் சொல்லப்பட்டிருந்தால், ஒரு பலன் கிடைப்பதற்காக ஸங்கல்பம் செய்து அந்தக் கர்மாவைச் செய்தால் அந்த பலன்தான் கிடைக்கும். தர்ச, பூர்ணமாஸ, ஜ்யோதிஷ்டோமாதி யாகங்கள் ஸர்வ காமங்களையும் கொடுப்பவை யென்றும் ஒரு யாகத்தை ஒருதடவை செய்தால் ஒரே பலன்தான் கிடைக்குமென்பது விதித்தாந்தம். மேலே சொல்லப்பட்ட (மீமாம்ஸா) அதிகரணத்தில் வரும் (அப்யாதிரியான) ந்யாயங்களெல்லாம் அல்பமான பலத்தைக்கொடுக்கும் கர்மாக்களைப் பற்றியவையே. தேவதையின் ப்ரீதியோ லோக விலக்ஷணமாய், கர்மாவால் எதிர்பார்க்கப்படுவதைவிட அதிகமான பலனைக் கொடுக்கக்கூடிய சக்தியுடையது. இதனால் தான் அப்பாவோ 'லோகாதிகா, குணாதிகா, ஸர்வாதிகா' என்று இந்த காம்ய ஸ்தோத்ரத்தில் சொல்லியிருக்கிறது.

9. கர்மாக்களைப்பற்றியும் மேலே சொல்லியிருக்கிற ந்யாயமானது இதர விஷயங்களிலும் அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது. ஒரே ப்ரயோகத்தில் ஸகல காமங்களையும் விவரித்துச் செய்யலாம். ப்ரயோகங்கள் பலவாறாக இருந்தால் ஒவ்வொன்றையும் ஒவ்வொரு காமத்தை யுத்தேசித்துச் செய்யவேண்டுமென்பதாக ஹிரண்யகேசி ஸூத்ரத்தில்,

'ஏக ப்ரயோகே ஸர்வாந் காமாந் காமயீத,
ப்ரயோக ப்ருதக்த்வே ச ஏகைகம் ।'

என்று சொல்லப்பட்டது.

10. விஷயங்களிலீடுபட்டிற்றிய காமனைகளில்லாதவர்களுங் கூட இந்த நாமகீர்த்தனத்தைச் செய்யலாம் என்பது 'புருஷார்த்த ப்ரதாயகம்' என்பதினால் சொல்லப்பட்டது. புருஷர்களால்—அதாவது, புத்திமான்களால்—விரும்பப்படுவது என்றால் மோக்ஷத்தைக் குறிக்கும். நிஷ்காமனையிருந்தாலும் மோக்ஷத்தைப் பலனாக உடைய ப்ரயோகத்தைச் செய்வதற்கு அதிகாரமுண்டு என்று தாத்பர்யம். மஸ்தவத்தில் இந்தப் பதத்தினால் சதுர்விதமான புருஷார்த்தங்களும் கிடைக்கப்பெறும் என்பது சொல்லப்பட்டது. ஒரோர் தேவதையை உபாஸித்தால் ஒரோர் பலனைத்தான் அடையலாமென்றும், அம்பாளை உபாஸித்தால் சதுர்வர்க்கமும் (சதுர்வித புருஷார்த்தங்களும்) கிடைக்குமென்று சொல்லப்பட்டிருக்கிறது.

'அத: பரம் ச தேவாநாம் அர்ச்சகம் காரயேத் புத: ।
கணேசம் பூஜயேத் யஸ்து விக்னஸ் தஸ்ய ந பாததே ॥
ஆரோக்யார்த்தே ரவிர்ச்சயேத் ஸௌர்யம் தர்மமோக்ஷாய மாதவம்
சிவம் தர்மார்த்தமோக்ஷாய சதுர்வர்க்காய சண்டிகாம் ॥'
(பத்மபுராணம் புஷ்கரகண்டம் ஆன்ஹ்நிகப்ரகரணம்)

इदं विशेषाच्छ्रीदेव्याः स्तोत्रं प्रीतिविधायकम् ।
जपेन्नित्यं प्रयत्नेन ललितोपास्तितत्परः ॥ ॥ ५ ॥

இதம் விசேஷாத் ஸ்ரீதேவ்யாஃ ஸ்தோத்ரம் ப்ரீதிவிதாயகம்।
ஜபேந்நித்யம் ப்ரயத்நேந லலிதோபாஸ்திதத்பரஃ ॥ (5)

இப்படி ஸ்ரீதேவியினுடைய ப்ரீதியை விசேஷமாகக் கொடுக்கும் இந்த ஸ்தோத்ரத்தை லலிதோபாஸனையில் ஈடுபட்ட பக்தனானவன் தினந்தோறும் ஸ்வல்ப ப்ரயத்னத்துடன் ஜபம் செய்யவேண்டும்.

1. பலவுபல ப்ரதத்வம் (அனேக பலன்களைக் கொடுப்பது), அல்பாயாஸ ஸாத்யத்வம் (கொஞ்சம் ப்ரயாஸையிலேயே செய்யக்கூடியது) இவை மேலே சொல்லப்பட்டதென்பது ஸஹஸ்ர நாமங்களின் மஹிமைப்பற்றியதுடன், லலிதாம்பிகை ப்ரத்யக்ஷமாயிருப்பதினாலும் (லலிதாம்பாளுடைய ப்ரீதியைக் கொடுப்பதாலே) என்

படுத், கங்கா, ச்யாமளா முதலானவர்களுடைய ப்ரீதி ஏற்படு வதின் மூலமாயும் கிடைக்கக்கூடும். தவிர, லலிதாம்பாளிடம் பற்றியே இருக்கும் பஞ்சமீஸ்தவராஜம் முதலான ஸ்தோத்ரங் களாலும் லலிதாம்பாளுடைய ப்ரீதியை எளிதில் விதமாக ஸம்பாதிக்கலாம். இப்படியிருக்கையில் அனைகளைவிட இந்த ஸ்தோத்ரத்திற்கு என்ன விசேஷ மஹிமை இருக்கிறதென்ப தை இந்த ச்லோகத்தில் சொல்லுகிறார்.

2. லலிதாம்பாளுக்கு இதர ஸ்தோத்ரங்களினால் ஏற் படும் ப்ரீதியைவிட இந்த மாம ஸஹஸ்ரத்தைக் கீர்த்தனம் செய்தால் விசேஷமான ப்ரீதி ஏற்படும் என்பதை,

'இதம் விசேஷாத் ஸ்ரீதேவ்யா: ஸ்தோத்ரம் ப்ரீதிவிதாயகம்'

என்று சொல்லப்பட்டது. இவ்விதம் விசேஷமான ப்ரீதியைக் கொடுப்பதிலல் ரஹஸ்யதாமாயிருப்பது இந்த ஸ்தோத்ரம் தான் என்பதும் ஏற்படுகிறது. அக்னிமேஹாத்ர, தர்சபூர்ண மாஸ, ஜ்யோதிஷ்டோம, விச்வஜித் முதலான கர்மாக்கள் எல்லாவற்றிற்கும் ஸ்வர்க்கம் என்பது பலனாக இருந்தாலும், அவற்றிற்குள் ப்ரயாஸ தாரதம்யமிருப்பதால் கிடைக்கும் ஸ்வர்க்கமானது ஒரே மாதிரியானது என்று சொல்லாமல், அவ்விதத் தாரதம்யத்தை அனுஸரித்து அந்தந்த கர்மாவிலல் கிடைக்கும் ஸ்வர்க்கத்திலும் தாரதம்யம் இருப்பதாக மீமாம்ஸா சாஸ்த்ரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. அதே ப்ரயத்னத்தையொட்டி தேவதையின் ப்ரீதி விஷயத்திலும், ப்ரீதியைக் கொடுக்கும் ஸ்தோத்ரங்களில் அந்தந்த ஸ்தோத் ரத்திலல் ஏற்படும் ப்ரீதியில் தாரதம்யமிருக்கும். அப்போது அவற்றில் எது விசேஷமானது என்று ஏற்படக்கூடிய கேள் விக்கு உத்தரமாக 'இதம் விசேஷாத்' என்று இங்கு சொல்லப்பட்டது.

3. இந்த 'விசேஷ'பதம் இங்கு சொல்லப்பட்டதற்கு இன்னொரு காரணமும் சொல்லலாம். ப்ரயாஸையின் தாரதம்யத்தையொட்டி பலன் கிடைப்பதிலும் தாரதம்யம் உண்டென்று சொன்னல், இந்த மாஸஹஸ்ர கீர்த்தனத் தைச் சொல்வதிலிருக்கும் ப்ரயாஸையைவிட அதிகமான ப்ரயாஸையின்பேரில் வேறு கர்மாவைச் செய்தால் இதைவிட அதிகமான ப்ரீதியானது அம்மாதிரிக்கு ஏற்படக்கூடும் என்று சொல்வதற்கு இடமில்லையென்று காட்ட இந்த 'விசேஷ'

பதத்தை உபயோகித்ததாகவும் சொல்லலாம். இந்தக் காரணத்தாலும் இது ரஹஸ்யதாமமானதென்று வற்படுகிறது.

4. ஆகையினல் எப்படிப்பட்டாவது லலிதாபாலைகன் இந்த நாமஸஹஸ்ரத்தை உயிருள்ளவரையில் ஜபித்துக் கொண்டிருக்க வேண்டுமென்று உத்தரார்த்தத்தில் சொல்லப்பட்டது.

அவ்விதம் ஜபம் செய்வதைப்பற்றிய க்ரமத்தைப்பற்றி மேலே சொல்லுகிறார்:—

प्रातः स्नात्वा विधानेन संन्ध्याकर्म समाप्य च ।
पूजागृहं ततो गत्वा चक्रराजं समर्चयेत् ॥ ॥ ६ ॥

ப்ராத: ஸ்நாத்வா விதாநேந ஸந்த்யாகர்ம ஸமாப்ய ச |
பூஜாக்ருஹம் ததோ கத்வா சக்ரராஜம் ஸமர்ச்சயேத் 11(6)

காலையில் ஸ்நானம் செய்து, விதிப்படி ஸந்த்யாவந்தன கர்மாவை முடித்துக்கொண்டு, பிறகு பூஜாக்ருஹத்திற்குப் போய் ஸ்ரீசக்ரத்தை (நன்முக) அர்ச்சனம் செய்யவேண்டும்.

1. 'விதாநேந' என்பதினல் வைதிகம், தாந்த்ரிகமென்ற இரண்டு ப்ரகாரங்களின்படியும் என்று அர்த்தம். இந்த இரண்டுவிதமான ப்ரகாரங்கள் ஸ்நானத்திலும் ஸந்த்யாகர்மாவிலும் உண்டாகையால் இந்த 'விதாநேந' என்ற பதமானது (காகாக்ஷி ந்யாயத்தின்படி) முந்தியும் பிந்தியும் இருக்கும் இரண்டு பதங்களுடனும் சேரும்.

2. 'பூஜாக்ருஹ கமனம்' என்பது த்யான பூஜை முதலானவைகளைக் குறிக்கும்.

3. 'ஸமர்ச்சயேத்' என்பதை ப்ரயோஜக கர்த்தா (பிறருக்குப் பலன் கிடைப்பதற்காக ப்ரயோகத்தைச் செய்பவன்) மூலமாக பூஜை செய்வதையும் குறிக்கும். அதாவது தனக்காகப் பிறரைக்கொண்டும் ஸ்ரீசக்ர பூஜனத்தைச் செய்யச் சொல்லலாம் என்று அர்த்தம்.

विद्यां जपेत्सहस्रं वा लिशतं शतमेव वा
रहस्यनामसाहस्रमिदं पश्चात्पठेन्नरः ॥ ॥ ७ ॥

வித்யாம் ஜபேத் ஸஹஸ்ரம் வா த்ரிசதம் சதமேவ வா |
ரஹஸ்யநாமஸாஹஸ்ரம் இதம் பச்சாத் படேத் நர: II (7)

அம்பாளுடைய மந்திரம், அல்லது மூன்று, அல்லது நூறு, அல்லது நூறு தடவையாவது ஜபம்செய்து, பிறகு இந்த ரஹஸ்ய நாம ஸாஹஸ்ரத்தைப் படனம் செய்ய வேண்டும்.

1. வித்யா என்பது ஸாதாரணமாய் ஸ்த்ரீ தேவதையைப் பற்றிய மந்த்ரத்தைக் குறிப்பதாயிருந்த போதிலும் இங்கு பஞ்சதசீ, அல்லது ஷோடசீ என்று அர்த்தம்.

2. 'ஸஹஸ்ரம் வா.....வா' என்பதிலுல் அஷ்டோத்தர சதமும் சொல்லப்பட்டது. த்ரிசதம் என்றால் மூன்றூறு (நூற்றி மூன்று அல்ல).

3. ஜபத்திலுடைய ஸங்க்யை இவ்விதம் சொல்லப்பட்டிருப்பதில் இம்மூன்றும் ஒரேவிதமான பலனைக் கொடுப்பவை யல்லவென்று காட்டுவதற்காக 'சதம் வை' என்று சொல்லப் பட்டது. ஆயிரம் தடவை ஜபித்தால் அதிகமான பலன் உண்டு. மூன்றூறு தடவை ஜபித்தால் அதற்கடுத்தபடியான பலன் உண்டு, என்பது முதலான தாத்பர்யமேற்படுவதற்காக, ஆயிரம் தடவை ஜபிக்கவேண்டும். அது முடியாவிட்டால் மூன்றூறு தடவை ஜபிக்கவேண்டும், அதுவும் முடியாவிட் டால் நூறு தடவையாவது ஜபிக்கவேண்டும் என்பதாக,

:ஸஹஸ்ரம் வா தரிசதம் சத வா'

என்று சொல்லப்பட்டது.

4. 'பச்சாத்' என்பதிலுல் நாமகீர்த்தனமானது வித்யா ஜபத்திற்குப் பிறகும், புஷ்பாஞ்ஜலி தானத்திற்கு முந்தியும், செய்யப்படவேண்டுமென்று சொல்லப்பட்டது. இந்த முறை யானது ஜபம், நாமகீர்த்தனம், புஷ்பாஞ்ஜலி என்ற மூன்றும் செய்தால் எது எதற்கு அடுத்தபடியாகச் செய்யவேண்டு மென்ற வரிசையைக் காட்டுகிறதே தவிர ஜபம் செய்தால் தான் நாமகீர்த்தனம் செய்யலாம் என்று அர்த்தமல்ல. (இதேபோதிரி வேத, வேதிகரணங்களுக்கு நடுவில் சூத்ரா ணமும், வேதாத்யயன, ஸ்நானங்களுக்கு நடுவில் பிதாம் ஸாத்யயனமும் செய்யவேண்டுமென்று அவைகளைச் சொல் லும் வாக்யங்களுக்கு பிதாரர்வையில் அர்த்தம் சொல்லப்

பட்டிருக்கிறது.) நாமகீர்த்தனத்தைத் தவிர மற்றவைகளைச் செய்வதைப்பற்றி இங்கு சொல்லப்பட்டதானது, வேறு விதி வாக்யங்களில் சொல்லியதை அனுவாதம் (ஏற்கனவே சொன்னதைத் திரும்பச் சொல்வது) செய்கிறதே தவிர வேறல்ல. அவைகளுடன் நாமகீர்த்தனத்தைச் சொல்வதானது அது செய்யவேண்டிய காலத்தைக் குறிப்பதற்காக மட்டும்தான். ஆகவே, ஜபம், நாமகீர்த்தனம் இவையிரண்டும் பரஸ்பரம் அங்க, அங்கி பாவமுடையவையல்ல. (அதாவது ஜபத்திற்கு நாமகீர்த்தனம் அங்கமென்றாவது, நாமகீர்த்தனத்திற்கு ஜபம் அங்கமென்றாவது இல்லை.) இரண்டிற்கும் வெவ்வேறான வாக்யங்களினால் பலமிருப்பதாகச் சொல்லப்படுவதால் 'தர்ச பூர்ண மாஸாப்யாம் இஷ்ட்வா ஸோமேன யஜேத' என்ற வாக்யத்தில் சொல்லப்பட்டபோதிலும், இங்கு அவையிரண்டும் செய்வதாயிருந்தால் எது முந்தியும், எது பிந்தியும் செய்யப்பட வேண்டுமென்ற காலத்தைப்பற்றிய விசாரமட்டும் சொல்லப்பட்டது. ப்ரதான கர்ம பஞ்சகமான ப்ராத: ஸ்நானம், ஸந்த்யாகர்ம, ஸ்ரீசக்ர பூஜனம், வித்யாஜபம், நாமகீர்த்தனம் இவைகளை அடுத்தடுத்துச் சொல்வதினால் செய்யவேண்டிய க்ரமத்தின் விபரங்கள் சொல்லப்பட்டனவே தவிர, அவற்றில் ஒரு ப்ரதான கர்மாவைச் செய்யாவிட்டால் பாக்கி ப்ரதானங்களைச் செய்வதின் பலனுக்கு பாதிக்கப்படும் என்ற சங்கையானது 'அநபாதோ ... காலஸ்ய' என்ற ந்யாயத்தினால் நிராகரிக்கப்பட்டது.

இவ்விதம் அம்பாதருடைய ப்ரீதியானது இதர ஸ்தோத்ரங்களைச் சொல்வதினால் ஏற்படுவதைவிட இந்த நாமஸஹஸ்ர நாமகீர்த்தனத்தினால் விசேஷமாக ஏற்படுமென்று சொல்லப்பட்டபோதிலும், அவ்விதமான விசேஷத்தைப் பற்றிய ஞானமில்லாவிட்டால் ஏற்படக்கூடிய ஸம்சயமென்றே தெரியாமல் போய்விடுமென்பதற்காக அந்த 'விசேஷ' பதத்தினால் குறிக்கப்பட்ட (ப்ரீதியின்) அளவை இரண்டு ச்லோகங்களில் சொல்லுகிறார் :-

जन्ममध्ये सकृच्चापि य एवं पठते सुधीः ।
तस्य पुण्यफलं वक्ष्ये शृणु त्वं कुम्भसंभव ॥ ॥ ८ ॥

ஜந்ம மத்யே ஸக்ருச்சாபி ய ஏவம் படதே ஸுதீ: ।
தஸ்ய புண்யபலம் வக்ஷ்யே ச்ருணு த்வம் கும்பஸம்பவ ॥(8)

நல்ல அறிவுடைய ஒருவன் தன் ஆயுசுக்குள் ஒரு தடவையாவது இராமாநாம கீர்த்தனம் செய்தால் அதினால் அவனுக்கு எற்படும் புண்ய பலனைச் சொல்லுகிறேன். மேலே கூம்பலாம்பவ! கேள்.

1. மேலே சொல்லியபடி ஜன்ம மத்தியில் ஒரு தடவை இந்த நாமஸஹஸ்ரத்தைக் கீர்த்தனம் செய்தால், அப்போது, அதிலுள்ள ஒரு நாமத்தைச் சொல்வதினால் எற்படும் பலனைது இனிசொல்லப்படப்போகிறது. அந்த ஒருநாமத்திய பலனை ஆயிரம் மடங்கு பெருக்கினால் நாமஸஹஸ்ரத்தைச் சொல்வதின் பலன் கிடைக்கும். இது நாமஸஹஸ்ரத்தை ஒரு தடவை சொல்வதின் பலன். நாமஸஹஸ்ர கீர்த்தனத்தை உயிருள்ள வரையில் செய்திவந்தால், அதிலுடைய பலனைது அந்த ஆவ்ருத்திகளின் மொத்த எண்ணிக்கையினால் ஒரு தடவை கீர்த்தனம் பண்ணுவதின் பலனைப் பெருக்கினால் கிடைக்கும். இந்த அளவாக அப்பாலுடைய ப்ரீதியானது எற்படுமென்பது புத்திமான்களால் ஊஹிக்கறியலாமென்பதற்காக ஒரு நாமத்தை ஒரு தடவை சொல்வதினால் எற்படும் பலனைமாட்டும் சொல்லப்போகிறார்.

2. அப்படிச் செய்வதைதியானதில் மாங்கிக்கொள்வதுக்காமமான காரியமாயிருக்குமாதலால் சிஷ்யரான அகஸ்த்யர் தான் சொல்லப்போவதை கவனத்துடன் கேட்கவேண்டுமென்பதற்காகத் தான் புண்யபலத்தைச் சொல்லப்போவதாக 'தஸ்ய புண்யபலம் வக்ஷ்யே' என்று எச்சரிக்கைசெய்து, அவர் அதை ஸாவதானமாகக் கேட்கவேண்டுமென்பதை 'ச்ருணுஷ்வைகமனாஸ்' என்று சொல்லுகிறார்.

गङ्गादिसर्वतीर्थेषु यः स्नायात्कोटिजन्मसु

கங்காதி ஸர்வதீர்த்தேஷு யः ஸ்நாயாத் கோடிஜந்மஸு |

கங்கை முதலான எல்ல புண்ய தீர்த்தங்களில் ஒருவன் கோடி ஜன்மங்களில் ஸ்நானம் செய்தாலும்,

1. கங்காதி தீர்த்தங்களென்பதினால் புஷ்கரம் முதலான தீர்த்தங்களும் சொல்லப்பட்டன. 'புஷ்காராத்யாநி தீர்த்தாநி' என்று எல்ல தீர்த்தங்களுக்கும் முதலாக புஷ்கரத்

தைச் சொல்வது ப்ரஸித்தமாயிருந்தாலும், அதற்கும் யாக (முந்தியதாக) கங்கையை இங்கு சொல்வதற்குக் காரணம்—கங்கையானது த்ரிலோகத்திலும் ப்ரவஹிப்பதால், அதை ஆதியாக உடைய ஸர்வதீர்த்தங்களென்று சொன்னல் ஸ்வர்க, பூலோக, பாதாளங்களிலிருக்கும் ஸகல தீர்த்தங்களையும் குறிப்பதாக ஆகும். கங்கையானது ஸ்வர்க்கத்திலிருந்து பூமிக்கு வந்ததினால் தான் கங்கா என்ற பதமே ஏற்பட்டது என்பதாக,

யஸ்மாத் பகீரதேந தேவி ஸ்வர்க்காத் காம் த்வாமிஹாநயத் |
அதஸ்த்வம் முநிபி: ஸர்வை: கங்கேதி பரிகீர்த்யஸே ||

என்ற பவிஷ்யோத்தர புராணத்தில் சொல்லப்பட்டிருக்

இதர தீர்த்தங்களின் பெயரை ஆதியாகச் சொன்னல் பூலோகத்திலிருக்கும் தீர்த்தங்கள் குறிக்கப்படுமோ தவிர (கங்கையை ஆதியாகச் சொன்னல் மேலே சொன்னபடி ஏற்படுவதுமாதிரி) த்ரிலோகங்களிலிருக்கும் தீர்த்தங்கள் குறிக்கப்படமாட்டா.

இங்கு சொல்லப்பட்டதிலும் இனி சொல்லப்படும் (இந்த பலஸ்துதிபற்றிய) ச்லோகங்களிலும் பின்னல் 12-வது ச்லோகத்தில் சொல்லப்பட்ட "ப்ரதி தினம், ச்ரத்தயா பரயா, ஸஹஸ்ர பரிவத்ஸரம்" என்ற பதங்களைச் சேர்த்து அர்த்தம் செய்யவேண்டும். அதாவது— இது ஸம்பந்தமாகச் சொல்லப்படும் கர்மாக்களை தினந்தோறும், பரம ச்ரத்தையுடன், பன்னீராயிரம் வருஷங்கள் செய்தால் ஏற்படக்கூடிய பலன்யத்தை ஒரு எண்ணிக்கையாகச் சொல்லப்பட்டது. (பரிவத்ஸரமென்ற பதத்திற்கு 12-வது ச்லோகத்தில் அர்த்தம் சொல்லப்பட்டிருக்கிறது.) அதே ரீதியில் இங்கு சொல்லப்பட்ட "கோடி ஜன்மஸு" என்ற பதத்தை மற்ற இடங்களிலும் சேர்த்துச் சொல்லவேண்டும்.

3. ஆகவே, இந்தப் பதங்களைச் சேர்த்து இந்த வாக்கிய அர்த்தம் கீழே சொல்லப்படுகிறது. அதாவது— த்ரிலோகங்களிலிருக்கும் தீர்த்தங்களில் ஒரு தீர்த்தத்தில், ப்ரதி தினம், விதிப்படி, பரம ச்ரத்தையோடு ஸஹஸ்ர பரிவத்ஸரம் ஸ்நானம் செய்யவேண்டியது. இது ஒரு ஜன்மத்தில

தாகையால் கோடி ஜன்மங்களில் ஏற்படுவது இதைக் கோடியால் பெருக்கினால் வரும். இப்படி வருவது ஒரு தீர்த்தத்தைப்பற்றியதால் த்ரிலோகங்களிலுமுள்ள எண்ணிக்கையற்ற தீர்த்தங்களில் ஸ்நானம் செய்வதினால் ஏற்படும் புண்யமானது அவற்றின் எண்ணிக்கையால் ஒரு தீர்த்தத்திய புண்யத்தைப் பெருக்கினால் வரும். (ப்ரதி தினம், விதிப்படி, பரம ச்ரத்தையோடு தீர்த்த ஸ்நானம் செய்வது × ஸஹஸ்ர பரிவத்ஸரம் × கோடி ஜன்ம × த்ரிலோகங்களிலுமுள்ள தீர்த்தங்கள்) இப்படி வரும் புண்ய ராசியானது ஒன்று.

कोटिलिङ्गप्रतिष्ठां तु यः कुर्यादविमुक्तके । ॥ ९ ॥

கோடிலிங்க ப்ரதிஷ்டாம் து யः குர்யாத் அவிமுக்தகே॥ (9)

அவிமுக்த கேஷேத்ரத்தில் ஒருவன் கோடி லிங்கங்களை ப்ரதிஷ்டை செய்தாலும்,

1. "एकस्मिंस्तापिते लिङ्गे विश्वं संस्तापितं भवेत् ।"

என்றது முதலான வசனங்களின்படி இதர தேவதைகளை ப்ரதிஷ்டை செய்வதைவிட ஒரு லிங்கத்தை ப்ரதிஷ்டை செய்வதினால் அதிகமான பலன் ஏற்படுவதாகச் சொல்லப்படும். அவ்வாறு கோடி லிங்கங்களை, அதுவும் அவிமுக்த கேஷேத்ரத்தில் (ப்ரதி தினம், சரத்தயாடரயா, ஸஹஸ்ர பரிவத்ஸரம், கோடி ஜன்மஸு) ப்ரதிஷ்டை செய்வதினால் ஏற்படும் புண்ய ராசியானது இரண்டாவது.

2. காசியில்—காசி, வாராணஸி, அவிமுக்தம், அந்தர்க்ருஹம்—என்ற நாலு ஸ்தானங்கள் இருப்பதாக ப்ருஹத் ஜாபாலம் முதலியவைகளில் சொல்லப்பட்டிருக்கிறது. அவை காசிக்குள் வாராணஸி, வாராணஸிக்குள் அவிமுக்தம் என்பதாக (தேஹத்திலிருக்கும் பஞ்ச கோசங்கள் மாதிரி) ஒன்றுன்றாய் அதற்கு முந்தியதால் வ்யாபிக்கப்பட்டு ஒன்றொன்றும் அதற்கு முந்தியவைகளைவிட புண்யமானதாயிருப்பதாகச் சொல்லப்படும். ஆகவே அந்தர்க்ருஹம் என்பதுதான் மற்ற எல்லாவற்றையும்விட உத்தமோத்தமானது. அது பரமசிவனுடைய சரீரமே. சரீரம், சரீரி (சரீரத்தையுடையவன்) இவ்விரண்டும் அபேதமானதையால், நித்யமானதையால் அதற்கு அவ்விதமான மஹிமை ஏற்பட்டது.

3. அவி என்ற பதமானது பாபங்களைக் குறிக்கும். பாபங்களைப் போக்கடிப்பதாலும், தான் எப்போதும் அங்கு இருப்பதாலும் அவிமுக்தம் என்ற அந்த க்ஷேத்திரத்திற்குப் பெயர் ஏற்பட்டதென்று பாதமசிவனால் சொல்லப்பட்டதாக,

'அவி சப்தேந பாபானி கத்யந்தே தவிஜுஸ்தம |
தைர்முக்தம் மயா த்யக்தம் அவிமுக்தம் அத: ஸ்ம்ருதம் ||'

என்று லிங்க புராணத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

4. மேலே சொல்லப்பட்டபடி அந்தர்க்ருஹம்தான் உத்தரோத்தமானது என்று ஏற்பட்டாலும், அதின் பெயரை இங்கு சொல்லாமல் அவிமுக்தத்தைச் சொன்னதற்குக் காரணம், அந்தர்க்ருஹத்தை வ்யாபித்து அவிமுக்தமிருப்பதாலும், அவிமுக்தமென்ற பதத்திற்கு மேலே சொல்லப்பட்ட அர்த்தமானது அந்தர்க்ருஹத்திற்குத்தான் விசேஷமாகப் பொருந்துமாதலாலும், பண்டிதர்களுக்கும் பாமரர்களுக்கும் ஸாதாரணமாய் அந்தர் க்ருஹம்தான் முக்யமான அவிமுக்தம் என்ற ஞானமில்லாமையாலும் "அவிமுக்தகே" என்ற பதத்திலுள்ள "க" என்பது தெரிந்து கொள்ளாமை என்ற அர்த்தமிருப்பதாலும், அறியப்படாததான அவிமுக்தம் என்றால் அந்தர் க்ருஹம்தான் சொல்லப்பட்டதாகும்.

அந்தர்க்ருஹம் என்பதின் பெயரைக் குறிக்காமல் அவிமுக்தமென்று சொன்னதினால், அந்த அவிமுக்தமென்ற பதத்திற்குச் சொன்ன அர்த்தத்தை ஞாபகப்படுத்தி அநுபவிக்கவும் புண்யமான ஸ்தானம் என்று குறிப்பிடப்பட்டது.

कुरुक्षेत्रे तु यो दद्यात्कोटिवारं रविग्रहे
कोटिं सौवर्णभाराणां श्रोत्रियेषु द्विजन्मसु । ॥ १० ॥

குருக்ஷேத்ரே து யோ தத்யாத் கோடிவாரம் ரவிக்ரஹே |
கோடிம் ஸௌவர்ணபாராணாம் ச்ரோத்ரியேஷு த்விஜன்மஸு ॥ (10)

குரு க்ஷேத்ரத்தில் ஸூர்ய க்ரஹணத்தின்போது
கோடிபாரம் இடைபள்ள தங்கத்தை ச்ரோத்ரியர்களான
ப்ராஹ்மணர்களுக்கு கோடித்தடவைகள் தானம் செய்
தாலும்,

1. குருக்ஷேத்ரமென்பது - சந்த்ரவம்சத்தில் வந்த குரு என்ற ஒரு அரசனால் செப்பனிடப்பட்ட ஒரு க்ஷேத்ரத்தின் பெயர். தர்மத்தின் அர்த்தத்தை

பாண்டவர்களும் கௌரவர்களும் சேர்ந்து யுத்தம் செய்தவிடம். "குருக்ஷேத்ரம்வை தேவயஜநம்" என்று சதபத ப்ராஹ்மணத்திலும், "யத் வை குருக்ஷேத்ரம் தேவாநாம் தேவயஜநம் ஸர்வேஷாம் பூதாநாம் ப்ரம்ஹ்மஸதநம்" என்று ஜாபால ப்ராஹ்மணத்திலும் பிரஸித்தமானது. ஸ்ம்ருதிகளிலும் தர்மக்ஷேத்ரமாக பிரஸித்தமானது.

2. தானம் செய்வதினால் கொடுப்பவனுக்கு எவ்வளவு புண்யம் ஏற்படுமோ, அவ்வளவு பாபம் தானம் வாங்குகிறவனுக்கு ஏற்படுகிறதென்றும், ஆகையால் தானம் வாங்குகிறவன் அதற்குத் தகுந்த ப்ராயச்சித்தம் செய்யவேண்டுமென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இதற்காகவல்லா தானங்களுக்கும் ப்ராயச்சித்தங்கள் சொல்லப்பட்டிருக்கையில் குருக்ஷேத்ரத்தில் ஸூர்யோபராகத்தின்போது (ஸூர்யகிரஹணத்தின்போது) ப்ராம்ஹ்மணன் தானம் வாங்கினால் அதற்கு ப்ராயச்சித்தமோ கிடையாதென்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

ஸர்வத்ர ஸர்வதா ஸர்வம் க்ருண்ஹந் மூச்யேத கர்ஹிசித் |
உபராகே குருக்ஷேத்ரே க்ருண்ஹந் விப்ரோ ந முச்யதே ||'

தானம் வாங்குகிறதற்கு ப்ராயச்சித்தங்கள் எவ்வளவுக் கெவ்வளவு கடினமாகச் சொல்லப்பட்டிருக்கின்றனவோ, அவ்வளவுக்கவ்வளவு அந்த தானத்தைச் செய்கிறவனுக்கு புண்யம் அதிகமென்று சொல்லப்படுவதாலும், மேலே சொல்லியவிதமாக குருக்ஷேத்ரத்தில் தானம் வாங்கினால் ப்ராயச்சித்தம் கிடையவே கிடையாதென்று சொல்லப்படுவதாலும், அவ்விதமாக தானம் செய்தால் அளவற்ற புண்யமேற்படுமென்று வரித்திக்கிறது.

3. தானம் செய்யப்படும் பதார்த்தங்களில் ஸுவர்ண தானம்தான் உத்க்ருஷ்டமானதென்று சொல்லப்படும்.

'த்ரீண்யாஹு: அதிதாநாநி காவ: ப்ருத்வீ ஸரஸ்வதீ |'

என்று ப்ருஹஸ்பதி ஸ்ம்ருதியில் சொல்லியபடி பசுக்கள், பூமி, வித்யை இந்த தானங்கள் மிகவும் த்ரேஷ்டமான தானங்கள் என்று சொல்லப்பட்டபோதிலும், அவைகளெல்லாம் ஸ்வர்ணத் தினால் (பணத்தினால்) ஏற்படக்கூடியவையாகையால் ஸுவர்ண தானமானது அவைகளையுமிட உயர்ந்ததென்று ஏற்படுகிறது.

4. **'துலா ஸ்த்ரியாம் பலசதம் பார: ஸ்யாத் விம்சதிஸ்துலா:|'** என்ற கோசவசனத்தின்படி 100-பலம் 1-துலாம், 20-துலாம், 1-பாரம்.

5. 'த்ரிபுரா: த்ரோதரிய உச்யதே' என்ற ப்ரம்ஹாண்டபுராணவசனப்படி ஜன்ம, உபாயன, வித்யைகளால் ஸம்ஸ்காரமடைந்தவர்கள் த்ரோதரியர்கள் என்று சொல்லப்படுபவர்கள்.

6. தானங்களால் ஏற்படும் புண்யராசியானது தேச, கால பாத்ர, தேய (கொடுக்கும் வஸ்து), ச்ரத்தா, ஞான, ரஹஸ்யம் முதலியவைகளைப் பொருத்து மேலுக்கு மேல் அதிகமாக ஏற்படுமாகையால், அவையெல்லாம் இங்கு சொல்லப்படாவிட்டாலும், சேர்த்துத்தான் அர்த்தம் செய்துகொள்ள வேண்டும்.

7. குருகூஷேத்ரத்தில் ஸூர்ய க்ரஹணத்தின்போது மேலே சொல்லப்பட்ட ஸத்பாத்ரத்திற்கு கோடி ஸுவர்ணபாதானம்— இதை கோடி தடவை செய்வது—ஒரு கோடி இதை ஸஹஸ்ர பரிவத்ஸரங்களிலுள்ள தினங்களின் எண்ணிக்கையால் பெருக்கி திரும்பவும் அதை கோடி ஜன்மங்களால் பெருக்கி வரும் புண்யராசியானது **மூன்றுவது.**

இதற்கடுத்த ச்லோகத்தின் இரண்டு பாதிகளில் முறையே இஷ்டா பூர்த்தங்கள் சொல்லப்படுகின்றன. இஷ்டமென்பது யாகங்களைச் செய்வது, தானங்கள் செய்வது. பூர்த்தமென்பது பொதுஜன ஸௌகர்யத்திற்காக வாபீ, கிணறு, குளம், கோவில், அன்னஸத்ரம், உத்யானம் முதலியவைகளை ஏற்படுத்துவது.

வாபீ கூப தடாகாதி தேவதாயதனானி ச |
அந்நப்ரதானமாராமாஃ பூர்தம் அர்த்யாஃ ப்ரசக்ஷதே ||
ஏகாக்னிகர்ம ஹவனம் த்ரேதாயாம் யச்ச ஹூயதே |
அந்தர்வேத்யாம் ச யத்தானம் இஷ்டம் தத் அபிதீயதே ||'

यः कोटिं हयमेधानामाहरेद्दाङ्गरोधसि
आचरेत्कूपकोटीर्यो निर्जले मरुभूतले । ॥ ११ ॥

யஃ கோடிம் ஹயமேதானாம் ஆஹரேத் காங்கரோதஸி |
ஆசரேத் கூபகோடீர்யோ நிர்ஜலே மருபூதலே || (11)

கங்கைக் கரையில் கோடி அச்வமேத யாகங்களை ஒருவன் செய்தாலும், நிர்ஜலமாயிருக்கும் பாலைவனப்ரதேசத்தில் கோடி க்ஷயக்கான கிணறுகளை வெட்டி வைத்தாலும்,

1. 'தஸ்மி ப்ரஹ்மஹத்யாம் தஸ்மி பாப்மானம் யோஸ்ய
மேதஸ யஜதே'

என்று ச்ருதிவாக்யத்தில் சொல்லப்பட்டபடி அச்வமேதம் என்ற க்ரது விசேஷமானது ப்ரஹ்மஹத்தி முதலான எப்பேர்ப்பட்ட பாபத்தையும் போக்கக்கூடியது.

2. கங்காதீரத்தில் ச்ரோத்ரியர்களான ரித்விக்குகளுடன் ஸாங்கமான அச்வமேத யாகங்கள் கோடி செய்வதிலுண்டாகும் புண்யம்—அதை மேலே சொல்லிய தினங்கள், ஜன்மங்கள் இவைகளின் கணக்கிலும் பெருக்கிலும் வரும் புண்ய ராசியானது **நான்காவது.**

3. கூபம் (கிணறு) என்பதிலும் வாபீ, தடாகம் முதலிய வைகளிலும் குறிக்கப்பட்டன.

4. (ப்ராணிகள் உயிருடன் வாழமுடியாத) பாலைவனத்திற்கு மரு என்று பெயர். ஆகவே (அதாவது தாராளமாய் ஜலமில்லாத பூமியாயிருந்தாலும்) இங்கு 'நிர்ஜலே' என்று சொன்னது அர்த்தமில்லாததல்ல.

5. அப்போர்ப்பட்ட இடத்தில் கோடிக்கணக்கான கிணறு முதலியவைகள் வெட்டுவதிலும் **எற்படும்** புண்யம்—அதை மேலே சொல்லிய தினங்கள், ஜன்மங்கள் இவைகளின் கணக்கிலும் பெருக்கிலும் வரும் புண்ய ராசியானது **ஐந்தாவது.**

दुर्भिक्षे यः प्रतिदिनं कोटिब्राह्मणभोजनम्
श्रद्धया परया कुर्यात्सहस्रपरिवत्सरान्। ॥ १२ ॥

துர்பிக்ஷே யः ப்ரதிதிநம் கோடி ப்ராஹ்மண போஜநம் |
ச்ரத்தயா பரயா குர்யாத் ஸஹஸ்ர பரிவத்ஸராந் ॥ (12)

கடுமையான காலத்தில் பரம ச்ரத்தையுடன் தினந்தோறும் கோடி ப்ராஹ்மணர்களுக்கு போஜனம் போட்டு (அன்னதானம்) பன்னீராயிரம் வருஷங்கள் செய்தாலும்,

1. ஸகல தேசங்களிலும் பிக்ஷை துர்லபமாக இருக்கும் காலமானது துர்பிக்ஷகாலமென்று சொல்லப்படும். அப்போது கோடிக்கணக்கான உத்தம ப்ராஹ்மணர்களுக்கு உத்தம க்ஷேத்ரலாபமான அன்னத்தைத் தானம் செய்வதிலுண்டாகும் புண்யம்—அதை மேலே சொல்லிய தினங்கள், ஜன்மங்கள் இவைகளின் எண்ணிக்கையிலும் பெருக்கிலும் வரும் புண்ய ராசியானது **ஆறாவது.**

2. வாக்யங்களை ப்ரபவ முதல் சொல் வரையில், ப்ரபவ முதலான பன்னிரண்டை ஸம்வத்ஸரமென்றார், ப்ரமாதி முதலான பன்னிரண்டை பரிவத்ஸரமென்றார், சார முதலான பன்னிரண்டை இடாவத்ஸரமென்றார், ராக்ஷஸ முதலான பன்னிரண்டை அனுவத்ஸரமென்றார் சொல்லாது வாக்யம். அப்படியிருந்தபோதிலும், ஸாதாரணமாகப் பன்னிரண்டு வாக்யங்களைக் குறிப்பதாக 'பரிவத்ஸரம்' என்ற இங்கு சொல்லப்பட்டது.

तत्पुण्यं कोटिगुणितं लभेत्पुण्यमनुत्तमम्
रहस्यनामसाहस्रे नाम्नोऽप्येकस्य कीर्तनात् । ॥ १३ ॥

தத் புண்யம் கோடிகுணிதம் லபேத் புண்ய மநுத்தமம் ।
ரஹஸ்யநாம ஸாஹஸ்ரே நாம்நோஉப்யேகஸ்ய
கீர்த்தநாத் ॥ (13)

அந்தப் புண்யத்தின் கோடி மடங்கானதும், அனுத்தமமானதுமான புண்யத்தை இந்த ரஹஸ்யநாம ஸஹஸ்ரத்திலிருக்கும் ஒரு நாமத்தைச் சொன்னாலேயே அடையலாம்.

1. 'தத்புண்யம் கோடிகுணிதம்' என்ற சொன்னதிலேலே சொல்லிய தீர்த்த ஸ்நான, லிங்கப்ரதிஷ்டை, ஸ்வர்ண தானம், அச்வமேதம், கூபகரணம், ப்ராஹ்மணபோஜனம் இவை ஒவ்வொன்றிற்கும் சொல்லப்பட்ட அளவு புண்யங்களை ஒன்றாகச் சேர்த்து அப்படி வரும்படிக்கு கோடி குணமாக்கி எடுத்துக்கொண்டால் இந்த ஸஹஸ்ர நாமத்தின் ஒரு நாமம் சொன்னல்கூட வரும்படி என்று அர்த்தம்.

2. ஒரு நாமத்திற்கே இப்படி அளவுகடந்த புண்யம் ஏற்படும்போது நாம ஸஹஸ்ரத்தைச் சொன்னால் சொல்லவேண்டுமா ஏற்படும் என்பதை வேறே சொல்லிக்கொள்ளவேண்டுமா?

3. இவ்விதம் சொல்லப்பட்ட ஸஹஸ்ரநாம புண்ய ராசியானது (முழு) ஸ்ரீகாத்ர படனத்திலேயோ, சொன்றக்கூடிய எல்லையில் அடுத்தாற்போல் 'நாம்நோஉப்யேகஸ்ய' என்பதிலேல் போக்கடிக்கப்பட்டது. அதாவது, இவ்விதமான புண்யம் ஒரு நாமத்தைச் சொல்வதிலேலேயே ஏற்படுவதாகச் சொல்லப்பட்டது.

இப்படி ஒரு நாமத்தைக் கீர்த்தனம் செய்வதினால் வரும் புண்ய ராசியைச் சொல்லிவிட்டு, அதேமாதிரி விஸ்தார மாக, அதற்குப்பாபங்களைப் போக்கும் சக்தியிருப்பதைப்பற்றி மேலே சொல்லுகிறார்.

रहस्यनामसाहस्रे नामैकमपि यः पठेत् ।
तस्य पापानि नश्यन्ति महान्त्यपि न संशयः ॥ ॥ १४ ॥

ரஹஸ்ய நாம ஸாஹஸ்ரே நாமைகமபி யः படேத் |
தஸ்ய பாபாநி நச்யந்தி மஹாந்த்யபி ந ஸம்சயः ll (14)

யாராயினும் ஒருவன் இந்த ரஹஸ்ய நாம ஸஹஸ்ரத்தில் ஒரு நாமத்தைச் சொன்னாலும்கூட அதினால் அவனுடைய மஹத்தான பாபங்களும் நசித்துப்போகின்றன. அதில் ஸம்சயம் இல்லை.

மஹத்தான பாபங்களை (மஹாபாதகங்களை) போய் விடுவ்போது உபபாதகங்களைப்பற்றிச் சொல்லத் தேவையில்லை யென்பதைக் காட்டுவதற்கு 'மஹாந்த்யபி' என்று சொல்லப் பட்டது.

नित्यकर्मानुष्ठानान्निषिद्धकरणादपि ।
यत्पापं जायते पुंसां तत्सर्वं नश्यति द्रुतम् ॥ ॥ १५ ॥

நித்யகர்ம அநநுஷ்டாநாத் நிஷித்த கரணாதபி |
யத்பாபம் ஜாயதே பும்ஸாம் தத் ஸர்வம் நச்யதி த்ருதம் ll (15)

நித்ய கர்மாக்களை அனுஷ்டிக்காமலிருந்தாலும், நிஷித்தமான கர்மாக்களைச் செய்தாலும், அவற்றால் மனிதர்களுக்கு எந்த பாபம் ஏற்படுமோ அதெல்லாம் உடனே (வேறு பிராயச்சித்தத்தை அபேக்ஷியாமலே) நாசமடை

1. தினந்தோறும் அவச்யம் செய்யப்படவேண்டிய கர்மாவை நித்ய கர்மா என்று சொல்லப்படும். இந்த கர்மாக்கள் அந்தந்த வர்ணச்ரம பேதத்தை அனுஸரித்து ச்ருதி, ஸ்ம்ருதி, தந்த்ரங்களில் சொல்லப்பட்டிருக்கின்றன. அவை ஸந்த்யாவந்தனம், அக்னிஹோத்ரம் முதலியவை. இவைகளைச் செய்யாவிட்டால் பாபம் ஏற்படுமென்று சொல்லப்பட்டிருக்கிறது.

2. நித்யகர்மாக்கள் என்று இங்கு சொல்லப்பட்டது கைமித்திகமான கர்மாக்களையும் குறிக்கும். (உதாரணமாக் க்ரஹணத்தின்போது ஸ்நானம் செய்வது.)

3. இவையெல்லாம் சுருதியில் விதிக்கப்பட்ட கர்மங்கள். சுருதியில் சில கார்யங்கள் (செய்யக்கூடாதென்று) நிஷேதிக்கப்பட்டிருக்கின்றன. அவைகளைச் செய்தால் பாபம் ஸம்பவிக்குமென்று சொல்லப்பட்டிருக்கிறது. [உதாரணம் - ந களஞ்ஜம் பக்ஷயேத் - களஞ்ஜத்தை சாப்பிடாதே. களஞ்ஜ மென்றால் புகையிலையென்ற ஸ்ருதி. அல்லது மிருகம் கடவின அம்பினல் கொல்லப்பட்ட மிருகத்தின் மாம்ஸம் என்று அர்த்தம்.]

4. மேலே சொல்லப்பட்ட நித்ய கர்மாவைச் செய்யாவிட்டாலும், நிஷேதிக்கப்பட்ட கர்மாவைச் செய்தாலும், பாபம் ஸம்பவிக்கும். அப்படி ஸம்பவித்தால், இந்த நாம ஸஹஸ்ரத்தின் ஒரு நாமத்தைச் சொன்னவுடனேயே அந்த பாபமெல்லாம் போய்விடுமென்று இங்கு சொல்லப்பட்டது. 'த்ருதம்' என்ற பதத்தினால் வேறுவிதமான ப்ராயச்சித்தத்தின் தேவையில்லாமல் இந்த நாம சிந்தனத்தினாலேயே போய் விடுவது சொல்லப்பட்டது.

5. மேலே சொல்லிய இரண்டுவிதமான பாபங்களைத் தவிர இந்த்ரிய நிக்ரஹமில்லாததினால் ஏற்படுவது மூன்றாவது விதமான பாபமென்பதாக,

'விஹிதஸ்ய அநநுஷ்டாநாத் நிந்திதஸ்ய ச ஸேவநாத் |
அநிக்ரஹாச்சேந்த்ரியாணாம் நர: பதநமருச்சதி ||'

என்ற ஸ்ம்ருதிகளில் சொல்லப்பட்டபோதிலும், யோசித்துப் பார்த்தால் மேலே சொல்லிய இருவகைகளான கார்யங்களில் அது அடங்கிப்போவதால், இங்கு பாபத்தை இரண்டுவிதமாகச் சொல்லப்பட்டதாகும். இந்த்ரிய நிக்ரஹம் இருந்தால்தான் நித்ய கர்மாவை விடாமலும், நிஷித்த கர்மாவைச் செய்யாமலும் இருக்கலாம். இந்த்ரிய நிக்ரஹமில்லாவிட்டால்தான் அவை இரண்டுவகையிலும் ப்ரவர்த்தி ஏற்படக்கூடும்.

இந்த நாமஸஹஸ்ர சிந்தனத்தினால் ஏற்படும் மஹத்தான புண்ய ராசியைப்போலவே அதினால் நாசமாகும் பாபத்தின் ராசியும் மஹத்தானது என்பது புத்திமான்களுக்கு

உலகிலுள்ள எல்லாம் என்ற எண்ணத்துடன் சிவபெரு
மான் தான் சொல்வதை மனதாரக் கேட்கவேண்டு
மென்று மேலே எச்சரிக்கை செய்கிறார்.

बहुनात्र किमुक्तेन शृणु त्वं कलशीसुत ॥ १६ ॥
பஹுநாத்ர கிமுக்தேந ச்ருணு த்வம் கலசீஸுத | (16)

அதிகம் சொல்லுவானேன்? ஏ கலசீஸுத! நான்
சொல்வதைக் கேள்.

अत्रैकनाम्नो या शक्तिः पातकानां निवर्तने ।
तन्निवर्त्यमघं कर्तुं नालं लोकाश्चतुर्दश ॥

அத்ரைகநாம்நோ யா சக்திः பாதகாநாம் நிவர்த்தநே ।
தந்நிவர்த்யம் அகம் கர்த்தும் நாலம் லோகாச்சதுர்தச ॥

இந்த உலகத்திலுள்ள ஒரு நாமத்திற்குள்ளிருக்கக்கூடிய பாபஹரண
சக்திக்குப் போதுமான பாபம் செய்ய பதினாலு லோகங்
களிலுள்ளோரால் முடியாது.

1. அதாவது, எவ்வளவு பாபத்தை ஒரு நாமத்தைச்
சொன்னால் போக்கடிக்கலாமோ, அவ்வளவு பாபத்தை
பதினாலு லோகங்களிலிருக்கும் ப்ராணிகள் சேர்ந்து செய்
தாலும் செய்யமுடியாது என்று சொல்லப்பட்டது.

2. ஸாஸ்த்ர புராணங்களிலிருக்கும் ஸகல ப்ராணிகளும்,
இடைவிடாமலும், இறக்கும் வரையிலும், தங்களுடைய
கோடி கோடி ஜன்மங்களிலும் செய்யக்கூடிய எல்லாவித மான
பாபங்களுடைய ராசிகூட ஒரு நாமத்தின் பாபஹரண
சக்திக்குப் போதாதென்றால், இதிலிருக்கும் ஆயிர நாமங்
களையும் சொன்னால் அவற்றிற்கிருக்கும் பாபஹரண சக்தியை
மனதால்கூட அறிந்துகொள்வது அஸாத்யமான காரி
யமென்று ஏற்படுகிறது.

यस्त्यक्त्वा नामसाहस्रं पापहानिमभीप्सति ।
स हि शीतनिवृत्त्यर्थं हिमशैलं निषेवते ॥ १७ ॥

யஸ்த்யக்த்வா நாமஸாஹஸ்ரம் பாபஹாநிமபீப்ஸதி |
ஸ ஹி சீதநிவ்ருத்யர்த்தம் ஹிமசைலம் நிஷேவதே ॥ (17)

எவனொருவன் இந்த நாமஸாஹஸ்ரத்தைத்
(வேறு உபாயத்தினால்) பாபத்தைப் போக்கடிக்க விரும்பு

), அவன் குளிர் நீங்குவதற்காக பனிக்கட்டி மலை யை அடைவதுபோல் இருக்கிறான்.

1. குளிரைப் போக்குவதற்காகச் சூடான பதார்த்தங் களைத் தேடாமல் பனிக்கட்டிகளாலான மலையை அடைவது மிகவும் மூட்டாள்தனமானதும், பரிஹாலிக்கத்தகுந்ததான காரியமல்லவா.

2. மேலும், ஸ்ரீவித்யோபாஸகனாயிருப்பவன் (இப்படி விசேஷமான பராஹாரண சக்தியையுடைய) நாமஸஹஸ்ர நாமத்தை ஜபம் செய்யாமல், ஸ்மிருதிகளில் சொல்லப்பட்ட ப்ராயச்சித்தங்களைச் செய்ய விரும்புவானால், அவனுடைய கடமை யாகிய இந்நாமஸஹஸ்ர நாமத்தைக் கைகழுவுதல் செய்வ தினால் உண்டாகும் பாபபரம்பரையானது நீக்கமுடியாதபடியாக ஏற்பட்டுவிடுமாதலால் இதர ப்ராயச்சித்தங்கள் செய்தாலும் அவனுடைய பாபமானது போய்விடாது. தேகத்துக்குப் பயந்து ஓடுகிற ஒருவன் தன்னைக் காப்பாற்றிகொள்வதற்காக தேகமுங் கொண்ட ஸர்ப்பத்தின் வாயில அகப்பட்டுக்கொள்வது மாதிரி

ஆனால் இதர ப்ராயச்சித்தங்களைச் சொல்லும் சாஸ்த்ரங் கள் அர்த்தமற்றவையா என்ற ஸந்தேஹத்தைப் போக்குவதற் காக இந்த நாமஸஹஸ்ர ஜபத்தினால் ஏற்படக்கூடிய அம்பாளுடைய ப்ரீதி விசேஷத்தைப்பற்றித் திருப்பவும் சொல்லுகிறார்.

भक्तो यः कीर्तयेन्नित्यमिदं नामसहस्रकम् ।
तस्मै श्रीललितादेवी प्रीताभीष्टं प्रयच्छति ॥ १८ ॥

பக்தோ யः கீர்த்தயேந்நித்யம் இதம் நாமஸஹஸ்ரகம் ।
தஸ்மை ஸ்ரீலலிதாதேவீ ப்ரீதா அபீஷ்டம் ப்ரயச்சதி ॥ (18)

எந்த பக்தனொருவன் இந்த நாமஸஹஸ்ரத்தை தினந் தோறும் கீர்த்தனம்பண்ணுகிறானோ அவனிடம் ஸ்ரீலலிதா தேவியானவள் ஸந்தோஷமடைந்து அவன் விரும்பிய வற்றையெல்லாம் கொடுக்கிறாள்.

1. பக்தன்—உபாஸகன். நித்யம்—உயிருள்ளவரையில். "இதம்" என்பதிலுள்ள இதுவரையில் விளாமாக வ்யாக்யானிக்கப் பட்டிருப்பதிலுள்ள மனதிலிருக்கக் கூடியது என்பதைக் குறிக்கப் பட்டது. "ப்ரீதா" என்பதிலுள்ள விசேஷமான ப்ரீதி

யடைவது சொல்லப்பட்டது. "அபீஷ்டம்" என்பது மேலே சொல்லப்பட்ட புண்ய ராசியை அடைவதும், பாபராசியைப் போக்குவதுமான இருவகை அபீஷ்டங்களையும் குறிக்கும்.

2. இந்த நாமஸஹஸ்ரத்தைச் சொல்வதிலுல் அம்பாளுடைய ப்ரீதியானது விசேஷமாக ஏற்படுகிறது என்பதை,

'இதம் விசேஷாத் ஸ்ரீதேவ்யாः ஸ்தோத்ரம் ப்ரீதிவிதாயகம்!'

என்று ஆரம்பித்துச் சொல்லியதில் நாமகீர்த்தனம் செய்வதைப்பற்றிய விசேஷணைகள் மாத்ரு சொல்லப்பட்டன. அதாவது, உபாஸகனுல் அவச்யம் செய்யப்படவேண்டியது, ஸ்தோத்ரத்தை ஸம்பூர்ணமாகச் சொல்வது, உயிருள்ளவரையில் செய்யவேண்டியது, ப்ராதஃஸ்நானம் முதலான நாலு ப்ரதான கர்மாக்களுடன் சேர்த்துச் செய்வது. இப்படி உபக்ரமத்தில் (ஆரம்பத்தில்) சொல்லப்பட்ட இந்த நாலு விசேஷணங்களும் இந்த உபஸம்ஹார (முடிவான) ச்லோகத்திலும் சொல்லப்பட்டன். [எதாவது ஒரு விஷயத்தைப்பற்றிச் சொல்லும்போது உபக்ரமத்தில் எது சொல்லப்பட்டதோ, அதுவே உபஸம்ஹாரத்திலும் சொல்லப்படவேண்டுமென்று ஒரு ந்யாயம் உண்டு.]

3. இந்த நாலு விசேஷணங்களில் முதலாவதிலுல் ப்ராயச்சித்த சாஸ்த்ரங்கள் ப்யர்த்தமா என்ற ஸந்தேஹமானது நீக்கப்பட்டது. அவையெல்லாம் உபாஸகர்களைத்தவிர மற்றவர்களுக்கு மட்டுமே ஏற்பட்டிருப்பதால், அவர்கள் அவற்றைச்செய்யலாமென்றும், உபாஸகனைப்பற்றியவரையில் இந்த நாமகீர்த்தனமே எல்லாவிதமான ப்ராயச்சித்தத்திற்காகவும், மற்ற எந்தக் காரணத்திற்காகவும் அவச்யம் செய்யபடவேண்டுமென்றும் ஏற்பட்டது. அதை இங்கு 'பக்தः' என்பதிலுல் குறிக்கப்பட்டது.

4. 'நாமஸஹஸ்ரகம்' — என்பதிலுல் ஸம்பூர்ணமான ஸ்தோத்ரத்தையும் கீர்த்தனம் செய்யவேண்டுமென்று ஏற்படுவதால், ஒரு நாமத்தைமட்டும் சொல்லிவிட்டு க்ருதக்ருத்யனாகிவிட்டதாக நினைத்துக்கொள்வது கூடாது என்பது ஏற்படுகிறது. ஒரு நாமத்தைமட்டும் சொல்வதுளென்பதான ப்ரயோகம் யாதொன்றும் சொல்லப்படவில்லை. அப்படிதம் ஒரு நாமத்தைச் சொன்னாலும் நாம ஸஹஸ்ரத்தைச் சொல்வதிலுல் ஏற்படும் புண்யத்தினளவு ஏற்படாது. ஆயினும் நாம்தேய ப்ரயோகஸ்யா தீர்த்

நாத்', 'நாமைகமபி ய: படேத்' என்பது முதலான வாக்யங்களில் ஒரு நாமத்தைக் கீர்த்தனம் செய்வதைப்பற்றிச் சொல்லப்பட்டு இருந்தாலும், அவைகளிலிருந்து ஏகநாமகீர்த்தனம் என்பதான ப்ரயோகம் சொல்லப்பட்டதாக ஏற்படாது. உபக்ரமிக்கப்பட்ட விஷயமும், உபஸம்ஹாரம் செய்யப்பட்ட விஷயமும், ஒன்றாகவே இருக்கவேண்டுமென்ற ந்யாயமானதாலும், இங்கு நாமஸஹஸ்ரத்தின் கீர்த்தனமே இங்கு சொல்லப்பட்ட விஷயமாகையாலும், முடிவில் ஒரேநாநாமத்தின் கீர்த்தனத்தைப்பற்றிய மஹிமையைப்பற்றிய வாக்யங்களெல்லாம் நாமஸஹஸ்ரத்தையும் கீர்த்தனம் செய்வதின் மஹிமையை ஏற்படுத்துமே தவிர, வேறல்ல. 'நாம்நோபி, நாமைகமபி' என்ற வார்த்தைகளில் வரும் அபி என்ற பதத்தினால் ஒருநாமத்தைச் சொன்னாலேயே அவ்விதமான விசேஷபலன் ஏற்படுமென்று சொல்லப்பட்டாலும், அது (ஒரு நாமத்தைச் சொன்னாலேயே இவ்விதமான பலன் ஏற்படும்போது) ஆயிரம் நாமங்களைச்சொன்னால் இன்னும் அதிகமான பலன் ஏற்படும் என்று காட்டுமே தவிர, ஒரு நாமத்தைமட்டும் சொல்வது என்பதான ப்ரயோகத்தை ஏற்படுத்தாது. இது தவிர அக்ஷரங்களின் கணக்கை வைத்தேஎ உடைய நாமங்களெல்லாம் ஸமமான பலனையுடையனவை என்று சொல்வதும் சரியல்ல.

5. 'நித்யம்' என்று ப்ரதிதினமும், உயிர்முன்னை யினும் செய்யப்படவேண்டியதென்று சொல்லப்பட்டதினால், நாம ஸஹஸ்ர கீர்த்தனத்திற்கு இதுவரையில் சொல்லப்பட்ட பலனை, அதை நியமமில்லாமலும், சிற்சில தினங்களில் மட்டும் செய்வதினால் அடையமுடியாதா என்ற ஸந்தேஹமானது நீக்கப்பட்டது. ஆகினும்,

'ஜன்ம மத்யே ஸக்ருத் சாபி ய ஏவம் படதே நர: |'

என்பது முதலான வாக்யங்களில் நாமஸஹஸ்ரத்தை ஒரு தடவை கீர்த்தனம் செய்வதினால் உண்டாகக்கூடிய பலனைப் பற்றிச்சொல்லப்பட்டாலும், அவைகளும் (மேலே சொல்லிய ஏக நாமகீர்த்தனத்தைப்பற்றிய வாக்கியங்களைப் போலவே) நித்யம் கீர்த்தனம் செய்வதின் மஹிமையைக் குறிப்பவையே தவிர, ஒரு தடவை கீர்த்தனம் செய்வதோடு நின்றுவிடலாமென்பதைச் சொல்பவையல்ல.

6. 'சிக்ஷேயத்' என்பதினால் மேலே சொல்லியபடி ப்ரதக்ஷணம், ஸத்யாகரம், சக்ரராஜார்ச்சனம், ஸ்ரீவித்யா ஜபம் இவைகளுடன் சேர்த்துச் செய்யவேண்டியது என்றும், அப்படிக்கில்லாவிட்டால் பலன் இல்லையென்றும் சொல்லப்பட்டது. இதேபோதிலி, தர்சபூர்ணமாஸங்களில் ஆக்னேயாதி ஆறு கர்மாக்கள் சொல்லப்பட்டிருப்பதில் அவை ஆறும் செய்தால்தான் பலன் ஸித்திக்குமென்றும், அவற்றில் ஏதேனும் ஒன்று செய்யாவிட்டாலும் பலன் ஸித்திக்காது என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. ஆயினும் இவ்விரண்டிற்கும் ஒரு மூக்யமான விக்யாஸமிருப்பது கவனிக்கத்தக்கது. தர்சபூர்ணமாஸங்களைப்பற்றிய வாக்யத்தில் ஆக்னேயாதி கர்மாக்கள் சேர்த்துச் சொல்லப்பட்டு அவைகளுக்கெல்லாம் சேர்த்தே ஒரு பலன் சொல்லப்பட்டிருப்பதால், அவற்றில் ஒன்று குறைந்தாலும் (செய்யப்படாமலிருந்தாலும்) பலனானது ஸித்திப்பதாகவே ஆகாது. இவ்விடத்திலோ ஸ்வதஸ்ஸாகவே சிக்ஷணம் செய்யாவிட்டாலும், பாக்கி சொல்லப்பட்ட ப்ரதான கர்மாக்கள் செய்தால் அதனதற்குச் சொல்லப்பட்ட பலன்கள் ஸித்திக்கும். அப்படியிருக்கையில் அவைகளுடன் சேர்த்து செய்யாமல் வேறு சிக்ஷணத்தைமட்டும் செய்தால், நிஷ்பலமானது என்று எப்படிச் சொல்லலாமென்றால் — இவ்விதமான ப்ரயோகத்தினால் ஸித்திக்கூடியபலன் ஸித்திப்பதென்று சொல்லப்பட்டதே தவிர, வேறு ஸ்வரூபத்தினால் ஸித்திப்பதாக இதர வாக்யங்களில் சொல்லப்பட்ட இதர பலன்கள் கிடைக்காதென்று அர்த்தமல்ல.

இனி, வாக்சிக்ஷணமானது உபாஸனையின் பாகமாகவே இருப்பதாலும் அனுஷ்டிக்கப்படவேண்டியது என்பதைக் சொல்லுகிறது.

अकीर्तयन्निदं स्तोत्रं कथं भक्तो भविष्यति । ॥ १९ ॥

அகீர்த்தயந் இதம் ஸ்தோத்ரம் கதம் பக்தோ பவிஷ்யதி ॥ (19)

இந்த ஸ்தோத்ரத்தைச் சொல்லாமல் ஒருவன் எப்படி பக்தனாக ஆகக்கூடும்.

1. அதாவது, ஆகமுடியாது என்று அர்த்தம். உபாஸகர்களுக்கு, உபாஸிக்கப்படும் தேவதையின் ப்ரீதியை உண்டு பண்ணுவதைவிட உயர்ந்ததான புருஷார்த்தம் வேறு எதனை

யால, நமோக ப்ரீதியை உண்டுபண்ணுவர் கர்மா அகாதாரவாக இருந்தால் அது பக்தியாகுமோ ? (அம்பாளுடைய) பக்தனுக்கு அம்பாளுடைய ப்ரீதி அவச்யாகாலும், அந்த ப்ரீதியானது இந்த நாமஸாஹஸ்ர கீர்த்தனத்திலல் விசேஷமாக ஏற்படுவதாலும், இதைக் கீர்த்தனம் செய்யாதவன் பக்தனாக ஏற்படமாட்டான் என்று இங்கு சொல்லப்பட்டது.

2. ஈச்வரனை பஜிக்கிறவர்கள் நாலுவகையானவர்களென்பதாக,

'சதுர்விதா பஜந்தே மாம் ஜநா: ஸுக்ருதிநோ(அ)ர்ஜுந |
ஆர்த்தோ ஜிக்ஞாஸு: அர்த்தார்த்தீ ஞாநீ ச பரதர்ஷப ||'

என்று கீதையில் சொல்லப்பட்டிருக்கிறது. இந்நால்வருக்கும் நாமகீர்த்தனம் எப்படி அவச்யமென்றால் :—

ஆர்த்தனென்பவன் கஷ்டப்படுகிறவன், பாபங்களால் பீடிக்கப்படுகிறவன், அவனுக்கு பாப நிவாரணத்திற்காக இது அவச்யம்.

ஜிக்ஞாஸு என்பவன் ஞானம் அடைய விரும்புகிறவன். அவன் யாதொரு காமனையுமில்லாதிருந்தாலும், இந்த நாமகீர்த்தனத்தினல் அவனுக்கு சித்தசுத்தி ஏற்படுமாகையால் அவச்யமானது.

அர்த்தார்த்தி என்பவன் பொருள், இன்பம் முதலியவைகளையடைய விரும்புகிறவன். இவை இந்த நாமகீர்த்தனத்தின் மூலமாக யதேஷ்டம் ஏற்படுமாகையால் அவனுக்கும் அவச்யமானது.

ஞானி என்பவன் ஆத்மஞானம் ஏற்பட்டவன். அவன் இதைக் கீர்த்தனம்செய்வது "இந்த கீர்த்தநம் செய்தால் மோக்ஷம் உண்டாகு"மென்று உலகத்தாருக்குக் காட்டுவதற்காக. ஆதலால் அவனுக்கும் இது அவச்யமானது.

ஆகவே இந்த நான்கு வகையான பக்தர்களுக்கும் நாம கீர்த்தனமானது அவச்யமென்று ஏற்படுகிறது. இந்த விஷயத்தைப்பற்றி பக்தி மீமாம்ஸா பாஷ்யத்தில் விஸ்தாரமாகச் சொல்லப்பட்டிருப்பதைப் பார்க்கவும்.

மேலே சொல்லிய நாலு விசேஷணங்களில் நித்யமும் நாமகீர்த்தனம் செய்வது என்பது முடியாதவனுக்கு அதற்

கதித்தபடியாகச் செய்யக்கூடிய விதத்தைப்பற்றி மேலே சொல்லுகிறார்:—

नित्यं संकीर्तनाशक्तः कीर्तयेत्पुण्यवासरे ।
संक्रान्तौ विषुवे चैव स्वजन्मत्रितयेऽयने । ॥ २० ॥
नवम्यां वा चतुर्दश्यां सितायां शुक्रवासरे ॥ २१ ॥

நித்யம் ஸம்கீர்த்தநா சக்தः கீர்த்தயேத் புண்யவாஸரே ।
ஸம்க்ராந்தௌ விஷுவே சைவ ஸ்வஜந்மத்ரிதயேऽயநே ॥ (20)
நவம்யாம் வா சதுர்தச்யாம் ஸிதாயாம் சுக்ரவாஸரே । (21)

நித்யம் கீர்த்தனம் செய்யமுடியாதவன் புண்யதினங்களிலும், ஸங்க்ராந்திகளிலும், விஷுவிலும், ஜன்மத்ரிதயமாகிற மூன்று தினங்களிலும், அயனங்களிலும், சுக்ல பக்ஷத்திய நவமி, சதுர்தசி திதிகளிலும், சுக்ரவாரத்திலும் இவைகளிலாவது கீர்த்தனம் செய்யவேண்டும்.

1. 'புண்யவாஸரம்' என்பது கடிலாஷ்டமி, அர்த்தோதயம் முதலான தினங்களைக்குறிக்கும். அல்லது, அடுத்தாற்போல் சொல்லப்படும் ஸங்க்ராந்தி முதலான காட்டங்களும் பொதுவாக இப்படிச் சொன்னதாகவும் சொல்லலாம்.

2. விஷு என்பது மேஷாதி, துலாராசிகளில் ஸூர்யன் ப்ரவேசிக்கும் தினம்.

3. 'ஸ்வ ஜன்ம த்ரிதயம்' என்பது தன் ஜன்மநக்ஷத்ரமும், தன் பார்யையுடையதும், தன் புத்ரனுடையதுமான ஜன்ம நக்ஷத்ரங்களுள்ள தினங்களைக் குறிக்கும். அல்லது, தன் ஜன்ம நக்ஷத்ரம், அதற்கு முந்தியது, பிந்தியதான நக்ஷத்ரங்களுள்ள தினங்களென்றும் சொல்லலாம். அல்லது, தன் ஜன்ம நக்ஷத்ரம், அதில் முந்தின நக்ஷத்ரம், பிந்தின நக்ஷத்ரம் இந்த மூன்றென்றும் சொல்லலாம். இப்படி பலவிதமாக அர்த்தம் செய்யமுடியுமாகையால்,

'தந்த்ராணாம் பஹுரூபத்வாத் கர்த்தவ்யம் குருலக்ஷணம் ।'

என்றபடி குருவினல் உபதேசிக்கப்பட்ட ஸம்ப்ரதாயத்தை யனுஸரித்து எந்தமூன்று தினங்களென்று நிர்ணயிக்கவேண்டும்

4. அயனமென்பது ஸூர்யனுடைய கடகராசி, மகர ராசி இவைகளில் ப்ரவேசிக்கும் தினங்கள்.

5. ஸங்க்ராந்தியைப்பற்றிச் சொன்னதிலேயே விஷு, அயனம் முதலியவை அடங்கியிருக்கும்போது, அவற்றைத் தனியாய்

அவைகள் மிகவும் புண்யமான தினங்களென்றும், அந்தக் காரணத்தினல் அவற்றின்போது நாமகீர்த்தனம் அவச்யம் செய்யப்படவேண்டுமென்றும் குறிப்பிடப்பட்டது. அந்தந்த ஸங்க்ரமணத்திற்கு முந்தியுள்ள சில நாட்களை அந்தந்த அயனங்களென்று ஜ்யோதிஷ சாஸ்த்ரத்தில் சொல்லப்படுவதால் அவைகளை இங்கு அயனமென்ற பதத்தினல் குறிப்பிட்டதாகவும் சொல்லலாம்.

6. 'நவம்யாம் வா' என்பது சொல்லப்பட்டது.

7. 'விதாயாம்'—சுக்லபக்ஷத்திய—என்பது நவமீ, சதுர்தசீ, சுக்ரவாரம் என்ற மூன்று தினங்களுக்கும் விசேஷணமானது, அல்லது சதுர்தசிக்கு மட்டும் விசேஷணமென்பதாகவும் சொல்லலாம்.

8. இரண்டாவது அடியில் வரும் 'ச' என்பதினல் உயிருள்ளவரையில் தினந்தோறும் நாமகீர்த்தனம் செய்யமுடியாதவன் ஸங்க்ராந்தி, விஷு, ஸ்வஜன்மதிதியம், அயனம் இந்த தினங்களிலாவது விடாமல் நாமகீர்த்தனம் செய்யவேண்டுமென்று சொல்லப்பட்டது. அதுவும் முடியாதவன் ஏதாவது ஒன்றை விட்டுவிடலாம் என்பதைக் காட்டுவதற்காக அடுத்த அடியில் 'வா' என்ற பதம் உபயோகிக்கப்பட்டது.

அப்படி விடப்படும் நாள்கள் எவையாக இருந்தாலும் பௌர்ணமி தினத்தன்று நாமகீர்த்தனம் செய்வதை விடக் கூடாது என்று மேலே சொல்லுகிறார்:—

कीर्तयेन्नामसाहस्रं पौर्णमास्यां विशेषतः ।

கீர்த்தயேந் நாம ஸாஹஸ்ரம் பௌர்ணமாஸ்யாம் விசேஷத:॥

விசேஷமாக (விடாமல், கட்டாயம்) பௌர்ணமியில் இந்த நாமஸஹஸ்ரத்தைக் கீர்த்தனம் செய்யவேண்டும்.

1. இவ்விதம் சொல்லப்பட்ட கவசம் முதலான திவ்ய மந்திரங்களில் ஜன்ம நக்ஷத்ரம், சங்க்ராந்தி, சுக்லபக்ஷம் முதலியவை களும் சேர்ந்திருந்தால் அப்போது தந்த்ர சாஸ்த்ரத்தின்படி ஒரு தடவை ஸஹஸ்ரநாம ஜபத்தை செய்தால் போதுமானது.

இம்மாதிரி இதுவரையில் இந்த ஸஹஸ்ரநாமமானது ரஹஸ்யநாமமாயும், லலிதாம்பாளுக்கு ப்ரீதியைக் கொடுப்ப தாயும் இருப்பதைச் சொல்லிவிட்டு, இனியும் அவ்விரண்டு விசேஷணங்களை விவரித்துச் சொல்லுகிறார். அவற்றில் ரஹஸ்யநாமென்ற விசேஷணத்தைப்பற்றி முன் சொல்லு கையில் சரித்ர ஸௌகர்யத்தைக் கொடுக்கும் பலன்களில் ரோக ப்ரசமனம் முதலியவைகளைப்பற்றி முதலில் சொல்லப்பட்ட தால், அதேவிதமாக இங்கும் ரோக ப்ரசமனம் முதலான நான்கு விதமான பலன்களைக் கொடுக்கும் காம்ய ப்ரயோகத் தைப்பற்றி முதலில் சொல்லுகிறார்:—

पौर्णमास्यां चन्द्रबिम्बे ध्यात्वा श्रीललिताम्बिकाम् ।
पञ्चोपचारैः संपूज्य पठेन्नामसहस्रकम् ।

பௌர்ணமாஸ்யாம் சந்த்ரபிம்பே த்யாத்வா ஸ்ரீலலிதாம்பிகாம் l
பஞ்சோபசாரை: ஸம்பூஜ்ய படேன் நாம ஸஹஸ்ரகம் II (22)

பௌர்ணமாஸ்யையில் சந்த்ரபிம்பத்தில் ஸ்ரீலலிதாம் பிகையை த்யானம்செய்து, பஞ்சோபசாரங்களால் பூஜித்து, இந்த நாமஸஹஸ்ரத்தைச் சொல்ல வேண்டும்.

1. பௌர்ணமாஸ்யா என்பது 'கர்சாத்ருஷ்டா' என்ற அனுவாகத்தில் சொல்லப்பட்டபடி சுக்லபக்ஷத்திய கடைசி ராத்ரியைக் குறிக்கும். ஆகையால் இந்த ப்ரயோகம் ராத்ரி யில் வ்யாபித்திருக்கும் பௌர்ணமாஸ்யை திதியில் செய்ய வேண்டியது என்று சொல்லுகிறது.

'கர்மதிஜ யன்ய யः காலः தத்கால வ்யாபிநீ திதிः ।'

இந்த ப்ரயோகம் செய்யவேண்டிய காலத்தின் நிர்ணயத் தைப்பற்றி அதிகம் தெரிய விரும்புவோர்கள் பாஷ்யத்தின் மூலத்தைப் பார்த்துத் தெரிந்துகொள்ளவும்.

2. சந்த்ரபிம்பம் என்று இங்கு சொல்லப்பட்டது-சந்த்ர னுடைய பூர்ணமான மண்டலம். அப்போது அதில் வளர்வு,

குறைவு, இல்லையில்லாமல் எப்போதுமிருப்பதும் ஸ்ரீத்ரிபுர ஸுந்தரீ ரூபமானதுமான ஸாதக னென்ற கலையானது இருப்பதாகச் சொல்லப்படுகிறது. பாக்கியான பதினைந்து கலைகளும் வளர்வு, குறைவுகளுடையவை. அவை காலோசக்ரீ முதலாகவுள்ள திதி நித்யா தேவதைகள் பதினைந்து பேருடைய ஸ்வரூபமாயிருப்பவை.

'தர்சாத்யா: பூர்ணிமாந்தாச்ச கலா: பஞ்சதசைவ து |
ஷோடசீ து கலா ஜ்ஞேயா ஸச்சிதானந்தரூபிணீ ||'

ஆகவே, அந்தக் கலைகளெல்லாம் பரிபூர்ணமாயிருக்கும்போது சுந்தரமண்டலத்தில் ஷோடசி நித்யைகளும், அவர்களுடைய நிரவதி ரூபமான தேவதைகளான அணிமாதிகளும், ஒருங்கே சேர்ந்திருப்பதால் அதுவே ப்ரத்யகத்மமான ஸ்ரீசக்ரமாக இருக்கிறது. இதனால்தான் அம்பாளுக்கு 'சந்த்ரமண்டல மத்யகா' என்பது முதலான பெயர்கள் உண்டு.

3. சாலக்ராமம், பாணம் முதலியவைகளில் மூன்றுமே விஷ்ணுவும், சிவனும் அத்யந்தமாகவும், இடைவிடாமலும் ஸான்னித்யத்தோடிருப்பதால் அவற்றில் அவர்களை ஆவாஹனம் செய்யவேண்டியது அவசியமில்லை. அதேமாதிரி, மேலே சொல்லப்பட்டபடி த்ரிபுரஸுந்தரியானவள் சந்த்ரமண்டலத்தில் எக்காலமும் ஸான்னித்யத்தோடிருப்பதால், ஆவாஹனமும் அதற்கான மந்த்ரங்களும் செய்யத் தேவை

4. 'த்யாத்வா ஸ்ரீலலிதாம்பிகாம்' — ஸ்ரீலலிதாம்பிகையை ஏற்கனவே சொல்லப்பட்ட ஆயிரம் விசேஷணங்களோடும், அவளை தேவதைகளோடும், லோகாதீதமாயும் இருப்பதாக த்யானம்செய்து என்ற அர்த்தம். [லலிதாம்பிகா என்றபதமே கடைசி சொல்லப்பட்டதால், பாதம் முதலானவைகளில் அந்தப்பதத்திற்குச் சொல்லப்பட்ட அர்த்தங்களை அனுஸரித்து த்யானம் செய்யவேண்டும்.]

5. பஞ்சோபசாரம் என்பது கந்த, புஷ்ப, தூப, தீப, நைவேத்யங்களான ஐந்து உபசாரங்கள்.

6. 'ஸம்பூஜ்ய' என்பதினால்,

'தத் யோநிமும் யோநிகளை, யோநிகளை யோநிமும்,
தத் த்வமேவ த்வமேவ தத் |'

எண்டது முதலான ச்ருதிவாக்யங்களில் சொல்லப்பட்டபடி, தானும் தான் உபாஸிக்கும் தேவதையும் ஐக்யமாக இருப்பதாகப் பாவனை செய்து தூஜிப்பது சொல்லப்பட்டது. இவ்விதமான ஐக்ய பாவனை செய்து தூஜிப்பதே உபசாரங்களைவிட ச்ரேஷ்டமானது. அந்தப் பூஜைக்கு இந்த உபசாரங்களெல்லாம் அங்கங்களாகையால், சொல்லப்படாத மற்ற எல்லாம் அங்கியாகிய ஐக்ய பாவனையோடு கூடிய பூஜைக்குத்தான்,

'அச்வமேத ஸஹஸ்ராணி வாஜபேய சதானி ச |
லலிதா பூஜநஸ்யைதே லக்ஷாம்சோநாபி நோ ஸமா: ||
ஸ தாதா ஸ முனிர்யஷ்டா ஸ தபஸ்வீ ஸ தீர்த்தக: |
ய: ஸதா பூஜயேத் தேவீம் கந்தபுஷ்பாக்ஷதைர்நர:||'

இதனால்தான் 'கந்த புஷ்பாக்ஷத நைவேத்யை:', 'டுந்தோபசாரை:' என்று (அனைகளால், அனைகளைக்கொண்டு என்று) சொல்லப்பட்டது.

7. உபசாரங்களுக்கே பலனிருப்பதாக சில வாக்யங்கள் காணப்படுகின்றன.

கந்தாக்ஷதைர்நைவேத்யம் க்ருத்வா ஜ்யோதிஷ்டோமபலம் லபேத் |'
'சந்தநாக்ருக்கர்ப்பூரை: ஸுகந்த புஷ்பை: ஸகுங்குமை: |
ஆனீப்ய லலிதாம் லோகே கல்பகோடிம் வஸேத் நர: ||'

இவையெல்லாம் அங்கியான பூஜையின் ப்ரசம்ஸையையே சொல்லுவன. அர்த்தவாதங்களாகவும், அல்லது ஓரோர் விசேஷ பலனைக்கொடுப்பதாக ஓரோர் உபசாரமான அந்தத்தைப் பற்றிச் சொல்லி அதைத அங்காரமாக உடைய பூஜையின் மஹிமையைச் சொல்லுவன் வாக்யங்களென தணிர வேறல்ல. அனைவருக்கு விசேஷ பலன் சொல்லப்பட்டால் பூஜையின்போது செய்யப்படாதிர் அங்கங்களாயிருக்குமபோது தான் அவற்றிற்கு அல்பமித பலன் உண்டு. தனியாகச் செய்தால் ஏற்படாது.

8. அல்லது,

'அந்தர்யாக பஹிர்யாகௌ க்ருத்வா ஸர்வதாசரேத் |'

என்று பூஜையானது அந்தர்யாகம், பஹிர்யாகம் என்ற இருவிதமானதென்று சொல்லப்படுவதில் ஐக்ய பாவனையே அந்தர்யாகமென்றும் சொல்லப்படும். பஹிர்யாகம் (பாஹ்ய பூஜை) என்பது கந்த புஷ்பாதிகளை நிவேதனம் செய்வது என்பதான பாவனை வங்கல்படும். அல்லித நிவேதனத்திற்கு அனை கரமயாங்களாயிருந்தால் புஷ்பாதிகள் அங்கங்களாயிருக்கின்றன.

'த்யாத்வா' என்பதற்கு பிறகு கடைசியில் 'படேத்' என்று வருவதால் அவ்விதமாக செய்யப்பட்ட த்யானம் செய்து கொண்டே படனமும் செய்யவேண்டுமென்று தாத்பர்யம்.

सर्वे रोगाः प्रणश्यन्ति दीर्घमायुश्च विन्दति ।
अयमायुष्करो नाम प्रयोगः कल्पनोदितः ॥

ஸர்வே ரோகாः ப்ரணச்யந்தி தீர்க்கமாயுச்ச விந்ததி ।
அயமாயுஷ்கரோ நாம ப்ரயோகः கல்பநோதிதः ॥ (23)

(அதிலுல்) ஸகல ரோகங்களும் நசித்துப்போகின்றன. தீர்க்கமான ஆயுளும் பெறுவான். 'ஆயுஷ்கரம்' என்று பெயருடைய இந்த ப்ரயோகமானது கல்பஸூத்ரங்களில் சொல்லப்பட்டிருக்கிறது.

1. 'ப்ரணச்யந்தி' என்பதிலுல் ரோகங்கள் எற்பட்டிருந்தால் நசித்துப்போவதும் தவிர, ரோகங்களே எற்படாமலிருக்கச்செய்வதும் குறிப்பிடப்பட்டது.

2. 'தீர்காயுஷ்யம்' என்பது உடம்புக்கு, காலப்புக்கு இவ்விரண்டும் எற்படாமல் தீர்க்கமான ஆயுள் என்று அர்த்தம்.

3. 'தீர்க்காயுः' என்பதற்குப் பிறகு வரும் 'ச' என்பதிலுல் ஸகலவிதமான ஸம்பத்துகளும் சேர்த்துச் சொல்லப்பட்டன.

4. ஆகவே, ரோகங்கள் நீங்கப்பெற்று, ஸகல ஸம்பத்துக்களுடன் கூடிய சிரஞ்ஜீவித்வம் (சிரஞ்ஜீவியாயிருப்பது) என்பது இந்தப்ரயோகத்தில் உத்தேசித்துச்செய்யப்படுவதாகவும், அதனால் கிடைப்பதுமான ப்ரயோஜனமாகவுமாகிறது. ரோஜிகளுக்கு இதைச் செய்வதில் அதிகாரமிருப்பதுபோல், ரோகமில்லாதவர்களும் தங்களுக்கு ரோகங்களே எற்படாமலிருப்பதற்காக இந்தப்ரயோகத்தைச் செய்வதற்கு அதிகாரமுண்டென்றும் எற்படுகிறது.

5. ஸங்கல்பம் முதலியவைகளில் இந்த ப்ரயோகத்தை எப்படிச் சொல்வதென்பதற்காக இதன் பெயர் 'ஆயுஷ்கரம்' என்று சொல்லப்பட்டது. 'ஆயுஷ்கரோ நாம' என்பதிலுல் அது அந்தப் பெயரால் குறிக்கப்படுவதுடன், அந்தப் பெயரோடு ப்ரஸித்தமாக இருப்பதும் சொல்லப்பட்டது.

6. 'கல்பநோதிதः'—கல்பத்தில் (கல்பஸூத்ரத்தில், அதாவது பரசுராம கல்பஸூத்ரத்தில்) கோடிகாட்டப்

பட்டது என்று அர்த்தம். வெவ்வேறு சாகைகளில் சொல்லப் பட்ட க்ரியைகளின் அங்கங்களெல்லாம் ஒன்று சேர்த்து ப்ரகல்பித்து யோகவித்திகளாகக் கல்பித்துச்சொல்வதினால் கல்ப ஸூத்ரங்கள் என்று பெயர். ஆகையால் அவற்றில் (நித்யார்ச் சனம் முதலான சில ப்ரயோகங்கள் மட்டும் சொல்லப்பட்டு) இந்த ப்ரயோகம் ஸ்பஷ்டமாகச் சொல்லப்படாவிட்டாலும் அவற்றில் கோடி காட்டப்பட்டிருப்பதாக தாத்பர்யம்.

7. அல்லது, கல்பஸூத்ரங்களுக்கு ஸமமான தந்த்ரங் களில் வெகு ஸ்பஷ்டமாகச் சொல்லப்பட்டிருக்கிறது என்றும் சொல்லலாம்.

8. அல்லது, பாவ்யம் (கிடைக்கவேண்டியது), கரணம் (அதற்கு ஸாதனமாயிருப்பது) இவைகளின் கல்பனையினால்— அதாவது, கார்ய, காரண பாவங்களைப்பற்றிய கல்பனையினால் —ஏற்படுத்தப்பட்டது என்றும் சொல்லலாம்.

9. அல்லது, கல்பத்திலும் (அதாவது, ப்ரளயகாலத் திலும்) கூடச் செய்யவேண்டுமென்று சொல்லப்பட்டது என் றும் அர்த்தம் சொல்லலாம். ப்ரளயத்திற்கு முந்திய காலத் திலிருந்த ஸாதகர்கள் வரப்போகும் ப்ரளயத்தில் ஏற்படக் கூடிய மரணத்தைத் தடுத்து தீர்க்காயுஸை அடையவேண்டு மென்ற எண்ணத்துடன் இந்த ப்ரயோகத்தைச் செய்தார்களா னால், அதினின்றும் ரக்ஷிக்கப்படுவார்களென்றும் தாத்பர்யம்.

10. இந்த ப்ரயோகத்தை இன்னவிதமாகச் செய்வது என்பது பாவ்யத்தின் மூலத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. இதை கர்த்தாவே உத்தேசித்தும் செய்யலாம், பிறருக்காகவும் செய்யலாம். தேவையுள்ள ஆவ்ருத்திகள் செய்யலாம். இதி லும் மற்ற ப்ரயோகங்கள் செய்வதிலும் கவனிக்கவேண்டிய முக்யமான விஷயம் என்னவென்றால்—நித்யகர்மாக்களைச் செய்கிறவர்கள்தான் நைமித்திகமான கர்மாக்களைச் செய்ய லாம். இரண்டையும் செய்கிறவர்கள்தான் இம்மாதிரியான காம்ய கர்மாக்களைச் செய்ய அதிகாரமுடையவர்கள். இது இதர தந்த்ரங்களிலிருந்து ஏற்பட்ட லிங்கமாகையால் மறந்துவிடக் கூடாது.

இவ்விதம் ஆதியில் சொல்லப்பட்டது,

'ஸர்வரோக ப்ரசமநம் ஸர்வஸம்பத் ப்ரவர்த்தநம் |
ஸர்வாபம்ருத்யு சமநம் காலம்ருத்யு நிவாரணம் ॥'

என்ற ரோஹி விசேஷமாகக்கூறப்பட்டிருக்கிறது. இந்த ப்ரயோகத்தைச் சொல்லிவிட்டு, அடுத்தாற்போல் சொல்லப்பட்ட ஸர்வ ஜ்வர நாசன ப்ரயோகத்தை மேலே

ज्वरार्तं शिरसि स्पृष्ट्वा पठेन्नामसहस्रकम् ।
तत्क्षणात्प्रशमं याति शिरस्तोदो ज्वरोऽपिच ॥

ஜ்வரார்த்தம் சிரஸி ஸ்ப்ருஷ்ட்வா படேத் நாம ஸஹஸ்ரகம்।
தத்க்ஷணாத் ப்ரசமம்யாதி சிரஸ்தோதோ ஜ்வரோபி ச ॥ (24)

ஜ்வரத்தினால் பீடிக்கப்பட்டவனுடைய தலையில் கையை வைத்துக்கொண்டு இந்த ஸஹஸ்ரநாமத்தைச் சொன்னால், அந்த க்ஷணத்திலேயே ஜ்வரமும் (அதனுடைய தலைவலியும் போய்விடும்.

1. சிரஸ்தோதம் (தலைவலி) என்பதினால் ஜ்வரத்தினால் ஏற்பட்ட ஸகல விதமான துன்பங்களும் குறிக்கப்பட்டன.

2. இதின் ப்ரயோகமும் பாஷ்யத்தின் மூலத்தில் சொல்லப்படாததால் கவையுள்ளவர்கள் அங்கு பார்த்துக் கொள்ளவும்.

3. தூர்வாகத்தைச் சொல்லிய பிறகு, காகங்களடங்கிய பாகத்தைச் சொல்லுகையில் தன் வலதுகையை ஜ்வரத்தோடிருப்பவனுடைய சிரஸின்மேல் வைத்துக்கொண்டு சொல்லிவிட்டு, பிறகு கையை எடுத்துவிட்டு பலிப்பிரதிபாகத்தைச் சொல்லவேண்டும். தனக்கே ஜ்வரமாயிருந்தால் தன் கையையே தன் சிரஸின்மேல் வைத்துக்கொள்ளவேண்டும். வைத்ர தாயத்தின்படிக்கும், ப்ரம்ஹ வைவர்த்த சாம்பத்தில் "ஆம் ருத்ராயக்ருத டேதசாத்" என்ற அதிகரணத்தில் சொல்லப்பட்டபடிக்கும், பலன் வற்படும் வரையில் ஆவ்ருத்தி செய்யவேண்டும். அப்போதது, சிரஸில் கையை வைத்துக்கொண்டு காகங்களடங்கிய பாகத்தை வேண்டிய அளவு ஆவ்ருத்திகள் செய்யவேண்டும். இதேபோதிரி இனி சொல்லப்படும் ப்ரயோகங்களிலும் ஆவ்ருத்திகள் செய்ய வேண்டியிருந்தால் செய்யவேண்டும்.

இதற்குமேல், பொதுவாக ஜ்வரம் முதலான வ்யாதிகள் தீருவதற்காகச் செய்யவேண்டிய ப்ரயோகத்தைப்பற்றிச் சொல்லுகிறார்:—

सर्वव्याधिनिवृत्त्यर्थं स्पृष्ट्वा भस्म जपेदिदम् ।
तद्भस्मधारणादेव नश्यन्ति व्याधयः क्षणात् ॥

ஸர்வ வ்யாதி நிவ்ருத்யர்த்தம் ஸ்ப்ருஷ்ட்வா பஸ்ம
ஜபேதிதம் ।
தத் பஸ்ம தாரணாதேவ நச்யந்தி வ்யாதயः க்ஷணாத் ॥ (25)

ஸகல வ்யாதிகளையும் போக்கடிப்பதற்காக விபூதியைத் தொட்டுக்கொண்டு இந்த (இந்த நாமஸஹஸ்ரத்தை) ஜபிக்கவேண்டும். அந்த பஸ்மத்தைத் தரித்திருப்பதினாலேயே வ்யாதிகளெல்லாம் ஒரு க்ஷணத்தில் போய்விடு

1. 'ஸர்வ வ்யாதி' என்றால் எல்லா வ்யாதிகள், அதாவது, (தான் உண்டாக) எல்லாராலுண்டாகிய வ்யாதிகள் என்று அர்த்தம் சொல்லலாம்.

2. 'ஸ்ப்ருஷ்ட்வா'—முந்திய ப்ரயோகத்திற்குச் சொன்ன படி காலங்களடங்கிய பாகத்தைச் சொல்லுமபோதெல்லாம் விபூதியைத் தொட்டுக்கொண்டிருக்கவேண்டும்.

3. தாரணம் என்றால் உத்தாரணம், தெளித்துக்கொள்வது, தரித்துக்கொள்வது.

இனி, ஏற்கனவே அடுத்தடுத்தபோகச் சொல்லப்பட்ட "தீர்க்காயுஷ்ய ப்ரதாயகம்" என்பதான ப்ரயோகத்தைப்பற்றிச் சொல்லுகையில் துஷ்ட க்ரஹங்களுடைய உபத்ரவத்தை நீக்குவதற்கான ப்ரயோகத்தை முதலில் சொல்லிவிட்டுப் பிறகு விஷங்களோடு போக்குவதற்கான ப்ரயோகத்தைச் சொல்லுகிறார்:—

जलं संमन्त्र्य कुम्भस्थं नामसाहस्रतो मुने ।
अभिषिञ्चेद्ग्रहग्रस्तान्यद्वा नश्यन्ति तत्क्षणात् ॥

ஜலம் ஸம்மந்த்ர்ய கும்பஸ்தம் நாமஸாஹஸ்ரதோ முநே!
அபிஷிஞ்சேத் க்ரஹ க்ரஸ்தாந் க்ரஹா நச்யந்தி தத்
க்ஷணாத் ॥ (26)

குடத்திலிருக்கும் ஜலத்தை இந்த நாமஸஹஸ்ரத்தினால் மந்த்ரிதமாகச் செய்து, ஹே முனே! க்ரஹங்களினால் பீடிக்கப்பட்டவர்கள்மீது (அதை) அபிஷேகம் செய்ய

வேண்டும். அந்த சுந்தரி மனைடந்துவிடும்.

1. மூந்திய ப்ரயோகத்தில் சொல்லிய மாதிரி, கும்பத்தின் முகத்தில் (வாயின்மேல்) கையபலைத்துக்கொண்டு நாமங்களடங்கிய பாகத்தைச் சொல்லவேண்டும்.

2. க்ரஹங்கள் என்பது பால க்ரஹங்கள் பூதலியனவை, பிசாசங்கள், துஷ்ட (கெடுதலான) ஸ்தானங்களிலிருக்கும் நவக்ரஹங்கள் என்று அர்த்தம். அவைகளால் க்ரஸ்தராயிருப்பவர்களென்றால் அவைகளால் ஏற்படும் பீடையினால் ப்ராணனே விடும்படியான தசையில் இருப்பவர்கள்.

सुधासागरमध्यस्थां ध्यात्वा श्रीललिताम्बिकाम् ।
यः पठेन्नामसाहस्रं विषं तस्य विनश्यति ॥

ஸுதா ஸாகர மத்யஸ்த்தாம் த்யாத்வா ஸ்ரீலலிதாம்பிகாம் ।
யः படேன் நாமஸாஹஸ்ரம் விஷம் தஸ்ய விநச்யதி ॥ (27)

ஸ்ரீலலிதாம்பிகையை [illegible] நடுவில் ரூப்பவளாக த்யானித்து எவனொருவன் இந்த நாம ஸஹஸ்ரத்தைக் கீர்த்தனம் செய்கிறானே, அவனுடைய (அவனைப் பீடிக்கும்) விஷமானது நாசமடைகிறது.

1. ஸ்ரீபுரம் எங்கெங்கு இருக்கிறதோ அங்கங்கு ஒரு ஸுதாஸாகரம் (அம்ருத ஸமுத்ரம்) இருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஸகுண ப்ரம்மோபாஸனை செய்தவர்கள் அடைவதாகச் சொல்லப்படும் ஆபரணத்தின்மென்ற நகரத்தில் ஆரமென்றும் ண்யமென்றும் இரண்டு ஸமுத்ரங்களிருப்பதாக சொல்லப்பட்டிருக்கிறது. ப்ரம்மோபாஸனத்தினால் என்ற இருக்கிறது. அவற்றின் நடுவில் அம்பாளுடைய ஸ்ரீபுரமிருப்பதால் அவரவர்கள் அதிகாரியாயிருப்பதற்குத் தக்கவாறு இருக்கும் ஸுதாஸாகரத்தின் நடுவில் அம்பாளிருப்பதாக த்யானம்செய்து மனதால் அர்ச்சித்து (அந்த த்யானத்துடன்) இந்த ப்ரயோகத்தைச் செய்யவேண்டும்.

2. விஷம் என்பது ஸ்தாவர ஜங்கமங்களால் ஏற்படுவதும், ஜங்கம ப்ராணிகளால் ஏற்படுவதுமான இருவகையான விஷங்களையும் குறிக்கும்.

3. இந்த ப்ரயோகமானது ஸாதாரணமாக பலனில்லாதிருக்கமாட்டாது.

இதற்குமேல், முன்பு அடுத்தபடியாகச் சொல்லப்பட்ட 'புத்ரப்ராதம் அபுத்ராணம்' என்பதான ப்ரயோகத்தைப் பற்றிச் சொல்லுகிறார்:—

वन्ध्यानां पुत्रलाभाय नामसाहस्रमन्त्रितम् ।
नवनीतं प्रदद्यात्तु पुत्रलाभो भवेद्ध्रुवम् ॥

வந்த்யாநாம் புத்ரலாபாய நாமஸாஹஸ்ர மந்த்ரிதம் |
நவநீதம் ப்ரதத்யாத் து புத்ரலாபோ பவேத் த்ருவம் 11(28)

மலடியாயிருப்பவர்களுக்கு (பிள்ளை இல்லாதவர்களுக்கு) பிள்ளை கிடைப்பதற்காக இந்த நாமஸ்ராஸ்ரத்தால் மந்த்ரிதமான வெண்ணெயைக் கொடுத்தால் கட்டாயம் புத்ரலாபம் ஏற்படும்.

1. வந்த்யா என்ற பதமானது குழந்தையே பெறாதவள், குழந்தைபெற்று இழந்தவள். பெண் குழந்தையையே பெறுகிறவள், ஒரே பிள்ளையைப் பெற்றவள் (அப்ரஜா, ம்ருதப்ரஜா, ஸ்த்ரீ ப்ரஜா, காகவந்த்யா) என்ற நான்குவிதமான மலடிகளையும் குறிக்கும்.

2. 'புத்ர லாபாய' என்றால் பொதுவாகக் குழந்தை உண்டாவதற்காக என்ற அர்த்தமே தவிர, பிள்ளைக் குழந்தை கிடைப்பதற்காக என்ற மட்டும் அர்த்தமில்லை. ஆகவே பெண்குழந்தையை விரும்புகிறவர்களுக்கும் இந்த ப்ரயோகத்தில் அதிகாரமுண்டு.

3. மந்த்ரிதமான வெண்ணெயை வந்த்யையிடம் கொடுப்பதென்பதால் அப்படிக் கொடுத்ததை அவள் சாப்பிடவேண்டுமென்பது சொல்லப்பட்டது.

4. வந்த்யையாயிருப்பவள் உடம்பிலுள்ளவளாதலால் அவளே இதில் சொல்லியபடி வெண்ணெயை மந்த்ரித்துச் சாப்பிடலாம்.

5. 'புத்ரலாபோ பவேத் த்ருவம்' என்பதிலுள்ள பிள்ளை, பெண் என்ற இருவிதமான ஸந்தானலாபத்தும் நிச்சயமாக ஏற்படும் என்று சொல்லப்பட்டது.

இனிவரும் முப்பத்தைந்து ச்லோகங்களில், மேலே அடுத்தபடியாகச் சொல்லப்பட்ட 'புருஷார்த்த ப்ரதாயகம்' என்ற ப்ரயோகத்தைச் சொல்லுகிறார். அதில், முதல் மூன்று

வாக்கமென்று) சொல்லப்படும் தர்ம, அர்த்த, காமங்களில் காமமென்பது கடைசியாக இருந்தாலும், தற்போது (இதின் மூன்றிய ச்லோகத்தில்) புத்ர ப்ரதமான ப்ரயோகத்தைப் பற்றிச் சொல்லப்பட்டிருப்பதாலும் அது ஸ்த்ரீயின் மூலமாகத் தான் ஏற்படக் கூடியதாகையாலும், அதற்காற்போல் ஸ்த்ரீ வச்யத்தைப்பற்றிய ப்ரயோகத்தைச் சொல்லுகிறார்.

देव्याः पाशेन संबद्धामाकृष्टामङ्कुशेन च ।
ध्यात्वाभीष्टां स्त्रियं रात्रौ पठेन्नामसहस्रकम् ॥

தேவ்யாः பாசேந ஸம்பத்தாம் ஆக்ருஷ்டாம் அங்குசேந ச।
த்யாத்வாபீஷ்டாம் ஸ்த்ரியம் ராத்ரௌ படேத்
நாமஸஹஸ்ரகம் ॥ (29)

இரவில் (ஸாதகனானவன்) தனக்கு இஷ்டப்பட்ட ஸ்த்ரீயை தேவியினுடைய பாசத்தினால் கட்டப்பட்டவளாகவும், (தேவியினுடைய) அங்குசத்தினால் இழுக்கப்பட்டவளாகவும் த்யானித்து இந்த நாமஸஹஸ்ரத்தைக் கீர்த்தனம் செய்யவேண்டும்.

1. அதாவது, தான் விரும்பும் ஸ்த்ரீயை அம்பாள் தன்னுடைய பாசத்தினால் கட்டி அங்குசத்தினால் இழுப்பதாக (அம்பாள்) த்யானம் செய்துகொண்டு நாமஸஹஸ்ரத்தைச் சொல்லவேண்டுமென்று தாத்பர்யம். மந்த்ரத்தை ஜபிக்கும் போது அதினுடைய தேவதையை த்யானிப்பதுதான் அவச்யமானதாகையால் இங்கு சொல்லப்பட்ட 'த்யாத்வா' என்றது பதமானது அம்பாளைப்பற்றியதே தவிர அபீஷ்டமான ஸ்த்ரீயைப்பற்றியதல்ல.

2. 'ராத்ரௌ'—ராத்ரி முழுவதும், 'படேத்'—ஆவ்ருத்தி செய்யவேண்டும். அப்படி இரவு முழுவதும் நாமஸஹஸ்ரத்தைத் திரும்பத் திரும்பக் கீர்த்தனம் செய்துகொண்டிருந்தால் ஏற்படும் பலன் என்னவென்றால்,

आयाति स्वसमीपं सा यद्यप्यन्तःपुरं गता ।
ஆயாதி ஸ்வஸமீபம் ஸா யத்யப்யந்தःபுரம் கதா । (30)

(அப்போது) அந்த ஸ்த்ரீயானவள் அந்தःபுரத்தினிலிருந்தபோதிலும் தன்னுடைய (உபாஸகனுடைய) ஸமீபம் வருவாள்.

அர்த்தபுரம் என்பது வேறு புருஷர்கள் போகக் கூடாத (ராஜக்குலத்திலிருக்கும்) இடம். அப்பேர்ப்பட்ட இடத்தில் அர்த்த ஸ்த்ரீ இருந்தாலும் இந்த ப்ரயோகத்தினல் ஆகர்ஷணம் பண்ணப்பட்டு (இழுக்கப்பட்டு) உபாஸகனிடம் வந்து சேருவாள் என்று சொல்லப்பட்டது.

இனிமேல், த்ரிவர்க்கத்தில் காமத்திற்கு அடுத்தாற்போல் மூன்றியதான அர்த்தபுருஷார்த்தைக் கொடுக்கும் ப்ரயோகங்களை எடுத்துச்சொல்ல ஆரம்பித்து, அவற்றில் முக்யமானதான ராஜாகர்ஷணாதான (ராஜாவை வச்யப்படுத்தும்) ப்ரயோகத்தைத் அடுத்தாற்போல் சொல்லுகிறார்:—

राजाकर्षणकामश्चेद्राजावसथदिङ्मुखः ।
त्रिरात्रं यः पठेदेतच्छ्रीदेवीध्यानतत्परः ॥
ராஜா கர்ஷண காமச்சேத் ராஜாவஸததிங்முக: ॥
த்ரிராத்ரம் ய: படேத் ஏதத் ஸ்ரீதேவீ த்யான தத்பர: | (31)

ராஜாவை ஆகர்ஷணம் (தன்னிடம் இழுத்து வச்யப்படுத்துவதை) செய்ய விரும்பினல், அந்த ராஜா இருக்குமிடத்தின் திக்கைநோக்கி ஸ்ரீதேவியின் த்யானத்தில் ஈடுபட்டு, மூன்று ராத்ரி இதை எவனாவது ஜபித்தனம் செய்வானேயாகில்,

स राजा पारवश्येन तुरंगं वा मतङ्गजम् ।
आरुह्य याति निकटं दासवत्प्रणिपत्य च ।
तस्मै राज्यं च कोशं च दद्यादेव वशंगतः ॥
ஸ ராஜா பாரவச்யேந துரங்கம் வா மதங்கஜம் ॥
ஆருஹ்ய யாதி நிகடம் தாஸவத் ப்ரணிபத்ய ச |
தஸ்மை ராஜ்யம் ச கோசம் ச தத்யாதேவ ந ஸம்சய: ॥(32)

அந்த ராஜா இவனுக்கு வசப்பட்டு குதிரையையோ, யானையையோ ஏறிக்கொண்டு அருகில்வந்து தாஸன்போல் வணங்கித் தன்னுடைய ராஜ்யத்தையும், பொக்கிஷத்தையும் கொடுத்தே தீருவான். அதில் ஸந்தேஹமேயில்லை.

1. 'ராஜாகர்ஷண காமச்சேத்' என்பதினல் ராஜாவை தன் வசப்படுத்த வேண்டுமென்ற விருப்பமுடையவன் தான்

இந்த ப்ரயோகத்தைச் செய்யலாமென்று சொல்லப்பட்டது. இதன் பிறகு மேலே சொல்லப்போகும் ஆறு ப்ரயோகங்களோவென்றால் அந்தந்த பலனை உத்தேசித்துச் செய்தால் ஸித்தியைக்கொடுப்பதும் தவிர, உத்தேசமில்லாமல் செய்தாலும் ஸித்தியைக் கொடுப்பவைகளாக இருக்கின்றன.

2. 'ராஜ வஸத திங்முக:'—தானிருக்குமிடத்திலிருந்து ராஜா இருக்குமிடம் எந்த திக்கிலிருக்கிறதோ அந்தப் பக்கமாகத் திரும்பிக்கொண்டு என்று அர்த்தம்.

3. 'த்ரிராத்ரம்'—மூன்று நாள் இடைவிடாமல் அஹோராத்ராமாக (பகல் இரவு எல்லாம்) என்று அர்த்தம். இதிலிருந்து, நித்யகர்மாவை சுருக்கிக்கொண்டு, லௌகிக கர்மாவையும் அவச்யமான அளவுமட்டும் செய்துகொண்டு, இடைவிடாமல் இந்த நாமகீர்த்தனத்தை இருபத்திநாலு யாம நேரமும் செய்யவேண்டுமென்பது சொல்லப்பட்டது. அதிலும்தான், இத்தனை அவ்ருத்தி நாமகீர்த்தனம் செய்யவேண்டுமென்பது சொல்லப்படவில்லை.

4. 'பூதேவீ த்யாந தத்பர:'—தன்னைப்படைத்த விரும்பியராஜாவை அம்பாள் தன்னுடைய பாசத்திலல் கட்டி அங்குசத்திலல் இழுப்பதாக (அம்பாளை) த்யானம் செய்வதில் ஈடுபட்டு நாமகீர்த்தனத்தைச் செய்யவேண்டுமென்று சொல்லப்பட்டது.

5. இதற்கும் இதற்கு முந்திச் சொல்லப்பட்ட ஸ்த்ரீ வச்யகர ப்ரயோகத்திற்கும் இரண்டு வித்யாஸங்களுண்டு. அதில் நாலு யாமங்களடங்கிய ஒரு ராத்ரி மட்டும் த்யான காலமாகச் சொல்லப்பட்டது. மேலும் கிழக்கு அல்லது வடக்கு முகமாகத் திரும்பி உட்கார்ந்துகொண்டு சீக்கிரம் செய்வது என்பது இவ்விடத்தைப் பொருத்தமாக இருக்கிறது. ராஜாகர்ஷண ப்ரயோகத்திலோவென்றால், மூன்று நாள் அஹோராத்ரம் செய்யவேண்டுமென்பதும், ராஜா இருக்குமிடத்தை நோக்கி உட்கார்ந்துகொண்டு நாமகீர்த்தனம் செய்யவேண்டுமென்பதும் விசேஷமான நியமங்கள். ஆகையால், வாஸ்தவத்தில், நாமகீர்த்தனம் எவ்வளவு காலம் செய்யவேண்டுமென்பதைப்பற்றித்தான் இந்த இரண்டு ப்ரயோகங்களுக்கும் வித்யாஸம். ஆகர்ஷணம் பண்ணவேண்டியவர்கள்

இருக்குமிடத்தை நோக்கியே தான் ஆகர்ஷண ப்ரயோகத்தை செய்யவேண்டுமென்பது இதர தந்த்ரங்களிலிருந்து வேற்படுகிறது. ஆகையினால்தான், ஸ்த்ரீ வச்யத்தை உத்தேசித்துச் செய்யப்படும் ப்ரயோகத்தின் போதும், வசப்படுத்தவேண்டிய ஸ்த்ரீயானவள் இருக்குமிடத்தை நோக்கிக்கொண்டே நாடம் கீர்த்தனத்தைச் செய்யவேண்டுமென்பதும் அவற்றில் சொல்லப்பட்டிருக்கிறது. யாமகேச்வர தந்த்ரத்தில்,

'ததாகர்ஷபிமுகோ பூத்வா த்ரிபுரிக்ருத விக்ரஹ: |
பத்வா து கேஹபிணீ முத்ராம் வித்யாம் அஷ்டசதம் ஜபேத் ||

என்று ஆரம்பித்து,

'ப்ரமந்தீம் பாவயேத் காமீம் யோஜநாநாம் சதைரபி |'

என்று சொல்லப்பட்டிருக்கிறது. நித்யா தந்த்ரத்திலும் குருஸ்வரூபடலத்தில்,

'வித்யாம் த்ரயோ தசார்ணம் து தத்தக் வக்த்ரஸ்த்ரிபீர்தைர
ஸ்த்ரிய மாகர்ஷயேத்.....||'

என்றும், நாணர்ணவத்தில்,

'ததாகர்ஷபிமுகோ பூத்வா ஸ்வயம் தேவீ ஸ்வரூபக: |'

என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இதேமாதிரி தகஷிணாமூர்த்திஸம்ஹிதையிலும் வினைதருதலியவற்றிலும் சொல்லப்பட்டிருக்கிறது.

6. 'ஸ ராஜா'—உபாஸகன் எந்த ராஜாவை வசப்படுத்த உத்தேசித்திருக்கிறானோ அந்த ராஜா என்று அர்த்தம்.

7. 'தாரங்கர் வா ரதங்கஜம் ஆருஹ்ய'—என்பதினால் அந்த ராஜாவானவன் (மேலே சொல்லிய அபீஷ்டமான ஸ்த்ரீ வடிவுதான ரதி) ரதஸ்யமாக வராமல். வெளிப்படையாக குதிரை அல்லது யானையின் மேலேறி வந்து உபாஸகனை அடைந்து அவன் கட்டளைக்கு வசப்பட்டவனாக ஆகிறான் என்று சொல்லப்பட்டது.

இவ்விதமாக ஆகர்ஷணத்தைப்பற்றிய ப்ரயோகத்தைச் சொல்லிவிட்டு, அதைப்போன்ற வித்வேஷணம் முதலான கூட்டர்மாக்களைப்பற்றிய ப்ரயோகங்களைப்பற்றி இனி சொல்லுகிறார். இந்த கூட்டர்மாக்கள்,

'சாந்திர் வச்யம் ஸ்தம்பநம் ச வித்வேஷோச்சாட மாரணம் |'

என்பதாக சாடிலசிந்தாமணி முதலியவற்றில் சொல்லப்பட்டிருக்கிறது. அதாவது, ஸாந்தானம் செய்தல், வசப்படுத்த

தல், தடைசெய்தல், பலை ஏற்படுத்துதல், உச்சாடனம் (ஏவு தல், தூரத்துதல்) செய்தல், மரணம் உண்டாக்குதல், இவ் வாறான்ற வேறு கர்மாக்கள் சொல்லப்பட்டிருந்தாலும் அவை யெல்லாம் இவற்றில் அடங்குவதால் இந்த ஷட்கர் மாக்கள் தான் ப்ரதானமானவை.

'ஸர்வ சாந்திர் ஜயோ லாபோ நிச்ரேயஸ மிதமம் ததா ।
ஷட்கர்மாணி தமம்சத்வாத் அங்யேஷாம் அப்ருதக் ஸ்திதிः ।'
(தந்த்ர ராஜம்)

இந்த விஷயத்தைப்பற்றி அதிகம் தெரிந்துகொள்ள வேண்டுமானால் லலிதாத்ரிசதியின் இருபத்திமூன்றாவது தரங்கத்தில் பார்க்கவும்.

रहस्यनामसाहस्रं यः कीर्तयति नित्यशः ।
तन्मुखालोकमात्रेण मुह्येल्लोकत्रयं मुने ॥

ரஹஸ்யநாம ஸாஹஸ்ரம் யः கீர்த்தயதி நித்யசः ।
தன்முகாலோக மாத்ரேண முஹ்யேத் லோகத்ரயம் முநே ॥
(33)

இந்த ரஹஸ்யநாம ஸாஹஸ்ரத்தை எவனொருவன் தினம் தோறும் கீர்த்தனை செய்கிறானோ; அவனுடைய முகத் தைப் பார்த்தவுடனேயே மூன்று லோகங்களும் மயங்கி விடுகின்றன.

1. 'நித்யச:' தினந்தோறும், நித்யகர்மாவுக்கு விரோ தம் (இடஞ்சல்) இல்லாமல் என்று தாத்பர்யம். தனியாக, உயி ருள்ளவரையில், இடைவிடாமல் ப்ரதிதினமும் என்றும் சேர்த்துக்கொள்ளலாமென்றும்.

2. 'முகாலோக மாத்ரேண' — என்பதினால். பார்வை னத்தை உத்தேசித்து உபாஸகன் பாராயணம் செய்ய வேண்டுமென்பதில்லையென்றும், அவன் நித்யமும் பாராயணம் செய்துகொண்டிருப்பதால் மூன்று லோகத்தார் களும் அவன் முகத்தைப் பார்த்தமாத்ரத்திலேயே அவனுக்கு வசப்படுவார்கள் என்றும் சொல்லப்பட்டதாம். ஆகவே இந்த ப்ரயோகத்தில் பாராயணத்தைச் செய்வதற்குமுன்பு சொல் லப்படும் ஸங்கல்பத்தில் 'லோகத்ரய மோஹநார்த்தம்' என்று சொல்வது தேவையில்லை என்பதும் ஏற்படுகிறது.

இதற்குமேல், ஸ்வல்ப ப்ரயாஸையினல் (அதிக ச்ரமமில்லாமல்) செய்யக்கூடிய ப்ரயோகங்களைப்பற்றிச் சொல்ல ஆரம்பித்து, முதலில் ராமண ப்ரயோகத்தைச் சொல்லுகிறார் :-

यस्त्विदं नामसाहस्रं सकृत्पठति भक्तिमान् ।
तस्य ये शत्रवस्तेषां निहन्ता शरभेश्वरः ॥

யஸ்த்விதம் நாமஸாஹஸ்ரம் ஸக்ருத் படதி பக்திமாந் ।
தஸ்ய யே சத்ரவஸ்தேஷாம் நிஹந்தா சரபேச்வர :॥ (34)

எவனொருவன் இந்த நாமஸாஹஸ்ரத்தைப் பக்தியோடு ஒரு தடவை கீர்த்தனம் செய்கிறானோ, அவனுக்கு யார் சத்ருக்களோ அவர்களைச் சரபேச்வரர் என்பவர் நாசம் செய்கிறார்.

1. இதில் 'ஸக்ருத் படதி' என்பதுடன் 'நித்யச:' என்பதையும் சேர்த்துக்கொண்டு, தினந்தோறும் ஒரு தடவை என்று அர்த்தம் சொல்லவேண்டும்.

2. சரபேச்வரர் என்பவர் சிவனுடைய அவதாரங்களில் ஒருவர். தூர்வாஸ விஷ்ணுவானவர் நரஸிம்ஹ ரூபமெடுத்து ஹிரண்யகசிபுவை ஸம்ஹாரம் செய்தபிறகும் கோபம் தணியாமல் லோகங்களையே அழித்துவிடுகிறவர்போலிருந்தபோது, ப்ரதிஸிவனானவர் சரபரூபமெடுத்து நரஸிம்ஹத்தை அடக்கியதாக லிங்க புராணம், காளிகா புராணம் முதலியவைகளில் சொல்லப்பட்டிருக்கிறது. [நரஸிம்ஹமானது மனிதன், ஸிம்ஹம் இரண்டும் சேர்ந்த ரூபம். சரபமானது மனிதன், ஸிம்ஹம், பக்ஷி மூன்றும் சேர்ந்த ரூபம்.]

3. இதை அநுஸரித்து, நரஸிம்ஹ ப்ரயோகங்களைத் திருப்புவதற்கும், அடக்குவதற்கும் சரபஸாலுவங்களென்ற ப்ரயோகங்கள் தந்த்ரங்களில் மிகவும் ப்ரஸித்தமாய்ச் சொல்லப்பட்டிருக்கின்றன. மஹா உக்ரமாகச் சொல்லப்படும் நரஸிம்ஹத்தையும் ஸம்ஹாரம் செய்ததிலிருந்து சரபமூர்த்தியே மாரக ப்ரயோகங்களுக்கு மிகவும் உத்தமமானவர் என்று ஏற்படுவதால் அவரையே இங்கு சொல்லியது. இதிலிருந்து மேலும் ஏற்படுவது என்னவென்றால்—

4. இப்போர்ப்பட்ட பலவானை சாபமூர்த்தியின் ஸம்பாதிப்பதற்குத் தனியான பிரயோகங்கள் சொல்லப்பட்டிருந்தபோதிலும், ஸ்ரீ வித்யோபாஸகன் அவனைத் தெரிந்துக்கொள்ளாமலும், அவனைக்குறித்து உபாஸனை செய்யாமலும் இருந்தபோதிலும், சரபமூர்த்தியானவர் தானுகவேவந்து அவனுடைய சத்ருக்களை ஸம்ஹாரம்செய்து விடுவதாகச் சொல்லப்பட்டது. ஆகவே சரபமூர்த்தியை உபாஸிக்கிறவர்களைவிட லலிதாம்பாளுடைய உபாஸகர் களுக்கு எல்லையற்றமஹாத்ம்யம் உண்டென்பது இதிலிருந்து வற்படுகிறது. அப்படிக்கில்லாவிட்டால் சரபமூர்த்தியின் ப்ரஸ்தாபமே யில்லாமல்,

'தஸ்ய யே சத்ரவ: ஸர்வே நச்யந்தி ஸ்வத ஏவ தே |'

என்பதாகச் சொல்லியிருக்கலாம். இதேவிதமாக இனி சொல்லப்படும் ப்ரத்யங்கிரா முதலானவர்களைப்பற்றியும் சொல்லப்பட்டதாக அறியவேண்டும். அவர்களெல்லோரும் லலிதாம்பாளுக்குத் தாமாகவே ஒத்தாசை செய்யக்கார்த் துக்கொண்டிருப்பதாகவும், அவர்களைக் குறித்து அவன் தனி யாக உபாஸிக்கவேண்டியது தேவையில்லையென்றும் தாத் பர்யம்.

यो वाभिचारं कुरुते नामसाहस्रपाठके।
निवर्त्य तत्क्रियां हन्यात्तं वै प्रत्यङ्गिरा स्वयम् ॥

யோ வாபிசாரம் குருதே நாமஸாஹஸ்ர பாடகே |
நிவர்த்ய தத் க்ரியாம் ஹந்யாத் தம் வை ப்ரத்யங்கிரா
ஸ்வயம் ॥ (35)

எவனொருவன் இந்த நாமஸஹஸ்ரத்தைக் சொல்கிறவனைக் குறித்து அபிசார கர்மாவைச் செய்கிறானே, அந்தக் கர்மாவை ப்ரத்யங்கிராதேவியானவள் தானே திருப்பிவிட்டு அவனையும் கொன்றுவிடுகிறாள்.

1. அபிசார கர்மா என்பது தெரியாத விதமாக தனியுடைய நாசனத்தை விளைவிப்பது--உ-ம்: யாகாதி.

2. அல்லாதமான கர்மாவை ஒருவன் ஸ்ரீ வித்யோபாஸ கனைக் குறித்துச்செய்தால் அப்போது (ஸ்ரீவித்யோபாஸக னுடைய வேண்டுதலில்லாமலேயே) ப்ரத்யங்கிராதேவியானவள் தானேகவேவந்து அந்தக் கர்மாவைத் தடுத்துத் திருப்பி அந்தக்

கர்மாவைச் செய்கிறவனையும் ஸம்ஹாரம் செய்துவிடுவதாகச் சொல்லப்பட்டது.

3. ப்ரத்யங்கிரா தேவியானவள் அதர்வண வேதத்தில் சொல்லப்பட்ட பத்ரகாளி தேவதை. ப்ரத்யங்கிரையைக் குறித்து அதர்வண வேதத்திய மந்த்ரகாண்டத்தில் சொன்னக சாகையில் மூப்பத்திரண்டு ருக்குகளும், பிப்பலாத சாகையில் நாற்பத்தெட்டு ருக்குகளும் இருக்கின்றன. அவைகளைக் குறித்துச் செய்யப்படும் ப்ரயோகங்கள் மாரத மந்த்ரத்தில் சொல்லப்பட்டிருக்கின்றன.

4. சரபமூர்த்திக்கு ப்ரத்யங்கிரா, சூலினீ இருவரும் பத்நிகள் என்று சொல்லப்படும்.

ये क्रूरदृष्ट्या वीक्षन्ते नामसाहस्रपाठकम् ।
तानन्धान्कुरुते क्षिप्रं स्वयं मार्तण्डभैरवः ॥

யே க்ரூர த்ருஷ்ட்யா வீக்ஷந்தே நாமஸாஹஸ்ர பாடகம் ।
தாந் அந்தாந் குருதே க்ஷிப்ரம் ஸ்வயம் மார்த்தண்ட பைரவ: ॥ (36)

எவர்கள் இந்த நாமஸஹஸ்ர கீர்த்தனம் செய்கிறவனைக் கொடூரமான பார்வையுடன் பார்க்கிறார்களோ, அவர்களை மார்த்தண்ட பைரவரானவர் தானேயே வெகு சீக்கிரத்தில் குருடர்களாகச் செய்துவிடுகிறார்.

1. 'க்ரூர த்ருஷ்ட்யா'-கோபத்தால் சிவந்தகண்களுடன்.

2. மார்த்தண்ட பைரவரைப்பற்றி ஏற்கனவே வந்த 'மார்த்தண்ட பைரவாராத்யா' என்ற 785-வது நாமத்தில் சொல்லியிருப்பதைப் பார்க்கவும்.

धनं यो हरते चोरैर्नामसाहस्रजापिनः ।
यत्र कुत्र स्थितं वापि क्षेत्रपालो निहन्ति तम् ॥

தநம் யோ ஹரதே சோரை: நாமஸாஹஸ்ர ஜாபிந: ।
யத்ர குத்ர ஸ்த்திதம் வாபி க்ஷேத்ரபாலோ நிஹந்தி தம் ॥(37)

இந்த நாமஸஹஸ்ர கீர்த்தனம் செய்கிறவனுடைய தனத்தை எவனொருவன் திருடர்கள் மூலமாக அபஹரிக்கிறானே, அவன் எங்கேயிருந்தாலும் அவனை க்ஷேத்ரபாலர் கொல்லுகிறார்.

1. திருடர்கள் மூலமாக அபஹரிக்கிறவன் என்று திருடர்களுடைய அரசனைச் சொன்னது. அவனைக்கூட கேசுதத்த டாலர் ஸம்ஹாரம்செய்கிறார் என்று சொன்னதினால் ஸாமான்யமான திருடனின் கதியைப்பற்றிச் சொல்லத்தேவையில்லை.

2. கேசுதத்தடாலரைப்பற்றி எற்கனவே வந்த 'கேசுதத்த டால ஸம்ஹர்த்ரே' என்ற 345-வது நாமத்தில் சொல்லியிருப்பதைப் பார்க்கவும்.

विद्यासु कुरुते वादं यो विद्वान्नामजापिना ।
तस्य वाक्स्तम्भनं सद्यः करोति नकुलीश्वरी ॥

வித்யாஸு குருதே வாதம் யோ வித்வாந் நாமஜாபிநா ।
தஸ்ய வாக் ஸ்தம்பநம் ஸத்யः கரோதி நகுலீச்வரீ ॥ (38)

எந்த வித்வானனவன் இந்த நாமஸஹஸ்ர நாமத்தைச் செய்கிறவனோடு வித்தைகளில் வாதம் செய்கிறானோ, அவனுடைய வாக்கை நகுலீச்வரியானவள் உடனே ஸ்தம்பனம்

1. 'வித்யாஸு'—சதுர்தச வித்தைகளில். அவையாவன்—ருக், யஜுஸ், ஸாம, அதர்வண வேதங்கள்; சிக்ஷா, வ்யாகரணம், கல்பம், சந்தஸ், ஜ்யோதிஷம், நிருக்தம் என்ற வேதாங்கங்கள்; மீமாம்ஸை, ந்யாயம், புராணம், தர்மசாஸ்த்ரம்—ஆகப் பதிநான்கு.

2. 'வாதம்' என்பது ஜல்பம் விதண்டை—இவைகளையும் குறிக்கும். வாதி பிரதிவாதி பக்ஷங்களில் ஒன்றிலும் அபிமானமில்லாமல் தத்துவத்தை அறிய வேண்டுமென்று செய்யப்படும் கதைக்கு வாதம் என்று பெயர். வாதி பிரதிவாதிகளில் ஒவ்வொருவனும் தன் பக்ஷத்துக்கு சாதகங்களையும் எதிரிபக்ஷத்தில் தோஷங்களையும் சொல்லி ஜயத்தை அடைய வேண்டுமென்று செய்யப்படுகிற கதைக்கு ஜல்பம் என்று பெயர். தன்னுடைய பக்ஷத்தை ஸ்தாபிக்காமல் எதிரிபக்ஷத்தைக்கண்டிக்கும் கதைக்கு விதண்டையென்று பெயர். ஒரு விஷயத்தை விசாரிப்பதற்காக வாதியும் பிரதிவாதியும் சொல்லும் வாக்கியங்கள் ஒன்றின் மேல் ஒன்று வருவதற்கு கதை என்று பெயர்.

3. வாக்குக்கு அதிபதியான தேவதைகளில் ஒருவளான ஸரஸ்வதியானவள் வாக்கை ஸ்தம்பனம் (தடை, கட்டிவிடுகிறது) பண்ணுவதற்கு சக்தியுடையவள். (இதைப்பற்றி பூர்வபாகத்தில் சொல்லியிருப்பதைப் பார்க்கவும்). இவளுடைய மந்த்ராக்ஷரத்தின் ருக்வேத ஆரண்யகத்தில் சொல்லப்பட்டு, பரசுராம கல்பஸூத்ரத்திலும் எடுக்கப்பட்டிருக்கிறது. ப்ரயோக சந்த்ரன் ப்ரபஞ்சஸாரம், முதலியவைகளில் சொல்லப்பட்டிருக்கின்றன.

यो राजा कुरुते वैरं नामसाहस्रजापिनः।
चतुरङ्गबलं तस्य दण्डिनी संहरेत्स्वयम् ॥

யோ ராஜா குருதே வைரம் நாமஸாஹஸ்ரஜாபிந:।
சதுரங்கபலம் தஸ்ய தண்டிநீ ஸம்ஹரேத் ஸ்வயம் II (39)

எந்த ராஜாவானவன் இந்த நாமஸாஹஸ்ர கீர்த்தனம் பண்ணுகிறவனிடம் பகைகொள்ளுகிறானோ, அவனுடைய சதுரங்க ஸைன்யத்தையும் தண்டினியானவள் ஸம்ஹாரம் செய்கிறாள்.

1. 'சதுரங்கபலம்' கஜ, ரத, துரக, பதாதிகளோடு கூடிய ஸைன்யம்.

2. தண்டிநீ (தண்டாயுதா) தேவியைப்பற்றி பூர்வபாகத்திலும், பண்டாஸுர யுத்தத்தைப்பற்றிய நாமங்களிலும் சொல்லியிருப்பதைப் பார்க்கவும். வாராஹீ தந்த்ரம் முதலிய ஸ்தலங்களிலும் ப்ரஸித்தமாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

3. 'ஸம்ஹரேத்'-ஸம்ஹாரமிருப்பவர்களில் சிலருக்குள் பரஸ்பரமிருக்கலாம் உண்டுபண்ணியும், சிலர்களைப் பிரிந்துபோகச் செய்தும், சிலர்களை நாசம் செய்தும், இப்படி நானாவிதமாக அழித்துவிடுவதாகச் சொல்லப்பட்டது. ஆகவே இதில் ரோகத்தையும், உச்சாடனம், மாரணம் இவற்றையும் பிரதிபாதிக்கின்றன.

நரோல், அர்க்கபோதமான இரண்டு ப்ரயோகங்களைச் சொல்லுகிறார்:-

यः पठेन्नामसाहस्रं षण्मासं भक्तिसंयुतः ।
लक्ष्मीश्चाञ्चल्यरहिता सदा तिष्ठति तद्गृहे ॥

யः படேத் நாம ஸாஹஸ்ரம் ஷண்மாஸம் பக்திஸம்யுத: 1
லக்ஷ்மீ: சாஞ்சல்ய ரஹிதா ஸதா திஷ்டதி தத்க்ருஹே 11 (40)

எவனொருவன் இந்த நாமஸஹஸ்ரத்தை ஆறுமாதம் பக்தியுடன் கீர்த்தனம் செய்கிறானோ, அவனுடைய வீட்டில் லக்ஷ்மியானவள் சாஞ்சல்யமில்லாமல் (இடைவிடாமல்) எப்போதும் இருப்பாள்.

1. அதாவது, எவனொருவன் இந்த நாமஸஹஸ்ரத்தைத் தினந்தோறும் ஒரு கடமையாக ஆறுமாத காலம் பக்தியுடன் கீர்த்தனம் செய்கிறானோ, அவனுடைய க்ருஹத்தில் லக்ஷ்மியானவள் ஸதா (அவன் உயிருள்ள வரையில்) வாஸம் செய்கிறாள் என்று சொல்லப்பட்டது.

2. லக்ஷ்மியானவள் சஞ்சல ஸ்வபாவமுடையவள். ஒரே இடத்தில் வெகு காலம் இருக்கமாட்டாள். 'ஸ்வபாவோ துரதிக்ரம:' என்றபடி ஸ்வபாவத்தை விட்டுவிடுவது மிகவும் கஷ்டமான காரியமாக இருந்தபோதிலும், இந்த நாமகீர்த்தனம் செய்கிறவனுடைய விஷயத்தில் லக்ஷ்மியானவள் தன்னுடைய (சஞ்சல) ஸ்வபாவத்தைக்கூட விட்டுவிட்டு அவனுடைய க்ருஹத்தில் எப்போதும் ப்ரஸன்னமாக இருப்பாளென்று சொல்லப்பட்டது.

मासमेकं प्रतिदिनं त्रिवारं यः पठेन्नरः ।
भारती तस्य जिह्वाग्रे रङ्गे नृत्यति नित्यशः ॥

மாஸமேகம் ப்ரதிதினம் த்ரிவாரம் யः படேத் நர: ।
பாரதீ தஸ்ய ஜிஹ்வாக்ரே ரங்கே ந்ருத்யதி நித்யச :11 (41)

தினம் மூன்று முறையாக ஒருமாத காலம் இந்த நாமஸஹஸ்ரத்தை எவனொருவன் கீர்த்தனம் செய்கிறானோ, அவனுடைய நாக்கின் நுனியாகிற ரங்க ஸ்தலத்தில் ஸரஸ்வதீ தேவியானவள் எப்போதும் நர்த்தனம் செய்து கொண்டிருப்பாள்.

1. மூன்றாம் ச்லோகத்தில் சொல்லிய ஆறுமாத காலத்திற்கு மாறாக ஒரு மாதமென்றார், தினம் ஒரு முறையென்று சொன்னதற்கு மாறாக தினம் மூன்று தடவையென்றார் இங்கு சொல்லப்பட்டது. அப்படி மூன்று தடவை செய்வதை ஒரே காலத்தில் சேர்ந்தாற்போல் செய்யலாம். அல்லது, ஸந்த்யா

வந்தனம் மாதிரி மூன்று ஸந்த்யா காலங்களில் காலம் ஒன்றுக்கு ஒரு ஆவ்ருத்தி வீதம் செய்தாலும் செய்யலாம்.

2. ரங்கம் என்பது ந்ருத்யபூமி, நாடகமேடை. நர்த்தனம் செய்வது என்றால் ரங்கபூமி வேண்டுமாதலால் இங்கு உபாஸனை யுடைய மாத்மாவே ரங்கபூமியாகச் சொல்லப் பட்டது. அங்கு எப்போதும் ஸரஸ்வதி தேவியானவள் தாண்டவமாடிக்கொண்டிருப்பாள் என்றால் அவனுக்கு ஸகல வித்தைகளும் ஒரு ச்ரமமுமில்லாமல் தெரிந்து, ஒருபோதும் அவை மறக்காமல் அவனுடைய வாக்கிலேயே குடிகொண்டிருக்குமென்பது தாத்பர்யம். ஸாதாரணமாக வித்யாப்யாஸத்தில் செய்யவேண்டிய தேகாயாஸ, குணஹிம்ஸா, தூர்வாவலோகன, (மற்றவனே சுற்றாதை நாடகப்படுத்திக்கொள்ளுதல்,) பாடந, கண்டதானலைகள் அவனுக்குத் தேவையில்லையென்று தாத்பர்யம். ஆயினும் வித்தை கிடைப்பதற்கு குருவானவர் அத்யாவச்யமான காரணமாகையால் அவரிடம் அத்யயனம் செய்யவேண்டியதுதான் அவச்யமானது.

இவ்விதம் அனேகவிதமான ப்ரயோகங்களைச் சொல்லிவிட்டுத் திருவள்ளுவர் ஸிம்ஹாவலோகன ந்யாயமாக கர்மப்ரதமான ப்ரயோகத்தைச் சொல்லுகிறார்:-

यस्त्वेकवारं पठति पक्षमेकमतन्द्रितः ।
मुह्यन्ति कामवशगा मृगाक्ष्यस्तस्य वीक्षणात् ॥

யஸ்த்வேகவாரம் படதி பக்ஷமேகம் அதந்த்ரித: ।
முஹ்யந்தி காமவசகா: ம்ருகாக்ஷ்யஸ் தஸ்ய வீக்ஷணாத் ॥(42)

வள்ளுவனும் சொல்லாமல் இந்த ஸாஸ்த்ரத்தைத் தினம் ஒரு முறையாக ஒரு மண்டலம் தர்த்தனம் செய்கிறானே, அவனுடைய பார்வையாலேயே ஸகல ஸ்த்ரீகளும் காமத்தின் வசப்பட்டு சோரமாக அடைகிறார்கள்.

1. மேலிய ப்ரயோகத்தில் சொன்னதற்கு மாறுகமலம் என்பதற்குப் பதிலாகப் பங்கஜமென்றும், த்ரிவாரம் என்பதற்குப் பதிலாக ஏகவாரம் என்றும் இங்கு சொல்லப் பட்டது.

2. 'அதந்த்ரித' :- நித்தை, சோம்பல், களைப்பு இவையில்லாமல் என்று அர்த்தம். இவையில்லாதிருப்பது ஸாதா

ரணமாக எல்லா ப்ரயோகங்களைச் செய்யுங்போது அவச்ய மாணவ்யம், இந்த ப்ரயோகத்தைச் செய்யுங்போது அவை கூடவே கூடாது என்று எச்சரிக்கை செய்வதற்காகக் குறிப் பிட்டுச் சொல்லப்பட்டது. இதிலிருந்து இந்த ப்ரயோக மானது (ஏடு) ராத்ரியில் செய்யப்படவேண்டுமென்பது ஏற்படு

3. இங்கு 'செய்த மாத்ரத்தால்' அல்லது 'பார்த்த மாத்ரத்தால்' என்பதான பதங்களில்லாததிலை, ப்ரயோ கத்தின் ஆரம்பத்தில் சொல்லப்படும் ஸங்கல்பத்தில் 'ஸ்த்ரீ ணாம் வசீகரணார்த்தம்' என்பதாகக் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும்.

இவ்விதம் அர்த்த காமங்களைக் கொடுக்கும் ப்ரயோகங் களைச் சொல்லிவிட்டு, இனிமேல் தர்ம ப்ரதான ப்ரயோகங் களை அனேகவிதமான ப்ரகாரங்களால் சொல்ல ஆரம்பித்து, முதல் முதலாக காமேச்வரனைச் செய்வதிலை கிடைக்கக் கூடிய தர்மத்தை முதலில் சொல்லுகிறார்:—

यः पठेन्नामसाहस्रं जन्ममध्ये सकृन्नरः ॥
तद्दृष्टिगोचराः सर्वे मुच्यन्ते सर्वकिल्बिषैः ॥

யः படேத் நாமஸாஹஸ்ரம் ஜன்ம மத்யே ஸக்ருத் நர: |
தத் த்ருஷ்டி கோசரா: ஸர்வே முச்யந்தே ஸர்வ கில்பிலை: 11 (43)

எவனொருவன் தன் ஜன்மாவில் இந்த நாம ஸாஹஸ்ரத்தை ஒரு தடவை பாராயணம் செய்கிறானோ, அவனுடைய கண்ணுக்குத் தென்படும் ஸகல ப்ராணி களும் தங்களுடைய ஸகல பாபங்களிலிருந்தும் விடுவிக்கப்படுகிறார்கள்.

1. 'ஜன்ம மத்யே'—இதிலையில் சொல்லப்பட்ட பாவத் ஜீவர், ஹண்டாலர், மகாபாலர், மஹாபாதகர் இவை களுக்கெல்லாம் மாறாக, தன் ஆயுளில் ஒரு தடவை என்று சொல்லப்பட்டது. இதிலிருந்தே ஒரு தடவை என்பது ஏற் பட்டாலும் முந்திச் சொல்லப்பட்ட தர்மவாரம் என்பதான சங்கை ஏற்படக்கூடாது என்பதற்காக 'ஸக்ருத்' என்று குறிப் பிடப்பட்டது.

2. 'தத் த்ருஷ்டி கோசரா: ஸர்வே'—அவனுடைய கண் பார்வைக்குப் புலப்படும் ஸகல ப்ராணிகளும் என்று அர்த்தம்.

இனி தானதர்மத்தைப்பற்றிச் சொல்லுகையில், தானத்தினுடைய விசேஷமானது தானம் பெறுகிறவனுடைய யோக்யதையைப் பொறுத்திருப்பதால், லலிதோபாக்யானத்துக்குத் தானம் பெறும்படி இருக்கும் யோக்யதையானது இந்த நாமாவளியைச் சொல்லுவதிலும், அப்படிப்பட்டவனுக்குத்தான் உபாஸகன் தானம் செய்யவேண்டுமென்பதைப்பற்றியும் மேலே சொல்லுகிறார்:-

यो वेत्ति नामसाहस्रं तस्मै देयं द्विजन्मने ।
अन्नं वस्त्रं धनं धान्यं नान्येभ्यस्तु कदाचन ॥
யோ வேத்தி நாமஸாஹஸ்ரம் தஸ்மை தேயம்
அந்நம் வஸ்த்ரம் தநம் தாந்யம் நாந்யேப்யஸ்து
கதாசந 11 (44)

எவனொருவன் இந்த நாமஸாஹஸ்ரத்தை அறிந்திருக்கிறானே, அந்த ப்ராம்ஹணனுக்குத்தான் அன்னம், வஸ்த்ரம், தனம், தான்யம் இவைகளைக் கொடுக்கவேண்டும். மற்றவர்களுக்கு ஒருபொழுதும் கொடுக்கவே கூடாது.

1. இதிலும் பின்வருஞ் மூன்று ச்லோகங்களிலும் தானத்தைப்பற்றிச்சொல்லுகையில், லலிதோபாக்யானத்தை இருப்பவன் யாருக்குத் தானம் கொடுக்கலாம் என்பதைப்பற்றிச் சொல்லப்படுகிறது. 'ஸ்ரீதேவீ ப்ரீதிமிச்சதா'—அம்பாளுடைய ப்ரீதியை அடைய விரும்புகிறவனால்—என்று பின்னால் சொல்லப்படுவதால் அவன் தானம் கொடுப்பதைப்பற்றித்தான் இந்த நியமங்கள் சொல்லப்படுகின்றன. அவ்விதமான உபாஸகனில்லாதவன் இங்கு சொல்லப்பட்டவர்களைத் தவிர பிறருக்குத் தானம் கொடுப்பதைப்பற்றி இதில் யாதொரு தடையும் சொல்லப்படவில்லை.

2. 'த்விஜோத்தமே'—ப்ராம்ஹணனுக்கு என்று அர்த்தம். சாம்பவீசக்ரம் ஏற்பட்டபோது அதில் சேர்ந்திருப்பவர்கள்

எல்லோரும் தவிர்க்கவேண்டும் என்றும், ஒருவருக்கோருவர் ஜாதி வித்யாஸம் கிடையாதென்றும் சொல்லியபடி,

'ப்ரவ்ருத்தே சாம்பவீ சக்ரே ஸர்வே வர்ணே த்விஜாதயः |'

என்கிறதான ஸ்ம்ருதியை தர்ம வசனமிருந்தபோதிலும், அது ஸ்ருதி, ஸ்ம்ருதிகளில் சொல்லப்பட்ட தர்மவிதயங்களோடு பற்றியது அல்ல; யாகஸம்பந்தத்தில் அவ்விருப்பதை (தின்னலாம்) கிடையாது என்று சொல்வதுபோல், சாம்பவீ சக்ரோபாஸனத்தைப்பற்றி அந்த வசனம் சொல்லப்பட்டது.

3. அன்னம் முதலியவற்றில் தானம் கொடுக்கப்படும் வஸ்துக்களெல்லாம் குறிக்கப்பட்டன.

4. 'அக்ஷய்யம்:'—இந்த நாமாவளித்தில் ஆகாரவு இல்லாதவர்கள், போலி உபாஸகர்களான ப்ராம்மணர்கள்.

5. 'கதாசன'—ஸ்ருதி, ஸ்ம்ருதிகளில் சொல்லப்பட்ட யாகம், ச்ராத்தம் முதலானவைகள் செய்யாதபோதுகூட என்று தாத்பர்யம். அந்தக் காலங்களில் கொடுக்கப்படும் தானங்கள்கூட தேவி உபாஸ்திபரர்களுக்குத்தான் கொடுக்கப்படவேண்டுமென்பது சொல்லப்பட்டது.

श्रीमन्त्रराजं यो वेत्ति श्रीचक्रं यः समर्चति ।
यः कीर्तयति नामानि तं सत्पात्रं विदुर्बुधाः ॥

ஸ்ரீமந்த்ரராஜம் யோ வேத்தி ஸ்ரீசக்ரம் யः ஸமர்ச்சதி |
யः கீர்த்தயதி நாமாநி தம் ஸத்பாத்ரம் விதுர்புதாः ॥ (45)

எவன் ஸ்ரீவித்யையை அறிந்திருக்கிறானோ, எவன் ஸ்ரீசக்ரத்தை பூஜிக்கிறானோ, எவன் இந்த நாமாவளித்தை கீர்த்தனம் செய்கிறானோ, அவனுக்தான் நல்ல பாத்ரமானவனென்று அறிஞர்கள் தெரிந்து கொள்ளுகிறார்கள் (சொல்லுவார்கள்.)

1. 'சக்ர ராஜம்' என்பது ஸ்ரீவித்யை.

2. இங்கு மூன்று விசேஷணங்கள்—சக்ர ராஜாச்சனம் செய்வது, ஸ்ரீவித்யையைத் தெரிவது, நாமாவளித்தை கீர்த்தனம் செய்வது—சொல்லப்பட்டன. இவை மூன்றும் ஒருங்கே ஒருவனிடம் சேர்ந்திருந்தால் அவன் ஸத்பாத்ரன். மூன்றில் ஒன்றில்லாவிட்டால் தாரதம்யம், மூன்றுமே இல்லாவிட்டால் பாத்ரமென்பது இல்லவேயில்லை—என்பது ஏற்படுகிறது.

யாரை)னைத்ச் சற்று யோசித்தால் அடியில்கண்டபடி எற்படும்.

3. பாத்ரமாயிருப்பதின் விசேஷணங்களான இம்மூன்றில் ஒன்றிலொன்று உடையவராக இருப்பவர் மூன்று பேர்கள். இரண்டிரண்டாக உடையவர்கள் (1, 2; 1, 3; 2, 3) மூன்று பேர்கள். மூன்றையும் உடையவன் ஒருவன். மூன்றுமே இல்லாதவன் ஒருவன். ஆக பாத்ரமாயிருப்பவர்கள் ஏழு விதம். பாத்ரமில்லாதவன் ஒன்று, ஆக மொத்தம் எட்டுப் பேர். இப்படியிருப்பதாகத் தோன்றினாலும் மந்த்ர ராஜம் தெரிந்தவர்களுக்குள் சக்ர ராஜார்ச்சனம் தெரிந்தவன் என்பவன் அடங்கிவிடுவதால் (அதாவது மந்த்ர ராஜம் தெரிந்தவன் தான் சக்ர ராஜமும் தெரிந்தவனாக இருக்கக்கூடுமாதலால்) சக்ர ராஜம் மட்டும் தெரிந்தவன் ஒருவன் என்பது கிடையாது. அதே காரணத்தால் சக்ர ராஜம், காமகீர்த்தனம் இவ்விரண்டு மட்டும் தெரிந்தவன் ஒருவன் என்பதும் கிடையாது. ஆகவே மேலே சொல்லிய பாத்ரமற்றவர்கள் எட்டுப் பேர்களில் வால்மீகமாக ஆராவிதமானவர்கள் தானிருக்கக்கூடும். அவர்களில், மூன்று குணங்களையும் உடையவன் உத்தமன். சக்ரம்—மந்த்ரம், காமம்—மந்த்ரம் இந்த இரண்டிரண்டு உடையவர்கள் இருவர். இவ்விருவர்களுக்குள் சக்ரம்—மந்த்ரம் தெரிந்தவனைவிட காமம்—மந்த்ரம் தெரிந்தவன்தான் சிரேஷ்டமானவன். மந்த்ரம் மட்டும் தெரிந்த இருவர்கள் அதற்கடுத்தபடியானவர்கள். அவ்விருவர்களுக்குள் காமம் மட்டும் தெரிந்தவனைவிட மந்த்ரம் மட்டும் தெரிந்தவன் மேலானவன். ஏனென்றால் மந்த்ரம் தெரியாமல் காமகீர்த்தனம் செய்யக்கூடுமானாலும் மந்த்ரம் தெரியாதவன் காமகீர்த்தனம் செய்வதற்கு அதிகாரம் கிடையாது. அப்படி அதிகாரியாக இருப்பவன் காமகீர்த்தனம் செய்தால் அதை சுக்ரன் வேதாத்யயனம் செய்வதை மாதிரி பாபயோஜனமற்றதாக இருக்கும். மூன்று குணங்களுள் ஒன்றுமேயில்லாதவன் பாத்ரமேயில்லை.

तस्मै देयं प्रयत्नेन श्रीदेवीप्रीतिमिच्छता ।

தஸ்மை தேயம் ப்ரயத்நேந ஸ்ரீதேவீ ப்ரீதிமிச்சதா | (46)

(ஆகையால்) ஸ்ரீதேவியின் ப்ரியத்தையடைய விரும்புகிறவன் பாத்ரமட்டாவது அம்மாதிரியான ஸத்பாத்ரனுக்குதானம் செய்யவேண்டும்.

1. அதாவது, அவனுக்குத்தான் தானம் செய்யவேண்டு மென்று சொல்லப்பட்டது.

2. அப்போல்லப்பட்ட உத்தமனானவன் கிடைக்காவிட்டால், மத்யமனுயிருப்பவனுக்கும் தானம் செய்யலாமென்பது ஸ்மிருதியுத்திரவு ஊர்ஜித்துச் சொல்லக்கூடியதாயிருப்பதுடன் அதுவுமே விதியாகத்தானிருக்கிறது. விதிகள் மாலுவிதமென்று மேலுள்ள ஸ்மிருதியில் சொல்லப்பட்டிருக்கிறது.

'அத்ருஷ்டார்த்தோ விதி: ப்ரோக்தோ த்ருஷ்டார்த்தச்ச
த்விதீயக: |
உபயார்த்தன் த்ருதீயஸ்து ந்யாய மூலச்சதுர்த்தக: ॥'

[ஸ்வர்கம் முதலிய அத்ருஷ்டமான (வேறில் தெரியாத) பலன்களைச் சொல்வது ஒன்று. த்ருஷ்டமான (தனம் முதலிய) பலன்களைச் சொல்வது இரண்டாவது. மேலே சொல்லிய இரண்டுவிதமான பலன்களையும் சொல்வது மூன்றாவது. ந்யாயத்தின் மூலமாக ஏற்படுவது நாலாவது.] உத்தமனில்லாவிட்டால் மத்யமனுக்குக் கொடுக்கலாம் என்பது ந்யாயமூலகமானதாகையால் மேலே சொல்லியதும் நான்காவதான விதியாக (

இந்த அர்த்தத்தைச் சொல்வதுடன் ஏற்சனமே 44-வது ச்லோகத்தில் வந்த 'நாம்னேயப்யஸ்து கதாசன' என்பதைப் பற்றியும் விவரித்து அடுத்தாற்போல் சொல்லுகிறார்.

न कीर्तयति नामानि मन्त्रराजं न वेत्ति यः ।
पशुतुल्यः स विज्ञेयस्तस्मै दत्तं निरर्थकम् ॥

ந கீர்த்தயதி நாமானி மந்த்ரராஜம் ந வேத்தி யः |
பசுதுல்யः ஸ விக்ஞேயः தஸ்மை தத்தம் நிரர்த்தகம் ॥ (47)

எவனொருவன் இந்த நாமங்களைச் சொல்லாமலும் மந்த்ர ராஜத்தை அறியாமலுமிருக்கிறானோ, அவன் பசுவுக்கு ஸமமானவனென்று அறியத்தகும். அவனுக்குக் கொடுத்தது அர்த்தமில்லாதது (நிரர்த்தகமாற்றது.)

I. இங்கு காளஸாஹஸ்ரர், மந்த்ர ராஜம் இன்னதென்று மட்டும் சொல்லாமலிருக்கிறார், சக்ர ராஜத்தைப்பற்றியும் சேர்த்துச் சொல்லாமலிருக்கிறார். எப்படி அவை மூன்று முறைபோலே மந்த்ர

னென்று சொல்லப்பட்டதோ அதை அனுஸரித்து அந்த மூன்றும் சேர்ந்தாற்போலில்லாதவர்களெல்லாம் இங்குபசுவென்று சொல்லப்பட்டார்கள். மந்த்ர ராஜம் தெரிந்தவன்தான் சக்ர ராஜத்தையும் தெரிந்தவனாக இருக்கக்கூடுமாகையால் மந்த்ர ராஜத்தைத் தெரியாதவன் என்று இங்கு சொல்வதிலால் சக்ர ராஜத்தைத் தெரியாதவனும் உள்படுத்திச் சொல்லப்பட்டான்.

2. 'பசு துல்ய:' — பசுவுக்கு ஸமானமானவன். பசு என்று பதினான்கு ராசி கால்களையுடைய பசுவை உதாரணமாகக் குறிக்கும். அது தவிர, 'வித்யா விஹீந: பசு:' என்ற படி வித்தையில்லாதவனையும் பசுவென்று சொல்லப்படும். அந்த அர்த்தத்தில் ஸ்ரீவித்தை இல்லாதவனை இங்கு பசு என்று சொன்னதாகவும் சொல்லலாம். மோக்ஷத்திற்கு ஒரே (முக்யமான) காரணமான ஸ்ரீவித்தையைதான் வித்தையென்ற பெயருக்குறியதென்றும், அதைத் தெரிந்தவன்தான் வித்வான் என்று சொல்லப்படத்தகுதியுடையவனென்றும் ப்ரம்ஹாண்ட புராணத்தில் (லலிதாத்ரிசதியில்) சொல்லப்பட்டிருக்கிறது.

'க ஸில்பாதி ஞானயுக்தே வித்வத் சப்த: ப்ரயுஜ்யதே |
மோக்ஷைக ஹேது வித்யாவாந் ய: ஸ வித்வாநி தீர்யதே |
மோக்ஷைக ஹேதுவித்யா ச ஸ்ரீவித்யா நாத்ர ஸம்சய: ||'

3. மேலே சொல்லிய ஆறு பேர்களில் சக்ரம், நாமம், மந்த்ரம் இம்மூன்றையுமுடையவன் உத்தமனென்றும், அம் மூன்றுமில்லாதவன் பசுவென்றும் ஏற்பட்டுவிடுகிறது. மீதுள்ள மல்லாகிய மந்த்ரம்+சக்ரம், மந்த்ரம்+நாமம், மந்த்ரம் மட்டும், நாமம் மட்டும் இவையுடையவர்களில் முதல் மூவர்கள் மந்த்ரம் தெரிந்தவர்கள். அப்படி அவர்கள் வித்தை தெரிந்தவர்களாயிருந்தாலும் சக்ரார்ச்சனம், நாமகீர்த்தனம் இவைகளையுடையும் செய்ய அதிகாரிகளாயிருக்கையில் அம்மிரண்டையும் செய்யாதிருப்பதால் வித்தை இருந்தும் இல்லாததுபோல் ஆகிறது. ஆகவே அவர்கள் 'வித்யா விஹீந: பசு:' என்று சொல்லப்பட்ட பசு துல்யர்களென்றான். மந்த்ரம் தெரியாமல் நாமகீர்த்தனம் செய்கிறவனேனென்றால் அவன் காலுகால் பசுவுக்குத் துல்யமானவன்.

4. 'நிரர்த்தகர்'— அர்த்தமில்லாதது. அர்த்தமென்பதி னால் தாதுவும் பாலங்களோடு கூடிய பதங்கள் சொல்லப்

படட்டனை. ஸத்பாத்ரமானவனுக்குத் தானம் செய்தால் விசிஷ்டமான (உத்கிருஷ்டமான) பலன் கிடைக்கும். சத்பாத்ரமான பாத்ரனுக்குக் கொடுத்தால் ஸாமான்யமான பலன் கிடைக்கும். பாத்ரமேயில்லாதவனுக்குக் கொடுத்தால் பலனே கிடையாது என்று சொல்லப்பட்டது. [மேலே சொன்ன ஆறு கோக்களில் நாமம் + மந்த்ரம், சக்ரம் + மந்த்ரம், மந்த்ரம் மட்டும், நாமம் மட்டும் இவ்விதமாக உடையவர்கள் சத்பாத்ரர்கள். அவர்களுக்குத் தானம் செய்வதிலல் எற்படும் பலனைத் தவிர்ப்பதாக குறைத்து கொண்டுவருகிறார்.]

இவ்விதம் தானத்திற்குப் பாத்ரர்களாயிருப்பவர்களைப் பற்றிச் சொல்லிவிட்டு அதிலல் எற்படும் முடிவுரையைப் பின்வருமாறு சொல்லுகிறார்:—

परीक्ष्य विद्याविदुषस्तेभ्यो दद्याद्विचक्षणः ।

பரீக்ஷ்ய வித்யா விதுஷ: தேப்யோ தத்யாத் விசக்ஷண: ।

(ஆகையினல்) புத்திமானாயிருப்பவன் வித்யை தெரிந்தவர்களைப் பரீக்ஷித்து (நிச்சயித்து, தாரதம்யத்தைத் தெரிந்து கொண்டு) அவர்களுக்குக் கொடுக்கவேண்டும்.

1. 'வித்யா விதுஷ: பரீக்ஷ்ய'—ஸ்ரீவித்யை விஷயத்தில் வித்வானாயிருப்பவர்களை அதாவது, வாஸ்தவமாக (உள்ளபடியே) உபாஸனையோடிருப்பவர்களை பரீக்ஷித்து என்று அர்த்தம். அதாவது, அவர்கள் ஸ்ரீவித்யையைத் தெரிந்தவர்களாக இருக்கவேண்டும். உபாஸனையின் பற்றி அவர்களை சக்ர ராஜநிக்நனர், யோகினீ நிக்நனர் என்ற இரண்டையுமுடையவர்களாக என்று பரிசோதித்து அப்படி உடையவர்களுக்குக் கொடுக்கவேண்டுமென்பது தாத்பர்யம்.

2. 'தேப்ய:' என்பதற்கு அவர்களுக்கு, அதாவது, மேலே சொல்லியபடி உபாஸனையின் மூன்று அங்கங்களையுமுடையவர்களுக்கு என்பது ஒரு அர்த்தம். அல்லது 'மேலே சொன்ன வஸ்துக்களால்' என்றும் அர்த்தம் சொல்லலாம். மேலே சொல்லியபடி உபாஸனையின் மூன்று அங்கங்களையும் பொருந்தியவன் தான் ஸத்பாத்ரனென்று சொல்லப்பட்டதாலும், மற்றவர்களிடத்தில் ஸத்பாத்ரதை இல்லாததாலும், பாத்ரமாயிருப்பவருக்குத்தான் தானம் செய்யவேண்டுமென்று சொல்லப்பட்டிருப்பதாலும், பாத்ரமாயில்லாதவர்களுக்கு

தானம் செய்யக்கூடாது என்று சொல்லப்பட்டிருப்பதாலும், இந்தக் காரணங்களைக்கொண்டு புத்திரனான ஸ்ரீவித்யை ப்ரீதித்து தானம் செய்யவேண்டும் என்று சொல்லப்பட்டது.

இனி, மேலே சொல்லிய மூன்று குணங்களும் ஸ்தோத்ரத்துக்கு எப்படி இன்றியமையாத அங்கங்களாக இருக்கின்றன என்று காட்டுவதுடன் அவற்றையே பரம்பரம் உபாசனை, உபோயங்களாகச் சொல்லி அதின் மூலமாக அவை மூன்றும் ஸர்வோத்தமனை என்பதாகவும் சொல்லுகிறார்:-

श्रीमन्त्रराजसदृशो यथा मन्त्रो न विद्यते ।
देवता ललितातुल्या यथा नास्ति घटोद्भव ॥
रहस्यनामसाहस्रतुल्या नास्ति तथा स्तुतिः ।

ஸ்ரீமந்த்ரராஜ ஸத்ருசோ யதா மந்த்ரோ ந வித்யதே | (48)
தேவதா லலிதாதுல்யா யதா நாஸ்தி கடோத்பவ ||
ரஹஸ்யநாமஸாஹஸ்ர துல்யா நாஸ்தி ததா ஸ்துதிः | (49)

ஸ்ரீமந்த்ரராஜத்திற்கு ஸமானமான மந்த்ரம் எப்படி இல்லையோ, லலிதாம்பாளுக்கு ஸமானமான தேவதை எப்படி இல்லையோ, அதேபோல, மேற கடோத்பவ! ரஹஸ்ய நாம ஸஹஸ்ரத்திற்கு ஸமானமான ஸ்தோத்ரம் வேறில்லை.

1. ஏனென்றால், மந்த்ரங்களுக்குள் ஸ்ரீவித்யையும், தேவதைகளுக்குள் லலிதாம்பிகையும், நாமஸஹஸ்ரங்களுக்குள் ரஹஸ்ய நாம ஸஹஸ்ரமும் உத்தமமென்பதாகச் சொல்லப்பட்டது. அந்தந்த வகையில் ஸர்வோத்தமாயிருப்பதுடன் அப்படி உத்தமமாயிருப்பதை எதுபோதுமெனில் இம்மூன்றையும் தான் ஒன்றுக்கொன்றை உபாஸனை, உபோயங்களாகச் சொல்லுவேண்டுமோ தனியே வேறொன்றையும் சொல்வதற்கில்லை யென்றால் சொல்லப்பட்டது.

2. ஸ்ரீசக்ரமே லலிதாம்பிகையின் ரூபமாக இருப்பதால் இங்கு 'ஸ்ரீசக்ரத்திற்கு ஸமானமான சக்ரம் எப்படி இல்லையோ' என்று சொல்லாமல் (சக்ர ரூபிணிகளான) தேவதைகளுக்குள் லலிதாம்பிகையின் சக்ரத்தில் சொல்லப்பட்டது.

இதற்குமேல், இந்த விதிதாத்ரானது உபாஸகர்களாயில்லாதவர்களுக்கும் தர்மத்தைக் கொடுக்கும் (தர்மப்ரதம்) என்பதாகச் சொல்லப்படுகிறது :—

लिखित्वा पुस्तके यस्तु नामसाहस्रमुत्तमम् ॥
समर्चयेत्सदा भक्त्या तस्य तुष्यति सुन्दरी ।

லிகித்வா புஸ்தகே யஸ்து நாமஸாஹஸ்ரமுத்தமம் ॥
ஸமார்ச்சயேத் ஸதா பக்த்யா தஸ்ய துஷ்யதி ஸுந்தரீ ।(50)

எவனொருவன் இந்த உத்தமமான நாமஸாஹஸ்ரத்தை புஸ்தகத்தில் எழுதி (அதை) எப்போதும் பக்தியுடன் பூஜிக்கிறானோ, அவனிடத்தில் ஸ்ரீ ஸுந்தரியானவள் ஸந்தோஷம் அடைகிறாள்.

1. 'யः'—உபாஸகனோ, உபாஸகனில்லையோ, யாராயிருந்தாலும் என்று அர்த்தம். உபாஸகனல்லாதவனுக்கு நாம கீர்த்தனம் செய்வதற்கு அதிகாரமில்லாவிட்டாலும், அவன் இந்த நாமஸாஹஸ்ரம் எழுதிய புஸ்தகத்தை அர்ச்சிப்பதற்கு அதிகாரமுடையவன் என்பதில் யாதொரு தடையுமில்லை.

2. 'ஸதா'—உயிருள்ள வரையில்.

3. இப்படி அநுபாஸகனுயிருப்பவனுக்கே இவ்விதானமானது சொல்லியிருக்கும்போது அதையே உபாஸகன் செய்தால் அதற்குப் பலன் அதிகமாயிருக்குமென்று சொல்லத் தேவையில்லை. மேலும் நாமஸாஹஸ்ரமெழுதிய புஸ்தகத்தை பூஜித்தாலேயே அர்ச்சகருக்கு ஸந்தோஷம் ஏற்படுவதாகச் சொல்லப்படுகையில் அதைக் கீர்த்தனம் செய்தால் அர்ச்சகருக்கு ஏற்படும் ப்ரீதிக்கு அளவேயில்லையென்பதாக நாம் தெரிந்துகொள்ளவேண்டியது. ஆகவே இங்கு சொல்லிய தெல்லாம் நாமஸாஹஸ்ர கீர்த்தனத்தின் அவச்யத்தையும், விசேஷ பலனையும் சொல்லியதாக அறியவேண்டும். இதை யினுல்தான் மேலே 51-வது ச்லோகத்தில்

'தஸ்மாத் உபாஸகோ நித்யம் கீர்த்தயேத் இதம் ஆதராத் ।'

என்று சொன்னபடி உபாஸகன் இதைத் தன்னுயிருள்ள வரையில் தினந்தோறும் கீர்த்தனம் செய்யவேண்டுமென்று சொல்லப்பட்டது.

बहुनात्र किमुक्तेन शृणु त्वं कुम्भसंभव ॥

பஹுநாத்ர கிமுக்தேந ச்ருணு த்வம் கும்பஸம்பவ ॥

(இதைப்பற்றி) அதிகமாகச் சொல்லி என்ன ! குடம்பனாய்தல் ! கேள்.

नानेन सदृशं स्तोत्रं सर्वतन्त्रेषु विद्यते ।
तस्मादुपासको नित्यं कीर्तयेदिदमादरात् ॥

நாநேந ஸத்ருசம் ஸ்தோத்ரம் ஸர்வ தந்த்ரேஷு வித்யதே ।
தஸ்மாத் உபாஸகோ நித்யம் கீர்த்தயேத் இதம் ஆதராத் ॥ (51)

ஸகல ஸ்தோத்ரங்களிலும் இதற்கு ஸமானமான (இதைப்போன்ற) ஸ்தோத்ரம் கிடையாது. ஆகையினால் உபாஸகனானவன் இதை ச்ரத்தையுடன் தினந்தோறும் (உயிருள்ள வரையில்) கீர்த்தனம் செய்யவேண்டும்.

1. ஸாமான்ய மனுஷ்யத்தின் உடம்பேயாகும் மூன்று விதமானது. ஸாமங்களின் அர்த்தங்களைப் பூர்ணமாக அறிந்து கீர்த்தனம் செய்வது ஒன்று; அவ்விதம் அர்த்தங்களை அறியாமல் கீர்த்தனம் செய்வது இரண்டாவது. அந்த இரண்டு விதங்களுக்கும் முடியாமல் புன்தகத்தில் எழுதி அனுகூலப்படுத்துவது மூன்றாவது.

2. அர்த்த ஞானத்தோடு கீர்த்தனம் செய்வதுதான் உத்தமமானது. 'ஸ்வாத்யாயோ(அ)த்யேதவ்ய:' என்ற வசனத்தில் சொல்லப்பட்ட அத்யயனம் பதமானதும் குருமுகத்திலல் அத்யயனம் பண்ணுவதைத்தான் குறிக்கும். குருவின் உபதேசம் இல்லாமலே வேதத்தைச் சொல்லமுடியுமானாலும் அவர் மூலமாக ஏற்படும் அர்த்தஞானம் முதலியவை முக்யமானதால் அவசியத்தில் தான் வேதாத்யயனம் செய்யவேண்டும். அதேபோல இங்கு 'கீர்த்தயேத்' என்ற பதமானது அர்த்த ஞானத்தோடு கீர்த்தனம் செய்யவேண்டுமென்று சொல்வதாக அர்த்தம் பண்ணுவதற்கு யாதொரு விவாதமும் இருக்க முடியாது. உபாஸகன் அர்த்தத்தோடு ஒரு நாமத்தைச் சொன்னாலும், கல்பகோடி காலம் பூஜை ஜபம் தியானம் பண்ணினவனுடைய லோகத்தில் வஸிப்பானென்பதாகத் தேவீ புராணத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

'அப்யேகம் நாம யோ வேத்தி தாத்வர்த்த நிகமாதிபி: ।
ஸோ(அ)பி பூஜாதிதாலோகே கல்பகோடீர் வஸேத் நர: ॥'

தவிர, அர்த்த ஞானமில்லாமல் சொல்வதானது (அவிழ்ந்த) அக்னியில் உலர்ந்தவிரகைட் போட்டலும் சாம்பல் ஜ்வலிக்காதே, அம்பாதிரியானதென்று சொல்லப்பட்டிருக்கிறது.

'அநர்த்தம் அவிக்ஞாதம் நிகதேனைவ பட்யதே |
அநக்நாவிவ சுஷ்கைதோ நத்த ஜ்வலதி கர்ஹிசித் ||'

3. மேலே சொல்லிய இரண்டுச்லோகங்களுமே முறையே அர்த்த ஞானத்தைத் புகழ்ந்தும், அர்த்த ஞானம் இல்லாமலிருப்பதை இகழ்ந்தும் சொல்லுகிறவை. ஆயினும் அர்த்த ஞானம். ஸம்பாதிக்க ஸாமர்த்யமில்லாதவன் இந்த நாம ஸஹஸ்ரத்தை ஸாதாரணமாய் வாசிக்கவாவது வேண்டும் அர்த்தத்தோடுகூடிய பதங்களை வாசித்தாலேயே அனர்த்திற்கு சக்தியுண்டென்பதாக,

'ஆக்யாதாநாம் அர்த்தம் ப்ருவதாம் சக்தி: ஸஹகாரிணீ |'

என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதனால்தான்,

'யோ(அ)ர்த்தக்ஞ இத் ஸகலம் பத்ரமச்நுதே,
நாகமேதி ஜ்ஞான விதூதபாப்மா |'

(அர்த்தத்தைத் தெரிந்தவன் ஸகலவிதமான மங்களங்களையுமடைந்து ஜ்ஞானத்தால் போக்கப்பட்ட பாபங்களையுடையவனாய் ஸ்வர்கத்தையடைகிறான்) என்ற ச்ருதி வாக்யத்தில் அர்த்த ஞானத்தினால் நிச்சயமான பலன் கிடைக்குமென்று சொல்லப்பட்டிருக்கிறது. அதனால் சரித்த ஞானம் மட்டுமிருந்தால் அந்தப் பூர்ணமான பலனில்லையாயினும் கிரமத்தை மாவது கிடைக்குமென்பதாக அர்த்தம் எற்படுகிறது.

4. இம்மஹிதமான ஸ்வாத்யாயத்தினால் நாம ஸஹஸ்ரத்தை வாசிக்கக்கூடத் தெரியாதவன் (சரித்த ஞானமில்லாதவன்) அதையுடைய புஸ்தகத்தையாவது ஸம்பாதித்துப் பூஜிக்கலாமென்று எற்படுகிறது. (அர்த்தமில்லாமல்) உச்சாரணமாத்ரம் மட்டும் செய்தால் அது அடுத்த ஜன்மாத்தில் அர்த்த ஞானத்தைக் கொடுப்பதுபோல், புஸ்தகத்தை ஸங்க்ரமம் செய்து (பூஜித்து) வந்தால் அதுவே அடுத்த ஜன்மத்தில் உச்சாரணம் செய்யும் ஸாமர்த்யத்தைக் கொடுக்கும். இம்மாதிரியான காரணத்தினால்தான், ஸம்ப்ரதாயத்தை அனுஸரிக்காமல் அங்கஹீனமாகச் செய்யப்படும் உபாஸனையானது மறு ஜன்மத்தில் ஸாங்கமும் ஸம்ப்ரதாய சுத்தமுமான உபாஸனையைக் கொடுக்குமென்பதாக தந்த்ராராஜம் முதலியனவைகளில் சொல்லப்பட்டிருக்

5. ஆகவே, புஸ்தகார்ச்சனையும் தர்ம ப்ரதமான கார்யம் தான். தவிர, அதை உபாஸகனுயில்லாதவன் செய்யக்கூடாதென்பதான நிஷேதமும் யாதொன்றுமில்லையாகையால் மற்ற ஜன்மத்தில் உபாஸனை செய்யும் பாக்யம் கிடைப்பதை யுத்தேசித்து அநுபாஸகன் புஸ்தகார்ச்சனம் செய்யலாம். உபாஸகனுயிருப்பவன் யாராவது தாமபடனம் செய்ய ஸாமர்த்யமற்றவனுக இருந்தால், அவனும் புஸ்தக ஸங்க்ரஹம் செய்து அர்ச்சிக்கவேண்டும். ஏனென்றால் தாமபடனம் செய்யவேண்டுமென்பதாக உபாஸகனுக்குச் சொல்லப்பட்டிருக்கும் விதியை அவன் அதுஷ்டிக்கிறான் (அதாவது, புஸ்தகார்சனத்தின் மூலமாய்) தன்னால் இயன்றவரையில் அனுஷ்டித்ததாக ஆகுமாகையால் அவனும் புஸ்தகார்ச்சனத்தை அவசியம் செய்யவேண்டும்.

6. இவ்விதம் அநுபாஸகன்கூட தாமஸாஹஸ்ரமடங்கிய புஸ்தகத்தைத் பூஜிக்கலாம் என்று சொல்லப்படுவதில் அது 'குலபுஸ்தகாதி கோடியேத்' என்ற கல்பஸூத்ர வசனத்திற்கு விரோதமாயிருப்பதாகத் தோன்றலாம். குல புஸ்தகங்களை, அதாவது, குலாசாரத்தைப்பற்றிய புஸ்தகங்களை, ரஹஸ்யமாகவைத்துக் காப்பாற்றவேண்டும் என்று அந்த வாக்யத்தின் தாத்பர்யம். அதிகாரமில்லாதவர்களுக்கு அவை கிடைக்காதவிதமாய்க் காப்பாற்றவேண்டுமென்றும், இல்லாவிட்டால் யோகினிகளின் சாபம் ஏற்படுமென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. அப்படியிருக்கையில் அநுபாஸகன் புஸ்தகார்ச்சனம் செய்வதற்கு எப்படி அதிகாரமுடையவனுக ஆவான் என்று தோன்றக்கூடும். ஆனால் அந்த வாக்யமானது அர்த்த ஞானத்தைத் தெரிக்கும் ஸ்வாபாவமுடைய தர்ஜனார்தவாதமாற்றி சொல்லப்பட்டதே தவிர, உபாஸனை கிடைக்கவேண்டுமென்ற விதிவாக்யத்தையுடைய ஸஜ்ஜனார்தவாதமாற்றிச் சொல்லப்பட்டதல்ல. அப்போல்லப்பட்ட விருப்பமானது மற்ற ஜன்மத்தில் உபாஸனையைத் தெரிவிக்கும் அதிருஷ்டார்த்தத்தோடு கூடியது.

7. உபாஸகர்களுக்குள் தாமபடனம் செய்ய சக்தியற்றவர்களாயிருப்பவர்கள் புஸ்தகார்ச்சனத்தையாவது அவச்யம் செய்யவேண்டுமென்பது ஸாலபமாக ஏற்படும் ந்யாயமானது, இந்த தாம ஸாஹஸ்ரத்தின் அர்த்த ஞானம் கிடைப்பதற்கு உபாயமாயிருக்கும் இந்த பாஷ்யத்தை வாசிப்ப

ணைத்துற்றியும் பொருந்துமென்ற எண்ணத்துடன் பாண்டிய ராயரால் தன் பாஷ்யத்தின் முடிவில் பின்வருமாறு சொல்லப் பட்டிருக்கிறது

அம்ப தவத்பதயோ ஸமர்ப்பிதமிதம் பாஷ்யம் த்வயாகாரிதம்
த்வந்நாமார்த்த விகாஸகம் தவ முதே பூயாத்
[அதத்வாம் பஜந் |
யோ மாகத் பரிசிலயேத் ந சபடேத் யஃ டுஷ்தகண்யாபி வா
ஸம்க்ராமம் ந கதோதி தஸ்ய லலிதோபாஸ்திர்
[வ்ருதா ஜாயதாம் ||

(இதின் அர்த்தமானது அங்கு சொல்லப்பட்டிருப்பதைப் பார்க்கவும்.)

8. இவ்விதம் இந்த நாம ஸஹஸ்ரமானது அருமையாகக் கருதக்கே சக்தமாயிருக்கும்போது, அது உடமைகர்களுக்கு சக்தமாயிருப்பதைப்பற்றிச் சொல்லவேண்டியது அனைவர்க்கு மென்பதாக, இதுவரையில் சொல்லியதைகயெல்லாம் முடிவு கட்டி" பஹுநாத்ரகிமுக்தேந்ர . . . . . தீர்த்தயேத் இதமாதரத்" என்று இங்கு சொல்லப்பட்டது.

இதற்குமேல், மிகவும் உத்க்ருஷ்டமான தர்மத்தைக் கொடுப்பதும், முன்சொன்ன ஆறு ராசிகள் முதலான அனைவினைகூட புத்தியினல் அறியக்கூடாத பலத்தைக் கொடுப்பதுமான ப்ரயோகத்தைப்பற்றிச் சொல்லுகிறார்.

एभिर्नामसहस्रैस्तु श्रीचक्रं योऽर्चयेत्सकृत् ।

ஏபிர் நாம ஸஹஸ்ரைஸ்து ஸ்ரீசக்ரம் யோர்ச்சயேத்
ஸக்ருத் | (52)

இந்த ஆயிரம் நாமங்களால் (மேலே சொல்லப்படும் புஷ்பங்களைக்கொண்டு) ஸ்ரீசக்ரத்தை எவனொருவன் ஒரு தடவையாவது அர்ச்சிக்கிறானே :—

1. "நாம ஸஹஸ்ரை:" என்றதினல் ஒவ்வொரு நாமத்தையும் தனித் தனியாகச் சொல்லி ஆயிரம் நாமங்களையும் முடிக்கவேண்டுமென்று ஏற்படுகிறது. லக்ஷ்மி முதலிய வைகளினும் இதே ப்ரகிரியையாகச் சொல்லி ஆயிரம் நாமங்கள் முடிந்தவுடன் அதேபோல திரும்பித்திரும்பி ஆவ்ருத்தி செய்ய வேண்டுமென்பதும் ஏற்படுகிறது.

2. அல்லது, இந்த மாடலைவரன்ஸ்தத்தில் மாமங்களெல்லாம் துளஜாக்குத் தக்கபடி தனித் தனியாகச் சொல்லும்படியான மூடத்தோடில்லாதிருப்பதாலும், அவற்றைத் தனித்தனியாகச் சொல்லும்போது மான்காவது வேற்றுமையுடனும் மடமென்ற முடிவுடனும் சொல்லவேண்டியதாக இருப்பதாலும் மாலைவரன்மாமென்று சொல்லாமல் ஆயிரம் மாமங்களென்பதாக இங்கு சொல்லப்பட்டது. (உதாரணம் - ஸ்ரீமாதத்தோடம்: .....லவி காம்பிகாலையம:)

पद्मैर्वा तुलसीपुष्पैः कल्हारैर्वा कदम्बकैः ॥
चम्पकैर्जातिकुसुमैर्मल्लिकाकरवीरकैः ।
उत्पलैर्बिल्वपत्रैर्वा कुन्दकेसरपाटलैः ॥
अन्यैः सुगन्धिकुसुमैः केतकीमाधवीसुखैः ।

பத்மைர் வா துளஸீ புஷ்பை: கல்ஹாரைர் வா கதம்பகை: ।
சம்பகைர் ஜாதிகுஸுமை: மல்லிகா கரவீரகை: ।
உத்பலைர் பில்வபத்ரைர் வா குந்த கேஸர பாடலை: ॥ (53)
அந்யை: ஸுகந்திகுஸுமை: கேதகீ மாதவீ முகை; । (54)

தாமரைப் புஷ்பங்கள், அல்லது துளஸியின் புஷ்பங்கள்—அல்லது செங்கழுநீர் புஷ்பங்கள், அல்லது மாலதியான கதம்ப புஷ்பங்கள், அல்லது சம்பக புஷ்பங்கள், அல்லது ஜாதி புஷ்பங்கள், அல்லது மல்லிகைப் புஷ்பங்கள், அல்லது அரளிப் புஷ்பங்கள், அல்லது பெய்தல் புஷ்பங்கள், அல்லது பில்வபத்ரங்கள், அல்லது முல்லைப் புஷ்பங்கள், அல்லது குங்குமப்பூக்கள், அல்லது பாடலி புஷ்பங்கள்; அல்லது தாழம்பூ, மாலைமந்தி முதலான மல்லை மாலை வேறு புஷ்பங்களால் (எவனொருவன் ஸ்ரீசக்ரத்தை இங்கு ஆயிரம் மாமங்களைச் சொல்லி ஒரு கடலை மாலை அர்ச்சிக்கிறானோ),

1. துளஸீ புஷ்பங்களென்று சொன்னதிலும் துளஸியின் தளங்கள் விலக்கப்பட்டு, அதில் புஷ்பமாகாதிரி மலர்ந்திருக்கும் பாகத்தை மட்டுமே அங்கீகரிக்கப்பட்டதும் மாலையை அர்ச்சனை செய்யும் விஷயத்தில் துளஸியை விலக்கிச் சொல்வதானது அதின் தளங்களைப் பற்றியதே தவிர துளஸியையே அடியோடு விலக்கப்பட்டதல்ல. இது நீலாதந்த்ரத்தில்,

'நாகேசாபஹாரஞ பலிபி: நாகநாயகைர் மகேசாரணம: |
அபாமார்க தலீர் ப்ருங்கை: துளஸீதல வர்ஜிதை: |
பஞ்சீயோ ஸதர பக்த்யா ந்ருணும் சிக்ர பலாப்தயே ||'

என்று ஸ்படஷ்டமாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

2. நிஷித்தமான (விலக்கப்பட்ட) புஷ்பங்களால்கூட அம்பாளைப் பூஜை செய்யலாமென்பதாக அடுத்த தர்க்கத்தில்,

'தேவீபூஜா ஸதா சஸ்தா ஜலஜை: ஸ்தலஜைரபி |
விஹிதைச்ச நிஷித்தைர் வா பக்தியுக்தேந சேதஸா ||'

என்று சொல்லப்பட்டபோதிலும் அவ்விதம் நிஷேதிக்கப்பட்ட புஷ்பங்களையும் ஏற்றுக்கொள்வதான தும் பக்தியின் ஆவச்யகதையைக் காட்டுவதற்கே தவிர அவைகளை ஒப்புக்கொண்டதாகச் சொல்லப்பட்டதல்ல.

மேலும் புஷ்பங்களைகப்பட்டாவிட்டால் அந்த புஷ்பத்தின் செடிகளின் பத்ரங்களால் (இலைகளால்) பூஜை செய்யலாமென்பதாக,

'புஷ்பாணு மப்யலாபே து தத் பத்ரை: அர்ச்சயேத் சிவாம் |'

என்று காளீ புராணத்தில் சொல்லப்பட்டதானதும் நித்யகர்மாவாகச் செய்யப்படும் பூஜையைப் பற்றியது. இங்கு சொல்லப்படும் பத்ரமாகவும் மேன்றதான காம்யகர்மாக்களில் அபிஷேகம் பிரதிநிதியான வஸ்துக்கள் உபயோகிக்கக்கூடாது என்று மீமாம்ஸா சாஸ்த்ரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

3. 'ஸுகந்திதுளஸீமாலை:' என்றதினால் அங்கங்குள்ள புஷ்பங்கள் விலக்கப்பட்டனவேயானாலும், நிர்க்கந்தமான ஜாதி(சொர்ண பத்தை) புஷ்பங்களேன்ற சிகப்பு புஷ்பங்கள் விலக்கப்படவில்லை. (சிகப்பு நிறமுள்ள புஷ்பங்களில் அம்பாளுக்கு ப்ரீதியென்பதாகச் சொல்லப்படுகிறது.)

4. 'ரக்த மாதுலுங்க:' என்றதினால் புன்னை புஷ்பம், மாதுளம் முதலியனைகளும் சொல்லப்பட்டன.

5. இவ்விதம் எடுத்துக்கொள்ளப்பட்ட புஷ்பங்களுக்குள் அம்பாளுடைய ப்ரீதியை உண்டுபண்ணுவதில் விஷயத்தில் இருக்கும் தாரதம்யமானது ஆதித்ய புராணம், காளிகா புராணம் முதலியவற்றில் சொல்லப்பட்டிருக்கிறது.

5. புஷ்பங்களையாலும், தர்ப்பங்களையாலும், பழங்களையாலும் தூபத்தில் அர்ப்பணம் பண்ணும்போது அவற்றை அதேதான் முகமாகப் போடக்கூடாது. அப்படிப் போட்டால் தேவதைக்கு விரோதிக்கும். அவை ஸ்வபாவத்தில் மரங்களில் அல்லது செடிகளில் (ஊர்த்வமுகமாக) இருப்பதுபோலவே அர்ச்சனையில் போடவேண்டும். ஆயினும் இந்த நியமம் தூபத்தில் புஷ்பாஞ்ஜலியில் மட்டும் கிடையாது. அப்போது புஷ்பங்களை இரண்டு கைகளாலும் வாரி எடுத்துப்போவதால் இதை அனுஷ்டிக்க முடியாது.

'புஷ்பம் வா யதி வா பத்ரம் பலம் வேஷ்டமதோ முகம் |
தக்கதம் தத் ஸமாக்யாதம் யதோர்த்வம் தவார்ப்பயேத் |
அதோ முகார்ப்பணம் வேஷ்டம் புஷ்பாஞ்ஜலிவிதிம் விநா ||'

[பேட்காரிணீ தந்த்ரம்]

7. எந்தத் தூபத்திலும் ஒவ்வொரு புஷ்பத்தையும் தனித் தனியாகப் போடவேண்டும். அப்படிக்கில்லாமல், சேர்த்தாற் போல் அள்ளியள்ளிப் போட்டால் எந்தத் தூபமாகாது.

'வைதூபாதிஷு புந: புஷ்பம் ஏகைகம் அர்ப்பயேத் |
ஸமுதாயேன சேத் தூபா லகு புஷ்பார்ப்பணம் ந தத் ||'

[பேட்காரிணீ தந்த்ரம்]

புஷ்பங்கள் அனேக ஜாதிகளாக இருந்தால் அந்த ஜாதியை மற்றவைகளுடன் கலக்காமல் உபயோகித்துவிட்டுப் பிறகு மற்றொரு ஜாதியை உபயோகித்துக்கொள்ளவேண்டும்.

तस्य पुण्यफलं वक्तुं न शक्नोति महेश्वरः ॥

தஸ்ய புண்ய பலம் வக்தும் ந சக்நோதி மஹேச்வர: |

அதனால் எந்தெந்த புண்யாலாபம் சொல்லுவதற்கு மஹேச்வரனால் (கூட) முடியாது.

1. மஹேச்வரர் என்பவர் அம்பாளுடைய பஞ்சப்ரேத மஞ்சத்தின் கால்களில் ஒன்றாயிருப்பவர். (ப்ரம்ஹா, விஷ்ணு, ருத்ரன், மஹேச்வரர் இந்நால்வரும் கால்களாகவும் ஸதாசிவனை பீடத்திலுள்ளவராகவும் இருப்பதாகச் சொல்லியிருக்கிறது). அப்படிப்பட்ட மஹேச்வரர்களுடைய ஸர்வக்ஞதையில்லாததால் இந்த ப்ரயோகத்தில் கிடைக்கும் புண்ய பலனுடைய அளவைப்பற்றிச் சொல்லமுடியாது என்று சொல்லியிருக்கிறது. அப்படிக்கிருக்கும்போது (எல்லாமே சொல்லியிருக்க) ரசி முதலான அளவுகளால் நாம் அறிய

வாலது சொல்லலானது எப்படி முடியுமென்பதால் ஏற்படு கிறது. ஆகவே இதனால் புண்யபலனைத்து எல்லையற்றது என்பதாகச் சொல்லப்பட்டது.

அதைப்பற்றிச் சொல்வதானால் ஸர்வக்ஞரான அர்ச்சா னால்தான் முடியுமென்பதாக மேலே சொல்லுகிறார்:—

स वेत्ति ललितादेवी स्वचक्रार्चनजं फलम् ।
अन्ये कथं विजानीयुर्ब्रह्माद्याः स्वल्पमेधसः ॥

ஸ வேத்தி லலிதாதேவீ ஸ்வ சக்ரார்ச்சநஜம் பலம் ।
அன்யே கதம் விஜாநீயுர் ப்ரம்ஹாத்யாஸ் ஸ்வல்பமேதஸ:॥(56)

தன்னுடைய சக்ரத்தை அர்ச்சனைப் பண்ணுவதினால் ஏற்படுகிற பலன் எல்லையென்று லலிதாதேவிக்குத்தான் தெரியும். (அப்படியிருக்கும்போது) ஸ்வல்பமான புத்தியை யுடைய ப்ரம்ஹாதிகள் அதை எப்படி அறிவார்கள்.

1. 'ஸ்வல்பமேதஸ:' என்று ப்ரம்ஹாதிகளைச் சொல்வதி லிருந்தே அவர்கள் இந்தப் புண்யத்தின் அளவைத் தெரிய முடியாமலிருப்பதின் காரணமும் சொல்லப்பட்டதாம்.

2. விஷயங்களை க்ரஹித்து அவற்றை ஞாபகத்தின் மூலம் திருக்கும் சக்திக்கு மேதையென்று பெயர்.

3. இந்த புஷ்பார்ச்சனை ப்ரயோகமானது ஸாலக்ராமத் தைப் பூஜிப்பதுபோன்றதல்ல. ஸாலக்ராமத்தைப் பூஜிப்பதில் சில நியமங்கள் இருக்கையில், எதனையோ சொல்லிய ஆறு ராசிகளை புண்யபலத்தைத் தெரிந்துக்கும் ப்ரயோகமானதால் கடினமாயிருப்பதுடன் அதைவிடச் சுலபமான புண்யபலத்தைத் தெரிந்துக்கும் ப்ரயோகமானதால் தெய்வத்தில் ப்ரம்மத்தி னால்லாதே. ஆகவே அந்த ப்ரயோகமானது அஜ்ஞானத்தி லில்லாமல் ப்ரமாணஜ்ஞானமாற்றதாக ஆகிவிடுமென்ற ஸந்தேஹமும் ஏற்படக்கூடும். ஆயினும் அப்படியல்ல.

4. கடினமாகத் தோன்றும் அந்த ப்ரயோகத்தைப்பற்றிச் சொல்லும் வாக்கியங்களெல்லாம் 'அதிசயம்', 'நித்யம்' முதலான வார்த்தைகளோடிருப்பதாலும், அதைச் செய்யா

விட்டால் ப்ரத்யவாயமேற்படுமென்று சொல்வதாலும், அந்த ப்ரயோகமானது தினந்தோறும் அவச்யம் செய்யப்படவேண்டியது. மேலும் நித்யகர்மாவான அந்த ப்ரயோகத்தைச் செய்யாவிட்டால் ஆயுஷ்காமம், புஷ்டிகாமம் முதலான காம்ய ப்ரயோகங்களைச் செய்வதற்கு அதிகாரம் கிடையாதென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இது தவிர, அக்னிஹோத்ரத்தைப்பற்றிச் சொல்லப்படுவதுமாதிரி, நித்ய கர்மாவுக்கே வைதானலத்திலும் காம்யத்வமும் இருக்கலாம். ஆகவே நித்யகர்மாவாகச் சொல்லப்பட்ட ப்ரயோகத்தில் ஜனங்களுக்கு ப்ரவ்ருத்தி இருக்காதோ என்ற சங்கைக்கு இடமில்லை.

5. இங்கு சொல்லப்பட்ட ப்ரயோகத்தைப்பற்றிய சில விசேஷங்கள் பின்வருமாறு—சுக்ரார்ச்சனத்தை ஆரம்பிக்கும் போதே அபரிமித புண்ய ப்ராப்த்யர்த்தம் (இன்ன புஷ்பங்களென்பதான அளற்றின் பெயரைச் சொல்லி) குலோத்பவ: தேவீம் த்ரஜயிஷ்யாமி என்று ஸங்கல்பித்து, ஆஸுர பூஜைக்குப் பிறகு (இந்த காண்ட ஸமாப்தத்தின்) பூர்வ பாகத்தைப் பூர்த்தி செய்து, ப்ராயஸ்சித்தத்தைச் செய்து, ப்ராணாயாமத்தைச் செய்து, ஸங்கல்பத்தையும் மஹாவாக்ய விசாரத்தையும் முடித்து, ஸ்ரீ தேவீ மந்த்ரத்தையும் ஜபித்து, ஸ்ரீ சக்ரத்தை பூஜிக்கவேண்டும். [இதே சில ராஜஸோபசார பூஜாவிதிகளைப்பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. இதில் ராஜஸோபசாரங்கள் அடங்கிய பாகத்தில் ராஜ்ஞ்ஞை. ராஜ்ஞ்ஞீயர் என்பது ரிஷ்யாதி ந்யாஸம், ராஜ்யாஸனம், அங்கந்யாஸம். த்ரிதாரி என்பது ஸ்ரீ: ஸ்ரீ. த்ரிதாரி காண்ட முதல் பாகமான காலம்:—ஸ்ரீ: ஸ்ரீ.]

இம்மாதிரி சதுர்வித புருஷார்த்தங்களில் தர்ம, அர்த்த, காமங்களை (த்ரிவர்கத்தை) கொடுப்பதைப்பற்றி இதுவரையில் சொல்லிவிட்டு இதற்குமேல், அடுத்ததான மோக்ஷமென்ற நான்காவது புருஷார்த்தத்தைக் கொடுப்பதைப்பற்றிச் சொல்ல ஆரம்பித்து, முதலாக கைவல்யமளிப்பதிற். ஐந்தாவது முக்தியைக்கொடுக்கும் ப்ரயோகத்தைச் சொல்லுகிறார் :-

प्रतिमासं पौर्णमास्यामेभिर्नामसहस्रकैः ।
रात्रौ यश्चक्रराजस्थामर्चयेत्परदेवताम् ॥

ப்ரதிமாஸம் பௌர்ணமாஸ்யாம் ஏபிர் நாம ஸஹஸ்ரகை:।
ராத்ரௌ யः சக்ரராஜஸ்த்தாம் அர்ச்சயேத்
பரதேவதாம் ॥ (56)

ஒவ்வொரு மாதமும் பௌர்ணமியில ராத்திரியில் ஸ்ரீசக்ரத்திலிருக்கும்படியான பரதேவதையை எவனொருவன் மேலெசான்ன புஷ்பங்களைக்கொண்டு இந்த ஆயிரம் நாமங்களால் அர்ச்சனை செய்கிறானோ,

स एव ललितारूपस्तद्रूपा ललिता स्वयम् ।
न तयोर्विद्यते भेदो भेदकृत्पापकृद्भवेत् ॥

ஸ ஏவ லலிதா ரூப: தத்ரூபா லலிதா ஸ்வயம் ।
ந தயோர் வித்யதே பேத: பேதக்ருத் பாபக்ருத் பவேத் ॥ (57)

அவனே ஸ்ரீ லலிதாதான் ரூபமாக ஆகிறான். ஸ்ரீ லலிதாதானே தான் அவன் ரூபமாக ஆகிறாள். அவர்களிருவருக்குள் பேதமே இல்லையாகும். (அப்படி) அவர்களுக்குள் பேதத்தைக் கல்பிக்கிறவன் (பாபம் செய்கிறவன்) பாபம் சம்பாதனையை ஆகிறான்.

1. ப்ரதி பௌர்ணமாஸ்ய என்று சொல்லுவதால் ப்ரதி மாஸ என்று சொன்னதுபோலாகிறது. (உயிருள்ள வரையில்) என்று அறியவேண்டியதற்காகச் சொல்லப்பட்டது.

2. ஏபி:—முன் சொல்லப்பட்டவைகளும் மற்ற புஷ்பங்களால் என்று அர்த்தம்.

3. ஒரு தடவை அர்ச்சித்தாலேயே எல்லா பாலத்தின் அளவான ஸ்ரீ லலிதாபரனுக்கு பட்டிருக்கான் தெரியும் என்று சொல்லாதிருப்பதால், அவ்விதம் திருப்பித்திருப்பி (இங்கு சொல்லப்பட்டபடி) அர்ச்சித்தால் உடனே ஸ்ரீ லலிதம்

பாளாகவும், லலிதாம்பாளே உபாஸகனுகவும் ரூபதாகாத் ம்யம் கற்பிதுவதை ந்யாயலஸித்தமானது என்பதாக 'ஸ ஏவ லலிதா....ஸ்வயம்' என்று சொல்லப்பட்டது.

4. பரஸ்பரம் ப்ரதியோகியாக இருக்கும் தாதாத்ம்யத் தைச் சொல்வதற்காக 'ஸ ஏவ லலிதா ரூப:', 'தத் ரூபா லலி தாஸ்வயம்' என்று இரண்டு விதமாகவும் சொல்லப்பட்டது.

5. பேதாம்ஸலவாகயிருக்கையில் தாதாத்ம்யமென்று இங்கு சொல்லப்பட்டதானது உபாதான, உபோபயங்களென்ற லக்ஷணத்தை அனுஸரித்துச் சொல்லப்பட்டதென்று தோன்றக்கூடும். ப்ரமாணமானது 'ந தயோர் வித்யதே பேத:' என் பதிலால் நீக்கப்பட்டது. தயோ: - தேவீ, பக்தன் இவர்களுக் குள் பேத: என்றால் வாஸ்தவமான பேதம் என்று அர்த்தம். வாஸ்தவமான பேதம் ஒன்றுமில்லையென்று இங்கு சொல் வதானதால் ஸகல விதத்திலும் இருவருடம் ஸமானமாயிருப் பதால் அபேதத்தைதான் சொல்லுகிறதல்லவா, இவ்வருக்குள்ள தாதாத்ம்யத்துக்கு வேறு ஸ்தீயு ஸ்ரீட்டது.

6. இவ்விதமிருக்கும் அபேதத்தை ஒப்புக்கொள்ளாமல் எப்படியிருந்தாலும் வாஸ்தவத்தில் பேதம்தான் என்று ஆக் ரஹம் கொள்பவனை 'பேதகருக்கு பாபக்ருத் பவேத்' என்பதாக அதுத்தாற்போல் தண்டிக்கிறார். அப்படியான அபசாரத்தை (இரு ப்பது இல்லாதவனை), உபாஸகன் பார்த்தால் (நிச்சயம் இறந் தவன்), அல்லது அப்படியான ப்ரஸித்தியாகிறவன், உபாஸகன் ஸந்நிதியை (அ) ஸமீபமான பிரதேசத்திற்கு மூலமாகத் தோன்றாமல் அஜ்ஞானமாகயிருப்பவன் 'பேதகருக்' என்று இங்கு சொல்லப்பட்டான். அதனால் சாஸ்த்ரத்தைப்பற்றி, ப்ரமாணத்தைப்பற்றி, அங்கங்கு ஸாதகமாயிருப்பதால் அசுத்தியாகையால். பரம ஐக்யம் ஒப்புக்கொள் ளக்கூடியதல்லவென்று அபேதகருக்கு சொல்லுகிறவர்கள் படிப்பறிவில்லாத்தால் அஜ்ஞானமாகவோ, அபேதமாகிய அர் தத்தைச் சொல்லுவதால் தான் இப்படியானதென்று தாத்பர்யத்தைக் கல்பிக்கிறவனுடைய பரிஜ்ஞானம் [illegible] தான் இடமாகாது.

7. இப்படியான தாபஸன தேஹதுக்கங்களை (தேஹத்வா பாவங்களை, தேஹதாப்தோஷங்களை) நிவர்த்திக்கும் அப்படி நிவர்த்திப்பதை சாஸ்த்ர விதத்தாலாயிருப்பதால் அபேதகருத்தா

யிருப்பவன் மரணத்துக்காக (மரணம் சம்பவிக்கிறவரை, மரிப்பதாக) ஆகிறான் என்று சொல்லப்பட்டான்.

8. உபாஸகன் மரணமடைகிறவரையிற்றே என்ற சங்கையுற்று,

'कस्य प्राणा उत्क्रामन्ति अत्रैव समवलीयन्ते ।'

(முக்தனுடைய ப்ராணன்கள் அவனிடத்து வெளியில் செல்லுகிறவையல்ல, அவனிடமே அடங்கிவிடுகின்றன) என்ற சுருதி வாக்யத்திலுள் நீக்கப்பட்டது என்று தாத்பர்யம்.

இவ்விதம் சொல்லப்பட்ட ப்ரயோகத்தைவிட வேலை மானதும் சுலபமானதுமான முக்தியைக் கொடுப்பதான ஸ்ரீ ப்ரயோகத்தை மேலே சொல்லுகிறார்:—

महानवम्यां यो भक्तः श्रीदेवीं चक्रमध्यगाम् ॥
अर्चयेन्नामसाहस्रैस्तस्य मुक्तिः करे स्थिता ॥

மஹாநவம்யாம் யோ பக்தः ஸ்ரீதேவீம் சக்ரமத்யகாம் ।
அர்ச்சயேத் நாமஸாஹஸ்ரைः தஸ்ய முக்திः கரே
ஸ்திதா ॥ (58)

எந்த பக்தனொருவன் மஹா நவமியன்று சக்ரத்தின் மத்தியிலிருப்பவளான ஸ்ரீதேவியை (இந்த) ஆயிரம் நாமங்களால் அர்ச்சிக்கிறானோ; அவனுக்கு முக்தியானது கையிலிருக்கிறது.

1. இங்கு சொல்லியிருப்பதுடன், ஸ்ரீவித்யை என்ற அர்த்தத்தைக் கொடுக்கும் திரிபுரா மஹாரஹஸ்யம், மந்த்ரியில் எண்பதையும் சேர்த்துக்கொள்ளவேண்டும். அதாவது, உபாஸகனொருவன் தன்னுயிருள்ள வரையில் ராத்ரி மஹா பூஜையிலும் ராத்ரியில் இந்த ப்ரயோகத்தைச் செய்யவேண்டுமென்பது சொல்லப்பட்டது.

2. மஹாராத்ரியின் கடைசி இரண்டு நாழிகைகளும் மஹா நவமியென்று சொல்லப்படுகிறது. மஹாநவமி என்பதற்கு, சக்தி ஸாமரஸ்யமுறுவதாகும். அதிலொரு பங்கு ஜாதிகளுக்கும் அர்ப்பிக்கையிட்டு நிறுத்துவதற்கு அதிகாரமுண்டாகிறது.

3. மஹாராத்ரியென்பதில் மஹத் மஹாராத்ரியென்றும் மஹஸ்ஸுக்கு மஹாராத்ரியென்றும் இரண்டு மஹாராத்ரிகளுண்டாகின்றன.

'சதுர்தசீ மஹாபூஜா க்ரியதே யா சு வார்ஷிகீ ।

என்ற தேவீ மாஹாத்ம்ய வசனத்தில் மார்வதிகீ என்ற பதத்திற்கு பார்வதீ ஆராதனத்தில் அதாவது, வளர்த்தலில் செய்யப்படும் (ப்ரஹ பூஜை) என்பதாக ஸம்ப்ரதாயமறிந்தவர்களால் அர்த்தம் சொல்லப்பட்டிருக்கிறது. 'மார்வதிகீ' என்பதில் வருகிற ஸகாரத்திலுள்ள 'ரத்காலத்தில்' என்ற அர்த்தம் அர்த்தம் எற்படுகிறது. சிலர் 'மார்வதிகீ' என்பதற்கு சதுர்தசீலென்ற பார்வருதுவில் இருக்கும் (சதுர்தசீ) என்ற அர்த்தம் செய்கிறார்கள்; பார்வருதுவில் சதுர்தசி அடங்கியதாக எற்படுவதால் அவ்வித அர்த்தம் சரியல்ல. பின்னும் 'ப்ரதிபார்வதம் செய்யப்படும்' என்ற அர்த்தம் சொல்லுகிறவர் அவ்வித அர்த்தம் சொல்லப்படும் விசேஷணமானது அவஸ்யமானதால் அந்த அர்த்தமும் சரியல்லவென்று எற்படுகிறது. மஹாத்ம்யமானது இரவைகப்பட்டதென்பது ருத்ரயாமளத்தில்,

'வாஸந்தே சரதாத்ரௌ து பூஜயேத் சக்தஸந்திகம் |'

என்ற பார்வசனத்தால் சொல்லப்பட்டிருக்கிறது.

4. இந்த இரண்டுவிதமான மஹாத்ம்யங்கள் எந்தெந்த மந்த்ரங்களில் வருகின்றனவென்ற விஷயத்தில் தேவீபாகவதம், மூன்றாவது ஸ்கந்தத்தில் காமாக்ஷீ ராஜாவைக் குறித்து ஸுதர்சனமுனி அரசனுக்காக வருகிறார்.

'சதுர்தசே மஹாபூஜா கர்த்தவ்யா மம ஸர்வதா |
ரவராத்ரோதஸலம் ராஜந் விதிவத் பரிகல்பய ||
ஸைத்ரே சாச்வயுஜே மாஸி த்வயா கார்யோ மஹோத்ஸவ: |
ரவராத்ரே மஹாராஜ மம ப்ரீதிவிதாயக: ||'

என்ற வாக்யங்களில் வைத்தார், ஆச்வயுஜம் என்ற மாதத்தினில் வருவதாகச் சொல்லப்பட்டது. வைதாகம் ரத்ரைகாத்தில் ஆச்வயுஜ ஆதாரம், வைதிக மாதங்களில் வருவதாகவும் சொல்லப்பட்டது.

5. இந்த இரண்டு ரகமான மஹாத்ம்யங்களில் சதுர்தசி மஹாத்ம்யபின்ன லக்ஷணமும், மற்றது இரண்டிற்குமுள்ள மற்ற என்ற பதத்தை முன்னதாகச் சேர்த்தும் சொல்லுவது வழக்கம்.

'ஆச்வினஸ்ய து சுக்லஸ்ய யா பவேத் அஷ்டமீதிதி: |
மஹாஷ்டமீதி ஸா ப்ரோக்தா தேவ்யா: ப்ரீதிகரீ பரா ||
தஸ்யாம் து ரவமீ யா ஸ்யாத் ஸா மஹாரவமீ ஸ்ம்ருதா |
ஸா திதி: ஸர்வதேவானாம் பூஜநீயா சிவப்ரியா ||'

[காளிகா புராணம்]

அதாவது, ஆக்ஞை நாதத்திய சுக்ல பக்ஷத்தில் வரும் அஷ்டமியை மஹாஷ்டமீயென்றார். அதற்குதந்த தினத்தை மஹா நவமீயென்றும் சொல்கிறது. இதிகாசாதிரி சொல்லுகையில்,

'ஆச்வினே மாஸி சுக்லே து யா ஸ்யாத் பூலேந சாஷ்டமீ |
ஸா மஹாத்யஷ்டமீ ஜ்ஞேயா தத்ர தேவீ க்ருதாலயா ||'

என்று மூலநக்ஷத்திரம் அஷ்டமீ திதியிலிருந்தால் மஹாஷ்டமீயென்று சொல்லுகிறார். இவ்விதமாகவே,

'கன்யா ஸமாச்ரிதே பாநௌ யா ஸ்யாத் மூலேந சாஷ்டமீ |
ஸா மஹாத்யஷ்டமீ ஜ்ஞேயா மஹாநவமீயுதா ||'

என்று ப்ரம்மவைவர்த்த புராணத்திலும் சொல்லப்பட்டது. அவ்விதம் மூல நக்ஷத்ரம் சேர்வதைக் கொண்டதால் மஹாநவமியாய் ஸம்பவிப்பதைக்குறித்தது. மூலநக்ஷத்ரம் சேராமல் (அதற்கடுத்ததான) பூராடம் (பூர்வாஷாடம்) சேர்ந்திருந்தாலும் அந்த அஷ்டமீ மஹாஷ்டமீ தான்.

'மூலருக்ஷ ஸமாயுக்தா பூஜாயோ ப்ரயத்நத: |
மூலாபாவேऽபி கர்த்தவ்யா யதி ஸ்யாத் தோயஸம்யுதா ||'

(இதில் தோயம் என்பது பூர்வாஷாடநக்ஷத்திரத்தைக் குறிக்கும்)

6. ஆகவே, அஷ்டமீ திதியில் மூலமிருந்தாலும் பூராடமிருந்தாலும் இரண்டுமிருந்தாலும் மஹாஷ்டமீ என்றும் நவமீ மஹாநவமீயென்றும் பெயர் பெறும்.

'ஆச்வயுக் சுக்லபக்ஷே து யாஷ்டமீ மூலஸம்யுதா |
பூர்வயாஷாடயா ஸார்த்தம் ருக்ஷத்வயயுதாபி வா |
ஸா மஹாநவமீ நாம த்ரைலோக்யேऽபி ஸுதுர்லபா ||'

[ந்ருஸிம்ஹப்ராஸாதம்]

பவிஷ்யோத்தர புராணத்திலும்,

'கன்யாகதே ஸவித்ரி சுக்லபக்ஷேऽஷ்டமீ யுதா |
மூலநக்ஷத்ரஸம்யுக்தா ஸா மஹா நவமீ ஸ்ம்ருதா' ||

என்றும், விச்வாமித்ரரால்,

'ஆச்வயுக் சுக்லபக்ஷே து யாஷ்டமீ மூலஸம்யுதா |
யதி ஸ்யாத் ரவிவித்தாபி ஸா மஹா நவமீ ஸ்ம்ருதா ||'

என்றும் சொல்லப்பட்டது. இவ்விதம் அஷ்டமீ, மூலம் இரண்டிற் சேர்ந்த திதிக்கும் மஹாநவமீ என்ற பெயர் என்பதாகச் சொல்லப்படுவதால் நவமீ திதிக்குத்தான் மஹாநவமீ என்ற பெயர் என்பதாகச் சொல்லுகிறவர்களின் கருத்தை ஆதரிப்பது அநுசிதம்.

7. அஷ்டமீ, நவமீ திதிகள் பரண்டாம் கலந்த தினங் களாயிருந்தால் அந்த தினங்கள் மிகவும் விசேஷமானவை யென்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அஷ்டமீ ருத்ரனுக்கு விசேஷமான தினமென்றும் நவமீ அம்பாளுக்கு விசேஷமான திதியென்றும், அவையிரண்டிலும், கலந்திருக்கும் திதியானது அர்த்தநாரீச்வர ரூபமான உமாமஹேச்வர ஸ்வரூபமானதால் மிகவும் விசேஷமென்றும் சொல்லப்பட்டது.

'அஷ்டம்யா நவமீ யுக்தா நவம்யா சாஷ்டமீயுதா ।
அர்த்தநாரீச்வரப்ராயா உமாமாஹேச்வரீ திதி: ॥'

போஜராஜரும் பின்வருமாறு சொல்லியிருக்கிறார் :—

'அஷ்டம்யாம் பூஜயேத் ருத்ரம் நவம்யாம் சக்திமீச்வரீம் ।
உமாயா நவமீ ப்ரோக்தா ஹரஸ்ய திதிரஷ்டமீ ।
த்வயோர் யோகே மஹாபுண்யா உமாமாஹேச்வரீ திதி: ॥'

8. இதேவிதமாக வாஸுக்ய ஸம்ஹிதையில் அஷ்டமீ, நவமீ திதிகளை நிர்வசிக்கவேண்டுமென்பதாக ஸம்ஹிதா பாகத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. விச்வரூபாசார்யரும் இதன்படி ஸம்ஹிதாவசனத்தைப்பற்றிச் சொல்லுகையில்,

அஷ்டமீ நவமீ யுக்மே சிவகேஷ்டே மஹோத்ஸவ: ।
சிவசக்த்யோ: ஸாமரஸ்யாத் பஷயோருபயோரபி ॥'

என்று அஷ்டமீ, நவமீ இரண்டையுமுடைய திதியானது சிவ சக்திகளுடைய ஸாமரஸ்யமாயிருப்பதினால் சிவகேஷ்டத் தன்றில் பரிஷத்ஸமயம் காலமாயிருப்பதாகச் சொல்லி, அதை இரண்டு ஸம்ஹிதாவசனங்களிலும் உண்டு என்பதை 'சிவகேஷ்டயோருப யோரபி' என்பதனால் குறித்திருக்கிறார். வாஸுக்யம், சாரதம் என்பதாக ஸம்ஹிதாவகையில் இரண்டு பரிஷத்களிருப்பதை 'உப யோ: சிவகேஷ்டயோ:' என்று சொல்லப்பட்டது.

9. அஷ்டமியில் அர்த்தராத்ரி பூஜிப்பதைப்பற்றி,

'ஆச்வயுக் சுக்ல நவமீ த்வஷ்டமீ மூலஸம்யுதா ।
ஸா மஹாநவமீ தஸ்யாம் ஜகந்மாதரம் அர்ச்சயேத் ॥'

என்ற தேவீபுராணத்திலும், நவமியில் அர்த்தராத்ரி பூஜிப்ப தைப்பற்றி,

'நவம்யாம் பூர்ணமாயுக்தா தேவை: ஸர்வை: ஸுபூஜிதா ।
ஜகாத மஹிஷம் துஷ்டம் அவத்யம் தேவதாதிபி: ॥
லப்த்வாபிஷேகம் வரதா சுக்லே சாச்வயுஜஸ்ய து ।
தஸ்மாத் ஸா தத்ர ஸம்பூஜ்யா நவம்யாம் சண்டிகா புதை: ॥

மஹத்வம் யதி யத: ப்ராப்தா அத்ர தேவி ஸதஸ்வதி |
அதோ(அ)ர்த்தம் மஹதி ப்ரோக்தா நவமீயம் ஸதா புதை: ||'

என்ற பவிஷ்யோத்தர புராணத்திலும் சொல்லப்பட்டுள்ளது.

10. இப்படி செய்யப்படும் பூஜையில் அஷ்டமி திதியன்று செய்வது பாதி ராத்திரியில் (நடு இரவில்) செய்யப்பட வேண்டும்.

'பூச்விதே மாஸி மேகாந்தே மஹிஷாஸுர மர்திநீம் |
தேவீம் ச பூஜயித்வா யே அர்த்தராத்ராவ்டமீஷு ச ||'
[தேவி புராணம்]

'கன்யா ஸம்ஸ்தே ரவாவீசாம் சுக்லாஷ்டம்யாம் ப்ரபூஜயேத் |
ஸோபவாஸோ நிசார்த்தே து மஹாவிபவ விஸ்தரை: ||'
[சக்ர ரஹஸ்யம்]

விச்வரூபாசார்யரும் பின்வருமாறு சொல்லியிருக்கிறார்:—

'அஷ்டமீ ராத்ரிமாஸாத்ய பூஜாம் க்ருண்வந்தி பார்வதி |
நிசார்த்தே பூஜிதா தேவீ வைஷ்ணவீ பாபநாசிநீ |
தஸ்மாத் ஸர்வ ப்ரயத்நேந ஹ்யஷ்டம்யாம் நிசி பூஜயேத் ||'

ஆயினும் சிலர் பவிஷ்யோத்தர புராணத்தில்,

'தத்ராஷ்டம்யாம் பத்ரகாளீ தக்ஷயக்ஞ விநாசிநீ |
ப்ராதுர்பூதா மஹாகோரா யோகிநீகோடிபி: ஸஹ |
அதோ(அ)ர்த்தம் பூஜநீயா ஸா தஸ்மிந்நஹநி மாநவை: ||'

என்ற சொல்லியிருப்பதைக் கவனித்தொன்றி அஷ்டமியில் செய்யும் பூஜையானது பகலில் செய்யப்படவேண்டுமென்று சொல்லுகிறார்கள். ஆயினும் அது தவறு. அந்த சொல்லப்பட்ட 'தஸ்மிந் அஹநி' என்ற பதத்திற்கு அந்த தினத்தில் அதேநேரத்தில் என்று அர்த்தம்.

11. நவமியில் செய்யப்படும் பூஜையானது பகலில்தான் செய்யப்படவேண்டுமென்று சொல்லப்படுகிறது.

12. இரண்டு மூன்று தினங்களில் செய்யப்படும் பூஜையானது தனித்தனியாக எற்பட்டதோடானால் பலனைத் தருவதில் ஒன்றைவிடயென்று தொடருக்கமாயிருக்கிறபடியால் இரண்டில் செய்துகொள்தான் பூர்ணமான பலன் கிடைக்கும்.

'அஷ்டம்யாம் ச நவம்யாம் ச ஜகந்மாதரமம்பிகாம் |
பூஜயித்வாச்விநே மாஸி விதேசாதோ ஜாயதே நர: ||'

என்ற பவிஷ்யோத்தர புராண வசனத்தில் இரண்டு திதிகளின் பூஜையையும் சேர்த்து ஒரே ப்ரயோகமாகச் சொல்லப்பட்டி

ருப்பதாலும், 'அஷ்டமீ நவமீயுக்தே' என்று இரண்டு திதி களையும் சேர்த்து முந்திவந்தவசனத்தில் சொல்லப்பட்டிருப் பதாலும் இது ஏற்படுகிறது. ஆகவே இந்த பூஜையானது ஸாதாரணமாய் நவராத்ரியில் செய்யப்படுவதைத் தவிர வேறென கர்மாவென்பது ஸித்தாந்தமாகிறது.

13. இந்தப் பூஜையைச் செய்ய ஸகல ஜாதியர்களுக்கும் அதிகாரம் உண்டு. பவிஷ்யோத்தர புராணத்தில் இந்தப் பூஜையைப்பற்றிச் சொல்ல ஆரம்பிக்கும்போது இந்த விஷயம் சொல்லப்பட்டிருக்கிறது.

'பூஜநீயா ஜகந்மாதேவீ ஸ்த்தாகே ஸ்த்தாகே புரே புரே |
க்ருதே ஹ க்ருதே சக்திபரை: க்ராமேக்ராமே வகே வகே ||
ஸ்நாதை: ப்ரமுதிதைர் ஹ்ருஷ்டைர் ப்ராம்ஹணை: |
க்ஷத்ரியைர்விசை: |
சூத்ரை: பக்தியுதைர் ம்லேச்சைர் அந்யைச்ச புவி மாநவை: |
ஸ்த்ரீபிச்ச குருசார்தூல தத்விதாநமிதம் ச்ருணு ||'

இங்கு 'சக்திபரை:' என்பது சண்டிதேவியிடத்தில் பரம பக்தியோடிருப்பதைக் குறித்தது. ம்லேச்சர்களென்பது சபர, கிராத, புளிந்தர்கள் முதலானவர்களைக் குறிக்கும். அன்யை: என்பது அநுலோம, ப்ரதிலோம ஜாதிகளைக் குறிக்கும்.

14. இப்படிப் பூஜிப்பதில் (பலி, கந்தம், அநுலேபனம்) நைவேத்யம் முதலான பூஜாகார்யங்களில் தன் தன்னுடைய குலாசாரத்தை மீறாமல் செய்யவேண்டுமென்று சொல்லப் பட்டிருக்கிறது.

'யஸ்ய யஸ்ய ஹி யாதேவீ குலமார்கேண ஸம்ஸ்த்திதா |
தேந தேந ச ஸாபூஜ்யா பலிகந்தாநு லேபநை: |
நைவேத்யைர் விவிதைச்சைவ பூஜயேத் குலமார்கத:ம் ||'

15. மேலே சொல்லிய காரணங்களினால் மஹாநவமீ யென்ற பதத்தினால் நவராத்ரியின் அஷ்டமீ, நவமீ திதிகளென் றும், நவராத்ரியென்பதே சாரத நவராத்ரீ, வாஸந்த நவராத்ரீ என்ற இரண்டையுமேயென்றும் ஏற்படுவதில் இங்கு சொல்லப் பட்டதன் என்ன என்றால்—அந்த நான்கு திதிகளிலும் இங்கு சொல்லப்பட்ட பூஜையைச் செய்யவேண்டுமென்பது ஏற்படு ஆகவே, உயிருள்ள வரையில் இந்த நான்கு தினங்

கவிலுர், சக்ரராஜத்திலில் (அதாவது சக்ரத்தின் மத்தியி லிருக்கும் பிந்து ஸ்தானத்தில்) இருப்பவளாக ஸ்ரீத்ரிபுரஸுந் தரியை எந்த பக்தனனவன் தன்னுடைய குலாசாரத்தை யனுஸரித்து, அர்த்த ராத்திரியில் இந்த ஆயிரம் நாமங்களால் பூஜிக்கிறானே, அவனுக்கு சின்சுவிதமான முக்திகளும் கைக் குள்ளிருப்பனவைபோல் கிடைக்கின்றன - என்று இங்கு சொல் லப்பட்டது. அதாவது அவ்வளவு ஸுலபமாகக் கிடைத்து விடுகிறதென்று தாத்பர்யம். மஹாநவமீ என்பதுநாள் இதினங் களென்று எற்படுவதாலும், நான்குவிதமான முக்தி கிடைப்ப தாகச் சொல்லப்படுவதாலும், ஒரு நாள் பூஜை செய்தவுடன் ஸாலோக்யம் மட்டும், இரண்டு நாள் பூஜையானவுடன் ஸாரூப்யமும், மூன்று நாள் பூஜையானவுடன் ஸாமீப்யமும், நான்கு நாள் பூஜை செய்துவிட்டால் ஸாயுஜ்யமும் கிடைப்ப தாகவும் இம்மாதிரியாக பலனளிப்பதற்றிய தாத்பர்யமானது ந்யாயமூலமாக ஏற்படுவதால் அதைப்பற்றி இங்கு மூலத்தில் விவரித்துச் சொல்லப்படவில்லை.

இவ்விதம் தனித்தனியாக, போகங்களளிப்பதில் பல னளாக உடையவையும், போகமோக்ஷத்தைக்கொடுப்பதில் பலனை உடையவையுமான ப்ரயோகங்களைச் சொல்லிவிட்டு, போகமும், மோக்ஷமும் இவ்விரண்டையும் ஒருங்கே கொடுக்கக்கூடிய ப்ரயோ கத்தை மேலே சொல்லுகிறார்:—

यस्तु नामसहस्रेण शुक्रवारे समर्चयेत् ।
चक्रराजे महादेवीं तस्य पुण्यफलं शृणु ॥

யஸ்து நாமஸஹஸ்ரேண சுக்ரவாரே ஸமர்ச்சயேத் |
சக்ர ராஜே மஹாதேவீம் தஸ்ய புண்யபலம் ச்ருணு ॥ (59)

எவனொருவன் வெள்ளிக்கிழமையில் மஹாதேவியை ஸ்ரீசக்ரத்தில் இந்த ஆயிர ஸஹஸ்ரத்தால் பன்முக அர்ச் சனைபண்ணுகிறானே அவனுடைய (அவனுக்குக்கிடைக் கும்) புண்ய பலனை (சொல்லுகிறேன்) கேள்.

1. 'நாம ஸஹஸ்ரேண' என்பது ஒரே பதமாகக் கூட்டப்பட்டால் (இந்த) நாம ஸஹஸ்ரத்தினால் என்ற அர்த்த மாகும். அல்லது நாம ஸஹஸ்ரை என்றும் பிரிக்கலாம். அப்போது நாம என்பது ப்ரகரணத்தைக்காட்டும் அப்யய பதமாகும். ஸஹஸ்ரம் என்ற பதமோ இதுவரையில் சொல்

லப்பட்ட ஸங்கர்ப்பத்தையொட்டி நாம ஸஹஸ்ரத்தைக் க
கப்போதோமானது.

2. 'சுக்ரவாரே' என்பது முந்தி வந்தவைகளைப்பற்றி யாவஜ்ஜீவம் (உயிருள்ளவரையில்) என்று சொன்ன ரீதியாக ப்ரதி சுக்ரவாரமும் என்று அர்த்தமுடையது.

सर्वान्कामानवाप्येह सर्वसौभाग्यसंयुतः ।
पुत्रपौत्रादिसंयुक्तो भुक्त्वा भोगान्यथेप्सितान् ॥

ஸர்வாந் காமாந் அவாப்யேஹ ஸர்வ ஸௌபாக்ய ஸம்யுதः ।
புத்ர பௌத்ராதி ஸம்யுக்தோ புக்த்வா போகாந்
யதேப்ஸிதாந் ॥ (60)

இங்கேயே தன்னுடைய விருப்பங்கள் யாவற்றையும் அடைந்து, ஸகலவிதமான ஸௌபாக்யத்தையுடையவனாய், புத்ர பௌத்ராதிகளோடு கூடியவனாய், தான் இஷ்டப்பட்ட போகங்களை அனுபவித்துவிட்டு,

1. இஹ—இந்த (பூ) லோகத்திலேயே, இந்த பதத்தினால் அனுஷ்டிக்கு இங்கு சொல்லப்பட்ட ப்ரயோகத்தின் மூலமாக ஏற்படும் புண்யமானது மிகவும் அதிகமானது என்று குறிக்கப்பட்டது.

'அத்யுத்கடைः புண்ய பாபைः இஹைவ பலமச்நுதே !'

என்றபடி புண்யமாவது, பாபமாவது மிகவும் அதிகமாக இருந்தால் அதின் பலனுடைய அனுபவமானது இந்த லோகத்திலேயே—அதாவது, இந்த ஜன்மத்திலேயே—ஏற்படுமென்று சொல்லப்படும்.

2. ஸர்வ ஸௌபாக்ய ஸம்யுதः—ஸந்ததி, ஸம்பத்து, ஆரோக்யம், வித்யை, பலம் என்பவை முதலான ரூபங்களையுடைய ஸௌபாக்யங்கள் யாவற்றையுமுடையவனாய், என்று அர்த்தம்.

3. புத்ர பௌத்ராதி ஸம்யுக்தः—ஆதி என்ற பதத்தினால் பிள்ளையின் போரன் (கொள்ளுப்போரன்) முதலானபுத்ரக்களும், ப்ருத்யர்கள் (வேலைக்காரர்கள்), ஸ்நேஹிதர்கள் இவர்களும் குறிக்கப்பட்டார்கள். 'ஸர்வ ஸௌபாக்ய ஸம்யுதः' என்ற பதத்தினாலேயே இவர்களெல்லோரும் சொல்லப்பட்டாலும் இப்படித் தனியாகச் சொன்னதினால் அவன் அவர்

கணருடன் கூடவே (அடுத்தடுத்து சொல்லப்பட்ட) போகங்களை அனுபவிப்பதாகத் தாத்பர்யம். அதாவது புத்ராதிகளுடன் கூட இவ்விடப்பட்ட போகங்களையெல்லாம் அனுபவித்துவிட்டு என்ற அர்த்தம்.

अन्ते श्रीललितादेव्याः सायुज्यमतिदुर्लभम् ।
प्रार्थनीयं शिवाद्यैश्च प्राप्नोत्येव न संशयः ॥

அந்தே ஸ்ரீலலிதா தேவ்யாः ஸாயுஜ்யம் அதிதுர்லபம் ।
ப்ரார்த்தநீயம் சிவாத்யைச்ச ப்ராப்நோத்யேவ ந ஸம்சயः ॥

கடைசியாக, ஸாதாரண்யமாகக் கிடைக்கக்கூடாதது, சிவன் முதலிய தேவர்களாலும் வேண்டப்படுவதுமான ஸ்ரீ லலிதாம்பாளுடைய ஸாயுஜ்யத்தை அடைகிறான். அதில் ஸந்தேஹமில்லை.

1. அந்தே—இந்த தேஹம் விழுந்தபின் பிறகு, தேவையான மார்க்கத்தில்போய் என்ற அர்த்தம். இதைப் பற்றி ஏற்கனவே வந்த 'ஸம்பாவ ஸம்பாவநாக்கஸ்த்தா' என்ற 912-வது நாமத்தில் பார்க்கவும்.

2. அதிதுர்லபமான ஸாயுஜ்யம் என்பதிலும் கைவல்ய மோக்ஷமானது சொல்லப்பட்டது.

3. சிவாதிகளால் ப்ரார்த்திக்கப்படுவது என்பதிலும் ப்ரம்மாவும் கூட சிவன் முதலான தேவர்களிலும் பெரியவர் என்பதால் ப்ரார்த்திக்கப்பட்டவர். ஸ்ருஷ்டி ப்ரார்த்தனைகளை செய்தவர்கள் தேவர்களானதால் ப்ரார்த்தனைகளையுடைய ஆங்காங்குள்ள சிவன் முதலானவர்களிடம் ப்ரளயகாலம் வந்தபோது, ஸ்ருஷ்டி செய்தவனும் செய்பவனுமான ஆங்காங்குள்ள போகங்களை அனுபவித்துவிட்டு, ப்ரளயம் நின்றபிறகு ப்ரார்த்தனைகளை செய்பவர்களுக்கு ஆயுஸும் முடிந்தபோது (ப்ரார்த்தனை) சொல்லப்பட்டிருக்கிறது.

'ப்ரம்ஹணஸ்ச ஸதஸ தே ஸர்வே ஸம்ப்ராப்தே ப்ரதிஸஞ்சரே ।
பரஸ்யாந்தே க்ருதாத்மாநः ப்ரவிசந்தி பரம் பதம் ॥'

[கூர்ம புராணம்]

இங்கு 'பரஸ்ய அந்தே' என்பதில் பரம் என்றால் மஹாவிஷ்ணுவுடைய ப்ரார்த்தனையாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

ப்ரம்ஹணே: பூர்ணமாயுர் யத் வர்ஷாணும் சதகம் மதம் |
தத் பரம் காம தஸ்யார்த்தம் பரார்த்தம் அபிதீயதே ||'

இந்த அர்த்தத்தை அனுஸரித்து இங்குவந்த 'அந்தே' என்ற பதத்தினால் 'பரஸ்யாந்தே' என்று சொல்லப்பட்டதாகவும் சொல்லலாம். (கைவல்ய) மோக்ஷத்தையடைவதற்கு ப்ரளய காலம்வரையில் ப்ரம்ஹலோகத்தில் தாமதிப்பதானது தோஷமுள்ளதாகச் சொல்லமுடியாது. போகம், மோக்ஷம் இவ்விரண்டையும் பலமாக உடைய இந்த ப்ரயோகத்தின் மூலமாக ஐஹிக போகங்களுக்குப் பிறகு ஆமுஷ்மிக போகங்கள் அவச்யம் ஏற்படுமாகையால் மோக்ஷமடைய தாமதமாவதில் யாதொரு கெடுதியுமில்லை.

4. இதே காரணத்தால் 'போகாந்' என்ற பதமானது ஐஹிக, ஆமுஷ்மிக போகங்களிரண்டையும் குறிப்பதாகச் சொல்லலாம். இவ்விரண்டுவிதமான போகங்களையும் பக்தன் 'புத்ர பௌத்ராதி ஸம்ருத்தியை அனுபவிக்கிறான்' என்று சொல்லப்பட்டது. கைலம் தன்னுடைய ஆத்மஸ்வரூபத்தில் நிலைத்திருப்பது என்பதான மோக்ஷத்தில் அவர்களுடன் சேர்ந்திருப்பது அஸம்பாவிதமாகையால் புத்ரபௌத்ராதி ஸம்ருத்தியை இருப்பது போகங்களை அனுபவிப்பதில் மட்டும்தான் என்று ஏற்படுகிறது.

இனி, மேலே சொல்லப்பட்ட பலனைவிட உயர்ந்ததான பலன் யாதொன்றும் கிடையாதாகையால் அவ்வித பலனையே (யாவைத் ஜீவம் செய்யவேண்டிய ப்ரயோகத்தின் மூலமாக அல்லாமல்) ஸ்வல்ப தினங்களுக்குள்ளாகவே அடையச் செய்யும் ப்ரயோகத்தை மேலே சொல்லுகிறார்.

यः सहस्रं ब्राह्मणानामेभिर्नामसहस्रकैः ।
समर्च्य भोजयेद्भक्त्या पायसापूपषड्रसैः ॥
यः सरहस्रं ब्राह्मणानां ஏபிர் நாம ஸஹஸ்ரகை: |
ஸமர்ச்ய போஜயேத் பக்த்யா பாயஸாபூப ஷட்ரஸை: ॥ (62)

எவனொருவன் பக்தியோடு ஆயிரம் ப்ராம்ஹணர்களை இந்த ஸஹஸ்ரநாமங்களால் கண்ணுக்குப் தூஜித்து, பாயஸம், அபூபம் முதலிய ஷட்ரஸோபேதமான வஸ்துக்களால் போஜனம் செய்விக்கிறானோ,

तस्मै प्रीणाति ललिता स्वसाम्राज्यं प्रयच्छति ।
न तस्य दुर्लभं वस्तु त्रिषु लोकेषु विद्यते ॥

தஸ்மை ப்ரீணாதி லலிதா ஸ்வஸாம்ராஜ்யம் ப்ரயச்சதி |
ந தஸ்ய துர்லபம் வஸ்து த்ரிஷு லோகேஷு வித்யதே ॥(63)

அவனிடம் ஸ்ரீ லலிதாம்பாளானவள் ப்ரீதியடைந்து தன்னுடைய ஸாம்ராஜ்யத்தை அவனுக்குக் கொடுக்கிறாள். அவனுக்குக் கிடைப்பதற்கரிதான வஸ்து இந்த மூன்று லோகத்திலும் யாதொன்றுமில்லை.

1. இந்த ப்ரயோகத்தில் (முந்திய ப்ரயோகங்கள் சிலவற்றில் வந்த) யாவஜ்ஜீவம் (ஆயுசும்) என்பதான பதங்கள் சொல்லப்படவில்லை.

एवम् यः गुरुते भक्त्या ब्रह्म मध्ये सकृन् नरः ।

என்பதுபோல் இந்த ஸஹஸ்ரப்ரணாம ஹோமத்தை ஆயுசுக்குள்ளாக ஒரு தடவை செய்தாலே போதுமானது.

2. 'ப்ரணாம ஹோமாந்தம்' என்பதினால் ஸ்ரீ விக்னேச்வரர்கள் மட்டும் சொல்லப்பட்டார்கள்.

3. பாயஸமென்பது பரமான்னம். ஆயுஸ் மிகக் குறைவாகவும் பாலு நிறையவுமுடையது. ஆயுஸும் என்பதை மாவைப் பிசைந்து செய்யப்படும் பூரி முதலியவைகள். இவைகளைப் பற்றிப் போஜன குதூஹலம் முதலிய க்ரந்தங்களில் விரிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

4. 'ஸ்வ ஸாம்ராஜ்யம்'—தன்னுடன் அத்யந்தம் அபேதமாயிருப்பது, கைவல்யம் என்றபடி. இப்படிச் சொன்னது 'ஜகத்ஸ்ருஷ்டாதார வர்ஜம் ப்ரகரணாத் அஸந்நிஹிதத்வாத்ச' என்ற ஔபநிஷதர்கள் (வேதாந்திகள்) சொல்வதை அனுஸரித்துச் சொல்லப்பட்டது. வாஸ்தவத்தில் இங்கு சொல்லப்பட்ட ஸாம்ராஜ்ய பதமானது ஜகத்ஸ்ருஷ்டாதரத்தையும் சேர்த்துக் குறிக்கும். இதையும் பக்தனுக்கு அப்படிப்பட்டதாக இங்கு சொல்லப்பட்டது. அப்படிச் சொல்வதினால் சொல்லியிருப்பதற்கு ஹானியாவது அசக்தத (சொல்லப்படாதது) கல்பனையாவது ஏற்படாமலாகிறது.

5. ஜகத்ஸ்ருஷ்டாதாரம் என்பது ஜகத்தைப் பற்றிய ஸ்ருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரம் முதலியவைகளைக் குறிப்பது. லோகாந்திகளின் பதத்தின்படி ஜீவனானவன் மோக்ஷத்தைப் பெற்ற

சத்வர ஸ்வரூபத்தையடையும்போது அவனுக்கும் சத்வர னுக்கும் ஸாயுஜ்யம் ஏற்பட்டாலும் அவனுக்கு ஜகத்வ்யாபாரத் தைச் செய்யும் அதிகாரம் கிடையாதென்றும், அவ்வித அதி காரமானது ஈச்வரன் ஒருவனுக்கு மட்டுமே உண்டென்றும்,

'ஜகத்வ்யாபாரவர்ஜம் ப்ரகரணாத் அஸந்நிஹிதத்வாத் ச |'

என்ற ப்ரம்ஹஸூத்ரம் (4—4—17) ஜகத்வ்யாபாராதிகர ணத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

6. வாஸ்தவத்தில் ஸாம்ராஜ்யமென்ற பதத்திற்கு பூர்ண மான அர்த்தத்தைக் கொடுக்கவேண்டுமேயானால், வேதாந்தி களின் மதப்படி அதைக் குறைத்து ஜகத்வ்யாபாரத்தைத் தவிர மற்றெல்லா ஐச்வர்யமும்தான் இங்கு சொல்லப்பட்டதாக சொல்வதற்கு யாதொரு காரணமுமில்லையென்பதை பாஸ்கர ராயர் விவரித்தவரை காரணங்களைக்கொண்டு நிரூபித்திருக் கிறார். இந்த ப்ரயோகமானது மூன்றியலைவிடப் பலனை யுடையது என்பது இந்தக் காரணத்தாலே ஏற்படுகிறது. பூர்வமீமாம்ஸகர்களான ஆயிரம் ப்ரம்ஹஞானர்களுடைய ஆசீர்வாதம் கிடைக்கும்போது பக்தனுக்கு அளவுகடந்தவான (குறைவில்லாத) ஸாம்ராஜ்யம் ஏற்படுவதில் ஒருவிதமான ஆஸ்சர்யமும் கிடையாது.

7. இப்படி ஸாம்ராஜ்யம் கிடைப்பதில், ஒரே காலத்தில் அனேகம் பக்தர்கள் இந்த ப்ரயோகத்தைச் செய்தால் அதன் மூலமாக அவர்களெல்லோருக்கும் ஜகத்வ்யாபாரத்தில் ஸ்வா தந்த்ர்யம் ஏற்படுமே, அப்போது அவர்களுடைய எண்ணங் களில் பேதமேற்பட்டால் ஒன்றுக்கொன்று எதிரிடையா யிருக்குமே என்ற சங்கை எற்படும். அப்படியல்ல. ஸ்ருஷ்டி-க்கப்படும்போகிற ப்ராணிகளுடைய கர்மங்களையனுஸரித்துத் தான் பகவான் ஸ்ருஷ்டியில் ப்ரவர்த்திக்கிறார் என்றும், அப்படிக்கில்லாமல் அவர் இஷ்டப்படி ஸ்ருஷ்டி-த்தால் வைஷம்யம் (வித்யாஸமாகாட்டுதல், பக்ஷபாதம்) நைர்க் ருண்யம் (இரக்கமில்லாமலிருப்பது) முதலியவைகளுக்கு இடங்கொடுக்கும் என்றும் வேதாந்திகளே சொல்லியிருக் கிறார்கள்.

'வைஷம்ய நைர்க்ருண்யே ந ஸாபேக்ஷத்வாத் ததாஹி தர்சயதி
[ப்ரம்ஹஸூத்ரம் 2—1—34]

ஸ்ருஷ்டியானது இப்படிக் கர்மாநுஸாரமாக மட்டும் ஏற்படுவதால் ஸ்ருஷ்டிக்க ஸ்வாதந்த்ர்யமுள்ளவர்கள் பலராயிருந்தாலும் அவர்களுடைய ஸ்ருஷ்டியானது ஏக ரூபமாகத் தானிருக்குமே தவிர பேதப்படாது.

8. அப்போது அவர்களுக்கு ஸ்வாதந்த்ர்யமுண்டென்று சொல்வதில் பங்கம் ஏற்படுமோவென்றால் அவர்கள் ஸ்வேச்சாநுஸாரிகளாக இருந்தாலும், தங்களுக்குள் பரஸ்பரமிருக்கும் இச்சையை அநுஸரித்தே ப்ரவர்த்திப்பார்களாதலால் அவ்விதபங்கம் ஏற்படாது. இம்மாதிரி எட்டு மஹாகாரர்கள் அம்பாளுடைய வரத்தினால் ஏக காலத்தில் இந்த ஸ்ருஷ்டமான பூலோகத்தையும் யாதொரு பங்கமுமில்லாமல் ஆண்டு வந்ததைப்பற்றி வாஸிஷ்ட ராமாயணத்தில் ஞானவாஸிஷ்டத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

9. ஜகத்தின் ஸாம்ராஜ்யமானது ஈச்வரனுக்கு இயற்கை (ஸ்வாபாவிகம்) ஆயிற்றே, அது இந்த பதவி மாதிரி கர்மாக்கள் செய்வதினால் கிடைக்கக்கூடியதல்லவே, அப்படி அவருக்கு ஸ்வபாவமாக இருப்பது பிறருக்குக் கிடைக்குமா என்ற ஸந்தேஹம் ஏற்படலாம். ஈச்வரனுக்கு ஸ்வாபாவிகமாக இருந்தபோதிலும், பிறருக்கு அது கர்மாவின் மூலமாகக் கிடைக்கும் என்று சொல்வதற்கு பாதகமில்லையே. அவ்விதமாகக் கிடைப்பது ஸாலோக்யம் முதலான பலன் களிலிருந்து தெரிகிறது.

10. இவ்விதம் அனேக ஸ்மார்தாவங்களைக்கொண்டும் பல ச்ருதிவாக்யங்களைக்கொண்டும், உபாஸ்ய தேவதைகளுக்கு (ஜகத்தினுடைய ஸ்ருஷ்டி, ஸ்திதி, லயங்களாகிற கார்யங்களுள்ள) ஸாம்ராஜ்யம் பூர்ணமாக உண்டென்று பாஸ்கரராயர் தன்னுடைய பாஷ்யத்தில் ஸாதித்திருக்கிறார். வேதாந்த வாதிகள் சொல்லக்கூடிய ஆக்ஷேபங்களுக்குரிய ஸமாதானம் சொல்லியிருக்கிறார். இந்த விஷயத்தைப்பற்றி ஒன்றும் தெரிந்துகொள்ள விருப்பமுள்ளவர்கள் பாஷ்யத்தின் மூலத்தில் பார்த்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

11. இப்போற்பட்ட பூர்ண ஸாம்ராஜ்யம் உபாஸகனுக்குக் கிடைக்கும்போது அவன் விரும்பக்கூடிய வஸ்துக்களெல்லாம் அவனுக்குக் கிடைப்பது ஸாலோக்யமான கார்யமென்பதாக,

'ந தஸ்ய துர்லபம் வஸ்து த்ரிஷு லோகேஷு வித்யதே |'

என்று சொல்லப்பட்டது. உபநிஷத்துக்களில் ஸர்வோத்தமமான உபாஸனையையுடையவனைப்பற்றிச் சொல்லுகையில்,

'ஸங்கல்பாதேவ அஸ்ய பிதாः ஸமுத்திஷ்டந்தி |'

என்பதுபோன்ற ச்ருதிவாக்யங்களில் அவனுடைய மஹிமையானது சொல்லப்பட்டிருந்தபோதிலும், ஜகத் ஸாம்ராஜ்யம் என்ற ஒரு வஸ்துவாட்டும் அவனுக்குக் கிடைப்பதில்லையென்றும், அதைத் தவிர்த்ததான மற்ற வஸ்துக்களெல்லாம் அவனுக்குக் கிடைக்குமென்றும் வேதாந்திகள் சொல்லுவார்கள். அவ்விதமான மஹிமையின் ஸங்கோசமானது (குறைவானது) அபராதத்தையுடைய உபாஸகனுக்குக் கிடையாதென்பதாக இங்கு சொல்லப்பட்டது. இங்கு சொல்லப்பட்ட ப்ரயோகத்தைச் செய்த உபாஸகனுக்கு அகுண்டிதமான (குறைவில்லாத) மஹிமையுண்டு. ஆகையால் அவனுக்குக் கிடைக்காத வஸ்து மூன்று லோகத்திலும் யாதொன்றுமில்லை என்றும், ஆகவே ஸாம்ராஜ்யமென்ற வஸ்துவும் அவனுக்கு ஸுலபமாகக் கிடைக்கும் என்றும் சொல்லப்பட்டது.

12. இப்படிப்பட்ட ப்ரயோகமானது அதிரஹஸ்யமான காரணத்தால் அதைப்பற்றிய விபரங்கள் இவ்விடத்தில் சொல்லப்படவில்லை. ஆயினும் பூர்வ மீமாம்ஸாதிகரணத்தில் அதின்படி செய்யப்படும் த்ரிசத ப்ராயஶ்சித்த போஜனத்தைப்பற்றிச் சொல்லிவிட்டு ஸஹஸ்ர ப்ராயஶ்சித்த போஜனமும் அவ்விதமாகவே செய்யப்படவேண்டுமென்பதாகக் குறிப்பிடப்பட்டது.

'ஸஹஸ்ர காமஸ்ய ஸஹஸ்ர போஜநேப்யேவமேவ ஹி |
ஆதௌ நித்யாபலிம் குர்யாத் பச்சாத் ப்ராயஶ்சித்த போஜநம்||

13. ஸஹஸ்ர ப்ராயஶ்சித்த போஜனத்தைப்பற்றி போதாயனருடைய தர்ம ஸூத்ரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. அந்த கண்டத்திற்கு பாஸ்கராசார்யர் ஒரு வ்யாக்யானம் எழுதியிருப்பதாகத் தெரிகிறது. அதில் அந்த விஷயத்தைப்பற்றி விசேஷமாகச் சொல்லியிருப்பதுடன் இந்த ஸஹஸ்ரகாம வ்யாக்யானத்தில் பல விஷயங்கள் சொல்லியிருக்கிறார். இதில் இரண்டு பாகங்களுண்டு. முதலாவது நித்யாபலி என்பது. (சில புஸ்தகங்களில் நித்யபலி என்று கண்டிருப்பது

தவறு. கோடைக நித்தியகளைக் குறித்துச் செய்யப்படுவதால் இந்தக் கர்மாவுக்கு நித்யாடவி என்றதான் பெயர்.) இதினுடைய க்ரமமானது:—

'மஹா கோடிகாரூபாம் விப்ராம் ஆதௌ து போஜயேத்!
அப்யக்தாம் கந்தகைலேந ஸ்நாதாம் நுஷ்ணேந வாரிணு ॥
அப்யர்ச்ய வஸ்த்ர கந்தாத்யை: காமேச்வர்யாதி நாமபி: |
அபூபை: சர்க்கராஜ்யைச்ச பலை: புஷ்பை: ஸுகந்திபி: ॥
வித்யாவதீம விசேஷேண போஜயேத் கோடசத்விஜாந் |
ஏவம் நித்யாபலிம் குர்யாத் ஆதௌ.....॥'

என்று சொல்லப்பட்டிருக்கிறது. இந்த நித்யாடவி செய்த விடன்,

'.....ப்ராம்ஹணை போஜநம் |
த்ரிசதைர் நாமபி: பச்சாத் ப்ராம்ஹணக்ரமசோர்ச்சயேத்॥
தைலாப்யங்காதிகம் தத்யாத் விபவே ஸதி பக்தித: |
சுக்லப்ரத்பதாரப்ய பௌர்ணமாஸ்யாவதி க்ரமாத் ॥
திவஸே திவஸே விப்ரா: போஜ்யா விம்சதி ஸங்க்யயா |
தசபி: பஞ்சபிர்வாபி த்ரிபிர்தோகேந வா தினை: ॥
த்ரிம்சத் வஷ்டி: சதம் விப்ரா: ஸம்போஜ்யா: த்ரிசதம் க்ரமாத்!
ஏவம் ய: குருதே பக்த்யா ஜந்மமத்யே ஸக்ருந்நர: |
தஸ்யைவ ஸபலம் ஜந்ம முக்திஸ்தஸ்ய கரே ஸ்த்திதா ॥'

என்று ப்ராம்ஹண போஜனத்தைப்பற்றியும், அதின் பலனைப் பற்றியும் (ஸ்ரீ வைதா த்ரிசதியில்) சொல்லப்பட்டிருக்கிறது.

14. இவ்விதமான நித்யாடவி, ப்ராம்ஹண போஜனம் என்ற இரண்டு கர்மாக்களில் இரண்டாம் ஸாம்ப்ரதாயர்கள், அல்லது ஒன்றுக்கொன்று அங்காங்கி பாவமானவைகளாக; என்ற விஷயத்தைப்பற்றி பாஸ்கராசார்யர் நீண்டதோர் விசாரணை செய்திருக்கிறார். முதலில் இரண்டும் ஸாம்ப்ரதாயமென்ற பூர்வ பக்ஷத்தை விஸ்தாரமாக எடுத்துச்சொல்லி, பிறகு நித்யாடவியானது ப்ராம்ஹண போஜனத்திற்கு அங்கமென்பதாகப் பல யுக்திகளான ந்யாயங்களால் ஸித்தாந்தப்படுத்தியிருக்கிறார். இதைச் செய்ய விரும்புவோர்கள் பாஷ்யத்தின் மூலத்தையே பார்த்துக்கொள்ளவேண்டும்.

இவ்விதமாக முப்பத்தைந்து ச்லோகங்களால் இந்த நாம ஸஹஸ்ரமானது புருஷார்த்த ப்ரதாயகமாகவும், ஸஹஸ்ரயாகமாகவுமிருப்பதைப்பற்றிச் சொல்லிவிட்டு, அதனடுத்தபடியாக,

'இதம் விசேஷதச் ஸ்ரீதேவ்யா: ஸ்தோத்ரம் ப்ரீதிவிதாயகம் |'

என்று சொல்லியபடி இந்த நாமாவளிஸ்தத்திலும் அம்பா முக்கு விசேஷமான ப்ரீதி ஏற்படுவதைப்பற்றி மேலே சொல்லுகிறார்:—

निष्कामः कीर्तयेद्यस्तु नामसाहस्रमुत्तमम् ।
ब्रह्मज्ञानमवाप्नोति येन मुच्येत बन्धनात् ॥

நிஷ்காமः கீர்த்தயேத் யஸ்து நாமஸாஹஸ்ர முத்தமம் ।
ப்ரம்ஹஜ்ஞாநம் அவாப்நோதி யேந முச்யேத பந்தநாத் ॥(64)

நிஷ்காமனாக எவனொருவன் இந்த உத்தமமான நாமாவளிஸ்தத்தைக் கீர்த்தனம் செய்கிறானோ அவன் பந்தங்களிலிருந்து விடுவிப்பதான ப்ரம்ஹஜ்ஞானத்தை அடைகிறான்.

1. நிஷ்காமனென்றால் விஷயங்களில் (ஆசை, விருப்பம்) இல்லாதவன் என்று அர்த்தம்.

2. ப்ரம்ஹஜ்ஞானம் என்பது ஜீவனுடைய, ப்ரம்ஹமுமே அதேதானென்பதைப் பற்றியிருக்கும் (அதாவது அவிதை அதே தத்தை நிவர்த்திக்கும்) ப்ரமத்தைப் போக்குவதும், மஹாவாக்யங்களால் ஏற்படுவதும், ஆத்மாவை மட்டுமே விஷயமாக வுடையதும், நிர்விகல்பமென்று சொல்லப்படும் கடைசிவ்ருத்தியின் ரூபமானதும் அதுவேயாத்மகமுமான ஞானம். இம்மாதிரியான ஞானமொன்றையுடையதாகவும் ஆனந்தஞானமான ஞானம் ஏற்பட்டுவிடுமென்பதாகச் சொல்லப்பட்டது. ஆயினும், இங்கும் (அம்பாநுடைய ப்ரீதி கிடைக்குமென்பதான) காமனையிருக்கும்போது இவை நிஷ்காம ப்ரேமாகமென்று எவ்விதம் சொல்லக்கூடுமென்று ஸங்கேதமாம் தோன்றலாம். அப்படியல்ல. விஷயங்களிலாட்டமற்ற காமனையிருந்தால்தான் ஸகாமமென்று சொல்வது வழக்கம். ஆனையினால் 'ஸாதாரண ப்ரீத்யர்த்தம்'

என்ற மந்தரத்தோடு கூடிய கர்மாவை நிஷ்காமமென்றே சொல்லப்படும்.

'ஸ்ரீமாதுஃ ப்ரீதயே காம ஸாஹஸ்ரம் யஸ்து கீர்த்தயேத் |'

என்று சொல்லாமல் 'நிஷ்காமஃ கீர்த்தயேத் யஸ்து' என்று சொல்லப்பட்டதினால், இந்த ப்ரயோகம் செய்கிறவன் ஒரு பொழுதும் விஷயகாமனையுடைய ப்ரயோகத்தைச் செய்யக் கூடாது என்று காட்டப்பட்டது. இதைமாதிரியாக,

'நித்ய நைமித்திகைரேவ குர்வாணோ அநிதமுத்தமம் |'

என்று சொல்லப்பட்டிருக்கிறது.

இவ்விதம் ப்ரம்மஜ்ஞானத்தைக் கொடுக்கும் இந்த ப்ரயோகத்தைச் செய்கிறவன் ஒருக்கால் ப்ரமாதத்தினால் (தவறிப்போய் அல்லது மறந்துபோய், அல்லது கவனக்குறைவினால்) காமத்தை யுத்தேசித்து ப்ரயோகம் செய்தால் அப்போது அவன் விரும்புகிற காமனெல்லாம் கிடைக்குமென்றாகச் சொல்லுகிறார்:—

धनार्थी धनमाप्नोति यशोऽर्थी प्राप्नुयाद्यशः ।
विद्यार्थी चाप्नुयाद्विद्यां नामसाहस्रकीर्तनात् ॥

தநார்த்தீ தநமாப்நோதி யசோர்த்தீ ப்ராப்நுயாத் யசஃ |
வித்யார்த்தீ சாப்நுயாத் வித்யாம் நாமஸாஹஸ்ர
கீர்த்தநாத் II (65)

இந்த நாம ஸஹஸ்ரத்தைக் கீர்த்தனம் செய்வதினால் தனத்தை விரும்புகிறவன் தனத்தை யடைகிறான். யசஸ்ஸை விரும்புகிறவன் யசஸ்ஸை யதிகமாக அடைகிறான். வித்தையை விரும்புகிறவன் வித்தை யடைகிறான்.

1. இங்கு வித்யார்த்தீ என்று சொன்னது மோக்ஷம், சாஸ்த்ரம் முதலிய அபரிமிதமான வித்யைகளையும் விரும்பி வேண்டப்பற்றிச் சொல்லப்பட்டதேத தவிர, பூர்ண வித்யையை அடைய விரும்புவதைப்பற்றியல்ல. எனெனில், பூர்ண வித்யை உபதேசமாகி உபாஸனையில்லாதவனுக்கு இந்த ப்ரயோகம் செய்வதற்கு அதிகாரமில்லையென்றும், அதிகாரியாயிருப்பவன் செய்தால் பலமேற்படாததேதாடு அனர்த்தமும் ஏற்படுவதாகச் சொல்லப்படுவதால் பூர்ண வித்யையை இங்கு வித்யை என்ற பதத்தினால் குறிப்பிடப்படவில்லை.

2. விஷயகாமனை பொதுவாக இல்லாதிருப்பதை நிஷ்காமத்வம் என்று சொல்லப்படும். முதலில் விஷயகாமனை ஒரு தடையை ஏற்பட்டதால், நிஷ்காமத்வத்திற்கு பங்கமேற்படும். நிஷ்காமமாக ப்ரயோகம் செய்ய ஆரம்பித்த முதல் சாதகன் எதனை ஒரு காமனையும் உத்தேசித்து ப்ரயோகம் செய்தால், அப்போது நிஷ்காம ப்ரயோகமாயிருக்காது, காமனை கலப்பதினால் பலனை மாற்று அந்தக் காமனை எற்படுமே தவிர ப்ரம்மஞானம் கிடக்காது என்பது தாத்பர்யம்.

3. அலைது, வித்யா சரீகாரனை ப்ரம்மஞானத்தைக் கொல்லுமென்றும் சொல்லலாம். 'அர்த்த ப்ரித்யர்த்தம்' என்பதுபோல 'ப்ரம்ம ஜ்ஞான ப்ரயத்யர்த்தம்' என்று வைக்கலாம். செய்துப்ரயோகம் செய்தால் அவ்வித ஜ்ஞானம் கிடைக்குமென்பது தாத்பர்யம்.

4. தனம், யசஸ் இவற்றைச் சொன்னது த்ருஷ்டார்த்தத்திற்காகமட்டும் தனியே யென்றல்ல. தனத்தை விரும்புகிறவன் தனத்தை யடையட்டும். அதேபோல் எதனை விரும்பி செய்கிறானோ அதனை அடையட்டும் என்று தாத்பர்யம். இதனால், போகமோக்ஷங்களை உத்தேசித்தால் பலன்கள் கிடைத்துச் செய்யும் ப்ரயோகங்களைப்பற்றிச் சொல்லி, அதற்குமேல் (திருப்பாவை) தனம், யசஸ் முதலியவைகளின் விஷயமாகப்பற்றிச் சொல்லப்படுவது பொருத்தமற்றதென்று சொல்லி ப்ரம்மஜ்ஞானமானது நிச்சயிக்கப்பட்டது.

नानेन सदृशं स्तोत्रं भोगमोक्षप्रदं मुने ।
कीर्तनीयमिदं तस्माद्भोगमोक्षार्थिभिर्नरैः ॥

நாநேந ஸத்ருசம் ஸ்தோத்ரம் போக மோக்ஷ ப்ரதம் முநே |
கீர்த்தநீயமிதம் தஸ்மாத் போக மோக்ஷார்த்திபிர் நரை:|| (66)

மேலான முனியே! போகம், மோக்ஷங்களை இவையிரண்டையும் கொடுக்கக்கூடிய ஸ்தோத்ரம் இதற்கு ஸமானமானது ஒன்றுமில்லை. ஆகையினால் போக மோக்ஷங்களை விரும்பும் மனிதர்கள் இதைக் கீர்த்தனம் செய்யவேண்டும்.

1. இதற்கு ஸமானமான ஸ்தோத்ரம், அதாவது, நிஷ்காம ப்ரயோகம் செய்ய ஆரம்பித்து அதில் பலனை

காமேஸ்வரியோடு செய்தாலும். அதனால் கெடுதல் செய்யாமல் விரும்பப்பட்ட அந்தந்த காமேஸ்வரியைக் கொடுக்கும் இந்த ஸ்தோத்ரம் மாதிரி என்று அர்த்தம். ஆகவே இதற்கு ஸமானமான ஸ்தோத்ரம் வேறு யாதென்றால் இல்லையென்று சொல்லப்பட்டது.

2. 'போகமோக்ஷப்ரதம்'—போக ப்ரதமான ப்ரயோகத்தைச் செய்ய ஆரம்பித்துத் தவறி விட்டாலும், மோக்ஷத்தைக் கொடுக்கிறதென்றும், மோக்ஷ ப்ரதமான ப்ரயோகத்தைச் செய்ய ஆரம்பித்துத் தவறிவிட்டாலும், போகத்தைக் கொடுக்கிறதென்றும், இரண்டையும் ஆசேஷித்துச் செய்தால் இரண்டையும் கொடுக்கிறதென்றும், அப்படிக்கொடுப்பதில் முதலில் போகத்தையும் பிறகு மோக்ஷத்தையும் கொடுக்கிறதென்றும் அர்த்தம். இதேவிதமாக ப்ரம்மாண்ட புராணத்தில்,

'தஸ்மாத் அசேஷலோகாநாம் த்ரிபுராராதநம் விநா ।
நஸ்தி: போகாபவர்கௌ து யௌகபத்யோ குத்ரசித் ॥
தந்மநா: தத்கதப்ராண: தத்யாஜீ தத்கதேஹக: ।
ததாத்மைக்யேந கர்மாணி குர்வந் முக்திம் அவாப்ஸ்யதி ।
ஏதத் ரஹஸ்யமாக்யாதம் ஸர்வேஷாம் ஹிதகாம்யயா ॥'

என்று சொல்லப்பட்டது.

3. அல்லது, மூன்றாம் ச்லோகத்தில் வரும் 'வித்யை' என்ற பதத்திற்கு ப்ரம்மஜ்ஞானமென்று அர்த்தம் செய்தால், அதற்கு ஸாதனமான வைராக்யத்தைக் கொடுப்பதாக இந்த 'போக மோக்ஷப்ரதம்' என்று சொல்லப்பட்டதாகவும் சொல்லலாம். போகங்களிலிருந்து—விஷயங்களில் உள்ள விருப்பங்களிலிருந்து, மோக்ஷம்—விடுதலையைக் கொடுப்பது, அதாவது அவற்றினுடைய வாஸனையைப் போக்கடிப்பது 'போகமோக்ஷப்ரதம்.' இதேவிதமாக அஷ்டாவக்ரகீதையில்,

'மூக்திம் இச்சஸி சேத் தாத விஷயாந் விஷவத் த்யஜேஜ் ।'

என்று சொல்லப்பட்டது.

இப்படி இந்த விஷயத்தைப்பற்றிச் சொல்வதை இத்துடன் நிறுத்திக்கொண்டு, தார்த்ரிக கர்மாக்களைச் செய்பவர்களும் மென்று நிர்பந்தமில்லாதவர்களும் செய்வது, ஸ்மார்த்த கர்மாக்களில் ஈடுபட்டவர்களுடையிருப்பவர்களுக்கும் இந்த ஸஹஸ்ர நாமாவளி ஸமானமானது உபகாரம் என்பதைப் பற்றி சொல்லுகிறார்:—

चतुराश्रमनिष्ठैश्च कीर्तनीयमिदं सदा ।
स्वधर्मसमनुष्ठानवैकल्यपरिपूर्तये ॥

சதுராச்ரம நிஷ்டைச்ச கீர்த்தநீயமிதம் ஸதா ।
ஸ்வதர்ம ஸமநுஷ்டாந வைகல்ய பரிபூர்த்தயே ॥ (67)

நான்கு வர்ணத்திலிருப்பவர்களாலும் தங்கள் தர்மத்தைத்தானே அனுஷ்டிப்பதில் ஏற்படக்கூடிய குறைகளைப் பூர்த்தி செய்வதற்காக இந்த நாமஸங்கீர்த்தனத்தை எப்போதும் கீர்த்தனம் செய்யப்படவேண்டும்.

1. ப்ரம்மசாரி, க்ருஹஸ்தன், வானப்ரஸ்தன், ஸன்யாஸி இவர்களுக்குள் அனுஷ்தானமான பேதங்கள் எல்லாவற்றையும் சேர்த்து சதுராச்ரமமென்று சொல்லப்பட்டது.

2. ஸங்கீர்த்தனமென்பது சாஸ்த்ரபடிக்கு அனுஷ்டிப்பது. சதுராச்ரமிகளுக்கு ச்ருதி, ஸ்ம்ருதிகளில் என்னென்ன கர்மாக்கள் விதிக்கப்பட்டிருக்கின்றனவோ, அவையெல்லாம் சாஸ்த்ரவிதி, எல்லா அங்கங்களோடும் விடாமலும் செய்கிறவனுக்குத்தான் பலம் தாராளமாயிருப்பவை. அப்படி எல்லா அங்கங்களோடும் விடாமல் செய்வதானது இக்காலத்தியவர்களுக்கு அசௌகர்யமாய் முடியாத காரியம். இதைப்பற்றி பாஸ்கராசார்யர் தன்னுடைய சிவரஹஸ்யத்தில் பின்வருமாறு சொல்லியிருக்கிறார்

ஸ்வாமிந் அங்கேஷு ஸர்வேஷ்வபி விரசிதேஷ்வேவ
கர்மாணி கிஞ்சித்
தூச்சம் யச்சந்தி நோ சேத் நிரயதுரவடே ஸம்சயம் வாஸயந்தி।
யந்த்ரைர் யந்த்ராரத்ந போதாந் குருகுல நியமாந்
தேசகாலார்த்தசோதாந்
கூடம் கூடம் சதத்வாக் கதம் அதிகடிநோபயுக்தீ
சோமுக்தீ கः ॥

ஆகையால் அங்கலோபம் அவச்யம் ஏற்படுமானபடியால் அதனால் உண்டாகக்கூடிய பாபத்தைப்போக்கடித்து அதின் பலமாகவாதத்துக்காக இந்த நாம ஸங்கீர்த்தனத்தை எல்லோராலும் கட்டாயம் செய்யவேண்டுமென்று இங்கு சொல்லப்பட்டது. இதையே தான் தேவீ பாகவதத்தில் மூன்றாவது ஸ்கந்தத்தில் அம்பாளால் தேவர்களுக்குச் சொல்லப்பட்டது.

'மந்நாமோச்சாரணே ஸர்வே மதேஷு ஸகலேஷு ச ।
ஸதா த்ருப்தாச்ச ஸந்துஷ்டாः பவிஷ்யத்வம் ஸுராः ஸ்ம ॥'

3. இதனால் இந்த நாம ஸஹஸ்ரத்தின் கீர்த்தனமானது க்ரத்வர்த்தம், புருஷார்த்தம் என்ற இரண்டு ரூபமாயுமிருப்பது சொல்லப்பட்டது கவனிக்கவேண்டிய விஷயம்.

இவ்விதம் கர்மாக்கள் செய்வதில் அங்கலோபங்கள் ஏற்படக்கூடியதாயிருந்தாலும், அவ்விதலோபங்களுக்கு ப்ராயச்சித்தமாகச் செய்யவேண்டிய கர்மாக்களைப்பற்றி அங்கங்கே சொல்லப்பட்டிருப்பதால், அவைகளைச் செய்தாலேயே ஸாத்குண்யம் ஏற்படுமே, அப்படிக்கிருக்கையில் இந்த ஸஹஸ்ர நாம கீர்த்தனத்தினால் என்ன ப்ரயோஜனம் என்ற தோன்றக்கூடிய ஸந்தேஹத்திற்கு ஸமாதானம் மேலே சொல்லுகிறார்:-

कलौ पापैकबहुले धर्मानुष्ठानवर्जिते ।
नामानुकीर्तनं मुक्त्वा नृणां नान्यत्परायणम् ॥
கலௌ பாபைக பஹுளே தர்மாநுஷ்டாந வர்ஜிதே |
நாமாநு கீர்த்தநம் முக்த்வா நருணம் நாந்யத் பராயணம்॥
(68)

பாபமே மேலிட்டிருப்பதும், தர்மானுஷ்டானமில்லாததுமான கலியுகத்தில் நரர்களுக்கு நாம கீர்த்தனத்தை விட்டால் வேறு ஆச்ரயம் கிடையாது.

1. தர்மமானது ஆதியில் நான்கு பாதங்களுடன் இருந்ததில் மூன்று பாதங்கள் யுகக்ராமத்தில் பாபத்தினால் மறைந்து விட்டதாகவும், கலியுகத்தில் ஒரு பாதத்தோடுதான் இருப்பதாகவும் சொல்லப்படும். அதனால்தான் அது பாபைகபாதமென்று சொல்லப்பட்டது.

2. அந்தக் கீர்த்தனமென்றால் தொடர்ந்தாற்போல் அல்லது வெளிப்படையாகச் சொல்லுவது.

3. தங்கள் தங்கள் கர்மாக்களை சரிவர செய்து கொண்டு நாமாவை கீர்த்தனத்தை விட்டுவிட்டிருப்பவர்களுக்கு வேறு ஆச்ரயம் கிடையாதென்ற இங்கு சொல்லப்பட்டது. வேறு ப்ராயச்சித்தங்கள் ச்ருதி, ஸ்ம்ருதிகளில் சொல்லப்பட்டிருப்பினையெல்லாம் நாமாவை கீர்த்தனமானது எப்படி. வைகல்ய மினிதாகவாயிருக்கிறதோ அப்படிதிரி அனையில்லாதபடியால், அவற்றை ஆச்ரயமாக ஒப்புக்கொள்ளவில்லை. இவ்விதம் இதர ப்ராயச்சித்தங்களைவிட நாமாவை கீர்த்தனத்திற்கிருக்கும் விசேஷ மறியவாயானது,

'ப்ராயச்சித்தாக் யதேஷாஞ் தபः கர்மாத்மகாணி வை |
யாணி தேஷாமசேஷாணாம் க்ருஷ்ணு நுஸ்மரணம் பரம் ||"

என்று ஸ்ரீ விஷ்ணு புராணத்தைத்தொற்றியும்,

'யத் க்ருத்யம் தந்த க்ருதம் யதக்ருத்யம் க்ருத்யவத் ததாசரிதம் |
உபயோः ப்ராயச்சித்தம் சிவ தவ காமாகூதத்வயம் கதிதம் ||'

என்று சிவபுராணத்தைத்தொற்றியும்,

'இமந்யேய முதிச்ரேஷ்டாः ப்ராயச்சித்தேத கர்மணு |
ப்ராயச்சித்தம் அகிலகல்ய தேவீகாமாது கீர்த்தகம் ||'

என்று அக்நிபுராணத்தைத்தொற்றியும் கொல்லிடப்பட்டிருக்கிறது.

